SECRETARIAT LIBRARY

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY/
~~COUNCIL~~ DEBATES

| Year | Vol. | Sl.No. |
| --- | --- | --- |
| 1982 | XXXVI | 1.5 |

இந்த / புத்தகக் கட்டை வரிசை
மாற்றாமல் ஒரே புத்தகமாகப் பைண்டிங் செய்யும்படி
கேட்டுக் கொள்ளப்படுகிறது.

190

for LIBRARIAN.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
நான்காவது கூட்டத்தொடர்

1982 மார்ச் 27, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 1 ஆம் நாட்கள்

(தொகுதி XXXVI-எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

விலை ரூ .2]

D
Y211,31 N82
N83-36-2
122847

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1982, மார்ச் 27, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 1-ஆம் நாட்கள்.

(தொகுதி 36 எண்கள் 1 முதல் 5 வரை.)


| | பக்கங்கள் |
|---|---|
| அரை மணி நேர விவாதம்— | |
| நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை | 739—750 |
| அறிக்கை அளித்தல்— | |
| அரசு உறுதிமொழிக் குழு | 681 |
| கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980 மீதான ஆய்வுக் குழு | 321 |
| பொதுக் கணக்குக் குழு | 532<br>680—681 |
| பொது நிறுவனங்கள் குழு | 292, 681 |
| மதிப்பீட்டுக் குழு | 392,<br>680 |
| விதி 106-ன் கீழ் முதல் அமைச்சரின் அறிக்கை | 822—827 |
| விதி 106-ன் கீழ் கூட்டுறவு சட்ட அமைச்சரின் அறிக்கை | 827—830 |
| விதி 106-ன் கீழ் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை | 830—832 |

| | பக்கங்கள் |
|---|---|
| **அறிவிப்புகள்—** | |
| அவைக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 809—810 |
| ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி | 420 |
| உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 808—809 |
| நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 | 725 |
| பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 708 |
| பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 806—807 |
| பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 807—808 |
| பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 681 |
| மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல் | 804—805 |
| மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி— | |
| சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 | 804 |
| கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 | 804 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 | 804 |
| **ஏடுகள்—** | |
| பேரவை முன் வைக்கப்பெற்றவை | 420—421, 627—628, 750—760, 888 |
| **ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—** | |
| நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு | 800—804 |
| நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை | 665—674 |





| | பக்கங்கள் |
|---|---|
| **ஒழுங்கு பிரச்சினை—** | |
| உறுப்பினர்களுக்கான சில சலுகைகளை அறிவிக்கும்போது அமைச்சர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் குறித்து | 526—527 |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| கோதையாறு இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது | 529—530 |
| செங்கழுநீர் மலைக் குவாரிகளினால் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுவது | 677—679 |
| பச்சை மிளகாய்ப் பயிர் நோயால் தாக்கப்பட்டுள்ளது | 531—532 |
| மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல் | 836—839 |
| முந்திரி தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்கு தோல் வியாதி ஏற்படுவது | 675—676 |
| ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது | 839—848 |
| **சட்ட முன்வடிவுகள்—** | |
| இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 | 532—533 |
| உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1982 | 1 |
| ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982 | 332 |
| தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982-ஆம் ஆண்டு (திருத்த) சட்ட முன்வடிவு | 849—866 |
| தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982 | 1—2 |
| நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 | 725—739 |
| நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1982 | 2 |
| நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 | 420, 533—627 |

பக்கங்கள்

**சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 708—725

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 682—707

**தகவல் கோரல்—**

இராமசாமி கமிஷன் அறிக்கை — 833—835

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் — 527—528

உறுப்பினர்கள் விடுதியில் பத்திரிகையாளருக்கு ஏற்பாடு — 799—800

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப்பெற்றதற்கான விளக்கம் — 810—822

**தன்னிலை விளக்கம்—**

உறுப்பினர் திரு. வி. வி. சுவாமிநாதன் அளித்தல் — 322—323

**தனித் தீர்மானம்—**

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் — 866—887

**வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—**

ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் — 419

கால்நடை வளர்ப்பு — 144—217

காவல்துறை, தீயணைப்புப் பணிகள் — 3—93

கைத்தறியும், நெசவுத் தொழிலும் — 371—372

சமூக நலன் — 97—144

தேர்தல்கள் — 145—217

பல்வகை — 418

பல்வகை மூலதனச் செலவு — 419

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் — 419



பக்கங்கள்

**வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் — 372—373

மாநில சட்டமன்றம் — 374—379

**வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் — 321

உடுக்குறியிட்ட வினாக்கள் — 491—526, 629—665, 761—769

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் " சட்ட முன்வடிவு " என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றங்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப் படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| அ. | அறிக்கை. |
| அறிவி. | அறிவிப்பு. |
| அ. வி. | அரை மணி நேர விவாதம். |
| கு. வி. | குறுகிய கால விவாதம். |
| பொ. வி. | பொது விவாதம். |
| ஆ. உ. | ஆளுநர் உரை. |
| உ. பி. | உரிமைப் பிரச்சினை. |
| ஒ. பி. | ஒழுங்குப் பிரச்சினை. |
| க. ஈ. | கவன ஈர்ப்பு. |
| க. ஈ. அ. | கவன ஈர்ப்பு அறிக்கை. |
| ச. அ. நி. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை. |
| ச. ஆ. நி. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந் நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| பிரி. ஆ. | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச. பே. | சட்டமன்றப் பேரவை. |
| ச. மே. | சட்டமன்ற மேலவை. |
| த. கோ. | தகவல் கோரல். |

த. வி. — தன்னிலை விளக்கம்.

தீ. — தீர்மானம்.

உ. தீ. — உரிமைத் தீர்மானம்.

ஒ. தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.

த. தீ. — தனித் தீர்மானம்.

து. மா. கோ. — துணை மானியக் கோரிக்கை.

மி. மா. கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.

பே. அ. — பேரவையின் அலுவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1982 மார்ச் 27, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 1-ஆம் நாட்கள்.

(தொகுதி 36 எண்கள் 1 முதல் 5 வரை)

பக்கங்கள்

அண்ணாதாசன், திரு. எம்.—

தோல் பதனிடும் தொழிற்சாலை (செம்பட்டு) கழிவு நீர் ஏற்படுத்தும் சுகாதாரக்கேடுகள் 509—511

அப்பாதுரை, திரு. மு.—

தனியார் பள்ளி ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்துதல் 637—638

அம்பிகாபதி, திரு. மு.—

கல்லணை விரிவாக்கக் கால்வாய், மேம்பாடு செய்தல் 652—653

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு (ஒ.தீ.) 800, 802

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. வி.) 745—746

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1981) 718

அரங்கங்கள்—

திரையரங்குகள் (1981 ஆம் ஆண்டில்) கட்ட கடன்தொகை வழங்கியது 498—501

அரங்கநாதன், திரு. மு.—

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. வி.) 742—744

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அரங்கநாயகம், திரு. செ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கைத்தறியும் நெசவுத் தொழிலும் — 97, 130—143

அருணகிரி, திரு. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கால்நடை வளர்ப்பு
சமூக நலன் — 167—171
காவல்துறை
தீயணைப்புப் பணிகள் — 330

அரைமணி நேர விவாதம்—

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை — 739—750

அலுவலகங்கள்—

கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் திறத்தல் — 496—497

அலுவலர்கள்—

உடல் நலப் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடங்கள் — 790—791
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் சங்கத்திடமிருந்து வரப்பெற்ற மனு — 778—780
தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியாளர்கள் — 795—797

அழகர்சாமி, திரு. சோ.—

கோவில்பட்டி நகர சபையில் கூடுதல் துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்கும் திட்டம் — 788—790

அறிவிப்புகள்—

குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு — 804—810
மேலவைச் செய்தி — 804

அன்பழகன், திரு. க.—

இராமசாமி கமிஷன் அறிக்கை (த. கோ.) — 834—835



பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அன்பழகன், திரு. க.—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 — 602, 603, 604

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
காவல் துறை — 90—91
தீயணைப்புப் பணிகள் — 332, 339

அன்பழகன், திரு. இ.—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை அளித்தல் — 322

பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் — 681

முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த.கோ.) — 811, 813, 814, 816, 817, 819—820

ஆ.

ஆசிரியர்கள்—

இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்களாக நியமித்தல் — 638—639
தனியார் பள்ளிகள், மீண்டும் வேலைக்கு அமர்த்துதல் — 637—638

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் — 404—406

ஆதிதிராவிடர் நலம்—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல் — 663

**பக்கங்கள்**

ஆ.—தொடர்ச்சி.

**ஆறுமுகம், திரு. எம்.—**

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்து தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு — 734

**ஆறுமுகம், திரு. சேலம் மு.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் — 379—383

இ.

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நியந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1982 — 1

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982 — 1—2

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு, (ஒ.தீ.க.) — 803

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 — 549, 550

முந்திரித் தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்கு தோல் வியாதி ஏற்படுவது (க. ஈ. அ.) — 675—676

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் — 138—139

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

உறுப்பினர்களுக்கான சில சலுகைகளை அறிவிக்கும்போது அமைச்சர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் குறித்து (ஒ. பி.) — 526—527

மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல் (க. ஈ.) — 636, 637, 638



**பக்கங்கள்**

இ—தொடர்ச்சி.

**இராசாம்பாள், திருமதி தா.—**

சருக்கை கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் நிறுவும் திட்டம் — 769

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு — 145

சமூக நலன் — 188—193

**இராசாராமன், திரு. எஸ்.—**

சேலம் மாவட்டம், மாக்னசைட் படிவுகள் — 656—658

**இராசு, திரு. ஜே. எஸ்.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாநில சட்டமன்றம் — 374—379

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 (பி.ஆ.) — 603—604, 608, 609—610, 611, 618, 619, 620

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

காவல் துறை — 42—84, 88—93

தீயணைப்புப் பணிகள் — 324—371

**பக்கங்கள்**

இ—தொடர்ச்சி.

**இராமச்சந்திரன், திரு. ச.—**

கோதையாறு இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது (க. ஈ. அ.) — 529, 530

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 — 855—856

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. வி.) — 745—746

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை, (ஒ. தீ.) — 671—674

முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) — 817—818, 819, 820

**இராமசாமி, திரு. எஸ். என்.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு — 144—145

சமூக நலன் — 184—185

கைத்தறியும் நெசவுத் தொழிலும் — 126—127

**இராமலிங்கம், திரு. செ.—**

ஆட்டோ ரிக்ஷா மீட்டர்களில் குறைபாடுகள் — 513—516

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

கைத்தறியும் நெசவுத் தொழிலும் — 148



**பக்கங்கள்**

இ—தொடர்ச்சி.

**இராமலிங்கம், டாக்டர் கே. பி.—**

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் நிலையங்கள் எண்ணிக்கை — 791—794

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் — 193—197

**இளையபெருமாள், திரு. எல்.—**

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கல்வித்துறை ஏற்றுக் கொள்ளுதல் — 633—637

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981), 1981 — 729—732

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

காவல் துறை — 85—88

தீயணைப்புப் பணிகள் — 370

ஈ.

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**

கோதையாறு இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது, (க.ஈ.) — 530

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு (ஒ. தீ.) — 800

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை, (ஒ.தீ.) — 668—669

மீன் உற்பத்திக்குத் தனிப்பிரிவு திட்டம் — 762—766

ஸ்டான்லி மருத்துவமனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க.ஈ.) — 839, 847

உ


**உகம்சந்த், திரு. எஸ். டி.—**

சென்னை, சாக்கடை நீரை ஒழுங்குபடுத்தி, சாலைகளைப் பராமரித்தல் 644—647

**உணவு தானியங்கள்—**

மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல் (க. ஈ. ஆ.) 836—839

**உத்திராபதி, திரு. பொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 74, 82

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 148

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் 399—401

**உமாநாத், திரு. ரா.—**

கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் (நாகப்பட்டினத்தில்) கட்டுதல் 523—526

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் சங்கத்திடமிருந்து வரப்பெற்ற மனு 778—780

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு (ஒ. நீ.) 800—802

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 559, 560, 617, 618, 619, 620, 621

பூண்டி, நீர்மின், நீரியல் ஆராய்ச்சி நிறுவனம் 654

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 849—850









**உமாநாத், திரு. ரா.—தொடர்ச்சி.**

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) 810, 815

ஸ்டான்லி மருத்துவமனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது 839, 840, 841—842

**உள்ளாட்சிகள்—**

நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள், செயல்படும் விவரம் 642—644


ஏ.


**ஏடுகள்—**

பேரவை முன் வைக்கப்பெற்றவை 218, 627—628, 750—751


ஒ.


**ஒழுங்குப் பிரச்சினை—**

உறுப்பினர்களுக்கான சில சலுகைகளை அறிவிக்கும்போது அமைச்சர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் குறித்து 526—527


க.


**கடற்கரை—**

கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் (நாகப்பட்டினத்தில்) கட்டுதல் 523—526

**கணேசன், திரு. இ.—**

இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் 787—788

**கருணாநிதி, டாக்டர் மு.—**

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 851—853, 856, 857, 860, 861

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருணாநிதி, டாக்டர் மு.—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982), 1982 (பி.ஆ.) 570—599, 601, 602, 608—609, 610, 611, 613—614, 615, 616, 618, 625, 626

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) 821, 822

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 333, 337—338, 350, 360, 363, 13—42, 59, 60

கருப்பையா, திரு. இரா.—

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 852

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 82/1981), 1981 694—697



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருப்பையா, திரு. ஏ. டி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலன் 177—180

கல்லன், திரு. கே.—

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு (நீலகிரி மாவட்டம்) நிர்வாகஸ்தர் நியமித்தல் 493—494

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. வி.) 744—745

கல்வி—

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கல்வித்துறை ஏற்றுக் கொள்ளுதல் 633—637

தமிழ் பல்கலைக் கழகம், தமிழ் நூல்கள் வெளியிடும் திட்டம் 640—642

கவன ஈர்ப்புகள்—

கோதையாறு இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது 529—530

செங்கழுநீர் மலைக் குவாரிகளினால் குடியிருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது 677—679

பச்சை மிளகாய், நோயால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து 531—532

மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல் 836—839

முந்திரித் தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்கு தோல் வியாதி ஏற்படுவது 675—676

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது 839—848

கனிமங்கள்—

மாக்னசைட் படிவுகள், சேலம் மாவட்டம் 656—658

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

காளிமுத்து, திரு. கா.

பச்சை மிளகாய், நோயால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து (க.ஈ.அ.) 531, 532

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981), 1981 708, 718, 721—725

கிருஷ்ணசாமி, திரு கா. கோ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 180—182

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981), 1981 682—685, 698, 699

கிருஷ்ணன், திரு.ரா.—

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு (ஓ.தீ.) 800

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஓ. தீ.) 665

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
கைத்தறியும், நெசவுத் தொழிலும் 113—117, 138, 139, 142

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ.) 839, 845

ஹர்பான்சிங் கமிட்டி அறிக்கை, அரசின் நடவடிக்கை 647—651



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

குடிநீர்—

பவானி ஆறு வசதி 642

குமரி அனந்தன், திரு.—

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 854—855

குழுக்கள்—

அரசு உறுதிமொழிக் குழு, அறிக்கை அளித்தல் 681
பொதுக் கணக்குக் குழு, அறிக்கை அளித்தல் 680
பொது நிறுவனங்கள் குழு, அறிக்கை அளித்தல் 681
பொது நிறுவனங்கள் குழு (1976-77 மீதான 11-வது அறிக்கை) 532
மதிப்பீட்டுக் குழு, அறிக்கை அளித்தல் 680

கூட்டுறவு—

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு (நீலகிரி (மாவட்டம்) நிர்வாகஸ்தர் நியமித்தல் 493—494

சருக்கை கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் நிறுவும் திட்டம் 769

நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம், திருச்சி மாவட்டம் 660—661

கோபாலகிருஷ்ணன், திரு. கோ.—

கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் திறத்தல் 496—497

கொடைக்கானல் நகரியத்தால் வசூலிக்கப்படும் புதிய வரி 776—777

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 154—157

க—தொடர்ச்சி.

கோபாலன், திரு. ஆர். டி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 163—167

கோபாலன், திரு. சி.—

திரையரங்குகள் (1981-ஆம் ஆண்டில்) கட்ட கடன் தொகை வழங்கியது 498—501

கோமதி சீனிவாசன், திருமதி—

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. வி.) 746—750

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 144, 145, 146, 199—216

கோவைத்தம்பி, திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
மாநில ஆட்சித் தலைவர்
அமைச்சர்கள்
தலைமையிடப் பணியாளர்கள்
மாநில சட்டமன்றம் 388, 392

சங்கரய்யா, திரு. என்—

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (க. கோ.) 818—819, [illegible]





ச—தொடர்ச்சி.

சங்கரய்யா, திரு. என்.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :
காவல் துறை 55, 59, 72—73, 75—76, 78—79, 80, 82, 85—88

சட்டநாத கரையாளர், திரு. பி.—

அரசு உறுதிமொழிக் குழு, அறிக்கை அளித்தல் 681

சட்ட முன்வடிவுகள்—

இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ. நி.) 532—533

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1982 (அ. நி.) 1

ஊராட்சிகள் உள்ளூர்கசல்ல மேல் வரி விதிப்பைச் செல்திறனாக்குதல் சட்ட முன் வடிவு, 1982 (அ.நி.) 322

பயிர்களுக்குச் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981), 1981—

அ. நி. 709—721
பி. ஆ. 724—725
நிறைவேற்றல்

**பக்கங்கள்**

ச—தொடர்ச்சி.


சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981), 1981—

ஆ. நி. 692—707

பிரி. ஆ 704—707

நிறைவேற்றல்

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981), 1981

ச. ஆ. 725—738

ச. பி. ஆ.

நிறைவேற்றல் 737—739

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 420

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 849—866

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 1—[illegible]

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1982

ஆ. நி

பிரி. ஆ.

நிறைவேற்றல்

**சண்முகம், திரு ஏ. சி.—**

இராமசாமி கமிஷன் அறிக்கை (த. கோ.) [illegible]




**பக்கங்கள்**

ச—தொடர்ச்சி.


சமரசம், டாக்டர் கே.—

குடிமைப் பொருள் வழங்குதுறை (இரண்டாம் பகுதி) பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த கருத்துக்களின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை அளித்தல் 321

மதிப்பீட்டுக்குழு, அறிக்கை அளித்தல் 680

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் 397—399

மாநில சட்டமன்றம்

சமூகநலம்—

கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் பொருத்தும் பணி 507—509

காது கேட்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம் 797—799

தீண்டாமை ஒழிப்பு, செய்திப் படம் தயாரித்தல் 662

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 858

சாலைகள்—

சென்னை நகரைச் சுற்றி புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் 783—785

தார் போடுவதற்குப் பதிலாக வேறு பொருள் போட்டுக் கொண்டு ஆராய்ச்சி 780—783

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**சித்தன், திரு. என். எஸ். வி.—**

- கோடைக்கானல் நகரியத்தால் வசூலிக்கப்படும் புதிய வரி — 776—777
- தமிழ் நாட்டிற்கு சுற்றுலா வருவோரை அதிகரிக்க அயல் நாட்டு பயண முகவர்கள் நியமித்தல் — 495—496
- தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கை — 794
- நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 — 533—539
- நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஒ.தீ.) — 605
- பொதுக் கணக்குக் குழு, அறிக்கை அளித்தல் — 680
- பொது நிறுவனங்கள் குழு (வ.-வ.), (1976-77 க்கான 11-வது அறிக்கை) — 532
- பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 685—691
- முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) — 812, 818, 823

**சிவசாமி, திரு. செ.—**

- நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 — 553—558
- நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஒ.தீ.) — 665





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

- கைத்தறியும் நெசவுத் தொழிலும் — 142—143
- மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் — 374

**சின்னசாமி, திரு. எம்.—**

- கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது (க. ஈ.) — 523
- திருச்சி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் — 771
- பச்சையாறு பாசனத் திட்டம் — 651—652
- பேருந்துகளுக்கான கூடுகள் கட்ட அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்கள் — 512—513

**சுந்தரம், திரு. கே. ஆர்.—**

- நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 732—733

**சுந்தரராஜ், திரு. நா.—**

- முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) — 814

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

- காவல் துறை
- தீயணைப்புப் பணிகள் — 3—13, 54—55, 57, 61, 81, 82, 329, 339, 340

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியன், திரு. உ.—

இராமசாமி கமிஷன் அறிக்கை (த. கோ.) 233

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு:
மாநில ஆட்சித் தலைவர்
அமைச்சர்கள்
தலைமையிடப் பணியாளர்கள்
மாநில சட்டமன்றம் 373, 383—388

சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—

பட்டா வழங்கப்பட்ட நிலங்கள் 629—631

சுப்பிரமணியன், திரு. மா.—

ஆதிதிராவிடர்கள், வீட்டு மனைப் பட்டா வழங்குதல் 663

சுவாமிநாதன், திரு. வி. வி.—

தன்னிலை விளக்கம் 322—323

சுற்றுலா—

தமிழ்நாட்டிற்கு சுற்றுலா வருவோரை அதிகரிக்க அயல் நாட்டு பயண முகவர்கள் நியமித்தல் 495—496

செங்கோட்டையன், திரு. கு. அ.—

பவானி ஆறு, குடிநீர் வசதித் திட்டம் 642

செம்மலை, திரு. செ.—

சேலம் மாவட்டத்தில் விதைப்பண்ணை அமைக்கும் திட்டம் 501—502

தமிழ் பல்கலைக் கழகம், தமிழ் நூல்கள் வெளியிடும் திட்டம் 640—642

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கைத்தறியும் நெசவுத் தொழிலும் 117—120



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

செல்லமுத்து, திரு. எம்.—

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு (ஒ.கீ.) 800

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—

திருச்சி மாவட்டம், கூட்டுறவு நூற்பாலையை நவீனப் படுத்துதல் 660—661

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 755, 735—739

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 614, 615, 616

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 699—707

சோமு, திரு. என். வி. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
காவல்துறை
தீயணைப்புப் பணிகள் 340, 341

சௌரிராஜன், டாக்டர் கே.—

முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம், (த.கோ.) 812

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கால்நடை வளர்ப்பு
சமூக நலன் 171—173

**பக்கங்கள்**

**த.**

**தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் **527—528**

உறுப்பினர்கள் விடுதியில் பந்தோபஸ்து ஏற்பாடு **799—800**

முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் 810—822

**தங்கமணி, திரு. கே. எம்.—**

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஒ.தீ.) **565**

**வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—**

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் **372**

**தங்கவேல் ராஜ், திரு. பி. எம்.—**

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை, (ஒ.தீ.) **665**

**தலைவர்—**

**அறிவிப்புகள்—**

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும் (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (ஆ.இ.) **725**

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (ஆ. இ.) **420**

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (ஆ.இ.) **707**



**பக்கங்கள்**

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (ஆ. இ.) 681

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

ஒத்திவைப்புத் தீர்மானம்—

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கு நிலம், வீடு கொடுத்து பாதிக்கப்பட்ட கிராமவாசிகளின் கோரிக்கையை வலியுறுத்திக் கிளர்ச்சி செய்வதால் 25—3—1982 லிருந்து 29—3—1982 வரை 350 பேர்கள் கைது செய்யப் பெற்றிருப்பதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்—

மாண்புமிகு மின்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது **665—674**

ஒழுங்குப் பிரச்சினை—

பேரவையில் விவாதித்து முடித்துவிட்ட பிரச்சினை மீது ஒழுங்குப் பிரச்சினை என திரும்பவும் எழுப்புதல் முறையல்ல **859**

குறுக்கீடு—

ஒரு பிரச்சினை குறித்து முன்வரிசையில் உள்ள தலைவர்கள் விரும்பினால் ஏதாவது சொல்லலாம். அவை உறுப்பினர் அனைவரும் தத்தம் கருத்தைச் சொல்லக்கூடாது **822**

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—

திடீரென அறிக்கை வெளியிடப் பெறுகிறபோது, அந்தந்த துறை அதிகாரிகள் பேரவை அலுவலர்கள் மாடத்தில் இருப்பது உதவியாக இருக்கும் (வ.செ.தி.)

பேரவை நிகழ்ச்சி நிரலில் ஒத்தி வைப்புத் தீர்மானம், 106 வது விதியின் கீழ் அறிக்கை அளித்தல் ஆகியவை சேர்க்கப்படுவதில்லை. (த.கோ.)

பேரவையில் ஓர் உறுப்பினர் திடீரென்று ஒரு பிரச்சினையை எழுப்ப அதே சமயத்தில் உடன் அப் பிரச்சினை குறித்து 106-வது விதியின் கீழ் அறிக்கை முன்வைக்க வந்தது வியப்பும் ஆச்சரியமும் தருவதாக உள்ளதாக சிலர் குறிப்பிட்ட போது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

“ஓர் உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்ப என் அனுமதியைக் கேட்டார். அவை முன்னவர் 106-வது விதியின் கீழ் அறிக்கை வைக்க வேண்டும் என்று என் அனுமதியைக் கேட்டார்கள். இந்த இரண்டும் ஒன்று சேர்ந்தது என்றால் அதை தவறாகப் பார்த்துக் கேட்கக் கூடாது. மிக தவறாகப் பார்த்து கேட்கக்கூடாது.





த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

முக்கியமான பிரச்சினை எனில் அது நாட்டு மக்களுக்கு தெரிய வேண்டும் என இந்த அளவிலே அறிக்கை வைப்பது முறையானதுதான்.”. (த.கோ.) 816

முன்னாள் ஐ. ஜி. என். ஆர். மாணிக்கம் அவர்கள் பத்திரிகைக்கு கொடுத்திருந்த அறிக்கையை ஒட்டி பேரவையில் அவை முன்னவர் அவர்கள் அறிக்கை வைக்க முற்பட்டபோது, அது குறித்து எழுப்பப்பட்ட கருத்தின் மீது தலைவர் அளித்த குறிப்புரையாவது: “மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்தின் மீது 3 நாட்கள் பேசியிருக்கிறார்கள். இப்போது வைக்க இருக்கிற அறிக்கையையும் அதனுடைய கன்டினியூயேஷன் போல மாண்புமிகு உறுப்பினர்கள் நினைத்துக் கொள்ளலாம். முதலமைச்சர் சார்பாக, அவை முன்னவருக்கு இங்கே பதில் அளிக்கவோ, அறிக்கை வைக்கவோ கடமையும், பொறுப்பும் இருக்கிறது”. 813, 819

நீக்கம்—

கோர்ட்டில் இருக்கும் வழக்கு குறித்து நாம் பேசுவது கூடாது என குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு பேசிய பகுதி நீக்கப் பெற்றது (வ. செ. தி) 75

பேசும் முறை—

மற்றவர்களுக்கும் பேசுவதற்கு நேரம் கிடைக்கும் வகையிலே சுருக்கமாகப் பேச வேண்டும் (வ.செ.தி.) 282

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

மரபு—

எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் ஒருங்கே கொண்டது தான் பேரவை. தனித்தனியே பிரித்துப் பார்த்தல் கூடாது — 848

**விவாதம்—**

கட்சி உள் விவகாரங்கள் பற்றி பேச வேண்டாம். பொதுப் பிரச்சினைகள் பற்றி சொல்லலாம் (வ.செ.கி) — 88

வழக்குகளின் உள் விவரங்களை எல்லாம் பேரவையில் பேசக் கூடாது (வ செ. கி.) — 330

**தாமரைக்கனி, திரு. இரா.—**

கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் பொருத்தும் பணி — 507—509

காஞ்சிபுரத்தைச் சார்ந்த பகுதிகளில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம் — 769—771

காது கேட்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம் — 797—799

சாயர்புரம் (திருநெல்வேலி மாவட்டம்) வாசனை திரவியம் தயாரித்தல் — 491—492

தீண்டாமை ஒழிப்பு, செய்திப் படம் தயாரித்தல் — 662

பச்சையாறுப் பாசனத் திட்டம் — 651—652

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ.) — 839—846

**தியாகராசன், திரு. ஆர்.—**

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப் பெற்றவர் நிலைமை (ஒ. தீ.) — 665—668

**திருநாவுக்கரசு, திரு. எஸ்—**

இந்தியக் கூட்டாண்மை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1982 — 536



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

**திருநாவுக்கரசு, திரு. எஸ்.—தொடர்ச்சி.**

செங்கழுநீர் மலைக் குவாரிகளினால் குடியிருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது (க. ஈ. அ.) — 677, 678, 679

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 — 596, 600, 601, 602, 603, 604, 605, 606—608, 610, 611, 612, 613, 614

**திருமாறன், திரு. பெ.—**

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 (ச. பி. ஆ.) — 550—553

**திருவேங்கடம், திரு. பெ. சு.—**

சுற்றுலா ஊர்திகள்—1981-ல் ஆந்திராவில் கைப்பற்றப் பெற்றவை — 517—518

தார் போடுவதற்குப் பதிலாக வேறு பொருள் போட மேற் கொண்ட ஆராய்ச்சி — 780—783

நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள், செயல்படும் விபரம் — 642—644

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய் களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 708—712

**தீர்மானங்கள்—**

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் — 866—887

**துரைமுருகன், திரு.—**

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்ப தற்கான 1982 ஆம் ஆண்டு (திருத்த) சட்ட முன் வடிவு — 856, 857

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரைமுருகன், திரு.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 69—70

துரைராஜ், திரு. பி.—

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982), 1982 (ச. பி. ஆ.) 539—542

தொழில்கள்—

காஞ்சிபுரத்தைச் சார்ந்த பகுதிகளில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம் 769—771

திருச்சி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் 771

தொழிலாளர்கள்—

கோவில்பட்டி நகரசபையில் கூடுதல் துப்புறவுத் தொழிலாளர்களை நியமிக்கும் திட்டம் 788—790

தொழிலாளர் நலன், ஹர்பான்சிங் கமிட்டி அறிக்கையின் மீதான நடவடிக்கை 647—651

தொழிற்சாலை—

சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை (சேலம் மாவட்டம்) 522—523

சாயர்புரம் (திருநெல்வேலி மாவட்டம்) வாசனை திரவியம் தயாரித்தல் 491—493

நரசிம்மன், திரு. பூ. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—

கைத்தறியும், நெசவுத் தொழிலும் 110—113

நல்லப்பன், திரு. தி. கா.—

கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்ற மனு 772—775



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

நல்லப்பன், திரு. தி. கா.—தொடர்ச்சி.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப் பெற்றவர் நிலைமை (ஒ. தீ.) 670

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 719, 718, 720

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு : 120—122

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

மாநில ஆட்சித் தலைவர் | அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள் | மாநில சட்டமன்றம் 372

வெள்ளி ஆபரணங்கள், ஒருமுனை வரி விதித்தல் 632—633

நல்வாழ்வு—

சென்னை, சாக்கடை நீரை ஒழுங்குபடுத்தி சாலைகளைப் பராமரித்தல் 644—647

நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்.—

இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம், சிமெண்ட் உற்பத்தி 658—660

உறுப்பினர்கள் விடுதியில் பந்தோபஸ்து ஏற்பாடு (த. கோ.) 799

நாராயணன், திரு. பி. ஜி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—

கால்நடை வளர்ப்பு

சமூக நலன். 182—183

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நிதி அலுவல்—

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 3—95

97—144

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

144—217,

கால்நடை வளர்ப்பு

சமூக நலன்

மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள் மாநில சட்டமன்றம் 372—418

தேர்தல்கள்

ஓய்வு ஊதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்

பல்வகை

பல்வகை மூலதனச் செலவு

மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்

418—419

நிலங்கள்—

பட்டா வழங்கப்பட்டவை 629—631

நிறுவனங்கள்—

இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம், சிமெண்ட் உற்பத்தி 658—660

நீர்மின், நீரியல் ஆராய்ச்சி நிறுவனம், பூண்டி 654

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

இராமசாமி கமிஷன் அறிக்கை (த. கோ.) 834

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல் வரி விதிப்பைச் செயல் திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982 823



பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நெடுஞ்செழியன், டாக்டர், இரா.—தொடர்ச்சி

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982-ஆம் ஆண்டு (திருத்த) சட்ட முன்வடிவு 849, 859—860, 861, 866

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1982 2

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 (ச. பி. ஆ.) 633, 621—626

மாயூரம் மாவட்டத்தில் லெவி நெல் வசூல் (க.ஈ.அ.) 836, 837—839

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த.கோ.) 810—811, 813, 815, 820—821

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம்

விதி 106-ன் கீழ் முதல் அமைச்சர் அறிக்கை (அ.அ.) 822—827

நெடுமாறன் திரு. ப.—

தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982 ஆம் ஆண்டு (திருத்த) சட்டமுன்வடிவு 855, 856, 857—858

வரவு-செலவுத்திட்டம், 1982-83, வாகெடுப்பு :

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 6, 81

ப.

பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் 107—110

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பம்மல் நல்லதம்பி, திரு.—

செங்குன்றம் மலைக் குவாரிகளினால் குடியிருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது (க.ஈ.) 677, 678, 679

பலராமன், திரு. இல.—

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 712—716, 723

முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த.கோ.) 822

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் 127—129

பழனிசாமி, திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் 124—126

பழனிமுத்து, திரு. சி.—

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஒ.தீ.) 665

பழனியப்பன், திரு. கு. பா.—

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர் நிலைமை (ஒ.தீ.) 670—672

பழனிவேல், திரு. என்.—

உடல்நலப் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடங்கள் 790—791

டாக்டர்கள் (எம்.பி.பி.எஸ்.) பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை (1980 முடிய) 504—507




பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பழனிவேல், திரு. என்—தொடர்ச்சி.

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 716, 717, 719

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 157—163

சமூக நலன்

பாசனம்—

கல்லணை விரிவாக்கக் கால்வாய், மேம்பாடு செய்தல் 652—653

பச்சையாறு திட்டம் 657—659

பரம்பிக்குளம்-ஆழியாறு அணை, பாசனப் பரப்பு 654—656

பாபு ஜனார்த்தனன், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 148—152

சமூக நலன்

பாலகிருஷ்ணன், திரு. ச.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் 193—196

பாலசுப்பிரமணியன், திரு. க.—

குடிசைவாசிகளிடமிருந்து மின் கட்டணம் வசூல் 701—702

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி.—

சட்ட நூல்கள், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை 663

சென்னை நகரைச் சுற்றி புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் 783—785

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 560—566

பச்சை மிளகாய்—நோயால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து (க.அ.) 501—533

ப—தொடர்ச்சி.

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி.—தொடர்ச்சி

ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை 502—504

பாலன் திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும், நெசவுத் தொழிலும் 97,

கால்நடை வளர்ப்பு

சமூக நலன் 144, 146

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம் 878

புருஷோத்தமன், திரு. அ.—

சென்னையில் பாயின்ட்-டு-பாயின்ட் பேருந்துகள் விடும் திட்டம் 795—796

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் [illegible]—102

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு, சமூக நலன் 17[illegible]—176

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம் 406—407

பொன்னையன், திரு. சி.—

கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவையின் ... 1980) ... குழுவின் அறிக்கை அளித்தல் 331





ப—தொடர்ச்சி.

பொன்னையன், திரு. சி.—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 545—546, 547, 554—555, 559, 695

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் (த. தீ.) 875, 884

முன்னாள் ஐ. ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப் பெற்றதற்கான விளக்கம் (த. கோ.) 814, 816

விதி 106-ன் கீழ் கூட்டுறவு அமைச்சரின் அறிக்கை 827—830

போக்குவரத்து—

ஆட்டோ ரிக்ஷா மீட்டர்களில் குறைபாடுகள் 513—516

காஞ்சிபுரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து 518—522

சுற்றுலா ஊர்திகள்—1981-ல் ஆந்திராவில் கைப்பற்றப் பெற்றவை 517—518

சென்னையில் பாயின்ட்—டு—பாயின்ட் பேருந்துகள் விடும் திட்டம் 795—796

தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித் தடங்களின் எண்ணிக்கை 794

திருவண்ணாமலை வட்டத்தில் பேருந்துகள் விடும் திட்டம் 796—797

பேருந்துகளுக்கான கூடுகள் கட்ட அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்கள் 512—518

ம.

மக்கள் நல்வாழ்வு—

தோல் பதனிடும் தொழிற்சாலை (செம்பட்டு) கழிவு நீர் ஏற்படுத்தும் சுகாதாரக் கேடுகள் 505—51

## ம—தொடர்ச்சி.


**மணி, திரு. டி.—**

கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செய லிழந்துள்ளது (க. ஈ.) — 529

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம் கையகப் படுத்தியதால் பாதிக்கப் பெற்றவர் நிலைமை (ஒ. தீ.) — 635

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ.) — 839, 844

**மணிமாறன், திரு. ஆர்.—**

இராமசாமி கமிஷன் அறிக்கை (த. கோ.) — 834

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 — 558, 559, 560

**மருத்துவம்—**

டாக்டர்கள் (எம்.பி.பி.எஸ்.) பட்டம் பெற்றவர்கள் வேலை யில்லாதவர் எண்ணிக்கை (1980 முடிய) — 504—507

ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை — 502—504

**மருத்துவ மனைகள்—**

இடைப்பாடி நகரில் பல் மருத்துவ மனை ஏற்படுத்தும் திட்டம் — 787—788

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் நிலையங்கள் எண்ணிக்கை — 791—794

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ.) — 839—843

**மாணிக்கம், திரு எம். எஸ்.—**

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1981 — 697—698, 699






## ம—தொடர்ச்சி.


**மின்சாரம்—**

எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவும் திட்டம் — 766—768

குடிசைவாசிகளிடமிருந்து மின் கட்டணம் வசூல் — 761—762

கோதையாறு இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செய லிழந்துள்ளது (க. ஈ.) — 529—530

மின் உற்பத்திக்குத் தனிப் பிரிவு திட்டம் — 762—766

**முத்துசாமி, திரு. க.—**

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 — 587, 588, 589, 590, 591—592, 593—594, 595

**யசோதா, திருமதி டி—**

தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியாளர்கள் — 785—787

**ரகுமான்கான், திரு. அ.—**

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) (மூன்றாவது) திருத்த சட்ட முன்வடிவு, 1981 — 726—729

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

காவல் துறை — 94—95

தீயணைப்புப் பணிகள் — 341—342

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.


ரமணி, திரு. கு.—

எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் திறவும் திட்டம் 766—768

காஞ்சிபுரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து 518—522

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 618

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை (அ. ம. வி.) 739—742, 749—750

பாம்பிக்குளம்—ஆளியாறு அணை, பாசனப் பரப்பு 654—656

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 354—356

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம் 373, 393—397

ரெத்தினராஜ், திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலன் 197—199


வ.


வரதராஜன், திரு. என்.—

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 542—550, 558




பக்கங்கள்

வ—தொடர்ச்சி.


வரதராஜன், திரு. என்.—தொடர்ச்சி.

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (க.தீ.) 867—882, 884—887

வரிகள்—

தருமுனை வரி, வெள்ளி ஆபரணங்கள் 632—633

கொடைக்கானல் நகரியத்தால் வசூலிக்கப்படும் புதிய வரி 776—777

விசயலட்சுமி, செல்வி ப.—

இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக நியமித்தல் 638—639

சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை (சேலம் மாவட்டம்) 522—523

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலன் 151—153

வின்செண்ட், திரு. மி.—

மூந்திரித் தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்கு தோல் வியாதி ஏற்படுவது (க. ஈ.) 675—676

விஜயசாரதி, திரு. எம்.—

விதி 106-ன் கீழ் அறிக்கை அளித்தல் (அ.அ.) 830—832

விஜயராகவன், திரு பொ.—

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 566—579

விஸ்வநாதன், திரு. கோ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்,

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம் 401—409

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வீராசாமி, திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலன் [illegible]

185—188

வெங்கட்டசுப்பிரமணியம், திரு. ப.—

காஞ்சிபுரத்தைச் சார்ந்த பகுதிகளில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம் 769—771

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும் 102—107

வெளியீடுகள்—

ஓய்வு பெற்ற ஐ. ஜி. திரு. ஆர். என் மாணிக்கம், இராமமூர்த்தி கமிஷன் முன்பு தாக்கல் செய்த உறுதிமொழி பத்திரம் குறித்து 832—832

சட்ட நூல்கள், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை 663

வேணுகோபால், திரு. த.—

திருவண்ணாமலை வட்டத்தில் பேருந்துகள் விடும் திட்டம் 796—797

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு :

மாநில ஆட்சித் தலைவர்

அமைச்சர்கள்

தலைமையிடப் பணியாளர்கள்

மாநில சட்டமன்றம்

[illegible] 872

வேளாண்மை—

கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்ற மனு 772—775

சேலம் மாவட்டத்தில் விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் 501—502

பச்சை மிளகாய்—நோயால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து (க. ஈ.) 531—532



பக்கங்கள்

ஹ.

ஹண்டே, டாக்டர், எச். வி.—

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ. அ.) 840—841, 842—848

ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி.—

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982 589, 592

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் (கு. தீ.) 875, 882—883, 884

ஹேமச்சந்திரன், திரு. ஜே.—

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 691—694

ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது (க. ஈ.) 839, 848

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்புத் திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர்' இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்குவோர் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. க. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள். நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மறுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Admistrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Fores and Cinchona and Grant of Liquor Permis.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts' Prisons, Legislations on Weigths and Measures) Registration of Companies, Debt. Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Loca Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Higways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transport—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. M. VIJAYASARATHI (Minister for Adi Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, And Printing Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social, Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and correctional Administration.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன். பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அமகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21. ஆனூர் ஜெகதீசன், திரு.பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. ... | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ... | மருங்காபுரி |
| 24. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26. இராசாம்பாள், திருமதி தா... | தலைவாசல் (செ.வ.) |
| 27. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 20. இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 39. இராசேந்திரன். திரு.எஸ்.என். | தூத்துக்குடி |
| 31. இராமச்சந்திரன், எம். ஜி. ருதி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 32. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி |
| 34. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான் குளம் |
| 36. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 37. இராமசுப்பிரமணியன், திரு.இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38. இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39. இராமலிங்கம் டாக்டர். கே. பி. .. | இராசிபுரம் |
| 40. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41. இராஜசேகரன், திரு. வே. .. | இராதாகிருஷ்ண நகர் |
| 42. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43. இராஜேந்திரன், திரு.எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44. இளையபெருமாள், திரு. எஸ். | எழும்பூர் (செ.வ.) |
| 45. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு. | அம்பாசமுத்திரம் |
| 46. உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம் |
| 47. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 48. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49. உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 50. கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52. கணேசன், திரு. இ. .. | இடப்பாடி |
| 53. கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54. கந்தசாமி, திரு. கா. வே .. | கிணத்துக்கடவு |
| 55. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 56. கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57. கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணா நகர் |
| 58. கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை |
| 59. கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60. கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை |
| 61. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 62. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63. கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 64. கலையரசன், திரு. நன்னிலம் அ. .. | நன்னிலம் (செ.வ.) |
| 65. காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம் |
| 66. கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72. கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73. குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர் |
| 74. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 75. குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 66. குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ.வ.) |
| 78. குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79. குலசேகரப் பாண்டியன்,, திரு. ந. | வாணியம்பாடி |
| 80. குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81. கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர் |
| 82. கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84. கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 85. கோமதி சீனிவாசன், திருமதி, . | வலங்கை (செ.வ.) |
| 86. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 88. சக்கரபாணி திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90. சட்டநாத கரையாளர், திரு. கி. .. | தென்காசி |
| 91. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 92. சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 93. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 94. சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான் |

| | |
|---|---|
| 95. சபாபதி, திரு. சி. | |
| 96. சமரசம், டாக்டர் கே. .. | அரூர் (செ.வ.) |
| 97. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | காவேரிப்பட்டணம் |
| 98. சாமிக்கண்ணு, திரு. தா. .. | கடையநல்லூர் |
| 99. சித்தன், திரு. என். எஸ். வி. | செங்கம் |
| 100. சிதம்பரம், திரு. சி. த. .. | திருமங்கலம் |
| 101. சிவசாமி, திரு. செ. .. | காரைக்குடி |
| 102. சிவஞானம், திரு. ந. .. | இளையான்குடி |
| 103. சிவப்பிரகாசம், திரு. சி. .. | திருவோணம் |
| 104. சிவபெருமாள், திரு. மு. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 105. சிவராமன், திரு. எஸ். .. | ஓமலூர் |
| 106. சின்னசாமி, திரு. எம். .. | சின்னசேலம் |
| 107. சின்னதுரை, திரு. ஏ. .. | கரூர் |
| 108. சின்னராசு, திரு. க. இரா... | மேல்மலையனூர் |
| 109. சின்னராசு, திரு. மா. .. | திருவண்ணாமலை |
| 110. சுந்தரம், திரு. கே. ஆர். .. | தொண்டாமுத்தூர் |
| 111. சுந்தரம், திரு. ப. .. | குடியாத்தம் |
| 112. சுந்தரம், திரு. மு. .. | திருப்பத்தூர் |
| 113. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | ரிஷிவந்தியம் |
| 114. சுந்தரராஜ், திரு. நா. .. | முதுகுளத்தூர் |
| 115. சுந்தரராஜன், திரு. மு. .. | திருமயம் |
| 116. சுப்பிரமணியன், திரு. உ. .. | விருதுநகர் |
| 117. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | சிவகங்கை |
| 118. சுப்பிரமணியன், திரு. மா. .. | போடிநாயக்கனூர் |
| 119. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருவையாறு |
| 120. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | திருநாவலூர் |
| 121. சுவாமிநாதன், திரு. வி. வி... | பவானிசாகர் |
| 122. செங்கோட்டையன், திரு. கு. அ. | புவனகிரி |
| 123. செம்மலை, திரு, செ. .. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 124. செல்லமுத்து, திரு. எம். .. | தாரமங்கலம் |
| 125. செல்வராசன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 126. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 127. சேதுராமன், திரு. ஏ. எம்... | ஆற்காடு |
| 128. சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் |
| 129. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130. சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131. சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி-2 |
| 132. டாக்டர் சௌரிராஜன், திரு. கே. .. | தி. நகர் |
| 133. தங்கமணி கவுண்டர், திரு. | திண்டிவனம் |
| 134. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 135. தங்கவேல்ராஜ், திரு பி. எம். | கிருஷ்ணராயபுரம்(செ.வ.) |
| 136. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 137. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 138. தனபால், திரு. பி. .. | சங்கரி (செ.வ.) |
| 139. தனுக்கோடித் தேவர், திரு. | முதுகுளத்தூர் |
| 140. தாமரைக்கனி, திரு. இரா... | ஸ்ரீ வில்லிப்புத்தூர் |
| 141. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம் |
| 142. திருச்சி ஆர் சௌந்திரராஜன், திரு. | ஸ்ரீரங்கம் |
| 143. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 144. திருயாறன், திரு. பெ. .. | ஆலங்குடி |
| 145. திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.) |
| 146 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 துரைசாமி, திரு. பி. எஸ்... | பர்கூர். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 துரைராஜ், திரு. பி, .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 152 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 153 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 நவநீதகிருஷ்ணன்பாண்டியன் திரு. | ஆலங்குளம். |
| 157 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லாடம். |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம். |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 174 | பாரமலை, திரு. சு. .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி... | சிவகாசி. |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.). |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 179 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ. வ). |
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம். |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ. வ.). |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ. வ.). |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 188 | பெருமாள், திரு. ரா. கு... | விளாத்திகுளம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு, |
| 193 | மணிமாறன், திரு. ஆர்... | திருப்பூர். |
| 194 | மாணிக்கம், திரு. எம். எம். | வேதாரண்யம |
| 195 | மாரிமுத்து, திரு. ந. .. | குளந்தூர் (செ.வ.). |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ வ ). |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி. |
| 204 | முனுசாமி, திரு. மு. ப... | பாலக்கோடு. |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 208 | ரகுமான்கான், திரு. அ... | சேப்பாக்கம். |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 | ராஜமாணிக்கம், திரு. .. எஸ். கே. | முசிறி. |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 215 | வரதராஜன், திரு. என்... | திண்டுக்கல். |
| 216 | விஜயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 220 | விஜயராகவன், திரு. .. பொ. | கிள்ளியூர். |
| 221 | விஸ்வநாதன், திரு. .. கோ. | அணைக்கட்டு. |
| 222 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு. |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |
| 225 | வெங்கட ரெட்டி, திரு. டி. | ஓசூர். |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பேரணமல்லூர். |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர். |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. பு. கோ. | நாங்குநேரி. |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள் மாண்புமிகு அமைச்சர்கள்—

1. மாண்புமிகு திரு. இராம வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராசா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### சனிக்கிழமை, 1982 மார்ச், 27

### பங்குனி 14, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு."

ஒருவரை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர் இடத்தில், பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. அறிமுகச் சட்ட முன் வடிவுகள்.

(அ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 25ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2. வரவு செலவுத் திட்டம்—1982-83—வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை (ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கடந்த ஜனவரி மாதம் 19ஆம் தேதியன்று நாடு தழுவிய போராட்டம் என்ற பேரால் இந்த நாட்டினுடைய உற்பத்தியைக் குறைக்கின்ற வகையிலேயும், வன்முறையைத் தூண்டுகின்ற வகையிலேயும் நடைபெற்ற முயற்சியை முறியடிக்க தமிழகக் காவல்துறையினர் எடுத்துக் கொண்ட முயற்சியையும், அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியையும் நான் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அதன் மூலமாக பல்வேறு விரும்பத் தகாத சம்பவங்கள் இன்றைக்கு நடைபெறாமல் தடுத்தது மட்டுமல்ல, இன்றைக்கு சுமுகமாக வாழ்க்கையை நடைபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததற்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல 1981ஆம் ஆண்டு வடார்க்காடு மாவட்டத்தில் பஸ்ஸை மறித்து அதிலே பயணம் செய்கின்ற பயணிகளிடம் இருந்து கொள்ளை அடிக்கப்பட்டு, அந்த நகைகளை மீட்டுத் தந்துள்ள தமிழகக் காவல்துறையினரை பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இதற்கு முன்னுதாரணமாக கடந்த காலத்தில் வடநாட்டுக்காரர்கள் தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே எல்லாம் கொள்ளை அடிப்பதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈடுபட்டதன் காரணமாக துப்புத் துலக்குவதற்கு, ஒரே ஒரு பீடி துண்டை கொண்டு அதன் காரணமாக, அவர்கள் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டதற்கு தமிழகத்தினுடைய காவல் துறை சிறப்பாக பணியாற்றியது என்பதை நான் இங்கே நினைவுகூற கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு காவல் துறையில் உள்ள பல பெரிய அதிகாரிகளின் மத்தியிலே பெரிய குழப்பம் நிலவுகிறது என்பதைக் கடந்த சட்டமன்றத் கூட்டத் தொடரிலேயும் தெரிவித்தேன். இன்றைக்கும் அதிலே எந்தவிதமான மாறுபாடும்இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலேதான் ஜாதி பூசல், ஜாதிச் சண்டை நடைபெறுகிறது. மனக்கசப்பு இருக்கின்றது என்பது மட்டுமல்லாமல் இந்தப் பெரிய காவல் துறை அதிகாரிகளின் மத்தியிலேயும் இன்றைக்கு மனக்கசப்பு, ஜாதிச் சண்டை இருக்கின்றது. இதுபோன்ற பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்து கொண்டிருக்

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 மார்ச் 27

கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு காவல் துறையில் இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால், பல பெரிய அதிகாரிகள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இவர் நமக்குப் போட்டியாக பெரிய அதிகாரியாக வந்துவிடுவாரோ, அல்லது டைரக்டர்-ஜெனரல்லாக வந்துவிடுவாரோ என்று எண்ணி பல்வேறு பெரிய அதிகாரிகள் தவறான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, இன்னார் வரக்கூடாது இன்னொருவர் வரக்கூடாது என்ற போட்டி காவல் துறையிலே மேல்மட்டத்திலே இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் போக்குவதற்காக நான் கூறும் யோசனை, ''எவாலுவேஷன் கமிட்டி'' என்று ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு நமது முன்னாள் ஐ. ஜி., எப். வி. அருள் அவர்களைத் தலைவராகப் போட்டு நடவடிக்கை எடுத்தால் தமிழகக் காவல்துறை சிறப்பாக வருங்காலத்தில் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பெண் காவலர் பிரிவு தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டது என்ற பெருமை நமக்கு உண்டு. 1979 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தப் பிரிவு இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டாலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உடை சற்று அருவருப்பாக இருக்கின்றது. அதை மாற்றி இன்றைக்கு நம் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய வாச் ஆண்டு வார்டு காவலர்களுக்கு இருக்கின்ற வகையில், வெள்ளை உடையாக இந்தப் பெண் போலீசாருக்கு அறிவிப்பீர்களே யானால் அது இன்னும் சிறப்பாக இருக்கும். அவர்கள் குற்றப் பிரிவில் அவர்கள் சரிவர செயல்படாத நிலையில் இருக்கின்றது. அதற்கு பதில் அவர்களை டிராபிக் பிரிவில் பணியாற்றும் நிலை ஏற்பட்டால் இன்னும் திறம்பட செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்குப் பெண் போலீஸ் பிரிவைச் சேர்ந்த காவலர்கள், நமது காவல் துறை கடந்த காலத்திலே எப்படிச் செயல்பட்டது என்ற அனுபவம் தொடர்ந்து, இன்றைக்கு பெண் போலீஸ் என்று இருந்தாலும் அவர்கள், தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள், சற்று தடிப்பான வார்த்தைகளை அவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் போய்யா, வாய்யா என்று கூட சொல்லவில்லை. போடா, வாடா என்றும் 'ஓர்மாபோடா' என்று சொல்லுகிற அளவுக்கு காவல் துறை பெண் பிரிவைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை வந்ததற்குக் காரணம் தமிழ்நாடு போலீஸ் துறை இன்றைக்கு யாரையும் மதிக்காத சூழ்நிலையிலே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 27] [திரு. நா. சுந்தரராஜ்]

இன்றைக்கு அன்றாடம் சட்டமன்றத்திலே எழுப்பப்படுகின்ற பிரச்சினை போலீஸ் லாக்கப்பிலே இறப்பது சம்பந்தமாகத்தான். இது சாதாரணமான நிகழ்ச்சியாக, அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாக மாறிவிட்டது என்பதுதான். சமீபகாலமாக லாக்கப்பிலோ, சிறைச்சாலையிலோ யாராவது இறந்தால், போலீஸ் துறை அவன் தூக்குப் போட்டு இறந்துவிட்டான் அல்லது பூச்சிமருந்து சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டான் என்று போலீஸ் துறையினர் கொடுக்கும் அறிக்கையைத்தான் இங்கே அவையில் படிக்கிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்படித்தான் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி இதுவரை சொல்லப்படவில்லை. ஆனால் உண்மையில் நடைபெற்ற சம்பவங்கள், காவல்துறையினராலே கையாளப்பட்ட தேர்ட் டிக்கிரி—மூன்றாம் தரச் செயல்களால் அவர்கள் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். என்பன போன்ற நிகழ்ச்சிகள் தான் உண்மை. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தடுக்கின்ற வகையில் இறந்ததற்கு அந்தக் காவல் துறையில் எந்த அதிகாரி ஈடுபட்டிருந்தாரோ அவர் தண்டனையாக 5,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் அதற்குப் பொறுப்பு ஏற்கும் வகையில் அரசாங்கம் 5,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று செய்து இந்த 10,000 ரூபாயை இறந்தவரின் குடும்பத்திற்கு கொடுப்பதற்கு அரசாங்கம் வகைசெய்யவேண்டும். அப்பொழுதுதான் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் தொடராமல் ஒரு கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

அடுத்து சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் சமீப காலங்களில் வழிப்பறி கொள்ளைகளும், பேருந்துகளில் பயணம் செய்கிற பெண்களிடம் கொள்ளையடிக்கும் நிகழ்ச்சிகளும், ரோட்டு ஓரங்களில் நிற்கும் பெண்களின் கழுத்தில் இருக்கின்ற செயின்களை மோட்டார் சைக்கிள் மூலம் வந்து அறுத்துக் கொண்டு ஓடும் நிகழ்ச்சிகளும் நடப்பதைப் பார்க்கிறோம். இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய காவல் துறை இன்றைக்குக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? கடந்த காலத்தில் எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றிய காவல் துறைக்கு ஏன் இந்த நிலைமைகள் வந்தன என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஆகவேதான் நான் சொல்லிக் கொள்வது ''எவால்யூவேஷன்'' ,'கமிட்டி'' தேவைப்படுகிறது. காவல்துறை இப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் கட்டுப்படுத்த தவறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் வைக்கிறேன்.

வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி விட்டுப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மோசடி செய்து இலட்சக் கணக்கான ரூபாய்களை மோசடி செய்கின்ற செய்திகள் நமக்கு வருகின்றன. குறிப்பாக திருச்சியிலே 'ராஜ் டிராவல்ஸ்' என்ற பெயரால், 'மோரீஸ் டிராவல்ஸ்' என்ற பெயரால் பல வெளி நாடுகளுக்கு நாங்கள் ஆட்களை அனுப்புகிறோம் என்று சொல்லி வசூல் செய்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைப் பெற்று இன்றைக்கு ஆளே இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள். மறைந்துவிட்டார்கள் என்ற செய்தி சொல்லப்படுகிறது. அரசாங்கம் இது போன்ற நிறுவனங் களைத் தடை செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமை என்று சொன்னால் அதற்கு மேல் வார்த்தை இல்லை என்ற அளவிற்கு வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே இதில் அரசாங்கம் மெத்தனமான போக்கை மேற்கொள்ள வேண்டாம். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு சுந்தரராஜ அவர்கள் வெளிநாடுகளுக்குப் பயணிகளை அனுப்புவது சம்பந்தமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சொன்னார்கள். இன்டர்நேஷனல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர் பேசி முடித்த பிறகு கேட்கலாம்.

**திரு. ப. நெடுமாறன்** : இன்டர்நேஷனல் எக்ஸ்போர்ட் என்று இளைஞர் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு அவர்களுக்குச் சொந்தமான கம்பெனியின் மீது இப்படியொரு குற்றச்சாட்டு வந்திருக்கிறதே அதன் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள் எதிர்பார்க்கிறார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்** : தலைவர் அவர்களே, உண்மையி லேயே அவருக்குச் சொந்தமான கம்பெனியா என்பது தெரியாது. அவர் சம்பந்தப்பட்டு, அவர் குற்றம் செய்திருப்பார் என்று சட்டம் சொல்லுமேயானால், நீதி சொல்லுமேயானால் நட வடிக்கை எடுப்பதற்குக் காங்கிரஸ் கட்சி நிச்சயமாகக் குறுக்கே நிற்காது.

அடுத்து, போலீசார் கைகளிலே துப்பாக்கி வைத்திருப்பதைப் பார்க்கிறோம். கண்ணீர்ப் புகைக்குண்டுத் துப்பாக்கி வைத்திருப் பார்கள். லத்திக் கம்பு வைத்திருப்பார்கள். ஆனால் இப்பொழு தெல்லாம் கூட்டத்தைக் கலைக்கின்ற போலீசார் கல் எறிகின்ற காட்சியைச் சமீபத்தில் நாம் பார்க்கிறோம். சமீபத்தில்



சென்னையிலே நடைபெற்ற ஒரு வரவேற்பு விழாவிலே போலீ சாரே கல்லெறிந்து வீசும் காட்சியைப் போட்டோ எடுத்திருக் கிறார்கள். அந்தப் போட்டோ மூலம் அது நிச்சயமாகத் தெரி கிறது. இதிலிருந்து போலீசார் எந்த அளவுக்குக் கீழே இறங்கி யிருக்கிறார்கள் என்பது நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்து மதுரையிலே சின்னாளப்பட்டி என்ற கிராமத்திலே இந்திரா காந்தி நெசவாளர் சங்கம் என்ற பெயரால் ஒரு காலனி கட்டுவதற்காக 28—1980 ஆம் நாளன்று மூன்றரை ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. அதிலே பழனி, தனராஜ் என்ற இன்னொருவர் பாத்தியதை கொண்டாடினார். அந்த இடத்திற்கு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அடிக்கல் நாட்டி இருக்கி றார்கள். வழக்கு மன்றத்திற்குப் போகிறது. நீதிபதி அவர்கள் அது ஏழை நெசவாளர்களுக்குத்தான் சொந்தம் என்று தீர்ப்பு அளிக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் வரையிலும் அந்தக் காலனியைக் கட்ட முடியவில்லை. காரணம் அங்கிருக்கும் தனராஜ் என்பவர் அடிக்கல் நாட்டப்பட்ட கல்லையும், கொட்ட கையையும் அத்து மீறி பெயர்த்து விட்டு தன்னுடைய அடியாட் களை வைத்துக் கொண்டு இன்றைக்கும் மிரட்டிக் கொண்டிருக் கிறார்கள். போலீசார் இது வரையில் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் அங்கிருக்கும் காவல் துறையே தனராஜ் என்பவருக்குச் சாதகமாக இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக அந்த ஏழைகள் வீடு கட்டி வாழ்வதற்கான வழியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேனாம்பேட்டையிலே காவல் துறை அதிகாரிகளும், ஒரு நீதிபதியும் எந்த அளவிற்குச் சட்டத்தை மீறி அரசாங்கத்தினு டைய சொத்துக்களைப் பாழடிக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றைச் சொல்ல விரும்புகிறேன். இ-3 இன்ஸ்பெக்டர் ஒருவரும், நீதி வழங்க வேண்டிய நீதிபதி மாரிமுத்து என்பவரும் சேர்ந்து தனி நபருக்குச் சொந்தமான இடத்தை ஆக்ரமிப்பு செய்து அதற்குத் தேவையான ப்ளு பிரிண்டையும் இவர்கள் மாற்றி, தேவையான ரிக்கார்டுகளையும் மாற்றி, அரசாங்கத்தி னுடைய, கார்ப்பரேஷனுடைய அனுமதியைப் பெற்று வீடு கட்டலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் கார்ப்ப ரேஷன் அதிகாரிகளும், அரசாங்கமும் அதிலே தலையிட்டு அந்த நீதிபதி தவறான செயலில் ஈடுபட்டிருக்கிறார், ரெக்கார்டைத் திருத்தி இருக்கிறார் என்று சொல்லி அனுமதி வழங்கக்கூடாது என்று தெரிவித்திருந்தும் கூட அங்கே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளின் ஆதரவோடு அந்த நீதிபதி வீட்டைக் கட்டியிருக் கிறார். இன்றைக்கு அந்த அதிகாரி மாற்றப்பட்டிருந்தாலும், அந்தக் காவல் துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு கந்தகுமான் கிராமம்' காட்டு மன்னார் தாலுகா, தென் ஆற்காடு மாவட்டத்திலே, வேதாசர்ம் ஆசிரம நிலம். அந்த நிலத்தை உழுதவர்கள், ராமசாமி, பழனிவேல், வேலுமணி, பன்னீர்செல்வம், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அந்த நிலத்தை வாங்கியதாகச் சொல்லக் கூடியவர் பழனிச்சாமி என்பவர். பழனிச்சாமி என்பவர் அத்துமீறி அவர்கள் உழுவதற்குத் தடை செய்த நேரத்தில், அந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ராமசாமி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், காவல்துறை அதிகாரிகளிடம் சென்று எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நீதிமன்றத்திற்குப் போகச் சொல்லுகிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகும், அவர்கள்தான் நிலத்தை உழவேண்டுமென்று நீதிபதி உத்திரவு இடுகிறார்கள். அதற்குப் பிறகும் அவர்களுக்கு அந்தக் காவல்துறை அதிகாரிகள் அங்கே, அவர்களுக்கு ஆதரவாகவோ, அல்லது பாதுகாப்பு கொடுக்காத நிலையில், பன்னீர்செல்வம் என்பவர் வெட்டப்படுகிறார். பழனிச்சாமியால். ஆனால், பழனிச்சாமியால் வெட்டப்பட்ட பன்னீர்செல்வம் என்பவர் 10 நாட்களாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும், எந்தவிதமான மரணவாக்குமூலம், வாங்க அந்தக் காவல்துறை அதிகாரிகள் முயற்சி செய்யவில்லை. மாறாக, அவர் இறந்துவிட்டார். பன்னீர்செல்வம் இறந்து விட்டார். ஆனால் வழக்கு பழனிச்சாமிக்குச் சாதகமாக, அவர் குற்றம் செய்யவில்லை என்ற நிலைமைக்கு இன்றைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய காவல்துறை அதிகாரிகளுடைய அலட்சியப் போக்கினால், ஒரு கொலை நடந்தது மட்டும் அல்லாமல், ஒரு கொலையைச் செய்தவர் தப்பிப்பதற்கு இன்றைக்கு வழக்கு செய்யப்பட்டிருக்கிறது என்று, நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்திரா காங்கிரஸ் மன்றத்தை சில ஆளும்கட்சி நபர்கள், அதில் புகுந்து, அந்தக் கொட்டகையை இடித்து, உடைத்து, அங்கே இருக்கக்கூடிய, இந்திரா காந்தி படத்தையும் மற்ற தேசத் தலைவர்கள் படத்தையும், நொறுக்கி இருக்கிறார்கள். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை தேசியத் தலைவர்களையெல்லாம் ஒழிக்கவேண்டுமென்று என்னமோ எனக்குத் தெரியாது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று' இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சிவகாசிக்குப் பக்கத்தில் விருதுநகர், டிவிஷனிலே வஞ்சக்காரன்பட்டி சரகத்தைச் சேர்ந்த கன்னிச்சேரி என்ற ஊரில் உள்ள காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் மீது தவறான நடவடிக்கை காரணமாக, கருப்பசாமி என்பவர் டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்



இங்கே பல பெரிய மனிதர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களை மிரட்டி, அவர்களிடம் பணம் பறிக்கிற வேலையை, கிட்நாப் செய்வேன் என்று சொல்லி, அவர்களை மிரட்டி அவர்களிடம் பணம் பறித்துக்கொண்டு இருக்கிறார். இந்த நிலைமை அந்தக் காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரிந்தும், அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு, 1980 ஆம் ஆண்டு, சிங்கமுனை காவல் சரகத்தைச் சேர்ந்த கட்டுக்குடிப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு கொலை நடைபெறுகிறது. ஒரு பெண்மணி பட்டப்பகலில், கண்மாயில் நடந்துபோகின்ற நேரத்தில், கொலை செய்யப்பட்டு, அவரிடமிருந்து 10 பவுன் தங்கச் செயினை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அங்கே உள்ள காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். முதல் எப்.ஐ.ஆர். 6–11–80 ஆம் தேதி அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கிலே, மணி, சடையன், சின்னையா, நாச்சன் என்பவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் இந்த முதல் எப்.ஐ.ஆர். போட்டு, ஆறாவது மாதத்திலே இன்னொரு இன்ஸ்பெக்டர் வருகிறார். முதல் இன்ஸ்பெக்டரை மாற்றி விட்டார்கள். அவர் இரண்டாவது வழக்கைப் போடுகிறார்கள். அதிலே அப்ரூவராக முதல் வழக்கிலே இருந்த சடையன் என்பவர் மீது இரண்டாவது எப்.ஐ.ஆரிலே வழக்கு தொடர்ந்து அவர் கைது செய்யப்படுகிறார். ஆகவே, 6–11–1980-லே நடைபெற்ற சம்பவத்திற்கு 2 எப்.ஐ.ஆர்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரையில் உண்மையான குற்றவாளி மணி என்பவர்தான் உண்மையான குற்றவாளி. ஆனால் அவர் பெரிய மனிதருக்குச் சொந்தக்காரர் என்பதற்காக அவரை விடுவித்துவிட்டு, சாதாரண அப்ரூவராக மாற்றி, அவரையும் சேர்த்து, இரண்டாவது எப்.ஐ.ஆர். போடப்பட்டு இருக்கின்றதை நான் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இது ஒரு மிக முக்கியமான வழக்கு, அந்தப் பகுதியிலே ஒரு பரபரப்பான வழக்கு. ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் கண்மாயிலே நடந்து சென்றிருந்த போது நடந்திருக்கிறது. ஆகவே, இதையும்கூட நம்முடைய காவல்துறை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால், நான் பரிதாபப்படுகிறேன், வேதனைப்படுகிறேன். நம்முடைய காவல்துறை அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு.நா. சுந்தரராஜ்] [1982 மார்ச் 27

அதைப்போல இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக சிதம்பரத்திலே அட்ட காசம் புரிந்து, அராஜகம் நடத்தி, மறைமுகமாக மிரட்டி இலட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்று, பல நூற்றுக் கணக்கான பசுக்களை வாங்கியிருக்கிற ஒரு டி.எஸ்.பி.யை மாற்றியது மட்டுமல்லாமல் அவர் சஸ்பென்ட் செய்யப்பட் டிருப்பதாக இன்றைக்கு செய்தித்தாள்களில் பார்த்தேன். அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்காகப் பாராட்டு கிறேன். அதே நேரத்தில் அவர்மீது முழுமையாக விசாரணை நடத்தப்பட்டு, அந்த விசாரணையின் விவரம் பொதுமக்க ளுக்கு நன்றாகத் தெரியும்வண்ணம் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட வேண்டும். அப்படியானால்தான் வருங்காலத்தில் அவரைப்போன்ற அதிகாரிகள் தவறு செய்யாமல் திருந்து வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

(முற்பகல் 9.20)

அதைப்போல இன்றைக்கு கள்ளநோட்டு அடிப்பது, கள்ள மார்க்லிஸ்ட் தயாரிப்பது, கள்ள நெருப்புப்பெட்டி லேபிள் தயாரிப்பது போன்ற 'ஒயிட் காலர்டு அஃபென்சஸ்'. வெள்ளைக் காலர் சட்டையணிந்த பெரிய மனிதர்கள் செய்யும் தவறுகள் இன்றைக்கு தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறது. இது சம்பந்த மாக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது ஒருபுறம் இருக்கிறது. இருந்தாலும் மொத்தத்தில் 10 சதவீதம்தான் நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறது. மீதி 90 சதவீதம் தவறுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

கடந்த காலத்தில் ஐ.ஜி.யாக இருந்த அருள் அவர்கள் தமிழ் நாட்டு காவல் துறையில் பணியாற்றி, மிகப்பெரிய கள்ள நோட்டு கும்பலைப் பிடித்து, தண்டனை வாங்கிக்கொடுத்து தமிழ்நாடு காவல்துறை சிறப்பாகப் பணியாற்றியது. அதைப் போன்று கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடுமையான தண்டனைகளை வழங்கி, அவர்களை ஒழிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு நம்முடைய காவல் துறையில் பணியாற்றுகின்றவர்கள் பல்வேறு கஷ்டங்களை, குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 4 ரூபாய் டி.ஏ. வழங்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியில் அது அவர்களுக்கு கட்டுபடியா வில்லை, போதவில்லை. ஆகையால் இந்த டி.ஏ-யை கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 27] [திரு.நா.சுந்தரராஜ்]

அதைபோல் 'ஃபிங்கர் பிரின்ட் எக்ஸ்பர்ட்ஸ்' நம்முடைய காவல் துறையில் இருக்கிறார்கள். அவர்களுடைய சிறப்பான பணியினால்தான் சில முக்கியமான வழக்குகளில் காவல் துறை யினர் சரியான நடவடிக்கைகளை எடுக்க முடிகிறது. ஆனால் அவர்கள் வெளியே தெரியாத காரணத்தால் அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படவில்லை. குறிப்பாக அவர்கள் 1979-ல் 636 வழக்குகளைக் கண்டுபிடிக்க உதவியிருக்கிறார்கள். 1980-ல் 740 வழக்குகள், அதைப்போல 1981-ல் 836 வழக்கு களைக் கண்டுபிடிக்க காவல் துறைக்கு உதவியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிங்கர் பிரின்ட் எக்ஸ்பர்ட்ஸ் தங்களை 'எக்சிகியூட்டிவ் போலீஸாக' மாற்றித் தாருங்கள், அதன் மூலம் வேலைவாய்ப்பு அதிகமாவது மட்டுமல்லாமல் சலுகை களும் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அவர்கள் 24 மணி நேரமும் வேலை செய்வதாகச் சொல்கிறார்கள். அவர் களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நடை பெற்ற அசம்பாவிதங்கள் மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒன்றுதான். அதுபற்றி எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் கருத்து சொல்லிவிட்டார்கள் ; அரசியல் கட்சிகளும் கருத்து சொல்லிவிட்டன. நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, முதல் தேதி அங்கே அந்த துப்பாக்கிச்சூடு நடைபெற்றிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் 13 ஆம் தேதி அங்கே போகிறார். இடைப்பட்ட காலத்தில் அங்கே உள்ள அதிகாரிகளுக்கு சரியான உத்தரவு போகவில்லை என்ற குறை உண்டு. என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று திட்டவட்டமாக அரசு தெரிவித்திருந்தால் அதற்கேற்ப செயல்பட்டிருக்க முடியும் என்று சொல்லப் படுகிறது. ஆக, சரியான உத்தரவு அரசாங்கத்திலிருந்து செல்லவில்லை என்று தெரிகிறது. அதைச் செய்திருந்தால் இரண்டாவது துப்பாக்கிச்சூடு நடைபெறாமல் தடுத்திருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு குன்றக்குடி அடிகளும், ரெவரன்ட் ஃபாதர் ஆரோக்கியசாமி அவர்களும், ரெவரன்ட் ஃபாதர் கிறிஸ்து தாஸ் அவர்களும் அவர்களோடு பல கிறிஸ்தவ தலைவர்களும் அமைதி ஊர்வலம் மேற்கொண்டு, அதன் மூலமாக அமைதி ஏற்படுத்த முடியும் என்று கருதி அமைதி ஊர்வலம் செல் கிறார்கள். அதன் மூலம் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். அவர்களுடைய முயற்சியை பாராட்டுகிறேன். இந்த அரசும் அதை பாராட்டும் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் நான் கேட்க விரும்புவது, இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்னால் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை ? நம்முடைய தமிழ்நாட்டு காவல் துறையில்

'இன்டலிஜன்ஸ் பீரோ' என்று ஒரு பெரிய பிரிவை வைத்திருக்கிறோம். அந்தப் பிரிவிலே நூற்றுக்கணக்கான அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் இதை முதலிலே தெரிவிக்கவில்லை ? அரசியல் கட்சிகள் பொது மேடைகளில் பேசும் போது அவர்களுக்கு பின்னால் நின்று கொண்டு, குறிப்பு எடுத்து, அரசுக்குக் கொடுப்பதுதான் அவர்களுடைய வேலையா ?

சமீபத்தில் கூட ஒரு செய்தி வெளியானது. டில்லி பாராளுமன்றத்தில் ஒரு தகவல் வெளியிடப்பட்டது. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஸ்தாபனங்களுக்கு வெளி நாட்டுப் பணம் வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனங்கள் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் குறிப்பாக செயல் பட்டு வருவதாகவும், அவர்கள் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்றால் அந்த ஸ்தாபனங்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரியவில்லை. நான் கேட்கிறேன். அந்த இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஸ்தாபனங்களில் தமிழ்நாட்டில் ஆயிரம் அல்லது 500 ஸ்தாபனங்கள் இருக்கலாம். அதை நீங்கள் கண்காணித்து இருக்கிறீர்களா ? இந்த ஸ்தாபனங்கள் தமிழ் நாட்டிலே எங்கெங்கே இருக்கின்றன? என்ன செய்கின்றன? என்பதை நீங்கள் கண்காணித்ததாகத் தெரியவில்லை. அதை விட்டு விட்டு, நக்சல்பாரி என்று ஒரு பகுதியினரைக் குறிப்பிட்டு அவர்களை ஒழிப்பதுதான் இவர்கள் வேலையா ? பொருளாதாரத்தில் நலிந்த மக்கள், சமூக நிலையில் தாழ்ந்த மக்கள், தங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காகவும் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவும் கோரிக்கைகள் வைத்து, எழுச்சி நடத்துபவர்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு முயற்சி செய்யாமல் அவர்களை நக்சல்பாரி என்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைச் சேர்ந்த மக்களைச் சுட்டுத் தள்ளுவதுதான் காவல் துறையின் கடமை என்று கருதாமல் அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு நீங்கள் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தமிழ் நாட்டில் வெளி நாட்டுப் பணம் பெறுகிற ஸ்தாபனங்களை நீங்கள் கண்காணியுங்கள். அதன் மூலமாகத் தமிழ் நாட்டில் ஒரு மிகப் பெரிய வன்முறையைத் தூண்டுகின்ற வகையிலே பெரிய நாடுகள் அதிலே சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அந்த நாடுகளுடைய உதவியின் மூலமாகத் தமிழ்நாட்டில் குழப்பங்கள் மேற்கொள்ளப்படுமேயானால் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கு அவர்களுடைய நடவடிக்கையை எடுத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு செயல் படுகிறார்கள். அரசு அதில் கவனிப்பாக இருக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



கடைசியாக நான் தெரிந்து கொள்ள விரும்புவது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழ் நாட்டில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகம் பூராவும் ஒரு பரபரப்பான செய்தி. நான் சமீபத்திலே என்னுடைய ஊருக்குச் சென்ற நேரத்தில், நான் பல நண்பர்களைச் சந்தித்த நேரத்தில் கூட, சாதாரண பொது மக்கள் கேட்கிறார்கள், முதலமைச்சர் மீது இந்தக் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறதே, முதலமைச்சர் குடும்பத்தார் மீது இந்தக் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறதே, இன்றைக்கு ஒரு தனி ஐ.ஜி., பெரிய பதவியிலே இருந்தவர், ஆர். என். மாணிக்கம் என்பவர், ஒரு அஃபிடவிட் தாக்கல் செய்திருக்கிறார். அதிலே ஒரு பயங்கரமான உண்மையை, நம்முடைய முதலமைச்சர் மீது நேரடியாகக் குற்றம் சாட்டவில்லையென்றாலும், முதலமைச்சர் குடும்பத்தினர் மீதும், நம்முடைய அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் மீதும் மிகப் பயங்கரமான குற்றச்சாட்டை வைத்திருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம் Ceasar's wife snould be above suspecion, சீசருடைய மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டுமென்பதுதான் சமூக நியதி ; நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அது சம்பந்தமான உண்மையை நீங்கள் பிற்காலத்திலே இராமமூர்த்தி கமிஷன் முன்னால் சாட்சியங்கள் அளிப்பதன் மூலம் தெரிவிப்பதற்குப் பதிலாக, இன்றைக்குத் தாங்கள் உண்மையை வெளியே சொல்வீர்களானால், தமிழ் நாடு உங்களைப் பாராட்டும், உண்மையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு நான் விடை பெறுகிறேன், வணக்கம்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள காவல் துறை மானியம் குறித்து கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முன் வருகிறேன். முதலில், நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. சுந்தரராஜன் அவர்கள் இந்த அரசுக்கு ஒரு பாராட்டினைத் தெரிவித்து விட்டு தன்னுடைய உரையைத் தொடங்கினார். அண்மையில், நடைபெற்ற முழு அடைப்பு, வேலை நிறுத்தம் என்ற நாடு தழுவிய கிளர்ச்சியில் தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளை அவர் பாராட்டினார். என்னைப் பொறுத்த மட்டில், திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பொறுத்த வரையில், அந்த நடவடிக்கைகளை, அதிலும் குறிப்பாக, அந்த நடவடிக்கைகளின் காரணமாக 3 பேர், 4 பேர் தமிழகத்திலே, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணிடும்போது அதைப் பாராட்டுவதற்கு என்னுடைய மனம் துணிந்திடவில்லை. ஆனாலும் மிக வெம்மையாக இருக்கிற இந்தச் சட்டப் பேரவையில் எப்படியாவது ஒரு பாராட்டோடு என்னுடைய உரையைத் தொடங்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். கடந்த சில நாட்களுக்கு

முன்பு தமிழகத்திலும் கேரளத்திலும் இருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்களை துபாய் நாட்டிற்கு வேலையிலே சேர்ப்பதற்காக என்று ஏமாற்றி அழைத்துச் சென்று காட்மண்டு என்கின்ற இடத்திலே அவர்களைத் தவிக்க விட்டுவிட்ட நிகழ்ச்சியை நான் முதலமைச்சருடைய கவனத்திற்கு இங்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் வருவதற்கு முன்பே அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அவரும் உடனடியாக நடவடிக்கை எடுத்து தமிழக அரசின் சார்பிலும் போலீஸ் துறையின் சார்பிலும் மத்திய அரசினுடைய உதவியோடும் காட்மண்டு பகுதியிலே உள்ள அதிகாரிகளுடைய உதவியோடும் கடத்திச் செல்லப்பட்ட, அல்லது ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட தமிழக-கேரள மக்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் திரும்ப அழைத்துக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்த அரசையும் முதலமைச்சரையும் நான் பாராட்டி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

(முற்பகல் 9-30)

காவல் துறை குறித்து இங்கே வைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வுரையிலே காவல் துறையின் தொண்டுகள் எவ்வளவு சாலச் சிறந்தது என்பதைப் பற்றியும், காவல் துறை எப்படிப்பட்ட இன்னல்கள், இடையூறுகள், இவைகளையெல்லாம் கடந்து தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டியிருக்கிறது என்பதைக் குறித்தும் கூறப்பட்டுள்ள வாசகங்களில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை. 5 கோடி மக்கள் ஏறத்தாழ தமிழகத்தில் இருக்கிறார்கள் என்றால் இந்த 5 கோடி மக்களிடத்திலே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை நிலை நாட்டிட வேண்டிய பொறுப்பேற்று பணியிலே இருக்கின்ற காவலர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 50,000 பேர்கள் தான். இதை ஒரு சராசரி கணக்காகப் பார்த்தால் கூட 5,000 மக்களுக்கு ஒரு போலீஸ்காரர் என்ற அளவிற்கு நிலைமை இருக்கும் போது, இந்த 5 கோடி மக்களின் பிரச்சினைகளையும், அவர்களிடத்திலே ஏற்படுகின்ற பூசல்களையும், சச்சரவுகளையும், சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றிற்கு இடையூறாக நடைபெறுகின்ற காரியங்களைக் கவனிக்கவும், நடவடிக்கைகளை எடுக்கவும் பொறுப்பேற்றுக் கொண்டு, சில நேரங்களில் தங்களுடைய உயிரைக் கூட துச்சமென மதித்து பணியாற்றுகின்ற, தொண்டாற்றுகின்ற காவலர்கள் பேரில் என்றைக்குமே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு அனுதாபம் உண்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், ஒன்று. காவல் துறையிலே உள்ள அனைவர் மீதுமே நானோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்களோ குறை கூறுவதாக எண்ணிடத் தேவை இல்லை. போலீஸ் இலாகா வெறுப்புக்குரியது என்று நானோ அல்லது தி.மு. கழகமோ அல்லது வேறு யாருமோ



எண்ணிடவும் மாட்டார்கள். எடுத்துச் சொல்ல முன் வர மாட்டார்கள். ஆனால் பலர் நல்லவர்களாகவும், சிலர் தீயவர்களாகவும் இந்தத் துறையிலே நிச்சயமாக இருக்கிறார்கள் என்ற ஒரு நிலை மாறி, மெல்ல மெல்ல ஆனால் நிச்சயமாக என்ற அளவிற்கு இந்தச் சிலர் அந்தப் பலராகவும், பலர் என்பது சிலராகவும் மாறிவிடுமானால் காவல் துறை முழுமையுமே களங்கப்பட்டு விடும் என்பதை நான் இந்த அவையில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நெற்குவியலில் பதர் இருந்தால் அதைக் காற்றிலே வீசி, தூற்றி நெல்லை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், பதர் குவியலிலே இருந்து நெல்லை எடுப்பது என்பது வருந்தத்தக்க ஒன்று. சோற்றிலே கல் இருந்தால், அதை எடுத்துப் போட்டு விட்டு உண்ணலாம். ஆனால் கல்லிலே சோறு பொறுக்கும் அளவிற்கு காவல் துறையைப் பொறுத்த வரையில் நிலைமை மாறிவிடக் கூடாது என்ற கவலையோடு இங்கே கருத்துக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மற்றும் உள்ள கட்சிகளின் சார்பிலும் எடுத்து வைக்கப்பட்டுள்ளது என்பதை அரசுப் பொறுப்பை ஏற்றுள்ள, அதிலும் சிறப்பாக காவல் துறை பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் உணர்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

போலீஸ் துறை மீது ஏதோ இன்று நேற்று அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலாக 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு, அந்தத் துறையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதிலே, அந்தக் கழகத்திலே ஒருவன் என்ற முறையிலே எனக்கும் மிகுந்த அனுதாபமும், பற்றும், பாசமும் உண்டு என்பதை நாடறியும், காவல் துறை நண்பர்கள் நன்கு அறிவார்கள். இங்கே நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கூட நான் எழுதிய ஒரு நாடகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் காவல் துறையினரின் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் விவரிக்கின்ற வகையிலே அந்த நாடகம் அமைந்து இருந்தது என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது 1962 ஆம் ஆண்டிலே எழுதப்பட்ட நாடகம். அப்போது இந்த அவையில் எதிர்க் கட்சியின் தலைவராக இன்று அவை முன்னவராகவும் இருக்கும் நாவலர் அவர்களும், துணைத் தலைவராக நானும் இருந்து பணியாற்றிய கால கட்டம். அப்போது எழுதிய அந்த நாடகத்தின்பெயர் ''உதயசூரியன்'' என்பதாகும். அன்றைக்கு இருந்த அரசாங்கம் அந்த நாடகத்தை தடை செய்துவிட்டது. தடை செய்ததற்கான காரணம் என்ன என்று கேட்ட போது, நாடகத்திலே சில பகுதிகளில் போலீஸ் துறையிலே உள்ளவர்களுக்கு, காவல் துறையினருக்கு பரிந்துரைப்பது போலவும், அவர்களுடைய கஷ்ட

நஷ்டங்களை எடுத்துச் சொல்வது போலவும் குறிப்பிடப் பட்டிருக்கின்ற உரையாடல்கள், பாடல்கள் இவைகள் எல்லாம் போலீசாரை அரசாங்கத்திற்கு எதிராக தூண்டுகின்ற மாதிரி அமைந்திருக்கிறது என்று காரணம் குறிப் பிடப்பட்டது. நான் இந்த அவையிலேயே தடை செய்வதற்கு காரணமாக இருந்த அந்தப் பாடல் என்ன என்பதை அந்த ஆட்சிக் காலத்திலேயே ஒரு முறை இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். அதை மீண்டும் ஒரு முறை, பலர் மறந்திருக்கக் கூடும் என்பதாலும், அவையிலே பலர் புதியவர்கள் என்கிற காரணத்தாலும் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அந்த நாடகத்திலே, நாடகம் தடை செய்வதற்குக் காரணமாக இருந்த பாடல் இதுதான். ஒரு தாலாட்டுப் பாடல். காவல் துறை நண்பருடைய துணைவி, தன்னுடைய குழந்தையை சிறிய வீட்டிலே, ஏணைக் கட்டி தாலாட்டுப் பாடி தூங்க வைக்க முயற்சிக்கின்ற பாடல்.

'' போலீஸ் வேலைக்கென்று போகின்ற அப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்
துப்பாக்கி எடுத்துக்கிட்டு போகின்ற அப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழிமறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளை காணாமல் கண் வளராய்
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற குலவிளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண்வளராய்!
காக்கி உடை போட்டுகிட்டு சேப்பு தொப்பி மாட்டிக்கிட்டு
நாட்டைக்காக்கும் வீரனுக்கு உன்னைப்போல
நாலுவந்து பிறந்து விட்டால்
காவி உடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா.

இதுதான் தடை செய்யப்பட்ட பாடல். இந்தப் பாடலுக் காகவே அந்த நாடகம் அன்றைக்கு முழுமையாக தடை செய் யப்பட்டது. அதற்குப்பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்கள். அவர்கள் மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பினை ஏற்கக்கூடிய வாய்ப்பு அல்லது கடமை எனக்கு ஏற்பட்டது. அப்படி ஏற்பட்டபோது, நான் ஏற்கனவே 62 ஆம் ஆண்டு காவல் துறை நண்பர்களுக்காக எழுதிய அந்த தாலாட்டுப் பாடலிலே வருகிற கருத்துக்களுக்கு தாலாட்டுப்பாடி தூங்க வைத்துவிட்டேனா என்றால் இல்லை. எந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே காவல் துறை நண்பர் களுடைய கவலைகளை, அவர்களுடைய சங்கடங்களை எடுத்து நாட்டு மக்களுக்குச் சொன்னேனோ, எந்தக் கருத்துக்களைச் சொன்ன காரணத்தினால், நான் எழுதிய நாடகம் தடை செய்யப்பட்டதோ, அந்த கருத்துக்களுக்கு எப்படியும் புத்துயிர் வரவேண்டும், அந்தக் கருத்துக்களுக்கு விமோசனம் கிடைத்தாக



வேண்டும் என்கிற அளவிட முடியாத ஆர்வத்தோடு, நான் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, 1970 ஆம் ஆண்டில் போலீசாருடைய சங்கடங்களை களைவதற்கும், போலீஸ் துறையை மேலும் மேம்படுத்துவதற்கும், நவீன கருவிகளை போலீசார் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையிலும், பரிந் துரைகளை செய்யவேண்டும் என்று போலீஸ் கமிஷன் ஒன்றினை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நான் தலைமை பொறுப்பை ஏற்றிருந்த நேரத்திலே நியமித் தேன்.

அந்தக் கமிஷனுடைய சிபாரிசுகளின்படி எந்த அளவிற்குப் போலீஸ் துறை நண்பர்கள் பயன் பெற்றார்கள் என்ற சுருக் கத்தை இந்த அவையிலே கவனப்படுத்துவது என்னுடைய கடமை யாகும். 1970 ஆம் ஆண்டு வரையில் இந்த போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்ட அந்தக் காலகட்டம் வரையில், கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகிற செகண்ட் கிரேட் கான்ஸ்டபிள்களுக்கு அடிப்படைச் சம்பளம் மாதம் 70 ரூபாய் முதல் 95 ரூபாய் வரை என்று தான் இருந்தது. ஆனால் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளை ஏற்று கழக ஆட்சியில் 70 ரூபாய் என்று இருந்த அடிப்படைச் சம்பளத்தை அதாவது 70 முதல் 95 ரூபாய் என்று இருந்த அடிப்படைச் சம்பளத்தை 150 ரூபாய் முதல் 225 ரூபாய் வரை என்று மாற்றி அமைத்தோம். அதேநேரத்தில் எஸ்.எஸ். எல். சி. தேர்விலே வெற்றி பெற்றவர்கள் பர்ஸ்ட் கிரேட் கான்ஸ்ட்டபிள்ளாக ஆகலாம் என்ற புதிய நிலையை யும் உருவாக்கி, அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை என்று நிர்ணயிக்கப்பட்டது.

(முற்பகல் 9—40.)

70 ரூபாய் முதல் 110 ரூபாய் வகையிலே அடிப்படைச் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு 210 ரூபாய் முதல் 325 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறுகின்ற வாய்ப்பினை கழக அரசு காலத்திலே நாங்கள் வழங்கி னோம். துணை சப் இன்ஸ்பெக்டர் என்ற ஏ.எஸ்.ஐ. என்பவர் களுக்கு 110 ரூபாய் முதல் 140 ரூபாய் என்று இருந்த அடிப் படைச் சம்பளத்தை 250 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை என்று மாற்றியமைத்தோம். சப் இன்ஸ்பெக்டர்களுக்கு 140 ரூபாய் முதல் 220 ரூபாய் வரை என்று இருந்த அடிப்படைச் சம்பளத்தை 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை என மாற்றி யமைத்தோம். இன்ஸ்பெக்டர்களுக்கு 225 ரூபாய் முதல் 375 ரூபாய் வரை இருந்த அடிப்படைச் சம்பளத்தை 425 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை என மாற்றியமைத்தோம். இப்படி போலீஸ் கமிஷன் சிபாரிசுகளில் 40-க்கு மேற்பட்டவைகளை அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக்கழக அரசு ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்தி இருக்கின்றது. அதுமாத்திர

மல்லாமல் வீரச் செயல்கள் புரிகிறவர்கள், விசுவாசம் மிக்கவர்களாகவும் அதேநேரத்தில் ஒழுங்கு மிக்கவர்களாகவும் இருந்தவர்கள், இவர்களுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் முதலமைச்சர் பதக்கம் என்ற வீர விருதுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த அரசு உருவான பிறகு இடையிலே அந்தப் பதக்கம் அளிக்கின்ற விழா நிறுத்தப்பட்டாலும் கூட மீண்டும் அது தொடர்ந்து இப்போது நடைபெற்று வருகின்றது. நான் இந்த ஆய்வறிக்கையைப் பார்த்தேன். அதிலே 79-வது பக்கத்திலே 128-வது பாராவிலே முதலமைச்சருடைய காவலர் பதக்கம் என்ற ஒரு தலைப்பு இருக்கின்றது. அதிலே குறிப்பிட்ட சில காவலர்களுக்கு குறிப்பிட்ட சில காரியங்களுக்கு பதக்கம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது 129-வது பாராவிலே தமிழ்நாடு முதலமைச்சரின் காவலருக்கான பதக்கம் என்று மீண் ம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்படி ஒரு குழப்பமான அறிக்கை தேவைதானா என்பதை அரசும், முதலமைச்சரும், அதிகாரிகளும் கவனிக்க வேண்டும். 128-வது பாராவிலே முதலமைச்சருடைய காவலர் பதக்கம் என்று குறிப்பிட்டு விட்டு இன்னொரு பதக்கத்தைத் தருவதற்காக நிர்ணயிக்கப்படுகின்ற அந்தச் செய்தியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலருக்கான பதக்கம் என்று குறிப்பிடப்படுவானேன்? பதக்கம் வேறு வேறாக இருக்கலாம். முதலமைச்சர் ஒருவர்தான். முதலிலே முதலமைச்சரின் காவலர் பதக்கம், பிறகு தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்—அப்படி என்றால் முதலிலே வருகின்ற முதலமைச்சர் எந்த நாட்டு முதலமைச்சர்? அவரும் நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர்தான். இப்படிப்பட்ட தவறுகள் மலிந்த ஒரு அறிக்கையாக இந்த கா ல் துறை மானியத்தினுடைய ஆய்வறிகைக் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. 1977 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். 10,000 போலீஸ்காரர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று. ஆனால் இதுவரையிலும் 1977-க்குப் பிறகு 5 ஆண்டுகளை எட்டிப் பிடிக்கின்ற அளவுக்கு காலம் ஓடியிருந்தாலும் கூட அந்த இலக்கை எட்டவில்லை என்பதை நான் ஒரு குறையாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

செகன்ட் கிரேட் போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையி 1980 ஆம் ஆண்டு 1990 பேர்களும் 1981 ஆம் ஆண்டில் 1771 பேரும்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஃபர்ஸ்ட் கிரேட் போலீஸ் இவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரிய முறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசு தந்த புள்ளிவிவரத்தின்படி 1980-ல் 121 பேர் தான் ஃபர்ஸ்ட் கிரேட் போலீஸிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். 1981-ல் ரசு கொடுத்த புள்ளிவிவரத்தின்படி ஆறே ஆறு பேர்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த 10,000 போலீஸ் காரர்கள் சேர்க்கப்



படுவார்கள் என்ற இலக்கை அடையாவிட்டாலும் கூட அதிகாரிகளுடைய பதவிகள் மிக அதிகமாகப் பெருகியுள்ளன. 1975ஆம் ஆண்டில் ஐ.ஜி இரண்டுபேர்தான் இருந்தார்கள். ஆனால் இப்போது எத்தனை பதவிகள்? டைரக்டர் ஜெனரல் பதவி ஒன்று, அது ஓராண்டுக் காலமாக காலியாக இருந்தாலும் பதவி அப்படியே இருக்கின்றது. ஐ.ஜி பதவி 5. அதிலே இரண்டு பதவிகள் காலியாக இருந்தாலும் 4 அப்பதவிகள் அப்படியே இருக்கின்றன. அடிஷனல் ஐ.ஜி. பதவி 4.

அதிலே ஒரு பதவி காலியாக இருந்தாலும், பதவிகள் அப்படியே இருக்கின்றன. 1975 ஆம் ஆண்டிலே 2 பேர்கள் ஐ.ஜிகளாக இருந்தார்கள். இப்போது ஐ.ஜி. தரப்பிலே 10 பதவிகள் என்று பெருகியிருக்கின்றன. 1975 ஆம் ஆண்டிலே டி.ஐ.ஜி. பதவிகள் 7 தான். இப்போது 13 பேர்கள் என்கின்ற அளவிற்கு அந்தப் பதவிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரிகளுடைய பதவிகள் உயர்ந்திருக்கின்றது. ஆனால், அந்த விகிதாசாரத்திற்கு ஏற்ப போலீசாருடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதா என்றால், இல்லை. போலீசார் எண் ணிக்கை மாத்திரம் கணக்கில் எடுத்துக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1975-ல் 37,000 பேர்கள் போலீ சார் மாத்திரம். முதல் தரம் இரண்டாம் தரம் ஆகியவை களைச் சேர்த்து ஏறத்தாழ 37,000 பேர்கள். இப்போது இந்த இரண்டு கிரேடு போலீசாரையும் சேர்த்து எண்ணிக்கை சற்றேறக்குறைய 40,000 தான் சுமார் 3,000 அல்லது 4,000 பேர்கள் தான் அதிகம். ஆனால், அதிகாரிகள் பெருகியிருக்கின்ற விகிதாசாரம் மிகவும் அதிகம். இந்தக் குறைபாட்டை இந்த அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி. இவ்வளவு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், குற்றங்கள் குறைந்ததா என்றால், அதுவும் இல்லை. கழக ஆட்சியிலே 1975 ஆம் ஆண்டு, அந்த ஆட்சி கலைக்கப் படுவதற்கு முன்பு வைக்கப்பட்ட மானிய கோரிக்கை என்பது எனக்கு நினைவு—அப்போது வைக்கப்பட்ட காவல் துறை மானி யக் கோரிக்கையில் 1974 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் தரப் பட்டன. இந்தக் குற்றங்களை ஒப்புநோக்குகின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1974 ஆம் ஆண்டில், கொலைகள் 48. நீங்கள் இங்கே வைத்திருக்கின்ற ஆய்வு அறிக்கையில் 1981 ஆம் ஆண்டு கணக்குப்படி கொலைகள் 66. 1974 ஆம் ஆண்டில் கொள்ளைகள் 17; ஆனால் இப் போது இந்த ஆட்சியில் 1981 ஆம் ஆண்டுக் கணக்குப்படி 37. 1974 இல் வழிப்பறிக் கொள்ளைகள் 110. இப்போது 1981-இல் இந்த ஆட்சியில் 266. 1974-இல் கன்னக்கோல் களவு 7,717. ஆனால், 1981-ஆம் ஆண்டில் இது 9,073. அதேபோல், பெரிய திருட்டுக்கள் 1974-ஆம் ஆண்டில், 23,617. இப்போது 1981ஆம் ஆண்டில் 25,623. சிறிய திருட்டுக்கள் 1974 ஆம் ஆண்டில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 27

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 497. 1981-ஆம் ஆண்டு இந்த ஆட்சியில் 1,806. இப்படி குற்றங்கள் பெருகியிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினால், இது இந்த ஆட்சியின் கண்டு பிடிக்கும் திறமையைக் காட்டுகிறது. கண்டுபிடிக்கும் திறமை அதிகமாகி இருக்கின்ற காரணத்தினால், குற்றங்கள் அதிகமாக தெரிகிறது என்று ஆளுங்கட்சிச் சார்பிலே ஒரு உறுப்பினர் வாதாடியதை நான் அன்றைக்குக் கேட்டுக் கொண்டிருந்தேன். எனவே, அந்த உறுப்பினருக்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டு, தண்டிக்கப்பட்ட குற்றங்கள் அல்ல. நடந்த குற்றங்கள், நான் இவற்றை ஒப்புநோக்கி தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். கண்டுபிடிப்பு என்று எடுத்துக் கொண்டால்கூட, அதிலே கூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். குற்ற வாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக் கையின் அடிப்படையில் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள், 1974-லிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 58 சதவீதம். 1980-இல், இந்த ஆட்சியில் 29 சதவீதம். 1981 இல் 35 சத வீதம். எனவே, கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே புலனாய்வு செய் யப்பட்ட வழக்குகளின் சதவீதம் 58 ஆக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்தது. இந்த ஆட்சியிலே, 1980 ஆம் ஆண் டில் 29 சதவீதம்; 1981-இல் 35 சதவீதம் என்று இந்த ஒப்பு நோக்கு உள்ளபடியே, வருந்தத்தக்க ஒன்று; குறை கூறத் தக்க ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதிலே கூட 1974 ஆம் ஆண்டு 56'7 சதவீதம் அளவுக்கு மீட்கப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டில் 53.3 சதவீதம் அளவுக்குத்தான் களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய கட்சி சட்ட மன்ற உறுப்பினர் வேலூர் எம். எல். ஏ., திரு. தேவராஜ் அவர் களுடைய வீட்டிலே களவுபோன நகைகள் ஓரளவுக்குத்தான் கண்டுபிடிக்கப்பட்டு தரப்பட்டு இருக்கின்றனவே அல்லாமல் பெரும் பகுதி தரப்படவில்லை என்கின்ற குறையைக் கூட என்னிடத்திலே அவர் சொன்னார், நீங்களாவது சட்டமன்றத் திலே ஒரு முறை பேசுங்கள், அப்போதாவது திரும்பி வராதா என்கின்ற அளவுக்கு களவாடப்பட்டு போய்விட்ட சொத்துக்களை திரும்ப மீட்டுத் தருகின்ற அந்தப் பணியிலே 1974 ஆம் ஆண்டிற் கும் 1981 ஆம் ஆண்டிற்கும் இருக்கின்ற இந்த வேறுபாட்டை ஒப்புநோக்கி உரியநடவடிக்கைகளை எடுக்க வேண்டுமா வேண் டாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



1982 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை ஆய்வு ரையிலே கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களையும் வழங்கப்பட்ட தண்டனைகளையும் அறிவித்திருக்கிறீர்கள். நான் அவைகளைப் பற்றிக் கூறுகிற நேரத்திலே ஒரு எதிர்க்கட்சியினுடைய பணி நீங்கள் செய்தவைகளை நாங்கள் உற்று நோக்கி அதைப்பற்றி விமர்சிக்க வேண்டிய பணி இருந்தால் விமரிசித்து அதே நேரத் திலே செய்யத் தவறியவைகளை சுட்டிக்காட்டுவது ஒரு எதிர்க் கட்சியினுடைய பணி என்ற முறையிலேயும் அந்தப் பணி அரசுக்கு மெத்தப் பயன்படும் என்ற வகையிலேயும் நான் அவற்றைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அறிக்கையிலே கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளை மாத்திரம் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால் கண்டுபிடிக்கப்பட முடியாமல் எத்தனையோ பயங்கரமான வழக்குகள் விடப்பட்டிருக்கின்றன. தஞ்சையிலே வெங்கடாசலத்தைத் தொடர்ந்து இந்திரா நகர் பிரேமா, புட்லூர் தண்டபாணி, மதுராந்தகம் ஞானசவுந்தரி, திருத்தணி இலட்சுமி, மதுரை இளஞ்செழியன், நடிகை ஷோபா, திருச்செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளை ஈறாக எத்தனையோ கொலைகள் கண்டுபிடிக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவது தவறாகாது.

ஒரு நிகழ்ச்சியை முதலமைச்சருடைய கவனத்திற்கு இந்த அவையினுடைய கவனத்திற்கும் நாட்டினுடைய கவனத்திற்கும் கொண்டுவருவது என்னுடைய கடமையாகும். சிதம்பரத்திலே ஒரு டி. எஸ். ஓ. பெயர் சண்முகசுந்தரம் சில வாரங்களுக்கு முன்பு, அவர் கிணற்றிலே விழுந்து இறந்துவிட்டார் என்கின்ற ஒரு செய்தி பரப்பப்பட்டது ஆனால் அந்தச் செய்தி தவறு என்றும் அவர் நெல் கொள்முதல் செய்வதற்கு அந்தப் பணியை ஆற்றுவதற்குச் சென்றிருந்தபோது சில அதிகாரிகள் பேரம் பேசி ஏற்பாடு செய்துக் கொண்ட மோசடி செயலுக்கு உடந்தையாக இல்லாத காரணத்தால் அவர் கொல்லப்பட்டு கிணற்றிலே விழுந்து இறந்து விட்டார் என்று காரணம் கூறப்பட்டு ஒரு கற்பனை கதையை கட்டப்பட்டு இருக்கிறது என்று அந்த வட்டாரத்திலே உள்ளவர்கள் பரவலாகப் பேசுகிறார்கள். அந்த டி. எஸ். ஓ. சண்முக சுந்தரம் என்பவருடைய மகன் கா மேகம் இது குறித்து முதல்வருக்குகூட கடிதம் எழுதியிருப்பதா எங்களுக்கு தகவல் தரப்பட்டிருக்கின்றது. அவருடைய வீட்டார் உற்றார் உறவினர் அனைவருமே அவர் கிணற்றிலே விழுந்து தற்கொலை செய்து கொள்ளவில்லை, கொலை செய்யப்பட்டி ருக்கிறார் என்கின்ற செய்தியை தருகிறார்கள். எனவே இதற்கு உரிய விசாரணை உரிய நேரத்திலே அமைக்கப்பட்டு டி.எஸ்.ஓ சண்முகசுந்தரம் கொலை செய்யப்பட்டாரா அல்லது கிணற்றிலே விழுந்து இறந்தாரா என்ற உண்மையைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 ஏப்ரல் 27

இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற தகவல், நெல்லை மாவட்டத்திலே சிவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த பாண்டி என்பவர் போலீசாருடைய பிடியிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும் அவரைப் பிடிக்கச் சென்றபோது அவர் அரிவாளால் வெட்ட முனைந்தார் என்றும் கூறி அவரை போலீசார் சுட்டுக் கொன்று விட்டதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த வட்டாரத்து மக்கள் என்ன சொல்கிறார்கள். அங்கே சென்று விசாரித்தால், கட்சி சார்பற்று எப்படிப்பட்ட உண்மைகள் அங்கே வெளியிடப்படுகின்றன என்றால் வேண்டுமென்றே அவர் கையைக் கட்டி தப்பித்து ஓடு எனக்கூறி அவர் ஓடுகின்ற நேரத்திலே அவரை போலீசார் சுட்டுக் கொன்று விட்டார்கள் என்ற தகவலைத்தான் அங்கே இருக்கின்ற பெரும்பான்மையோர் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

குலசேகரப்பட்டணத்தில் ராஜமோகன் என்பவர் போலீஸ் ஸ்டேஷனிலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 'அதற்கு போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிற காரணம் என்ன? ராஜ்மோகன் கைது செய்யப்பட்டார். அவரை விடுவிப்பதற்காக அவருடைய சகோதரர்களும் உறவினர்களும் அவரும் போலீஸ் ஸ்டேஷனை சூழ்ந்து கொண்டார்கள், அதைத் தடுப்பதற்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அந்த துப்பாக்கிக் குண்டு ராஜமோகன் மீதே பாய்ந்து கைது செய்யப்பட்ட ராஜமோகன் இறந்துவிட்டார் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் எப்படி நம்புவது என்றே எனக்குப் புரியவில்லை.

எனக்கு நினைவு இருக்கிறது. ஒரு காலத்திலே தஞ்சை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் மிக வேகமாகப் பரவி கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய தலைவர்களில் சிலர் அண்டர் கிரவுண்டிலே இருந்த காலத்திலே இரணியன் போன்றவர்கள் அங்கே அப்படிக் கொல்லப்பட்டார்கள் என்ற தகவல் எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது. அவர்களை போலீசார் கைது செய்து, கைது செய்த பிறகு விட்டு விடுகிறோம் ஓடி விடுங்கள் என்று சொல்லி, அதை நம்பி அவர்கள் ஓடுகின்றபோது தப்பி ஓடினார்கள் என்று சொல்லி குற்றம் சாட்டி சுட்டுக் கொன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் போலீசாருடைய சரித்திரத்திலே காலம் காலமாக, வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கிற வரலாற்று துணுக்குகள், அதன்படியேதான் குலசேகரப்பட்டணம் நிகழ்ச்சியானாலும், சிவலப்பேரியில் பாண்டி என்ற ஒரு கைதி சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சியானாலும், இப்படிப்பட்ட நிகழ்ச்சியாகத்தான் இருக்கமுடியுமே அல்லாமல், ஏதோ தப்பி ஓட முயன்றார்கள், சுட்டுக் கொன்று விட்டோம் என்பவைகள் எல்லாம் வழக்கமாக போலீசார் ஜோடிக்கின்ற கதைகள் அன்னியில் வேறு அல்ல என்று பழைய போலீஸ் அமைச்சர் என்ற முறையிலே, புதிய போலீஸ் அமைச்சரான நம்முடைய முதல்வர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி போலீசார் தங்களுடைய துப்பாக்கி முனையிலேயிருந்து



1982 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

நியாயம் வழங்குவதை, விசாரணை நடத்துவதை, தீர்ப்பு அளிப்பதை தங்களுடைய கடமையாகக் கொள்வதை ஒரு அரசு அனுமதிக்கலாமா? அரசு அனுமதித்துக் கொண்டே போனால் பிறகு நாடு அனுமதிக்குமா என்ற கேள்விகளுக்கு நாம் பதில் சொல்ல வேண்டிய காலத்தின் கட்டாயத்திற்கு ஆட்படவேண்டி வரும் என்பதை மாத்திரம் என்னுடைய எச்சரிக்கையாக இங்கே விடுத்திட நான் விரும்புகிறேன்.

வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களிலே கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்தான். இங்கே நக்சலைட்டுகள் என்கிற பெயரிலே எத்தனையோ இளைஞர்கள் கொடுத்திருக்கிற கணக்கின்படி 19 இளைஞர்கள் அல்லது வாலிபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த 19 பேரும் நக்சலைட்டுகளா என்றால் நான் திட்டவட்டமாக சொல்லமுடியும், அல்ல. நக்சலைட்டுகள், போலீசார் இவர்களுக்கு இடையிலே ஏற்பட்ட அமளியின் காரணமாக அல்லது கைகலப்பின் காரணமாக ஆரம்பத்தில் போலீசாரும், நக்சலைட் இளைஞர்களும் மடிந்து போக அந்த அடிப்படையிலே இந்த மாமன்றத்திலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது நான் சொன்ன கருத்துக்கள் மீண்டும் ஆராயப்பட வேண்டியவை. அந்த கருத்துக்களின் அடிப்படையிலே இங்கே பேசிய எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் எல்லாம் கூட தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். நக்சலைட்டுகள் என்கிற பெயரால் தங்களுக்கு பிடிக்காதவர்களை அல்லது ஒரு குற்றத்திலே தேடப்படுகிறவர்களை, அது கொலை குற்றமாக இருந்தாலும், கொள்ளை குற்றமாக இருந்தாலும், அதிலே தேடப்படுகிறவர்களை எப்படியாவது கைது செய்து அவர்களை நீதிமன்றத்திலே நிறுத்தி அவர்களை விசாரணைக்கு உட்படுத்தி நீதி தேவனுடைய தீர்ப்பிற்கு அவர்களை ஆளாக்கவேண்டுமே அல்லாமல் போலீசார் தங்களுடைய கையிலே துப்பாக்கியிருக்கிறது என்ற காரணத்திற்காக நக்சலைட்டுகள் என்ற முத்திரையைகுத்தி யாரை வேண்டுமானாலும் கொன்று விடலாம் என்கிற ஒரு நிலைமை நாட்டிலே ஏற்படுமேயானால் அது எங்கே போய் முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க தவறி விடக்கூடாது. இன்றைக்கு கூட மத்திய அரசினுடைய ஒரு ஆய்வுக் குழுவினுடைய சில அறிக்கையின் பகுதிகள் பத்திரிகையிலே வெளிவந்திருப்பதைப் படித்துப் பார்த்தேன். அன்றைக்கு சொன்னதைத்தான் இன்றைக்கும் சொல்ல விரும்புகிறேன். நோய் நாடி அதற்குரிய தீர்வுகளை நாம் கண்டிட வேண்டும். ஏன் நக்சலைட் உருவாகிறான், எந்த சூழ்நிலையில் இப்படிப்பட்ட வன்முறைகள் தலைதூக்குகின்றன. அடிக்க அடிக்க, மிதிக்க மிதிக்க புழுவும் புலியாகும் என்கிற அளவிற்கு ஏழை, எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், பாட்டாளி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் அங்கே மேலும் மேலும் முடக்கப்பட, முடக்கப்பட ஒடுக்கப்பட ஒடுக்கப்பட அவர்கள் கிளர்ந்தெழுகிற நிகழ்ச்சியும் அப்படி கிளர்ந்தெழுகிற அந்த ஏழை எளியவர்களுக்காக பிரிதிநிதித்துவம்

வசிக்கிற அளவில், தலைமை தாங்குகிற அளவில் சில தளபதிகள் தோன்றுவது உலகத்திலே இயல்பு. அப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழகத்திலே ஒரு பகுதியாக தர்மபுரி மாவட்டமும், வட ஆற்காடு மாவட்டமும் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே துப்பாக்கிக் குண்டுகள் அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு பரிகாரமல்ல. அடிப்படை என்ன என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையிலே ஒரு புதிய மாற்றத்தை, புரட்சிகரமான மாற்றத்தை செய்வதற்கு அரசு முன் வந்தாலன்னியில் நாம் நக்சலைட்டுகளை எல்லாம் கொன்று தீர்த்துவிட்டோம், எனவே நக்சலைட்டுகள் பிரச்னை அடங்கி விட்டது என்று திருப்திபடுவதற்கு வழியில்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு சோகச் செய்தி, அதே நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு கூட அந்தச் செய்தி கிடைத்திருக்கக் கூடும், அதனுடைய விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. ஒரு வேளை நீதிமன்றத்திலே இருக்கிறது என்ற காரணத்தால் சொல்லவில்லை என்று யாரும் எண்ண வேண்டாம். அரசியல் நாகரிகம் கருதி நான், என்னைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே கடைபிடிக்க வேண்டிய பண்பாட்டைக் கருதி, யாருக்கும் ஒரு தர்மசங்கடத்தை உருவாக்கக்கூடாது என்ற சூழ்நிலையிலே அது முதலமைச்சர் அறிந்து கொண்டால் போதும், அறிந்து நடவடிக்கை எடுத்தால் போதும், அப்படி நடவடிக்கை எடுப்பாரேயானால் நான் மெத்தவும் மனம் குளிருவேன் என்கிற நிலையிலே இந்தச்செய்தியை நான் முதலமைச்சருக்கும், இந்த அவைக்கும் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00).

திண்டுக்கல்லிலே இருந்து அருணாசலம் என்கின்ற ஒருவர் எனக்கு ஒரு பதிவுத் தபால் எழுதி இருக்கிறார். அந்தப் பதிவுத் தபாலிலே வந்திருக்கிற வாசகங்கள் என்னை அதிர்ச்சிக்கு ஆளாக்கி இருக்கிற வாசகங்களாகும். அவருடைய 19 வயது மகள் மாலா என்று அழைக்கப்படுகின்ற கண்மணி அந்த மாலா என்கின்ற அந்தப் பெண்ணை சென்னை ஜாபர்கான் பேட்டையிலே உள்ள பகலவன் என்பவருக்கு 14—12—1981-ல் அருணாசலம் அவர்கள் திருமணம் செய்து வைக்கிறார். திருமணம் செய்து வைத்து இந்த 3 மாத காலத்திற்குள்ளாக அந்தப் பெண் சரியாக சீர்வரிசை, வரதட்சிணை இவைகளைக் கொடுக்கவில்லை என்றும், அந்தப் பெண்ணை—அந்தப் பெண் மிக அழகான பெண்; நான் நம்முடைய முதலமைச்சரிடத்திலே இந்தப் படத்தைக் கூடக் காட்ட விரும்புகிறேன். வேறு வகையான காரியங்களுக்கு ஈடுபடுத்த அந்தக் குடும்பத்தார் விரும்பினார்கள். என்றும் — அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது — அதன் காரணமாகக் கொடுமைப்படுத்தப்பட்ட



அந்தப் பெண்மணி தன்னுடைய தந்தைக்கு ஒரு தந்தியைக் கொடுக்கிறார்கள். அவர்கள் சென்னையிலேயிருந்து அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் செல்கிறார்கள். திண்டுக்கல்லிலே இருக்கிற தந்தைக்கு மாலா என்கிற கண்மணி, தன்னுடைய தந்தை அருணாசலம் அவர்களுக்குத் தந்தி கொடுக்கிறார்கள்—தயவு செய்து என்னை மதுரையிலே சந்தியுங்கள் என்று தந்தி கொடுக்கிறார்கள். தகப்பனார் திண்டுக்கல்லிலே இருந்து மதுரைக்கு ஓடிச் செல்கிறார். மதுரையிலே தங்கியிருந்த விடுதிக்குச் சென்று மகளைப் பார்க்க விரும்புகிறார். ஆனால், மகளைப் பார்க்க விடாமல் சில முக்கியஸ்தர்கள்—நான் பிறகு அந்தக் கடிதம் தருகிறேன். முக்கியஸ்தர்கள் யார் என்பதை முதல்வர் புரிந்துகொள்ளலாம். அந்த முக்கியஸ்தர்கள்—தடுத்து விடுகிறார்கள். அப்படித் தடுத்துவிட, மகளைப் பார்க்க முடியாமல் அந்தப் பரிதாபத்துக்குரிய தந்தை திரும்பி விடுகிறார்—திண்டுக்கல்லுக்கு. அதற்குப் பிறகு 5—3—1982-ல் 'மாலா இறந்து விட்டாள்' என திண்டுக்கல்லுக்கு—அவருடைய தந்தைக்கு — சென்னையிலே இருந்து தந்தி செல்கிறது, மாலாவின் கணவரின் பெயர் போட்டு தந்தி செல்கிறது. தந்தி 6—3—1982 மாலையில் தந்தை அருணாசலத்துக் கிடைக்கிறது. தந்தி கிடைத்தவுடன் 'வி ஆர் கமிங்' எனப் பதில் தந்தி கொடுத்து விட்டு, பெற்றோர்களும், வீட்டிலே உள்ளவர்களுமாக 6 பேர் அங்கேயிருந்து புறப்பட்டு, சென்னை ஜாபர்கான் பேட்டைக்கு வந்து சேருகிறார்கள். மகளை—19 வயது மகளை, திருமணமாகி 3 மாத காலம் கூட ஆகாத நிலையில் இறந்து விட்டார் என்ற செய்தி தெரிந்து, மகளின் முகதரிசனத்தைக் கடைசியாகக் காண விரும்புகின்ற அந்தத் தந்தையும் தாயாரும் உற்றார் உறவினரும் காண முடியவில்லை. — 12 மணிக்கு வருகிறார்கள். பிரேத அடக்கம் எல்லாம் முடிந்து விட்டது என்று சொல்லி அடியாட்களை வைத்து மிரட்டி அவர்களை வெளியே அனுப்பி விடுகிறார்கள். இதுகுறித்து மாலாவினுடைய தந்தை பல்வேறு ஆதாரங்களோடு எனக்கு ஒரு ரிஜிஸ்டர்ட் கடிதமே அனுப்பியிருக்கிறார். 23—3—1982-ல் அனுப்பப்பட்ட கடிதம் என்னிடத்திலே இருக்கிறது. எனவே, இந்த அநியாயங்கள் செய்தவர்கள் யார் என்பதையும், இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்பதற்கும் இந்த ஆதாரங்களோடு இந்த பரிதாபத்திற்குரிய கடிதத்தை நான் அவரிடத்தில் தருகின்றேன். நம்முடைய முதல்வர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எல்லாம் எடுப்பதாகச் சொல்வார்.' ஆனால், நான் அவரைக் கேலி பேசுவதாக எண்ணக் கூடாது. கண்டிப்பதாகக் கூட கருதக் கூடாது. ஆனால், உண்மை நிலவரங்களை இங்கே எடுத்துக் கூறுவதிலே தவறில்லை என்பதால் கூறுகின்றேன். இப்படி இதே அவையிலே, பல அதிகாரிகள் மீது, அல்லது பல சம்பவங்களைக் குறிப்பிட்டு, அல்லது ஒரு வேளை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது குறை சொல்லப் பட்டால், அவர்கள் மீதெல்லாம் கூட நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட பல

நடவடிக்கைகள் எடுக்கப்படாமலே உறங்கிக் கொண்டிருக்கின்றன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் தேதி தமிழகத்திலே உள்ள அனைத்து ஏடுகளிலும் ஒரு திடுக்கிடத்தக்க செய்தி வெளிவந்தது. அதாவது, சென்னை எழும்பூரிலே உள்ள சுற்றுலா ஊர்தி தனியார் நிறுவனங்களான, செந்தில் டிராவல்ஸ், கே.பி.என். பஸ் சர்வீஸ், பாண்டியன் டிராவல்ஸ், கன்னையன் டிராவல்ஸ், லட்சுமி டிராவல்ஸ், ஸ்ரீலட்சுமி டிராவல்ஸ், நாராயண் டிராவல்ஸ், ஆகிய 7 நிறுவனங்களில் சென்னை நகர இலஞ்ச ஒழிப்புப் போலீசார் சோதனையிட்டு கைப்பற்றிய சில தஸ்தாவேஜுகளுடைய அடிப்படையில் மேற்படி ஊர்திகளுடைய நிறுவனங்களோடு காவல் துறையைச் சேர்ந்த 6 டி.எஸ்.பிக்கள், 41 இன்ஸ்பெக்டர்கள், 71 சப்-இன்ஸ்பெக்டர்கள், 11 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 13 தலைமைக் காவலர்கள், 35 காவலர்கள், ஆக மொத்தம் 177 பேர்களும், மற்றும் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த 11 ஆர்.டி.ஓ.க்களும், 62 எம்.வி. இன்ஸ்பெக்டர்களும், 11 எழுத்தர்களும் ஆக 84 பேர்களும், ஆக மொத்தம் 251 பேர் இவர்கள் விதிக்கு மாறாக சுற்றுலா ஊர்திகளை ஆம்னி பஸ் என்ற பெயரால் ஓட்டுவதற்குச் சதித்திட்டம் வகுத்துச் செயல்பட்டார்கள் என்றும், அந்த வகையில் பல கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் சம்பாதித்தார்கள் என்றும், அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய் பெருமளவிற்கு நட்டத்திற்கு ஆளானது என்றும், அதற்கு உதவிய வகையிலே மேலே கூறப்பட்டுள்ள அலுவலர்கள் கையூட்டுப் பெற்றுக்கொண்டு அதற்குத் துணையானார்கள் என்றும் செய்தி வெளி வந்து, அந்த நிறுவனங்களில் கைப்பற்றிய தஸ்தாவேஜுகளில் ஆளுங்கட்சியிலே உள்ள சிலருக்குக் கூடச் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்டது. எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. எதிர்க்கட்சிகளின் சார்பிலே இந்தக் குற்றச்சாட்டு அன்று விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டது.

26—10—1980 ஆம் தேதியன்று வெளியான செய்திப்படி அந்த ஊழல் வழக்கின் முதல் கட்டமாக 106 காவல்துறை அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதையொட்டி இந்த மன்றத்தில் கடந்த ஆண்டு நம்முடைய நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்கள் அந்த ஆம்னி பஸ் ஊழல் குறித்து முதலமைச்சரவர்களிடத்திலே ஒரு வினாவினை எழுப்பினார்கள் போலீஸ் மானியத்தில். அந்த வினாவில் இந்த வழக்கு என்னவாயிற்று என்று கேட்டார். அவருக்குப் பதில் அளித்த முதலமைச்சரவர்கள் சொன்ன வாசகத்தை அப்படியே சொல்கிறேன். '' அந்த ஊழியர்கள் மீது விசாரணை நடந்து வருகிறது. நடவடிக்கை கைவிடப்படவில்லை. தகுந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன. முன்பு இருந்தவர்கள் அமைத்து வைத்த ரெட்டப் முறை, சட்டமுறை ஆகியவற்றால் தான் சற்றுத் தாமதமே தவிர தவறு செய்வதாகக் கூறப்படுவோர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.'' என்று முதலமைச்சர் உறுதி அளித்தார்.



சிகப்பு நாடா முறையினாலேதான் இவ்வளவு தகராறும், எனவே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஓராண்டுக் காலமாக, அந்த நாடா இன்னும் அவிழ்க்கப்படாமலே போய் இந்த வழக்கு என்னவாயிற்று என்று தெரியாத ஒரு சூழ்நிலையில், இந்த வழக்கிலே ஈடுபடுத்தப்பட்டவர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் அல்லது அனைவருமே இன்றைக்குச் சுதந்திரமாக இருக்கிறார்கள் என்கின்ற அளவிற்கு வழக்கு கைவிடப்பட்டு விட்டதா அல்லது நடைபெறுகிறதா? கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு நடைபெற்ற இந்த மாபெரும் பயங்கரமான ஊழலில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பவைகளையெல்லாம் இங்கே வைக்கப்பட்ட ஆய்வு அறிக்கையிலே வைக்காத காரணத்தால் நாங்கள் தெரிந்து கொள்ளாமல் விழிக்கிறோம். ஒருவேளை முதலமைச்சரவர்களுடைய பதிலிலே அவைகளையெல்லாம் சொல்லலாம் என்பதற்காக—எல்லாவற்றையும் ஆய்வு அறிக்கையிலே சொல்லிவிட்டால் பிறகு தான் பேசுவதற்கு எதுவும் இருக்காது என்பதற்காக ஒரு வேளை அதை ஸ்டாக்காக வைத்துக் கொண்டிருக்கலாம் என்று கருதுகிறேன். எனவே, சென்ற ஆண்டு திரு. சுந்தரராஜ் அவர்களுக்குச் சொன்ன பதிலையே இப்பொழுது மீண்டும் சொல்லாமல், அதற்குமேலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று உரிய பதிலை, அரிய பதிலை இங்கே நம்முடைய முதல்வரவர்கள் அளிப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதுபோலவே நடவடிக்கை எடுக்காததற்கு இன்னும் பல சான்றுகளைச் சொல்ல முடியும். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழகத்திற்கு 1977-ஆம் ஆண்டு இறுதியிலே வந்த பொழுது கறுப்புக்கொடி நிகழ்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தால், திராவிட கழகத்தால் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால் காட்டப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அது சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்ற வழக்கு நாடறிந்த ஒன்று. என் மீது, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் மீது, பொருளாளர் சாதிப்பாட்சா மீது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் ப.உ. சண்முகம் மீது, மதுரை மாவட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்ினுடைய செயலாளர் பழக்கடை பாண்டி மீது, எல்லோர் மீதும் வழக்கு இருக்கிறது. இதைச் சொன்னால், பாருங்கள் எங்களுடைய பட்சபாதமற்ற தன்மையை என்று முதல்வரவர்கள் சொல்லக்கூடும். ஆனால் வழக்கு எங்கள் மீதெல்லாம் இருக்கிறது. கொலை வழக்கு, 302, 307 வழக்கு என் மீதும், பேராசிரியர் மீதும், சாதிக்பாட்சா மீதும், உங்களுடைய பொதுச் செயலாளர் ப.உ. சண்முகத்தின் மீதும் இருக்கிறது. நான் அதிலே அதிகமாக, விரிவாகப் பேசிவிட விரும்பவில்லை. ஆனால் அந்தக் கறுப்புக்கொடி நிகழ்ச்சியிலே அதைப் பற்றி விசாரிக்க நீதிபதி சோமசுந்தரம் அவர்களைக் கொண்டு ஒரு கமிஷனை

அப்பொழுது நம்முடைய முதலமைச்சரவர்கள் அமைத்தார்கள். அந்த சோமசுந்தரம் கமிஷனில் அரசு இப்படிப்பட்ட நிலைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது போன்ற பரிந்துரைகள், துப்பாக்கிப் பிரயோக சரியானதுதான் என்கிற ஜஸ்டிஃபிகேஷன் இவைகளெல்லாம்கூட அந்த அறிக்கையிலே இருந்தாலும் ஒன்றை அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். எங்களுடைய 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'-க்கு, வரையரைக்கு உட்பட்டது அல்ல என்றாலும்கூட ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்று நீதிபதி சோமசுந்தரம் குறிப்பிட்டிருந்தார்,

(முற்பகல் 10-10)

நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், ஒரு நல் உணர்வு உள்ள நீதிபதி என்பதை அனைவரும் அறிவார்கள். இதற்குமேல் ஒரு நீதிபதியைப் பற்றி நல்லது கெட்டதைப் பேசக்கூடாது என்பதால், இந்த அளவோடு நான் விட்டுவிடுகிறேன். அன்னை மணி அம்மையார் அவர்கள், தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார், அந்தக் கறுப்புக்கொடி போராட்டத்திலே ஈடுபட்டு, அவர்களும் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் இந்த சோமசுந்தரம் கமிஷனுக்கு ஒரு வாக்குமூலம் கொடுத்தார்கள். ஆனால் அந்த வாக்குமூலம் விசாரணைக்கு வந்து, அன்னை மணியம்மையார் சாட்சிக் கூண்டிற்கு வரவழைக்கப்படுவதற்கு முன்பு, காலம் அவர்களை கொத்திக்கொண்டு சென்றுவிட்டது. எனவே, அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலே, நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். போக்குவரத்து சார்ஜன்ட், வெள்ளைச்சாமி என்பவர், தன்னை தரக்குறைவாகவும், இழிவாகவும் பேசியதை மணி அம்மையார் உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார், இது குறித்து அரசு கருதினால், விசாரணை செய்யலாம். இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டு இந்த அரசு ஜி. ஓ. 1626, செப்டம்பர் 1, 1978-ல் இது குறித்து, நடவடிக்கை பற்றி, தனி உத்திரவு பிறப்பிக்கப்படும் என்று 78-லேயே இங்கே வைக்கப்பட்ட அறிக்கைக்கு, துணை அறிக்கையாக வைக்கப்பட்ட அந்த அறிக்கையில் நடவடிக்கைபற்றி, தனி உத்திரவு, மணி அம்மையார் அவர்களை ஒரு சார்ஜென்ட் வெள்ளைச்சாமி தரக்குறைவாகப் பேசியது குறித்து, நீதிபதி சோமசுந்தரம் குறிப்பிட்டு இருக்கிறார். அந்தப் பரிந்துரை குறித்து, நடவடிக்கை எடுக்க அரசு தனி உத்தரவு பிறப்பிக்கும் என்று அறிவித்தது. ஆனால் இது வரையிலும், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால், இல்லை. கேட்டால், முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் பால் கமிஷனுடைய அறிக்கைவைத்துள்ள நாங்கள் திருச்செந்தூர் கொலைக்கே, எந்த



நடவடிக்கையும் எடுக்கவில்லை, இதைப் போய் பெரிதாகக் கேட்கிறார் என்று முதலமைச்சர் அவர்கள் கேலி பேசுவது எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனாலும் கூட, அன்னை மணி அம்மையார், நாம் எல்லாம் வழிபடுகிற தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் அவர்கள் இவ்வளவு தரக்குறைவான முறையில் நடத்தப்பட்டார்கள், இழிவான முறையிலே, அர்ச்சிக்கப்பட்டார்கள் என்று ஒரு நீதிபதி சொன்ன பிறகும் கூட அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவில்லையே என்கிற ஆதங்கத்தின் காரணமாகத்தான், இதை நான் இங்கே சொல்கிறேன். போலீசாருடைய புலன் விசாரணை எந்த அளவிற்கு இருக்கிறது. எப்படிப்பட்ட பாரபட்சமாக இருக்கிறது என்பதற்கு பால் கமிஷன் நீதிபதி, பால் அவர்கள் பல இடங்களிலே இதை கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எந்த அளவிற்கு போலித்தன்மை வாய்ந்தது போலீசாருடைய புலன் விசாரணை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. திருச்செந்தூர் கொலை வழக்கு பற்றி முதல் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நீதிபதி பால் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். உண்மையிலேயே முதல் தகவல் அறிக்கை, எப். ஐ. ஆர். கொடுத்த புருசோத்தமனோ. மகாதேவனோ, நிர்வாக அதிகாரி, களோ அறங்காவலர்களோ அன்றையதினம் விசாரணை செய்யப்படவில்லை. இச்சாட்சிகளை அன்றையதினம் விசாரணை செய்யாததற்கு திருச்செந்தூர் காவல்துறை இன்ஸ்பெக்டர் கே. ஸ்ரீதரன் நாயர் கூறிய காரணங்கள் முற்றிலும் நம்பத்தக்கனவாக இல்லை. இதை நீதிபதி பால் சொல்கிறார். கோயிலின் உள்துறை கண்காணிப்பாளர் மகாதேவன் தான் கோயிலுக்குச் செல்லவில்லையென்றால், பூஜை நின்றுவிடும் என்று கூறியதாகவும், ஆகவே, தான் விசாரணை செய்யவில்லை என்றும் காவல் துறை இன்ஸ்பெக்டர் கூறுவது நம்பத்தக்கனவாக இல்லை. இதுவும் நீதிபதி பால் அவர்களுடைய கூற்றுதான். மாகாதேவன் அவர்கள் கூறியதை முற்றிலும் வேதவாக்காகக் கொண்டு காவல் துறை இன்ஸ்பெக்டர் நம்பினாலும் கூட பூஜை முடிந்த பின்னால் இரவு அவர்களை விசாரணை செய்திருக்கலாம். அவ்வாறு விசாரணை செய்யாததற்கு இன்ஸ்பெக்டர் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை. இதுவும் நீதிபதி பால் அவர்கள் அறிக்கையிலே காணப்படுகின்ற வாசகம்தான். கோவில் நிர்வாக அதிகாரியை விசாரணை செய்யும் பொருட்டு தேவஸ்தான அலுவலகத்திற்கு சென்று தேடியதாகவும், அங்கு அவர் காணவில்லை என்றும், அவரைத் தேட ஒரு காவலரை தான் அனுப்பியதாகவும், இன்ஸ்பெக்டர் கூறினார். இது விசித்திரமாகவும், நம்பத்தகாததாகவும் உள்ளது. இதுவும் நீதிபதி பால் அறிக்கையிலே காணப்படுகின்ற வாசகம்தான். அறங்காவலர் ஸ்ரீநிவாச பாண்டியன், உண்டியல் காணிக்கை முழுவதும் எண்ணி முடிக்கப்படும் வரை நீண்ட நேரம் இருந்தார் என்பது அவர்கள் கூறும் சாட்சியமாக இருப்பினும் அறங்காவலர் ஸ்ரீநிவாச பாண்டியனை விசாரணை செய்ய ஏந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதுவும் நீதிபதி பால் கூறியது தான். குளியல்

அறைக் கதவு வலிந்து திறக்கப்பட்டபோது, அங்கு சரிபார்ப்பு அதிகாரி தண்ணீர் குழாயில் தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் போது, அவ்விடத்தில், அறங்காவலர் ஸ்ரீநிவாச பாண்டியன் உடன் இருந்ததாகக் கூறப்படும் போது பொறுப்பு வாய்ந்த ஒருவரான ஸ்ரீநிவாச பாண்டியனிடமிருந்து இன்ஸ்பெக்டர் உடனடியாக வாக்குமூலத்தைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் சட்டப் பேரவை உறுப்பினர் நேசன் ஆதித்தனை அன்றைய தினம் விசாரணை செய்ய இன்ஸ்பெக்டர் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இந்த முக்கியமான சாட்சிகள் ஏதோ ஒரு காரணத்திற்காக வேண்டுமென்றே விசாரணை செய்யப்படாமல் விடப்பட்டிருக்கின்றார்கள் எனத் தெரிகிறது.

ஆய்வகத்தை 26–11–80 அன்று பிற்பகல் 4–45 மணிமுதல் 6 மணிவரை ஆய்வு செய்து, அங்குள்ள பொருட்களை கைப்பற்றி ஆய்வு பறிமுதல் பதிவேடு தயாரித்ததாக இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் நாயர் உறுதியாகக் கூறினாலும் அந்த பதிவேட்டின் ஆவணத்திலிருந்தும் அல்லது கார்பன் நகல்களிலிருந்தும் முதலில் 27–11–80 என்று நாளிடப்பட்டு, 27 என்று நாளிடப்பட்டு, பின்னால் 27 என்பதில் ஏழு ஆறாகத் திருத்தப்பட்டு—போலீசார் செய்கிற காரியங்கள் இவை—ஏழு ஆறாகத் திருத்தப்பட்டு, 26–11–80 என்று வாசிக்கும்படி திருத்தப்பட்டு, அந்தப் பதிவேடு 27–11–80 அன்று தான் தயாரிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. அவ்வாறு திருத்தப்பட்டதாக, குறிப்பாக கார்பன் நகல்களிலிருந்து நமக்குத் தெரிகிறது.

இவ்வளவும் திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையினுடைய மர்ம மரணம் குறித்து நடத்தப்பட்ட புலன் விசாரணையில் போலீசார் எப்படி நடந்து கொண்டார்கள் எவ்வளவு தவறுதலாக, எவ்வளவு பித்தலாட்டமாக, எவ்வளவு மோசடியாக போலீசார் நடந்து கொண்டிருக்கிறார்கள். என்பதற்கு நீதிபதி பால் அவர்கள் தருகின்ற நற்சான்றிதழ்தான் இவைகள் எல்லாம்.

நான் இன்னொன்றையும், ஏற்கனவே முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு தனிப்பட்ட முறையில் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில். கிணத்துக்கடவு தொகுதியிலே உள்ள தேவனாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 100 க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டு என்னிடம் ஒரு மகஜர் அளித்திருக்கிறார்கள். அந்த மகஜர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 100 பேர்களுடைய கையெழுத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது. அது முதலமைச்சருக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். அதிலே நான் சிலவற்றை, இந்த அவையில் எந்த சர்ச்சையும் ஏழக்கூடாது என்று கருதி விட்டு விட்டு அந்த மகஜரைப் படிக்கிறேன்.



"From

The Harijans of Devanampalayam Village, Poollachi Taluk, Coimbatore District.

To

The Hon'ble Prime Minister of India, NEW DELHI

Respected Madam,

We belong Scheduled Cas.—Harijan living at Devanampalayam village, Pollachi Taluk Coimbatore District, Tamil Nadu. We beg to submit the following for your kind attention and necessary action.

There is a toddy shop in our village. The owners of the toddy shop were under the impression that our community people are not taking liquor from the shop and hence, for no reason, they used to treat us erratically and threatened us of driving out from our village itself.

We are afraid of it and tried to persuade them by mediations But to our surprise at 11 P.M. of 2nd February 1982, when the entre village was at dark more then 100 rowdy elements came to our village by three lorries and treated us like anything and set fire to our huts and the cattle and the poultry were robbed. As a fact, 8 huts were completely destroyed and women were brutally attacked. We are erribly afraid and unable to do our normal duties.

We respectfully submit to your goodself that we approached and complained about the atrocites to the police people and even to the District Collector but in vain. Though it was represented to us that police protection was given, it was only an eye—wash and no proper action is taken yet.

இப்படி அந்தப் பகுதியையே ஒரு கலவரப் பகுதியாக ஒருபெரிய சாம்ராஜியாதிபதியுனுடைய கையிலே இருக்கிற, ஒரு சர்வாதிகாரியினுடையகையிலே இருக்கிற பகுதியாக அந்தப் பகுதி இன்றைக்கு அத்தகைய நிலவரத்திற்கு ஆளாகியிருக்கிறது. அதற்கு மேல் நான் சொல்லாமல், முதலமைச்சர் புரிந்து கொள்வார் என்ற காரணத்தால் அந்த அளவோடு நான் விட்டு விடுகிறேன்.

நண்பர் சுந்தரராஜ் அவர்களும், சித்தன் அவர்களும் அன்றைக்குச் சொன்னார்கள். சிதம்பரத்திலே டி. எஸ். பி. ஜோசப் அவர்கள் இன்றைக்கு அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மாற்றப்பட்டிருக்கிறார். சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார் என்றாலும் கூட அவரைப்பற்றி ஏற்கெனவே வந்த செய்தி இவைகளை எல்லாம் பார்க்கும் போது அவர் மீது மிகத் தீவிரமான நடவடிக்கை எடுத்திட இந்த அரசு முன்வர வேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கையாகும்.

அண்மையிலே நம்முடைய முதலமைச்சர் தென் ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதுகூட அங்கே காருக்குப் பின்னால் சென்றவர்கள் ஜீப்பிலே இருந்த பெண்

போலீசாரிடத்திலே தகராறு செய்தார்கள் என்பது அந்த அதிகாரிகளால் மறுக்கப்பட்டாலும் கூட அது உண்மைதான் என்றும் அந்தத் தகராறுக்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவர் இந்த டி. எஸ். பி. ஜோசப் என்றும் கூறப்பட்டது. அவரே தான் அண்மையில் சிதம்பரத்தில் திரைப்படத்திற்குச் சென்றுவிட்டு திரும்பிய மூன்று பெண்களை வழிமறித்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, இரவெல்லாம் காவல் நிலையத்தில் வைத்திருந்து, காலையில் பெற்றோர்கள் தேடி, அலுத்து வந்து சேர்ந்த போது பெற்றோர்களுடைய கையிலும் தடியைக் கொடுத்து அந்தப் பெண்களை அடிக்கச் சொல்லி, தானும் அடித்துத் துன்புறுத்தி, அதன் காரணமாக திலகவதி என்கிற ஒரு பெண் அவமானம் தாங்காமல் உடலிலே மண்ணெண்ணெய் ஊற்றி, தீவைத்துக் கொளுத்திக் கொண்டாள் என்றெல்லாம் செய்தி வந்தது.

ஆபத்தான கட்டத்தில் மருத்துவ மனையில் அந்தப் பெண் மணி அனுமதிக்கப்பட்ட நேரத்தில் கூட, மருத்துவ மனையில் இருந்து விடுவிக்கவும், புகார் எதுவும் கொடுக்காமல் பார்த்துக் கொள்ளவும் பல சூழ்ச்சிகளில் அந்த டி. எஸ். பி. ஈடுபட்டார் என்று எங்களுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் வந்த செய்திகளின் காரணத்தால் தான் அன்றும், பிறகும் இங்கே கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு, இப்போது அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற ஒரு நல்ல செய்தி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நடவடிக்கை மாத்திரம் போதாது. மேலும், அவர் சேர்த்திருக்கும் சொத்து வகையறா, மற்றும் எந்த அளவிற்கு அட்டூழியங்கள் புரிந்துள்ளார் என்பதையெல்லாம் முதலமைச்சரும், இந்த அரசும், இந்தத் துறையும் கண்காணிக்க வேண்டும்.

[முற்பகல் 10—20]

ஏன் இப்படி அதிகாரிகள் மாறுகிறார்கள்? இங்கே இருக்கும் புகைப்படத்தைப் பார்த்தால் தெரியும். சிதம்பரத்தில் ஒரு மதுக்கடை, ஒயின் ஷாப் திறக்கப்படுகிறது. அதற்குத் திறப்புவிழா வைக்கப்படுகிறது. மதுவிலக்கு இன்னும் ரத்து செய்யப்படவில்லை என்று முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. எஸ், அவர்களும் சொல்லிக் கொண்டு இருக்கிறார். ஆனால் அந்த ஒயின் ஷாப் திறப்பு விழாவிற்கு அந்த டி. எஸ். பி. தலைமை வகிக்கிறாரோ அல்லது முன்னிலை வகிக்கிறாரோ தெரியவில்லை. நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர் சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர்கூட அந்தப் போட்டோவில் இருக்கிறார். இப்படி ஒயின் ஷாப் திறப்பு விழாவில் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். மதுவிலக்கை நாம் பிரச்சாரம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, இன்னொரு புறத்திலே இப்படிப்பட்ட அதிகாரிகள் ஒயின் ஷாப் திறப்புவிழாவிலே கலந்து கொள்வதும், ஆளுங் கட்சியிலே உள்ளவர்கள் அவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வதும், இது போன்ற



தைரியத்தை, துணிவை இத்தகைய அதிகாரிகளுக்கு ஏற்படுத்தி விடுகிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் விட்டு விட்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை யெல்லாம் விட்டு, விட்டு நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப்போல, எதிர்க்கட்சிகள் மீது வழக்குகளை ஜோடிப்பதில் இந்த அரசு காட்டும் ஆர்வம்தான் அபாரமானதாக இருக்கிறது. அந்த வழக்குகள் எந்த நிலையில் போய் முடிகின்றன என்பதற்கும், எந்த அளவிலே அந்த வழக்குகள் ஜோடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதற்கும் நான் பல உதாரணங்களையெல்லாம் சொல்லவில்லை. ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும், அ. தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும் 31—10—1977 ஆம் தேதி ஈரோடு பேருந்து நிலையத்தில் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று ஒரு வழக்கு. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி 13—1—1981 வரையில் அந்த வழக்கை விசாரித்து முடித்துவிட்டு, தீர்ப்பு அளிக்கிறார். இந்த வழக்கில் இருதரப்பினருக்கும் தி. மு. க., அ. தி. மு. க. சண்டை நடந்து இருப்பின் இருதரப்பினருக்கும் காயங்கள் ஏற்பட்டு இருக்க வேண்டும். ஆனால் ஆச்சரியமாக தி. மு. க. வினருக்கு மட்டுமே காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் மட்டுமே மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார்கள். அ. தி. மு. க. வினருக்கு எவ்வித காயமும் இல்லை. அவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெறவும் இல்லை. இதனை நோக்குங்கால், இந்த வழக்கில் இரு சாராரும் சண்டை போட்டார்கள் என்று கூறுவது சரியா என்று ஒரு பெரிய ஐயமே ஏற்படுகிறது. தி.மு. க. வினருக்கு மட்டுமே சிகிச்சை அளித்து டாக்டர் காயச் சான்றிதழ் கொடுத்துள்ளார். ஒருசாராருக்கு மட்டுமே உள்ள காயச் சான்றிதழை வைத்துக் கொண்டு, ஐ. பி. சி. 160 விதியின்படி வழக்குத் தொடர அரசு வழக்கறிஞர் எப்படி சிபாரிசு செய்தார் என்பதே எனக்குச் சந்தேகமாக உள்ளது. தி. மு. க. கூறுவது போல் அ. தி. மு. க. வினர் ஆளும் கட்சி என்பதால், அவர்களுக்கு சாதகமாக இவ்வாறு வழக்குத்தொடர சிபாரிசு செய்தார்களோ என்ற எண்ணம் தோன்றுகிறது. அத்துடன் இவ்வழக்கை நோக்குங்கால், தி. மு. க. வினர் மாத்திரமே, நீதிமன்றத்திற்கு வந்தார்களே ஒழிய அ. தி. மு. க. வினர் ஒருவரைத் தவிர மற்ற எவரும் நீதி மன்றத்திற்கு வரவில்லை. அவர்கள் ஆளும் கட்சி என்பதால் நீதிமன்றத்திற்கு வரத் தேவையில்லை என்று எண்ணி இருந்து விட்டார்களோ அல்லது வாரண்ட் இருந்தும் அவர்கள் காவல் துறை ஆதரவோடு சம்மன்களை சாதாரண காகிதமாக ஆக்கிவிட்டார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. அ. தி. மு. க. வைச் சேர்ந்த வாரண்டில்

குறிப்பிடப்பட்டிருந்தவர்கள் கலந்துக் கொள்ளும் நிகழ்ச்சிகளில் காவல் துறை மேல்மட்ட அதிகாரிகள் சென்று இருந்தும் கையில் இருக்கும் வாரண்டை நிறைவேற்ற நினைவில்லையோ, எண்ணம் இல்லையோ, அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு, இந்த நீதி மன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அந்த வாரண்டுகள் என்ன ஆயிற்று என்று வாரா வாரம் எழுதப்பட்ட கடிதங்களுக்கு எந்த ஒரு பதிலும் அனுப்பாமல் இருப்பதைக் காணும் போது காவல் துறை சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற பாடுபடுவதை விட சில பல தனிப்பட்டவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு இருப்பது போல் தெரிகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரை காப்பாற்ற அரசு வழக்கறிஞர்கள் உதவியோடு காவலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும் சேர்த்து அனைத்து எதிரிகளின் மீதும் ஐ.பி.சி. பிரிவு 166—ன் படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது. எனவே குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று கருதி, எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து விடுதலை செய்கிறேன். என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

இதேபோல இன்னொரு தீர்ப்பு. செங்கையன் என்ற ஒரு கடைநிலை ஊழியரும், மற்றும் 3 ஊழியர்களும், தாங்கள் சஸ்பென்ஷனிலேயே நீண்ட நாட்கள் இருப்பதாகவும், அதை ரத்து செய்யக் கோரி உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கிலே தீர்ப்புக் கூறும்போது நீதிபதி சத்திய தேவ் தெரிவித்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளின் போக்கைக் கண்டிக்கிறேன். போலீசின் ஆய்வு பற்றியும், இந்த வழக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் அரசுக்கு தகவல் அனுப்ப விரும்பிய மாவட்ட கலெக்டர் அது பற்றி கேட்டு, காவல் பிரிவு துணைக் கமிஷனருக்கு 9 கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஒரு கடிதத்திற்குக் கூட போலீஸ் துணைக் கமிஷனர் மாவட்டக் கலெக்டருக்கு பதில் எழுதவில்லை. ஒரு மாவட்டக் கலெக்டருக்கே இந்தகதி என்றால், மற்ற பிரஜைகளின் நிலை என்னவாக இருக்கும் என்று நீதிபதி தமது தீர்ப்பில் கேட்டிருக்கிறார்கள்.

இந்த வழக்கில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி, கலெக்டருக்கோ அரசுக்கோ போலீஸ் துணைக் கமிஷனர் தெரிவிக்கவில்லை. வழக்கில் புலனாய்வு தொடர்கிறது என்று மட்டும் கூறி வேறு எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அரசு ஊழியர்களின், அவர்கள் கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் அல்லது வேறு உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும், அவர்கள் தொடர்ந்து சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருப்பது சரியல்ல என்று நீதிபதி கூறியிருக்கிறார்கள்.



நான் சஸ்பென்ஷனுக்காக வாதாட வரவில்லை. நீதிபதி போலீசாரின் போக்கை எந்த அளவுக்குக் கண்டித்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான், அதை எடுத்துச் சொன்னேன். நமது முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கக் கூடிய இந்த ஆய்வு உரையில்நமது தமிழகஅரசின் காவல் துறைக் கண்ணிகரற்ற வகையில் தன் 'பணிகளை ஓயாது செய்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை' என்று கூறியிருக்கிறார்கள். அன்றைக்கு நம்முடைய நண்பர் நெடுமாறன் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல தமிழக காவல் துறையினருக்கு ஒரு சிறப்பும், தகுதியும் உண்டு என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இப்போதுள்ள காவல் துறையினுடைய பணி பற்றியும், நிலை பற்றியும் நான் இங்கே எடுத்துக் காட்டுவதை விட, அன்றைக்கு நண்பர் உமாநாத் அவர்கள் இங்கே நீதிமன்றத்தினுடைய ஒரு ஆப்சர்வேஷனை எடுத்துச் சொன்னார்கள். அதை மீண்டும் முதலமைச்சருக்கு ஞாபகப்படுத்துவது என்னுடைய கடமைஎன்று கருதி, நீதிபதிகள் திரு. நடராஜனும், திரு. மூர்த்தியும் அளித்த கருத்துக்களை கூறுகிறேன். 8 பேர் கொலை செய்யப்பட்ட ஒரு வழக்கிலே, அவர்கள் அளித்த தீர்ப்பிலே கூறியிருக்கிறார்கள்.

Their Lordships observed that the Government would be well advised to constitute a high level committee to tone up the police force by putting police Personnel through refresher courses and improving the intelligencewing. Their Lordships note that a local blacksmith in the district had been clandestinely manufacturing and selling fire arms for nearly five years and the police could stumble upon the activity only after the killings of eight persons.

ஒரு கருமான் கொலைக்கான ஆயுதங்களை 5 ஆண்டுக் காலமாகத் தயாரித்துக் கொண்டிருக்க அந்த ஆயுதங்களால் 8 பேர்கள் கொலை செய்யப்படுகிற வரையில் 5 ஆண்டுக் காலமாக போலீஸ் தூங்கிக் கொண்டிருக்கிறதே என்பதை நீதிபதிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனவே, தமிழகத்திலே உள்ள காவல் துறையினுடைய தரம், அல்லது திறமை அல்லது ஆற்றல் அல்லது அக்கறை, இவை எந்த அளவுக்கு குறைந்துக் கொண்டு வருகிறது என்பதற்கு இந்த நீதிமன்றத்தினுடைய கருத்து ஒரு எடுத்துக்காட்டாகும் என்பதற்காகத்தான், அதை நினைவூட்டினேன்.

இங்கே ஏராளமாக விவாதிக்கப்பட்ட, கன்னியாகுமரி மாவட்டப் பிரச்னையைப் பற்றி நான் ஒன்றிரண்டு வார்த்தைகளை இங்கே கூற விரும்புகிறேன். கன்னியாகுமரியினுடைய கலவரப் பிரச்னை இன்றைக்கு ஒரு நீதிபதியினுடைய—ஓய்வு பெற்ற நீதிபதியினுடைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அதுவிசாரிக்கப்பட இருக்கிறது என்றாலும்கூட, இந்த அவையிலே,

[டாக்டர் மு.கருணாநிதி] [1982 மார்ச் 27

இந்தத் துறை மானியத்திலே பேசிய பல கட்சியினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துக் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலேயே நானும் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறுவது அரசுக்கே உபயோகமாக இருக்கும் என்பதால்தானே தவிர வேறு அல்ல. இரு தரப்பிலும்—அவர்கள் இந்துக்களாக இருந்தாலும் அல்லது கிறிஸ்துவர்களாக இருந்தாலும் அல்லது சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த முஸ்லீம்களாக இருந்தாலும், அல்லது வேறு பல ஜாதிகளிலே தங்களை இணைத்துக் கொண்டுள்ள பிரிவினர்களாக இருந்தாலும், அத்தனை பேருக்கும் இருக்கின்ற ஒருமித்த குறைபாடு போலீசார் அங்கே முன்னேற்பாடாக நடந்துக் கொள்ளவில்லை என்கிற ஒரு பெருத்த குறைபாடு இருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்களே கூட இந்த அவையிலே படித்த அல்லது பேசிய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்காலமாகவே இப்படிப்பட்ட நிலைமை கன்னியாகுமரி மாவட்டத்திலே கொஞ்சம் கொஞ்சமாக துளிர்த்து வந்தது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் .0-30]

அப்படி ஓர் ஆண்டுக் காலமாகத் துளிர்த்து வந்த அந்த நிலைமையை அப்போதே கிள்ளி எறியக்கூடிய காரியத்தில் அல்லது செயல்முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படாதது அரசினுடைய குற்றமேயாகும். அது போலீஸ் துறையினுடைய குற்றமேயாகும். இன்றைக்கு காலையிலே கூட ஒரு தமிழ் பத்திரிக்கையிலே டெல்லி வட்டாரத்தினுடைய கருத்து என்ற அடிப்படையிலே அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு, முன்னேற்பாடான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு—நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாக பத்திரிகையிலே கேள்விக் குறி போட்டு ஒரு செய்தி வந்திருப்பதை நான் கூட படித்துப் பார்த்தேன். ஆனால் அங்கே இருப்பவர்கள் இந்துக்களானாலும், கிறிஸ்தவர்களானாலும் அதைத்தான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்துப் பத்திரிகை மார்ச் 20ஆம் தேதி ஒரு செய்தி வெளியிட்டு இருக்கின்றது.

'At a news Conference held here on Friday, three parish priests from the coastal areas of Kanyakumari district criticised the police the Government of Tamil Nadu and the newspapers for not understanding their problems and grievances and projecting the communal clashes in the area in away detrimental to the Christian community.



1982 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

The three Priests said they could not even send telegrams or make trunkcalls to the authorities from the P & T Offiices in the rea.

We wanted to send telegrams to the Prime Minister and others explaining the deteriorating law and order situation in the area. And we had to come to Trivandrum for the purpose. '' என்று சொல்கிறார்கள். மணவாளக்குறிச்சி என்ற இடத்தில் 7, 8 நாட்களுக்கு முன்பே அங்கே இருந்த போலீஸ் அதிகாரிகள் பெரிய கலவரத்தைத் தாங்கள் எதிர்நோக்க வேண்டும் என்று தெரிந்திருந்தும் கூட குமரி மாவட்டத்தினுடைய எஸ்.பி.-க்கு பல தகவல்கள் அனுப்பியும் கூட, ஒரு வார காலமாக தகவல் அனுப்பியும் கூட, தேவையான போலீஸ்காரர்களை அனுப்பாத காரணத்தால் 2,000 பேர் ஈடுபட்ட ஒரு கலவரத்தினை அடக்குவதற்கு 20 பேரை வைத்துக் கொண்டிருந்த அந்தப் போலீஸ் அதிகாரியால் முடியாமல் போய் கடைசியாக துப்பாக்கிப் பிரயோகத்திலே முடிந்து, 6 பேர் சாகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஒரு வார காலமாக சப்-இன்ஸ்பெக்டரோ தகவல் அனுப்பிக் கொண்டிருக்கிறார், இங்கே மோசமான சிட்சுவேஷன், மோசமான நிலைமை ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது, ஆகவே அதிக ஆட்கள் தேவை என்று தகவல் அனுப்பிக்கொண்டிருந்தும் கூட உரிய போலீஸ் படை அனுப்பப்படாததன் காரணத்தால் 2,000 பேரைச் சமாளிக்க 20 போலீசார் போதாது என்ற சூழ்நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு வந்துவிட்டது என்றும் அங்கே பேசப்படுகின்றது. இவைகளுக்கு எல்லாம் என்ன காரணம்? ஒரு மாநிலத்திலே அவர்கள் இந்துக்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம்களாக இருந்தாலும் சரி, அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தத் தரப்பாக இருந்தாலும் சரி, நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல மதப் பிரச்சாரத்தை அவர்கள் அறவே நீக்கி விடவேண்டும் என்று கூட நான் சொல்ல மாட்டேன். அது அவர்களுடைய உரிமை. ஆனால் மத வெறியைத் தூண்டுகிற அளவுக்கு ஒரு மதத்தைப் புண்படுத்துகின்ற அளவுக்கு பிரச்சாரங்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது மாத்திரமல்ல, தடுக்கப்படவேண்டும் என்பதை நான் இந்த அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு யோசனையாகக் கூட நான் சொல்ல விரும்புகிறேன். வேண்டுகோள் மாத்திரம் போதாது. இன்னொரு மதத்தைப் புண்படுத்துகின்ற அளவுக்கு, இன்னொரு மதத்தோடு மோதுகின்ற அளவுக்கு நிலைமைகள் வளர்வது, ஜாதிச் சண்டைகள் வளர்வது, ஆகியவைகளை எல்லாம் தடுக்கின்ற அளவுக்கு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். சேலத்திலிருந்து ஒரு பத்திரிகை வருகிறது. இந்துமத மறுமலர்ச்சி என்ற தினப் பத்திரிகை வருகின்றது. முதலமைச்சருடைய கவனத்திற்குக் கூட வந்திருக்கலாம். அந்தப் பத்திரிகையிலே ஒரு 20 அம்சத் திட்டம்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 27

அந்த 20 அம்சங்களையும் படித்து இன்னும் நிலைமையைப் பயங்கரமானதாக ஆக்க நான் விரும்பவில்லை. ஆனால் அதிலே சொல்கிறார்கள், தனி மரம் தோப்பாகாது, ஒவ்வொரு இந்துவும் இந்து முன்னோடி ஸ்தாபனங்களான ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, இந்து ஆலயப் பாதுகாப்பு கமிட்டி, விஸ்வ இந்து பரிஷத், ஆரிய சமாஜ், இந்து மகா சபா போன்ற ஸ்தாபனங்களில் தங்களுக்குப் பிடித்த ஸ்தாபனங்களில் உறுப்பினராகச் சேரவேண்டும்—சேரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் என்ன வேலை செய்யவேண்டுமாம் என்றால்—இந்த இளைஞர்கள் எல்லாவித தற்காப்பு பயிற்சிகளையும் பெற ஆர்.எஸ்.எஸ்-லே கட்டாயம் சேரவேண்டும்—இது தற்காப்புப் பயிற்சி என்ற பெயரால் அனைவரும் வைத்துக்கொள்கின்ற உரிமை, பிறகு போராட்டம், யுத்தம், மோதுதல் இவைகளுக்கு ஆயத்தம்—அடுத்தது கிறிஸ்தவ, முஸ்லீம் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கக் கூடாது—வெறுப்பு இங்கே தூவப்படுகின்றது —கிறிஸ்துவ, முஸ்லீம் பள்ளிகளில் இந்துக்களின் குழந்தைகளை சேர்க்கக் கூடாது—கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கின்ற நன்கொடைகள் இந்து மதத்தை அழிக்க பயன்படும். எனவே, மற்ற மத நிறுவனங்களுக்கு அறவே நன்கொடை கொடுக்கக்கூடாது. அடுத்து உங்கள் ஊர், பெயர், வட்டாரம் பெயர்கள் இந்துமயமாக ஆக்கப்படவேண்டும். மாற்றுப் பெயர்கள் இருந்தால் நிர்தாட்சண்யமாக மாற்றி இந்துமயமான பெயரைச் சூட்ட வேண்டும். இந்துவுக்கும் மற்றவர்களுக்கும் சண்டையா, நியாயம் பேசாதே, உடனே இந்துவோடு சேர்ந்துக்கொள்— இதைவிட ஒரு மதக் கலவரத்தைத் தூண்டுவதற்கு வேறு எப்படிப்பட்ட முயற்சி வேண்டும் என்று சொல்கிறீர்கள் ?— இந்துவுக்கும் மற்றவர்களுக்கும் சண்டையா ? நியாயம் பேசாதே, உடன் இந்துவோடு சேர்ந்துகொள்—எங்கே ? பெரியார் வாழ்ந்த தமிழகத்தில், பேரறிஞர் அண்ணா வாழ்ந்த தமிழகத்தில்.

காயிதே மில்லத், பெருந்தலைவர் காமராஜமூர், தறிஞர் இராஜாஜி, மற்றவர்கள் உலவி, சாதிப் பூசலோ, சமயப் பூசலோ, மதப் பூசலோ பரவாமல் தடுத்து வந்த இந்தத் தமிழகத்தில் இன்றைய தினம் இந்துக்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே சண்டையா ? மற்றவர்களையும் இந்துக்களாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்ற ஒரு ஆணை, வேண்டுகோள் பிறப்பிக்கப்படுகிறது என்றால், அது எங்கே கொண்டு போய் நிற்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உங்கள் கிராமத்தில் ஒரு சில கிறித்துவர்கள், முஸ்லீம்கள் உள்ளார்களா ? அவர்களையும் இந்துக்களாக மாற்ற அனுவிரதமும் சிந்தி. எந்த முறையைக் கையாண்டும் அவர்களை இந்துவாக மாற்றி விடு. என்ற வகையில் வெளியிடப்படும் பத்திரிகையை தடை செய்ய வேண்டாமா ? அதைப் போலவே, கிறிஸ்தவர்கள் எழுதினாலும், முஸ்லீம்கள் எழுதினாலும் அவைகளும் தடுக்கப்பட வேண்டும்.



1982 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

அப்படி தடுக்கப்பட்டால்தான், அவைகளுக்கு அணை போட்டால்தான், காலம் காலமாக இந்திய நாட்டிலே உள்ள பல மாநிலங்களிலே கட்டிக் காத்து வருகின்ற ஒற்றுமை உணர்ச்சியை, நம்முடைய தமிழகத்திலும் கட்டிக் காக்க முடியும் என்பதை நான் இங்கே அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி பிரச்சினையைப் பொறுத்தவரையில், கழகத்தின் அணுகு முறை என்ன என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதனால் தான், அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே கூட, நான் ஊரிலே இல்லாவிட்டாலும் கூட, அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைத்தார்கள் என்று. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், கன்னியாகுமரியில் சங்கரலிங்கம், எம்.எல்.சி.யும் இரத்தினராஜ், எம்.எல்.ஏவும், பல கட்சிகளோடு சேர்ந்து ஒத்துழைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒத்துழைத்தார்கள்., உறுதுணையாக இருந்தார்கள், நல்ல யோசனைகளைத் தெரிவித்தார்கள் என்று முதலமைச்சர் அவர்களே இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. ஒரு நாள் முதலமைச்சர் கன்னியாகுமரி சென்று இருந்தபோது, நானும், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சங்கரய்யா அவர்களும், பேராசிரியர் அவர்களும், அருமை நண்பர் நெடுமாறன் அவர்களும், கலந்து பேசினோம். கலந்து பேசி, நாமும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஒரு வேண்டுகோள் விட்டால் என்ன என்று எண்ணினோம். அப்படிப்பட்ட வேண்டுகோள் அந்த நேரத்தில் முதலமைச்சர் போயிருப்பதால், அது பயன்படவில்லை என்ற அளவுக்கு நம் வேண்டுகோள் ஆகிவிடுமோ என்று கூட சிந்தித்தோம். அப்படி சிந்தித்ததற்குப்பிறகு, முதலமைச்சர் சென்று வந்த பிறகு, அதை பாராட்டி விட்டு, இந்த வேண்டுகோள் விடலாமா என்ற கருத்து என்னால் அறிவிக்கப்பட்டது என்பதை நண்பர்கள் ஒத்துக் கொள்வார்கள். அப்படி அறிவித்த கருத்தை ஏற்றுக் கொண்டு, அறிக்கை வெளியிட்டோம். இந்த அளவிற்கு கன்னியாகுமரி பிரச்சினையில் அரசோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், என்ன ஆனால் ? அந்த ஆனாலை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும். தூத்துக்குடியில் ஒரு பொதுக் கூட்டம் நடக்கிறது. அந்தப் பொதுக் கூட்டத்தில் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர், என்னுடைய அருமை நண்பர், ஆர். எம். விரப்பன் பேசுகிறார். 21–3–1982 மாலை முரசில் கொட்டை எழுத்தில் வருகிறது. என்ன சொல்லுகிறார் ? இந்து மதத் தலைவர்களும், கிறித்துவ பாதிரியார்களும், முஸ்லீம் தலைவர்களும் எம். ஜி. ஆர். ஐ-ப் பாராட்டுகிறார்கள். யார் மறுத்தார்கள் ? பாராட்டட்டும். இந்த நிலையில், இந்

மதத்திற்குள் கருணாநிதி புகுந்து, குழப்புகிறார், அமைதியாக இருக்கும் தமிழ்நாட்டில் கருணாநிதி மதக் கலவரத்தைத் தூண்டி விடுகிறார் என்ற இந்த நிலையில் தான் கன்னியாகுமரி மக்கள் மீது கலகம் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு கருணாநிதி தான் காரணம். இந்துக்களிடையே கருணாநிதி விஷ வித்துக் களைத் தூவி விடுகிறார். இது நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் சிந்தும் முத்துக்கள். தூத்துக்குடி அல்லவா ? எனவே, இத்தகைய முத்துக்களை அவர் அங்கே சிந்தியிருக்கிறார்.

இங்கேதான் அவர் இந்து மதத்தின் வெறித் தன்மையை தூண்டி விடுகிறார். இன்னும் சொல்லப் போனால், நான் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் மாணவன். அவர்கள் வழியிலே வந்தவன் என்ற முறையில், என்னை இந்துவா என்ற கேள்வி கேட்டு, அதற்கு விடையளிக்கின்ற நேரத்தில், நான் இந்தியன், ஆனால் தமிழன் என்ற அளவிற்கு சொல்லு கிறவன் நான். நான் மதத்தால் யாரையும் சேர்ந்தவன் அல்ல, மனிதர்கள் என்ற அளவில் நான் ஒரு மனிதன். என்னைப் பார்த்து, நான் இந்து மதத்தைத் தூண்டி விடுகிறேன், இந்து சமயத்தைத் தூண்டிவிடுகிறேன் என்று சொல்கிறார். தமிழ் நாட்டில் கிறித்துவர்களானாலும், முஸ்லீம்களானாலும், எந்தச் சிறுபான்மை சமுதாயத்தினரானாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை உடைய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த என்னைப் பார்த்து, நான் இந்து மதத் தலைவர்களைத் தூண்டி விடுகிறேன் என்று அறநிலையத் துறை அமைச்சர் பேசுகிறார் என்றால், என்ன ஆவது ? ஆனால், உண்மையில் இந்து மதப் பிரச்சாரத்தை செய்து கொண்டிருப்பவர் யார் ? முதல் அமைச்சர் மற்றவர்களுக்கு எல்லாம் புத்தி சொல்வதை விட்டு விட்டு தன்னுடைய அமைச்சர் அறநிலையத் துறை அமைச்சருக்குச் சொல்லி வைக்க வேண்டும், கொஞ்ச நாள் மதப் பிரச்சாரத்தை நிறுத்தி வையுங்கள் என்று முதலமைச்சர் அவருடைய அமைச்சருக்குச் சொல்லி வைக்க வேண்டும்.

(முற்பகல் 10.40)

நம்முடைய நண்பர் திரு. நெடுமாறன் அவர்களுடைய தந்தையார் வெளியிட்ட திரு. பழனியப்பன் அவர்கள் எழுதிய 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சைவ சித்தாந்த விளக்க நூல் வெளியீட்டு விழா மதுரையில் நடைபெறுகிறது. செய்தி 16—3—1982 தினமணியில் வந்திருக்கிறது. அதிலே பேசுகிறார் மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீரப்பன். இங்கே ஒரு நாள் நடைபெற்ற விவாதத்தில் நல்வினை, தீவினை பற்றி நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு பன்ருட்டி ராமச்சந் திரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உடனே நம்முடைய



உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கேட்டார்கள், நல்வினை தீவினை என்கிறீர்களே உங்களுக்கு ஆண்டவனிடத் திலே நம்பிக்கை உள்ளதா என்று. உடனே அமைச்சர் ராமச் சந்திரன் ஒரு மகிழ்ச்சியான பதிலைச் சொன்னார். நான் வினை என்று சொல்வது தொழிலைத்தான் குறிப்பிடும், நீங்கள் தவறாக எண்ணாதீர்கள், செயலைத்தான் குறிப்பிடும். எனக்கு ஆண்டவனிடத்திலே நம்பிக்கை இல்லை என்று சொன்னார். ஆனால் ஆண்டவனிடத்திலே நம்பிக்கை இல்லாதவர்களைப்பற்றி அமைச்சர் வீரப்பன் மதுரையிலே சொல்லியிருக்கிறார், ஆண்ட வனை நினைக்கவில்லை என்றால் மனிதன் மிருகமாவான், பாவி யாக, காமுகனாக மாறுவான், காட்டுமிராண்டியை விட மோச மாக நடந்து கொள்வான் என்று. அவ்வளவுதான், நான் வேறு எதுவும் அதுபற்றி சொல்வதற்கு இல்லை.

பிறகு இந்து மதப்பிரச்சாரத்தை நான் செய்கிறேன், இந்து மதக்காரர்களை நான் தூண்டி விடுகிறேன் என்று சொல்கிற மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புவது, அதே விழாவில் அவர் சொல்லியிருக்கிறார், காஞ்சி காமகோடி பீடாதிபதி சின்ன சங்கராச்சாரியாரை உட்கார வைத்துக் கொண்டு, சின்னவாளை வைத்துக் கொண்டு பேசி இருக்கிறார், பள்ளிகளில் எப்படி பாடத்தை வைக்கலாம் என்று ஸ்ரீகாஞ்சி சுவாமிகள் விளக்கி வழிக்காட்டக் கேட்டுக் கொள்கிறேன் என்று. நாவலர் அவர் களே, எஸ்.டி.எஸ். அவர்களே, ஏன் , மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களே எல்லோரையும் கேட்கிறேன். பெரியாரை வழி கேட்ட நாம், அண்ணாவை வழி கேட்ட நாம் பள்ளிக் கூடங்களில் எப்படிப்பட்ட பாடத்தை வைக்கலாம் என்பதை காஞ்சி காம கோடி பீடாதிபதி விளக்கி எங்களுக்கு வழி காட்ட வேண்டு மென்று அவர் கேட்க, அவர் வழி காட்டியிருக்கிறார், என்ன தெரியுமா வழி ? இந்தியா மதச் சார்பற்ற நாடு என்று கூறு கிறோம். இந்தியா மதச்சார்பற்ற நாடு என்ற அந்தக் கொள்கை யால் இந்து மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எல்லா மக்களுடைய வாக்குகளையும் பெற்றுத்தான் ஆட்சிக்கு வருகி றோம் என்பதை ஆட்சி செய்கிறவர்கள் மறக்கக் கூடாது. நாடு அழியவிடக் கூடாது. அடுத்தவர் அழிய வேண்டும் என்று நினைப்பது தவறு. நாம் அனைவரும் நன்றாக வாழ வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. இந்து சமயத்தையும் இந்தியா வையும் காக்க, நாம் பாடுபட வேண்டும்.

நான் கேட்கிறேன், இந்துக்களைத் தூண்டி விடுவது கருணா நிதியா அல்லது காஞ்சி காமகோடி பீடாதிபதியா ? இதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். கன்னியாகுமரி விவகாரத்தில் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதிலே கவலை கொண்டுள்ள கழகத்தை எப்படியாவது புழுதிவாரித் தூற்ற வேண்டும் என்ற அளவுக்கு அமைச்சரவையிலே இருக்கின்ற சிலர்

ஈடுபடுவது தவறு, அது அமைதிக்கு பங்கம் விளைவிக்குமே தவிர அமைதியான சூழ்நிலையை உருவாக்காது என்பதைக் கூறி இந்த மானியக் கோரிக்கையிலே கருத்துக்களை எடுத்து வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது இங்கே பேசிய அத்துணை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் முதலில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் எத்தனையோ முறை, நான் வெறும் எம்.எல்.ஏ. வாக இருந்த போதும், பிறகு எதிர்க் கட்சியிலே ஒரு நாள் ஆக இருந்தாலும், அந்த அனுபவத்தை பெற்றிருந்தபோதும் முதலமைச்சர் என்ற காரணத்தால் அந்தப் பொறுப்பை முதல் முறை இந்த மாமன்றத்திலே இந்தக் கோரிக்கையை வைத்தபோதும், அதற்குப் பிறகு மீண்டும் தமிழக மக்களுடைய ஆதரவோடு ஆட்சிக்கு வந்து இந்தப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புத் தந்திருக்கின்ற சூழ்நிலையில் இங்கே இந்த வாய்ப்பை நான் பெற்றிருக்கின்ற நேரத்திலே இப்போதும், நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற விவாதங்கள் என்று வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை உன்னிப்பாக நான் கவனித்தேன் என்பதும், நான் நேரடியாக இங்கே வர முடியாத நிலையில் புளூ ஜுரத்திற்கு நான் ஆட்பட்ட போதும் கூட தொலை பேசி மூலமாக இங்கே பேசப்பட்டவைகளை நான் கேட்டுக் கொண்டே இருந்தேன் என்பதையும் குறிப்பிட்டு எத்தனையோ முறை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கலைஞர் என்று என்னால், எல்லோராலும் வாழ்த்திபாராட்டிய நேரத்தில் என்னை பற்றியோ, நான் எங்கே இருந்தேனோ அந்த இடத்தைப் பற்றியோ ஏதாவது ஒரு நல்ல காரியத்திலே பாராட்டி பேசியிருந்தாலும் அதைவிட இன்றயைதினம் அவர் தொடக்கத்திலே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை பாராட்ட முடியவில்லை என்றாலும், இன்னொரு செயலில் நாங்கள் எங்கள் கடமையை சுத்தமாக, துரிதமாக, பொறுப்புணர்வோடு செய்கிறோம் என்ற அளவிலே பாராட்டியதற்கு நான் உண்மையிலே நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இதைப்போல பல்வேறு வகைகளிலே இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் இந்த காவல்துறை மானியத்தைப் பற்றி பேசுகிறபோது சில செயல்களை பற்றி பாராட்டியிருக்கிறார்கள். ஆட்சிக் கட்சியிலே பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவதும், தேவையை வெளிப்படுத்துவதும், அவர்களுடைய உரிமை என்றாலும் கூட சில பொறுப்புகளை அவர்கள் ஏற்றிருக்கிற காரணத்தாலே, ஒருவேளை எதிர்க் கட்சியிலே இருப்பவர்களைப் போல வேகமாக அல்லது தாக்குகிறார்களே என்கிற அளவிற்கு கூட கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும், அதே கருத்துக்களை ஒருவேளை



ஆட்சிக்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் அந்த அளவிற்கு எடுத்துச் சொல்ல முடியாது என்கிற நிலைமையை நான் முதலிலே குறிப்பிட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலே எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் முதலிலே அரசினுடைய சார்பிலே நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் தொடக்கத்திலே ஆட்சிக்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும் போது அவர்கள் ஆட்சியிலே இருந்த போது என்னென்னசெய்தார்கள் என்பதையும், காவல்துறை பற்றி கண்டிக்க வேண்டும் குற்றத்தை சுமத்த வேண்டுமென்ற நோக்கம் இல்லை என்றாலும் கூட தவறுகள் நேர்கின்றன, குற்றங்கள் நடைபெறுகின்றன, அவைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்ற என் கருத்துக்களை வெளியிடுகிறேன் என்று சொல்லி அவர்கள் சில பல கருத்துக்களை, நிதானத்தோடும், வார்த்தைகளை அளந்தும், யார் மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற அடிப்படை நோக்கத்தோடும், ஆனால் தனக்கு தெரிந்த உண்மைகளை வெளியிட வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு, எங்களுக்கு தங்கள் அனுபவத்திலேயிருந்து கிடைத்த கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நடைமுறையிலே எதெல்லாம் நடக்கக்கூடாது என்று விரும்புகிறாரோ அவைகளைச் சொன்னார்கள். சில இடங்களிலே குறிப்பிடுகிற போது எச்சரிக்கை செய்கிறோம் என்ற வகையிலே, முன் அனுபவத்திற்குச் சொந்தக்காரர்கள் என்றவகையிலே அந்த வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தினார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்திலே முதலில் குறிப்பிட்டு விட்டு பிறகு யார் யார் இங்கே எந்தெந்த குற்றச்சாட்டுகளை கூறியிருக்கிறார்களோ, அவர்களுக்கு என்னிடத்திலே இருக்கிற குறிப்புகளை பதிலாக தருவது என்னுடைய கடமை என்று நிச்சயமாகக் கருதுகிறேன். இதை ஒரு நீதிமன்றம் ஆக்க வேண்டுமென்று விரும்பாவிட்டலும்—நீதிபதிகளும் மனிதர்கள் தான், குற்றம் செய்பவர்களும் மனிதர்கள் தான், அழைத்துச் செல்கிற காவலர்களும் மனிதர்கள் தான் என்கிற வகையிலே நாம் அனைவரும் மனிதர்கள் என்கிற போது, சிலசமயம் நீதிபதிகளுடைய தீர்ப்பை போல நாம் சில உண்மைகளை உணர்ந்து வெளியே சொல்ல முடியாவிட்டாலும்கூட தேவையில்லை என்று இருந்தாலும் கூட, ஒரு முடிவிற்கு வருவதற்கு உள்ளத்திற்கு திருப்தி தருகிற, நிறைவேற்றிக் கொள்கிற அளவிற்கு அதை உருவாக்குகிற உரிமை என்ற வகையிலே நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 27

(முற்பகல் 10-50)

காவல் துறையில் பணியாற்றுகின்றவர்கள் எங்கிருந்து அந்தப் பணிக்கு வருகின்றார்கள் என்பதை நாம் முதலில் கவனித்தாக வேண்டும். இதே சமுதாயத்தில், நம்மைப் போன்ற சமுதாய மக்களிலிருந்து, அவர்கள் அந்தப் பணிக்கு வருகின்றார்கள். அமரர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தச் சமுதாயத்திலிருந்துதான் அந்தக் காவலர்கள் என்ற பணிக்கு வருகின்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதையும் அதே நேரத்தில், கடமையாற்றுவதில், யார், யாருக்கு, எந்த, எந்தப் பொறுப்பு இருக்கிறதோ, அதை வகிக்கின்ற பல்வேறு குடும்பங்களிலிருந்துதான் அந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள், இன்றையதினம் பணியாற்றுகின்றவர்கள் வருகின்றார்கள், பணியாற்றுகின்றார்கள் என்பதையும் அமரர் அண்ணா அவர்கள் ஒரு தடவை இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டதை நான் எடுத்துச் சொல்லி, நினைவுபடுத்திக் கொண்டு, காவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாட்டினை, செயல் முறையில், அல்லது தொழில் முறையில், முதலில் எடுத்துக் கூறவேண்டியது எனது தவிர்க்க முடியாத கடமை என்று நான் கருதுகின்றேன்.

காவல் துறை பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கிற துறை. அதை நிறைவேற்றுகின்றவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எத்தகைய பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எப்படிச் செய்ய வேண்டியவர்களாக, செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் நான் குறிப்பிடுவதில் விடுபட்ட, ஏதாவது, வேறு பல குறிப்புகள் இருக்குமானால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களே நினைவுப்படுத்திக் கொள்ளலாம், நினைவுபடுத்தவும் செய்யலாம். அவர்களுடைய முதல் உரிமை, பொறுப்பு, இந்த நாட்டில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு ஒரு தொழிலுக்குச் சொந்தகாரனாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை வைத்துப் பார்த்தால் அந்தத் தொழில் செய்யும் உரிமையை, யாரும் தடை செய்யாமல் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பைக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. காவலர்கள் அந்தப் பணியோடு நின்றுவிட்டால் அந்தப் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. அந்தத் தொழிலாளர்கள் எங்கே போய் வேலை செய்கின்றார்களோ, அந்தத் தொழிற்கூடத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது. மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டுமென்று நாம் சொல்கின்றோமே, அமைதியான சூழ்நிலை, அச்சமற்ற சூழ்நிலை, எந்த விபத்தும் அநியாயமாகக் குற்றம் செய்யும் உணர்வோடு ஏற்பட்டு



1982 மார்ச் 27] திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

விடக்கூடாது என்று நாம் கூறுகின்றோமே, அந்தப் பொது மக்களுடைய வாழ்க்கையில், அவர்கள் வீட்டிலிருந்தாலும் சரி, வெளியே போனாலும் சரி, வெளியே போய் திரும்ப வரும் போதும் சரி, போகும்போதும் சரி, அவர்களுடைய உயிரை, அவர்களுடைய வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காவலர்களுக்கு இருக்கிறது. வீட்டிலே அவர்கள் இல்லாத நேரத்தில் ஏதாவது களவு நடக்குமானால் அதையும் கண்டு பிடித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டியவர்கள், அப்படிப்பட்ட குற்றங்களே நிகழாமல் தடுக்க வேண்டிய நிலையில் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேபோல் மக்கள் பயணம் செய்கின்ற வண்டிகளுக்கு வன்முறையாளர்களால் ஆபத்துக்கள் ஏற்படாதவாறு அவர்கள் பாதுகாப்புத் தந்தாக வேண்டும்.

அதேபோல் பயணம் செய்கின்ற அந்த வண்டிகளுக்கு, அது போன்ற .வாகனங்களுக்கு எந்த விபத்தும் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அந்தக் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இங்கே குறிப்பிட்டார்களே, மதச் சண்டைகள், கோயில்களை எரித்தல், சிலைகள் களவு போதல், இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்தால் கோயிலை இடிக்காமலும் பாதுகாத்தாகவேண்டும் ; கோயில் சிலைகளையும் காப்பாற்றியாக வேண்டும் ; வழிபாடு நடத்துகின்றவர்களுக்கும், அவர்களுடைய கடமையைச் செய்யப் பாதுகாப்புத் தந்தாக வேண்டும் ; கடவுளே இல்லை என்று சொல்லி அவர்கள் தங்கள் பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள் என்றால் அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டும்.

இப்படி அனைத்து மத சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளிலும் அவர்கள் பாதுகாப்புத் தந்தாக வேண்டியிருக்கிறது. அத்தகைய பொறுப்புக்கள் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இதிலே ஒரே ஜாதியைச் சேர்ந்நவர்கள், அதாவது மதத்தைச் சேர்ந்தவர்களிலே ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும்கூட, அவர்களிலே பல பிரிவுகள் ; கடவுளுடைய பல்லக்கை யார் தூக்கிச் செல்வது என்பதிலேகூட போட்டி ; யார் முதலில் வடத்தைப் பிடிப்பது என்பதிலே போட்டி ; யார் முதலிலே போய் வழிபாடு நடத்துவது என்பதிலே போட்டி. இந்தப் போராட்டங்களைக் கூட தடுக்கவும், தவிர்க்கவும் வேண்டிய பொறுப்பைக் காவலர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 மார்ச் 27

கன்னியாகுமரியைப் பற்றிச் சொன்னார்களே, வேறு பலயிடங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். பின்னால் அவைகளுக்கு விரிவாக, விளக்கமாகப் பதில் சொல்ல இருக்கிறேன். அப்படிப்பட்ட முறையில் அந்தப் போராட்டங்கள் நிகழாமல்—எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியதைப்போல ஏன் முன்பே அவர்கள் எச்சரிக்கையாக இருந்திருக்கக்கூடாது, இன்னும் இங்கே வேறு பல உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். தகுந்த நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இது தவிர்க்கப்பட்டிருக்கும்; நடவடிக்கை எடுக்காததுதான் காரணம் என்றார்களே, அது போன்ற நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கள்.

இதற்கப்பால் சவத்தைத் தூக்கிக் கொண்டு போனால்கூட ஏன் இந்தப் பக்கம் கொண்டு வந்தாய், ஏன் அப்படிக் கொண்டு போகவில்லை என்பதற்காகப் போராட்டம். கொலையில் வரையில் போய்ச் சேர்கின்றதே, அப்படிப்பட்டவைகளையும்கூட, இந்தக் காவலர்கள்தான் பொறுப்பேற்றுத் தடுக்க வேண்டியிருக்கிறது; நிறுத்த வேண்டியிருக்கிறது அல்லது வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இங்கே பலர் குறிப்பிட்டார்கள். திருட்டு, கொலை, கொள்ளை, வழிப்பறி இவைகளெல்லாம் எவ்வளவு அதிகமாகி இருக்கின்றன என்றெல்லாம் கூறினார்கள். அதற்கு நான் பின்னால் வருகிறேன். ஆனால் இந்தப் பொறுப்பையும் அதே காவலர்கள்தான் செய்தாக வேண்டும்.

திருட்டு நடக்காமல், திருட்டு நடந்தால் கண்டுபிடித்து, அதிலே பாதி நகைகள் கிடைத்து, பாதி கிடைக்காமல் இருந்தால், அதையும் வாங்கிக் கொடுக்க, இப்படி முழுப் பொறுப்பையும் அந்த வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் இந்தக் காவலர்களாக இருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும்பொழுது இந்தக் கட்சிக்கு ஆதரவாக இருந்து விட்டார் அல்லது இந்தக் கட்சியின்மீது பழி சுமத்தி விட்டார் என்று இரண்டு குற்றச்சாட்டுகளும் வந்தால் அதையும் தாங்கிக் கொண்டு, அவருக்கு எப்படி சாட்சிகள் கிடைக்கின்றனவோ அதற்கேற்றவாறு இந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் தாங்கிக் கொண்டு அந்தப் பணிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பிலே காவலர்கள் இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வழக்கு மன்றத்தின் தீர்ப்பு எப்படி வழங்கப்படுகிறது என்பது அந்தந்த நீதிபதிகளுடைய மனத்திற்கு எது நியாயம் என்று தெரிகிறதோ, ஆதாரத்தோடு தெரிகிறதோ அப்படி அவர்கள் தீர்ப்புச் சொல்லுகிறார்கள்.



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

அந்த நீதிபதிகள் ஒரு வேளை காவல் துறைக்கு எதிராகத்தீர்ப்புச் சொல்லிவிட்டாலும் கூட அல்லது குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, கண்டு பிடித்தால் அந்தக் குற்றவாளியினுடைய உறவினர்களோ அல்லது அந்தக் குற்றவாளி, இப்படிப்பட்டவர்களால், அந்த நீதிபதிகளுக்கு எந்த ஆபத்தும், தொல்லையும் ஏற்படாமல் காப்பாற்றுகின்ற பொறுப்பும் இந்தக் காவலர்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00).

அடுத்து, வங்கியிலே இப்போது விதவிதமாக களவுகள், நடைபெறுகின்றன. டெல்லியிலே ஒரு வங்கியிலே நடந்ததாகக் கேள்விப்பட்டோம். 10 நிமிடங்கள்கூட இல்லை அதற்குள் 10 இலட்சம் ரூபாய் கொள்ளை அடித்துச் சென்றுவிட்டார்கள் என்றெல்லாம் செய்திகளைப் பார்க்கின்றோம். அப்படிப்பட்டவைகள் கூட இங்கே சில வங்கியிலே நடந்தது என்பதை நான் குறிப்பிடும்போது, அதையும் இவர்கள் காப்பாற்றியாக வேண்டும் இதற்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பாதுகாப்பு கொடுக்க முடியாத நிலைமையில் அவ்வளவு காவல்துறையினர் இல்லையென்று முன்னாள் முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் சொல்கிறபோது அதற்காகத்தான் நான் விளக்கம் சொல்ல வருகிறேன். இப்படியிருந்தாலும்கூட களவும் நடந்த பிறகு, கண்டுபிடித்து தண்டிக்க வேண்டிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கித்தர வேண்டிய பொறுப்பும் இந்தக் காவலர்களுக்கு இருக்கிறது.

அதைப்போலவே, பெரிய பெரிய நட்சத்திர, 5, 3 நட்சத்திரம் என்றெல்லாம் உணவு விடுதிகள் நடைபெறுகின்றன என்னென்ன தவறுகள் அங்கே நடைபெறுகின்றனவோ, என்னவெல்லாம் நடைபெறுகின்றனவோ, நமக்குப் புரியாது, ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அங்கே நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல், யாரோ ஒருவரைப் பார்க்கச் சென்றபோது அங்கே இருந்தவர்கள் பார்க்க அனுமதிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குறைகள், தவறுகள், நடக்குமானால், அதைத் தடுத்தாக வேண்டும். அப்படி நடைபெறாமல் அவர்களை எச்சரித்து, அதைக் கடைப்பிடித்தாக வேண்டும். இல்லை அது நடந்து விட்டால், அதைக் கண்டுபிடித்து ஆகவேண்டும். கண்டுபிடிப்பதிலே நான் முன்பு சொன்னதுபோல், மக்களுடைய எண்ணத்திற்கு மாறகாத் தீர்ப்பு இருந்துவிட்டால், அந்தக் காவலர்கள், அந்த தவறை செய்து யாருக்காக இந்தத் தீர்ப்பு வழங்கப்படும்படியான சூழ்நிலையை உருவாக்கினார்களோ, அந்தச் சந்தேகத்திற்கும், அந்தக் குற்றச்சாட்டிற்கும்கூட ஆளாக வேண்டியவர்களாக இந்தக் காவலர்கள் இருக்கின்றார்கள்.

(திரு எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 மார்ச் 27

இதுபோக, மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் வியாபாரிகள், பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் அவர்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தர வேண்டியிருக்கின்றது. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் எது என்று அரசு நினைத்து இருக்கிறதோ, அது கிடைக்காதபோது அதைக் கிடைக்கும்படிச் செய்யவேண்டிய பொறுப்பு இந்தக் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வழக்கு நடைபெற வேண்டும், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும் அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு நீதிமன்றத்திலே நல்ல தீர்ப்புகிடைப்பதற்கு வழிசெய்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, ஜாதி மத நம்பிக்கை உள்ளவர்களிடையே பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும். இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவர் காவல்துறையிலே இருக்கிறார். கன்னியாகுமரியில் நடந்த போராட்டத்தின் போது நடைபெறுகிறது. அவர் அங்கேயிருந்து பணியாற்றும்போது எது நியாயம் என்று அவர் நம்பி நடவடிக்கை எடுத்தாரோ, அது கிருஸ்தவ மதத்திற்கு சாதகமாக அமைந்ததில் அவர் மதச் சார்புள்ளவராக ஆகிவிடுகிறார். இல்லையானால் மதத் துரோகியாகிவிடுகிறார். இந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இந்தக் காவலர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

அதுபோக, இன்றையதினம் இங்கே நாமெல்லாம் அமர்ந்து மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, மக்களுக்காகப் பேசிக் கொண்டு இருக்கிறோமே அந்தப் பொறுப்பிற்கு ஆளாகியிருக்கிற நாம் எந்தெந்த அரசியல் கட்சிகளில் இருக்கின்றோமோ அந்தந்த அரசியல் கட்சிகளுக்கும் பாதுகாப்பு தரவேண்டிய பொறுப்பும் அவர்கள் கையிலே இருக்கிறது. அரசியல்வாதிகளுக்கும், பாதுகாப்புத் தரவேண்டும். கட்சிகளுக்குப் பாதுகாப்பு என்றால், அதிலே சேர்ந்திருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு இல்லையா என்று கேட்கலாம். அரசியல் கட்சிகள் ஒட்டுமொத்தமாக செயல்படுவதற்கும், தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் அல்லது அதிலே பணியாற்றுகின்ற அடுத்த தலைவர்கள் அல்லது தொண்டர்கள் இவர்களுக்கெல்லாம் தனிப்பட்ட முறையிலே பாதுகாப்பை இந்தக் காவலர்கள் தான் தரவேண்டி இருக்கின்றது.

ஒரு அரசியல் கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு பாதுகாப்புத் தரவேண்டியிருக்கிறது. ஒரு கட்சி இன்னொரு கட்சியைத் தாக்குகிறது என்றால் அதை அவர்கள் குறுக்கே இருந்து இரண்டு பக்கத்திலே இருந்து வருகிற சோடா பாட்டில் ஆனாலும் சரி, கற்களானாலும் சரி அல்லது வேறு எந்த ஆயுதம்



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்

பரிமாறிக் கொள்ளப்பட்டாலும் சரி இடையிலே இருந்து அவர்கள் தடுத்து நடைபெறாமல் காவல் காக்கின்ற பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல, அதற்குப் பிறகும் யார் சார்பில் இந்தக்
காவலர்கள் அங்கே செயல்பட்டார்கள் என்பதைப்பற்றிக்கூட
சந்தேகம் ஏற்பட்டுவிடுமானால் அதற்கும் பொறுப்பேற்க
வேண்டியவர்கள் இந்த காவலர்கள்தான்.

இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு
அரசியல் கட்சியிலிருந்து இன்னொரு அரசியல் கட்சிக்கு யாராவது
மாறிவிட்டார் என்றால் அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க
வேண்டியிருக்கின்றது. அதையும் இவர்கள் தான் செய்தாக
வேண்டும். இந்தக் காவலர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும்.
இல்லையென்றால் ஆபத்து ஏற்படுகிறது, தாக்குதல் நடக்கிறது
என்றால் அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நீதிமன்றத்
திற்குக் கொண்டு போய் நிறுத்த வேண்டிய பொறுப்பும் இவர்
களுக்கு இருக்கிறது.

இப்படி எல்லாம் போய் அவர்கள் தங்களுடைய கடமை
களைச் செய்கின்றார்களே, அவர்களுக்கு பாதுகாப்பு யார்
என்றால் தாங்களேதான். அவர்கள் தங்களைத் தாங்கள் பாது
காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே தவிர, வேறு பாதுகாப்பு
என்று சொல்லிக் கொள்ள, வேறு ஏதாவது ஒரு வகையில்
மத்திய அரசில் கோரி அல்லது இராணுவம் இதை எல்லாம்
அழைத்து, வேறு ஏதாவது பாதுகாப்பு வந்தால்தான் அவர்களுக்கு
பாதுகாப்பே தவிர இல்லாவிட்டால் இங்கே நடைபெறுகின்ற
நிகழ்ச்சிகளுக்கிடையில் அந்தத் தாக்குதலை எல்லாம் தாங்கிக்
கொள்ள வேண்டியவர்கள் பின்னால் என்ன பழி சுமத்தினாலும்
அந்த நேரத்தில் என்ன நடைபெறுகிறதோ அந்த ஆபத்தையும்
தாங்கிக்கொள்ள வேண்டியவர்கள் இதே காவலர்களாகத்
தான் இருக்கிறார்கள்.

தாய்குலத்திற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. அது
இப்போதெல்லாம் குழந்தைகள் காணாமல் போவது, பெண்கள்
காணாமல் போவது, இளைஞர்கள் காணாமல் போவது, முதி
யோர்கள் காணாமல் போவது — இப்படியெல்லாம் காணோம்,
காணோம் என்று பட்டியலை நாம் படித்து படித்து, கடைசியில்
கேட்கும்பொழுது சொந்தக்காரர்கள் வீட்டுக்கு கோபித்துக்
கொண்டு போனார்கள் அல்லது காதல் கல்யாணம் செய்து
கொண்டு போனார்கள் அல்லது பள்ளிக்கூடத்தில் தேர்விலே
வெற்றிபெறவில்லை; ஆகவே கோபித்துக்கொண்டு போனார்
கள், திரும்ப அழைக்கிறோம் என்றெல்லாம் வந்து, பிறகு
அந்தச் செய்தி வரும்போது எந்த அளவுக்கு முக்கியத்துவம்
கொடுத்து அல்லது பயங்கரமாகச் சொல்லப்படுகிறதோ அதற்கு
நேர் மாறாக நிலைமை மாறும்போது முதலில் அந்தச் செய்தி

வந்தவுடனே என்ன காவல் துறை, குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போய்வர முடியவில்லை, காப்பாற்ற முடியவில்லையே என்ற வகையில், பெண்கள் வெளியே போக முடியவில்லையே. முடிந்தாலும் கூட, முடியவில்லையே என்று குற்றச்சாட்டுச் சுமத்துவது, அதையும் தாங்க வேண்டிய நிலையில் இந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்குமேல் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பெண்ணை, ஒரு ஆணை—இளைஞர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த இளைஞன் எந்தத் தவறும் செய்துவிடாமல், எந்தத் தவறுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல் அவனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காவலர்களுக்கு இருக்கிறது. அதுபோல் பெண்களும் தவறு செய்துவிடாமல் அவர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காவலர்களுக்கு இருக்கிறது. காதலர்கள் என்றும் தவறு செய்துவிடக் கூடாது. சில நேரங்களில் பதிவுத் திருமணம் செய்துகொள்ள போக வேண்டிய இடம் வேறு இடமாக இருக்க, காவல் நிலையத்திலேயே பதிவுத் திருமணம் நடைபெறுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். இதையும் அவர்கள் நடத்தி ஆகவேண்டும். இந்தப் பொறுப்பையும் கூட அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. சரி ஏதோ வெளியே தெரியாமல் தவறு செய்துவிட்டார்கள் காதலர்கள். வந்து வாழ்கிறார்களா என்றால், தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்றால் அதற்கும் பதில் சொல்லியாக வேண்டும். ஒரு ஆண், பெண் காதல் செய்து, கலியாணம் செய்துகொண்டு வாழமுடியவில்லை; அவர்கள் போய் தற்கொலை செய்துகொள்ள வேண்டியிருக்கிறது; காவலர்களால் அவர்களைத் தடுக்க முடியவில்லையே. இது என்ன காவல் துறை, என்ன காவலர்கள்? இதையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தற்கொலை செய்து கொண்டவர்களைப் பற்றியும் விசாரித்து, ஏன் தற்கொலை செய்து கொண்டார்கள் என்பதற்கான காரணத்தையும் கண்டுபிடிக்கும் ஒரு பெரிய வேலை அவர்களுக்கு இருக்கிறது. காதலித்தார்கள், திருமணத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை என்கிற செய்திகள் வெளியே வருகின்றன. தாய் தந்தையர் ஒத்துக் கொள்ளவில்லை, ஆகவே நாங்களே திருமணம் செய்து கொண்டு விட்டோம் என்கிற செய்திகளும் வருகின்றன. அண்மையில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் இந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியதாகவும், பெற்றோர்கள் ஒப்புக்கொள்ள வில்லை என்பதால் இருவரும் ஊட்டிக்குச் சென்று, அங்கேயுள்ள ஏரியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள் என்றும் கேள்விப்பட்டோம்.



அதற்குப் பின்னாலே விசாரணை வருகிறது. அப்படி விசாரணை செய்கிற நேரத்தில், அவர்கள் உண்மையிலேயே தற்கொலை தான் செய்து கொண்டார்களா அல்லது யாராவது விஷம் கொடுத்து அவர்களைக் கொலை செய்து விட்டார்களா அல்லது உண்மையிலேயே இது வேறு வகையிலே கொலை செய்யப்பட்டதா, அல்லது அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதையும் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் காவல் துறையிடத்தில் தான் போய் விழுகிறது.

(முற்பகல் 11-10)

ஆகவே, நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வேன். நான் அந்த இலாகாவை கையிலே வைத்து இருக்கிறேன் என்பதால் அப்படிச் சொல்லவில்லை. எப்போதும் பேசுகிற செய்திதான். இப்போதும் சொல்கிறேன். அவர்களுக்காக வாதாடுகின்றவர்கள் என்பவர்கள் எப்போதும் பேசுகிறார்கள், இப்போதும் இங்கே பேசி இருக்கிறார்கள். இப்போது கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், ஊதியத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இந்தக் காவல் துறையைத் தாக்குவதற்கு ஏதாவது தகுதியுள்ள தலைவன், அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதி அல்லது வேறு ஒரு பொறுப்பிலே இருக்கின்றவர் என்ற தராதரம் கிடையாதா? யார் வேண்டுமானாலும் எதைவேண்டுமானாலும் பேசலாம், எப்போது வேண்டுமானாலும் பேசலாம், அவர்களைக் குறை கூறித் தாக்கலாம் என்கிற பரிதாபகரமான சூழ்நிலை இன்றைக்கு இருக்கின்றது என்பதை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயக் கடமை எனக்கு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

அப்படிப்பட்ட நிலையில் ஏதாவது செய்திகள் வருகிறபோது, விவாதங்கள் வருகிறபோது, காவல் துறையில் இருப்பவர்களைப் பற்றி கடுமையான முறையில் விமர்சிக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து விட்டார்கள். காவல் துறையினர் என்றால் உடனே அராஜகம் காவல் துறையில் என்று சொல்கிறார்கள், போலீஸ் ராஜ்யம், போலீஸ் சர்வாதிகாரம் என்று அந்தப் பட்டங்களையெல்லாம் சூட்டி, அவர்களை அதற்குச் சொந்தக்காரர்களாக்குகிறார்கள். இவ்வளவையும் நாம் புரிந்து கொள்வோம். இத்தனைப் பொறுப்புக்களையும் அவர்கள் செய்கிறார்கள். செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 27

ஆனால் அதே நேரத்தில் இந்த நாட்டில் அமைதியை காப்பாற்றித் தரவேண்டிய மிகப் பெரிய பொறுப்பும் அவர்கள் கையில் தான் இருக்கிறது. இங்கேயுள்ள அரசியல் கட்சிகள் உண்மையிலேயே இந்த நாட்டிலே அமைதி வேண்டும் என்று விரும்பினாலும் கூட அதைச் செயலிலே நடைமுறைப்படுத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு காவல் துறையிடம் தான் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே, இந்த அமைதியைக் கெடுப்பவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் மீது என்ன பழி சுமத்தப்படுகிறது, ஆளும் கட்சிக்குச் சாதகமாக அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். சரி அது தான் போகட்டும். ஆளும் கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உமாநாத் சொன்னது போல், உடனே என்ன சொல்கிறார்கள்? ஆளும் கட்சிக்கே இந்த நிலை என்றால், மாற்றுக் கட்சியின் நிலை என்னவாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்கிறார்கள்.

நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாகள் அந்தக் கருத்தை ஒரு பயங்கரமான செய்தியைச் சொல்வது போல் சொல்லி, ஏதோ ஒரு மன்றத்தைத் தாக்கிவிட்டார்கள் ஆளும் கட்சிக்காரர்கள் என்பதைச் சொல்லி, என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு நான் பின்னால் பதில்சொல்கிறேன். இப்போது பொதுவாக ஒரு கருத்தை நான் சொல்லியாக வேண்டும். யாரையும் ஒழித்துக் கட்டுகிற வேலை இந்த ஆட்சிக்கு இல்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். இருக்கின்ற தேசியத் தலைவர்களை எல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டும் என்று எண்ணுகிறீர்களா என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அவர்கள் அந்த எண்ணத்தோடுதான் கேட்டார்களா என்பது எனக்குத் தெரியாது. பேச்சிலே இருந்து இருக்கும் கருத்து எதுவோ அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர எந்த நோக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் விமர்சனம் செய்ய முடியாது. ஆகவே சொல்கிறேன், அந்த எண்ணம் இந்த ஆளும் கட்சிக்கும் கிடையாது. இந்த அமைச்சரவைக்கும் கிடையாது. இந்த அமைச்சரவை எந்த காவல் துறைக்கும் அப்படிப்பட்ட யோசனையை சொல்லத் தயாராக இல்லை. அப்படி யாராவது செய்ய முயன்றார்களேயானால், அதை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. அதை தடுக்க நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்பதையும், அவர்களுக்கு நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களை நான் ஒன்று கேட்க வேண்டும். சில கொள்கையைப் பற்றி பேசினார்கள். விவசாயிகளைப் பற்றி—என்னென்ன அக்கிரமங்களையெல்லாம் நடத்துகிறார்கள், எப்படியெல்லாம் போய் ஜப்தி செய்கிறார்கள், ஏழைகள் வீட்டு கதவுகளையெல்லாம் பெயர்த்து வந்து விடுகிறார்கள். என்றெல்லாம் சொன்னார்களே—ஒட்டு மொத்தமாக அவைகளுக்கும், விளக்கமாக அந்தந்த நிகழ்ச்சிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்களே அவைகளுக்கும், எல்லாவற்றிற்கும் பதில் சொல்லியிருக்கிறேன் என்றாலும், ஒன்றை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். அதை நான் கேட்கக்கூடிய நேரத்தில், அந்தக் கேள்வியின் தெளிவு என் உள்ளத்திலேயிருந்து வெளிப்படுகிற விதம் இதுதான்.

அவர்களுடைய தலைமை — இந்திரா காங்கிரசினுடைய தலைமை — மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் கேட்பது, எப்படியாவது, ஜப்தி செய்தாவது அவைகளை நீங்கள் வசூலித்தாக வேண்டும். இல்லையென்றால், கறுப்புப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்படும். அப்படி சேர்க்கப்பட்டு விட்டால் எந்த ஒரு பலனையும் மத்திய அரசிடமிருந்து உதவியாக பெறவே முடியாமல் போய்விடும். திட்டங்கள் எல்லாம் அப்படியே நின்றுவிடும் என்று எச்சரிக்கை செய்து எழுதியிருக்கிறார்கள். இது அவருடைய கட்சித் தலைமையின் நிலைமை. அவர்களுக்கும் இது தெரிந்துதான் இருக்க முடியும். அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் தான் இங்கே இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய கட்சித் தலைமைக்கும் ஆட்சி செய்கிறவர்களுக்கும் நிச்சயமாக வேறுபட்ட கருத்து இருக்க முடியாது என்றுதான் நாங்கள் நம்புகிறோம். நீங்களும் நம்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் செய்திகள் தருகிறார்கள். தீர்மானங்கள் போடுகிறார்கள். தமிழகத்தில் ஜப்தி செய்தால் நாங்கள் மறியல் செய்வோம். தர்ணா செய்வோம். எங்களைக் கைது செய்தால் சிறைச்சாலை போகத் தயார் என்கிறார்கள். இது என்ன கொள்கை என்று எனக்குப் புரியவில்லை. மத்திய அரசிலேயிருந்து நீங்கள் அந்தக் கடனை வசூலித்தேயாக வேண்டும்—எப்படியாவது என்று தமிழக அரசுக்கு எழுதுகிறார்கள், அச்சுறுத்துகிறார்கள், எச்சரிக்கை செய்கிறார்கள். உதவிகள் எல்லாம் நிறுத்தப்படும், அந்தக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டால் என்று சொல்கிறார்கள். அப்படி திரும்பத் திரும்ப கடிதங்கள் வருகின்றன. நாடாளுமன்றத்தில் கூட சொல்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போடுகிறார்கள். நீங்கள் அப்படி ஜப்தி செய்ய வந்தால், மறியல் செய்வோம், தடை செய்வோம் என்று சொல்கிறார்கள். இது கட்சியின் கொள்கையா? அல்லது தமிழகத்திற்கென்று இருக்கிற கொள்கையா? அல்லது இந்தியா முழுவதற்கும் இருக்கிற

கொள்கையா அல்லது ஆட்சியாளர்களுக்கு எதிராக—அதாவது தமிழகத்தில் இருக்கிற காங்கிரஸ் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற கொள்கையா? அல்லது அங்கேயிருந்து—தலைமையிடத்திலிருந்து, நீங்கள் அப்படிச் செய்துக் கொள்ளுங்கள் தமிழகத்தில், நாங்கள் இப்படி உத்தரவு போடுகிறோம் என்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? . . . .

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஜப்தி மூலமாகத்தான் கடனை வசூல் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்களா? வசூல் செய்ய வேண்டும் என்று கேட்டிருப்பார்கள். அல்லது வேறு விதமாக கேட்டிருப்பார்கள். நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது — மத்திய அரசாங்கத்தின் கொள்கை வேறு இங்கேயிருக்கக் கூடிய தமிழக காங்கிரசின் கொள்கை வேறா என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியை வைத்தார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தெளிவாகத்தான் இருக்கிறோம். ஆனால் நான் தெளிவாக கேட்க விரும்புவது, மாநில அரசாங்கம், ஏதோ மத்திய அரசாங்கம் சொல்லித்தான் இந்த ஜப்தி நடவடிக்கையில் இறங்கியது போல் சொல்கிறார்களே, மத்திய அரசாங்கம் சொல்லாமல் இருக்குமேயானால், மாநில அரசு ஜப்தி நடவடிக்கையை எடுக்காமல் விட்டு விடுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: என்னால் அதிகமான உரத்த குரலில் பேச முடியவில்லை என்றாலும், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான விளக்கத்தை தந்திருக்கிறார்கள். கடிதத்தையே இங்கு படித்துக் காண்பித்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களுக்குத் தெரியும்.

(முற்பகல் 11-20)

நான் எதற்காக இந்தப் பிரச்சினையைத் தொடங்கினேன் என்றால் இந்தப் பிரச்சினையைப் பற்றி தயவுசெய்து நீங்கள் எல்லாம் அங்கே சொல்லி கொஞ்ச காலம் இந்த ஜப்தி செய்யக்கூடாது என்பதற்கும் இந்த வசூலை எப்படியாவது நிறுத்துவதற்கு நீங்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும், அவர்களை வற்புறுத்தவேண்டும். ஓராண்டு, இரண்டாண்டுக் காலத்திற்கு அதனை வசூலிக்காவிட்டால் இப்படிப்பட்ட கறுப்புப் பட்டியல்களில் சேர்ப்போம் என்ற நிலைமை இல்லாமல் அவர்கள் என்னென்ன உதவிகளைச் செய்து வருகிறார்களோ அதைச் செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்டு அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்றால் நாங்கள் வற்புறுத்தி ஜப்தி செய்து வாங்கவேண்டும் என்ற அவசியம் எங்களுக்கு இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.





திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கம் அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய காரியங் களைச் செய்ய வேண்டும் என்றும், கட்டாயமாக வசூலித் தாக வேண்டும் என்றும் மைய அரசு வற்புறுத்தக்கூடாது என்று கூறினால் இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் அதை ஆதரிப்பார்கள் என்று நான் அவர்கள் சார்பாகவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அப்படிப்பட்ட தீர்மானத்தை தமிழ்நாடு அரசாங்கம் கொண்டு வருமா?

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, எங்களுக்காக நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்கள் வக்காலத்து வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நாங்களே சொல்லிக்கொள்வோம். ஆனால் நான் தெரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால் ''மைய அரசு வற்புறுத்தியதன் காரணத்தால்தான் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்கிறோம்'' என்று திரும்பத் திரும்ப முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானால் மைய அரசு வற்புறுத்தவில்லை என்றால் ஜப்தி போன்ற நடவடிக்கையிலே ஈடுபட மாட்டார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இந்த வசூலை நடைமுறைப் படுத்துகின்றபோது அதிகாரிகள் காவல்துறையினருடன் சென்று ஒவ்வொரு கிராமத்தையும் சூழ்ந்துகொண்டு தாலி முதற்கொண்டு ஜப்தி செய்கிறார்களே, இதையாவது தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒன்றை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அழுத்தம் திருத்தமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மைய அரசு பணத்தைக் கொடுக்கா விட்டாலும் கொடுத்திருக்கின்ற கடனை ஜப்தி செய்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவர்கள் கொடுத்தால் நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்றும் ஒரு வார்த்தை சொன்னால் போதும். மேலும் பெரிய விவசாயிகளிடம் தான் வசூலிக்கவேண்டும் என்பதை நாங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறோம். நீங்கள் காவல்துறையைப் பற்றிச் சொல்கிறீர்கள். ஆனால் இங்கே காவல்துறை தேவைப் படுகின்றது. வசூல் செய்வதற்காக அதிகாரிகள் போகின்ற நேரத்திலே அவர்கள் அடிக்கப்படாமல் இருப்பதற்கும், மண்டை பிளக்கப்படாமல் இருப்பதற்கும், மரங்களிலே கட்டி வைத்து அடிக்கப்படாமல் இருப்பதற்கும், அவமானப்படுத்தப் படாமல் இருப்பதற்கும் இவைகளை எல்லாம் செய்யாமல் இருப்பதற்காகவும் தான் காவல் துறையினர் உடன் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆனால் காவல்துறையினரே உள்ளே சென்று மாடுகளையோ மற்றவைகளையோ இழுத்துக் கொண்டு

போவது கிடையாது. அப்படி இழுத்துக்கொண்டு போவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அதை அனுமதிக்கவும் செய்யாது என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இதுதான் எங்கள் கொள்கை.

ஆனால் இவ்வளவு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற காவல் துறையினருக்கு இருக்கின்ற சங்கடங்களைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். அரசியல் போராட்டங்கள் என்றால் அதை அவர்கள் தடுத்தாக வேண்டியிருக்கின்றது. அதற்கு குறுக்கே நிற்கவேண்டி இருக்கின்றது. தொழிலாளர்கள் போராட்டம் என்றாலும் அதற்கும் அவர்கள் இடையிலே வந்தாக வேண்டும். அவர்களுடைய அண்ணன் தம்பி ஏதாவது ஒரு யூனியனிலோ, சங்கங்களிலோ இருந்தாலும், கூட அதைப்பற்றியும் கூட கவலைப்படாமல் அவர்கள் கடமையைச் செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அதோடு மதப்போராட்டங்கள்—நான் முன்பே சொன்னேன். ஒரு மதத்திலே இருந்தாலும் கூட, அல்லது அங்கே இருந்தாலும் இல்லாவிட்டாலும் மதப்போராட்டங்கள் நடைபெறுவதை அவர்கள் தடுத்தாக வேண்டும். அதைப்போலவே போக்குவரத்து வேலை நிறுத்தம் என்றாலும் அவர்கள் வந்தாக வேண்டும். மக்கள் தங்கள் கடமைகளைச் செய்ய அலுவலகம் முதலியவற்றிற்குப் போகிறார்கள். அவர்கள் அப்படி அலுவலகம் போன்றவைகளுக்குச் சென்று பிறகு வீட்டுக்குத் திரும்புகின்ற வரையிலே போக்குவரத்து வசதிகளிலே எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு வருகின்றது. இப்படி தொழிலாளர்களாக இருந்தால் போராட்டம் வருகின்றது. மாணவர்களாக இருந்தால் போராட்டம் வருகி றது. ஆசிரியர்களாக இருந்தால் போராட்டம் வருகின்றது. இப்படி பல சூழ்நிலைக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் போராட்டம் என்ற நடவடிக்கையிலே ஈடுபட்டால் அங்கே எல்லாம் காவலர்கள் முன் நின்று தாங்கிக்கொள்ளவேண்டி இருக்கின்றது.

இங்கே ஒரு படத்தைக் காண்பித்தார்கள் கல்லை எடுத்து எறிகிறார் என்று. இது கல் தான் என்று இந்தப் படத்திலே இருந்து அவர் எப்படி தெரிந்துகொண்டார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பக்கத்தில் கண்ணீர் புகை வீசி, புகை கவிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில், அவர் அந்தப் பணியைச் செய்யக் கூடாதா? கையில் இருப்பது கல் என்று தான் நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டுமா? கையிலே அந்தக் கண்ணீர் புகை குண்டை வைத்திருக்கக்கூடாதா? இருக்காது என்று நாம் சொல்ல முடியாது; கையிலே இருந்து எறிவது கண்ணீர் புகை குண்டாகவும் இருக்கலாம்......



திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இது கண்ணீர் புகை குண்டு. ஒருவித துப்பாக்கி மூலம் செலுத்தப் படும் குண்டே தவிர, கையினால் எறிவதல்ல. கையினால் எறிவதென்றால், அது கிரானைட் வெடி குண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதைச் சொல்கிறார் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தயவு செய்து இந்த விவாதத்திற்கு நான் ஆதாரத்தோடு பதில் சொல்ல வேண்டும். அதைப் பிறகு சொல்லுகிறேன். நாளை மறுநாள் மானியக் கோரிக்கை இருக்கிறது. ஆகவே அதை தயவுசெய்து, இதிலே கற்பனையிலே இறங்காமல் பின்னால் நான் சொல்லப்போவதை, தெளிவான விளக்கங்களைத் தெரிந்துகொண்டு, அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குமேல் குடிநீர் வசதி, பாதை வசதி, மருத்துவ வசதி, பள்ளிக்கூடம், இவைகள் எல்லாம் கிராமங்களிலே அல்லது ஊர்களிலே செய்ய வேண்டும் அதைச் செய்யாவிட்டால், இந்தப் பக்கத்திலே பேருந்துகளை விட மாட்டோம் என்று தடுத்து நிறுத்துகிறார்கள் என்றால், அதற்கும் இவர்கள்தான் பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும். இப்படி காவல் துறைக்கு இருக்கின்ற மாபெரும் பொறுப்பினையும், இன்னும் பலவற்றையும் பற்றிச் சொல்ல வேண்டுமென்றாலும், இவ்வளவு பொறுப்புகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற காவல் துறைக்கு நாம் எந்த வகையிலே அனுதாபம் காட்டுகிறோம், அக்கறை காட்டுகிறோம் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

புள்ளி விவரங்களை இங்கே சொல்லுகிறார்கள். அதற்குப் பதில் தெளிவாகத் தரவேண்டும். உடனே சொல்ல முடியாது. பதில்களைச் சேகரித்து, அதோடு இணைத்துச் சேர்த்து சொல்ல வேண்டும். ஆகவே, இதையெல்லாம் சொன்னால்கூட, நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காவலர்களை முதலிலே அண்ணா அவர்கள் சொன்னதுபோல், அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? இப்போது 4,000 பேர்களை நியமித்திருக்கிறோம் என்றார்கள். மீதியுள்ளவர்கள் அப்படியே, முன்பே இருந்தவர்கள் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். கொஞ்சம் பேர்களை காவலர்களாகச் சேர்த்திருக்கிறோம். ஏன் அதிகமாகச் சேர்க்கக் கூடாது என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டை ஒத்துக் கொண்டு, வாதத்திற்கு பதில் சொல்வது என்று வைத்துக் கொண்டாலும், ஒன்றைப் பணிவோடு இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். இந்தக் காவலர்கள், இந்த நாடு முழுமையும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது மக்களைச் சார்ந்த அமைப்புகளிலே உள்ளவர்கள், சாதி

உணர்வை சிந்திப்பவர்களாக இருப்பவர்கள், சாதி உணர்வு இல்லை என்றிருப்பவர்கள், இவர்களுடைய ஒத்துழைப்போடு இன்று எவ்வளவு காரியத்தை இவர்களால் செய்துவிட முடியும் என்பதை கணக்குப்போட்டுப் பார்த்து. அதே நேரத்தில் செய்திருப்பவர்களையும் நாம் கருத்தில் கொண்டு, அதை இந்த புள்ளி விவரத்தோடு பார்த்தால் தான், அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் கருது கிறேன்.

(முற்பகல் 11-30)

சில நாட்களுக்கு முன்பு ''இந்து'' வில் ஒரு கட்டுரை வெளிவந்து இருந்தது. அதை இங்கே நான் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குற்றங்கள் அதிகரித்திருப்பதற்கு மக்கள் தொகை பெருக்கம் மட்டுமல்ல. வேலை இல்லாத் திண்டாட்டம் என்று சொல்லியதோடு வேறு பல காரணங் களை எல்லாம் இங்கே சொன்னார்கள். அவைகளை நான் திரும்ப சொல்ல விரும்பவில்லை. கடந்த 7—12—1981 ஆம் தேதியிட்ட ''இந்து'' நாளிதழில் பேராசிரியர் டேவிட் பெயிலி என்ற அமெரிக்க காவல் துறை நிபுணர், ஜப்பான் மற்றும் அமெரிக்க காவல் துறைகளைப் பற்றி இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்கள். இந்தக் கட்டுரையைப் படிக்கிறபோது விஞ்ஞானத்திலே, பொருளாதாரத்திலே மிக முன்னேற்றமடைந்த ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குற்றங்கள் எவ்வளவு அதிகமான அளவுக்கு நிகழ்கின்றன என்று தெரிகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

டோக்கியோவில் தினந்தோறும் சராசரி 2 வழிப்பறி கொள்ளைகள்—இது அதிலே தரப்பட்டிருக்கிறது—இலண்டனிலே 6 கொள்ளைகள், நியூயார்க்கிலே 200 கொள்ளைகள் நடக்கின்றன. ஆனால் சென்னை நகரத்திலே சென்ற ஆண்டு முழுவதற்குமாக கணக்கிட்டுப் பார்த்தால் 85 கொள்ளைகள்தான் நடந்திருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நாகரிகம், விஞ்ஞானத் துறையில் வளர்ச்சி, கண்டுபிடிப்பு களுக்குப் பிறகு என்ன என்ன வசதிகள் வேண்டுமோ அவை யனைத்தும் இருக்கின்றன. இருந்தும் அங்கே நடைபெறு கின்ற நிகழ்ச்சிகளினுடைய புள்ளி விவரத்தையெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்தால் எந்த அளவுக்கு இங்கே இருக்கின்ற காவலர்கள் இந்த வசதியற்ற சூழ்நிலையில் தங்களுடைய கடமைகளை ஆற்றுகிறார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். டோக்கியோவிலே மாதத்திற்கு 60



கொலைகள் ,— ஒட்டுமொத்தமாக நான் சொல்கிறேன். இலண்டனிலே மாதத்திற்கு 150, நியூயார்க்கிலே மாதத்திற்கு 6,000 கொலைகள், சென்னையிலே மாதத்திற்கு 7 கொலைகள (குறுக்கீடு) புள்ளி விவரம் இல்லை.

**திரு. என். சங்கரய்யா:** இருந்தால் சொல்லுங்கள். ஆனால் மாஸ்கோ போன்ற சோஷலிஸ நாடு போன்ற நாடுகளின் அங்கே இருக்கின்ற சமுதாயஅமைப்பு மக்களுக்கு எல்லாருக்கும் வேலை கொடுத்திருப்பதால் அங்கே கொள்ளை அடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

* **டாக்டர் மு. கருணாநிதி :** அது மாத்திரமல்ல, நியூ யார்க்கிலே மாதம் 6,000 கொலைகள் என்று முதலமைச்சா அவர்கள் குறிப்பிட்டார்கள். அமெரிக்காவைப் பொறுதத வரையில் யாரும் உரிமம் பெறாமலேயே, லைசென்ஸ் பெறா மலேயே ரிவால்வர் வைத்துக் கொள்ளலாம் எனற நிலைமை இருக்கிறது. அதைச் சட்டமாகக் கொண்டுவந்து, லைசென்ஸ் பெற வேண்டும் என்ற ஒரு நிலைமை வந்தபோது கூட அங்கே உள்ள முதலாளி வர்க்கம் அரும்பாடுபட்டு செனட் மெம்பர்களையெல்லாம் சந்தித்து அந்தச் சட்டம் நிறைவேறாமலேயே பார்த்துக்கொண்டு, துப்பாக்கி எல்லோரும் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமையை அங்கே உருவாக்கியிருக்கின்றது. ஆனால் எப்போதும் நல்லவைகளை ஒப்பிடவேண்டுமே தவிர, தீயவைகளை ஒப்பிடுவது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர் களே, நல்லவைகளை ஒப்பிடவேண்டும் என்பதை ஏற்றுக்கொள் கிறேன். சில நேரங்களில் நம்மைவிட அறிவில் மிகுநத வர்கள், ஆற்றலில்மிகுந்தவர்கள் விஞ்ஞான வசதிகளை எல்லாம பெற்றிருக்கிறவர்கள் விவர்களாலேயே தடுக்கமுடியாய அள வுக்கு உலகம் முழுமையும் அப்படிப்பட்டவைகளை அவிகமாகக் கொண்டிருக்கிறது என்ற கணக்கை ஏற்றுக்கெண்டால்ான் இ கேயும் எப்டிப அதிகமான இருக்கிறது என்பதை எடுத்துக் கூற உதவிகரமாக இருக்குமே தவிர அங்கே அள்ளவவு செய்கிறார்கள் ஆகவே நாமும் 70 செய்தால் என்ன என்று எண்ணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2!20 கோடி ஜனத்தொகை கொண்ட நியூயார்க் நகரததிலே07 வருடத்திலே 1,739 கொலைகள் நடந்துள்ளன. 10.07 கோடி ஜனத்தொகை கொண்ட ஜப்பான் நாட்டில் 994 கொலைகள் நடந்துள்ளன. அதேபோல் 1-20 கோடி ஜனத்தொகை கொண்ட டோக்கியோவில் வருடத்தில் சராசரி 176 கொலைகள் நடந்துள்ளன

[திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 27

சுமார் 33 லட்சம் ஜனதொகைகள் கொண்டுள்ள சென்னை நகரத்தில் 1980 இல் 52 கொலைகள் 1981 ல் 41 கொலைகள் தான் நடந்துள்ளன. சூழ்நிலைகளால் அவர்கள் தவறு செய்யும் அவசியத்திற்கு [illegible]த்திரத்தில் தூண்டப்பெற்று பல தவறுகளைச் செய்தாலும் அது மக்களுடைய பல காவல் துறையினுடைய பல கண்காணிப்பும் அவர்கள் தீவிரமாக அதிலே ஈடுபட்டு கடமையாற்றுகிறார்கள் என்பதைச் சொல்வதற்காக முக்கியமான இந்தக் குறிப்பைச் சொல்கிறேன் என்பதில் பெருமையடைகிறேன ஜப்பானை விட அமெரிக்காவில் கற்பழிப்பு சம்பவங்கள் ஐந்து மடங்கு அதிகம். டோக்கியோவை விட நியூயார்க் நகரிலே 10 மடங்கு அதிகம். சுமார் 5 கோடி ஜனத்தொகையுள்ள தமிழ் நாட்டில் 1980-ல், 151 கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. இது ஏற்றுக் கொள்ளக் கூடியது என்பதற்காக நான் சொல்லவில்லை. இளைஞர்கள் தகாத முறைக்கு ஆளாக்கப்படுகின்ற அளவிற்கு தள்ளப்படுகிறார்கள். பல்வேறு சூழ்நிலைகள், சுற்றுச் சார்புகள், பேச்சுக்கள் , எழுத்துக்கள், கதைகள், படங்கள், திரைப்படங்களையும் சேர்த்து தான் சொல்கிறேன். இப்படிப் பட்ட புத்தகங்களை பார்த்தால், ஏதோ ஒரு சில புத்தகங்களை எல்லாம் தடைசெய்கிறோமே தவிர, குடும்பப் பத்திரிகை என்று வெளியிடுகிறார்களே அந்த ஏடுகளில் வருகிற படங்களை பார்ப் போமானால் நிச்சயமாக நம்மால் அதை தாங்கிக் கொள்ள முடியாது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். ஆக இந்த கட்டுப்பாட்டிற்குள் இந்த சட்டத்தை பயன்படுத்திக் கொண்டு அதிலே படத்தை வரைகிறார்கள். அது அவரவர்கள், நடத்துகிறவர்கள் உணர்ந்து செய்ய வேண்டும், ஒத்துழைப்புத் தர வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளைக் குறிப்பிடுவதற்கு இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்கிறேன். ஆனால் நியூயார்க் நகரிலே மட்டும் இந்த வகை குற்றத்திற்காக ஒரு ஆண்டில் 2·3 லட்சம் பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டிலே 1980-லே 2,019 பேர்கள் மீதும், சென்னையிலே மட்டும் 135 பேர்கள் மீதும் இம்மாதிரியான வழக்குகள் தொடரப் பட்டுள்ளன.

ஜப்பானில் தற்போது குற்றங்கள் குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஜப்பான் மக்கள் காவல் துறையினர் உதவியை எந்தவித தயக்கமும் இல்லாமல் நாடுகிறார்கள். பொது மக்களின் இத்தகைய ஒத்துழைப்பால் காவல் துறையினர் குற்றங்களை வெகுவாகக் குறைக்க முடிகிறது.

டாக்டர். மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நாடுகளோடு இந்த குற்றங்களை ஒப்பிட்டு தமிழ் நாட்டில் என்று ஒப்பிடுகிறார். நாடுகளோடு ஒப்பிடுகிறபோது இந்தியாவைத்தான் ஒப்பிட வேண்டும். தமிழ்நாட்டை ஒப்பிடுகிற காரணத்தால் தமிழ் நாடு தனி நாடாக இருக்கிறதா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது.



1982 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். இன்னும் அந்த முடிவிற்கு நாம் யாரும் வந்துவிடவில்லை என்பது தான் என்னுடைய நம்பிக்கை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் இன்னும் அந்த முடிவிற்கு வரவில்லை என்று சொல்வதன் மூலமாக ஏதோ வரப் போவதாகச் சொல்வதாக நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்னும் என்று ஏன் சொல்கிறேன் என்றால் அப்படிப் பட்ட எண்ணங்கள் ஏற்படுவதற்கு யாரும் முன் வரக்கூடாது, தூண்டி விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். அது இருக்கட்டும் என்று சொல்லி நாங்கள் விட்டு விட்டது தான் அண்ணா அவர்கள் சொல்லியதால் : நாங்கள் விட்டு விட்டாலும், நான் இப்படி பேசுவதால், இந்த நிலைக்கு யாரும் மற்றவர்களை, இளைஞர்களை எல்லாம் தள்ளி விடக்கூடாது என்று பெரியோர்களாகிய நாங்கள் வேண்டுகோள் விடுவதற்கு எங்களுக்கு சூழ்நிலை உதவி வேண்டுமென்று ஆசையிலே இதை நான் வெளியிடுகிறேன்.

ஜப்பானிலே நகரப் பகுதியில் சராசரி 10 ஆயிரம் பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் 5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. டோக்கியோவில் சராசரி 9,500 பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் இருக்கிறது. தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளில் 40 ஆயிரம் பேர்களுக்கு ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1·20 கோடி மக்கள் ஜனத்தொகையுள்ள டோக்கியோ பெருநகரில் 40 ஆயிரம் காவல் அதிகாரிகள் உள்ளனர். சுமார் 45 லட்சம் மக்கள் உள்ள சென்னை நகரில் 7,537 காவல் துறையினர் தான் பணியாற்றுகிறார்கள். சுமார் ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏறத்தாழ 50,000 பேர்கள் தான் இருக்கிறார்கள் ; கணக்கிட்டு பார்க்க வேண்டும். ஆகவே, அந்த அளவிற்கு எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் தொடக்கத்திலே ஆட்சிக்கு வந்தவுடன் 10 ஆயிரம் பேர்களை சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டேன். ஆனால் இடையில் அது வேறு பல காரணங்களால் தடைபட்டது என்பதையும், நாட்டின் நன்மையை உத்தேசித்து இப்போது அதை வெளியிட விரும்பவில்லை. அடுத்த ஆண்டு, ஒரு வேளை, பட்ஜெட்டிலே சொல்வதற்கு கூட நல்ல வாய்ப்பு கிடைக்கலாம் என்று குறிப்பிட்டாலும், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 27

(முற் பகல் 11–40)

1971-க்கும், 1981-க்கும் ஒப்பிட்டுப் பார்த்து சில எண்ணங்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். வழக்குகள் குறைந்திருந்தன். இப்போது அதிகமாகியிருக்கின்றன. கண்டு பிடிக்கப்படவில்லையென்றெல்லாம் சொன்னார்கள். அவருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். அப்பொழுது நம்பிக்கையுள்ள சில வழக்குகளைத்தான் அவர்கள் எஃப். ஐ. ஆர். ரில் பதிவு செய்தார்களே தவிர, அனைத்து வழக்குகளையும் பதிவு செய்ததாக அங்கே இல்லை. அதை எப்படி நான் சொல்ல முடிகிறது என்றால், 1976-ஆம் ஆண்டு, ஐ. ஜி. அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். 17—7—1976 நாளிட்ட அவரது சுற்றறிக்கையில் அவர் சொல்லியிருக்கிறார். ' காவல் நிலையங்களில் புகார் செய்யப்படும் எல்லா குற்றங்களையும் பதிவு செய்யும் வழக்கம் நடைமுறையில் இல்லை. கண்டு பிடிக்கக்கூடிய குற்றங்களை மட்டுமே பதிவு செய்யும் போக்கு காவல் நிலையங்களில் இருந்து வந்துள்ளது. புகார் செய்யப்படும் எல்லா குற்றங்களையும் பதிவு செய்யாததால், குற்றங்களின் தன்மைகளைப் பற்றி அறிவதற்கு வாய்பில்லை, குற்றங்கள் பதிவு செய்யப்படாததால் அவைகள் கண்டு பிடிக்கப்படவும் இல்லை, அவைகள் எண்ணிக்கையும் தெரியவில்லை. மக்கள் பெருக்கம், வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைப் பார்க்கும்போது குற்றங்கள் பெருகுவது தவிர்க்க இயலாதது. எனவே, சிறிய குற்றங்களானாலும் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு எல்லா குற்றங்களையும் பதிவு செய்யும் போது, காவல் நிலையங்களில், பதிவேடுகளில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்தும் கண்டு பிடிப்புகளின் எண்ணிக்கை குறைந்தும் காணப்படும். ஆனால் தவிர்க்கமுடியாத நிலைமை, ஆனால் செய்தாக வேண்டும்' என்று 1976-லேயே அவர்கள் அந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு தீர்வு காணும் வகையிலும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சுற்றறிக்கைக்குப் பின் காவல் நிலையங்களில், எல்லா வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறது என்பதைச் சொல்லி, அதனால்தான் 1976க்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வேறு ஆதாரங்களை, 1976-க்குமுன்பு எப்படி இருந்தது, அது எந்த அளவுக்கு இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் சொல்லி, நல்ல சூழ்நிலைகளை நான் கெடுக்க வேண்டாம் என்ற காரணத்தால், அந்தப் புள்ளி விவரங்களை நான் கொடுக்க விரும்பவில்லையென்றாலும் நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், முன்னே இருந்தவர்கள் எல்லாம், முன்னே கொஞ்சம் சாதாரணமான பொறுப்பிலே இருந்திருப்பார்கள். இப்பொழுது கொஞ்சம் உயர்ந்த பதவிக்கு வந்திருப்பார்கள். அவ்வளவுதானே தவிர, புதிதாக ஒன்றும் அதிகமாக இல்லை.



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன]

அவர்கள் எல்லாம் தங்கள் பணிகளைச் சரிவர செய்கிறார்கள் என்பதற்கு இது உதாரணம் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிற வகையில், 1973-ல் இருந்த நிலைமையை விட, 49·7 சதவீதம் அதிகமானதாகும். அவற்றை எல்லாம் பார்க்கும்போது டோக்கியோ, லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் பணி புரியும் காவலர்களின் எண்ணிக்கை, அவர்கள் பெற்றிருக்கும் நவீன நுட்பச் சாதனங்கள் என்று சொன்னேனே, அவைகள் இருந்தும் அவர்கள் செய்வதை விட, வாய்ப்பில்லாத, பாதுகாப்பில்லாத நிலையில் இவ்வாறு பணி செய்கிறார்கள். இங்கே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் இருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும். அவர் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், சொல்கின்றேன். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 4 கைத் துப்பாக்கிகள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாங்கள் எழுதினோம், முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பத்திரிகை மூலமாகக் கேள்விப்படுகிறோம். "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் துப்பாக்கிகள் கொடுத்தால் என்ன என்று யோசிக்கிறோம்'' என்று அவர்கள் சொன்னதாக இதிலேயிருந்து, எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்களாக இருந்தாலும் இவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சில குற்றங்கள் விசாரிக்கப்படவில்லை, கண்டு பிடிக்கப்படவில்லை என்றாலும் குறை சொல்லப்படுகிறது. அது போல் இப்பொழுது இல்லை, பல ஆண்டுகளாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது சில சமயம் கைவிடப்படுகிறது, கண்டு பிடிக்க முடியாமல் போகிறது; தடயம் இல்லையென்று விடப்படுகிறது. அதற்குப் பிறகு கண்டு பிடிக்க முயன்றிருக்கிறது என்பதைச் சொல்லும்போது 5—8—1974-ல் சிந்தாதிரிப்பேட்டை சாமி நாய்க்கன் தெருவில் சங்கர் என்பவர் குத்துக் காயங்களுடன் அவர் வீட்டில் பிணமாகக் கிடந்தார். அவர் சென்னை மாநகராட்சியில் பணி புரிந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஆவார். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க ஆதாரம் ஏதும் கிடைக்காததால், 15-2-1975-ல் கைவிடப்பட்டது என்ற குறிப்பு இருக்கிறது. சென்னை மாம்பலம் தணிகாசலம் செட்டி 51 எண்ணுள்ள வீட்டில் இருந்தவரை 21—9—1974 இரவில் கொலை செய்துவிட்டு, ஸ்டீல் அலமாராவை உடைத்து ரூ. 2,795 ரொக்கம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எவ்விதத் துப்பும் கிடைக்காததால் குற்றவாளி கண்டு பிடிக்கப்படவில்லை. 16—3—1974-ல் சுப்பையன் என்பவர் கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து 6 பவுன் தங்கச் சங்கிலி களவாடப்பட்டுவிட்டது. இன்னும் குற்றவாளி கண்டு பிடிக்கப்படவில்லை.

18—1—1974 அன்று தர்மபுரி மாவட்டம் தொண்டராம்பட்டி என்னும் இடத்தில் நான்கு பேர் காவல் துறையினர் போல் நடித்து 10,766 மதிப்புள்ள நகைகள், பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 27

மதுராந்தகத்திற்கு அருகில் 7—5—1975 அன்று ஒரு வீட்டிற்குள் நுழைந்து மின்சாரத்தைத் துண்டித்து வீட்டிலிருந்த பெண்ணை அடித்துப்போட்டு 11,000 மதிப்புள்ள தங்க நகைகளை ஒருவர் எடுத்துச் சென்று விட்டார். குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் வழக்கு முடிக்கப்பட்டது.

வடார்க்காடு மாவட்டம் சேவூருக்கும் திருத்துள்ளாய்க்கும் இடையே புகை வண்டிக்குள் 7—10—1974 அன்று 5 பவுன் தங்கச் சங்கிலி ஒரு பெண்ணிடமிருந்து கொள்ளையடித்துச் செல்லப் பட்டது. குற்றவாளி கண்டு பிடிக்கப்படவில்லை.

இதைப்போல, வீட்டை உடைத்துத் திருடுதல், வழிப்பறி போன்ற பல வழக்குகளில் கண்டுபிடிக்க முடியாமல் கைவிடப் பட்டுள்ளன. அதற்கான பட்டியலே இன்னும் இருக்கிறது. அவற்றில் சிலவற்றைத்தான் நான் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

அதோடு, 17–7–1972 அன்று சென்னை நகரில் மயிலாப்பூர் தேசிகாச்சாரி தெருவில் உள்ள 7ஆம் எண் உள்ள வீட்டை உடைத்து 8,000 மதிப்புள்ள தங்க, வைர நகைகள் களவாடப் பட்டன. அவைகள் பதிவு செய்யப்பட்டனவே ஒழிய குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை. அதே தெருவில், அதே வீட்டில் 23–12–1973—அதாவது ஒரு வருஷம் கழித்து அதே முறையில் கதவை உடைத்து ரூபாய் 20,000 மதிப்புள்ள தங்க வெள்ளி ஆபரணங்கள் களவாடப்பட்டன. இந்த வழக்கும் பதிவு செய்யப்பட்டதே ஒழிய கண்டு பிடிக்கப்படவில்லை.

இதை வைத்து யார் என்ன செய்தார்கள் என்று விவாதிக்கத் தயாராய் இல்லை. அந்த வழக்குகளில் குற்றவாளிகள் மிகச் சாமர்த்தியமாக இருந்திருக்கிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது. காவல்துறைக்கு இன்னும் வசதிகள் வேண்டுமென்று தான் சொல்கிறேனே ஒழிய நான் குறை கூறத் தயாராக இல்லை, அந்த முறையில் அதிகமான வசதிகளைக் காவல்துறைக்கு இந்த அரசு அளித்து, கண்டு பிடிக்க முடியாது என்று முந்தைய ஆட்சிக் காலங்களில் கைவிடப்பட்ட பல வழக்குகளில் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வடார்க்காடு மாவட்டம் காட்பாடி காவல்நிலைய எல்லைக்குள் ஒரு வீட்டில் 5–7–1970 அன்று இரவில் ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டன.

வடார்க்காடு மாவட்டம் காட்பாடி காவல் நிலைய எல்லைக்குள் ஒரு வீட்டில் 22–8–1971 அன்று இரவு ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டன.



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

திருச்சி டவுன் ஸ்டேட் பேங்க் காலனியில் 24–8–1971 அன்று இரவு ரூபாய் 925 மதிப்புள்ள தங்க நகைகள், கைக் கடிகாரம் களவாடப்பட்டன.

திருச்சி டவுனில் உள்ள ஒரு காலனியில் 29–8–1971 அன்று இரவு 825 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் டவுன் கோவாப்பரேட்டிவ் காலனியில் 16–9–1971 அன்று இரவு 4,825 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி காவல் நிலைய குடியிருப்புக்குள்ளேயே ரூபாய் 300 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டன.

தஞ்சாவூர் டவுன் எல்.ஐ.சி. காலனியில் 20–9–1974 அன்று 350 ரூபாய் மதிப்புள்ள கைக் கடிகாரம் கன்னக் களவு செய்யப் பட்டது.

இந்தக் கன்னக் களவுகள் அனைத்துக்கும் குற்றவாளி யார் என்பதைக் கண்டு பிடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

அதேபோல் தஞ்சாவூர் டவுனில் 12–8–1975 அன்று இரவு ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப் பட்டன.

கும்பகோணம் நகரில் 12–12–1975 அன்று 20,750 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டது. அந்த வழக்கும் கண்டு பிடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

ஆனால் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, குற்றவாளிகளைத் தேடிச் சென்று, குற்றவாளிகள் கைவிட்டுச் சென்ற கை ரேகைகளின் அடையாளங்களை வைத்து மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளிகளான விஷ்ணுபாய் தேசாய், கிர்தார் ராய், மித்ரா என்பவர்கள், மேலே கூறப்பட்ட குற்றங்களைச் செய்தார்கள் என்பது 1980-இல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, காவல்துறையினருக்கு வேண்டிய வாய்ப்பும் வசதிகளும் இருப்பின் அவர்கள் திறமையாகவே செயல்படுவார்கள் என்பதை இது உணர்த்துகிறது என்று சொல்வதன் மூலம், காவல் துறையினர் யாரும் அலட்சியமாக இருக்கின்றார்கள். கடமையைச் செய்யவில்லை என்ற எண்ணத்தைத் தயவு செய்து யாராவது கொண்டிருப்பார்களேயானால் அதனை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சில பரபரப்பூட்டும், கொள்ளை, கொலை வழக்குகளில் எப்படிக் காவல்துறையினர் கண்டு பிடித்தனர் என்பது இந்த ஆய்வுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதை மீண்டும் சொல்ல விரும்பவில்லை.

ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். விருதுநகர் காவல் நிலைய குற்ற எண். 100/80-இல் மற்றும் இராஜபாளையம் திருச்சி, உறையூர் முதலிய புறக்காவல் நிலைய எல்லைக்குள் 1980-இல் நடந்த பல கன்னக் களவுகளில் வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளி விஷ்ணுபாய் தேசாய் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

(முற்பகல் 11-50)

சென்னையில் சுமார் 45 கன்னக் களவுகளுக்குக் காரணமான மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளி ஸ்டீபன் என்பவரும் சென்போஸ் என்பவரும், அவர் கூட்டாளிகளும். 30-3-1980 அன்று கைது செய்யப்பட்டார்கள். ரூபாய் 5 லட்சம் பெறுமான திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டம் குமரகோவிலில் உள்ள முருகன் கோவிலில் 11-5-1981 அன்று சிலைகள் திருட முயற்சித்து கேரளாவைச் சேர்ந்த ஸ்டீபன், சுரேஷ்குமார் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டார்கள். கோவிலில் காவலாளி சாஸ்தா பிள்ளை என்பவரையும் கொலை செய்து விட்டார்கள். இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால் திருடுகிறவர்கள், திருடப் பட்டவர்கள் இவர்களை நாம் கொஞ்சம் நன்றாக அனுதாபத் தோடும், அக்கறையோடும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருட்டு கொடுத்தவர்கள் 800 ரூ. அல்லது 150 ரூபாய் பறி கொடுத் தவர்கள் அதை திரும்ப வாங்கிக் கொள்ள முடியாதவர்கள். லட்சம் ரூபாய், 5 லட்சம் ரூபாய் கொள்ளைக் கொடுப்பவர்கள் அவ்வளவு ஏழை என்று சொல்ல முடியாது. ஆனால் திருட்டுக்கள் கொலைகள், கொள்ளைகள் என்று வரும்போது எல்லாருக்கும் ஒரே நீதி தானே தவிர, வேறு நீதியை நாம் பார்க்க முடியாது என்பதைக் கணக்கில் கொண்டுதான் இவைகளை நான் படித்து சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்களும், ரகுமான்கான் அவர்களும் மாண்புமிகு துரைமுருகன் அவர்களும், இப்படி எல்லாம் சில புள்ளி விவரங்களைச் சொல்லாமல் இருந்தால் இதை நான் படித்திருக்க மாட்டேன். உங்களுக்கு நேரமும் மிச்சமாகி இருக்கும். வேறு பிரச்சினைகளுக்கும் நான் பதில் சொல்லியாக வேண்டுமே, நக்சலைட் பிரச்சினை இருக்கிறது. காவலர் உணவுப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் பல்வேறு பிரச்சினை கள் இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்லி யாக வேண்டும். பலபேர் பல குற்றச்சாட்டுக்களைப் பல ...ரங்களாக சொல்லி, இங்கே படித்து இருக்கிறார்கள். மக்கள்



மத்தியிலேயும் பரப்பி விட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு உண்மை என்ன வென்பதும், நாட்டிலே என்ன நடக்கிறதுஎன்ப தையும் சொல்வது என்னுடைய கடமை என்பதற்காக படிக்கி றேன். விவரமும் சொல்ல முன் வந்தேன். 1979-80, 1980-81 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சுமார் 10 கன்னக் களவு காரணமாக தாதாசங்கர், என்பவர் ஆந்திர மாநிலத்தில் 21-2-1981-ல் கைது செய்யப்பட்டார். சேத்துப்பட்டு, வேளச்சேரி, காட்பாடி, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் 1981ஆம் ஆண்டு நடந்த 4 கன்னக் களவு காரணமாக கிரிதாரிலால், என்பவர் மேற்கு வங்காளத்தை அடுத்த சித்னாபூரை சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. 15-11-1981 இரவு வேலூர்—சித்தூர் நெடுஞ் சாலையில் பேருந்தை வழிமறித்து நடந்த வழிப்பறி உங்களுக்குத் தெரியும். ஆகவே நான் திரும்பவும் இதைப் பற்றிச் சொல்லவில்லை. இவ்வளவு குறுகிய நாட்களில் இவைகளை எல்லாம் கண்டு பிடித்தார்கள். வேற்று மாநிலத்திலே இருப்ப வர்களைக் கண்டு பிடித்து, குற்றவாளிகள் யார் என்பதை நிரூபித் திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நமது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் எவ்வளவு தகுதி மிக்க நல்லவர்களாக நாட்டின்மீது பற்று உள்ளவர்களாக, அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன். யாருக்காகவும், யார் சார்பாக வும் அவர்கள் இல்லை ன்பதையும், குற்றம் நடக்கிறது' தவிர்க்க முடியாமல் நடந்து டுகிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன். வேண்டுகிற அளவுக்கு எண்ணிக்கை இல்லை என்ற காரணத் தினால், ஒரு அளவோடுதான் காவல்துறையால் நடக்க முடிகிறது என்கிற நலைமையை எண்ணிப் பார்த்து, இவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். தாக்குதல், குறை கூறுதல் இல்லாவிட்டால் நிச்சயமாக உண்மைகள் வெளி வராது. நாட்டுக்கு நன்மை பயக் கும் காரிஙைகளை செய்ய முடியாது என்றாலும் நாம் எந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமோ, அந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, ஏதோ எதிரிகளாகவே கருதிக் கொண்டு, எதிரிகளாாகவே நடப்பதற்காகவே அவர்கள் பதவிக்கு வந்து விட்டார்கள் என்று எண்ணுகிற நேரத்தில், அதைச் சொல்வது உண்மையிலேயே நல்ல காரியங்களுக்காக, தியாகம் செய்ய முன் வருகிற இளைஞர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்க முடியாது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) பாராட்டுவதற்கு நன்றி. அதே நேரத்தில் மாண்புமிகு துரை முருகன்அ வர்கள் சில பிரச்சினைகளை எல்லாம் மிகுந்த அக்கறை யோடு எடுத்துக் கொண்டு பேசினார்கள். அதற்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

சாவல் துறையிலே மகளிரைச் சேர்த்தது பற்றி, அவர்கள் உடையைப்பற்றி, மிகவும் அக்கறையோடு எடுத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனது அன்புக்குரிய துரை முருகன் அவர்கள் தெளிவாக சில விளக்கங்களைச் சொன்னார்கள். அது அப்படியே குறிப்பேட்டிலே இருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு பக்தன் கோவிலுக்குப் போனால், அங்கே உள்ள சிலைகளைப் பார்க்கும்போது, பக்தி உள்ளவன் கும்பிடுவான். அல்லது சிற்ப ஆராய்ச்சி தெரிந்தவர்கள் அல்லது சிற்ப நுணுக்கம் தெரிந்தவர்கள் போனால் இதை இதை எப்படி செதுக்கினார்கள் என்று அவர்கள் ஒருவேளை ஆராய்ச்சி செய்யலாம், அல்லது இவ்வளவு அழகாக செதுக்கி இருக்கிறார்களே, அதைப் பாராட்டிவிட்டு, நாம் இதைப்போன்ற இன்னொரு சிலை செதுக்குவதற்கு என்ன செய்யலாம் எனபதைப் பற்றி யோசிப்பார்கள். ஆனால் அதை விமர்ச்சனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு யாராவது போனால், அதைப் பார்க்கிற நோக்கம், வேறு விதமாக இருந்துவிட்டால், அவர்கள் பார்வைக்குக் சிற்பமும் தெரியாது, அந்த அழகும் தெரியாது. அங்கே பக்தியினுடைய எதிரொலியும் இருக்காது. அதைப் போல, அவர்கள் எவ்வளவோ தகவல்களைச் சொல்லி இருக்க முடியும், ஆனால் இறுக்கமான உடை அணிந்து இருக்கிறார்கள் என்று திரும்பத் திரும்ப, 3, 4 முறைகள் சொல்லியிருக்கிறார்கள். நானே, இங்கே உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். திரும்பத்திரும்பச் சொல்லி அதை நான் இந்த பதக்கங்கள் பரிசீலிக்கும் நிகழ்ச்சியில் அப்படி உடைகள் இருக்கக் கூடாது, மற்றவர்கள் அணிவதுபோல் முழங்காலுக்கு மேலே போடப்பட்டிருக்கவேண்டும் என்று நான் இங்கே வெளியிட்டேனோ, அந்தக் கருத்தை இங்கே இவ்வளவு அழகாக ஒரு விமர்சனம் செய்ததற்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு உத்திரவு போட்டு, அனுமதி கொடுத்தாகிவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, சில குற்றங்களைச் சொல்லும்போது, இங்கே நாம் சிரிப்பதற்கோ அல்லது மற்றவர்களை கேலி செய்துவிட்டோம், அவமானப்படுத்திவிட்டோம் என்ற மகிழ்ச்சி பெறுவதற்காகவோ சொல்லாமல் எங்களைப் போன்றவர்கள், ஏதாவது தவறு செய்திருந்தால் திருத்திக்கொள்ள அல்லது இது சரியான பாதை அல்ல என்று எடுத்துக் காட்ட பேச்சு பயன்படவேண்டுமென்றுதான், அதிலும் இளைஞர்கள், சட்டம் படித்த எனது அருமை நண்பர் துரைமுருகன் அவர்களுக்கு இதைச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதை நான் சொல்வதற்கு காரணம் ஒன்று உண்டு. எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்கள். பத்திரிக்கையிலே அந்த குறிப்பு வந்திருக்கிறது. மகளிர் அதிகமாக வந்து சேரமாட்டேன் என்கிறார்கள். நாங்கள் உருவாக்க இருக்கின்றோம். அதில் அதிகமாக வந்து சேரமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்கின்றார்கள், வந்து சேரவேண்டும், பரிசுகள் பெறவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இப்போது அதிகமாக, 800 பேருக்கு மேல் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் நிறையப்பேர் சேர இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் மீண்டும், மேலும் மேலும் அதிகமாக வேலையிலே வந்து சேரு



வதற்கு ஊக்கம் அளிப்பதாக உற்சாகம் அளிப்பதாக அவர்கள் பேச்சு இருக்க வேண்டுமே தவிர, அதிலே அவர்களுக்கு ஏதாவது எண்ணங்கள் தோன்றுவதற்கு நாம் பேசுகின்ற கருத்துக்களின் மூலமாக ஒரு நிலைமையை ஏற்படுத்திவிடும் என்றால் எவ்வளவு பெரிய முயற்சி, இருவரும் சமமாக இருக்கவேண்டும். என்று செய்கின்ற முயற்சி எப்படி கெட்டுவிடும் என்பதை தயவு செய்து ஒவ்வொருவரும் சிந்திப்பதற்காகத்தான் நான் இதை இங்கே பயன்படுத்திக்கொள்கிறேனே தவிர வேறில்லை. அதைப் போலவே, இன்னொரு கதையையும் நான் சொல்லவேண்டுமென்று கருதுகிறேன். மணிக்கூண்டு பத்திரிக்கையிலே நான் படித்தது. சில இளைஞர்கள், மாடியிலே நின்றுகொண்டு, இன்னும் கொஞ்சம் வசதி இருப்பவர்கள் கூட அதிலே இருந்தார்களாம். அந்தச் சிறு கதையில் எழுதப்பட்டு இருப்பது. பள்ளிக்குச் செல்லுகின்ற பெண்கள், மற்றும் இதைப் போன்றவர்களையெல்லாம், கேலி பேசிக்கொண்டிருப்பது அந்த இளைஞர்களுக்கு வழக்கமாக இருந்தது. அதேபோல் ஒருநாள் எல்லோரும் நின்று வேடிக்கை பார்த்து, கேலி பேசிக்கொண்டிருக்கும்போது, 4, 5 பெண்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த 4, 5 இளைஞர்கள் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு, அவர்களுடைய உடைகளைப் பற்றியெல்லாம் விமர்சனம் செய்து கேலி பேசியிருக்கிறார்கள். ஆனால் அதிலே போன அந்தப் பெண்ணைக் குறிப்பிட்டு சில நண்பர்கள் பேசினார்களே, அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை, தன்னோடு இருப்பவனுடைய தங்கை அந்தப் பெண் என்பதை '' என்று அந்தக் கதையில் சொல்லுகிறார்கள். ஆகவே, அதைப்போன்ற நிலைமைகளையெல்லாம் நான் சொல்லும்போது ஒருசில அரசியல் கட்சிகளிலே, பெண்கள் வந்து பணியாற்றுகிறார்கள், என்றாலும், ஒரு சமூக சேவைக்காக பெண்கள் சேவைசெய்ய வருகிறார்கள் என்றாலும், ஒரு ஆட்சியிலே பல பெண்கள் வருகிறார்கள் என்றாலும், அல்லது ஊனமுற்றவர்களுக்காக சேவை செய்வதற்கு அமைப்புக்களின் மூலமாக அதிலே இலவசமாகவே ஊதியமின்றி கௌரவப் பணியாளர்களாக வந்திருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் எல்லாம், அதிகமாக வந்து கொண்டு செய்வதற்கு நாம் சொல்லுகின்ற கருத்துக்கள் உதவவேண்டுமே தவிர, அவர்கள் வெறுப்பு அடைந்து இந்தக்கேலிக்கு நாம் ஏன் ஆளாக வேண்டுமென்ற சொல்லுகின்ற நிலைமை வந்துவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

(நண்பகல் 12-00).

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, நான் மகளிர் போலீசைச் சேர்ந்தவர்களுடைய உடையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்ன ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கே உரிய முறையில் கொஞ்சம் பெரிதுபடுத்தி சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஏதோ புஷ்கோட் மாதிரி கொடுக்கப் போவதாக நான் கேள்விப்படுகிறேன். அந்த

மாதிரி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன். அவர்களுடைய உடை உடலில் சிக்கென இருக்கக் கூடாது. அவர்களுடைய யதார்த்த நிலையைப் பார்க்க வேண்டும். ரொம்ப டைட் பிட்டிங்காக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல, இன்னொன்றையும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போலீஸ் ஸ்டேஷனில் அவர்களுக்கு ஒப்பன் லாட்ரின் தான் இருக்கிறது, தனியாக வேறு லாட்ரின் இல்லை. இந்த, நிலைமைகளை எல்லாம் பார்த்து, ஆக்சுவல் நிலையை அறிந்து பிராக்டிக்கலாக இருக்கிற குறைகளைப் போக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அவர்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொண்டிக்கிறோம் என்பதையும் அவர்களுக்குத் தனியாக அமைப்புகள் இருக்கவேண்டும் ; அவர்களுக்கு தனியாக கழிப்பிடங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம். என்பதையும் பின்னாலே தெரிவிக்க இருக்கிறேன். முன்பும் இதுபற்றி சொல்லியிருக்கிறோம். நாம் செய்யாத ஒன்றை சொன்னால், அதையும் முறையாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்றுதான் இவைகளைச் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இங்கே விவசாயத் தொழிலாளர்களுக்கு சட்டக் கூலி தர மறுப்பது, அவர்களுக்குத் துணை செய்வது, காவலர்களுடைய கெடுபிடி என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவையோடு தெரிவித்தார்கள். சிரிப்பின் ஊடே கொஞ்சம் காரசாரமாகவும் பேசினார்கள். காரசாரமாக பேசுவார், பேசிவிட்டு சிரிப்பார். அவர் இப்போது இல்லை ; இருந்தால் இப்போதும் சிரித்திருப்பார். சட்டக்கூலி பற்றி சில குறைகளைக் கூறியிருக்கிறார்கள். அதற்கு சில உண்மைகளை நான் இங்கே வெளியிட்டாக வேண்டியிருக்கிறது. எனனென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதை நான் இங்கே எனக்குக் கிடைத்திருக்கிற ஆதாரங்களை வைத்து சொல்லியாக வேண்டியிருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் அவர்களுடைய பணிகளைச் செய்துவிட்டு, அவர்களுக்கு எந்த அளவுக்கு கூலி கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறதோ அதைக் கொடுக்காவிட்டால் அதற்காகப் போராடலாம், அதற்காகபோலீசாரிடம், கலெக்டரிடம் நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம். பாதுகாப்பு கேட்கலாம். அரசு நிர்ணயித்த கூலிக்குமேல் அதிக கூலி கேட்டு வலியுறுத்துவது என்பது நியாயமாக இருக்க முடியாது. எந்த அளவுக்கு நெல் கொடுக்க வேண்டும்'; கூலி கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குமேல் கேட்டால், அவர்களுக்கு கொடுக்க முடியாது என்று சொன்னால் வேலையை பாதியிலே நிறுத்திவிட்டு சென்றுவிட்டால் அவர்க



களுக்கு வேறு வழியில்லை. இங்கே மின்சாரத்தை நிறுத்திவிட்டால் என்ன ஆகும்? பயிர் எல்லாம் காய்ந்துவிடும், தீய்ந்துவிடும் ; ஆகவே அப்படிச் செய்யகூடாது என்று சொல்கிறார்களே அதைப்போல வேலையைபாதியிலே நிறுத்திவிட்டால் அவர்களுடைய விவசாயம் என்னவாகும் ? விவசாயம் அவர்களுக்கு இலாபத்தை தருகிறதோ இல்லையோ நாட்டில் உணவு நிலைமை என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டும். அங்கு உரிமையைப் பெறுவதற்காக நாம் போராடலாம் ; எடுத்துச் சொல்லலாம். ஆனால் அதேநேரத்தில் சட்டத்திற்கு உட்பட்டு நமது பணிகளைச் செய்ய வேண்டியது முக்கிய கடமை, தேவை என்பதை சொல்லித் தீரவேண்டும். அந்த வகையில் திரு. இராமச்சந்திரன் தலைமையில் நியாய கூலி கொடுப்பதற்காக அரசு நிர்ணயித்த குழு பரிந்துரையின்படி குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 14/79 என்பது 1—9—1979 முதல் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு 7 லிட்டர் நெல்லும் 2 ரூபாய் 20 காசும் அல்லது 9 ரூபாய். நடவு நடுதல், களை எடுத்தல் ஆகியவற்றிற்கு ஒரு நாளைக்கு 6 லிட்டர் நெல்லும் 1 ரூபாய் 80 காசும் அல்லது 7 ரூபாயும். பெரியவர் அல்லாதவர்களுக்கு ஒரு நாளைக்கு 4 லிட்டர் நெல்லும் ஒரு ரூபாய் 80 காசும் அல்லது 5 ரூபாய்.

நன்னிலம் தாலுகா, காத்தாடிகிராமத்தில் 26—2—1982அன்று நடைபெற்ற நிகழ்ச்சி, கம்யூனிஸ்ட் கேட்ட கூலி பிரதான தகராறுக்குக் காரணம் என்பதை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் நத்தனம் கிராமத்தில் 30—8—1981 அன்று இடது கம்யூனிஸ்ட் சுந்தரம், ராஜபாண்டியன்ஆகியோரை தாக்கியது. ராஜபாண்டியன் மூக்கை அறுத்துவிட்டார்கள் என்ற வழக்கைப் பற்றி நான் இங்கே குறிப்பிடகடமைப்பட்டிருக்கிறேன். கட்சி மாறியதன் காரணமாக — இதைத்தான் நான் முதலிலே குறிப்பிடும்போது சொன்னேன். எதை எல்லாம் காவலர்கள் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது, அங்கே போய் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது என்பதற்காகச் சொன்னேன். இருவரும் தூண்டி விட்டுக் கலகம், கொடுமை செய்தார்கள் என்று இம்மாதிரியான நிகழ்ச்சிகள் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இடையே, அரிசனங்களுக்கும்இடையே நடப்பதற்கு வர்க்கப் போராட்டம் என்று ஒரு சாயம் பூசுவது சட்டம் ஒழுங்கு கெடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுக்கா, கீரனாம்பட்டி, என்ற இடத்தில் 26—2—1982 அன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. புருஷோத்தம நாயுடு என்பவர் நிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அரிசன விவசாயத் தொழிலாளர்கள், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், ஜாதி இந்து தொழிலாளர்கள் நெல் அறுவடை செய்துள்ளார்கள். அரசு நிர்ணயித்த கூலியான 6 லிட்டர் நெல்லைப் பெற்றுக்கொண்டு ஜாதி இந்

துக்கள் சென்றுவிட்டனர். ஆனால் ஹரிஜன விவசாயத் தொழிலாளர்கள்—கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் — 7 லிட்டர் நெல் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு நிர்ணயித்த கூலியைப் பெற்றுக்கொள்ளாமல் அதிகமாகக் கூலிவேண்டுமென்று கேட்டு தொழிலாளர்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் இடையே தகராறு ஏற்படுகின்ற நிலையில் யாருக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. என். சங்கரய்யா: தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய நியாயக்கூலிச் சட்டத்தை விட தமிழ்நாடு அரசாங்கம் அறிவித்திருக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திலே அறுவடைக்கு அதிகப்படியான கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்தக் கூலியை கீழத்தஞ்சை மாவட்டத்தில் அளிக்க வேண்டும் என்கிற அடிப்படையில்அந்த நன்னிலத்திலேஅந்தப்போராட்டம் நடத்தப்பட்டது. அதிலே தவறு இல்லை.

ஏற்கனவே நாங்கள் கேட்டிருக்கிறோம். குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திலே இருக்கும் அளவிற்கு கீழத்தஞ்சை மாவட்டத்திலே போடப்பட்டிருக்கும் நியாயக் கூலிச் சட்டத்தில் அறுவடைக்குக் கூலி நிர்ணயிக்க வேண்டும். நியாயக் கூலிச் சட்டத்தில் அறிவித்திருப்பது கம்மியாக இருக்கிறது. எனவே தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுடைய பொருளாதார நிலையை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்ற வகையிலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற வகையிலும், அவர்களை இயக்க ரீதியாக ஒன்று திரட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும், வர்க்க ரீதியான ஒரு போராட்டத்தை அங்கே நடத்த முயற்சி செய்யப்பட்டது. அது சரியானது தான். ஜனநாயக இயக்கம் வளர்ச்சி அடைய வேண்டுமானால் இத்தகைய போராட்டங்கள் தேவைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக ஏழைகளின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, வர்க்க ரீதியான போராட்டம் தேவைதான். சூழ்நிலைக்கேற்ப நான் கொடுக்க முடியாவிட்டாலும், அனைவரும் ஒன்று சேர்ந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அடிப்படையில் கூலி கொடுக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அது கொடுக்கப்படும்படி செய்கின்றபோது அதற்கான ஒத்துழைப்புக் கொடுப்பது வரவேற்கக் கூடியதாக இருக்கும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அரசு நிர்ணயித்த நெல்லை கொடுக்கின்ற போது அதை வாங்கிக் கொள்ளாமல் தகராறு செய்கின்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இங்கே கூர்ந்து ஆராய்ந்தால் நமக்குச் சில உண்மைகள் புலனாகும்.



சின்னசாமி நாயுடு என்பவர் நீண்ட நாட்களாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தவர். பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலில் தனக்குத் தேர்தலில் போட்டியிட டிக்கெட் கொடுக்காத காரணத்தால் வேறு கட்சிக்கு மாறிவிட்டதாகத் தெரிகிறது. அந்த கட்சி எது என்பதைப் பற்றிச் சொன்னால் ஏதாவது பிரச்னை வந்துவிடப் போகிறதே என்பதற்காகக் குறிப்பிட விரும்பவில்லை (குறுக்கீடு) வேறு எந்தப் பிரச்னையும் வராது என்றால் அதையும் சொல்கிறேன். விஜயராகவன் என்பவர் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர். அவர் நிலத்தில் நெல் அறுவடை செய்ய வேண்டி வந்தது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் அவர் நிலத்தில் நெல் அறுவடை செய்ய மறுத்தனர். அவர்களும் முன்வராமல், அறுவடை செய்ய வந்தவர்களையும் அறுவடை செய்யவிடாமல் தடுத்தனர். இந்தச் சூழ்நிலையில் வேறு கிராமத்தில் இருந்து விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு, நெல் அறுவடை செய்து கொண்டிருந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் சுமார் 500 பேர் பக்கத்திலுள்ள கிராமத்தில் இருந்து அருவாள், ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் வந்து கிளர்ச்சி செய்ததால் 16 ஜாதி ஹிந்துக்கள் காயமுற்றனர். ஜாதி ஹிந்துக்களுக்கு சொந்தமான வீடுகளையும் அவர்கள் கொள்ளை அடித்துள்ளனர். ரூ. 5,000 அளவிற்கு சேதம் விளைவித்துள்ளனர்.

மேலும் 45 மூட்டை நெல்லையும் எடுத்துச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்றும் அங்கே காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை நான் ஏன் உதாரணமாகச் சொல்கிறேன் என்றால் ஒரு அரசியல் ......

(குறுக்கீடு).

(பிற்பகல் 12-10).

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி தஞ்சையில் இருக்கக்கூடிய விவசாயக் கூலி சட்டத்தை விட தமிழ்நாடு பூராவும் போட்டிருக்கிற விவசாயக் கூலி சட்டத்தின் கீழ் தருகின்ற ஊதியம் அதிகமாக இருப்பதால், அந்த அடிப்படையில், தமிழ்நாடு பூராவிற்கும் என்ன நிலைமை இருக்கிறதோ அந்த அடிப்படையில் தரவேண்டும் என அந்த விவசாயத் தொழிலாளர்கள் கேட்டார்கள். பல நிலச்சுவான்தார்களோடு இந்த விவசாயத் தொழிலாளர்கள் உடன்பாடுகூட செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் குறிப்பிட்ட பகுதியில் அதை தருவதற்கு மறுப்பதால், மாநிலம் முழுவதும் உள்ள நிலையே இந்த கிழக்கு தஞ்சை மாவட்டத்திலும் வேண்டும் என்ற முறையில், அவர்கள் தங்களுக்குத் தரவேண்டிய நியாயமான கூலியை கேட்கிற அடிப்படையில் கிளர்ச்சி செய்தார்களே தவிர, அதிலே வேறு எந்த விதமான பிரச்னையும் கிடையாது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

[1982 மார்ச் 27

திரு. பொ. உத்திராபதி : நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிற போது இந்த விவசாயக் கூலியைப் பற்றிச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கும் விவசாயக் கூலி 10 ஆண்டுகளுக்கு முன்னதாக நிர்ணயம் செய்யப்பட்ட ஒன்று. அதற்குப் பிறகு விலைவாசி ஏற்றத்திற்கு தக்கவாறு அது மாற்றப்பெற வேண்டும் என்று, 8 லிட்டர் கொடுப்பதற்கு இப்போது மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. மாநிலம் முழுவதிலும் உள்ள மற்ற மாவட்டங்களில் இந்த திருத்தியமைக்கப்பட்ட கூலியே கொடுக்கப்பெறும் போது, தஞ்சை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் மட்டும் அப்படி கொடுப்பதற்கு மறுத்திருக்கிறார்கள். திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி ஆகிய இடங்களில் கூட இந்தக் கூலி உயர்வைக் கேட்டிருக்கிறார்கள். குடவாசல் பகுதியில் இந்தக் கூலி உயர்வு வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே இது விவசாயக் கூலிக்காக ஏற்பட்ட பிரச்னையே தவிர வேறு அல்ல..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். எனக்கு கொடுத்திருக்கிற தகவல்களின்படி நான் இங்கே விவரங்களை எடுத்து வைத்துக் கொண்டு வருகிறேன். இந்தக் கிளர்ச்சிகள் எந்த அளவுக்கு போயிருக்கிறது என்றால் நிறைய பேர்கள் பெரிய தாக்குதல்களுக்கு உள்ளாகிற நிலைமை உருவாகி ஒருவருடைய மூக்கை அறுத்திருக்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு இங்கே சொல்ல விரும்புகிறேன். இதற்கு பின்னணி என்ன என்பதையும் நாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூலியைப் பெறுவதற்கு எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ, அதே போல இந்த உரிமையை பெறக் கூடிய அளவுக்கும் முறையிருக்கிறது. அவர்கள் நியாயமான கூலியைப் பெறமுடியவில்லை என்றால், அரசும், காவல் துறையினரும் அவர்களுக்கு உதவி செய்தாக வேண்டும். அந்த வகையில் அவர்கள் முயற்சி செய்யாமல்—வேறு வகைகளில் தீர்த்துக் கொள்வது சரிதானா என்பதை தயவு செய்து நாம் ஒவ்வொருவரும் சிந்தித்தாக வேண்டும். கட்சியை விட்டு மாறி விட்டார் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இதிலே கூலி விஷயத்திலே ஏற்படுகிற கிளர்ச்சியை இப்படி மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு, இது போன்ற வன்முறைச் செயல்களை அனுமதிப்பது போன்ற செயல்களை செய்வது எந்தக் கட்சிக்கும் நல்லது அல்ல என்பதைத் தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பெரியவர்களாக இருப்பவர்கள், தலைவர்களாக இருப்பவர்கள் தலையிட்டு இப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும், கோரிக்கையாகும் ...... (குறுக்கீடு).



1982 மார்ச் 27]

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது போன்று கட்சியை விட்டு மாறியதினாலேயே எந்த நடவடிக்கையையும் யாரும் எடுக்கக்கூடாது என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான அபிப்பிராயமும். ஆனால் வந்த பிரச்னை அதுவல்ல. அரசாங்கம் அல்லது முதல்வர் அவர்கள் தாங்கள் இயற்றிய சட்டங்களைப் பார்த்தாலே தெரியும். குறைந்த பட்சக் கூலி சட்டத்திலே, விளைவிக்கக் கூடியவை களில் மொத்தத்தில் 8-ல் ஒரு பங்கு, தமிழகத்தின் மற்ற மாநிலங் களில், 9-ல் ஒரு பங்கு கிழக்கு தஞ்சையில். தமிழகம் பூராவும் 8-லே ஒரு பங்கு என்று இருக்கும்போது, தஞ்சை மாவட்டத் திற்கும் 8-லே ஒரு பங்கே கொடுக்க வேண்டும் என்பதற்காக, தஞ்சை மாவட்ட விவசாயிகள் கிளர்ச்சி செய்கிறார்கள். 54 கலத்திலே 8-லே ஒரு பங்கு என்பதும், 9-லே ஒரு பங்கு என்பதும் எவ்வளவு என்று கணக்கு பார்த்தீர்களேயானால் தெரியும். ஒரு பங்கு குறைவாக இருக்கிறது. இதை பல நிலப் பிரபுக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அந்தக் குறிப்பிட்ட ஊரிலே உள்ளவர்கள் மட்டும்தான் தர முடியாது என்று, நிலச் சொந்தக் காரர்கள் சங்கம் வைத்து, எப்படியாவது இதை ஒடுக்கியே தீருவோம், உங்களுடைய இயக்கத்தை என்று ஆரம்பித்ததினால் தான் பிரச்னையே தவிர, ஏற்பட்ட சம்பவங்களை வைத்துக் கொண்டு வேறு விதமான முடிவுகளுக்கு அரசாங்கம் வரக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு கோர்ட்டிலே இருக்கும் போது அது சம்பந்தமாக எந்த முடிவுக்கும் நாம் வருவது போன்று பேசுவது கூடாது. ஆகவே அதைநீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசினார்கள். தேர்தலிலே ஒரு வாக்குறுதியை மக்களுக்குத் தந்தோம். இப் போது மைய அரசு முடியாது என்கிறது. நீங்களும் அதைச் செய்ய மாட்டேன் என்கிறீர்கள், ஆகவே உங்களுக்கு உள்ள கொள்கை என்ன ஆயிற்று, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தலிலே நாங்கள் கொடுத்த வாக்குறுதியை இரண்டாண்டுக் காலம் தொடர்ந்து நிறைவேற்ற முனைந்தோம் என்பதும் அதிலே 200 கோடி ரூபாய் வரையிலே அரசுக்கு இழப்பு இருந்தது என்பதும் இந்த நாடு அறியும். மன்ற உறுப்

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பினர்களும் அறிவார்கள். நான் முதலிலே சொன்னதைப் போல
இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் நீங்கள் விவசாயி
களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்பதும், மூன்று
மாதங்கள் கழித்து மீண்டும் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று
சொல்வதும், 6 மாதங்கள் கழித்து மீண்டும் வசூல் செய்து
கொள்ளுங்கள் என்று சொல்வதும் அதற்காகப் போராட்டம்
என்று சொல்வதும், எப்படி நியாயம் என்பது எங்களுக்கும் புரிய
வில்லை. ஆகவே ஒன்று மைய அரசு சொல்வது சரியல்ல என்று
சொன்னால் எப்படி ஒத்துழைப்போம் என்று முதலிலே முடிவு
செய்தோமோ அதே போல் அனைவரும் சேர்ந்து முடிவு செய்
வோம், அவர்களைக் கேட்போம், அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து
கேட்போம், வேறுபாடின்றி கேட்போம். விருப்பு, வெறுப்பற்ற
நிலைமையில் கேட்போம், உரிமையோடு கேட்போம், உறவோடும்
ழைக்க வேண்டுமே தவிர வேறு வகையிலே இந்த அரசு அதி
காரத்தை மீறுகிறது, மறந்துவிட்டது என்று மட்டும் தயவுசெய்து
குற்றம் சுமத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு
விவசாய சங்கத்தினருடன் விவாதித்து இருக்கிறார்கள்.
அரசாங்கமே அமைத்த உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்கள்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம்
விவாதித்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அந்தக் குழுவையே டெல்லிக்கு அனுப்பி அங்கே
இருக்கக் கூடிய அமைச்சரிடத்திலே இந்தக் கூட்டுறவுக் கடன்
களை ஜப்தி செய்து வசூல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்
கொள்வதற்காக அனுப்புவதாக அவர்கள் ஒத்துக் கொண்டார்
கள். அப்படிச் சொல்லி டெல்லியிலே போய் பேசிவிட்டு வந்த
தற்குப் பிறகு இதைப்பற்றி எல்லாம் பேசி முடிவு செய்யலாம்
என்று சொல்லி இருக்கிறார்கள். இதற்கிடையில் ஜப்தி
நடவடிக்கை வந்ததே அதைப் பற்றித்தான் பிரச்சினையே ஏற்
பட்டிருக்கின்றது. அப்படி டெல்லிக்குச் சென்று சந்தித்துப் பேசி
விட்டு வந்ததற்குப் பிறகு முடிவு செய்யலாம் என்ற சூழ்நிலை
யிலே 1 ப்ளஸ் 1 என்ற வகையிலே கொடுக்கலாம் என்றெல்லாம்
சில யோசனைகளைக் கூட வைத்திருந்தார்கள். ஆனால் அவை
பற்றி எல்லாம் அரசாங்கம் ஒரு முடிவு செய்யாமலேயே ஜப்தி
போன்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என்பதுதான்
அவர்களுடைய ஆட்சேபணை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்கள், விவசாயிகளிடம் இருந்து
இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை வந்தால் அதற்குப் பதில் சொல்
வதற்கும், எடுத்துச் சொல்வதற்கும் எங்களுக்கு வாய்ப்பு



இருக்கின்றது, ஆதாரம் இருக்கின்றது விவரம் தெரிந்தவர்கள்
அங்கே ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிந்த பிறகே இங்கே
கொள்கையை விட்டுவிட்டீர்களே என்று கேட்பது எப்படி நியா
யம் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

அடுத்து திருமெஞ்ஞானபுரம் துப்பாக்கிச் சூடு நடந்தது
பற்றி எல்லாம் இங்கே கூறி இருக்கிறார்கள் என்று சொல்லி
நான் சொன்ன வார்த்தைகளை ஒட்டுமொத்தமாகச் சொன்ன
கருத்தை, அந்த ஒரு நிகழ்ச்சியை ஒட்டிய கருத்தாக இங்கே
பேசினார்கள். நான் என்ன பேசினேன் என்பதை இங்கே
மீண்டும் நினைவுபடுத்த வேண்டிய அவசியத்துக்கு ஆளாகி இருப்
பதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இதை சொல்லித்
தான் ஆக வேண்டி இருக்கின்றது. நான் சொன்னது இதுதான்.
"திருமெஞ்ஞானபுரத்திலே துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதைப்
பற்றி எல்லாம் இங்கே கூறியிருக்கிறார்கள். அங்கேதான்
பிரச்சினையை முன்னால் வைக்க விரும்புகிறேன்" என்று கூறி
இருக்கிறேன். குற்றம் செய்கிறார்கள், குற்றம் செய்துவிட்டு
அவர்கள் தப்பிவிடுகிறார்கள், அப்படித் தப்பி விடுகிறவர்களைத்
தேட வேண்டிய பொறுப்பிலே அவர்கள் அங்கே இருக்கிறார்கள்.
கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்ய வேண்டிய பொறுப்பு
போலீசுக்கு இருக்கின்றது என்பதிலே நம்மில் யாருக்கும் ஆட்
சேபணை இல்லை. அதற்கு அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள்
அனாவசியமாக எடுக்கின்ற நடவடிக்கையாக இருக்குமே
யானால் அதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது
என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன்.
ஆனால் அப்படிப் போகிறவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி
அவர்களுடைய உயிரையே பலி வாங்குகின்ற அளவுக்குரிய நட
வடிக்கையாக இருந்தால் அதிலே இருந்து தற்காத்துக்கொள்ள
வேண்டாமா, காவல் துறையினர் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்,
அவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள், அது போல் சிலர்
இறந்து போய் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

அப்படி இறந்து போகிறவர்களுக்காக வருத்தப்படுகிறோம்.
நியாயமான காரணங்களுக்காக இறந்தார்கள் என்றாலும்
எதிர்க்கக்கூடிய நேரத்தில் இறந்தார்கள் என்றாலும், அப்படி
சில சமயங்களில் இறந்தவர்களைக் குறித்து, அவர்கள்
இந்த நாட்டுக்குத் தேவை என்று அவர்களுக்காக கண்ணீர்
விடுகிறோம். கட்சி சார்பற்ற மனிதர்கள். அதுமட்டு
மல்ல. வாழ வேண்டியவர்கள். இடைக்காலத்தில் சுடப்
பட்டிருக்கிறார்கள். இவ்வளவு அநீதி ஏற்படுகிறது.
இதற்காக போலீசாரிடம் பணியை ஒப்படைத்து விட்டு,
அந்தப் பணியைச் செய்கிற நேரத்தில், அதை நிறைவேற்ற
முடியாத அளவுக்கு, அவர்கள் நிலைமையை சமாதானப்

படுத்துவதற்கு அனுப்பப்படுகிறார்கள் என்று சொன்னாலும் கூட, தங்கள் உயிரைப் பாதுகாக்கின்ற நேரத்தில், உயிரைப் பாதுகாக்க, தப்பிக்கவைக்க என்ன செய்ய இனி என்கிற நிலையில், எனக்கு அறிஞர் அண்ணா முடியும் சொன்னது நினைவுக்கு வருகிறது. புழுவினால் அவர்கள் செய்ய முடியாது என்றாலும், திரும்பத் திரும்ப ஒன்றும் சித்தரவதை செய்து கொண்டிருந்தால், அது நெளிந்து அதைச் எதிர்ப்பை வெளிப்படுத்தும், ஒன்றும் செய்ய முடியவில்லை தன் என்றாலும், நெளிந்து தன் உடலின் வருத்தத்தை வெளிப் படுத்த முயலும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது எவ்வளவுதான் காவல் துறையை அமைதியைக் காக்கவேண்டும் என்பதற்காக, துப்பாக்கிச் சூடு கூடாது என்று சொன்னாலும்கூட, அவர்கள் சித்தரவதைக்கு உள்ளாகின்ற நிலைமைக்கு வந்த பிறகுதான், அவர்கள் தங்களை எப்படி காத்துக் கொள்ளாமல் இருக்க முடியும் என்றுதான், பேசியிருக்கிறேன். ஆகவே, அங்கு நடந்த நிகழ்ச்சியை ஒத்திட்டுப் பார்க்கவேண்டும். ஒட்டுமொத்த பணக், காவல் துறைக்கு ஏற்படுகின்ற பொறுப்பு, அதற்கு ஏற்படுகின்ற விபத்து, ஆபத்து இவைகளுக்கிடையே அவர்கள் ஆற்ற வேண்டிய காரியம், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்று நான் கூறியதை, பற்றிச் சொல்லிவிட்டேன். அதற்கு விளக்கம் தேவை என்று கேட்டார்கள். அதற்காகவே இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்...................

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவர் அவர்களே, திருமெஞ்ஞானபுரத்தில் நடந்த அந்தப் போலீஸ் தாக்குதல், அங்கே போலீஸ்காரர்கள் தாக்கினார்களே தவிர, முதலமைச் சர் அவர்கள் சொல்வதுபோல் அவர்கள் தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட்டார்கள் என்பது நியாயமான வாத மல்ல. ஆனால், என்னுடைய வாதம், அந்தக் கல் எறியப் பட்ட சம்பவம் நடைபெற்றது ரோடிலே ஆனால், அதற்குப் பிறகு தூரத்திலே இருக்ககூடிய கிராமத்திற்குள் சென்று, இந்த துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, இதற்கு நீதி விசாரணை வைத்தால், உண்மையான தகவல்கள்வெளிவரும். போலீஸ்காரர் கள் தாக்கினார்களா அல்லது வேறு வழியின்றி அவர்கள் துப்பாக்கி யால் சுட்டார்களா அல்லது தனிப்பட்ட இந்த சம்பவத் திற்காக அவர்கள் பழிவாங்கப்பட வேண்டும் என்று இப்படி கிராமத்திற்குள் போய் அக்கிரமமான முறையில் துப்பாக்கிச் சூட்டைச் செய்தார்களா என்பதெல்லாம் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். முதலமைச்சர் அவர்கள் முதலிலே கன்னியாகுமரியில் ஒரு ஆர்.டி.ஓ., விசாரணை என்று சொன் னார், ஆனால், நேரில் சென்று பார்த்த பிறகு



நீதி விசாரணைக்கு ஒப்புக் கொண்டார். அதைப்பேலை, இந்தப் பிரச்சினையில் அங்கே விவசாயிகள் இறந்திருக்கிறார்கள். அதைப் பற்றி நீதி விசாரணை தேவை. போலீஸ் வேறு வழி யில்லாமல் சுட்டார்களா அல்லது பழிவாங்கும் நோக்கத்தோடு, வேண்டுமென்றே சுட்டார்களா என்பதைக் கண்டறிய நீதி விசாரணை வைத்தால் உதவியாக இருக்கும் என்பதை நான் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட நிகழ்ச்சியைப் பற்றி விளக்கமாக இங்கே விவாதம் செய்யப்பட்டிருக்கிறது. மதச் சார்பற்ற பிரச்சினை அல்ல அது. ஒரு பொது வேலை நிறுத் தம் என்ற பெயரால் அங்கே நடந்த நிகழ்ச்சி என்பதை நாம் தயவு செய்து மறந்துவிடக் கூடாது. அரசு உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து, அந்த பொது வேலை நிறுத் தத்திற்கு ஒத்துழைப்பு தரக்கூடாது என்ற முடிவிற்கு வந்த பிறகு, ஒரு சிலர் அந்த நிபந்தனைகளை மீறி, இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அந்த அளவுக்கு சூழ்நிலையை உருவாக்கினார்கள் என்றால், இதற்கும் ஒரு நீதி விசாரணை இப்போது வேண்டுமென்றால், அது எப்படி நியாயம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீதி விசாரணை வைக்கக்கூடாது என்பது என்னுடைய எண்ண மல்ல ஒன்றுக்கு, பத்து நீதி விசாரணை வைக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், எந்த அடிப்படை யில் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பதை நாம் சந்தித்துப் பார்க்கவேண்டாமா? பொது வேலை நிறுத்தம் கூடாது, வேண்டாம் என்று இந்தியா முழுவதும் ஒட்டுமொத்தமாக அனைத்து அரசுகளும் ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இந்த அரசும் முடிவெடுத்திருக்கிறது. அதற்கு ஒத்துழைத்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், இதர கட்சித் தலைவர் களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல கட்சிகளும் ஒத்துழைப்புத் தந்தன. ஆனால், வன்முறையில் இறங்கி, பேருந்துகளை எரித்து அந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற மக்களுக்கு அபாயம், ஆபத்து விளைவிக்கின்ற நிலைமை அல்லது அங்கே போகின்றவர்களைத் தாக்குவது, அவர்களுக்கு உயிர் சேதத்தை விளைவிப்பது, அவர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப் படுகின்ற நிலைமை போன்றவைகள் எல்லாம் ஏற்பட்டதற்குப் பிறகு, இதை யார் செய்தார்கள். எந்த ஊரில் செய்தார் கள் என்று அவர்கள் தேடிச்செல்லும்போது, தாக்கப்படுவது, சுடப்படுவது என்கிற நிலைமை ஏற்படுமானால், அதற்கு நீதி விசாரணை என்று வந்தால், ஒரு முடிவே இருக்காது. இப் போது விசாரணை நடத்தப்படுகிறது. அதற்குப் பிறகு அந்த விசாரணை பயன் அற்றது என்று இந்த மாமன்றம் முடிவு செய்யுமென்றால் அதற்குப் பிறகு பரிசீலிப்பதற்கு இந்த அரசு நிச்சயம் பின்வாங்காது.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வுக்கும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க அரசுக்கும் அந்த வேலை நிறுத்தம் சரியல்ல என்ற கருத்து இருந்தது, அது அவர்களுடைய உரிமை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய சில கட்சிகளும் பொறுத்தவரையில் அது சரியானது என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலே உள்ள மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய அரசாங்கங்கள் அது நியாயமானது என்று கூறியது. அந்த கருத்து வித்தியாசத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. அப்படிக் கருத்து வித்தியாசம் இருந்தாலும்கூட ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றபோது அங்கே நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் நியாயமானதா இல்லையா என்பதுதான் கேள்வி. துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது நியாயம் என்று நீதிபதி கூறினால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார், ஆனால் நியாயமல்ல என்று சொன்னால் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். பிரச்சினை அதுதானே தவிர பொது வேலை நிறுத்தம்பற்றி ஆளுங்கட்சிக்கும் மற்ற கட்சிகளுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்ததுபற்றியல்ல. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு போதுமான காரணம் இல்லை என்பது எங்களுடைய அபிப்பிராயம் வேண்டுமென்றே செய்யப்பட்டது அதற்காகத்தான் நீதிபதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம். ஆர்.டி.ஓ விசாரணையில் பங்கெடுத்துக்கொள்வதில்லே என்று அங்கே இருக்கின்ற விவசாய சங்கங்கள் முடிவு எடுத்து இருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் உள்பட துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் உள்பட அங்கேயிருந்து மாற்றப்படவேண்டுமென்று கேட்டு அதுகூட செய்யப்படவில்லை. ஆகவே அதிலே அனைவரும் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை. பிரச்சினை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நியாயம் இருக்கிறதா என்பதுதான். அதை விசாரிப்பதற்கு நீதிபதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறோமே தவிர 19 ஆம் தேதியினுடைய அரசியல் நோக்கத்தைப் பற்றியதல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, எந்த ஒரு காரியமும் காரணம் இல்லாமல் இருக்க முடியாது. ஒரு நோக்கம் இன்றி ஒரு காரியம் செயல்பட முடியாது. ஆகவே வேறு நோக்கம் இல்லை என்று சொன்னால் அந்தப் பேருந்துகளை நிறுத்தவேண்டிய அவசியமில்லை. வேலை செய்ய விரும்புகிறவர்கள் வேலை செய்கிறார்கள். வேலை செய்ய விரும்பாதவர்கள் வேலை செய்யாமல் இருந்து விடுகிறார்கள். ஆனால் வேலை செய்கிறவர்களைத் தடுக்க போகும்பொழுதுதான் நிலைமைகள் மாறுபடுகின்றன. ஆகவே நிலைமை என்ன என்றால் யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எத்தனை கட்சிகள் மற்றவர்கள் யார் அதிலே உடன்பட்டாலும் உடன்படாவிட்டாலும் வேலை நிறுத்தம் நடந்தே தீர வேண்டுமென்ற நோக்கத்தின் விளைவாக

[1982 மார்ச் 27

திரு. நா. சுந்தரராஜ்: வரவேற்கச் சென்றவர்கள் யாரும்
அந்த பஸ்களைக் கொளுத்தவில்லை என்பதை நான் திட்ட வட்ட
மாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : சிவாஜி கணேசன் அவர்களை
வரவேற்பதற்காக நடந்த சம்பவத்திற்கும் திருமெஞ்ஞானம் சம்
பவத்திற்கும் மலைக்கும் மடுவுக்கும் போல் வித்தியாசம் இருக்
கிறது. நடந்தது சிறிய நிகழ்ச்சி, கிராமத்திலே உள்ள நிலப்
பிரபுக்கள் விவசாயத் தொழிலாளர்கள் இயக்கத்தை இதைக்
காரணமாகப் பயன்படுத்தி அழித்துவிடவேண்டும் என்பதற்காக
செய்யப்பட்டிருக்கின்ற காரியம் என்று நாங்கள் சொல்கிறோம்.
அதிலே போலீசார் உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை
என்பது தான் எங்களுடைய அபிப்பிராயம். கிராமத்தின் உள்ளே
போய் சுட்டியிருக்கிறார்கள். அதற்கான அடையாளங்கள் இருக்
கின்றன. ஆகவே, தமிழ் நாடு அரசாங்கம் இப்படிப்பட்ட சூழ்
நிலையில் அங்கே நடந்திருக்கிற துப்பாக்கி பிரயோகத்தில்
போதுமான நியாயம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்கு
நீதி விசாரணை ஏற்பாடு செய்தால் அது அவர்களுக்குத் தானே
நல்ல பெயரை கொடுக்கும்.

[பிற் பகல் 12-30]

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, 19 ஆம்
தேதி நடந்த அந்தப் பொது வேலை நிறுத்தத்திலே கூட திருத்
துறைபூண்டியில் 8,052 எண்ணுள்ள பேருந்தில் சிவாஜி ரசிகர்
மன்ற இளைஞர்கள் சவுக்கு கட்டைகளை வைத்துக் கொண்டு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதுப் பிரச்சினைகள்
எல்லாம் வேண்டாம். உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்ன
சம்பவத்தைத் தொடர்ந்து சொல்வீர்களோ என்று நினைத்தேன்.
நேரம் ஆகிவிட்டது. புதுப் பிரச்சினை வேண்டாம்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, திருமெஞ்
ஞானம் கிராமத்தில் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது,
காவல் துறையினர் தாக்கப்படுகிறபோது அந்த சம்பவம் நடந்த
தாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடந்தால் பிரச்சி
யில்லை. அந்த சம்பவம் நடந்த இடம் பாலம். அதிலே திரு
மெஞ்ஞானம் அரிசன கிராமம் 2 மைல்கள். சுடப்பட்ட இரண்டு
பேரும் அரிசன தெருவுக்குள்ளே தான் சுடப்பட்டிருக்கிறார்கள்.
அதற்காகத்தான் சொல்கிறோம், நீதி விசாரணை வேண்டுமென்று.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர்
அவர்களே, நான் மெஞ்ஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்கும் போக
திலிருந்து கொஞ்சம் தப்பித்துக் கொண்டு வேறு பிரச்சினைக்கு
போகலாம் என்று நினைத்தால் இடையில் மாண்புமிகு நெடுமாறன்



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அவர்கள் ஒரு புதிய கரடியை கொண்டு வந்து விட்டு விட்டார்
அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ யாருக்கோ
நாங்கள் சலுகை காண்பிக்கிறோம் என்றும், மற்றவர்களுக்கு
எதிராக துப்பாக்கியை பயன்படுத்துகிறோம் என்றும், ஒரு சந்
தேகத்தை தேவையில்லாமல், அவருக்கே நம்பிக்கையில்லாமல்
இந்த சம்பவத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளார். இதை
சொல்லி யாரை தாக்கினால் அவர்கள் மனதிற்கு திருப்திகரமாக
இருக்குமோ அதை சொல்லிக் கொள்வதற்கு இதை பயன்படுத்திக்
கொண்டதை எண்ணி நான் வியப்படைகிறேன். சிவாஜி கணே
சன் அவர்கள் வந்தபோது என்ன நடந்தது என்பதை புள்ளி
விவரத்தோடு சொல்வதற்கு வைத்துக் கொண்டிருக்கிறேன். இது
பற்றி அந்த நேரம் வருகிறபோது சொல்கிறேன்.

துப்பாக்கி சூடு நடக்கிற போது, அந்த அதிகாரிகள்
யார் காங்கிரஸ் காரர்கள் யார் கம்யூனிஸ்ட்கள் என்று
பார்த்து—கல்லெறியும், சோடா பாட்டில்களும் வருகிற
போது சுட முடியுமா ? எப்படிப்பட்ட குறி
பார்த்து சுடக்கூடியவனாக இருந்தாலும், நிமிடத்திற்கு
ஒருமுறை சுட பழகிக்கொள்ளக்கூடிய அளவில், தொடர்ந்து 24
மணி நேரமும் சுட்டுக் கொண்டே இருந்தாலும் கூட, கூட்டத்திற்கு
மத்தியிலே, அந்த பக்கமும் இந்த பக்கமும் அலைக்கழிக்கிற
போது பிரித்து பார்த்து சுட முடியுமா என்பதை தயவு செய்து
நெடுமாறன் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு
எதிர்க் கட்சித் (துணைத்) தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்.
கட்டி வைத்து சுட்டால் தான் ஒருவேளை அப்படி சுடலாம்
என்கிறார். உண்மையிலேயே இந்த சம்பவங்கள் வேதனையை
தருகின்றன. மூன்று பேர்கள் இறப்பது என்று சொல்வது சாதா
ரணமானது அல்ல. மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்கிற
போது அந்த இடத்தில் என்னுடைய படம் உடைக்கப்பட்டிருந்தது
என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே இருந்தவர்களில் என்
னிடம் அன்பு உள்ளம் கொண்டவரும் அங்கே இருந்திருக்கிறார்
என்பது பொருள். அப்படி நடந்திருக்கிறது என்றால் எப்படி
கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிக்க வேண்டும் அல்லது அந்த தொழி
லாளர்களை ஒழிக்க வேண்டும், அல்லது விவசாயிகளை தாக்க
வேண்டுமென்று யாரோ பணக்காரர்கள் செய்த சூழ்ச்சியில் இவர்
கள் சிக்கிக் கொண்டு அப்படிப்பட்ட காரியத்தை செய்தார்கள்
என்று நாம் கணக்கு பார்க்க முடியும். அதே போல்தான் இப்
பொழுது சொல்கிறேன். உண்மையோ, பொய்யோ, விசார
ணையில் தான் தெரியும். கன்னியாகுமரியில் சுடப்பட்டு
செத்த 4 பேர்களில் 3 பேர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
வைச் சேர்ந்தவர்கள் என்று கூடச் சொன்னார்கள். அவர்களைப்
பார்த்தா சுட்டிருக்க முடியும் ? அப்படியானால், அந்தப் போலீஸ்
காரர்கள், அதிகாரிகள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மீனவர்கள், அதாவது கிறிஸ்தவர்
களைச் சுட வேண்டுமென்றா தேடிக் கொண்டிருந்தார்கள்.
நடப்பது அது அல்ல. நாம் விரும்பியது அல்ல நடப்பது.
நாம் விரும்பாததுதான் நடைபெறுகின்றது. அது
நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் நான் பணிவோடு

வட்டி 7 சதவீதம். அங்கத்தினர் இறந்தால் வாரிசுக்கு கிடைக்கும் இன்ஸ்யூரன்ஸ் தொகை ரூ. 3,000. இது 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தரப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இறந்த அங்கத்தினர்களின் வாரிசுக்கு கிடைக்கும் உதவித் தொகையை மேலும் அதிகரிக்கும் வகையில் ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நெசவாளர்கள் வீடு வசதித் திட்டத்தின் கீழ் 1982–83-ல் 1,000 வீடுகள் கட்டுவதற்கான ஒரு முயற்சியை நாம் எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலக் கைத்தறி வாரியம் ஒன்றை அமைத்து கைத்தறி நெசவாளர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு அளிக்கும் வகையில், 1981 ஆம் வருடத்தின் தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வேறு விதித் துறைகள்) என்னும் சட்டம் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்படி புதிய சட்டம் செயல்படுத்தவும், கவனிக்கவும், தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு தேவையான உதவிகளை அளிக்கவும் தமிழ்நாடு அரசு மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்க ஆலோசித்து வருகிறது. விதிகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இப்போது வாரியம் அமைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அந்த ஆக்டில் அப்படிப்பட்ட வாரியம் அமைக்க எந்தவிதமான ப்ரொவிஷனும் கிடையாது என்று நினைக்கிறேன். ஆகவே, சட்டத்தில் ப்ரொவிஷன் இல்லாத நிலையில் இப்படி புதிதாக ஒரு அமைப்பு ஏற்படுத்துவதால் அது சட்டப்படி சரியல்ல என்ற ஒரு பிரச்சினை உருவாகும். ஆகவே, அப்படி அமைப்பது சரியல்ல என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கிளாரிபை செய்தால் நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, சட்டத்தை இப்போது அமுலுக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். அதற்கு வேண்டிய விதி முறைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதுவரையில் விதிமுறைகள் பயன்படுத்தாமல் அமுல்படுத்தக்கூடிய விதிகள் அமல்படுத்தப்படும். விதிமுறைகள் இருந்தால் தான் அமுல்படுத்த வேண்டும் என்ற நிலையில் உள்ள விதிகள், விதிமுறைகள் அமலுக்கு வந்தவுடன் (பப்ளிஷ் செய்தவுடன்) பின்பற்றப்படும். வாரியம் தனியாக அமைத்த பிறகு, அதற்குத் தகுந்த வகையில் அதிகாரம் கொடுக்கலாம். அதுவரையில், இந்தத் துறைதான் அந்தச் சட்டத்தை



திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அரிசன மக்கள் அரசியல் கட்சிகளில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். பெரும்பாலான மக்களான அரிசன மக்களுடைய தொகுதிகளிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அதிலே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தமாகும்? அவர்களுக்கு அரசியலிலே பங்கெடுக்க உரிமை இல்லையா? அவர்களும் மற்ற மக்களைப் போல பல்வேறு கட்சிகளிலே இருக்கிறார்கள். அவர்கள் அரசியலிலே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் மற்ற மக்கள் சிக்காமல் இருக்கிறார்களா? அது அல்ல பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒரு அபிப்பிராயம் இருக்குமேயானால் அதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அவர்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் போராடுகிறபொழுது, அந்தப் போராட்டங்களில் அரிசன மக்களுக்கும் மலைவாசி மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசியல் கட்சிகளுடைய கடமை, அவர்களுடைய உரிமைகளை, சமுதாய ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ எதிர்ப்பவர்களைத் தடுக்க வேண்டியது நம்முடைய கடமை. அந்தக் கடமைகளைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இங்கே இருக்கக்கூடிய காந்தி காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் செய்கின்றனவே தவிர அவர்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது பொருத்தம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திரா காங்கிரஸ் உட்பட என்று சொல்லுங்கள், இல்லையானால், இளையபெருமாள் எழுவார்.

*திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே, என் பெயரைச் சொன்னதற்காக நன்றி சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது மிக இரக்கத்தோடும் உண்மையைத் தெளிவுபடுத்தியதற்கு நன்றி சொன்னாலும், இன்றைக்குச் சட்டங்கள் போடப்பட்டும், குறைந்த பட்சக் கூலிச் சட்டம் இருந்தும், கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தாங்கள் சொல்லிய வாக்குறுதியாக சட்டத்தைக் கொடுத்தாலுங்கூட, நடைமுறையிலே கிராமப் பகுதிகளிலே நடைபெறவில்லை. அதை நடத்த வேண்டிய அதிகாரிகள் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக, தென் ஆற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலே இந்த அவல நிலைக்குக் காரணம், ஏழ்மையாக, வறுமையாக இருப்பதுதான். அரசியல்வாதிகள் நிச்சயமாகத் தங்கள் வலையில் சிக்க வைக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சங்கரய்யா போன்றவர்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டுமென்பதிலே ஆட்சேபணை செய்ய மாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

திரு. என். சங்கரய்யா : காங்கிரஸ் கட்சி வேண்டுமானால் அப்படி அரிசனங்களைச் சிக்க வைத்து இருக்கலாமே தவிர, நாங்கள் அவர்களுடைய விடுதலைக்காகப் போராடுகிறோமே தவிர அவர்களைச் சிக்க வைக்க விரும்பவில்லை. அதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய கட்சியி னுடைய அனுபவம் அப்படி. நாங்கள் அதிலேயிருந்து மாறுபடு கிறோம். எங்களைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர் மாவட்டத் திலே தோழர் பி. சீனிவாசராவ் ஆரம்பித்த இயக்கத்திற்குப் பிறகுதான் சாணிப்பால் குடிப்பதிலேயிருந்து விவசாயப் பெரு மக்கள் காப்பாற்றப்பட்டார்கள் ; அரிசன விவசாயத் தொழிலா ளிகள் காப்பாற்றப் பட்டார்கள். அந்த இயக்கத்தின் அடிப் படையிலே அவர்கள் ஆதரிக்கிறார்களே தவிர இதிலே சிக்க வைப்பதற்கு என்ன இருக்கிறது ? உண்மையிலேயே தொழிலா ளிகளும், விவசாயிகளும் சேர்ந்தால் இந்த நாட்டிலே ஜனநாயகத் திற்குப் போராடுவதற்காக முன்னணியில் நிற்பார்கள். ஆகவே, அவர்கள் சிக்கவில்லை. வர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் களுக்குப் பொது அறிவு இருக்கிறது. அவர்கள் சிக்க மாட்டார்கள். தங்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற இயக்கங்களில் மேலும் மேலும் சேர்வார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் சொல்கிறபொழுது பொது அறிவையும் சொன்னார்கள் ; சிக்க வைக்க மாட்டோம் என்றும் சொன்னார்கள் ; விடுதலை என்றும் சொன்னார்கள். ஒரு சின்ன உதாரணத்தை நான் இங்கே சொன்னால் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். உண்மையைச் சொல்வதால் பல சங்கடங்களை அனுபவித்தேன் என்ற முறையிலே இப்பொழுது சொல்கிறேன். மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நேற்று முன் தினம் ஒரு கடிதம் கொடுத்தேன். அந்தக் கடிதத்தில் நண்பர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் வாங்கிக் கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தின் பேரால்தான் இளைய பெருமாள் உள்பட 15 ஆண்டு எம்.பி.யாக இருந்திருக்கிறார். 5 ஆண்டுகள் எம்.எல்.ஏ.வாக இருந்திருக்கிறார் என்ற நிலைமை வந்தது என்று தெரிந்தும்கூட பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அதில் கையெழுத்துப் போட்டார். ஆனால் அதைச் சார்ந்து வந்திருக்கின்ற, அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், உண்மை யான பங்கை முதலமைச்சரவர்களிடத்திலே கேட்கின்ற கடிதத் திலே கையெழுத்துப் போடவில்லை என்பதை நான் பெயரை சொல்லாமல், தனியாகச் சொல்வேன் என்று சொல்லி, கொத் தடிமை முறை இருக்கிறதா இல்லையா என்பத நான் அவருக்குத் தனியாக விளக்கம் கொடுப்பேன் என்பதை இப்பொழுது சொல்லிக் கொள்கிறேன்.



திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு திரு. இளயபெருமாள் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்னிடத்திலே எந்தப் பிரச்னையையும் அவர்கள் சொல்லவில்லை. எந்த உறுப்பினர்கள் அதிலே கையெழுத்துப் போட மறுத்தார்கள் என்பதை ஒன்றும் சொல்லாமல் மர்மமாகச் சொல்வதால் பிரயோசனம் இல்லை. மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் அரிசன மக்களுக்கு நாடாளுமன்றத்திலே, சட்டமன்றத்திலே, அரசு உத்தியோகத் திலே, கல்வி நிலையங்களிலே அவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். நான் சொல்ல விரும்புகிறேன். பஞ்சா யத்துக் தேர்தலிலேகூட முதலமைச்சரவர்கள் கூட்டிய அந்தச் சர்வக்கட்சிக் கூட்டத்திலேகூட ''ரிசர்வேஷன்'' என்ற கொள்கையிலே உறுதியாக நின்றவர்கள் நாங்கள். வேறு சில கட்சிகள் அதைப்பற்றிக்கூட சில சந்தேகங்களுக்கு ஆளானார்கள். ஆனால் இன்றைக்கு நாங்கள் வற்புறுத்துகிறோம். அந்த ரிசர்வ் வேஷன் எப்படிப் பஞ்சாயத்துத் தேர்தலில் நடைபெற வேண்டு மென்று. ஆகவே, அரிசனங்களின் நலன்களையும், ஆதிவாசி களின் நலன்களையும் பாதுகாப்பதிலே மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் நிற்கிறது. காரணம், அது தமிழகத்தின் மக்களுடைய உண்மையான முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்ற நோக்கத்தின் காரணமாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இரண்டு கட்சிகளும் முன்னணியில் நிற்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நீங்கள் அப்படி நில்லுங்கள் என்றுதான் சொல்கிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு எல்லாக் கட்சிகளும் நன்மை செய்ய விரும்புகின்றன. (குறுக்கீடு). அது வேறு விவகாரம். இப்பொழுது முதல்வரவர்கள் பேசி முடித்தால் போதும் எனக்கு. உடல் நலக் குறைவிலேயும் இவ்வளவு நேரம் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பதிலைக் கேட்டு முடித்து விட்டால் போதும் என்று சொல்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர் களே, திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதற்காக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்கார் உத்தரவானது, There is a Reservation even in Promotion என்று மத்திய அரசு உத்திரவு இருக்கிறது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய டிரேட் யூனியனில் இருப்பவர்கள் அவர்களுக்கு புரமோஷனிலே கொடுக்கக் கூடாது என்று அந்த நிலைமையை எதிர்த்திருக்கிறார்கள், எல்லா ட்ரேட் யூனியனிஸ்டும் எதிர்த் திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதோடு, நாங்கள் முதலமைச் சரவர்களிடத்தில் கொடுக்கின்ற விண்ணப்பமாக வேண்டுகோள் கொடுத்தபொழுது, ஏழை மக்களுக்கு பொருளாதாரத்தில் முன்னுக்கு வருகின்ற விதத்தில் பஸ்கள் கொடுக்கின்றபொழுது உதவி செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்டேன். அதில் கம்யூனிஸ்ட் நண்பர்களும் போட்டார்கள் என்பதையும்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 27

சொன்னேன். ஆனால் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த நண்பர்கள் போடவில்லை என்பதிலே, சகோதரர் உத்திராபதி அவர்களே இந்தச் சபையிலே ஒத்துக் கொண்டார்கள். போட மறுத்தேன் என்பதையும் ஒத்துக் கொண்டார்கள். இந்த அவல நிலைமையைச் சொல்வதற்காகச் சொன்னேனே தவிர வேறொன்றும் தனித்து சங்கரய்யா மேல் எதிர்ப்பாகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: ஏதாவது மார்க்சிஸ்ட் கட்சி சார்பிலே கையெழுத்து போட வேண்டுமென்றால் அதனுடைய கட்சியின் தலைவரை இளையபெருமாள் போன்றவர்கள் அணுக வேண்டுமே தவிர உறுப்பினரிடத்திலே கேட்டால் என்ன செய்ய முடியும். அவர்கள் சொல்வது எனக்கு இப்பொழுது புதிதாக இருக்கிறது. ரிசர்வேஷன் என்ற கொள்கையைப் பற்றி ரெக்ரூட்மெண்ட் அடிப்படையிலே உறுதியாக இருக்கிறது. மற்றத் தொழிற்சங்கங்களைப் பற்றிக் கேட்டால் தொழிற்சங்கங்களில் என்ன முடிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துதான் நான் பேச முடியும். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய ஐ.என்.டி.யூ.சி.யினுடைய சில முடிவுகளைப் பற்றியெல்லாம் நான் சொன்னால் அவர்களால் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உள் விவகாரங்களைப் பற்றிப் பேசினால் நான் முடிவு சொல்ல முடியுமா அல்லது முதலமைச்சர்தான் பதில் சொல்ல முடியுமா? இரண்டு கட்சிகளும் தனிப்பட்ட சுதந்திரம் உள்ள கட்சிகள். ஆகவே, பொதுப் பிரச்சினை ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பி நான் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் முதலிலே பேசி இருக்கின்ற பலருக்கு நான் இன்னும் சரியாக பதில் சொல்லவில்லை. புள்ளி விவரங்களை எல்லாம் சொல்லியாக வேண்டும். அதிலே ரகுமான்கான் மாத்திரம் 10, 15 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதேபோல திரு. துரைமுருகன், திரு. குமரி அனந்தன், திரு. நெடுமாறன் இவர்கள் போன்றவர்கள் எல்லாம் பல பேர்கள் கேட்டிருக்கிறார்கள். அதேபோல பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கெல்லாம் பற்றிக் கேட்டிருந்தால் பொதுவாகச் சொல்லிவிடலாம். அதிலே கொள்கை குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்கு என்னுடைய பதிலில் இப்படி நடந்திருக்கிறதா, அது உண்மையா பொய்யா என்று சொல்லுங்கள். ஆனால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்கும்போது நான் பதில் சொல்லாமல் இருந்து விடுவது சரியாக ஆகாது.



1982 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இன்று கொத்தடிமையைப் பற்றிச் சொல்லும்போது கொள்கையாக நான் சொல்லியாக வேண்டிய கடமையிலே இருக்கிறேன். எனக்கு அதிகமாக ஐயா அவர்களுடைய கொள்கையைப் பற்றி மிகப்பெரிய அளவிலே விளக்கம் சொல்ல முடியாது என்றாலும் அவர்களுடைய கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆதிதிராவிடர்கள் ஆக்கப்பட்டால்தான், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தால்தான் அவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட முடியும் என்பது என்னுடைய கருத்து என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்த மதத்திற்கும், எந்த ஜாதிக்கும் அவர்கள் சிக்காமல், எந்தக் கொள்கைக்கும் எடுபிடி ஏவலர்களாக இல்லாமல், சுயமாக சிந்தித்து அவர்களே முடிவெடுத்து அவர்களே ஒரு காரியத்தில் இறங்கவேண்டும் என்று விரும்புவார்களேயானால் அதற்கு ஆசை அணுகுவது அல்லது மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி முடிவு செய்து, என்பது போன்ற ஒரு முயற்சிக்கு அவர்களை நாம் வளர்ப்பது, வளர்த்துவிடுவது நம் ஒவ்வொருவருடைய கடமை என்று கருதுகிறேன். கொத்தடிமை முறை என்று மீண்டும் சொல்வதற்குக் காரணம் அச்சுறுத்துவதிலே வாழ்கின்ற மக்கள் இந்த நாட்டிலே யாரும் இருக்கக் கூடாது, எந்த ஜாதியிலும் எந்த மதத்திலும் இருக்கக் கூடாது என்பது என்னுடைய கொள்கை என்பதை இங்கே தெள்ளத் தெளிவாக சொல்லிக் கொள்கிறேன். ஆனால் சில கிராமங்களில் இப்போது ஆதிதிராவிட மக்கள் அச்சுறுத்தப்படுகின்ற நிலைமையிலே வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்கள் ஏதாவது சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றால், அவர்களை இயக்குகின்றவர்கள் யாரோ அவர்கள் சொல்லுகிறபடி செய்து ஆக வேண்டும். இல்லை என்றால் அவர்கள் அங்கே வாழமுடியாது என்கிற நிலைமை, அந்தச் சூழ்நிலை மாறியாகவேண்டும். இதற்கு அரசு தக்க வழிகண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதோடு இன்னொன்று. ஆதிதிராவிட மக்களுக்கு என்னென்ன நல்ல வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று யார் விரும்பினாலும் அதை மனம் விட்டு பேசலாம். அதைப் பற்றித் திட்டங்கள் தரலாம். நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற முடிவுகளுக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம், அதை மாற்றியாக வேண்டும் என்றாலும் கூட அதை பேசி தீர்மானிப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இதை நான் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறுவதற்கு சில அனுபவங்கள் எனக்கு இதற்கு முன்னாலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால்தான் கூறுகிறேன். தர்மபுரியானாலும் சரி, வடஆற்காடு ஆனாலும் சரி, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற இடமானாலும் சரி, அல்லது வேறு எங்கு இருந்தாலும் ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பெரியார் இயக்கத்திலே சேருவதற்கு

நான் சொல்லவில்லை. அந்தப் பிரச்சாரத்தை
இங்கே பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால் நான்
கையை அவர்கள் ஏற்றுக் கொண்டு ஆகவேண்டும். இந்தக் கொள்
யல் கட்சியானாலும், எந்த ஜாதிபேர் சொல்லி எந்த அரசி
களாக இருந்தாலும், அரசு உதவி செய்கிறது : அங்கே வருபவர்
ஆதரவு தாருங்கள் என்றோ, அந்த நிலைமை அதற்கு நீங்கள்
சூழ்நிலையிலே ஆதி திராவிட மக்கள் வாழ்ந்தாக இல்லாத ஒரு
நான் விரும்புகிறேன். எங்கள் பக்கத்திலேதான் வேண்டும் என்று
ஆதி திராவிட மக்கள் அதிகம் இருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட
இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது என்று சொல்லி
சொல்லுகிறேன் என்றால் என்ன காரணம் நான் இதைச்
கொள்ளவேண்டும். எங்களுக்கு ஆதிதிராவிட என்பதைச் தெரிந்து
ஆதரவு இருக்கிறது, அதிக உறுப்பினர்கள் மக்களிடம் அதிக
இருக்கிறார்கள் என்கிற நிலையினை நான் தேர்ந்தெடுக்கப்பட்டு
இங்கே வெளியிடுகிறேன் என்றால் அதற்குள்ள இந்தக் கொள்கையை
இப்போது நாட்டிலே ஆங்காங்கே ஒரே ஒரு காரணம்
மற்ற ஜாதியினருக்கும் ஏற்படுகின்ற ஆதிதிராவிட மக்களுக்கும்
கட்சிகள் தங்களை வளர்த்துக் மோதல்கள் எல்லாம், சில
பயன்படுத்துகிறார்கள் என்பதுதான். கொள்வதற்காக இவைகளைப்

அதேபோல மற்றக் கட்சியைச் சேர்ந்த மக்கள் மற்றவர்களை
ஜாதி இந்துகள் என்ற பேரால் பயன்படுத்திக் கொள்ளுகிறார்
கள் என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.
ஆகவேதான் இந்த நிலையில் இந்தக் கொத்தடிமை நிலையை
வேறு வழியில் ஒழிப்பதோடு இதையும் ஒழித்து ஆகவேண்டும்
என்று நான் கூறிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50.]

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களுடைய
கொள்கையை தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே உள்ள மக்கள்,
ஒடுக்கப்பட்ட நிலையிலே உள்ள மக்கள், அந்தக் கொள்கையை
ஏற்றுக்கொண்டால், தலை நிமிரலாம் அவர்கள், அந்தக் கொள்
கையை ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் அந்தக் கொள்
கையை பின்பற்றவேண்டும் என்ற அடிப்படையிலே
லட்சிய உணர்வோடு எடுத்துச்சொன்ன நேரத்திலே நான் மகிழ்ச்சி ஒரு
அடைந்தாலும் கூட, ஒருவேளை மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் சொன்னது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும்தான்
என்று எண்ணம் ஏற்பட்டுவிட்டால் மற்ற சமுதாயத்திலே உள்ள
வர்கள், தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையை ஏற்
காமல், வைதிக நெறியிலே அல்லது மத உணர்வோடோ அல்லது
ஜாதி உணர்வோடோ இருப்பார்களேயானால், பெரியார் அவர்
களுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள, தாழ்த்தப்பட்ட
மக்கள் சமுதாயத்திலே இன்னும் கடுமையான தாக்குதலுக்கோ



அல்லது மாறுதலுக்கோ ஆளாக நேரிடும் என்ற காரணத்தால், தாழ்த்தப்பட்ட மக்கள், தலை நிமிர்வதற்கு, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை, அவர்களை தலை நிமிர வைப்பதற்கு ஒத்துழைப்பதற்காக, மற்றவர்கள் எல்லாம், தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றுகிற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு கருத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு ஆளும்கட்சித் தலைவர் என்ற முறையில், அந்த முறையில் சமுதாயத்திற்கு வேண்டுகோள் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கை, விளக்கம், நியாயமானது என்பதிலே மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் ஆதி திராவிடர்களுக்கு என்று தனிப்பட்ட பாதுகாப்பு வசதிகள் சலுகைகள் தரவேண்டிய நிலையிலே, நாம் இருக்கும்போது, சில ஜாதி இந்துக்களுக்கும் ஆத்திரம் ஏற்பட்டுவிடும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களை வேறுவேறு இனத்தை, ஜாதியைச் சேர்ந்தவர்கள் தூண்டுவதும், நீங்கள் எல்லாம் இங்கே இருக்கின்றீர்கள், நாங்கள் எல்லாம் நம்பிக்கை வைக்கிறோம் உங்களுக்கு எல்லாம் என்ன ஒரு சாதாரண மக்கள் சொல்வார்களானால், அந்தக் கேள்விக்கு நம்முடைய பதில் இல்லை. உதாரணத்திற்காக, 1978-ல் என்று கருதுகிறேன். நான் அமெரிக்கா போய்விட்டு வந்த பிறகு திண்டுக்கல் பகுதியிலே சென்று அங்கே உள்ள கொடகனாறு அணைக்கட்டு உடைந்த பின்னாலே, ஏற்பட்ட விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கு சென்றபோது, ஒரு குடும்பத்திலே கேட்டார்கள். அந்த மக்கள் ஆதிதிராவிட மக்கள் அல்ல. ஆனால் கேட்டார்கள் எங்களுடைய வீட்டைப் பாருங்கள், ஓட்டுவீடுதான். அதன் சுவரும் இடிந்துவிட்டது, மேல் கூரையும் கீழே விழுந்துவிட்டது. இங்கே நாங்கள் வசிக்க முடியாது, இதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் அவர்களுக்கு இல்லை என்றால் கொடுக்கிறீர்கள், பணம் கொடுக்கிறீர்கள், துணி வாங்கிக் கொடுக்கிறீர்கள், அரிசி கொடுக்கிறீர்கள், ஆனால் எங்களுக்கு என்ன நிலைமை என்று அவர்கள் கேட்டார்கள். இதை வைத்துத்தான், சட்டசபையிலே, அப்படிக் கேட்டவர்களுக்கு முன்னால், இந்தக் கருத்தை வலியுறுத்தி, அப்படி கேட்டவர்களுக்கு, இங்கே என்ன சொல்லப் போகிறோம் என்பதை நான் வெளியிட்டேன். ஆகவே, ஒட்டு மொத்தமாக ஒரு கருத்தை வெளியிடும்போது, அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா, என்பதைவிட யார் அடித்தளத்திலே அந்தக் கருத்திற்கு சிக்கக்கூடாதோ, அதில் சிக்கிக் கொண்டு இருக்கின்றார்களோ, அவர்களுக்கு நன்மைகள் செய்யப்பட அண்ணாவின் வழியிலே இதைத் தொடர்ந்து செய்வோம் அது முறையாக அமையும் என்று கருதுகிறேன்.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், அந்த வகை யிலே பின்பற்றி இந்த அரசு நிச்சயமாக தன் கடமையை செய் யும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக இந்த ஆட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, நம்முடைய உறுப்பினர், என்.எஸ்.வி. சித்தன் அவர் கள் லாக்கப்பிலே மரணம், அதாவது கொலைக் குற்றத்தைப் பற்றி பல்வேறு எண்ணங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். பதிலை எதிர்பார்த்து இருக்கிறார்கள். காவல் நிலையத்தில் மரணம், அல்லது துன்பம் ஏற்பட்டாலும், இதுபற்றி 145 பிரி வின் கீழ் விசாரணைக்கு வகை செய்யப்பட்டுள்ளது. அந்த விசா ரணையின் கீழ் அரசு பரிசீலனை செய்து ஒரு வழக்கிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. லாக்கப்பிலே ஒருவர் மரணம் அடைந் தால், அதைக் கொலைக் குற்றமாக கருதவேண்டுமென்று என். எஸ். வி. சித்தன் அவர்கள் கருத்தை, அந்த உணர்வை நான் மதிக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைதான் ஒவ்வொரு வருக்கும் இருக்கும் என்பதை நான் எதிர்க்கட்சியிலே இருந்த போது எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்பட்ட நேரத்திலே நாங்கள் என்ன சொன்னோம் என்பதை இந்த நேரத்திலே நினைவூட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

லாக்கப்பில் ஒருவர் மரணம் அடைந்தால் அது கொலைக் குற்றமாகக் கருதப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். உண்மைதான், எங்கு ஒரு உயிரை யார் போக்கினாலும் அது கொலைக் குற்றமே தவிர வேறு ஒன்றும் அல்ல என்பதிலே எங்களுக்குச் சந்தேகமில்லை. ஆனால் அது சாத்தியமா என் பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் அறி வார்கள் என்று நான் கருதுகிறேன். விசாரணைக்கு உத்தர விடப்பட்ட எல்லா இனங்களிலும் நூற்றுக்கு 90 இயற்கை மரணம் என்றுதான் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல வழக்குகள் விசாரணையில் காவல் துறையினரால் துன்புறுத்தப் பட்டவர் என்றோ அல்லது அந்த மரணத்தில் சந்தேகத்திற்கு இட மிருக்கிறது என்றோ அறிக்கை அரசாங்கத்திற்கு வந்தால் அதில் அரசு சம்பந்தப்பட்ட காவல் துறையினர்மேல் நடவடிக்கை எடுத் திருக்கிறது என்பதற்கு உதாரணத்திற்காக சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் காவல் நிலையத்தில், 29-6-1980-ல் சிவராஜ் என்பவரை சிறைக் காவலர் துன்புறுத் தினார், மரணம் அடைந்தார் என்ற குற்றச்சாட்டிக் குறித்து கும்பகோணம் சப் கலெக்டர் பி.எஸ்.ஓ. 145-ன்படி விசாரணை செய்து அனுப்பி வைத்த அறிக்கையை ஆராய்ந்து, மருதமுத்து என்ற காவலர் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிடப்பட்டார். மேலும் 2 உதவி ஆய் வாளர்கள், ஒரு உதவி கண்காணிப்பாளர், ஒரு காவலர் ஆகி யோர்மீது துறை நடவடிக்கை எடுக்க காவல்துறைத் தலைவர் காவல்துறை அதிகாரியைப் பணித்துள்ளார்.



மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, கன்னிவாடி காவல் நிலையத்தில் திருமதி பாப்பா என்கிற அமிர்தம் துன்புறுத்தப் பட்டு, மானபங்கம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட புகார்மீது விசாரணை செய்து திண்டுக்கல் சப் கலெக்டர் அனுப்பி வைத்த பி. எஸ். ஓ. 145-ன்படியான அறிக்கையை அரசு ஆராய்ந்து சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 348-வது பிரிவில் குறிப்பிட்ட குற்றத்திற்கு கிரிமினல் வழக்குத் தொடரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டார்.

வட ஆற்காடு மாவட்டம் வாலாஜா காவல் நிலையத்தில் 8—3—1980-ல் முகமது என்பவர் மரணம் அடைந்தது குறித்து பி. எஸ். ஓ. 145-ன்படி விசாரணை செய்யப்பட்டது. அந்த அறிக்கையை அரசு ஆராய்ந்து, இச் சம்பவம் குறித்து மேலும் முழுமையாக விசாரணை செய்ய வேண்டுமென்று சி.ஐ.டி. குற்றப் பிரிவு பணிக்கப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட காவல் துறையி னர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சிமக் காவல் நிலையத்தில் ஆறுமுக கவுண்டர் என்பவர் 16—5—1979 அன்று இறந்து விட்டார். இதில் பி. எஸ். ஓ. 145-ன்படி விசாரணை செய்யப்பட்டது. அந்த விசாரணை அறிக்கையை அரசு ஆராய்ந்து மேலும் சி.ஐ.டி. குற்றப் பிரிவு விசாரணை செய்து அறிக்கை அனுப்புவதற்கு காவல்துறைத் தலைவர் பணிக்கப் பட்டார். அவரது அறிக்கையை அரசு ஆராய்ந்து அதில் சம்பந் தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரும்படி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக் கப்பட்டார். மேலும் அவரை தற்காலிக பணி நீக்கம் செய்து விட்டு, இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி வட ஆற் காடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை காவல்துறை தலைவர் பணித்துள்ளார். செய்யாறு எஸ். டி. எம். கோர்ட்டில் 24—2—1980-ல் வழக்குத் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி தாலுகா, கயத்தாறு காவல் நிலையத்தில் சண்முகம் மற்றும் ராமசாமி ஆகியோர் சட்டபூர்வமாக நிறுத்தி வைக்கப்பட்டது பற்றி கூறப்பட்ட குற்றச்சாட்டு பி. எஸ். ஓ. 145-ன்படி விசாரணை செய்யப்பட்டு, கோவில்பட்டி சப் கலெக்டர் அனுப்பி வைத்த அறிக்கையை அரசு ஆராய்ந்து சம்பந்தப்பட்ட தலைமை காவலர் மற்றும் 3 காவலர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டார்.

மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, திவான் மூதூரைச் சேர்ந்த ஒச்சாத்தேவர் என்பவர் காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டு 28-7-1979 அன்று இறந்தார் என்ற குற்றச் சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு, அரசுக்குக் கிடைத்த

அறிக்கையை ஆராய்ந்து, ஒச்சாந்தேவரை சின்னமனூர் காவல் நிலையத்தில் வைத்து அடித்துத் துன்புறுத்தியதற்குப் பொறுப்பானவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டும், அவர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டது. உதவி ஆய்வாளர் திரவியம், காவலர் கருப்பையா ஆகியோர் 11—2—1980 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, புத்தூர் கிராமம் சண்முகம் என்பவர் காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டு குறித்து அரசுக்கு கிடைத்த விசாரணை அறிக்கையை ஆராய்ந்து தலைமைக் காவலர் வேணுகோபால் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 323, 330 மற்றும் 348-வது பிரிவுகளின்படி கிரிமினல் வழக்கு தொடர அரசு ஆணையிட்டது. அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, 24—6—1981 அன்று நீதிமன்றத்தின் முன்பு ஆஜர் செய்யப்பட்டார்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செவிட்டய்யா என்பவர் காவல் நிலையத்தில் இறந்துவிட்டார். இது குறித்து விசாரணை செய்த அதிகாரி அளித்த அறிக்கையின் பேரில் சம்பந்தப்பட்ட காவலர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீது குற்றம் சாட்ட நேரடி சாட்சியங்கள் இல்லை. எனவே இரகசிய குற்றப் புலனாய்வுப் பிரிவு தீவிரமாக விசாரணை செய்ய பணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது எல்லாம் காவல் நிலையத்தில் நடைபெறும் மரணங்கள் எல்லாம் இயற்கை மரணம் அல்லது தற்கொலை என்று அறிவிப்பதாகச் சொல்லப்படுவது வீண் குற்றச்சாட்டு.

அது போன்று பலவற்றின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதையும் தெரிவித்து, காவல் நிலையத்தில் இறந்து விட்டவர்கள் எல்லாம் அவர்களாகவே இயற்கையாக இறந்து விட்டார்கள் என்று சொல்வதை இந்த அரசு அப்படியே ஏற்கத் தயாராக இல்லை என்பதையும் ஆங்காங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப, வழக்கின் தன்மைக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00).

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, போலீஸ் லாக்கப்பில் இறந்து போனதன் காரணமாக சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்ததாகவும், வழக்குப் போட்டதாகவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். சஸ்பெண்ட் செய்யப்பட்டது



என்பது ஒரு சாதாரணமான ரொட்டீன் நிகழ்ச்சி தான். ஆனால், சட்டப்படி வழக்கு போடப்பட்டு இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்த செக்ஷன் கீழ் அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது? யார் மீது போடப்பட்டு இருக்கிறது ? செக்ஷன் 302-ன் கீழ் போடப்பட்டுள்ளதா ? அல்லது வேறு செக்ஷன் கீழ் போடப்பட்டுள்ளதா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** என்னால் சரியாக பேச முடியாமல் இருப்பதால், நான் படித்ததை சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். உதாரணமாக, தலைமைக் காவலர் வேணுகோபால் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 323, 330, மற்றும் 348-ன் கீழ் கிரிமினல் வழக்கு தொடர அரசு ஆணையிட்டது.

**திரு அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிற செக்ஷன் எந்தக் குற்றத்திற்காக என்று சொன்னால் விளக்கமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கறிஞராக இருக்கின்ற உறுப்பினர் இதை அறிந்து இருக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** போலீஸ் லாக்கப்பில் யாராவது மரணம் அடைந்தால், அந்த மரணம் சந்தேகத்திற்கு இடமான வகையில் ஏற்பட்டு இருந்தால், அதற்குப் போதுமான சாட்சியங்கள் இருந்தால், அல்லது ஒரு வேளை போலீஸ் லாக்கப்பில் காவல் துறையைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டது என்று நிலைமை இருக்குமானால், அதற்குப் பொறுப்பாக உள்ள காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுகிறது என்று சொன்னால், அது கொலைக் குற்றம் என்ற முறையில் செக்ஷன் 302-ன் கீழ் வழக்கு தொடரப்படுமா என்று அறிய விரும்புகிறேன். இங்கே தெரிவிக்கப்பட்டு இருக்கின்ற செக்ஷன்கள் வேறுபட்ட குற்றங்களுக்கானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் எந்தத் தன்மையானவை என்று எப். ஐ. ஆர். எழுதுகிறார்களோ அந்த அடிப்படையில் அதற்கேற்ற வகையில் செக்ஷன் போடப்பட்டு, வழக்குகள் தொடரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர், சட்டம் தெரிந்தவர், அறிவார் என்று நம்புகிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்

### அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொண்டை ஓரளவிற்குச் சரியாக இல்லாததால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போலீஸ் துறை, தீயணைப்புத்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 27

துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தை இன்றைக்கு இத்தோடு முடித்துக் கொண்டு, மீண்டும் திங்கட் கிழமை (29—3—1982) காலை 9 மணிக்குத் தொடரலாம் என்றும், அன்றைக்கு (29—3—1982) வினாக்கள்-விடைகள் நேரம் தள்ளி வைக்கலாம் என்றும், தவிர்க்கப்படலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே, ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளவாறு, இன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரையில் கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்கிற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும்; 6 மணி முதல் 8 மணி வரையில் கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும். இதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கேற்ப, மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அளவோடு இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து, இதனை மீண்டும் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தொடர லாம் என்றும், மாலையில் ஏற்கனவே அறிவித்தபடி நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்கட்கிழமை யன்று காலை 9 மணியிலிருந்து 10 அல்லது 10-30 மணி வரையில் விவாதத்தை தொடர்ந்து வைத்துக் கொண்டாலும் கூட, 10-30 மணிக்கு முதல்வர் அவர்களின் பதிலுரை முடிந்தபிறகு, நாம் ஏற்கெனவே வைத்திருந்த முறைப்படி மாநில ஆட்சித் தலைவர் கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மற்றும் மாநிலச் சட்டமன்றம் ஆகியவைகள் வழக்கப்படி எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் என்றும் அவைகள் எல்லாம் சரியாக கில்லட்டின் வைத்து 1 மணிக்கு முடிக்கப்பெறும் என்றும், அதன் படி அவையின் நடவடிக்கைகளை மாற்ற வேண்டும் என்றும் நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகையினால் தான் 29 ஆம் தேதி திங்கட்கிழமை காலை கேள்வி பதில் நேரம் தவிர்க்கப்படவேண்டும் என கோரினேன், 9 மணிக்கே முதலமைச்சர் அவர்களின் பதிலுரையை தொடங்கிவிட லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூறிய கருத்துக்களை அவை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். ஆகவே இன்றைய போலீஸ் மானிய கோரிக்கை யும் தீயணைப்பு மானியக் கோரிக்கையும் அவற்றின் மீதான விவாதமும் இத்தோடு இன்று முடிவுற்று மீண்டும் திங்கட்கிழமை 29—3—1982 அன்று காலை 9 மணிக்கு துவங்கப்படும். இன்று மாலை 4 மணிக்கு, எடுத்துக்கொள்ளவிருக்கிற கைத்தறித்துறை சமூக நலத்துறை ஆகிய மானியக்கோரிக்கைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதுபோல் எடுத்துக் கொள்ளப்பெறும். திங்கட்



1982 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

கிழமை காலை கேள்வி நேரம் கிடையாது. மற்ற மானியக் கோரிக்கைகள் 1 மணிக்கு முன்பு அறிவித்தது போல் கில்லட்டின் வைத்து முடிக்கப்பெறும். ஆகவே, பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4-00]

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(2) வரவுசெலவு, 1982—83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத்தொழிலும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

" மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,45,92,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் மற்ற வசதிகளும் செய்து தர தனிக்குழு அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,45,92, 000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரை யாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, *கைத்தறி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. அதை நான் படித்ததாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இறுதியாக என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

---

* 219 235ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. நா. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி மானியக் கோரிக்கையின் மீதும் அதை ஒட்டி கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தின் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு கைத்தறித் துறைக்கு சுமார் 5.46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த கைத்தறித் தொழில் என்பது தமிழ்நாட்டிலே விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக மிக மிக முக்கியம் வாய்ந்த ஒரு தொழில் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. அப்படிப்பட்ட முக்கியமான அந்தத் தொழிலுக்கு இந்த 5.46 கோடி ரூபாய் என்பது போதாது என்றும் அதாவது 10 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் துறைக்கு ஒதுக்கி இருக்கவேண்டும் என்றும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படி ஒதுக்கியிருந்தால், நிச்சயமாக அது தேய்ந்து கொண்டிருக்கின்ற அழிந்து கொண்டிருக்கின்ற இந்த கைத்தறித் தொழில் வளர்வதற்கும், அதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் நிச்சயமாக உதவும் என்று நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இங்கே குறிப்பிலே சொல்லியிருப்பதுபோல் 5.56 இலட்சம் தறிகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, இந்தக் கணக்கில் வராத தனியார் துறையிலே நெசவாளர்கள் இருக்கிறார்கள் அப்படிப்பட்ட தறிகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு தறிகளும் இந்தத் துறையிலே வைத்துக் கொண்டு, அந்தத் தொழிலை நடத்துகின்ற நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லாத ஒரு நிலை இருக்கிறது என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், இந்தத் தொழிலில் ஈடுபட்ட அத்தனை பேர்களையும் கூட்டுறவு சங்கத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக கூட்டுறவு சங்கத்தின் மூலம் தொழிலை நடத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்திலே, பலர் அதை விரும்பாத நிலை இருக்கிறது. காரணம், அவர்களுக்கு வேண்டிய கடனுதவி, தரமான நூல் தருவது போன்ற இப்படிப்பட்ட நிலைகள் நிச்சயமாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் தரப்படுவதில்லை. தனியார் நிறுவனங்கள், அவர்களின் கீழே வேலை செய்கின்ற, மாஸ்டர் வீவர்களின் கீழ் வேலை செய்கின்ற நெசவாளர்களானாலும் சரி, அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற தரமான நூலை வைத்துக்கொண்டு, பலவிதமான நல்ல ரகங்களைத் தயாரிக்கின்ற காரணத்தினால், கூட்டுறவு சங்கங்களின் மூலமாக அந்தத் தொழிலை நடத்த அஞ்சுகிறார்கள், தயங்குகிறார்கள். இதை எண்ணிப்பார்த்து, இந்தக் கூட்டுறவுச்சங்கங்களின்மூலம் அத்தனை



பேர்களும் வருவதற்கு, அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு பல்வேறு சலுகைகளை, அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டும்; அப்படிக் கொடுத்தால், அந்தத் தொழிலுக்கு ஊக்கம் தருவதாக இருக்கும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, நாட்டில் கொத்தடிமைகளை ஒழிக்க வேண்டும் என்று நாமெல்லாம் கொள்கை அளவிலே மட்டுமல்லாமல், உள்ளபடியே அதை ஒழித்திடவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தத் தொழிலே ஈடுபட்டிருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை. இந்த கொள்கை குறிப்பிலே 2 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தறி முதலாளிகளின் கீழ் கொத்தடிமை போல் வேலை செய்யும் நெசவாளர்களை, அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்மென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினராக இருந்தும்கூட, அந்த கூட்டுறவு சங்கத்தின் மூலம் நூலைப் பெற்று, அவர்கள் தனியாக அங்கே நெசவுத் தொழிலை செய்வதற்குரிய நிலைமை இல்லை. உடனடியாக அவர்களுக்கு ரூ. 300, ரூ. 400 கடன் கொடுத்து, அந்த நெசவுத் தொழிலாளி மாஸ்டர் வீவர்கள், அவர் நெய்யும் பாவை சுற்றி எடுத்துக்கொண்டு போகும் நிலைமை பல இடங்களிலே இருக்கிறது. அதன் காரணமாக, இந்த கொத்தடிமை முறையை நீக்குவதற்கு மத்திய சர்க்கார் இன்றையதினம் ரூ. 25 கோடி ஒதுக்கியிருக்கிறது. இதைத் தாராளமாக, தைரியமாக மத்திய அரசிடமிருந்து பெற்று, இந்த நெசவாளர்களின் கொத்தடிமை முறையை ஒழிக்க முயற்சி செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சேலம், ஈரோடு போன்ற பகுதிகளில் பவர்லூம் கைத்தறித் தொழிலுக்கு போட்டியாக இருப்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. அதனாலே, நம்முடைய அரசு இந்தத் துறை நிச்சயமாக பவர்லூமில் நெய்கின்ற துணிகளை தரம் பிரித்து, இன்னின்ன வகையான துணிகளைத் தான் பவர்லூம்கள் செய்யவேண்டும் மற்றத் துணிகள் கைத்தறிக்கு இருக்க வேண்டும் என்று நாம் ஒரு கட்டுப்பாட்டை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளாக இந்த கைத்தறி நெசவாளர்களின் நலன் பொருட்டு கோரிக்கை வைத்தார்கள். கரை போட்ட சேலை, வேட்டிகள் ஆகியவைகளை மில்களில் தயார் செய்யக்கூடாது, அது கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட காலமாக வைத்தார்கள். அந்த நிலையிலே இந்த அரசு, அதனைப் பரிசீலித்து சம்பந்தப்பட்டவர்களை அணுகி கரை போட்ட வேட்டி, சேலைகள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று பாடுபட வேண்டும் முயற்சி எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள[illegible] பட்டிருக்கிறேன்.

[திரு. து. புருஷோத்தமன்] [1982 மார்ச் 27

அதைப்போல, பாலிஸ்டர் கைத்தறித் துணிக்கு நல்ல வரவேற்பு மக்களிடத்திலே இருக்கிறது. அந்த வகையிலே, இந்தத் துறை வேகமாக வளர்வதற்கு ஆங்காங்கு பாலிஸ்டர் கைத்தறித் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

(மாலை 4-10)

நான்கூட பலமுறை இந்த அவையிலே பேசுகின்றபோது சொன்னேன். சைதாப்பேட்டையிலே கூட்டுறவுத் துறையிலே பாலிஸ்டர் கைத்தறித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தேன். முன்னாலே இந்தத் துறைக்கு இருந்த அமைச்சர் இப்போது இல்லை என்றாலும் தற்பொழுது கல்வியமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருந்தாலும் அதைக் கவனித்து சைதாப்பேட்டையிலே பாலிஸ்டர் கைத்தறித் தொழிற்சாலையை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்கு பொது நெசவுக் கூடம் அமைக்கப்படும் என்றும் அதற்காக இந்தத் துறை நிதி அளிக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதே அடிப்படையில் பொது நெசவுக் கூடத்தை அமைக்க வேண்டும். யார் பூனைக்கு மணி கட்டுவது என்ற பழமொழி இன்றைக்கு சொந்தமாகத் தறியில்லாதவர்கள் எல்லாம் ஆண்டிகள் கூடி மடம் கட்டுவது போல் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே இந்தத் துறை அந்தந்தப் பகுதிகளிலே உள்ள நெசவாளர்களுக்குப் பயன் தருகிற வகையிலே சொந்தமாகத் தறியில்லாதவர்கள் எங்கெங்கே இருக்கின்றார்களோ அவர்களுக்கு அந்தப் பகுதிகளிலே பொது நெசவுக் கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டையிலே சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றன. 10 ஆயிரம் குடும்பங்கள் என்றால் ஏறக்குறைய 50 ஆயிரம் பேர்கள் இந்தத் துறையிலே இருக்கிறார்கள், அவர்களிலே சில பேர்களைத் தவிர மற்ற அத்தனை பேர்களும் சொந்தத்திலே தறியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே பொது நெசவுக் கூடத்தை சைதாப்பேட்டைப் பகுதியிலே ஏற்படுத்துவது தான் சாலச் சிறந்தது. புத்திசாலித்தனமும் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டிலே நம்முடைய கைத்தறித் துணிகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதை நாம் பார்க்கிறோம். கோ ஆப்டெக்ஸ் போட்டியாக ஏற்றுமதி செய்கிறது. அதிலே முன்னேற்றம் ஏற்பட்டு இருந்தாலும் கூட இன்னும் அதைவிட அதிகமாக தனியார் நிறுவனங்கள் ஏற்றுமதி செய்கின்றன. எனவே கோ ஆப்டெக்ஸ் மூலமாக வெளி நாடுகளில் அதிகம் வரவேற்கிற ரகத் துணிகளை தயாரித்து ஏற்றுமதி செய்ய வழிவகை காணவேண்டுமென்று



1982 மார்ச் 27] [திரு. து. புருஷோத்தமன்]

கூட்டுறவு சங்கங்கள் வழங்குகின்ற துணிகளுக்கு கோ ஆப்டெக்ஸ் அந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யவில்லை என்ற பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் பல கூட்டுறவு சங்கங்கள் சிரமப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக பல இடையூறுகள் ஏற்படுவதன் காரணமாக நெசவாளர்களுக்கு நூல் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு அவர்கள் எல்லாம் வேலையில்லாமல் போகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. பணம் பெறுவதிலே கூட அரசியல் தலையீடு இருப்பதாகத் தெரிகிறது. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்தால் உடனுக்குடன் சங்கங்கள் மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது என்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைகளைப் போக்குகிற வகையில் வாங்குகிற துணிகளுக்கு உடனுக்குடன் பணத்தை பட்டுவாடா செய்யக்கூடிய முறையை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு 40·20 லட்சம் ரூபாய் மூலதனக் கடன் கொடுக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இன்னும் அதிகமாக்கப்பட வேண்டும். அதைப் போலவே நம்முடைய அரசு மூலதனப் பங்கு என்ற முறையிலே 25 லட்சம் வழங்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் அதிகப்படுத்தி இந்தத் துறைக்கு 1 கோடி ரூபாய் மூலதனத்திற்கு என்று கொடுத்தால்தான் நல்ல முறையிலே வளருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

நூல் விலையை கட்டுப்படுத்த முடியாமல் அரசு இருக்கிறது. நூற்பாலை அதிபர்கள் தங்களுடைய விருப்பம்போல் ஆண்டுக்குப் பல முறைகள் விலையை உயர்த்தக்கூடிய நிலையினால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நம்முடைய அரசு 25 கோடி ரூபாய் செலவிலே 3 நூற்பாலைகள் தொடங்க இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கூட செங்கற்பட்டு மாவட்டத்திலே தொடங்கினால், சைதாப்பேட்டை, அனகாபுத்தூர், குன்றத்தூர் போன்ற பல பகுதிகள் பயனடையும். ஆகவே அந்த ஆலைகளை செங்கற்பட்டு மாவட்டத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலிலே ஈடுபடுகின்றவர்களுக்கு சட்டவகையான பாதுகாப்புத் தர சட்டம் இயற்றப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இங்கே அனுமதி கேட்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேலைநிலைமை, அடிப்படை கூலி, போனஸ் வழங்குவது போன்ற நல்ல திட்டங்களை அமல் செய்து நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் தர ஒரு வாரியம் அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாநில கைத்தறி வாரியம் மற்ற வாரியங்களிலே ஆளுங்கட்சியினருக்கு அதிகமாக வாய்ப்புக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது என்பதிலே பல் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நு. புருஷோத்தமன்] [1982 மார்ச் 27

சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் 1980-ஆம் ஆண்டு முதல் அமல் படுத்தப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 67 ஆயிரம் நெசவாளர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நெசவாளிகள் இறந்தால் அவர்கள் சேமித்த பணத்தை திருப்பிக் கொடுப்பதுடன், 3,000 ரூபாய் லைப் இன்ஷீரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கொடுப்பதாகத் தெரிகிறது. இதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அய்யம்பேட்டை, பாபநாசம், கபிஸ்தலம், மணலூர் போன்ற பல இடங்களில் நெசவாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தொழிலில் ஈடுபட முடியாத நிலை; பணத்தட்டுப்பாடு, இருப்பதுடன், கொத்தடிமைகளை போல பணியாற்றுவதால், முதலாளிகள் வேலை கொடுக்காத நிலை இருக்கிறது. ஆகவே இவற்றை அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் போன்ற அதிகாரிகள் கவனித்து உடனடியாக இந்த நிலையை சரிபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிங்கப்பூரிலே ஒரு கூட்டுறவு விற்பனை நிலையத்தை துவக்கினார்கள். (மணியடிக்கப்பட்டது).

நான் ஒருவன் தான் பேசுகிறேன், சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். இந்த விற்பனை நிலையத்தில் முன்பே நான் ஒரு குறையை எடுத்துச் சொன்னேன். பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திலே அது இயங்குகிறது. இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மழைக்காலங்களில் தறிக் குழிகளில் தண்ணீர் நிரம்பி மாதக் கணக்கில் நெசவாளிகள் நெய்ய முடியாத நிலை இருக்கிறது. அதிகாரிகள் இதை கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதித் திட்டத்தில் சென்னை புறநகர் பகுதியிலே இருக்கிற நெசவாளிகளுக்கு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஒரு பங்கை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மருத்துவ வசதி மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி முதலியவற்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி துறையின் கொள்கை குறிப்பேட்டின் மீது நான் ஒரு சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன். செய்யும் தொழில்களை சீர்தூக்கி பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆனால் இந்த தொழிலுக்கு வருகிற சங்கடங்கள் எண்ணில. அதுவும் இந்த நெசவுத் துறையில் எப்போதும் பிரச்னைகள் இல்லாமல் வாழ முடியாத சூழ்நிலைகள் நெசவாளிகள் வாழ்க்கையிலே அமைந்திருக்கிறது. அவர்களுடைய குறைபாடு



1982 மார்ச் 27] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

களை நீக்குவதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மூலம் நல்ல பல நடவடிக்கைகளை இந்த குறிப்பேட்டில் அறிவித்திருக்கிறார்கள். அவர்களின் இந்த நல்ல எண்ணத்திற்கு நான் சார்ந்திருக்கிற நெசவாளர்கள் பகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு நெசவாளிகளுக்கு வரி விதிப்பின் மூலம் ஏற்படவிருந்த சங்கடத்தை நீக்குவதற்கு உதவி செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நிதி, கைத்தறி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நெசவாளிகளுக்கு ஏற்கெனவே நடந்து முடிந்த சட்ட மன்ற கூட்டத்தொடரில் ஒரு பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்றுள்ளதாக அறிகிறேன். குறைந்த பட்சக் கூலியை நெசவாளிகளுக்கு நிர்ணயம் செய்து, குறிப்பிட்ட கால வரைக்குள் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாட்டை நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறையிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுத் துறைக்கு கிட்டத்தட்ட 67 சதவீதம் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு வாரியத்தை அமைக்க இருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே நெசவாளிகள் கூட்டுறவுத் துறைக்கு வந்து அரசினுடைய நன்மைகளைப் பெறுவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு இருக்கிற பிரச்னை மூலப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. அவர்களுக்கு தேவையான பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்காக (Raw materials Bank) ரா-மெட்டீரியல்ஸ் பேங்க் என்று ஒன்றினை ஆரம்பித்து நல்ல முறையிலே, நியாயமான விலையிலே, கிடைக்க நடவடிக்கை எடுத்திருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்ற இந்த நேரத்தில் சேலத்தில் ஒரு கைத்தறி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசினுடைய சார்பிலே நடத்தப்பட்டு வந்து மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 35, 36 மாணவர்கள் பயில்வதற்கான வாய்ப்பினை இந்த இன்ஸ்டிடியூட் பெற்றிருக்கிறது. இந்தியாவிலே பல பாகங்களில் இருந்தும் வருகிறவர்கள் இங்கே பயிற்சி பெற வாய்ப்பிருக்கிறது.

தமிழகத்திலே மட்டும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறதால் இதிலே கூடுதலான மாணவர்களை சேர்த்து மேலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தறிகளுக்காக மூவாயிரம் ரூபாய் "மாடர்னிசேஷன்" "ஆப் லூம்ஸ்" (Modernisation of looms) என்ற அடிப்படையில் கொடுப்பதாக அறிகிறேன். இந்த டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டிலே பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருந்தும் அவை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத சூழ்நிலைகள் இன்று வரையில் இருந்து வருகிறது. அவைகளை நடைமுறைப்படுத்த மத்திய அரசு தருகிற மானியங்கள் முறையாக நெசவாளிகளுக்குக் கிடைக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4–20]

அடுத்ததாக, ரிசர்வ் பாங்க் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கின்ற காசுக் கடனுக்கான வட்டி விகிதத்தை, உயர்த்தியிருக்கிறது. அந்த உயர்த்தப்பட்ட வட்டி விகிதத்தினால் நெசவாளர்கள் சங்கம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த வட்டி விகிதத்தினை ஏற்கெனவே இருந்த அளவுக்குக் குறைப்பதற்கான ஏற்பாட்டினை நம்முடைய அரசு செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குரூப் இன்ஷூரன்ஸ் திட்டத்திலிருந்து சேவிங்ஸ் அன்ட் செக்யூரிட்டி ஸ்கீமிற்கு கொண்டு வரப்பட்ட பல நெசவாளர்கள் அந்த குரூப் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் கட்டிய தொகைகளைப் பெற முடியாத சூழ்நிலையிருக்கிறது. அதை நீக்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதை அரசு ஆராய்ந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த சேவிங்ஸ் அன்ட் செக்யூரிட்டி ஸ்கீமிலே சேர்ந்து இடைக்காலத்திலே இறந்த நெசவாளர்களுக்கு ரூபாய் 3,000 வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. அந்த ரூபாய் 3,000 அந்த நெசவாளர் குடும்பங்களுக்குப் போதுமானதாக இல்லை. அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ரூபாய் 10,000 ஆக உயர்த்தி அந்த நெசவாளர் பெருமக்களை வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பேரறிஞர் அண்ணாவினுடைய மறைவுக்குப் பிறகு, நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதற்காக, ரூபாய் 7,500 ஒதுக்கப்பட்டிருந்தாலும் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் குறைந்த பட்சம் ரூபாய் 12,000 அந்த வீடு கட்டும் திட்டத்



ற்கு ஒதுக்கப்பட்டால்தான் அந்தத் திட்டத்தினை குறைந்த பட்ச அளவாவது நிறைவேற்ற முடியும். தற்போது, மாஸ்ய ாக, ரூபாய் 1,000 மானியம் கொடுக்கப்படுகிறது. அதைக் குறைந்தபட்சம் ரூபாய் 3,000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகளிலும் நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, அச்சு, விழுது, தறி போன்றவைகளுக்கு மானியங்களும் கடன்களும் வழங்கப்பட்டாலும் இடைக்காலத்திலே நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கருத்தினையும் அரசு மறுபரிசீலனை செய்து அந்த மானியங்களும் கடன்களும் நெசவாளர் சங்கங்களுக்கும்—சங்க உறுப்பினர்களுக்கும் — தொடர்ந்து கிடைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நெசவாளர் சங்கங்கள் இலாபத்திலே 20 சதவீதம், போனசாக வழங்குகின்றன. ஒரு சில சங்கங்களிலே 40 சதவீதம் போனஸ் வழங்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த போனஸ் வழங்கும் சட்டத்தை மாற்றி முறையாக 40 சதவீதம் போனஸ் எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் வழங்க வழிவகை செய்தால் நலமாக இருக்கும்.

தமிழகத்தில், பட்டு நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பட்டு இல்லை. அவர்களுடைய தேவைக்கேற்ப பட்டு உற்பத்தியைத் தமிழகத்திலே அதிகப்படுத்தி, அதற்கான திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, வருங்காலத்திலே பட்டு நெசவாளர்களுக்கு ஏற்படும் சங்கடங்களைப் போக்க அரசு ஆழ்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திலே கோரா நூற்பாலை டுவிஸ்டிங் கோவாப்பரேடிவ் சொசைட்டி ஒன்றினை ஆரம்பித்து, அதில் பல நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழகத்திலே, இரண்டு உதவி இயக்குநர்கள், திருச்சியிலும், காஞ்சிபுரத்திலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு உதவி இயக்குநரும் கிட்டத்தட்ட 200, 250 கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலை இருந்தால், அந்த அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடுவது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். குறைந்தபட்சம் 100, 125 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு உதவி இயக்குநரை நியமித்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காணிப்பை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் எண்ணிப் பார்க்க முடியாத ஒரு திட்டத்தினை நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களுக்கு 7 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன்மூலம் தாழ்ந்த சமுதாயம் வளர வழிவகையினை நம்முடைய தமிழகத்தில் முதன் முதலில் காண முடிகிறது. அதற்காக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலே, அதுவும் தமிழகத்திலுள்ள நெசவாளர் சங்கத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற துணிகளுக்கு வெளிநாடுகளிலே நல்ல மார்க்கெட் இருந்தும், அதற்குத் தேவையான இன்செண்டிவ்ஸ் (incentives) நம்முடைய அரசிடமிருந்து கிடைக்காத காரணத்தால், வெளிநாட்டு மார்க்கெட்டை இழக்கக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. வெளிநாட்டு ஏற்றுமதிகளுக்கு 20 சதவீதம் மானியம் மத்திய அரசு ஏற்கெனவே வழங்கி வந்து இடைக்காலத்திலே அந்த 20 சதவீதம் நிறுத்தப்பட்டதாக அறிகிறேன். அந்த மானியத்தைப் பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மாவட்ட கூட்டுறவு வங்கிகள் இருப்பதுபோல, இந்த நெசவாளர் சமுதாயத்தினருக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு வங்கியைத் தமிழகத்தில் ஆரம்பித்து, இந்தியாவிற்கு வழிகாட்டியாகத் திகழவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தீவிர கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை தனி அதிகாரிகள் முறையாக கண்காணிக்காததால் நட்டத்தில் நடப்பதாக அறிகிறேன். இச்சங்கங்களுக்கு ஆலோசனைக் குழுக்களை நியமித்துச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிற்கு ரிபேட் 30 நாட்களுக்கு மட்டும்தான் வழங்கப்பட்டு, மற்ற நாட்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. பண்டிகை நாட்கள் அனைத்திலும் இந்த ரிபேட் தொகையை வழங்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவு நூற்பாலைகளில் நூலின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக டெஸ்டிங் லேபரட்டரியைத் தமிழகத்திலே ஆரம்பித்தால் நூலின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு வழிவகையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி இருப்பதைப் போல, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு மருத்துவமனையை ஆரம்பித்து வைத்தால் நலமாக இருக்கும். ஆனால்,



இப்பொழுது எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்கும், வடார்க்காடு மாவட்டத்திற்கும் ஒரு நடமாடும் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு, நெசவாளர்கள் இல்லாத வேலூரில் தலைமையகம் அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த நிலைமையை மாற்றி, காஞ்சிபுரம், ஆரணி போன்ற பகுதிகளில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் பிரைமரி கோவாப்பரேடிவ் சொசைட்டிகளிலிருந்து 9 சதவீதத்திற்கும், 5 சதவீதத்திற்கும் மார்ஜின் ஆஃப் பிராஃபிட் (Margin of profit) வைத்து சரக்குகள் கொள்முதல் செய்யப்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால், மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் 30 சதவீதம், 35 சதவீதம் கூடுதலாக இலாபம் பெறுவதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதுபோன்ற சூழ்நிலைகளை மாற்றி, பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வாங்கப்படும் சரக்குகளுக்கு 12 சதவீதம் மார்ஜின் ஆஃப் பிராபிட் கொடுக்கும் அளவிற்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம், ஓரிக்கையிலே உள்ள ஜரிகைத் தொழிற்சாலை நல்ல முறையில் பயன் தந்து வருகிறது. ஆனால், அங்குள்ள பல மெஷின்கள் பழுதடைந்திருக்கின்றன. அதிலே வெள்ளியிழை இழுக்கின்ற மெஷின் இருக்கிறது. அந்த மிஷினை இயக்குவதற்கு ஆள் இல்லை. இதனால், அந்தத் தொழிற்சாலை முழுப் பலனை அளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற கருத்துக்களை அமைச்சரவர்கள் பரிசீலித்து இந்தத் துறை மேலும், வளர ஆவன செய்ய வேண்டுமென்று கோரி என் உரையை முடிக்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகம்மது : பேரவைத் தலைவரவர்களே, 1982–83ஆம் ஆண்டுக்கான இந்த மானியக் கோரிக்கையில் எங்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களுடைய துணி நூல் குறித்த இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கைத்தறிக்குச் சிறப்பிடம் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற பொழுது எல்லோருடைய கருத்தும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படிப் பார்க்கும்பொழுது தமிழ்நாட்டிலே 5.56 இலட்சம் கைத்தறிகள் இருப்பதாகவும், 4 இலட்சம் கைத்தறி நூல் போன்றவைகள் உற்பத்தியில் இருப்பதாகவும், ஒரு இலட்சத்திற்கும் மேல் பட்டுக் கைத்தறி நூல் உற்பத்தியில் இருப்பதாகவும் அறிகிறேன்.

[திரு. இ. எஸ். எம். பக்கீர் முகம்மது] [1982 மார்ச் 27

பட்டு நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில் 40 சதவீதம் கூட்டுறவுச் சங்கத்திலும், 60 சதவீதம் தனியார் துறையிலும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்கறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இப்படிக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற அவர்கள் மட்டும் அடிப்படையான சலுகைகளை அடைந்தாலுங்கூட, பொதுவாகப் பார்க்கின்ற பொழுது நெசவுத் தொழிலாளி என்று பார்க்கின்றபொழுது அனைவரும் கூட்டுறவுத் துறையிலே வரவேண்டும் என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல; உங்கள் கருத்தும் அதுவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவு என்றால் நூல் நெசவுத் தொழிலில் 9 இலட்சம் மக்களும், பட்டு நூல் தொழிலைச் சேர்ந்தவர்கள் 4 இலட்சம் மக்களும் அரசாங்கச் சலுகைகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, எல்லோரும் இந்தப் பயனை அடைய அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது சமீபத்தில் எங்கு பார்த்தாலும் கச்சாப்பட்டு இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அதற்காகச் சில மாதங்களுக்கு முன்பு கோவாப்டெக்ஸ் தலைவரவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி, கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்களையும், கூட்டுறவுச் சங்கத்தினுடைய அங்கத்தினர்களையும் ஒன்று சேர்த்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்தார்கள்.

[மாலை 4-30]

அப்போது தமிழகத்திலே தேவைப்படுகின்ற கச்சாப்பட்டு-ஐ கர்நாடகத்தில் இருந்து போதுமான அளவுக்கு கிடைக்காத காரணத்தால் அல்லது கச்சாப்பட்டு உற்பத்தி இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான சமயத்திலே மத்திய அரசு அறிவிக்கின்றதைப் போன்ற சீனா போன்ற நாடுகளிலே இருந்து தருவித்துத் தமிழகத்திற்காகக் கொடுத்து உதவி இருப்பதைப் பாராட்டுகிறேன்.

மேலும், சில்க் பெடரேஷன் பர்ச்சேசிங் கமிட்டி என்று ஒன்று
அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இருக்கின்றவர்கள் கவனக்
குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லமாட்டேன். அதற்
காக அவர்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் டுபான்
சில்க்கை, தரக்குறைவான சில்க்கைத் தருவித்துக் கொடுக்கிறார்
கள். அதனாலே, சொசைட்டியிலே தயாரிக்கின்ற துணிகள் தர
குறைவானதாக இருக்கின்றது. இதெல்லாம் இப்படி இருக்கி
றது என்று சொன்ன நேரத்தில் அப்போது கைத்தறி அமைச்சராக
இருந்தவர், இதுபற்றிக் கவனிக்கப்படும் என்பதாகச் சொன்னார்
கள் ஆனால், இப்போது கைத்தறிக்குப் பொறுப்பேற்றுள்ள



1982 மார்ச் 27] [திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது]

கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையிலே மிக நல்ல வல்லு
நர் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அதுபோன்று இந்தத்
துறையிலேயும் அவர் இந்தக் குறைகளை எல்லாம் நீக்கிவிட்டால்,
மிகச் சிறப்பாக இருக்கும். கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள்
மற்றும் அங்கத்தினர்களை 3 மாதங்களுக்கு ஒரு முறை கூப்
பிட்டுப் பேசி, என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை
அறிந்து அதற்கேற்றவாறு தக்க நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளப் பெருங்குடி மக்களுடைய குழந்தைகள் ''டெக்ஸ்டைல் இன்ஜினீரிங்'' போன்ற படிப்புக்கு போகும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது அந்த விவசாயக் குடும்பங்களிலே உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்திற்கு உரிய வகையில் நெவாளர்களுக்குப் பண்டிகை முன் பணம் கடனாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் இலவச மனைப்பட்டா கொடுப்பதைப்போல, நெசவாளர் குடும்பத்திலே இருக்கின்றவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது வீடு கட்டிக் கொள்வதற்காக 8 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இப்போது இருக்கின்ற விலைவாசியில் அந்தப் பணத்தில் வீடு கட்டிக் கொள்ள முடியாது என்பது அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதைப் போல, குறைந்த பட்சம் 12 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

மேலும், இரண்டு தினங்களுக்கு முன்பாக நமது ஊரகத் தொழில்
அமைச்சர் அவர்கள் பட்டு உற்பத்தி அதிகமாக்க வேண்டும்.
தமிழகத்திலே 1,000 டன் தேவைப்படுகிறது. அதை 1,300
டன் உற்பத்தியாக செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விட்
டார்கள். அப்படி உற்பத்தி செய்தால் 50 ஆயிரம் பேர்களுக்கு
வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்று அவர் கூறினார். ஆகவே
அப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டுவதன் முலமாக தமிழகத்தில்
உள்ள மக்களுக்குக் குறிப்பாக நெசவாளர் பெருமக்களுக்கு
வேலை கொடுத்த பெருமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டு
வதற்கு இப்படிப்பட்ட அமைப்பகளை அமைப்பகற்கு அதிகாரிகள்

உறுதுணையாக இருக்க வேண்டும். அவர்கள் உறுதுணையாக இருந்தால்தான் இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி, நல்ல முறையிலே செயல் படமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருப்புவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில், சேம சிக்கன நிதி திரட்ட (சி.டி.எஃப்.)த்தில் உள்ள 216 அங்கத்தினர்களுக்கு சென்ற 6 ஆண்டு காலமாகக் கொடுக்கப்பட வேண்டிய அரசு மானியம் மற்றும் சங்க மானியம் இரண்டும் சேர்ந்து சுமார் 2 இலட்சத்து 60 ஆயிரம் கும்பகோணம் மத்திய கூட்டுறவு மத்திய வங்கியில் அங்கத்தினர்கள் பெயரில் நிலுவையில் உள்ளது. அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று 28-4-1981-இல் இந்த மன்றத்தில் கைத்தறி துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு வங்கியிலிருந்து கடனாக வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்க வேண்டியிருப்பதால் மாநில சங்கங்களிலே இருந்து பிரதம சங்கங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகளுக்கும் வட்டி கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே இருந்து மத்திய கூட்டுறவு சங்கம் கேட்கும் தொகையை உடனுக்குடன் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சமுதாயத்திலே இருக்கின்ற நெசவாளர்கள் குடும்பங்களையெல்லாம் பார்த்தால் அவர்களுடைய நிலைமை மேலும் மோசமாக இருக்கிறது. கும்பகோணத்தில் என்னுடைய தொகுதியிலே, இருக்கின்ற நெசவாளர்கள் குடும்பத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சமயத்திலே வருவார்களானால் ஒரு வீட்டிலே எத்தனை குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். மழைக் காலத்திலே அவர்கள் படுகின்ற வேதனை எவ்வாறு இருக்கிறது அப்படி நில நேரங்களிலே, இப்படிப்பட்ட கோடை காலங்களிலே, பயரிங் ஆக்ஸிடெண்ட் ஆகி விட்டால், பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை அவர்கள் இழக்க நேரிடுகிறது. சமீபத்திலே அப்படி ஒரு குடும்பத்திற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டது. அமைச்சர் அவர்கள் இடத்திலே, நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட வறுமைக் கோட்டிலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தை நிச்சயமாக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியத்தினை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய



நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மைக்கு அடுத்த படியாக நெசவுத் தொழில் இருந்து வருகிறது என்பதை இந்த நாட்டிலே இருக்கின்றவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். எனவே தான், இன்றைய தினத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் நெசவுத் தொழிலுக்காக பல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலத்தில் நெசவுத் தொழிலுக்காக ரூபாய் 20.82 கோடியை செலவிட்டது. அதே போன்று ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திலே நெசவுத் தொழிலுக்காக 84.58 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி இருக்கிறது. இந்த புள்ளி விவரத்தைப் பார்த்தாலே, நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்காக, இன்றைய தினம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவிற்கு நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிப்பதற்கும், நிரந்தர வருவாய் கிடைக்கச் செய்வதற்கும் இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று மாஸ்டர் வீவர்களுக்கு, தறி முதலாளிகளுக்கு நெசவாளர்கள் அடிமைகளாகவும், கொத்தடிமைகளாகவும் இருக்கின்றார்கள். அவர்களை அடிமைத்தனத்திலேயிருந்து நீக்க வேண்டுமென்பதற்காகவும், இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆங்காங்கே, கிராமங்களிலே, நெசவாளர்களுக்காக, பல கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே நெசவாளர்களையெல்லாம் இணைத்து, வருவதை இந்தப் பகுதியிலே இருக்கின்ற, தமிழகத்திலே இருக்கின்ற நெசவாளர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும்.

அதேபோன்று தறி இல்லாத ஏழை எளியவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம், வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்குக் கடனாகவும், சொந்தத்தில் தறிகளைக் கொடுக்கவும், நெசவுக் கூடத் தொழில் இயல் கூட்டுறவுச் சங்கங்கள் என்கின்ற அளவிலே, 20 கூட்டுறவு சங்கங்களை நம்முடைய மாநிலத்திலே இந்த அரசு ஏற்படுத்தித் தருவதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தொழில் இயல் கூட்டுறவுச்சங்கங்கள் எங்களுடைய பள்ளிப்பட்டு வட்டத்திலே 4, 5 கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1982 மார்ச் 27

அதேபோன்று, நலிந்த கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுடைய மூலதனப்பங்கை அதிகரிப்பதன் மூலமாக நலிந்த சங்கங்களை **ஊக்குவித்து** இந்த அரசு புத்துயிர் அளிக்கின்றது. அதேபோன்று கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான இடு பொருள்களை குறைந்த, நியாயமான விலையில், அளித்தலும், தேவையான நிதி உதவிகளை இந்த அரசு செய்து வருகிறது. என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டில், 2 வருடத்திற்கு முன்பாக நடந்த ஒரு நிகழ்ச்சியினை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அந்தப் பள்ளிப்பட்டுத் தொகுதியில் அம்மையார்குப்பம், மங்கனூர், பொதட்டூர்பேட்டை, ஆகிய இடங்களில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் வாழ்க்கையில் மிகவும் நலிந்து இருக்கிறார்கள். அந்தக் கிராமங்களில் இருக்கிற ஏழை எளிய நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 4-40)

அங்கே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகின்ற நூலையும் குறைத்து, அந்த ஏழை நெசவுத் தொழிலாளர்களுக்கு கூலியையும் கொஞ்சம் குறைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் இல்லாத அளவுக்கு பள்ளிப்பட்டு வட்டத்திலே ஏழை எளிய நெசவாளர்கள் கூலியையும் அவர்களுக்கு வழங்குகின்ற பாவு, நூல் ஆகியவற்றையும் குறைத்திருக்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இயக்குநர் அவர்களையும் சந்தித்து, இந்த இடர்ப்பாடுகளை களைய வேண்டுமென்று அந்த நெசவாளர்களின் சார்பிலே தெரிவித்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த குறைகளை எல்லாம் களைந்து அங்கே வாழ்கின்ற ஏழை நெசவாளர்களின் கூலியை உயர்த்திக் கொடுக்கின்ற அளவிலே உத்தரவு இட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இயக்குநர் அவர்களுக்கும் பள்ளிப்பட்டு தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம்,' சேமிப்பு பாதுகாப்புத் திட்டம், போன்றவற்றை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. 1962 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுத்தப் பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப் பட்டு, 1979-80 ஆம் ஆண்டிலிருந்து புதிதாக மாற்றியமைக்கப் பட்ட வீட்டு வசதித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது



1682 மார்ச் 27] [திரு. பூ. மு. நரசிம்மன்]

அதைப்போன்று பள்ளிப்பட்டு தொகுதியில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு 8 ஆண்டுகள் முடிந்த பின்னாலே அங்கே தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு தனி அலுவலர் ஏறக்குறைய 23,24 கூட்டுறவுச் சங்கங்களை கண்காணிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் உடனடியாகத் தேர்தல் நடத்தி, நல்ல திறமை வாய்ந்த தலைவர்களை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் ஒரு பெரிய முக்கியத் தொழிலாக, ஊரகத் தொழிலாக இருந்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலிலே பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணி பாதுகாப்புத் தேவை; அவர்களுடைய வாழ்க்கை வளம் பெற ஒரு சட்டம் அவசியம் என்று எல்லாம் பேசப்பட்டு, தமிழ்நாடு சர்க்கார் கடந்த ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, கைத்தறி நெசவாளர் பணி பாதுகாப்பு மற்றும் வாழ்க்கை மேம்பாடு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, கடந்த அக்டோபர் மாதம் குடியரசுத் தலைவர் கையெழுத்தும் ஆகிவிட்டது. ஆனால் அது எப்போது முதல் செயல்படும் என்று பார்த்தால் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி முதல், அதாவது கடந்த 13 ஆம் தேதி முதல் அமுலாகும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் அமுலாக அதற்கு விதி வேண்டும், ரூல்ஸ் வேண்டும். அது இதுவரை போடப்படவில்லை.

ஒரு அழகான வண்டி இருக்கிறது. அதில் சக்கரம் மாட்டப் படவில்லை. சக்கரம் மாட்டினால்தான் வண்டி ஓடும். அப் படிப்பட்ட நிலையில் ஒரு அழகான சட்டம் இந்த பாதுகாப்புச் சட்டம். ஆனால் அதற்கு இன்னும் விதிகள் போடப்படவில்லை. இந்த நாட்டில் இருக்கிற இலட்சக்கணக்கான நெசவாளர்கள் இந்தச் சட்டத்தைப் பாராட்டினார்கள். ஆனால் ஓராண்டுக் காலமாகியும் கூட அதற்கு ரூல்ஸ் போடப்படவில்லை என்றால் அதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் காண்ட்ராக்ட் லேபர் அபாலிஷன் ஆக்ட் என்று ஒரு சட்டத்தைப் போட்டார்கள். அதற்கு இரண்டாண்டு காலமாகியும் விதிகள் போடப்படவில்லை. அதனால் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள், அதுவும் அன்றாடம் பணி செய்யக் கூடிய பெர்மனென்ட் இல்லாத தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அது முதலாளிகளுக்கு சாதகமாக இருந்தது. அதைப்போல இந்த சட்டமும் நிறைவேற்றப்பட்டு, இன்னும் விதிகள் போடப்படாமல் இருக்கிறது. ஆகவே மாஸ்டர் வீவர்சுக்கும் இந்த அரசுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதோ, அதனால்தான் இன்னும் விதிகள் போடப்படவில்லையோ என்ற சந்தேகம் பரவலாக ஏற்படுகிறது.

ஆனால் நான் கேள்விப்படுகிறேன். ஏற்கெனவே இதற்கு விதிகள் எல்லாம் போடப்பட்டு, முதலமைச்சருடைய கையெழுத்துக்காக நீண்ட காலமாக காத்திருப்பதாக கேள்விப்படுகிறேன். முதலமைச்சருடைய அலுவலகத்தில் நீண்ட காலமாக இந்தக் கோப்பு தங்கியிருப்பதாக அறிகிறேன். சட்டத்தை வரவேற்றாலும் அந்தச் சட்டத்தினுடைய பயனை அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. பெரிய குறை. ஆகையால் உடனடியாக அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அப்படியானால்தான் முழுமையான பயனை சாதாரண ஏழை எளிய நெசவாளர்கள் அனுபவிக்க வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு ரூல்ஸ் போடவில்லை என்பதற்காக, அதை ஆட்சேபணை செய்து, அதைக் கண்டித்து, தமிழ்நாடு பூராவும் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி உண்ணாவிரதம் இருந்த பின்பும் ரூல்ஸ் போடவில்லை என்றால் மறியலே நடைபெறுவதற்கும் ஏற்பாடாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பட்டு, சீனாவில் இருந்து ஏறக்குறைய 250 மெட்ரிக் டன்கள் வந்து இருப்பதாகவும், தமிழகத்தைப் பொறுத்த வரையில், 75 டன்கள்தான் அனுப்ப இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இன்றைக்குப் பட்டைப் பொறுத்த வரையில் தமிழகத்திற்குப் போதுமான அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதால் ஏராளமான பட்டு நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமான பட்டு நூல் தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, பட்டு நெசவாளர்களின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



பருத்தியைப் பொறுத்த வரையில் எம்.சி. 5 பருத்தியின் விலை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. சென்ற ஆண்டு குவிண்டாலுக்கு ரூ. 1,050 இருந்தது என்றும், இந்த ஆண்டு 550 ரூபாய் அளவிற்கு அது குறைந்து விட்டது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நூலின் விலை கூடிக் கொண்டே போகிறது. இது ஒரு எதிரும், புதிருமான நிகழ்ச்சியாக இருக்கிறது. ஸ்டேபிள் பைபர்ஸ்—விஸ்கோஸ் உற்பத்தி செய்வது விலை கூடிக் கொண்டே போகிறது. அந்தியூர் போன்ற இடங்களில் பல கைத்தறி தொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாமல், தங்கள் தொழிலை மூடி விட்டார்கள். இலட்சக்கணக்கான, ஆயிரக்கணக்கான, தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி நூல் விலை தாறுமாறாக ஏறிக் கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்த வழியில்லை.

அதோடு, கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ் மூலமாக உற்பத்தியாகும் நூலைப் பொறுத்த வரையில், அதனுடைய விலையும் வெளி மார்க்கெட் விலையை விட அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 1 ரூ. 1½ ரூ. கூடுதலாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கூட்டுறவு மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற நூலே அதிகமான விலைக்கு விற்கப்படுவதால் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நியாயமான விலையில் அவர்களுக்கு நூல் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அவர்கள் தயாரிக்கும் நூல் விலையே வெளி மார்க்கெட் விலையை விட அதிகமாக இருந்தால், கூட்டுறவு நூற்பாலையின் நோக்கமே தவிடு பொடியாகிவிடும் நிலையில் இருக்கிறது. ஆகவே, குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவாப்டெக்ஸில் எனக்குத் தெரிந்த வரையில் அதனுடைய கொள்முதல் முறையில் பெரிய மோசடி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குவாலிடி கன்ட்ரோல் சரியாக செய்யப்படவில்லை. அளவிலே குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கவுன்ட்களில் கூட குறைவு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதாவது 60 கவுன்ட் என்று சொன்னால் 40 என்ற அளவில் தான் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட வித்தியாசமான முறையில் கொள்முதல் செய்யப்படுவதாகவும், நூலின் தரத்திலும், அளவிலும் முறையாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, இதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் காஞ்சிபுரத்தில் இருப்பதாக அறிகிறேன். ஆனால் வெளி மார்க்கெட்டை விட மிக அதிகமான முறையில் கொள்முதல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. இது

வரையில் 50 இலட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பி. டி. எப். பணம் 80 லட்சம் ரூபாய் சேமிக்கப்பட்டு இருக்கிறது என்றும் அது யாருக்கும் பயன் இல்லாமல் குறிப்பாக நெசவாளர்களுக்கு பயன் இல்லாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அந்த 80 லட்ச ரூபாயையும் திருப்பித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையில் யானைப் பசிக்கு சோளப் பொறியைப் போடுவதுபோல் மிகவும் குறைவாகக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. சமுதாயத்தில் மிக மிக நலிந்தவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில், அந்த நெசவாளர்களுக்காக கூடுதல் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைத் தறிகளைப் பொறுத்த வரையில், அங்கே பாக்டரி ஆக்ட் அமல்படுத்தப்படவில்லை. அவர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் கிடையாது. குறைந்த பட்ச வசதி கிடையாது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்த விசைத் தறியைப் பற்றி மிகமிகச் சுருக்கமாக இரண்டு வரிதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

ஆனால் இன்றைக்கு லட்சக்கணக்கான விசைத் தறிகள் இருக்கின்றன. அதனுடைய தொழிலாளர்களின் நிலைமைகள் எப்படி இருக்கின்றன. அவைகளை மேம்படுத்துவதற்காக என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவிருக்கிறது என்பதெல்லாம் இதிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இப்படி லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன் படுத்தக்கூடிய ஒரு பிரிவிலே இவ்வளவு அலட்சியமாக இருப்பதற்குக் காரணம் என்ன என்றும், அவர்களுக்கென்று எதுவுமே குறிப்பிடாமல் இருப்பது சரியல்ல என்றும் நான் இதில் பிரத்தியேகமாகக் கூற விரும்புகிறேன். அவர்களுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பகல் 4-50.)

அடுத்ததாக புளியங்குடியை எடுத்துக் கொண்டால், அங்கே இருக்கிற பவர் லூமில், எல்லாக்கட்சிகளின் லேபர் யூனியன்களும் இருக்கின்றன. அண்ணா பவர் லூம் லேபர் யூனியன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் லேபர் யூனியன் சி. ஐ. டி யூ. வின் சங்கம், ஏ. ஐ. டி. யூ.-வின் சங்கம் இப்படி பல இருக்கின்றன என்றாலும், எல்லா சங்கங்களின் சார்பாகவும் கடந்த ஒரு வார காலமாக அங்கே வேலைநிறுத்தம்



நடைபெறுகிறது. அங்கே ஏதாவது குறைந்த அளவு வசதிகளான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா — கிடையாது. குறைந்த அளவு கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா — இல்லை. பக்கத்தில் இருக்கிற தளவாய் புரம் பகுதியிலும், சங்கரன்கோயில் பகுதியிலும் கொடுக்கப்படும் சம்பள அடிப்படையாவது பின்பற்றப்படுகிறதா? எதுவும் இல்லை. இப்போது நிலைமைகள் எப்படி இருக்கிறது என்றால், அந்தந்த ஊர்களில் அவரவர்கள் சண்டைபோட்டுதான் தங்களுக்கு தேவையான வசதிகளையும், கூலி நிர்ணயத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்கிற ஒரு கட்டாய நிலை இருக்கிறது. அவர்கள் எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல், குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் கூட செய்யப்படாமல் இருப்பது சரியல்ல. குறைந்தபட்சக் கூலி நிர்ணயிப்பதிலேயே இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கிறது. அதுவும் சரியல்ல. ஒரே தொழில் செய்பவர்களுக்கு, ஒட்டுமொத்தமாக ஒரே மாதிரியாக குறைந்தபட்சக் கூலியை வழங்குகின்ற முறையிலே, அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். புளியங்குடியிலே ஒரு வார காலமாக வேலைநிறுத்தம் நடைபெற்றும், அது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த எந்தவித ஏற்பாடுமில்லை. ஆகவே, உடனடியாக அரசு இதில் தலையிட்டு அவர்களுக்குத் தேவையானதை ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்

திரு. வெ. செம்மலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கிற கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு அனுமதியளித்த தங்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள், இந்த மானிய கோரிக்கையில் பேசும்போது, வெகு வேகமாகப் பேசக்கூடிய அவர் கூட இதில் அவ்வளவு வேகமாகப் பேசவில்லை என்பதோடு, பாராட்டவில்லை என்றாலும் அதில் எதுவும் குறைசொல்லாத அளவுக்கு, அவருடைய பேச்சு அமைந்திருப்பதில் இருந்தே, அந்தத்துறையை எந்த அளவுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு திறம்பட வைத்து வருகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம் என முதற்கண் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் பட்டு துணி விற்பனை வரிக்காக 5 பர்சென்ட் போட்டிருப்பதை, குறைத்து இன்றையதினம் உத்திரவிடப்பட்டிருப்பதற்காக, நெசவாளர்களின் சார்பிலே முதற்கண் என்னுடைய நன்றியைத்

தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயிருந்து, அவர் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில், தெருத் தெருவாக கூவி, கைத்தறித் துணிகளை வீதியிலே விற்ற அந்த சூழ்நிலையிலேயிருந்து, இன்றையதினம் வரை; இந்தத்துறை பற்றிய மானியக் கோரிக்கை வந்திருக்கிற இந்த நேரம் வரை இருக்கக் கூடிய பிரச்சினை என்னவென்றால், அந்தத் துறையிலே நாம் விற்பனையை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பது தான். அந்த ஒரு பிரச்சினை தான் என்றைக்கும் நம் முன்னாலே இருக்கிற மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது.

அந்த அடிப்படையில் இன்றைக்கு இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், 27.82 கோடி ரூபாய் செலவிட்ட அந்த நிலை மாறி, வருகிற நடப்பு 6 வது ஐந்தாண்டு திட்டம் காலத்தில் 84.58 கோடி அளவுக்கு, அந்த தொகையை உயர்த்தியிருப்பதிலேயிருந்து, இந்த அரசு அந்தத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. அதைப் போலவே இந்தத் துறையை பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள், இந்தத் துறையை திறம்பட நடத்துவதற்காக எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருகிற அந்த நடவடிக்கையும், சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கு, பொது நெசவுக் கூடம் அமைப்பதற்கான அந்த நடவடிக்கையும், கைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் தரத்தை உயர்த்துவதற்காக எடுக்கப்படவிருக்கிற நடவடிக்கையும், துணிகளின் ஏற்றுமதியை அதிகப்படுவதற்கு எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளையும், இன்றையதினம் நெசவாளர்களுக்கென்றே பிரத்தியேகமாக செய்யப்பட்ட சேமிப்பு பாதுகாப்புத் திட்டம், வீட்டு வசதி திட்டம் ஆகிய அந்த நிலமைகளையும் கைத்தறி வாரியம் அமைப்பதற்காக பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற, அந்த முயற்சிகளையும் பார்க்கிறபோது, இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களின் மறுமலர்ச்சிக் காலம் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இன்றைக்கு நெசவாளர்களுடைய வாழ்வு மேலும் வளம் பெற வேண்டுமானால். அவர்கள் உற்பத்தி செய்கிற அந்த துணிகளுக்கு தேக்கம் இன்றி நல்ல விற்பனை செய்யப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டாக வேண்டும்.

எனவே அந்த அடிப்படையில் இன்றைக்கு தொழில் நுட்பத்தின்மூலம் உற்பத்தித்திறன் உயர்ந்தால்தான் விற்பனையை அதிகரிக்க முடியும் என்ற அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற்கை இழை உற்பத்தி செய்கின்ற அந்த சோதனைக் கூடங்களை நிறுவ வேண்டும் என்று முடிவு





எடுத்து இருக்கிறார்கள். அதுபோன்று சோதனைக் கூடங்கள் ஏற்படுத்துகின்றபோது நவீன சாயச் சாலைகளையும் வடிவமைப்புகளையும் அமைக்கின்றபோது அவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலே கண்காணிப்பு இருக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனங்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிதத்தைக் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. அவ்வாறு கொள்முதல் செய்கின்ற துணியின் அளவினை அதிகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை அதிகரிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அடுத்து மைய அரசு கைத்தறித் துணிகளுக்கு தள்ளுபடியினைப் பொறுத்தவரையிலே 30 நாட்களுக்கு மட்டுமே கொடுத்திருக்கின்றது. ஆனால் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தறியினுடைய எண்ணிக்கையும் உற்பத்தியும் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் அதிகமாக இருக்கின்றது. ஆனால் மைய அரசு எல்லா மாநிலங்களுக்கும் ஒரே சீராக 30 நாட்கள் தள்ளுபடியினை அனுமதித்து இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே உற்பத்தி அதிகமாக இருப்பதன் காரணத்தால் கூடுதலாக 5 நாட்கள் என்று அதிகரிக்கவேண்டும் என்று கேட்கவேண்டும். அப்படிக் கோரி கூடுதலாக மைய அரசிடம் 5 நாட்களுக்குக் கேட்டால் 5 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையினை அதிகரிக்கலாம். அதனால் நெசவாளர்களின் பிரச்சினைகளும் நல்ல முறையிலே தீர்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் (திரு. துரைமுருகன்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு எல்லோரும் அருள் கூர்ந்து கொஞ்சம் ஒத்துழைக்கவேண்டும். இரண்டு டிமான்ட்கள் எடுத்துக்கொள்ளப் பட வேண்டி இருக்கின்றன.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையிலே வழங்கப்பட்டு வருகின்ற திருமணக் கடன் நெசவாளிகளுக்கு மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே இன்றைக்கு 2,500 ரூபாய் வரையில் கடன் வழங்கி நெசவாளர்கள் வாங்குகின்ற கூலியில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் பிடித்தம் செய்து அந்தக் கடனை 7 ஆண்டுகளில் வங்கி விகிதாச்சார அடிப்படையில் வட்டி வீதத்தைக் கணக்கிட்டு பிடித்தம் செய்யவும், ஆஸ்தி இல்லாதவர்களுக்கு நபர் ஜாமீன் வழங்கவும் உத்தரவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு கைத்தறி நெசவாளர் பாதுகாப்புத் திட்டத்தில் தற்போது அமல்நடத்தப்பட்டு வரும் வயது 55 ஆகும். இந்த வயது வரம்பினை 65 ஆக உயர்த்தி 65 வயதில் நெசவாளி வயது முதிர்வின் காரணமாக பணியினின்று விலகிவிட்டாலும் அந்த சேமிப்பிலிருந்து இந்தத் திட்டத்தின் மூலம் உரிய தொகை கொடுக்கவேண்டும்.

அடுத்து வயது முதிர்ச்சியின் காரணமாக பணியிலிருந்து விலகிவிட்ட நெசவாளர்களுக்கு, கூட்டுறவுத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்ற அந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு: தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழில் குறித்த 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

5,56,000 கைத்தறிகள் இருக்கின்ற தமிழகத்திலே 5 ஆவது ஐந்தாண்டுத்திட்டத்திலே 84 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும், 1982-83 ஆம் ஆண்டுக்காக ரூ.5,45,92,000 ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இது இந்தத் துறைக்கு மிகவும் குறைவானது என்பதைக் கூறிக்கொள்வதோடு விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மக்கள் அதிகமாக ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் இந்தத் தொழில் என்பதையும் நான் இந்தச் சமயத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனியார்கள் நெசவாளர்களைச் சுரண்டுவதைத் தடுக்க நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையில் கொண்டுவர வேண்டும் என்ற அந்த நல்லெண்ணத்தோடு இந்தத் தொழிலை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கொண்டுவந்திருப்பினும் 1976 ஆம் ஆண்டிலே இந்த நெசவாளர்களுக்காக அவர்களின் வேலைப்பளு, ஊதிய உயர்வு போன்றவற்றுக்காக இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்காக குழு அமைக்கப்பட்டிருந்தும் இன்றைய தினம் வரை அந்தக் குழு முழுமையாக செயல்பாட்டுக்கு வரவில்லை என்று இந்தச் சமயத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[மாலை 5-00]

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டிலே நூல் விலை ஏற்றம், சாயப் பொருட்களின் விலை ஏற்றம் போன்றவைகளில் இந்த நெசவாளர்கள் சிக்கித் தவிக்கின்ற ஒரு அவல நிலை இருக்கிறது என்பதை இந்த சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆரம்ப கூட்டுறவு சங்கங்களை அதிகமாகக் கொண்டு வரவேண்டும். கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு ஏற்பாடு செய்திருப்பினும்,





புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற ஆரம்ப சங்கங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை. சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வாக்கில் புதிய ஆரம்ப சங்கம் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னபோது, அவர்கள் மார்ச், ஏப்ரல் வாக்கில்தான் நிதி வரும், ஆகவே, அப்போது வாருங்கள். அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள், ஆகவே, இந்த ஆண்டாவது இம்மாதிரியான குறைகளை நீக்குவதற்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆரம்ப சங்கங்களில் உற்பத்தி ஆகக்கூடிய துணியில் ஏறக்குறைய 50 சத விகிதம் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலமாக வாங்குகிறார்கள். அப்படி வாங்கக்கூடிய அந்தத் துணிகளுக்கு உரியகாலத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. பணம் இல்லாத காரணத்தினால், அந்த ஆரம்ப சங்கங்கள் நலிந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய கைக்கோளபாளையம், நசியனூர் கூட்டுறவு சங்கங்களுக்கு பல லட்சக்க க்கான பணம் கோ-ஆப்டெக்சிலே ருந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மேலும், ஆரம்ப சங்கங்களுக்கு, மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து ஏறக்குறைய 6½ சதவிகிதம் வட்டி விகிதத்தில் பணம் விநியோகிக்கப்படுகிறது. இந்த 6½ சதவிகித வட்டியை, ஆரம்ப சங்கங்களுக்கு குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

50 சத விகித துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலம் வாங்கிக் கொண்டாலும், மீதம் இருக்கக்கூடிய 50 சத விகிதம் துணியை தனியாரோடு போட்டி போட்டு மார்க்கெட்டிலே விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் இன்று கூட்டுறவுத் துறையில் கொடுக்கக்கூடிய நூல் விலை, சாயம் போன்ற பொருள்களின் விலை, அதோடு தனியார் குறைந்த லாபத்தில் விற்கக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால், முழுமையாக ஆரம்ப சங்கங்களில் உற்பத்தியாகக்கூடிய அனைத்துத் துணிகளையும் கோ—ஆப்டெக்சே வாங்கவேண்டும் அல்லது சில்லறை விற்பனையில் ஆரம்ப சங்கங்களுக்கு 15 முதல் 23 சத விகிதம் வரை லாபம் வைத்து விற்க வேண்டுமென்றிருப்பதை லாபத்தில் சதவிகிதத்தை குறைத்து, தமிழ்நாடு பூராவும் விற்க அவர்களுக்கு ஒரு அறிக்கை விட வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். மேலும், மொத்தமாக அவர்கள் விற்கின்றபோது இதேமாதிரி சூழ்நிலையில் தனியார்கள் விற்கின்ற நிலைமை ஏற்படுகின்ற காரணத்தினால், அம்மாதிரி குறைக்க வேண்டுமென்ற சூழ்நிலை தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால், கோ—ஆப்டெக்ஸ் மூலமாக முழுமையாக இவர்களிடம் இந்தத் துணிகளை வாங்கி, அவர்களுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்தால், இந்தத் தொழில் நசிந்து போகாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. தி. கா. நல்லப்பன்] [1982 மார்ச் 27

நூல் விநியோகத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத்
நூற்பாலைகளிலே இருந்து விநியோகிக்கக்கூடிய, அந்த நூல்கள்
விலை அதிகமில்லை என்றாலும் மிகவும் மோசமான
நூல் என்று சம்பந்தப்பட்ட ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிலே
இருந்து புகார்கள் வந்திருக்கின்றன. அதே சமயத்தில், குறிப்
பாக ஏனைய கூட்டுறவு நூற்பாலைகளைவிட, கன்னியாகுமரி
யிலிருந்து உற்பத்தியாகக்கூடிய அந்த நூற்பாலையிலே விநி
யோகிக்கக்கூடிய 2/17 நூல் மிகவும் மோசமாக இருக்கிறதென்று
ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிலிருந்து புகார்கள் செய்யப்
பட்டிருக்கின்றன. தற்போது, ஆரம்ப சங்கங்களுக்கு சேதாரமாக
4 சத விகிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே
இந்த ஆரம்ப சங்கங்களுக்கு 6 சத விகிதம் கொடுக்கப்
பட்டிருந்தது. தற்போது அதை மாற்றி 4 சதவீதம் என்று
கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பு போலவே 6 சத விகிதம்
என்று மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மேலும், சாயம் ஏனைய பொருள்கள் விலை, ஒன்றுக்கு
மூன்று மடங்காக ஏறிவிட்ட காரணத்தினால், ஆரம்ப கூட்டுறவு
சங்கங்களுக்கு நியாயமான விலையில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக
அல்லது அரசு மூலமாக அவர்களுக்கு விநியோகம் செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, நெசவாளர்களுக்கு
தார், விழுது, நாடா, அச்சு போன்ற உபகரணங்களை மானிய
விலையிலே கொடுக்கவேண்டும். 55 வயதான நெசவாளர்
களுக்கு ஓய்வூதிய தொகை கொடுக்கவேண்டும். கைத்தறி
நெசவாளர் குடும்பங்கள் பெரும்பாலும் கைத்தறியிலே ஈடு
பட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு அதிகமாக வரக்கூடிய நோய்
காசநோயாக இருக்கின்ற காரணத்தினால், அந்தத் தொழி
லாளர்களுக்கு நெசவாளர்களுக்கு காச நோய் மருத்துவ மனை
யிலே இலவசமாக இடம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தை குறிப்பாக வீடு அற்ற நெசவாளர்
களுக்கு உடனடியாக இத் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவர
வேண்டும். ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டால், அவர்
களுக்கு மானியத்தைக் கொடுத்து மீதத் தொகையை மத்திய
கூட்டுறவு சங்கங்களிலே இருந்து வாங்கவேண்டிய நிலை இருக்
கின்ற காரணத்தினால், அது தடைபடுகிறது. 500 நெசவாளர்
கள் இருக்கின்ற இடங்களிலே, ஒரு நியாய விலைக் கடையை
கட்டாயமாக திறந்து. அவர்களுக்கு மலிவான விலையில்
நுகர் பொருள்கள் விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டு
அமைகிறேன். நன்றி. வணக்கம்.



1982 மார்ச் 27]

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால்
இந்த அவையிலே கொண்டு வரப்பட்ட கைத்தறித் துறை
மானியத்தை வரவேற்று, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக, அதிகமான
வேலைவாய்ப்பு அதிகமான தொழிலாளர்கள் கொண்டிருக்கின்ற
இந்தத் தொழிலில் தமிழக அரசு மிகவும் அக்கறை எடுத்து
பல நல்ல திட்டங்களை பல வசதிகளை நெசவாளர்களுக்குச்
செய்து கொடுத்திருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்
கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்
களுடைய தொழிலைப் பாதுகாப்பதற்கும், அந்தத் தொழிலில்
ஏற்படுகின்ற இன்னல்களுக்கு மருத்துவ வசதி இன்னும் பல
வசதிகளை தமிழக அரசு செய்து கொடுத்திருப்பதற்கு,
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கைத்தறி துறை
அமைச்சர் அவர்களுக்கும் நான் என் பாராட்டைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது தமிழக அரசு நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டு
வதற்கு வழங்கி வருகின்ற தொகை மிகவும் குறைவாக இருக்
கிறது. அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று
கேட்பதோடு தற்போது கொடுக்கப்படுகின்ற வீடுகள் வசதி
குறைவாக, சிறிய அளவிலே, இருக்கின்ற காரணத்தினால், அந்த
டிசைனை மாற்றியமைத்து, அவர்களுக்கு முழு வசதிகள்
அந்த இல்லங்களிலே இருக்கத்தக்க அளவில் செய்து தரவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், வீடு கட்டுவதற்கு
வழங்கப்படும் மாதத் தவணை தொகை ரூ. 100 என்றிருக்கிறது.
அது மிகவும் அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தினால்.
அந்த மாதத் தவணை தொகையை குறைத்து, அவர்கள்
கட்டுகின்ற அளவுக்கு அந்தத் தொகையை நிர்ணயிக்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கைத்தறி சங்கங்களிலே இருந்து கோ-ஆப்
டெக்சுக்கு துணிகளை விற்பனை செய்கின்றபோது, அந்த
நெசவாளர் சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதற்கு
காலதாமதம் ஆகிறது. அதனால், பல சங்கங்கள் இயங்க முடியாத
ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதனால், உடனடியாக
கைத்தறி சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அங்கேயே, உட
னடியாகப் பணம் பட்டுவாடா செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன
செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. பாலகிருஷ்ணன்] [1982 மார்ச் 27

(மாலை 5-10)

இன்றைக்குக் கிராமப்புறங்களிலே பல தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. என் தொகுதியிலே சமீபத்தில் ஆதி திராவிட மக்களுக்காக ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தொழிலைக் கற்க விரும்புவோர் பயிற்சி பெறுகின்ற வகையில் பயிற்சி அளிக்கக்கூடிய பயிற்சியாளர்கள் இல்லாத காரணத்தினால் அங்கே கற்பதற்கு பலர் முன்வராமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் தன் சொந்தப் பொறுப்பிலேயே தொழிலைத் கற்றுக் கொடுக்கின்ற பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டம் நல்லமுறையிலே செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தைக் கண்காணிப்பதற்காக ஒரு கண்காணிப்புக் குழு அமைத்து இன்னும் சிறந்த முறையிலே செயல்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் மருத்துவ வசதி பெறத்தக்க வகையிலே தற்போது கிராமங்கள் தோறும் சென்று இருக்கின்ற இருப்பிடத்திலேயே மருத்துவ வசதி அளிக்கத்தக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபடுகின்றவர்கள் அதிகமாக காச நோயால் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மருத்துவ மனையிலே சிகிச்சை பெறத்தக்க வகையிலே வசதிகள் இல்லாத காரணத்தினாலே அவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை கொடுத்து தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. சு. பழனிசாமி:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து காலம் அதிகமாக இல்லாத காரணத்தினால் சுருக்கமாக சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவருடைய அரசு கைத்தறியை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டுமென்பதற்காக பல திட்டங்களைத் தீட்டி அதற்கான நிதியுதவிகளை அளித்து நல்லமுறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்



1982 மார்ச் 27] [திரு. சு. பழனிசாமி]

மேலும் புரட்சித் தலைவருடைய அரசு 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் 67 சதவீதம் கைத்தறிகளை கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வரவேண்டுமென்ற திட்டத்தை செயல் படுத்துவதற்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சொந்தமாக தறிகளையும் கைத்தறி சம்பந்தப்பட்ட இதர கருவிகளையும் வாங்கமுடியாத நிலையில் உள்ள நெசவாளர் களுக்கு தொழில் கூட்டமைப்பு முறையில் நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்க களை அமைத்து உதவி செய்து வருவதை நான் பாராட்டுகிறேன்.

மாஸ்டர் வீவர்களிடம் சிக்கி கஷ்டப்படுகின்ற நெசவாளர் களுக்கு அரசு உதவி செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். 80 லட்ச அளவுக்கு நிதி உதவி செய்து 200 தறிகள் மூலமாக 20 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கள் அமைக்கவும் இந்த ஆண்டில் 40 லட்சம் ரூபாய் உதவி அளித்து 10 சங்கங் கள் அமைக்கத் திட்டமிட்டு இருப்பதையும் ஒரு சங்கம் அதிலே பெண்களுக்காகவும் 7 சங்கங்கள் ஆதிதிராவிட கைத்தறி நெசவாளர்களுக்காகவும் அமைக்கப்பட இருக்கிற இந்தத் திட்டத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

மேலும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதனம் கொடுத்து அவர்களுக்கு உதவுகின்ற முறையிலே கைத் தறித் துணிகள் விற்பனையைப் பெருக்குவதற்காக தள்ளுபடி ஒவ்வொரு ஆண்டிலும், தீபாவளி, பொங்கல், கைத்தறி வார விழா காலங்களிலே 20 சதவீதம் என்றும் 10 சதவீதம் என்றும் கொடுத்தாலும் கூட 20 சதவீதம் என்றும் 10 சதவீதம் என்றும் சில காலங்களிலே மட்டும் கொடுப்பது என்று வைத்திருக்கின்ற முறையைமாற்றி 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்கவேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காரணம் வருடம் பூராவும் முதலாளிகள் சங்கங்களிலே சென்று கொள்முதல் செய்வதில்லை என்ற நிலைமை இருக் கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் பொருட்காட்சி காலங்களிலே பொங்கல் போன்ற திருவிழாக் காலங்களிலே 20 சதவீதம் கொடுக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் முதலாளிகள் அந்தக் கால கட்டத்திலேதான் சரக்கை கொள் முதல் செய்ய, கைத்தறித் துணிகளை வாங்குவதற்கு போகிறார் கள் என்ற நிலைமை இருக்கிறது. அதன் அடிப்படையிலே சங்கங்கள் வருடம் பூராவும் இயங்குவதற்குக் கஷ்டப்படுகிற நிலை இருந்து வருகிற காரணத்தினால் அந்த நிலைமையை மாற்ற ஆண்டு பூராவும் 20 சதவீதம் தள்ளுபடி கொடுத்தால் அரசுக்கு அதனால் எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்பதைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மேலும் ரிபேட் தொகை மத்திய அரசிடமிருந்து வந்து சேர ஒரு வருஷம் ஆகிற நேரத்தில் சங்கங்கள் பாதிக்கப்படுகின்றன. இரண்டு மாதங்களில் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எக்ஸ்போர்ட் ரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எடுத்துக் கொண்டு அவைகளை சங்கங்களுக்குக் கொடுத்தால் உற்பத்தி செய்வோர்களுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெசவாளிகள் பாது காப்பு சட்டம் நெசவாளிகள் நிலைமையை உணர்ந்து மாவட்டங்களிலுள்ள அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் மூலம் விட்டு முடிவாகாத தருணத்தில் லேபர் கோர்ட்டுக்கு அனுப்புவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். பாலியஸ்டர் ரகங்களை புகுத்தியதை பாராட்டுகிறேன். மூன்று வருட காலமாக கூலி உயர்த்தப்படவில்லை. 25 சதவீதம் கூலி உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எல்லா உறுப்பினர்களும் சொன்னதைப் போல நெசவாளிகளுக்கு வீடு கட்டுவதற்கு 8,000 ரூபாய் கொடுப்பதை சுமார் 15,000 ரூபாயாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நெசவாளிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் நூற்பாலை ஒன்று கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, கைத்தறி தொழில் செய்யும் நெசவாளர்கள் மக்கள் நலன் காக்க நெசவுத் தொழில் செய்கிறார்கள். அவர்கள் வாழ்வு சிறப்பாக இல்லை. அவர்கள் வாழ்க்கை வளமாக இருக்க அவர்களுக்கு தகுந்த கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். குடியிருப்புகள் இல்லாத நெசவாளிகளுக்கு அரசு மானியம் கொடுத்து குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் தமிழ் நாட்டில் பல பாகங்களில் வறுமையால் அவதிப்படுவதை அரசு ஆராய்ந்து அவர்கள் வறுமையை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மானிய விலையில் நூல் சப்ளை செய்து மற்றும் கடன் வழங்குவது போன்ற வகைகளில் ஏழை விவசாயிகளுக்கு கிடைப்பது போல செய்தல் வேண்டும். நெசவாளர்கள் நிலை உயர்ந்தால் தான் நம்நாடு தன்னிறைவு பெற்றதாகக் கொள்ள முடியும். எனது தொகுதியான நாசரேத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை சிலோனிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் மூலம் பங்கு தொகை வாங்கி நல்ல முறையில் இயங்கி வருகிறது. அந்த ஆலையில் சுமார் 12 ஆயிரம் கதிர்கள் வேலை செய்து சுமார் 1,500 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்த நூற்பாலையில் இன்னும் கதிர்கள் மாட்டி விஸ்தரிப்பது மூலம் இன்னும் 1,000 தொழிலாளர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்பாக இருக்கிறது. அந்த நூற்பாலையில் கட்டிடங்கள், மெஷின்கள் அதிகமாக இருக்கிறபடியால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பகுதிக்கு வரும்



போது அந்த நூற்பாலையை பார்வையிட்டு அந்த ஆலையை விஸ்தரிப்பு செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.. நெசவாளர்களுக்கு தரமான நூல்களை மலிவு விலையில் வழங்க வேண்டும். தரமான கைத்தறி துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ஊக்குவித்தால் அதிகமாக அன்னிய செலவாணியும் கிடைக்கும். நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் நிரந்தரமாக கிடைத்து சரியான கூலி கிடைக்கும். அரசு இதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவுத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அனைவரையும் சங்கங்களில் சேர்த்து பயன் பெறும் வகையில் கார்டு பதிவுமுறைகளை கொண்டு வர வேண்டும். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய தரமான நூல்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுத்து ஏற்றுமதியை ஊக்குவிப்பதோடு அவர்களுக்கு ஊக்க போனஸ் வழங்க வேண்டும். தறி முதலாளிகளிடமிருந்து நெசவாளிகளை காக்க கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். மொத்தத்தில் நவீன தொழில் நுட்பங்களை கைத்தறியில் புகுத்தி திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5–20]

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே கூட்டுறவு, கைத்தறி சங்கங்களைப் பற்றியும் நெசவு பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கைகள் வைத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவு என்பது பிரதானமானது, பழமையானது என்றெல்லாம் போற்றப்பட்டு வந்தாலும், அது நலிந்த தொழில். காங்கிரஸ் பேரியக்க ஆட்சிக் காலத்தில் அமரர் காமராஜ் போன்ற தலைவர்கள் எல்லாம் அந்த தொழிலாளர்கள் மேம்பட வேண்டுமென்று பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் காலத்திலேதான் கிராமங்களிலே சங்கங்களை அமைத்து, அந்தச் சங்கங்கள் எல்லாம் நல்ல முறையிலே செயல்பட்டு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளை எல்லாம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவு உற்சாகத்தை ஊட்டி, அவர்களுக்கு வீட்டு வசதிகள், மற்ற வசதிகள் எல்லாம் செய்து தந்தார்கள். ஆனால், அந்த நிலையில் இன்றைக்கு இருக்கிறோமா என்று பார்த்தால், அந்தத் தொழில் ஓரளவு வளர்ந்திருக்கிறது. ஆனால், அதிலே இருக்கக்கூடிய சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், இல்லை. பட்டு நெசவாளர்கள் சங்கமாக இருந்தாலும், சரி, அல்லது நூற்பு நெசவுச் சங்கமாக இருந்தாலும் சரி, அந்தச் சங்க அமைப்புகள் இன்றைக்குத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அன்றைக்கு ஜனநாயக முறையில் அவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால் அது மாறி, தேர்தலே இல்லாத நியமன நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது மிகவும் வருத்தமானது.

என்னுடைய தொகுதியில் கேளாம்பூர், போளூர் போன்ற பகுதிகளிலே கூட அந்தச் சங்கங்களிலே, நாணயமாக நடக்கக் கூடியவர்களை, நேர்மையாக இருக்கக்கூடியவர்களை எல்லாம் நியமனம் செய்தால் நலமாக இருக்கும். அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டு, பொதுமக்கள் பிரதிநிதி என்ற முறையில் நான் காஞ்சிபுரம் உதவி இயக்குநரை நேரில் பார்த்து அவரிடம் கூறினேன். ஆனால், அவர் மறுத்து, ஏதோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் போன்று, ஏதோ அவருக்கு வேண்டியவர்களை நியமித்து இன்றைக்கு நலியக் கூடிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதில் பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆரணியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகம். பட்டு உற்பத்தியாளர்களும் அங்கே அதிகம். ஆனால், அச் சங்கங்களில் இதுபோன்ற நிர்வாகஸ்தர் பதவிகளுக்கு ஏலம் போகக்கூடிய நிலை இருக்கிறது. ரூ. 2,000, ரூ. 3,000, ரூ. 5,000 என்று பகிரங்கமாக விமர்சனம் செய்யக்கூடிய அளவு அந்த மாவட்டத்திலே இருப்பது மிகவும் வருந்தத்தக்க, வேதனைக்குரிய ஒன்று என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கிறேன். இந்த நிலைமையை மாற்றி, தேர்தல் முறையைக் கொண்டு வர அரசு ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திலும், இதே நிலை, எங்கள் மாவட்டத்திலும் இதே நிலை . எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் கூறினார்கள். பட்டு உற்பத்தி மிகவும் தீவிரமாக இருக்க வேண்டுமென்பதற்காக, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழக காலத்திலும், பல சங்கங்களை ஏற்படுத்தினார்கள். ஆரணியிலே அதுபோன்ற சங்கங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால், இப்பொழுது ஆரணியிலே தவறான நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக, அவை சரியாகச் செயல்படவில்லை. இயற்கைப் பட்டையும் செயற்கைப் பட்டையும் ஒன்றாக இணைத்து, நெசவு செய்து, அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தரமான பட்டு என்ன விலைக்கு விற்க முடியுமோ அந்த விலைக்குத் தரம் கெட்ட சேலைகளை, மலிவான சேலைகளை, விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, அதனால், மக்கள் மத்தியிலே கூட்டுறவு இயக்கம் என்றாலே தப்பான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைக்குக் கூட்டுறவு இயக்கம் ஆளாக்கப்பட்டிருக்கிறது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அது போன்று இல்லாமல், தேர்தல் வந்தால், இது போன்ற ஊழல்கள் நடைபெறாது. அந்த ஊழல்கள் நடந்தது என்று எங்கள் மாவட்டத்தில் பரவலாகப் பேசப்படுவதை நிவர்த்திக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



காஞ்சிபுரத்திலே ஜரிகைத் தொழிற்சாலையிலே பல இலட்சம் ரூபாய் அளவுக்குத் தவறுகள் நடந்துள்ளன என்று கூறுகிறார்கள். சூரத் என்ற இடத்திலிருந்து வரவேண்டிய சரிகைகளை நாமே தயாரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தினோம். ஆனால், வெள்ளி வேறு எந்த நிலைக்கு மாறியது என்பதுதான் அங்கே கேள்விக்குரியதாக இருக்கிறது. இதை ஏன் கண்காணிக்கவில்லை யென்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அவைகளை எல்லாம் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் அதிக விலை கொடுத்து நூல் வாங்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலையை ஏற்படுத்தினார்கள். அந்த நூற்பாலைகள் இயங்கக்கூடிய நிலையைப் பார்க்கும்போது இன்றைக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நாங்கள் எல்லாம் கூட ஒரு கூட்டுறவு நூற்பாலைத் துவங்க, எங்களால் முடிந்த அளவு, ரூ. 1,000, ரூ. 2,000 என்று தனிப்பட்டவர்களும் வழங்கினோம். கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கி, நூற்பாலைகள் ஆரம்பித்தோம். ஆனால், வேலூர் நூற்பாலைப் பொதுக் குழுக் கூட்டம் இதுவரை கூடியிருக்கிறதா என்று பார்த்தால், அதனுடைய வரவு செலவு என்ன என்று கேட்கும்போது பதில் சொல்ல யாருமே இல்லை. அங்கே ஆயிரக்கணக்கான ரூபாய் மோசடி நடந்திருக்கிறது என்று எங்கள் கவனத்திற்கு வந்திருக்கிறது. அவைகளை எல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போளூர் நகரத்திலே கைத்தறி விற்பனை நிலையம் தீ வைக்கப்பட்டது. அது இயற்கையாக ஏற்பட்டிருந்தால் பரவாயில்லை. ஆனால் ஏதோ உள்நோக்கோடு தீ வைத்து, பல இரகசியங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. இதுபோன்ற நிலைமைகளில் ஏழை எளிய நெசவாளிகளுக்குப் பயன்படக் கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கக் கூடாது. அவைகள் நல்ல முறையில் இயங்கச் செய்வதற்கு இயக்குநர் மற்றும் அதிகாரிகள் தீவிரம் காட்ட வேண்டும். இதுபோன்ற நிலைமைகளில் அரசு தலையிட்டு கட்சி ரீதியாக இயக்குநர்களை அமைப்பதை மாற்றுவதோடு மட்டுமல்லாமல், அமைச்சரவர்கள் தேர்தல் நடத்துவதைப் பற்றி இந்த அவையிலேயே அறிவிப்பார்கள் என்று நம்பி இதுபோன்ற நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துவரமுருகன்) :** எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றி,. அதிகம் நேரம் இல்லை என்றாலும், எல்லோரும் தாமாகவே சீக்கிரமாக முடித்துக் கொண்டார்கள். அதற்காக இந்த சேரின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போன்று அமைச்சரும் சுருக்கமாகப பதிலுரையை முடித்துக் கொள்வார்கள் என நம்பு

கிறேன். அவரைக் கம்பெல் செய்யக்கூடாது. இருந்தாலும் இன்னொரு டிமாண்ட் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கைத்தறித் துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களுக்கெல்லாம் முதலிலே என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அவர்களுடைய கருத்துக்களையும், அவர்களுடைய யோசனைகளையும் அரசு தக்க நேரத்திலே பயன்படுத்திக் கொள்ளும் என்ற உறுதியையும், நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட பல்வேறு குறைபாடுகளைப் போக்குவதற்கும் இந்தத் துறை கவனம் எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த மட்டில் கடந்த 30, 40 ஆண்டுக் காலமாகவே தமிழக அரசின் கவனத்தை ஈர்த்து அந்த அடிப்படையிலே பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. என்பதை நாம் அறிவோம். கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினை என்பது இரண்டு அடிப்படையிலே உருவாகியிருக்கிறது. ஒன்று, மில் தொழிலின் போட்டி காரணமாகப் பரம்பரையாகச் செய்து வந்த கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடு கொடுத்து அதிலே வெற்றி பெற முடியாத நிலையில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு உண்மை. இன்னொன்று, நாட்டிலே உற்பத்தி ஆகின்ற மில் துணி ஆனாலும், கைத்தறி, நெசவுத் துணி ஆனாலும், கதர்த் துணி ஆனாலும், எல்லாவற்றின் உற்பத்தியையும் கூட்டிப் பார்க்கின்றபொழுது இந்த நாட்டு மக்களின் குறைந்தபட்சத் தேவைக்குப் போதுமானதாக இல்லை என்று புள்ளி விவரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் பொதுவான பொருளாதார முன்னேற்றமின்மை இந்தத் துறையிலே இருக்கின்ற பொதுவாக எல்லோரையும் பாதிக்கக்கூடிய ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பொதுவான பொருளாதார முன்னேற்றமும், கைத்தறித் தொழிலுக்கு நாம் மில் தொழிலுக்கு ஈடாகத் தரும் பாதுகாப்பும், கைத்தறித் தொழிலில் புகுத்துகின்ற தொழில் நுட்பங்களைப் பொறுத்தும்கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை வெகுவாகக் குறையும்குறைந்து கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு கணிசமான முன்னேற்றத்தைக் கைத்தறி நெசவுத் துறையிலே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவ்வப்பொழுது தேக்கங்கள் குறைந்திருப்பதையும் பெருமளவில் கைத்தறி துணி வெற்றி கண்டிருப்பதையும், கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருப்பதையும், நாம் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக இந்த நன்மைகளை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, கடந்த மூன்று நான்காண்டுகளாக இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாகக் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசு ஓரளவிற்கு வெற்றி கண்டிருக்கிறது என்பதையும், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்தத் தொழிலுக்கு நல்ல பாதுகாப்பையும், நல்ல சிறப்பையும் ஏற்படுத்தும் என்ற உறுதியையும் தர விரும்புகிறேன்.

நான்கு அடிப்படையிலே நாம் இந்தப் பிரச்னைகளை அணுகுகிறோம். ஒன்று, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வேண்டும்; அப்படி அந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்களைப் பரிசீலித்து நாம் செயல்படுத்துகிறோம். இரண்டாவதாக, இந்தத் துறையிலே இருக்கும் சுரண்டல், கைத்தறி நெசவாளர்களின் உழைப்பைச் சுரண்டும் தன்மை பல்லாண்டுக் காலமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது; பல் வேறு நிலைகளிலேயும் இருந்து வருகிறது. கோவாப்டெக்ஸ் 30 சதவீதம் அதிகப்படுத்துகிறது என்றால் கூட்டுறவு ஸ்தாபனம் தான் என்றாலும்கூட அதையேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல தவறாகத்தான் இந்த அரசு அதை எடுத்துக் கொள்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5—30)

அது கூட நல்லதல்ல என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, நெசவாளர்களைச் சுரண்டுவது என்கிற நிலைமை எங்கெங்கு காணப்படுகிறதோ அதை எல்லாம் ஒழிப்பதன் மூலமாகத்தான் இந்தத் தொழிலில் அபிவிருத்தியை நாம் காட்ட முடியும். அதற்கு மேல் உற்பத்தித்திறனை நாம் அதிகரித்தாக வேண்டும். நெசவாளர்களின் உற்பத்தித் திறன் என்பது அதிகரிக்கின்றபோதுதான் அவனுடைய குறைந்த பட்ச உழைப்பு நேரம் 8 மணி என்றால் அதிலே அதிகமான கூலி பெறவும், அவனுடைய கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்கின்ற நிலைமையை நாம் அடைய முடியும். இதற்கெல்லாம் மேலாக விற்பனையை அதிகரித்தாக வேண்டும். அது உள்நாட்டு விற்பனை என்றாலும் அல்லது ஏற்றுமதி மூலம் நடைபெறுகின்ற வெளிநாட்டு விற்பனை என்றாலும் அதையும் நாம் அதிகரித்தாக வேண்டும். ஆகவே, இந்த 4 முனைகளிலும் நாம் எடுக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாகத்தான் இயல்பான முறையில் நெசவாளர்களுடைய கஷ்டங்கள் தீரவும், இந்தக் கைத்தறித் தொழில் நல்லதொரு முன்னேற்றத்தை அடையவும் முடியும் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில் நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும்.

குறிப்பாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரதம சங்கங்களிடமிருந்து 50 சதவிகிதம் உற்பத்தியைப் பெற்று அதை விற்றுக் கொண்டு இருக்கின்றது. அதற்காக அவர்கள் தர வேண்டிய பணத்தை காலாகாலத்திலே திருப்பித் தர முடியாத காரணத்தினால் அல்லது திருப்பித் தராத காரணத்தினால் இன்றைக்கு அந்த பிரதமச் சங்கங்கள், உற்பத்தி சங்கங்கள் பாதிக்கப்படுகின்றன, நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, குறிப்பாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்தப் பணத்தைக் காலாகாலத்தில் திருப்பித் தருவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றிய ஒரு விவரத்தை உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது 1,263 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 2.93 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றின் தலைமைச் சங்கமாக கோ-ஆப்டெக்ஸ் எனப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் இயங்கி வருகின்றது. இது பிரதம நெசவாளர் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50 சதவிகிதத்தைக் கொள்முதல் செய்து தமிழகத்திலும் இதர மாநிலங்களிலும், அதன் 525 கிளை விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்து வருகின்றது. பிரதம நெசவாளர், கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் கைத்தறி துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிதி நிலைமையைப் பொறுத்து, பெரும்பாலும், அவ்வப்பொழுது பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினைத்தர வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரதம சங்கங்களிலிருந்து அதிக அளவில் கொள்முதல் செய்து வருகின்றது. 1981—1982-ஆம் ஆண்டில், கோ-ஆப்டெக்ஸ் துணி விற்பனை ரூபாய் 75 கோடியாக இருக்க வேண்டும் என்ற குறியீட்டு அளவு நிர்ணயிக்கப்பட்டு கடந்த 8 மாதங்களில் (அதாவது ஜூலை 1981 முதல் பிப்ரவரி 1982 முடிய) கோ-ஆப்டெக்ஸ் சுமார் 41 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில்—அதாவது ஜூலை 1980 முதல் பிப்ரவரி 1981 முடிய—கோ-ஆப்டெக்ஸ் 29.21 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்தது. பல 1981 முதல் பிப்ரவரி 1982 முடிய 52.81 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளை விற்பனை செய்துள்ளது. சென்ற ஆண்டு, இதே காலத்தில் விற்பனை 35.26 கோடி ரூபாயாகும். பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்முதல் செய்த வகையில் கோ-ஆப்டெக்ஸ் பணம் பட்டுவாடா செய்த விவரம் பின் வருமாறு :—



அதைப்போன்று பள்ளிப்பட்டு தொகுதியில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு 8 ஆண்டுகள் முடிந்த பின்னாலே அங்கே தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு தனி அலுவலர் ஏறக்குறைய 23,24 கூட்டுறவுச் சங்கங்களை கண்காணிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் உடனடியாகத் தேர்தல் நடத்தி, நல்ல திறமை வாய்ந்த தலைவர்களை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் ஒரு பெரிய முக்கியத் தொழிலாக, ஊரகத் தொழிலாக இருந்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழிலிலே பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணி பாதுகாப்புத் தேவை; அவர்களுடைய வாழ்க்கை வளம் பெற ஒரு சட்டம் அவசியம் என்று எல்லாம் பேசப்பட்டு, தமிழ்நாடு சர்க்கார் கடந்த ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, கைத்தறி நெசவாளர் பணி பாதுகாப்பு மற்றும் வாழ்க்கை மேம்பாடு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, கடந்த அக்டோபர் மாதம் குடியரசுத் தலைவர் கையெழுத்தும் ஆகிவிட்டது. ஆனால் அது எப்போது முதல் செயல்படும் என்று பார்த்தால் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி முதல், அதாவது கடந்த 13 ஆம் தேதி முதல் அமுலாகும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் அமுலாக அதற்கு விதி வேண்டும், ரூல்ஸ் வேண்டும். அது இதுவரை போடப்படவில்லை.

ஒரு அழகான வண்டி இருக்கிறது. அதில் சக்கரம் மாட்டப்படவில்லை. சக்கரம் மாட்டினால்தான் வண்டி ஓடும். அப்படிப்பட்ட நிலையில் ஒரு அழகான சட்டம் இந்த பாதுகாப்புச் சட்டம். ஆனால் அதற்கு இன்னும் விதிகள் போடப்படவில்லை. இந்த நாட்டில் இருக்கிற இலட்சக்கணக்கான நெசவாளர்கள் இந்தச் சட்டத்தைப் பாராட்டினார்கள். ஆனால் ஓராண்டுக் காலமாகியும் கூட அதற்கு ரூல்ஸ் போடப்படவில்லை என்றால் அதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 27

நேரத்தில் நாம் இந்தக் கூட்டுறவு மில்லிலே பெற்றுத் தருகின்ற விலையும், நான் ஒன்றிரண்டை படித்துக்காட்ட விரும்புகிறேன். 10-ஆம் நம்பர் வெளி மார்க்கட்டில் விலை 90, நாம் தருகின்ற விலை 85 ; 60-ஆம் நெம்பர் 185 வெளி மார்க்கெட்டிலே, ஆனால், நாம் தருவது 170 ; 2/40 153 ரூபாய் வெளி மார்க்கெட்டிலே, நாம் தருவது 145 ; 2/80 240 ரூபாய் வெளி மார்க்கெட்டிலே, நாம் தருவது 230 ரூபாய். ஆகவே, கூட்டுறவு நூற்பு ஆலையின் நூல் விலை வெளி மார்க்கெட்டின் விலையை விட சுமார் 2 முதல் 3 சதவீதம் குறைவாகவே இருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய சங்கங்கள் அமைப்பதற்கும், நாம் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இப்போது தமிழகத்திலுள்ள, 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.93 இலட்சம் தறிகள், அதாவது 53 சதவீதம் தறிகள், கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த 2.93 இலட்சம் தறிகள் 1,263 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. 1981–82-ஆம் ஆண்டில், 34,177 நெசவாளர்களை தனியார் துறையிலிருந்து கூட்டுறவு அமைப்பிற்குக் கொண்டு வரப்பட்டு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டு முடிவிற்குள், 23 புதிய தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கென ஆரம்பிக்க அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. இவை தவிர, மாஸ்டர் வீவர்களின் பிடியில் சிக்குண்டு வாடும் நெசவாளர்களை விடுவிக்கவென தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அத்தகையத் திட்டங்களைச் செயற்[illegible]த்த அரசு தாராளமாக நிதியுதவி செய்து வருகிறது. இவை [illegible]ர, 1982–83-ஆம் ஆண்டில் சுமார், 27,000 தறிகளை தனியார் [illegible]றயிலுருந்து கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வர திட்ட[illegible]ப்பட்டுள்ளது.

[illegible]மிழக அரசு, [illegible]பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், [illegible]ழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், தனியே துறை[illegible]ளை அமைத்து அத்துறைகளின் மூலம் பல திட்டங்களைச் செயல்[illegible]டுத்தி வருகின்றது. அவ்வாறு செயல்படுத்தும் திட்டங்களில் [illegible]பிற்படுத்தப்பட்டோரது, குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள், ஒன்றாகும். கைத்தறி நெசவாளர்கள் இயல்பாகவே பிற்படுத்தப்பட்ட நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுடைய குழந்தைகள் இச்சலுகைகளை மேற்கூறிய திட்டங்கள் மூலம் பெற்றுவருகின்றனர்.

மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வருடாந்திர இலாபத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பொது நல நிதியிலிருந்து அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு படிப்புச் செலவுக்காகவும், சங்கங்களின் சக்திக் கேற்ப செலவு செய்து வருகின்றது. இதற்காக அரசு அனுமதி அவ்வப்போது வழங்கி வருகிறது.



1982 மார்ச் 27] [திரு. செ. அரங்கநாயகம்]

மேலும், அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ள 1981 ஆம் ஆண்டின் கைத்தறித் தொழிலாளர்களின் பணி நிலைகள் மற்றும் பல்வேறு விதிகள் அடங்கிய சட்டத்தின் 47 ஆவது பிரிவு, நெசவாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி கொடுக்கும் வகையில் சமூக நல நிதி ஒன்று திரட்டி, அதிலிருந்து உபகாரச் சம்பளம் வழங்க அரசுக்கு தக்க அதிகாரம் வழங்குகிறது. இந்தச் சட்டப்பிரிவின்படி, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அடுத்ததாக, கைத்தறி நெசவாளர்களுக்கு சில ரகங்களை ரிசர்வ் செய்ய வேண்டுமென்று கோரிக்கையின் அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பம்பாய் துணி நூல் ஆணையர் வெளியிட்டுள்ள, பருத்தி துணி நூல் கட்டுப்பாடு ஆணையின்படி கீழ்க்கண்ட இரகங்கள் கைத்தறிகளில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று உள்ளது:—

1. வேஷ்டி, சேலை இரகங்கள்.

2. லுங்கிகள், மற்றும் சம்சா இரகங்கள்.

3. சடார், பெட்ஷீட் பெட்கவர் இரகங்கள்.

4. பாண்டேஜ் துணி போன்ற இரகங்கள்.

5. மேஜை விரிப்பு, கைத்துண்டு, தூசு துடைக்கும் துணி இரகங்கள்.

6. சாதாரண நெசவில் நெய்யும் துணி (ஷர்ட்டிங் துணிகள்).

7. கான்வாஸ், தகூதி இரகங்கள்.

8. ஓரிழை, ஈரிழை துண்டு இரகங்கள்.

9. கோடிட்ட சாட்டின் துணிகள் என கூட்டுறவு இயக்கத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

எனினும் கரையின் அகலம், துணி அகலம் போன்ற நுட்பங்கள் நிறைந்த இந்த ஆணைகளை செயல்படுத்துவதில் சிரமங்கள் உள்ளன. வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டு உள்ளதுபோல் ஆலையில் தயாரித்த வேஷ்டி, புடவைகள் விற்பனையை தடை செய்வதும் சாத்தியமில்லை. மேற்படி ஒதுக்கீடு ஆணைகளை [illegible]ளிதாக்கி, சட்ட வடிவில் மாற்றியமைக்க தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தி வந்ததன் விளைவாக, மத்திய அரசு ஒரு குழு நியமித்து, இதுபற்றி ஆராய்ந்து அறிக்கை பெற்றுள்ளது. அதன் சிபாரிசுகள் அடிப்படையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதி திராவிட நெசவாளர்களுக்கான தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7 இடங்களிலே ஏற்படுத்த நாம் முடிவு செய்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலாலங்குடி, தலக்குளம், திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியம்மைபுரம், சேலம் மாவட்டத்தில் அளியார், பட்டளம், பெரியார் மாவட்டத்தில் மாத்தூர், வடாற்காடு மாவட்டத்தில் பில்லராணி ஆகிய 7 இடங்களில் புதிய தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களை ஆதி திராவிடர்களுக்காக நிறுவ நாம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இதனால் மாதம் 700 ஆதி திராவிடர்களுக்கு வேலை அளிக்கப்படும். இதற்கு வேண்டிய தொழில் கூடங்களை அமைப்பதற்கும் தறி முதலிய தளவாட சாமான்கள் வாங்குவதற்கும் சங்கம் ஒன்றுக்கு ரூ. 6.37 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 44.59 இலட்சம் தமிழ்நாடு மானியமாக வழங்கியுள்ளது.

(மாலை 5-40)

1982-83 ஆம் ஆண்டில் விற்பனை குறியீடு ரூ. 100 கோடியாக நிர்ணயித்து இந்த குறியீட்டை அடைவதற்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது.

கைத்தறியில் உற்பத்தியாகும் பாலியஸ்டர் சர்ட்டிங், புடவை ஆகியவைகளுக்கு பொது மக்களுடைய அமோக வரவேற்பு இருப்பதால் அம்மாதிரி துணிகள் உற்பத்திச் செய்யும் கைத்தறிகளின் எண்ணிக்கையை தற்போதுள்ள 4,000 லிருந்து 10,000 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கைத்தறித் தொழிலை விரிவுபடுத்த வேண்டுமென்பது நம்முடைய முக்கியமான ஒரு கொள்கை. அதன் மூலம்தான் நெசவாளர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த முடியும். கூலியும் அதிகம் கொடுக்க முடியும். அதனால் கைத்தறிகளை நவீனப்படுத்த அரசு அதிக அளவில் நிதி உதவி அளித்துள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் 15.50 இலட்சம் ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 21 இலட்ச ரூபாயும், 1981-82 ஆம் ஆண்டில் 22.50 இலட்சம் ரூபாயும் அளித்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 24 இலட்சம் ரூபாய் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 2/3 பங்கு கடனாகவும் 1/3 பங்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது. இதுவரை அரசின் உதவியால் கீழ்க்கண்ட இடங்களில் வடிவமைப்பு (டிசைன்ஸ்) மற்றும் சேவா நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் கடையநல்லூர்.



இலண்டனிலுள்ள "இன்டர் நேஷனல் இன்ஸ்டிடியூட் பார் காட்டன்" என்னும் நிறுவனத்தின் உதவியுடன் மத்திய அரசு அமைக்கவிருக்கும் 'பேஷன் டெக்னாலஜி" இன்ஸ்டிடியூட்டின் சேவையை தமிழ்நாட்டிலுள்ள கைத்தறிகளும் பயன்படுத்தும்.

சமீபத்தில் சேலத்தில் உற்பத்தியாகி கோ-ஆப்டெக்சால் வெளியிடப்பட்ட அயோத்தியா சேலைகள் தாய்மார்களிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. இம்மாதிரி புதிய இரகங்களில் கைத்தறித் துணி உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிக்கு வேண்டிய மூலப் பொருட்கள் கிடைப்பதற்காக நாம் புதிதாக கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்க இருக்கிறோம். எட்டயபுரம், தேனி, புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய இடங்களில் புதிய நூற்பாலைகளை நிறுவ இருக்கிறோம். அதிலே இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலையை அமைக்க அரசு 2 கோடி ரூபாய் மானியமாக தந்து, அதை அமைக்க இருக்கிறோம்.

அண்மையில் பட்டு கைத்தறி நெசவாளர்கள் பட்டு நூல் நியாயமான விலையில் பெறுவதில் இன்னல்கள் அனுபவித்தனர். அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண, தமிழ்நாடு அரசு எடுத்த முயற்சியால் மத்திய அரசு சீனாவிலிருந்து பட்டு நூல் இறக்குமதி செய்ய ஆவன செய்துள்ளது. இதுவரை தமிழ்நாட்டிற்கு 32.5 டன் பட்டு நூல் பெறப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இதன் விளைவாக பட்டு நூலின் விலை ஓரளவு குறைந்து வருகிறது.

தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு தங்கு தடையின்றி நூல் விநியோகம் செய்யும் பொருட்டு, 'மூலப் பொருள் வங்கி' ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

அதைப்போல தமிழ்நாட்டில் ஜனதா ரகத் துணியின் உற்பத்தி 1980-81 ஆம் ஆண்டில் 15 மில்லியன் மீட்டர், 1981-82 ஆம் ஆண்டில் 37 மில்லியன் மீட்டர் என்ற அளவுக்கு இருந்தது. அது 1982-83 ஆம் ஆண்டில் 40 மில்லியன் மீட்டராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவுக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதைப்போலவே, சேமிப்பு மற்றும் தற்காப்புத் திட்டம் என்ற திட்டம் நெசவாளர்களுக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள கைத்தறி நெசவாளர்கள் 67,000 பேர். நெசவாளர்கள் செலுத்தும் சந்தாத் தொகை கூலியில் ரூபாய்க்கு 6 பைசா. அரசு அளிக்கும் மானியத் தொகை ரூபாய்க்கு 3 பைசா. இந்தச் சேமிப்பு நிதிக்கு அரசு வழங்கும்

வட்டி 7 சதவீதம். அங்கத்தினர் இறந்தால் வாரிசுக்கு கிடைக்கும் இன்ஸ்யூரன்ஸ் தொகை ரூ. 3,000. இது 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இறந்த அங்கத்தினர்களின் வாரிசுக்கு கிடைக்கும் உதவித் தொகையை மேலும் அதிகரிக்கும் வகையில் ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நெசவாளர்கள் வீடு வசதித் திட்டத்தின் கீழ் 1982–83-ல் 1,000 வீடுகள் கட்டுவதற்கான ஒரு முயற்சியை நாம் எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலக் கைத்தறி வாரியம் ஒன்றை அமைத்து கைத்தறி நெசவாளர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு அளிக்கும் வகையில், 1981 ஆம் வருடத்தின் தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வேறு வகைத் துறைகள்) என்னும் சட்டம் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்படி புதிய சட்டம் செயல்படுத்தவும், கவனிக்கவும், தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு தேவையான உதவிகளை அளிக்கவும் தமிழ்நாடு அரசு மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்க ஆலோசித்து வருகிறது. விதிகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இப்போது வாரியம் அமைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அந்த ஆக்டில் அப்படிப்பட்ட வாரியம் அமைக்க எந்தவிதமான ப்ரொவிஷனும் கிடையாது என்று நினைக்கிறேன். ஆகவே, சட்டத்தில் ப்ரொவிஷன் இல்லாத நிலையில் இப்படி புதிதாக ஒரு அமைப்பு ஏற்படுத்துவதால் அது சட்டப்படி சரியல்ல என்ற ஒரு பிரச்சினை உருவாகும். ஆகவே, அப்படி அமைப்பது சரியல்ல என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் செய்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, சட்டத்தை இப்போது அமுலுக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். அதற்கு வேண்டிய விதி முறைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதுவரையில் விதிமுறைகள் பயன்படுத்தாமல் அமுல்படுத்தக்கூடிய விதிகள் அமல்படுத்தப்படும். விதிமுறைகள் இருந்தால் தான் அமுல்படுத்த வேண்டும் என்ற நிலையில் உள்ள விதிகள், விதிமுறைகள் அமலுக்கு வந்தவுடன் (பப்ளிஷ் செய்தவுடன்) பின்பற்றப்படும். வாரியம் தனியாக அமைத்த பிறகு, அதற்குத் தகுந்த வகையில் அதிகாரம் கொடுக்கலாம். அதுவரையில், இந்தக் துறைதான் அந்தச் சட்டத்தை





இம்ப்ளிமெண்ட் செய்யும் மேற்பார்வை அதாரிட்டியாக இருக்கும். வாரியம் ஏற்பட்ட பிறகு, அதற்கு எந்த வகையில் அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்று கருதப்படுகிறதோ, அந்த வகையில் சட்டத்தில் மாற்றங்கள் செய்யத் தேவையென்றால், அது செய்யப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** ஆக்ட் இருந்தாலும் கூட, விதிகள் இல்லாமல் எப்படி அதை அமல்படுத்த முடியும். விதிகள் எப்போது போடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** விதிகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இன்னும் ஒரு வாரம், 10 நாட்களுக்குள் விதிகள் பப்ளிஷ் செய்யப்படும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தச் சட்டத்தை அமல் செய்கிறபோது, தேவையான மாற்றங்களைச் செய்யலாம். அரசுக்கு அதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

விசைத் தறிக்கூடங்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் விசைத் தறிக் கூடங்களை அமைக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கூடங்கள் வருமாறு :

இராமநாதபுரம் மாவட்டம்— அருப்புக்கோட்டை.
பெரியார் மாவட்டம்— சிவகிரி.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்— ஜயங்கொண்டசோழபுரம்.

இனி துவங்க இருக்கும் விசைத் தறிக் கூடங்கள் வருமாறு :—

மதுரை மாவட்டம்— ஐக்கம்பட்டி.
திருநெல்வேலி மாவட்டம்— சங்கரன்கோவில்.
சேலம் மாவட்டம்— இராசிபுரம்.
புதுக்கோட்டை மாவட்டம்— புதுக்கோட்டை.
பெரியார் மாவட்டம்— தாராபுரம்.
தர்மபுரி மாவட்டம்— தருமபுரி.
இராமநாதபுரம் மாவட்டம்— தளவாய்புரம்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை அமல்படுத்த விசைத்தறி கூடம் ஒன்றுக்கு ரூ. 20 இலட்சம் மானியமாக வழங்குகிறது.

(மாலை 5–50.)

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தினுடைய உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 1977–78ல் 79.81 மில்லியன் மீட்டர்; 1978–79ல் 85.47 மில்லியன் மீட்டர், 1979–80ல் 90.06 மில்லியன் மீட்டர், 1980–81ல் 103.28 மில்லியன் மீட்டர் என்று

இருக்கிறது. அது 1981–82ல் 110 மில்லியன் மீட்டராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83-ஆம் ஆண்டிற்கு உற்பத்தி குறியீடு 120 மில்லியன் மீட்டர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

அதற்கடுத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கைத்தறித் துணிகளுக்கு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் இதுவரை அடக்க விலைக்கு மேல் 9 சதவீதம் மட்டுமே லாபம் வைத்து விற்கலாம் என்று ஒரு முறையை விதித்திருந்தது. இந்த லாபத்தின் விகிதம் 1—3—1982 முதல் உயர்த்தப்படுகிறது. சுத்தப் பட்டு கைத்தறி துணிகளுக்கு 10 சதவீதம் என்றும், ஜனதா தவிர மற்ற பருத்தி ரகத் துணிகளுக்கு 12 சதவீதம் லாபம் வைத்துக் கொள்ளலாம் என்றும், புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் சிறிது பயன் அடைவார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்கடுத்து, கைத்தறி துணிகளுடைய விற்பனையை அதிகரிப்பதற்கு, ஏற்றுமதியை அதிகரிப்பது என்பது ஒரு முக்கியமான ஒன்றாக நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம். இப்படி ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமாக கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிட்டு தமிழ்நாட்டில் கைத்தறி ஏற்றுமதி ரகங்களின் உற்பத்தியை பெருக்கும் வகையில் ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தொடர்ச்சியாக நூல் விநியோகம் செய்வது பற்றி, தென்னிந்திய நூற்பாலை கழகத் தலைவருடன் 25—3—1982ல் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். இதன் தொடர்பாக ஏற்றுமதி ரக உற்பத்தியாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கும். வகையில் ஒரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது

இது இப்போது ஏற்றுமதியாகக் கூடிய துணிகளுக்கு கொண்டுவரவிருக்கிற ஒரு திட்டமாகும். இதை பின்னாலே ஒவ்வொரு கைத்தறி நெசவாளிக்கும் பயன்படுகிற வகையிலே முயற்சிகளை மேற்கொள்ள விருக்கிறோம்.

இந்தியாவில் மொத்த கைத்தறி ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு ரூ. 330 கோடி. இதில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் கைத்தறி துணிகளின் மதிப்பு ரூ. 78.32 கோடி. தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களின் மூலம் ஏற்றுமதியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை பெருக்குவதற்காகவும், சம்மந்தப்பட்ட ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு ஊக்குவிப்பு மானியம் அளிக்கும் சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு அரசு ஆராய்ந்து வருகிறது



அதற்கு அடுத்து, கைத்தறிகளை நவீனப்படுத்துதவற்காக சில முயற்சிகளை மேற்கோள்ளவிருக்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள கைத்தறிகளில் பெரும்பாலானவை குழித்தறிகளாகவே இயங்கி வருகின்றன. இம்மாதிரி குழித்தறிகளை சில உபகரணங்களின் உதவியால் நவீனப்படுத்துவதின் மூலம், நெசவாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் அதன் மூலம் அவர்களுக்கு கூலி உயர்வு கிடைக்க செய்யவும் முடியும். சேலத்தில் இயங்கி வரும் மத்திய அரசின் (இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் ஹேண்ட் லூம் டெக்னாலஜி) கைத்தறி தொழில் நுட்பப் பயிற்சிக் கூடம், இதற்கென ஆராய்ச்சிகளை நடத்தி நவீன கைத்தறியை உருவாக்கியுள்ளது. இந்த கைத்தறியில், 5 வீல்கள் அட்டேச்மென்ட் செய்வது ஃப்ளை வீல் எனப்படும் வீலைஅமைப்பது. ரப்பர் பில்லட்டஸ் என்று கூறப்படும் கருவியைப் பொருத்துவது, அட்டேச்சட் பீம் எனப்படும் கருவியைப் பொருத்துவது போன்ற பல நவீன முறைகள் இதில் கையாளப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி நவீனப்படுத்தப்பட்ட 45 தறிகள் சேலம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தற்சமயம் பரீட்சார்த்தமாக வேலை செய்கின்றன. இந்த நூதன தறியில் நாளொன்றுக்கு கிடைக்கும் உற்பத்தி சுமார் 15 முதல் 20 மீட்டர்களாகும். இதனால் நெசவாளர்களுக்கு 20 முதல் ரூ. 30 வரை கூலி கிடைக்க ஏதுவாகிறது. ஆனால் சாதாரண தறியில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு தினசரி உற்பத்தி 6 மீட்டர்கள். அதில் தினக்கூலி சுமார் 9 முதல் 12 ரூ மட்டுமே கிடைக்கும். கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருதி, இம்மாதிரி நூதன தறிகளை உற்பத்தி செய்து வாங்கி, இனி அமைக்கப்படும் புது கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு குறிப்பாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கலாம் என்ற வகையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

அடுத்து இங்கே சி. டி. எஃப். பணத்தை ரிட்டர்ன் செய்வது பற்றிக் கூறினார்கள். பழைய சமசிக்கன நிதி திட்டத்தில் சேர்ந்திருக்கும் தொகையை உறுப்பினர்களுக்கே திருப்பிக் தருவதைப் பற்றி 17—11—1981–ல் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் கைத்தறி நடைமுறை மூலதன உதவியை கண்காணிக்கும் மாநில உயர்மட்ட குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேடுத்துக் கொண்ட, கூட்டுறவு பதிவாளர் பிரதிநிதி, வங்கிகளில் முடக்கப்பட்டுள்ள பண்த்தை தவணை முறையில் திருப்பித் தர உறுதி அளித்துள்ளார். இதன் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.......... (குறுக்கீடு).

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமசிக்கன நிதித் திட்டத்தின் கீழ் நெசவாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகையும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்திய தொகையும், அதே அளவுக்கு அரசாங்கம் செலுத்திய தொகையும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு கூட்டுறவு மத்திய வங்கியிலும் அந்தத் தொகை டெபாசிட் செய்யப்பட்டுள்ளது, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பெயரிலேயே, இருப்பினும் கூட்டுறவு மத்திய வங்கியின் நிதிநிலைமை குறைந்து விட்டதன் காரணத்தாலே, இன்றையதினம் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே நெசவாளர்களுடைய துயரைப் போக்குகின்ற வகையில் உடனடியாக அந்த சி. டி. எஃப். பணத்தை அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க அரசு ஆணையிடுமா என்று அறியவிரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17—11—1981ல் தான் இந்த முடிவினை அதாவது திருப்பித் தருவது என்ற முடிவையை எடுத்திருக்கிறார்கள். ஆகவே அதை நடைமுறைப்படுத்த அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே டெட் ரிலிஃப் ஆக்ட் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே சின்னசட்டப் பிரச்சினை இருக்கிறது. ஒரு பாவு நெய்வதற்கு 220 ரூபாய் கூலி என்று வைத்துக்கொண்டால் இரண்டு பாவு ஒரு மாதத்திலே நெய்கிறார்கள் என்றால் பாவாற்றுக் கூலி 100 ரூபாய் வருகின்றது. கூலி 120 ரூபாய் மட்டும் தான். டெட் ரிலிஃபைப் பொறுத்தவரையிலே அந்த பேரேட்டில் ஒரு பாவுக்கு 220 ரூபாய் என்று நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள். இரண்டு பாவு நூற்றால் 440 ரூபாய் வருகின்றது. ஆக இந்த பேரேட்டின் கணக்கைப் பார்த்து டெட் ரிலீஃப் ஆக்ட் பொருந்தாது என்று சொல்லப்படுகின்றது. ஆனால் ஆக்சுவலாக பாவாற்றுக் கூலி போக மீது கிடைப்பது 240 ரூபாய்தான். ஆனால் பேரேட்டில் 440 ரூபாய் என்று இருப்பதால் டெட் ரிலிஃப் ஆக்ட் பொருத்தம் இல்லாமல் போகின்றது.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, இந்த 78 கோடி ரூபாய்க்கு மேல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது பற்றிச் சொல்லப்பட்டது. 78 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்தாலும் கூட பல இடங்களில் தேக்கம் ஏற்படுகின்றது. அந்தத் தேக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய





வேண்டும் என்றால் சோசலிஸ்ட் நாடுகளிலே கைத்தறித் துணியை மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்வதால் அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவினை இரட்டிப்பாக ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே ஏற்றுமதிக்கான முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே அதனை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து டெட் ரிலிஃப் ஆக்ட் என்பது கடன் பெற்றவர்களுக்கு சில நிலைமைகளில் தரப்படுகின்ற சலுகை பற்றிய சட்டமாகும். அந்தச் சட்டம் நெசவாளர்களுக்குப் பொருத்துகின்ற இடத்திலே அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த டெட் ரிலிஃப் ஆக்ட் நெசவாளர்களுக்குப் பொருந்தாமல் அவர்கள் அதனை அனுபவிக்காமல் இருந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலே தான் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேறு வகையிலே நிதியுதவி செய்து அந்தக் கடனிலே இருந்து அவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்ற யோசனை வந்தது. ஆனால் அவர்கள் டெட் ரிலிஃப் ஆக்டிலே பயனடையக்கூடிய நிலைமை இருந்தால் நாம் பேங்கிலே இருந்து கடன் வாங்கித் தருவதில் புண்ணியம் இல்லை. ஆகவே அத்தகைய வசதிகளை நெசவாளர்கள் அதிலே பெறலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய வகையிலே தெரிவித்து அவர்கள் பயன் பெறக்கூடிய முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கோள்கிறேன்.

அடுந்து பல்வேறு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு இதுபோன்ற கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையில் தக்க நடவடிக்கை எடுப்பதோடு அந்தத் தொழிலின் மேன்மைக்காக இந்த அரசு பாடுபடும் என்கின்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இங்கே பேசிய கருத்துகளின் அடிப்படையில் வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமுகு பேரவைத் தலைவர் விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு**

**திரு. சு. பாலன் :** அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 26 கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,45,92,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று. கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண். 22.

கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,19,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, வியாசர்பாடி பகுதியில் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்ய மருந்தகங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,19,49,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(மாலை 6-00).

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,19,49,000,ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

கோரிக்கை எண். 30—சமூக நலன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,01,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்",



திரு. சு. பாலன்: தலைவரவர்களே, ஏழை பார்வையற்றோர்களுக்குப் பாதுகாப்பான இல்லங்கள் கட்டித்தர கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,01,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திருமதி தா. இராசம்மாள் : தலைவரவர்களே, தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைத்து ஆடைகள் தயாரிக்க வழிவகை செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,01,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. பொ. உத்திரபதி : தலைவரவர்களே, பாலர் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் மதிய உணவும், கட்டிட வசதியும் செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,01,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, சாத்தான் குளத்தில் உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,01,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவை தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்க்

*ல் 236–310ம் பக்கங்களின் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

குறிப்பேட்டில் உள்ள கருத்துக்களை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில், மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களுக்கு எனது பதிலைத் தெரிவிக்கி றேன்.

**திரு பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு தலைவர் அவர் களே, கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய இரண்டு தலைப்பு களின்கீழ் சற்றொப்ப ரூ. 41 கோடிக்கு மேல் செலவழிக்கின்ற இந்த மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புத்துறை கிராம மக்களுக்கு, கிராமத்திலே இருக்கிற அடிப்படை ஏழை மக்களுக்கு மிகப் பயன்படக் கூடிய ஒரு துறையாகும். ஆனால் கிராமத்திலே இருக்கின்ற ஏழைகள் வளர்க்கின்ற காளை மாடுகள், எருமைகள், பசுக்கள், ஆடுகள், பன்றிகள் போன்றவற்றிற்கு சரியான முறையிலே நாம் வழி காட்டி இருக்கின்றோமா, அவைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை நல்ல முறையிலே செய்து இருக்கிறோமா என்று பார்த்தால், ஓரளவு நடவடிக்கை எடுத்திருந்தாலும், கிரா மக்களுக்கு, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்துகின்ற அளவிலே நல்ல வழிகாட்டியாக இந்தத் துறை இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும்.

பசு மாடுகள், எருமை மாடுகள் இவைகள் எல்லாம், இன்றைய தினம் மற்ற மாநிலங்களோடு அல்லது மற்ற நாடுகளோடு ஒப் பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் இவைகள் எல்லாம் இன்னும் எலும்பும் தோலுமாகத்தான் இருக்கின்றன.

பல கோடிகள் செலவு செய்த நிலைமையிலே அவைகள் வளர்ந்து இருக்கின்றனவா, அதனால் கிராம மக்களுடைய ஏழை மக்களுடைய அடிப்படை ஏழைகளுடைய பொருளாதாரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்று நாம் கூற லாம். பொதுவாக எல்லா கிராமங்களிலும் உழவுத் தொழி லுக்குத் தேவைப்படுகின்ற காளைகள் இன்றைய தினம் மிகவும் நோஞ்சானாக இருப்பதோடு அவைகளை நல்ல வளமாக, பலம் உள்ளவைகளாக ஆக்குவதற்கு நாம் தக்க நடவடிக்கைகளை அரசுத் துறையிலே எடுக்கவேண்டும்,

அவற்றினுடைய தீவனங்கள் இன்றைய தினம் கிராமங் களிலே வைக்கோல் என்ற அளவிலே இருந்தாலும், நல்ல சத்து உணவு கொடுப்பதற்கு கிராமங்களிலே இருக்கிற ஏழை மக்களுக்கு போதுமான வசதி இல்லை என்பதை நாம் அறிவோம். கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு பாதிக்கப்படுகின்ற



நிலைமை வருகின்ற போது போதுமான வைத்திய வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்தால் போதுமான அளவிலே இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாடுகளுக்கு வரும் கோமாரி நோய்க்கு இன்னும் நாம் கட்டணம் வசூலித்துத்தான் ஊசி போடுகின்ற நிலைமையிலே இருக்கின்றோமேதவிர வேறில்லை. விவசாயிகள் நிலைமை யைப் பார்க்கிறபோது முழுவதுமாக கட்டணம் இல்லாமல் இலவசமாக ஊசி போடுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சிக் காலங்களிலே, அந்த கோமாரி நோய்க்காக, மருந்துக் கட்டணம் வாங்கியிருந்தாலும், இன்றைய தினம் அரசு அதற்கு செலவழிக்கின்ற முழுத் தொகையையும் கிராம விவசாயிகளுடைய வறுமை நிலைமையை மனதில் கொண்டு, இலவசமாக கொடுக் கின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தில், இதற்கு முன்னால் மேல சோழ குப்பம் என்னுமிடத்தில் நூற்றுக்கணக்கான ஆடுகள் நோயால் செத்திருக்கின்றன. கிராமத்திலே இருக்கின்ற ஏழைகள் அந்த ஆடுகளை வளர்த்து அதன்மூலம் தங்கள் குடும்பத்தை வருங்காலத்தை உருவாக்கிக் கொள்ள எண்ணியிருந்த அந்த நேரத்தில் , இப்படி திடீர் திடீரென்று நோய்வாய்ப்பட்டு ஆடுகள் இறந்துவிட்டதால் அவர்களுடைய பொருளாதார நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது ஆகவே, அவைகளுக்கு நல்ல முறையிலே வைத்தியவசதி செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக நோய் தடுப்பு ஊசி போடும் முறையை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். எங்கே கால்நடைகளுக்கு நோய் வரு கிறதோ, அது வருவதற்கு முன்னால் முன்ஜாக்கிரதையாக தடுப்பு ஊசிகள் போடுவதற்கு அந்த இலாகா மிகவும் கவனமாக செயல் பட வேண்டும். முக்கியமாக இந்த நோய் கோடை காலத்திலே வருகிறது. ஆகவே, அதற்கு முன்னதாகவே, கோடைகாலம் வருவதற்கு முன்பே, இப்படிப்பட்ட தடுப்பு ஊசிகள் போடுகின்ற காரியத்தை இந்தத் துறை உடனுக்குடன்- செய்ய வேண்டும். இதிலே, 5 ஆம் பக்கத்திலே ஒரு வரியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''ஆடு வளர்ப்போர் கல்வியற்று இருப் பதால் '' என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதாக இந்தக் கோரிக்கையிலே சொல்லி இருப்பது உண்மையிலேயே அந்தத் தொழிலின் முக்கியத்துவத்தை, குறிப்பாக ஒரு இனத்தை குறிக் கின்ற அளவிலே இருக்கிறது என்பது என்னுடைய கருத்து என்பதை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன் அப்படிப்பட்ட ஒரு கருத்தை தெரிவித்திருக்கக் கூடாது; அதை மாற்றி அமைக்கவேண்டும்..

நல்லமுறையிலே, ஆடுகளையும் நல்ல முறையிலே காளைகளையும், பசுக்களையும் வளர்த்தால், கிராமப் பொருளாதாரம் உயரும். மிக உயர்ந்த இனங்களை, ஜெர்சி போன்ற இனங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்த அரசு செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறைகளை நல்ல முறையிலே கிராமங்களிலே பரவச் செய்யவில்லை. எங்காவது கிராமக் கால்நடை மருத்துவ மனையில் சென்று கேட்டால், உறை விந்து அங்கிருந்து வர வேண்டும், இங்கிருந்து வர வேண்டும் என்று சொல்கிறார்கள். பொதுவாக இன்றையதினம், இப்படிப்பட்ட செயற்கை முறை இருந்தாலும், எல்லா ஒன்றியங்களிலும், ஒரு பொலி காளை, உயர்ந்த ஜாதிக் காளையை வைத்தால், நிச்சயமாக நல்ல இன விருத்தி ஏற்படும் என்ற ஒரு கருத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் நாம் கோழி அபிவிருத்தித் துறையிலே இன்னும் நல்ல முறையிலே கவனம் செலுத்த வேண்டும் பல இடங்களிலே கோழி வளர்ப்பு பண்ணைகளின் கட்டிடங்கள் பாழாக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் துவக்கப்பட்டிருந்தாலும் நல்ல பராமரிப்பு இல்லாமல், அவைகள் மூடி இருக்கின்றன. அதேபோல் செய்யாறு வட்டத்தில், ஒரு கிராமத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டிடங்களைக் கட்டி அவைகள் இன்றையதினம் மூடப்பட்டு கிடக்கிறது. கோழி வளர்ப்புத் திட்டம் இல்லையோ என்ற அளவுக்கு அங்கு நிலைமை இருக்கிறது. எனவே, இதிலே அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும். அப்படி கவனம் செலுத்தினால், கிராமப் பொருளாதாரம் வளர இந்த கோழி வளர்ப்புத் திட்டம் உதவும், எனவே, இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, பன்றி வளர்ப்பு. இந்த பன்றி பராமரிப்பை ஒரு இழிவான தொழிலாக கிராமத்திலே நினைக்கிறார்கள். எனவே, இது தவறு, இது லாபகரமான ஒரு தொழில் என்பதை கிராமமக்களுக்கு ஏற்படுத்துகின்ற வகையில், நல்ல பிரச்சாரம் செய்ய வேண்டும். அப்படிச்செய்து இந்த பன்றி வளர்ப்புத் திட்டத்தை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் இந்தத் திட்டத்திலே நாய் வளர்ப்பு பற்றியும்கூட சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக நாய் வளர்ப்பைப் பற்றி நம் அன்புக்குரிய உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பலமுறை கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அதிலே நல்ல ஆராய்ச்சியும் அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் 0 இராஜபாளையம் நாய், 9 கொம்பேறி நாய் சென்னையிலே 1 ராமரிப்பு செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். இதனால் வெளிநாட்டு பாரின் எக்ஸ்சேஞ்சு கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்



பிருக்கிறது. அப்படிப்பட்ட இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இந்த நேர திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

[இரவு 6—10]

கால்நடை ஆய்வாளர்களை அவசரம் அவசரமாக நீங்கள் எடுத்துவிட்டது பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி அவர்கள் முக்காடு போராட்டம் நடத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியது சட்டமன்றம் கூடுவதற்கு முன்பு அவசரம் அவசரமாக அந்த உத்தரவைப் போட்டீர்கள். இன்றைய தினம் வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது. நான் அதற்குள்ளே போக விரும்ப வில்லை அதிகமாக அதிலே உறுப்பினர்கள் ஈடுபட்டார்கள். என்றார்கள். அதிலே யார் யார் ஈடுபட்டார்கள் என்பது ஜோதி ராமலிங்கத்திற்குத்தான் தெரியும். பல ஆயிரக் கணக்கான ஆய்வாளர்களை பாதிக்கக்கூடிய நிலைமையை அமைச்சர் எடுத்திருக்கக்கூடாது. ஆக்கப் பூர்வமான காரியங்களைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு அமைச்சரும் இப்படி ஏதாவது அழிக்கக் கூடிய காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். மணியக்காரர், கணக்கப்பிள்ளைகளை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் ஒழித்திருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் ஊராட்சி மன்றங்களை ஒழித்து இருக்கிறார்கள். நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் கால்நடை ஆய்வாளர்களை ஒழித்து இருக்கிறார்கள். இப்படி ஒழித்து இருப்பது பெரிய இழப்பு. இந்தத் துறையிலே உள்ளவர்களுக்கு வேறு மாற்று ஏற்பாடுகள் செய்துவிட்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

அடுத்து சமூக நலன். பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து சமூகத்திற்காகச் செய்ய வேண்டிய பல பணிகளைப் பற்றிக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைத்து தொழு நோயாளிகளுக்கு உதவி செய்தார்கள். இன்றைய தினம் அந்த இல்லங்கள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. யார் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டிருந்தாலும் அது புனிதமான திட்டம். இந்தியத் தந்தை உத்தமர் காந்தியடிகள் அவர்கள் தொழு நோயாளிகளுக்கு தன் கைபட சிகிச்சையளித்தார்கள். அந்த தொழு நோயாளிகளுக்கு மறு வாழ்வு இல்லங்களை ஏற்படுத்தி யும் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் அவர்கள் அந்த இடங்களை விட்டு ஓடுகிற நிலைமை இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே கலசபாக்கத்திற்கு அருகில் மல்லவாடி என்ற இடத்திலே தொழு நோயாளிகளுக்காக மறுவாழ்வு இல்லம் கலைஞர் அவர்கள் அரண்மனைபோல் ஏற்படுத்தித் தந்தார்கள். 1974—75 ஆம் ஆண்டில் அங்கே என்ன தொகை

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1982 மார்ச் 27

ஒதுக்கப்பட்டதோ அதே தொகைதான் இன்றும் ஒதுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அவர்கள் தங்களுக்கு சரியான உணவு வசதி இல்லையென்றும், உடை வசதி இல்லையென்றும் சொல்லி பல போராட்டங்களையெல்லாம் நடத்தியிருக்கிறார்கள். அங்கே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே உள்ள தொழு நோயாளிகள் தங்களுடைய வீட்டிலே உள்ள தாய் தகப்பனாக இருந்தாலும்சரி மகனாக இருந்தாலும் சரி, ரத்தத்தோடு ரத்தமாக இருக்கின்ற உறவாக இருந்தாலும் சரி வீட்டை விட்டு வெளியே அனுப்புகிற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்களை கலைஞர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு இன்றைக்கு உணவு வசதி, உடை வசதி போன்றவற்றை அவர்கள் கோரிக்கையை ஏற்கின்ற அளவுக்கு எந்த அளவுக்குச் செய்யவேண் வேண்டுமோ அதை அரசு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மகளிருக்கு பல நலன் திட்டங்கள் கொண்டுவந்து இருக்கிறீர்கள். அந்த நலன் திட்டங்கள் எல்லாம் இன்று அந்த மகளிருக்குப் போய்ச் சேருகிறதா என்றால் அது ஒரு குறைபாடாகவே இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

முதியோர் உதவித் தொகையைப் பொறுத்த வரையிலும் ஊனமுற்றவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் வயதான விவசாயத் தொழிலாளர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பயன் அடைய 8.98 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் இன்றையதினம் எங்கள் தொகுதியிலே பார்க்கிறபோது முதியோர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் இவர்கள் எல்லாம் அதற்காக மனுச் செய்கிற போது உரிய நேரத்திலே கிடைப்பதில்லை. அரசு அப்படி மனுச் செய்கிறவர்களுக்கு 3 மாத காலத்திற்குள்ளாக உதவி உண்டு இல்லை என்பதைத் தெரிவிக்கும்படி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்தத் தொகை கிடைப்பதற்கு வழிவகை செய்யய வேண்டும். வாழ வழியற்றவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் அந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். எந்த அரசாக இருந்தாலும் முதியோர்கள் உதவித் தொகைக்காக மனுச் செய்கிறபோது இதிலே கூட ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கையூட்டுப் பெறுகிற நிலைமையைப் பார்க்கிறபோது மனம் வேதனை அடைகிறது. ஆகவே அப்படி கையூட்டுப் பெறுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து கடுமையன தண்டனை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.



1982 மார்ச் 27] [திரு. பாபு ஜனார்த்தனன்]

முக்கிய சேவிகா, கிராம சேவக் போன்ற பதவிகள் பல இடங்களிலே பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. பல ஒ் றியங்களிலே நாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிற நிலை இருக்கிறது. அவர்களுக்கு சமூக சேவிகா, கிராமசேவக் போன்ற வேலைகளைக் கொடுத்தால் வேலையின்றி இருக்கின்ற நிலைமை போக்கப்படும். அதைப் போல கைத்தொழில் செய்து வாழ வேண்டிய பெண்கள் தையல் மெஷின்கள் கொடுக்கவேண்டுமென்று மனு போடுகிறார்கள். நல்லமுறையில் இந்த மெஷின்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஊனமுற்றவர்கள் தங்களுக்கு வண்டி வேண்டுமென்று மனு செய்கிறார்கள் என்று சொன்னால் கூட கையூட்டு பெறுகிற நிலை இருக்கிறது. அரசு அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து மனு செய்கிறவர்களுக்கு வண்டி கிடைக்கிற அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கக்கூடிய இந்த அரசாங்கம் 1975—76 ஆம் ஆண்டில் சமூகநலத் துறைக்கு 1.30 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1981—82 ஆம் ஆண்டில் 8.77 கோடியாக அதிகரித்துள்ளதை இந்த அரசு மக்கள் நலனில் கொண்டுள்ள அக்கறையை காட்டுகிறது. மகளிர் நலனுக்கென 12.03 லட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1981—82 ஆம் ஆண்டில் 107.01 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன், மேலும் கிராமங்களில் வேலையின்றி இருக்கக்கூடிய பெண்களுக்கு இந்தஅரசாங்கம் பல திட்டங்களின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது பாராட்டத் தக்க ஒன்றாகும்,

இதுவரை கிராமக் குடிசைத் தொழில் மூலம் 4035 பெண்கள் பயிற்சி பெற்று, 1,815 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கு 50 முதல் 75 ரூபாய் வரை உதவித் தொகை அளித்து வருவதையும் நான் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதுவரை 857 மகளிர் தீப்பெட்டி தொழிலாளர் சங்கங்களும் ஏழு தீப்பெட்டி தொழிற் கூடமும் பதிவு செய்யப்பட்டு 3,120 மகளிர் பயிற்சி பெற்றுள்ளார்கள், கூட்டுறவு முறையில் பனை மரம் தொழில் சம்பந்தமாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு, நோட்டு புத்தகம் தயாரித்தல் மூலம் 750 மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு

[செல்வி ப. விசயலட்சுமி] [1982 மார்ச் 27

அளித்தும் இன்னும் சாக்கட்டி உற்பத்தி செய்தல், மெழுகு வத்தி தயாரித்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், கயிறு திரித்தல் ஆகியவற்றின் மூலம் ஏராளமான பெண்களுக்கு பயிற்சியும் வேலை, வாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளதை நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு விடுதிகள் ஆரம்பிக்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கிடைக்க உதவி செய்வதுடன் தேவையான உணவு தானியங்கள் எண்ணெய் மற்றும் பிற பொருட்கள் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தின் மூலம் கிடைக்க வழி செய்துள்ளது மற்றும் ஆதரவற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏராளமான மகளிர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இதுபோன்ற வேலை வாய்ப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாது நமது புரட்சித்தலைவரின் அரசு விதவையானோர் மகள்களுக்கு திருமணம் செய்ய ரூ. 1,000 இலவசமாக வழங்கப்படுவது, மறுமணம் செய்து கொண்ட கணவன், மனைவிக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கி மறுமணத்தை ஊக்குவிக்கப்படுவது போன்ற திட்டங்கள் எல்லாம் அனைத்து தரப்பினராலும் பாராட்டக்கூடிய திட்டங்கள் ஆகும். குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்திற்கு அரசு 1981–82 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 231.22 லட்சம் ரூபாயும் பல்வேறு திட்டங்களின் மூலம் 6.81 லட்சம் பேர்கள் இதன் மூலம் பயனடைந்து வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது. இது மட்டுமல்லாது ஊனமுற்றவர்களுக்கும் இந்த அரசு சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்ததை விட இரண்டு மடங்கு ரூபாய் 125 லட்சம் ஒதுக்கியுள்ளதையும், இதுவரையில் 30,000 ஊனமுற்றவர்கள் பயனடைந்துள்ளார்கள் என்பதையும் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். வேளாண்மைக்கு அடுத்தபடியாக மக்களுக்குத் தேவையான சத்துணவு கால்நடை பராமரிப்புத் துறை அளிக்கிறது. கால்நடை பராமரிப்புக்கு அரசாங்கம் பேருதவி செய்து வருவதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 6.20)

சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் எனது தொகுதியில் ஒரு கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்போது எனது தொகுதியில் கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப் படவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.



1982 மார்ச் 27] [செல்வி ப. விசயலட்சுமி]

அதே போல் என்னுடைய தொகுதியில் உள்ள பெருயாக் கவுண்டன்பட்டியில் கால்நடை மருந்தகம் ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க அரசு கடன் வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், மருத்துவர்கள் விரைந்து சென்று பணிபுரிய வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் மாவட்ட சமூக நலத் துறை அலுவலகங்களுக்கும் இதுநாள்வரை தொலைபேசி இல்லாமல் இருந்து வருவதால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அவர்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கால்நடை கிளை நிலையங்களில் பணியாளர்கள் இல்லாமல் இருப்பதால் பொது மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால், கால்நடை மருத்துவர்கள் உரிய நேரத்தில் மக்களுக்கு உதவ முடியவில்லை. ஆகவே, கால்நடை கிளை நிலையங்களில் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது, ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் சுற்றுலா செல்ல அரசாங்கம் ஒதுக்கியுள்ள தொகை குறைவாக உள்ளதால் அதை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆணும் பெண்ணும் அனைத்துத் துறைகளிலும் சரிநிகர் சமமாக வாழ வேண்டுமென்று தேசியக் கவி பாரதியார் சொன்னதை நிறைவேற்றுகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலுள்ள இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எவ்வாறு என்றால், அவர்களுக்கு ஒவ்வொரு துறையிலும் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு நாட்கள் ஆட்சி செய்தவர்கள் காலத்தில் பெண்களுக்கு ஒவ்வொரு துறையிலும் வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. இப்பொழுது, புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் ஒவ்வொருவரும் என்றும் தங்களுடைய ஆதரவை மாண்புமிகு புரட்சித் தலைவருக்குத் தான் கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கால் நடைப் பராமரிப்பு, சமூக நலம் ஆகிய மானியங்களின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளின் உற்ற நண்பனான கால்நடைகள் வளர்ச்சி அடைந்தால்தான் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்ற அடிப்படையிலே, கால்நடைப் பராமரிப்புத் துறை பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது. கால்நடைகளை நவீன முறையிலே பெருக்குதல், கால்நடைகளுக்கு வரக் கூடிய நோய்களைக் கண்டு அவ்வப்போது சிகிச்சை செய்தல், மற்றும் வரக்கூடிய நோய்களுக்குத் தடுப்பு நடவடிக்கை எடுத்தல், போன்ற பல்வேறு பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் கன்றுகள் பேரணி நடத்துவது பாராட்டுக்குரியது. அதே நேரத்திலே, கன்றுகள் பேரணி நடத்துவதற்கு அரசாங்க அனுமதி ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்களில்தான் கிடைக்கின்றது. மார்ச் மாத இறுதிக்குள் விழா நடத்தப்பட வேண்டும். ஆகவே, அந்த அனுமதியை முன்னாலே கொடுத்தால், இந்த விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஒவ்வொருஆண்டும் கன்றுகள் பேரணிக்கு மானியத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டி.என்.டி.சி. மாட்டுத் தீவனம் மிக நல்ல முறையிலே கால்நடைகளுக்கு உகந்த தீவனமாக இருப்பதை நம்முடைய விவசாயிகள் பாராட்டுகிறார்கள். ஆனால், அதே நேரத்திலே அந்தத் தீவனங்கள் பால் சொஸைட்டிகள் மூலமாகத்தான் விற்பனை செய்யப்படுகின்றன. பால் சொஸைட்டிகள் பெரும்பாலான ஊர்களிலே கிடையாது. அதே நேரத்தில், அந்தத் தீவனம், சொஸைட்டியில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அந்த உணவை ஏ.சி.எஸ். மூலமாகவும், கூட்டுறவுத் துறைகள் மூலமாகவும் , சூப்பர் மார்க்கெட் மூலமாகவும் விற்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளுக்குத் தேவையான மிக முக்கியமான மருந்தான லேக்டோவிட், லிவ் 52 என்ற இரண்டு மருந்துகளையும் எல்லாக் கூட்டுறவுக் கிளைகளிலேயும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

கால்நடை மருத்துவமனைகளுக்கு ரூபாய் 15,000 என்றும், கால்நடை மருந்தகங்களுக்கு ரூபாய் 10,000 என்றும், கேந்திரக் கிராம நிலையங்களுக்கு 5,000 ரூபாய் என்றும், கேந்திர கிராம



கிளை நிலையங்களுக்கு 1,500 ரூபாய் என்றும், கோழி விஸ்தரிப்பு நிலையத்திற்கு 5,000 ரூபாய் என்றும் பத்தாண்டுகளுக்கு முன்பு மருந்து வாங்குவதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுதுள்ள கால் நடை வளர்ச்சியையும், மருந்துகளின் விலையேற்றத்தையும் கருதி இந்தத் தொகையை முறையே 25,000, 20,000. 10,000, 3,000, 10,000 என அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் தொகுதியில் அடங்கியுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் கால்நடைகளுக்கு ஆஸ்பத்திரி கொடைக்கானல் நகரில் தான் இருக்கிறது. கொடைக்கானல் மலையைப் பொறுத்த வரையில் கொடைக்கானல் நகரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு வர வேண்டுமென்றால் மேல் மலைப் பகுதியில் இருந்து 30 மைல் கால் நடைகளை அழைத்து வர வேண்டும் ; அதே போல் கீழ் மலைப் பகுதியிலேயிருந்தும் 30 மைல் தூரம் கால் நடைகளை அழைத்து வர வேண்டும். இந்தக் குறைகளைப் போக்குவதற்காக மேல் மலைப் பகுதியில் ஒரு ஆஸ்பத்திரியும், கீழ் மலைப் பகுதியில் ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியத்தில் ஒன்று அல்லது இரண்டு மருந்தகங்கள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நமது அரசு செயல் பட்டு வருவது பாராட்டுக்குரியது. ஆனால் கொடைக்கானல் மலையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஊருக்கும் இடையில் 10 மைல், 15 மைல் தூரம் நடையாக நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. தன்னிறைவுத் திட்ட வேலை நடைபெறுவதால் தான் அங்கே இப்பொழுது ரோடுகள் போடப்பட்டு வருகின்றன. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இரண்டு ஊர்களுக்கு ஒரு மருந்தகம் என்ற விகிதத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் பகுதியிலே இலட்சுமிபுரம், வட புதுப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களிலும், ஒவ்வொரு ஊரிலும் பத்து பத்து கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் விவசாயத்தையே நம்பியிருக்கின்ற கிராமங்கள், அந்தக் கிராமங்களின் மையக் பகுதிகளான இலட்சுமிபுரம், வட புதுப்பட்டி ஆகிய ஊர்களில் இரண்டு ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது கொடைக்கானலிலே உதவி இயக்குநர் அலுவலகம் செயல் பட்டு வருகிறது. எட்டு கால்நடை மருந்தகங்களும், பத்துக்கு மேற்பட்ட ஆடு வளர்ப்போர் சங்கங்களும், இயங்கி வருகின்றன. இந்தச் சங்கங்களின் வேலைகளுக்காகவும், பொது மக்களும், அதிகாரிகளும் கொடைக்கானல் மலைக்குச் சென்று வர வேண்டியிருப்பதால் பெரியகுளம் தாலுக்காவில், பெரிய

[திரு. கா. கோபாலகிருஷ்ணன்] [1982 மார்ச்

குளத்தைத் தலைமையாக வைத்து ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்தையும், கொடைக்கானல் பகுதியில் ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்தையும் தனியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் ஆஸ்பத்திரி 1919 இல் ஏற்பட்டது. அங்கு நாள் ஒன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கால் நடைகள் சிகிச்சை செய்யப்படுகின்றன. அங்கு வெளி நாடுகளிலிருந்து வரக் கூடியவர்கள் தங்களுடைய கால் நடைகளுக்கு சிகிச்சை செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ள அந்த மருத்துவமனையை கிளினிகியன் சென்டராக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்றுகளை வளர்ப்பதற்கு, ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு கேந்திர கிராமத்திற்கும் 25 கன்றுகளுக்கு கன்று ஒன்றுக்கு 25 வீதம் மானியமாகத் தரப்படுகிறது. ஒவ்வொரு கேந்திர கிராமத்திற்கும் பத்துக் கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு அல்லது ஒரு கன்றுக்குத்தான் மானியத் தொகை கொடுக்கப்படுகிறது ; கொடுக்க முடிகிறது. எனவே அதனை 50 கன்றுகள் என்ற முறையிலே உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் மலையைப் பொறுத்த வரையில் அங்கே கால் நடைகளுக்கு என்று மேய்ச்சல் நிலம் தனியாக இல்லாத சூழ்நிலையிருக்கிறது. ஒரு பக்கம் பட்டா நிலம், மறு பக்கம் வனத்துறை ; இதிலே கால் நடைகளை எங்கும் சென்று மேய்க்க முடியாமல் அங்கேயுள்ள விவசாயிகள் மிகவும் சிரமப்படுவதால் ஊருக்கு ஒரு மேய்ச்சல் நிலம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-30).

தற்போது கால் நடைத் துறை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கால் நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை, தமிழக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், இறைச்சிக் கழகம் போன்றவைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து பகுதிகளும் தனித்தனியாக பணியாற்றி வருகின்றன. இவை அனைத்தையும் ஒரே இயக்குநரின் கீழ் கொண்டு வர வேண்டும். அந்த இயக்குநர் கால் நடைத் துறையில் அனுபவம் மிக்கவராக இருக்க வேண்டும். தற்போது நியமித்திருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பதிலாக இவர்களை நியமித்தால் இந்தத் துறை நல்ல முறையில் வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.



[திரு. கா. கோபாலகிருஷ்ணன்]

அடுத்து தமிழகத்திலே இப்போது பசுக்களைக் கொல்லக் கூடாது என்று தடை இருக்கின்றது. ஆகவே கைவிட்டுவிட்ட பசுக்கள், மாடுகள் ரோடுகளில் திரிகின்ற நிலை இருக்கின்றது. எனவே அவைகளுக்காக காப்பகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மனித இயல் மருத்துவப் பல் கலைக் கழகம் ஏற்படுத்தப் போவதாக அறிகிறேன். அதைப் பாராட்டுவதோடு, அதே போன்று கால் நடை மருத்துவப் பல் கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமூக நலத்துறையில் 1,200 தையல் ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பல் வேறு கோரிக்கைகள், நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமல் இருக்கின்றன. ஒரே கல்வித் தரத்தைப் பெற்றவர்கள், டி.டி.சி. படித்துள்ள தையல் ஆசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்தால் அவர்களுக்கு 350 ரூபாய் சம்பளம். அவர்களே ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணி புரிந்தால் 250 ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகிறது. எனவே அவர்களுடைய சம்பள விகிதத்தை ஒரே சீராக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 கிராம நல அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கிறார்கள். எனவே அவர்களில் 5 பேர்களை பெண்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. என். பழனிவேல். : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கால் நடை, சமூக நலம் என்கின்ற மானியக் கோரிக்கையில் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு சமுதாயத்திலே எப்படி மக்கள் ஒரு சிரமமான சூழ் நிலையிலேஇருக்கின்றார்களோ அதேபோல இன்றைக்குகால்நடைகள்இருக்கின்றன.இன்றைக்கு புதிய புதிய விஞ்ஞானகண்டு பிடிப்புகள் வந்து கொண்டு இருந்த போதிலும் கூட, இன்றைக்கு அவைகளை சிறப்பாக வளர்க்கவோ அதை அபிவிருத்தி செய்யவோ முடியாத சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கின்றது. அறிக்கையிலே வேண்டுமானால் சில புள்ளிவிவரங்களைக் கொடுக்கலாமே தவிர, இன்றைக்கு நம்முடைய தேவைகளை ஈடு கட்டும் அளவில் அவைகளைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாக இன்றைக்குக் கிராமங்களிலே மேய்ச்சல் காடு கிடையாது. மலைப் பகுதியிலோ அல்லது காட்டுப் பகுதியிலோ இவைகளை மேய்த்தால் காட்டிலாக்கா அதிகாரிகள் பிடித்து கேஸ்கள் போட்டு 100 ரூபாய் 200 ரூபாய் அபராதம் போடுகிறார்கள். எனவே எங்கெங்கு மேய்ச்சல் காடுகள் இல்லையோ அங்கே எல்லாம் இவைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசினுடைய கடமை என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. என். பழனிவேல்] [1982 மார்ச் 27

அதே போன்று, கிராமங்களிலே வைத்திய வசதி இல்லாத கிராமங்களில் மொபைல் வேன் மூலம் டாக்டர்களை அனுப்பி அந்த கிராம மக்கள் வைத்திருக்கக் கூடிய கால் நடைகளுக்குப் போதிய வைத்திய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கிராமங்களிலே இருக்கின்ற கால் நடை மருத்துவக் கிளை நிலையங்களில் இன்றைக்கு 1500 ரூபாய் வரையில் தான் செலவு. செய்யலாம் என்ற விதி இருக்கின்றது. இது போதாது. குறைந்தது 5000 ரூபாய் அளவுக்காவது நிதி ஓதுக்க வேண்டும். ஏனென்றால் இப்போது கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள், தங்களுடைய கால் நடைகளை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் நேரங்களில் அங்கே இருக்கக் கூடிய டாக்டர்கள் மனிதனுக்காக ஆஸ்பத்திரியில் மருந்து சீட்டை எழுதிக் கொடுப்பது போல், இங்கேயும் மருந்து சீட்டை எழுதிக் கொடுத்து வெளியிலே இருந்து மருந்துகளை வாங்கி வரச் சொல்லுகிறார்கள். அங்கே உள்ள ஏழை மக்கள், 30, 40 ரூபாய்கள் செலவு செய்து மருந்து வாங்கும் சூழ்நிலையில் இல்லை. எனவே அந்தக் கால் நடைகளுக்கான வைத்தியச் செலவை அரசே முழுமையாக ஏற்றுக் கொண்டு அதைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஆடு வளர்ப்புத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கின்றது. நேற்றைக்கு கூட கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக ஒரு பதிலைச் சொன்னார்கள். பெருமளவு சங்கங்கள் இருப்பது உண்மை. ஆனால் அவைகள் எல்லாம் செயல் படும் நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தத் துறையின்மூலமாக அரசாங்கத்தால் கடன் கொடுத்து, குறுநில விவசாயிகள் இந்த ஆடுகளைக் கொடுத்து வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு ஆடு இறைச்சி கார்ப்பரேஷன் சென்னையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். இதுபோல் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும், இன்றைக்கு ஆடு இறைச்சிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி, நகரங்களில் இருக்கின்ற சாதாரண ஏழைஎளியவர் ஒரு மலிவான விலையில் கறியை வாங்கிச் சாப்பிடுவதற்கான ஒரு ஏற்பாட்டினை அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அ்தேபோல், கால்நடை இன்சூரன்ஸ்திட்டம். உண்மையிலே இதை உடனடியாக அமுல்படுத்தியாக வேண்டும். அதை அமுல்படுத்துகின்ற நேரத்திலே, இந்த இன்சூரன்ஸ் செய்யப்பட்ட கால்நடைகள் இறந்து விட்டால், அந்த சர்ட்டிபிகேட் வாங்குவதற்குக்கூட பொதுமக்கள் அலையவேண்டிய ஒரு அவல



1982 மார்ச் 27] [திரு. என். பழனிவேல்]

மான சூழ்நிலை இருக்கிறது. அதற்கு 30, 40 ரூபாய் லஞ்சம் அங்கே உள்ள அதிகாரிகள் கேட்பதாக சொல்லுகிறார்கள். அம்மாதிரியான முறைகளில் கால்நடைகள் இறந்துவிட்டால், உடனடியாக சர்ட்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். டாக்டர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், இன்றைக்குத் தமிழகத்திலே ஒரு பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் அரசு ஒருசமயத்தில், டாக்டர்களோடும், இன்னொரு சமயத்தில், ஆய்வாளர்களோடும் சேர்ந்துகொண்டு இருக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த இரட்டை முறை வேண்டாம். அவர்களைக் கூப்பிட்டுப் பேசி அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டாக வேண்டும். இல்லையேல், அது ஒரு பிரச்சினையாகவே இருந்து கொண்டேயிருக்கும்.

அதேபோல் இன்றைக்கு கோழி வளர்ப்புத் திட்டம் என்றிருக்கிறது. அதிலே லட்சக்கணக்கான முட்டைகள் எல்லாம் உற்பத்தியாவதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு கோழி முட்டையின் விலை கூட 50, 60 பைசாவாக இருக்கிறது. அதனால், சாதாரண ஏழை எளிய மக்கள் இன்றைக்கு இறைச்சி வாங்கிச் சாப்பிட முடியாத ஒரு சூழ்நிலையில் இந்த கோழி முட்டைகளையாவது வாங்கிச் சாப்பிடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, குடும்பக் கார்டுக்கு இந்தக் கோழி முட்டைகளை சப்ளை செய்யமுடியுமா என்பதை அரசு பரிசீலித்து, அப்படி முடியுமானால், அந்தக் கோழி முட்டைகளைக் குடும்பக்கார்டுகளுக்குச் சப்ளை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு சமூகநலம் என்பது நம்முடைய நாட்டிலே ஒரு முக்கியமான இலாகா. ஏன் என்று சொன்னால் இந்தச் சமூகநலம் இன்றைக்குச் சீரழிந்து, சின்னாபின்னப்பட்டு, இருந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அவர்களும் சிரிக்கிறார்கள். இதை நான் என் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு விதவைகளுக்கும், ஏழைகளுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் என்றெல்லாம், இதிலே சொல்லப்பட்டிருக்கிறது பல தலைப்புகளிலே. அதிலே பல விதவைகள், அல்லது திருமணம் செய்யமுடியாத நிலையில் இருப்பவர்கள் நிலையையெல்லாம் அன்றாடம் நாம் பத்திரிகையிலே பார்க்கின்றோம். நேற்றுகூட பவானி சாகர் அணையிலிருந்து 4 பேர் பிணம் மிதந்ததாக வந்திருக்கிறது. 16 வயது இளம் பெண்கள், அங்கே அந்தப் பவானி சாகர் அணையிலே, மிதந்து இருக்கிறார்கள்; அதற்கு என்ன காரணம்? சர்வோதய சங்கத்திலே, நூல் நூற்பு வேலை செய்திருந்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் ஏன் சாக வேண்டும்? 16 வயது இளம் பெண்கள் சாகக்கூடிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது. சமூக நலத்துறையை வைத்திருக்கின்ற அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

[திரு. என். பழனிவேல்] [1982 மார்ச் 27

அதேபோல், சென்னையிலேகூட, வியாசர்பாடியில், நேற்று கல்யாணபுரத்தைச் சேர்ந்த, சரஸ்வதி என்ற ஒரு 22 வயது பெண்ணும், லீலாவதி என்ற ஒரு 18 வயது பெண்ணும், திருமணம் செய்யவந்த மாப்பிள்ளைகள் எல்லாம் போய்விட்ட காரணத்தால், வரதட்சணைக் கொடுமை, காரணமாக அவர்கள் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டார்கள். இதற்கு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு பொறுப்பில்லையா என்பதை சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். சிந்தித்துப் பார்த்து இப்படிதி சமூக நல இலாகாவை வைத்திருக்கிறவர்கள், இவைகள் எல்லாம் ஏன் ஏற்படுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்து, பாதிக்கப்பட்ட பெண்களை, அந்தக் குடும்பத்தை பாதுகாப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், மகளிர் நலத்திற்கு இன்றைக்கு 1.30 இலட்சமாக இருந்ததை, 8.77 கோடியாக அதிகரித்திருக்கிறது. நம்முடைய அ.தி.மு.க. அரசு என்று பெருமையோடு பல நண்பர்கள் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லட்டும், அது தப்பில்லை. ஆனால் உண்மை நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். நேற்றைய தினம் மின்சார அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்போது என்ன சொன்னார், மின்சாரக் கட்டணம் அதிகம் என்று சொல்லும்போது, கிடையாது, அதிகம் இல்லையென்றும், இன்றைக்கு 16 பைசா என்பது 72 லே அது, இன்றைக்கு 5 பைசாவுக்குச் சமம் என்று சொன்னார். அப்படி என்று சொன்னால் இந்த 8.77 கோடியாக இருப்பது, உண்மையிலே, 2¼ அல்லது 2½ கோடித்தான், வருமே தவிர, இது ஒரு பெரிய தொகையாக நாம் வேண்டுமானால் விளம்பரத்திற்காகச் சொல்லலாம். அது பெரிய தொகை அல்ல. அந்தத் துறைக்கு இது போதுமான தொகை அல்ல, அதை நீங்கள் அதிகப்படுத்த வேண்டும்.

அதேபோல் இன்றைக்குத் தட்டெழுத்துப் பயிற்சி என்று சொல்லி, ஆண்டு வருமானம், 3,500 ரூபாய்க்குக் குறைவாக வந்தால், 16 வயது முதல் 30 வயது வரையிலுள்ள பெண்களுக்கு பயிற்சிக் கொடுக்கிறார்கள். சம்பளம் எவ்வளவு, மாதம் 15 ரூபாய் (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** சீக்கிரத்தில் முடித்துக் கொள்ளுங்கள், ஒன்பது நிமிடங்கள் ஆகி விட்டன.



வாக்கெடுப்பு—தொடர்ச்சி

1982 மார்ச் 27]

(இரவு 6–40.)

**திரு. என். பழனிவேல்:** முக்கியமான சில விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுங்கள்.

இன்றைக்கு 16 முதல் 30 வயதுவரை உள்ள பெண்களுக்கு தட்டச்சுப் புயிற்சிக்காக மாதம் 15 ரூபாய் வீதம் ஸ்டைபென்ட் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 மாதத் திற்கு மாதம் 15 ரூபாய் என்று கொடுத்தால் அதை வைத்து அவர்கள் எப்படி பயிற்சிபெற்று, எப்படி தேர்வு எழுதப்போகி றார்கள். அதுவும் 1000 பேர்களுக்குத்தான் இந்த உதவி கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படி பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு பின்னால் என்ன செய்யப் போகிறீர்கள்? அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அதற்கு ஏதாவது ஒரு திட்டம் இருக்க வேண்டும்; அப்படியானால்தான் பயன் அடைய முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கணக்குத் துறையில் 15 ரூபாய் வீதம் 6 மாதங்களுக்கு ஸ்டைபென்ட் கொடுத்து, பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது. இதற்கும் 3000 ரூபாய் வருமான வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது; தட்டச்சுப் பயிற்சிக்கும் அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் இந்தப் பயிற்சிக்கு வருகிறார்கள் என்றால் வேறு எங்கும் போக முடியாமல் தான் வருகிறார்கள். அவர்களுக்கு ஏன் இந்த வருமான வரம்பு நிர்ணயிக்க வேண்டும்? அது தேவையில்லை. வருமான வரம்பை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத் தைச் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்களில் பெண் தையல் ஆசிரியர்கள் 1250 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சுமார் 18 ஆண்டுகளாக எந்தவிதமான பதவி உயர்வும் இல்லாமல், ஊதிய உயர்வும் இல்லாமல் அப்படியே இருக்கிறார்களாம். உயர் நிலைப் பள்ளிகளிலுள்ள தையல் ஆசிரியர்களுக்கு 350 ரூபாய் அடிப்படைச் சம்பளமாம்; ஊராட்சி மன்றங்களில் இருக்கிற இவர்களுக்கு 250 ரூபாய் அடிப்படைச் சம்பளமாம். இது சம்பந்தமாக அவர்கள் மாநாடு நடத்தினார்களாம்; மனு கொடுத் தார்களாம். அதைக் கவனிக்கிறோம் என்று சொன்னார் களாம். ஆனால் இதுவரை ஒன்றும் நடக்கவில்லையாம். ஆக, அவர்களை எல்லாம் சமூக நலத்துறையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய பாயின்ட். ஊராட்சித் துறை யில் இருக்கிற அவர்களை சமூக நலத் துறையில் எடுத்து தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

வந்திருப்பது அவர்கள் வாழ்வில் விளக்கேற்றி வைக்கும் திருத்தொண்டாகும். அவர்கள் பயிற்சி முடிந்ததும் அவர்கள் வேலை பெறவும் போதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தால் இந்த அரசை அந்த உள்ளங்கள் ஒருபோதும் மறவாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான அம்சத்தை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆசிய ஜோதி நேரு அவர்களும், பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் குழந்தைகளின் பால் எத்தகைய அன்பு செலுத்தினார்கள் என்பதை நாம் அறிவோம். நமது பொன்மனச் செம்மலும், பூக்களைப் போன்ற நமது குழந்தைகள் பசி என்னும் வெயில் பட்டு வாடிவிடாமல் மலர்ந்து மணம் பரப்புவதற்காக, அவர்களுக்கெல்லாம் சத்துணவு அளிக்கும் திட்டம் ஒன்றைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது நாட்டு வரலாற்றிலே, சமூக நல்வாழ்வுப் புரட்சித் திட்டங்களிலே மிகப் புனிதமாகப் போற்றப்பட்டு, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவரின் புகழை காலா காலத்திற்கும் பாடி நிற்கும் என்பதில் ஐயமே இல்லை.

வயதானவர்களுக்கு ஓய்வூதியம், திக்கற்ற கைம்பெண்களுக்கு ஓய்வூதியம், திக்கற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி வேளாண்மையில் உள்ள திக்கற்ற தொழிலாளர்களுக்கும், கண் பார்வையற்றவர்களுக்கும் உதவி. இப்படி சமூகத்தின் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தங்களுக்கு வாழ்வே கிடையாதா, எதிர் காலமே இல்லையா என்று விரக்தியுற்ற மக்களுக்கெல்லாம் நம்பிக்கைத் தேன் துளியைக் கொடுக்கின்ற அற்புதமான சமூக நல்வாழ்வுத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் மனதாரப் பாராட்டுகிறேன்.

இத்தகைய புரட்சிகரமான எழுச்சிமிக்க சமூக சீர்திருத்த திட்டங்களையெல்லாம் வரவேற்கின்ற அதேவேளையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொளகிறேன். உடல் ஊனமுற்ற நபர்கள், நைலான் பின்னல் வேலைகள், மரவேலைகள், பால்விற்பனை செய்தல் போன்ற சுயவேலைகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்வை வளமாக அமைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு எல்லாம் தமிழ் நாடு கூட்டுறவு வங்கியின் மூலம் கடனுதவி அளிக்கும் திட்டமொன்றைக் கொண்டு வந்தால் அதனால் அவர்கள் எவ்வளவோ முன்னேற்றம் அடைய ஏதுவாகும் என்பதை பணிவுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை பராமரிப்பு பற்றியும் ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பண்டைக் காலத்தில் கால் நடையை வைத்துத்தான் சொத்து மதிப்பிடப்பட்டது என்பதை நாம் அறிவோம். இன்னமும் அந்த நிலை கிராமப்புறங்களில் நிலவி வருகிறது. கிராமப்புறங்களில் கால்நடை வியாதிகளை



சாதாரணமாகவே பார்க்கலாம். அது குறித்து ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு வீட்டிலும், எத்தனை கால்நடைகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்து கிராமந்தோறும் அவ்வப்போது கால்நடை மருத்துவர் சென்று கண்காணித்து தக்க மருந்துக்களைத்தந்து வந்தால் கால்நடைகளைப் பரிசோதித்து நிவாரணம் கூறி வந்தால், கால்நடைகளால் கிடைக்கின்ற வளம், கிராமத்தை வளப்படுத்துவதோடு, அவற்றினை நம்பியுள்ள கிராம மக்களின் வாழ்க்கையையும் ஒளி பெறச் செய்யும் என்பதில் ஐயமில்லை. நோய்களை வருமுன் காப்பதைவிட சிறந்த மருத்துவம் வேறில்லை. எனவே வந்தபின் அனுபவிப்பதை விட முன்கூட்டியே காலமுறையாக மருத்துவர்களே கிராமந்தோறும் சென்று பரிசோதித்து அறிவுரையையும், மருந்துகளையும் வழங்கி வந்தால மிகப் பெரிய பயன விளையும் என்று நம்புகிறேன். இதற்குரிய திட்டத்தை வகுத்து செயற்படுமாறு அரசைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். காரணம் கிராமவாசிகள் ஏழ்மை நிலையில் இருப்பதால் அவர்களாகவே இதை கவனித்துக் கொள்ள முடியாது. அரசு அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேவைப்பட்டால் கால்நடைகளைப் பிணியினின்றும் காக்க மருத்துவ மனைகளுக்கு அவைகளை அழைத்துச் சென்று கண்காணித்து பிணி தீர்த்து வைக்கும் கடமையையும், காலமுறையோடு கால் நடை மருத்துவர்கள் மாவட்டந்தோறும் செல்வதற்கும் இந்தத் திட்டத்தை வகை செய்ய வேண்டும் என்று மீண்டும் பணிவன்புடன் கேட்டுக கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணைகள் சரியான முறையில் செயல்படவில்லை என்பதையும் இங்கே நான் சொல்லியாகவேண்டும், ஆனால கம்பம் தொகுதியில் அப்படிப்பட்ட கால் நடைப் பண்ணை, சோட்ட ரீதியில் ஏற்படுத்தினால் மதுரை மாவட்டத்தில் நன்கு செயல்படும். மேலும் அதற்கு அடிப்படைத் தேவையாகிய அரசாங்கக காடுகள் வளர் பகுதிகள் மிகுதியாக கம்பம் பகுதியில் உள்ளன. ஆகவே, கம்பம் பகுதியில் உத்தம பாளையம் கோட்டத்தில் சுருளியாறு லோயர் கேம்ப்பில் காடு வளர் பகுதியில ஒரு மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்தால் கால் நடை உற்பத்திக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு கால்நடை மருந்தகங்களுக்கும் ஒரு இரவு காவலரைப் போட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மருந்தகங்களில் எல்லாம் கால் நடை உதவி மருத்துவர்கள் தான் அடிப்படையாக இருந்து சகல பணிகளையும் செய்து வருகின்றார்கள். கால்நடை உதவி மருத்துவர்கள போதிய அடிப்படை வசதி, உதவியாளர்கள் போன்ற வசதிகள் இல்லாமலேயே மேற்படி திட்டப் பணிகளை நடத்தி வருவது அவர்களின் முழுத் திறமைக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

[திரு. ஆர். டி. கோபாலன்] [1982 மார்ச் 27

கால்நடை மருந்தகங்கள் பெயரளவிற்குத்தான் கட்டி முடிக்கப்பட்டு ஒப்புவிக்கப்படுகின்றன. ஆனால் அவைகளில் அடிப்படைத் தேவைகளான தண்ணீர் வசதி, மின்சார வசதி, கழிப்பறை வசதி, சுற்றுச் சுவர் வேலி வசதி, மற்றும் கிளை நிலையங்களுக்கு அடிப்படை பணியாளர்கள், இவைகள் இல்லாமலேயே நடந்து வருகின்றன. கால்நடை மருத்துவர்கள் இவைகள் எல்லாம் இல்லாமலேயே மிகச் சிரமத்துடன் ஆனால் திறமையாக நிலையங்களை நடத்தி வருகின்றனர்.

(இரவு 6-50).

ஆதிகாலம் தொட்டு மருந்து வாங்கும் வசதிகளுக்கு ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ரூபாய் பத்தாயிரம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இன்று பெருகிவிட்ட காலநடை வளர்ச்சிக்கு இந்தத் தொகை மிகவும் குறைவாக இருப்பதால் இதை ரூபாய் 20,000 ஆக உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன.

கம்பம் தொகுதியிலே 'ஹைவேஸ்' பகுதியிலே சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன் ரூபாய் 20,000 செலவில் ஒரு கால்நடை மருந்தகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்று வரை அங்கு நிரந்தர மருத்துவர்களைப் போடவில்லை என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்து கோமாரி நோயால் வருத்தப்படும் கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளை கிராம மக்கள் வெளியே இருந்து தான் ஐஸ்கட்டிப் போட்டு வாங்கி வரவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நோயை காணநோய் என்றும் கிராமத்தில் சொல்வார்கள். ஆகவே, அந்த மருந்துகளை கால்நடை மருந்தகங்களிலேயே வழங்குவதற்கான முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது கம்பம் தொகுதியில் உள்ள கோம்பை நாய்களின் வகைகள் இப்போது குறைந்துக் கொண்டு வருகிறது. அவற்றை பெருக்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக கம்பம் தொகுதியில் ஒரு கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தில் கம்பம் தொகுதியில் சுருளியாறு பக்கத்தில் பழங்குடியினர் வசிக்கும் இடமான பறையர்குடி என்ற ஊரிலே உள்ள மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு செய்வதற்கு அங்கே பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து என்னுடைய தொகுதியில் கூடலூரிலுள்ள கேந்திர கிராம நிலையத்தில் குறைந்த அளவே பொலி காளைகள் உள்ளன. அங்கு தேவையான பல உயர்ந்த பொலி காளைகளை கொடுத்து, பராமரித்து, கம்பம் தொகுதிகளில் கால்நடைகளின் பால்தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 27] [திரு. ஆர். டி. கோபாலன்]

அடுத்ததாக கம்பம் தொகுதியில் உள்ள அனுமந்தன் பட்டியில் எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லை. ஆகவே, அங்கே சாக்கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்கூடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் 10,000 ஏக்கருக்கு மேலாக தென்னைகளை பயிர் செய்திருக்கிறார்கள். அவைகளும் மிக நன்றாக வளர்ந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கம்பம் அல்லது கூடலூரில் கயிறு தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கம்பம் தொகுதியில உள்ள கே. கே. பட்டியில் தனியார் ஒருவர் அனாதைக் குழந்தைகளை மிக நல்லமுறையில் வளர்த்து ஒரு சிறிய அளவில் அநாதை ஆசிரமத்தை நடத்தி வருகிறார். ஆதரவற்ற குழந்தைகள் நலத் திட்டத்தின் மூலம் இப்படிப்பட்ட தனியார்களின் நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு அளித்து, ஊக்கம் அளித்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

கடைசியாக, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதியில் உள்ள திருச்சிற்றம்பலம் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக உயர்த்தி தருமாறு கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவந்திருக்கிற, சமூக நலம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இங்கே கால்நடைகளைப் பற்றிச் சொல்லும்போது, ஒரு காலத்தில் ஏழை எளியவர்களுடைய சாதாரண மக்களுடைய மிகப் பெரிய செல்வமாக அது விளங்கி வந்தது என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இந்தக் கால்நடைகளை அதிகம் வைத்திருப்பவர்கள் ஒரு பெரிய செல்வந்தரைப் போன்று சமுதாயத்தில் மதிப்புத் தருகிற நிலையும் இருந்து வந்தது., ஆனால் அத்தகைய கால்நடைகள் இன்று நலிவுற்று, மெலிவுற்று, இறைச்சிக்காக அண்டை மாநிலங்களுக்கு ஓட்டிச் சொல்லப்படுவதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக குமரி மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் இளம் கன்றுகள் எல்லாம் இன்னும் இறைச்சிக்காக, அண்டை மாநிலமான கேரளத்திற்கு அடித்து ஓட்டிச் செல்லப்படுகின்றன. இது குறித்து நாங்களும் பலமுறை தெரிவித்தும்கூட அதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல ஏற்பாட்டை இந்த அரசு கையாளவில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நல்ல கால்நடைகள் வளர்ப்பதற்கு நல்ல தீவனங்கள் அவசியம். முகவை மாவட்டம் போன்ற இடங்களில் வறட்சிக் காலத்திலே வைக்கோல் போன்ற மாட்டுத் தீவனங் களைக் காசுகொடுத்து வாங்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே அங்கே புல் போன்றவற்றை உற்பத்தி செய்வதோடு நல்ல முறையிலே மாட்டுத் தீவனமும் கிடைக்க ஏற்பாடு செய்தால் மாடுகள் நல்ல முறையிலே வளர்வதற்கு வசதியாக இருக்கும். அந்த மாடுகளுக்குரிய புல்லை 15 காசுக்கு விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவை ஏழைகளுக்குச் சுலபமாக இலவசமாக கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜெர்சி போன்ற புதுவகை ரகங்களை உற்பத்தி செய்வதைப் பொறுத்த வரையில 3,000 ரூபாய், 4,000 ரூபாய் மதிப்புள்ள இளங் கன்றுகளின் விலை கிராமத்திலே உள்ளவர் களுக்குத் தெரியாததன் காரணத்தால் அவர்கள் மிகக் குறைவான விலைக்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே அவற்றை அரசாங்கமே வாங்கிக்கொண்டு அந்த ஏழை விவ சாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே உள்ள கன்றுக்குட்டிகளைப் பார்த்தவுடனே மேலை நாடுகளில இருந்து வருகின்றவர்கள் 'உங்களுடைய கன்றுக் குட்டிகளைப் பார்த்தாலே பால் சாப்பிட மனம் வர வில்லை' என்று கூறுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த அளவுக்கு நம்முடைய மாடுகளும், கன்றுக்குட்டிகளும் மிகவும் மெலிந்துபோய் இருக்கின்றன. ஆகவே இவை நல்ல முறை யிலே வளர்வதற்கு நல்ல புரோட்டீன் சத்துள்ள உணவுகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெத்தநாயக்கன் பாளையத்திலே இருந்த முர்ரா, ஜெர்சி போன்ற உயர்ரக எருதுகள் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டிருக்கின்றன. அந்த உயர்ரக எருதுகளை மீண்டும் பெத்த நாயக்கன்பாளையத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொளகிறேன்.

அடுத்து கோழிப்பண்ணையினைப் பொறுத்தவரையிலே அதற் கான தீவனங்களைக் கொடுக்காமலும், முட்டைகளைச் சரிவர எடுத்துக்கொள்ளாமலும் இருப்பதால் பல பண்ணைகள் நலிந்து கொண்டிருக்கின்றன. சிவகெங்கையிலே உள்ள கோழிப்பண்ணை இப்போது மெல்ல மெல்ல நலிந்து கொண்டிருக்கின்றது. முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே இரண்டு பண்ணைகள் தான் இருக்கின்றன. ஆகவே மிகக் குறைவான கோழிப்பண்ணை இருக்கின்ற இந்த மாவட்டத்திலே அதிகமான அளவிலே கோழிப்பண்ணைகளை ஏற்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து உயர்ந்த ரக கோழிகளை வளர்ப்பதன் மூலம் நம்முடைய பொருளாதாரம் உயரும். ஆகவே அந்த வகையிலே டேப்கோ நிறுவனத்தின் மூலம் நல்ல பயன்கள் கிடைக்க முயற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து கால்நடை மருத்துவ அதிகாரிகளைப் பற்றி ஆளும் கட்சியின் அங்கத்தினர்கள் கூட குறிப்பிட்டார்கள். அந்த மருத்துவ அதிகாரிகளுக்கு அடிப்படைச் சம்பளம் 600 ரூபாய். ஆனால் சாதாரணமாக ஒரு டென்டல் டாக்டரை எடுத்துக் கொண்டால் அவருக்கு 750 ரூபாய் அடிப்படைச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இவர் களுக்கிடையே இருந்த வித்தியாசம் 50 ரூபாய்தான். ஆனால் இப்போது 150 ரூபாய் வித்தியாசம் இருக்கின்றது. இந்த இடைவெளியைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு துறையினையும் எடுத்துக் கொண் டால் அதனதன நிபுணர்கள்தான் மேலதிகாரிகளாக இருக் கிறார்கள். மருத்துவத்துறையினை எடுத்துக் கொண்டால் டி.எம்.ஓ., டி.எச்.ஓ. என்று இருக்கிறார்கள். ஆனால் அனிமல் ஹஸ்பண்டரியை எடுத்துக் கொண்டால் மேலதிகாரியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறார். ஆகவே ஏன இந்தத் துறையிலே மட்டும் இப்படி வைத்திருக்க வேண்டும். என்று கேட்க விரும்பு கிறேன். ஆகவே இந்தத்துறையிலேயும் டெக்னிகல் ஹான்ட்ஸையே அப்படி மேலதிகாரியாக நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து இந்த கால்நடை மருத்துவ அதிகாரிகளின் அடிப்படைச் சம்பளத்தையும் அதிகரித்து அவர்களுக்குள்ள மற்ற குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விதவைகள் மறுவாழ்வு என்பது பற்றி குறிப்பிடும்போது பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் அவர்களுக்காக உணவு இல்லங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது பாராட்டப் பட வேண்டிய ஒன்று.

(இரவு 7-00)

இதற்கு நாள் குறிப்பிடப்படவிலலை. எனவே, அது எப்போது ஏற்படும் என்பதையும், கூடிய சீக்கிரத்திலே அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, ரேடியோ நிலையம், டெலிவிஷன் நிலையம் போன்றவைகளில் விதவைப் பெண்களுக்கு, மறுவாழ்வு கொடுக்க வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்என்பது பற்றி இந்தக்குறிப்பிலே சொல்லவில்லை. அதுவும் நாள குறிப்பிட்டு, இந்த நாளுக்குள் ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். விதவைகளின் குழந்தைகளுக்கு, ஏழைப் பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு நீங்கள் போடுன்ற திட்டங்கள் புத்தக அளவிலே தான் இருககின்றது. அவைகள் செயல்வடிவத்திலே, குறிப்பிட்ட நாட்களுக்குள், குறிப்பிட்ட காலத்திற்குள செய்தால், பெரும் உதவியாக இருக்கும். இந்த அரசுக்கும் நல்ல பெயர் ஏற்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன.

அடுத்து, இங்கே உடல் ஊனமுற்றோரைப்பற்றிச் சொல்லும் போது, அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு, இவ்வளவு கால வரம்பிற்குள், இவ்வளவு வயது வரம்பு என்றில்லாமல் அல்லது அதற்கான சான்றிதழ் எடுத்துச் செல்லும்போது, அவர்கள் பல இடங்களில் நடக்க முடியாமல், சிலர் உதவியோடு செல்லும் போதும்கூட, அதற்குரிய சான்றுகளை பெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. அத்தகைய நிலைமையைப் போக்குவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லாமல், சட்ட வரம்பு இருந்தாலும், அதைத் தளர்த்தக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உடல் ஊனமுற்றோருக்குக் கொடுக்கின்ற உதவிகளை, அவர்கள் மனு கொடுத்து, குறிப்பிட்ட இந்த காலத்திற்குள், இந்த நாட்களுக்குள், அதற்கான காரியத்தை செய்து முடிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆதிதிராவிட நலனைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆதிதிராவிடர் நலனைப் பொறுத்தவரையில், எங்களுடைய பகுதியில் தீப் பிடித்த வீடுகளுக்கு, ஒரு வருஷ காலமாகியும் எந்தவிதமான பணமோ, உதவியோ கொடுக்கப்படவில்லை. ஆதிதிராவிட மக்களைப் பொறுத்த வரையில், எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்தாலும்கூட அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திலே உதவிகள் கிடைக்கக் கூடிய வகையிலே நாம் உதவி செய்ய வேண்டும் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதேபோன்று, கடன் வழங்குவதிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடன் வழங்குவதிலே எல்லோருடைய மனுக்களையும் நாம் பரிசீலனை செய்து கொண்டிருப்பது போல் இல்லாமல், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்களை குறிப்பிட்ட காலத்திற்குள, முன்னுரிமை கொடுத்து வழங்கவேணடும். அவர்களுடைய திட்டங்களுக்கும் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



தீப்பெட்டித் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், பெடரேஷன் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதிலே ஆர்வம் இல்லாத தலைவர்களை வைத்திருப்பதன மூலமாக, அந்தத் தொழிற்சாலையில், தொழிற்கூடங்களில இன்று உற்பத்தி தேங்கியிருக்கக் கூடிய நிலையிருக்கிறது. இத்தகைய நிலை ஏற்படுகின்றபோது, பெடரேஷனில் ஆர்வமில்லாத தலைவர்களை நீக்கிவிட்டு, ஆர்வமுள்ள தலைவர்களை நீங்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக கோள்கிறேன்.

கடைசியாக, சிங்கம்புனேரியில உள்ள கால்நடை மருத்துவ மனைக்கு கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு முன்னர் அரசு ஆணை பிறப்பித்தும், அதற்கான ரூ. 1.10 இலட்சம் ஒதுக்கியும், அந்த துணைக் கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும், அந்தக் கட்டிட வேலை இன்னும் துவங்கப்படவில்லை. அதை விரைவிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு, சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறுவனாக இருந்து, படிக்கின்ற காலமுதல், இப்போது வரையில், பள்ளிக்கூடத்திலே படிப்பு சரியாக ஏறாவிட்டால் நீ ஆடுமாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று சொல்வார்கள். அது இன்றும் உண்மையாக இருக்கிறது. கால்நடை வளர்ப்புக்கு ஒரு இலாகா வைத்து, கோடிக் கணக்கான ரூபாய் செலவுசெய்துங் கூட இன்றுவரையில் அந்தப் பேச்சு மாறவில்லை என்று சொன்னால் அதுதான் உண்மை. இதற்கு அடிப்படை காரணம் என்ன? We have not scientifically tended breeding of cattle. அதாவது, விவசாயத்திலே எந்த அளவிற்கு நவீன விஞ்ஞான முறைகள், உத்திகள் கையாள வேண்டுமோ, அந்த அளவிற்கு இந்த கால்நடை வளர்ப்பில் விஞ்ஞான ரீதியாக, அதை ஒரு தொழிலாக அதை ஒருபடித்த அறிவாளியால்தான் செய்ய முடியும் என்கின்ற அளவிற்கு நாம் இதை இன்னும் வளர்க்கவில்லை என்பதுதான் அர்த்தம்.

அதற்கு செலவழிக்கின்ற பணம், எந்த அளவிற்கு நல்ல முறையிலே பயன்படுகின்றது என்று சொன்னால், நிச்சயமாக நாம் பலனடைய முடியவில்லை. ஒரே ஒரு சிறிய கேள்வியை மாத்திரம் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அடிக்கடி சொல்கிறோம், நியூசிலாந்திலிருந்து ஜெர்சியும், ஆஸ்திரேலியாவிலிருந்து உயர்ந்த ஜாதி எருதுகளும், அதைப் போலவே செம்மறி

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1982 மார்ச் 27

ஆடுகளும், இன்னும் பலவிதமான பால் கொடுக்கக்கூடிய, அதிக அளவிற்கு மாமிசம் கொடுக்கக்கூடிய பல கால்நடைகளை வளர்க்கிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு கணக்கு மாத்திரம் நான் இங்கே தாழ்மையோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மாட்டுத் தீவனம் என்று சொல்லுகின்ற நேரத்தில் அல்லது கால்நடை தீவனம் என்று சொல்லுகின்ற நேரத்தில் எத்தனை ஏக்கர் நிலங்களை தமிழகத்தில் கால்நடைகளுக்காக மேய்ச்சல் நிலங்களாக ஒதுக்கி இருக்கிறோம். விளைச்சல் நிலங்கள் இத்தனை ஏக்கர்கள் என்று மட்டும் சொல்லுகிறபோது, மேய்ச்சல் நிலங்களைப்பற்றி அவ்வாறு இத்தனை ஏக்கர்கள் என்று சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. கணக்கில்லை. ஆகவே, ஆட்டுக்கும், மாட்டுக்கும் தேவையான புல் வளர்க்கக்கூடிய மேய்ச்சல் நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதைத் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கால்நடை வளர்ப்பு கிராமத்திலே அது ஒரு அடிப்படைத் தொழிலாக இருந்தபோதிலும் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் சாதாரண நலிந்த பிரிவினர், அதுவும் பெண்கள். இந்தக் கால்நடைகளை வைத்துத்தான் தங்களுடைய குடும்ப பட்ஜெட்டை—மாத வரவு—செலவுக் கணக்கை சரிக்கட்டக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதிலே 'சைட்ஸ் அண்டு சர்வீசஸ் ஸ்கீம்' அடிப்படையிலே எங்கு பார்த்தாலும், நகரத்திலும், புறநகர் பகுதியிலும், ஒவ்வொருவருக்கும் வீட்டு மனையை வழங்குகிறார்கள். ஒரு கக்கூசும், ஒரு கூரையும் கட்டக் கூடிய அளவுக்கு பணத்தைத் தருகிறார்கள். அதே நேரத்தில் 'சைட்ஸ் அண்டு சர்விசஸ் ஸ்கீம்' அடிப்படையிலே, அவர்களுக்கு மனைகள் கொடுக்கின்ற நேரத்தில் இரண்டு ஆடுகள் கொடுத்தால், அது இன்னும் பயன் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சமூக நலத் துறையைப் பற்றி இங்கே என்னுடைய யோசனைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகியும், சமூக நலத்துறை என்று ஒரு துறை இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், நான் வேதனைப்படுகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், சமூக நலத்துறை என்றில்லாமல், சமூகப் பாதுகாப்புத் துறை என்று வளர்ந்து கொண்டிருக்கின்றது என்று சொன்னால், Social security is different from social welfare. சமூக நலத் துறை என்று சொல்லுகிற நேரத்தில், தர்மமாக, பிச்சையாக, ஏழை எளியவர்களுக்கு, நாம் அவர்களுக்கு பிச்சை கொடுக்கின்ற அளவிலேதான் தருகிறோமே தவிர, சமூகப் பாதுகாப்பு சமுதாயத்தில் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாமல், நாம் அந்த உரிமையை அவர்களுக்கு



1982 மார்ச் 27] [டாக்டர் கே. சௌரிராஜன்]

வழங்கவில்லை. ஆகவே, அந்த அளவிற்கு, இதனுடைய பெயரை மாற்றியமைக்கப்பட வேண்டும், அப்போது அது நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு பாரதியார் நூற்றாண்டு, ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே'' என்று பாரதியார் பாடினார். வேத காலத்திலும் கூட,

''யத்ர நார்யா: பூஜ்யந்தே
ரமந்தே ச தத்ர தேவதா''

என்று சொல்லி இருக்கிறார்கள்.

எங்கே பெண்கள் பூஜிக்கப்படுகிறார்களோ அங்கே தேவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே 234 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கிற பெண்கள் ஐந்தே பேர்கள்தான். ஆகவே, அவர்களுக்குரிய இடத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஒரு பகுதியினருடைய பெருவாரியான ஆதரவோடுதான் இந்த ஆட்சி பீடத்திலே இருக்கிறார்கள். ஆகவே, இந்த நேரத்திலே உள்ளபடியே அந்தப் பெண்களுக்கு வருங்காலத்தில் ஆண்களுக்கு சரிநிகராக வாழ்கின்ற அளவிற்கு வழிவகை செய்யப்படுமா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

குறிப்பாக சென்னை நகரத்திலே மாத்திரம் சொல்கிறேன். ஒரு பெண் தனியாக உழைத்து, பணியாற்றிவிட்டு, தனியாக வாழ்வது என்பது ரொம்பவும் கடினமான காரியம். இந்த நாட்டிலே அப்படி இருந்தாலும், இன்றைக்கு பெண்கள் அஞ்சி, அஞ்சி போகக்கூடிய நிலைமையிலேதான் இருக்கிறார்கள். மானத்துடன், கற்புடன், சுயமரியாதையுடன், இன்று சென்னை நகரில், அதுவும் தனியாக வாழ முடியுமா என்று சொன்னால் நிச்சயமாக அது கேள்விக் குறியாக இருக்கிறது. இன்றைக்கு பெண்களுக்கென்று சில வேலைகளை ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் போல வருங்காலத்தில் தமிழகத்தில் பெண்களுக்கு பிரைமரி பள்ளிகள், ஆசிரியை, நர்சஸ் போன்ற பணிகளை பெண்களுக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமென்று, இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி, தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

[1982 மார்ச் 27

(இரவு 7.10).

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் . மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு முன்னாலே இன்றைக்கு ஒரு பெண் அமைச்சர், 4 பெண் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் அத்தனை பேர்களும் கவனிக்கக்கூடிய இந்த இலாகாவிற்கு குறைந்த அளவே நேரம்— 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் நான் அதற்காக வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : இன்னொரு விஷயம், அதிலே உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் 5 நிமிடங்கள் தான் (சிரிப்பு). இதிலேயே பேசிக்கொண்டு இருந்தால் உங்கள்தொகுதியைப் பற்றி — நிலக்கோட்டை—பேச முடியாது போய்விடும்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : காங்கிரஸ் ஆட்சி காலத்திலே ஒரு நாள் முழுமையாக இதற்கு ஒதுக்குவார்கள். இன்றைக்கு பெண்களுக்கு என்று பல நல்ல காரியங்களைச் செய்து இருந்தாலும் டைம் கொசுறு மாதிரி 2 மணி நேரமே ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் நான் வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களுக்காக பல நல்ல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய அண்ணன் செளந்திராஜன் அவர்கள் சொன்னதுபோல் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்நாட்டிலே என்று புதுமைச் கவிஞன் அன்றைக்கே சொல்லி வைத்தான். அதைப்போல பெண்களுக்கு, படித்த பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டும். இன்றைக்குப் பெண்கள் படித்துவிட்டாலும் வேலைபார்த்தாலும் கூட கல்யாணம் செய்ய வேண்டுமென்றால் வரதட்சணைக் கொடுமை இருக்கிறது. நகையைக் கொடுக்கவேண்டும், காரைக் கொடுக்கவேண்டும் என்று எல்லாம் கேட்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே 52 சதவீதம் பெண்களும் 48 சதவீதம் ஆண்களும் இருக்கிறார்கள். இப்படி ஜனத்தொகையில் பாதிக்குமேல் இருக்கின்ற பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் 50 சதவீதம் வேலைகொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து (I.C.D.S.) (இன்டக்கிரேட்டட்சில்டிரன் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 3யூனியன்களை, அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். ஒவ்வொரு யூனியனிலும் 100 பால்வாடிகளை ஏற்படுத்தி இருக்கிறோம். எஸ். எஸ். எல். சி. யில் நல்ல மார்க் வாங்கிய படித்த பெண்கள் 100 பேர்கள் வேலை பார்க்கிறார்கள். 100 ஆயாக்கள் வேலைபார்க்கிறார்கள். 100 கோடி ரூபாய்



சாப்பாடு போடுவதற்காக என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதே; அதிலே இந்த மாநிலத்திலே உள்ள 376 யூனியன்களிலும் இந்த I.C.D.S. திட்டத்தை அமுல் நடத்தி 40 குழந்தைகளுக்கு ஆகாரம் 30 பால் கொடுக்கிற தாய்மார்களுக்கு ஆகாரம், 30 கருவுற்ற ஸ்திரிகளுக்கு ஆகாரம், இதைத் தவிர இரவு நேரங்களிலே பாடம் சொல்லிக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்வதற்கான திட்டம் போட்டு இந்த 100 கோடியையும் செலவு செய்தால் அது பயன் உள்ளதாக இருக்கும். இதன்மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க ஏழை எளிய மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விதவைகளுக்கு நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, நான் அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். எனக்கு முன்னாலே உறுப்பினர் அவர்கள் பேசியதைப் போல் தாலி அறுத்த பெண் என்றால் 25 வயதிலே கூட அந்த நிலைமை வரலாம், ஆனால் அவர்களுக்கு உதவி கிடைப்பதில்லை, 40 வயது ஆனால் தான் அந்த பென்ஷன் கொடுப்போம் என்று சொன்னால் அது சிறந்ததாக இருக்காது. எத்தனை வயதிலே தாலி அறுத்தாலும் அவர்கள் குழந்தைகளோடு பாதுகாப்பு இல்லாமல் கஷ்டப்படுகின்ற நிலைமை தான் இருக்கிறது. ஆகவே எந்த வயதாக இருந்தாலும் விதவைப் பெண்களுக்கு பணம் கொடுக்க வேண்டும், பணம் கொடுப்பதோடு, எப்படி அரிசன மக்களுக்கு பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் பால் மாடு வாங்குவதற்கு கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அதைப் போன்று அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் ஒவ்வொரு விதவைப் பெண்ணுக்கும் ஒரு பால்மாடு வாங்கிக் கொடுக்கக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி வாங்கிக் கொடுத்தால் அந்தப் பெண் எப்படியாவது அந்தக் குடும்பத்தை பாதுகாக்க முயற்சிக்க முடியும்.

பல காரியங்களைப் பெண்களுக்காகச் செய்திருக்கிறோம். ஒவ்வொரு யூனியனிலேயும் நூற்பாலைகளை ஏற்படுத்தி 100 பெண்களுக்காவது வேலை கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தினால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தபடியாக தையல் தொழில். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தையல் டீச்சரை நாம் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு யூனியனிலும் மாதர் சங்கங்கள் 30 40 சங்கங்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மொத்தம் கிட்டத்தட்ட 11,125 சங்கங்கள் இருக்கின்றன. ஹரிஜன் வெல்பேர் ஹாஸ்டல் போன்ற இடங்களில் படிக்கிற பெண்களுக்கு ஆண்டு தோறும் இனாமாக துணிகள் தருகிறோம். அதே போன்று ஆண்களுக்கு சட்டைகள் கொடுக்கிறோம், இப்படி கொடுப்பதை யாரிடத்திலோ கொடுத்து சரியாக தைக்காமு

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [1982 மார்ச் 27

அவர்கள் போட்டுக் கொள்ள முடியாத நிலையில் கொடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையை மாற்றுவதற்கு மாதர் சங்கங்கள் மூலமாக, கிராமசேவக்குகள், மற்றும் யூனியன்கள் மூலமாக தைத்துக் கொடுப்பதற்கு வழி வகை செய்தால் தையல் கூலி அதிகமாக கிடைக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு யூனியனுக்கும் 4,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையை பயனுள்ள அளவிற்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கால்நடைப் பராமரிப்புத்துறையிலே வட்டார வாரியாக நிறைய பால் மாடுகள் வாங்கிக் கொடுத்து வருகிறோம். ஆனால் மாட்டு தீவனத்திற்கு எந்தவிதமான வழி வகையும் செய்யப்படவில்லை. ஆகவே தீவனத்திற்காக எங்கெல்லாம் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவோ புல் வளர்த்து தீவனங்கள் கிடைக்க அரசே திட்டங்களைப் போட்டு வழி வகை செய்ய வேண்டும். ஓங்கோல் கால்நடைகள் உழைப்பிற்கும் பயன்படுகின்றன, அதே நேரத்தில் அதிக அளவிற்கு பாலும் கொடுக்கிறது. இப்படிப்பட்ட மாடுகளை அதிக அளவில் வாங்கி மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கோழிகளை பொறுத்த வரையில் முட்டையிடும் கோழிகளையும் இறைச்சி கோழிகளையும் கொடுக்கிறோம். எனக்கு கணக்கு சரியாகத் தெரியவில்லை, 6 வாரமோ, 10 வாரமோ ஆகிய பெரிய குஞ்சானவுடன் எடை போட்டு எடுக்கும் போது நல்ல முறையில் லாபம் கிடைக்கிற நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி ஏழை, எளிய மக்கள் பயனடையச் செய்ய வேண்டும். மத்திய அரசு 50 சதவீதம் மானியம் கொடுக்கிறது. மாநில அரசு மீதி 50 சதவீதத்தை கொடுத்து வருகிறது. விரிவுபடுத்தினால் இந்த திட்டம் மக்களுக்கு மிகவும் பயனளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருத்துவர்களிடையே ஏதோ கோளாறு இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக பேசி யார் யாருக்கு புரோமோஷன் கொடுக்க வேண்டுமோ அவற்றை கொடுத்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி செய்தால் ஒரு சுமூகமான நிலை அவர்களிடையே ஏற்பட்டு, அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 27]

(இரவு 7-20)

**திரு. ஏ. டி. கருப்பையா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய கால் நடை வளர்ப்பு, சமூக- நலம் பற்றிய அந்த மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். கால்நடை வளர்ச்சிக்காக, ரூ.18,19,49,000 மற்றும் சமூக நலத்திற்காக ரூ.23,01,71,000 நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள்.

கால்நடை வளர்ப்பை எடுத்துக்கொண்டால், நமது நாடு முழுவதும், இன்றைக்கு இந்தக் கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டு மிகவும் அதிகமான கால்நடைகள் அழிந்து போயிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகவே, டாக்டர்களை அந்தப் பகுதிகளுக்கே அனுப்பி, நோயைக் கண்டறிந்து, அந்த நோய்களைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பு என்பது பால் கொடுக்க மட்டுமல்ல, நமது நாட்டினுடைய விவசாயிகளுக்குத் தோழனாக, தொண்டனாக பணிபுரியக்கூடியவை மாடுகள். மாடுகள் விவசாயிகளுக்கு உதவி புரிகின்றன என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அந்த மாடுகளுக்கு வரக்கூடிய நோய்களைத் தடுக்கவில்லையென்றால், சாதாரண ஏழை, எளிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஒரு மாடு ரூ. 200, ரூ.300 கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் இல்லை. ரூ.1,000 ரூ. 2,000 கொடுத்து மாடுகளை விவசாயிகள் வாங்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அப்படி சாதாரண ஏழை விவசாயி 1 ஜோடி மாடுகள் தன்னுடைய வீட்டுக்காக வாங்கினால், அந்த மாடுகள் நோயால் தாக்கப்பட்டு இறந்துவிட்டால் அந்த விவசாயிகளுடைய குடும்பம் அதோடு நசிந்துவிடும் என்பதைக் கணக்கிலே கொண்டு அப்படிப்பட்ட நோய்களைத் தடுப்பதற்காக மாதம் ஒரு முறையாவது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய கால்நடைகளை 'செக் அப்' செய்து அப்படிப்பட்ட நோய் இருக்கிறதா என்பதை முன்கூட்டியே கண்டறிந்து, அந்த நோயைத் தடுக்கக்கூடிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நமது நாடு இருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு அரிசி உணவையே நம்பிக்கொண்டிருக்கிறோம். வெளி நாடுகளிலே எல்லாம் அரிசி உணவை முக்கியமாக நம்பிக் கொண்டிருக்கவில்லை. அரிசி உணவு எவ்வளவு தேவையோ அதே அளவு

கால்நடையினுடைய இறைச்சி சாப்பிடும் பழக்கத்திற்கு வந்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், நல்ல ஹெல்த்தோடு, வளர்ச்சியோடு, நல்ல இரத்தத்தோடு, திராணியோடு இருக்கிறார்கள். இங்கே நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய பழக்க வழக்கத்தில் அரிசி உணவையே நாம் கொண்டிருக்கிறோம். இறைச்சியின் விலை மிக அதிகமாக ஏறிக் கொண்டிருக்கிறது. சாதாரண மக்கள் இறைச்சி வாங்க முடியாது. அந்த அளவு இறைச்சி விலை அதிகமாக ஏறிக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? நம்முடைய நாட்டில் கால்நடை வளர்ச்சி மென்மேலும் கீழே போய்க் கொண்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சி அடைந்து வருகிறது என்றால், இறைச்சி விலை குறைந்து கொண்டே வர வேண்டும். சாதாரண ஏழை எளிய மக்கள், அன்றாடம் கூலி வேலை செய்யும் விவசாயிகள் யாரும் வாங்கி சாப்பிட முடியாத அளவுக்கு ஆட்டு இறைச்சியினுடைய விலை ஏறிக் கொண்டிருக்கிறது. அதேபோல், மாட்டிறைச்சி விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. அதேபோன்று பன்றி இறைச்சி விலையும் ஏறிக் கொண்டேயிருக்கிறது. அதேபோல் கோழி இறைச்சி விலையும் கோழி முட்டை விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. மனிதனுக்குத் தேவையான இறைச்சி, பால் விலைகள் ஏறிக்கொண்டேயிருக்கிற காரணத்தால், அந்தக் கால்நடை வளர்ப்பைப் பிரதானமாகக் கணக்கிலே கொண்டு, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, அதிகமாகக் கால்நடைகளை உற்பத்தி செய்து எந்த அளவு அரிசியை சாப்பிடுகிறோமோ, அதே அளவுக் இறைச்சியையும் சாப்பிடக்கூடிய வகையில், கால்நடைகளை வளர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, கால்நடைகள் வளர்ப்பதன்மூலம் தோல் பெற முடிகிறது. தோல் நமது நாட்டுக்கு மிகவும் தேவையான, பிரதானமான பொருளாக இருக்கிறது. பலவிதமான பொருள்கள் செய்ய தோல் இன்றைக்கு நாட்டுக்குத் தேவைப்படுகிறது. தோல் மட்டுமல்ல எலும்பு நாட்டிற்குத் தேவைப்படுகிறது. அதைபோல், ஆட்டுக் கறியும்தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட இந்தக் கால் நடைகளுக்குப் பிரதான முக்கியத்துவம் கொடுத்து அதை வளர்ப்பதிலே அரசு முனைப்பாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமூக நலம். நான் அதை மனதார வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



மனித சமுதாயத்தில் நலிந்து கிடக்கின்ற, நசுங்கிக் கிடக்கின்ற சாதாரண அப்பாவி ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கின்ற சமூக நலன் என்ற இந்த நல்ல மானியத்தைத் தன் கையிலே வைத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய உள்ளம் நிறைந்த நன்றியைச் சமூக நல அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அதிலே பலவிதமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை நான் வரவேற்கிறேன். ஊருக்கு உழைத்தவர்கள், இன்றைக்கு வெறும் கையோடு இருக்கும் முதியோர்கள், அதிலும் குறிப்பாக கூலி விவசாயிகள் இந்த உதவித் தொகையைப் பெற வேண்டுமென்றால் அவர்கள் விண்ணப்பம் போடுகிறார்கள். பத்து பேர்கள் விண்ணப்பம் போட்டால் 6 மாதங்கள் அல்லது ஒரு வருஷம் கழித்து யாராவது ஒரு ஆளுக்குத்தான் கிடைக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை நான் சொல்ல முடியாது. அதிலே பலவிதமான ஊழல்கள் இருக்கின்றன. அதைக் களைந்து எறிவதற்கு சமூக நல அமைச்சரவர்கள் கண்காணிப்பாக இருக்க வேண்டும்; உஷாராக இருக்க வேண்டும்; அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த உதவித் தொகை பெறுவதற்கான வயது தகுதி 60, 65-க்கு மேல் இருக்க வேண்டும் என்பதைக் குறைக்க வேண்டும். அதை 50 வயதாகக் குறைக்க வேண்டும். அந்த நிதி உதவியைப் பெறுவதற்குத் தகுதியான வயது 50 என்று இருக்க வேண்டுமென்று செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு 25 ரூபாய் உதவித் தொகை என்று இருந்ததை 35 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனாலும்கூட இன்றைக் குள்ள விலைவாசி நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் இது மிகவும் பற்றாக்குறை நிதி என்றுதான் சொல்லமுடியும். எனவே, கருணைகூர்ந்து அதை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு முயற்சிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஊனமுற்றவர்களுக்கெல்லாம் அருமையான நல்ல திட்டங்கள் இருக்கின்றன. கடை வைத்துக் கொடுப்பது, வண்டிகள் கொடுப்பது, சக்கர வண்டிகள் கொடுப்பது போன்ற பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் கிடைப்பது யாருக்கு, எங்கே கிடைத்திருக்கிறது என்று பார்த்தால் எங்கேயோ ஒரு ஆளுக்குத்தான் கிடைத்திருக்கிறது என்று சொல்ல முடிகிறது. சட்டசபை முடிந்து இங்கேயிருந்து தொகுதிக்குப் போவதற்கு முன்னாலேயே ஊனமுற்றவர்கள் வந்து நின்று கொள்கிறார்கள். அசெம்பளியிலே பாஸ் செய்தார்களாமே பேசினார்களாமே அமைச்சரவர்கள் அறிவித்தார்களே, எங்களுக்கும் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் 6 மாதங்கள் அல்லது

1 வருஷம் கழிந்தால்கூட அந்த ஊன்றுகோல் கருவிகள் கிடைப் பதில்லை. எப்பொழுதோ யாரோ ஒரு ஆளுக்கு மட்டும்தான் கிடைக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறி னார்கள் விதவைகள் சம்பந்தப்பட்டது. விதவையானவர் களுக்கு அந்த ஆண்டிலேயிருந்து அந்த நிதி கிடைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 வயதிலே ஒரு பெண் விதவையாகிவிட்டால் இன்னும் 25 ஆண்டு கள் காத்திருந்து 45 வயதான பிறகுதான் அந்த நிதியை வாங்குகின்ற நிலைமை இருப்பதால் அந்த உதவியைக் கொடுத் தும் பிரயோஜனம் இல்லை ; அதை வாங்கியும் அவர்களுக்குப் பயன் இல்லை. ஆகவே எந்த ஆண்டில், எந்த வயதில் அவர்கள் தங்களுடைய கணவனை இழந்து விதவையாகி விடுகின்றார்களோ அந்த ஆண்டிலேயிருந்து கிடைக்க, அந்த வயதிலேயிருந்து கிடைக்க அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர்களுக்கு இனாமாக ஒரு கிலோ அரிசி கொடுக் கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த அரிசியை யாரும் சாப்பிட முடியாது. மிகவும் மட்டரகமான அரிசி ; அது ஒரு கிலோதான். எதற்காக அதைக் கொடுக் கிறீர்கள் ? அந்த முதியோர்கள் கிட்டத்தட்ட பத்து வீடு களிலே பிச்சையெடுத்தால், காலை 8 மணிக்குக் கிளம்பி ஒரு ரவுண்ட் வந்தால் ஒரு நாளைக்கு 5 கிலோ அரிசியை வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். அதற்குப் பதிலாக நியாய விலைக் கடையில் வாங்க வேண்டுமென்றால் காலை 8 மணிக்கே போய் க்யூவிலே நின்று வாங்க வேண்டியதாக இருக்கிறது. அது ரொம்பவும் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஒரு கிலோ அரிசி என்பதோடு கிட்டத்தட்ட 2 கிலோ அரிசியையும் சேர்த்து 3 கிலோ அரிசியாகக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதையும் நல்ல அரிசியாகக் கொடுக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(இரவு 7.30)

* **திரு. கே. ஜி. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது சமூகநலத் துறை அமைச் சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். காங்கேயம் என்றாலே கூரான கொம்பும், நேரான திமிலும் பட்டுப்போன மேனியுடைய காளையைக் கண் எதிரே நின்ற காட்சியைக் காண எல்லோரும் ஆவலாக இருப்பார்கள் என்பதைச் சொல்லி அந்தப் பகுதியின் சொந்தக் காரன் என்ற முறையில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.







காங்கேயம் கால்நடை ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகாலம் ஆகியும் இன்னும் அதை பிரதம ஆஸ் பத்திரியாக ஆக்காத காரணத்தினால் விவசாயக் குடிமக்கள் மிகவும் அல்லல் படுகிறார்கள். அதை உடனடியாக பிரதம ஆஸ்பத்திரியாக ஆக்கித் தரவேண்டும் என்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து சாவடிபாளையம் என்ற இடத்தில் ஒரு கிளை நிலையம் இருந்தது. அதிலே தினசரி சுமார் 10 மாடுகள் வந்து கொண்டிருந்தன. இப்போது அதை மூடிவிட்டார்கள். அதை திறக்கவேண்டும் என்ற பொது மக்கள் கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன். காங்கேயத்துக்கு அருகாமையில் வி.பி. புதூர் என்ற ஊரில் உள்ள மருந்தகத்திற்கு வாரத்திற்கு 2 கால்நடைகள்தான் வந்து கொண்டு இருக்கின்றன. அதை மூடிவிட்டு, இந்தக் கால்நடை நிலையத்தைத் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் சார்பாக வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே கன்று வளர்ப்பதற்கு என்று பல மாவட்டங்களில் மானியம் கொடுக்கப்படுகிறது. அதேபோன்று காங்கேயம் வட்டத்திலும் கால்நடைக் கன்று வளர்ப்பதற்கு மானியம் வழங்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காங்கேயத்துக்குப் பக்கத்தில் நத்தக்காடையூர் என்ற பகுதியில் உள்ள கோழிப்பண்ணையை மூடிவிட்டார் கள். பல இடங்களிலே இப்போது கோழிப்பண்ணையைத் திறந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே இதையும் திறக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காங்கேயம் வட்டமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அங்கே ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்தை ஆரம்பித்தால் பொது மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் கிராமப் பகுதிகளில் டாக்டர்கள் உடன் செல்வதற்கும் நோய் தடுப்பதற்காக விரைந்து செல்வதற்கும் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருத்துவர்களுக்கு, எம்.பி.பி.எஸ். மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமாவது கொடுத் தால் சீரான முறையிலே அவர்களுடைய பணி இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மருந்தகங்களுக்கு தொலைபேசி இணைப்பு வேண்டும் என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் கோரிக்கை யாகும். அதை அமைச்சர் அவர்கள் இன்று இந்த சபையில் அறிவிப்பார் என்று என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்கெடுப்பு—தொடர்ச்சி.



பொள்ளாச்சிப் பகுதியிலே, வால்பாறை, டாப்ஸ்லிப் போன்ற பகுதியிலே நல்ல சீதோஷ்ண நிலை இருப்பதால் அங்கே கால்நடைப் பண்ணை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொள்ளாச்சி சிங்காநல்லூர் பகுதியிலோ மருந்தகம் ஆரம்பிக்க வேண்டும் என்று பொதுமக்களின் கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்திலே கொடுமுடி பகுதியிலே கந்தசாமி பாளையத்தில் ஒரு கிளை நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்று பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று ஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காங்கேயத்திலே கால்நடைப் பண்ணை ஒன்று ஆரம்பிப்பதற்கு சென்ற ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதைத் துரிதமாக ஆரம்பிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கிளை நிலையங்களுக்கு சென்று வருவதற்காகவும் அங்கே தங்கி மக்களோடு தொடர்பு கொண்டு கால்நடைகளை அன்றாடம் கவனிக்கவும் ஆய்வாளர்களுக்கு வீட்டுமனையை அங்கே கட்டித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டு, பேச வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கால் நடை மற்றும் சமூக நலம் ஆகிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு தீவிர கால் நடை அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி, வெண்மைப் புரட்சியால் தமிழகத்தில் கால் நடைச் செல்வம் வளர்ச்சி மட்டுமல்லாமல், மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகின்ற பால், முட்டை, இறைச்சி, போன்ற சத்துணவுப் பெருக்கத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. செயற்கை முறை இன விருத்தியில் திரவ விந்து முறை நாம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததால், இப்போது உறை விந்து முறையை தர்மபுரி, காஞ்சிபுரம், வேலூர், செங்கற்பட்டு போன்ற ஒரு சில இடங்களில் மட்டும், அது செயல் படுத்தப்பட்டு வருகிறது. கால் நடை வளர்ச்சியில், எதிர் பார்த்த பலனைப் பெற வேண்டுமென்றால், இப்போதுள்ள உறை விந்து முறையை தமிழகம் பூராவும் பரவலாக செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமது புகழ் பெற்ற காங்கேயம் கால் நடை இனமானது உற்பத்தி குறைந்து காலப் போக்கில் அழிந்து விடும் அபாயம் இருக்கிறது. இதைக் காப்பாற்ற முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி, கோவை, பெரியார் போன்ற மாவட்டங்களில், கால் நடைகள் பண்ணையை ஏற்படுத்தி, உழவு மாடுகள், வண்டி மாடுகள், இவைகளை உற்பத்தி செய்வதோடு உயர்ந்த ரகமான ஜெர்சி, ரெட்டான்



முர்ரா போன்ற உயர்தரமான கால் நடைகளை வளர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், ஆப்பக்கூடலில் ஒரு கால் நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கால் நடை இயக்குநரை நியமிக்கும் நேரத்தில், அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களை நியமித்தால், நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மனித இயல் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைப்பது போன்று, இந்தக் கால் நடைகளுக்கும், கால் நடை பல்கலைக் கழகம் அமைத்தால் இந்தத் துறை மேன் மேலும் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் துறையைப் பொறுத்த மட்டில், ஏழை எளிய மக்கள் அநாதைகள், இன்னும் மற்றவர்கள் எல்லாம் மனம் நிறைவு கொள்ளும் வகையிலே, புரட்சித் தலைவரின் அரசு பல முற்போக்கான திட்டங்களை செயல் படுத்தி வருகிறது. இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே, ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்ததை ஏழை எளியவர்கள் பாராட்டுகிறார்கள். தி.மு.க. ஆட்சியில் இருந்ததை விட முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித்தொகை, விதவைகள் மற்றும் உள்ளவர்கள், இந்த உதவித் தொகையைப் பெறுவோர் எண்ணிக்கை உயர்ந்தது மட்டுமல்லாமல் அந்த உதவித் தொகையை 35 ரூபாய்க்கு உயர்த்தி அந்த உதவித் தொகை பெறுபவர்கள், வாரம் ஒரு முறை அரிசியும், வருடத்திற்கு இரண்டு முறை வேட்டி, புடவை போன்ற இத்தனை வசதிகளையும் வழங்கும் திட்டத்தை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆதரவற்ற 3 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்கு உதவிப் பணம் வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிவித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கக் கூடிய செய்தியாகும். சமூகத்தில்உள்ள ஏழை எளிய விதவைகள், மற்றுமுள்ள அநாதைகள் பயன் பெறும் வகையிலே இந்த அரசு பல திட்டங்களைச் செயல் படுத்திய போதிலும், இந்தத் திட்டங்களை பற்றி கிராமத்திலே உள்ளவர்களுக்கு இன்னும் தெரியாத அளவிலே இருந்து வருவதை இன்னும் பல விளம்பரங்களின் மூலம் கிராம மக்களுக்கு இந்த திட்டங்களையெல்லாம் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். ஏழை எளிய மக்களின் நலன் கருதி சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும்போது, அந்தத் திட்டங்களின் பலன் ஏழைகளுக்குக் கிடைக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். அதே சமயத்தில், இந்தக் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தும் போது, இப்போது நகரத்தில் இருந்து செயல் பட்டு வருவதைப் போல், கிராம அளவிலே, பஞ்சாயத்து அளவிலே செயல் படுத்தினால், கிராமத்திலே உள்ள ஏழைத் தாய்மார்கள் பயன் பெற ஏதுவாக இருக்கும் என்று கூறிக் கொண்டு, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம், நன்றி.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, மண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கின்ற கால் நடை மானியத்தின் மீது பேசு
வதற்கு வாய்ப்பளித்ததற்காக நான் சார்ந்திருக்கின்ற காந்தி-
காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் நன்றிதெரிவித்துக்கொள்
கிறேன்.

(இரவு 7-40)

கால் நடை வளர்ச்சி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்
படையாகும். அந்த கால் நடைகளுக்கு நோய் ஏற்பட்டு,
மருத்துவம் செய்ய கால் நடை ஆய்வாளர்களை அணுகினால்
அங்கே மருந்து இல்லை என்று சொல்கிறார்கள். என் தொகுதியில்
ஆள்வார் திருநகரில் ஒன்றியத்தில் ஆடுகளுக்கு மருந்து இல்லாமல்
ஏராளமான ஆடுகள் இறந்து விட்டன. ஆடுகளுக்கு மருந்து
இல்லாமல் கிராம மக்கள் இன்றைக்கு அவதிப்படுகிறார்கள்.

குறிப்பாக வாரத்தில் சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு
தடுப்பு ஊசி போடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒவ்
வொரு சனிக் கிழமையும் கிராம மக்கள் அங்கே கோழிகளைக்
கொண்டு சென்று. மருந்து இல்லாமல் கோழிகளைத் திரும்பக்
கொண்டு வருகிறார்கள். இந்த நிலையைப் பார்க்கும் போது
பரிதாபமாக இருக்கிறது. அந்த பரிதாபத்திற்குக் காரணம்
அங்கே மருந்து சப்ளை இல்லை என்று சொல்லப்படுகிறது.
கோழிகளுக்கு நோய் வரும் முன்பு தடுப்பு ஊசி போடப்பட
வில்லை. நோய் வந்த பின்னால் காப்பாற்றவும் முடியவில்லை.
இப்படி ஆடுகளும், மாடுகளும், கோழிகளும் நோய் வந்தால்
காப்பாற்ற முடியாமல் இறந்து விடுகின்றன. அவைகளை காப்
பாற்ற எப்போதும் தேவையான மருந்துகளை இருப்பில் வைத்துக்
கொள்ள வேண்டும்.

மாடுகளுக்கு தடுப்பு ஊசி போடுவதைப் பொறுத்த வரையில்
கால் நடை ஆய்வாளர்களும், உதவி ஆய்வாளர்களும் கிராமங்
களுக்கும் சிற்றூர்களுக்கும் சென்று முகாம் இட்டு, அதிகாலையில்
தடுப்பு ஊசி போட்டால் மிகவும் பயனுடையதாக இருக்கும்.
முக்கியமாக ஆடு, மாடுகளைக் காப்பாற்ற எப்போதும் தேவை
யான மருந்துகளை இருப்பில் வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய
வேண்டும். நோய் வருவதற்கு முன்பு கிராமங்களிலும் சிற்
றூர்களிலும் முகாம் இட்டு, தடுப்பு ஊசி போட வேண்டும்.

குறிப்பாக ஆள்வார் திருநகரில் ஒன்றியம் சுமார் 25 மைல்
நீளம் உடையதாக இருக்கிறது. அங்கே கால் நடைகள் அதிகமாக
வளர்க்கப்படுகின்றன. அங்கே கால் நடைகளுக்கு ஏதாவது
நோய் ஏற்பட்டு, உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டுமென்
றால் அங்கிருந்து தூத்துக்குடிக்கு அல்லது அதற்குப் பக்கத்தில்
இருக்கிற இடத்திற்குத்தான் போக வேண்டியிருக்கிறது. அதனால்



கிராம மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, கால்
நடைகள் அதிகமாக இருக்கும் அந்தப் பகுதியை பேய்குளம்
பகுதி, ஆத்தூர் பகுதி என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து,
கால் நடைகளுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
பேய்குளம் சென்டர், ஆத்தூர் சென்டர் என்று இரண்டாகப்
பிரித்துக் கொண்டால் தூத்துக்குடிக்கு சென்று சிகிச்சைப் பெறு
கின்ற கஷ்டம் இல்லாமல் அங்கேயே உடனுக்குடன் சிகிச்சை
பெற வசதியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கால் நடைத் துறையில் கருத்தரிப்பு பணியை
மட்டும் நல்ல முறையில் செய்து வருகிறார்கள். அந்தப் பணி
சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதே நேரத்தில் ஜெர்சி
இனக் கன்றுகளை பராமரிக்க அரசு உரிய கவனம் செலுத்தவில்லை
அதற்கான உதவி நிதியை ஒழுங்காகக் கொடுக்கவில்லை என்று
சொல்கிறார்கள். ஆகவே, அதற்கான உதவித் தொகையை,
ஒழுங்காக க்கொடுத்து, உயர்ந்த இன கால் நடை கன்றுகளை
நல்ல முறையில் பராமரிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சாத்தான்குளம் ஒன்றியத்தில் 25—க்கு
மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் இருப்பதால் அங்கே கால் நடை
மருத்துவமனை இருந்தும், அந்த மருத்துவமனையில் போதுமான
அளவுக்கு மருந்துகள் இல்லை. ஆகவே, உடனடியாக
ஊராட்சி ஒன்றிய கால் நடை மருந்தகங்களுக்கும், மருத்துவ
மனைகளுக்கும் அதிகமான மருந்துகளை கொடுக்க அரசு நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால் நடைத் துறையில் உள்ள ஆய்வாளர்கள் மற்றும் அலு
வலர்கள் கிராமங்களுக்குப் போய் கால் நடைகளைப் பார்த்து
கண்காணிக்க நல்ல முறையில் திட்டங்களை ஏற்படுத்தி, அவர்
களுடைய பணிகளுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு ஊதியம் வழங்க
வேண்டும். மற்ற துறையில் வழங்குவதைப் போல இந்தத்
துறையில் வேலை செய்யும் அனைவருக்கும் அடிப்படை ஊதி
யத்தை உயர்த்த வகை செய்ய வேண்டும். சூப்பர்வைசர்
களுக்கு வழங்கும் ஊதிய விகிதத்தையும் உயர்த்தி, அவர்களு
டைய பணியை முறையாக ஏற்படுத்தி அதிலே தீவிரம் காட்ட
வேண்டும். அவர்களுக்கு அதிகமான அளவில் நிலை '1' பதவி
களை ஏற்படுத்தி, நியாயமான ஊதியத்தை நிர்ணயித்து, அது
பற்றி அரசு முறையாகப் பரிசீலித்து, அவர்களை ஊக்குவிக்க
வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். நன்றி,
வணக்கம்.

*திரு. தா. வீராசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, கால்நடை பராமரிப்பு, சமூகநலம் ஆகிய மானியங்களின்
மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே என்னுடைய
நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. தா. வீராசாமி] [1982 மார்ச் 27

மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்கள் இந்த இரு துறைகளுக்கும் ஏறத்தாழ 41 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தீட்டி இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள்.

கால்நடைத் துறையைப் பராமரித்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த திங்கள் ஒரத்தநாட்டுக்கு வந்து, அங்கே கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சியையும் வம்சா வழி ஆய்வுத் திட்டத்தையும் தொடங்கி வைத்து அந்த நிகழ்ச்சி யில் கலந்து கொண்டதற்காக முதற்கண் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கால்நடைத் துறையைப்பற்றி இங்கே பேசிய மாண்பு மிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் அதனுடைய அருமை பெருமைகளையும், இந்த கால்நடை பராமரிப்புத் துறை எந்த அளவுக்கு ஒரு நாட்டின் தேசிய வருமானத்தில் பங்கு பெறுகிறது என்பதுபற்றியும் சொன்னார்கள். சின்னஞ்சிறிய நாடுகளான அர்ஜன்டைனா, டென்மார்க் போன்ற நாடுகள் கால்நடை பரா மரிப்பு மூலம்தான் அந்த நாட்டின் தேசிய வருமானத்தைப் பெற்று வருகின்றன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகி றேன்.

கால்நடை பராமரிப்புத் துறையை நாம் வளர்ப்பதன் மூலம் நமக்குத் தேவையான அசைவ உணவை நாம் பெறுகிறோம். மாமிசத்தைப் பெறுகிறோம். மாமிசத்தைப் பதப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புகிறோம். தோலைப் பதப்படுத்தி வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். இன்னும் சொல்லப்போனால், உயர்ந்த ரக ஆடுகளின் ரோமங்கள் மூலம் கம்பளங்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். ஆகவே, இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் நாம் ஓரளவிற்கு அந்நியச் செலவாணியைப் பெறுவதால், இதை ஒரு' அந்நிய செலாவணி பெறும் பொக்கிஷம்' என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட கால்நடைத் துறையைப் பற்றி நாட்டு மக் களுக்கு நல்ல முறையில் கடந்த காலத்தில் எடுத்துச் சொல்லப் பட்டதா என்றால் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். கடந்த காலத்தில் அவையெல்லாம் ஏட்டளவில் இருந் ததே தவிர அந்தத் துறை நாட்டு மக்களுக்கு ஏழை எளிய பாட் டாளி மக்களுக்கு, இந்த நாட்டில் இருக்கின்ற மக்கள் தொகை யில் 80 சதவீதம் இருக்கும் வேளாண்மைக் குடிமகன்களுக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை என்னால் கூறிக்கொள்ள முடியும். எனவே மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் துறையில் பல்வேறு நல்ல திட்டங்களைப் போட்டு, அவற்றைப்பற்றி நாட்டு மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அந்



தத் திட்டங்களின் பயனை அறியச் சொல்லி, அந்தத் திட்டங் களின் மூலம் கிராமப்புற மக்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வழிவகை செய்து இருக்கிறது, அந்த வகையில் பெருத்த அளவிற்கு அக்கறை செலுத்திவருகிறது என் பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அதனால்தான் என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு அதிகத் தொகை இந்த மானியத்திற்காக ஒதுக்கப்பட்டு இருக்கி றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் கேந்திர கிராமத் திட்டங்கள், வம்சா வழித் திட்டங்கள், செயற்கை முறை விந்து தயாரிக்கும் திட் டங்கள், ஆடு வளர்ப்புத் திட்டங்கள், வெள்ளாடு வளர்ப்புத் திட்டங்கள், கோழி வளர்ப்புத் திட்டங்கள் போன்ற திட்டங் களை உருவாக்கி அதன் மூலம் இன்றைக்கு கிராம மக்கள் பயன் படும் வகையில் காரியங்கள் ஆற்றப்பட்டு வருகின்றன என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இங்கே மாண்புமிகு அமைச்சர்அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் இன்று நல்ல பல திட்டங்கள் தீட்டப்படு றன. அந்தத் திட்டங்கள் எல்லாம் யாருக்குச் சென்று சேரவேண்டு மோ, அந்த திட்டங்களை எல்லாம் யார் நன்கு அறிந்து செயல்பட வேண்டுமோ அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரம், வருவாய் பெருக வேண்டுமோ அந்த அடிப்படையில், இந்த நாட்டுமக்கள் விழிப்படையச் செய்யப்பட்டு இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கால்நடைப் பராமரிப்பு பற்றி கிராம மக்களிடையே எடுத்துக்கூறும் வகையில் கிராமந்தோறும் நாம் சினிமாப் படங் கள் காட்ட வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கால் நடை வளர்ப்பு பற்றி வேளாண்மைப் பெருங்குடி மக்கள் ஆர்வம் பெறுவதற்காக கால்நடைப் பண்ணைகளில் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்திற்கு அந்தப் பெருங்குடி மக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகை யில் பயிற்சி கொடுக்கப்படுகின்ற நேரத்தில் நவீன விஞ்ஞான முறையில் அவர்கள் அந்த கால்நடைகளை கையாள்வதற்கு உரிய பயிற்சியையும் நம்முடைய அரசு அங்கே அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய அனைவரும் சொன்னார்கள். இந்த நாட் டிலே எத்தனையோ மருந்தகங்கள், மருத்துவ மனைகள் திறக் கப்பட்டிருந்தாலும் கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனை கள் போதவில்லை என்று சொன்னார்கள். இந்தத் தரு ணத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் கூறிய ஒரு கருத்தை நினைவுபடுத்த விரும்புகி றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆயுர்வேத மருந்து களை கால்நடை செல்வங்களுக்கு பயன்படுத்த வேண்டுமென்று

சொன்னார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். கடந்த காலத்திலே இருந்த அரசு அண்ணா அவர்கள் சொல்லிச் சென்ற அந்த வழியில் கால்நடை செல்வங்களுக்கு ஆயுர்வேத மருத்துவ முறையை வழிநடத்தினார்களா? செயல்படுத்தினார்களா? என் பதை அறிய விரும்புகிறேன். அண்ணா அவர்கள் கூறிய அந்தக் கருத்தை நிறைவேற்றத் தவறிய காரணத்தினால்தான் இன் றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் அண்ணா சொன்ன கருத்தில் நடைபெறுகிற ஆட்சி, ஆயுர்வேத மருத்துவ முறைகளை கால்நடைதுறையிலே அறிமுகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயுர்வேத மருந்து தயாரிப்பதற்கான மூலிகைப் பண்ணை ஒன்றையும் தமிழ்நாட்டில் ஏற்படுத்த வேண்டும். கால்நடை கிளை மருந்தகங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர வேண் டும். தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமங் கள் தோறும் பல்வேறு கட்டிடங்களைக் கட்டித் தரும் இந்த அரசு கால்நடை கிளை மருந்தகங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புக்காக ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் மூலம் ஏழை எளிய விவசாயிகளுக்கு கடன் வழங்குகிறோம். அப்படிப் பட்ட விவசாயிகளுக்கு நல்ல கன்றுகளை அளிக்கும் வகையில் கால்நடைப் பண்ணைகள் உரிய கன்றுகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரத்தநாட்டில் நடந்துகொண்டிருக்கும் கால்நடை பயிற்சி நிலையம் தொடர்ந்து நடைபெற வேண்டும். ஒரத்தநாட்டில் ஒரு மாவட்ட கால் நடைப்பண்ணை இருக்கிறது. அங்கே ஏறக்குறைய 300 ஏக் கர் நிலம் அதற்குச் சொந்தமாக இருக்கிறது. அங்கே கண் காணிப்பாளர் அலுவலகமும் கால்நடைகளை நிறுத்திவைக்கும் கேட்டில் ஷெட்டும், அரசு மருத்துவ மனைக்கு அருகில் இருப்ப தால், பொதுமக்களுக்கும் நோயாளிகளுக்கும் அசௌகரியம் ஏற்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே 150 ஏக்கர் பரப்பளவுள்ள அந்தஇடத்திற்கு, (கீழத் தோட்டத்திற்கு) ஒரு கால்நடை கண்காணிப்பாளர் அலுவலகத்தை மாற்ற வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டி விரும் பிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.

(இரவு 7–50.)

*திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி யின் சார்பாக கால்நடை பராமரிப்பு, சமூக நலம் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றி கூறி ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.



இங்கே கால்நடைகளை எப்படி நன்கு பராமரிக்க வேண்டும் என்பதற்காக பல விளக்கங்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளிலே கூறப்பட்டுள்ளன. ஆனால் அதே சமயத்தில், கால்நடைகள் வெளிமாநிலங்களுக்கு கடத்தப்படுகிறது அல்லது அனுப்பப்படுகிறது என்ற ஒரு கருத்தையும் வெளியிட ஆசைப்படுகிறேன். அதை நாம் உடனடியாக தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு கால்நடை அபிவிருத்தி அலுவர்கள் பற்றிய பிரச்சினையைப் பற்றி பலரும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அது நீதிமன்றத்திலே இருக்கிறது என்ற காரணத்தால் அதிகமாகச் சோல்லத் தேவையில்லை, சொல்லக் கூடாது என்ற நிலைமைகள் இருந்தபோதிலும் கூட, கிராமத்திலே நல்ல முறையில் கால்நடைகளை பராமரிக்க அந்த அலுவலாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக திறமையுடன் பணிபுரிந்து வந்த அந்த நல்ல ஒரு நிலைமாறி, இன்று கால்நடை பற்றிய பிரச்சினைகளை கவனிப்பதைவிட, அவர்களுடைய வாழ்க்கையை, வாழ்க்கைப் பிரச்சனைக் குறித்து, அவர்களுடைய பதவிகளை எப்படிதப்ப வைத்துக் கொள்வது அல்லது அவர்களுடைய பதவியில் ஊதிய உயர்வினைக்கேட்பது, அல்லது பயணப்படி மற்ற படிகளை எப்படி அதிகமாக பெறுவது என்ற இந்த வகையில்தான் கவனம் சிதறடிக்கப்படுகிறது. அதிகமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், 365 நாட்களில் 360 நாட்கள், இதற்காகவே அவர்கள் செலவழிக்கக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

கால்நடை பராமரிப்பு அலுவலாளர்களாக பணி புரிந்த அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கும்போது, ஒரு கடைநிலை ஊழியரை அவருடன் அனுப்பி வைப்பார்கள். அவர்கள் இருவரும் காலை 6 மணிக்கே வந்துவிடுவார்கள். இரவு 8 மணி வரையில் அந்தப்பகுதியில் உள்ள அனைத்துக் கால்நடைகளையும் கண்காணிப்பார்கள். அவர்களுக்கு அந்தக்கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு கால்நடையையும் நன்றாக தெரியும். ஒவ்வொரு விவசாயியும் எத்தனை கால்நடைகள் வைத்திருக்கிறார்கள் என்று தெரியும். அவைகளுடைய வயது என்ன? அவைகளை எப்படி பராமரிக்க வேண்டும், தீனி எந்த வகையில் எந்த நேரங்களில் கொடுக்க வேண்டும். எப்போது எந்தக் கால்நடைகளுக்கு என்ன ஊசி போடுவது என்றும் அனைத்து விவரங்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த கால்நடை பராமரிப்பு வளர்ச்சித் திட்டத்தை அவர்கள் மிக நல்ல முறையில் அமைதியாக அங்கே செயல்படுத்திக் கொண்டு வந்தார்கள். யாது காரணத்தினாலோ அவர்களுடைய கவனம் திசை திருப்பப்பட்டு, மக்களுக்கு பயன்படக்கூடிய சூழ்நிலை அறவே இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே நிலைமைகளை அறிந்து அவர்களுக்கு தக்க தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக கிராமங்களுக்கு கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்காக செமன் கொண்டு செல்லும்போது ஏதோ அதை கடனே என்று கொண்டு செல்லுகிறார்களே தவிர, பருவத்தே பயிர் செய் என்று சொல்லக்கூடிய அளவில், காலத்தில் அது வினியோகம் செய்யப்படுவதில்லை. அதன் காரணமாக இந்த முயற்சியால் யாது பயனும் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அடுத்ததாக, மேய்ச்சல் தரையைப் பற்றிக் கூறினார்கள். பல கிராமங்களில் மேய்ச்சல் தரை என்றல் என்ன என்று கேட்கக்கூடிய அளவுக்கு அது கேள்விக்கு இடமாகவே இருக்கிறது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், அந்த நிலங்கள் அனைத்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, அந்த மேய்ச்சல் நிலங்களை மீண்டும் கண்டு பிடித்து அவைகளை கால்நடைகளுக்கு பயன்படுகிற வகையில், அவைகளுக்கு தீவனம் பயிர் செய்கிற வகையில் பயன்படுத்த ஒரு முறையைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கிராமங்களில் வறட்சி சமயத்தில் வைக்கோல் புல் வழங்கினார்கள். என்னுடைய மாவட்டமான சேலம் மாவட்டத்தில், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மிகவும் அதை திறம்படச் செய்தார்கள். நான் மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்காக அவர் இரவு பகலாக சிரமப்பட்டு அலைந்து அந்த கால்நடைகளுடைய பராமரிப்பிற்காக, அவற்றின் வளர்ச்சிக்காக பாடுபட்டார்கள். வைக்கோல், புல்லை அதிகமாக வாங்கி அனைவருக்கும் உள்ள கால்நடைகளும் பயன்படுத்தத் தக்க வகையில் உதவி செய்தார்கள் என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதிலே முக்கியமாக ஒன்றை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இப்போது வறட்சி இல்லை என்றாலும், இன்னும் போதுமான அளவில் கால்நடைகளுக்கான தீவனம் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சிறு விவசாயிகளுக்கு மானியமாக ரூபாய் 100 அளித்து அதை சப்சிடியாக கொடுத்து தீவனப்புல் வளர்க்க பயன்படுத்த உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு வீரகனூரில், ஒரு கால்நடை மருந்தகம் அமைத்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதேபோல பல இடங்களில் அமைக்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே இந்த நிதி ஒதுக்கீட்டை பெருமளவில் இப்படி இல்லாத இடங்குளில் மருந்தகங்களை அமைக்க பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அந்த மருந்தகங்களில் போதிய மருந்துகள் இல்லை. கால்நடைகளுக்கு எந்த நோய்க்கும் மருந்து இல்லை என்ற பல்லைத்தான் நாம் எதிர் கொண்டு வருகிறாம்.



ஆகவே, நாம் காலநடை விரிவாக்க அலுவலர்களைக் குறை கூறுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவர்களுக்குரிய மருந்தைக் கொடுத்து அவர்கள் நல்ல முறையிலே செயல்பட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமூக நலத்துறையிலே பெண்களுக்கு நல்ல பல முன்னேற்றக் குறிப்புக்கள் இருக்கின்றன. இவையனைத்தும் நன்முறையில் செயல்பட்டால் கண்டிப்பாக தமிழ்நாடு முதல் ரேங்கில் இருக்கும் என்பதில் சிறிதேனும் அய்யமில்லை. இருந்தாலும் ஒரு சில குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கின்றன. அவற்றை நேரடியாக அமைச்சரவர்கள் கவனித்து அவருடைய கவனத்திற்கு வருபவைகளைக் கவனித்து களைய வேண்டும்.

அடுத்து ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு விடுதிகளுக்காகக் கடன் வழங்குவது சம்பந்தமாக ஒரு கொள்கை இருக்கின்றது. அது நன்முறையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து மகளிர் மன்றங்கள் என்பவை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 என்று அறிக்கையில் இருக்கின்றது. அந்த மகளிர் மன்றங்களில் ஒன்று கூட இப்போது இயங்கவில்லை, அவற்றை இயக்கி வைக்க வேண்டும். தையல் மெஷின்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே நல்ல சத்துணவு கொடுப்பதற்காக ஏற்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. கால் ஆண்டுக்கு ஒரு முறை 15 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இவை அனைத்தையும் பெற்றுக்கொண்டு தனியார் தையல் மெஷின்களை வாடகைக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும். அவை நல்ல முறையிலே பயன்படுத்துவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து குழந்தைகள் நிலையங்களைப் பொறுத்தவரையிலே சரியான முறையிலே கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் குழந்தைகள் நிலையம் அமைக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில்கூட இந்த குழந்தைகள் நல நிலையங்கள் சேரிகளில் இல்லை. இதுபற்றி பரிசீலனை செய்து அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வறட்சி நிவாரணத்தின் கீழ் குழந்தைகள் நலக் காப்பகத்தின் ஏற்படுத்தப்பட்டன. மற்றபணிகளைப் பொறுத்தவரையிலே அதாவது ரோடுபோடுவது போன்ற வேலைகளைப் பொறுத்தவரையிலே செய்து விட்டால் அவைமுடிந்துவிடுகின்றன. ஆனால் பள்ளிக்கூடத்தைத் திறந்துவிட்டால் பிறகு அதை மூடுவது என்பது ஒரு சிறப்பான காரியமாக இருக்காது. ஆகவே

## வரவு–செலவுத் திட்டம்,
## 1982–83 வாக்கெடுப்பு.

[திருமதி. தா. இராசாம்பாள்] [1982 மார்ச் 27]

வறட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட அந்தப் பள்ளிகளை மீண்டும் தொடர்ந்து நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அழுகின்ற பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுப்பது போன்று 3 மாதத்திற்கு மட்டும் அவர்கள் படிக்கின்ற வசதியினைப் ஏற்படுத்தி கொடுத்து விட்டு பிறகு நிறுத்திவிடுவது என்பது சரியானதாக இருக்க முடியாது. ஆகவே அதனைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குழந்தைகள் உணவுக்காக 100 கோடி ரூபாய் செலவு செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 100கோடியில்ஒரு பகுதியை குழந்தைகள் ஊட்டச் சத்து உணவு வழங்கவும் சிறிது தொகை ஆரம்பக்கல்விப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும் ஒதுக்கிக்கொண்டு மீதமுள்ள தொகை அனைத்தையும் பயனுள்ள வகையில் பாசனத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொ கி றேன். இந்த 100 கோடியினை ஆரம்பக் கல்விப் பிள்ளை களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு என்பது சரியான முறையிலே செயல்படுத்தப்படவில்லை. அதனைக் கண்டிப்பாக நல்ல முறையிலே பயன்படுத்தி வேலைவாய்ப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை).

அடுத்து ஆடுகள் வளர்ப்பைப் பொறுத்த வரையில் மேய்ச் சல் தரிசு நிலங்களைப் பாராதீனம் ஆகாமல் பாதுகாத்து நல்ல வசதிகளைச் செய்துக் கொடுத்தால் ஆடுகள் வளர்ச்சித் திட்டம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

அடுத்து தையல் ஆசிரியைகளைப் பற்றி இங்கே சொன்னார் கள். உண்மையிலேயே இவர்களுடைய நிலைமை பரிதாபகரமான நிலைமையாக இருக்கின்றது. அதே படிப்புள்ள கைத் தொழில் ஆசிரியைகள் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் போது அவர்கள் நல்ல சம்பளத்தைப் பெறுகிறார்கள். ஆனால் இங்கே அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை. இப் படிப்பட்ட நிலையில் எந்தவிதமான சலுகையும் இன்றி இருப்பது என்ற நிலைமையைப் பார்த்தால் அவர்களுடைய தொழிலும் நன்றாக இயங்கவில்லை. அவர்கள் எங்கும் செல்வதும் இல்லை, எதையும் பார்ப்பதும் இல்லை. ஆகவே, அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து அவர்களிடத்திலே நல்ல வேலையையும் வாங்க வேண்டும் அவர்களுடைய பணிகள் உரிய முறையிலே பயன்படுத்துவதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும்.



அடுத்து பல இடங்களில் முக்கிய சேவிகா, கிராம சேவிகா பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. உடனடியாக அந்த இடங்களை நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கி றேன்.

அடுத்து மறுவாழ்வு இல்லங்களைப் பொறுத்தவரையில் உண வுக்காக கொடுக்கின்ற தொகைகள் போதவில்லை. அதை அதிகப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமூக நலத்துறையிலே பல திட்டங்கள் இருந்த போதிலும்கூட என்னுடைய பகுதியிலே ஒரு சாக்கட்டித் தொழிற் சாலை, சோப்புத் தொழிற்சாலை போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு முறையிலே தையல் பயிற்சி பெண்களுக் கென அளிக்கப்பட இருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கி றேன். அதனை நல்ல முறையிலே 5, 10 இடங்களில் நிறை வேற்றிவைத்து பெண்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(இரவு 8-00.)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப் புத் துறைக்கான மானியக் கோரிக்கை மீது நான் வரவேற்றுப் பேச விழைகின்றேன்.

இன்றைக்கு ரூபாய் 18 கோடி 20 இலட்சம் அளவிற்கு இந்தத் துறைக்கு ஒதுக்கி இருப்பது, கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு கட்சிகள் தமிழ்நாட்டை ஆண்டிருந்தாலும், பல்வேறு அரசாங் கங்கள் இந்தத் துறையினை நடத்தி வந்திருந்தாலும் கூட இன் றைக்கு தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமை யில் இருக்கிற தமிழக அரசு அதிகப்படியான தொகையை ஒதுக்கி பல்வேறு நல்ல திட்டங்களை இந்தத் துறையின் சார் பாக கொண்டு வந்திருப்பது தமிழகத்தின் கிராமப்புறப் பொரு ளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கை ஆதாரமாக வைத்துக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

கிராமப்புறத்திலே இருக்கிற கால்நடை வளத்தை வளர்ப் பதிலே மட்டும் அல்லாமல் அவைகளின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற காரணத்தாலே நல்ல தரம் உள்ள கால்நடை களை உருவாக்க வேண்டுமென்ற அவாவின் காரணமாக உறை விந்து திட்டத்தை மாநிலம் முழுவதும் அமல்படுத்துகிறது தமிழக அரசு என்று மானியக் கோரிக்கை மூலம் தெரிகின்ற நேரத்திலே மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் மிக வரவேற்கிறோம்.

## வரவு—செலவுத் திட்டம், 1982–83 வாக்கெடுப்பு.

[திருமதி. தா. இராசாம்பாள்] [1982 மார்ச் 27]

வறட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட அந்தப் பள்ளிகளை மீண்டும் தொடர்ந்து நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அழுகின்ற பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுப்பது போன்று 3 மாதத்திற்கு மட்டும் அவர்கள் படிக்கின்ற வசதியினைப் ஏற்படுத்தி கொடுத்து விட்டு பிறகு நிறுத்திவிடுவது என்பது சரியானதாக இருக்க முடி யாது. ஆகவே அதனைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குழந்தைகள் உணவுக்காக 100 கோடி ரூபாய் செலவு செய்வ தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 100கோடியில்ஒரு பகுதியை குழந்தைகள் ஊட்டச் சத்து உணவு வழங்கவும் சிறிது தொகை ஆரம்பக்கல்விப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும் ஒதுக்கிக்கொண்டு மீதமுள்ள தொகை அனைத்தையும் பயனுள்ள வகையில் பாசனத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொ கி றேன். இந்த 100 கோடியினை ஆரம்பக் கல்விப் பிள்ளை களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு என்பது சரியான முறையிலே செயல்படுத்தப்படவில்லை. அதனைக் கண்டிப்பாக நல்ல முறையிலே பயன்படுத்தி வேலைவாய்ப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை).

அடுத்து ஆடுகள் வளர்ப்பைப் பொறுத்த வரையில் மேய்ச் சல் தரிசு நிலங்களைப் பாராதீனம் ஆகாமல் பாதுகாத்து நல்ல வசதிகளைச் செய்துக் கொடுத்தால் ஆடுகள் வளர்ச்சித் திட்டம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

அடுத்து தையல் ஆசிரியைகளைப் பற்றி இங்கே சொன்னார் கள். உண்மையிலேயே இவர்களுடைய நிலைமை பரிதாபகரமான நிலைமையாக இருக்கின்றது. அதே படிப்புள்ள கைத் தொழில் ஆசிரியைகள் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் போது அவர்கள் நல்ல சம்பளத்தைப் பெறுகிறார்கள். ஆனால் இங்கே அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை. இப் படிப்பட்ட நிலையில் எந்தவிதமான சலுகையும் இன்றி இருப்பது என்ற நிலைமையைப் பார்த்தால் அவர்களுடைய தொழிலும் நன்றாக இயங்கவில்லை. அவர்கள் எங்கும் செல்வதும் இல்லை, எதையும் பார்ப்பதும் இல்லை. ஆகவே, அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து அவர்களிடத்திலே நல்ல வேலையையும் வாங்க வேண்டும் அவர்களுடைய பணிகள் உரிய முறையிலே பயன்படுத்துவதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும்.



1982 மார்ச் 27] [டாக்டர் கே. பி. ராமலிங்கம்]

திருப்பி அளிக்கின்ற திட்டத்தை அமல்நடத்தியாக வேண்டும். அப்படித் திருப்பித் தருவோமேயானால், யார் அந்தக் கன்று களை அந்தப் பண்ணையிலே கொண்டு வந்து விட்டார்களோ அந்த விவசாயிகளுக்கு அவர்களிடம் இருந்து [illegible] மட்டும் ஆகின்ற செலவை வசூலித்து அவற்றை அந்தப் பசுக் களைத் திருப்பித் தருவோமானால், அந்தந்தப் பகுதியிலே, கிராமப்புறங்களிலே அவைகளை வளர்ப்பதற்கான வாய்ப்புக் கள் பெருகும். இது மராட்டிய மாநிலத்திலே அமல்படுத்தப் பட்டுக் கொண்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு அரசுத் தொழில் அமைச்சர் அவர்கள் கூட மராட்டிய மாநிலத்திற்கு சென்ற நேரத்திலே இத்திட்டத்தைப் பார்வையிட்டு வந்திருக் கிறார் என்று நான் அறிகிறேன்.

அந்த வகையிலே இந்தத் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத் திலுடைய தலைநகரங்களிலும், கால்நடை பராமரிப்புப் பண்ணை களை வைத்து, இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இதை அரசாங்கம் செய்கின்ற மாவட்டங்களிலே தவிர, பிற மாவட்டங்களில் தனியார் துறையிலே தனிப்பட்ட நிறுவனங் கள் இதைச் செய்வதற்கு முன்வந்தால், அதையும் செய்ய நாம் இதற்கு ஊக்கம் கொடுத்து, இதை வரவேற்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், மற்றொரு முக்கியமான திட்டத்தை நம்முடைய மாநில அரசு கொண்டு வந்தாக வேண்டுமென்பதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். 'ஹெல்த் கார்டு சிஸ்டம் பார் அனிமல்ஸ்' — கால்நடை கணக்கெடுப்பிற்கு இந்த மானிய கோரிக்கையிலே பல இலட்ச ரூபாய் அதுவும் ஸ்டாடிஸ்டிகல் இன்வெஸ்டிகேஷனுக்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால் நடை கணக்கெடுப்பிற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப் போவதாக மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. வெறும் கால்நடை கணக்கெடுப்பு மட்டும் எடுத்தால் போதாது. அந்த மாட்டின் உரிமையாளர் பெயர், மாட்டின் அடையாளம் ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டை களை இந்த ஆடு, மாடுகளுக்கு வழங்கப்பட வேண்டும். மேலும், அந்த அட்டையில், எந்தெந்த தடுப்பு ஊசி, என்னென்ன சிகிச்சை கள், எப்போது அளிக்கப்பட்டது, எந்த மருத்துவரால் அளிக்கப் பட்டது ஆகிய விவரங்களை அந்த அட்டையிலே குறிப்பிட்டாக வேண்டும். இந்த முறைகளை அமுல்படுத்த வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், தமிழக அரசு சிறப்பாக ஆற்றி வரு கின்ற ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், வறட்சி மேம் பாட்டுத் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் கால் நடை இன்சூரன்ஸ் திட்டம் ஆகிய திட்டங்கள் இருக்கின்றன.

இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். அப்போது தான் இந்த சீர்கேடுகள் எல்லாம் குறைந்து, இதிலே ஏற்படுகின்ற ஊழல்கள் எல்லாம் குறைந்து, இப்போது மாடுகள் வாங்காமலேயே மாடுகள் வாங்கியதாக மறைக்கப்படுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் மாறும். அப்போதுதான் இந்த கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் சரியான முறையில் இயங்குகின்ற வழிவகை செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல்வேறு நல்ல திட்டங்களை நாம் அறிவித்து, இந்தத் துறை இன்றைக்கு நல்லபடியாக செயல்படுகிறது. இன்றைக்கு இந்த மன்றத்திலே அத்தனை உறுப்பினர்களும், சமூக நலத் துறையை, சிறந்த துறை என்று, அதுவும் இரவு நேரத்திலே கூட்டியிருந்தாலும்கூட, பாராட்டிப் பேசினார்கள். அதிலிருந்து இந்தத் துறையின்மீது அவர்களுக்கு அக்கறை, எழுச்சி, ஆசை வந்திருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்க முடிகிறது. ஆனால், கோழி வளர்ப்பைப் பொறுத்த வரையில், கடந்த 10 ஆண்டு காலமாக, ஆரம்பிக்கப்பட்ட நாளிலே இருந்து இன்றுவரையில் இந்தத் துறை பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டக் கணக்கு காட்டுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆனால், பால் வளத் துறை இன்றைக்கு மேலும் மேலும் பரந்து வளர்ந்து, பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழகம் முழுவதும், தமிழ்நாடு பால்வள அபிவிருத்திக் கழகத்தின் சார்பிலே, 'ஆவின்' டிப்போக்களைத் திறந்து, மக்கள் 'ஆவின்' என்றாலே 'ஆ' என்று பார்க்கின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. ஆனால், கோழி வளர்ப்பு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? கோழி வளர்ப்புத் துறை இன்றைக்கு அரசு சார்பிலே நடத்தப்படுகிறது. கோழிப் பண்ணைகள் சரிவர இயங்கவில்லை. அரசாங்கத்தாலே நடத்தக்கூடிய கோழிப் பண்ணைகளுக்கு சரியான நிர்வாகம் நடைபெறவில்லை. இதன் காரணமாக, தனியார் துறையிலே நடைபெறுகின்ற கோழிப் பண்ணைகள் மூலம் பல ஆயிரக்கணக்கான லாபம் பெறுகிறார்கள். ஆனால், அரசுத் துறையாலே நடத்தப்படுகின்ற இந்தக் கோழிப் பண்ணைகளில் பல இலட்சம் ரூபாய் நஷ்டம் வருகிறது என்று சொன்னால், இந்த முறையை மாற்றி, பால்வளத் துறை எப்படி செய்கிறதோ, அப்படிச் செய்ய வேண்டும். அவர்கள் மாடுகளை வளர்த்து வருகின்ற விவசாயிகளிடமிருந்து ந்தப் பாலை மட்டும் பெற்று, மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். அதைப்போலவே, நாம் இந்த கோழி வளர்ப்புத் துறையிலும், இந்தப் பண்ணையை விட்டுவிட்டு, இனிமேலாவது தனியார் துறையிலே இத்தகைய கோழிகளை வளர்க்கின்ற பண்ணைகளுக்கு ஊக்கம் அளித்து, அவர்களுக்கு அதற்கான சநிகளை செய்துகொடுத்து, விஞ்ஞான ரீதியான ஆலோசனைகளை யெல்லாம் தந்துதவ வேண்டும்.





சேலம் மாவட்டத்தில், அதுவும் நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மாவட்டம், அங்கே இத்தகைய கோழிப் பண்ணைகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், எனக்கு இது பற்றிப் பேச கொஞ்சம் மேலும் அவகாசம் தரவேண்டும். இந்தக் கோழிப் பண்ணைகளைப் பொறுத்த வரையில், தனியார்களுக்கு அதிக ஊக்கம் அளித்து, அவர்களிடமிருந்து வியாபார ரீதியாக இவைகளை வசூலிக்க வேண்டும். அதைக் குறித்து விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கிறபோது எவ்வாறு சலுகை அளிக்கப்படுகிறதோ அதைப்போன்று அளித்து கோழிப் பண்ணைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். கோழித் தீவனத்திற்குப் பயன்படுத்தப்படுகிற பொருள்களை அத்தியாவசியப் பொருட்களின் கீழ் கொண்டுவந்து விலையை அவைகளுக்கு நிர்ணயித்து கோழித் தீவனத்தின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிற முட்டைகளை புரக்யூர் பண்ண வேண்டும்.

(இரவு 8-10)

இன்றைக்குப் பல்வேறு உறுப்பினர்கள் ஒரு கருத்தை உறுதிப்படுத்தினார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்தவர்கள்தான் அந்தத் துறையின் இயக்குநராக வரவேண்டுமென்று சொன்னார்கள். அதையே நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், பாபு ஜனார்த்தனன் அவர்களும் என்னைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். என்னைக் குறிப்பிட்டுப் பேசியதால் நான் பதில் சொல்லியாகவேண்டும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இரண்டு பேர்களும் இப்போது அவையில் இல்லை. அமைச்சர் வேண்டுமானால் அதைச் சொல்வார்கள். தாங்கள் முடித்துக் கொள்ளவும்.

*திரு எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான சமூக நலத் துறை மானியத்திற்காக 23 கோடியே 1 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் நிதி கோரியிருக்கிறார்கள். மகளிர் நலனுக்காகவும் குழந்தைகள் நலனுக்காகவும் உடல் ஊனமுற்றோர்கள் நலனுக்காகவும் நிதிகோரி அதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்ற இந்த திட்டங்களின் மீது சில கருத்துக்கள் நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏற்படுத்தியிருக்கின்ற மகளிர் சங்கங்கள் குறைந்தது 3,000 ஜனத்தொகை கொண்ட பகுதிகளிலே எல்லாம் மகளிர் சங்கங்களும், 5 ஆயிரம் ஜனத்தொகை இருக்கின்ற பகுதிகளிலே அனைத்திலும் குழந்தை காப்பகங்கள் பால்வாடிகள்

அமைக்கப்படுவதற்காகவும் இந்த அரசு அதை ஒரு கொள்கையாக நிர்ணயித்து அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில ஒன்றியங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதிகள், அரிசனக் குடியிருப்புகள் இருக்கின்ற பகுதிகள் ஆகியவற்றில் மகளிர் சங்கங்கள், குழந்தை காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும். மகளிர் முன்னேற்றம் கருதியும், தனி மகளிர் மன்ற அமைப்புகள் குழந்தைகளைக் காப்பதற்கும் நகரப் பகுதிகளிலே இருப்பதைப் போன்று குழந்தைகள் பயன் அடைகின்ற முறையிலே குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிர் சங்கங்களுக்கு 3 மாதங்களுக்கு அதன் அமைப்பாளர்களுக்கு ஹானரோரியம் என்ற முறையிலே 15 ரூபாய் தான் தரப்படுகிறது. அந்த நிலையை மாற்றி குறைந்த பட்சம் 75 ரூபாய் தரவேண்டும், அதற்கு அமைச்சர் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற பகுதிகளிலே மாதர் சங்கங்கள் செயல்படுகின்றன அந்த சங்கங்களில் அமைப்பாளர்கள் அவர்களே இருப்பதற்கு ஏற்பாடு செய்வார்களானால் தையல் பயிற்சி போன்ற பலவற்றைக் கற்றுக் கொண்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வருவாய்க் தேடுவதற்கு உதவியாக அமையும் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போல வையாதிகர்களுக்கு வழங்கப்படுகிற பென்ஷன், அக்ரிகல்சுரல் லேபர்களுக்கு வழங்கப்படுகிற பென்ஷன், பிசிக்கலி ஹேண்டிகேப்ட்களுக்கு வழங்கப்படுகிற பென்ஷன் இவைகளை எண்ணிக்கை வரையறை செய்யாமல் உடல் ஊனமுற்ற அத்தனை பேர்களுக்கும் 50 வயதிற்கு மேலே பென்ஷன் பெறுகிற வகையிலே உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிற்பட்ட பகுதியாக இருக்கிற மலைப்பகுதிகளிலும், மீனவர்கள் வாழ்கிற அந்த கடலோரப் பகுதிகளிலும் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக குருந்தன்கோடு ஒன்றியத்தில் சைமன் காலனி, திருனயினார் குறிச்சி தென்கரை போன்ற பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு ஒன்றியத்தின் வாயிலாக மனுக்கள் செய்யப்பட்டும் இதுவரையில் இலாக்காவிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. அதே போல அங்கே பயிற்சி பெற்ற தையல் ஆசிரியைகளின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும். பயிற்சி பெற்ற கிராம சேவக்குகள் குறைந்தது 10 ஆயிரம் ஜனத்தொகைப் பெற்ற இடங்களுக்கு ஒருவராவது இருக்கவேண்டும். குழந்தைகள் காப்பகங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியைகள் எண்ணிக்கையை கூட்டி தகுதி வாய்ந்தவர்களை நியமனம் செய்து குழந்தைகளின் நலன் காக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கால்நடை துறையைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். கால்நடைத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்து வருகிற காரணத்தாலே சிதம்பரம் வட்டாரத்திலே மருதூர் என்ற கிராமத்தில் சிகிச்சைக்காக கால்நடைகளை கொண்டு வருபவர்கள் ஏமாற்றமடைந்து செல்கிற நிலைமை இருக்கிறது. கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வினாவிற்கு பதிலளிக்கும் போது திருவிடைமருதூர் தாலுகா, திருநாகேசுவரம் என்ற ஊரில் கால்நடை மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த மருத்துவ மனையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்புத் துறை பற்றியும், சமூக நலத்துறை பற்றியும் அவர்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இங்கே 16 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்புத் துறையிலும், சமூக நலத்துறையிலும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றும், இந்த துறையின் வாயிலாக சமுதாயத்திலுள்ள மக்கள் முன்னேற்றம் அடையும் அளவிற்கு அவர்கள் ஆர்வம் கொண்டு இருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய பேச்சுக்களின் வாயிலாக தெரிந்துகொண்டேன்.

இங்கே கால்நடை பராமரிப்புத் துறையை எடுத்துக் கொள்ளும் போது, தமிழகத்திலே அதிகமான விவசாயப் பெருங்குடி மக்கள் கால்நடையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தை நடத்த வேண்டுமென்றால் அதற்கு கால்நடை இருந்தால்தான் அந்த விவசாயத்தை நல்லமுறையிலே நடத்த முடியும். கால்நடை இல்லையென்றால் விவசாயத்தை சிறந்த முறையிலே நடத்த முடியாது. அதே சமயத்தில் சமுதாயத்திலே பொருளாதார முன்னேற்றத்திற்கு கால்நடை வளர்ப்பு மிகவும் அடிப்படை காரணமாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட இந்தக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தைத் தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்காக மட்டும் அல்லாமல், தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ்

உள்ள மக்கள், இப்படிப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடைகிற அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கிற இந்த அரசு கால்நடை பாராமரிப்புத் துறைக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதன் வாயிலாக கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், கால்நடை வளர்ச்சி சிறப்புத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், வளர்ச்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் போன்ற ஆக்கபூர்வமான திட்டங்களை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 8-20)

அதோடு மட்டுமல்லாமல், கால்நடைகள் வளர்த்தால் மட்டும் போதாது; அந்தக் கால்நடைகளை நல்ல முறையில் இனவிருத்தி செய்ய வேண்டுமென்றால், அவற்றிற்குத் தக்க நேரத்தில், நோய் வரும்போது, மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசும்பொழுது மருந்தகங்களில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்தத் தட்டுப்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் கால்நடைகளுக்கு நோய் வராமல் இருப்பதற்காக மருந்துகளைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடுதான் தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் அதிகமான மருந்துகளைக் கால்நடைகளுக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதை மிகவும் மகிழ்ச்சிகரமாக இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது ஒவ்வொரு உறுப்பினரும் தன் தொகுதிக்கு கால்நடை மருந்தகம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஓரிடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கவேண்டும் என்றால், ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் பெற வேண்டும். 1 ஏக்கருக்கு குறையாமல் நிலம் இருக்க வேண்டும். கட்டிடம் கட்டி முடியும் வரை, வாடகை இல்லாத கட்டிடம் தர வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், முதல் மருந்தகமாக இருந்தால் ஊராட்சி ஒன்றியம் 25 சதவீதத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும், அரசு 75 தவீதத்தை ஏற்றுக் கொள்ளும். இரண்டாவது மருந்தகமாக இருந்தால், அரசு 50 சதவீதமும், ஊராட்சி ஒன்றியம் 50 சதவீதமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாவது மருந்தகமாக இருந்தால் ஊராட்சி ஒன்றியம் 75 சதவீதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். 25 சதவீதத்தை அரசு ஏற்றுக் கொள்ளும். நான்காவது மருந்தகமாக இருந்தால்,



முழுச் சதவீதத்தையும் ஊவாட்சி சின்றியம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த, எந்த இடத்திற்குக் கால்நடை மருந்தகம் வேண்டுமோ, அங்கங்கே, முதல் கால்நடை மருந்தகம் வேண்டுமா, இரண்டாவது கால்நடை மருந்தகம் வேண்டுமா, மூன்றாவது கால்நடை மருந்தகம் வேண்டுமா என்பதைப் பொறுத்து, தெரிவித்தால், இருக்கிற நிலைமைக்கேற்றவாறு, எங்கெங்கு கால்நடை மருந்தகம் வேண்டுமோ, அதையெல்லாம் நான் பரிசீலனை செய்து ஏற்படுத்துவேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனம் அவர்கள் ஒரு நல்ல கருத்தை இங்கே குறிப்பிட்டார்கள். கோமாரி நோய்க்கான தடுப்பு ஊசி மருந்தை எல்லா கால்நடைகளுக்கும் இலவசமாகப் போட வேண்டுமென்று குறிப்பிட்டர்கள் இந்தக் கோமாரி நோய்க்கான தடுப்பு ஊசி சிறு விவசாயி, குறுநில விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு 50 சதவீத மானியத்தில் கொடுக்கப்படுகிறது. அந்த மருந்துக்கான செலவு மொத்தம் ரூபாய் 14 கோடியாகும். இப்படிப்பட்ட உயர்ந்த தடுப்பு ஊசி மருந்தே, சிறுநில, குறுநில விவசாயிகளுக்காத்தான் கொடுக்கமுடியும். பெரிய விவசாயிகளுக்கு, நிலச்சுவான்தாரர்களுக்குப் போட வேண்டுமென்றால், அது கடினமான செயலாகும். பெரிய விவசாயிகள், பெரு நிலச் சுவான்தார்கள் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வசதி படைத்தவர்களாக இருப்பதால், தங்கள் சொந்தச் செலவிலேயே அந்த தடுப்பு ஊசி மருந்தைப் போடமுடியும். ஆகவேதான் பெரிய விவசாயிகள், பெரு நிலச் சுவான்தார்கள் தவிர்த்த சிறுநில, குறு நில விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் இந்தத் தடுப்பு ஊசியைக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், வறட்சிக் காலத்தில், சென்ற ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திற்கும் கோமாரி நோய்க்கான தடுப்பு ஊசி மருந்துகள் இலசவமாகப் போடப்பட்டிருக்கின்றன. அதற்கான தொகை ரூபாய் 17·35 இலட்சம் ஆகும்.

திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களும், திரு, புாபு ஜனார்த்தனன் அவர்களும் மருந்தகங்களுக்கு மருந்து கொடுப்பதற்கான தொகை போதவில்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். பிரதம மருத்துவமனைகளுக்கு ரூபாய் 30,000 மதிப்புள்ள மருந்து

களும், மருத்துவமனைகளுக்கு ரூ. 15,000 மதிப்புள்ள மருந்து
களும், மருந்தகங்களுக்கு ரூ. 10,000 மதிப்புள்ள மருந்துகளும்,
கிளை நிலையத்துக்கு ரூ. 1,500 மதிப்புள்ள மருந்துகளும் இப்
பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறோம். நான் முன்பே
உரையில் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறேன். தமிழகத்தைப்
பொறுத்தவரையிலும் மற்ற மாநிலங்களைவிட அதிகமான மருந்து
கள் இங்குதான் கொடுக்கப்படுகின்றன என்பதை இங்கே நான்
கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வரும் ஆண்டில் மேலும் மருந்து
கள் வாங்குவதற்கு ஆக ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது
என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நாய் வளர்ப்பைப் பற்றி திரு. பாபு ஜனார்த்தனன்
அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் ராஜபாளையம்
நாய் சிறந்த இனத்தைச் சேர்ந்ததாகும். தற்போது இந்த இனம்
அழியும் தறுவாயில் உள்ளது. எனவே, இந்த இன நாய்களை
வளர்க்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்
வின நாய்கள் நன்கு காக்கப்பட்ட பின்னர் வெளி நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யும் திட்டம் ஆய்வில் உள்ளது என்பதை இங்கே
நான் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, பன்றி வளர்ப்பு பற்றி திரு. பாபு ஜனார்த்தனன்
அவர்கள் குறிப்பிட்டார்கள். இலவசமாகப் பன்றிகள் வழங்கும்
திட்டம் தற்போது வட ஆர்க்காடு, சேலம், செங்கற்பட்டு,
மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு 125 பேர் பயனடைந்துள்
ளார்கள். பெருந்துறை வட்டத்தில் பன்றிகள் இலவசமாக
வழங்கும் பொருட்டு வரும் ஆண்டில் ஆய்வு செய்யப்படும் என்
பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

கோழி வளர்ப்பு பற்றிக் குறிப்பிட்டார்கள். கோழி வளர்ப்பு
மிகவும் நஷ்டமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று
குறிப்பிட்டார்கள். கோழி வளர்ப்பு நிலையங்கள் முந்தைய
அரசுக் காலத்தில்தான் மூடப்பட்டுள்ளன. இந்த இரண்டாண்டுக்
காலத்தில் இந்தக் கோழி வளர்ப்பு நிலையம் எந்த விதத்திலும்
மூடப்படாமல் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது
என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், திரு. பாபு ஜனார்த்தனன்
அவர்கள் ஒரு திருத்தத்தைக் கூடத் தெரிவித்தார்கள். கல்வி
அறிவற்றவர்கள் என்று போடப்பட்டிருப்பதைப் பற்றிக் குறிப்
பிட்டார்கள். கல்வி இல்லாதவர்கள் என்ற அர்த்தத்தில்தான்
போடப்பட்டிருக்கிறதே தவிர ஆடு வளர்ப்பவர்களை இழிவு
படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் செய்யப்படவில்லை என்
தை இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்
பகாள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.







திரு. பழனிவேல் அவர்கள் நல்ல கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கால்நடைகளுக்கு எல்லா மருந்துகளையும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கோமாரி மருந்து தவிர எல்லாத் தடுப்பு ஊசிகளும், எல்லா மருந்துகளும் எல்லாக் கால்நடைகளுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கால்நடைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்ய வேண்டுமென்று திரு. பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேசீய மயமாக்கப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் கால் நடைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்யப்படுகிறது. கறவை மாடுகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்ய வழிவகை செய்யப்படுகிறது. கறவை மாடுகளின் சொந்தக்காரர்கள் இந்த நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளை இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் மற்றும் சிறப்புக் கால்நடைத் திட்டம் போன்ற அரசின் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் கால்நடைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்ய அரசால் மானியம் வழங்கப்படுகிறது. இந்த இன்ஷ்யூரன்ஸ் செய்யும்பொழுது துறை அலுவலர்கள் கையாடல் செய்கிறார்கள் என்றுகூட கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அலுவலர் இப்படிப்பட்ட கையாடலைச் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஐ. ஆர். டி. பி. திட்டத்தைப் பற்றி—ஒருங்கிணைந்த ஊரக வலர்ச்சித் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் இத்திட்டத்தின் கீழ் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பயனடையும் 600 பேர்களில் கண்டிப்பாக 200 பெண்களுக்காவது கறவை மாடுகள் வழங்கப்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[இரவு 8–30]

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் விஜயலட்சுமி அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்க கடன் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 மார்ச் 27

அடுத்து உறுப்பினர்கள் அருணகிரி, திருமதி இராசாம்பாள்
அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள்.
பிற மாநிலங்களுக்கு போவதைத் தடுக்க வேண்டும் என்று குறிப்
பிட்டார்கள். பசுவைதை தடைச் சட்டம் என்று கால்நடைகள்
களை பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதைத் தடுக்கும்
நோக்கம் பற்றி ஒரு மசோதாவை அறிமுகம் செய்திருக்கிறேன்.
அதை அய்வு செய்யும்போது அதைப் பற்றி விவரமாக விளக்கம்
தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து டாக்டர் சௌரிராஜன் அவர்கள் ஒரு கருத்தைத்
தெரிவித்தார்கள். தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கர் மேய்ச்சல்
நிலங்கள் இருக்கின்றன. என்று கேட்டார். அவருக்கு நான்
சொல்லிக் கொள்ள விரும்புவது, தமிழ் நாட்டில் 1,77,055
ஹெக்டேர் நிலம் நிரந்தரமான மேய்ச்சல் நிலமாக இருக்கின்றது.
இதைத் தவிர வனத்துறையின் கீழ் உள்ள மேய்ச்சல் நிலங்களை
சிறு கட்டணம் வசூலித்து மேய்ச்சலுக்குப் அனுமதித்துக் கொண்டு
வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள கால்நடைப் பண்ணை
களிலேயும் அரசுப் பண்ணைகளிலேயும் தீவனப் பயிர் உற்பத்தி
செய்யப்படுகிறது. மேலும், பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாக
தீவன மரங்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை
இங்கே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும், கால்நடைகளை
வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நவீனப்படுத்த
முடியவில்லையென்று டாக்டர் சௌரிராஜன் அவர்கள் குறிப்
பிட்டார்கள். கால்நடை வளர்ப்பில் தமிழக அரசு நவீன
முறையில், நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது
என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், சிறந்த முறை
யில், நவீன முறையில், அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள்
என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
மத்திய அரசின் வாயிலாக 85 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு
செய்து, அந்தச் சிறந்த திட்டத்தை, அந்த நவீன திட்டத்தை
நீங்கள் கையாண்டால், கால்நடைகளை நல்ல முறையில் இன
விருத்தி செய்ய முடியும் என்ற திட்டத்தை மத்திய அரசு அறி
வித்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியாக
வேண்டும்.

தமிழகத்தில் கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு
தமிழக அரசு செயற்கைக் கருவூட்டல் முறையைத் தமிழகமெங்
கும் செயல் படுத்தி வருகிறது. இதன்பொருட்டு. உயர் ரக்க்
காளைகள், 59 பொலி காளை நிலையங்களில் பராமரிக்கப்
பட்டு, அவைகளின் விந்து, திரவ நிலையில் உபயோகிக்கப்பட்டு
வருகின்றது. இத்திரவ விந்து, காளைகளில் இருந்து சேகரிக்கப்
பட்ட நேரத்திலிருந்து 36 மணி நேரத்திற்குள் உபயோகிக்கப்பட
வேண்டும். இக்காரணத்தால், உயர்ரகக் காளைகளின் விந்து



1982 மார்ச் 27] [திருமதி கோமதி சீனிவாசன்]

வீணாகிறது. இதைத் தவிர்த்து, விந்துவின் உபயோகக் கால
அளவை நீடிக்கும் வகையில் நவீன உறை விந்து முறை மேலை
நாடுகளில் பரவலாகக் கையாளப்படுகின்றது. இந்தச் சிறந்த
முறையைத் தமிழகத்தில் செயல்படுத்தும் நோக்கத்தோடு, தஞ்சா
வூர் மாவட்டத்தில், ஈச்சங்கோட்டையிலும், திருநெல்வேலி
மாவட்டத்தில், அபிஷேகப்பட்டியிலும், உறை விந்து நிலையங்கள்
தமிழக அரசினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்நிலை
யங்களில் வசதிகளைப் பெருக்கி, தஞ்சாவூர், திருச்சி, புதுக்
கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்
களில், உறைவிந்து முறையைக் கால்நடை அபிவிருத்திக்குப்
பரவலாக உபயோகிக்கும் நோக்கத்துடன் ஒரு விரிவான திட்டத்
தைத் தமிழக அரசு தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியது.
மத்திய அரசு இத்திட்டத்தினை ஏற்று திட்டத்தின் மொத்த
ஒதுக்கீட்டில் ரூ. 85 இலட்சம் தற்போது கொடுக்க ஒப்புதல்
அளித்துள்ளது. மீதி, ரூ. 15 இலட்சம் தொகையை இத்திட்டம்
செயல்படத் தொடங்கிய பிறகு மறு நிதி ஆண்டில் கொடுக்க
உள்ளது. தற்போது, இத் திட்டத்தின் செயலாக்கம் அரசின்
பரிசீலனையில் இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்
கொள்கிறேன். இத்திட்டம் இரு பகுதிகளாகச் செயல்படும்.
ஈச்சங்கோட்டையை மையமாகக் கொண்ட ஒரு பகுதியில்,
தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் உள்ளடக்கிய
250 கிளை நிலையங்களும் மற்றும் அபிஷேகப்பட்டியை மைய
மாகக் கொண்டு மற்றொரு பகுதியில் திருநெல்வேலி, குமரி
மாவட்டங்களை உள்ளடக்கிய 126 கிளை நிலையங்களும் செயல்
படும். இத்திட்டத்திற்குத் தேவையான திரவ நைட்ரஜன் தயா
ரிக்கும் நிலையங்கள். மற்றும் உறை விந்து முறைக்குத் தேவை
யான கருவிகள், கட்டிடங்கள், பொலி காளைகள் போன்ற
வசதிகள் மத்திய அரசு அளித்துள்ள நிதி உதவியுடன் தோற்று
விக்கப்பட்டு இத்திட்டம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, ஆடு வளர்ப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
குறிப்பிட்டார்கள். ஆடு வளர்ப்பு விவசாயிகளுக்கு உப தொழி
லாக இருக்கிறது. அதை நல்ல முறையில் பெருக்க வேண்டு
மென்றும் அதை இன விருத்தி செய்ய வேண்டும். அதனால்
பொருளாதார முன்னேற்றம் அடைய வழி இருக்கிறது என்று
மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இது ஒரு புதிய
திட்டம். தமிழக அரசின் பல அபிவிருத்தி திட்டங்களின் வாயி
லாக செம்மறி ஆடு வளர்ப்பதற்கு மானிய உதவி அளிக்கப்
படுகின்றது. செம்மறி ஆடு வளர்ப்பு விவசாயிகளுக்கு ஒரு
லாபகரமான உப தொழிலாகும். இத்திட்டத்தின் முழுப் பயன்
பெறுவதற்கு நோய் பாதுகாப்பு நடவடிக்கைகள் தக்க தருணத்தில்
கொடுப்பது கால்நடை பராமரிப்புத் துறையின் முக்கியமான
குறிக்கோளாகும். செம்மறி ஆடுகளை பல தொற்று நோய்கள்
தாக்கக்கூடும். தவிர செம்மறி ஆடுகள் குடற்புழுக்களினால்

பாதிக்கப்பட்டு உடல் நலம் குன்றி இறைச்சி உற்பத்தி குறையும் அபாயம் உள்ளது. இதைத் தவிர்த்து, விவசாயிகள் முழுப்பயன் பெறும் நோக்கத்துடனும் இறைச்சி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் தமிழக அரசு ஒரு நோய் பாதுகாப்புப் பணியினை விரிவாக மேற்கொள்ள திட்டம் வகுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக, வட ஆற்காடு, சே ம், தென்னாற்காடு, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. இந்த நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 12·67 இலட்சம் செம்மறி ஆடுகள் உள்ளன. பல திட்டங்கள் வாயிலாக இம்மாவட்டங்களில் சுமார் 261 செம்மறி ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த நான்கு மாவட்டங்களிலும் சுமார் 30,000 விவசாயிகள் செம்மறி ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பொருட்டு, ரூ. 34 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன.

இத்திட்டத்தின் வாயிலாக, செம்மறி ஆடுகளுக்கு, தொற்று நோய் வராமல் தடுக்க தடுப்பூசி இலவசமாக போடப்படுவதுடனும், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து அவ்வப்போது அறிவிப்பதுடனும் செம்மறி ஆடுகள் உடல் நலம் பாதுகாக்கப்படும். மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலமாக 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. மு. ப. முனுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, 261 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஆடு வளர்ப்புச் சங்கத்திற்கும் எவ்வளவு மேய்ச்சல் நிலம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 261 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. மேய்ச்சல் நிலத்தைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். தமிழ் நாட்டில் 1,77,055 ஹெக்டேர் நிலம் நிரந்தர மேய்ச்சலுக்காக இருக்கிறது, என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. ப முனுசாமி :** தலைவர் அவர்களே, மாநில ரீதியிலே அமைச்சர் கூறுகிறார்களே, தவிர, ஒவ்வொரு சங்கத்திற்கும் மேய்ச்சல் தர நிலம் இருந்தால், அதை கூட்டுறவு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று விதி இருப்பதாக கூட்டுறவு ஆரம்பித்த பொதுமக்கள் கூறுகிறார்களே, அதை விதி விலக்காக மாற்ற, இந்த அரசு ஆவனசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனியாகத் தெரிவித்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறை 1982—83ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் பின்வருமாறு :—

(1) ரூ. 1·83 லட்சம் செலவில் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு கூடுதல் அலுவலர்களை நியமித்தல்.

(2) ரூ. 1·98 லட்சம் செலவில் நாகர்கோவில், புதுக்கோட்டை உதவி கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகங்களை இரண்டாகப் பிரித்தல்.

(3) எம்.வி.எஸ்.ஸி. மேற்படிப்புக்கு அலுவலர்களை அனுப்புதல். இதற்கு ஆகும் செலவு 1.28 லட்சம் ஆகும்.

(4) ரூ. 68 ஆயிரம் செலவில் மலடு நீக்கப் பணியில் பயிற்சி அளிக்கப்படும்.

(5) 1982—83-ம் ஆண்டில் ரூ. 12·17 லட்சம் செலவில் 25 கால்நடை மருந்தகங்கள் புதிதாக திறக்கப்படும்.

(6) ரூ. 12·6 லட்சம் செலவில் நடப்பு ஆண்டில் 5 கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

(7) ஆதி திராவிடர் குடியிருப்புகளிலுள்ள 5 கால்நடை மருந்தகங்களுக்கு கட்டிடம் கட்டும் பொருட்டு 1982—83-ம் ஆண்டில் ரூ. 7·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(8) ரூ. 11·2 லட்சம் செலவில் 3 கால்நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

(9) வெக்கை நோய் தடுப்புக் குழுக்களுக்கு வாகன வசதிகளும் கூடுதல் அலுவலர்களை நியமிக்கும் பொருட்டு ரூ. 1·86 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(10) வெக்கை நோய் நிலையங்களுக்கு கூடுதல் அலுவலர்கள் நியமித்து வலுப்படுத்துவதற்காக ரூபாய் 44 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(11) கால்நடை நோய் தடுப்பு நிலையத்திற்கு தொடர்ந்து கன்றுகள் கிடைக்கும்படியாக வசதிகள் ஏற்படுத்துவற்காக ரூபாய் 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இரவு 8·40)

4·41 இலட்சம் ரூபாய் செலவில் நீலகிரி மாவட்டத்தில் வெக்கை நோய் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

10 இலட்சம் ரூபாய் செலவில் அயலினக் கன்றுகள் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

முர்ரா இனக் கால்நடைகளை வாங்குவதற்காக 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் பகுதியில் நாட்டின் வெள்ளாடுகளின் தரம் உயர்த்துவதற்கான திட்டத்திற்கு 51,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள் ளது.

தமிழகத்திலுள்ள கால்நடைகளுக்கு முனைப்பு மருத்துவப் பணியும் தொடர் நடவடிக்கையும் மேற்கொள்வதற்காக 1982–83 ஆம் ஆண்டில் 34·53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் கப்பலூரில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தில் தீவன காப்பு நிலையத்தை விரிவுபடுத்து வதற்காக 6·50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம் அரசூரிலுள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் குஞ்சு பொரிப்பகத்தை விரிவு படுத்தும் நோக்கத்துடன் 3 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும் கூடுதல் மருந்துகள் வழங்கும் பொருட்டு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொடுவள்ளியில் ஆரம்பிக்கப்பட இருக்கும் நவீன இறைச்சிக் கூடத்துக்கான கட்டிட வேலை இன்னும் 5 அல்லது 6 மாதங்களில் தொடங்கப்படும்.

இறைச்சிக்காக வளர்க்கப்படும் 100 கோழிகள் அடங்கிய 258 புதிய யூனிட்டுகள் ஆரம்பிக்கப்படும்.

3.5 இலட்சம் ரூபாய் செலவில் குஞ்சுகள் பொரிப்பதை மேலும் ஒரு இலட்சம் அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.



ஆடு வளர்ப்புத் திட்டத்தில் தமிழ்நாடு முதன்மை வகிப்ப தாக மத்திய அரசு பாராட்டுகிறது. இதன் காரணத்தால் ஆடு வளர்ப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு மேலும் 20 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

மேலும் கால்நடை ஆய்வாளர்கள் பற்றியும் இங்கே குறிப்பிட் டார்கள். கால்நடை ஆய்வாளர்களை கால்நடை விரிவாக்க அலு வலர்களாக அரசு மாற்றியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள் அது பற்றியவழக்குநீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத்தின்முடிவை எதிர்பார்க்கிறோம். நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு கொடுக்கிறார் களோ அதற்கு ஏற்றவாறு அரசு நடைமுறைப்படுத்தும் என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக இருப்பது சமூக நலத்துறை சமூக நலத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சமூக நலத் துறையில் தமிழ்நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், விதவைகள், பெண்கள், ஊனமுற்றவர்கள், குழந்தைகள், மற்றும் அனாதைக் குழந்தைகள், சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்ட இளம் குற்ற வாளிகள் போன்றவர்கள் எல்லாம் வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை முதல்வராகக் கொண்டிருக்கிற இந்த தமிழக அரசு வருவாயை மட்டும் கருத்தில் கொள்ளாமல், இப்படிப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் பொறுப்பேற்ற நேரத்தில் சமூக நலத்துறைக்கு 10 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு இப்பொழுது சுமார் 23 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதிலிருந்து ஏழை எளிய மக்களின்பால் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பது நன்கு தெரிகிறது.

ஆண்களுக்கு பெண்கள் சமமென்று கூட மாண்புமிகு உறுப் பினர்கள் திருமதி பொன்னம்மாள் அவர்களும், விஜயலட்சுமி அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். ஆண்களைப் போல பெண்களும் வருமானம் பெறவேண்டுமென்ற நோக்கத் தோடுதான் பெண்களுக்கு என்று அதுவும் ஏழை எளிய பெண் களுக்கு என்று ஆங்காங்கே தொழில்களை ஆரம்பித்து, அதன் மூலம் அவர்கள் வருமானம் பெற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் நல்ல பல திட்டங்களை இந்த அரசு தீட்டி யிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 மார்ச் 27

கிராமப்புற பெண்கள் வேலை வாய்ப்பின்றி மிகவும் அவதிப் படுகின்ற நிலையை எண்ணிப்பார்த்து அவர்களுக்கு கண்டிப்பாக வேலை கொடுக்க வேண்டும். அதிலும் சிறு, சிறு குடிசைத் தொழில்களைச் செய்து கொடுத்தால் அதன் மூலம் பயிற்சி பெற்று வருமானத்தைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் மெழுகு வர்த்தி உற்பத்தி, கயிறு தயாரித்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், சாக்கட்டி தயாரித்தல், கூடை முடைதல், பாய் முடைதல் இப்படிப்பட்ட பல குடிசைத் தொழில்களை ஆரம்பித்து அதன் வாயிலாக அவர்கள் வருமானம் பெறுவதற்கு இந்த அரசு திட்டங்களைத் தீட்டி இருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. சமூகநல வாரியத்தின் மூலமாக மகளிர் மன்றங்களை ஏற்படுத்தி அதன் வாயிலாக அவர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து, வருமானம் பெறக் கூடிய அளவுக்கு இன்றைக்கு பெண்கள் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள் என்பதை பெருமையாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விதவைப் பெண்களின் திருமணங்களுக்கு பண ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். விதவைப் பெண்களின் ஒரு பெண் திருமணத்திற்கு ரூ. 1,000 என்கிற வகையில் 1,000 பெண்களுக்கு நிதி வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, இப்போது 258 விதவைப் பெண்களுக்கு 1,000 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பால்மாடு வாங்குவதிலும் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று திருமதி பொன்னம்மாள் அவர்கள் தெரிவித்தார்கள். விதவைப் பெண்கள் கறவை மாடுகள் வாங்குவதற்கும் முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். விதவைகளுக்கு எல்லா வகைகளிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டு, 18 வயதிலேயே அவர்கள் கணவனை இழந்து விட்டால் என்ன செய்ய முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். 18 வயதிலேயே கணவனை இழந்து விட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக சேவை இல்லங்கள் அமைத்து இருக்கிறோம். அந்த சேவை இல்லங்களில் அவர்கள் தங்கள் இரண்டு குழந்தைகளுடன் இருந்து தொழில் பயிற்சி பெறமுடியும். அவர்களுடைய குழந்தைகளும் பராமரிக்கப்படவேண்டும் என்ற முறையில் அந்த விதவைகளின் குழந்தைகளுக்கும் உணவு வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மற்ற துறைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கபடுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக மட்டுமல்லாமல், நேரடியாகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க



1982 மார்ச் 27] [திருமதி கோமதி சீனிவாசன்]

வும், அவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதை நான் குறிப்பிடவிரும்புகிறேன். அரசு மருத்துவமனைகளில் கூட இப்படிப்பட்ட நியதி கையாண்டு கொண்டு வருகிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். அங்கேயெல்லாம் ஆயா, உதவியாளர்கள், பெருக்குபவர்கள் துப்புறவுப் பணியாளர்கள், சமையல் செய்பவர், தண்ணீர் கொண்டு வருபவர்கள் என்று இப்படிப்பட்ட பதவிகளுக்கு அவர்கள் நேரடியாக—விதவைகள்—முன்னுரிமை அடிப்படையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பதை நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கத்தில் தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு வருமானம் பெறுவதற்கு வழியில்லாமல் அவதிப்படும் நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும், அவர்களுடைய வருமானம் பெரும் அளவிற்கு பெருக வேண்டும் என்கிற வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காகத் தான் தையல் பயிற்சி கூட்டுறவுச் சங்கங்கள் என்கிற வகையில் ஆங்காங்கு சங்கங்களை ஆரம்பித்து இருக்கிறோம். இப்போது சென்னையில் ஆரம்பித்து இருக்கிறோம். இன்னும் 4 இடங்களில் அத்தகைய பள்ளிகளை ஆரம்பிக்க இருக்கிறோம். இதன் வாயிலாக பிற துறையில் உள்ளவர்களும் அந்தச் சங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் அந்தச் சங்கத்தின் வாயிலாக தங்களுக்குத் தேவையான வேலைகளைக் கொடுத்து, அதன் மூலம் அந்தப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கமுடியும் என்பதோடு மட்டுமல்லாமல், வருமானம் பெருகுவதற்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்து வதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிடக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் தெரிவித்தார்கள். சென்னை, தளி, நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இன்னும் 36 இடங்களில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

குழந்தைகள் காப்பகங்களில் கொடுக்கப்படும் உணவு போதாமல் இருக்கிறது. அதை விரிவுபடுத்தவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். சமூக நலத்துறையால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்கள் மொத்தம் 4,343 இருக்கின்றன. இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு கேர் நிறுவனத்தால் கொடுக்கப்படும் பாலர் உணவு இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, அந்தக் குழந்தைகள் காப்பகங்களை வைத்து நடத்துவதற்கு கட்டிடங்கள் இலவசமாகக் கட்டிக்கொடுக்கிறோம். சென்ற ஆண்டு 20 கட்டிடங்கள் இலவசமாகக் கட்டிக் கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டும் 20 கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அநாதை இல்லங்களைப் பற்றிக் கூறினார்கள், 5 வயது முதல் 18 வயது வரை உள்ள சிறுவர்களுக்காக அரசு சார்பில் சென்னை, மதுரை, சேலம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 இடங்களில் அனாதை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகி ்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 250 சிறுவர்கள் வீதம் 1,000 சிறுவர்கள் சேர்க்கப் படலாம். ஆனால் தற்போது 4 இல்லங்களிலும் சேர்ந்து 825 சிறுவர்கள் தான் உள்ளனர். தனியார்கள் நடத்திவரும் அநாதை இல்லங்களுக்கு மானியம் கொடுக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்தார்கள். கண்டிப்பாக கொடுக்கத்தான் வேண்டும். கொடுத்துக் கொண்டும் இருக்கிறோம். தனியார்கள் அல்லது தொண்டு நிறுவனங்கள் தனிப்பட்ட வகையில் இப்படிப்பட்ட அநாதை ஆசிரமங்களை வைத்து நடத்தினால், அங்கேயிருக்கும் குழந்தைகள் நல்ல முறையில் வளரவேண்டும் என்பதற்காக அவர் களுக்கு பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக, இந்த அரசு அவர்களுக்கெல்லாம் மானியம் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 8–50.)

அடுத்து ஊனமுற்றவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கண் பார்வை இழந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பார்வையற்றவர்களுக்காக அரசு இன்னும் அதிக அளவில் முயற்சி கண் களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். கண்பார்வையற்றவர்களுக்கென அரசு சார்பில் 12 பள்ளிகளும் தனியார் சார்பில் 9 பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. கண் பார்வையற்றவர்கள் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் வேலைகிடைக்காமல் இருப்பவர் களுக்கு மாதம் ரூபாய் 50 உதவித் தொகையாக வழங்கப்படு கிறது. அத்தோடு மட்டும் அல்லாமல் இவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்களையும் அமைத்து வருகிறோம். அங்கே அவர்களுக்கு நெய்தல், சாக்கட்டி தயாரித்தல் போன்ற பல தொழில்களில் 6 மாத காலங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னை கிண்டி மற்றும் மதுரையில் உள்ள பொறியியல் கூடங்களில் இவர் களுக்கு இந்தப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிக் கூடங் களில் பொருத்துபவர் மற்றும் அடிநிலை இயந்திரம் இயக்கு பவர்களுக்கான பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு உறுப்பினர்கள் கருப்பையா, சுந்தரம், பலராமன் மற்றும் சிலரும், முதியோர் உதவித் தொகை, விவசாயத் தொழி லாளர்கள் உதவித் தொகை, விதவைப் பெண்கள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை ஆகியவைகள் உயர்த்தப் படவேண்டும் என்று கோரினார்கள். அத்தோடு அந்த உதவித் தொகை அவர்களுக்கு சீராக கிடைக்கவில்லை என்றும் அது நல்லமுறையில் கிடைக்க ஏதாவது வழி செய்யவேண்டும் என்றும் கூறினார்கள். முதியோர் உதவித் தொகை 65 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்கட்கும், 45 வயதுக்கு மேற் பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கும், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கும், 60 வயதுக்கு மேற் பட்ட ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்கப் படுகிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்த 35 ரூபாய் உதவித் தொகையை 60 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப் பினர்கள் கேட்டார்கள்.

நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திரா விட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில் அந்தக் தொகை 20 ரூபா யாகத்தான் இருந்தது. பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசை ஏற்படுத்திய பிறகு 20 ரூபாயாக இருந்ததை 25 ரூபாயாக உயர்த்தினோம். அத்தோடு மட்டுமல்லாமல் இந்த ஆண்டு, இந்த முதியோர்கள் பால், ஊனம் உற்றவர்கள் பால், விதவைகள் பால், மிகுந்த இரக்கம் வைத்து அவர்களுக்கு 10 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து அதை 35 ஆக ஆக்கியிருக்கிறோம், என்று சொன்னால் உண்மையிலேயே இந்த அரசு அவர்கள் பால் எவ்வளவு இரக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துக் கொள்வார்கள் என நம்புகிறேன். அதை 60 ஆக உயர்த்தவேண்டும் என்று சொன்னார்கள். வருடா வருடம் ஐந்து ஐந்து ரூபாயாகத்தான் ஒவ்வொரு அரசிலும் இந்த உதவித் தொகையினை ஏற்றுவார்கள். ஆனால் இந்த அரசு ஒரேயடியாக 10 ரூபாய் உயர்த்தி அந்த 25 ரூபாய் உதவித் தொகையை, 35 ரூபாயாக ஆக்கியிருக்கிறது என்பதையும் நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு மட்டும் அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் கருப் பையா அவர்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர வண்டிகள் வழங்கப்படுவதைக் குறித்துக் கேட்டார்கள். அவைகள் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். 1975 முதல் இதுவரை 5,725 மூன்று சக்கர சைக்கிள்கள், உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்கியுள்ளோம். 1981–82-ல் கூட ரூபாய் 15 லட்சம் செலவில் 1,000 மூன்று சக்கர வண்டிகளை வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களுக்கு நல்ல தரமான அரிசி தான் கொடுக்கவேண்டும் என்று அரசு முடிவு எடுத்து அதன்படி அளிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருப் தோடு, அதனை மேற்பார்வை பார்க்கச்செல்லும் அதிகாரி களும் நல்ல அரிசியே தரப்படுகிறதா என்பதைக் குறித்து கண் காணிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல் உடல் ஊனமுற்றவர்களுக்கு சுய வேலைத் திட்டத்தின் கீழ் ரூ. 21.10 லட்சத்தை அரசு மானியமாக வழங்கியிருக்கிறது. இதனால் பயன் பெற்றவர்கள் கிட்டத்தட்ட 5,000 பேர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத் திற்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல சமூக நலத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட இருக்கும் புதிய திட்டங்களில் ஏழை விதவைத் தாய்மார்களின் மகளிரின் திருமணத்திற்காக இதுவரை இந்த அரசு 1,000 ரூபாய் வழங்கிவருகிறது. இந்த திட்டத்தை ஏழை விதவைத் தாய்மார் களின் மகளிர் என்று மட்டும் இல்லாமல், எந்தவித ஆதரவும் இல்லாத பெண்களின் திருமணத்திற்காகவும் 1,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற வகையில் இந்த அரசு இந்த திட்டத்தை நீட்டிப்பதென ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மிக விரைவில் வெளிவரும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1982–83-லே கிராமப்புற மகளிருக்காக ரூபாய் 41 ஆயிரம் செலவில் ஒரு கிராமப் புற நூற்பாலை தொடங்கப் படும்.

1982–83-ல் பட்டு நூல் உற்பத்தி செய்யும் 2 கூட்டுறவுத் தொழிற் கூடங்கள் ரூபாய் 70,000 செலவில் தொடங்க இருக் கிறோம். இதனால் 50 மகளிருக்கு பயிற்சி தரப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 மகளிர் வேலை பெறு கின்ற வகையில் ரூ. 200 லட்சம் செலவில் மகளிர் வேலை வாய்ப்பு முன்னேற்றக் கழகம் ஒன்று நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

வரும் ஆண்டில் 4 சாக்கட்டி தொழிற்சங்கங்கள் உற்பத்தியைத் துவங்க இருக்கின்றன.

ஏழை எளிய மக்களின் அன்றாட உணவாகிய இட்லி, தோசை, தயிர்சாதம் போன்ற உணவுப் பொருள்கள் மலிவான விலையில் கிடைப்பதற்காகவும், அதே நேரத்தில் விதவைத் தாய் மார்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும் சிறு உணவுக் கூடங்கள் அமைப்பதற்கு விதவைத்தாய்மார்கள் ஊக்கு விக்கப்படுவார்கள்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் மாத்தூரில் அகதி மகளிருக் கென தனிவிடுதி நடத்த ரூ. 1·45 லட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டம் தற்போது 3 இடங் களில் நடைபெற்று வருகிறது. மேலும் 36 இடங்களுக்கு இந்த திட்டத்தினை விரிவுபடுத்த இருக்கிறோம். இதற்காக மத்திய அரசு ரூ. 19·93 இலட்சமும் மாநில அரசு ரூ. 30·70 லட்சமும் ஏற்கும்.

உலக வங்கி உதவியுடன் மதுரை மாவட்டத்தில் நடத்தப் படும் சத்துணவுத் திட்டத்தினை வரும் ஆண்டில் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கிறோம். இதற்காக ரூ. 363 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய குழந்தைகள் அனைவரும் ஒருவேளை உணவா வது உண்ணவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு 2 வயது முதல் 10 வயது வரையிலான ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தமிழகத்தில் தற்போது 4343 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. வரும் ஆண்டில் மேலும் 200 காப்பகங்கள் திறக்கவிருக்கிறோம்.

20 குழந்தைகள் நல காப்பகங்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்படும்.

முதன்முதலாக புத்தி சுவாதீனமில்லாத 100 ஏழைக் குழந் தைகளைப் பராமரிக்ககின்ற வகையில் ரூ. 2·62 லட்சம் செலவில் ஒரு நிலையம் அமைக்கப்படவிருக்கிறது.

நமது மாநிலத்தைச் சேர்ந்த உடல் ஊனமுற்றவர்கள் 60 பேர் அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டாவது இடத்தைப் பெற்று 58 பரிசுகளைத் தட்டி வந்துள்ளனர். அப்படி 58 பரிசுகள் பெற்றதோடு மட்டு மல்லாமல் தேசிய அளவிலே இரண்டாவது இடத்தைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் 5 பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட ரூ. 10இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனங்களை தடுக்கும் நோக்கத்துடன் 3 முகாம்கள் நடத்தப் பட்டு 1,20,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 7 இலட்சம் செலவு செய்துள்ளோம்.

கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில் காது கேளாத பெண் களுக்கென ரூ. 18 ஆயிரம் செலவில் ஒரு தனிப்பிரிவு ஆரம்பிக் கிறோம்.

உடல் ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ. 3·06 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில் ரூ. 2·50 லட்சம் செலவில் மதுரையில் காது கேளாத மாணவர்களுக்கென ஒரு பள்ளிக்கூடம்ஆரம்பிக் கிறோம்.

புதிய அரசுக் கட்டிடங்களில், உடல் ஊனமுற்றவர்களுக்கு வசதியாக 'லிப்ட்' வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாதம் ரூ. 25 ஆக வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகையினை 1—4—1982 முதல் ரூ. 35 ஆக அதிகரித்திருக் கிறோம். இதனால் சுமார் 2 லட்சம் பேர் பயனடைவர்.

உடல் ஊனமுற்றவர்களுக்காக அரசினால் செய்யப்படும் பல திட்டங்களைப் பற்றி, உடல் ஊனமுற்றவர்கக்குளும், பொதுமக் களுக்கும் விளங்கும் வகையில் ஒரு திரைப்படம் தயாரிக்க இருக் கிறது. என்பதைக் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக் களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்லவில்லை. என்னென்ன குறைபாடுகள் சொல்லி இருக்கிறார்களோ அதைப்பற்றி எல்லாம் நடவடிக்கை எடுத்து அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



(A) கோரிக்கை எண் 22. கால்நடை வளர்ப்பு.

திருவாளர்கள் சு. பாலன், எஸ். என். இராமசாமி ஆகிய வர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,19,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இரவு 9—00)

கோரிக்கை எண். 30—சமூக நலன்.

திருவாளர்கள் சு. பாலன், திருமதி தா. இராசாம்பாள், பொ. உத்திராபதி, எஸ்.என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,01,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் 29—3—1982 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 34. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டமுறைக்கான விதிகளும் ஆணைகளும்.

153. மீனவர் மேம்பாட்டு முகவரமைப்பு மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகவரமைப்புக்குச் சொந்தமான வண்டிக்குச் செலுத்த வேண்டிய வரிவிதிப்பிலிருந்து விலக் களிப்பது குறித்து 17—12 1981-ஆம் தேதியிட்டப்பெற்ற உள் (போக்குவரத்து-1) துறையின் 2998-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

154. 1978–79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

153. கோரிக்கை எண் 26—கைத்தறி மற்றும் பஞ்சாலை ஆகியவற்றின் கொள்கையும் திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

154. 1982–83 ஆம் ஆண்டு கைத்தறி துணி நூல் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

155. கோரிக்கை எண் 22—கால்நடைப் பராமரிப்புப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

156. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல் வினை முறைத் திட்டம், 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

157. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான பணிகள் பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

158. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு, 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

159. கோரிக்கை எண் 43—பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புதுவாழ்வும் (தமிழ், ஆங்கிலம்).

160. கோரிக்கை எண் 43—சிறு சேமிப்புத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

161. மறுவாழ்வுத் துறையின் 1982–83 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

162. கோரிக்கை எண் 55—பல்வகை—மூலதனச் செலவு பற்றிய கொள்கை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்புகள்.

(..95.......ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 26.

### கைத்தறியும் நெசவுத்தொழிலும்—கொள்கை விளக்கக் குறிப்பு.

**முன்னுரை :**

பாகம் I.— 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பாரத பிரதமரால் அறிவிக்கப்பட்ட துணிநூல் குறித்த புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ், கைத்தறிப் பிரிவிற்கு சிறப்பிடத்தைக் கொடுத்ததுடன் நாட்டின் துணித் தேவையைப் பூர்த்தி செய்வதில் கைத்தறித் துறைக்கு ஓர் உயர் முன்னுரிமையை அளித்துள்ளது. தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இம்மாநிலத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் ஒரு முக்கிய ஊரகத் தொழிலாக விளங்குவதால், மாநில அரசும் அதற்குரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. கைத்தறித் தொழிலுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு ரூ. 27.82 கோடி செலவிட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடி அளவிற்கு உயர்ந்தது. இதிலிருந்து மாநில அரசு கைத்தறித் தொழிலுக்கு உயர் முன்னுரிமை அளிப்பது தெளிவாகும். கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் பிரிவுகளில் கைத்தறித் தொழிலும் ஒன்றாக விளங்குகிறது.

**பாகம் II கைத்தறித் தொழில் வளர்ச்சி திட்டத்தின் நோக்கம்.**

நம் மாநில அரசின் கைத்தறி தொழில் வளர்ச்சித் திட்டங்களின் நோக்கம் இரண்டு ; அதாவது நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, நிரந்தர வருவாயையும் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் அம்சங்களைக் கொண்டு, கூட்டுறவுப் பிரிவின் கீழ், இரண்டு அடுக்கு முறையில் நெசவாளர் இயக்கம் இயங்கி வருகின்றது. கைத்தறி நெசவாளர்களைத் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினராகக் கொண்டு மேற்படி சங்கங்கள் அனைத்தும் தலைமைச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து செயலாற்றி வருகின்றது.

[1982 மார்ச் 27

1. தறி முதலாளிகளின் கீழ் கொத்தடிமை போல் வேலை செய்யும் நெசவாளர்களை அவர்களின் பிடியிலிருந்து விடுவித்து, அவர்களுக்கான புதிய கூட்டுறவு நெசவாளர் சங்கம் ஆரம்பித்து கூட்டுறவு அமைப்பின்கீழ் அதிக அளவு நெசவாளர்களைக் கொண்டு வருவது ; ஏற்கனவே இயங்கி வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்த்தல்.

2. சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்குப் பொது நெசவுக்கூடம் அமைப்பதற்கு நிதியுதவி அளித்தல்.

3. தற்போதுள்ள நலிந்த கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனப் பங்கை அதிகரிப்பதன் மூலமும், உறுப்பினர்களுக்குக் கூடுதலாக பங்கு மூலதனக் கடன் தொகை வழங்குவதன் மூலமும், நலிந்த சங்கங்களை ஊக்குவித்துப் புத்துயிர் அளித்தல்.

4. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான இடு பொருட்களைக் குறைந்த நியாயமான விலையில் அளித்தலும், தேவையான நிதி உதவிகளைச் செய்து கொடுத்தலும்.

5. மக்களின் மாறிவரும் ஆர்வங்களுக்கேற்பத் தொழில் நுட்ப முறையினை மேம்படுத்துவது, வடிவமைப்பு நிலையங்களை அமைப்பது ஆகியவற்றின் மூலமாக கைத்தறிப் பொருள்களின் தரத்தை உயர்த்துதல்.

6. தறிகள் நிறுவப்படுவதற்கு முன்பும், தறிகள் நிறுவப்பட்ட பின்பும் தேவையான வசதிகளை அளித்தல்.

7. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு மாநிலத்தில் உள்ள தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலதனத்தினை வலுப்படுத்த நிதியுதவி அளித்தல்.

8. கைத்தறித் துணியின் ஏற்றுமதியை அதிகப்படுத்துதல்.

9. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென கூட்டுறவு நெசவாளர் ''சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்'' மற்றும் ''நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்'' போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துதல்.

10. கைத்தறி நெசவாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு அளித்தல்.



1982 மார்ச் 27]

1. அதிக அளவில் கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல்.

தமிழகத்தில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.89 இலட்சம் (அதாவது 51 சதவீதம்) கைத்தறிகள் கூட்டுறவுச் சங்க அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன. இந்த 2.89 இலட்சம் தறிகள், 1,251 தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் திட்டத்தின்படி தேசீய குறியளவான 60 சதவீதத்துக்கு பதில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 67 சதவீத அளவிற்கு கைத்தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 80 புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தொடங்குவதன் மூலம் 25,300 தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (1981–82) 31—12—1981 வரை 26,000 நெசவாளர்கள் தனியார் துறையில் இருந்து விடுவிக்கப்பட்டு கூட்டுறவு அமைப்புக்குக் கொண்டுவரப்பட்டு உள்ளனர். அவர்கள் 64 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில், தறியில்லாத நெசவாளர்களின் நலனுக்காக 20 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன, இவற்றுள் 7 புதிய தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7,00 ஆதி திராவிட நெசவாளர்களின் நலனுக்கென்றே ஆரம்பிக்கப்பட உள்ளன. இத்திட்டம் ஆதி திராவிடர்களின் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் பொருட்டு வரையப்பட்ட தனி திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படுகிறது. தனியார் துறையில் உள்ள தறி முதலாளிகளிடம் வேலை செய்யும் நெசவாளர்களை அவர்களின் பிடியிலிருந்து விடுவித்து கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் முனைப்புத் திட்டம் ஒன்று 1982–83 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட உள்ளது. மாநில அரசு வங்கி அளிக்கும் தொகைக்கு ஈடாக நிதியுதவியை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இத்திட்டத்திற்குத் தேவையான கடனுதவியை வழங்க நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்துள்ளன. இதுவரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 47.20 இலட்சம் பங்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டுள்ளது. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவிடப்பட்டு உள்ளது. 20 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக ரூ. 80 இலட்சம் அளவிற்கு செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே இயங்கி வரும் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தினை வலுப்படுத்தவும் செயலிழந்த சங்கங்களை இயங்க வைக்கவும் இதுவரை அரசு பங்கு மூலதனமாக 1981–82ம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் முதலீடு செய்துள்ளது. இதைத் தவிர சிறப்பு நிதியுதவியாக 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இத் தொகையை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்றுக் கொள்ளும். ''நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அரசின் பங்கு'' என்ற திட்டத்திற்காக 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 30 இலட்சம் வழங்கக் கருதப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் கைத்தறி துணி உற்பத்தி 103 மில்லியன் மீட்டராகும். 1981–82 ஆம் ஆண்டில் 31—12—1981 வரை கைத்தறித்துணி உற்பத்தி 86 மில்லியன் மீட்டராகும். 1981–82 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 110 மில்லியன் மீட்டர் உற்பத்திக் குறியீட்டு அளவை முழுமையாக அடைய முடியும். 1982–83 ஆம் ஆண்டிற்கு 120 மில்லியன் மீட்டர் உற்பத்திக் குறியளவு நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

## 2. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வீதத்தில் நிதியுதவி

(1) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, வங்கி வட்டிவீதத்தைவிட $2\frac{1}{2}$ சதவீதம் குறைவான வட்டி வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி அளித்து வரும் சலுகை வீத நிதியுதவித் திட் டம், 1982–83-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1981–82ல் தொழிலியல் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தலைமைச் சங்கம் ஆகியவற்றை, பொறுத்தமட்டில் இந்திய ரிசர்வ் வங்கி ரூ.46.31 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித் துள்ளது. நிதி உதவும் வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி வட்டி வீதத்தைவிட $2\frac{1}{2}$ சதவீத குறைந்த வட்டி வீதத்தில் அளிக்கும் நிதி யினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கத் திற்கும் அளிப்பதற்கு ஏதுவாக, வட்டிக்கான மானியத் தொகை யாக மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு 3 சதவீதமும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு 1 சதவீதமும் வழக்கம் போல வழங்கப் பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 75 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

(2) மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை முலதனக் கடன் வசூலாகாததால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட (அரசு) 90 சதவிகிதம் வரை ஈடுசெய்ய நிதியுதவி அளிக்கின்றது. மீதமுள்ள தொகையை சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். 1981–82ஆம் ஆண்டில் ரூ. 10·00 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. 1982–83ஆம் ஆண்டிலும் இதே போன்றநிதியுதவியுடன்இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



## 3. கைத்தறி தொழில் நுட்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம்

(1) நுகர்வோரின் மாறிவரும் ஆர்வங்களுக்கேற்பவும், விருப் பத்திற்கு ஏற்பவும், புதிய கைத்தறித் துணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்து வரும் தேவைகளை ஈடு செய்யவும், கைத்தறி நெசவுத் தொழிலில் புதிய தொழில் முறைகளைக் கையாள வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, தறிகளைப் புதுப்பிக்கவும் நவீனப்படுத்தவும் அல்லது புதிய நவீன கைத்தறி களை வாங்கவும் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் ஊக்குவிக்கப் பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென்று 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 22·50 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையாகவும் மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் வழங்கப்படுகிறது.

(2) கைத்தறியில் புதிய தயாரிப்புகளையும் புதிய வடிவமைப்பு களையும் உருவாக்குவதற்கு இயலும் வகையில், கோ-ஆப் டெக்ஸ் இதுவரை மதுரை, திருச்சி சேலம், கோவை மற்றும் கடைய நல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்பு பணி நிலையங்களை அமைத்துள்ளது. இதற்காக அரசு மொத்தம் ரூ. 17·50 இலட்சம் நிதியுதவி வழங்கியது. மேற்கண்ட வடிவமைப்பு பணி நிலை யங்கள் ஆண்டுக்கு 1,100 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. மேற்படி வடிவமைப்புகள் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி அளவிற்கு உற்பத்தி பெருகி உள்ளது.

## 4. இடு பொருட்கள் வழங்குதல்

(அ) பருத்தி நூல் ;—3·17 இலட்சம் கதிர் திறன் கொண்ட நம் மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் 7,500 பேல்களைக் கொண்ட பல வகையான எண்களைக் கொண்ட பருத்தி நூல்களை திங்கள் தோறும் உற்பத்தி செய்கின்றன. பருத்தி நூல் வழங்குவது தொடர்பாகவும் கூட்டுறவு துறையின் கீழ் கூடுதலான கைத்தறிகள் கொண்டு வரப் படும் என்று எதிர்பார்க்கப்படுவதால் கூடுதல் நூல் தேவையைச் சரிக்கட்டவும் அரசு ரூ. 21 கோடி செலவில் ஒவ்வொன்றும் 25,000 கதிர்கள் திறன் கொண்ட மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவவும், மேலும் சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் ஏற்கனவே இயங்கி வரும் இரு கூட்டுறவு நூற்பாலைகளை ரூ. 9 கோடி செலவில் விரிவுபடுத்தவும் அரசு தேவையான முன் முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதைத் தவிர எட்டையபுரத்தில் 12,000 கதிர் திறன் கொண்ட

புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று மகாகவி பாரதியாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எட்டையபுரத்தில் கொண்டாடப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாவின் அங்கமாக ஆரம்பிக்க இருக்கும் பாரதி கூட்டுறவு நூற்பாலைக்கு 13-12-1981 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதாலும், ஏற்கனவே இயங்கி வரும் நூற்பாலைகளை விரிவுபடுத்துவதனாலும் கூடுதலாக 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்டா நூல்களை கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 22 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

அண்மையில் தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மோட்டா ரக நூல்கள், குறிப்பாக 20 நெ. மற்றும் 2/17 நெ. ரக நூல்கள் கிடைக்காமல் அவதியுற்றபொழுது, தேசிய பஞ்சாலை நிறுவனத்தின் ஆலைகள் மூலமாக நூலினைப் பெற்று அவர்களுக்குக் கிடைக்கச் செய்ததன் மூலம் மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டது. எதிர் காலத்தில் நூல் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அரசு "மூலப்பொருள் வங்கி" ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது. இவ்வங்கி மத்திய அரசும் மாநில அரசும் சமவிகிதத்தில் நிதியுதவியைக் கொண்டு அமைக்கப்படவிருக்கிறது. ஆரம்பத்தில் மத்திய அரசு ரூ. 50 இலட்சம் அளவிற்கு நிதியுதவியை அளிக்க முன் வந்துள்ளது. இருப்பினும் மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 1982-83-ஆம் ஆண்டு இந்த மூலப் பொருள் வங்கியை ஆரம்பிக்க தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

(ஆ) கோராப்பட்டு :—தற்சமயம், மாநிலத்தில் உள்ள பட்டு நெசவாளர்கள் கோராப்பட்டினை நியாயமான விலையில் பெறுவதில் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். நம்முடைய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, மத்திய அரசு சீனாவில் இருந்து கோராப்பட்டினை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய பட்டு கழகம் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ள கோராப்பட்டில் நம்மாநிலத்திற்கு 89 டன் இறக்குமதி பட்டினை ஒதுக்கி யுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கோராப்பட்டின் விலை ரூ. 450 ஆகும். உள்நாட்டு அங்காடியில் ஒரு கிலோ கோராப்பட்டு ரூ. 600 ஆக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.





5. கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி:

மத்திய அரசு நிதியுதவியுடன், தமிழ்நாடு அரசு காஞ்சிபுரம் ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும், கரூர், திருச்சிப்பாடி ஆகிய இடங்களில் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களும் அமைத்துள்ளது. இத்திட்டங்களின் நடைமுறைகள், இந்த அறிக்கையில் பாகம் III (3)-ல் விளக்கப்பட்டுள்ளன.

6. கைத்தறித் தொழிலுக்கு விற்பனை வசதி செய்தல்:

கோ-ஆப்டெக்ஸ் என்றழைக்கப்படும் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதனுடன் இணைந்த 1,251 தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50% அளவிற்கு விற்பனை வசதி செய்து கொடுக்கிறது. கோ-ஆப்டெக்ஸின் நடைமுறைகள் இந்த அறிக்கையில் பாகம் II (1) ல் விளக்கப்பட்டுள்ளன.

(அ) கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடி.—கைத்தறித் துணியின் விற்பனையைப் பெருக்குவதற்காக, அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் நுகர்வோருக்கு கைத்தறித் துணியில் தள்ளுபடிச் சலுகை அளிப்பதும் ஒன்றாகும். கடந்த சில ஆண்டுகளாக 30 நாட்களுக்கு 20% சிறப்பு தள்ளுபடியை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்ளுவது என்ற அடிப்படையில் வழங்கி வருகின்றது. இது தவிர, மாநில அரசு கைத்தறித் துணி விற்பனையில் 10% தள்ளுபடியைச் சிறப்பு காலங்களில் அதாவது அகில இந்திய கைத்தறி இருவார விழா காலங்களில் அளித்து வருகிறது. 1981–82-ஆம் ஆண்டில் தள்ளுபடி என்பதன்கீழ் மொத்த செலவு ரூ. 512·88 இலட்சமாகும். 1982–83ஆம் ஆண்டின் இச்செலவு ரூ. 544·00 இலட்சம் அளவிற்கு உயரக்கூடும்.

(ஆ) தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகரித்தல்.—தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலான விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்காக தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு 1981–82ஆம் ஆண்டில் அரசு பங்கு மூலதனமாக 110 லட்சம் ரூபாயை முதலீடு செய்துள்ளது.

(இ) சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.—

இத்திட்டத்தின்கீழ் சிறந்த கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக 1981–82ஆம் ஆண்டில் ரூ. 0·11 இலட்சத் தொகை அரசு ஒதுக்கியுள்ளது. 1982–83ஆம் ஆண்டிலும் அத்திட்டத்திற்கு இதே அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிலும் சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. நலத்திட்டங்கள்:

(அ) சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்.—கூட்டுறவு அமைப்
பின் கீழ் செயலாற்றி வரும் கைத்தறி நெசவாளர்களின் நலனை
முன்னிட்டு தமிழ்நாட்டில் ''' கூட்டுறவு கைத்தறி நெசவாளர்
சேமிப்பு, பாதுகாப்புத்திட்டம் '' என்ற பெயரில் ஒரு திட்டம்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை
67,000 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்
திட்டத்தில் இதுவரை சேர்ந்துள்ள ஒவ்வொரு நெசவாளரும்
தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசாவைச் சந்
தாத் தொகையாகக் கொடுக்கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு
அரசு 3 பைசா கொடுக்கிறது. அந்த மொத்த சேமிப்பு ஒரு
தனி நிதி கணக்காக வைத்து வரப்படுகின்றது, இதற்கு, அரசு
7 சதவீதம் வட்டி அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், சேர்ந்
துள்ள நெசவாளர் ஒருவர் இறந்து விட்டால், அவரது நியமன
தாரர் அவருடைய சேமிப்பு கணக்கில் உள்ள தொகையுடன் ஆயுள்
ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து ரூ. 3,000-ஐ பெறுவார். இத்
திட்டம் 1980 மார்ச் முதல் தேதியில் இருந்து செயலுக்கு வந்
துள்ளது. இத்தொகையை அதிகரிப்பதுபற்றி அரசு பரிசீலனை
செய்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்
டில் ரூ. 53.89 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
1982–83 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.30.00 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்.

1962 ஆம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்ட நெசவாளர்
வீட்டு வசதித் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 1979–80 ஆம்
ஆண்டிலிருந்து புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட, வீட்டு வசதித்
திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இத்திட்டத்தின்படி
வீட்டின் மொத்த மதிப்பு ரூ. 8,000-க்கு மேற்படக்கூடாது.
இதில் ரூ. 1,000, மாநில அரசால் உதவித் தொகையாகக் கொடுக்
கப்படுகிறது. வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் ஒவ்
வொரு வீட்டின் மதிப்பில் 70 சதவிகிதத்திற்கு மேற்படாமல்
கடன் வழங்குகிறது. அதாவது ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 5,600
அளவிற்கு கடன் அளிக்கப்படுகிறது. ஆறாம் ஐந்தாண்டு திட்டக்
காலத்தில் 5,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்
றில் 2,073 வீடுகள் கட்ட ஏற்கனவே திட்டமிடப்பட்டு, 1,054
வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன, வீட்டு வசதி, நகர்ப்பகுதி
வளர்ச்சிக் கழகம் இதுவரை ரூ. 59.79 இலட்சம் கடனுதவி
அளித்துள்ளது. மேலும் ரூ. 53.23 இலட்சம் அளவிற்குக் கடன்
வழங்குவது பற்றி அந்நிறுவனம் பரிசீலித்து வருகிறது. அரசு
அளிக்கும் ரூ. 1,000 உதவித்தொகையையும், வீட்டு வசதி நகர்ப்
பகுதி வளர்ச்சிக் கழகம் அதன் விதிமுறைப்படி அளிக்கும் கடனை
யும் பயன்படுத்தி 1982--83 ஆம் ஆண்டில், 1,000 வீடுகள் கட்டப்
படும்,





## பாகம் III.—கைத்தறித் துணி நூல் துறையில் இயங்கும் நிறுவனங்கள்

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும், இடு பொருட்டுகள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகவும், கைத்தறித்தொழிலின் சீரான வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதற்காகவும் தமிழ்நாடு அரசு பல நிறுவனங்களை அமைத்துள்ளது. இவற்றின் செயல் முறைகளும் திட்டங்களும் பின்வருமாறு :—

### (1) தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக் சங்கம் கோ-ஆப்டெக்ஸ்

'' கோ ஆப்டெக்ஸ் '' என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தலைமைச் சங்கமாகும். தமிழகத்திலுள்ள அனைத்து தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. விற்பனையைப் பெருக்குவதற்காக கூடுதலாக நடைமுறை மூலதனம் பெற இயலும் வகையில் 1981–82 இல் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் கூடுதலாக ரூ. 110 லட்சத்தை தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ளது. கோ ஆப்டெக்ஸின் செலுத்தப்பட்ட மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 11.64 கோடி ஆகும். இதில் அரசு பங்கு மூலதனம் மட்டும் ரூ. 10.87 கோடிஆகும். நூல், பட்டு, சரிகை, சாயம், வேதியல் பொருட்கள் மூலப்பொருள்களை வாங்கி அவற்றை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதும், அவை உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதியைப் பெருக்குவதுமே கோ ஆப்டெக்சின் முக்கிய நோக்கம் ஆகும். 1981–82-ல் ரிசர்வ் வங்கி சலுகை வட்டி விகிதத்தில் கோ ஆப்டெக்ஸிற்கு ரூ. 22.00 கோடி ரொக்கக் கடன் வழங்கி உள்ளது. இதற்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

கோ ஆப்டெக்ஸ், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 50 சதவீதம் உற்பத்தியினைக் கொள்முதல் செய்து வருகிறது. அரசின் கொள்கையின்படி, ரூ. 5 இலட்சத்திற்கு மேற்படாத ஆண்டு விற்பனை உள்ள சிறிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் உற்பத்தி முழுவதையும் கொள்முதல் செய்யும்படியும், மற்ற சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவீதத்தைக் கொள்முதல் செய்யும்படியும் கோ ஆப்டெக்ஸ் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 48 கோடி அளவிற்கு விற்பனையானது, 1981–82-ல் ரூ. 75 கோடி விற்பனை செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் விற்பனை அளவு ரூ. 100 கோடியாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[1982 மார்ச்.

(அ) புதிய விற்பனை நிலையங்களை தொடங்குதலும் ஏற்கனவே உள்ளவற்றை நவீனப் படுத்தலும்.

ஆறாம் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ரூ. 150 இலட்சம் செலவில் 400 புதிய விற்பனை நிலையங்களை தொடங்கவும் ஏற்கனவே உள்ள 300 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மலிவு விலையில் துணிகள் வழங்குதல்:

( சுமார் 12,000 கைத்தறிகள், ஜனதா ரக கைத்தறி வேட்டிகள், லுங்கிகள், புடவைகள் போன்ற மலிவுரகத் துணிகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் 15 மில்லியன் மீட்டர் மலிவுரகத்துணிகள் தயாரிக்கப்பட்டன, 1981–82 ஆம் ஆண்டில் 37 மில்லியன் மீட்டர் தயாரிக்கப்படவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, 1982–83 ஆம் ஆண்டில் 40 மில்லியன் மீட்டர் மலிவுரகத்துணி தயாரிக்கப்படவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

(இ) கடன் விற்பனைத் திட்டம்:

அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி துறைப்பணியாளர்களுக்கும் கோ ஆப்டெக்ஸ் மூலமாக கடனில் கைத்தறி துணிகளை விற்பனை செய்யும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. இக்கடன் விற்பனைத் திட்டத்திற்கு ஆதரவு அதிகமாக உள்ளது. இவ்வாண்டில் விற்பனை ரூ. 15.50 கோடியை எட்டியுள்ளது.

(2) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்:

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும் அதன் துணைத் தொழில்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து கடன் அளித்து வருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் இக்கழகம் வழங்கிய மொத்தக்கடன் வருமாறு :—

| ஆண்டு. | | | வழங்கப்பட்ட மொத்த கடன் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| 1978 | .. | .. | 119.30 |
| 1979 | .. | .. | 205.98 |
| 1980 ஆம் ஆண்டு மற்றும் 31–3–1981 வரையிலும் (15 மாதங்கள்). | | | 306.85 |

ஆறாம் ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள் கடன் அளவு ரூ. 450 இலட்சத்தை எட்டக்கூடும்.



1982 மார்ச் 27]

) கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்:

மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு வகுத்துள்ளது. சிவராமன் குழுவின் பரிந்துரையின் பேரில் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன. நெசவாளர்களுக்கு நூல் வழங்குதல், தறியில் போடுவதற்கு முன்பும், தறியில் இருந்து துணியை எடுத்த பிறகும் தேவையான வசதிகளை அளித்தல், கடன் உதவி செய்தல், ஒரே அமைப்பின் கீழ் விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதன்மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பும், மாதத்திற்கு ரூ. 300-க்கு நிரந்தர வருவாய்பெற உறுதியளிக்கவும், இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

31–12–1981 வரையில், ஆறு திட்டங்களில் 15,182 தறிகள் உள்ளன, அடுத்த இரண்டு ஆண்டுகளில், 22,000 தறிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டங்கள் தங்களின் எல்லைக்குள் இருக்கும் சில நலிந்த/செயலிழந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள தறிகளுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது. திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | சேர்க்கப் பட்ட தறிகள். | ஆண்டு உற்பத்தி மதிப்பு (1981 ஜனவரி முதல் டிசம்பர் வரை) (மீ. இலட்சத்தில்). | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. காஞ்சிபுரம் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம். | 4,170 | 11.22 | 75.77 |
| 2. ஈரோடு, தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம். | 3,974 | 11.12 | 68.17 |
| 3. சேலம் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம். | 2,567 | 12.11 | 71.47 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4. | மதுரை தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம். | 2,156 | 12.17 | 64.53 |
| 5. | கரூர் ஏற்றுமதி உற்பத்தித் திட்டம். | 942 | 5.71 | 50.80 |
| 6. | குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி உற்பத்தித் திட்டம். | 1,373 | 7.55 | 80.25 |
| | மொத்தம் | 15,182 | 59.88 | 410.99 |

கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், கோ-ஆப்டெக்ஸ் மூலம் தங்களுடைய விற்பனை வசதியைப் பெருக்கிக்கொள்ளவும் சலுகை அடிப்படையில் நிதியுதவி பெறும் பொருட்டும் இத் திட்டங்கள் அனைத்துமே தற்போது கூட்டுறவுத் திட்டங்களாகச் செயல்படுகின்றன.

(4) கூட்டுறவு நூற்பாலைகள்.

(அ) விரிவாக்கத் திட்டங்கள்:

இம் மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் 20 ஆம் எண் முதல் 120 ஆம் எண் வரை பல்வேறு ரக நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. 9 நூற்பாலைகள் ரூ. 12 கோடி செலவில் விரிவாக்கத் திட்டங்களை எடுத்துக் கொண்டு பணிகளை முடித்துள்ளன. விரிவு படுத்தப்பட்ட பிரிவுகள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. தற்போதுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த நிறுவனத்திறன் 3·17 இலட்சம் கதிர்கள் ஆகும்.

(ஆ) சேலத்தில் கைத்தறிக்குப் பாவு கஞ்சி போடும் எந்திரம்:

உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, கைத்தறிகளுக்குக் கஞ்சி போட்ட பாவுகள் வழங்குவதற்காக அரசிடமிருந்து ரூ. 21·00 இலட்சம் நிதியுதவி பெற்று, சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பாவு கஞ்சி போடும் எந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

(இ) நவீன சாயச்சாலை:

அரசின் நிதி உதவியுடன் மொத்தம் ரூ. 90 இலட்சம் செலவில் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகளை நிறுவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நவீனச் சாயச்சாலைகள் ஏற்கனவே செயல்படத் துவங்கி விட்டன. இவைகள், சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேட்டை கூட்டுறவு நூற்பாலைகளின் வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்ற நவீன சாலைகள் விரைவில் முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கும்.

(5) தமிழ்நாடு சரிகை நிறுவனம்—காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை நிறுவனம் இரண்டாவது பணி முறையைக் கொண்டுவந்தது, மாதம் ஒன்றுக்குத் தங்கச் சரிகை உற்பத்தியை 500 மார்க்குகளிலிருந்து 1000 மார்க்குகளாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த சரிகை முழுவதும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு சரிகை நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்க இயலும் வகையில் 1981–82 ஆம் ஆண்டில் மூலதனப்பங்கு கடன் வகையில் ரூ. 4·00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(6) தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை, ஈரோடு.

வெளுப்பாக்குதல், சாயமிடல், பளப்பளப்பாக்குதல், துணிகளில் அச்சிடுதல் ஆகிய வசதிகளைக்கொண்டு ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிப் பதனிடும் ஆலை இயங்கி வருகின்றது. பலதரப்பட்ட முறைகளில் உற்பத்தித் திறனை சமமாகப் பயன்படுத்தி ஒரு மாதத்திற்கு 10 இலட்சம் மீட்டர் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் இருந்து ரூ. 22·50 இலட்சம் நிதியுதவிப் பெற்று இந்த ஆலை விரிவாக்கத் திட்டத்தினை செயற்படுத்தியுள்ளது. துணிகளில் அச்சிடும் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகள், சட்டைத் துணிகள், சூட்டிங் துணிவகைகள், புடவைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. இவை சந்தையில் ஏராளமாக விற்பனை ஆகின்றன. கைத்தறிகளில் தயாரிக்கப்பட்ட இத்துணிகளை செயல் முறைப்படுத்துவதற்காக இவை இப்பொழுது பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்துச் செலவும், இதர செலவுகளும் அதிகமாகியுள்ளன. எனவே இவ்வாலை மத்திய அரசிடமிருந்து ரூ. 31·00 இலட்சம் நிதியுதவிப்பெற்று இந்த ஆலையில் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகளை செயல் முறைப்படுத்தும் பிரிவு ஒன்றை அமைத்து வருகிறது. 1982 ஜூன் மாதத்திற்குள் இந்த பிரிவு செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(7) தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம்

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம், புதுக்கோட்டையில் 25,260 நூற்பு கதிர்கள் திறனுள்ள காவேரி நூற்பு நெசவு ஆலையையும் 13,260 நூற்புக் கதிர்கள் திறனுள்ள முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையையும் எடுத்துக்கொண்டு அவற்றை நடத்தி வருகிறது. மேற்கண்ட ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ. 87•71 இலட்சம் நிதியுதவிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தைச் சேர்ந்த பருத்தி கொள் முதல் பிரிவு, 12 நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினையும் இரண்டு தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் ஆலைகளுக்கும் தேவைப்படும் பஞ்சினையும் வாங்க தற்போது ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிறுவனம் ரூ. 8·25 இலட்சம் செலவில் பருத்தி நூல் பரிசோதனைக் கூடத்தைக் கோயம்புத்தூரில் அமைத்துள்ளது. இச்சோதனைக் கூட்டுறவு நூற்பாலைகள் வாங்கும் பஞ்சு, தயாரிக்கும் நூலின் தரத்தைப் பரிசோதித்து தரத்தினை பராமரித்து வருகின்றது. தமிழ்நாட்டில் கைத்தறித்துறையில் பின்னடைந்துள்ள இடங்களில் விசைத்தறித் தொகுதிகளை அமைக்கும் திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அருப்புக்கோட்டை, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகிரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த சயங்கொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் விசைத்தறித் தொகுதிகள் அமைக்கப்பட்டு செயல்படத்துவங்கிவிட்டன. இதர விசைத்தறித் தொகுதிகளும், நிறுவப்பட்ட பின்பு 1,200 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். மேற்படி விசைத்தறித் தொகுதிகளுக்கு, உருளையில் பதப்படுத்திய நூல் வழங்குவதற்காக 1982–83-ஆம் ஆண்டில் ரூ. 22 இலட்சம் செலவில் இரண்டு பாவு கஞ்சிபோடும் நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையிலும், ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையிலும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளன. இது பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பாகம் IV: மூடப்பட்ட துணி ஆலைகளை மீண்டும் திறத்தல்:

1976–77-ம் ஆண்டில் மிகுந்த நெருக்கடி நிலை ஏற்பட்டதன் விளைவாக மூடப்பட்டிருந்த தனியார் துறையைச்சேர்ந்த 10 நலிந்த ஆலைகளுக்கு அரசு அளித்த உத்திரவாதத்தினால் இவைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இதில் இதுவரையில் ஏழு ஆலைகளை முந்திய நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்து விட்டு, அரசுதான் அளித்த உத்திரவாதத்தினையும் விலக்கிக் கொண்டு விட்டது. தற்சமயம், மது நூற்பு மற்றும் நெசவு ஆலை,



கோயம்புத்தூர், ஸ்ரீமீனாட்சி ஆலை, மதுரை மற்றும் பின்னி லிமிடெட், சென்னை ஆகிய மூன்று ஆலைகளுக்கு மட்டும் அரசு உத்திரவாதம் தொடர்ந்து அளித்து வருகிறது. மது நூற்பு மற்றும் நெசவு ஆலை, ஸ்ரீமீனாட்சி ஆலை ஆகிய இரண்டு ஆலைகளுக்கும் அளித்த உத்திரவாதத்தினை கூடிய விரைவில் அரசு திரும்பப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாகம் V: தனியார் துறையில் புதிதாக துணி ஆலைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள ஆலைகளை விரிவுபடுத்தல்

1981 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்கெனவே இயங்கி வரும் 4 ஆலைகளை விரிவு படுத்தவும், 21 புதிய ஆலைகளை ஆரம்பிக்கவும், துணிநூல் ஆணையர் அனுமதி அளித்துள்ளார். ஆரம்பிக்கப்படும் புதிய நூற்பாலைகளிலும் விரிவுப்படுத்தவிருக்கின்ற ஆலைகளிலும் 15,879 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

பாகம் VI: கைத்தறி நெசவாளர்களுக்கு சட்ட வகையான பாதுகாப்பு—

மாநில கைத்தறி வாரியம் அமைத்தல் :

தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வேறு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று சட்டமாகிவிட்டது.

மேற்படி புதிய சட்டத்தை செயல்படுத்தப்படுவதைக் கவனிக்கவும், தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கும் பொருட்டும், அரசு மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்க ஆலோசித்து வருகின்றது.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் இந்தப் புதிய சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு கடன் நிவாரண சட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ. 4,800-க்கு அதிகமில்லாதவர்கள் தாங்கள் பெற்றுள்ள கடன்களை ரத்து செய்வதற்கு வழியுண்டு. இச்சட்டத்தின்கீழ்

கைத்தறி நெசவாளர்களும் பயன் அடைய முடியும். இதனை அவர்கள் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டி, அவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட கைத்தறித்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது,

பாகம் VII: முடிவுரை:—

நமது மாநிலத்தில் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி அவற்றின் மூலம் தேவையான இடுபொருட்களைச் சீராக வழங்குதல், முறையான உற்பத்தியைத் திட்டமிட்டு செயற்படுத்துதல், பொருட்களின் தரத்தை உயர்த்துதல், தொழில் நுட்ப முறையை உயர்த்தி உற்பத்தியில் முன்னேற்றம் காணுதல், பதனிடும் வசதிகளைச் செய்து கொடுத்தல், அங்காடி வசதியினைப் பெருக்குதல் முதலியவற்றுக்கு வகை செய்ததால் கைத்தறித் தொழில் மூலம் மக்களுக்குத் தேவையான துணிகளைத் தொடர்ந்து வழங்குவதோடு, கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடிந்துள்ளது.



கைத்தறித்துணி நூல்துறையின் கீழ் இயங்கும் பிரிவுகளின் வளர்ச்சி.

| | 1978–79 | 1979 80 | 1980–81 | 1981–82 (9 மாதங்கள் 31–12–81 வரை). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| I. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்— | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை .. .. | 993 | 1,052 | 1,187 | 1,251 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 2.19 | 2.40 | 2.63 | 2.89 |
| 3. ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி (ரூ. லட்சத்தில்) .. .. | 44,85,50 | 52,00.00 | 72,27.00 | 61,12.00 |
| 4. விற்பனை (ரூ. லட்சத்தில்) .. | 53,42.51 | 60,00.00 | 75,41.00 | 76,36,000 |
| 5. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் லட்சத்தில்) .. .. | 16,96.71 | 16,95.00 | 20,72.00 | 24,31.00 |
| II. கோ-ஆப்டெக்ஸ்— | | | | |
| 1. கொள்முதல் (ரூ. லட்சத்தில்) | 27,51.00 | 29,00.00 | 39,27.00 | 43,75.00 |
| 2. விற்பனை (ரூ. லட்சத்தில்) .. | 34,80.00 | 35,00.00 | 48,00.00 | 48,90.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | 1978–79 | 1979–80 | 1980–81 | 9 மாதங்கள் (31–12–81 வரை). 1981–82 |
| 3. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) .. .. | 9,00.00 | 12.00.00 | 15,00.00 | 22,00.00 |
| 4. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை .. .. | 400 | 420 | 444 | 523 |
| III. கூட்டுறவு நூற்பாலைகள்— | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 2.62 | 3.14 | 3.14 | 3.17 |
| 2. போட்ட முதலீடு (ரூ. இலட்சத்தில்) .. .. .. | 20,23.80 | 20,63.27 | 22,50.00 | 22,65.47 |
| 3. உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) .. | 33,37.17 | 33,70.69 | 40,07.89 | 48,43.89 |
| 4. விற்பனை (ரூ. இலட்சத்தில்) .. | 34,23.56 | 32,84.26 | 39,95.61 | 47,72.81 |
| 5. பயன்படுத்தப்பட்டுள்ள மூலதனம் (ரூ. இலட்சத்தில்) .. | 9,25.00 | 9,35.00 | 10,00.00 | 10,45.80 |
| 6. கூட்டுறவு நூற்பு ஆலைகளின் | | | | |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 7. வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை .. .. .. | 8,794 | 9,646 | 9,800 | 101.28 |
| IV. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு. துணிகளை வெளுத்தல், சாயமிடல் (இலட்சம் மீட்டரில்) .. | 28.27 | 35.00 | 40.00 | 45.00 |
| V. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்— | | | | |
| 1. அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை .. .. | 1,742 | 2,253 | 2,500 | 1,471 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. இலட்சத்தில்) .. | 1,19.30 | 2,05.98 | 2,62.00 | 1,16.66 |
| VI. தமிழ்நாடு சரிகை நிறுவனம் காஞ்சிபுரம்— | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 1,640 | 2,540 | 4,000 | 5,400 |
| 2. விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) .. .. .. | 9.79 | 20.39 | 39.20 | 54.00 |

## இணைப்புகள்.

(.....143 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண். 27—கால்நடை வளர்ப்பு—

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### I. முன்னுரை.

கிராமங்களில் வாழும் எண்ணிறைந்த மக்களின் முன்னேற்றத்தில் கால்நடை பராமரிப்பு முக்கியத்துவம் வகிக்கிறது. இது சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள இதர பிரிவினரின் உபரி வருமானத்தை அதிகரிக்கவும், ஏதுவாக உள்ளது.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக இறைச்சி, பால், முட்டை போன்ற மக்களுக்குத் தேவையான சத்துணவை கால்நடைப் பராமரிப்பு அளிக்கிறது. மேலும் வேளாண்மைக்குத் தேவையான உரம் மற்றும் உழைப்பு சக்தியையும் கிராமப் போக்குவரத்துக்கான வசதிகளையும் அளிக்கிறது. பெரும்பான்மையான கிராம மக்களுக்கு இது ஒரு உப தொழிலாக உள்ளது. கால்நடை பராமரிப்பின் வளர்ச்சி, மற்றும் முன்னேற்றம், உணவுபற்றாக் குறை, சத்துணவுக் குறைவு, வேலை இல்லாத் திண்டாட்டம், குறைந்த வாழ்க்கைத் தரம் போன்ற பல்வேறு சவால்களை சமாளிக்க முடியும்.

இத்தகையத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு அதற்குத் தேவையான முன் வசதிகள் அளிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். மாட்டின வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அதிக பால் உற்பத்தித் திறன் அளிக்கும் சிறந்த பொலிகாளைகள், பால் பண்ணை விஸ்தரிப்புப் பணிகள், பசுந் தீவனப் பயிர், உற்பத்தியை அதிகரித்தல் போன்ற விஞ்ஞான ரீதியான வசதிகளும், பால் விற்பனை வசதிகள் போன்றவைகளும் அளிக்கப்பட்டால் அன்றி பசுவின் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளை ஒரு போதும் அடைய முடியாது. ஆகவே, இவ்வசதிகளை அளிக்கும் நோக்குடன் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களும், கேந்திர கிராமத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைமேம்பாட்டுத் திட்டம், கால்நடை பராமரிப்பு சிறப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலம் கன்று பராமரிப்பு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் போன்ற எண்ணிறைந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



### II. வளர்ப்புத்திட்டங்கள்.

#### (1) பொதுவானது.

கால்நடை செல்வத்தின் வளர்ச்சியே நர்ட்டின் முன்னேற்றத்தின் அடையாளமாகும். எனவே, கால்நடை உற்பத்தியின் ஏற்றத்திற்காக கால்நடை பராமரிப்புத்துறை பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள இம் முயற்சிகள் அனைத்தும், பால் இறைச்சி, முட்டை மற்றும், உழைப்புத்திறன் போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தரமுள்ள பசுவினம், ஆட்டினம், பன்றியினம் மற்றும் கோழியினம் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கே ஆகும். கால்நடை வளர்ப்போரில் பெரும்பான்மையினர் சிறுநில, குறுநில விவசாயிகள், மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆவர், எனவே பொருளாதாரத்தில் பின் தங்கிய சமுதாயத்தினரின் நலனுக்காக கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நவீன தொழில் நுட்பம் மற்றும் செயல்முறை போன்றவைகளின் பலனை இவர்கள் பெறும்படியாகப் பல்வேறு திட்டங்களின் மூலம் ஆவன செய்யப்படுகின்றது. கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் சமுதாயத்தில் பின்தங்கியோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் அவர் தம் துயர் துடைக்க உதவுகின்றன. இத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கம் பின்வருமாறு :—

#### 2. கேந்திர கிராமத் திட்டம்.

கலப்பின விருத்தி அல்லது தூய இன விருத்தி மூலம் குறிப்பிட்டப் பகுதிகளில் பால் மற்றும் உழைப்பு வர்க்க மாடு, எருமைகளின் தரம் உயர்த்துவதே கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் 10,000 பசுக்கள் மற்றும் எருமைகள் உள்ள பகுதியை உள்ளடக்கி செயல்படுத்தப்படுகிறது. இப்பகுதிகளில் உள்ள தரமற்ற காளைகள் ஆண்மை நீக்கம் செய்யப்படுவதுடன் அனுமதிக்கப்பட்ட காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்படுகின்றது.

கேந்திர கிராமப் பகுதிகளில் இனவிருத்தி செய்யப்படுவதுடன் அதனால் உண்டாகும் விளைவுகளை கவனிப்பதற்கான நடவடிக்கையும் கூட தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. சிறந்த மரபுள்ள கன்றுகள் உருவாக்கப்படுவதுடன், கன்று பராமரிப்பு, பசுந்தீவன உற்பத்தி, தரமற்ற காளைகளுக்கு காயடித்தல், சிகிச்சை மற்றும் தடுப்புப் பணிகள் போன்றவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறந்த காளைகளுக்குப் பிறந்த நல்ல கன்றுகளை விற்று விடுவதை தவிர்ப்பதற்காகவும், கன்றுகளை நன்கு பராமரிப்பதற்கு ஊக்கமளிக்கவும் கன்று மானியம் வழங்கப்படுகின்றது.

தற்பொழுது 620 கிளை நிலையங்களுடன் கூடிய 62 கேந்திர கிராம வட்டாரங்கள் மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றது.

### (3) தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்.

விஞ்ஞான ரீதியான இனவிருத்தி வசதிகள், பாரமரிப்பு முறைகள், நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைப் பணிகள் ஆகியவற்றை அளித்து, பால் உற்பத்தியை பெருக்குவதே தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு திட்டப்பகுதியிலும் இனவிருத்திக்கேற்ற 50,000 பசுக்களும், எருமைகளும் உள்ளன. மதுரை கால்நடை அபிவிருத்தி திட்டம் மட்டும் இனவிருத்திக்கான 1,00,000 பசுக்களையும், எருமைகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்தின் கீழும், இரண்டு மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களும், அவை ஒவ்வொன்றின் கீழும் 25 கிளை நிலையங்களும் உள்ளன. மதுரை கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மட்டும் 4 மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் உள்ளன.

மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களில் தரமுள்ள பொலிகாளைகள் பராமரிக்கப்படுகின்றன. இந்நிலையங்களில் சேகரிக்கப்படும் விந்து, செயற்கை முறை இனவிருத்திப் பணிக்காக, கிளை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கிளை நிலையங்களில் கால்நடை உரிமையாளர்களின் தேவைகளை கவனிக்கின்றன. இந்நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவர்கள் செயற்கைமுறை இனவிருத்திப் பணிகளுடன், கால்நடைகளுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தல் மற்றும் பசும் தீவன உற்பத்தி பணி ஆகியவற்றையும் கவனிக்கின்றனர்.

விவசாயிகளும், கால்நடை வளர்ப்போர்களும், பசும் தீவன உற்பத்தி செய்யும் பொருட்டு ஊக்குவிக்கப்படுவதுடன், அதற்கான மானியமும், கடன் உதவியும் அளிக்கப்படுகிறது.

தற்போது இத்தகைய 9 திட்டங்கள் முறையே மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பன்ருட்டி, தாம்பரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பன்ருட்டி, தாம்பரம் ஆகிய இடங்களில் இத்திட்டம் 1981–82 -ல் துவக்கப்பட்டது.



### (4) பொலிகாளை நிலையங்களும் உறை விந்து தொழில் நுட்பமும்.

மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் பல்வேறு பகுதிகளில் 59 பொலிகாளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் அயல் இனங்களான பிரிஷியன், ஜெர்ஸி, ப்ரவுன் ஸ்விஸ், ரெட்டேன் போன்றவைகளும், இந்திய இனங்களான, சிந்தி, தார்ப்பார்க்கர், காங்கேயம், முர்ரா மற்றும் அயல் இனக் கலப்பினங்களும் பராமரிக்கப்படுகின்றன. இந்நிலையங்களில் சேகரிக்கப்படும் விந்துத் துறையின் கீழுள்ள செயற்கை முறை இன விருத்தி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

உறைவிந்து தொழில் நுட்ப திட்டத்தின் கீழ் படிப்படியாக திரவ விந்து முறை நீக்கப்பட்டு, உறை விந்து முறை பயன் படுத்தப்படும்.

இத்திட்டம் தற்பொழுது கால்நடைப் பராமரிப்புத் துறையில் குழந்தை பருவத்தில் உள்ளது. முதற்கட்டமாக ..சதாப்பேட்டை, காஞ்சீபுரம, இராணிப்பேட்டை, வேலூர், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் உள்ள 5 மருத்துவ நிலையங்களிலும் தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிப் பகுதி நிவாரண திட்டத்தின் கீழும் உறை விந்து முறை செயற்படுத்தப்படுகிறது. மேலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அபிசேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் உறை விந்து வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டிடப் பணிகள் முடிவுற்றதும் இந்நிலையங்கள் செயல்பட ஆரம்பிக்கும். இத்தொழில் நுட்பமுறை நவீனமானதால் இதில் ஈடுபடும் அலுவலர்களுக்கு இத் தொழில் நுட்பத்தில் தக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஆகவே, 1980–81-ல் மாட்டுப்பட்டியில் 34 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் 75 கால்நடை ஆய்வாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டன. 1981–82-ல் 2.60 இலட்சம் ரூபாய் செலவில் 106 கால்நடை உதவி மருத்துவர் களுக்கும் 240 கால்நடை ஆய்வாளர்களுக்கும் பயிற்சி அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### (5) வம்சாவழி ஆய்வுத் திட்டம்.

1972-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட வம்சாவழி ஆய்வுத் திட்டம் ஹோசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் சிவப்பு சிந்தியின பொலிகாளைகளின் உற்பத்தி ஆற்றலை ஆய்வு செய்வதாகும். இத்திட்டத்தின் கீழுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பொலிகாளைகளிலிருந்து பெங்களூரிலுள்ள மத்திய அரசின் பண்ணையினர் விந்து சேகரித்து பதப்படுத்தி, பத்திரப்படுத்தி வருகின்றனர். 2-ம், 3-ம் தொகுதி

களிலுள்ள காளைகளின் பெண் கன்றுகள் முதல் கறவை நிலையிலுள்ளன. இதன் மூலம் தந்தை மதிப்பீடு அளவிடப்பட்டு அவைகள் சிறந்த காளைகள் என நிரூபிக்கப்பட்டுள்ளன. இக்காளைகள் சிப்பு சிந்தியின அபிவிருத்திக்காகவும், நாட்டினங்களின் தரம் உயர்த்தும் பொருட்டும் துறை பொலிகாளை நிலையங்களுக்கு விரைவில் மாற்றப்படும்.

இத்தகைய ஆய்வுத் திட்டம் ஒன்று முர்ரா இன காளைகளுக்காக 1980–81-ல் ஓரத்த நாட்டிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ஏற்படுத்தப்பட்டது. இதற்காக இதுகாறும் 100 முர்ரா மாடுகள் வாங்கப்பட்டுள்ளன.

### (6) கால்நடை கண்காட்சிகளும் விளக்கக்காட்சிகளும்.

கால்நடைப் பராமரிப்பில் நவீன முறைகளை விவசாயிகளுக்கு விளக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கால்நடை கண்காட்சியும் விளக்கக்காட்சியும் அரசால் நடத்தப்படுகின்றன. இக்காட்சிகள் பொது மக்களின் உள்ளங்களில் கால்நடைப் பராமரிப்பின் ஆவலை தோற்றுவிப்பதுடன் கால்நடை வளர்ப்போரிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்குகின்றன. 1980–81-ல் தருமபுரி மாவட்டத்திலுள்ள காவேரிப்பட்டினத்தில் கால்நடை மற்றும் கோழி கண்காட்சியும் கோயம்புத்தூரில் மண்டல கால்நடை கண்காட்சியும் நடைபெற்றன. இது தவிர தீவிர கால்நடை அவிருத்தி திட்டப் பகுதிகளிலும் கேந்திர கிராம திட்டப் பகுதிகளிலும் கன்று பேரணிகளும் நடத்தப்படுகின்றன. 1980–81-ல் தமிழகத்தில் 50 கன்று பேரணிகள் நடைபெற்றன.

### (7) ஆடு வளர்ப்பு.

கால்நடை வளர்ப்போர் அனைவரிலும் ஆடு வளர்ப்போரே கிராமப்புறங்களிலுள்ள மிகவும் நலிந்த பிரிவினர் ஆவர். எனவே, ஆடு பராமரிப்புக்கு தனி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆடு வளர்ப்புத் திட்டங்கள் அனைத்தும் கிராமப்புறங்களிலும், மலைப்பகுதிகளிலும் வாழும் நலிந்த சமுதாயத்தினரின் வருமானத்தைஅதிகரிக்கும்வகையில் திட்டப்படுகின்றன சமவெளிப் பகுதிகளில் இறைச்சி வர்க்க ஆடுகளும் மலைப்பகுதிகளில் கம்பள வர்க்க ஆடுகளும் பராமரிக்கப்படுகின்றன. சிறிய ஆடு வளர்ப்பு நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலம் சிறுநில, குறுநில விவசாயிகளுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் சுயவேலை வாய்ப்புகள் அளிக்கும்படி சிறப்பு கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் உதவுகின்றன. இத்திட்டங்களின் மூலம் தொழிற்நுட்ப உதவியும் மானியமும் வழங்கப்படுகின்றன.



சின்னசேலத்திலும், சாத்தூரிலும் இயங்கும் ஆட்டுப்பண்ணைகளிலும், மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ள 4 ஆடு வளர்ப்பு நிலையங்களிலும், கீழக்கரிசல், இராமநாதபுரம், வெள்ளை, வேம்பூர், மேச்சேரி, மாண்டியா போன்ற ஆட்டினங்கள் வளர்க்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்கள் மூலம் இனவிருத்தி செய்யப்படுகின்றன. மேச்சேரி, மாண்டியா கடாக்களைக் கொண்டு நாட்டின் ஆடுகளின் தரம் உயர்த்தப்படுகின்றன. ஹொசூர் பண்ணையில் கே. ரிடேல், மாண்டியா போன்ற இனங்களுடன் கலப்பின விருத்தி செய்வது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. ஆடு வளர்ப்போர் கல்வி அறிவற்றவர்களாக இருப்பதால், எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு முன்பு, முதலாவது அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமாகும். எனவே, இந்நோக்குடன் கிராமப் பகுதிகளில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தற்பொழுது வேளாண்மை மறுநிதி கழகத் திட்டத்தின் கீழ் 39 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர கால்நடை சிறப்புத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 548 ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

### (8) குடற்புழு நீக்கம் செய்வதின் மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகரித்தல்.

ஆடு வளர்ப்புப் பொறுத்த மட்டில், ஆடுகளில் உள்ள உண்ணியும் குடற்புழுக்களும் ஒழுங்கான வரையறுக்கப்பட்ட இடைவெளியில் நீக்கப்பட வேண்டும். இவ்விதம் செய்வதால் ஆடுகளின் வளர்ச்சி வீதம் அதிகரிப்பதுடன் இறைச்சி உற்பத்தியும் அதிகரிக்கிறது. மேலும், ஆடுகளின் தோலின் தரம் மேம்படுத்தப்பட்டு அதன் மூலம் கூடுதல் அன்னியச் செலவாணி கிடைக்கும். எனவே குடற்புழு நீக்குவதன் மூலம் இறைச்சி உற்பத்தியும் அதிகரிக்கும் திட்டம் ஒன்று 1980–81-ல் 3.75 லட்சம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் 96,184 ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 1981–82-ல் 3.75 லட்சம் ரூபாய் செலவில் திருநெல்வேலி, வட ஆற்காடு தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

### (9) புதுக்கோட்டையில் வெள்ளாடு வனர்ப்புப் பகுதி ஒன்று ஏற்படுத்துதல்.

வெள்ளாடு ஏழை மனிதனின் பசு எனக் கருதப்படுகிறது. ஒழுங்கான விஞ்ஞான ரீதியில் வெள்ளாடுகளை பராமரித்தால் இறைச்சி உற்பத்திப் பெருகுவதுடன் கணிசமான அளவு பால்

உற்பத்தியும் பெருகும். ஆட்டுத்தோல், உரோமம் முதலியவை
மூலம் அந்நியச் செலாவணியும் ஈட்டலாம். எனவே, மாநிலத்தி
லுள்ள பல்வேறு வெள்ளாடு இனங்களில் தரத்தை உயர்த்தும்
நோக்குடன் புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப்
பண்ணையில் வெள்ளாடு வளர்ப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்
பட்டது.

இதுகாறும் 456 தெலச்சேரி வெள்ளாடுகளும் 30 ஜமுனாபாரி
வெள்ளாடுகளும் வாங்கப்பட்டு இந்நிலையத்தில் பராமரிக்கப்
படுகின்றன. இதனை 5 வருட காலத்திற்குள் 4,000 வெள்ளாடு
களாக உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்
கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சி
யாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு இந்த
ஆடுகள் வழங்கப்படும்.

ஆடு வளர்ப்பு இம்மாநிலத்தில் முக்கியத்துவம் பெற்று
வருவதால் 1981–82-ல் 600 விவசாயிகளுக்கு ஆடு பராமரிப்பதில்
குறுகிய கால பயிற்சி அளிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
நவீன ஆடு வளர்ப்பு முறைகளில் சாத்தூர் மற்றும் சின்னசேலம்
ஆட்டுப் பண்ணைகளில் இப்பயிற்சி அளிக்கப்படும். இதுவரை
235 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் தமிழகத்தில் 47.50 கோடி
ரூபாய் செலவில் பெரிய அளவிலான ஆட்டினப் பெருக்கத்
திட்டத்தை உருவாக்கும் திட்டம் ஒன்றை கால்நடைப் பராமரிப்பு
இயக்குநர் தயாரித்திருக்கிறார். ஒரு சங்கத்தில் 100 அங்கத்தினர்
களோடு ஒவ்வொரு மாவட்டத்தில் 30 சங்கங்கள் வீதம் 11
மாவட்டங்களில் மொத்தம் 330 ஆட்டினப் பெருக்கக் கூட்டுறவுச்
சங்கங்கள் நிறுவத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பம்பாயிலுள்ள வேளாண்மை நிதி இணையத் திட்டம் இத்
திட்டம் மறு ஆய்வு செய்யப்படவும் திட்ட அறிக்கை தயாரிக்கப்
படவும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்திற்கு இதற்
கான ஆலோசனைக் கட்டணம் 2.3 இலட்சமாகும்.

### (10) கோழி வளர்ப்பு.

ஹோசூர், காட்டுப்பாக்கம் ஆகிய இரு இடங்களில் குஞ்சு
பொரிக்கும் நிலையங்களும் 22 கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு
நிலையங்களும் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இந்நிலையங்
களில் வெள்ளை லெகான் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.
தரமுள்ள கோழிகளும், குஞ்சு பொரிக்கும் முட்டைகளும்,
இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்
நிலையங்கள் கிராமப்புற மக்கள் கொல்லைப்புற கோழி வளர்ப்பு
நிலையங்களை துவங்குவதற்கு ஊக்கமளிப்பதுடன், தகுந்த



ஆலோசனையும் வழங்குகின்றது. சிறப்புக் கால்நடைப் பராமரிப்பு
திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த
பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்
களின் கீழ் கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தி லாபகர
மான சுயவேலை வாய்ப்புக்கள் பெற்றிட சிறு விவசாயிகள்,
குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள்
ஆகியோருக்கு உதவியளிக்கப்படுகின்றன.

எளிய மக்களும், கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்து
வதில் ஊக்கமளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்
கடன் உதவி பெற ஆவன செய்யப்படுகின்றன. தற்பொழுது
நம் மாநிலத்தில் 9 கோழி வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள்
உள்ளன.

தற்பொழுது இயங்கும் 5 கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலை
யங்களுக்குக் கூடுதல் வசதியளிக்கும் பொருட்டு 2.50 லட்சம்
ரூபாய்க்கு 1980–81-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
இதன்மூலம் ஒவ்வொரு ஆண்டும் தற்காலிக கோழி கொட்டகை
களுக்குப் பதிலாக நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்படும்.

1981–82-ல் ரூ. 2.77 இலட்சம் செலவில் கோழி நோய்
கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று ஈரோட்டில் ஏற்படுத்தப்
பட்டுள்ளது. கோழி நோயினால் ஏற்படும் பெரு நஷ்டத்தை
தவிர்ப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படியான
வசதிகள் இந்த ஆய்வுக் கூடத்தில் ஏற்படுத்தப்படும்.

### (11) பன்றி வளர்ப்பு.

பன்றி வளர்ப்போர் சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்
பட்டவர் ஆவர். புரதச் சத்துப் பற்றாக்குறையைப் போக்கு
வதில் பன்றி வளர்ப்பு பெரும் பங்கை வகிக்கிறது. தற்போது
6 பன்றி வளர்ப்பு நிலையங்கள் உள்ளன. இவைகளில்
வெள்ளை யார்க்ஷையர் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன.
நாட்டினப் பன்றிகளின் தரம் உயர்த்துவதற்காகச் சிறந்தப்
பன்றிகள் இந்நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

பன்றி வளர்ப்போரின் நலனுக்காக 1981–82-ல் 0.94
இலட்சம் ரூபாய் செலவில் பன்றி வளர்க்கும் திட்டம் ஒன்றிற்கு
ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வட
ஆற்காடு, சேலம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில்
தேர்ந்தெடுக்கப்பட்ட 125 பன்றி வளர்ப்போர்களுக்கு தலா ஒரு
ஆண் பன்றி வீதம் இலவசமாக வழங்கப்படும். இதற்கென
நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். பன்றி வாங்கு
வதற்காக குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பன்றிகளை
பராமரிக்க ஒரு வருடக் காலத்திற்கு மாதத்திற்கு 25 ரூபாய்
வீதம் மானியமாக வழங்கப்படும்.

## (12) நாய் வளர்ப்பு.

இராஜபாளையம், கோம்பை நாய்கள் தமிழகத்தின் புகழ்
வாய்ந்த நாயினங்களாகும். இவ்வினங்கள் அழியும் நிலையில்
உள்ளன. எனவே இவ்வினத்தைப் பாதுகாக்கும் நோக்குடன்
நாய் வளர்ப்பு நிலையம் ஒன்று சென்னை நகரத்தில் துவங்கப்
பட்டுள்ளது. இதற்காக இதுவரை 10 இராஜபாளையம்
குட்டிகளும், 9 கோம்பைக் குட்டிகளும் வாங்கப்பட்டுள்ளன.
வருங்காலங்களில் இந்நிலையம் காவல்துறை மற்றும் பொது
மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்.

## (13) தீவனப் பயிர் அபிவிருத்தி

கால்நடை வளர்ப்பில் கவனிக்கப்பட வேண்டியவற்றில்
முக்கியமானது பசுந்தீவன உற்பத்தியாகும். இது பால் உற்பத்தி
செலவைக் குறைப்பதுடன் சராசரி பால் உற்பத்தியை கணிசமாக
உயர்த்தும். தற்போதுள்ள 4 தீவன உற்பத்தி நிலையங்களால்
பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்ய இயலவில்லை.
எனவே 1980–81-ல் 2.93 இலட்சம் ரூபாய் செலவில் ஈச்சங்
கோட்டையிலுள்ள அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணையில்
பசுந்தீவன விதை உற்பத்தி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்
பட்டது. 1981–82-ல் மற்றொரு நிலையம் செட்டிநாட்டிலுள்ள
மாவட்ட கால்நடைப் பண்ணையில் 4.26 லட்சம் செலவில்
ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத் பண்ணைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்
பொருட்டு பண்ணைகள் அனைத்திலும் பசுந்தீவன உற்பத்தி
செய்யப்படுகிறது. இப்பண்ணைகளிலிருந்து புல் நாற்றுக்களும்,
விதைகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

தற்பொழுதுள்ள 9 தீவிர கால் நடை அபிவிருத்தி திட்டங்
களின் கீழ் புல் நாற்றுக்களும், விதைகளும் நியாய விலையில்
கிடைக்கும்படி செய்வதுடன் இலவச ஆலோசனையும் அளிக்கப்
படுகிறது. மாதிரி பாத்திகள் ஏற்படுத்துதல், பசுந்தீவனப் பயிர்
செய்தல், கிணறுகள் தோண்டுதல், புல்நாற்றுகள் வழங்குதல்
போன்றவற்றை ஊக்குவிக்கும் பொருட்டும் மானியம் வழங்கப்
படுகிறது. பசுந்தீவன உற்பத்திக்காக 4 சதவீதம் மானியமாக
அளிக்கப்படுகிறது.



## (14) சிறப்புத் திட்டங்கள்.

### (1) கால்நடைப் பராமரிப்பு சிறப்புத் திட்டம்:

கன்று பராமரித்தல், ஆடு மற்றும் கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் பொருட்டு, இத்திட்டத்தின் மூலம் சிறு நில, குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. இதன் கீழ் 3 பிரிவுகள் உண்டு. இவை கீழ்க்கண்ட மாவட்டங்களில் வெவ்வேறு நிர்வாகத்தால் செயல்படுத்தப்படுகின்றன:—

| திட்டம். | நிர்வாகம். | மாவட்டங்கள். |
|---|---|---|
| (அ) ஆடு உற்பத்தித் திட்டம். | கால்நடைப் பராமரிப்பு துறை. | சேலம், வடஆற்காடு, திருநெல்வேலி. |
| (ஆ) கன்று வளர்ப்பு. | தமிழ்நாடு பால்வள அபிவிருத்தி நிறுவனம். | சேலம், வடஆற்காடு, மதுரை, தென்னாற்காடு, கோயம்புத்தூர். |
| (இ) கோழி உற்பத்தி. | தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம். | சேலம், வடஆற்காடு, மதுரை, செங்கல்பட்டு. |

கன்று பராமரிப்புத் திட்டத்தின் கீழ் சிறு, குறுநில விவசாயி ஒருவருக்கு ரூ. 960 மானியமாகவும், மீதமுள்ள ரூ. 960 கடனாகவும் கொடுக்கப்படுகிறது. வேளாண்மைத் தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 1,280 மானியமாகவும் ரூ. 640 கடனாகவும் கொடுக்கப்படுகிறது.

ஆடு உற்பத்தி திட்டத்தின் கீழ் 20 பெட்டை ஆடுகளும், ஒரு கடாவும் அடங்கிய நிலையம் ஒன்றுக்கு ஆகும் மொத்தத் தொகையான ரூ. 4,000 சிறு விவசாயிக்கு ரூ. 1,000 மானியமாகவும், குறுநில விவசாயிக்கும் வேளாண்மைத் தொழிலாளர்க்கும் ரூ. 1,330 மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பொருளாதார ரீதியில் விவசாயிகள் பயன் அடைந்து இருப்பதால் இத்திட்டம் பொது மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. எனவே இத்திட்டம் கோயம்புத்தூர், தென்னாற்காடு மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படும். 1981–82-ல் (31–12–81 முடிய) 364 ஆடுகள் வளர்ப்பு நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

கோழி உற்பத்தித் திட்டத்தின்கீழ் சிறுவிவசாயிக்கு ரூ.1,462-ம்
குறுநில விவசாயிக்கும் வேளாண்மைத் தொழிலாளர்க்கும்
ரூ. 1,949-ம் மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள
தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள்
ஆகியவற்றின் மூலம் கடனாக அளிக்கப்படுகிறது. 100 கோழி
கள் அடங்கிய கோழி வளர்ப்பு நிலையம் ஒன்று துவங்குவதற்
காகும் மொத்தச் செலவு ரூ.5,846 ஆகும்.

(2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

கன்று பராமரிப்பில் சிறு குறுநில விவசாயிகள் மற்றும்
வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின்
நோக்கமாகும். 1980–81-ல் வழங்கப்பட்ட கன்று பராமரிப்புத்
திட்டத்தின்படி மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலுள்ள 23
வட்டாரங்களில் 2,000 கன்றுகள் பராமரிக்கப்படுகின்றன.
1981–82 மற்றும் 1982–83 ஆண்டுகளுக்கான 22·85 லட்சம்
ரூபாய் வழங்க அரசு சம்மதித்துள்ளது. இத்திட்டம் 25 மாத
காலத்திற்கு தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக கடன்
உதவி அளிக்கப்படுவதுடன் தீவன மானியமும் வழங்கப்படும்.

(3) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப்பகுதிகளின் மேம்பாட்டிற்காக நிரந்தரமான கால்
நடைப் பராமரிப்பு வசதிகள் அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய
நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் உதகமண்டலத்திலுள்ள
மாவட்ட கால்நடை பண்ணைக்கும், குருத்துக்குளி, கோல்
ஸ்ரேன் தீவன பயிர் பண்ணைகளுக்கும், கூடுதல் வசதிகள்
அளிக்கப்பட்டுள்ளன. 4 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும்,
415 ஆடு வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
உதகமண்டலத்தில் கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையம்,
ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1980–81-ல் 0.32 இலட்சம்
ரூபாய் செலவில் 4 வட்டாரங்களில் 40 பன்றி வளர்ப்பு நிலையங்
கள் ஏற்படுத்தப்பட்டன.

(4) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

இம்மாநிலத்திலுள்ள 9 பழங்குடியினர் பகுதியிலுள்ள பழங்
குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்
தின் நோக்கமாகும். 1980–81-ல் இத்திட்டத்தின் கீழ் 289
கறவைப் பசுக்கள், 271 ஒற்றைக் காளைகள், 191 ஜோடிக் காளை
கள், 13 ஜோடி உழவு மாடுகள் ஆகியவை வழங்கப்பட்டன.
மேலும் 455 ஆடு வளர்ப்பு நிலையங்கள், 65 கோழி வளர்ப்பு
நிலையங்கள், 65 பன்றி வளர்ப்பு நிலையங்கள். 2 கால்நடை
மருந்தகங்கள் ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுக்
கான மொத்த செலவு 20.04 இலட்சம் ரூபாய் ஆகும். 1981–82
இல் புதிய திட்டங்களுக்காக 22.71 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல்
அளிக்கப்பட்டுள்ளது.



(5) வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

வறட்சிப் பகுதிகளான தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்
களில் கால்நடைப் பராமரிப்புக்கான நிரந்தர வசதிகள் உரு
வாக்கப்படுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1980–81-ல்
தருமபுரி மாவட்டத்தில், 251 ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்
படுத்தப்பட்டதுடன் 255 கறவைப் பசுக்களும் விநியோகிக்கப்
பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 175 ஆடு வளர்ப்பு
நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் 2,351 கறவைப்பசுக்களும்
விநியோகிக்கப்பட்டன. 1981–82-ல் பல்வேறு திட்டங்களை
செயல்படுத்தும் பொருட்டு 32.13 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல்
அளிக்கப்பட்டுள்ளது.

(6) ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சித் திட்டம்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தற்போது
ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என மறு பெயரிடப்
பட்டுள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் பணி
புரிந்த அலுவலர்கள், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டப்
பணிகளை கவனித்து வருகின்றனர். இவர்கள் மாவட்ட ஆட்சி
யாளர்களின் கீழ் பணியாற்றுகின்றனர். விவசாயத் தொழில்
அற்ற நாட்களில் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள்,
வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வருமானம்
ஈட்டும் வகையில் இத்திட்டத்தின் கீழ் சிறந்த கறவை பசுக்கள்,
தரமுள்ள ஆடுகள், பன்றிகள் ஆகியவை விநியோகிக்கப்படுகின்றன.
இத்திட்டப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு சிறந்த மருத்துவப்
பணி ஆற்றும் நோக்குடன், ரூ. 15.34 இலட்சம் செலவில்
1981–82–ல் 13 நடமாடும் மருத்துவ நிலையங்களுக்கு அரசு
ஒப்புதல் அளித்துள்ளது.

(7) ஒருங்கிணைந்த மாதிரி பொருள் ஆய்வுத் திட்டம்.

கால்நடை உற்பத்தி பொருட்களான பால், முட்டை,
இறைச்சி ஆகியவற்றின் மதிப்பீட்டை அளவிடும் நோக்கத்துடன்
மத்திய அரசின் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது.
1–4–79 முதல் இத்திட்டம் மாநிலத் திட்டமாகத் தொடர்ந்து
செயல்பட்டு வருகிறது.

1977–78 முதல் 1980–81 வரை 900 கிராமங்களில் அளவீடு
பணி முடிவடைந்தது. 1977–78-ல் மதிப்பீடு செய்யப்பட்ட பால்
உற்பத்தி 1,681 ஆயிரம் மெட்ரிக் டன்னும், 1978–79ல் 1,727
ஆயிரம் மெட்ரிக் டன்னும் 1979–80-ல் 1,860 ஆயிரம் மெட்ரிக்
டன்னும் ஆகும். 1977–78 ஆம் ஆண்டின் பால் உற்பத்தி
மதிப்பீட்டை விட 10.65 சதவீதம் அதிகரித்துள்ளது.

### (8) கால்நடை இடைக்கால கணக்கெடுப்பு திட்டம்.

கால்நடை இடைக்கால கணக்கெடுப்புத் திட்டத்திற்கு 30—4—81 நாளிட்ட 1030 எண்ணுள்ள வேளாண்மைத்துறை அரசு ஆணையின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது. 5 ஆண்டு கால்நடை கணக்கெடுப்புக் கிடையில் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் கால் நடை வளர்ச்சியை கணக்கெடுப்பதே இத்திட்டத்தின் நோக்க மாகும்.

தமிழகத்திலுள்ள 10 சதவீத கிராமங்களில் இடைக்கால கணக் கெடுப்பு நடைபெறும் . நம்மாநிலத்தில் 17,050 கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் சமபங்கு அளிக்கும் வகையில் 1,700 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 சதவீத கிராமங்கள் தேர்ந்தெடு கப்பட்டு 2 அல்லது 3 கிராமங்களுக்கு ஒருவர் வீதம் கணக்கெடுப் பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது களப்பணி புரியும் அலுவலர்கள் இத்திட்டப் பணிக்காக நியமிக்கப்பட்டனர்.

கீழ்க்கண்ட விவரங்களை சேகரிப்பதற்கான படிவம் தயாரிக்கப் பட்டுள்ளது.

(1) கால்நடை வளர்ப்போரின் சமுதாய நிலை.

(2) கால்நடை வளர்ப்போரின் பொருளாதார நிலை.

(3) பராமரிக்கும் பல்வேறு கால்நடைகளின் இன விவரங்கள்.

இப்படிவங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. அச்சிடும்பணி முடிவுற்றதும், கணக்கெடுக்கும் பணி ஆரம்பிக்கப்படும். ஆரம்பித்த நாட்களிலிருந்து 30 நாட்களில் இப்பணி முடிவுறும்.

## III. கால்நடைப் பண்ணைகள்.

கால்நடை வளர்ச்சியில் கால்நடைப் பண்ணைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் 9 கால்நடைப் பண்ணைகளும் விதைப் பண்ணைகளாக இயங்குகின்றன. இத்துறையின்கீழ் இயங்கும் 59 பொலி காளை நிலையங்களுக்குத் தேவையான உயர் ரக காளைகள் இப்பண்ணை களிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. சிந்தி, தார்பார்க்கர் காங்கேயம், உம்பளாச்சேரி, முர்ரா. போன்ற இந்திய இனங்களும் ஜெர்சி, ஹோல்ஸ்டையின், பிரிசியன் போன்ற அயலினங்களும்



இப்பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. சில பண்ணைகளில் ஆடு, பன்றி மற்றும் கோழிகளும் பராமரிக்கப்படுகின்றன. திருநெல் வேலி, புதுக்கோட்டை, செட்டிநாடு ஆகிய பண்ணைகளில் பசுந் தீவன விதை உற்பத்தி நிலையங்களும் உள்ளன. ஒரத்தநாடு புதுக்கோட்டை பண்ணைகளில் நோய் ஆய்வுக் கூடங்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஓசூரில் அமைக்கப்படவிருக்கும் கால் நடை வளர்ப்புத் திட்டம் 763.24 இலட்சம் ரூபாய் செலவில் மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது திரவ விந்து முறை மாற்றப்பட்டு உறை விந்து முறை பயன் படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஓசூரில் சிந்தி இன மந்தை யும் கலப்பின மந்தையும் அமைக்கப்படும்.

### அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை.

கலப்பினப் பணிக்காக, இம்மாநிலத்திலுள்ள பொலிகாளை நிலையங்களுக்குத் தேவையான தூய ஜெர்சி இன பொலிகாளை களை உற்பத்தி செய்து, விநியோகிப்பதே இத்திட்டத்தின் நோக்க மாகும். அடிப்படை இருப்பான 150 ஜெர்சி இன இளங்கிடேரி கள், 2 பொலிகாளைகளிலிருந்து, இதுவரை 37 ஆண் கன்றுகளும், 44 பெட்டைக் கன்றுகளும் பிறந்துள்ளன. இதில் 21 கன்றுகள் 15 ஆவது மாதத்தில் இனவிருத்திக்கு ஏற்றது என கணிக்கப் பட்டு, தஞ்சாவூர், மாவட்டத்திலிலுள்ள செயற்கை முறை இன விருத்தி நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இப்பண்ணையில் ஏற்படுத்தப்பட்டுள்ள பசுந்தீவன விதை உற்பத்தி நிலையம், பண்ணைக் கால்நடைகளின் புல் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இப்பண்ணையில் நிறுவப்பட்டுள்ள விந்து சேகரிப்பு நிலையம், அதற்கான கட்டடப்பணி முடிவுற்றதும் செயற்பட ஆரம்பிக்கும்.

### கிடேரி உற்பத்தித் திட்டம்.

பல்வேறு திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிப் பதற்குத் தேவையான சிறந்த இளங்கிடேரிகளை உற்பத்தி செய் யும் நோக்குடன் புதுக்கோட்டை, உதகமண்டலம் பண்ணைகளில் 19.72 இலட்சம் ரூபாய் செலவில் இன உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை உதகமண்டலம் நிலையத்திற் காக 70 கன்றுகளும், புதுக்கோட்டை நிலையத்திற்காக 140 கன்றுகளும் வாங்கப்பட்டுள்ளன. கலப்பினக் கிடேரிகளைப் பரா மரிப்பதில் ஊக்கமளிப்பதற்காக இளங்கிடேரிகள் '' இலாபம் நட்டமற்ற '' முறையில் விற்பனை செய்யப்படும்.

### ஓங்கோல் கால்நடைகள் வாங்குதல்.

பால் உற்பத்திக்கும், உழைப்புக்கும் ஏற்ற இரட்டைப் பயனுள்ள மாடுகளை ஏழை விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுகின்றன. அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், இரட்டைப் பயன்தரும் ஓங்கோல் இன மாடுகளை வளர்க்கும் நிலையம் 1980–81-ல் 1.77 இலட்சம் ரூபாய் செலவில் சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணையில் நிறுவப்பட்டது. இதுகாறும் 20 ஓங்கோல் பசுக்கள், 6 இளங்கிடேரிகள், 2 பொலிகாளைகள் ஆகியவை வாங்கப்பட்டு இப்பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன.

### மாடுகள் வாங்குதல்.

தற்போது பொலிகாளை நிலையங்களில் பராமரிக்கப்படும் முர்ரா இனக்காளைகள் போதுமான, சிறந்த விந்து கொடுப்பது நின்றுவிட்டதால், அக்காளைகளுக்குப் பதிலாக இளங்காளைகளை வைப்பது அவசியம். இவ்விதம், அவ்வப்போது வயதான காளைகளை மாற்றம் செய்வது அத்தியாவசியமாகும். செயற்கை இனவிருத்தி முறை நல்ல பயன் அளித்தால் மட்டுமே, எந்தவொரு செயற்கை இனவிருத்தித் திட்டமும் சிறப்படையும். எனவே, பல்வேறு செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களுக்குத் தேவை யான 60 முர்ரா இனக்காளைகளை வாங்குவதற்காக 1981–82-ல் 3.00 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### கால்நடை இனங்களை தரம் உயர்த்தி பெருக்கும் திட்டம்.

பால் பெருக்குத் திட்டப் பகுதியில் சாராத பிற இடங்களில் கால்நடைகளை உயரின பால் மாடுகளுடன் கலப்பினப்பெருக்கம் செய்யவும் எருமை மாடுகளின் வளர்ச்சியை உறைவிந்து தொழிற்நுட்ப முறையில் மேம்படுத்தவும் ரூபாய் 101.92 இலட்சம் முடிவான செலவில் ஒரு மத்திய நிதி உதவி திட்டம் செயல்படுத்தப்படும்.

படிப்படியாக திரவ விந்து பயன்படுத்துவதற்குப் பதில் உறை விந்து முறையைப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பால் பெருக்குத் திட்டப் பகுதியைச் சாராத பிற மாவட்டங்களில் உள்ள 372 கால்நடை நிலையங்களில் கால் நடைப் பெருக்கத்திற்காக உறைவிந்து முறையைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 9 லட்சம் பசு மாடுகளும், 4.75 இலட்சம் எருமை மாடுகளும் பயன்பெறும்.

### மாவட்டக் கால்நடைப் பண்ணைகளை புனரமைத்தல்.

தற்போதுள்ள 4 தீவனப்பயிர் விதை உற்பத்தி நிலையங்களும் கால்நடைப் பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் தீவனப்பயிர் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பசுந்தீவனம் பயிர் செய்யும்படி விவசாயி



களும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு, 1981–82-இல் 4.26 இலட்சம் ரூபாய் செலவில் செட்டிநாட்டில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் பசுந்தீவன விதை உற்பத்தி நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு மொத்தம் 50 ஏக்கர் ஆகும். இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவன விதைகள், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

திருநெல்வேலி, செட்டிநாடு, கொருக்கை மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுக்கும், சாத்தூரிலுள்ள ஆட்டுப்பண்ணை கும் தண்ணீர் வசதிகள், விவசாய உபகரணங்கள் வாங்குதல் போன்ற கூடுதல் வசதிகள் அளிப்பதற்கு 1981–82–ல் 20.00 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## IV. கால்நடை நோய் நீக்கப் பணிகள்.

### (அ) மருத்துவ நிலையங்கள்.

பல்வேறு வகையான கால்நடை நோய்களைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசின் முதற் கடமையாகும். நவீன மருத்துவ வசதிகளை எளிய விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் ஆவன செய்யப்பட வேண்டும். சிறந்த மருத்துவப் பணி ஆற்றும் நோக்குடன் 1981–82-ல் 20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 4 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக வும், 3 மருத்துவ மனைகள் பிரதம மருத்துவ மனைகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. 693 கால்நடை மருத்துவ நிலையங்கள் தமிழகத்திலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சேவை புரிகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| அ. கால்நடை மருந்தகங்கள் .. .. .. | 552 |
| ஆ. கால்நடை மருந்தகம்— கேந்திர கிராம நிலையங்கள் .. .. | 73 |
| இ. கால்நடை மருத்துவமனைகள் .. .. | 50 |
| ஈ. கால்நடை மருத்துவமனை— கேந்திர கிராம நிலையங்கள் .. | 3 |
| உ. பிரதம மருத்துவ நிலையங்கள் .. .. | 15 |
| மொத்தம் .. | 693 |

இது தவிர, 13 பரிசோதனைக் கூடங்களும், 7 நடமாடும் நிலை யங்களும், 8 கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையங்களும் 2,227 இளை நிலையங்களும் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட நிலையங்களில், தரமற்ற ஆடு, மாடுகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்படுவதுடன், ஆண்மை நீக்கம் செய்யும் முகாம்களும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. கலப்பின விருத்தித் திட்டங்களின் வெற்றி, தரமற்ற கால்நடைகளைக் காயடிப்பதிலேயே சார்ந்துள்ளது. எனவே, மேற்படி, நிலையங் களுக்குத் தேவையான 900 காயடிக்கும் பர்டிசோ கருவிகளை இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, 1981–82-ல் ரூபாய் 6.92 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், மருத்துவர்களை எம். வி. எஸ். வி., மேற்படிப் பிற்கு அனுப்புவதற்காக 1.55 இலட்சம் ரூபாய்க்கும், மலடு நீக்கப் பயிற்சிக்கு அனுப்புவதற்காக 0.57 இலட்சம் ரூபாய்க்கும் 1981–82-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) மருந்து கிடங்குகள்.

தக்க சமயத்தில், மருந்தும், உபகரணங்களும் துறை நிலையங் களுக்குக் கிடைக்கச் செய்யும்படியாக, 1980–81-இல் 4 மருந்துக் கிடங்குகள் நிறுவப்பட்டன. செங்கல்பட்டு, நாமக்கல், பேரூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் இக்கிடங்குகளுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(இ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோயெனும் கொடிய தொற்று நோய் கால்நடை களிடையே பெரும் இழப்பை ஏற்படுத்துவதுடன், பால், இறைச்சி உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. எனவே, இக்கொடிய நோயை முற்றிலும் ஒழிக்கும் பணியில் 17 மாவட்ட வெக்கை நோய் தடுப்புக் குழுக்களும், 13 சோதனைச் சாவடி களும், 10 விழிப்புக்கண்காணிப்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன.

(ஈ) மருந்து தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல்.

கால்நடை மருந்து தயாரிக்கும் பிரிவு ஒன்று 1980–81-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையம் தற்போது, இராணிப் பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு நிறுவனத்தில்தான் இயங்கி வருகிறது. இப்பிரிவு அமைக்கப்படுவதற்கான இடம் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

(உ) கோமாரி நோய்த்தடுப்புப்பணி.

இத்திட்டத்தின் கீழ் 1980–81-ல் 7.40 இலட்சம் ரூபாய் செலவில் மருந்து வாங்கப்பட்டு, இந்நோயிலிருந்து கால்நடை களைக் காக்கும் நோக்குடன் 1,85,320 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. மேலும் இது போன்றப்



பணிக்காக மருந்து வாங்கும்படி 1981-82-இல் 7.40 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு நடப்புத் திட்டத்தில் இந்திய பால் வள வாரியம் மூலம் நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்புப் பணியைப் பற்றி ஆய்வதற்காக திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித் துள்ளது. மேற்கூறிய திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 3.12 கோடியாகும். இது இங்கிலாந்து அரசு உதவியுடன் 3 ஆண்டு காலத்திற்கு அமுலில் இருக்கும்.

(ஊ) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

இந்நிலையத்தில் தடுப்பு மருந்து, கலவைகள், நோய் கண் டறிய உதவும் மருந்துகள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின் றன. இவைகள் துறை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிக்கப் படுவதுடன், அண்டை மாநிலங்களின் தேவைக் கேற்ப விற் பனையும் செய்யப்படுகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் வெக்கை நோய் திசு வளர் பிரிவை வலுப்படுத்தும் பொருட்டு, 17.97 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தடுப்பு மருந்தில் முன்னேற்றம் காணுதல், புதிய மருந்துகளைக் கண் டறிதல் போன்ற ஆராய்ச்சிகளும் இந்நிலையத்தில் மேற் கொள்ளப்படுகின்றன.

(எ) ஆற்றப்பட்டுள்ள வறட்சி நிவாரணப் பணிகள்.

தமிழகத்தில் கொடிய வறட்சி ஏற்பட்ட வேளையில், வறட்சி யால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, தருமபுரி, இராமநாதபுரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர்,, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட் டங்களில் வாழும் ஏழைக் கால்நடை வளர்ப்போரின் துயர், துடைக்கும் வகையில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன.

(1) வைக்கோல் விநியோகித்தல்.

ஒரு கிலோ 7 முதல் 15 பைசா விலை ரீதியில் 8,474 மெட்ரிக் டன் வைக்கோல் 1,14,252 ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக் கப்பட்டது. போக்குவரத்து, இதர செலவினங்களுக்கான மானிய மாக ரூ. 34.70 இலட்சம் செலவு செய்யப்பட்டது. வைக்கோல் வாங்குவதற்காக 12.22 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.

(2) கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம்.

வறட்சிப் பகுதிகளில் கால்நடைகளை கொடிய கோமாரி நோயிலிருந்து தடுக்கும் பொருட்டு 17.25 இலட்சம் ரூபாய் செலவில் 1,44,270 கால்நடைகளுக்குக் கோமாரி நோய் தடுப் பூசிகள் போடப்பட்டன.

(3) சிகிச்சைக்கான மருந்து வாங்குதல்.

வறட்சியால் தாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குத் தீவிர சிகிச்சைப் பணி தக்க சமயத்தில் ஆற்றும் பொருட்டு ரூ. 50.00 இலட்சம் செலவில் மருந்துகள் வாங்கப்பட்டன.

(4) தண்ணீர் தொட்டிகள் கட்டுதல்.

வறட்சிப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் கால்நடை மருந்தகங்களில் மொத்தமாக 600 தண்ணீர் தொட்டிகள் கட்டுவதற்கு அரசு 9.00 இலட்சம் ரூபாய் வழங்கியது. இதுவரை 505 தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

## V. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு

இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவர் கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநராக தலைமைப் பொறுப் பேற்றுள்ளார். இவருக்குத் தொழில் நுட்ப விஷயங்களில் உதவி புரிய கூடுதல் இயக்குநர்கள் இருவரும், நிர்வாக விஷயங்களில் உதவி புரிய முதன்மை நிர்வாக அலுவலர் ஒருவரும் உள்ளனர். புள்ளி விவரம் மற்றும் திட்ட விஷயங்களில் ஆலோசனை கூற இணை இயக்குநர் ஒருவரும், கணக்கு சம்பந்தமானவற்றில் ஆலோசனை கூற முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். நிர்வாக வசதிக்காக, இம்மாநிலம் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் கால்நடைப் பராமரிப்புத்துறை இணை இயக்குநர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. இவருக்கு உதவி புரியத் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். மண்டலத்துக்குக் கீழ், இம் மாநிலம் 61 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் கோட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இப் பிரிவுகள் ஒவ்வொன்றும், கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டம் ஒவ்வொன்றும் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநரைத் தலைமையாகக் கொண்டுள்ளது.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், ஈச்சங்கோட்டையிலுள்ள உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை முதலியன ஒவ்வொன்றும் கூடுதல் கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் பொறுப்பில் உள்ளது. மாதவரத்தில் உள்ள அரசு பால் பண்ணை இணை கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் ஒருவரின் பொறுப்பிலுள்ளது. பிற பண்ணைகள், அனைத்தும் கண்காணிப்பாளர் ஒருவரின் கீழ் இயங்குகின்றன.



## VI. வருங்காலத் திட்டங்கள்

1982—83 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். | |
|---|---|---|---|
| 1 | கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக் கூடுதல் அலுவலர் நியமித்தல். | கண்காணிப்பாளர்கள் | 16 |
| 2 | நாகர்கோவில், புதுக்கோட்டை உதவி கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகங்களை இரண்டாகப் பிரித்தல். | உதவி இயக்குநர் அலுவலகங்கள். | 2 |
| 3 | எம்.வி.எஸ்.ஸி. மேற் படிப்புக்கு அலுவலர்களை அனுப்புதல். | அலுவலர்கள்<br>கால்நடை உதவி மருத்துவர்கள். | 5<br>5 |
| 4 | மலடு நீக்கப் பணியில் பயிற்சி அளித்தல். | கால்நடை உதவி மருத்துவர்கள். | 60 |
| 5 | கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஏற்படுத்துதல். | | 25 |
| 6 | கால்நடை மருந்தகங்களை மருத்துவ மனைகளாக உயர்த்துதல். | | 5 |
| 7 | ஆதி திராவிடர் குடியிருப்புகளிலுள்ள 5 கால்நடை மருந்தகங்களுக்கு கட்டிடங்களை கட்டுதல். | | 5 |
| 8 | கால்நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவமனைகளாக உயர்த்துதல். | | 3 |
| 9 | வெக்கை நோய்த் தடுப்புக் குழுக்களுக்கு வாகன வசதிகளும், கூடுதல் அலுவலர்களும் நியமித்தல். | ஊர்திகள் மற்றும் அலுவலர்கள் | 3 |
| 10 | வெக்கை நோய் நிலையங்களுக்கு கூடுதல் அலுவலர்கள் நியமித்து வலுப்படுத்துதல். | குழுக்கள் | 2 |

1-4-1982 முதல் முதியோர் ஓய்வூதிய மாதாந்திரத் தொகையினை 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கும் உதவித் தொகைக்கான ரொக்கம், காசோலை மூலம் அஞ்சல் வழியனுப்பப்படுகிறது. இதற்கான அஞ்சல் வழியனுப்பல் செலவு தொகையினையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படும் ஒரு திட்டமானதால், மாவட்டங்களில் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியுடையோர் கண்டறியப்படுவதைப் பொறுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஒப்புதல் அளிக்கும்.

இத்திட்டத்திற்கென 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் நான்கு பிரிவினருக்குமான 1,99,158 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டு வரவு–செலவு ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கான ரூ. 8.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VIII சீர்திருத்தப் பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி

சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இத்துறை தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்த இளங்குற்றவாளிகள், ஆதரவற்றோர், கட்டுக்கடங்கா சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரின் பொறுப்பினை ஏற்று சீர்திருத்தப் பயிற்சி அளித்து, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி, மறுவாழ்வு அளிக்கும் முக்கிய குறிக்கோளைக் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகும் இல்லவாசிகளுக்கும் நிறுவனங்கள் மூலமாக பிற்காப்பு அளிக்கிறது.





### கோரிக்கை எண் 30.

### சமூக நலன்—கொள்கை விளக்கக் குறிப்பு.

### I. முன்னுரை.

கோரிக்கை எண். 30-ன் கீழ் 1982–83-ம் ஆண்டிற்கு ரூ. 23,01,71,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

2. சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்காகவும், மேம்பாட்டிற்காகவும், தனிக் கவனம் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும், எனவே சமூக நலத் துறை, பெண்கள், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக திட்டமிட்டு பல சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அரசு திட்டங்கள் தவிர, தனியார் சேவை நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல் மூலம் அவற்றின் சமூக சேவையினை ஊக்குவித்து ஆதரவு அளிக்கப்படுகிறது.

3. அரசின் சமூக நலத் திட்டங்களின் பணிகள் அதிகரிப்பதாலும் தேவைகள் அதிகமாவதினாலும் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவது அரசின் கடமையாகிறது. 1975–76–ம் ஆண்டில் ரூ. 1.30 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 1981–82-ம் ஆண்டில் ரூ. 8.77 கோடியாக அதிகரித்துள்ளது, அதன் வளர்ச்சியையும், அரசு அதன்பால் கொண்டுள்ள தீவிர அக்கறையையும் வெளிப்படுத்துகிறது. இதில் ரூ. 5.64 கோடி திட்ட நிதி ஒதுக்கீடாகவும் ரூ. 3.13 கோடி திட்டமில்லாத நிதி ஒதுக்கீடாகவும் செய்யப்பட்டுள்ளது.

### II. நிர்வாக அமைப்பு.

மாநில அளவில் சமூக நலத் துறை இயக்குநர் இத்துறைக்கு தலைவராவார். இவருக்கு உதவியாக ஒரு இணை இயக்குநரும் மூன்று துணை இயக்குநர்களும், ஆறு உதவி இயக்குநர்களும்—குழந்தை நலத்திற்கு ஒருவர், மகளிர் நலத்திற்கு ஒருவர், சிறப்பு சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவர், நிர்வாகத்திற்கு ஒருவர், சென்னை நகர்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒருவர், உலக வங்கி சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவர், உடல் ஊனமுற்றவர் நல் . வாழ்வு திட்டத்திற்கு பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் ஒருவர், தனிப்பள்ளிகளுக்கு பொறுப்பு வகிக்கும் தனி அலுவலர் ஒருவர், உடல் ஊனமுற்றோர் மாநில வாரியத்திற்கு பொறுப்பு வகிக்கும் செயலாளர் ஒருவர், நல அலுவலர் ஒருவர், பணியிலமர்த்தும் தனி அலுவலர் ஒருவர், பெட்டிக் கடை வைக்க கடன் வழங்கும் அலுவலர் ஒருவர், வழிகாட்டி நிலையத்திற்கு பொறுப்பு வகிக்கும் தனி அலுவலர் ஒருவர், கணக்கு அலுவலர் இருவர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் ஒருவர் ஆகியோர்கள் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

2. மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர்களும் மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களும் சமூக நலத் துறைப் பணித்திட்ட அனைத்திற்கும் பொறுப்பு வகிக்கின்றனர். விரிவாக்க வளர்ச்சிப் பணி அலுவலர் (சமூக நலம்) மற்றும் ஊர் நலப் பணியாளர் ஊராட்சி ஒன்றிய அளவில் பணிபுரியும் பணியாளர்கள் ஆவர், கிராமப் பகுதிகளில் சமூக நல அமைப்பாளர்கள் சமூக நல நிலையங்களை நடத்தி வருகின்றனர். கைத் தொழில் பயிற்சியாளர்கள் பயிற்சி நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகின்றனர். குழந்தைகள் நல அமைப்பாளர்கள் குழந்தைகள் நல நிலையங்களுக்கு பொறுப்பேற்றுள்ளார்கள்.

3. சேவை இல்லங்கள் கண்காணிப்பாளர்களால் நிர்வகிக்கப் பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப் பட்டுவருகிறது. இதற்கென உதவி இயக்குநருக்கு சமமாக ஒரு மாவட்ட திட்ட அலுவலரும் அவருக்கு உதவியாக மதுரை மாவட்டத்தில் பல பதவிகளில் உதவியாளர்கள் அமர்த்தப்பட்டு பணிபுரிகிறார்கள். அவைகள் வட்டாட்சி அளவில் 12 வட்டார சத்துணவுத் திட்ட அலுவலர்களும், ஊராட்சி அளவில் 36 போதகிகளும், 200 மேற்பார்வையாளர்களும் நிலைய அளவில் 1,900 சமுதாய சத்துணவுத் திட்ட ஊழியர்களும் மற்றும் 1,900 உதவியாளர்களும் உள்ளனர்.

## II. மகளிர் நலம்.

தேசியக் கவிஞர் பாரதியார் ''உலகம் நன்மை பெற வேண்டுமெனில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமான வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும்'' என்று கூறியுள்ளார். இக்குறிக்கோளை அடையவேண்டுமானால் பெண்களின்பால் கடைபிடிக்கப்படும் சமுதாய அமைப்பின் பழக்க வழக்கங்கள் ஒட்டு மொத்தமாக மாற்றப்பட வேண்டும். அரசு தனியார் சேவை நிலையங்கள் மற்றும் சமுதாயத்தில் ஒவ்வொரு தனி நபரும் இம்மாதிரியான மாற்றம் நிகழ்ந்திட திடமாக செயல் படல் வேண்டும். அரசின் கீழ்க்கண்ட விரிவான திட்டங் களை செயல்படுத்துவதின் மூலம் மகளிர் பொருளாதார ரீதியில் தனித்துவம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது :—

(1) கூட்டுறவு மற்றும் உற்பத்தி நிலையங்களில் சமுதாய பொருளாதார அடிப்படையில் முழு நேரம் மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பளித்து ஊதியம் பெற வகை செய்கிறது.



(2) பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும் வேலை ஊக்கத்தினை ஊட்டிடவும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி அளித்து பெண்கள் தங்கள் வேலை வாய்ப்பில் நல்ல திறன் பெற்றிட தேர்தெடுக்கப்பட்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வேலை வாய்ப்புத் துறையில் ஊக்கம் பெறுகிறார்கள்.

(3) நலிவுற்ற, தேவையான, பெண்களுக்கு மேலும் பல புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரப்படுகிறது.

(4) பணிபுரியும் பெண்கள் இல்லம், சேவை இல்லம், விதவைகளுக்கு உதவி அளித்தல், விதவை மறுவாழ்வு போன்ற பல திட்டங்கள் மூலம் பெண்களுக்கு பல்வேறு வசதிகள் பெற்றிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2. 1975–76-ம் ஆண்டில் மகளிர் நலத்திற்கு என ரூ. 12.03 லட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு, 1981–82-ம் ஆண்டில் 107.01 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. படிப் படியான இந்த அதிகரிப்பு எத்தகைய வளர்ச்சியினைப் பெற்றுள்ளது என்பது பெண்களின் முன்னேற்றத்திற்கான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

3. மகளிர் நலத்திற்கான திட்டங்களின் விபரங்களை ஒவ்வொன்றாக காண்போம்.

வேலை வாய்ப்பில் மகளிருக்கான சிறப்புத் திட்டங்கள்:—

பெரும்பாலான மகளிர் தொகையில் முக்கியமாக கிராமப் புறங்களில் வசிக்கும் மகளிர் வேலை வாய்ப்பின்றியோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கான வேலையுடனோ இருக்கிறார்கள். இவ்வாறு வேலை வாய்ப்பின்றி இருக்கும் மகளிரின் பிரச்சினையை அரசு பரிசீலனை செய்து அதிகச் செலவில் பல சிறப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் கிராமப் புற மகளிர் பயிற்சி பெற்றிடவும், வேலை வாய்ப்பை பெற்றிடவும் அரசு ஆவண செய்துள்ளது. இதன்மூலம் கிராமப் புறங்களில் ஒவ்வொரு குடும்பமும் வருட வருவாயாக ரூ. 700 பெற்றிட வாய்ப்பு செய்யப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் கிடைக்கும் எளிதான மூலப் பொருட் களின் உதவியுடன் சிறிய முதலீட்டுடன் குறைந்த அளவில் தொழில் நுட்பம் கொண்ட சில பொருட்களை உற்பத்தி செய்திடவும் வாய்ப்பளிக்கிறது. அத்தகைய உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திடவும் வழி செய்கிறது.

இம்மாதிரியான திட்டங்கள் மூலம் கிராமப்புற மகளிர் களுக்கு கிராம குடிசை கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப் பட்டு கூட்டுறவுத் தொழில் சங்கங்கள் அமைத்து வேலை

வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிக் காலங்களில் கிராமப்புற மகளிர் மாதம் ரூ. 50—லிருந்து ரூ. 75 உதவித் தொகையாக பெறுகிறார்கள். பயிற்சி மற்றும் மூலப் பொருட்களின் செலவினங்களை அரசே ஏற்றுக்கொள்கிறது.

தொழில் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான மூலதனம் மற்றும் இயந்திர உதிரி பாகங்களை வாங்குவதற்கு அரசு மான்யம் அளிப்பதோடு நிர்வாக உதவியும் அரசு அளிக்கிறது.

இதுவரை இதன்மூலம் 4,035 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1,815 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(1) தீப்பெட்டித் தொழிற்சாலை.

இதுவரை 257 மகளிர் தீப்பெட்டி தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், 7 தீப்பெட்டி தொழிற் கூடமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 3,120 மகளிர் இத்துறையில் தொழிற் பயிற்சி பெற்றுள்ளார்கள். இத்தீப்பெட்டி தொழிற்சாலைகள் மதுரை, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகிறது. இதுவரை 60 தீப்பெட்டி கூட்டுறவு தொழிற் சங்கங்கள் தீப்பெட்டிகளை தயாரித்து வருகிறது. மேலும் ஒரு தீப்பெட்டி தொழிற் கூடம் பதிவு செய்யப்பட உள்ளது.

விற்பனைத் தேக்கம் ஏற்பட்ட காரணத்தினால் இத்தொழிற் கூடத்தினை விரிவு செய்யும் திட்டம் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். மீதமுள்ள தொழிற் கூடங்களில் தீப்பெட்டி உற்பத்தியை தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(2) பனைமரத் தொழில்கள்.

தர்மபுரி மாவட்டத்தில் 10 கூட்டுறவுத் தொழில் சங்கங்கள் பனைமரத் தொழில் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டு, 250 மகளிருக்கு வேலை வாய்ப்பளிக்கத் தேவையான பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்தொழில்துறையில் உற்பத்திகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



(3) நோட்டுப் புத்தகம் தயாரிப்பு.

இத்தொழிற்துறையின் கீழ் அனுமதிக்கப்பட்ட 15 தொழிற் கூடங்கள் 750 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவைகளில் 6 தொழிற்கூடங்கள் சென்னை நகரம், தாம்பரம், திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் உற்பத்தி தொடங்கி, 250 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மீதமுள்ள 9 தொழிற் கூடங்கள் வருகின்ற ஆண்டில் உற்பத்தியை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4) சாக்கட்டி தயாரிப்பு.

அரசால் அனுமதிக்கப்பட்ட 10 தொழிற் கூடங்களில் 9 கூடங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் 6 தொழிற் கூடங்கள் உற்பத்தி செய்து வருகிறது. 200 மகளிர் இதனால் பயன்பெறுகிறார்கள். மீதமுள்ள ஒன்றும் பதிவு செய்யப்பட உள்ளது. மற்ற நான்கு தொழிற் கூடங்கள் 1982—83-ல் உற்பத்தி தொடங்க இருக்கிறது.

(5) கிராம நூற்பாலைகள்.

மதுரை மாவட்டத்தில் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 0·41 இலட்சம் செலவில் ஒரு கிராமப்புற நூற்பாலை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 25 கிராமப்புற மகளிர் பயனடைவார்கள்.

(6) சாக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி நிலையம்.

3 சாக்கட்டி, மற்றும் 3 மெழுகுவர்த்தி தொழிற்கூடங்கள் இராமநாதபுரம், மதுரை, தஞ்சை, கன்னியாகுமரி, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 120 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டமிடப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

(7) மற்ற திட்டங்கள்.

(i) கயிறு தயாரிப்பு

தஞ்சை மாவட்டத்தில் ரூ. 6·61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் தொழிற் கூடமும் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையமும் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 25 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின் 2-வது அணியாக மேலும் 25 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 100 மகளிருக்கு வேலை வாய்ப்பளிக்க கயிறு தயாரிக்கும் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம் 1982—83 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும்.

(ii) பட்டுப்பூச்சி வளர்த்தல் :

வீணாகும் பட்டிலிருந்து நூல் தயாரிக்க ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 50 மகளிருக்கு பட்டு நூல் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் அவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிட கூட்டுறவு தொழிற்கூடம் நிறுவிட வகை செய்யப்பட்டிருக்கிறது. பட்டுப்பூச்சி வளர்ச்சி இயக்குநர் இதுவரை இரண்டு பட்டுப்பூச்சி சங்கங்களை பதிவு செய்துள்ளார். இத்திட்டத்திற்காக ரூ. 0·70 இலட்சம் ஒதுக்கப்பட்டு 1982–83 ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) தையற்கலை சங்கம் :

ஆதரவற்ற மற்றும் விதவை மகளிருக்கு இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் மூலம் போதுமான வருமானம் கிடைக்கப்பெறாமையால் இவர்களுக்கு வருமானம் கிடைத்திட ஒரு கூட்டுறவு தொழிற் சங்கத்தை நிறுவி அதன் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு சீருடை தைத்தல் மூலமும் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் வாய்ப்பின் மூலமும் வேலை வாய்ப்பினை பெற்றிட வகை செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் இத்திட்டத்தின் கீழ் ஒரு தொழிற்கூடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 75 மகளிருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். 1981–82 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் இலவசமாக தையல் இயந்திரம் பெற்ற மகளிர் எல்லோரும் சேர்ந்து மேற்கூறியது போன்று தொழிற்கூடம் தஞ்சாவூர், மதுரை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அமைத்திட வகை செய்யும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன் மூலம் 800 மகளிர் வேலை வாய்ப்பினைப் பெறுவார்கள்.

(iv) மகளிர் வேலைவாய்ப்பு முன்னேற்றக் கழகம் :

தமிழ்நாடு மகளிர் வேலை வாய்ப்பு முன்னேற்றக் கழகம் ஒன்று ரூ. 200 இலட்சம் செலவில் நிறுவிட சிறப்புத் திட்டத்தின் கீழ் இயங்கும் நிர்வாக குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இக்கழகத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10,000 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின் மூலம் மகளிர் இத்திட்டத்தினை பற்றிய அறிவினைப் பெற்றிடவும், திட்டச் செலவில் 40 சதவிகிதம் சமமான தொகை முன்பணமாக வழங்கிடவும் மொத்தமாக மூலப் பொருட்கள் வாங்கிடவும், இயந்திரங்கள்



மற்றும் உபரி பொருட்கள் வாங்கிடவும், பின்னர் அவற்றினை சீராக வழங்கிடவும், பெண் தொழில் அதிபர்களை ஊக்குவித்திடவும், உற்பத்தியாகும் பொருட்களை விற்பனைக் கூடத்திற்கு அனுப்பிவைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு விடுதிகள் ஆரம்பிக்க உதவி

ஏழை மக்களின்பால் அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும் முகத்தான், ஏழை எளியவர்களுக்கு இட்லி, தோசை, தயிர் சாதம், எலுமிச்சை சாதம் போன்ற அன்றாட உணவு வகைகள் மலிவு விலையில் கிடைப்பதற்கு வகை செய்யும் பொருட்டு தொழிற்கூடங்கள், புகை வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் ஆதரவற்ற விதவைகள் உணவு விடுதிகள் ஆரம்பிக்க ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இத்தகைய உணவு விடுதிகளை ஆரம்பிக்க விரும்பும் ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு தானியங்கள், எண்ணெய் மற்றும் பிற பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும். மேலும் அவர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் சிறு கடன் பெறுவதற்கு சமூக நல இயக்குநரின் பரிந்துரையின் பேரில் ஆதரவளிக்க அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்தால் ஆதரவற்ற விதவைகள் பயன் பெறுவதோடு பொதுமக்களும் குறிப்பாக ஏழை மக்களும் பயன் பெறுவார்கள்.

iv தொழில்துறையில் அதிநவீனமான பயிற்சி பெண்களுக்கு அளித்திடும்; திட்டம்

மின்சாரம், மின்னணு மற்றும் சிறிய மருந்து தயாரித்தல் போன்ற மிக அதி நவீனமான துறைகளில் பெண்களுக்கு பயிற்சி அளித்திடல் அவசியம் என்ற காரணத்தினால் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் பயிற்சி பெறும் மகளிர் தொழிற்துறையில் சிறந்து விளங்கிடவும் பெண் தொழில் அதிபர்களை உருவாக்கிடவும் உதவும்.

vii மின்னணு தொழில்

மின்னணுத் துறையில் 30 பெண்களுக்கு பயிற்சி அளித்திட ரூ.0.63 லட்சம் செலவில் ஒரு திட்டம் உள்ளது. இதன்மூலம் மின்னணுவில் நேரடி பயிற்சி தந்திடவும், தொலைக் காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, ஒலிபெருக்கி, இசைத்தட்டுப் பெட்டி மற்றும் வானொலிப் பெட்டி தயார் செய்வது போன்றவற்றில் பயிற்சியளித்திடவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு பாடத்திட்டம் தயாரித்திடவும், வியாபார நிர்வாகம், நிதி விற்பனை மற்றும் விற்பனைத்திறன்

முதலியன பற்றி பயிற்சி அளிக்க பாடத்திட்டமும் தயாரிக்கப் படும். சென்னை போன்ற நகரங்களில் இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது. இதன் மூலம் பெண்கள் தங்களுக்கென்று ஒரு தொழிற் கூடம் நிறுவிட வாய்ப்புண்டு. அப்பெண்கள் தொழில் துறையில் முன்னேறிட தேவையான உதவிகள் செய்திடவும் திட்டம் உள்ளது.

(8) பெண்களுக்கான மற்ற வாழ்க்கை தொழில் பயிற்சிகள் :

(i) தட்டச்சுப் பயிற்சி :

ஆண்டு வருமானம் ரூ. 3.000-க்கு குறைவாக உள்ள 16 முதல் 30 வயது வரையிலான பெண்களின் நலன் கருதி 1977–78 -ல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு பயனடைவோர் ஒருவருக்கு ரூ. 15 வீதம் பத்து மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்விதம் 1,000 ஏழை மகளிருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1.52 லட்சம் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தால் தற்போது 4,721 மகளிர் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் பயனடை வோரின் வரையறையை நீக்கக்கோரும் கருத்து ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ii) கணக்குப் பதிவு மற்றும் கணக்குத் துறையில் பயிற்சி அளித்தல்

ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்கு குறைவான வருவாய் பெறும் குடும்பத்திலுள்ள மகளிருக்கு கணக்குத் துறையில் பயிற்சி அளிப்பதற்காக 1981–82-ம் ஆண்டில் அரசு இத் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. பயிற்சித் தொகை தேர்வுக் கட்டணம் மற்றும் எழுதுபொருட்களுக்கான செலவு தொகையாக ஆறு மாதகால பயிற்சிக்கு நபர் ஒருவருக்கு ரூ. 165 கொடுக் கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,000 பெண்கள் பயனடை கின்றனர். 1982–83 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 1.65 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) இடைநிலை ஆசிரியைப் பயிற்சி அளித்தல் :

இடை நிலை ஆசிரியை பயிற்சியளிக்க பல்லாவரத்தில் ஒரு பள்ளி நடத்தப்படுகிறது. சேவை இல்லங்கள் மூலமாகவும், அரசு உதவிபெறும் தனியார் நிறுவனங்கள் மூலமும் பத்தாம் வகுப்பு தேர்வு பெற்ற வயதடைந்த மகளிர் இப்பயிற்சியில் சேர தகுதி பெற்றவர்கள். இப்பயிற்சி வகுப்புகள் பிரிவு ஒன்றுக்கு 40 பேர் கொண்ட இளநிலை மற்றும் முதுநிலை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாண்டு பயிற்சி பெறும் ஒவ்வொரு வருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.



(iv) உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள்

தையல், கம்பளிநெசவு பனைஓலை, பாய் பின்னுதல், ஜமுக் காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகு உற்பத்தி நிலையங் களை ஏற்படுத்தி கிராமப்புற நகர்ப்புறங்களில் ஆதரவற்ற 18 முதல் 35 வயதிற்குட்பட்ட மகளிருக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது. இப்பயிற்சியானது வேலை வாய்ப்பினை அளிப்ப தோடு தங்கள் குடும்பத்தின் வருமானங்களை அதிகரிக்க வகை செய்கிறது. இப்பயிற்சியின் போது பயிற்சியாளர்களின் சில்லரை செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

ஒரு வருட பயிற்சியை முடித்தவர்கள் ஒவ்வொரு டிசம்பர் மாதத்திலும் அரசால் நடத்தப்படும் தொழில் நுட்ப தேர்வு களை எழுத வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் அரசு நிறுவனங்களில் வேலைகள் பெறும் வாய்ப்பினையும் நல்குகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் ஜமுனாமருதூரில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் கொல்லி மலை, கல்வராயன் மலை மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் மூன்றுமாக, மொத்தம் நான்கு தையல் நிலையங்கள் பழங்குடி மற்றும் உபதிட்டமுள்ள பகுதிகளிலுள்ள மகளிர் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் சமூக நலத்துறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகளின் நிதி உதவியுடன் தற்போது 52 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களும், 4 உற்பத்தி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகிறது. 1982–83-ம் ஆண்டிற் காக ரூ. 15,65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

(V) ஸ்ரீசேவா மந்திர் நிலையம் மூலமாக வாழ்க்கை தொழிற் பயிற்சி:

சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட மகளிரும் தட்டச்சு சுருக் கெழுத்து பயிற்சி மற்றும் செயலகப் பணி கல்வி பயிற்சி பெறும் பொருட்டு இத்துறை ஸ்ரீசேவா மந்திருக்கு உதவித் தொகை வழங்குவதன்மூலம் அந்நிலையம் மேற்கண்ட பயிற்சிகளை செவ் வனே அளிப்பதற்கு வழிவகை செய்துள்ளது. இப்பயிற்சிக் கென 1982–83-ம் ஆண்டில் ரூ. 25,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(9) விடுதிகளும் சேவை இல்லங்களும்,

(அ) விடுதிகள் :

(i) பணிபுரியும் மகளிருக்கென அரசால் நடத்தப்படும் விடுதிகள்:

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவைச் சேர்ந்த பணிபுரியும் மகளிருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை அளித்திட பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை அரசு இத்துறை மூலம் நடத்திவருகிறது. மாநில அளவில் பணிபுரியும் மகளிருக்கென ஆறு விடுதிகள் உள்ளன. சென்னை எழும்பூரில் உள்ள விடுதியில் 35 பணிபுரியும் மகளிரும், சென்னையில் கிண்டி, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் ஹோசூர் (தர்மபுரி) ஆகிய இடங்களில் உள்ள விடுதிகள் ஒவ்வொன்றிலும் 50 மகளிரும் இதன்மூலம் பயன்பெறுகிறார்கள். இவ்வாறாக மொத்தம் 285 பணிபுரியும் மகளிர், இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறார்கள்.

இவ்விடுதிகளை நடத்துவதற்கென மாதம் ரூ. 1,500 வரை கட்டிடங்களுக்கான வாடகையாகவும் நிர்வாகப்பணியாளர்கள் ஊதியத்திற்காகவும், அரசால் வழங்கப்படுகிறது. இவ்விடுதிகளை நிர்வகிக்க ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு காவலர், ஒரு அடிப்படைப்பணியாளர் மற்றும் ஒரு துப்புரவுப்பணியாளர் என பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். உணவு வகைக்கான செலவினங்கள் பணிபுரியும் மகளிரிடமிருந்து ''சம அளவில்'' பகிர்ந்து வழங்கும் முறையின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது. இதற்கென 1982—83-ம் ஆண்டில் ரூ. 2.47 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) தனியார் நிறுவனங்களினால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிகளுக்கான கட்டங்கள் கட்ட உதவுதல்;

இரண்டு லட்சங்களுக்குமேல் மக்கட்தொகை உள்ள இடங்களில் பணிபுரியும் மகளிருக்கான வீடுதிகளை தொடங்க முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிதி உதவி செய்யப்படுகிறது. மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் மொத்தத்தொகையில் 75 சதவீதம் மத்திய அரசும் மீதியில் ரூ. 35,000 அல்லது 15 சதவீதம் இதில் எது குறைவாக உள்ளதோ அதனை மாநில அரசும் வழங்குகிறது. இத்திட்டத்தில் இதுவரை 25 தனியார் நிறுவனங்கள் நிதி உதவி பெற்றுள்ளன. மேலும் விடுதி கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி உதவி கோரப்பட்ட ஆறு தனியார் நிறுவனங்களின் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன



(ஆ) சேவை இல்லங்கள் :

(i) அரசினரால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்:

தாம்பரம், கடலூர், தஞ்சை, நெல்லை மற்றும் சேலம் மாவட்டங்களில் ஐந்து சேவை இல்லங்கள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவை 18 முதல் 40 வயதிற்குட்பட்ட விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் சமூக பொருளாதார நிலையில் பின் தங்கிய மகளிர் ஆகியோரின் நலனுக்கென செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கூறிய தகுதியிள்ள மகளிருக்கு எட்டாம் வகுப்பு புதிய பத்தாம் வகுப்பு கல்வி பயிற்சி, குறுகிய கால பயிற்சி, தையற்கலை, உடை தயாரித்தல், சித்திரப்பூ தையல் மற்றும் நெசவு ஆகிய தொழிற் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. பயிற்சியாளர்கள் தங்களுடைய இரண்டு குழந்தைகளுடன் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் தங்கி படிக்க பயிற்சிபெற அனுமதிக்கப்படுறார்கள். பயிற்சி காலத்தின்போது ஒவ்வொரு மகளிருக்கும் ரூ. 50-ம் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 36ம் மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர உடைகள் வாங்குவதற்கென ஒவ்வொரு மகளிருக்கும் வருடத்திற்கு ரூ. 60-ம் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 35—ம் வழங்கப்படுகிறது.

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பயிற்சியாளருக்கு புத்தகம் மற்றும் குறிப்புப் புத்தகம் வாங்குவதற்கென வருடத்திற்கு ரூ. 40-ம் ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலுவோருக்கு வருடத்திற்கு ரூ. 60—ம் பயிற்சியாளரின் குழந்தைகள் ஐந்தாம் வகுப்புவரை படிக்க புத்தகங்களுக்கென ரூ. 15—ம் வழங்கப்படுகிறது இத்தகைய பயன்களை ஐந்து சேவை இல்லங்களிலும் உள்ள 840 மகளிர் மற்றும் அவரது குழந்தைகள் பெறுகின்றனர். தனியார் நிறுவனங்களிலிருந்து விதவைகள் தங்களுடைய குழந்தைகளுடன் வந்து சேவை இல்லங்களில் சேர்ந்ததின் காரணத்தினால் தற்போதைய பயிற்சியாளரின் எண்ணிக்கை 890 ஆக அதிகரித்துள்ளது. 1982 83-ம் நிதி ஆண்டிற்கென ரூ. 16.45 லட்சம் இப்பணிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் சேவை இல்லத்தில் 30 உடல் ஊனமுற்ற மகளிரும் 20 உடல் ஊனமுற்ற சிறார்களும் சேர்க்கப்பட்டு ஒரு தனிப் பிரிவாக இயங்கி வருகிறது. அவர்களில் எட்டாம் வகுப்பு கூட

முடிக்க இயலாதவருக்கு வீட்டுவேலை மற்றும் வீட்டைக் கண்காணிக்கும் கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 25 நபர்கள் கொண்ட இரண்டு பிரிவினர் பயிற்சி பெற்றுள்ளனர். இதுவரை பயிற்சிக் காலத்தின் போது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவி தொகையாக வழங்கப்படுகிறது.

சேவை இல்லத்தில் தங்காமல் வீட்டிலிருந்து வந்து போகும் மகளிரின் நலனுக்கான ஒவ்வொரு இல்லத்திற்கு 20 மகளிர் என்ற அளவில் தாம்பரம், கடலூர், மற்றும் தஞ்சையில் தட்டச்சு சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டிற்கான இப்பயிற்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

தாம்பரம் சேவை இல்லத்தில் நாளொன்றுக்கு நபருக்கு ரூ. 3 என்ற கூலி விகித அடிப்படையில் தயார்நிலை உடைகள் தயாரிப்பு கேந்திரம் ஒன்று 15 மகளிருடன் நடத்தப்படுகிறது.

1981—82லிருந்து மேல்நிலைக் கல்வி திட்டத்தின்கீழ் மூன்றாம் பிரிவு பாடத்திட்டத்தில் 30 பயிற்சியாளருக்கு மேல்நிலைக் கல்வி வழங்கப்படுகிழது. இத்திட்டம் இவ்வில்லத்தில் ஆகஸ்டு 1981-லிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் மட்டும் நடத்தப்படும் இப்பயிற்சிப் பிரிவினருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவித்தொகையாகவும் ஆண்டொன்றுக்கு ரூ. 60 ஆடைகளுக்கான படியாகவும் வழங்கப்படுகிறது.

(ii) அரசு உதவியுடன் தனியாரால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்

தனியாரால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு நிதி உதவி அளிக்கிறது. ஒரு பயிற்சியாளருக்கு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 50-ம், ரூ. 15—வரையறுக்கப் பட்ட நிதியாகவும் அரசு அளிக்கிறது. மேலும் இடைநிலை அல்லது பட்டதாரி ஆசிரியர் ஒருவருக்கும் தமிழாசிரியர் ஒருவருக்கும் அரசால் ஊதியம் வழங்கப்படுகிறது. மதுரையில் சேவாஸ்ரமும், ஈரோட்டில் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமும் இத்தகு சேவை இல்லங்களை நடத்தி வருகின்றன.





(10) மகளிருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

மகளிருக்கு, குறிப்பாக விதவைகள், ஆதரவற்றோர் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை ஏற்படுத்தும் பொருட்டு வங்கிகள் மூலம் நிதி உதவி கடனாக வழங்கப்படுகிறது. இதனால் அவர்கள் சிறுகடை வைத்தல், காய்கறிகள் வியாபாரம் செய்தல் மற்றும் பூ வியாபாரம் செய்தல் போன்ற சிறு சிறு தொழில்களை நடத்துகிறார்கள். இதற்காக ஒவ்வொருவருக்கும் வியாபாரத் தன்மைக்கு ஏற்ப ரூ. 200-லிருந்து ரூ. 2,000 வரை கடனாகக் கொடுக்கப்படுகிறது. சென்னை, தஞ்சை மதுரை, மற்றும் கோவை மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்களை ஏற்படுத்தி அதன் மூலம் இத்தகைய உதவி அளிக்கப்படுகிறது. மேலும் இந்நிலையங்கள் விதவைகள், ஆதரவற்றோர்களின் குழந்தைகளுக்கு தனியார் நிறுவனங்களின் மூலம் கல்வி மற்றும் தங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்கிறது. கணவனை இழந்த மகளிருக்கு சேரவேண்டிய காப்பீட்டுத் தொகை, பணிக்கொடை மற்றும் சேமநலநிதி கொடுக்கப்படாமல் இருந்தால் அவைகளைப் பெற்றுத்தர உதவுகிறது. 1978-79-லிருந்து 1981—82 வரை 6,750 குடும்பங்கள் இதுபோல் உதவி பெற்றிருக்கிறார்கள்.

(11) மகளிர் நலத்திற்கான மற்ற திட்டங்கள்.

(i) மகளிர் மன்றம் :

மாநில அளவில் 11,250 மகளிர் மன்றங்கள் ஊராட்சி ஒன்றியம் மூலம் நடத்தப்படுகின்றன. இதற்காக ஆண்டுதோறும் ரூ. 4,000 ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மகளிர் மன்றக் கூட்டுநருக்கும் காலாண்டு ஒன்றுக்கு ரூ 15 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1982—83-ம் ஆண்டிற்கு ரூ. 14.91 இலட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ1,000, ரூ. 600 மற்றும் ரூ. 400 என சிறந்த மகளிர் மன்றங்களுக்கு மூன்று வகையான ஊக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ. 0.75 லட்சம், 1982—83-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) விதவையானோர் மகள்களுக்கு திருமணம் செய்ய உதவி

வருட வருமானம் ரூ. 3,000க்கும் குறைவாக உள்ள விதவைகள் குடும்பத்தில் அவர்களுடைய 18 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு திருமணம் நடக்கும்போது திருமணச் செலவினங்களை சமாளிக்கும் பொருட்டு இத்திட்டம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,000 விதவை குடும்பங்கள் பயன் பெறுவார்கள். ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 என வழங்கப்படும். ஒரு விதவையின் ஒரே ஒரு மகள் (மணமகள்) இவ்வுதவி பெற தகுதியுடையவர் ஆவர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பயன்பெற தகுதி வாய்ந்தோரை தேர்ந்தெடுப்பார்.

[1982 மார்ச் 27

(iii) தையல் இயந்திரம் வழங்குதல் :

இத்திட்டத்தின் கீழ் தையல்கலை தெரிந்த 20 முதல் 40 வயதிற்குட்பட்ட ஆதரவற்ற விதவைகள், பொருளாதாரத்தில் நலிவுற்ற மகளிர் மற்றும் ஊனமுற்ற ஆண்-பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. 1982–83-ம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு இதற்கென செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5,500 மகளிர் பயன் பெற்றுள்ளார்கள். 1982–83-ம் ஆண்டில் மேலும் 1,000 மகளிர் பயன் பெறுவார்கள்.

(iv) விதவை மறுமணம் ஊக்குவிக்கும் திட்டம் :

இத்திட்டத்தின்படி ரூ. 5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரம் விதவை மறுமணம் செய்துகொண்ட கணவன் மனைவியருக்கு வழங்கி விதவை மறுமணத்தை ஊக்குவிக்கப்படுகிறது. இத்தொகை ஏழு ஆண்டு காலத்திற்கு சேமிப்பாக இருக்கும். இத்திட்டம் 18 முதல் 30 வயதிற்குட்பட்ட விதவை மகளிருக்கு மட்டும் பொருந்தும். 1975–76-ம் ஆண்டு முதல் இத் திட்டம் நடைமுறையில் உள்ளது. 1980–81-ம் ஆண்டு வரை இத் திட்டத்தில் 794 விதவை மறுமணம் செய்து கொண்ட தம்பதிகள் பயனடைந்துள்ளார்கள். 1981–82-ல் 100 தம்பதிகள் பயனடைய இருக்கிறார்கள். 1982–83-ம் ஆண்டிற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) விதவை குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கும் திட்டம் :—

ஆண்டு வருமானம் ரூபாய் 3,000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் 1978–79-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் விதவைக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15-ம், நடுநிலைப்பள்ளியில் பயிலுவோருக்கு ரூபாய் 40-ம், உயர்நிலைப்பள்ளியில் பயில்வோருக்கு ரூபாய் 60-ம் வழங்கப்படுகிறது. இதுவரை 13,500 விதவைக் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளார்கள் ; ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.01 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், மேல்நிலைப் பள்ளியில் பயிலும் விதவைக் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபாய் 100 என்ற அளவில் ரூபாய் 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு தோறும் 1,000 விதவைகளின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.



1982 மார்ச் 27]

(vi) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாத்தூரில் அகதி மகளிருக்கு அரசின் தனி விடுதி :

நிராதரவு அகதியான மகளிருக்கும், அவர்தம் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்தகைய மகளிர் தங்கள் கணவன் பர்மா போன்ற நாடுகளிலிருந்து திரும்பி வரும்வரை அல்லது தங்கள் உறவினரை கண்டுபிடிக்கும் வரை இந்த விடுதியில் தங்கலாம். உறவினர் இருப்பின் அவர்கள் இத்தகைய அகதிகளை சொந்தச் செலவில் பாதுகாப்பதற்கான உறுதிமொழியை எழுத்துமூலம் எழுதி கண்காணிப்பாளரிடம் தரவேண்டும். அவர்களுக்கு சிறு வியாபாரம் செய்ய கடன் உதவி மற்றும் வேலை வாய்ப்பு அளிப்பது போன்ற உதவிகள் செய்யப்படுகின்றன. பர்மா அகதி குழந்தைகளுக்கான அரசு தனி விடுதிகளிலிருந்து மாற்றப்படுகின்ற 14 வயதிற்கு மேற்பட்ட மாணவிகள் இந்த விடுதியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பள்ளி இறுதித் தேர்வு முடியும் வரை அவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

அனைத்து பயிற்சியாளர்களுக்கும் இலவசமாக உணவு மற்றும் தங்குமிடம் அளிக்கப்படுகிறது. இந்தச் செலவினங்கள் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டு தோறும் ஒரு ஜோடி துணி வீதம் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த விடுதியுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்தகத்திலிருந்து மருத்துவ வசதியும் கொடுக்கப்படுகிறது. இதற்கென 1982–83-ல் ரூபாய் 1.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) மேல்பாக்கத்தில் ஏழைகள் பராமரிப்பு இல்லம் :

தமிழ்நாடு பிச்சை எடுத்தலைத் தடுக்கும் சட்டம், 1945-ன் படி தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்காக மேல்பாக்கத்தில் ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஒன்று நடைபெற்று வருகிறது. இவ்வில்லம் 1973ஆம் ஆண்டு முதல் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆண்களில் 770-ம், பெண்களில் 190-ம் ஆகும். ஆனால், ஆண்களில் 283 நபர்களும், பெண்களில் 40 நபர்களுமே தற்போது இருக்கிறார்கள். இவர்களுக்கு நெசவு, தச்சு, தையல் போன்ற துறைகளில் தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1982–83ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 7.61 இலட்சமாகும்.

(viii) முதியோருக்கான விடுதி :

ஆண், பெண் இருபாலரில் யாராலும் கவனிப்பாரற்று இருக்கும் முதியோருக்காக திருச்சியில் ஒரு முதியோர் விடுதி திறக்கப்பட்டுள்ளது. அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 5 நபர்கள் ஆகும். உணவு மற்றும் வாடகை செலவாக மாதம்

ஒன்றுக்கு ரூபாய் 140 இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண் பெண் இருவரில் மாத வருமானம் ரூபாய் 350 வரை உள்ளவர்கள் இவ்வில்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

## IV. குழந்தைகள் நலன்

குழந்தைகள் நலன், பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அரசின் இக் குழந்தை நலத் திட்டங்கள் சத்துணவு வழங்குதல், இளங் குழந்தைகளுக்கு பள்ளிக் கல்விக்கு முந்தைய கல்வி அளித்தல், உடல்நல சோதனை செய்தல், நோய்த் தடுப்பூசிகள் போடுதல் ஆகியவை உள்ளடக்கியவை. குழந்தை நலத் திட்டப் பணிகளுக்காக 1980–81ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 219.97 இலட்சங்கள் 1981–82 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 231.22 இலட்சங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. பல்வேறு குழந்தை நலத் திட்டங்கள் மூலம் இம் மாநிலத்தில் பயன்பெறுவோர் எண்ணிக்கை 6.81 இலட்சம் ஆகும்.

### (1) கிராமப்புறங்களில் குழந்தை நல நிலையங்கள்;

2½ வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளும், சூலுற்ற மற்றும் பாலூட்டும் மகளிரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். கேர் நிறுவனத்தால் வழங்கப்படும் பாலஹார் மற்றும் சாலடு எண்ணை பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் முறையே 80 கிராம் மற்றும் 4 கிராம் என்ற விகிதத்தில் காய்கறிகளுடன் சேர்த்து உப்புமா அல்லது கிச்சடி வடிவில் வழங்கப்படுகின்றன. மருத்துவச் சோதனைகள் உள்ளூர் மற்றும் ஆதார சுகாதார நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை 3.76 இலட்சமாகும். 1982–83ஆம் ஆண்டில் ரூபாய் 16.92 இலட்சம் செலவில் மேலும் 200 குழந்தை நல நிலையங்கள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. 1962ஆம் ஆண்டு 21 பஞ்சாயத்து ஒன்றியங்களில் 747 குழந்தை நல நிலையங்களுடன் தொடங்கப்பட்ட இத்திட்டம் இன்று தமிழகத்தின் தொலைதூர கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது, தமிழகமெங்கும் 4,343 குழந்தை நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.





இந்த 4,343 நிலையங்களில் 502 குழந்தை நல நிலையங்கள் ஆதி திராவிடர்களின் குழந்தைகளுக்காகவும், 10 பணியர்களின் குழந்தைகளுக்காகவும், 5 அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் குழந்தைகளுக்காகவும், 5 ஸ்ரீலங்கா அகதிகள் குழந்தைகளுக்காகவும் தனித்தன்மையாக செயல்பட்டு வருகின்றன. குழந்தை நல நிலையங்கள் உள்ளூர்வாசிகளால் அளிக்கப்பட்டுள்ள இல்லங்களில் செயல்பட்டு வருகின்றன. கேர் நிறுவன உதவியுடன் இதுகாறும் 1,000 சொந்தக் கட்டடங்கள் குழந்தை நல நிலையங்களுக்காக கட்டப்பட்டு உள்ளன. 1981–82-ல் 20 குழந்தை நல நிலையங்களும் 1982–83-ல் மேலும் 20 குழந்தைநல நிலையங்களும் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### (2) பழங்குடியினர் வாழ் பகுதியில் குழந்தை நலநிலையங்கள்:—

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்வராயன் குன்றுகள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது குன்றுகள், சேலம் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மற்றும் அருந்து மலை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி குன்றுகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சித்தேரி குன்றுகள், பச்சைமலை ஆகிய இடங்களில் பழங்குடியினரின் குழந்தைகளுக்காக மட்டுமே திறக்கப்பட்டுள்ள 169 குழந்தைநல நிலையங்களைத் தவிர தென்னாற்காடு, மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் வாழும் ஆதி பழங்குடியினர் குழந்தைகளுக்காக தனியாக 25 குழந்தை நல நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், இத்திட்டத்தால் 7,760 பழங்குடினரின் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இத்திட்டப் பணிகளுக்காக 1982–83 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 6.14 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3. தனியார் நிறுவனங்கள் நடத்தும் குழந்தை நல நிலையங்கள்—

தனியார் நிறுவனங்கள் சிலவும் குழந்தை நல நிலையங்கள் நடத்தி வருகின்றன. இத்துறையின் மூலம் கேர் உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் குழந்தை நல நிலையங்கள் மூலம் 10,000 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

### (4) ஒருங்கிணைந்த குழந்தை வளர்சித் திட்டப் பணிகள் :—

தமிழ்நாட்டில், சென்னை மாநகர், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி, மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில், இந்திய அரசால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டங்கள் ஒவ்வொரு இடத்திலும் 100 அங்கன்வாடிகளைக் கொண்டு மொத்தம் 300 அங்கன்வாடிகளுடன் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் அம்சங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன :—

1. துணைச் சத்துணவு.

2. நோய்த் தடுப்பூசி போடுதல்.

3. உடல் நல பரிசோதனை.

4. மேற் சோதனைகளுக்கு பரிந்துரை செய்தல்.

5. சத்துணவு மற்றும் சுகாதார கல்வி; மற்றும்

6. முறை சாரா கல்வி.

இத்திட்டத்தின் கீழ் வளர்ந்த பெண்களுக்கு நடைமுறைக் கல்வியும் அளிக்கப்படுகிறது. 21,000 குழந்தைகளுக்கும், 9,000 சூலுற்ற மகளிருக்கும் துணைச் சத்துணவு அளிப்பதற்கான முழு செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. துணைச் சத்துணவு திட்டத்தின் கீழ் குழந்தை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 25 பைசா என்ற வீதத்திலும் மகளிர் ஒருவருக்கு 40 பைசா என்ற வீதத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் பயனடைவோருக்கு சுதேசி உணவு வகைகளான சாதமும் காய்கறிகள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. தடுப்பூசி போடுதல், முறைசாரா கல்வி உள்ளிட்ட இதர செலவினங்கள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படும் 100 குழந்தை நல நிலையங்களிலும், குழந்தை காப்பக வசதிகள் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தற்போது மூன்று இடங்களில் செயல்பட்டு வரும் இத்திட்டத்தை, 1982–83 ஆம் ஆண்டில் மேலும் 36 திட்டங்களுக்கு விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 3 திட்டங்களுக்கும் எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவான ரூ. 50.63 இலட்சத்தில், ரூ. 19.93 இலட்சத்தை இந்திய அரசும், ரூ. 30.70 இலட்சத்தை தமிழ்நாடு அரசும் ஏற்கும்.



5. உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தாய் சேய் நலப் பணிகள் திட்டம் :

உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தாய் சேய் நலப்பணிகள் திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 3 வயது வரை மற்றும் 3 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், சூலுற்ற மற்றும் பாலூட்டும் மகளிர்க்கும் கீழ்க்கண்ட செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :—

(1) துணைச் சத்துணவு.

(2) நோய்த் தடுப்பூசி போடுதல்.

(3) உடல் நல பரிசோதனை.

(4) மேற் சோதனைகளுக்கு பரிந்துரைத்தல்.

(5) சுகாதார மற்றும் சத்துணவு கல்வி, மற்றும்

(6) முறை சாரா கல்வி.

தற்போது இத்திட்டத்தின் கீழ் 126 குழந்தை நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் நல நிலையமும் ஒரு குழந்தை நல அமைப்பாளர், இரு ஆயாக்கள் மற்றும் மூன்று மருத்துவ அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மருத்துவப் பணியாளர்கள் உதவியுடன் மருத்துவ அலுவலர்கள் நடமாடும் மருத்துவமனை வாயிலாக மருத்துவ பரிசோதனைகள் நடத்தி வருகின்றனர். துணைச் சத்துணவு திட்டத்தின் கீழ் கேர் நிறுவனம் இலவசமாக வழங்கும் பாலகாருடன் உணவு வகையிலான செலவினமாக 4·5 பைசா பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது.

12,600 பேர் பயனடையும் இத்திட்டத்திற்கு 1982–83 ஆம் ஆண்டிற்கு ரூ. 44.79 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

6. வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு நிலையங்கள்.—

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்றிருக்கும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்க சமூக நலத் துறையால் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மிக ஏழ்மை நிலைமையிலுள்ள மக்களுக்கு சத்துணவு அளிப்பது என்பது வறட்சி நிவாரணத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

[1982 மார்ச் 27

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களில் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் நலனுக்காக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 3,000 வறட்சி நிவாரண நிலையங்களை 13 மாவட்டங்களில் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 2,067 நிலையங்கள் ஜூன் 1981-லும் மீதமுள்ள 933 நிலையங்கள் ஜூலை 1981-லும் ஆரம்பிக்கப்பட்டன.

இத்திட்டம் முடிவுறும் வரை ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கும், கருவுற்றிருக்கும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 120 முதல் 150 கிராம் வரை பருப்பு, அரிசி, காய்கறிகள் கொடுக்கப்பட்டது. இதனால் தினம் பலனடைந்தோரின் எண்ணிக்கை 2,06,700 ஆகும். மேற்கண்டவாறு இரண்டாம் கட்டமாக மேலும் 933 நிலையங்கள் நிறுவப்பட்ட பின் பலனடைந்தோரின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் 3,00,000-க்கும் உயர்ந்துள்ளது.

மேற்கண்ட திட்டம் மூன்று மாத காலம் செயல்படுத்தப்பட்டது. அதற்கென அங்கீகரிக்கப்பட்ட ரூ. 1.75 கோடியில் மேற்படி திட்டம் 30-9-1981 இல் முடிவுற்றவரை ரூ. 1.55 கோடி செலவிடப்பட்டது.

மேற்படி திட்டம் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்படும் நிலையிலுள்ள மக்களுக்கு பெருமளவில் பயனளித்ததோடு மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளோருக்கும் ஒரு நிவாரணமாக அமைந்தது.

7. சிறப்புச் சத்துணவுத் திட்டம்

பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆறு வயதுக்குட்பட்ட முன்பள்ளி குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியவர்களுக்கு சத்துணவு அளிப்பதற்காக 1970-71 ஆம் ஆண்டு முதல் சமூக நலத்துறையால் சிறப்புச் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள கேர் நிறுவனம் பாலஹாரும் எண்ணையும் இலவசமாக அளித்து வருகிறது. ஒவ்வொரு நபருக்கும் பாலஹார் 80 கிராம், எண்ணெய் 7 கிராம் வீதம் உப்புமா, கிச்சடி, பொங்கல் போன்ற உணவு வகைகளாக தினமும் பரிமாறப்படுகிறது. மேற்படி உணவு வகை தயாரிக்க தேவையான இதர பொருட்கள் செலவு, போக்குவரத்து செலவு, சமையல்காரர், உதவியாளர், கண்காணிப்பாளர், எழுத்தர், ஆகியவர்களின் செலவு வகையில் மேற்படி திட்டத்தில் பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 6 பைசா வீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு தொடர் மானியமாக அளிக்கப்படுகிறது. சிறு சமையலறை கட்டவும், சிறு வாகனங்கள் வாங்கவும் பயனடைவோர் நபர் ஒருவருக்கு ரூ. 5 வீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு தொடரா மானியம் அளிக்கப்படுகிறது. சிறப்புச் சத்துணவு திட்டத்தின் கீழ் பயனடைவோரின் உடல் நலத்தைப்





பேணிக் காப்பதிலும் நோய் தடுப்பூசி போடுவதிலும் உள்ளாட்சி மன்றங்கள் அக்கறை செலுத்துகின்றன. 1982-83 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்திற்கு ரூ. 28.19 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1,35,491 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பலனடைந்து வருகின்றனர்.

மருத்துவ உதவியுடன் கூடிய திருத்தியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம்:

சென்னை, மதுரை, கோவை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் மருத்துவ உதவியுடன் கூடிய திருத்தி அமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு வீட்டிலேயே ஊட்டச் சத்துணவு சமைத்தளிக்க, பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு முறை 700 கிராம் பாலஹார் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக தனியாக அமைக்கப்பட்ட மருத்துவக் குழு மூலம் பயனடைவோர் உடல்நலம் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பரிசீலனை செய்யப்படுகிறது. சமூக நல இயக்குநரின் மேற்பார்வையில் உள்ளாட்சி மன்ற நிர்வாக அலுவலர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தும் முழுப் பொறுப்பை ஏற்று வருகின்றார்கள்.

1981-82-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 1,41,035 ஆகும், 1982-83-ம் ஆண்டிற்கு மேற்படி திட்டத்திற்கு ரூ. 28.19 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டு உள்ளது.

9. ஆதரவற்ற குழந்தைகள் நலத் திட்டங்கள்.
(1) அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்கள்.

சமூக நலத்துறையால் நடத்தப்படும் அனாதை இல்லங்கள் சென்னை, மதுரை, கன்னியாகுமரி மற்றும் சேலம் ஆகிய நான்கு இடங்களில் இயங்கிவருகின்றன, ஒவ்வொன்றும், 5 முதல் 12 வயதுக்குட்பட்ட 250 குழந்தைகளை கொண்டு இயங்கி வருகின்றது. இங்குள்ள குழந்தைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ உதவி மற்றும் கல்வி ஆகிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. இங்குள்ள குழந்தைகளுக்கு ஐந்தாம் வகுப்பு வரை அனாதை இல்லங்களிலேயே கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல், கல்வி பெற அவர்கள், அரசு அல்லது மாநகராட்சி பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். 1982-83-ம் ஆண்டிற்கு ரூ. 7.61 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கான உதவி.

ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள் ஆரம்பிக்க தனியார் நிறுவனங்களுக்கு அரசு உதவி அளித்து வருகிறது, ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ உதவி, கல்வி, தொழிற்பயிற்சி ஆகியவை அளிக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பெரிய நிலையங்களை ஏற்படுத்தி அதிகச் செலவு செய்வதை தவிர்த்து சிறு குடில்கள் மூலம் 25 குழந்தைகளைப் பராமரிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். 1979 மார்ச் வரை இத்திட்டத்திற்கான 90 விழுக்காட்டு செலவினத்தை மத்திய அரசு ஏற்று வந்தது. எஞ்சியுள்ள 10 விழுக்காட்டை தனியார் நிறுவனங்கள் ஏற்று வந்தன. ஆனால் 1979, ஏப்ரலிலிருந்து 90 விழுக்காட்டு செலவு மாநில அரசாலும் எஞ்சியுள்ள 10 விழுக்காடு தனியார் நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி மத்திய அரசு உதவி பெற்று வந்த 94 தனியார் நிறுவனங்களுக்கு 90 விழுக்காட்டு செலவை மாநில அரசும் 10 விழுக்காட்டுச் செலவை தனியார் நிறுவனங்களும் ஏற்றுவருகின்றன.

1—4—1979-க்கு பின் தனியார் நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட குடில்கள் 45:45 என்ற விகிதத்தில் மைய அரசு மற்றும் மாநில அரசிடமிருந்தும் மீதமுள்ள 10 சதவீதம் தனியார் நிறுவனங்களாலும் செலவினங்கள் பெறுகின்றன.

தற்போது 24 நிறுவனங்கள் மேற்படி மானியத் தொகையை இந்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மொத்த குழந்தைகள் எண்ணிக்கை 12,390.

ஆதரவற்றோர் இல்லங்கள் நடத்திவரும் நிறுவனங்களுக்கு கட்டிடங்கள் கட்டவும் அரசு மான்யம் அளிக்கிறது. பலப்படுத்தப்பட்ட கான்கிரீட் கூரை கொண்ட குடில் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 1,61,700-ம் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரை கொண்ட குடில் ஒன்றுக்கு ரூ. 1,18,500 வரையிலும் அளிக்கப்படுகிறது. இதற்கான 1982–83 க்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 63 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) சமூக நலத்துறை கிளைகளில் சமூக நல நடவடிக்கைகள்.

சமூக நலத்துறையின் 50 கிளை நிலையங்கள் தமிழ்நாடெங்கும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிளை நிலையமும் ஒரு அமைப்பாளரின் பொறுப்பில் உள்ளது. இவ்வமைப்பாளர் காலையில் பாலர் பள்ளி நடத்துவதுடன், மாலையில் இல்லம் இல்லமாகச் சென்று பயனுறு குடும்பக் கலைகளை போதிப்பதுடன், சத்துணவு, குழந்தை பராமரிப்பு ஆகியவை குறித்தும் பயிற்சி அளிக்கின்றனர். 50 கிளை நிலையங்களாலும் பயன்பெறும் குழந்தைகளுக்கு பாலஹார், உணவு வழங்கப்படுகிறது. இவ்வமைப்பாளர்கள், பெண்கள், தையல் போன்ற பயனுறு கலைகளை பயில்வதில் உதவுகின்றனர் உடைகள் தைத்து கொடுப்பதன் மூலம் உபரி வருமானம் பெறுவதிலும் இப்பெண்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. நகர்புறங்களில் இத்திட்டப் பணிகளை இக்கிளைகள் பொறுப்பேற்கும் வகையில் கிளை நிலையங்களின் பணியை ஒழுங்கு செய்யும் ஒரு திட்டமும் உள்ளது.



10. உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு சத்துணவுத் திட்டம்.

1980–85-ம் ஆண்டுகளில், செங்கல்பட்டு, வட ஆற்காடு, மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள 170 வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தை படிப்படியாக அமுல் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 16 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச் சத்து குறைவைப் போக்குவதும், இறப்பு விகிதத்தைக் குறைத்தலுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். சத்துணவு, சுகாதாரம், பிரச்சாரக் கல்வி மற்றும் மதிப்பீடு ஆகியவை இத் திட்டத்தின் நான்கு பகுதிகளாகும். இத்திட்டம் சமூகநலத் துறையால் சுகாதாரத் துறையின் ஒதுத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சத்துணவு வழங்கும் பொறுப்பை சமூக நலத்துறை ஏற்றுள்ளது.

சமூகம் சத்துணவு நிலயைலங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தில் 1,500 மக்களுக்கு ஒரு நிலயைம் என்ற விதத்தில் சமூக சத்துணவு நிலயங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையமும் ஒரு சமுகச் சத்துணவு ஊழியரின் பொறுப்பில் உள்ளது. கிராம மட்டத்தில் இச் சமூக சத்துணவு நிலையமே அனைத்து டணிகளுக்குமான ஆதார நிலையமாக செயல்படுகிறது. 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான அனைத்து குழந்தைகளும் எடையிடப்பட்டு தேர்வு செய்யப்பட்ட சத்துணவு குறைவினால் அவதியுறும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

சத்துணவுக் கல்வியின் ஒரு பகுதியாக, தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 'ஏ' விட்டமின் மாத்திரைகளும், நான்கு மாதங்களுக்கு ஒருமுறை புழு கொல்லி மருந்துகளும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. தீவிர வயிற்றுப் போக்குத் தடுப்புத் திட்டமும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவதுறை

பணியாளர்கள் மூலம் தடுப்பூசிகளும் போடப்பட்டு வரு
கின்றன. இத்திட்டங்களுக்கு ஆதரவாக பிரச்சாரக் கல்வி
இயக்கமும் தொடங்கப்பட்டுள்ளது. திரைப்படம், நாளிதழ்,
வானொலி, சுவரொட்டி, வீட்டுப் பிரச்சாரம், குழுக் கூட்டங்
கள். செயல்முறை விளக்கங்கள் முதலியவை மூலம் இப்பிரச்
சார கல்வி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் நான்கு
பகுதிகளையும் நிர்வகிக்கும், வெவ்வேறு துறைகளின் நட
வடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் வகையில் திட்ட ஒரு
முகப்படுத்தும் அலுவலகம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

படிப்படியாக நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் முன்
னோடித் திட்டம் மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி
வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கொட்டாம்பட்டி முன்
னோடி திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள 66 சமூக
சத்துணவு நிலையங்கள் மூலம் பல்வேறு பணிகள் நிறை
வேற்றப்பட்டு வருகின்றன. 1981–82-ல் மதுரை மாவட்டத்
திலுள்ள (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்
மேற்கொள்ளப்பட்டுள்ள நிலக்கோட்டை வட்டம் நீங்கலாக)
32 வட்டாரங்களுக்கும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.
திட்ட அமலுக்கான பணியாளர் பயிற்சி அனைத்தும் முடிவு
பெற்றுவிட்டன. சமூக சத்துணவு நிலையங்கள் யாவும் 1982
பிப்ரவரி முதல் செயல்பட தொடங்கிவிட்டன. இத்திட்டம்
அமல்படுத்தப்பட்டுள்ள மதுரை மாவட்டத்தில் 1,878 சமூக
சத்துணவு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்
திற்கு 1982–83-ம் ஆண்டுக்கு ரூ. 362.8 லட்சம் ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

1982–83-க்கான நிதி நிலை அறிக்கையில் ஏழ்மை
நிலையிலுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டம் ஒன்
றினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்
கள். அத்திட்டத்தின் கீழ் 2–10 வயதிற்குட்பட்ட ஏழ்மை
நிலையிலுள்ள எல்லா குழந்தைகளையும் பயனடையச் செய்
வதே அரசின் நோக்கம். அத்திட்டத்தை நடைமுறை
படுத்தும் வழிவகைகள் தனியாக வகுக்கப்பட்டு வருகின்றன.
அத் ட்டம் செயல்படுத்தப்படும்போது தற்சமயம் இத்துறையால்
நடைமுறைப் படுத்தப்படும், பல உணவு வழங்கும் திட்டங்கள்
சில மாறுதல்களைடைய வாய்ப்புண்டு.

## V. ஊனமுற்றோர் நலன்.

உடல் ஊனமுற்றோருக்கு சமத்துவம் அளித்தலும், அவர்
களை சமுதாயத்தில் முழு பங்கேற்கச் செய்வதுமே உலக
ஊனமுற்றோர் ஆண்டின் குறிக்கோளாகும். ஐக்கிய நாடு
களும், இந்திய அரசும் வகுத்த குறிக்கோள்கள் மற்றும்
திட்டங்களின்படி சிறப்புக் கல்வியை விரிவுப்படுத்தல், பயிற்சிகள்
அளித்தல், வேலை வாய்ப்புக்கு வழிவகைகள் செய்தல்
மற்றும் ஊனமுற்றோரின் மறுவாழ்விற்கான வழிவகைகள்
செய்தல் ஆகியவற்றில் தற்போது நடை முறையில்



இருக்கும் பல்வேறு திட்டங்களுடன் 1981–82-ல்
தமிழக அரசு 17 புதிய திட்டங்களை செயல்முறைக்கு எடுத்துக்
கொண்டது. ஊனமுற்றோர் நலன்களுக்காக ஒதுக்கப்பட்ட
மொத்த நிதி ஒதுக்கீடு 1981–82-ல் இரண்டு மடங்காகப் பெருகி
யிருக்கிறது. 1980–81-ல் ரூ. 65 லட்சமாக இருந்த நிதி
ஒதுக்கீடு 1981–82-ல் ரூ. 125 லட்சங்களாக உயர்த்திருக்
கிறது.

ஊனமுற்றோர் நலனுக்காக தொடங்கப்பட்ட புதிய திட்டங்
கள் யாவும் செயல்படுத்தப்பட்டு 1981–82-ல் சுமார் 30,000
ஊனமுற்றோர் மறுவாழ்வு உதவிகள் பெற்றிருக்கின்றனர். இத்
திட்டங்களுடன், 1982–83-ல் இத்துறை இன்னும் சில புதிய
திட்டங்களை செயல்படுத்த இருக்கிறது. தற்போது நிறைவேற்
றப்படும் திட்டங்கள் பின்வருமாறு :—

### 1. ஊனமுற்றோர்க்கு கல்வி வசதிகள்.

(அ) சிறப்புப் பள்ளிகள்:—பார்வையிழந்தவர்கள், காது
கேளாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மனநிலை குன்றியவர்
கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற
ஊனமுற்றறோர்களுக்காக 25 அரசுப் பள்ளிகள் மற்றும் 24 அரசு
மான்யம் பெறும் தனியார் பள்ளிகள் மூலமாக சிறப்புக் கல்வி
வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 25 அரசுப் பள்ளிகளில்
ஒரு சில பள்ளிகள்—அதாவது காது கேளாதவர்களுக்கு 2 பள்ளி
கள் ஈரோடு மற்றும் விருதுநகரிலும், பார்வையிழந்தவர்களுக்கு
2 பள்ளிகள் தர்மபுரி மற்றும் கோயம்புத்தூரிலும், உடல் ஊன
முற்றவர்களுக்கு ஒன்று மதுரையிலும் 1981–82-ம் ஆண்டில்
தொடங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்ற சிறப்புப்
பள்ளிகளின் விபரம் வருமாறு :—

| எண். | பள்ளியின் வகை. | அரசுப் பள்ளிகள். | மான்யம் பெறும் பள்ளிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பார்வையற்றோர் பள்ளி .. | 12 | 9 |
| 2. | செவிடர் பள்ளி .. .. | 11 | 10 |
| 3. | தொழுநோய் பிடித்தோருக்கான பள்ளி .. .. .. | .. | 1 |
| 4. | சித்த சுவாதீனமற்றோர் பள்ளி | .. | 2 |
| 5. | ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. | 1 | 1 |
| 6. | முடவர் பள்ளி .. .. | 1 | 1 |
| | மொத்தம் .. | 25 | 24 |

இவைத் தவிர இளம்பிள்ளை வாதம் முடக்குவாதம் முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டு, சென்னை அரசினர் பொது மருத்துவமனை, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் முட நீக்கியல் வார்டுகளில் நெடுங்காலமாகச் சிகிச்சை பெற்று வருகின்றன குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பதற்காகத் தனிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் அனைத்துமே, இந்த மருத்துவ மனைகளில் தலைமை அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளன. இவற்றிற்காகும் செலவை சமூக நலத்துறை ஏற்றுக் கொள்கிறது.

இந்தத் தனிப் பள்ளிகள் மூலம் 1981–82-ம் ஆண்டில் 4.400 மாணவர்கள் பயின்றனர். 432 ஆசிரியர்கள் பணியாற்றினர். 1981–82-ம் ஆண்டில் இதற்காக ரூ. 33.35 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982–83-ம் ஆண்டில் ரூ. 37.96 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய அரசின் படிப்புத்தவித் தொகைகள் :

மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், 14 முதல் 40 வயது வரம்பிற்குட்பட்ட உடலூனமுற்ற நபர்களுக்கு (14–30 வயதுத் தொகுதியினருக்குக் கல்விக்காக 14–40 வயதுத் தொகுதியினருக்குத் தொழிற்சாலைப் பயிற்சிக்காக) பொது கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வியைத் தொடரவும், தொழிற்சாலையில் பயிற்சி பெறவும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. கல்வியை பொறுத்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 125 வரை படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1978–79-ம் ஆண்டில், 561 பேருக்கு ரூ. 3.13 இலட்சமும், 1979–80-ம் ஆண்டில் 998 பேருக்கு ரூ. 5.65 இலட்சமும், 1980–81-ம் ஆண்டில் 892 பேருக்கு ரூ. 5.08 இலட்சமும், 1981–82-ம் ஆண்டு 1,245 பேருக்கு ரூ. 6.47 இலட்சமும் படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டது.

(இ) மாநில அரசு படிப்புதவித் தொகை :

முதல் வகுப்பிலிருந்து 8 ஆவது வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்புப் புத்தகங்கள் வாங்குவதற்காக 1981–82-ல் புதிதாக ஒரு திட்டம் ரூ. 2 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி அத்தகைய மாணவர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 25 வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை 8,000 ஆகும். 1982–83-ம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 2 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



(ஈ) சித்த சுவாதீனமற்றோருக்காக நிலையங்கள் :

100 சித்த சுவாதீனமற்ற ஏழைக் குழந்தைகளுக்கு தங்க வசதியும், கல்வியும் அளிக்கும் பொருட்டு ரூ. 2.62 இலட்சம் செலவில் ஒரு நிலையம் நிறுவுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(எ) காதுகேளாத மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்

காது கேளாத குழந்தைகளுக்குக் கற்பிக்கும் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ், காது கேளாத குழந்தைகளுக்கு நவீன முறையில் கற்பிப்பதற்கு சென்னை காது கேளாதோர் பள்ளி (லிட்டில் ஃப்ளவர் கான்வென்ட்) மூலமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலத்தில், பயிற்சி ஆசிரியர்களுக்கு, அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்துடன் தனிச் சம்பளம் ரூ. 25-ம் சேர்த்து வழங்கப்படுகிறது. 1981–82-ம் ஆண்டில் 30 ஆசிரியர்களுக்கு மேற்கண்ட பயிற்சியளிக்க ரூ. 1.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பயிற்சி நவம்பர் 1981-ல் துவங்கியது இதுவரை 113 ஆசிரியர்கள் இப்பயிற்சியின்கீழ் பயனடைந்துள்ளனர். 1982–83-ம் ஆண்டிற்கு ரூ. 0.62 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சித்த சுவாதீனமற்ற குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக 20 தகுதிபெற்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க ஒவ்வொராண்டும் சென்னையில் இயங்கிவரும் பாலவிஹார் குழந்தைகள் காப்பகத்திற்கு ரூ. 0.45 இலட்சம் அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலம் ஓராண்டாகும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 157 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

(ஏ) பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வட்டார நிலையம் .—

பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் வட்டார நிலையம், 1969-ம் ஆண்டில் பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசினர் பள்ளியின் வளாகத்தில் அமைக்கப்பட்டது. மேற்படி பள்ளியின் முதல்வர், பயிற்சிநிலையத்தின் கௌரவ இயக்குநர் ஆவார். நான்கு தென் மாநிலங்களிலிருந்து அந்தந்த அரசுகள் தேர்ந்தெடுத்து அனுப்புகிற ஆசிரியர்களுக்கு பார்வையற்றோருக்கு கல்வி கற்பிப்பதற்காக தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 10 மாதங்களாகும். ஒவ்வொரு தொகுதியிலும் 12 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்

களாகயிருந்தால் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு உதவித் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 110-ம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகயிருந்தால் மாதமொன்றுக்கு ரூ. 25-ம் வழங்கப்படுகிறது, இது தவிர. பயிற்சி பெறுபவர்களுக்குப் படிப்புப் படியாக மாதம் ரூ. 53 அளிக்கப்படுகிறது.

ஊனமுற்றோர் ஆண்டில் அரசு கூடுதலாக 15 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அனுமதி அளித்திருக்கிறது.

2. ஊனமுற்றோருக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சி:

(அ) நவீன பயிற்சி—உற்பத்தி பணிமனை, முட்டுக்காடு.

1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூபாய் 30.00 இலட்சம் செலவில் அமைக்கபட்ட இப்பணிமனை உருக்குப் பொருள்கள் தயாரிப்பு, வார்ப்புத் தொழில், பெட்டிக்கடை தயாரித்தல், முச்சக்கர வண்டி தயாரித்தல் போன்ற தொழில்களில் 77 ஊனமுற்றோர்க்குப் பயிற்சி அளித்துள்ளது. இப்பணிமனை 1980 முதல் உற்பத்திக் கூடமாக மட்டும் செயல்பட்டு வருகிறது. 1980—81-ல் ரூ. 4.1 இலட்சம் பெறுமான பொருள்கள் தயாரிக்கப்பட்டன. 1981—82 இல், ரூ. 4.5 இலட்சம் பெறுமான பொருட்கள் தயாரிக்கப்பட்டன.

பயிற்சி பெற்ற 77 ஊனமுற்றோர்க்கு அரசு அச்சகம், டான்சி அரசு போக்குவரத்துக் கழகங்கள் போன்ற அரசு நிறுவனங்களில் தக்க வேலை வாய்ப்பு வசதிகள் செய்துதர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எல்லா பயிற்சி பெற்ற ஊனமுற்றோரும் பணியில் அமர்த்தப்பட்டபின் இப்பணிமனை குறிப்பிட்ட பொறியியல் பிரிவுகளில் வாழ்க்கை தொழிற் பயிற்சி அளிக்கும் ஒரு பயிற்சிக் கூடமாக செயல்படத் துவங்கும்.

(ஆ) ஸ்ரீசேவா மந்திரில் பயிற்சியளித்தல். —

உடல் ஊனமுற்ற மகளிருக்கு சென்னையில் உள்ள ஸ்ரீசேவா மந்திர் மூலம் வாழ்க்கைப் பயிற்சிக் கல்வி அளிக்கப்படுகிறது. முதல் இரண்டு தொகுதி பயிற்சியாளர்கள் முறையே டிசம்பர் 1978 மற்றும் சூன் 1980 இல் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, உடைகள் தயாரித்தல், பூத்தையல், வேலை பொம்மைகள் செய்தல் முதலியவற்றில் பயிற்சி பெற்றனர். 1981—82 ஆம் ஆண்டு உடல் ஊனமுற்ற மகளிர்க்கு உணவு செய்முறை—பாதுகாத்தலில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. 1982—83 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 55 ஊனமுற்ற மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று பயன் அடைந்துள்ளனர்.



(இ) வயது வந்த பார்வையற்றோருக்கு கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் திட்டம், கிண்டி. —

வயது வந்த பார்வையற்றோருக்குக் கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் தொழில்களில் பயிற்சியளிக்கும் திட்டம் கிண்டியில் 1967 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கிண்டியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வயது வந்த பார்வையற்றோரில் பள்ளிக் கல்வியை முடித்தவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் தொழில்களில் 6 மாத காலத்திற்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1967 முதல் 1982 முடிய 453 பார்வையற்றோர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் 248 நபர்களுக்கு அரசு மற்றும் பொது நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வசதிகள் செய்து தரப் பட்டுள்ளன. 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 1·62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 1.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

3. ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு.

(அ) உடல் ஊனமுற்றோர் சிறு கடைகள் அமைப்பதற்கு உதவியளித்தல். —

வங்கிகளின் மூலம் கடன் உதவிப் பெற்று, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் சிறு கடைகள் அமைக்க, ஊனமுற்றோர்க்கு உதவி அளிக்கப்படுகிறது. சிறு கடை அமைப்பதற்கு ஆகும் செலவு ரூபாய் 1,000 த்திற்கு மேற்பட்டால் அவர்களுக்கு வங்கியிலிருந்து கடனுதவியோடு அரசின் உதவித் தொகையாக ரூ. 500 அளிக்கப்படுகிறது. சிறு கடை அமைப்பதற்கு ஆகும் செலவு ரூ. 1,000த்திற்கும் கீழ் இருந்தால் அரசின் உதவித் தொகை ரூ 250 ஆக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1979—80 முதல் 1981—82 முடிய 510 ஊனமுற்றோர்கள் பயன் அடைந்துள்ளனர்.

(ஆ) பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல். —

இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புக்காக தமிழ்நாட்டு. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்களும், பயிற்சி பெற்றவர்களுமான உடல் ஊனமுற்றோர் சுமார் 1,500 பேர் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகு பயிற்சியை முடித்தபின் அவர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவர். தொழில் பழகும் காலத்தில், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், மாதம் ரூ. 150 பயிற்சி உதவித் தொகையாக அரசு அளிக்கும். தொழில் பழகும் காலம் முடிந்தவுடன் அத்தொழிற்சாலை அவரைப் பணிக்கு, எடுத்துக் கொள்ளும். இத்திட்டம் 1982—83 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும். இதற்கு ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979—80 முதல் 1981—82 முடிய 735 பயிற்சிப் பெற்ற ஊனமுற்றோர் தொழில் பழகுவோராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ) பார்வையற்றோர்க்கான கூட்டுறவு நெசவு பயிற்சிக்கூடம்

பார்வையற்றோர்க்காக கூட்டுறவு நெசவு பயிற்சிக்கூடம் ஒன்று அரசு ஆரம்பித்துள்ளது. இந்த நிலையம் 120 பார்வையற்றோர்களுக்கு நான்கு தொகுதிகளில் அரசு மருத்துவமனைகளுக்கு தேவைப்படும் படுக்கை விரிப்புகள், கட்டுத் துணிகள், மேல் துண்டுகள் போன்றவற்றை நெய்வதற்கு பயிற்சி அளிக்கிறது. பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி பெற்றவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் உறுப்பினர்களாகி சுயமாக சம்பாதிப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது. இப் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லி அரசு பார்வையிழந்தோர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் செப்டம்பர் 1981 முதல் செயல்பட்டு வருகிறது. முதல் தொகுதி தற்போது பயிற்சியில் இருக்கிறது. இத்திட்டம் 1982–83 ஆம்ஆண்டும் தொடர்ந்து நீடிக்கும். இதற்கென ரூ. 1.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(ஈ) பார்வையற்ற மகளிருக்கு தொழிற் கூடங்களுடன் கூடிய மறு வாழ்வு இல்லம் :—

பார்வையற்ற மகளிருக்காக சென்னையில் மறு வாழ்வு இல்லம் ஒன்று, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. மகளிர் இங்கு தங்கியிருந்து தொழிற் பயிற்சி பெற வசதிகள் உள்ளன. பார்வையிழந்து, வறுமையில் வாடி ஆதரவளிக்க யாருமில்லாத நிலையிலுள்ள மகளிரின் (40 வயதுக்குக் குறைந்த) கல்வித் தகுதி என்னவாயிருப்பினும், அவர்கள் இந்த இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு நெய்தல், சாக்கட்டி தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்களில் 6 மாத காலத்திற்கு பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன், அவர்களுக்கு அங்கேயே வேலை அளிக்கப்பட்டு, அன்றாடம் அவர்கள் செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 50 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத் தொகையிலிருந்து அவர்களுடைய உணவுக்கான செலவு செய்யப்படுகிறது. வேலை அளிக்கப்பட்ட 7 ஆம் மாதத்திலிருந்து உணவுக்காகும் செலவில் பாதியை தாங்கள் ஈட்டும் ஊதியத்திலிருந்து கொடுக்க வேண்டும். இந்த இல்லத்தில் 40 பேரை சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, இங்கு பார்வையற்ற மகளிர் 32 பேர் உள்ளனர். இத்திட்டத்திற்காக 1982–83 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(உ) மண்டல மறுவாழ்வு நிலையம், மதுரை :—

1980–81 ஆம் ஆண்டில் மதுரையில் மண்டல மறு வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றோர் எவ்வளவு பேர் உள்ளனர் என்பதை திட்டமிட்ட வழியில் அறிவியல் முறையில் மதிப்பிட்டு மறுவாழ்வு அளிக்க இந்நிலையம் உதவி செய்யும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் இம்மண்டலத்தில் அடங்கும்.. ஊனமுற்றோர்க்கு மருத்துவ வசதி, வாழ்க்கை கல்விப் பயிற்சி, சுயவேலை வாய்ப்பு போன்ற வசதிகளை இந்நிலையம் செய்து தருகின்றது. 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 1982–83 ஆம் ஆண்டிற்கு மேற்படி நிலையத்திற்கு ரூ. 1.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.





ஊனமுற்றோர்க்கு கருவிகள் வழங்குதல்

(அ) மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல்.

வறுமையில் வாடும் உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்குரிய நபர்கள் ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட தேர்வு குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சென்னையில் இத்தேர்வுக் குழுவின் தலைவர் சமூக நல இயக்குநர் ஆவார். 1975 ஆம் ஆண்டிலிருந்து 5,728 ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 1,000 மூன்று சக்கர வண்டிகள் ரூ. 15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டிருக்கின்றன. 1982–83ஆம் ஆண்டில் 100 மூன்று சக்கர வண்டிகள் வழங்குவதற்கு ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல்.

காது கேளாவிட்டாலும் கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், அவர்களுடைய பெற்றோரின், பாதுகாப்பாளரின் மாதவருமானம் ரூ. 500-க்கு மேற்படக்கூடாது. விண்ணப்பதாரர்கள் அரசு பொது மருத்துவமனைகளிலுள்ள கண், காது மற்றும் தொண்டை பிரிவினரால் பரிசோதனை செய்யப்படுகின்றனர். 1975ஆம் ஆண்டு முதல் 2,825 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் அல்லாது 18 வயதுக்கு கீழ் உள்ள பள்ளி செல்லா குழந்தைகளுக்கும், 250 காது கேட்கும் கருவிகள் 1981–82ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1982–83ஆம் ஆண்டிற்கு 100 காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்கு ரூ. 0.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

5. மற்ற திட்டங்கள்.

(அ) தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்.

8–14 வயது வரம்பிற்குள் இளம் பிள்ளைவாதத்தினாலும், முடக்கு வாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற குழந்தைகளையும், சித்த சுவாதீனமற்ற, காது கேட்காத, வாய் பேசாத, பார்வையற்ற உடல் ஊனமுற்ற குழந்தைகளையும் தொழு நோயால் பாதிக்கப்படும் குழந்தைகளையும் தொழு நோயாளியின் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு, குழந்தை ஒன்றுக்கு ரூ.30 என்ற வீதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம் அளிக்கப்படுகின்றது. 1980-81ஆம் ஆண்டிற்கு ரூ. 86,713 மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1981–82-க்கு மானியத் தொகையாக ரூ. 1,41,193.00 வழங்கப்பட்டிருக்கிறது. 1982–83-க்கு ரூ. 65,000 நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதுவரை 11 தொண்டு நிறுவனங்கள் இந்த உதவியைபெற்று அதன் மூலமாக 2,039 குழந்தைகள் பயன்பெற்றுள்ளன.

(ஆ) பார்வையற்றோருக்காக எழுத்து முறை வட்டார அச்சகம், பூவிருந்தவல்லி.

பள்ளியில் கற்பிக்கும் பல்வேறு பாடங்களை நான்கு தென் மாநில மொழிகளில் அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவற்றில் எழுத்து முறையில் அச்சிடுவதற்கு தனி அச்சகம் மத்திய அரசால் 1968–69-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்த அச்சகம் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளா மற்றும் கர்நாடகம் ஆகிய நான்கு தென் மாநிலங்களுக்குத் தேவையான பார்வையற்றோர் படிப்பதற்குரிய எழுத்து முறையில் தேவையான புத்தகங்களை அச்சிடுகிறது. இந்த அச்சகம், பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசினர் மேல்நிலைப் பள்ளியின் வளாகத்தில் அமைந்துள்ளது. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை 1976 வரை மத்திய அரசு ஏற்றது. இந்த வட்டார அச்சகத்தை பராமரிப்பதற்காகும் செலவை முழுமையும் தற்போது தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது. இச்செலவு, கர்நாடகம், ஆந்திரம், கேரளம் மற்றும் தமிழ்நாடு நான்கு தென்மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1980–81ஆம் ஆண்டில் இந்த அச்சகத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 1,32,956, 1981–82ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 1,42,000 ஆகும். 1982–83ஆம் ஆண்டு ரூ. 1,69,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



(இ) பார்வையிழந்தோர்க்கு ஒளிப்பதிவு சாதனம் கொண்ட நூலகம் ஏற்படுத்துதல்.

மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் பார்வையிழந்த மாணவர்களின் பாட புத்தகங்களின் தேவையைப் பூர்த்திச் செய்யும் பொருட்டு அப்பாடங்களை ஒலிப்பதிவு சாதனத்தில் பதிவு செய்து அவர்கள் கேட்டுப் பயன்பெறுவதற்கு வசதியாக பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோர்க்கான அரசினர் மேல் நிலைப் பள்ளியின் வளாகத்தில் ஒரு நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது.

1981–82ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 66,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டில் ரூ. 48,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு அளிக்க புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் ஊனமுற்றோரை கொண்டு இயக்கப்படும் பொது தொலைபேசி நிலையங்கள் அமைப்பது—

ஊனமுற்றோர்க்கு வேலைவாய்ப்பு அளிக்க புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் ஊனமுற்றோரைக் கொண்டு இயக்கப்படும் பொது தொலைபேசி நிலையங்கள் அமைக்கும் சிறப்புத் திட்டம் மத்திய மற்றும் மாநில அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய தபால் தந்தி இலாகா தொலைபேசி, பணப்பெட்டி ஆகியவைகளை கொடுத்து உதவி ஊனமுற்றோர் இத்தகைய பொது தொலைபேசி நிலையங்களை அமைக்க உதவுகிறார்கள். இவ்வாறு பொதுத் தொலைபேசி நிலையங்கள் அமைத்து நிர்வகிக்கும் ஊனமுற்றோர், பொதுமக்கள் ஒவ்வொருமுறை தொலைபேசியை பயன்படுத்தும்போது செலுத்தும் கட்டணமாகிய 50 காசில் 20 காசு பெறுகின்றனர். புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், கடை வீதிகள் ஆகிய பொது இடங்களில் ஊனமுற்றோரால் இயக்கப்படும் பொது தொலைபேசி நிலையங்கள் அமைப்பதற்கான இடத்தையும் தகுதி வாய்ந்த, ஊனமுற்றோரை தேர்வு செய்யவும் மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இந்த திட்டத்திற்கு உகந்த ஊனமுற்றநபர்களை, சமூக நலத்துறையைச் சார்ந்த மாவட்ட சமூக நல அலுவலர், மண்டல மறுவாழ்வு அலுவலர் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகியோர் உதவியுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் தெரிந்தெடுப்பார். மேலும் இதற்கு உகந்த இடங்களை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இந்திய தபால் தந்தி இலாகாவினர் ஆலோசனையுடன் தெரிந்தெடுப்பார். இந்த இட ஒதுக்கீட்டிற்கு கட்டணம் ஏதும் இல்லை. மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் ஏற்பாடு

செய்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டில் இதுவரை 100 ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு முடிவதற்குள் மேலும் 300 பேர் பயன் அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஊனமுற்றோர் மாநில வாரியம்.

மாநில சமூக நல அமைச்சரை தலைவராகக் கொண்ட ஊனமுற்றோர் மாநில வாரியம், ஊனமுற்றோர் நலன் மற்றும் மறுவாழ்வு திட்டங்களை வகுப்பதில் அரசுக்கு எடுத்துச் சொல்லும் ஆலோசனை நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்த வாரியம் ஒரு வல்லுநர் குழுவைக் கொண்டதாகும். இக்குழு இரண்டு முறை கூடி ஊனமுற்றோர்க்காக திட்டங்களை வகுப்பதில் ஆலோசனைகள் கூறி இருக்கிறது.

இந்த வாரியத்திற்கு சமூக நல இயக்குநரை தலைவராகக் கொண்ட துணைக் குழு ஒன்றும் இருக்கிறது. இந்த துணைக்குழு நான்கு தொண்டு நிறுவனங்களுக்கு அவைகளின் பணிகளை விரைவுப்படுத்தும் பொருட்டு மானியங்களை வழங்கி இருக்கிறது. மேலும் சுய வேலைவாய்ப்புக்காக 86 ஊனமுற்றோர்களுக்கு இக்குழு மானியங்கள் வழங்கியுள்ளது.

பரிசு சீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூ. 22 இலட்சத்தை இந்த மாநில வாரியத்திற்கு அளித்து அத்தொகை ஊனமுற்றோர் நலனுக்காக செலவழிக்க அரசு உத்தேசித்திருக்கிறது.

7. 1981-82 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்.

1. ஊனமுற்றோர்க்கு கல்வி.

(அ) 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு படிப்பு உதவி தொகை.

1 முதல் 8ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பு புத்தகங்கள் வாங்குவதற்கு அரசு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 படிப்பு உதவித் தொகையாக வழங்குகிறது. 1981–82ஆம் ஆண்டிற்கு படிப்பு உதவித் தொகையாக ரூ. 8,000 ஊனமுற்ற மாணவர்களுக்கு அரசு ரூ. 2,00,000 வழங்கியுள்ளது.

1982–83ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.



(ஆ) பார்வையற்றோருக்காக இரண்டு அரசினர் பள்ளிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்.

ஒவ்வொன்றிலும் 50 குழந்தைகளைக் கொண்ட இரண்டு பார்வையிழந்தோர் பள்ளிகள் 1981–82ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரையில் இருக்கிறது. இங்குள்ள குழந்தைகளுக்கு இலவசமாக உணவும், தங்கும் இடமும் அளிக்கப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் இப்பள்ளிகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. 4.5 இலட்சம் ஆகும். 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ. 3.15 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இ) காது கேளாதவர்களுக்காக புதிதாக இரண்டு அரசினர் பள்ளிகளைத் தொடங்குதல்.

ஒவ்வொன்றிலும் 50 குழந்தைகளைக் கொண்ட இரண்டு அரசினர் காதுகேளாதவர் பள்ளி 1981–82ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் விருதுநகரிலும் தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்புகள் வரை இருக்கிறது. இப்பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு இலவசமாக உணவும், தங்கும் இடமும், அளிக்கப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 5.66 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ. 3.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) கை கால் ஊனமுற்றோருக்கு அரசினர் பள்ளி ஒன்று தொடங்குதல்.

1980–81ஆம் ஆண்டு வரை கை கால் ஊனமுற்ற சிறார்களுக்கு அரசு பள்ளி ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே சோதனை அடிப்படையில் 1 முதல் 5 வகுப்புகளுடைய 100 கை கால் ஊனமுற்ற சிறார்களைக் கொண்ட ஒரு பள்ளிக்கூடம் மதுரையில் ஆகஸ்ட் 1981-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு சிறாருக்கும் ரூ. 36 மாதம் ஒன்றுக்கு உணவு வகைக்காகச் செலவிடப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் இப்பள்ளிக்கு ரூ. 2.97 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ. 2.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(உ) பார்வையிழந்தோர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கு தனிப் பிரிவு.

பார்வையிழந்தோர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் கற்பிக்கும் முறையில் வசதிகள் செய்து தரவேண்டும். தற்போது தேவையான ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க பூவிருந்தவல்லி அரசு பார்வையிழந்தோர் மேல்நிலைப் பள்ளியிலுள்ள அரசினர் பயிற்சிப் பள்ளியில் போதுமான வசதிகள் கிடை

யாது. எனவே, 10 மணியில் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் 5 புதிய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் பூவிருந்தவல்லி அரசினர் பார்வையிழந்தோர் பள்ளியில் ஒரு தனி பயிற்சிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

1981–82ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 51 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ. 94 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(2) ஊனமுற்றோருக்கு வாழ்க்கைக் கல்விப் பயிற்சி.

(அ) தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிறுவனத்தில் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு தொழில்களில் காது கேளாதவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்க இயலும் வண்ணம், கிண்டி மற்றும் மதுரையிலுள்ள தொழில்பயிற்சி நிறுவனங்களில் காது கேளாதவர்களுக்கு பொருத்துபவர் மற்றும் மின் கம்பியல் தொழில்களில் பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொன்றும் 16 எண்ணிக்கையை கொண்ட இரண்டு தனிப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிண்டியில் பொருத்துபவர் தொழிலில் பயிற்சியும், மதுரையில் மின் கம்பியல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. 25 காது கேளாதவர்கள் இந்த இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 1981–82ஆம் ஆண்டு பயிற்சி பெற்று வருகிறார்கள். நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 49 ஆயிரம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1982–83ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும். இதற்காக ரூ. 34 ஆயிரம் 1982–83 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) கிண்டியில் உரிய வயது வந்த பார்வையிழந்தோருக்காக உள்ள இலேசு ரகப் பொறியியல் நிலையத்தைத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் தரத்திற்கு உயர்த்துதல்—

கிண்டியில் உரிய வயது வந்த பார்வையிழந்தோர்க்காக உள்ள இலேசு ரகப் பொறியியல் திட்டம் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு திட்டம் ஆகும். தற்போது குறிப்பிட்ட பொறியியல் இயக்கங்களில் பார்வையிழந்தோர்க்கு 6 மாத காலத்திற்கு சுமார் 30 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது அளிக்கப்படும் பயிற்சி காலம் பயிற்சி பெற்ற நபர்களை வேலையில் அமர்த்துவதற்கும் தொழில்களில் தேவைகளுக்கேற்ப போதாத ஒன்றாகும். எனவே, அரசு கொள்கை முறையில்



இத்திட்டத்தை தொழில் நுட்பப்பயிற்சி நிறுவனத்தின் தரத்திற்கு உயர்த்த முடிவு செய்துள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்ட பின் இந்நிறுவனம் பார்வையிழந்தவர்களுக்கு கீழ் கண்ட தொழில்களில் பயிற்சி அளிக்கும்:—

| | | |
|---|---|---|
| 1. | பொருத்துபவர் மற்றும் அடிநிலை இயந்திரங்கள் இயக்குபவர். | 1 வருட காலம். |
| 2. | புத்தகம் பைண்ட் செய்தல் .. | 1 வருட காலம். |
| 3. | ஒயிண்டர் .. .. .. | 6 மாத காலம். |

இந்த தொழில்களை வாழ்க்கை கல்வி, தொழில், பயிற்சிகளின் தேசியக் குழுவுடன் இணைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் ஆலோசனையுடன் ரூ. 3.17 இலட்சம் செலவில் அனுப்பப்பட்ட திருத்தப்பட்ட பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(3) ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு.

(அ) வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலையில்லாமலுள்ள பார்வையிழந்தோர்க்கு, வேலையற்றோருக்கு வழங்கப்படும் படியை நீட்டித்தல்.—

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலையில்லாமலுள்ள பார்வையிழந்த, வேலையற்றோருக்கு வழங்கப்படும் படியை நீட்டிக்கும் திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. இதன்படி வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து மூன்று ஆண்டு காலம் அப்பதிவேடுகளிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருந்தால் 45 வயதுக்கு கீழும் மற்றவர்களாக இருந்தால் 40 வயதிற்கு கீழும் உள்ள பார்வையிழந்தவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயின்று தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு வேலையற்றோருக்கு வழங்கும் படி ரூ. 50 மாதம் தோறும் கிடைக்கத் தகுதி பெறுவார். இத்திட்டம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரால் சமூக நலத்துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 194 பார்வையிழந்தோர் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் 1982–83ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) மாநிலத்தின் நான்கு பல்வேறு மண்டலங்களில் மண்டல
மறுவாழ்வு நிலையங்கள் அமைத்தல்—

1981—82-ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மண்டல மறுவாழ்வு
நிலையங்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர் மற்றும்
தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்ட நான்கு மண்டலங்
களில் துவங்கப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் உடல் ஊன
முற்றோர் எவ்வளவு பேர் உள்ளனர் என்பதை திட்டமிட்ட
வழியில் அறிவியல் முறையில் மதிப்பிட்டு அவர்களுக்கு தேவை
யான மருத்துவ உதவி, வாழ்க்கை கல்விப் பயிற்சி, சுயவேலை
வாய்ப்பு, இதர வேலை வாய்ப்புகள் போன்ற வழிகளில் புது
வாழ்வு அளிக்க உதவிச் செய்கிறது.

1981—82ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 15.[illegible]
இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982—83ஆம்
ஆண்டிற்கு ரூ. 9.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(இ) ஊனமுற்றோர் அமைக்கவிருக்கும் சிறுதொழில் பிரிவுகளுக்கு
மாநில அரசு உதவித் தொகை—

வங்கிகளின் மூலம் கடன் உதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்
காக சிறுதொழில் பிரிவுகள் அமைக்கும் பெரும்பான்மை
யான ஊனமுற்றோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு
அரசு உதவித்தொகை அளித்து சிறப்பு ஊக்குவிப்பு முயற்சிகள்
எடுத்து வருகின்றன. மாநில அரசு வழங்கும் உதவித் தொகை
வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்கு சமமாக ஆனால் தனிப்
பட்ட ஒரு நபர்க்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் அரசு உதவித்
தொகை வழங்குகிறது.

இத்திட்டத்திற்காக 1981—82-ம் ஆண்டிற்கு அரசு ரூபாய்
5 லட்சம் நிதி ஒதுக்கீடுச் செய்துள்ளது. 5 ஆயிரத்திற்கு மேற்
பட்ட ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்
துள்ளனர். இத்திட்டம் 1982—83-ம் ஆண்டும் தொடர்ந்து
செயல்படும். இதற்காக ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டிருக்கிறது.

(4) ஊனமுற்றோர்க்கு உபகரணங்கள் வழங்குதல்

(அ) உடம்பின் கீழ்ப்பகுதி பக்க வாத நோய் கண்டுள்ள
வர்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்குதல்—

1981—82-ம் ஆண்டிற்கு உடலின் கீழ்ப்பகுதி பக்கவாத நோய்
கண்டுள்ள 100 நபர்களுக்கு ரூ. 1 லட்சம் செலவில் இலவசமாக
சக்கர நாற்காலிகள் வழங்க அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளது.



5. பிற திட்டங்கள்.

(அ) ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டி—

உலக ஊனமுற்றோர் ஆண்டை யொட்டி ஊனமுற்றோர்க்கு
மாவட்ட மற்றும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள்
நடத்த 1981—82-ம் ஆண்டிற்கு அரசு ரூபாய் 1 லட்சம் நிதி
ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி மாவட்ட சமூக நல அலு
வலரின் உதவியுடன் மாவட்ட அளவிலான விளையாட்டுப்
போட்டி மாவட்ட ஆட்சியாளரால் நடத்தப்பட்டது. சென்னை
மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டி மற்றும் மாநில
அளவிலான விளையாட்டுப் போட்டி சமூக நல இயக்குநரால்
நடத்தப்பெற்றது. மாவட்ட அளவில் முதலாவது மற்றும் இரண்
டாவது இடங்களில் வெற்றி பெற்ற ஊனமுற்ற மாணவர், மாண
வியர்கள் 27—11—1981 மற்றும், 28—11—1981 ஆகிய தினங்
களில் நடைபெற்ற மாநில விளையாட்டுப் போட்டியில் பங்கு
பெற்றனர். மாநில அளவில் முதலாவதாக மற்றும் இரண்டாவதாக
தேர்ச்சி பெற்ற ஊனமுற்றோர் தேசீய அளவில் அகமதாபாத்தில்
3—12—1981 முதல் 6—12—1981 முடிய குஜராத் கிளையின்
''நேசியோ'' வால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில்
பங்கு பெற்றனர். தமிழ்நாட்டிலிருந்து 60 ஊனமுற்ற நபர்கள்
தேசீய விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற்று 58 பரிசுகள்
(தங்க மெடல் 26, வெள்ளி மெடல் 20 மற்றும் பித்தளை
மெடல் 12) பெற்றார்கள். 18 வயது, 15 வயது மற்றும்
12 வயதிற்கு குறைவான பெண்கள், மற்றும் 18 வயதிற்கு
குறைவான ஆண்களுக்கு 4 கேடயங்கள் கிடைக்கப் பெற்றன.

(ஆ) ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு—

ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பிரச்
சனைகளை அறிய அரசு புள்ளியியல் துறையின் மூலம் ஒரு கணக்
கெடுப்பு மேற்கொள்ளவிருக்கிறது. இதற்காக படிவங்கள்,
பதிவேடுகள், ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் பதிவு நிலையங்
கள் போன்ற ஆரம்பப்பணிகள் முடிவுபெற்று மார்ச்சு 1
முதல் 31-ம் நாள் முடிய கணக்கெடுப்பு நடத்த ஏற்பாடுகள்
செய்யப்பட்டு வருகின்றன. 1981—82-ம் ஆண்டிற்கு இதற்காக
ரூ. 2 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கணக்
கெடுப்பின் அறிக்கை 1982-ம் ஆண்டு மத்தியில் வெளியிடப்
படவிருக்கிறது.

(இ) பிரச்சாரமும் செய்திப் படங்களைத் தயாரித்தலும்

உலக ஊனமுற்றோர் ஆண்டில் ஊனமுற்றோரிடம்
பொது மக்களின் நாட்டத்தைத் திருப்பவும் அவர்களின் நலன்
உயர்வு ஆகிய சம்பந்தப்பட்ட விஷயங்களில் பொது மக்கள்
ஈடுபாடுகொள்ளச் செய்யவும் போதுமான அளவிற்கு அரசு பிரச்

சார முறைகளைக் கையாண்டு இருக்கிறது. இதைத்தவிர அரசு
ஊனமுற்றோர் நலனுக்காக எடுக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்
கள் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்கள் ஊனமுற்றோர்
நலனுக்காக செய்துவரும் பணிகள் ஆகியவற்றை எடுத்துக்
காட்டும் வகையில் ஒரு செய்திப்படம் தயாரித்து வெளியிட
உள்ளது. இப்படம் வெளியிட்டபின் பொதுமக்களுக்கு ஊன
முற்றோர்களுக்காக இருக்கும் சலுகைகளின் விவரங்கள்
தெரியவரும்.

1981-82-ம் ஆண்டிற்கு இதற்காக ரூ. 2 லட்சம் நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) செயற்கை உறுப்புகள் வழங்குவதற்காக இரண்டு புதிய துணை நிலையங்களை ஏற்படுத்துதல்.

1981-82-ம் ஆண்டு ரூ. 2.70 லட்சம் செலவில் திருநெல்
வேலி, மற்றும் கடலூரில், அரசினர் மருத்துவமனைகளுடன்
இணைந்த இரண்டு செயற்கை உறுப்புகள் துணை நிலையங்களை
புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையம் கையால் ஊன
முற்றோருக்கு மருத்துவ ரீதியில் புதுவாழ்வு அளிக்கும்.
மேலும், இந்நிலையம் கை, காலூனமுற்றோர் நடப்பதற்கு
இயலும் வண்ணம் தாங்கு கட்டைகளையும் ஏனைய சாதனங்
களையும் தயாரித்து அவர்களுக்கு வழங்கும். உலக ஊனமுற்
றோர் ஆண்டின் ஒரு திட்டமாக இத்திட்டம் இத் துறையால்
முன்மொழியப்பட்டு மருத்துவத் துறையின் செலவில் அத்துறை
யால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) மூன்று புதிய செவியியல் பிரிவுகளை அமைத்தல்—

1981–82-ம் ஆண்டில் ரூ. 2.16 லட்சம் செலவில் கோயம்
புத்தூர், திருநெல்வேலி, மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவ
மனைகளில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு
களுடன் இணைந்த மூன்று புதிய செவியியல் பிரிவுகளை அரசு
அமைத்துள்ளது. இப்பிரிவு காது கேளாதவர்களை ஆரம்ப
காலத்திலேயே கண்டறிதல் மற்றும் காது கேளா தவர்
ஊமையர் போன்றவர்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற
பணிகள் மூலம் கேட்டறிதல் மற்றும் சமூகப் புனர்வாழ்வுப் பணி
களை மேற்கொள்ளும். உலக ஊனமுற்றோர் ஆண்டு பணிகளில்
ஒன்றாக இத்திட்டம் இத்துறையால் முன்மொழியப்பட்டு
மருத்துவத்துறையின் செலவில் அத்துறையால் செயல்படுத்
தப்பட்டு வருகிறது.



(ஊ) வேலை வாய்ப்பில்ஒதுக்கீடு—

அரசுத் துறை அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித்துறை
நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளில் 3 சதவீதம் ஊனமுற்றோர்
களுக்கு ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி
பிற்பட்ட வகுப்பினருக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டில் 1
சதவீதமும், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில்
1 சதவீதமும், இதர வகுப்பினருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்
டுள்ளதில் 1 சதவீதமும் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்
படும். அதே போன்று கல்வி நிலையங்களிலும் பொறியியல்
கல்வி போதனை செய்யும் நிலையங்களிலும் 3 சதவீதம் இருக்
கைகள் ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்க உத்திரவிடப்பட்
டுள்ளது.

(எ) புதிய அரசு கட்டிடங்களில் லிப்டுகள் அமைத்தல்—

ஊனமுற்றவர்கள் எளிதில் அடைய வசதியாக இருக்கும்
வண்ணம் புதிய அரசு கட்டிடங்களில் லிப்ட் வசதிகள் அவசியம்
செய்ய அரசு உத்திரவிட்டிருக்கிறது.

(ஏ) ஊனமுற்ற சிறார்களுக்கு பேருந்துகளில் இலவச பயணச் சலுகை.

பள்ளிகளில் மற்றும் பிற கல்வி நிலையங்களில் பயிலும்
மற்றும் மருத்துவ சோதனைக்காக மருத்துவமனைக்கு செல்லும்
ஊனமுற்ற சிறார்களுக்கு மாநிலத்திலுள்ள போக்குவரத்து கழக
பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அரசு அனுமதி
அளித்துள்ளது.

(ஐ) ஊனமுற்றோர் நலனுக்காக தன்னலமற்ற பணிபுரிந்தவர் களுக்கு அரசு விருதுகள் வழங்கல்.

ஊனமுற்றவர் நலனுக்காக தன்னலமற்ற பணி செய்பவர்
களுக்கு மூன்று விருதுகள் (கேடயம் மற்றும் சான்றிதழ்) வழங்க
அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த விருது உலக ஊனமுற்றோர்
விழா நாள் அன்று வழங்கப்படும்.

(ஒ) ஊனமுற்றவர்களுக்கு போதனை செய்யும் ஆசிரியர்களுக்கு விருதுகள்.

பார்வையற்றோர், காதுகேளாதவர், கை, கால் ஊன
முற்றோர், சித்த சுவாதீனமுற்றோர் மற்றும் தொழுநோய்
பிடித்தோர் ஆகியவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு
ஐந்து சிறப்பு விருதுகள் உலக ஊனமுற்றோர் ஆண்டை
ஒட்டி வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த விருதுகளுக்கு
உரியவர்களை தேர்ந்தெடுக்கையில் ஊனமாக உள்ள ஆசிரியர்
களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

(ஓ) திருச்சி மாவட்டத்தில் மாவட்டம் தழுவிய மருத்துவ முகாம்கள் அமைத்தல்.

ஊனமுற்றோர்க்காக அரசு பலவகைத் திட்டங்களைத் தீட்டி அவர்களுடைய கல்வி, பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்து வருகிறது.

ஊனம் ஏற்படாமல் தடுப்பதிலும் அரசு தீவிர கவனம் செலுத்துகிறது. இதுவரையில் கிராமப் புறங்களில் உள்ள சிறார்களில் 20 சதவீதத்தினரே மருத்துவத் துறையின் வாதநோய் மற்றும் ஏனைய முத்தடுப்பு நோய்த் தடுப்பு முறைகளால் பயன் பெற்று வந்துள்ளனர். ஏனைய 80 சதவிகித குழந்தைகளும் மேற் கூறிய நோய்களால் தாக்கப்படும் அபாயம் உண்டு. இதனைத் தடுத்திடும் பொருட்டும் மாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பயனடையும் பொருட்டும் வாத நோய் தடுப்பு மருந்து மற்றும் மருத்துவ வசதி அளித்திடவும், முன்னமேயே நோய் வாய்ப்பட்டவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் செயற்கை உறுப்புக்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அளித்திடவும் மாவட்ட அளவிலான மருத்துவ முகாம்கள் திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது

முகாம்கள் நடை பெற்ற தேதிகள்:

முதல் முகாம் 7–1–1982 மற்றும் 8–1–1982.

இரண்டாவது முகாம் 7–2–1982 மற்றும் 8–2–1982.

மூன்றாம் முகாம் 15–3–1982 மற்றும் 16–3–1982.

திருச்சி மாவட்டத்திலுள்ள 360 குழந்தைகள் மற்றும் மகளிர் நல மையங்களில் இந்தக் குழந்தைகள் நோய்த் தடுப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முகாமிலும் மருத்துவ அலுவலர், சுகாதார அலுவலர், ஆய்வர், அடிப்படைச் சுகாதார ஊழியர், ஆயா ஆகியோர் பங்கு பெற்றனர். அம்மை குத்துதல், வாதநோய்த் தடுப்பு மருந்துகள் அளித்தல், முத்தடுப்பு ஊசி முதலிய மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன.

ஊனமுற்றவர்களுக்கான 34 இடங்களில் மருத்துவ முகாம்கள் இடம் பெற்றன. ஒவ்வொரு முகாமிலும் மருத்துவ வல்லுநர்கள், சமூக சேவகர், செயற்கை அவயங்கள் பொருத்துநர், என். என். எஸ். சேவகர் ஆகியோர் பங்கு பெற்றனர். முகாமிற்கு வருகை தந்த ஊனமுற்றோர் அனைவருக்கும் மருத்துவ உதவியும் செயற்கை அவயவங்களும் அளிக்கப்பட்டன.



...முகாம்களால் ஒரு லட்சத்து இருபதாயிரம் குழந்தைகள் பயனடைந்தனர். அவர்களுக்கு முதல் முகாமிலும் இரண்டாவது முகாமிலும் தொடர்ந்து வாத நோய்த் தடுப்பு மருந்தும் முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டது. இதனால் இவர்கள் இக்கடிய நோய் அபாயத்திலிருந்து தப்பினார்கள் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மேலும் 4,000 ஊனமுற்றவர்களுக்கு மருத்துவ சோதனை வசதியும், அறுவை சிகிச்சையும் ஊனமுற்றோர் முகாம்களில் அளிக்கப்பட்டன. அவர்களில் சுமார் 1,000 நபர்களுக்கு செயற்கை அவயங்கள் பொருத்தப்படும். சுமார் 300 நபருக்கு அறுவை மூலம் உறுப்புக்கள் மாற்றி அமைக்க சிகிச்சை அளிக்கப்படும்.

இம்மாதிரி மருத்துவ முகாம்கள் படிப்படியாக மற்றுமுள்ள மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

மறுவாழ்வு மற்றும் செயற்கை அவயம் பொருத்தும் மருத்துவப் பிரிவு, க.க. நகர், மற்றும் அரசு பொது மருத்துவமனை, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் போன்ற மருத்துவமனைகளிலிருந்து மருத்துவம் மற்றும் மருத்துவப் பிரிவைச் சார்ந்தவர்கள் குழுமியிருந்து இத்திட்டத்திற்கு உதவி புரிந்தனர்.

முதல் முகாமிற்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது முகாம்களுக்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

8. 1982–83 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்:

(1) சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊனமுற்றோர்க்கு தானியங்கி பால் வழங்கு மனை நிர்வகித்திட முன்னுரிமை வழங்குதல்,

நூறு ஊனமுற்றோர்க்கு அவர்கள் புனர் வாழ்வு பெற்றிடும் பொருட்டு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தானியங்கி பால் வழங்குமனை நிர்வகித்திட முன்னுரிமை அளித்திட, தமிழ்நாடு கூட்டுறவு பால் வழங்கு துறையின் உதவியுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு உரிமம் பெற்றிடும் ஒவ்வொரு ஊனமுற்றோர்க்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக ரூ. 1,500-ம் அரசு மானியமாக ரூ. 1,000மும் வழங்கிடவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அரசு மானியத்திற்கென 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(2) காது கேளாத மகளிருக்கென தொழில் பயிற்சி நிலையங்களில் ஒன்றில் ஒருதனிப்பிரிவு ஏற்படுத்துதல்.

1981–82 -ல் கிண்டி, மதுரை தொழிற் பயிற்சி நிலையங்களில் காது கேளாத மாணவர்களுக்கென ''பொருத்துபவர்'' மற்றும் ''மின்கம்பியாள்'' ஆகிய தொழில்களில் சிறப்புப் பயிற்சி பெற்றிடும் பொருட்டு தனிப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. ஆனால், காது கேளாத மகளிருக்கென அத்தகைய தனிப்பிரிவு ஏதும் இதுகாறும் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒன்றில் காது கேளாத மகளிருக்கான குறிப்பிட்ட சில தொழில்களில் தொழில் பயிற்சி அளித்திட தனிப்பிரிவு ஒன்று துவக்கிட ரூ. 0.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(3) அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல்.

தற்போது தமிழகத்தில் 12 பார்வையற்றோர் பள்ளிகளும் 9 காது கேளாதோர் பள்ளிகளும் உள்ளன. ஆனால் இப்பள்ளிகளில் போதுமான அளவு உபகரணங்களோ, ஏனைய மேசை நாற்காலி முதலான தளவாடங்களோ இல்லை. இக்குறையினைக் களையும் பொருட்டு 12 பார்வையற்றோர் பள்ளிகளுக்கும் 9 காது கேளாதோர் பள்ளிகட்கும் தேவையுறும் உபகரணங்களையும் ஏனைய தளவாடங்களையும் வழங்குவதென முடிவு செய்யப்பட்டு இதற்கென ரூ. 3·06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(4) சிறப்புப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள்.

ஐந்து சிறப்புப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(5) காது கேளாதோருக்கான புதிய பள்ளி.

தமிழகத்தில் காது கேளாத சிறார்களின் எண்ணிக்கை சுமார் 46,500. ஆனால் காது கேளாதோருக்கான பள்ளிகள் மொத்தம் 21 தான் உள்ளன. காது கேளாத சிறுவர் அனைவரும் கல்வி கற்றிட இவைகள் போதுமானதாக இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு காது கேளாதவர் பள்ளியாவது தொடங்க அரசு விரும்புகிறது. இப்பணிக்கு அடிகோலும் முகத்தான் இவ்வாண்டு (1982–83)-ல் காது கேளாதோருக்கான பள்ளி ஒன்று ஆரம்பித்திட ரூ. 2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



VI. தமிழ்நாடு சமூக நல வாரியம்

1954 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சமூக நல வாரியம் இம்மாநிலத்தில் தனியார் சேவை நிலையங்களின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறது. இவ்வாரியம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்:—

(அ) சமூக நல அமைப்புகள் தொடங்கப்படுவதை ஊக்குவிப்பது.

(ஆ) தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(இ) உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

குழந்தைகள், மகளிர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு சேவை புரியும் தனியார் நிறுவனங்களுக்கு, மாநில சமூக நல வாரியத்தால் அளிக்கப்படும் நிதி, மத்திய சமூக நல வாரியத்திலிருந்து வழங்கப்படுகிறது.

100 சதவிகிதம் நிதியுதவி பெறும் சிறப்புத் திட்டங்களைத் தவிர மற்ற திட்டங்களுக்கு 50 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

மூன்று அரசு உறுப்பினர்கள் உள்ளிட்ட 32 உறுப்பினர்களை கொண்ட தற்போதைய தமிழ்நாடு சமூகநல வாரியம் பிப்ரவரி 1978-ல் திருத்தியமைக்கப்பட்டது.

இவ்வாரியம் 1980–81-ல் 1,128 நிறுவனங்களுக்கு மொத்தத்தில் ரூ. 70.58 இலட்சத்திற்கு நிதி உதவி அளித்துள்ளது. 1981–82-ல் இதே நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது.

| வரிசை எண்ணும், மானிய வகைகளும். | | நிறுவனங்கள் எண்ணிக்கை | 1980–81ல் அளித்துள்ள மானியம். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | | (இலட்சங்கள்.) |
| 1. ஆண்டு மான்யம் | பல்வேறு திட்டப் பணிகள் .. | 324 | 5.11 |
| 2. திட்ட மான்யம் | | 38 | 3.10 |
| 3. மகிள மந்திர் .. | .. .. | 15 | 1.19 |
| 4. சத்துணவு .. | .. .. | 132 | 4.29 |
| 5. குழந்தை காப்பகம் | .. .. | 293 | 15.00 |
| 6. விடுமுறை முகாம் | .. .. | 54 | 2.65 |
| 7. ஓராண்டு வகுப்புகள் | .. .. | 10 | 2.24 |
| 8. வாழ்க்கை தொழிற் பயிற்சி | .. | 102 | 15.32 |
| 9. நல விரிவாக்கத் திட்டம் (நகர்ப்புறம்). | .. | 2 | 0.12 |
| 10. பணிபுரியும் பெண்கள் விடுதி | .. | 7 | 0.36 |
| 11. சமூகப் பொருளாதாரம் | .. | 35 | .. |
| 12. பண்ணைத் திட்டம் | .. .. | 92 | 18.81 |
| 13. சிறப்பு வேலை வாய்ப்பு | .. | 24 | 2.40 |
| | | 1,128 | 70.58 |

சமூகநல வாரியத் திட்டங்களுக்கான மாநில அரசு மான்யம் :

கிராமப் புறங்களில், தொண்டு மனப்பான்மையை ஊக்குவிக்கவும் சமூக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும மகளிர் மற்றும் 0–6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக பாடுபடும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு 1981–82-ல் ரூ. 1 இலட்சம் நிதி உதவி சமூக நல வாரியத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது.



சமூக நல வாரியத்தின் நிர்வாக செலவு மத்திய சமூக நல வாரியம் மற்றும் தமிழக அரசு 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளுகின்றன.

VII முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம்.—

பிழைப்புக்கு வழியற்ற, ஆதரவற்ற, உற்றார் உறவினர் யாருமில்லாத வயது முதிர்ந்தவர்களின் துயர் தீர்க்கும்பொருட்டு அரசு, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக, 1—4—1962 முதல் இத்திட்டத்தைச் செயலாக்கியது.

முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டதிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.—

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

இத்திட்டம் 1962 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற 65 வயதும் அதற்கும் மேற்பட்ட முதியோர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 31—12—1981 வரை இம்மாநிலத்தில் 1,10,882 நபர்கள் உதவித் தொகை பெற ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஆ ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

உடல் ஊனமுற்றவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கும் பொருட்டு 1974 முதல் முதியோர் உதவித் தொகை திட்டம் விரிவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 45 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெறுகின்றனர். ஆனால் கண் பார்வையற்ற நபர்களுக்கு வயது வரம்பு எதுவும் இன்றி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்கள், உடல் ஊனமுற்றோர் அனுப்பும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அவ்விண்ணப்பதாரர்களின் வயது குறித்த விதிகளை கருதிப் பாராது, ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இடர்பாட்டை மட்டுமே கருதிப் பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கும்.

இம்மாநிலத்தில் 31—12—1981 முடிய 15,318 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

### (இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

அரசு 1975 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை விரிவுபடுத்தி ஆதரவற்ற கைம்பெண்களுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறது. 40 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற கைம்பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இம்மாநிலத்தின் 31—12—1981 முடிய 43,108 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### (ஈ) ஆதரவவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் மூலம் எத்தொழிலும் புரிய இயலாத ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களும் பயன் பெறும்பொருட்டு இத்திட்டத்தினை விரிவு படுத்தி 15—3—1981 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 60 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர். இம்மாநிலத்தில் 31—12—1981 முடிய 30,000 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற அரசு ஆணையிட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகை திட்டம் என்பதன்கீழ் திங்கள் ஒன்றுக்கு ரொக்கமாக 25 ரூபாய் வழங்குவதோடு ஆண்டொன்றுக்கு பொங்கல் திருநாளன்றும், சுதந்திரத் திருநாளன்றும்—ஆக இருமுறை இவ்வுதவித் தொகை பெறுவோருக்கு சேலைகள் வேட்டிகள் ஆகியவையும், ஒரு வாரத்துக்கு ஒருவருக்கு ஒரு கிலோ நேர்த்தியான அரிசியும் இலவசமாக வழங்கப்படுகிறது.



1-4-1982 முதல் முதியோர் ஓய்வூதிய மாதாந்திரத் தொகையினை 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கும் உதவித் தொகைக்கான ரொக்கம், காசோலை மூலம் அஞ்சல் வழியனுப்பப்படுகிறது. இதற்கான அஞ்சல் வழியனுப்பல் செலவு தொகையினையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படும் ஒரு திட்டமானதால், மாவட்டங்களில் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியுடையோர் கண்டறியப்படுவதைப் பொறுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஒப்புதல் அளிக்கும்.

இத்திட்டத்திற்கென 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் நான்கு பிரிவினருக்குமான 1,99,158 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டு வரவு–செலவு ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கான ரூ. 8.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VIII சீர்திருத்தப் பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி

சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இத்துறை தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்த இளங்குற்றவாளிகள், ஆதரவற்றோர், கட்டுக்கடங்கா சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரின் பொறுப்பினை ஏற்று சீர்திருத்தப் பயிற்சி அளித்து, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி, மறுவாழ்வு அளிக்கும் முக்கிய குறிக்கோளைக் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகும் இல்லவாசிகளுக்கும் நிறுவனங்கள் மூலமாக பிற்காப்பு அளிக்கிறது.

சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை இயக்குநர் துறையின் தலைவர் ஆவார். இத்துறையின் கீழியங் கும் அனைத்து நிறுவனங்களின் (அரசினர் மற்றும் அரசினரின் மானிய உதவி பெறும் தனியார் நிறுவனங்கள்) ஆட்சி அதிகாரங் கள் இயக்குநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை துணை இயக்குநரைக் கொண்டு இம்மாநிலத்தின் தென்மாவட்டங்களிலுள்ள நிறுவனங் களை உடனடி மற்றும் பயனுள்ள மேற்பார்வையிடும் பொருட்டு, மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது.

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மற்றும் அதன்கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 23 சீர்திருத்தப் பள்ளிகள் (நீண்டகால வரையறை நிலையங்கள்) உள்ளன. 9 பள்ளிகள் அரசினராலும் எஞ்சிய 14 பள்ளிகள் அரசினரின் மான்ய உதவியாலும் நடத்தப் படுகின்றன.

அறிவு வளர்ச்சி குன்றியதாகக் காணப்படும் சிறார்களும் பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் பொறுப்பேற்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

மாநில முழுவதுமாக 15 வரவேற்பு இல்லங்கள் (குறுகிய கால வரையறை நிலையங்கள்) உள்ளன. இவ்வரவேற்பு இல்லங் கள், நீதிமன்றங்களின் முன் விசாரணையேற்கும் சிறுவர் சிறுமியரைச் சேர்த்து, விசாரணைக் காலங்களில் அவர்களின் பொறுப்பேற்கின்றன. இவ்வரவேற்பு இல்லங்கள் சீர்திருத்தப் பள்ளிகளின் நுழைவாயில்களாகும். இவ்வரவேற்பு இல்லங்களில் 9 அரசினராலும், எஞ்சிய 6 வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலைப் பெற்ற கைதிகள் உதவி சங்கம், ஆகிய (அரசினரின் மான்ய உதவி பெறும்) தனியார் நிறுவனங் களாலும் நடத்தப்படுகின்றன.

1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டமும் அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களும்.

1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றவாளிகளாக சேர்க்கப்படும் சிறுமி யர் மற்றும் பெண்டிருக்கு அரசினர் மகளிர் காப்பகங்களில் (நீண்டகால வரையறை) புகலிடம் தந்து பயிற்சி அளிக்கப்படு கின்றது. இத்துறையின்கீழ் ஆறு அரசினர் மகளிர் காப்பகங் கள் உள்ளன. இவற்றைத் தவிர 9 (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் நீதிமன்றத்தின் முன் விசாரணை ஏற்கும் சிறுமியர் மற்றும் பெண்களைச் சேர்த்து அவர்களது விசாரணைக் காலங் களில் பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறை யுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள நிறுவனங் களுக்கு நுழைவாயில்களாக விளங்குகின்றன.



**பிற்காப்பு இல்லங்கள்—**

இத்துறையின்கீழ் மூன்று அரசினர் பிற்காப்பு இல்லங்கள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் செயல்படுகின்றன. சிறுமியர் மற்றும் பெண்களுக்கான இல்லம் வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலும் மற்ற சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் முறையே செங்கற் பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரிலும் மதுரையிலும் இயங்கி வருகின்றன. சீர்திருத்த இல்லங்களிலிருந்து விடுவிக்கப் பட்ட இல்லவாசிகள் (ஆதரவற்றோர்) மற்றும் சிறைச்சாலையி லிருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு இவ் வில்லங்கள் வாழ்க்கைத் தொழிற்கல்விப் பயிற்சியினை தொடர்ந்து அளித்து வருகின்றன. மேலும், அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தொழில் நிலையம் உடைகள் மற்றும் உள்ளாடைகள் தயாரித்தலிலும் பயிற்சி அளித்து வருகிறது.

**கல்வி—**

சீர்திருத்தப் பள்ளிகள் அனைத்துமே கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களாகும். இவற்றில் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு உயர்நிலைக் கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியில நாட்டமுள்ள மாணவர்கள் மேல்நிலைப்பள்ளி/கல்லூரி தொழிற் பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**வாழ்க்கைத் தொழிற்கல்வி—**

இல்லவாசிகளின் பயனுக்காகவும் இல்ல நீக்கத்திற்குப் பின் அவர்களின் மறுவாழ்வு இலகுவாக அமையும் பொருட்டும் கீழ் குறிப்பிட்ட வருவாய் பயக்கும் தொழிற்கல்விப் பயிற்சிகள் நிறு வனங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்—**

1. தச்சுப் பயிற்சி.
2. தையல் மற்றும் பூவேலை பயிற்சி.
3. நெசவுப் பயிற்சி.
4. பாய் நெசவுப் பயிற்சி.

சார முறைகளைக் கையாண்டு இருக்கிறது. இதைத்தவிர அரசுகள் ஊனமுற்றோர் நலனுக்காக எடுக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்கள் ஊனமுற்றோர் நலனுக்காக செய்துவரும் பணிகள் ஆகியவற்றை எடுத்துக் காட்டும் வகையில் ஒரு செய்திப்படம் தயாரித்து வெளியிட உள்ளது. இப்படம் வெளியிட்டபின் பொதுமக்களுக்கு ஊனமுற்றோர்களுக்காக இருக்கும் சலுகைகளின் விவரங்கள் தெரியவரும்.

1981-82-ம் ஆண்டிற்கு இதற்காக ரூ. 2 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) செயற்கை உறுப்புகள் வழங்குவதற்காக இரண்டு புதிய துணை நிலையங்களை ஏற்படுத்துதல்.

1981-82-ம் ஆண்டு ரூ. 2.70 லட்சம் செலவில் திருநெல்வேலி, மற்றும் கடலூரில், அரசினர் மருத்துவமனைகளுடன் இணைந்த இரண்டு செயற்கை உறுப்புகள் துணை நிலையங்களை புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையம் கையால் ஊனமுற்றோருக்கு மருத்துவ ரீதியில் புதுவாழ்வு அளிக்கும். மேலும், இந்நிலையம் கை, காலூனமுற்றோர் நடப்பதற்கு இயலும் வண்ணம் தாங்கு கட்டைகளையும் ஏனைய சாதனங்களையும் தயாரித்து அவர்களுக்கு வழங்கும். உலக ஊனமுற்றோர் ஆண்டின் ஒரு திட்டமாக இத்திட்டம் இத் துறையால் முன்மொழியப்பட்டு மருத்துவத் துறையின் செலவில் அத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) மூன்று புதிய செவியியல் பிரிவுகளை அமைத்தல்—

1981—82-ம் ஆண்டில் ரூ. 2.16 லட்சம் செலவில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவுகளுடன் இணைந்த மூன்று புதிய செவியியல் பிரிவுகளை அரசு அமைத்துள்ளது. இப்பிரிவு காது கேளாதவர்களை ஆரம்ப காலத்திலேயே கண்டறிதல் மற்றும் காது கேளாதவர் ஊமையர் போன்றவர்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற பணிகள் மூலம் கேட்டறிதல் மற்றும் சமூகப் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும். உலக ஊனமுற்றோர் ஆண்டு பணிகளில் ஒன்றாக இத்திட்டம் இத்துறையால் முன்மொழியப்பட்டு மருத்துவத்துறையின் செலவில் அத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



சீர்திருத்தப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்—

1980-81 ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தப் பள்ளி மாணவர்களுக்கு இடையே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர்களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமையேற்றல் ஆகிய நற்பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது.

இளங்குற்றவாளிகள் வழிகாட்டு நிலையங்கள்—

சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வுகள் மேற்கொள்வது மட்டுமன்றி, இளைஞர் நீதி மன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர் சிறுமியரைப் பற்றிய மனநிலை அறிக்கைகளை அளிக்க சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மூன்று இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அருகிலிருக்கும் வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை ஏற்கும் இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற் குழுக்களால் நடத்தப்பட்டாலும் இவற்றின் மீதான மொத்தச் செலவினம், அரசினரால் மேற்கொள்ளப்படுகிறது.

மறுவாழ்வுத் திட்டங்கள்—

இல்லவாசிகள் நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர், தகுந்த மறுவாழ்வு அளிக்கப்படுகிறது.

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமணம் ஏற்பாடு செய்தல்.

(2) வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருதல்.

(3) திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக் கேற்ற கருவி மற்றும் தளவாடங்கள் வழங்குதல் முதலிய மறுவாழ்வுத் திட்டங்கள் மூலம் விடுதலை பெற்ற இல்லவாசிகள் பொருளீட்டி அமைதியாக வாழ்க்கை நடத்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திருமணம் செய்து கொள்ளும் ஒவ்வொரு மணமக்களுக்கும் புதிய குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000-ம் திருமணச் செலவுகளுக்கு என ரூ. 100-ம் அரசினரால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (1—1—1979 முதல் 31—12—1981 முடிய) 53 இல்லவாசிகளுக்கு திருமணம் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

வரவு செலவு மதிப்பீடு—

இத்துறையின் 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடு ரூ. 134.67 லட்சமாகும். இதில் ஊழியர்களின் ஊதியம் மற்றும் இதர இனங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு மானிய உதவியாக வழங்கப்படும் ரூ. 9·72 லட்சமும் அடங்கும்.

வரவினங்கள் —

1982-83-ம் ஆண்டில் எதிர் நோக்கும் வரவினங்கள் பின் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| (1) சீர்திருத்தப் பள்ளிகள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மூலம். | 4.00 |
| (2) இதர பலவகை வரவினங்கள் .. .. | 2·50 |
| (3) மகளிர் காப்பகங்கள் மூலம் .. .. .. | 0·35 |
| (4) பிற்காப்பு இல்லங்கள் மூலம் .. .. .. | 0·55 |
| மொத்தம் .. | 7·40 |

புதிய திட்டங்கள் —

1982–83-ம் ஆண்டின் இரண்டாம் பாகத் திட்ட வேலைகளாக அங்கீகரிக்கப்பட்ட பணித் திட்டங்கள் பின்வருமாறு

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) திருநெல்வேலி மாவட்டம், தட்டப்பாறை அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் ஒரு புத்தகம் கட்டும் தொழிற் பிரிவைத் துவங்குதல். | 2·02 |
| (2) வடாற்காடு மாவட்டம், இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் வகுப்பறைகள், தங்குமிடங்கள், பண்டக அறைகள் முதலியன கட்டுதல். | 4·00 |
| மொத்தம் .. | 6.02 |



ஆறாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்—

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்துறை நிறுவனங்களில் உள்ள மேலும் சில தொழிற் பிரிவுகளை நவீனப்படுத்தி, இத்துறையின் நடவடிக்கைகளை விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழு சில தொழிற் பிரிவுகளைத் துவங்கவும், இல்லங்களை நிறுவவும் ரூ. 80·00 இலட்சத்திற்கு திட்ட ஒதுக்கீடு ஒப்பளித்துள்ளது. இத்தொகையில் மேற் கூறியவற்றைத் தவிரவும் இல்லவாசிகளுக்கு மேம்பாடான வசதிகள் செய்து கொடுக்கவும் புதிய கட்டிடப் பணிகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 மார்ச் 29.

பங்குனி 16, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.''

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் ல்லவரே அமைச்சர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

இணைப்பில் உடுக்குறியிடாத வினாக்களையும் அவற்றுக்கான டைகளையும் காண்க.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிக்கை அளித்தல்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980 மீதான ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1980) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, குடிமைப் பொருள் வழங்கு துறை (இரண்டாம் பகுதி) பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த கருத்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரெண்டாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(2) பொது நிறுவனங்கள் குழு.

திரு. டி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். அச்சிட்ட பிரதிகள் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்பெறும்.

(3) அரசினர் சட்ட முன்வடிவு.

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல் திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(4) தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 105-ன் கீழ் திரு. சுவாமிநாதன் ஒரு தன்னிலை விளக்கம் அளிப்பார்கள்.

*திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சிதம்பரத்தில் ஒரு ஒயின் ஷாப் திறப்புவிழா நடைபெறுகிறபோது அந்தத் திறப்பு விழாவிற்கு அந்த டி.எஸ்.பி., சிதம்பரம் டி.எஸ்.பி. அழைக்கப்படுகிறார், அந்த ஒயின் ஷாப் திறப்பு விழாவிற்கு அந்த டி.எஸ்.பி. தலைமை வகிக்கிறாரோ, முன்னிலை வகிக்கிறாரோ தெரியவில்லை, நம்முடைய ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர்கூட அந்த போட்டோவில் இருக்கிறார் என்று பேசியதோடு இன்றையதினம் முரசொலியிலும் ஒயின் ஷாப் திறப்பு விழாவில் கலந்து கொண்ட





டி.எஸ்.பி., ஆளும்கட்சி உறுப்பினர் என்று ஒரு புகைப்படமும் வெளியிட்டிருப்பதால் நான் இந்த அனுமதியைத் தங்களிடம் கோரினேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு சிதம்பரம் காசிக் கடைத் தெருவின் வழியாக சிதம்பரம் டெப்டி கலெக்டர் அலுவலகத்திற்குச் செல்கிறபோது அங்கே தெருவில் உள்ள போக்குவரத்து நெரிசலில் என்னுடைய கார் நிறுத்தப்படுகிறது. அப்போது சிதம்பரம் டி.எஸ்.பி. அங்கே நிற்கிறார். நான் அவரைப் பார்த்து கார் மேலே போகமுடியாமல் இறங்கியபோது எடுத்த படம்தான் அது. அந்த ஒயின் ஷாப் திறப்புவிழாவில் நான் கலந்து கொள்ளவோ அல்லது தலைமை வகிக்கவோ இல்லை. அந்தத் திறப்புவிழாவில் நான் எந்தவிதத்திலும் கலந்துகொள்ளவில்லை. டி.எஸ்.பி. அவர்களோடு ஆளும் கட்சி உறுப்பினர் இதுமாதிரி அனுசரணையாக இருக்கலாமா என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த டி.எஸ்.பி.க்கு ஆளும் கட்சி உறுப்பினர் யாரும் எந்த விதத்திலும் அனுசரணையாக இல்லை. அந்த ஒயின் ஷாப் உரிமையாளர் பேரவைத் தலைவர் அவர்களுக்கு தன் சொந்த கைப்பட எழுதி கையெழுத்துப்போட்ட கடிதத்தையும் டைப் செய்து கையெழுத்து போட்ட கடிதத்தையும் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதை வாசிக்க தங்கள் அனுமதி கோருகிறேன்

''மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கமாய் சத்திய பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வதாவது, அனுப்புதல்: சி. ஆர். விஜயகுமார், த/பெ. ராஜமாணிக்கப் பத்தர், காசுக்கடைத் தெரு, சிதம்பரம் டவுன். ஐயா, நான் சிதம்பரம் டவுனில் காசுக்கடைத் தெருவில் ஒயின் ஷாப் கடையை யாருக்கும் சொல்லாமல் திறந்தேன். எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் குறிப்பாக சிதம்பரம் தொகுதி, புவனகிரி தொகுதி அ.இ. அண்ணா தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்கள் யாரும் திறப்பு விழாவிற்கு வரவில்லை. நான் அழைக்கவுமில்லை. யார் தலைமையிலும் முன்னிலையிலும் திறப்பு விழா நடத்தவுமில்லை. சுமார் 1[illegible] மணிக்கு அந்த குறுகலான கடைத் தெருவில் போக்குவரத்து நெரிசலாக இருந்தது. அப்பொழுதிருந்த போலீஸ் டி.எஸ்.பி ஜோசப் அவர்கள் வந்து போக்குவரத்து வாகனங்களை ஒழுங்குபடுத்தினார். அப்பொழுது புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் சிதம்பரம் டிபுடி கலெக்டர் ஆபீசுக்கு போகிறபோது கூட்டத்தைப் பார்த்து இறங்கினார்கள். அப்பொழுது நடு ரோட்டில் எடுத்த போட்டோவைத் தான் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் காட்டினார் என்று நம்புகிறேன். எனது ஒயின் கடைக்குள்ளோ அல்லது பக்கமோ சட்ட மன்ற உறுப்பினர் வரவில்லை. எந்த விழாவும் நடத்தவில்லை, அதில் கலந்து கொள்ளவுமில்லை என்பதை தங்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். ''உண்மையுள்ள சி. ஆர். விஜயகுமார்

வணக்கம்.

5. வரவு—செலவுத் திட்டம்9182-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 15—காவல்துறை.

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் (தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இன்றும் எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக, மன்ற உறுப்பினர்களும் அதை ஏற்றுக்கொண்டதற்காக உங்களுக்கும், உங்கள் சார்பாக மன்றத்திற்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கோரிக்கையின்மீது பேசியபொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குறைகளை, குற்றங்களைக் கூறி, அவைகளைப் பற்றி தன் கருத்துக்களைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய மிகப் பெரும் கடமையுள்ளவனாக இருக்கின்ற காரணத்தினால், நான் ஒன்றிரண்டுக்கு நேரத்தை அனுசரித்துப் பதிலளிக்க விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொள்ளாச்சியில், தேவனாம்பாளையம் கிராமத்தில், அங்குள்ள மக்கள், கள்ளுக்கடைக்குச் சொந்தக்காரர் குடிக்கச் செல்வதாகவும், 2—2—82 அன்று கிராமத்தை இருட்டடைப்புச் செய்ததாகவும், 8 குடிசைகள் அழிக்கப்பட்டதாகவும், காவல் துறை அத்துமீறி நடந்து கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்குத் தந்திருக்கிற, கிடைத்திருக்கிற குறிப்புப்படி கோயம்புத்தூர், பொள்ளாச்சி வட்டம், தேவனாம்பாளையம் கிராமத்தில் 10 வெள்ளாள கவுண்டர் குடும்பங்களும், 10 தேவர் குடும்பங்களும், வழக்குப் பதிவு செய்துள்ளதன் மூலமாக 80 ஆதி திராவிடக் குடும்பங்கள் வரை இருப்பதாகவும், அவர்கள் முக்கியத் தொழில் விவசாயம் செய்வதாகவும், ஆதி திராவிடக் குடும்பங்களில் பெரும்பாலோர் கவுண்டர் குடும்பங்களில் விவசாயத் தொழிலாளர்களாக, கூலிக்கு வேலை செய்பவர்களாகவும், அந்த கவுண்டர் குடும்பத்தைச் சார்ந்த செல்வராசுக்குச் சொந்தமான சாராயக் கடை ஒன்று ஆதி திராவிடர் காலனிக்கு அருகில் உள்ளதாகவும், அந்த செல்வராசுக்கு அந்தச் சாராயக் கடை சொந்தமாக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர் கே. வி. கந்தசாமியின் மகன் கே.வி.கே. சுப்பிரமணியம் என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது என்றும் புகார் உள்ளது. மேலும், இங்கே இந்தக் கடையில் கள் விற்கப்படுவதாகவும், சாராயக் கடைக்கு இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இங்கே சாராயம், கள் முதலியவற்றைக் குடித்துவிட்டு, சில ஆதிதிராவிடர்கள், கவுண்டர்களைக் கேவலமாகவும், அசிங்கமாகவும் பேசியதாக தெரிகிறது. இந்த கள், சாராய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள



சில ஆதிதிராவிடர்களுக்கும், கவுண்டர்களுக்கும் மனக்கசப்பு இருந்ததாகத் தெரிகிறது. 27—1—82 அன்று மாரியப்ப கவுண்டர், மற்றும் சிலர் சட்டவிரோதமாகக் கூடி, பயங்கரமான ஆயுதங்களுடன் நாச்சி என்பவர் வீட்டுக்கு, மற்றும் மேகன் வீட்டுக்கும் சேதம் விளைவித்ததாகவும், காயமுற்ற நாச்சி, கூலி பாக்கிக்காக ரூ. 90 மாரியப்ப கவுண்டரிடம் கேட்டதாகவும், அதைத் தர மறுத்ததாகவும், இத் தகவலில் கூறப்படுகிறது. இது குறித்து ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-10.)

அச்சம்பவத்தின் விளைவாக திரு.அம்மணிகுட்டி மற்றும் எட்டுப் பேர்கள் சேர்ந்து மேற்கண்ட சாராயக் கடைக்குத் தீவைத்துள்ளனர். தீயை அணைக்க வந்த ஆதி திராவிட காலனியைச் சேர்ந்தவர்களை மாரியப்ப கவுண்டர் தடுத்து அவர் மேலும் 4 பேர்களோடு சாராயக் கடைக்குத் தீவைத்து ஆதிதிராவிடர் வீடுகளுக்கும் தீவைப்போம் என்று கோஷமிட்டு ஆதிதிராவிடர் வீடுகளுக்குத் தீவைத்தார்கள். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. காவல்துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று ஆதிதிராவிடர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளனர். இதற்கு இடையில் 75 பேர்கள் 2 வண்டிகளிலும் ஒரு ஜீப்பிலும் வந்து ஆதிதிராவிடர் வீடுகளுக்குச் சேதம் விளைவித்தார்கள். இதில் சம்பந்தப்பட்ட தலைமறைவாகிவிட்ட குற்றவாளிகளைப் பிடிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இது குறித்து புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நடக்காமல் காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. தற்போது நிலைமை அமைதியாக உள்ளது. தேவனாம்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதமருக்கு மனு அனுப்பிய விவரம் அரசுக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, குற்றவாளியைக் கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நடிகை ஷோபா கொலை பற்றி இங்கே கூறியிருக்கிறார்கள். நான் நினைவு படுத்த விரும்புகிறேன். எங்களுடைய அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு அந்த இடைக்காலத்திலே நடந்த கொலையாகும் அது. அப்போது குறிப்பில் எழுதப்பட்ட விஷயங்கள் விசாரணை நடந்த முறையில் சரியாக இல்லை என்கின்ற சந்தேகம் ஏற்படுகின்ற அளவுக்கு நாங்கள் பொறுப்புக்கு மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு அந்த எண்ணம் தோன்றியதன் விளைவாக மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று உத்திரவிட்டு இருக்கிறோம். அது விசாரணையில் இருக்கிறது என்பதையும் வழக்கு மன்றத்திற்கு கிடைத்த சாட்சியங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் அது வழக்கு மன்றத்திலே விவாதிக்கப்பட்டு தீர்ப்பு எப்படி இருக்கிறதோ அது வெளியிடப்படும் என்பதையும் அதற்கு ஏற்ப

மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் ஒரு செய்தியை நான் சொல்லியாக வேண்டும். அந்தக் கொலைக் குற்றத்தைச் செய்தாரா இல்லையா அவர் அதற்குப் பொறுப்பாளி இல்லையா என்று யார் மீதும் ஒருவரைச் சுட்டிக்காட்டுவதற்கு முன் அந்த மகேந்திரன் இலங்கையிலிருந்து வந்த முறை, புனாவிலே சென்று அந்தத் தொழில் நுணுக்கத்தைத் தெரிந்துகொள்வதற்குப் பயன்படுத்திக் கொண்ட அவை யாவும் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்ற ஆதாரத்தின் அடிப்படையில் அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிடும்போது நாங்கள் இப்படிப்பட்டவைகளில் எவ்வளவு அக்கறை செலுத்துகிறோம் என்பதில் இந்த மாமன்றம் அறிவதற்கு இது ஒரு சான்றாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மதுரை சின்னாளப்பட்டியில் நெசவாளர்களுக்கு என $3\frac{1}{2}$ ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. நீதிமன்றமும் அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு அளித்தது. அதில் நடராசன் என்பவர் கட்டடம் கட்டவிடாமல் தடுக்கிறார். காவல்துறை சாதகமாக உள்ளது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சின்னாளபட்டியில் பழனி மடாதிபதிக்குச் சொந்தமான நிலம்—மடாதிபதி மைனராக இருப்பதால்—டிரஸ்டிகளின் மேற்பார்வைக்கு விடப்பட்டிருந்தது. சின்னாளபட்டி நெசவாளர்கள் சங்கம் தங்களுக்கு என்று ஒரு கட்டடம் கட்டுவதற்கு என மேற்படி நிலத்தை டிரஸ்டிகளிடமிருந்து கிரையத்திற்கு வாங்கினார். நிலத்தை அனுபவித்து வந்த திரு. தனசேகரன் பிள்ளை என்பவர் மடாதிபதி மேஜராகிவிட்டதால் டிரஸ்டி செய்த கிரையம் செல்லாது என்று வழக்குத் தொடர்ந்தார். காவல் துறைக்கு இந்திய தண்டனைச் சட்டம் 409வது பிரிவு—நம்பிக்கை மோசடி—420 வது பிரிவு—ஏமாற்றுதல் ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கை கொடுத்தார். காவல்துறையினர் அது சிவில் வழக்கு என முடிவு செய்தனர். எனினும் மேற்படி கட்டடம் கட்டுவதற்கு நெசவாளர்கள் அடிக்கல் நாட்டு விழாவை வேறு ஒரு இடத்தில் நடத்தினார்கள். தற்போது தனசேகரன் பிள்ளை என்பவர் நீதிமன்றத்தில் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார். இதில் காவல்துறையினர் கட்டடம் கட்டவிடாமல் தடுக்க சாதகமாக இருக்கிறார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. இது சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு என்பதால் இதில் காவல் துறையினர் தலையிடுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. இதற்குத் தீர்வு காணவேண்டிய இடம் நீதிமன்றம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நண்பர் ரகுமான்கான் அவர்கள் நமது மரியாதைக்குரிய மணியம்மையார் அவர்களை அவதூராகப் பேசிய காவல் துறையினர் மீது சோமசுந்தரம் கமிஷன் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற மணியம்மையார் மீது கேவலமாகப் பேசிய காவலர்கள் மீது அரசு விவரமான விசாரணை நடத்தலாம் என்று ஆணைக்குழு பரிந்துரை செய்தது. இந்தப் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளபோது திருமதி மணியம்மையார் அவர்கள் மறைந்து விட்டார்கள். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி மணியம்மையார் அவர்களை நோக்கி வசைமொழிகள் எதுவும் கூறவில்லை என்று கூறியிருந்தார்கள். இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு இந்த சம்பவத்தில் மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று காவல் துறை தலைவரின் கருத்தை அரசு ஏற்றது என்பதைத் தெரிவித்து அரசுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சுந்தரராஜன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு சிங்கம்புணரி காவல் நிலையத்தைச் சேர்ந்த கட்டுக்குடிப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு கொலை நடைபெற்றிருக்கிறது என்றும், ஒரு பெண்மணி பட்டப்பகலில் கண்மாய்க் கரையில் நடந்து சென்ற நேரத்தில் கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து 10 பவுன் தங்கச் சங்கிலியை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்றும், அங்கேயிருக்கிற காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். 6–11–80-லே அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கிலே மணி, சடையன், சின்னையா நாச்சேன் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி பிறகு அதை மாற்றுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் தேதி அன்று உலகம்பட்டி காவல் சரகம் கட்டுக்குடிப்பட்டியைச் சேர்ந்த ராமச்சந்திரன் பிள்ளை மனைவி திருமதி வீராயி அம்மாள் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த 18 பவுன் நகைகள் கொலைகாரர்களால் அகற்றப்பட்டிருந்தது. திரு. சீனிவாசன் என்ற காவல் துறை ஆய்வாளர் இந்த வழக்கை விசாரணை செய்தார். பிரேத பரிசோதனையில் திருமதி வீராயி அம்மாள் கழுத்து நெறிக்கப்பட்டு மரணம் ஏற்பட்டிருப்பதாக அறியப்பட்டது. மேற்கூறிய வழக்கிலே சடையன் என்பவரின் தவறின் பேரில், மணி, சின்னையா, மணியாச்சி என்னும் நாச்சன் ஆகியோர் 11–12–80 அன்று கைது செய்யப்பட்டு 22–4–81 அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 342, 302, 379, 180, 202 ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிகை நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில் மலேசியாவிலே மு.வா. எண்.18, காடான் மகாராணி என்னும் இடத்தில் வசிக்கும் திரு. கு. ராமச்சந்திரன் என்பவர் 5–3–81 அன்று

எழுதிய மனுவில் தனது மனைவி வீராயி அம்மாள் கட்டுக்குடிப் பட்டியில் கொலை செய்யப்பட்டு அவர் அணிந்திருந்த நகைகள் காணாமல் போயிருக்கிறது என்றும் இதுவரையில் அங்கேயுள்ள போலீசார் சரியான நடவடிக்கை எடுத்து நகைகளைக் கைப்பற்ற வில்லை என்றும், சி.ஐ.டி. போலீஸ் போட்டு நன்றாக விசாரணை செய்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நகைகளைக் கைப்பற்றித் தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இதன் நகல் ஐ.ஜி. அவர்களுக்கும் அனுப்பப் பெற்று இருந்தது. அந்த மனுவை ஆராய்ந்து கொலை பற்றிய உண்மையான நிலவரத்தை அறிவிக்குமாறு சென்னை குற்றப் புலனாய்வுத் துறைத் துணைத் தலைவர் கோரப்பட்டார். 8–4–81 அன்று மதுரை காவல் துறை துணைத் தலைவர், இராமநாதபுரம் கிழக்கு காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெற்று எனது அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த அறிக்கையில் மேற்கூறிய கொலை பற்றிய விவரமும், மணி முதலானோர் கைது செய்யப்பட்ட விவரமும், அத்துடன் நகைகள் கைப்பற்றப் படவில்லை என்ற விவரமும் தெரிந்தது. அறிக்கையை ஆராய்ந்த போது குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு பல நாட்களாகியும் நகைகள் எதையும் கைப்பற்றவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருந்தது. எனவே கொலை குறித்து மறு ஆய்வு செய்யும்படி காவல் துறையினர் தலைவரைக் கேட்டுக் கொண்டேன். குற்றப்பிரிவு இரகசியப் புலனாய்வுத்துறை இந்தக் கொலை பற்றி புலனாய்வு மேற்கொண்டு திருப்பத்தூர் இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த முதல் குற்றப் பத்திரிகையை நிலுவையில் வைக்கும்படி கேட்டுக் கொண்டது.

(முற்பகல் 9.20.)

மறு புலனாய்வில் முதலில் விசாரணை மேற்கொண்ட இன்ஸ்பெக்டர் திரு. சீனுவாசனுடைய ஆய்வு சரியாக இல்லையென்று கண்டறியப்பட்டது. புலன் ஆய்வு அடிப்படையில் திரு. சடையனை, குற்றப்பிரிவு புலனாய்வுத் துறைத் துணைக் கண்காணிப்பாளர் கைது செய்து அவரிடமிருந்த அரிவாளையும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து கையாளப்பட்ட நகைகள் எங்கெங்கு விற்கப்பட்டன என்ற பட்டியலையும் கைப்பற்றினர். அதைத் தொடர்ந்து. நகைகளுக்குப் பணம் கொடுத்த திரு. சின்னக் கருப்பையன் என்பவரும் கைது செய்யப்பட்டு அவர் தந்த தகவலின் பேரில் தாலி செயின் உட்பட 95 கிராம் நகைகளை மீட்டனர். திரு. சடையன் மற்றும் சின்னக் கருப்பையன் ஆகியோரிடமிருந்து காரைக்குடி இரண்டாவது மாஜிஸ்டிரேட் முன் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன. இரண்டு எதிரிகளும் நீதிமன்றத்தில் முழுமையாக ஒத்துக் கொண்டு வாக்கு மூலம் கொடுத்துள்ளார்கள். சின்னக் கருப்பையன் வழக்கில் அப்ரூவராக எடுத்துக் கொள்ளப் பட்டார். இந்தச் சூழ்நிலையில் முதலில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிக்கை மீண்டும் பெறப்பட்டு, தற்போது உண்மைக் குற்றவாளி சடையன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. சீரான



நடவடிக்கை எடுக்காததால், துணைக் கண்காணிப்பாளர் திரு. விஸ்வநாதன், சப் இன்ஸ்பெக்டர் நடராஜ் ஆகியோர் மீது விசாரணைக்காகத் துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் சீனிவாசனும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த வழக்கில் யாருக்காகவும் சாதகமாகவோ அல்லது வேண்டுமென்றே யார் மீதாவது குற்றம் சுமத்த வேண்டுமென்று இன்னொருவரை அப்ரூவராக மாற்ற வேண்டுமென்ற நிலையிலோ இல்லை என்பதையும் வெளிநாட்டில் இருந்து வந்த கடிதத்தின் விளைவு இந்த உண்மையைக் கொண்டுவரச் செய்தது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கட்டுக்குடிப்பட்டியில் நடந்துவிட்ட கொலை சம்பந்தமான வழக்கை இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே உண்மையான குற்றவாளி என்பவர் முதன் முதலாக, சீனிவாசன் என்ற ஆய்வாளர் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவரால் பொருள்கள் கைப்பற்றப்படவில்லை என்பதைத்தவிர, மற்றவை எல்லாம் முதல் விசாரணை செய்ததில் உண்மையாகத் தான் விசாரணை செய்திருக்கிறார்கள். திடீரென்று பல்வேறு காரணங்களுக்காக அவர் மாற்றப்பட்டு வேறு பலர் நியமனம் செய்யப்பட்டு, அதற்குப் பின்னால் வேறு ஒருவர் குற்றவாளியாக ஆக்கப்பட்டு, இரண்டாவது எஃப்.ஐ.ஆர். தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. இரண்டாவதாக, கைப்பற்றப் பட்டிருக்கக் கூடியவை, அந்தப் பெண்மணி அணிந்திருந்த நகைகளே அல்ல என்று சொல்லப்படுகிறது. காரணம், அதற்குப் பதிலாக வேறு நகைகளைத் தயார் செய்து அது கைப்பற்றப்பட்டதாக இன்றைக்குப் போலீஸ் தகவல் மூலமாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் மறுபடியும் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு, அரசாங்கம் முழு முயற்சி செய்யுமா என்பதே. காரணம், போலீசார் கொடுத்த தகவல் சரியான தகவல் அல்ல என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதையும் அன்றைய தினமே அவர் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அன்றைய தினம் சொல்லாமல் இன்று இதைச் சொல்வதைப் பார்த்தால், நேற்று முன் தினம் அவர் ஒரு படத்தைக் காண்பித்து, கையிலே குண்டு வைத்திருப்பது அல்ல, அது போன்ற குண்டே அல்ல என்று சொன்னார்களே, அது போலத்தான் இதுவும் என்று நான் கருதுகிறேன். நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன், ஒரு குற்றச்சாட்டு வருகிறது; அந்தக் குற்றச் சாட்டின் மேல் விசாரணை செய்யப்படுகிறது. அது சரியாக இல்லை, தவறு இருக்கிறது என்று அவர் சந்தேகிக்கிறார், வெளிநாட்டிலிருந்து கடிதம் எழுதுகிறார். மீண்டும் புலனாய்வு செய்யப்படுகிறது. அந்த ஆய்வு செய்யப்பட்ட பிறகு, அப்படிப்பட்ட நகைகளையும் மற்றவைகளையும் கொண்டுவந்து நிறுத்தி கண்டுபிடிக்க முடிகிறது

என்றால், இந்த நகைகளை யார் செய்து அவர்களுக்கு என்ன இலாபம் என்பதோடு அல்லாமல், அதுவும் பொய்யான நகை செய்து கொடுத்திருக்கிறார்கள், 95 கிராம் நகைகள் என்று சொன்னால், இதில் வேறு ஏதோ கேஸ் கூட இருப்பது போல் மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் கற்பனை செய்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே ஒரு பணக்காரர் நகைகளைச் செய்து கொடுத்து, வேறு யாரையோ அப்ரூவராக மாற்றி விட்டார்கள் என்று சந்தேகப்படுகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. இப்படிச் சந்தேகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருந்தால் அதற்கு முடிவே இருக்காது. இந்தத் தீர்ப்பு முழுவதும் வரட்டும். அதற்குப் பிற அதிலே ஏதாவது கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று கருதினால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என் பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. அருணகிரி :** தலைவரவர்களே, இந்த வழக்கிலே முதல் அப்ரூவராக வந்திருந்தவர் . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் புரியவில்லையா? வழக்கிலே டீட்டெயில்ஸ்-க்குள்ளே போகாதீர்கள். போனால் இங்கே பதில் சொல்ல முடியாது. அப்படிப் திரு. சுந்தரராஜ் அவர்களே முதலில் இதையெல்லாம் வேண்டும். இல்லையென்றால் முதலில் சொல்லியிருக்க சொல்லியிருக்க வேண்டும் உறுப்பினரே முதலில் (குறுக்கீடு) ஒரு வழக்கிற்கு இரண்டு வக்கீலா? ஐந்து வக்கீல்களைக் கூட வைத்துக் கொள்ளலாம், அது கட்சிக்காரர்களின் வசதியைப் பொறுத்தது.

**திரு. இரா. அருணகிரி :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்தக் கட்டுக் குப்பட்டி வழக்கிலே முதல் அப்ரூவ ராக இருந்தவர் இரண்டாவது வழக்கிலே முதல் எதிரியாக வரும்பொழுது, இரண்டாவது எஃப்.ஐ.ஆர். போடும் பொழுது அந்த அப்ரூவர் எதிரியாக மாறும்பொழுது அங்கே ஏதாவது அரசியல் தலையீடோ அல்லது பிரமுகர்கள் தலையீடோ இருக்க லாமோ என்கின்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, இரண்டாவது வழக்கும் பொய்யாகத் தயாரிக்கப்பட்டது போலத் தெரிகிறது. ஆகவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரராஜ் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் வற்புறுத்துகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

நேற்றையதினம் ஒரு படத்தை இங்கே காண்பித்து கையால் எறிவது அப்படிப்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டு அல்ல என்று அவருக்கே உரித்தான ஆங்கிலப் பதங்களையெல்லாம் பயன்படுத்தி



அவர் இராணுவத்திலேயிருந்து திரும்பி வந்ததைப் போன்ற நிலையில் சொல்லி, உண்மைகளையெல்லாம் சொல்ல முனைந்ததுபோல இங்கே அந்தப் படத்தைக் காண்பித்து எழுப்பி னார்கள்.

யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கலைஞர் அவர்கள்தான் இவர்களையெல்லாம் கெடுத்து விட்டார்கள். இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை அவைக்குக் கொடுத்துக் கொடுத்துப் பழகி, அதைப் பேசிப் பேசி எல்லோருக்கும் அந்த ஆசை வந்து விட்டது. புகைப்படங்களை எடுத்துக் காட்டுவது, ஏதாவது குறிப்புகளைக் காட்டுவது என்பது போன்ற நிலையில் ஒவ்வொருவருக்கும் இப்படிச் செய்து காண்பிப்போம் என்று தோன்றுகிறதோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

அந்த வகையில் இந்தப் படத்தை அவர்கள் பார்க்கட்டும். எப்படி இது துப்பாக்கியால் சுடப்படுகிறது என்பதைப் பார்க் கட்டும். எப்படிச் சுடுகிறார்கள் என்பதையும் பாருங்கள். இப்படியும் அதைப் பயன்படுத்த முடிகிறது என்பதையும் பாருங் கள். இதையும் பாருங்கள். இந்தத் தோட்டா படத்தையும் பாருங்கள்; இந்தக் குண்டு படத்தையும் பாருங்கள். எப்படிச் சுடப்படுகிறது என்று இந்தப் படத்தையும் பாருங்கள். எல்லோரும் பாருங்கள். அந்தத் துப்பாக்கி இருப்பதையும் பாருங்கள். எப்படிக் கையால் எறிய முடிகிறது என்பதையும் பாருங்கள். இதை எல்லோரும் பார்க்கலாம். பகிரங்கமாகக் காண்பிக்கிறேன். இந்த மன்றம் முழுவதற்கும் இது சொந்தம். எறியும்பொழுது எப்படிப் போகிறது என்பதையும் பாருங்கள்.

இவைகளையெல்லாம் எதற்காகக் காண்பிக்கிறேன் என் றால் ஏதோ அந்த நிற்கிற நிலை, கையிலே எதையோ தூக்கி வைத்துக்கொண்டிருப்பதைப் போல இருக்கிறது என்று எண்ணி, அதையே உறுதியாக்க முயற்சிப்பது நியாயம் அல்ல என்பதையும் நாமெல்லாம் இங்கே சாதாரண மக்களாக இல்லை; சாதாரண மக்களுடைய, படித்தவர்களுடைய, விவரம் தெரிந்தவர் களுடைய பிரதிநிதிகளாக இருப்பதால் அரசுக்கு அறிவுறுத்தும் படியாக அரசுக்குத் தெளிவுபடுத்தும்படியாக சில ஆதாரங்களைத் தர வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளும், விருப்ப மும் ஆகும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் படங்களை இங்கே காண்பிக்காவிட்டால் நிச்சயமாக நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கவே மாட்டார்கள். (குறுக்கீடு) அதுதான். நாங்கள் சினிமாவிலே சொல்வதைப்போல இது எக்ஸ்ட்ரீம் லாங் ஷாட்; இது [illegible] அப். (குறுக்கீடு)

இதுகலவரம் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோது எடுத்த படம். அதேபோல எறியும்போது எப்படி இருக்க வேண்டும் என்ற முறைப்படி அது அந்த மூவ்மெண்ட்டிலே பாதி வரை செல்லுகிற போது எப்படி இருக்கும் அவருடைய கை, அங்க சேட்டைகள் என்று சொல்லுவார்களே அந்த நிலைமைகள் எல்லாம் இருக்கின்ற நிலை. இதை நான் இங்கே கொடுத்துவிடுகிறேன். இதை எதற்காக நான் சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை நகைச்சுவையோடு எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்தான் எதற்கெடுத்தாலும் இது போன்ற படங்களைக் காட்டுவார்.

(முற்பகல் 9-20.)

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை எந்த வகையிலே ஒரு கூட்டத்தைக் கலைக்க வேண்டிய அவசியம் வருகிறபோது நடந்து கொள்ளும் என்பதற்காக இவ்வளவு படங்களை எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். படங்களைப் பொறுத்தவரையில் மிக நன்றாகத்தான் இருக்கின்றது. இந்தப் படங்கள் எடுத்திருப்பதும் நல்ல 'குளோசப்'பில் மிக நெருக்கமாக எடுத்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்தாற் போல் 'போஸ்' கொடுத்து இருக்கிறார்கள். அதுவும் பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் நாங்கள் எல்லாம் கறுப்புக் கொடி காட்டப்போனபோது, நேரடியாக நாங்கள் இருந்த இடத்தில் இந்தக் குண்டுகளை எடுத்து வீசக்கூடிய உரிமை பெற்ற அதே காவல் துறையினர், அதை வீச முடியாமல் அல்லது வீசவேண்டாம் என்றோ, தெருவிலே கிடந்த கற்களை எடுத்து கூட்டத்தின் மீது வீசியதை நேரடியாக நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே இப்படி கல்வீசுகிற ஒரு நிலைமை வருகிறபோது ஏற்படக்கூடிய சில தவறான எண்ணங்கள் அல்லது குற்றங் குறைகள்-அதைத் தவிர்ப்பதற்காக கல்வீசுகிற அந்த முறை இருக்குமானால் அதை மேற்கொள்ளக் கூடாது என்று சொல்ல அரசு தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே நிற்கின்ற 'போஸ்' நன்றாக இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். எப்போதுமே இயற்கையாக நடைமுறையிலே நடைபெறும்போது எடுக்கப்படுவது என்பது ஒன்று. எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்ற தெளிவைச் சொல்லும்போது அந்தப் பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகள் அதைச் செய்து காண்பிக்கின்ற நிலையில் எடுக்கின்ற நிலை வேறு. கவேதான் அவ்வளவு தெளிவாக இருக்கின்றது. இல்லாவிட்டால் கொஞ்சமாவது அசைவு இருக்கும், கொஞ்சம் 'அவுட் ஆப் போக்கஸ்' இருக்கும்.



**டாக்டர் மு கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஒன்று புரியாமல் இருக்கின்றது. இப்போது நீங்கள் காட்டிய படங்கள் முழுவதும் விமான நிலையத்தில் எடுக்கப்பட்ட படங்கள் அல்லவா, அல்லது தனியாக எடுக்கப்பட்ட படங்களா ?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரியாமல் கேட்கவில்லை. துணைத் தலைவர் கேட்டிருக்கிறார்களே, அதற்குக் கொஞ்சம் உறுதியாக இருக்கட்டும், அதை ஏதாவது ஒரு திருப்பத்தி கொண்டு வந்து வேறு நிலைகளை உண்டாக்கி விடலாமா என்று எண்ணுகிறார்கள் என்பதுதான் இந்த சாமார்த்தியமே தவிர வேறு அல்ல. ஒன்றை நான் தெளிவாகச் சொல்லுகிறேன். அவர் கிளப்பி விட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகக் காவல்துறை செய்ய வேண்டிய முறை என்ன, அந்தக் குண்டுகள் கையிலே இருக்குமா இருக்காதா, அப்படிப்பட்டவை இருக்கின்றனவா இல்லையா என்பதை மன்றத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட படங்களே தவிர இவைகளை அங்கே எடுத்து இருப்போமோயானால் பின்னால் புகை மண்டலங்கள் இருந்திருக்கும். புகை மண்டலங்கள் இருந்து இருக்குமானால் அதற்கிடையே எடுத்திருப்பதாக இது வரும்.

ஆகவேதான் கலைஞர் அவர்களும் என்னோடு சினிமாத் துறையிலே சேர்ந்திருந்தவர், இப்போதும் இருக்கின்றவர் என்ற முறையில் நான் ஏதாவது சொன்னால் அதிலே இருந்து ஏதாவது கிடைக்காதா என்பதற்காகத்தான் அவர் சொல்லுகிறார். என்பது எனக்குத் தெரிகிறது. ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இப்படித் தெரிந்தோ, தெரியாமலோ யாராலோ கொடுக்கப்படுகின்ற படத்தைக் காட்டி—அந்தச் செய்திகளைச் சொல்வது கூட, ஒரு வகையில் இந்த நாட்டுக்கும் இந்த மன்றத்திற்கும் எங்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை நான் மனமகிழ்ச்சியோடு, நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை சில சமயம் யாராலோ சொல்வதைப்போல, திறமையோடு சொல்லிவிட்டார் என்றால் அது பொய்யாக ஆகிவிடும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோல சிலரிடம் சிலர் வந்து அழுது, துன்பப்பட்டு வேதனைப்பட்டு இவ்வளவு அவல நிலையிலே இருக்கிறோம் என்பதை அழுதோ, வெதும்பியோ அல்லது வேதனையோடு கக்குகின்ற வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தும் போது, கேட்கின்றவர்களுக்கு இவ்வளவு கொடுமைகளா என்று தோன்றுவது இயற்கை. அதை நம்பி நமது நாட்டிலே இப்படி நடக்கலாமா என்ற கருத்துக்களை வெளியிடுவதும் ஒரு வேளை சரியாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் இவைகள் எல்லாம் உண்மையின் வடிவங்கள்தானா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இப்படிப் பேசுகின்றபோதுதான் பிரச்சினை நமக்குப் பயன்படுகிறது என்பதை இங்கே மனநிறைவோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு செய்தியை நான் இங்கே சொல்லியாக வேண்டும். சிவாஜி கணேசன் அவர்கள் சென்னையிலே வந்து இறங்கிய போது, அவருக்கு எவ்வளவு எச்சரிக்கையோடு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு கருதியது என்பதை நாங்கள் இது வரையில் அரசினுடைய பிரதிநிதிகள் செல்லும்போது கொடுப்பதைவிட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் செல்லும்போது அதிகமாகப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். அது யாரையும் அவமானப்படுத்த வேண்டுமென்றோ அல்லது தகுதியைக் குறைத்துச் சொல்ல வேண்டுமென்றோ சொல்லவில்லை. அக்கறை அதிகமாக இருக்கிறது என்பதும், பொறுப்பு அதிகம் என்பதையும் உணர்ந்து நாங்கள் அதைச் செய்வது உண்டு, அந்த வகையிலே செய்தோம். எங்கே மேடை அமைக்க வேண்டுமென்று சொன்னோமோ, அதிகாரிகள் சொன்னார்களோ அதை அவர்கள் கேட்கவில்லை. பாதைக்குக் குறுக்கே அமைத்தார்கள். அதை மாற்றி இன்னொரு இடத்தில் மேடையைப் போடுங்கள் என்று சொன்னதை அவர்கள் கேட்கவில்லை. அதையும் மறுத்தார்கள். அதற்குப் பிறகு ஆயிரக்கணக்கான பேர்கள் விமானக் கூடத்தில் புகுந்து செல்ல முயலும்போது, தடுக்க வேண்டிய கட்டாயம் மற்றவர்களுக்கு, அதிகாரிகளுக்கு ஏற்படுகிறது. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகாய விமானம் வந்து இறங்கும் போதோ அல்லது புறப்படும்போதோ, ரோஜா மாலைகளிலிருந்து உதிருகின்ற பூக்கள் அந்த இன்ஜின்களுக்குள்ளே சிக்குமானால், எவ்வளவு பயங்கரமான ஆபத்து ஏற்படும் என்பதை விவரம் அறிந்தவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இந்தியப் பிரதமர் அவர்கள் சென்னைக்குச் சென்ற முறை வந்தபோது, ஒரு திட்டம் போட்டு, இன்னார்தான் இங்கெல்லாம் நிற்பது என்று கூட இருந்தது. அப்படித்தான் நிறுத்தி வைத்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னும், கொஞ்சம் குறிப்பிடத்தக்கவர்கள் அங்கே போகலாம் என்ற அளவிற்கு அழைத்துக்கொண்டு சென்றபோது, சிவாஜி கணேசன் அவர்களை அழைத்துச் சென்ற போது, அவர்கள் மாலை போடுவதற்குக் கூட முடியாமல் மக்கள் அவரை முந்திக் கொண்டு தள்ளியபோது, அம்மையார் அவர்கள்கூடக் கோபித்துக் கொள்ளவேண்டிய அளவிற்கு வந்தது என்பதையும், அந்த ஜீப்பிலே ஏறி அங்கே இருப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டி வந்தது என்பதையும் நினைவிலே கொண்டால், கட்டுப்படுத்துகின்ற அளவில் சில நேரங்களிலே, அந்தக் கட்டுக்கோப்புக்குள் தன்னை அடக்கிக் கொள்ளமாட்டேன் என்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்வம், அன்பு, வேகம் இவைகளைச் சில சமயத்தில் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், நிலைமைக்கேற்ப வருகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், மக்கள் அவரைக் காண வேண்டுமென்று எண்ணுகின்றபோது, போகின்ற மக்கள் கொஞ்சம் எச்சரிக்கை





யாக இருந்து ஒத்துழைத்தால்தான், யாரையும் ஒழுங்காக சீராக மக்கள் சந்திக்க ஏற்பாடு செய்ய முடியுமே தவிர, இதே சிவாஜி கணேசன் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் பாதுகாக்கக்கூடிய செயலுக்குத்தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல், நமக்கு எதற்காகக்கெட்ட பெயர் என்று ஒதுங்கி இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஜீப் என்ன ஆயிற்று, சிவாஜி கணேசன் அவர்கள் அந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் மற்றும் குறிப்பிடத்தக்கவர்கள் ஏறிய உடனேயே அளவில்லாமல் தொண்டர்கள் ஏறிய காரணத்தால் ஜீப்பே கவிழ்ந்தது. அதை யாரும் மறந்து இருக்க மாட்டார்கள். ஆகவே, இந்த அளவிற்குக்கட்டுப்பாடு இல்லாத அந்த நிலைமையைக் கட்டுப்படுத்தி, நாம்தான் ஒத்துழைக்க வேண்டுமென்பதை நான் பணிவோடு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, எந்த ஒரு அருவருப்பான நிகழ்ச்சிகளும் உண்டாக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை திட்டவட்டமாக சொல்லுகிறேன். அதிலும் சிவாஜிகணேசன் அவர்கள் டெல்லியிலே போய்த் தங்குவதற்கு எந்த அளவிற்கு இந்த அரசு அக்கறை எடுத்துக்கொண்டது, என்னென்ன மரியாதை அங்கே அவர்களுக்குத் தரப்பட்டது என்பதை சிவாஜி கணேசன் அவர்களிடமே கேட்டால் தெரிந்து கொண்டிருக்க முடியும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் பேசிய பொதுக்கூட்டத்தில்கூட அரசைக் குறை கூறவில்லை. அங்கே இருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் கட்டுப்பாடோடு அதிகாரிகள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்திருந்தால் இது நடந்திருக்காது என்று சொல்லமுடியுமே தவிர, அரசு வேறு, காவல்துறை வேறு என்று நாங்கள் சொல்லமுடியாது என்ற காரணத்தால், அந்தப் பொறுப்பை நீங்களே ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் என்ற வகையில், நான் ஒன்றைத்திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். சிவாஜி கணேசனுடைய உயிரும், அவர் உடல் நலமும் எங்களுக்குப் பெரிதே தவிர, அவர்கள் மேல் அன்பு செலுத்துகின்றவர்கள் தடையை மீறி, கட்டுப்பாட்டை மீறி செல்வார்களானால், அவர்களையும் பார்க்கும்போது, இவர்தான் எங்களுக்கு முக்கியமாகத் தோன்றும் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். அந்த அளவிற்குத்தான் காரியம் நடந்து கொண்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல. இங்கே கூட்டம் முடிந்து நான் திரும்ப என்னுடைய மாம்பலம் அலுவலகத்திற்குச் செல்லும்போது சிவாஜி கணேசன் அவர்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிய மக்கள் என்னைப்பார்த்து கையை உயர்த்தி வாழ்த்திவிட்டுப் போனார்கள் என்பதை இங்கே நான் பெருமைக்காகச் சொல்லவில்லை: தகவலுக்காகச் சொல்லுகிறேன். அந்த மக்கள் எனக்கு விரோதிகளாக இல்லை; நானும் அவர்களுக்கு எதிரியாக இல்லை. ஆகவே, தயவு செய்து தெரிந்துகொள்ள வேண்டும். இன்னும் 10 இலட்சம் பேர்களுக்கு மேல் கூடிப்பாராட்டினாலும் அது எங்களுக்குப் பெருமைதானே அன்றி நான் வேறு எல்லா

வற்றையும் மறந்துவிட்டுப் பேசுகிறேன்— நடிகன் என்ற முறையில் எனக்கு மிகப் பெரிய பெருமையாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கூட்டத்தைக் குறைத்துக் காண்பிப்பதனாலே மட்டும் ஒருவருடைய புகழ் குறைந்துவிட்டது என்று நம்பக்கூடிய ஏமாளி நான் அல்ல, அதற்கு முயற்சி செய்யலாம், ஏதோ அரசியல் இலாபம் பெற்றுவிடலாம் என்று கருதுபவன் நான் அல்ல; நாங்களும் அல்ல என்பதை இங்கே தெளிவுபட தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

இங்கே நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் மல்லிகா என்ற பெண் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருக்கும்போது காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, கற்பழிக்கப்பட்டார் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையல்ல. அப்படிப் பட்ட தவறு நடந்ததாகச் சொல்லப்படுவது காவல் நிலையத்தில் அல்ல; அவருடைய வீட்டில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்டவைகளை விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வாளரின் குடியிருப்பில்தான் நடந்தது என்று சொல்லும்போது அதுபற்றி இங்கே இருக்கிற குறிப்புகள் இவ்வளவையும் நான் படிக்க வேண்டுமென்றால் நேரம் போதாது. ஏற்கெனவே 90 நிமிடங்கள் எடுத்துக் கொண்டேன். இதற்காக 10 நிமிடம் 20 நிமிடம் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். அதற்குமேல் போனால் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று தெரியாது. இன்னும் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் என்றால் நீங்கள் எல்லாம் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். இப்போதே நெற்றியைச் சுழிக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிட விரும்புகிறேன்.



நமது மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட முறை சரியில்லை; தகுதிபெற்றவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள்; ஏறத்தாழ 120 பேர்களுக்கு மேல் அங்கே தகுதி பெற்றவர்களை ஒதுக்கிவிட்டார்கள் என்பது போன்ற குறைகளைச் சொன்னார்கள். என்னுடைய கடமை யார் குற்றச்சாட்டு தந்தாலும், தெரிவித்தாலும் அதை விசாரிக்க வேண்டியது என்பதும், தவறு என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும்தான். அது பற்றி விசாரித்தேன். அப்படி நடந்திருப்பது உண்மை என்றும், தகுதி உடையவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்றும் கண்டறிந்த பிறகுதான் அதைப்பற்றி நான் பகிரங்கமாகச் சொன்னேன். நான் மறைக்கத் தயாராக இல்லை. இனி எச்சரிக்கையாக தகுந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதில்லை; இராணுவத்திலுள்ள யாராவது ஒருவரைக்கூட நடுநிலையாளராக அங்கே இருக்குமாறு செய்து, அப்படிக்கூட தேர்ந்தெடுக்கலாமா, இந்தக் குறை கூட வராமல் இருப்பதற்காக ஏன் இதைச் செய்யக்கூடாது என்ற முறையிலே இந்தக் கருத்தை வெளியிட்டேனே தவிர காவல் துறையினர் மீது நம்பிக்கை இல்லாமல் அல்ல. தவறுகள் எங்கும் நடக்கின்றன. நான் முதன் முதலாக இந்தப் பேச்சை ஆரம்பிக்கும் முன்னால் குறிப்பிட்டதைப் போல எந்தச் சமுதாயத்திலிருந்து காவலர் பணிக்கு வருகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் பல மதத்தவர்கள், பலதரப்பினர்கள்—இப்படிப் பட்ட குடும்பச் சூழ்நிலையிலிருந்து அங்கே வருகிறார்கள். எல்லோரும் சரியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எல்லோரும் வழி தவறி நடப்பார்கள் என்று முடிவுக்கு வந்துவிடக்கூடாது. அந்த நிலையில்தான் எச்சரிக்கையாகச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. நாங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். நான் இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் இந்தப் பதவியில் இருக்க முடியும். அதற்குப் பிறகு மக்கள் அதைப்பற்றி சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மக்கள் எந்த வகையில் முடிவிற்கு வருகிறார்களோ அதுதான் முடிவாக இருக்கப் போகிறது. நானே விரும்பினாலும் கூட, மக்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், நான் இந்தப் பதவியில் நீடித்து இருக்க முடியாது. ஆகவே, ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதைப் போல, இவ்வளவு நாள் பொறுத்து இருந்து விட்டீர்கள்—4 ஆண்டுகள், $4\frac{1}{2}$ ஆண்டுகள் பொறுத்துக் கொண்டு இருந்து விட்டீர்கள்—இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தேர்வு ஏற்கெனவே தி. மு. க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரையில் போலீஸ் உயர் மட்ட அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவால் நடத்தப்பட்டு

வந்தது. பிறகு இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு அந்த முறையை மாற்றி சர்வீஸ் கமிஷனிடத்தில் ஒப்படைத்தது. அதற்குப் பிறகு சர்வீஸ் கமிஷன் தேர்வு நடத்தியது, பின்னர் அதுவும் போய், மீண்டும் போலீஸ் உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழுவிடம் அந்தத் தேர்வு நடத்தும் பொறுப்பு விடப்பட்டது. இந்த மாறுதலும் உற்ற பயனை அளிக்கவில்லை என்பதால்தான் ராணுவத்திடம் அந்தத் தேர்வை ஒப்படைக்க முடிவு செய்தது போல் கருத்து ஒலிக்கிறது. இப்படிப்பட்ட முரண்பாட்டுக்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முரண்பாடு எதுவும் இல்லை. நாங்கள் எல்லோரையும் மதிக்கிறோம். அது தான் காரணம் என்று சொல்லிக்கொள்கிறேன். 10,000 பேர்கள் போலீஸ் இலாகாவில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவித்தவுடனேயே, அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்களை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களை போலீஸ் இலாகாவில் நுழைப்பதற்காகத் தான் இந்தத் திட்டம் கொண்டு வந்து இருக்கிறோம் என்று வெளியிலேயே பேசப்பட்டது, வெளியில் எழுதப்பட்டது. அதன் விளைவுதான், அந்தக் குழுவை அமைத்து நாம் செய்தாலும், அந்தக் குழுவில் எங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினோம் என்ற கெட்ட பெயர் வரக்கூடாது என்று தேர்வாணை குழுவிடம் அது ஒப்படைக்கப்பட்டது. அதிலே குற்றச்சாட்டு வந்தபிறகுதான், அந்தத் தேர்வாணைக் குழுவிலிருந்து மறுபடியும் குழுவிற்குக் கொடுக்கப்பட்டது. அதிலே தவறு வந்து இருக்கிறது என்று சொன்னதால் ராணுவத்தினரை வைத்துக்கொண்டு செய்யலாமா என்று சொன்னேன். தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்படி செய்கிறோம். இன்னொரு பிரச்னையும் சொல்லப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள், பின் தங்கியவர்கள், மலை வாழ் மக்கள் பெரும்பகுதி பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகவே தான் இந்தப் பிரச்னைகளைத் தவிர்க்க அந்த முறையைப் பின்பற்றலாம் என்கிற முறையில் அந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர வேறு எதுவும் இல்லை. இதிலே முரண்பாடு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, முதலில் போலீஸ் உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழுவிடம் அந்தத் தேர்வு செய்யும் பொறுப்பு இருந்தது. பிறகு இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, தேர்வாணைக் குழுவிடத்தில் அது ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மூலம் தேர்வு நடத்தப்பட்டது. மீண்டும் போலீஸ் உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவிடத்தில் அந்தத் தேர்வு செய்வது ஒப்படைக்கப்பட்டது. அதிலே தவறு நடந்து இருப்பதாக முதலமைச்சர் கூறி, ஒரு ராணுவக் குழுவிடம் அந்தத் தேர்வை ஒப்படைக்கலாம் என்று குறிப்பிட்டதாகச் சொல்கிறார்கள். இந்த மாறுதல்களுக்கான காரணம் என்ன என்பதைத்தான் அறிய [illegible]ம்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கொஞ்சம் நான் தெளிவாகச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பினோம். தேர்வாணைக் குழுவில் அந்தக் காரியங்கள் செய்யப்பட்டு வந்தன. இதற்கிடையில் குற்றச்சாட்டுகள் வந்தன. மீண்டும் நாங்கள் அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கலாம் என்று ஒப்படைத்த நேரத்தில், அதற்குப் பிறகும் பேசப்பட்ட செய்திகள், சொல்லப்பட்ட விஷயங்கள் எங்கள் பெயருக்குக் களங்கம் உண்டாக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாக இருந்ததால், அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று ராணுவத்தில் இருந்து ஒருவரை வைத்துக்கொண்டு அதை நடத்தலாமா என்ற முடிவிற்கு வந்தோமே தவிர இதிலே முரண்பாடு இல்லை என்பதை மீண்டும் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கொண்ட குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேலையில் நியமிக்கப்படவில்லை என்பதுதான் பலபேர் இங்கே சொன்ன கருத்து. தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் அரசாங்கத்திற்கு வந்து இருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கலாம். அதிலே குறைகள் இருந்தால் திருத்திக்கொள்ளலாம். குறைகள் இல்லாமலிருந்தால் அவர்களுக்கு வேலை தரலாம். ஆனால் வேலை தருவது நிறுத்தப்பட்டு இருக்கிறது. வேலை கொடுக்கப்படவில்லை என்று தான் குறைபட்டுக்கொள்கிறார்கள். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையிலேயே தவறு என்று வந்தபோது. அதிலே 4,000 பேர்களாக இருந்தாலும், 3,000 பேர்களாக இருந்தாலும், 10 பேருக்கு அநியாயம் அங்கே வழங்கப்பட்டிருந்தாலும் நிச்சயமாக எல்லோரையும் பொதுவாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதிலேயே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூடக் கேட்டார்கள். அவர்களுடைய சர்டிபிகேட் எல்லாம் என்ன ஆயிற்று என்று. அதைத் திருப்பித் தரவேண்டும் என்று பலபேர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 60 பேர்களுக்கு காவலர்களுக்கான [illegible]தவிகளில் வேலையில் சேர்வதற்கு உத்தரவுகள் வந்திருப்ப[illegible]கவும் அவர்கள் இன்றோ அல்லது நாளையோ சேரப்

போவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே இது சம்பந்தமாக நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மீண்டும் அவர்களை நியமனம் செய்வதற்கு உத்திரவிடப்பட்டிருக்கிறதா என்று.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்படுகிறது என்ற செய்தியைச் சொல்கிறார்கள். எனக்குச் சொல்லப்படவில்லை என்ற செய்தியை நான் இப்பொழுது சொல்லி, விசாரிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா டுடே பத்திரிகையில் வைத்தியநாதர் என்பவருடைய வீட்டிலே புகுந்து தொல்லை விளைவித்ததாகக் கூறப்படும் சம்பவம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி குற்றம் சாட்டி இருக்கிறார்கள் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாரோ அந்தப் பழனி என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அவர் தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கமிஷன் சம்பந்தமாக சதாசிவம் என்ற அதிகாரியையும், எதிர்க்கட்சித் தலைவரின் உதவியாளர் ஷண்முகநாதன் என்பவரும் கொடுமை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதியின் முன் கொண்டு செல்லப்பட்ட போது, ஏதாவது உங்களுக்குச் சொல்ல இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில் யாரைத் துன்புறுத்தியதாகச் சொல்கிறார்களோ அவர்கள் இருவரும் எந்தக் குறையும் சொல்வதற்கு என்னிடம் இல்லை என்ற வகையில் பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வி. என். சோமு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞருடைய மருமகன் செல்வம் அவர்கள் தான் போலீசாரால் கொடுமை செய்யப்பட்டதாக, அந்த 2வது மாஜிஸ்ட்டிரேட்டிடம் சொன்ன போது, அந்த வழக்குகளில் நானே ஆஜராகியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்ட செய்தியிலிருந்து, தகவல்களிலிருந்து மீண்டும் படித்துக் காண்பிக்கிறேன். ஆஜர் செய்யப்பட்டபோது தங்களுக்குக் காவல் துறையினரால் ஏதும் கொடுமை செய்யப்பட்டதாக அவர்கள் புகார்கள் சொல்லவில்லை என்பதுதான் இங்கே என்னிடத்திலே



இருக்கிற குறிப்பு. இது தவறாக இருந்தால் குறிப்பேட்டிலே இங்கே இருக்குமேயானால், இந்தத் தகவல்களைச் சொன்னவர்கள் மீது நான் நடவடிக்கை எடுக்கிறேன். இல்லையானால் எனது மதிப்பிற்குரிய என். வி. நடராசன் அவர்களுடைய செல்வக் குமாரன் அவர்கள், தயவு செய்து அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன். ஏனெனில் அவர் ஒரு நல்ல வழக்குரைஞர். அவர்களே இருந்ததாகச் சொல்லும்போது அதைப் பொறுப்பேற்றுக் கொள்வது அவருக்கு எளிதாகவே இருக்கும். கஷ்டமாக இருக்காது என்று நம்புகிறேன். (குறுக்கீடு.)

**திரு. என். வி. என். சோமு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். திரு. செல்வம் அவர்கள் கூறிய அந்தக் குற்றச்சாட்டை, போலீசார் மீது சுமத்திய அந்தக் குற்றச்சாட்டை, நீதிபதி அவர்களே பதிவு செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். செல்வம் அவர்களைப் பொறுத்தவரையில் நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இங்கு நான் பேசிய சில விஷயங்களில் சிறு மாற்றம் இருக்கிறது. பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவிரும்புகிறேன். செல்வம் கைது செய்யப்பட்டது விமான நிலையத்தில் என்பதும், மற்ற இரண்டு பேரையும் கேட்டபோது, இந்தப் பதில் வந்திருக்கிறது என்றும் இந்தக் குறிப்பிலே இருக்கிறது. ஆகவே அதைப்பற்றித்தான் நான் பதில் சொன்னேன். செல்வத்தைப் பற்றி என்றால் அது பற்றி விசாரணையில் வெளிவரும். அப்போது அதற்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

அப்சல்கான் என்ற மருத்துவ அதிகாரியைப் பற்றி இங்கே குற்றம் சொல்லி, அவர் ஏன் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அநியாயமாக நடந்தது. அந்த விசாரணையில், ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டது என்று எல்லாம் சொல்லி, அதையும் இந்த அவையில் வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். வருவாய்த் துறையின் சார்பாக ஒரு நபர் குழு நடத்துகிற அந்த விசாரணையின் முடிவுகள் அனேகமாக மன்றத்தில் வைக்கப்படுவதில்லை. வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினாலும், வைக்க வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு). உதாரணம் என்று ஆரம்பித்தால் உங்களுக்குத்தான் தொல்லை........

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகளை நீதிபதிகளாகக் கொண்டு போடப்படுகின்ற கமிஷன்களுடைய ரிப்போர்ட் சபையிலே வைக்கவேண்டும் என்பது சட்டப்படி

இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னாலும் நீண்ட காலத்திற்கு முன் போடப்பட்ட அந்த விசாரணைக் கமிஷன்களின் முடிவுகள் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு அவற்றை இங்கே தெரிவிப்பதுதான் முறை. அதற்குக் காரணம் என்னவென்றால் இதுபோன்று பல்வேறு கமிஷன்களுடைய ரிப்போர்ட்டுகள் எல்லாம் இங்கே வைக்கப்படும் என்று இதே அவையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன். பல்வேறு விசாரணைக் கமிஷன்களின் ரிப்போர்ட்டுகள் அந்த நீதிபதிகளின் தீர்ப்புகள் எல்லாம் இங்கே வைக்கப்பட வேண்டுமா, வைக்கப்பட வேண்டாமா என்பதெல்லாம் வேறு விவகாரம். ஆனால் உங்களுடைய விஜிலன்ஸ் டிப்பார்ட்மென்ட் தவறுதலாக அநியாயமாக ஒரு டி.எம்.ஓ. மீது பொய் வழக்கு போடப்பட்டு பிறகு குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் அந்த அதிகாரி அல்ல, போலீஸ் அதிகாரிகள்தான் என்று தெரிவித்ததற்குப் பிறகு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான் முறையாக இருக்கும். இந்தச் சபைக்கும் அது தெரியவேண்டும். நீண்டகாலமாக அது தெரிவிக்கப்படவில்லையே, அது ஏன்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். வருவாய் வாரியத்தின் சார்பாக இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டது என்பதையும், அவற்றின் முடிவுகள் இங்கே வைக்கப்படுகின்ற நிலைமை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்றது என்பதை மட்டும் தெளிவுபடுத்துகிறேன். ஆகவே அது வெளிவரும்போது நாங்கள் அந்தப் பணியைச் செய்தோமா, இல்லையா என்பதை இந்த நாடும், மன்றமும் அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு திரு. எஸ். என். வி. சித்தன் அவர்கள் சிதம்பரத்தில் கலைமதி என்னும் கூலி வேலை செய்யும் ஏழைப் பெண்ணை டி.எஸ்.பி. கொடுமை செய்ததன் காரணமாக மண்ணெண்ணெய் ஊற்றி குற்றுயிராகி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். . . . .

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நான் இறந்ததாகச் சொல்லவில்லை, பரிதாபகரமான முறையிலே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டு பின்னாலே விடுவிக்கப்பட்டு மறுபடியும் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர்மீது போலீஸ் கண்காணிப்பு இருக்கின்றது என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 11–12–1981 அன்று இரவு 10 மணிக்கு சிதம்பரம்



நடராஜா திரையரங்கில் இரவுக் காட்சி பார்ப்பதற்காக கலைமதி, குமாரி, கோமதி என்ற மூன்று பெண்களை சிதம்பரம் காவல் துறை துணை கண்காணிப்பாளர் கேம்ப் அலுவலகம் வழியாகச் சென்று கொண்டிருக்கையில் அவர்களை ஜீப்பில் ஏற்றி காவல் நிலையத்திற்கு அனுப்பினார்கள். மூன்று பெண்களும் காவல்நிலையத்திலே வைக்கப்பட்டனர். கலைமதியைக் காவல் துறை துணை கண்காணிப்பாளர் மறுநாள் காலை அடித்திருக்கிறார். கலைமதியின் தந்தையையும் அடித்திருக்கிறார். பின்னர் விடுவிக்கப்பட்டு அவமானம் தாங்காமல் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக்கொண்டு தற்கொலை செய்ய முயன்றார் என்று தெரிய வருகிறது. துணைக்காண்காணிப்பாளர் விரும்பத்தகாத முறையில் நடந்துகொண்டதால் அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் அவர் மீது விசாரணை நடத்தி வருகிறார். அவர் மாறுதல் மட்டும் செய்யப்பட்டிருக்கிறார். என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலே இருந்த சாட்சிகளுக்கு அங்கே அவர்கள் சொல்வதற்குரிய வாய்ப்பைத் தரும்போது அவர்களை அதைப் பயன்படுத்திக்கொள்ளச் செய்தால் குற்றவாளிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உமாநாத் அவர்கள், மானாமதுரையில் தேவி, விஜயா என்ற இரண்டு இளம் பெண்கள் பணியாற்றும் கம்பெனியின் முதலாளியின் மகன் மற்றும் பலரால் பலவந்தப் படுத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு பின்னர் குரல் வளை நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்றும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் இது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை என்றும் குற்றவாளிகளுக்குத் துணை போவதற்காகவே காவல்துறை செயல்படுகின்றதா என்றும் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குற்றவாளிகளுக்குத் துணை போவதற்காக ஒரு காவல்துறை உள்ளது என்ற நியதி தமிழகத்தைப் பொறுத்தவரையில் இல்லை என்பதையும் அப்படி இருந்து இருக்குமேயானால் இந்தக் குற்றங்கள் எல்லாம் வெளியே வராமலே கூட முன்பெல்லாம் மறைத்திருப்பதைப் போல மறைக்க முடிந்திருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அப்படி இல்லாமல் இந்த இரண்டு இளம் பெண்கள் இறப்பைப் பற்றி முறையாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதிலே உள்ளூர் காவல்துறை விசாரித்து பலன் இல்லாததால் குற்றப் புலனாய்வுத்துறை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்று இந்த வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

எனவே, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், காவல்துறை ஒன்றுமே செய்யவில்லை என்றும் மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். கடலூர் டெப்டி தாசில்தார் 12—11—81 அன்று நீரில் மூழ்கி இறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன்புதான் 2,400 நெல் மூட்டைகள் பிடிக்கப்பட்டன என்றும் வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றும் சொல்லியிருக்கிறார்கள். கடலூர் வட்ட வழக்கறிஞர் திரு. சண்முகசுந்தரம் 13-10-81 அன்று இரவு அவர்கள் வீட்டின் அருகில் இருந்த கிணற்றில் பிணமாகக் கிடந்தார். அவர் வீட்டு வேலைக்காரி கொடுத்த தகவலின் படி அந்தப் பிரேதம் எடுக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. உடலில் வெளிக் காயம் எதுவும் இல்லை. புலன் விசாரணையின்போது இந்த அதிகாரி நெல் கொள்முதல் செய்பவர்களுக்கு உரிமம் வழங்குவதில் முறைகேடுகள் செய்யப்பட்டதாகவும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்ததாகவும் அதற்கு அஞ்சி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்றும் தெரிய வந்தது. இதற்கு வேறு எந்தக் காரணமும் இருந்ததாகப் புலன் விசாரணையில் தெரியவில்லை.

அடுத்து, திருத்தணி சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான பயணிகள் விடுதியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்குக் காரணம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்கள்தான் என்று சொன்ன பிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ரகுமான்கான் அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். 21—3—1981 அன்று ராஜசேகரன் என்பவரும் அவரோடு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருத்தணி கோவில் விருந்தினர் இல்லத்தில் 157 (பி)-ல் இரவு 7-30 மணிக்கு வந்து தங்கியிருந்தனர். அறையை வாடகைக்கு எடுத்த ராஜசேகரன் 25—3—1981 அறையைக் காலி செய்யவோ அல்லது சாவியை கோவில் நிர்வாகத்தினரிடமோ திருப்பித் தரவோ இல்லை சந்தேகம் கொண்ட கோவில் நிர்வாகத்தினர் பூட்டப்பட்ட அந்த அறையைத் திறந்து பார்த்தபோது ஒரு பெண்ணின் பிரேதம் அழுகிய நிலையில் காணப்பட்டது. பிரேத பரிசோதனை செய்யப்பட்டு திருத்தணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இந்தச் சம்பவம் நடந்த அறையின் பக்கத்து அறையில் 157(ஏ) யில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. அர்ஜுனரெட்டி அவர்கள் தங்கியிருந்ததால் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பார் என்று [illegible]விடர் முன்னேற்றக் கழகச் சார்பில் கூறப்பட்டது. ஆனால்



இந்தப் புகாரில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று தெரிய வந்துள்ளது. வாடகைக்கு எடுத்த ராஜசேகரன் என்பவர் சிதம்பரம் விலாசத்தைக் கொடுத்திருந்தார். ஆனால் விசாரணையில் இந்த விலாசம் தவறானது என்று தெரிய வந்தது. கோவில் நிர்வாக அலுவலம். மூன்று சிற்றெழுத்தர்கள், போதிய கவனம் செலுத்தாததால் தாற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க புலன் விசாரணை நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே இன்னொரு பெரிய முக்கியமான சமுதாயப் பிரச்சினை என்ற காரணத்தால் கொஞ்சம் விளக்கமாக சிலவற்றைச் சொல்லி என் கருத்தை, அரசாங்கக் கருத்தை இங்கே வெளியிடவேண்டியது அவசியம் என்ற வகையில் நக்ஸலைட்ஸ் என்று கருதப்படுபவர்கள் பற்றி சில சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நக்சலைட்ஸ் என்று அழைக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த இளைஞர்கள் தங்களுடைய உள்ளத்திலே ஏற்படுகிற வேதனை, ஏமாற்றம், எரிச்சல், அவர்கள் மனதிலே பதிந்துவிட்ட சில நிகழ்ச்சிகளால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்று கூடச் சொல்லலாம், அவைகள் அத்தனையும் சேர்ந்துதான் ஒரு சில இளைஞர்களைத் தவறான வழியைப்பின்பற்றி சில காரியங்களைச் செய்வதற்கு முனைகிறார்கள் என்பதை முதலில் நான் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாயத்தில் ஏழ்மையான நிலையில் இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், வேலை இல்லாமல் திண்டாடுகிறவர்கள் இவர்கள் போக படித்துவிட்டு சென்னை நகரம் போன்ற இடங்களில் அனைத்து மக்களோடு சமத்துவமாக பழகி அங்கிருந்து திரும்பி கிராமங்களுக்குச் சென்றவுடன் மீண்டும் அவர்கள் மிகவும் தாழ்வாக இருந்தாக வேண்டும், தகுந்த தகுதி அவர்களுக்குத் தரப்படமாட்டாது என்ற சூழ்நிலையைக் காணும் போது அதை அனுபவிக்க நேரும்போது, அவர்கள் ஆத்திரத்தின் மொத்த உருவமாக மாறுகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடக்கடமைப்பட்டிருக்கிறேன். இது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆனால், அவர்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய செயல்முறை சரியான வகையிலே, தவறான வகையிலே வடிவம் எடுக்கிறது.

இங்கே நக்சலைட்டுகள் பற்றிச் சொல்லும்போது, வேண்டுமென்றே கொலை செய்து அவர்களை அழித்து விடுவதுதான் இந்த அரசின் கொள்கை என்பதுபோல் சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, குறிப்பிட்டதற்கு உண்மையிலேயே நான் வேதனை அடைகிறேன் அப்படியானால் இப்படிப்பட்ட மிகப் பின் தங்கிய மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள், அதிலும் பிற்பட்ட

சமுதாயத்திலே, தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ்பகுதி மக்கள்
போன்றவர்களுக்காக விசேஷ திட்டங்களைத் தீட்டுவதும், அதற்
காகத் தொகுக்கணக்கான பணத்தை ஒதுக்கி வைத்தும், அக்கறை
காட்டி, தொழில்களிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க
இந்த வேலைவாய்ப்பு கிடைக்கு, மற்றவர்களைப் போல்
வாழக்கூடிய வசதி பெறும்போது, இன்னொருவரிடம் கைகட்டிக்
காத்திருக்கின்ற நிலையில்லாமல் செய்ய இந்த அரசு ஏன் முனை
கிறது என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் காரியங்களை இந்த அரசு
செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு சர்வோதயத் தலைவர்
களை அணுகினால், அவர்கள் அதற்கு விளக்கம் தருவார்கள்
என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அவர்கள் மிகப் பெரிய
நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்
பட்ட திட்டங்களுக்கு அவர்கள் நேரடியாக செல்வதும்,
சந்திப்பதும், அவர்களோடு உறவாடுவதும், மக்களை
நல்ல வழிகளிலே நாங்கள் உங்களுக்குக் கடமையாற்ற வந்திருக்
கிறோம் என்று சொல்வதும் அவர்களுடைய பெரும் பணியாக
எடுத்துக் கொண்டு, அவர்களுக்குக் கிடைக்கின்ற பணத்தைக்கொண்டும்
அங்கே திட்டங்களை உருவாக்கி அவர்கள் சேவை செய்கிறார்கள்
கள் என்பதைக் கூட நான் இங்கே சுட்டிக்காட்டுவதில் பெருமை
யடைகிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லா
சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசின்

ஆனால், நக்சலைட்டுகள் என்று சொல்லுகிறோமே, அவர்
கள் அத்தனைபேர்களும், நக்சலைட் என்ற கொள்கைக்கு, அவர்
பாரி என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களா, நக்சல்
என்பதை நாம் சிந்திக்க வேண்டும். வாழ்க்கையிலே
வழியில் வாழ்வுபெற முடியாதவர்கள் சிலர் குறுக்கு
களுக்குத் துணைபோகிறார்கள் என்பதையும், கூட வர்
தூண்டுவதால் இந்த நாட்டில் குழப்பம் ஏற்பட்டு, வன்முறையைத்
ஒழுங்கு சீர்குலைவதால், இந்த நாட்டில் அமைதி கெட்டு, சட்டம்
இந்த நாட்டினுடைய மக்கள் வாழமுடியாத,
செய்யமுடியாத ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று தொழில்
எண்ணுகின்றவர்கள், அங்கே தலையிட்டு சில காரியங்களுக்குக்
காரணமாக இருக்கிறார்கள் என்பதைக் கூட
சொன்னால், தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் இங்கே
என்ன காரணமோ, அதை வைத்துக் கொண்டு இருப்பதற்கு
பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவதற்காகச் சொல்லுகிறேன் அந்தப்
என்று கூட எண்ணலாம்.

மத்திய அரசில் உள்ளவர்கள், ஆந்திராவுக்குத் திரும்பும்
போது அதைச் சொல்லுகிறார்கள். வேறு பகுதிக்குச் சென்று
இப்படிப்பட்ட செய்திகளை நேரிலே அறிந்து, அனுபவங்களை,
நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகு, நிகழாத பலனைக் கண்டபிறகு,



அவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்கள், சமூக விரோதிகள் இதிலே ஈடுபடுகிறார்கள் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையில், நக்சலைட்டுகள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், தீவிரவாதிகள் சிலர் அழைக் கப்படுகிறார்கள். தீவிரவாதிகள் என்று எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். எந்தக் கட்சியிலும் தீவிரவாதிகள், மிதவாதி கள் என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒன்றுபட்டுப் போயிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. போராட்டத்தைத் தொடங்கலாம் என்று கட்சியிலே சொன்னால், உடனே சொல்லு கிறார்கள், போராட்டத்தை எந்த முறையில் தொடங்கலாம் என்று தீவிரவாதிகள் சொல்வதற்கும் ஒரு கட்சியிலும் இருப் பார்கள்; பல கட்சிகளிலும் இருப்பார்கள்.

(முற்பகல் 10-10)

அதுபோல் இந்த வகையில் போகக்கூடாது அமைதி யாக ஒருவழியைக் கடைப்பிடித்து போராட்டத்தை நடத்த வேண்டும், மக்கள் எண்ணங்களை வெளியிடவேண்டும் என்று சொல்வதற்கும்கூட பல கட்சிகளில் ஆட்கள் இருப்பார்கள். ஆனால் நக்சலைட்டுகளைத் தயாரிக்கிற வர்கள் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது எல்லாம் குறிப்பிட்ட சில அதிகாரிகளை ஒழித்துவிட்டால் குறிப்பிட்ட சில பணக்காரர்களை ஒழித்துவிட்டால் இந்த நாட்டில் அபேதவாதம் சமதர்மம் வந்துவிடும் என்ற எண்ணத்தைக் கூட தூண்டிவிடு கிறார்கள் என்பதை நாம் அறியும்போது வேதனைப்படுகிறோம். உண்மையிலேயே தமிழகத்தினுடைய நிலைமை இப்படிப் போய்க் கொண்டிருக்கிறதே என்று எண்ணித் தலை குனியத் தயாராக இருக்கிறோம். ஏனெனில் இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர் கள் எத்தனையோ வெவ்வேறு விதமான கட்சிகளுக்குச் சொந்தக் காரர்களாக இருந்தாலும் பொது நோக்கத்திலே இந்த நாட்டு மக்கள் அமைதியாக வாழவேண்டுமென்ற கொள்கையிலே சொந்த மாக அதை எடுத்துக் கொண்டவர்கள் என்பதிலே எனக்குச் சிறிதளவும் ஐயம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஆனால் நக்சலைட்டுகள் என்று சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மக்களிலே யாராவது நக்சலைட்டுகள் என்று அழைக்கப்படுகிறவர்களாக இருந்து ஏதாவது விபத்துக்குள்ளா வார்களானால் அல்லது தாக்குதலுக்கு ஆளானார்கள் என்றால் அதைத் திருப்பி வேறு பெயரைச் சூட்டுவதன் மூலம் இந்த நாட்டில் வேறு வகையில் அரசியலுக்குப் பயன்படுத்தமுடியுமா என்று எண்ணுவார்களானால் ஒரு சிலர் உடனே அதை தாழ்த்தப் பட்ட மக்களைத் தாக்குகிற கொடுமையான முறை என்று, தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல் கிறார்கள். இல்லை, ஒரு வேளை நக்சலைட்டுகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் வசதிமிக்க குடும்பத்திலிருந்து வந்தவர் கள் என்று வைத்துக்கொள்வோம் அல்லது உயர்சாதி என்று அழைக்கப்படுகிற ஒரு இனத்திலிருந்து வந்தவர் என்று வைத்துக்

கொள்வோம் அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதசமூகத்தைச்
சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகிற சமூகத்தைச் சேர்ந்தவர்
கள் என்று வைத்துக்கொள்வோம். உடனே என்ன சொல்
கிறார்கள், மைனாரிட்டிகள் மெஜாரிட்டியை வாழவிடாமல்
குறுக்கிட்டு அழிக்கப் பார்க்கிறார்கள் என்ற எண்ணத்தை
உடனே அரசியல் ரூபமாக வெளியிட நாம் தயங்குவதில்லை.
நான் இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து பணிவோடு சொல்லிக்
கொள்கிறேன். இந்தக் காவல் துறையைப் பொறுத்த
மட்டில் வட ஆற்காட்டிலே சுட்டார்கள், தர்மபுரியிலே அராஜ
கம் என்று இரண்டு மாவட்டங்களிலே நக்சலைட்டுகள் பற்றித்
திரும்பத் திரும்பப் பேசுகிறார்களே அவர்களுக்கு எனது பணிவான
வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன். எதிரிகள், ஆட்சிக்கு
எதிரிகள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஆட்சி
இருக்கக் கூடாது என்று எண்ணுகிற கட்சியைச் சேர்ந்தவர்கள்
என்று வைத்துக்கொள்ளுங்கள் அல்லது இந்த ஆட்சியை
ஏதோ ஒரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ—எதிர்க்கட்சித்
தலைவர் நேற்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு
நான் பின்னாலே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆனால் அந்த எண்ணம் ஆளும் கட்சிக்கு இருந்து அவர்களுக்குச்
சாதகமாக அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்று எண்ணி
அதற்காகத் தூண்டிவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.
நான் முதன்மையாக இருக்கின்ற எதிர்க்கட்சியைச் சொல்ல
வில்லை. எந்தக் கட்சியையும் குறிப்பிட்டு நான் சொல்ல
வில்லை, பொதுப்படையாகச் சொல்கிறேன். இந்த மாமன்
றத்தில் இல்லாத ஏதாவது ஒரு கட்சி அல்லது கொள்கை
உடையவர்கள், அவர்கள்கூட இப்படிப்பட்ட காரியத்தைச்
செய்யலாம், அவர்களை அழிப்பதற்கு இந்த அரசுக்கு எதிராகக்
கருத்துச் சொல்வதால் அவர்களை ஒழித்துக் கட்டுவதற்குக்
காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள்
என்றால் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்
பட்டவர்கள் வட ஆற்காட்டிலேயும் தர்மபுரியிலேயும் மட்டும்
தான் இருக்கிறார்களா? தமிழகத்திலே வேறு இடத்திலே
இல்லையா? வேறு எங்குமே இல்லையா? அங்கு மட்டுமே ஏதோ
எதிராக இருக்கிறார்கள் அல்லது மாற்றுக் கருத்து உடையவர்
களாக இருக்கிறார்கள் அப்படிப்பட்டவர்களை அழித்தாகவேண்டு
மென்ற நோக்கம் என்று சொல்கிறார்களே, நான் மீண்டும்
வற்புறுத்திக் கேட்கிறேன், மற்ற மாவட்டங்களிலே மற்ற
தாலுக்காக்களிலே ஏன் மற்ற கிராமங்களிலே யாருமேஇல்லையா?
கட்சி இல்லையா? அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லையா?
இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அனைத்திந்திய
அண்ணா தி.மு.க. என்று சொல்லிக்கொள்கிறோமே இந்தியா
முழுவதற்கும் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்கிற
கட்சிகளிலே எந்தக் கட்சியும் இல்லையா? நக்சலைட்டு என்று
அழைக்கப்படுகிறவர்கள் வட ஆற்காடு அல்லது தர்மபுரியிலே
மட்டும்தானா இருக்கிறார்கள் என்பதை நான் கேள்வியாக
அல்ல, உள்ளத்திற்கு வேண்டுகோளாக வைக்கிறேன். சிந்திக்கப்



பாருங்கள், வட ஆற்காடு மாவட்டத்திலே பணியாற்றுகின்ற காவல் துறையினர் ஒவ்வொரு நிமிடமும் தங்கள் உயிருக்கு எப்போது ஆபத்து வரும், எந்த நேரத்திலே எந்த வெடி குண்டு வரும், எந்த துப்பாக்கிக் குண்டு வரும், எந்த இடத்திலே தீ வைப்பார்கள், எந்த இடத்திலே கார்களை அழித்து நம்மை நாசமாக்குவார்கள் என்ற அச்சத்தோடு சேவை செய்கிறார்களே அவர்களுக்குக் கொடுக்கிற பரிசுதானா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

அந்த காவலர்கள், அந்த அதிகாரிகள் மற்ற இடங்களில் வேலை செய்திருக்கிறார்கள். இன்னும் பலபேர் மாற்றி அங்கே போய் வேலை செய்திருக்கிறார்கள், அங்கே இருந்த இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., போன்றவர்கள் பல இடங்களிலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். வேறு இடங்களுக்குச் சென்று வேலை செய்யவிருக்கிறார்கள். காவலர்கள் கூட அங்கே இருந்திருக்கிறார்கள், அப்படியானால் அவர்களுக்கு எல்லாம் என்ன நோக்கம்? எந்த கட்சியிலே யார் இருக்கிறார்கள் என்று ஒரு 10,20, 30 பேரை சுட்டுக்கொன்று விட்டால் மட்டும் இந்த நாட்டிலே இருக்கிற , அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்தக் கட்சியை ஒழித்து விட முடியும் என்று நாங்கள் கற்பனை செய்தால், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துவங்குவதற்கு முன் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து பல சவங்களைச் சிறைசாலைகளிருந்து வெளியேகொண்டு வந்தபோது, அந்தச் சவங்களோடு நடந்து சென்ற இராமச்சந்திரன்; இன்று முதலமைச்சராக இருந்தால் கூட, அதற்குப் பிறகு சிறையிலேயிருந்து லாக்கப்பிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட சவத்தோடு நடந்து சென்ற இராமச்சந்திரன் இன்று முதலமைச்சராக இருக்கிற ஒரு காரணத்தால் அழித்து விட முடியும் என்று கற்பனை காணலாம் என்று யாராவது எண்ணுகிறீர்களா? எண்ணுவதற்கு நியாயம் இருக்கிறது என்று நம்புகிறீர்களா? அந்த எண்ணம் இந்த அரசைப் பொறுத்தவரையில் சிறிதும் கிடையாது. ஒரு கொள்கையைப் பற்றி நாம் ஒட்டுமொத்தமாக நினைத்துப் பார்ப்போமானால், பெரும்பான்மை சிறுபான்மை என்று பார்க்கிறோம், பெரும்பான்மைக்குப் பாதுகாப்பு உண்டு, பெரும்பான்மை ஆனதால் என்று ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, சில நேரங்களில் சில இடங்களில் பெரும்பான்மைகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல், சிறுபான்மைகளுக்குப் பாதுகாப்பு போகிறது என்பது கூட நாம் பார்த்து, இப்படி அநியாயமா என்று அந்த ஊர்க்காரர்கள் கேட்டால் பதில் சொல்லமுடியாமல் இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கூறிக்கொள்கிறேன். அதிகமாக ஆழமாக இதிலே உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் நிச்சயமாகச் சொல்லிக்கொள்கிறேன். பெரும்பான்மை என்ற காரணத்தாலே சிறுபான்மையை அழிப்பது ஜனநாயகத்திலே அதன் வேலையல்ல. ஜனநாயகம் என்பது

இன்றைய தினம் ஒரு கொள்கையை ஏற்று மக்களே மாற்றி அமைந்து அவர்களை அனுப்பி ஆட்சியிலே உட்கார வைத்தார்கள். நாளையதினம் வேறு சிலரை மாற்றி அனுப்புகிற ஜனநாயகம் இந்த நாட்டிலே இருக்கிறது.

மாண்புமிகு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல நக்சலைட்டுகளை அரசுக்கு விரோதமாக செயல்பட்டார்கள். எனவே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் அரசின் மீது சுமத்த விரும்பவில்லை. நக்சலைட்டுகள் சில ஆதிக்கங்களுக்கு எதிராக, அமுக்கப்படுகிற நிலையிலே, ஒடுக்கப்படுகிற நிலையிலே இருக்கிற மக்களின் சார்பாகக் கிளர்ந்தெழுகிற இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நக்சலைட்டுகள். அந்தக் கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது திட்டவட்டமாக இங்கே பலமுறை எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியிலே அனைவரும் இங்கே எடுத்துச் சொன்ன ஒரு உண்மை என்னவென்றால் நக்சலைட்டுகள் என்ற பெயர் சூட்டி அந்தப் பகுதியிலே கொலை, கொள்ளை என்று வேறு பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்களை, நக்சலைட்டுகள் என்ற பெயர் சூட்டி போலீசார் அவர்களை விசாரித்து தாங்களே தண்டனை வழங்குகிறார்கள். அது சரிதானா என்பது தான் எதிர்க்கட்சிகள் சார்பிலே எடுத்து வைக்கப்பட்ட கோரிக்கை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காகத் தான் முதலிலே உங்களுக்கெல்லாம் தெரிந்ததை, நானும் ஓரளவு புரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன் என்ற வகையிலே சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். நக்சலைட்டுகள் எப்படி உருவாக்கப்படுகிறார்கள் என்று. சமுதாயத்திலே தங்களுக்கு கிடைக்க வேண்டியதைப் பெறமுடியாமல் போய்விடுகிறபோது, தகுதியினைப் பெற்ற சில இளைஞர்கள் அதை பெறுவதற்கு போராடுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிற முறை இந்த நாட்டிற்கு ஒவ்வாத முறை, ஜனநாயகத்திற்கு ஒத்து வராத முறை என்பதை நான் முதலிலேயே சொன்னேன். அங்கே தான் நான் வந்து பேசிக்கொண்டிருக்கிறேன். எந்த ஒரு தனிப்பட்ட கட்சியும் வன்முறையை ஆதரிக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஜனநாயக நாட்டிலே, இந்தியாவிலே அதிலும் தமிழகத்திலே மக்கள் இடம் தரமாட்டார்கள்; அவர்களுக்குச் சாதகமாக மக்கள் இருக்கமாட்டார்கள். அத்தனை பேரும் உள்ளே இருப்பவர்களும், வெளியே இருப்பவர்களும் நிச்சயமாக இதிலே இறங்கக்கூடாது ; இறங்கமாட்டார்கள் என்பது தான் என்னுடைய எதிர்பார்த்தலும், வேண்டுகோளும் ஆகும்.



[முற்பகல் 10–20]

ஆனால், அதோடு நான் நின்றுவிடவில்லை. இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். யாரையாவது கண்டு பிடித்து, அவரை நக்சலைட் என்று சொல்லி, அவருக்குத் தண்டனை விதித்து, தீர்ப்பளிக்கின்ற உரிமையையும் காவலர்களே எடுத்துக் கொள்கின்றார்கள் என்று சொல்லும்போதுதான், அது எப்படிப்பட்ட வழக்கு என்பதைப் பற்றி எண்ணும்போது, அதற்குத் தனியாக வழக்கு நடைபெறுகிறது, நடத்தப்படும் என்பதை நான் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறேன். பல வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், நடை பெற்ற வழக்குகள், ராஜன் போன்ற வழக்குகள் எல்லாம் என்ன ஆகின்றன என்பதை நாம் பார்க்கின்றோம், சீராளம் வழக்கு என்ன ஆகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, வழக்கு விளைவுகளிலே மட்டும் நாம் நம்பிக்கை வைத்தால் போதாது, வாழ்க்கையிலும் நாம் நம்பிக்கை வைக்க வேண்டியிருக்கிறது. அந்த வாழ்க்கையை உருவாக்கும்போது, யார் எதைச் செய்தாலும் அதைக் கண்டிக்கின்றவர்களாக நாம் தனிப்பட்ட முறையில் இல்லாமல், அனைவரும் சேர்ந்து கண்டிப்பதாக நாம் ஆகிவிட வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையில் நக்சலைட்டை எடுத்துக் கொள்வோம். ஒரு காவல் துறை அதிகாரி இறந்தார். நான் சென்றேன் வேலூருக்கு. இரண்டு குழந்தைகள், அந்த அம்மையார், இவர்களைப் பார்க்கும் போது எவ்வளவு வேதனை இருந்தது என்பதையும் அதுபோல் மறைந்துவிட்ட, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இன்னும் எத்தனைபேர் என்பதையும் எண்ணிப் பார்த்தால், அவர்களுக்கும் ஒரு கொள்கை இருக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கும் கொள்கை இல்லையா ? சங்கம் கேட்கின்றார்களே, சங்கத்தைக் கேட்ட பிறகு, அந்தச் சங்கத்திற்கு முழு உருவம் கொடுக்க முடியவில்லை, தாமதம் ஆகிறது என்ற வருத்தம் ஏற்படுகிறதே, இவைகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பீர்களானால், அவர்களுடைய எண்ணம் எங்கே போகும் ? அவர்களுக்கு அந்த உரிமை இல்லையா ? தொழிலாளர்கள் கேட்கின்ற அந்த உரிமை காவலர்களுக்கு ஏற்படக் கூடாதா ? நக்சலைட்டுகளுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி, ஏமாற்றத்தாலே இருக்கிற சாதாரணமாக காவல்காரர், போலிஸ்காரர் என்கிறோமே, அவர்களுக்கு வந்துவிடாதா ? அவர்களது மகனுக்கு வரக் கூடாதா ? மருமகனுக்கு வரக் கூடாதா ? மருமகளுக்கு வரக்கூடாதா ? பேரனுக்கு வரக் கூடாதா ? ஏன், பெண் சமதர்ம உரிமை என்று சொல்கிறோமே, பெண்ணுக்கு வந்துவிடக் கூடாதா ? இப்படி உரிமைப் பிரச்சினைகள் வரும்போது, இதற்கெல்லாம் ஒரே பதில் வன்முறையில் இறங்கினால்தான் என்ற நிலைமை நாட்டிலே இருக்குமேயானால், அதை நாம் கண்டிக்க வேண்டுமே தவிர, பாராட்ட வேண்டியவர்களாக இல்லை. அந்த வகையில் மாண்புமிகு நெடுமாறன் அவர்களையும், என்னிடம் அறிக்கை தந்திருக்கிற குமரி அனந்

தன் அவர்களையும், என்னோடு விவாதித்திருக்கின்ற ஆண்டித் தேவர் அவர்களையும் மற்றவர்களையும் நான் நன்றியோடு பாராட்டி, அவர்கள் இவைகளுக்கெல்லாம் ஒத்துழைக்க தயாராக இல்லை என்பதையும் இப்படிப்பட்ட ஒரு கொள்கை என்ற நிலைமையில் இருப்பவர்கள், அந்த எண்ணத்திற்கு ஆளாக்கப் படாத வகையில் அவர்களுக்கு வாழ்க்கையில் என்ன உத்தரவாதம் தரப்போகிறோம், என்ன முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக் கிறோம் என்றால், இங்கே ஒவ்வொருவரும் சொல்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் நான் சொல்கின்ற பதில், நாம் திட்டம் போட்டு என்ன, என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவைகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு வாய்ப்பிருந்தாக வேண்டும்.

365 நாளும் தடை உத்தரவா என்று இங்கே கேட்டார்கள். பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. 365 நாள் போதாது வேண்டுமென்று டத்திற்கு என்று வந்துவிட்டால், தடை உத்தரவு இல்லாமல் போராட் என்ன ஆகும். நான் நிலைமையைச் சொல்கிறேன். நக்சலைட் என்ற பிரச்சினையை விட்டுப் போய்விடுகிறேன் என்று நினைத்து விட வேண்டாம். அந்தப் பிரச்சினையை முழுமையாக நான் முடிக்க வேண்டுமென்று கருதுகிறேன். மற்றவைகளுக்கெல்லாம் தான் பதில் சொல்லாவிட்டாலுங்கூட பிறகு கேட்பார்கள், வாய்ப் பிருந்தால் அவற்றிற்கு நான் பதில் சொல்கிறேன். ஆனால், ஒன்றை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மடாதி பதி பேசுகிறார். 'கிறிஸ்தவர்கள் தந்த பணத்தை வைத்துக் கொண்டு இந்துக்கள் கோயில் கட்டி விடக் கூடாது. அதைப் பழுது பார்த்து விடக்கூடாது. அந்தப் பணத்தைப் பெற்று அவர்கள் உதவி செய்து விடக்கூடாது', என்று. இது தேவையா? இது ஒற்றுமையை உருவாக்குகின்ற நிலைமைதானா? ஒரு மடாதி பதிதான், அவர் மடாதிபதி என்ற காரணத்தால் அவர் அதைச் சொன்னால் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறதா? அதற்கு துணை போகின்றவர்களை நாம் எப்படி வாழ்த்த முடியும் இதற்குத் துணை நிற்கின்றவர்களை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? தடை விதித்தால் என்ன ஆர். எஸ். எஸ்.-க்கு என்று கேட்கின்றார்கள்? தடை விதிக்கின்ற முழு உரிமை எங்கே இருக்கிறது என்பது சட்டம் படித்தவர்களுக்குத் தெரியும். எவ்வளவு பிரச்சினைகள் உருவாகும் என்பது தெரியும். ஆனால் எந்தெந்த வகைகளில் தடைகளை உருவாக்க முடியுமோ, அவர் களுடைய செயல் முறைகள் வளர்வதற்கு இடம் கொடுக்காமல் தடுக்க முடியுமோ அதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்துணை கட்சித் தலைவர்கள், கட்சிகளைச் சேர்ந்தவர் களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இந்தத் தமிழக அரசுக்கு இருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய நிலைமைகளை நாம் உருவாக்கும்பொழுது அவ கள் என்ன செய்கிறார்கள்? வெடிகுண்டு தயாரிக்கும் நிலைக்குப் போகிறார்கள். கோயில்கள் மீது வெடி குண்டைப் போட்டால் கோயிலை இடித்து விடலாம். ஆனால் கோயிலை நம்புகின்ற



மக்களுடைய மனத்திலேயிருக்கின்ற நம்பிக்கையை எப்படிப் போக்க முடியும்? புதிய கோயிலைக் கட்டுவதற்கு அவர்களால் முடியாதா? வீட்டிலே கூடத்திலோ, அறையிலே ஒரு படத்தை மாட்டி அவர்கள் கும்பிட முடியாதா? ஆகவே அதிலே வெற்றி பெறுவது முடியாது. அது போலத்தான் நக்சலைட்டுகளும். எப்படி பலாத்காரத்தைக் கொண்டோ, மற்றவர்களைப் பயமுறுத்தியோ தங்கள் மதத்தை வளர்க்க அனுமதிக்கக் கூடாது என்ற கொள்கையை நாம் வைத்துக் கொண்டிருப்பதைப் போல, அதைச் செய்யமுடியாதோ, அனுமதிக்க முடியாதோ, அது போல பலாத்காரத்தைக் கொண்டு, வன்முறையைக் கொண்டு யாராக இருந்தாலும் தங்கள் கொள்கையைத் தமிழகத்தில் நிலை நிறுத்து வதற்கு, வளர்ப்பதற்கு அதையே உரிமையாக ஆக்கி இந்த நாட்டு மக்களை அச்சுறுத்தி ஒரு சில பலரை ஆட்சியிலே உட்கார்ந்து கொண்டு அந்த நிலையை அடையலாம் என்ற ஆசைக்குத் தள்ளப் படுவதற்கு இந்தச் சமுதாயம் ஒத்துக்கொள்ளாது என்ற நம் பிக்கையில் நான் பேசுகிறேன். அதை இந்த அரசு அனுமதிக்காது. அது எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அது ஹிந்து முன்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—ஒரு போஸ் டரை வைத்திருக்கிறேன்—ஹிந்து நாடு என்கிறார்கள், அதை நாம் எப்படி அனுமதிக்கப்போகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்து மதத்திலே இருக்கின்றவர்கள் அவர்கள் விருப்பப்படி எங்கும் செல்ல முடியாது என்ற நிலைமை ஏற்படுத்தப்படுமானால் அதை கவனித்து ஆவனசெய்ய வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அந்த இந்து மத நம்பிக்கை உள்ளவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது, ஒரு ஆட்சியிலே இருக்கின்றவர்களுக்கு அந்த நம்பிக்கை இருக் கிறதோ இல்லையோ அதைச் செய்து தர வேண்டிய கடமை யிருக்கிறது என்பதை நாங்கள் உணர்கின்றோம்.

மாண்புமிகு அறநிலையைத் துறை அமைச்சரைப் பற்றி இங்கே சில குறைபாடுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதை எடுத்துக் காட்டியதற்காக மகிழ்ச்சியடைகிறேன். பேசப்பட்ட வைகள் என்னென்ன என்பதைப் பற்றி இன்னும் நான் அவரோடு பேசவில்லை. சில சமயம் பேசப்படுவது வெளியிடப்படும் பொழுது இருபொருள்கள் பொதிகின்ற விதத்தில் எழுத ஆரம்பித் தால் கடைசியில் ஒரு தலைப் பட்சமாகச் செய்தி வெளிவருகிறது என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம். நானும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, சொல்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்தத் தமிழக அரசைப் பொறுத்தவரையில், எந்த ஜாதிக்காகவும், எந்த மதத்திற் காகவும் எங்களுடைய கொள்கையை நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை என்பதையும் அது அறிஞர் அண்ணாவின் கொள்கைதான் என்பதையும், நான் இங்கே தெளிவுபட சொல்ல விரும்புகிறேன். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நம்பிக் கையை இந்தக் கட்சி தன்னுடைய செயல் முறைகளைத் திட்ட மிட்டுச் செயல்படுத்தும் என்பதை நான் இங்கே வெளிப்படை யாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தகராறுகள் எங்கே முளைக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.
நக்சலைட்டுகளைப் பற்றி சொல்வதை நான் இன்னும் விட்டு
விடவில்லை; பின்னாலே வருகின்றேன். இங்கே சொல்லியிருக்
கிறார்கள். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள், நீங்கள் இலை
களையும், கொம்பையும் நான் வெட்டியிருக்கிறீர்கள்; ஆணி
வேரை உங்களால் வெட்ட முடியாது; அடிமரத்தை வெட்ட
முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவரைப்
பொறுத்தவரையில் நக்சலைட்டுகள் வேறு வகையிலே இருப்பார்
கள், இருக்கிறார்கள். மீண்டும் துளிர் விடுவார்கள், அதற்குத்
தண்ணீர் ஊற்றுவோம் என்று அவர்கள் சொல்லவில்லை என்றா
லும் தண்ணீர் ஊற்றக் கூடிய வகையில் அவருடைய பேச்சு
இங்கே இருந்திருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்ல
விரும்புகிறேன்.

* திரு. கு. ரமணி : தலைவரவர்களே, திரு. உமாநாத்
அவர்கள் இன்றைக்கு இங்கே இல்லை. இருந்தாலும், நக்ச
லைட்டுகள் சம்பந்தப்பட்டவரையில் அவர் சொன்னது, கிளைகள்
வெட்டப்பட்டது; மரம் வெட்டப்படவில்லை, ஆணிவேர் வரைக்
கும் அது பூமிக்குள்ளே இருக்கிறது, மறுபடியும் கிளை விடும் என்று
அந்த முறையில்—அதற்கு வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற
எண்ணமல்ல அது. அந்தக் கொள்கையினால் எவ்வளவு கெடுதல்
கள், தீமைகள் இருக்கின்றன என்பது முதன் முதலில் இந்த
நாட்டில் அனுபவித்தவர்கள் இந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆகவே, அந்த எண்ணத்தோடு
சொல்லபடவில்லை. அது வளரும் என்று அவர் கருதி சொல்லப்
படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நண்பர் ரமணி
அவர்கள் இந்த அளவுக்கு விளக்கம் தந்ததற்கு நன்றி. ஆனால்
ஒன்றை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். வெட்டப்பட
வில்லை, அழிக்கப்படவில்லை அந்த விஷ விருட்சம் இருக்கின்றது
என்பதை ஒத்துக் கொள்கிறார்கள். அந்த விஷ விருட்சத்திற்கு
நாம் கொடுக்கக் கூடிய அடுத்த தாக்குதல் என்ன? நீங்கள்
கொள்கை என்று சொல்லுங்கள். நாங்கள் இந்த நாட்டின்
சமுதாய அமைப்பு என்று சொல்லுகிறோம். இந்த நாட்டினு
டைய சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு நாம் என்ன செய்யப்
போகிறோம், அதற்கு அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள்
என்ன முடிவெடுக்கப் போகின்றோம், எந்த விளைவுகளை
உருவாக்கப் போகின்றோம் என்பது தான் நம் முன்னாலே உள்ள
கேள்வி. கிளையை வெட்டி விட்டார்கள். இலையை உதிர்த்து
விட்டார்கள். ஆனால் மரம் இருக்கின்றது. வேர் இருக்கிறது
என்று சொன்னால் அப்படிப்பட்டவர்கள் இன்னமும் தோன்று



வார்கள் என்பதுதான் அதன் பொருள். அல்லது தோற்றுவிப்ப
வர்கள் இருக்கிறார்கள் என்று பொருள். ஆணிவேர் அடிப்பகுதி
என்றால், கிளையை வெட்டிவிட்டால் மீண்டும்மலரும்என்பதற்கு
ஆணிவேர் இருக்கிறது என்று பொருள். ஆகவே, தூண்டி விடுப
வர்கள், அதை உருவாக்கி விடுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.
அது ஆந்திராவிலும் இருக்கலாம், அசாமில் இருக்கலாம், திரிபுரா
விலே இருக்கலாம், அல்லது கேரளாவிலும் இருக்கலாம், அல்லது
கர்நாடகத்திலே இருக்கலாம். தமிழகத்திற்கு வந்திருக்கலாம்.
ஆனால் உண்மையிலேயே இது இருக்கிறது என்றால், அந்த
இருப்பதைத் தடுப்பதற்கு, நீக்குவதற்கு நாம் என்ன செய்யப்
போகிறோம்? எத்தனை நாட்களுக்கு இதையே பணியாக நாம்
வைத்துக் கொண்டிருப்பது? காவல் துறையினரை வைத்து
அவர்களுடைய நடமாற்றங்களைத் தடுப்பது தான் வேலையாக
இருக்குமானால், அந்தக் காவல்துறையை வேறு பணிகளைச்
செய்வதற்கு நாம் பயன்படுத்த வேண்டாமா? வன்முறையாளர்
களை தேடிக் கண்டுபிடிப்பதும், அவர்களுக்குத் தண்டனை வழங்கு
வதும். அவர்களால் உயிர் இழக்கக் கூடிய நிலை என்றால் உயிரை
இழப்பது அல்லது அவர்களுடைய உயிரை போக்குவதுதான்-
இவர்கள் வேலை என்றால், ஒரு நாட்டுக்குள்ளே, ஒரு சமுதாயத்
துக்குள்ளே ஒற்றுமைபட்டு, ஒன்றாய் வாழ வேண்டியவர்கள்
ஒருவருக்கொருவர் அழித்துக் கொள்வதற்கு—எப்படி வெளி
நாட்டார்கள் ஆயுதங்களைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லு
கின்றோமோ, ஒரு நாட்டில் சுதந்திரத்தை காப்பாற்றுவதற்கு
நாங்கள் முயலுகின்றோம், நீங்கள் இதிலே தலையிடாதீர்கள்
என்று சொல்லுகின்றோமோ, அதுபோல வெளியே இருப்பவர்கள்
நாம் எதைச் சொன்னாலும் நமக்குச் சாதகமாக அவர்கள் இருக்
கிறார்கள் என்ற எண்ணத்திற்குச் சொந்தக்காரர்களாக அவர்
களை ஆக்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இவைகளை
எல்லாம் பேசுகின்றேன்.

ஒரு வேளை நான் நினைவு சரியாகப் பேசுகிறேன் என்று
இருக்குமானால், அதாவது மறதி இல்லை என்று இருக்குமானால்
சிறையிலே இருந்த ஒருவரைப்பற்றி நமது மாண்புமிகு உமாநாத்
அவர்கள் என்னிடம் பேசியபோது அவர் இப்போது நக்சலைட்டாக
இல்லை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்து விட்டார்
கள், ஜனநாயக முறையிலே அவர்களுக்கு நம்பிக்கை வந்திருக்
கிறது, ஆகவே அவர்களை அப்படி நீங்கள் சிறையிலே வைத்து
அந்த வகையிலே கவனிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டது
எனக்கு நினைவு இருக்கிறது. அதிலே மாற்றம் செய்ய முயன்
றோம் என்பதும், சிலரை வெளியே செல்ல அனுமதி கொடுத்
தோம் என்பதையும்கூட இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய
முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினரால்
மட்டுமே எப்போதுமே நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட நிலை
இல்லாமல் செய்வது என்பது சாத்தியமா, அப்படியே செய்து
கொண்டிருப்பதுதான் காவல் துறையின் வேலையா என்று

கேட்டார். இந்த நிலை—நக்சலைட் நிலை—தோன்றாமல் இருப்பதற்கு என்ன செய்கிறீர்கள் என்றும் கேட்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட வரையிலும் காவல்துறையினுடைய பலாத்கார நடவடிக்கைகள் மூலம், சிலரை அழித்து விடுவதனால் மட்டும் இந்தப் பிரச்சினை தீரப் போவதில்லை என்பதை தெட்டத் தெளிவாக இந்த நாட்டுக்கு முன்னால் நாங்கள் இதை வைத்திருக்கிறோம். பொருளாதாரத் துறையில் இன்றைக்கு இருக்கும்படியான படுமோசமான தரித்திரத்தில், குமுறிவிட்டுக் கொண்டிருக்கும்படியான கோடிக்கணக்கான கிராமத்தில் இருக்கக் கூடிய ஏழை மக்களுடைய இந்த நிலைமை சீர் திருந்தாமல் இருக்கின்ற வரைக்கும் இப்படிப்பட்ட பலாத்கார நடவடிக்கைகளை வெகு சுலபத்திலே தூண்டி மக்களை எழுப்புவதற்கும், செயல்படுத்துவதற்கும் முடிகிறது. அந்த அடிப்படை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய உள்துறை ஆராய்ச்சி அறிக்கை வெளியிட்டதை முதலமைச்சர் அவர்கள் கவனித்திருப்பார் என்று நினைக்கிறேன். ஆகவே அடிப்படையான பொருளாதார சமுதாய மாற்றந் தேவை, அதன் மூலம்தான் இது இறுதியாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையிலேதான் நாங்கள் அதற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சமுதாயத்திலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை அகற்றியாக வேண்டும். அதற்கு திட்டங்கள் தீட்டியாக வேண்டும். வங்கத்திலே நடக்கிறது, திரிபுராவிலே நடக்கிறது, வங்கத்தில் சுடப்படவில்லையா? துப்பாக்கிச் சூடே நடைபெறவில்லையா, டெல்லியிலே நடைபெறவில்லையா ? உத்திர பிரதேசத்திலே நடைபெறவில்லையா? கொள்ளையர்கள் என்று சொல்லலாம், திருடர்கள் என்று சொல்லலாம், கயவர்கள் என்று சொல்லலாம், கயவாளிகள் என்று சொல்லலாம், அல்லது, தீவட்டிக் கொள்ளை அடிப்பவர்கள் என்று சொல்லலாம். எந்தப் பேரை எதற்குச் சொன்னாலும் அவர் செய்கின்ற முறைகள் என்ன, ஒரு பெண் போகும்போது, அவரது மூக்கை அறுத்து, அந்த மூக்குத்தியை எடுத்துக் கொண்டு போவது என்பது ஏழ்மையை நீக்குவதற்கு ஒரு வழி என்று யாராவது சொன்னால் ஒத்துக் கொள்ள முடியுமா ? ஒரு பெண்ணைக் கொன்றாவது அந்தப் பெண்ணினுடைய கழுத்திலே இருக்கின்ற சங்கிலியை எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்று கருதினால் அது சமூகத்தின்மீது கோளாறு என்பதற்காக, அந்தக் குற்றத்தைச் செய்தவர்களை விட்டு வைக்க முடியுமா ? குழந்தைகளை போகாத இடத்திற்கு போகாதே என்று சொல்லுகிறோம். மீறிப் போகும்போது இழுத்துக் கொண்டு வந்து உட்கார வைக்கிறோம். நடக்கத் தெரிந்தபோது, நெருப்பிற்குப் பக்கத்திலே போனால் சுடும் என்று சொல்கிறோம். சுட்டாலும் பரவாயில்லை என்று போகுமானால் கொஞ்சம் அதட்டுகிறோம். பிறகு அடிக்கிறோம். அதுகூட தேவைப்படுமானால். அதுபோல் போலீஸ் நடவடிக்கை என்பது தான் செய்கின்ற குற்றத்தை உணர்ந்து திருந்துவதற்குத்தானே தவிர, இப்படி நீங்கள் சொல்வது போல் சமுதாயத்திலே இருக்கின்ற சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட ஒருகொள்கையின் சொந்தக்காரர்களை அழித்து



விடுவோம் என்பதற்காக அல்ல. கொள்கையைப் பார்த்தால், இதைத்தான் அமரர் அண்ணா அவர்கள் திரும்பத் திரும்ப சொல்வார்கள். நானும் சொல்கிறேன். அதை பாடம் செய்து வைத்திருக்கிறேன். ஒரு கத்தியைக் கொண்டு ஆயிரம் பேர்களைக் கொல்ல முடியும். ஆனால் ஆயிரம் கத்திகளை வைத்துக் கொண்டு ஒரு மனிதனுடைய உள்ளத்திலே இருக்கின்ற நம்பிக்கையைப் போக்கி விட முடியாது என்று அமரர் அண்ணா அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய நாடகத்திலே இதைச் சொல்லுகிறார்கள். நாட்டிலே இந்தக் அதைப் பிரசாரம் செய் என்றார்கள், கொள்கையைப் பரப்பு என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் செய்ய வேண்டுமே தவிர, வெறும் கத்தியால் எதையும் செய்ய முடியாது என்று நான் சொல்கிறேன். கத்தியைத் தீட்டாதே, "புத்தியைத் தீட்டு என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இதைச் சொன்னார்கள், நாம் இன்று கேட்பது அதுதான். நாம் எல்லோரும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளோம் என்று சொல்லுகிறோம். ஒரு நாள் இங்கே நண்பர் உமாநாத் அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள். நான் அண்டர் கிரவுண்டுக்குப் போனால், என்னைக் கண்டுபிடிக்க முடியாது என்று, அது உலகத்திற்கே தெரிந்த விஷயம். (சிரிப்பு). ஆகவே, இங்கே இருக்கின்ற பிரச்சனை, நாம் ஜனநாயகத்தை நம்புகின்றோமா, அல்லது பழி வாங்குவது, ஆளை ஒழிப்பது என்ற முறையில் கொள்கையை நிறைவேற்றப் போகின்றோமா, இந்தக் கேள்வியை மக்கள்முன் வைக்க வேண்டும்.

ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், திறமை இருந்தும் வாய்ப்பு கிடைக்காமல் இருப்பவர்கள், உழைத்தும் தேவையான ஊதியம் பெற முடியாமல் இருப்பவர்கள், இவர்களைப் பற்றி நாம் என்ன நினைத்தாலும், அவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வி இதுதான். நீங்கள் வேட்டையை நம்புகிறீர்களா, அல்லது வோட்டை நம்புகிறீர்களா, என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், எதன்மேல் நம்பிக்கை வைக்கின்றீர்கள் இதைத் தான் நான் இந்த மாமன்றத்தில் கேட்க விரும்புகின்றேன்.

நக்சலைட்டுக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கொள்கையைப் பிரச்சாரம் செய்யட்டும், அவர்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லட்டும், மக்கள் முன் வரட்டும், மக்களுக்குத் தங்களுடைய நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டட்டும், அதன்மூலம் மக்கள் மனதை மாற்றட்டும். ஆனால் மடாதிபதிகளைப் போல அவர் சொன்னார், அந்தப் பணத்தை வாங்கி இந்த ஜாதிக்கு, மதத்துக்கு செய்யக்கூடாது, இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தருகின்ற பணத்தை, உதவியைக் கொண்டு அந்த ஜாதிக்கு உதவி செய்யக் கூடாது என்ற இதையெல்லாம் நிச்சயமாக நாம் அனுமதிக்க முடியாது என்பதை திட்ட வட்டமாகச் சொல்கிறேன். அந்த வகையில் இந்த அரசு வேட்டையை நம்பவில்லை, வோட்டைத்தான் நம்புகிறது, அந்த வழியிலேதான் இ— செயல்படுகிறது என்று சொல்லும்போது,

தொடர்ச்சி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 29

நக்சலைட்டுகள் திருந்த வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கம், அதற்குப்பல திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். போலீசா ருக்கு இவ்வளவு பெரிய வக்காலத்து வாங்குகிறாரே என்றால், எனது இலாகா என்பதற்காக அல்ல, அவர்களும் மனிதர்கள்தான் என்பதை தயவு செய்து எல்லோரும் நம்ப வேண்டும்.

(முற்பகல் 10.40)

துப்பாக்கியை எடுத்து சுட்டுவிட்டு வீட்டுக்குப் போகும்போது ஒருவேளை தன்னுடைய மகன் அந்தக் கூட்டத்திலே இருந்து இறந்துவிட்டான் ஆனால் அந்தத் தந்தையினுடைய எண்ணம், அவருடைய உள்ளம் எப்படி இருக்கும் என்று தயவுசெய்து சிந் தித்துப் பார்க்க வேண்டும். சுடுவதால், அடிப்பதால் அவர்களுக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை. ஆனால் அவர்களுக்குக் கிடைக்கின்ற நன்மை என்ன ? இங்கே சொன்னார்கள் கலைஞர் அவர்கள். எங்களுடைய காலத்தில் நாங்கள் எவ்வளவு சம்பளத்தை உயர்த் தினோம் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் எந்த அள வுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதையும் இந்த நாடு நன்கு அறியும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

இப்போது எடுக்கும்போதுதான் நினைவுக்கு வருகிறது. நேற்றையதினம் பேசும்போது கலைஞர் அவர்கள் கேட்டார்கள், சோவியத் எப்படி இருக்கிறது என்று. தகவல் வரவில்லை என்று சொன்னேன். ஆனால் பத்திரிகையைப் படித்தேன் ; அதில் வேறு ஒரு தகவல் வந்திருக்கிறது. சமுதாயத்திலே பெண்கள் இந்த திருமணத்திற்காக விற்கப்படுகின்றார்கள். பணத்தையும் கொடுத்து, அந்தக் கொடுமைகள் இங்கே இருக்கின்றன என்று பேசுகிறோமே இதேபோன்று ஒரு கொடுமை அங்கேயும் நடந் திருக்கிறது என்று இங்கே சொன்னால் யாரும் திகைப்படைய மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

தினமலர் பத்திரிகை, சென்னை 27–3–1982-ல் வந்திருக் கிறது. ரூபாய் 25,000 பணத்திற்கு பெண் விற்பனை என்று வந்திருக்கிறது. ரஷ்யாவில் மத்திய ஆசிய பகுதியில் ஒரு இளம் பெண்ணை 2,000 ரூபிள் (ஏறத்தாழ 25,000 ரூபாய்) பரிசுப் பணத்திற்கும் 40 ஜோடி கை உறைகள், ஒரு பசு, இரண்டு ஆடுகள், 12 கைக்குட்டைகள், 60 மீட்டர் துணி மற்றும் இரண்டு மூட்டை அரிசி ஆகிய பொருள்களுக்கு விற்றுவிட்டார்கள். அதற்காகப் பெண்ணின் பெற்றோர்களுக்கு கடுமையான தண் டனை விதிக்கப்பட்டுள்ளது. என்ன நடந்திருக்கிறது என்றால் இதையெல்லாம் கொடுத்து விட்டார்கள். அந்தப் பெண் அங்கே வாழ விரும்பவில்லை. திரும்பிச் சென்றால் பெற்றோர்கள் சொன் னார்கள். உன்னை நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்றால் இந்தப் பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும் ; இந்த பொருள்கள் எல்லாம் எங்களிடம் இல்லை ; ஆகையால் நீ அங்கே போய் இரு என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சனை எல்லாம் வெளியே வந்த பிறகு அந்தத் தாய் தந்தையருக்கு தண்டனை தரப்பட்டிருக்கிறது என்று இந்தப் பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள்.



1982 மார்ச் 29] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சோவியத் ரஷ்யாவிலேயே இப்படி. இங்கு என்ன ? வரதட் சணை என்னென்ன விளையாட்டு விளையாடுகிறது என்பதைச் சொன்னால் நான் அந்தக் குறிப்பினை வாங்கியிருக்கிறேன்; அவர்கள் தெரிவித்த பிறகு நேற்றைக்கு முன் தினம் குறிப் பினை வாங்கியிருக்கிறேன். அதுபற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட வேண்டும். அந்தப் பெண்ணினுடைய பெற்றோர் என்பதிலே சொந்த தந்தை இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதுபோல இன்னும் பல செய்திகள் இருக் கின்றன. விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பதால் நான் அதற்குமேலே அதில் போகவில்லை. ஆனால் அந்தச் செய்தி முழுமையும் உண்மையா என்பதை நான் மறுக்க முடியாது ; உண்மை இல்லை என்று உறுதிபடுத்தவும் முடியாது. அதை நான் செய்யக்கூடாது. ஆகவே, விரைவில் அந்த உண்மை எல்லாம் வெளிவரும் என்பதையும் இப்படிப்பட்ட செய்திகளை வெளி யிடுவதில், சொல்வதில் அங்கத்தினர்கள் அக்கறை காட்டும்போது நான் அவர்களை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறு செய்து, அது செய்தியாக இருந்து, அது உண்மைக்குப் புறம்பாக இருந்தால் கூட அப்படிப்பட்டவைகளை விசாரித்தால் அந்த உண்மை வெளிவரும். அதிலே ஏதாவது நாம் செய்தால், என்ன தண்டனை வரும், என்ன கேலி வரும் என்றால், மற்றவர் களாவது தவறு செய்யாமல் இருப்பதற்கு அது உதவும் என்ற வகையில் நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் கட்சியிலே இருக்கிற ஒரு பெண்மணி அதற்காக வழக்கு மன்றத்திற்குச் செல்ல இருக்கிறார்கள் என்ற செய்தி மட்டும் வந்திருக்கிறது, என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் ஒரு பெரிய பழி சுமத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் அதனுடைய நிலை. ஆகவே அந்த செய்தியைப் போட்டவர்கள் மீது அல்லது அனுப்பியவர்கள்மீது அந்த நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு மன்றத்திலே என்ன தீர்ப்பு வருகிறதோ அது வரட்டும். ஆனால் அதே நேரத்தில் இங்கே சொன்னார்கள். காவல் துறை நிர்வாகத்திற்கு நாங்கள் எதுவும் செய்யவில்லை ; காவல் துறையினரை ஏமாற்று கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

காவல் துறையினருக்கு இந்த அரசு வந்த பிறகு என்னென்ன செய்தோம் என்பதை கொஞ்சமாவது சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும். ஏவல்முறை ஒழிக்கப்படவில்லை என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இங்கே சொன்னார் கள் என்று கருதுகிறேன். அது ஒழிக்கப்பட்டு விட்டது என்பதும், அதற்காக இவ்வளவு ரூபாய்க்குள், இவ்வளவு சம்பளம் கொடுத்தோ அல்லது சொந்தத்திலோ போட்டுக்கொடுத்து வேறு நபரை வைத்துக்கொள்ளவேண்டும். காவல் துறையிலே இருந்து எடுத்துக்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறோம்.

[திரு எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 29

மாவட்ட தலைநகரங்களிலே பணியாற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும், சிறப்புப் பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப்படி 50 ரூபாய் வீதமும், மற்ற இடங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு ரூ. 30 என்ற அளவிலும் 1–8–1980 முதல் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமணமான தமிழ்நாடு சிறப்புக்காவல் பணியாளர்கள் வேறு குடியிருப்பில் வசித்து வந்தாலும் அவர்களுக்கும் உரிய வீட்டு வாடகைப்படி பெறும் சலுகையை அளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே பல்வேறு நன்மைகளை நாங்கள் செய்து இருக்கிறோம். இன்ஸ்பெக்டர்களால் ரூ. 20 மாதத்திற்கு என்றும், இந்திய காவல் பணி கண்காணிப்பாளர்கள், கூடுதல் கண்காணிப்பாளர்கள், உதவி கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு ரூ. 30 என்றும் உயர்த்திக்கொடுத்து இருக்கிறோம்.

இங்கே காவலர்களுக்கு சம்பள உயர்வு பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்தபோது 150—225 என்று ஆக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 1978-ல் அவர்களுக்கு 150—225 என்பதை மாற்றி, 250—450 என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர் நிலை-1, 200—300 என்று இருந்ததை 325—550 என்று இந்த ஆட்சி கூடுதலாக்கியது. தலைமைக்காவலருக்கு 210—325 என்று இருந்ததை, 350—600 என்று ஆக்கியது. உதவி ஆய்வாளர்கள் 300-500 என்று இருந்ததை 450-800 என்று உயர்த்தியது. ஆய்வாளர்களுக்கு 425-700 என்று இருந்ததை 600–1,050என்று ஆக்கியது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் அவர்களுக்கு எல்லாம் சம்பள உயர்வு ஏற்பட்டது என்பதை நான் மறுக்கவில்லை. நான் அன்றைக்குப் படித்துக் காட்டியதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 1970 ஆம் ஆண்டு வரையில் போலீசாரின் அடிப்படை சம்பளம் 70 ரூபாய் என்ற இருந்தது. பிறகு போலீஸ் கமிஷன் போடப்பட்டு, அதன் பிறகு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது என்பதற்காகத்தான் குறிப்பிட்டேனே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில அறிவிப்புகளை சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில், அவர்களுடைய ஊதியம் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அவர்களுக்குத் தேவையான ஊதியத்தை



1982 மார்ச் 29] [திரு எம். ஜி. இராமச்சந்திரன்]

உயர்த்தி, அவர்கள் யாருடைய குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் வாழவேண்டிய நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அதைப்போலவே சில பதவிகளை நீக்கி, அதிலே உள்ள தடைக்கற்களை அகற்றி, அதோடு 10 ஆண்டு காலம் 12 ஆண்டு காலம் ஆனால் தான் பதவி உயர்வு என்ற நிலைமையை மாற்றி அமைக்க இந்த அரசு விரும்புகிறது. அத்தகைய ஒரு கொள்கையை இந்த அரசு கடைபிடிக்க விரும்புகிறது. அந்தவகையில் கொள்கையை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இரண்டாண்டு காலத்திற்கிடையிலே அவர்களுக்கு மக்கள் விரும்புகிற வகையில், அவர்கள் மகிழ்ச்சி அடைகிற வகையில், அவர்கள் இந்த அளவிற்கு எங்களுக்குப் போதும் என்ற அளவில் ஒரு சம்பள விகிதத்தைக்கொண்டு வர நாங்கள் நினைத்து சிலபல திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருக்கிறோம். அந்த முறையில் இப்போது நான் சில திட்டங்களை வெளியிட விரும்புகிறேன்.

காவல் துறையின் துணை ஆய்வாளர் பதவிகள் ஆய்வாளர் பதவிகளாக தரம் உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. காவல் துறையில் துணை ஆய்வாளர் பதவிகள் 1971-ல் கொண்டு வரப்பட்டன. உதவி ஆய்வாளர்கள் துணை ஆய்வாளர்களானவுடன் ஆய்வாளர் பதவி உயர்வு கிடைக்கிறது. எனவே அவர்கள் பணியாற்றும் பகுதிகளின் நிலைமைகளை முழுவதுமாகக் கண்டறியுமுன்னர் பதவி உயர்வு பெற்றுச் சென்று விடுகின்றனர். ஆதலால் இவர்கள் தங்கள் பதவிகளில் முழுக் கவனத்தைச் செலுத்த இயலவில்லை.

(முற்பகல் 10-50).

அத்தோடு காவல்துறை வட்டங்களுக்கெனப் பிரத்தியேகமாகக் குற்றங்களை தடுக்கவும், குற்றவாளிகளைத் கண்டுபிடிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கவும் நீதி மன்றங்களில் வழக்குகளைத் தீவிரமாகத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவும் ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. ஆகவே இப்போதுள்ள 245 துணை ஆய்வாளர் பதவிகளை, ஆய்வாளர் பதவிகளாக உயர்த்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இனி தனியாகத் துணை ஆய்வாளர் பதவி இராது. புதியதாகப் பதவி உயர்வு பெறும் ஆய்வாளர்கள் இனி வட்ட ஆய்வாளர்கள் என அழைக்கப்படுவார்கள். குற்றங்கள் பற்றிய எல்லா பொறுப்புகளும் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் இளம் உதவி ஆய்வாளர் பதவிகளை உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தவேண்டும் என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது. இப்போது 825 இளம் உதவி ஆய்வாளர் பதவிகள் உள்ளன. காவல்நிலையங்களிலும், வட்டங்களிலும் பணியாற்றும் காவல்துறையினர் தங்களின் பெரும்பாலான நேரத்தை சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் செலவிட நேரிடுகிறது. ஆகவே, குற்றங்களுக்கெனத் தனி வட்டங்கள் அமைப்பதெனவும், அவ்வாறு அமைக்கப்படும் வட்டங்களில் உள்ள ஆய்வாளரின் கீழ் உதவி ஆய்வாளர் பதவி தேவையெனவும் அரசு கருதுகிறது. எனவே, அதற்காக இந்த இளம் உதவி ஆய்வாளர் பதவியை உதவி ஆய்வாளர் பதவியாக உயர்த்துவது என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அந்த வகையில் இந்த இடைநிலைப்பட்ட இளம் உதவி ஆய்வாளர் பதவிகளை நீக்கிவிட்டு தற்பொழுது பணியாற்றும் 825 இளம் உதவி ஆய்வாளர் பதவிகளையும் உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தி அவர்களைப் பெரிய மற்றும் முக்கிய காவல் நிலையங்களில் இரண்டாவது உதவி ஆய்வாளர்களாகவும், புதிதாக தோற்றுவிக்கப்பட இருக்கும் காவல் குற்ற வட்டங்களில் பணியாற்றவும் பயன்படுத்த வேண்டும் என்றும் அரசு முடிவு எடுத்துள்ளது.

அடுத்ததாக, பொதுமக்களுக்கும் ஒரு எண்ணத்தை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்கிற போது, பொதுமக்களுக்கும் நன்மை பயக்கும்படியாக செய்யவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருப்பதாக நான் முன்பே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இது குறித்து இங்கேகூட சொன்னார்கள். அதிகாரிகள் இங்கே சொல்வதற்கு முன்பே ஏதோ விஷயத்தை வெளியே சொல்லிவிட்டதாக நாங்கள் வெளியிலே சொல்வதைத்தான் அந்த அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்களே. தவிர, முழுமையாக எதையும் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் காவல் துறையினருக்கு உதவுகின்ற பொதுமக்களுக்கு உதவியின் அளவிற்கு ஏற்ப ரூபாய் 1,000-லிருந்து 5,000 வரை பரிசுகள் வழங்கப்படும், அப்படி உதவி செய்கின்றபோது, காவல்துறையினருக்கு உதவி செய்கின்றவர் உயிரிழக்க நேரிட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தத் தொகைகள் காவல்துறையினரின் சிறந்த பணிக்கான பதக்கம் அளிப்பு அணிவகுப்பின் போது வழங்கப்படும். இங்கே இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த முதலமைச்சர் பதக்கம் பற்றி ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். அதிலே 'சீப் மினிஸ்டர்ஸ்' என்று போட்டிருந்தார்கள் என்று சொன்னார்கள்.— அந்தப் பதக்கத்தைக் குறிப்பிட்டு போலீஸ் பதக்கம் என்றுதான் அதற்குப் பெயர் இருந்தது. அதை போலீஸ் கான்ஸ்டபிள் பதக்கம் என்று மீண்டும் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது, என்பதையும் தமிழில் மொழி பெயர்ப்பவர்கள் அதை விட்டு விட்டார்கள் என்பதையும் நான் குறிப்பிடவிரும்புகிறேன்.



**டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, நேரம் ஆகிவிட்டது என்றாலும், மிகச் சுருக்கமாகவே சொல்கிறேன். இரண்டு பேராவில் முதல் பேராவில் முதலமைச்சரின் காவலர் பதக்கம் என்றும் இரண்டாவது பேராவில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர்க்கான பதக்கம் என்றும் வருகிறதே. இரண்டு முதலமைச்சர்களும் தமிழ்நாடு முதலமைச்சர் தானே, இதிலே ஏன் தனியாக தமிழ்நாடு முதலமைச்சர் என்று போடவேண்டும் என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : ஒருவேளை முதலமைச்சர் பதக்கம் என்று சொல்வதால் முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுப்பதாக அவர்களுக்கு சந்தேகம் வந்ததோ என்னவோ, இந்த அரசைப் பொறுத்த வரையில் எந்த சந்தேகமும் கிடையாது. யார் அந்த பதவிக்கு வந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சராகத்தான் கருதப்படுகிறது. அந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு, பொதுமக்களுக்கு கொடுக்கப்படும் இந்த உதவித் தொகை அவர்களுடைய குடும்ப நிலைக்கு ஏற்ப, ஒரு மாதத்திற்குள்ளாகவே அது வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது காவல் துறையினருக்கு பதக்கமளிக்கும் விழாவின் போது இத்தகைய பரிசுகளை அளிப்பது வழக்கம். ஆனால் குடும்பங்களின் நிலையைப் பார்த்து, அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த குடும்பத்திலே வேறு யாரும் வருமானத்தை பெறக்கூடியவர்களாகவோ, அல்லது தொழில் செய்பவர்களாகவோ இல்லாத சூழ்நிலை இருந்தால், அப்படி காவலர்களுக்கு உதவி செய்யும் போது, இறந்துபட்டவர்களின் குடும்பங்களின் நிலை கருதி, அவர்களுடைய குழந்தைகளுக்கு யாருக்காவது தகுதியின் அடிப்படையில் வேலை கொடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்ததாக, பொதுமக்கள் அருகில் உள்ள காவல் நிலையங்களுக்குச் சென்று தங்கள் குறைகளையும், சமூக விரோதிகள் செய்ய இருக்கும் குற்றங்களையும் நேரில் சென்று முறையிடுவதில் ஏற்படும் சிரமங்களை போக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரில் 5 நடமாடும் காவல் பிரிவுகளை, மோட்டார் வாகன வசதிகளோடு, வாக்கி டாக்கி போன்ற வசதிகளோடு அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இப்பிரிவுகளுக்குத் துணையாக ஆங்காங்கே நடமாடும் நீதிமன்றங்களை அமைக்கும் திட்டமும் நிறைவேற்றப்படும்.

(திரு.எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 மார்ச் 29

சில முக்கிய நெடுஞ்சாலைகளில் ரோந்துக் காவல் படைகளை அமைக்க இருக்கிறோம். சென்னை-விழுப்புரம், சென்னை-நெல்லூர், சென்னை-வேலூர், ஆகிய மூன்று நெடுஞ்சாலைகளில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும் மூன்று ரோந்து காவற்படைகள் 'ஹைவே பெட்ரோல்' ஒவ்வொன்றிலும் கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்படும். ஆய்வாளர்— 1, உதவி ஆய்வாளர்— 1, தலைமைக் காவலர்— 2, காவலர்கள் (நிலை-2)— 3, காவலர் ஓட்டுநர்— 1, ஜீப்— 1 இதனை இந்த ஆண்டு நாங்கள் அமல்படுத்த இருக்கிறோம்.

மதுவிலக்கை அமுல்படுத்த தற்போது மாவட்டங்களில் 21 காவல்துறை மதுவிலக்குப் பிரிவு படைகள் பணியாற்றுகின்றன. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் தீவிரமாக நடைபெறும் மாவட்டங்களில் கூடுதலாக 21 மாவட்டப் படைகள் ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த இடத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏதோ மகாதேவன் என்பவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள், அவரை யாரோ எரி சாராய தொடர்பு சம்பந்தமான விரோதத்தில் கொன்றுவிட்டார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள். ஆனால் அவர்கள் வெளிநாடுகளிலே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பணம் வாங்கிக்கொண்டு பிறகு வேலை வாங்கிக் கொடுக்காத காரணத்தால் ஆத்திரப்பட்டு ஒருவர் அவரைக் கொலை செய்துவிட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி எல்லோருக்கும் தெரியும். எனவே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பத்திரிகைகளை நன்றாகப் படித்தால் அவர்களுக்கு உண்மை விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

42 ஆய்வாளர்கள், 21 துணை ஆய்வாளர்கள், 84 சார்பு ஆய்வாளர்கள், 84 உதவி சார்பு ஆய்வாளர்கள், 84 தலைமைக் காவலர்கள், 42 முதல் நிலைக் காவலர்கள், 504 இரண்டாம் நிலைக் காவலர்கள், 84 காவலர் வாகன ஓட்டிகள் பதவிகள் ஏற்படுத்தப்படும். இது தவிர 21 ஜீப்புகளும், 21 வாகனங்களும் (பிக் அப் வேன்) வாங்கப்படும்.

தபால் தந்தி இலாக்கா, மின்வாரியம், ரயில்வே ஆகியவற்றிற்குச் சொந்தமான செப்புக் கம்பிகள் திருட்டுப்போவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஒரு மாவட்ட காவல்துறை துணை அதிகாரி, ஒரு ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர், இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள், ஒரு காவலர், ஓட்டுநர் ஆகியோரைக் கொண்ட சிறப்புக்குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.



1982 மார்ச் 29] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

சென்னை நகர போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளுக்காக காவல் துறையின் மானியக் கோரிக்கையின் கீழ் இந்த ஆண்டு ரூ. 25 இலட்சம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறையில் உள்ள 10 சதவீதம் பழைய மோட்டார் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள். 1982–83-ஆம் ஆண்டு 205 புதிய வாகனங்களை வாங்க 1,92,90,000 ரூபாய் நிதி ஒதுக்கம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

1982–83-ல் காவல் நிலையங்களுக்காக 200 மோட்டார் சைக்கிள்களும், காவல் நிலையங்களில் பணிபுரியும் பெண் சப்-இன்ஸ்பெக்டர்களுக்காக 50 மொபட்களும் ரூ. 32·50 லட்சம் செலவில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறை வானொலிப் பிரிவில் சென்னை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் இயங்கிவரும் நுண்ணலை நிலையங்களில் ஏற்படும் குறைகளை உடனுக்குடன் அறிந்து நிவர்த்தி செய்யவும், தகவல் தொடர்பினை மேம்படச் செய்யவும் மிகவும் விலையுயர்ந்த நுண்ணலைக் கருவிகளை உயர்நிலையில் பராமரிக்கவும் செலக்டிவ் லெவல் மீட்டர் என்ற ஒரு சோதனைக் கருவியை சென்னை நுண்ணலை நிலையத்திற்கும் ஃப்ரிக்வன்சி கவுண்டர்கம்-டைமர் என்ற இரண்டு சோதனைக் கருவிகளை சென்னை மற்றும் மதுரை நிலையங்களுக்கும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மோட்டார் சைக்கிள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் பல்வேறு நல்ல காரியங்களுக்காக அவற்றின் தேவைகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் சிலர் தவறான காரியங்களுக்காக அதாவது கொள்ளை அடிப்பதற்கும், வழிமறித்து திருடுவதற்கும், இப்படிப்பட்ட காரியங்களுக்கும் பயன்படுத்திக்கொள்வதை நாம் பார்க்கிறோம். சிலருடைய மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டுபோய் அதை வைத்து திருடுவதையும் பார்க்கிறோம். போர்டு நம்பர்களை மாற்றி வைத்துக்கொண்டு இந்தக் காரியங்களைச் செய்வதையும் பார்க்கிறோம். அடுத்து கார்கள் காணாமல் போகின்றன. முக்கியமான கருவிகளை எடுத்துக்கொண்டு கார்களை சில இடங்களில் விட்டுவிட்டுச் செல்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-00)

ஆகவே இதில் அரசு ஒரு சிந்தனையில் இருக்கிறது. சீக்கிரமாக முடிவு எடுத்துவிடும். அது சரியான முடிவாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்போது குறிப்பிடவில்லை. காயலாங்கடை என்று அழைக்கப்படுகிறதே, அவர்கள் பெரிய பொறுப்புக்கு உள்ளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்

பிட விரும்புகிறேன். அவர்களுக்கு இந்தப்பொருள்கள், கருவிகள், இந்த இயந்திரப் பாகங்கள் எங்கிருந்து வருகின்றன, அதற்கு புள்ளிவிவரங்கள் இல்லை. யாரிடம் வாங்கினார்கள்? யாரிடம் கொடுத்தார்கள்? எவ்வளவு விலைக்கு வாங்கினார்கள்? எப் போது வாங்கினார்கள்? தெரியவில்லை.

அதேபோல் மெக்கானிக்ஸ் என்று சொல்கிறவர்கள் இந்த நாட்டுக்கு எவ்வளவு தேவையோ அப்படிப்பட்டவர்கள் ஒரு சிலர் சமூகவிரோதியாகக் கூட செயல்படுகிறார்கள் என்று குற் றஞ்சாட்டுகிற அளவிற்கு ஒரு சிலர் ஆங்காங்கே கார்களின் எண்களை மாற்றுவது, போர்டை மாற்றிக் கொடுப்பது, சாயத் தை மாற்றிக் கொடுப்பது, வண்ணங்களை மாற்றிப் பூசுவது போன்ற காரியங்களை செய்கிறார்கள். அவர்களை எல்லாம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

காவல் துறையினருக்கு குடியிருப்பு வசதி: மைய அரசு வழங்கும் மானியத்தின் உதவியுடன் 120 படைவீடுகளும், 1230 குடியிருப்புகளும் சுமார் ரூ. 439·3 இலட்சம் செலவில் இந்த அரச கட்டும்தமிழக அரசின் செயல்திட்டத்தின்படி சென்னையில் 604குடி யிருப்புகளும், புதுக்கோட்டை மாவட்டம் கே. புதுப்பட்டியில் ஒரு குடியிருப்புமாக மொத்தம் 605 குடியிருப்புகள் மைய அர சின் ஒப்புதலை எதிர்நோக்கி இந்த நிதி ஆண்டிலே கட்டுவதற்கு இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. மீதமுள்ள 625 குடியிருப்பு களும் 120 படை வீடுகளும் மைய அரசின் ஒப்புதல் கிடைத்த வுடன் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.

காவல் நிலையங்களில் பார்வையாளர்களுக்கு நாற்காலிகள்: அங்கே போகிறவர்களுக்கு உட்கார பெஞ்சுகூடக் கிடையாது; நாற்காலிகள் கிடையாது. அவைகளை வாங்கிக் கொடுப்பதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

மதுரையில் காவலர்களுக்கென மருத்துவமனை கட்டப்படும். அதே போன்று பல ஊர்களில் தொடங்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை என்பதைச் சொல்லிக்கொள்ள விழை கிறேன்.

காவல் துறை வானொலி தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 1979 ஆம் ஆண்டு நடந்த காவலர்களின் கிளர்ச்சி யின் போது கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருந்து பணியாற்றிய காவலர்களுக்கு அளித்தது போல் கிளர்ச்சியில் பங்கு கொள்ளாமல் பணியாற்றிய காவல் வானொலி நுட்பப் பணியாளர்களுக்கு ஒரு முன் ஊதிய உயர்வினை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.



காவலர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கும் திட்டத்தின்கீழ் குறைந்தளவு சர்க்கரை கிடைக்க வாய்ப் பிருக்கிறது. தற்போதைக்கு நடைமுறைக்கு வந்துள்ள சர்க் கரை விநியோகத்தில் சர்க்கரையின் அளவு தனி நபரின் அடிப் படையில் அமைந்துள்ளதால் காவல் துறையினருக்கு உச்சவரம்பு இல்லாமல் தற்போது வந்துள்ள நடைமுறையின்படி ஒவ்வொரு வருக்கும் 450 கிராம் என்ற அடிப்படையில் சர்க்கரை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். பாதி விலை யில் கொடுப்போம் என்றீர்கள். இப்போது கொஞ்சம் கொஞ்ச மாக குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். பொது மக்களுக்கு எந்தளவுக்கு கொடுக்கிறோமோ நியாயவிலைக் கடை களில் அதற்கு பாதி என்று நாம் எப்போது சொன்னோமோ அந்தளவிற்கு பின்பற்றுகிறோம் என்பதையும், யாரையும் இந்த அரசு ஏமாற்றவில்லை, ஏமாற்றி புகழ் பெறுவதற்கு அவர்கள் ஏமாளிகள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேமக்களப் படைப்பிரிவு மற்றும் சிறப்புக் காவல் படையின ருக்கு முழுக்கால் சட்டைகள்: சேமக்களப்படைப் பிரிவிலும், தமிழ்நாடுசிறப்பு காவல் பிரிவிலும் பணிபுரியும் காவலர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவு 1—1—1983-ல் இருந்து அமல்படுத்தப்படும்.

சிப்பாய் வாசஸ்தலங்களில் வசிக்கும் காவலர்களுக்கு இரும்பு மடிப்பு கட்டில்கள்: சிப்பாய் வாசஸ்தலங்களில் வசிக்கும் காவலர்கள் கட்டில்கள்இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் மழைக்காலங்களில் ஈரக்கசிவினால் அவதியுறுவதால் இவர்களது வசதிக்காகஇரும்பு மடிப்பு கட்டில்கள் வாங்கி சிப்பாய் வாசஸ் தலத்தின் பொறுப்பில் வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு காவல் துறை அமைச்சுப் பணியாளர் தங்களுக்கு என ஒரு சங்கம் அமைத்துக்கொள்ளவும், அச்சங்கத்திற்கு ஒரு மாதப் பத்திரிகை நடத்துவதற்கும் அனுமதி கோரியுள்ளனர். இக்கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்திற்கு அங்கீகாரமும், மாதப் பத்திரிகை நடத்த அனுமதியும் வழங்க அரசு முடிவு செய்து உள்ளது.

காவல் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை சமாளிக்க 200 கூடுதல் பதவிகள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திருச்சிராப்பள்ளி ஊர்க் காவல் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு மாநில பயிற்சிப் பள்ளி அமைத்தல்:

பாதுகாப்பு பேருந்துகள் வாங்குதல்:

ஊர்க் காவல் படையினருக்கு பயிற்சிக் கருவிகள் வழங்குதல்; இக்கருவிகளை 21 மாவட்டங்களுக்கு வழங்குதல்: ஊர்க்காவல் படையினருக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதல்வர், ''ஊர்க் காவல் படை பதக்கம்'' வழங்கும் திட்டம் செயலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பதக்கம் பெறுவோருக்கு அவரவர் பதவித் தரத்திற்கு ஏற்றவாறு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை வழங்கப்படும். ஊர்க்காவல் படையின் தரத்தை உயர்த்துவதற்காக 150 ஊர்க்காவல் படை அதிகாரிகளைப் பெங்களூரிலுள்ள மத்திய பயிற்சி நிலையத்திற்கு அனுப்புவதற்காக ரூ. 1.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தீயணைப்புத்துறைக்கு வானொலித் தொடர்பு வசதி செய்து கொடுத்தல்: தீயணைப்புத் துறை திறம்பட பணியாற்ற வசதி செய்யும் பொருட்டு மாநிலம் முழுவதிலும் தலைமையிடத்துத் தீயணைப்பு கண்ட்ரோல் ரூமுக்கும், தீ விபத்து நடந்த பகுதியுடனும் தொடர்பு கொள்ள வானொலி வசதி அளிப்பதற்கும், அதற்காக வயர்லெஸ் செட்டுகள் 24 வாங்குவதற்கும் இந்த அரசு முடிவு செய்திருப்பது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கூடுதல் பணியாளர்கள் ஏற்படுத்துதல்: தடய அறிவியல் ஆய்வகத்தில் தேங்கி நிற்கும் மற்றும் தினசரி பெறப்படுகின்ற மதுவிலக்குத் தடய மாதிரிகளை ஆய்வு செய்து முடிக்கும் பணிக்காக கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. தொழில்நுட்பப் பணியாளர்கள் : (1) அறிவியல் உதவியாளர்கள் (நிலை 1)—16 ; (2) அறிவியல் உதவியாளர்கள் (நிலை 2)—22; (3) இளநிலை ஆய்வக உதவியாளர்—10 ; அமைச்சுப் பணியாளர்கள் ; (4) தட்டச்சர்கள்—5 ; (5) இளநிலை உதவியாளர்கள்—5.

ரயில் நிலையங்களில் பெண் காவலர்களின் பணி குறித்த திரைப்படம் எடுத்தல்: பெரிய புகைவண்டி நிலையங்களில் உள்ள வழிகாட்டும் நிலையங்கள் மூலமாக பெண் காவலர்கள் வெளியூர்களிலிருந்து தனியாக வரும் பெண்களுக்கு பாதுகாவல் அளித்து, எவ்வாறெல்லாம் உதவுகிறார்கள் என்பதை விளக்கும் திரைப்படங்களை எடுத்து, எல்லா திரையரங்குகள் மூலம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் விளம்பரம் செய்ய வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.



பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் அனுமதித்தாலும் நேரம் எனக்கு ஒத்துழைக்கவில்லை என்பது மட்டுமல்ல; மணித் துளிகள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன ; 10½ மணிக்குள் முடிக்கலாம் என்றால், இப்போது 11.10 ஆகிறது. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், வாய்ப்பு கிடைக்கும் போது அத்தனையையும் வெளியிட விரும்புகிறேன். மீண்டும் இறுதியாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதவாதிகள் தயவு செய்து தங்களுடைய கொள்கை எதுவாக இருப்பினும், மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக பயன்படுத்த வேண்டுமே தவிர, மக்களைப் பிரிக்கப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது என்பதையும், அதற்கு அனைவருடைய ஒத்துழைப்புத் தேவை என்பதையும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய முன்தினம் கூட, பேராயர்கள் என்னைச் சந்தித்து, தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டு, ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். அங்கேயும் கொடுத்தார்கள். நான் வேதனையோடு சொல்கிறேன். அந்தப்பிரேரணை தேவையில்லை, நாட்டுக்குப் பயன்படக் கூடியதல்ல, நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதல்ல என்று இந்த அரசு நம்புகிறது. அதோடு, அவர்களுக்கு யோசனைசொல்லுகின்ற ஒரு மடாதிபதி அவர்கள் உண்மையிலேயே தவறு செய்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு சொல்கிறேன். குன்றக்குடி அடிகளாரும் அதிலே பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பின்பற்றி, மற்ற மடாதிபதிகளும் கடமையைச் செய்வார்களானால், நன்மையாக இருக்கும் என்று கருகிறேன்.

அமரர் அண்ணா அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர்கள் என்னிடம் சொன்னார்கள். கண்ணன் கதைக்கு நான் உரைநடை எழுதுகிறேன், நான் எழுதும் உரைநடைக்குப் படம் எடுத்தால், 'அது சமூகக் கதையாக இருக்கும் என்று எனக்கு விளக்கம் தந்தார்கள்.

(முற்பகல் 11-10)

அப்போது சொன்னார்கள். எந்த தனிப்பட்ட நபரும் திரைப் படத்தையோ அல்லது கதையையோ அல்லது பிரசங்கத்தையோ கேட்டுவிட்டு உடனே சாதி மாறுவது கிடையாது, மதம் மாறுவது கிடையாது, அதைச் சொல்லும்போது சொன்னார்கள், டென் கமாண்ட்மெண்ட்ஸ் பார்த்து வந்த அத்தனை பேரும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறுவதில்லை. அதைப் போல் அறிவு உள்ளவர்கள் சிந்திக்கக் கூடியவர்கள் பகுத்துப் பார்த்து முடிவுக்குவரக்கூடியவர்கள் எதைப் பார்த்தாலும் சந்தித்தாலும் உடனே அவர்களாக அதுவாக மாறிவிட முடியாது என்பதைச் சொன்னார்கள் என்று கூறி, இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அச்சுறுத்துவதற்கு ஏதோ பயிற்சி கொடுக்கிறார்களே அதை எல்லாம் அனுமதிப்பதற்கு நாங்கள் இசைவோம் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. கண்டிப்பாக அந்தப் பயிற்சிகளை எல்

லாம் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் குறிப்பாக அதைச் செய்வதாகச் சொல்லப்படுகிற ஆர். எஸ். எஸ். அமைப்பைப் சேர்ந்தவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், இதை நிறுத்தியாக வேண்டும். அரசு என். சி. சி. போன்றவைகளில் மாணவர்கள், மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இன்னும் பல தேகப் பயிற்சி தரப்படுகிறது. ஆகவே அப்படி விட்டுவிட வேண்டுமே தவிர, ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது மதமும் மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்தக் காரியத்தைச் செய்ய முனைந்தால் அது பெருமைப்படுத்திக்கொள்வதாக இல்லை, இங்கே பல நல்ல அரசியல் கட்சிகள், மிக நல்ல காரியத்தைச் செம்மையாகச் செய்யக்கூடிய திறமை வாய்ந்த கட்சிகள், தகுதியுள்ள கட்சிகள் எதிர்க்கட்சியிலே பல இருக்கின்றன. குறிப்பாக முதலிலிருந்து இறுதிவரை, அதைப் போலவே அரசுக் கட்சியிலே இருக்கிறார்கள், மற்றவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்த இந்த அரசு தயாராக இல்லை என்பதைச் சொல்லி அவைகளை எல்லாம் நிறுத்தியாக வேண்டும். 144 தடையை மீறினால் இந்த அரசு எந்த விளைவையும் சந்திப்பதற்கு எந்த மதவாதியையும் எதிர்ப்பதற்கு அந்த நிலைமைகளைச் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் சார்பாக நான் வெளியிட்டு, இந்த மானியக் கோரிக்கைகள் மீது நான் முழுமையாகப் பதில் சொல்லாவிட்டாலும் வெட்டுப்பிரேரணைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே நம்முடைய முதலமைச்சர் சொல்கிற போது தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமைகளைச் சொன்னார்கள். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே தொளார் என்ற கிராமத்திலே நடந்த சம்பவம் பற்றி செய்தி தவறாக இந்த மானியக் கோரிக்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் அரிசன மக்கள்தான். ஆனால் அதற்கு மாறாக நம்முடைய குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் 3 நாட்களுக்கு முன்பு அதே தொளார் கிராமத்திற்குச் சென்று விசாரித்தபோது உண்மையிலேயே அரிசனப் பெண்தான் பாதிக்கப்பட்டிருப்பது என்று தெரிந்து இருக்கிறது. ஆனால் இந்தக் குறிப்பிலே அதற்கு மாறாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? விளக்கம் மட்டுமல்ல, அவைக் குறிப்பிலிருந்து அது எடுக்கப்படவும் வேண்டும். வருங்காலத்திலே தவறான செய்தியைக் கொடுக்காமல் இருக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் முதலமைச்சருக்குத் தெரியும். வட மாவட்டங்களிலே சமுதாயத்தின் பெயரால், சாதியின் பெயரால் சில மாநாடுகள் நடத்திக் கொண்டும் அதனால் பிரச்சாரத்தின் மூலம் மக்களுக்கு வெறி உணர்வு உண்டாக்கி ஜாதிச் சண்டைகளை உருவாக்குவதுமான தகவல்கள் முதலமைச்சருக்குத் தெரியுமா ? அவைகளின் மீது வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : குறிப்பிலே இருக்கிற செய்தி தவறு என்று ஆதாரத்தோடு நான் அறிந்தால் அதைப்பற்றி அறிக்கையை நான் வெளியிடுவேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், முக்கியமான செய்தியைப் பற்றி பத்திரிகையிலே வந்ததைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரம் இல்லாமல் இருக்கிற அந்தச் செய்தி அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை தாங்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிலே இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி நான் பார்க்கிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 15—காவல்துறை.

திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி, கு. ரமணி, எஸ். என். இராமசாமி, தி. சு. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி' "மானியக் கோரிக்கை எண் 15, காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 69,50,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 16— தீயணைப்புப் பணிகள்.

திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திவவாளர்கள் டி. மணி, பொ உத்திராபதி ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையுடன் அனுமதியுடன் திருப்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக் கோரிக்கை எண் 16—தியணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,97,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 20,55,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, தலைமைச் செயலக அலுவலகங்களில் ஏற்படும் நிர்வாக செலவு குறைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 9, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,55,89,000- இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, அமைச்சர்களது துறைகளுக்கு சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,55,89,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, சட்ட மன்றம் நடைபெறாத காலத்தில், தலைமைச் செயலகத்தில் இருந்து மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி பிரச்சினை சம்பந்தமாக மாதம் ஒரு நாள் நேரில் சந்தித்து விவாதிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.





"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,55,89,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

(ஈ) கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,24,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றத்தை விரிவுபடுத்தி உறுப்பினர்களுக்கு வசதியான இருக்கை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,24,49,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதியில் தங்கும் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,24,49,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் எவ்வித கட்டுப்பாடும் ஒழுங்கும் அமுல் நடத்த முடியாமலும், விரும்பத்தகாதவர்கள் பலர் வந்து தங்குவதும், எப்பொழுதும் பெரும் நெரிசலாக இருப்பதும் (நன்கொடைகளுக்காக பலர் சுற்றி வருவதும்), சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுவதும், ஆகிய நிலைமைகளை மாற்றி பாதுகாப்பான நிலைமை ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,24,49,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

[1982 மார்ச் 29

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தங்கும் விடுதி
யில் உள்ள தொலைபேசி இருந்தும் இல்லாத நிலைமை
குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 7 - மாநில சட்டமன்றம்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,24,49,000-இல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்,
வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு
வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரை
யாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, இன்று பிற்பகல் 1-00 மணியோடு மானியக் கோரிக்கை
களுக்கான விவாத நேரம் முடிவடைகிறது.
உறுப்பினர்கள் அதிகமாகப் பேசுவதற்கு நேரம் இல்லை. மாண்புமிகு
இருந்தால் முடிவில் நான் பதிலுரைக்க மகிழ்ச்சி அடைகிறேன். நேரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் அதிகம் இல்லா
ததினால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்
களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர்
திரு. ஜே. எஸ். இராசு.

[முற்பகல் 11-20]

*திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர், மாநிலச்
ஆகிய இனங்களின்மீது நடைபெறுகின்ற சட்டமன்றம்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலந்து இந்த விவாதத்தில்
சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். கொண்டு

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய சட்டமன்றம் என்ற அந்தத் தலைப்பில் தெரி
விக்க வேண்டிய சில கருத்துக்களை நான் முதலிலேயே தெரிவிக்க
விரும்புகிறேன். பொதுவாக, தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்
பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதியிலே நடை
பெறுகின்ற விழாக்களில் கலந்துகொள்ள முறைப்படி அழைக்கப்
படவில்லையென்ற அந்தக்குறையைப் பற்றி இந்த மன்றத்திலே
பெரிய விவாதமே நடத்தி இருக்கிறோம். அது சம்பந்தமாக
பல்வேறு விவாதங்கள் இங்கே நடை பெற்றிருக்கின்றன. அவ்
வாறின்றி நியாயமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்



பினர்களுக்கு, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், அவர்
களுக்கு அந்த உரிமையை, மரியாதையை, அந்தத் தொகுதியிலே
ஏற்படுத்தித் தர வேண்டிய அளவுக்கு அரசு அதிகாரிகள் இனி
மேல் நடந்து கொள்வார்கள் என்ற உறுதியை அளிக்க வேண்டு
மென்று இந்த விவாதத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன். இதிலே இன்னொரு விசேஷத்தையும் சொல்ல
விரும்புகிறேன். ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்
பினர்கள் அவர்கள் தொகுதிகளுக்குப் பக்கத்திலே இருக்கின்ற,
வேறு ஒரு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களது
தொகுதிகளில் நடைபெறுகின்ற விழாக்களுக்கு அதிகாரிகளாலே
அழைக்கப் படுகிறார்கள். அப்படி அழைக்கப்படுகிற நேரத்தில்,
அந்தத் தொகுதியிலே இருந்து எந்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்
பட்டிருக்கிறாரோ, அவரை வைத்துக் கொண்டே, அந்தத்
தொகுதியிலே எதுவுமே நடைபெறவில்லை. ஏற்கெனவே இருந்த
எந்த ஆட்சியும் அந்தத் தொகுதிக்கு எதுவும் செய்யவில்லை என்று
தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ. வை, வைத்துக் கொண்டே.
பல்வேறு எதிரான கருத்துக்களைப் பக்கத்துத் தொகுதியிலே
இருக்கின்ற ஆளுங் கட்சி உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்கும்
நிலைக்கு நானே பலமுறை ஆளாக்கப்பட்டேன். இவ்வாறு
சூழ்நிலை தெரியாமல் பேசுகிற நிலைமைகளை ஆளுங்கட்சி
உறுப்பினர்கள் பேசக்கூடாது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு
அக்கட்சியின் தலைவர்கள் அறிவுரை கூறுமாறு கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, நம்முடைய கடந்த 4, 5 ஆண்டுகளாக அ. தி. மு. க.
அரசு அதிகமான அளவு அவசரச் சட்டங்கள் போட்டிருக்கிறது.
1977-லே 7 அவசரச் சட்டங்கள் ; 1978-லே 18; 1979-லே 24
1980-லே 15 ; 1981-லே 19 ; 1982-லே, ஆரம்பமாக இருப்
பதால் ஒன்றே ஒன்று போடப்பட்டிருக்கிறது. ஆக, அவசரச்
சட்டங்களை அதிகமாக போடுவது என்பது ஒரு ஜனநாயக
மரபுக்கு நல்லதல்ல. அவசரச் சட்டங்களைக் குறைத்துக்
கொண்டு, கடுமையான சட்டங்களைக் குறைத்துக் கொண்டு,
ஜனநாயக ரீதியிலே, அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று
நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதற்கு கடமைப்பட்
டிருக்கிறேன். அவசரச் சட்டங்களைப் போட்டு, அது தொடர்
பான சட்ட முன்வடிவை இங்கே வைத்து, சட்டம் இங்கே நிறை
வேறுகிற நேரத்தில், மிகக் குறுகிய அவகாசத்திலே, அவ்வளவு
முக்கியமான சட்டங்களையெல்லாம் நாம் இங்கே நிறைவேற்றிக்
கொண்டு வருகிறோம். குண்டர்கள் ஒழிக்கின்ற சட்டமாக
இருந்தாலும், பத்திரிகை கட்டுப்பாடு சட்டமாக இருந்தாலும்
சரி, பேசுகின்ற எந்த ஒரு அங்கத்தினரும் அந்தச் சட்டத்திலே
இருக்கிற எந்த ஒரு அம்சத்தையும் முழுமையாக விமர்சிக்க
முடியாமல், மிக அவசரமாக, மிகப் பெரிய சட்டங்கள் நம்முடைய
மன்றத்திலே நிறைவேற்றப்படுகின்றன. எதிர்காலத்திலே
அப்படிப்பட்ட சட்டங்கள் வர வேண்டாம். வந்தாலும்கூட
அவைகளை முழுமையாக விவாதிக்கின்ற முறையில் நேரத்தை
ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப
பட்டிருக்கிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1982 மார்ச் 29

சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர்கள் வாங்கும் மொத்தச் சம்பளத்தில் மாதாமாதம் ஒரு ரூபாயைப் பிடித்துக் கொண்டுபணிக் காலத்திலே அந்த ஊழியர் இறந்துவிட்டால், அந்தக்குடும்பங்களுக்கு ரூ.10,000 குடும்ப நல நிதியாக வழங்குகிற திட்டத்தை அறிவித்தது. இன்றைக்கு அது தொடர்ந்து வருகிறது. இப்பொழுது அரசாங்க ஊழியர்கள் என்ன வேண்டுகோள் விடுக்கிறார்கள் என்றால், தங்களுடைய மாதச் சம்பளத்திலே ரூ. 5 அல்லது ரூ, 10 பிடித்துக் கொண்டு பின்னாலே, ஓய்வு பெற்றவுடன்—ரிடையர்மென்ட் ஆனவுடனே அவர்களுக்கு ரூ. 10,000 தரவேண்டுமென்று கோரிக்கையை வேண்டுகோளாக வற்புறுத்தி வருகிறார்கள். அதைப்பற்றியும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு 4 தவணை அகவிலைப்படி கொடுத்துள்ளது. அதைப் பற்றி நாவலர் அவர்கள் நேற்று முன்தினம் விரைவாக ஆராய்ச்சி நடந்துவருவதாகத் தெரிவித்துள்ளார். ஆராய்ச்சி முடிந்து இருக்கும் என்று நான் கருதுகிறேன், நம்புகிறேன். எனவே, நாளையதினம் நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவு வருகின்ற நேரத்திலே, அப்படிப்பட்ட பஞ்சப்படி அறிவிப்புகளை, அரசு ஊழியர்கள் மகிழும் வண்ணம் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன், அறிவிக்க வேண்டுகிறேன்.

அடுத்து, அரசாங்க ஊழியர்களுக்கு லீவ் டிராவல் கன்செஷன்ஸ்ஸைப் போன ஆண்டு அரசு அறிவித்தது. ஆனால், அறிவித்துவிட்டு, அதற்கு ஏகப்பட்ட நிபந்தனைகள் விதித்தது. 250 கிலோ மீட்டருக்கு அதிகமாக தொலைவு பயணம் செய்வதாக இருந்தால்தான் அந்தச் சலுகைகளை அனுபவிக்க முடியும். அதுவும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அனுபவிக்க முடியும். அப்படி அனுபவிப்பதாக இருந்தால் 15 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பில் போக வேண்டும். ஆகவே, இவ்வளவு கட்டுப்பாடுகளை விதித்து அதற்குப் பின்னால் சலுகை தருவது என்பது நியாயமாக இல்லை. எனவே, அந்த நிபந்தனைகளை நீக்கி இப்பொழுது போல போவதற்கோ, அல்லது வருவதற்கோ என்றில்லாமல்—இருவழிப் பயணத்திற்கும் இந்தச் சலுகையை வழங்க வேண்டுகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு மெடிகல் ரியிம்பர்ஸ்மென்ட் உண்டு. ஆனால் அடித்தள ஊழியர்கள் இந்த மெடிகல் ரியம்பர்ஸ்மென்டைப் பெறுவதில் மிகுந்த இடர்பாடுகளை அனுபவிக்கிறார்கள். மேல் நிலையிலே இருக்கிற அதிகாரிகள்தான் இத்தகைய சலுகைகளைப் பெறுவதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்திலே சொல்லியிருப்பதைப் போல் மெடிகல் அலவன்ஸ் என்று சம்பளத்தோடு ஒரு தொகையைச் சேர்த்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 29] [திரு. ஜே. எஸ். இராசு]

வெளி மாநிலங்களிலிருந்து குழுக்கள் வருகின்றன. அவர்களை வரவேற்கவும், உபசரிக்கவும், பயணம் செல்ல உதவிடவும் போன்ற அனைத்துக் காரியங்களையும் சட்டமன்ற கீழவை, மேலவை செக்கரட்டேரியட்டிலே உள்ள பணியாளர்கள்தான் செய்கிறார்கள். ஆகவே, வெளி மாநிலங்களில் இருப்பதைப் போன்று பி. ஆர். ஓ.வை நியமித்து அந்தக் கடமைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாராளுமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தனிச் சம்பள விகிதம் இருக்கிறது. அதைப் போன்று நம்முடைய சட்டமன்றத்திலே பணியாற்றும் ஊழியர்களுக்கும் தனியாக சம்பள விகிதத்தை அமைத்து தனி ஊதியத்தைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படுவதைப்போல, நிருபர்களுக்குத் தரப்படுவதைப்போல நம்முடைய செக்ரட்டேரியட்டில், சட்டமன்றச் செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பஸ் பாஸ் இனாமாகத் தர வேண்டுமென்று பிரச்சினை கிளப்பப்பட்டது. பெரிய விவாதமும் நடந்தது. அப்படிப்பட்ட பாஸை வழங்க அரசு உத்திரவிட்டு என்ன காரணத்தாலோ இப்பொழுது தடை செய்யப்பட்டிருக்கிறது, அல்லது அறவே நீக்கப்பட்டு இருக்கிறது என்று நான் அறிகிறேன். அது உண்மையாக இருந்தால் அந்த பாஸை மீண்டும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் வேறொரு விஷயத்தை மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்றமாக இருப்பதால் இது பொருத்தம் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி நாமே சற்றுக் குறைவாக மதிப்பிடுவது என்பது நல்லதல்ல என்பதை நீங்கள் அனைவரும் ஒத்துக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். ஆனால் நம்மைப்போன்ற மன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறைவாகப் பேசக்கூடிய எந்தப் பேச்சையும் நாம் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

"அறிவாற்றல் மிக்கவர்கள்தான் வருகின்ற தேர்தலில் வெற்றி பெற வேண்டும்" என்று பேசப்பட்டிருக்கிறது. "அப்படி அறிவாற்றல் மிக்கவர்கள்தான் சட்டமன்றத்திற்கு வர வேண்டும். அப்படி வந்து கலந்து கொண்டால்தான் அவர்களது அறிவுத் திறமையும், அனுபவமும் மக்களுக்குப் பயன்படும். சமீபத் தேர்தலில் அறிவாளிகள் எவரும் தேர்ந்தெடுக்கப்படாதது கவலைக்குரியது" என்று பேசப்பட்டிருக்கிறது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1982 மார்ச் 29

" எத்தனை தொழில் தகராறுகளை தமிழக அரசு தீர்
துள்ளது ; எத்தனை நோயுற்ற மில்களைத் தமிழக அரசு தீர்க்
கச் செய்துள்ளது போன்ற முக்கியமான தகவல்கூட மாநில சட்ட
மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை " என்று சட்டமன்ற
உறுப்பினர்களை விவரம் தெரியாதவர்களாகச் சித்தரிக்கப் பட்
டிருக்கிறது. இப்படிப்பட்ட அருமையான கருத்தை 8-1-1978-ல்
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அகில இந்திய
ரேடியோ பொன் விழாவிலே பேசியிருக்கிறார்கள்.

அப்பொழுது நான் சட்டமன்றத்திலே இல்லாவிட்டாலும்
கூட அந்த வானொலி உரையைக் கேட்டு வருத்தப்பட்டேன்.
அப்படி நம்மையே தாழ்த்திக் கொள்ளக் கூடிய வாசகங்களை
அமைச்சர் பெருமக்கள் உதிர்க்கவேண்டாமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பும் ஆளுங்கட்சிக்கு இருக்
கிறது. ஆனால் அமைச்சர்கள் பேசக்கூடிய பேச்சுக்களைப் பார்த்
தால் அரசாங்க அதிகாரிகள் மனம் உடைந்து போகின்ற சூழ்
நிலையை உருவாக்கிவிடுமோ என்று அஞ்சுகிறேன். சான்றாக
ஒரு பேச்சைப் பற்றி இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

" இன்னும் சிலர் தி.மு.க. ஆட்சியால் ஊக்குவிக்கப்பட்டவர்
கள் யதேச்சாதிகாரப் போக்கிலே நடந்து கொள்கிறார்கள்.
இவர்களைப் பற்றிப் பல புகார்கள் வந்திருக்கின்றன. ஆளுங்
கட்சிக்காரர்களே கோயில் அறங்காவலர்களாக நியமிக்கப்படுகி
றார்கள் என்று கூறுவது சரியல்ல. அப்படி நியமித்தால்தான்
என்ன ? எங்களை மாநிலத்தை ஆள்வதற்கே மக்கள் தேர்ந்
தெடுத்திருக்கிறார்கள். நாங்கள் ஏன் அறங்காவலர்களை நிய
மிக்கக்கூடாது " இப்படிப்பட்ட ஒரு கருத்தை நம்முடைய
மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் தெரிவித்
திருக்கிறார்கள். நான் சொல்லக்கூடிய கருத்து என்னவென்றால்,
18 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சியை நடத்தியது ;
அதற்குப் பிறகு அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும்
ஒன்பதாண்டு காலம் ஆட்சி நடத்தினார்கள். அப்பொழுதெல்
லாம் ஏற்கெனவே உள்ள அரசாங்க அதிகாரிகள் மீது எந்தவித
மான குறைபாட்டையும் சொல்வதில்லை. ஏனெனில் அரசாங்க
நிர்வாக இயந்திரம் பழுதுபட்டுப் போகும் என்ற காரணத்தால்
அந்த மரபைக் காத்து வந்தார்கள். ஆனால் இன்றைக்குப் பல
வேறு இடங்களில் அரசு அதிகாரிகளைப் பற்றி, சேம் சைட் பவுல்
செய்வதைப்போலப் பேசிவிட்டு, அவர்களுக்குச் சலுகைகளை
அளிக்கிறோம் என்று சொல்வது பொருத்தமாகத் தெரியவில்லை.
எனவே இத்தகைய போக்குகளை அமைச்சரவை நீக்கிக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 29] [திரு. ஜே. எஸ். இராசு]

(முற்பகல் 11.30)

அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும்
என்ற கோரிக்கையை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க
விரும்புகிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ்
பாஸ் தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வைக்கப்
பட்டிருக்கிறது. அவர்களுக்கு அந்த உரிமை தரப்படவேண்டும்.
சட்டமன்றத்திலே பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற டெம்பரரி
ஸ்டாப் இன்றைக்கு நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்.
அவர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று நீண்ட
காலமாக போராடி வருகிறார்கள். இருந்தாலும், விதிமுறை
களுக்கு மாறாக டெம்பரரியாக அவர்களை வைத்து அவர்களுக்கு
அன்றாடப் படி மட்டும் தரும் சூழ்நிலை இருக்கின்றது. எனவே
அவைமுன்னவர் அவர்கள் அருள் கூர்ந்து 4, 5 ஆண்டுகள்
பணியாற்றுகின்ற டெப்பரரி பணியாளர்களை நிரந்தரமாக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். டெம்பரரியாகவே
பணியாற்றியதால் மாநகராட்சியிலே ஒரு பெண் தற்கொலை
செய்து கொண்டார் என்ற செய்தி செய்தித்தாள்களிலே வந்திருக்
கிறது. எனவே அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப்
பணியாளர்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில
கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த பேரவைத் தலைவர்
அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர் திரு. இராசு அவர்கள் சொல்லும்போது இந்த ஆட்சி
அடிக்கடி அவசரச் சட்டங்களை பிறப்பித்துக் கொண்டே இருக்
கின்றது. ஆகவே அவசரச் சட்டங்கள் மூலமாகத்தான் இந்த
ஆட்சி நடைபெறுகிறது என்ற கருத்தினை அவர் தனக்கே உரித்
தான முறையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அவசரச்
சட்டம் என்பது சட்டமன்றம் கூடாத வேளைகளில் தவிர்க்க
முடியாத ஒரு சூழ்நிலை ஏற் படும்போது பிறப்
பிக்கப்படுகிறதே ஒழிய, சட்டமன்றங்கள் நடைபெறும்போது
எப்போதுமே பிறப்பிக்க படுவதில்லை என்பது மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இன்றைய தினம் கடந்த கால ஆட்சியின்போது நடந்த
குறைகளைப் பற்றி யாருமே சொல்லக்கூடாது என்றும் அதிகாரி
களின் தவறுகளைச் சுட்டிக் காட்டக் கூடாது என்றும் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி 20 ஆண்டு
காலம் ஆட்சி நடந்து இறங்கிய பின்னர் திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவர்கள் செய்த தவறு
களைச் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா

[திரு சேலம் மு. ஆறுமுகம்] [1982 மார்ச் 26

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இப்போது
சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
20 ஆண்டு காலம் ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியினர்,
1967-லே ஆட்சியை விட்டுவிட்டு இறங்கிய பிறகு, திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில்
பேரறிஞர் அண்ணா அவர்கள் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில்,
பத்திரிகையாளர்கள் கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்
காலத்தில் அமைச்சரவையிலே ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா
என்று கேட்டார்கள். எந்த விதமான ஊழலும் இல்லை என்று
சட்டமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி
இருக்கிறார்கள். ஊழல் இருந்தால் அந்த ஊழலைப்பற்றி
மக்களுக்கு எடுத்துச் சொல்வது தவறாகாது என்பதை இந்த
நேரத்தில் ராஜு அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
எந்த ஒரு ஆட்சியில் நடைபெறும் தவறுகளைச் சுட்டிக் காட்டு
வதும், தட்டிக் கேட்பதும் ஜனநாயக வாதிகளின் கடமை என்பதை
இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள், மன்றம் கூடக் கூடிய
நேரத்தில் ஒவ்வொரு நாளும் கலந்து கொண்டு அவர்களுடைய
பணிகளை சிறப்பான முறையில், மாநிலத்திற்கும், மக்களுக்கும்
ஆற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கின்றது.
சட்டமன்ற விடுதிகளில் சென்று ஓய்வெடுக்க வேண்டும். ஆனால்
நாளைக்கான விஷயங்களை ஆய்வு செய்ய வேண்டும். அடுத்த
அதற்கான சூழ்நிலை இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். காரணம், சட்டமன்ற விடுதியிலே
அந்தக் கடமையைச் செய்வதற்காக, ஓய்வு எடுத்து, சிறந்த
முறையில் ஆய்வு செய்து குறிப்புகளை கொண்டு வந்து சட்டமன்ற
நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை இல்லாமல்
இருக்கின்றது. எனவே வெளி மாநிலங்களில் இருப்பது போன்று
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லங்கள் அமைந்தால் தான்
நிம்மதியாக இருந்து குறிப்புகளை, எடுத்து வந்து, இங்கே சட்ட
மன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பெற வேண்டிய அளவுக்கு அவர்களுடைய
உள்ளங்கள் பக்குவப்படும் என்பதை இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே தொலை
பேசி வைக்கப்பட்டிருக்கிறது, சட்டமன்ற விடுதியிலே, தொலை
பேசி என்று சொல்வதற்குப் பதிலாக, அதற்கு தொல்லை பேசி
என்று வைத்தால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன். தொலை தூரத்தில் இருப்பவர்களைத் தொடர்பு
கொண்டு பேசுவதற்காகத்தான் தொலை பேசி இருக்கிறதே தவிர,
அது எங்களுக்குத் தொல்லை பேசியாக ஒரு பெரிய தொல்லை
யாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்
பட்ட அந்த தொலைபேசிக் கருவிகள் இன்றைக்கு ஒரு பெரிய



1982 மார்ச் 29] [திரு சேலம் மு. ஆறுமுகம்]

தொல்லையாக இருக்கின்றன. ஆகவே, அந்தத் தொலை பேசிக்
கருவிகளை உடனடியாக மாற்ற வேண்டும். அங்கே இருக்கக்
கூடிய அந்தத் தொலை பேசி இணைப்பகம் மிகவும் பழமையானது
அதிகமான இணைப்புகளைக் கொண்ட அந்த தொலைபேசி
இணைப்பகம் அடிக்கடி பழுது ஏற்பட்டு, அடிக்கடி கூடேறிச்
செயல்படாத முறையில் பழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே
அந்தத் தொலை பேசி இணைப்பகத்தை உடனடியாக விரிவுபடுத்த
வேண்டும். தொலைபேசிக் கருவிகளை மாற்ற வேண்டும்.
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய விடுகளுக்கு
இன்றைக்கு இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன. இந்த
இணைப்புக்கு மாதம் ஏதோ ஒரு தொகையாகக் கொடுத்துக்
கொண்டு வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட
மன்றக் கூட்டம் நடைபெறாத நேரங்களில் அவர்களுடைய
தொகுதியிலே இருக்கக் கூடிய அதிகாரிகளுடனும், மக்களுடைய
அன்றாடக் குறைகளைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு,
அடிக்கடி எடுத்துச் சொல்லி, குறைகளை களைவதற்கும்.
குறைகளை நிறைவேற்றுவதற்கும் அதிகமாக தொலைபேசியை
ஒரு நாளைக்கு 30, 40 என்று லோகல் கால் போட்டு பேசக் கூடிய
ஒரு நிலைமை ஏற்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 750லிருந்து,
3 மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வரை நாங்கள் அந்த டெலிபோன்
பில்லைக் கட்டிக் கொண்டு வருகிறோம். ஆகவே, எங்களுக்கு
டெலிபோன் கட்டணத்தை நீங்கள் அதிகரித்துக் கொடுக்க
வேண்டும். இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு
வழங்குவதுபோல், அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு
கொடுப்பதுபோல், தொலைபேசிக் கட்டணத்தை நீங்களே
எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் இன்றைக்கு எதற்கெடுத்
தாலும், நாம் பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கோள்
காட்டித் தான் இங்கே பேசுகிறோம். ஆனால் நாடாளுமன்ற
உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளையும்
நாம் இன்றைக்குப் பெறுவதில்லை. இன்றைக்கு நாடாளுமன்ற
உறுப்பினர்களுக்கு உதவியாளர்களை வைத்துக் கொள்ள
அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் நாங்கள் இந்த இரண்டு
கைகளாலும் எத்தனைக் காரியங்களைத்தான் செய்ய முடியும்
என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு உதவியாளர் அவசியம் தேவை.
எனவே, மக்களிடம் இருந்து எங்களுக்குக் குறைகள் வந்து
கொண்டேயிருக்கின்றன. காரணம் நாங்கள் மக்களோடு இரண்
டறக் கலந்து இருப்பதன் காரணமாக, எங்களைத் தொடர்பு
கொள்ளுகிறார்கள். அவர்களுடைய குறைகளை உடனடியாகக்
களைவதற்கும், உதவியாளர்கள் மூலமோ, அல்லது ஒரு
தட்டெழுத்தரையாவது வைத்துக் கொள்வதற்கான ஒரு வசதியும்
வாய்ப்பும் எங்களுக்கு கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு பஸ் பாஸ் வழங்கப்படுகிறது.
மனைவிகளும் போகலாம் என்று சொல்கிறார்கள். மனைவிகளை
நாங்கள் எல்லா இடங்களுக்கும் கூட்டிக் கொண்டு செல்ல

முடியாது. ஆகவே, மனைவிகளை சில இடங்களுக்குத்தான் நாம் கூட்டிக் கொண்டு போக முடியும். ஆகவே, தொகுதி முழுவதற்கும் சென்று காரியங்களை ஆற்றச் செல்லும்போது மனைவியை உடன் அழைத்துச் செல்ல முடியாது. எனவே, எங்களுக்கு உதவியாளர்களை, மனைவி அல்லது உதவியாளர்களை என்று ரயில்வே கூப்பன்களிலே, மனைவி அல்லது கெஸ்ட் என்று சொல்லுகிறார்களே, அந்த மாதிரி, அதைப் போன்று மனைவி அல்லது உதவியாளர் என்று கூட்டிச் செல்வதற்கான ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். இதை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கூட நான் கேட்கவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உள்ளங்கள் பண்படும் என்பதை நான் மிக ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). சட்டமன்ற உறுப்பினர்களாக வரக்கூடியவர்கள், அதுவும் அரசியலிலே, இன்றைக்கு ஒரு கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களாகி தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றும் வாய்ப்பு அவர்களுக்கு ஜனநாயகத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரக்கூடியவர்கள், பணக்காரர்களோ, அல்லது அதிக வாய்ப்பும் வசதியும் படைத்தவர்கள் அல்ல. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களாக ஓய்வு பெற்றவர்கள், பிற்பாடு சட்டமன்ற உறுப்பினர்களாக வர முடியாது கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வீடுகூட இல்லாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் கடன் கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வர முடியாத காலத்தில், அந்தக் கடனை மாதாமாதம் கொடுக்கக் கூடிய ஓய்வூதியத்திலிருந்து பிடித்துக் கொள்ள ஒரு வசதியும் வாய்ப்பும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் பொதுவாக நீங்கள் ஒருவரே பேசுவதாக இருந்தால் பேசலாம். ஆனால் இன்னும் நிறைய பேர்கள் பேச வேண்டும். ஆகவே, முடித்துக் கொள்ளுங்கள்.

[முற்பகல் 11.4 ]

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு டெர்ம் என்றால் 250 ரூபாய் பென்ஷன் என்று சொல்கிறார்கள். இரண்டாவது தடவை தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒவ்வொரு ஆண்டுக்கும் 50 ரூபாய் என்ற வீதத்தில் இரண்டாவது டெர்மில் 5 வருடங்கள் இருந்தால் மொத்தம் 500 ரூபாய் பென்ஷன் என்று சொல்கிறார்கள். இரண்டாவது டெர்மில் ஒருவர் உறுப்பினராக வரும்போது ஏதோ விபத்தின் காரணத்தாலோ — விபத்து வர வேண்டுமென்று நான் சொல்லவில்லை — அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ 3 மாதம் அல்லது 4 மாதம் பணியாற்றினால் இரண்டாவது டெர்மில் அவர் முழுமையாகப் பணியாற்றியதாகக்



கருதி, 500 ரூபாய் பென்ஷன் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும், 5 ஆண்டுகளும் இருந்தால்தான் 500 ரூபாய் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்ற முறையை மாற்றியமைக்க வேண்டும். இரண்டாவது டெர்முக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒன்றிரண்டு மாதங்கள் பணியாற்றினாலும் அவர்களுக்கு 500 ரூபாய் ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயக முறையில் சட்டமன்ற உறுப்பினர் கடமையாற்றும் போது பதவி முடிந்தபின் அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. பள்ளிலே செல்வதற்கும் மருத்துவ மனையிலும் அவர்கள் நீண்ட கியூவில் நிற்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை எல்லாம் கருதிப்பார்த்துதான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிலபல வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் ; மருத்துவ மனைகளிலும் சில வசதிகளை செய்துகொடுக்க முன் வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகையால் சட்டமன்றத்தில் இரண்டாவது முறை ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து பணியாற்றினால், அவர் பாதியிலே இறங்கிவிட்டாலும் அல்லது ஏதாவது விபத்து ஏற்பட்டாலும் அவர் 5 ஆண்டுகளும் பணியாற்றியதாகக் கருதி, 500 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசியதை அப்படியே ஏற்றுக்கொண்டு, எங்களுடைய கருத்தாக ஏற்றுக்கொண்டு, விடுபட்ட சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் ;** துணைத் தலைவரவர்களே, இதிலே ஆளும் கட்சி, எதிர்கட்சி என்று இருப்பதாகத் தெரியவில்லை ; எல்லோரும் ஒரே கட்சியாக இருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** அப்படியானால் நல்லது. சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். முக்கியமாக கேள்வி நேரத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒத்திவைக்கக் கூடாது. ஏனென்றால் கேள்வி நேரத்தில்தான் உறுப்பினர்கள் பல விஷயங்களில் விளக்கம் கேட்க வாய்ப்பு இருக்கிறது ; அமைச்சர்களும் தெளிவாக விளக்கம் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து எந்தக் காரணத்தைக்கொண்டும் கேள்வி நேரத்தை நிறுத்தி வைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1982 மார்ச் 29

ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு நேரம் அதிகமாக ஒதுக்கப்படுகிறது. அது அவசியம் இல்லை என்று நான் சொல்லவில்லை. அதன் காரணமாக பிரதான மானியக் கோரிக்கைகள், வேறு விஷயங்கள் பற்றிப் பேசுவதற்கு அதிக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதை சீர் செய்ய வேண்டும்.

மேலும் நடைமுறை பிரச்னைகள் பல இருக்கின்றன. அதிலே நீண்டநேரம் விரையம் ஆகிவிடுகிறது. உறுப்பினர்கள் பல நியாயங்களை எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் இருக்க வேண் டும். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு எல்லாம் சேர்த்து ஒரு நாளை ஒதுக்கிவிட்டால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

மேலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகமாக இருக்கின்றன. நீக்குவதை தவறு என்று சொல்ல வில்லை. ஆனால் அது வழக்கமாக ஏற்படுகிற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. சமீப காலத்தைப் பார்க்கும்போது உறுப்பினர்கள் சிலர் பேசுகின்ற வார்த்தைகளை நீக்குவதோடு உப தலைவர் பேசுகின்ற வார்த்தைகளைக்கூட அவர்களாலே நீக்கக்கூடிய சந் தர்ப்பம் அதிகமாக வருகிறது. அப்படிப்பட்ட வழக்கம் சரி யல்ல. அதிகமாக அவைக்குறிப்பிலிருந்து நீக்கும் முறை இருக்கக் கூடாது; '' மாஸ் எக்ஸ்பஞ்ச் '' முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக் கையை வாசிக்கும்போது அவர்கள் சில தொகைகளைத் திருத்தி வாசித்தார்கள். அப்படி திருத்த வேண்டிய அவசியம் என்ன? ஒன்று அச்சுப்பிழையாக இருக்க வேண்டும் அல்லது வேறு ஏதாவது காரணமாக இருக்க வேண்டும். அல்லது எழுதி தயாரித்த பிறகு ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற் பட்டதா என்று தெரியவில்லை. இப்படி பெரிய அளவிலே அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்போது இடையிலே இப்படிப் பட்ட மாற்றங்கள் ஏற்படுவதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர்களுக்கு உறுப்பினர்கள் ஏதா வது கடிதம் எழுதினால் அதற்கு விரைவாக பதில் எழுத வேண் டும். இப்பொழுது மிகவும் தாமதமாகத்தான் பதில் வருகிறது. நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எழுதிய ஒரு கடிதத்திற்கு இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பதில் வந்திருக்கிறது. நான் எழுதிய கடிதத் திற்கு அப்படி ஒன்றும் பெரிய அளவில் விவரம் சேகரித்து பதில் அனுப்பக்கூடிய ஒன்று இல்லை. அதற்குக் கூட 379 நாட்கள், அதாவது ஓராண்டும் 14 நாட்களும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இந்த அரசில் இருந்தால் மற்ற கடிதங்களுக்கு எப்படி



1982 மார்ச் 29] [திரு. உ. சுப்பிரமணியன்]

பதில் அனுப்புவார்கள் என்று தெரியவில்லை. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எழுதும் கடிதங்களுக்கு பதில் அனுப்ப இவ்வளவு தாமதம் ஏற்பட்டால் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தாமதமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியிருக் கிறது. இப்படிப்பட்ட தவறுகள், தாமதங்கள் ஏற்படக் கூடாது; குறுகிய காலத்தில் பதில் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் கட்சி வேறுபாடு இல்லை என்று சொன்னார்கள். நான் மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பல நிறுவனங்கள், பொதுக் கழகங்கள் நிறுவப்படுகிறபோது அதிகப்படியான அளவில் ஆளும் கட்சி உறுப்பினர்களைக்கொண்டே குழுக்கள் அமைக்கப் படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சமீ பத்தில் கூட குழாய்க்கிணறுகள் கழகம் அமைக்கப்பட்டது. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தான் இருக்கிறார்களே தவிர வேறுயாரும் அதிலே நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த சபை இரு தரப்பினரையும் சார்ந்ததுதான். ஆகவே, அந்தக் குழுக்களிலே, எல்லாத் தரப்பினரையும் சேர்த்து அமைத்தால் நல்லது. ஆகவே, எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர் களையும் அப்படிப்பட்ட கழகங்களிலே கலந்து போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தியாகிகளுக்குப் பென்ஷன் வழகுங்கிறபோது, மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. 1942-ல் இருந்து 1952 ஆம் ஆண்டு வரையில் இருந்த எம்.ஏல்.ஏ-க் களுக்கு பென்ஷன் கொடுப்பது என்று கால வரையை நிர்ணயித்து வைத்து இருக்கிறார்கள். அதைப்போலவே, மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பென்ஷன் வழங்குவதால், 47-ல் இருந்து 1952-வரையில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும். மேலும் அவர்களுக்கு மத்திய சர்க்கார் பென்ஷன் கொடுத்தால் மாநில அரசு கொடுக்கும் பென்ஷனில், மத்திய அரசு கொடுக்கும் பென்ஷன் தொகையைக் கழித்து விட்டு, மீதம் உள்ள தொகையைத்தான் கொடுக்கிறார்கள். யாரும் தவறாகக் கருதக்கூடாது. பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதை அடித்து பிடுங்குமாம் அனுமான் என்பதைப்போல, இன்றைக்கு இருக்கும் நிலையில் அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கவேண்டும் என்று வருகிறபோது, இன்னொரு இடத்தில் அவர்கள் பென்ஷன் வாங்குகிறார்கள் என்பதால் அதைக் குறைத்துக்கொண்டு கொடுப் பது நியாயமாகாது. ஆகவே, அவர்களுக்கு இரண்டையும் கொடுக் கும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நான் குறிப்பிட்டதுபோல சட்டமன்ற உறுப் பினர் விடுதிக்கு முன்பு புல்வெளி மைதானம் ஏற்படுத்தியிருக் கிறீர்கள். விளையாட்டு மைதானத்தையும் காலம் தாழ்த்தாமல் ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நன்றி.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1982 மார்ச் 29

நூலகத்தில் வசதியாக உட்காரும் வகையில், நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே ஒவ் வொரு வகையிலும் உறுப்பினர்களுக்குச் சௌகர்யங்களை—லக் சுரியாக அல்ல—அத்தியாவசியமாக உள்ளவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளில் ஆங்காங்கு குப்பைக் கூளங்கள் காணப்படுகின்றன. அதற்குரிய '' டஸ்ட் பின் ''— குப்பைத் தொட்டி அங்கேயில்லை. ஆகவே, அதை ஆங்காங்கு அமைத்துக்கொடுத்தால், அந்த விடுதி சுத்தமாக வைத்துக்கொள் கிற சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுக்கு இருக்கும் உணவு சம்பந்தப்பட்ட வரையில், ஆண்டுதோறும் சொல்லி வருகிறோம். மத்திய பாராளுமன் றத்தில் இருக்கின்ற ரயில்வே கேன்டீன் போல் இல்லாவிட்டாலும் செக்ரடேரியட்டில் உள்ள சிப்பந்திகளுக்கு வசதி செய்துகொடுத் துள்ளது போல், டேப்கோ, பிஷரீஸ் டிப்பார்ட்மென்ட் மூலம் உணவுக்கூடங்களை அமைத்துக் கொடுத்தால் ஓரளவிற்கு வாய்க்கு ருசியாக சாப்பிடும் நிலைமை உருவாகும். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றம் நடக்கும் நேரங்களில் அமர்த்தப்படும் சிப்பந் களுக்கு நாட்கூலி தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படு கிறது. அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கவேண்டும். தற் போது லீவ் நாட்களுக்கு சம்பளம் கொடுக்கும் நிலைமை இல்லை. ஒரு முறை வந்தவர்களே மீண்டும் மீண்டும் வருகின்ற நிலமைகள் இருப்பதால், அவர்களுக்கு மாதச்சம்பளம் கொடுப் பது வரவேற்கத்தக்கது. அவர்களுக்கு சர்வீஸ் சர்ட்டிபிகேட் வழங்குவது இல்லை என்கிற குறையும் இருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக அல்லாமல் நேரடியாக அவர்களை நியமிக்கிற காரணத்தால் மாதச்சம்பளம் கொடுக்கமுடியாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, மேற்கண்டவாறு இல்லாமல், இப்படி நேரடியாக அமர்த்துவதற்கு விதிவிலக்கு வாங்கி மாதச் சம்பளம் வழங்கவேண்டும் என்று கோருகிறேன். இப்படி சிறுசிறு குறைபாடுகள் அவர்களுக்கு உள்ளன. அதை நீக்கி, அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், சிறு சிறு இன்செண்டிவ் போனஸ் அளிக்கிற மாதிரி, அந்த வகையில், இந்தச் சலுகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளோடு நான் ஒரு கருத்தைச்சொல்ல விரும்பு கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மிகப்பெரிய வசதியுள்ள வர்கள் இல்லாததால் இந்த அந்தஸ்தை அவர்கள் காப்பாற்றிக் கொள்கிற வகையில் ஒரு கார் அவசியம் அவர்களுக்குத் தேவைப் படுகிறது. குடியிருக்க வீட்டு வசதி தேவைப்படுகிறது.



1982 மார்ச் 29] (திரு. உ. சுப்பிரமணியன்)

அதற்கு எல்லாம் வேறு மாநிலங்களில் வட்டியில்லாக் கடன் அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதையும் அனுதாபத் தோடு கவனித்து, உறுப்பினர்களுக்கு அந்த வசதிகளையும் செய்து கொடுத்தால், அவர்களுடைய கௌரவம் உயரும் என்ற வகை யில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப் பெற் றது) ஒரே நிமிடம் அனுமதி அளிக்க வேண்டுகிறேன். சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையில் பேசியபோது, அப்போது நடந்த சில சம்பவங்களைப் பற்றி எடுத்துக் கூறினேன். அதே போல தற்போது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நடை பெற்ற சம்பவத்தைப் பற்றி நினைக்கும்போதும் மிக வருத்த மாகத்தான் இருக்கிறது. யார் காரணம்? எப்படி நடந்தது என் றெல்லாம் உள்ளே சென்று ஆராயப்போவதில்லை. ஆனாலும், கூட கடந்த காலத்தில் இந்தப் பேரவை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த பேரவையாக இருந்து வந்திருக்கிறது. அப்படி பட்ட அதன் கௌரவத்தை, உயர்த்துவதற்கும், அதனை பாது காப்பதற்கும் அனைவருக்கும் பங்கு உண்டு, கடமையிருக்கிறது என்பதை சொல்லி, அந்த அளவிலே இதுவரை நடந்தெல்லாம் நடந்ததாகவே இருக்கட்டும், இனிமேலாவது நல்லவையாக நடக்கவேண்டும் என்பதை மனதிலே கொண்டு, இந்தப் பேரவை யின் மரபை காப்பாற்றுகிற வகையிலே அனைவரும் நடந்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-50)

ஏதாவது விவாதிக்கிற விஷயமாக இருந்தாலும் கூட அதனை ஸ்போர்டிவ் ஆக எடுத்துக் கொள்ள வேண்டும். நமது சட்டப் பேரவை மாண்புமிகு உறுப்பினர் தோழர் உமாநாத் அவர்களும், தோழர் அம்பிகாபதி அவர்களும் பேசும்போதுகூட, எப்போது பேசினாலும் எங்கள் கட்சியைப் பற்றியோ, அல்லது பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் பற்றியோ ஏதாவது பேசாமல் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய கொள்கை அப்படி, கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அவர்கள் பேசு கிறார்கள் என்ற நிலையிலேயே இருப்போமே தவிர—எங்கள் கட்சியில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தான் அது வும் ஏதாவது சில சமயங்களில் குறுக்கிட்டுப் பேசுவாரே தவிர மற்றவர்கள் அதிகமாக தலையிடுவதில்லை. ஆகவே மற்றவர்கள் மனம் புண்படும்படி அளவுக்கு யாரும் பேசாமல் இருத்தலே நல்லது.

அடுத்ததாக, இந்தப் பெஞ்சியிலே நாங்கள் 4 பேர்கள் அமர்ந் திருக்கிறோம். இடமே போதவில்லை. யாராவது ஒருவரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டால் கூட நல்லது. அதிலே பிரச் னை என்னவென்றால், ஒன்று நான்கு பேருக்கும் இடம் போத வில்லை என்பது, இரண்டு நாங்கள் நான்கு பேருமே தினமும் காலையிலேயிருந்தே வந்து விடுகிறோம் தவறாமல். ஆகவே இது போன்ற குறைபாடுகளை போக்கி, இந்த அவையின் பெரு

[திரு. உ. சுப்பிரமணியன்] [1982 மார்ச் 29

மையையும் மரபையும் காக்கும் பணியில் எல்லா உறுப்பினர்
களும் முன் வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து,
எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு உங்களுக்கு நன்றி கூறி,
விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு
வந்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னு
டைய ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்து வைத்து
பேசுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு).

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே,
ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். ஒவ்வொரு மானியக் கோரிக்கை
யின் போதும் அந்தந்த துறைச் செயலாளர்களும் ஆபிசர்களும்—
ஆபிசர் காலரியில் உட்கார்ந்திருப்பது வழக்கம். இந்தத் துறை
யைப் பொருத்தவரைக்கும் இதன் செயலாளர் அவர்களும்
இன்றைக்காவது அங்கே உட்காருவதற்கு அனுமதிக்கப்படுவாரா?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அவர் இங்கேயிருந்தால்
நமக்கு உதவியாக இருக்கும்.

திரு. கோவைத் தம்பி : எனக்கு முன்பு பேசிய இந்திய
தேசீய காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய கௌரவத்தைக்
காப்பாற்றும் பொருட்டு அவர்களுக்கு கார் வாங்குவதற்கு கடன்
வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முதலிலே இங்கு
வைத்தார்கள். நான் மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்வதெல்லாம், சட்ட
மன்ற உறுப்பினர்களுடைய மரியாதையை, வெளியிலே
காப்பாற்றுகின்ற பெரு முயற்சியினையும், இந்த மன்றத்தை நடத்
திச் செல்லுகின்ற துணைத் தலைவராகிய தாங்களும் தலைவர்
அவர்களும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற தலைப்பில் கொடுக்கப்
பட்டிருக்கிற இந்த கோரிக்கையின் மீது பேசும்போது சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு தேவையானவைகளை விளக்கி
வாதிடுவதுதான் முதலான வாதம் என்று சொன்னாலும், இன்று
நாட்டில் திரையுலகம் என்ற பெயரால், சில நேரங்களில் சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுகிற இழிவினை போக்குவதற்
காகவும் இந்த மன்றத்தை நடத்திச் செல்கிற தாங்களும், தலை
வர் அவர்களும் பெரு முயற்சியினை எடுத்துக் கொள்ளவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு கால கட்டத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் திரை
உலகில் இருந்தபோது சர்க்காருடைய உதவியே இல்லாமல்
சமூகத்தை சீர்திருத்தம் செய்யக்கூடிய ஒரு நிலை இருந்தது
என்பதையும் நான் படம் பிடித்துக் காட்டவிரும்புகிறேன். மனம்



1982 மார்ச் 29] [திரு. கோவைத்தம்பி]

விட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நம்முடைய
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட திரை
உலகில் சினிமா கதை வசனம் எழுதியபோது, அதனால் சமு
தாயம் மறுமலர்ச்சி பெற்றது என்பதை யாரும் மறந்திருக்க
முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன்.

பெருமதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் திரை
உலகத்திலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு மாண்பு
மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரை உலகத்தை விட்டு
அரசியலுக்கு வந்த பிறகு இன்றைய நிலையில் புரட்சித்
தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் திரை உலகத்தை
விட்டு முழுக்க வெளியே வந்த பிறகு இன்று திரை உலகம் மிக
வும் கேவலமான நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டு மக்களின்
வரிப்பணத்தைப் பயன்படுத்தி கோடிக்கணக்கான ரூபாய்களை
முதலீடு செய்து திட்டங்கள் என்ற பெயரால் இந்த அரசு போடு
கின்ற நல்ல திட்டங்களையும், அந்தத் திட்டங்களை எதிர்த்து
குறை சொல்லி குறையைக் காணுகின்ற நிலைமையிலும் வாதாடு
கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பாராட்டக்கூடிய
அளவுக்கு நாட்டு மக்களுடைய மனதில் ஆட்சி நடத்தவேண்டும்,
என்று எண்ணுகின்ற ஆளும் கட்சி உறுப்பினர்களும், சகல
கட்சி உறுப்பினர்களும் வெட்கித் தலை குனிகிற அளவுக்கு
சட்டமன்ற உறுப்பினர்களையும், சமுதாயத்தில் நலிந்து போன
பகுதிகளையும் தவறாகப் படம் பிடித்துக் காட்டக்கூடிய அள
வுக்குத் திரை உலகம் போய்க்கொண்டிருக்கின்றது என்பதை
நான் முதலில் குறிப்பிட்டுக் காட்டிக்கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற மதிப்
பிற்குரிய டாக்டர், கலைஞர் அவர்களும் எங்களுடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும் எதிரிகளைச் சாடும்
போது கூட, எதிரிகளைப் பற்றி வாதாடும்போது கூட, தங்
களுடைய கருத்துக்களை எடுத்து வைக்கும் போது கூட திரை
உலகத்தில் அவர்கள் சொன்ன கருத்துக்கள் யாருடைய மனத்
தையும் புண்படுத்தவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன். ஆனால் இன்றைய திரை உலகம் புரட்சித் தலைவர்
அவர்கள் வெளியே வந்த பிறகு எப்படிப் போய்க்கொண்டிருக்
கின்றது என்று சொன்னால் மிகவும் கேவலமான நிலையில்
போய்க்கொண்டிருக்கின்றது என்பதையும் அது சமுதாயத்தில்
வாழ்கின்ற சங்கடங்களைச் சொல்வதற்குப் பதிலாக சபல
புத்தி படைத்தவர்கள் மத்தியில் பாலிய உணர்வுகளைத் தூண்டு
கின்ற அளவுக்கு போய்க்கொண்டு இருக்கின்றது என்பதையும்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த உணர்வுகளை எல்
லாம் தட்டிக் கேட்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி
திரை உலகத்தில் இருக்கின்ற எழுத்தாளர்கள் எப்படிப் படம்

பிடித்துக் காட்டுகிறார்கள் என்று சொன்னால் மாண்புமிகு மன்
றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நீங்களும் மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான், நீங்களும் லட்சகக்கணக்கான
வாக்குகளைப் பெற்று இந்த மாமன்றத்திலே துணைத்தலைவ
ராக வீற்றிருக்கிகிறீர்கள். ஆனால் சினிமாப் படங்களில்
திரை உலகத்தில் எழுதுகின்ற எழுத்தாளர்கள் தோன்றி இருக்
கிறார்கள். என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்களைப்
பாதுகாப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகி
றீர்கள் என்பதை நான் முதலிலே பணிவோடு கேட்டுக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். சென்சார் போர்டு என்ன செய்
கிறது என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் மானத்தோடும்
மனைவி மக்களோடும் வாழ்கின்ற எந்தக் கட்சியினைச் சேர்ந்த
சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்களை இன்று
திரை உலகத்தில் காட்டுகின்ற சினிமாவானாலும், வெளியே
கடை வீதிக்குப் போனாலும் கேவலப்படுத்தக்கூடிய அளவுக்கு
இழி பிறவிகளாகக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை
மாமன்றத்தின் துணைத்தலைவராகிய உங்களுக்கு ஞாபகப்படுத்
கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளை ஏன் இந்த அரசு தடுத்து
நிறுத்தக்கூடாது? இவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய நிலைமை
சென்சார் போர்டிடத்திலே இருக்கின்றது என்று சொன்னாலும்
கூட முற்போக்கு என்ற பெயரால் இடதுசாரி மனப்பான்மையோடு
நான் தட்டி எழுப்புகிறேன் என்ற நிலையில் தரம் கெட்ட
கருத்துக்களைச் சொல்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி
நிதிகளைத் தவறாக அடையாளம் காட்டுகிறார்களே இவர்களை
நீங்கள் ஏன் கண்டிக்கக்கூடாது? கண்டிப்பதற்கு அதிகாரம்
இல்லை என்று சொன்னால் பேரவையை நடத்திச் செல்கின்ற
நீங்கள் இப்படிப்பட்ட சினிமா எடுக்கின்றவர்களுக்குபி. டபிள்யூ.
டீ. இடமாக இருந்தாலும், ஹைவேஸ் இடமாக இருந்தாலும்
எந்த இலாக்காவுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும்,
மாநகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், நகராட்
சிக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், அவற்றின் சொந்
தக் கட்டிடமாக இருந்தாலும் சூட்டிங் நடத்துவதற்கே தமிழக
அரசு அனுமதி தராது என்ற உத்தரவைப் போடுங்கள். அப்
போதாவது எங்களை மானத்தோடும், மரியாதையோடும்அவர்கள்
ஏற்றுக்கொள்வார்களா என்பதைப்பார்ப்போம்என்பதைமுதலிலே
நான் உங்கள்கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே
இன்று திரைஉலகம் என்ற பெயரால் நடத்தப்படுகின்ற இந்தத்
தவறான குற்றச்சாட்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களாகிய
எங்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும். அப்படிக் காப்பாற்றத்
தவறினால்

* * * *

என்பதை நான் பரிதாபத்தோடு இந்த நேரத்திலே தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பட்டது.



அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான சில
வற்றை உங்கள் மத்தியில் நான் கூறி விடைபெற்றுக்கொள்ள
லாம் என்று நினைக்கிறேன். அரசினை நடத்திச் செல்கின்ற
ஊழியர்களுக்கு படி, என்றும் பஞ்சப்படி என்றும் அவர்களிடத்தி
லிருந்து கோரிக்கைகள் எழும்போதெல்லாம் கொடுத்துக் கொண்
டிருக்கின்றீர்கள். மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் எல்லாத் துறையிலே உள்ள அதாவது அனார்கனைஸ்ட்
என்ற நிலையிலே இருப்பவர்கள் இறந்தாலும் கூட அவர்களுக்கு
மானியமாக 10,000 ரூபாய் கொடுக்கலாம் என்ற நிலையை
ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதே மாதிரி சட்டமன்ற உறுப்பினர்
களாக இருக்கின்றவர்கள் ஒரு சூழ்நிலையில் ஒரு வாய்ப்பில்
அவர்கள் இறக்க நேரிட்டால் அனார்கனைஸ்ட் ஓர்க்கர்ஸ்
என்று சொல்லக்கூடிய முறை சாராத தொழிலுக்கு உட்பட்
டிருக்கின்றவர்களுக்கு எல்லாம் 10 ஆயிரம் ரூபாயை நீங்கள்
கொடுக்கிறீர்கள்.

(நண்பகல் 12-00)

அதேமாதிரி சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்றிக் கொண்
டிருக்கும்போது இறந்தால் ரூ. 50,000 பெரிய மனது வைத்தால்
ஒரு இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் கொடுக்கச்
கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் நிதி அமைச்சர் அவர்களிடப்
உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்
றால் அப்போதுதான் பயம் இல்லாமல் அவர்கள் கொள்கை
களை, இலட்சியங்களைச் சொல்வதற்கு, யார் எதிர்த்தாலு
கூட, நாம் கொள்கையால் அழித்தால் கூட நம் குடும்பத்திற்
ஒரு லட்சம் ரூபாய் வருகிறது. ரூ. 50,000 வருகிறது என்
மனப்பக்குவத்தில் பணியாற்றுவதற்கு நல்லதொரு வாய்ப்பா
இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்
விரும்புகிறேன்.

தென் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் இன்று ந
தமிழகத்தைப் பொறுத்தவரையில், எல்லா வசதிகளையும் சட்
மன்ற உறுப்பினர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்ன
லும் மற்ற மாநிலங்களில் பெற்றிருக்கிற அனைத்து வச
களிலும் தமிழ் மாநிலம் பெற்றிருக்கிற வசதி, சட்டமன்ற உறு
பினர்களுக்கு அளித்திருக்கிற வசதிகள் மிக மிகச் குறைவு என்
பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ஒரு
துணையாளர் நியமிப்பதற்கு அரசு உத்தரவிடவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் வசிக்கிற அந்தத் தொகுதி உள்
ளிட்ட பகுதியில் அவர் தங்கி பணியாற்றுவதற்கு ஒரு அலுவல
கமும், ஒரு தொலைபேசியும், ஒரு துணையாளரும் தரத்தக்க
ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்தவேண்டும்.

பென்ஷன் பற்றிச் சொல்கிறீர்கள். பென்ஷன் ரூ. 250
கொடுக்கிறீர்கள். திடீரென்று பென்ஷன் வாங்கும் முன்னாள்
சட்டமன்ற உறுப்பினர் இறந்துவிட்டால் அவர் மனைவிக்கு
அந்தப் பென்ஷன் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள்
உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியில் சுற்றுப் பயணம் செய்வதற்கு 100 லிட்டர்
பெட்ரோல் கொடுக்கிறீர்கள். சில தொகுதிகளில் இரண்டு
ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நகரசபை அடங்கிய தொகுதி
கூட இருக்கிறது. எனவே, இந்த 100 லிட்டர் பெட்ரோல்
என்பதை 200 லிட்டர் என்றாவது ஆக்கித்தர வேண்டும்.

நீங்கள் கொடுத்திருக்கிற ரெயில்வே கூப்பன்கள், டெலிபோன்
ரேட் இப்போது மைய அரசு இவற்றை உயர்த்திவிட்டதால்
நீங்களும் கொஞ்சம் உயர்த்தி இரு மடங்காக ஆக்கித்தர வேண்
டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டமன்ற
உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னார்கள்.
* * * என்று சொன்னார்கள், அந்த வார்த்தை அவசியமில்லை.

அதேபோல் அந்த மாதிரிப் படம் யார் எடுத்திருந்தாலும்
சரி, அவர்களைக் கண்டிக்கிறேன், இந்த அவையின் மூலம், உங்கள்
மூலம் கண்டிக்கிறேன், எல்லோரையும், நடித்தவர்களையும் சரி,
எடுத்தவர்களையும் சரி, டைரக்ட் செய்தவர்களையும் சரி
எல்லோரையும் கண்டிக்கிறேன்,

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் திரு.
கோவைத்தம்பி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி திரை
உலகில் இழிவான படங்கள் எடுக்கப்படுகின்றன என்று சொன்ன
அந்த உணர்வோடு நான் ஒன்றிப் போகிறேன். ஆனால் அவர்
களும் ஏற்றுக்கொள்வார்கள், தாங்களும் அங்கீகரிப்பீர்கள் என்று
என் கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள்
பேச்சில் சொன்னதை நான் இங்கே சொல்கிறேன். * * *

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணை
ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளை நடவடிக்கைக்
குறிப்பிலிருந்து எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக சட்டமன்ற
உறுப்பினர்களை இழிவுபடுத்துவது போல் என்று மாற்றிக்
கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை
யும், திரு. கோவைத்தம்பி அவர்கள் சொன்ன அந்த வார்த்தை
களையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

அப்படி படம் எடுத்தவர்கள், அந்தப் படத்தில் நடித்தவர்கள்
அவர்கள் எல்லோரையும் இந்த அவையின் சார்பாகக் கண்டிக்
கிறேன். எச்சரிக்கிறேன்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர்
அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது மார்க்ஸிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில முக்கியமான கருத்துக்களை
அவை முன் வைக்க விரும்புகிறேன். சட்டமன்றக் கூட்டங்கள்
இன்றைக்கு நடத்தப்பட்டு வரக் கூடிய அளவு போதாது என்பது
எங்களுடைய உறுதியான கருத்து. மக்களின் அன்றாடப் பிரச்
சினைகளை இங்கிருக்கிற 234 உறுப்பினர்களும் அடிக்கடி இதே
சட்டமன்றத்தில் எடுத்து வைப்பது, விவாதிப்பது, அதற்குப்
பரிகாரம் தேடுவது இவை மிக மிக அவசியமானதொன்று.
ஆகவே சட்டமன்ற கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறைகளாவது
வைக்க வேண்டும் என்பது என் ஆலோசனை.

பட்ஜெட் கூட்டம் ஒன்றரை மாதங்கள் நடக்கிறது. பாக்கி
உள்ள கூட்டங்களையும் எடுத்துக் கொண்டால் நான்கு கூட்டங்
களுக்கும் சேர்ந்து 100 நாட்களாவது மீட்டிங்ஸ் இருக்க வேண்டும்
அந்த முறையில் நடத்தப்பட வேண்டும்.

அதிலே, லீவ் போன்ற மற்றவைகளை எல்லாம் சேர்க்காமல்,
சட்டமன்றக் கூட்டத்தை நடத்த வேண்டும். பாராளுமன்றம்
போல் 7 மாதங்கள் நடத்த வேண்டும் என்று சொல்லவில்லை.
குறைந்தபட்சம் இது தேவையென்று ஏற்கனவே இந்த மன்றத்
திலே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம். ஆனால்
இதைப் பற்றி கொஞ்சம்கூட இந்த அரசு சிந்திக்கவில்லை.
அதற்கு மாறாக, 3 கூட்டத் தொடர்கள் கூட நடத்தாமல்
இருப்பது, துரதிருஷ்டவசமாக இருக்கிறது ; அது ரொம்ப
வருந்தத்தக்க விஷயம் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஒவ்வொரு அமைச்சருக்கும், அவர் இலாகா சம்பந்தப்பட்ட
வரையில் ஒரு கன்சல்வேடிவ் கமிட்டி என்ற முறையில் ஒரு
ஆலோசனைக் குழுவை கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும். அது
பாராளுமன்ற முறையிலே இருக்கிறது. அதனால் பல

பிரயோஜனம் ஏற்படும். ஆகவே, இதை ஏற்படுத்த வேண்டும்.
பலவிதமான விஷயங்களை எடுத்துச்சொல்வதற்கும், சட்டமன்றம்
கூடாத இடைக் காலத்தில், பலப் பிரச்னைகளைப் பற்றி விவா
திப்பதற்கு அமைச்சர்கள் இத்தகைய கூட்டங்களைக் கூட்டி, பல
அறிவுரைகளைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். அமைச்சர்
கள் திடீர் திடீரென்று அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். அதிலே,
மக்களுக்கு சலுகைகள் கொடுப்பதும், கொடுக்காததும் பற்றி
பல அறிவிப்புகள் வருகின்றன. இதெல்லாம் சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு தெரிவிக்காமல், வெளியிடுவது ஆச்சரியமாக இருக்
கிறது. அதைப்பற்றி மக்கள் கேட்டால், எங்களால் ஒன்றும்
சொல்ல முடியவில்லை. மேலும், இத்தகைய அறிவிப்புகளை
நாங்கள் பத்திரிகைகளின் வாயிலாக தெரிந்துக்கொள்ள வேண்டிய
சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஆலோசனைக் குழுக்
கூட்டங்களை இரண்டு சட்டமன்றக் கூட்டங்களுக்கு மத்தியில்
கூட்டலாம்; அதிலே விவாதிக்கலாம்; பல கருத்துக்களைப்
பரிமாறிக் கொள்ளலாம். ஜனநாயக முறைப்படி இதைக்
கொஞ்சம் விரிவாகக் கையாள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கைகள் வரும் போது
நாம் திருப்தியாக பல விஷயங்களை அந்த மானியத்திலே விவா
தித்து, பேச முடிவதில்லை; அதற்கான நேரம் அனுமதிக்கப்
படுவதில்லை. ஒரு சில அங்கத்தினர்கள் கொஞ்சம் தலைவர்கள்
அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு வேண்டுமானால், சிறிது நேரம்
அதிகமாகக் கொடுக்கப்படலாம். மற்றவர்களுக்கு அப்படி
தரப்படுவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்
கூடாது. அதிலும், குறிப்பாக, பெரிய மானியமாக இருந்தால்,
பெரிய மானியம் என்று சொல்கிற போது, தொகையைப் பற்றி
முக்கியமல்ல, தொழிலாளர் இலாகாவோடு சேர்த்து, வேறுஇரண்டு
இலாகாக்களும் வருகின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து $2\frac{1}{2}$
மணி நேரம்தான் விவாதம். அப்படி என்றால், இதற்கு என்று
ஒரு விவாதம் வைக்கத் தேவையில்லை என்று சொன்னாலும்கூட
அது தவறாகாது. இப்படிப்பட்ட பல பெரிய முக்கியமான
மானியங்கள் மீது குறைந்தது, ஒரு மானியத்திற்கு இரண்டு
நாட்கள் விவாதம் வைக்க வேண்டும். இவ்வாறு முக்கியமான
7, 8 மானியங்கள் வருகின்றன. எதிர் காலத்திலாவது இதை
எல்லாம் மனதிலே கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால், இன்றைக்கு
எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து தானே, பிசினஸ்
அட்வைசரி கமிட்டியிலே முடிவு செய்யப்படுகின்றது என்று
கேட்கக்கூடும். அப்படி ஒரு வழக்கம் இருந்தாலும், இதை
மாற்ற வேண்டும். நாங்களும், எங்களுடைய தலைவர்களுடன்
விவாதித்து, எங்களுடைய இது பற்றிய ஆலோசனைகளை அவர்
கள் முன் வைப்போம்.



ாறுபட்ட சில கருத்துக்கள் எங்களுக்கு இருக்கிறது. அது ஒரு
க்கத்திலே இருந்தாலும் ஆந்திர முதலமைச்சர் அவர்கள் 4
.. ஏ.-க்கள் அறிவித்து விட்டார்கள். அதைப் போலவே
ர்நாடக மாநிலத்திலே நிதியமைச்சர் அவர்கள் 4 டி. ஏ.-க்கள்
றிவித்து விட்டார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களும்
னம் உவந்து 4 டி. ஏ.-க்களை அளிப்பார்கள் என்று நாங்கள்
திர்பார்க்கிறோம்.

அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இருக்கும்
டியான தொடர்பு இப்போது குறைவாக இருக்கிறது. அதிலே
பிரச்சினை இருக்கிறது. அமைச்சர்கள் வெளியே சுற்றுப்
யணம் போவதைப் பற்றி பிரச்சினையில்லை, சட்டமன்றக்
கூட்டம் இல்லாத நேரங்களிலே வெளியிலே இருந்து வருகின்ற
பொதுமக்கள் ஆபீசிலே அமைச்சர்களைச் சந்திப்பதற்கு உரிய
வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இப்போது அதிலே கஷ்டம் இருக்
கிறது; முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பது என்பது மிக மிக
மிகக்கஷ்டமான வேலை. அதற்கு தகுந்த ஏற்பாடுகள் தேவை.
சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பார்க்க வேண்டுமென்
றால் எங்களுக்குக் கூட அவர்களுடைய பேட்டி கிடைப்பதற்கு
பல கஷ்டங்களைத் தாண்டித்தான் போக வேண்டியிருக்கிறது.
அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எம்.எல்.ஏ.-க்கள் விடுதி. கட்டுப்பாடற்ற—நாம்
மிகவும் வேதனையடைகிறோம் — மார்க்கட் பிளேஸ், சந்தைக்
கடை என்று சொன்னால் தவறாகாது. விரும்பத் தகாத பேர்
வழிகள் வருகிறார்கள், திருடர்கள் வருகிறார்கள், ஏற்கனவே
அவர்கள் வந்து தகராறு நடக்கிறது. இங்கே சபைக் கூட்டம்
முடிந்து அங்கே நாங்கள் செல்கிறபோது ஒரு நாள் ஒருவனுடைய
சட்டையைக் கழற்றிவிட்டு போலீஸ் கேள்விகளைக் கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள்., இந்த மனிதர்கள் எப்படி அங்கே
வரமுடியும்? இன்னொன்று, நன்கொடை வசூலிப்பதற்காக
புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு ரூமிற்கும் சென்று
வசூலிக்கின்ற நிலைமையில் வசூலிக்கும் இடமாக சில நேரங்
களில் மாறுகிறது. அறைகளுக்கு முன்பு ராத்திரியில் சிலர்
படுத்துத் தூங்கக்கூடிய நிலைமை இருக்கிறது, காலியாக இருக்
கின்ற இடங்களிலே படுத்துத் தூங்கக்கூடிய நிலைமை இருக்
கிறது. யார் வேண்டுமானாலும் வரலாம், எப்போது வேண்டு
மானாலும் வரலாம், ராத்திரியிலே வேண்டுமானாலும் வந்து
கதவைத் தட்டலாம். இந்த நிலமைகள் எல்லாம் தவிர்க்கப்பட
வேண்டும். இந்த நிலைமைகளைப்பற்றி ஒரு தரம் நாம் எல்
லாம் பேசி முடிவு எடுத்தோம், அந்த நிலைமைகள் போக்கப்
பட்டிருக்கிறது, அங்கே அடிதடி கூட நடந்திருக்கிறது உங்களுக்குத்
தெரியும், இது சரியல்ல. வேறு எந்த சட்டமன்ற உறுப்
பினர்கள் விடுதியைப் போய்ப் பார்த்தாலும் இந்த நிலைமை
இருக்காது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி, இந்தச் சட்டமன்றப் பேரவையை நம்பிக் கொண்டு, இதற்காக என்று இருக்கின்ற தாற்காலிக ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மனம் புண்படுகின்ற வகையிலே, அவர்களை சாதாரண தினக் கூலிகளாக நடத்தக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்த நிலை ஒருகாலும் இருக்கக்கூடாது. இதை மாற்றியாக வேண்டும். ஏற்கனவே, இதைப்பற்றி திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் கூட எடுத்துச் சொல்லி, மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள் சர்வீஸ் மானியூவலுக்கு விரோதமாக தினக் கூலி ஆட்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அதே மாதிரி, தட்டெழுத்தர்கள் இன்றைக்கு இளநிலை உதவியாளர்கள் என்று நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு அதற்கான சிறப்பு ஊதியத்தைக் கொடுப்பதில்லை. அதுவும் சரியல்ல. அதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அந்த மாதிரியான தகுதி யிருக்கும்போது, அதற்கான திறமை இருக்கும் போது, அதற்குத் தகுந்த மாதிரி அவர்கள் ஊதியத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும்.

அதே போல், சர்வீஸ் சான்றிதழ் கொடுக்கப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு சான்றிதழ் நகலைப் பார்த்தேன்—

The incividual was not recruited through Employment Exchange and the said appointment does not confer any service right on him.

இப்படி அவர்கள் சர்வீசிலே நல்லபடியாக நடந்ததாக எழுதி கொடுத்துவிட்டு, அதற்குக் கீழே அப்படி எழுதியிருப்பது சரியல்ல. இதனால் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடைக்கவில்லை. அந்த சர்டிபிகேட்டினால், எந்தவிதமான ஒரு வேலை வாய்ப்பும் அவர்கள் பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது.

அந்த நிலை சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து வந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரவில்லை என்று சொல்வது அவர்களது குறை இல்லை. தற்காலிகமாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் தொடர்ந்து வேலையில் நீடிக்கக் கூடிய முறையிலே நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். இந்த ஊழியர்கள் பல சங்கடங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு தகுந்த நியாயம் அளிக்கப்படவேண்டும், இதைப்பற்றி பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நாங்கள் சில கடிதங்களைக் கொடுத்திருக்கிறோம்.

(பிற்பகல் 12-10).

அதே மாதிரி அரசு ஊழியர்களுக்கு டி.ஏ. கொடுக்க வேண்டும் என்ற விஷயத்தை நான் அவையிலே அமைச்சரின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். 4 டி. ஏ.-க்கள் கொடுத்தாகிவிட்டது மத்திய சர்க்கார். அதிலே உள்ள முறைகளிலே



நம்மோடு வருகின்ற விருந்தினர்கள் என்ற பெயரால் சிலர் சொல்லிக் கொண்டு தப்புவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

தொலைபேசிகள் அதிகமாக அங்கே வைக்கப்பட வேண்டும். கட்சி காரியங்களுக்கு தொலைபேசி வசதிகள் இனாமாக செய்து கொடுக்கப்பட வேண்டும். அந்த ஆபீஸ் காரியதரிசிக்கு போக்கு வரத்துக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டும், இங்கே வந்து போய் பல காரியங்களை அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே உள்ள உணவு வசதி, அங்கே எந்தவிதமான உணவு வசதியும் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் என்று போர்டு இருந்தாலும் அவர்கள் எல்லாம் வெளியே இருக்க வேண்டும், பாக்கியிருககிறவர்கள் உள்ளே இருந்து சாப்பிடலாம் என்ற நிலைமை இருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்கள் என்றாலும் கவலைப்படாத நிலைமை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக மெஸ் ஏற்படுத்தி அரசாங்கமே அவர்களுக்கு உணவு வசதி செய்ய வேண்டும். அதற்கு என்ன செலவாகிறதோ அதைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். சாதாரண ஸ்டாண்டர்டு உணவு ஆக இருந்தால் போதும். இப்படிப்பட்ட ஒரு சில மாற்றங்கள், சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள் செய்யப்படவில்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் பல பேர்கள் ஏளனமாகக் கருதக்கூடிய அளவுக்கு விடுதியைப்பற்றி தவறான எண்ணம் ஏற்படுவதற்கும் மக்கள் மத்தியிலே வேறு விதமாக எண்ணக்கூடிய நிலைமையும் இருக்கும், ஆகவே, அந்த நிலைமை போக்கப்பட வேண்டும், அதைத் தடுத்தாக வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த கோரிக்கைகள் நான்கின்மீது நான் என்னுடைய கருத்துக்களை வைக்க முன்வருகிறேன்.

" அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் "

வள்ளுவன் சொல்கிற இந்தக் கருத்தை பார்க்கிறபோது, அதாவது எப்படி எப்படி அணுகி நம்முடைய பிரச்னைகளை சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு எளிதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழக சட்டமன்றம் வள்ளுவர் மன்றமாக இருக்கிறது. இங்கே முதல்வராக இருக்கக்கூடியவர்கள் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற திருவள்ளுவராக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் காட்சி அளிக்கிறார்கள்.

[டாக்டர் கே. சமரசம்] [1982 மார்ச் 29

சிகப்பு விளக்கு என்றாலே பலர் பயப்படுகிறார்கள். சிகப்பு விளக்கு '' சிக்னலை '' கண்டால் போக்குவரத்து கூட தடைப் படும். ஆனால் இங்கே பட்டன் அமுக்கினால் சிகப்பு விளக்கு எரிந்**தால்** தான் செய்தி வெளியாகிறது ; மைக் வேலை செய் கிறது ; '' டேப் '' பேச்சு பதிவாகிறது. இந்த நாட்டின் தலை யெழுத்தை நிர்ணயிக்கிற சட்டங்களை உருவாக்குகிற இந்த சட்ட மன்றத்திலே சில உணர்வுகளை எடுத்துச் சொல்வது மிக முக்கிய மானதாக இருக்கிறது. தமிழக சட்டமன்றம் தனித் தன்மை யுடையதாக இருக்கிறது. ஆனாலும் கூட சில சமயங்களிலே நாடு தழுவிய ஒரு நிகழ்ச்சியாகக் கூடிய கூச்சல், குழப்பம், கலாட்டா என்று வந்தாலும் கூட தமிழகத்திற்கே உரிய கண்ணி யத்தோடு திருத்தி பார்க்கக்கூடிய வகையிலே இந்தப் பேரவை இறுதியிலே இப்படிப்பட்ட ஒரு முடிவிற்கு வருவது உண்மையி யிலேயே பாராட்டுதற்குரியது.

இங்கே ஜே.எஸ்.இராசு அவர்கள் அவசரச் சட்டத்தைப்பற்றி சொன்னார்கள். நாட்டிலே யாரும், எந்த அரசும் தன்னிச்சை யாக அவசரச் சட்டத்தைப் போட்டுவிடுவதில்லை. ஆக்ஷனுக்கு, ரீ–ஆக்ஷன் நாட்டிலே என்ன சொல்லப்படுகிறதோ, என்ன எண்ணங்கள், விபரீதங்கள் வருகிறதோ அதை கண்காணிக்கக் கூடிய வகையிலே, மக்களை பாதுகாக்கக்கூடிய வகை யிலே வரக்கூடிய சட்டங்கள் தான் அவசரச் சட்டங்கள் என்று வெளிவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, சம்பளத்தைப்பற்றியும், பயணப்படியைப் பற்றியும் வேலை படியைப்பற்றியும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது போன்ற நிலையிலே சம்பளம், வேலைப்படி, பயணப்படி இவை களுக்கெல்லாம் உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும். அப்போது தான் ஒரு அரசு அலுவலர் என்று சொன்னால் அவர்களுக்கு எந்த வகையிலே, அந்த துறையிலே எத்தனை சதவீதம் ஒதுக்கவேண்டும் என்னென்ன வழங்கவேண்டும் என்பது வரையறுக்கப்பட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் அர்த்தாலும், போராட்டமும் இப்படி ஆண்டுதோறும் நடந்துகொண்டே இருக்கும். இதற்கு முடிவு கட்டக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா ஒரு தரித்திர நாராயணன் நாடு என்று சொன்னார் மகாத்மா காந்தி அவர்கள். இன்றைய தினம் இதை மாற்றி யமைக்கக்கூடிய அளவிலே தமிழகத்திலே பல்வேறு திட்டங்கள், நாம் கொண்டு வந்திருக்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்களிலே நிச்சயமாக அமைச்சர் ஒருவர் கலந்துகொள் வேண்டுமென்று நிலை ஏற்பட வேண்டும். ஊராட்சிகள் மேலும் மேலும் பேரூராட்சிகளாக மாறக்கூடிய தகுதியுள்ளவைகளை பேரூராட்சியாக மாற்ற வேண்டும். காலப் போக்கில் ஊராட்சிகள் இல்லை, சிறு நகரம், பெரிய நகரம் என்று சொல்வதற்



[டாக்டர் கே. சமரசம்]
1982 மார்ச் 29]

எல்லா நடவடிக்கைகளும்
கேற்ப இப்போது எடுத்திருக்கிற
கைகொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிற காரணத்தால் இதனை
முன் நின்று கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இருக்கிற
அதுமட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியங்களிலே
கல்வி, விவசாயம், தொழில், குடிதண்ணீர், பேரூராட்சி அத்
தனையும் பிரிந்துவிட்டது. தண்ணிறைவுத் திட்டம் முடிந்தால்
ஒன்றியத்திற்கு மிகப் பெரிய வேலை இல்லை என்ற நிலைவரும்.
ஆகவே, ஈ.ஓ.பி, ஈ.ஓ.சி., ஈ.ஓ ஐ. போன்ற எக்ஸ்டன்ஷன் ஆபீ
சர்கள் தேவைதானா என்பதும், அவர்களுக்கு வேறு பணிகளை
நிர்ணயிக்கிற வகையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு
இருக்கிற நிலைமைகளை அனுசரித்து ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒய்வூதியம் என்று வழங்குபவர்களுக்கு 200 ரூபாய் வருடத்
திற்கு மருத்துவத் தொகையாக கொடுக்கிறோம். நாம் கொடுக்
கக்கூடிய மருத்துவ சான்றிதழ்கள், பல்வேறு அதிகாரிகளிடத்
திலேயிருந்து சான்றிதழ்கள் பெற்றால் தான் கொடுக்கக்கூடிய
நிலை இருக்கிறது. இதற்காக 50 ரூபாய் செலவழிக்கிற நிலைமை
இருக்கிறது. அவர்களுக்கு அரசே நேரிடையாக கொடுக்கிற
நிலையையும், சான்றிதழ் தேவையில்லையென்கிற நிலையையும்
கொண்டுவரவேண்டும். அங்கேயிருக்கிற கிராம அதிகாரி,
ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார்....................
(மணியடிக்கப்பெற்றது) ஆகியோர்களின் சான்றிதழ் பெறாம
லேயே கொடுக்கலாம். அரசுக்கு நட்டமில்லை. பெறுபவர்
களுக்கும் நஷ்டமும்—கஷ்டமும் குறையும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமை
யிடப் பணியாளர்கள் ஆகிய கோரிக்கைகளின் மீது என்னுடைய
கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட வளர்ச்சிமன்ற கூட்டங்
கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு
முறை கூடுவது என்று சொன்னாலும் சரியாக கூடுவதில்லை. அப்படி
கூட்டப்பட்டாலும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு
மாவட்ட ஆட்சித் தலைவர் தான் தலைமையேற்பதாக இருக்
கிறது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற
உறுப்பினர்கள் அங்கே இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்
திலும் 20 உறுப்பினர்கள் இருந்தால் ஒவ்வொரு வளர்ச்சி மன்றக்
கூட்டத்திற்கும் மாறி மாறி தலைமை பொறுப்பு ஏற்பதற்கு
வழி வகுக்கிற அளவில் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 12–20)

அதேபோல் தன்னிறைவுத் திட்டம் வருகிறது. சட்டமன்ற
உறுப்பினர்கள் இருக்கிறோம். எங்களையும் அழைத்து வைத்து,
அந்தத் தன்னிறைவுத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை
எடுத்தால்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கெங்கே எல்லாம்
சாலைப் போக்குவரத்து, குடிதண்ணீர் தேவை என்ற ஆலோ
சனையைச் சொல்ல முடியும். அதிலும் அரசாங்கம் எதிர்காலத்
தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் பியூன்கள் நியமிக்
கின்றோம். சட்டமன்ற ஆஸ்டலில் பெண்களைத் துப்புரவுப்
பணியாளர்களாக நியமிக்கிறார்கள். அடுத்த மாதம் 8 ஆம்
தேதிகூட்டத் தொடர் முடிந்தால் அவர்களும் வீட்டுக்குச் செல்
வார்கள். மாற்று வேலை கிடையாது. கூலியோ, தினக்கூலி
ரூ. 4. பியூனுக்கு ரூ. 11 கொடுப்பதாகச் சொல்கிறார்கள்.
நான் வேண்டிக்கொள்வது, இதை நம்பி வாழக்கூடிய அந்தத்
தொழிலாளர்களுக்குச் சட்டமன்றக் கூட்டம் முடிந்துவிட்டால்
மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி
இருக்கிறது. அங்கு உறுப்பினர் அறைகளுக்கு 'ஃபோன்'
கிடையாது. பொதுவான ஃபோன் இருக்கிறது. பெல் அடித்துக்
கொண்டே இருக்கிறது. யார் எடுப்பது என்று தெரியவில்லை.
ஆகவே, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அறைகளுக்கு
ஃபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல், 1947 ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட
சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பென்ஷன் வழங்க இருப்பது
வரவேற்கத் தக்கதாகும். அதே நேரத்தில், சுதந்திரப் போராட்
டத்தில் ஈடுபட்டு, தியாகிப் பென்ஷன் வாங்கிக் கொண்டிருப்ப
வர்கள், அந்தப் பென்ஷன் தொகையில் ரூ. 250-ஐ விட அதிக
மாக வாங்கிவிட்டால், இந்தப் பென்ஷன் அவர்களுக்கு நிறுத்தப்
படுகிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்றதற்காகத் தன்னை
அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு தியாகிப் பென்ஷன் கொடுக்
கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு இந்தப் பென்ஷனை நிறுத்
தக்கூடாது. அவர்களுக்கும் இந்தப் பென்ஷனை அளிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பொது நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள்
கலந்து கொள்ள வேண்டுமென்று தொடர்ச்சியாக அமைச்சர்கள்
சொல்லி வருகிறார்கள். நான் தெரிவித்துக்கொள்வது, அரியலூர்
மாவட்டத்தில் நேற்று மத்திய கூட்டுறவு வங்கி நிகழ்ச்சி நடந்தது
எம்.எல்.ஏ.-க்கள், எம்.எல்.சி.-க்கள் என்று பெயர் போட்
டிருக்கிறார்கள். ஆனால், அங்கே இருக்கிற எம்.எல்.ஏ. பெயர்
விட்டப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில், அப்படி பெயர்விடாத
நிலையை ஏற்படுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

சமூக நலத்துறை என்பது முக்கியமான மானியக் கோரிக்கை.
அதே போல், கைத்தறித் துறையும் முக்கியமான மானிய
கோரிக்கை. ஆனால் அதற்கெல்லாம் ஒதுக்குகின்ற நேரம் 2
மணி நேரம்தான். நான் கேட்டுக் கொள்வது முக்கியமான
மானிய கோரிக்கைகள் வருகின்றபோது, அதுகயான சட்ட
மன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளிக்கும்
வகையில், 1 நாள் ஒதுக்க வேண்டும், 2– மணி நேரம் போதாது.
5 நிமிஷம், 6 நிமிஷம் பேசினாலே, பேரவைத் தலைவர் மணி
அடித்து விடுகிறார், காலம் குறைவாக இருக்கிறது என்று சொல்லி
ஆகவே, அப்படிப்பட்ட மானியக் கோரிக்கைகளுக்கு அதிக
நேரம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இந்தச் சட்டமன்றம்
மாதிரி அதிக நாள் நடந்த சட்டமன்றம் இந்தியாவிலே கிடை
யாது...

**திரு. பொ. உத்திராபதி**: இன்னும் அதிக நாள் நடத்த
வேண்டும். ஒவ்வொரு மானியக் கோரிக்கைக்கும் ஒவ்வொரு
நாள் கொடுத்து, ஒரு வருடத்திற்கு 4 முறையாவது சட்ட
மன்றம் கூட வேண்டும். பட்ஜெட் கூட்டத் தொடர் 40 நாள்
நடக்கிறது. அது போதாது. 3 மாதத்திற்கு ஒருமுறை சட்ட
மன்றம் கூடினால்தான் இடையில் வரக்கூடிய நிகழ்ச்சிகள்பற்றி
சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்து சொல்லவும், அமைச்சர்கள்
பதில் சொல்லவும் நல்ல திட்டங்களை உருவாக்கவும் தமிழகத்
தில் எதிர்காலத்தில் வாய்ப்பிருக்கும். ஆகவே, குறைந்தபட்சம்
100 நாட்கள் வருடத்திற்கு 4 முறை சட்டமன்றம் கூட அரசாங்
கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு கோ. விஸ்வநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கையின்மீது ஒருசில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் அவைக்குவந்து
விட்டமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இந்தப் பேரவையிலே நடைபெறும் விவாதங்கள்
முக்கியத்துவம் பெற வேண்டுமென்ற என் கோரிக்கையை முதலா

வதாக வைக்க விரும்புகிறேன். அப்படி விவாதம் முக்கியத்துவம் பெறவேண்டுமென்றால் உறுப்பினர்கள், அவைத் தலைவர், அமைச்சர்கள் அனைவருமே ஒத்துழைப்பு தந்தாக வேண்டும். நான் அதற்கு ஒரு உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் தொடங்கியபொழுது அவையிலே அவைத் தலைவர் கிடையாது; நிதியமைச்சர் கிடையாது; எதிர்க்கட்சித் தலைவர் கிடையாது; எந்தக் கட்சித் தலைவர்களும் கிடையாது. முதலில் அருமை நண்பர் திரு. சோமு அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு நான் பேசினேன்; பிறகு மற்ற உறுப்பினர்கள் பேசினார்கள். கடைசியிலே நான் தெரிந்து கொண்டது, அலுவல் ஆய்வுக் குழு நடந்ததாகச் சொன்னார்கள். அலுவல் ஆய்வுக் குழு முக்கியம்தான். ஆனால் பொது விவாதத்தைவிட அது முக்கியம் அல்ல. அப்படி அலுவல் ஆய்வுக் குழு முக்கியமாக இருந்தால் அவையை ஒத்தி வைத்துவிட்டு அலுவல் ஆய்வுக் குழுவை நடத்தலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நடைபெறும் விவாதங்கள் பொருள் பொதிந்தவைகளாக இருக்கவேண்டுமானால் ஒரு வாரம் முன்கூட்டியே என்னென்ன விவாதம் நடைபெறும் என்பதை அவைத் தலைவர் அறிவித்துவிட்டு, அந்தக் கட்சிகளினுடைய தலைவர்களோ அல்லது முக்கியஸ்தர்களோ அந்த உறுப்பினர்களிடத்தில் நீங்கள் தான் பேச வேண்டுமென்று தெரிவித்துவிட்டால் இன்றைக்கு நடைபெறும் விவாதத்தைவிட எதிர்காலத்தில் விவாதம் பொருள் பொதிந்தவைகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு பிரச்னையை எல்லோரும் குறிப்பிட்டார்கள். ஐந்து நிமிடங்களுக்குள் பேசிமுடிக்க வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. கல்லூரி விவாத மேடையிலேகூட ஐந்து நிமிடங்கள் கழித்து முதல் மணி அடித்து, ஏழாவது நிமிடத்திலே கடைசி மணி அடிப்பார்கள். அந்தக் காலேஜ் டிபேட்டைவிட நேரம் குறைவாகத் தரப்படுகிறது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்றால் நம்முடைய நிதியமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'வோட் ஆன் அக்கவுண்ட்' எடுத்துவிட்டால் 29 ஆம் தேதியே எல்லாவற்றையும் முடித்து விட்டு நான் கில்லட்டின் செய்ய வேண்டுமென்ற நிலை இருக்காது. நாம் அதற்குப்பிறகு ஏப்ரல் மாதத்தில், மே மாதத்தில் பட்ஜெட்டைப் பாஸ் செய்துகொள்ள முடியும். எனவே இந்த ஆண்டு இதை முடித்துவிட்டு அடுத்த ஆண்டு முதல் 3 மாதம், 4 மாதங்களுக்கு 'வோட் ஆன் அக்கவுண்ட்' எடுத்துவிட்டு விவாதத்தைக் கொஞ்சம் விரிவாக நடத்தி, ஒரு நாளைக்கு ஒரு மானியக் கோரிக்கை என்று எடுத்துக்கொள்ளப்படும் விதத்தில் சபையில் நடவடிக்கைகளை அமைக்க வேண்டுமென்று அவைத் தலைவரவர்களையும், நிதியமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.



நாள்தோறும் குற்றச்சாட்டுக்களும், பதிலடிகளும் வந்து கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இருக்கின்றபொழுது அவற்றை நம்மால் தவிர்க்க முடியாதுதான். ஆனால் அது நாள்தோறும் நடைபெற வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளகிறேன். அப்படிக் குற்றச்சாட்டுக்களும், பதிலடிகளும் வரும்பொழுது அதிலே சுவையிருக்கட்டும், சூடு இருக்க வேண்டாம்; ஒளியிருக்கட்டும், வெப்பமிருக்க வேண்டாம் என்பதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் உதாரணமாகத் திகழ்ந்திருக்கிறார்கள், அவரைப் பார்த்து எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் (Your days arc numbered) என்று கேட்ட பொழுது அவர் சொன்ன பதில் (My steps are measured) என்றுதான் குறிப்பிட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறவேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

இங்கே அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டு, உண்மையான அதிகாரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அதிகார வர்க்கத்தை அடியோடு மறந்து விடுகிறோம். ஸ்பெஷல் ஆபீசர் பெயரிலேயும் மற்ற பெயர்களிலேயும் அதிகாரிகள் அதிகாரங்களைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசைப் பார்த்தால், பொதுத் துறை நிறுவனங்கள், மற்றும் மத்திய அரசாங்கத்திற்கு உட்பட்ட நிறுவனங்களுக்கெல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களையோ தலைவர்களாக நியமிக்கிறார்கள். அப்படிப்பட்ட செயல் நம்முடைய மாநிலத்திலேயும் நடைபெற வேண்டும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களை அத்தகைய நிறுவனங்களுக்குத் தலைவர்களாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாராளுமன்றத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் இங்கே செய்ய முடியாது. அது 20,000 கோடி ரூபாய் பட்ஜெட்; இங்கே 1,000 கோடி ரூபாய் பட்ஜெட்.

**திரு. கோ. விஸ்வநாதன்:** நம்முடைய உறுப்பினர்களுக்கு மத்திய சர்க்கார் பயன்படுத்திய ஜீப்புகளைக் கொடுக்கிறார்கள். அதை ஏன் மாநில அரசு பயன்படுத்தி, மூன்று நான்கு ஆண்டுகள் கழித்த பின்பு அப்படிப்பட்ட கார்களையும் ஜீப்புகளையும் வழங்கக்கூடாது? வீடு, கார் போன்றவைகள் இல்லாத உறுப்பினர்கள் அவற்றைவாங்குவதற்கு அரசாங்கம் கடன் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி Lok Sabha Secretariet is functioning most efficiently என்று சொல்லுமளவிற்கு இருக்கிறதோ அதைப்போல நம்முடைய சட்டமன்றத்துறையையும் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

1932 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதைப் பற்றி கூறியதற்குக் காரணமே மற்ற மாநிலங்களிலே எல்லாம் ஆயிரத்தோடு நிற்கிறார்கள், நாம் ஆயிரத்தை தாண்டி, இந்த அளவுக்கு இந்த ஆண்டு சென்றிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டு மல்லாமல் இது 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற ரெயில்வே கூப்பன் தொகை 2,500 ஆக கொடுக்கப்பட்டு வரு கிறது. இப்போது ரெயில்வே கட்டணத்தை உயர்த்தியிருப்பதன் காரணமாக சராசரி 14 சதவீதத்திற்குக் கட்டணத்தில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின்படி பார்ப்போமேயானால் 300 ரூபாய் கூடுதலாக வரக்கூடும். ஆக, 2,850 ரூபாய்தான் வருகிறது. ஆகவே இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரையிலான ரெயில்வே கூப்பன்களைக் கொடுக்க அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும், அதுவும் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பஸ் பாஸ் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். பெண் உறுப்பினராக இருந்தால் அவர்கள் துணையாக ஒருவரை அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றும், ஆண் உறுப்பினராக இருந்தால், அவருடைய துணைவியாரை அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றும்— இல்லாவிட்டால் அவர்கள் வேறு யாரையாவது அழைத்துக் கொண்டு போய்விட மாட்டார்கள் என்பதற்காக அல்ல—அவர் களுக்கு மட்டும் என்று தனியாக இருக்க வேண்டும் என்றும் நாம் சொன்னோம். ஏனெனில் துணைவியாரிடத்திலே மட்டும் கேட்டு, துணையவரிடத்தில் கேட்காமல் இருப்பது, பிரஸ்டீஜ் கொஸ்டின் ஆக இருக்கும் என்பதற்காக ஆக்கினோம். இப்போது பலபேர் விரும்புவதன் காரணமாக எப்படி பெண் உறுப்பினர்கள் வேறு ஒருவரை துணையாக அழைத்துக்கொண்டு செல்லலாம் என்று இருக்கிறதோ, அதே போல ஆண் உறுப்பினர்களும் துணையாக, துணைவியாரையோ அல்லது வேறு ஒரு உறுப்பின ரையோ அழைத்துக்கொண்டு செல்லலாம் என்று சொல்லுகிறேன். கூடுமானவரையில் அவர்கள் ஆண்களாகவே இருப்பார்களே யானால் நல்லது என்று கூறிக்கொள்ள முன் வருகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பலபேர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தரப்படுகிற சம்பளத்தைக் குறித்து அது மிகவும் குறைவு என்று சொன்னார்கள். ஒரு டேர்ம் என்று இருக்கும்போது, அரசாங்கம்முடிவில் கலைந்தாலும்



1982 மார்ச் 29] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

அடுத்து சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி இந்தக் குறிப்பு கள் பின்னால் அனுப்பப்படுகிறது. அதை பாராளுமன்றத்திலே இருப்பதைப்போல இந்த நிகழ்ச்சிகளை பைன்டு செய்து தர வேண்டும். அதற்கு கட்டணம் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அவைகளைப் பைன்டு செய்து எங்கள் பெயரைப் பொறித்துக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்து ஒரு முறை வந்தால் பென்சன் கொடுக்கிறார்கள். இரண்டாவது முறை வந்தால் இன்கிரிமென்ட் என்று கொடுக் கிறார்கள். அலுவலர்களுக்குக் கொடுப்பது போல இன்கிரிமென்ட் கொடுக்காமல், நண்பர் ஆறுமுகம் சொன்னதைப் போல, அவர்கள் ஒரு முறை வந்தால் ஒரு டேர்ம் என்று கணக்கிட வேண்டும். அடுத்தமுறை வந்தால் இரண்டாவது டேர்ம் என்று கணக்கிட்டு அப்போதும் அவர்களுக்குப் பென்சன் தனியாகத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுக்கு பாஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது, உடன் அழைத்துச் செல்ல துணைவியார் என்று மட்டும் இருக்கின்றது. அதை மாற்றி மத்திய அரசில் சொல்வதைப்போல எய்தர் ஸ்பௌஸ் ஆர் ரிலேடிவ்ஸ் என்று அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தில் எங்களுக்கு ஜீப் கொடுக்கவேண்டும் என்று இருக்கின்றது. அதற்காக 50 லிட்டர் பெட்ரோலும் சாங்ஷன் ஆகி இருக்கின்றது, ஆனால் நாங்கள் கேட்கும்போது ஜீப் ரிப்பேரில் இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். அடுத்த நாள் கேட்டால் டி.டி.ஓ. எடுத்துச் சென்று விட்டார் என்று சொல்கிறார்கள். இந்த முறை சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை அலவன்சாகக் கொடுங்கள், அல்லது உறுப்பினர்கள் கார் வாங்குவதற்குக் கடன் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு ஒரு கிளார்க்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று எங்களுக்கும் ஒரு கிளார்க்கு கொடுத்தால் வருகின்ற விண்ணப்பங்களை குறிப் பிட்ட நபர்களுக்கு அனுப்ப ஏதுவாக இருக்கும். உடனடியாக எங்களுக்கு கிளார்க்குகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற விடுதி அறைகள் சரிவர பராமரிக்கப் படுவதில்லை. என்னுடைய 309 எண்ணுள்ள அறை ரிப்பேர் என்று சொல்கிறார்கள். அந்த அறையின் மேலே உள்ள அறை யின் பாத்ரூமில் இருந்து கழிவு நீர் என்னுடைய அறையில் விழு கிறது. கேட்டால் 509 அறையை ரிப்பேர் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். எனவே இந்த அறைகளை நன்கு பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு நேரம் அதிகமாக ஒதுக்கப்படுகிறது. அது அவசியம் இல்லை என்று நான் சொல்லவில்லை. அதன் காரணமாக பிரதான மானியக் கோரிக்கைகள், வேறு விஷயங்கள் பற்றிப் பேசுவதற்கு அதிக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. அதை சீர் செய்ய வேண்டும்.

மேலும் நடைமுறை பிரச்னைகள் பல இருக்கின்றன. அதிலே நீண்டநேரம் விரையம் ஆகிவிடுகிறது. உறுப்பினர்கள் பல நியாயங்களை எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் இருக்க வேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு எல்லாம் சேர்த்து ஒரு நாளை ஒதுக்கிவிட்டால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

மேலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகமாக இருக்கின்றன. நீக்குவதை தவறு என்று சொல்ல வில்லை. ஆனால் அது வழக்கமாக ஏற்படுகிற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. சமீப காலத்தைப் பார்க்கும்போது உறுப்பினர்கள் சிலர் பேசுகின்ற வார்த்தைகளை நீக்குவதோடு உப தலைவர் பேசுகின்ற வார்த்தைகளைக்கூட அவர்களாலே நீக்கக்கூடிய சந் தர்ப்பம் அதிகமாக வருகிறது. அப்படிப்பட்ட வழக்கம் சரி யல்ல. அதிகமாக அவைக்குறிப்பிலிருந்து நீக்கும் முறை இருக்கக் கூடாது; '' மாஸ் எக்ஸ்பஞ்ச் '' முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக் கையை வாசிக்கும்போது அவர்கள் சில தொகைகளைத் திருத்தி வாசித்தார்கள். அப்படி திருத்த வேண்டிய அவசியம் என்ன? ஒன்று அச்சுப்பிழையாக இருக்க வேண்டும் அல்லது வேறு ஏதாவது காரணமாக இருக்க வேண்டும். அல்லது எழுதி தயாரித்த பிறகு ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற் பட்டதா என்று தெரியவில்லை. இப்படி பெரிய அளவிலே அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்போது இடையிலே இப்படிப் பட்ட மாற்றங்கள் ஏற்படுவதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர்களுக்கு உறுப்பினர்கள் ஏதா வது கடிதம் எழுதினால் அதற்கு விரைவாக பதில் எழுத வேண் டும். இப்பொழுது மிகவும் தாமதமாகத்தான் பதில் வருகிறது. நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எழுதிய ஒரு கடிதத்திற்கு இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பதில் வந்திருக்கிறது. நான் எழுதிய கடிதத் திற்கு அப்படி ஒன்றும் பெரிய அளவில் விவரம் சேகரித்து பதில் அனுப்பக்கூடிய ஒன்று இல்லை. அதற்குக் கூட 379 நாட்கள். அதாவது ஓராண்டும் 14 நாட்களும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இந்த அரசில் இருந்தால் மற்ற கடிதங்களுக்கு எப்படி



என்று அப்படி இருந்தும்கூட, ஒரே நாள், பஸ்ஸிலே என்னுடைய மகனைக் கொண்டு போனேன். அதற்குக்கூட அலொவ் பண்ண வில்லை. இந்தப் பஸ் பாஸை பாகுபாடு இல்லாமல், அல்லது உதவியாளர்கள், அல்லது வீட்டிலே இருப்பவர்கள் ஒருவர் என்ற அடிப்படையிலே, அதை மாற்றிக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே நாம் புத்தகம் எடுக்கப்போகிறோம். நம்முடைய லைப்ரரி நன்றாக இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய பணியாளர் களெல்லாம் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட அங்கே ஒரே தூசி மயமாக அந்த லைப்ரரி, அந்தச் சுவர் பக்கத்திலே இருந்து வரக்கூடிய தூசு வெளியேற முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, ஒரு வேக்குவம், கிளியரன்ஸ், அதை வைத்து கொடுத்துவிடுவோமானால், அந்தத் தூசியை எடுத்துக் கொள்ளும். பிறகு புத்தகத்தை எடுத்துப் படிப் பதற்கு வசதியாக இருக்கும்.

அதேமாதிரி, தியாகிகளுக்கு பென்ஷன். இன்றைக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு 50 அல்லது 60 பேர்கள்தான் எம்.எல்.ஏ -க்கள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் தியாகிப் பென்ஷன் வாங்கினாலும் கூட, அவர்களுக்கு இந்த சட்டமன்ற பென்ஷனை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது சட்ட மன்றத்திலே இருந்து வரக்கூடிய இந்த சட்டமன்ற நடவடிக்கை கள், அது எங்களுக்கு, ஒருமுறை 12 புத்தகங்கள் வந்தது., இன்னொரு முறை, 6 புத்தகம் வந்தது. இன்னொருமுறை எம்.எல்.சி-க்குகளுக்கு போவது எங்களுக்கு வந்தது. ஆகை யினால், இந்த புத்தகங்களை அன்றாடம் நடவடிக்கைகளை ஒழுங் காக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்து சேரக்கூடிய அளவிலே, செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, இன்று ஆளுநர் அமைச்சரவர் கள், தலைமைச் செயலகம், பற்றிய மானியக் கோரிக்கை, சட்ட மன்ற, மேலவை பற்றிய மானியக் கோரிக்கை முக்கியமாக வைக்க பட்டுள்ளது. சட்டமன்ற மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களது கருத்துக்களை எடுத்துச் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே இன்னும் பல கருத் துக்களைச் சொல்லவேண்டும் என்ற பேராவல் பேரவை உறுப் பினர்களுக்கு பல பேருக்கு இருந்தாலும் கூட, நாளை நிதி ஒதுக்கீடு மசோதா இருப்பதன் காரணமாக அதிலேயும் விவாதிப் பதற்கு இடம் இருப்பதன் காரணமாக விடப்பட்டு, சில கருத்துக் களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்ற காரணத் தால், அவர்கள் சொல்ல வழி இல்லாத அளவிற்கு பலருக்கு வாய்ப்பு அளிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இங்கே பல் வேறு கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டி

காட்டியிருக்கிறார்கள். எல்லோரும் எடுத்துச் சொன்ன
திலே இந்த மன்றத்தினுடைய மரபு காப்பற்றப்பட, இந்த
மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய மரியாதை காய்
பற்றப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.
''நீரளவேயாகுமாம் நீராம்பல் என்பதற்கிணங்க இந்த மன்றத்
தினுடைய தரத்தை எவ்வளவுக்கெவ்வளவு, நாம் உயர்த்து
கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு, விதை நாடும் உயர்வாகக் கரு
தும் என்பதற்கிணங்க ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற
வள்ளுவப் பெருந்தகையினுடைய கருத்தின் அடிப்படையிலே,
நாம் அனைவரும் பணியாற்றுகின்ற ஒரு பாங்கினையும், மரபினை
யும், மேற்கொள்ளுவோமானால், இடையே சிறு சிறு சஞ்சலங்
களும், சிறுசிறு குறைபாடுகளும் ஏற்பட முடியாது. நாம்தான்
நாட்டுமக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். ஆகவே,
இந்த மன்றத்தை நடத்திச் செல்வதோடு அல்ல, மன்றத்திலே
நடைபெறுகின்ற பொறுப்புகளையும் பொறுத்தோ, அல்லது
அரசைப் பொறுத்தோ அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு
மட்டும் அல்ல, அமைச்சர்களுக்கும் மட்டுமோ கூட அல்ல, இன்
றைக்கு இருக்கிற சட்டதிட்டங்களுடைய அடிப்படையிலே 235
உறுப்பினர்களுக்கும் இந்த ப் பொறுப்பிலே அமர்ந்து இருக்கக்
கூடிய அத்தனை உறுப்பினர்களுக்குக் பொறுப்புண்டு.

The ruling party has its way, the opposition party has its say.
என்றுதான் ஜனநாயக மரபிலே, எடுத்துச் சொல்வார்கள்.
''இடிப்பாரை இல்லா எமரா மன்னன், கெடுப்பாரிலானும் கெடும்'
என்பதற்கிணங்க, இருக்கின்ற குறைபாடுகளை குற்றங்களை
சுட்டிக் காட்டுவதற்காகவே, பக்கத்திலே இடித்துரைக்கிற ஒரு
வரை கட்டாயம் வைத்தே தீரவேண்டும், அப்படி ஒருவரையும்
வைத்துக் கொள்ளாத ஒரு நாட்டை ஆளுபவன் இருப்பானே
யானால், அந்த நாட்டை அழிக்க அப்படிப்பட்ட ஒரு நிலைமை
இல்லாது இருப்பதை போதுமான சான்றாக அமைந்துவிடும்
என்று வள்ளுவன் பெருந்தகை கூறியதற்கிணங்க, எதிர்க்கட்சி
அத்தகைய கடமைகளைச் செய்ய, ஆளும் கட்சிக்கு பல வகை
களிலே உறுதுணையாக அமைந்திருக்கிறது என்பதை நான் பல
தடவைகளில் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

(முற்பகல் 12.40)

ஆகவே நாங்கள் அறியாமல் இருக்கிற, எங்களுடைய கவன
திற்குக் கொண்டுவராமல் இருக்கிற, நடவடிக்கை எடுக்கக்கூடிய
பல்வேறு பிரச்சனைகளை எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற உறுப்
பினர்கள் மூலமாகத்தான் கொண்டுவர முடியும். அதன்பேரில்
தான் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க முடியும்; அதிகாரிகள்
தக்க நடவடிக்கை எடுக்க இவை எல்லாம் தூண்டுகோலாக அமை
யும். அந்த வகையிலேதான் நாம் கருத்து வேறுபாடு கொள்ள
லாம். கருத்து மாறுபாடு கொள்வதிலே தவறு இல்லை.



ஆனால் மாறுபாடு கொள்ளுகின்ற முறைதான் ஜனநாயகத்திற்கு
மிக மிக ஏற்றதாக இருக்க வேண்டும். அவரவர்களுடைய கருத்
திற்கு ஏற்றபடி வாதங்களை எடுத்து வைக்கவும் அந்த வாதங்
களுக்கு ஆதாரங்களை எடுத்து வைக்கவும் உண்மையை நிலை
நாட்டவும். தன்னுடைய கருத்திற்கு வலு தேடவும் விவாதங்கள்
இருக்க வேண்டுமே தவிர, விவாதத்தினுடைய தன்மைகள் மாறி
தனிப்பட்ட முறையிலே போய்விடுவதில்தான் நிலைமைகள் ஓரள
விற்கு தாழ்ந்து தன்மைக்குப் போய்விடுகின்றன. ஆகையால் தனிப்
பட்ட முறையிலே, யார் எந்தப் பக்கம் இருந்தாலும், குற்றஞ்
சாட்டுவதன் மூலம் இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர் ஒருவ
ருடைய தரத்தினை நாம் தாழ்த்துகிறோம் என்ற உணர்வினை
மன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களு மேற்கொள்
வார்களானால் பெரும் தலைவர்கள் பலரும் கொண்ட கருத்துக்
கள் அடிப்படையிலே இந்த மாமன்றத்தை மிகச் சிறப்பாக நடத்
திச் செல்லலாம். அந்த அளவுக்கு உருவாகி, சிலபல நேரங்
களில் பிறந்தாலும் அந்த பண்பு கெடாத அளவுக்கு மறுபடியும்
அந்த ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டுமென்ற உணர்வின் அடிப்
படையில் மன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்
புத் தந்து வருவதற்காக என்னுடைய நன்றியை இந்த வாய்ப்பிலே
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் வெளியிலே
மரியாதை ஏற்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள்
குறிப்பிட்டார்கள். திரைப்பட உலகத்திலே உறுப்பினர்களுடைய
தரங்கள் பற்றி குறைத்து கூறப்படுவதைப் பற்றி நம்முடைய
கோவைத் தம்பி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய
நாட்டிலே எழுத உரிமை, எண்ண உரிமை, சிந்திக்க உரிமை,
வழிபட உரிமை, அந்தக் கருத்தை எடுத்துச் சொல்ல உரிமை
வழங்கப்பட்டிருப்பதன் அடிப்படையிலே பலரும் எடுத்துச் சொல்
கிறார்கள். ஆனால் அப்படி எழுதுகிறபோது, உறுப்பினர் என்று
வருகிறபோது சிலபலரை இழிவுப்படுத்த வேண்டுமென்றே இப்படி
நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக அதை
எந்த அளவுக்கு தடுத்து நிறுத்த வேண்டும், எந்த அளவுக்கு அதை
சென்சார் செய்ய முடியும் என்பதை எல்லாம் நாம் ஆராய்ந்து
தடுக்க வேண்டும். ஆனால் ஒன்று, இப்படிப்பட்ட குற்றச்
சாட்டுகளுக்கு இடமே இல்லை என்று நாட்டு மக்கள் உணரத்தக்க
அளவுக்கு இந்த மாமன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்
களும் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதற்கு மாற்றுவழி என்னவென்றால் சட்டமன்ற உறுப்பினர்
களால் இன்னின்ன நன்மைகள் ஏற்படுகின்றன; அவர்கள் இன்
னின்ன வகையிலே உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள், இன்னின்ன
தியாகங்களை செய்கிறார்கள் என்பதை விளக்கும் திரைப்படங்
களை மாண்புமிகு கோவைத் தம்பி போன்றவர்கள் ஒரு பக்கம்
எடுத்துக்கொண்டு வரவேண்டும். அப்படி இன்னொரு பக்கம்

வருமானால் அந்த கருத்துக்குக் கருத்து என்ற முறையிலே அது
அமையும், சட்டத்தினுடைய அடிப்படையில் எதையாவது தடுத்து
நிறுத்த முடியும் என்றால், அரசு அதற்கான பெரும் முயற்சியை
எடுத்துக்கொள்ளும் என்றாலும் கூட ஆதாரம் இல்லாமல் சொல்
லக்கூடிய எதுவும் நிலைத்து நிற்கும் என்று நாம் நினைக்க வேண்
டாம். ''ஆதாரம் இல்லாமல் வீசி எறியப்படுபவை எல்லாம்
வீழ்ந்தே தீரும்; ஆதாரத்தோடு நிற்பவைதான் நிமிர்ந்து
நிற்கும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.
எல்லோரும் ஒன்றாக இருந்த காலத்தில் திராவிட முன்னேற்றக்
கழகம் இருந்த காலத்தில் கூட பல்வேறு குற்றச்சாட்டுகளை
சினிமா, நாடகங்கள் மூலமாக தூற்றிய காலத்திலேயும் கூட
இப்படிப்பட்ட கேலி, கிண்டல்களை நாடு ஏற்றுக் கொண்டதா
என்றால் இல்லை. அதற்கு மாறாகத்தான் சட்டமன்ற உறுப்
பினர்களை இந்த அவைக்கு அனுப்பி வைத்தது.

அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலும் கூட.
நாடகத்தின் மூலம், சினிமா மூலம் பலர் பல்வேறு கேலிகள்,
கிண்டல்கள் எல்லாம் எடுத்து வைத்தும்கூட அதைப்பார்த்த மக்கள்
அப்படியே ஏற்றுக்கொண்டார்களா என்றால் இல்லை. ஆகவே,
கேலி பேசுபவைகளை எல்லாம் நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்வார்
கள் என்ற முடிவுக்கு நாம் வந்துவிட வேண்டிய அவசியமில்லை.
அதற்கு ஆதாரம், நியாயம் இருந்தால்தான் ஏற்றுக்கொள்வார்
கள். இல்லாவிட்டால் அது சிரிப்புக்காக தரப்படுகிற ஒன்றே
தவிர, அதை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதற்கு
நம்முடைய நாட்டினுடைய 10, 15 ஆண்டுக்கால அரசியல் வர
லாறு மிகச் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறது. இருந்தாலும் கூட
சட்டமன்ற உறுப்பினர்களுடைய தரம் உயர்வதற்கு, சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு அளிக்கின்ற மரியாதைகள் எந்த வகையிலே
உயர்த்தப்பட வேண்டும் என்பதிலே நாம் கவனம் செலுத்தி வரு
கிறோம்.

அது மட்டுமல்ல, சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி
எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கே எடுத்துச் சொல்லு
கிறபோது வினா-விடை நேரத்தை நீக்கக்கூடாது என்று சொன்
னார்கள். கூடியவரையில் நாம் அதை நீக்கக்கூடாது என்றுதான்
இருக்கிறோம். வினாவுக்கு விடை எல்லாம் தயாரித்து, அதை
எடுத்துச் சொல்லாமல் போனால் அது எங்களுக்கும் நஷ்டம்தான்.
இந்த நாட்டு மக்களுக்குத் தர வேண்டிய சில உண்மை விவரங்
கள், சில புள்ளிவிவரங்கள் கூட தெரிவிக்கப்பட முடியாமல் போய்
விடுகின்றன. வினா-விடை நேரம் எடுத்துக் கொள்ளப்படா
விட்டால், அதனால் எதிர்பாராத சிலபல சந்தர்ப்பங்கள் ஏற்படு
கின்றன. அதையும் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான முயற்சிகளை
அனைத்துக் கட்சிகளுடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலே
மேற்கொள்ள அரசு முயலும் என்று கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.



சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, நாம்
நேரத்தைப் பொன்னாகக் கருதி, அதை வீணாகச் செலவழிக்காத
அளவுக்கு, முறைப்படி செலவழிப்பதற்கு எல்லா உறுப்பினர்களும்
ஒத்துழைப்புத் தருவார்களானால் மாண்புமிகு தலைவர் அவர்
கள் அதற்கான வழிவகைகளைக் காண்பதிலே நாட்டம் செலுத்து
கின்ற முறையிலே பல பணிகளை ஆற்றக் கூடும்.

சட்டமன்றம், சட்டமன்ற விடுதிகளைப் பற்றி எல்லாம்
எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி விரிவாக எடுத்துச்
சொல்ல இப்போது நேரம் இல்லை. இருந்தாலும்
சட்டமன்றத்திலே இருக்கும் வசதி வாய்ப்புகள் மிகமிகக்
குறைவு என்பதை உணர்ந்து, இதற்காக எவ்வளவு
செலவானாலும் கூட ஒரு தனிக் கட்டிடம்—எல்லாவிதமான
வசதி வாய்ப்புகளோடு—கட்டுவதற்கான செயற்குறிப்பு
வைத்து இருக்கிறோம். மேலவை, பேரவை உறுப்பினர்கள்
கலந்துரையாடுவதற்கு ஏற்ற வகையில், இரு சாராரும் கலந்து
உட்கார்ந்து பேசுவதற்கு ஏற்ற வகையில்—ஆளும் கட்சி உறுப்
பினர், எதிர்க்கட்சி உறுப்பினர் உட்கார்ந்து பேசுவதற்கு ஏற்ற
வகையில்—இந்தச் சட்டமன்றத்திலே இடம் இல்லை. அப்படிப்
பட்ட வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தவும், இந்த அலுவலகங்கள்
எல்லாம் சிறப்பாக நடைபெறுவதற்கும், மாண்புமிகு
உறுப்பினர்கள் அமரவும், சட்ட மன்றத்தை ஒட்டிய இடங்களில்
கட்சிகளுக்கு இடம் அளிக்கவும், அந்தந்தக் கட்சித் தலைவர்கள்
அங்கே அமர்ந்து அவர்களுக்கு முக்கியமானவர்களை, பொது
மக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், இந்தக்
கூறுபாடுகளையெல்லாம் முடிந்த அளவிற்குப் புதிய கட்டிடத்தில்
அமைக்கவேண்டும் என்ற முறையில் செயற்குறிப்பு வைத்து
இருக்கிறோம்.

அதற்கான இடத்தைக் கோட்டைக்குள்ளேயே தேர்ந்தெடுக்க
வேண்டும் என்று எதிர்பார்த்தோம். அதிலே சிலபல இடர்ப்பாடு
கள் வருகின்றன. நாம் $4\frac{1}{2}$ ஏக்கர் நிலப்பரப்பைக் காட்டினோம்.
அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. $2\frac{1}{2}$ ஏக்கர் நிலப்
பரப்பைக் காட்டினார்கள். ஆனால் அதிலே சிலபல சங்கடங்
களைச் சொல்கிறார்கள். அங்கேயுள்ள மியூசியம் பழைய கட்டி
டம்; அதை இடிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். மற்ற
வற்றை இடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள்.
அதோடு, அந்த இடத்தை எடுத்துக்கொண்டால் மாற்று இடம்
தாருங்கள் என்று கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல, வேறு இடத்தில்
5 ஏக்கர் கொடுங்கள், 10 ஏக்கர் கொடுங்கள் என்று கேட்கிறார்
கள். எதிரே இருக்கிற இடத்தையும் எங்களுக்குத் தாருங்கள்என்று
கேட்கிறார்கள். எதிரே இருக்கும் இடத்தை நாமேஎடுத்துக்கொண்
டால் எவ்வித சங்கடமும் இல்லாமல் புதிய கட்டிடம் கட்டிவிட
லாமே என்று நாமே யோசித்துக்கொண்டு இருக்கிறோம். இதற்
காக நியமிக்கப்பட்ட குழுவும் அந்த இடத்தை எடுத்துக்கொண்டு
அவர்களுக்கு 5 ஏக்கர் நிலத்தை, எதிரிலே இருக்கும் இடத்தை

மாற்றாகத் தருவதை விட, நாமே அந்த இடத்தில் கட்டலாம் என்று யோசித்துக் கொண்டு இருக்கிறது. விரைவிலே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து புதிய கட்டிடம் கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோருக்கு இந்தச் சங்கடங்கள் எல்லாம் ஏற்படாமல் இருப்பதற்கு டெல்லியில் இருப்பதைப் போல ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வீடு என்ற அளவிற்கு—ஒரு பிளாக்கில் 6 வீடுகள் என்று அமைத்து-கட்டித் தருவதற்கு உத்தேசித்துள்ளது. சட்டமன்ற உறுப்பினராக ஒருவர் வருவாரானால் அவர்கள் அந்தப் பதவியில் இருக்கும் காலம் வரையில் அந்த வீட்டில் இருக்கலாம். இந்த மாதிரியான ஏற்பாட்டைச் செய்தால் பல சங்கடங்களைத் தீர்க்கலாம் என்ற வகையில் நாம் செயற்குறிப்புகளை வைத்து இருக்கிறோம். அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தபிறகு இந்த வசதிகள் செய்து தரப்படும். விரைவில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் அதைச் செய்ய முடியும் என்று கருதுகிறேன். ஆனால் இடைக்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன இடர்ப்பாடுகளை நீக்குகின்ற அடிப்படையில், தொலைபேசியில் ஏற்படும் கஷ்டங்களை ஓரளவிற்கு நீக்கிக்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னாலும் அதிலே மேலும் சிலபல இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றை எல்லாம் நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பொது விவாதத்தின் போதும் சரி, நிதிநிலை
அறிக்கையை ஒட்டிய பல்வேறு மானியக் கோரிக்கைகள்
மீதான விவாதத்தின் போதும் சரி, மாண்புமிகு
உறுப்பினர்கள் அகவிலைப்படி அளிக்கவேண்டியது பற்றி
குறிப்பிட்டுக் காட்டினார்கள். இப்போதும் மாண்புமிகு
உறுப்பினர் ரமணி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மற்றவர்
களும் எடுத்துக் காட்டினார்கள். மத்திய அரசு அண்மையில்
4 தவணை அகவிலைப்படி உயர்வு அறிவித்து இருக்கிறது. அந்த
அறிவிப்பைத் தருகின்ற நேரத்தில், நிதிநிலை நெருக்கடி காரண
மாக இந்த பிப்ரவரி 1982 வரையிலான நிலுவைத் தொகையை
பொது சேமநல நிதியில் சேர்ப்பது என்று மத்திய அரசு முடிவு
செய்து அதை அறிவித்தது. 1982 மார்ச்சு முதல் ரொக்கமாக
மத்திய அரசு ஊழியர்களுக்கு அது வழங்கப்படும் என்று
அறிவித்தது. சேமநல நிதியில் சேர்க்கப்பட்ட நிதிக்கு 1982-ஆம்
ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல்தான் வட்டி வழங்கப்
படும் என்றும், 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி
வரையில் மேற்படி தொகையில் இருந்தும் முன்பணம் எதுவும்
கொடுக்கப்படமாட்டாது என்றும் அறிவித்து, அந்த 4 தவணை
களை மத்திய அரசு அண்மையில் அறிவித்தது. ஆகவே நாமும்
நம்முடைய நிதி நிலைமையை ஆராய்ந்து பார்த்து, அந்த



முறையைக் கடைப்பிடிக்கலாமா என்று சிந்தித்தோம். என்றாலும் கூட அந்த முறை மாநில அரசு ஊழியர்களுக்கு மனச் சோர்வை அளிக்கக்கூடும் என்பது மட்டுமல்லாமல் அவர்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காமல் போகும் என்ற காரணத்தால், அதை ஆராய்ந்து பார்த்து, நிதி நெருக்கடியை நாம் ஓரளவிற்குந் தாங்கிக் கொள்ளக் கூடிய நிலைமையேற்பட்டாலும் மாநில அரசு கடைப்பிடித்து வரும் நிலைமைக்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு அந்த 4 தவணை அகவிலைப்படி அளிக்க அரசு முன்வந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1—12—1981 முதல் முதல் தவணை அகவிலைப்படி அளிக்கப்படும்.

1—2—1982 முதல் இரண்டாவது தவணை அகவிலைப்படி அளிக்கப்படும்.

1—3—1982 முதல் மூன்றாவது தவணை அகவிலைப்படி அளிக்கப்படும்.

1—5—1982 முதல் நான்காவது தவணை அகவிலைப்படி அளிக்கப்படும்.

முதல் மூன்று தவணைக்கான அகவிலைப்படி ஏப்ரல் திங்களில் ரொக்கமாக அளிப்பது என்றும் அரசு முடிவு எடுத்துள்ளது. 4-வது தவணை அகவிலைப்படி மே திங்களன்று சம்பளத்தோடு அளிக்கப்படும்.

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல்
1981 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி வரையிலான
காலத்தில் 11 தவணைகள் நாம் அகவிலைப்படி அறிவித்து இருக்
கிறோம். இப்போது வழங்கப்படும் இந்த 4 தவணைகளையும்
சேர்த்து, இதுவரையில் 15 முறை 1977 ஆம் ஆண்டில் இருந்து நாம்
அகவிலைப்படி அளித்து இருக்கிறோம். இருக்கின்ற தன்மைகளை
ஆராய்ந்து சேமநல நிதியில் அந்த நிலுவைத் தொகைகளைச்
சேர்க்காமல், ரொக்கமாகத் தருவது என்றும்—3 தவணை ஏப்ரல்
திங்களிலேயே பணமாகத் தருவது என்றும், 4வது தவணையை
மே மாதம் சம்பளத்தில் இருந்து சேர்த்துக்கொள்ளலாம் என்றும்
முடிவு செய்து இருக்கிறோம்.

(பிற்பகல் 12-50)

அதைப்போலவே உறுப்பினர்களுடைய சம்பளம், ஊதியம்,
படி இவற்றைப் பற்றி எல்லாம் கருத்துத் தெரிவித்திருக்
கிறார்கள். அதிலே சொல்லப்படுகிற பல்வேறு கணக்கினுடைய
அடிப்படையிலே பார்க்கிறபோது, நம்முடைய மாநிலத்திலே
உள்ளவர்களுக்கு இருக்கிறது என்றாலும் கூட, குறைவு என்று
நாம் எந்தக் காரணம் கொண்டும் சொல்வதற்கு இல்லை
என்று குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்
திலே தொலைபேசி வைத்திருப்பவர்களுக்கு 900 ரூபாய்
மொத்தத்திலே வருகிறது. தொலைபேசியில்லாதவர்களுக்கு 950

ரூபாய் மொத்தத்திலே வருகிறது. ஆனால் இந்தத் தொலை
பேசிக்கான வாடகைக் கட்டணத்தையும் அரசே கட்டுவது என்று
முதலிலே ஏற்றுக் கொண்டிருந்தோம். வேறு பல இடங்களிலே
பார்த்தாலும் கூட எல்லாப் படிகளையும் சேர்த்து ஆந்திரப்
பிரதேசத்திலே ஆயிரம் ரூபாய்தான் வருகிறது. கேரளத்திலே
மிகவும் குறைவு 750 ரூபாய் தான் வருகிறது. ஆனால் அவர்கள்
படியைக் கூட 25 ரூபாய், 35 ரூபாய் என்றுதான் வைத்திருக்
கிறார்கள். வெளியூர் போனால் 35 ரூபாய், உள்ளூரிலே இருந்
தால் 25 ரூபாய் என்றுதான் வைத்திருக்கிறார்கள். மேற்கு
வங்காளத்திலே மிகமிகக் குறைவு. மொத்தத்திலே 450 ரூபாய்
தான் தருகிறார்கள். படி 20 ரூபாய்தான் தருகிறார்கள்,
குஜராத்தில் ஆயிரம் ரூபாய் வரை தரப்படுகிறது. படி 40
ரூபாய், பஞ்சாபிலே ஆயிரம் ரூபாய் தருகிறார்கள், படி 45
ரூபாய் தரப்படுகிறது. அதே மாதிரி ராஜஸ்தானில் 900 ரூபாய்,
படி 51. உத்திரப்பிரதேசத்தில் ஆயிரம் ரூபாய் எல்லாமும்
சேர்த்து தரப்படுகிறது. நம்முடைய மாநிலத்திலே இருப்பவர்
களுக்கும், இருக்கிற சூழ்நிலை, நிதிநிலை தன்மைகள்
மற்றவைகளை ஆராய்ந்து அறிந்து—நம்முடைய மாநிலத்தைப்
பொறுத்தவரையில்—தொலைபேசி கட்டணத்தை உயர்த்தி
இருப்பதன் காரணமாக, அதனுடைய வாடகையும்
உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்படுவதன் காரணமாக,
அதற்காக 250 ரூபாய் கொடுத்து, அதற்கான வாடகையை,
2, 3 மாதத்திற்கு ஒன்றாக வாடகையை அரசு எடுத்துக்கொள்வது
என்கின்ற முறையை நாம் கையாண்டு வந்தோம். நாம் கணக்
கிட்டுப் பார்த்தோமேயானால் கூடுதல் வாடகைக் கட்டணம்
வருகிறது. இப்போது வாடகைக் கட்டணம் 3 மாதத்திற்கு
175 என்று இருந்ததை இரண்டு மாதத்திற்கு 175 என்று ஆக்கி
விட்டார்கள். கட்டணமும் உயர்ந்திருக்கிறது. ஆகவே
கட்டண உயர்வையும், கூடுதல் வாடகையையும் கணக்கிட்டுப்
பார்ப்போமேயானால் வாடகை 44 ரூபாய் என ஆகும்.
தொலைபேசி கட்டண உயர்வு இப்போது கொடுத்திருக்கிற அடிப்
படையில் பார்த்தால் 48 ரூபாயாகும். இரண்டும் சேர்ந்து
92 ரூபாய்க்கு வருகிறது. ஆகவேதான், இந்தக் கட்டணத்தை
பொதுவாக, தொலைபேசி வைத்திருப்பவர்கள், வைத்தில்லாத
வர்கள் என்று ஒரு வேறுபாடு காட்டாமல், தொலைபேசி வாடகை
மற்றும் கட்டணத்தை இங்கே வசூலித்து பிறகு செலுத்துகின்ற
அந்த அடிப்படையில் பல இடர்ப்பாடுகள் வேண்டாம் என்று
சொல்லி, மொத்தமாகவே தொலைபேசிக் கட்டணம் 250 ரூபாய்
என்று இருப்பதை, 350 ரூபாயாக உயர்த்தி, மொத்தத்திலே
350 ரூபாயாக தொலைபேசிக் கட்டணத்திற்கென கொடுப்பதாக
அரசு முடிவு செய்திருக்கிறது.

அடிப்படை ஊதியம் 250 ஆக இருப்பதை, 300 ஆக
இப்போது உறுப்பினர்களுக்கு உயர்த்தப்படுகிறது என்பதையும்
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே 300, இது
ஒரு 350—650—400 மொத்தத்தில் 1,050 ரூபாய் வரும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலிலேயே



இதைப் பற்றி கூறியதற்குக் காரணமே மற்ற மாநிலங்களிலே
எல்லாம் ஆயிரத்தோடு நிற்கிறார்கள், நாம் ஆயிரத்தை தாண்டி,
இந்த அளவுக்கு இந்த ஆண்டு சென்றிருக்கிறோம் என்பதையும்
குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டு
மல்லாமல் இது 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி
முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற
ரெயில்வே கூப்பன் தொகை 2,500 ஆக கொடுக்கப்பட்டு வரு
கிறது. இப்போது ரெயில்வே கட்டணத்தை உயர்த்தியிருப்பதன்
காரணமாக சராசரி 14 சதவீதத்திற்குக் கட்டணத்தில் உயர்வு
ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின்படி பார்ப்போமேயானால்
300 ரூபாய் கூடுதலாக வரக்கூடும். ஆக, 2,850 ரூபாய்தான்
வருகிறது. ஆகவே இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரையிலான ரெயில்வே
கூப்பன்களைக் கொடுக்க அரசு முடிவெடுத்திருக்கிறது
என்பதையும், அதுவும் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம்
தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பஸ் பாஸ் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
எல்லாம் குறிப்பிட்டார்கள். பெண் உறுப்பினராக இருந்தால்
அவர்கள் துணையாக ஒருவரை அழைத்துக் கொண்டு போக
வேண்டும் என்றும், ஆண் உறுப்பினராக இருந்தால், அவருடைய
துணைவியாரை அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றும்—
இல்லாவிட்டால் அவர்கள் வேறு யாரையாவது அழைத்துக்
கொண்டு போய்விட மாட்டார்கள் என்பதற்காக அல்ல—அவர்
களுக்கு மட்டும் என்று தனியாக இருக்க வேண்டும் என்றும் நாம்
சொன்னோம். ஏனெனில் துணைவியாரிடத்திலே மட்டும்
கேட்டு, துணையவரிடத்தில் கேட்காமல் இருப்பது, பிரஸ்டீஜ்
கொஸ்டின் ஆக இருக்கும் என்பதற்காக ஆக்கினோம். இப்போது
பலபேர் விரும்புவதன் காரணமாக எப்படி பெண் உறுப்பினர்கள்
வேறு ஒருவரை துணையாக அழைத்துக்கொண்டு செல்லலாம்
என்று இருக்கிறதோ, அதே போல ஆண் உறுப்பினர்களும்
துணையாக, துணைவியாரையோ அல்லது வேறு ஒரு உறுப்பின
ரையோ அழைத்துக்கொண்டு செல்லலாம் என்று சொல்லுகிறேன்.
கூடுமானவரையில் அவர்கள் ஆண்களாகவே இருப்பார்களே
யானால் நல்லது என்று கூறிக்கொள்ள முன் வருகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பலபேர் முன்னாள்
சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தரப்படுகிற சம்பளத்தைக்
குறித்து அது மிகவும் குறைவு என்று சொன்னார்கள். ஒரு
டேர்ம் என்று இருக்கும்போது, அரசாங்கம் முடிவில் கலைந்தாலும்

[ ாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 29

சரி, அல்லது நடுவில் கலைந்தாலும் சரி—ஒரு டேர்ம் என்றுதான்
எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் ஒரு டேர்ம்முக்கு
250 ரூபாய் தருகிறோம். அதற்கு மேற்கொண்டு வருகிற ஒவ்
வொரு ஆண்டுக்கும் 50 ரூபாய் என்று வைத்து, உச்சக் கட்டம்
500 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். சட்டமன்றப்
பேரவை, மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு பாஸ்
வழங்குவது பொறுத்தவரையில், நாம் கொடுத்து வந்திருக்கிற
இந்த ஒய்வு ஊதியம் தருகிற வகையில் மாண்புமிகு உறுப்பினர்
கள் சொன்னார்கள்.

மறுபடியும் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவோ,
பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அல்லது மத்திய, மாநில
அரசுகளின் ஏதேனும் ஒரு வாரியத்தின் தலைவர்களாகவோ,
இருந்து அவர்கள் சம்பளம் வாங்குகின்ற நிலைமை ஏற்படுமே
யானால் அப்படிப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தற்
காலிகமாக நிறுத்திவைக்கப்படும். ஆனால், மற்றவகைகளிலே
அதாவது தியாகிகள் ஓய்வூதியம், முதியோர் ஓய்வூதியம், உடல்
ஊனமுற்றவர்களுக்கான ஓய்வூதியம் இப்படிப்பட்ட ஓய்வூதியங்
களைப் பெறுவார்களேயானால் அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்
படமாட்டாது. அதை அவர்கள் தனியாக வாங்கிக் கொள்ளலாம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுடைய சம்பளம், அலவன்ஸ் ஆகி
யவை 1,050 ரூபாய் என்று வந்துவிட்ட நிலைமையில் அமைச்சர்
களுடைய சம்பளம், பேரவைத் தலைவரின் சம்பளம் ஆகியவை
எல்லாம் அப்படியே ரூ. 1,000-த்தோடே நிற்கின்றது. இப்படி
அமைச்சர்களின் சம்பளம் எல்லாம் 1952-க்கு முன்னாலே 1,000
ரூபாய் என்று இருந்தது. அதே நிலையிலேதான் தொடர்ந்து
இருந்து வருகின்றது. இடையிலே பேரறிஞர் அண்ணா இருந்த
போது ஒரு ஐந்தாறு மாத காலத்திற்கு ரூபாய் 500 ஆக ஆக்கப்
பட்டு பிறகு மறுபடியும் ஆயிரமாக ஆக்கினார்கள். ஆகவே,
இந்த 1,000 ரூபாயை வாங்கிக்கொண்டு எப்படி மந்திரிகள் எல்
லாம் சமாளிக்கிறார்கள் என்று பலர் எண்ணுவார்களே என்பதற்
காகவாவது இந்தச் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டிய அவ
சியம் ஏற்படுகின்றது. ஆகவே, அந்த ஆயிரம் ரூபாயோடு 500
ரூபாய் என்று சேர்த்து 1,500 ரூபாயாக அது அமைக்கப்படு
கின்றது. உறுப்பினர்களுக்கெல்லாம் 50 ரூபாய் ஓர் நாள் படி
என்று வைத்திருக்கிறோம். ஆனால், அமைச்சர்களுக்கு 15
ரூபாய்தான் என்று வைத்திருக்கிறோம். அதுவும் மற்ற இடங்
களுக்கு, பிற மாநிலங்களுக்குச் சென்றால்தான் படி உண்டு. அதுவும்
15 ரூபாய் என்றுதான் இருக்கின்றது. எனவே, அமைச்சர்களுக்
கும் 50 ரூபாய் ஒருநாள் படியாக ஆக்கப்படுகின்றது. அதே
போன்று பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர் ஆகியவர்
களுக்கும் அமைச்சர்களைப் போன்று 1,000 ரூபாய் பெற்றுக்
கொண்டிருந்த நிலைமையிலிருந்து 500 ரூபாய் சேர்த்து 1,500
ரூபாயாக மாற்றப்படுகின்றது. அவர்களுக்கும் ஒரு நாள் படி
ரூ. 50 ஆக ஆக்கப்படுகின்றது.



982 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அடுத்து பேரவை, மேலவை துணைத் தலைவர்
களுக்கு ஏற்கெனவே 750 ரூபாய் என்று இருந்தது.
பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் துணைத்
தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியவர்களுக்கு
இருந்துவந்த 750 ரூபாய் சம்பளம் 1,200 ரூபாயாக மாற்றி
யமைக்கப்படுகின்றது. அவர்களுக்கும் ஒரு நாள் படி 15 ரூபாய்
என்று கொடுக்கப்பட்டு வந்தது, அதுவும் 50 ரூபாயாகத் தரப்
படுகின்றது. ஆனால், பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏற்
கெனவே கமிட்டி கூட்டங்களில் கலந்துகொண்டால் ஓர் நாள்
படி 50 ரூபாய் என்று இருக்கின்றது.

அடுத்து, வீட்டு வசதிகளைப் பொறுத்த வரையிலே பேரவைத்
துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்ன இருக்
கிறதோ அது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் உண்டு
அதையும் அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கின்
றது. (குறுக்கீடு). தனித்தனியாக ஒவ்வொரு உறுப்பினருக்கும்
ஒரு பி.ஏ. மாதிரி ஏற்படுத்திக் கொடுத்தால் அதிலே பல்வேறு
சங்கடங்கள் ஏற்படக்கூடும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களிலே
வந்து சட்டமன்ற பேரவை உறுப்பினரோ, மேலவை உறுப்
பினரோ ஏதாவது டைப் செய்துகொள்ளவோ கடிதங்
களுக்குப் பதில் எழுதவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அந்தப்
பணிகளை ஏற்றுச் செய்வதற்காக அங்கே இருப்பவர்களில் யாரை
யாவது பயன்படுத்தலாமா அல்லது வேறு யாரையாவது ஏற்பாடு
செய்து அவர்கள் செய்கின்ற வேலையோடு இதையும் சேர்த்துச்
செய்வதற்கு ஏற்பாடு செய்யலாமா என்பதுபற்றி விரைவில்
இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

ஆகவே, இந்தத் தன்மைகளின் அடிப்படையிலே ஓரளவுக்கு
மன நிறைவு கொள்வார்கள். இப்போது ஏறி இருக்கின்ற விலை
வாசி, மற்றவைகளுக்கெல்லாம் இது போதாது என்றாலும் கூட
நாட்டினுடைய நிலைமை, நாட்டினுடைய நிதி நிலைமை, நிதி
நெருக்கடி நிலைமை ஆகிய அத்தனையையும் உணர்ந்து மன்ற
உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்
படையிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், அரசு இதுபற்றி
எல்லாம் ஆராய்ந்து, செய்யப்பட வேண்டிய நன்மைகள், செய்
யப்பட வேண்டிய வசதி வாய்ப்புகள் எல்லாம் பற்றிச் சிந்
தித்து, சிந்தித்து அவற்றைச் செய்து தருவதற்கு ஆயத்தமாக
இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய வசதி வாய்ப்பு
களை மட்டும் அல்லாமல் அவர்களுடைய கவுரவம் மற்றவை
களையும் காப்பாற்றுவதற்கு அதுபற்றி தனிப்பட்ட முறையிலே
கொண்டுவந்தாலும் பொதுவாக உத்தரவிட இந்த அரசு ஆயத்த
மாக இருக்கின்றது என்பதையும் எடுத்துத் தெரிவித்து இந்த
மானியக் கோரிக்கையை முழு மனதோடு நிறைவேற்றித்தர
வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

[1982 மார்ச் 29

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.
இப்போது வாக்கெடுப்பு கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித்
தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்
திருவாளர்கள் த. வேணுகோபால், கே. எம். தங்கமணி,
தி. கா. நல்லப்பன், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள்
பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்
றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித்
தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்'', என்ற
தலைப்பின் கீழ் ரூபாய் 20,55,89,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 7 — மாநில சட்டமன்றம்.

திருவாளர்கள் சு. பாலன், உ. சுப்பிரமணியன், கு. ரமணி,
செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேர
வையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட
மன்றம்'' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,24,49,000-க்கு மேற்
படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

Mr. SPEAKER ; Now, it being 1 O' Clock, I have to put the outstanding Demands for grants to the vote of the House, as the time for discussion of the demand's has come to a close.

(உ) கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்'' என்ற
தலைப்பின் கீழ் ரூபாய் 30,27,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்
றது.



(ஊ) கோரிக்கை எண் 4-ஓய்வூதியங்களும்
ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும்
ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாள
30,40,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற
வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்
றது.

(எ) கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற
தலைப்பின் கீழ் ரூபாய் 90,73,11,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரியதொகைஅரசுக்குவழங்கப் பெற்றது,

(ஏ) கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச்
செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 16,61,31,000-க்கு மேற்
படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்
நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது

(ஒ) கோரிக்கை எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும்,
முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி : '' மானியக் கோரிக்கை எண். 56—மாநிலஅரசு வழங்
கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய்
3,[illegible],54,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்
பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்
றது.

(6) அறிவிப்பு.

ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் அன்று காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

155. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1979—80ஆம் ஆண்டிற்கான பதினொன்காவது அறிக்கையும் (தமிழ் ஆங்கிலம்) மற்றும் அதன்மீதான அரசின் ஆய்வுரையும் [தமிழ்நாடு 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1 1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]



156. 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1350 ஆம்எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின்) [தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

163. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன் வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண் 45/1980) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கை.

164. குடிமைப் பொருள் வழங்குதுறை (இரண்டாம் பகுதி) பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த கருத்துரைகள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழு அளிக்கும் பன்னிரண்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

165. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை).

166. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 651 முதல் 800 வரை).

இணைப்புகள்

உடுக்குறியிடாத வினாக்களும் விடைகளும்.

திருவில்லிபுத்தூரிலிருந்து செண்பகத் தோப்பு வழியாக குறுக்குச் சாலைஅமைக்கும் திட்டம்.

வினா 651—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளா மாநிலத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு திருவில்லிபுத்தூரில் இருந்து செண்பகத் தோப்பு வழியாக குறுக்குச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தமிழகத்தில் சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி கோரி பெறப்பெற்ற மனுக்கள்.—

வினா 652—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகள் (Mini Plant) அமைக்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றுள் அரசுத் துறையில் மற்றும் தனியார் துறையில் எத்தனை ?

விடை—

(அ) சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி கோரி இரண்டு விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) இரண்டுமே தனியார் துறையில் நிறுவுவதற்காக உரிமம் கோரப்பட்டிருக்கிறது.

653—அரசு மருத்துவ மனைகளில் மருந்துப் பொருருட்கள் திருடு போவதைத் தடுக்கும் நடவடிக்கை.



வினா 653—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசு மருத்துவமனைகளில் அரசு மருந்துப் பொருட்கள் திருடு போவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் திருடு போவதைத் தடுப்பதற்காக அரசு அங்கீகரித்த லோகோ முத்திரையிட்ட மருந்துகளையே வாங்க வேண்டுமென்ற விதிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி அரசு மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளின் உறைகள் பாட்டில்கள் மீதுள்ளச். சீட்டுகள் மாத்திரைகள் டியூப்பு மாத்திரைகள் ஆகியவற்றில் அரசு முத்திரைகள் அச்சிடப்பட்டு தயாரிக்கப்படுகின்றன.

மேலும் மருத்துவமனைகளின் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் அவ்வப்போது பண்டகத்தில் உள்ள மருந்துகளை எண்ணி சரி பார்க்கின்றனர். இதைத் தவிர திடீரென்று பண்டகத்திலுள்ள மருந்துகளை சோதனை செய்து சரியாக உள்ளதா என்றும் பார்க்கின்றனர். ஆய்வுக் குழுவினரால் பண்டகத்திலுள்ள மருந்துகள் சரியாக உள்ளதா என்றும் இருப்புப் பதிவேடுகளை சோதித்து ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றனர். ஏதேனும் குறிப்பிட்ட நிகழ்ச்சி அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அவைகள் மீது விசாரணை செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நிரந்தர வேலையில்லாத பத்திரிக்கையாளர்கள் அகால மரணமடைந்தால் குடும்பத்திற்கு உதவி.

வினா 654—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நிரந்தர வேலையில் இல்லாத பத்திரிகையாளர்கள் அகால மரணமடைந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 10,000 வழங்குவதற்கான யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் ... ா ?

விடை—

இல்லை.

நிரந்தர வேலையில்லாத எழுத்தாளர்கள், கலைஞர்கள் அகால மரணமடைந்தால் குடும்பத்திற்கு உதவி.

வினா 655—(அ) திரு. என். இட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

நிரந்தர வேலையில்லாத எழுத்தாளர்கள் கலைஞர்கள் அகால மரணமடைந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 10,000 வழங்குவதற்கான யோசனை ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

தஞ்சாவூர் மருத்துவமனையில் நாய்க்கடிக்கு தடுப்பு ஊசி மருந்து

வினா 656—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டத்தில் நாய்க்கடிக்கான தடுப்பு ஊசி கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன? (A. R. U)

விடை—

நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும், அரசு ராஜா மிராஸ்தார் மருத்துவமனையிலும் மற்றும் மாவட்டத்திலுள்ள எல்லா மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதுமான அளவு இருப்பு உள்ளது.

657—



சைதாபேட்டை அரசு மருத்துவமனையை விஸ்தரிக்கும் திட்டம்

வினா 657—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார—

சைதாபேட்டையிலுள்ள அரசு மருத்துவமனையை விஸ்தரிக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

விடை—

சைதாப்பேட்டையிலுள்ள அரசு மருந்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

வினா 658—திரு ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்ட வேலைகள் எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இங்கு ஏற்கனவே இயங்கிவந்த ஊராட்சி ஒன்றிய கிராம மருத்துவமனையை அரசு ஏற்று 1975ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளிலிருந்து அரசு மருந்தகமாக செயல்பட்டு வருகிறது.

திருவாடுதுறையில் பொது மருத்துவமனை அமைத்தல்.

வினா 659—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் திருவாடுதுறையில் பொது மருத்துவமனை அமைக்கக் கோரிக்கை ஏதேனும் அண்மையில் அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கடையநல்லூர் பேருந்து நிலையம்.

வினா 660—திரு. அ. சாகுல் ஹமீது : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைப் பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் கடையநல்லூர் நகராட்சி பேருந்து நிலையத்தினுள் சென்று பிரயாணிகளை இறக்கவும் ஏற்றவும் வழி காண அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசு தக்க நடவடிக்கை எடுத்து அதன் அடிப்படையில் அனைத்து அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் கடையநல்லூர் நகராட்சி பேருந்து நிலையத்தினுள் சென்று பிரயாணிகளை இறக்கவும் ஏற்றவும் செய்கின்றன.

சிறு பத்திரிக்கையாளர் சங்கத்திலிருந்து அரசுக்கு கொடுத்த கோரிக்கை.

வினா 661—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு பத்திரிகையாளர் சங்கத்திலிருந்து சிறு பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம் தர வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

விடை—

அத்தகைய கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை.





சிவன் மலையில் அலுமினிய தொழிற்சாலை.

வினா 662—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காங்கேயத்திற்கு அருகில் சிவன்மலையில் கிடைக்கும் அனார்த்தசைட் (Anorthesite) என்ற பாறைகளைக் கொண்டு அலுமினிய தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

ரஷ்யாவிலிருந்து நன்கொடையாகப் பெறப்பெற்ற அதிவிசை நீரூற்றுக் குழாய்.

வினா 663—திரு து. புருஷோத்தமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரஷ்யாவிலிருந்து நன்கொடையாக வந்த நீரூற்று (பவுன்டன்) கூவம் ஆற்றில் எற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்ததா?

(ஆ) அது இப்போது எங்கே வைக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ரஷ்யாவிலிருந்து யாதொரு அதிவிசை நீரூற்றுக் குழாயும் நன்கொடையாகப் பெறப்பட்டு கூவம் ஆற்றில் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

படித்த பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டம்.

வினா 664—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் படித்த பட்டதாரிகளுக்கு, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்த அரசு உத்தேசித்து உள்ளது?

(இ) இது விரைவில் செயல்படுத்தப்படுமா?

விடை—

(அ) இந்த மாதிரியான திட்டம் அரசிடமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## மதுரை நகரில் மனநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்

வினா 665—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் மனநோய் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் பணிவிதிகளை இயற்றும் திட்டம்.

வினா 666—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் பணி விதிகளை இயற்ற தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், இதுபற்றி விவரம் என்ன.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேல் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மொழி மற்றும் பாட முதுகலை ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்கள் பதவிகளுக்கான தனி விதிகள் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் நாள் அன்று வெளியிடப்பட்டிருக்கின்றன.

## ராஷ்டிரபதி விருது பெற டெல்லிக்கு சென்ற கைவினைக் கலைஞர்கள்.

வினா 667—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஷ்டிரபதி விருது பெற டெல்லி சென்ற தமிழ்நாடு கைவினை கலைஞர்கள் அவமதிக்கப்பட்டதுடன் வேட்டி கட்டிக்கொண்டு வந்ததற்காக சரியாக உடை உடுக்கவில்லையென்று கூறி உணவு கூட கொடுக்க மறுத்துள்ளது பற்றி தமிழக அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றி விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)—தமிழ்நாடு அரசுக்கு கிடைத்த தகவல் படி தமிழ்நாடு கைவினை கலைஞர்கள், ராஷ்டிரபதி விருது பெற டில்லி சென்ற பொது மரியாதையுடனும் மதிப்புடனும் நடத்தப்பட்டார்கள்.

## விவசாயிகளுக்கு விதைகள் பூச்சி மருந்துகள் கூட்டுறவு மூலம் வினியோகிக்கும் திட்டம்.

வினா 668—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ; மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

128-56-15

(அ) விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் பூச்சி
மருந்துகளும் கூட்டுறவு மூலம் விநியோகிக்க தமிழக அரசிடம்
திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில
அரசு ஆகியவற்றின் நிதியுதவியுடன் ரூ. 170 இலட்சம் முதலீட்
டில் நெல், பருத்தி, நிலக்கடலை, கம்பு, ராகி, சோளம், பருப்பு
வகைகள் ஆகிய பயிர்களின் தூய மற்றும் கலப்பின வீரிய விதை
களை கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் உற்பத்தி
செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை
துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா சங்கம் மற்றும் 9 கூட்
டுறவு விற்பனை சங்கங்கள் இரண்டு கட்டங்களில் செயல்படுத்து
வதற்கு அனுமதிக்கப்பட்டன. இதில் முதல் கட்டத் திட்டம்
துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா சங்கம் மற்றும்
கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் ரூ. 93.50 இலட்ச
முதலீட்டில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் செயல்
பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விதைகள், பூச்சி
மருந்துகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் துடியலூர் கூட்டுறவு
விவசாய சேவா சங்கத்தின் விநியோகஸ்தராக செயல்படுகிறது.
மேலும் சிபா, ராலீஸ், பாரி போன்ற முக்கிய பூச்சி மருந்து
தயாரிப்பு நிறுவனங்களுடன் விற்பனை ஒப்பந்தம் செய்து
கொண்டு, பூச்சி மருந்துகளை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவ
சாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது.

26 விவசாயிகள் கூட்டுறவு சேவா சங்கங்களும் பூச்சி
மருந்துகள் மற்றும் விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து
வருகின்றன.



(ஆ) ஆம் எனில், ஏரி கலிங்கலை கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்பேரடிக்குப்பம் ஏரியின் கலிங்கல் மராமத்துப்பணி துரித சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் (பஞ்சாயத்து யூனியன் மூலம்) 1981–82 ஆம் ஆண்டு அரசு அங்கீகாரம் பெற்று எடுத்துக் கொள்ளப்படும்.

### காஞ்சீபுரத்தில் செங்கற்பட்டு மத்திய நூலகம் நூலக ஆணைக்குழு அலுவலகங்கள் அமைத்தல்.

வினா 670—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட மத்திய நூலகமும் நூலக ஆணைக்குழு அலுவலகமும் காஞ்சீபுரத்தில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சேந்தமங்கலம் பகுதியில் எரிசாராயத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 671—திரு. எஸ். சிவப்பிரகாசம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கல பகுதியில் எரிசாராய தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

விடை—

இல்லை.

### தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கு ஒதுக்கப்பெற்ற நிலம்

வினா 672—திரு. இல. இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1898 ஆம் ஆண்டில் ஆங்கில அரசால் சட்டத்தில் ஒதுக்கப்பட்ட பஞ்சம தரிசு நிலங்களை 1968—73 வரை தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கு தென்னாற்காடு, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் சட்டத்தை மீறி நில ஒதுக்கீடு செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணம் யாது?

(இ) 1972 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்கட்கு ஒதுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) விவரப் பட்டியல் சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.*

### வெளிநாடுகளுக்கு வேலை தேடிச்செல்லும் மருத்துவர்கள், எஞ்சினியர்கள்.

வினா 673—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இங்கே படித்து முடித்துவிட்டு வெளிநாட்டுக்கு வேலை தேடிச் சென்றுவிடும் டாக்டர்கள், எஞ்சினியர்களைத் தடுத்து நிறுத்தும் யோசனை ஏதேனும் அரசிடம் உள்ளதா?

*பக்கம் 488ல் இணைப்பு I-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விடை—

மேற்படிப் பொருள் பற்றிய யோசனை ஏதும் அரசிடம் இல்லை.

### சைதாப்பேட்டையிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரை மாற்றுச்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 674—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சாலைக்கு இணையாக சைதாப்பேட்டையிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரை மாற்றுச் சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

இல்லை.

### கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்.

வினா 675—திரு. எம். பழனிவேல்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

(அ) கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் முறையை எளிமைப்படுத்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் முறையை எளிமைப்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

### பத்மனாபபுரம் வருவாய் கோட்டத்ததில் இறந்த பனையேறும் தொழிலாளர் குடும்பத்திற்கு நிதி உதவி கோரி வந்த மனுக்கள்.

வினா 676—திரு. டி. மணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1982 மார்ச் 29

(அ) பத்மனாபபுரம் வருவாய்க் கோட்டத்தில் பனை மரத்திலிருந்து விழுந்து இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி கோரி 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய மனு செய்துள்ளவர்களில் எத்தனை மனுதாரர்களுக்கு நிதி உதவி மறுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் நிதி உதவி மறுக்கப்பட்ட காரணம் என்ன ?

விடை—

(அ) பதினான்கு மனுதாரர்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரேதப் பரிசோதனை செய்யாத காரணத்திற்காகவும் அல்லது பிரேதப் பரிசோதனை செய்த நேர்வுகளில் அதிக உயரத்திலிருந்து விழுந்ததால் இறப்பு நேரிட்டது என்பதற்கு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் இறப்பின் காரணம் மருத்துவரால் குறிப்பிடாத நேர்வுகளிலும் நிதியுதவி மறுக்கப்பட்டுள்ளது.

**இறந்த ஆதி திராவிடர்களின் அந்திமச் சடங்கிற்கு வழங்கும் நிதி.**

வினா 677—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களில் இறந்தவர்களின் அந்திம சடங்கு செய்வதற்கு ரூ. 50 அரசு கொடுப்பதில் உள்ளாட்சித்துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மற்றும் ஸ்பெஷல் ஆபீசர்கள் அந்நிதியை வழங்குவதில் ஏதாவது சிரமம் உள்ளதா ?

(ஆ) அப்படியானால் நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) அதுபோன்ற சிரமங்கள் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து எந்தவித அறிக்கையும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.?

**அருள்மிகு பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தில் முடிக் குத்தகை ஏலம் மூலம் கிடைத்த வருமானம்.**



1982 மார்ச் 29]

வினா 678—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு பழனி ஆண்டவர் தேவஸ்தானம் 1980–81க்கான முடிக் குத்தகை ஏலம் விடுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

(இ) சென்ற ஆண்டு குத்தகை ரூபாய் எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**அரசு மூலம் திரைப்பட அரங்குகள் கட்டும் செயற்குறிப்பு.**

வினா 679—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரைப்பட அரங்குகளை அரசாங்கமே இனிமேல் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

விடை—

இல்லை.

**தண்டனை பெற்ற ஆயுள் கைதிகளை விடுதலை செய்தல்.**

வினா 680—திரு. கே. தனக்கோடி தேவர் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

19–12–1978க்கு முன் தண்டனை பெற்ற ஆயுள் கைதிகள் அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு நாட்களோடு 10 ஆண்டுகள் முடித்தவர்களை விடுதலை செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

விடை—

ஆம்.

* பக்கம் 488-ல் இணைப்பு 2 IIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் கிராமங்களுக்குக் குடிதண்ணீர்

வினா 681—திரு. பி. சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் குடி தண்ணீர் இல்லாத நிலைமை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செவல்பட்டி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்

வினா 682—திரு. எம். ஏ. இராஜ்குமார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், செவல்பட்டியில் அரசு உயர்நிலைப் பள்ளியை விரிவுபடுத்தி புதிய கட்டிடம் கட்டவும் விஞ்ஞானக் கூடம் அமைக்கவும் மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மானாமதுரைத் தொகுதியில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு

வினா 683—திரு. சு. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மானாமதுரைத் தொகுதியில் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் துவங்காமல் இருக்கும் மேல்நிலைத் தொட்டிகளை மின் இணைப்புக் கொடுத்து செயல்பட வைக்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இம்மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு அவை இயங்கி வருகின்றன.

நீலகிரி மாவட்டம் தேவாலாவில் வெட்டப்பட்ட தங்கச் சுரங்கம்

வினா 684—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலாவில் வெள்ளையர்களால் வெட்டப்படும் தங்கச் சுரங்கம் பயன்தரவில்லை என கைவிடப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சுரங்கத்தை அரசு மீண்டும் தோண்டிட நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

சனத்குமார நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு

வினா 685—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகராட்சி எல்லைக்கும், கொல்லஹள்ளிக்கும் இடையே சனத்குமார நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

பழனி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை.

வினா எண் 691—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளியிறுதி வகுப்பில் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் பழனி வட்டத்தில் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அத்திட்டத்தை செயல்படுத்த, அரசு ஆவண செய்யுமா ?

விடை—

(அ) பழனி வட்டம் உட்பட தமிழகம் முழுவதிலும் இத்திட்டம் செயல்படுகின்றது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மருந்தாக்க இயல் கற்பிக்க தனிக் கல்லூரி.

வினா 692—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் மருந்தாக்க இயல் (B. Pharmacy) கற்பிப்பதற்கு தனியாக கல்லூரி ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களின் பெயர்களை மாற்றும் திட்டம்.

வினா 693—திரு. இரா. தாமரைகனி மற்றும் திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —



(அ) ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களின் பெயர்களை திருவரங்கம், திருவில்லிபுத்தூர், திருவைகுண்டம் என்று மாற்ற அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பெரியகுளத்தில் புறச்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 694—திரு. கே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் புறச்சாலை (Bye pass Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில் ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சேலத்தில் சட்டக்கல்லூரி அமைக்கும் திட்டம்.

வினா 695—திரு. செ. செம்மலை, செல்வி பி. விசயலட்சுமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலத்தில் சட்டக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) தற்போது அது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

நிரந்தர தியேட்டருக்கும், டூரிங் கொட்டகைக்கும் இடையே உள்ள இடைவெளி தூரத்தை மாற்றுதல்.

வினா 696—திரு. ஏ. கோபால் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஒரு நிரந்தரத் தியேட்டருக்கும், ஒரு டூரிங் கொட்டகைக்கும் இடையே 1 மைல் தூரம் இருக்க வேண்டும் என்பதை 1 கிலோ மீட்டர் இருந்தால் போதும் என்கிற யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அது எப்போது முதல் அமுலாகும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

வினா 697—திரு. ப. தங்கவேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த மதனத்தூருக்கும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த நீலத்தநல்லூருக்கும் இடையில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப்பாலம் எப்போது துவங்கப்பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

செஞ்சியில் குடிநீர்த் திட்டம் தொடங்குதல்.

வினா 698—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் மாண்புமிகு தாழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு டையளிப்பாரா :—





தென்னாற்காடு மாவட்டம் செஞ்சிக்கு 1981–82 ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டம் தொடங்க அரசு உத்தேசம் உண்டா ?

விடை—

ஆம்.

தென்னாற்காடு மாவட்டம் கல்லூரிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைக்கும் திட்டம்.

வினா 699—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைக்கும் (Affiliation) உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

இடைப்பாடி நகரில் மகப்பேறு மருத்துவமனை ஏற்படுத்துதல்.

வினா 700—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .

(அ) இடைப்பாடி நகரில் ஒரு மகப்பேறு மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

வினா 701—திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. பி. எஸ். கந்தசாமி, திரு. மா. சின்னராஜ், மற்றும் திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து பெரியார் மாவட்டத்தில் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே எடுத்துக்கொள்ளப் படுமா ?

விடை—

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டைத் தலைமையகமாகக் கொண்டு அமையவிருக்கும் போக்குவரத்துக் கழகத்திற்கு "ஜீவா போக்குவரத்துக் கழகம்" என பெயரிடப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆரம்ப வேலைகள், நிறுவனத்தை பதிவு செய்தல் போன்றவைகள் முடிந்த பின்பு புதிய போக்குவரத்துக் கழகம் செயல்படத் தொடங்கும்.

## ஆம்பூர் பட்டி வட்டம் கூட்டுறவு வங்கியில் நடை பெற்ற முறைகேடுகள்

வினா 702—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளத்தூர் தொகுதி ஆம்பூர்பட்டி வட்டம் பதவியிழந்த கிராம முன்சீப் அவருடைய பதவி காலத்தில் அவருடைய மனைவி பெயரில் தவறான முறையில் சிறு விவசாயி கார்டு பெற்று விராலிமலை கூட்டுறவு வங்கியில் வீடு கட்ட கடன் 7,000 ரூபாய் பெற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) முறைகேட்டினை விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விராலிமலை கூட்டுறவு நிலவள வங்கி குளத்தூர் தொகுதி ஆம்பூர்ப்பட்டி வட்டம் பதவியிழந்த கிராம முன்சீப் அவர்களுடைய மனைவிக்குப் பண்ணை வீடு கட்ட ரூபாய் 7,500 கடன் வழங்கியுள்ளது. இக்கடன் வழங்கியதில் முறை கேடு எதுவும் இல்லை.



## மேட்டூரில் முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற் குறிப்பு

வினா 703—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சேலம் மாவட்டம் மேட்டூரில் முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற் குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

சேலம் மாவட்டம் மேட்டூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9 ஆம் நாளிட்ட 2323 எண்ணுள்ள அரசாணையில் பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேற்கூறிய மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 1981 ஆம ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு கொண்டிருக்கிறது.

## பின்தங்கிய மாணவர்களுக்குச் சலுகைகள்

வினா 704—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் பின் தங்கிய மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச புத்தகங்கள் மதிப் பெண்கள் அடிப்படையில் தரப்பட்டு வருவதால் நிறைய பின் தங்கிய மாணவர்களுக்கு இந்தச் சலுகை கிடைப்பதில்லை.

(ஆ) எனவே, இந்த விதியை தளர்த்தி அனைத்து பின் தங்கிய மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை அரசு அளிக்க முன் வருமா ?

விடை—

பின்தங்கிய மாணவர்களுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்கு பெற்றோரின் வருமான வரம்பைத் தவிர மாணவர்கள் தாங்கள் கல்விச் சலுகை பெற விண்ணப்பித்துள்ள ஆண்டிற்கு முந்தைய வருடப் படிப்பில் (தேர்வில்) சராசரியாக 40 சதவீதம் மதிப் பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதும் ஒரு விதியாகும். இதனை மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு தளர்த்துவதற்காக உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

கூண்டுக்குள் பாம்புடன் மனிதர்கள் இருக்கக் கட்டணப் வசூல்.

[1982 மார்ச் 29

(அ) தமிழ்நாட்டில் பல இடங்களில் கூண்டுக்குள் பாம்புடன் மனிதர்கள் இருக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்று வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்நிகழ்ச்சிகள் அரசு அனுமதியுடன் நடைபெறுகின்றனவா ?

(இ) அனுமதிக்கு கட்டணம் வாங்கப்படுகிறதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒரு சில நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப் பட்டது.

(இ) அரசு எந்தவித அனுமதிக் கட்டணமும் வசூலிக்க வில்லை.

### வாலாஜாபாத் சீதை நூற்பாலை.

வினா 706—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

செங்கற்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் சீதை நூற்பாலை பல ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. வேலைவாய்ப்பு இழந்த தொழிலாளர் நலன் கருதி இவ்வாலை திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

'' வாலாசாபாத் சீதை நூற்பாலையை சீரமைப்பதற்காகும் செலவு புதிய ஆலை ஒன்றினைத் திறப்பதற்காகும் செலவின் அளவிற்கு இருக்கும். தொழில் நுட்ப வல்லுநர்களின் அறிக்கையின்படி இந்த ஆலையினைத் திறப்பது முடியாத காரியமாகும்.''

### நீரத்தநல்லூர் தேனத்தூர் நடுவில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டும் திட்டம்.

வினா 707—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?



1982 மார்ச் 29]

(அ) குடந்தை அருகில் நீரத்தநல்லூர்-தேனத்தூர் நடுவில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்ட திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### இராமநாதபுரம் பெரியகண்மாய் நிலங்களுக்கு வைகையிலிருந்து தண்ணீர் விடத் தீர்வை வசூல்.

வினா 708— திரு. டி. இராமசாமி, திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —:

(அ) இராமநாதபுரம் பெரிய கண்மாய் வைகை ஆயக்கட்டுக்கு உட்பட்டதா ?

(ஆ) இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு உட்பட்ட நிலங்களுக்கு வைகையிலிருந்து தண்ணிர் விட்டதற்காக தனித்தீர்வை வசூல் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்குட்பட்ட நிலங்களுக்கு வைகையிலிருந்து தண்ணீர் விடப்பட்டதற்கு 1976 ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாள் முதல் பயிர் ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 8 (வாழை போன்ற துபசல் பயிர்களுக்கு ரூபாய் 12) வீதம் தனி நன்செய்த்தீர்வை விதிக்கப்பட்டது. ஆனால், இத்தீர்வை 1980-ஆம் ஆண்டு தமிழ் நாடு கூடுதல் நன்செய்த் தீர்வை கூடுதல் தண்ணீர் மேல் வரி தனி நன்செய்த் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல் வரி) (திருத்த) சட்டத்தினால் அது விதிக்கப்பட்ட நாளிலிருந்து நீக்கப் பட்டுள்ளது.

### Defective Measuring Instuments used at Fair Price shops.

[1982 மார்ச் 29

வினா 709—திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(a) Whether the Government are aware of defective measuring instuments being used at fair price shops run by the Civil Supplies Corporation in Madras City ?

(b) the details of the steps taken to prevent this practice ?

விடை—

(அ) சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில்லருவி அங்காடிகளில் எடைபோட மற்றும் அளக்க பயன்படுத்தும் கருவிகளில் குறைபாடு இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வினா 710—

Number of working Days for Schools

THIRU P. VIJAYARAGHAVAN :Will the Hon. the Minister for Educatio be pleased to state-

(a) Whether the Government is aware of the fact that while the Higher Secondary and High Schools work f r 200 days, t e middle and primary sc ools have to work for 2 0 da s?

(b) If so, whether he Government have any proposal to equate e working days in respcet of all hose schools?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரையரங்குகளின் உரிமைகள் புதுப்பிக்க சான்றிதழ்

வினா 711— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— :



1982 மார்ச் 29]

திரை அரங்குகளின் லைசென்ஸ் புதுப்பித்தலின் பொழுது வணிகவரித் துறையினரிடமிருந்து வரி பாக்கி இல்லை என்னும் சான்றிதழ் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பித்த பின்னர் தான் லைசன்ஸ் புதுப்பிக்கப்படுகிறதா ?

விடை—

இல்லை.

இரும்பேடு ஆதி திராவிடர்நாடு நிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற் குறிப்பு

வினா 712.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுகா, இரும்பேடு கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உயர்நிலைப்பள்ளி எப்பொழுது முதல் செயல்படத் துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம் இரும்பேடு ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பு கிடைத்தவுடன் இது பற்றி பரிசீலிக்கப்படும்.

கல்லூரிகளில் கல்வித்தரத்தை மேம்படுத்த பேராசிரியர்களுக்கு எம். பில். படிப்பு.

வினா 713—திரு. எம். ஜான் வின்செண்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் கல்வி தரத்தை மேம்படுத்தும் வகையில் உதவி பேராசிரியர்களுக்கு எம். பில். (M.Phil.) படிப்பு விரிவாக்கப் படுமா ?

விடை—

அதுபோன்ற செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

விருத்தாசலம் பகுதியில் பரவி வரும் குதிரை ஜன்னி வியாதி.

வினா 714—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குதிரை ஜன்னி என்றொரு வியாதி விருத்தாசலம் பகுதியில் பரவி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்த வியாதியைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) அம்மாதிரி வியாதி ஏதும் பரவுவதாக அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

சாப்டூர் சந்தையூர் மலைச் சாலையைச் செப்பனிடும் திட்டம் :

வினா 715—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில் சாப்டூர்-சந்தையூர் மலைச் சாலையைச் செப்பனிட்டு, போக்குவரத்துக்கு உரியதாக உருவாக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(அ) ஆம் எனில், எப்போது அச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் ?

விடை— (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை



கமுதி கோட்டையை சுற்றுலா மையமாக்குதல்.

வினா 716 திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள சரித்திரப் புகழ் வாய்ந்த கோட்டையை அழகுபடுத்தி சுற்றுலா மையமாக்கப் படுமா ?

விடை—

தற்சமயம் அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

கிராமங்களில் பணிபுரியும் கிராம சேவக்குகள்.

வினா 717— திரு எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம சேவக்குகள் பலர் வெளியூர்களில் குடியிருந்து கொண்டு அவர்கள் பணிபுரியும் கிராமங்களில் அரசுப் பணிகளை சரிவர செய்யாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) பணிபுரியும் கிராமங்களிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்த முன்வருமா ?

விடை—

(அ) ஊர்நல அலுவலர்கள் (கிராம சேவக்குகள்) அவர்களுடைய அலுவலக தலைமையகத்தின் எல்லைக்குள்ளாகவே வசிக்க வேண்டும் என்று அரசாணை உள்ளது. இதில் மீறல் ஏதேனும் இருந்தால் சம்பந்தப்பட்ட ஊர்நல அலுவலர் மீது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் தொடங்குதல்

வினா 718—திரு. டி. மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

### கோவை நகரில் உள்ள சட்டக்கல்லூரிப்பிரிவு

வினா 719—திரு. கே. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கோவை நகரத்தில் நடந்து வருகிற சட்டக் கல்லூரி பிரிவு எவ்வளவு மாணவர்களைக் கொண்டு நடைபெறுகிறது ?

(ஆ) அக்கல்லூரிக்கு வசதியான கட்டிடமும் மற்ற சாமான்களுமில்லாத நிலையிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) வசதியாக வகுப்புகள் நடத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) கோவை சட்டக் கல்லூரியில் முதல் ஆண்டு 120 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு 120 மாணவர்கள் ஆக மொத்தம் 240 மாணவர்களைக் கொண்டு கல்லூரி நடைபெறுகிறது.

(ஆ) தற்போது தனியார் கட்டிடத்தில் கல்லூரி இயங்கி வருகின்றது ?

(இ) கோவை சட்டக் கல்லூரிக்கு புதுக் கட்டிடம் கட்ட ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடிய விரைவில் கட்டிடம் கட்டப்பட்டு வகுப்புகள் நன்கு இயங்கத் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

### கோவைச் செட்டிப்பாளையம் கிராமத்தில் கழிவு நீர் பண்ணை அமைக்கும் திட்டம்.

வினா—720 திரு. கே. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோவை மாநகரத்தின் பாதாள சாக்கடைக் கழிவு நீர் முழுவதும் தெற்கேயுள்ள செட்டிபாளையம் கிராமத்தில் ஒரு பெரிய கழிவுநீர் பண்ணை அமைத்து அதில் கொண்டு போய் சேர்க்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்ககணும் பணிக்கான விவர மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கென தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் தொழில் நுட்ப, அனுமதி வழங்கியபின் திட்டம் செயலாக்கப்படும்.

### சேலம் இரும்பு ஆலையில் இந்துஸ்தான் இரும்புத தொழிற்சாலை கட்டுமானப் பணி கழகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல்

வினா 721—திருமதி தா. இராசம்பாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் இரும்பாலையில் இந்துஸ்தான் (H. S. L.) இரும்புத் தொழிற்சாலை கட்டுமானப் பணிக் கழகத்தின் வேலைகள் முடிந்து வருவதால், அந்தக் கழகத்தில் பணி செய்து வரும் பயிற்சி பெற்ற மற்றும் ஓரளவு அனுபவம் பயிற்சி உள்ளதொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதே இரும்பாலையில் அந்த தொழிலாளர்களை வேலையில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இந்துஸ்தான் இரும்புத் தொழிற்சாலை கட்டுமானப் பணிக் கழகம் மற்றும் சேலம் இரும்புத் தொழிற்சாலை இரண்டுமே மத்திய அரசின் கீழ் வரும் நிறுவனங்களாகும். எனவே இந்த நிறுவனங்களின் விவகாரங்களில் இந்த அரசு தலையிடுவதற்கில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சென்னை திருச்சி வழித்தடங்களில் லாரிகள் நிற்பதால் ஏற்படும் தொல்லைகள்**

**வினா 722**— **திரு ச. அங்குசாமி** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருச்சி செல்லும் வழித்தடங் களில் அதிகமான லாரிகள் இரு பக்கத்திலும் நிறுத்தி விடுவதால் பயணிகள் செல்லும் பேருந்து செல்ல நேரம் அதிகமாகிற விஷயம் பற்றி அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை**—

(அ) சென்னையிலிருந்து திருச்சி செல்லும் வழித் தடங் களில் அதிகமான லாரிகளை இரு பக்கத்திலும் நிறுத்தி விடுவதால் தொல்லைகள் ஏற்படுவதாக அரசுக்கு இதுவரை முறையீடு ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கான முக்கிய மருந்துகள்**

**வினா 723**—**திரு பி. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு முக்கியமான மருந்துகள் இல்லையென்று மருத்துவர்கள் சொல்லும்போது அந்த மருந்து இருப்பு இல்லை என்று மருத்துவர்கள் நோயாளிகளுக்கு எழுதி கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**விடை**—

எல்லாவிதமான உயிர்க்காக்கும் மற்றும் இதர முக்கிய மருந்துகளும் இருப்பில் உள்ளன. சில சமயங்களில் மேற்படி மருந்துகள் இருப்பில் இல்லாவிட்டால் அதற்கு ஈடான தரமுள்ள மருந்துகள் மருத்துவமனையின் இருப்பிலிருந்து நோயாளிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. சமமான மருத்துவ மருந்துகள்



**விடை**—

நான்கு.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியை விரிவுப்படுத்தி எல்லா மாவட்டங்களிலும் கிளைகள் ஏற்படுத்துதல்**

**விடை 726**—**திரு. எஸ். மூத்துகிருஷ்ணன்** : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியை விரிவுபடுத்தி எல்லா மாவட்டங்களிலும் கிளைகளை ஏற்படுத்த அரசு நட வடிககை எடுக்குமா ?

(ஆ) சென்னையிலுள்ள இந்த வங்கி எவ்வளவு இலாபத்தில் 1980-ஆம் ஆண்டு நடைபெற்றது.

**விடை** —

(அ) உத்தேசம் இல்லை.

(ஆ) 1979-80-ஆம் கூட்டுறவு ஆண்டின் நிகர இலாபம் 294.99 இலட்ச ரூபாய்.

**சென்னை—தூத்துங்குடி பூம்புகார் போக்குவரத்துக் கழகம் மூலம் போக்குவரத்து ஏற்படுத்துதல்**

**வினா 727**—**திரு. எஸ். சிவசாமி** : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

பூம்புகார் போக்குவரத்து கார்ப்பரேஷன் மூலம் சென்னை யிலிருந்து தூத்துக்குடி நீர்வழிப் போக்குவரத்து ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**விடை**—

இல்லாவிட்டால் அவைகளை உள்ளூரில் வாங்கி நோயாளிகளுக்கு கொடுக்கப்படுகிறது. அதனால் மருந்துகள் இருப்பில் இல்லை என்ற பிரச்சினை எதுவுமில்லை. எனவே இவ்வினாவிற்கு இடமில்லை.

**ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படும் பாமாலின் எண்ணெய்.**

**வினா 724 திரு ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரேஷன் கடைகளில பாமாலின் எண்ணெய் சரிவர விநியோகம் செய்யப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஒவ்வொரு ரேஷன் அட்டைக்கும் எத்தனை கிலோ எண்ணெய் வழங்கப்படுகிறது?

**விடை—**

(அ) பாமாலின சமையல் எண்ணெய் மத்திய அரசால இறக்குமதி செய்யப்பட்டு மாநில அரசுகளுக்கு மாதாமாதம் ஒதுககீடு செய்யப்படுகிறது. தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் 2,547 மெட்ரிக் டன்கள பாமாலின் எண்ணெய் இம்மாநிலத்தில் உளள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு ஒரு கிலோ வீதம் வழங்கக கூட போதுமானதாக இல்லை. மத்திய அரசை அதிக அளவு ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிக அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டால் எல்லோருக்கும் கிடைக்கும்படி விநியோகிக்க இயலும்.

(ஆ) இருப்பபைப் பொறுத்து ஒவ்வொரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ பாமாலின் சமையல் எண்ணெய் வழங்கப்படுகிறது.

**உலக வங்கி உதவித் திட்டம் மூலம் சைதாப்பேட்டை தொகுதியில் எடுக்கப்பட்டுள்ள குடிசைப்பகுதிகள்**

**வினா 725 திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா



**குன்னூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம்**

**வினா 728— திரு கு. ரமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் தயாரிக்கப்பட்டது செயல்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து விவரங்கள் என்ன ?

(இ) திட்டத்தை நடைமுறையாக்கி துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா /

**விடை—**

(அ) இல்லை.

(அ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**கடம்பா ஏரியை மராமத்து செய்யும் திட்டம்**

**வினா 729 —திரு எஸ். கேசவ ஆதித்தன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலேயே பெரிய ஏரியான கடம்பா ஏரியை மராமத்து செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்

**விடை—**

(அ) இல்லை,

பெரியாற்றுத் தண்ணீரை விரிசுளியாற்றில் திறந்து விடும் திட்டம்.

வினா 730—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பெரியாற்று தண்ணீர் ஏரியூர் கண்மாய் வரை வருவதை திருவாடனைத் தொகுதியிலுள்ள விரிசுளியாற்றில் திறந்து விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

பரளை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு,

வினா 731—திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கமுதி யூனியனில் அபிராமம், முதுகுளத்தூர் சாலையில் பரளை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



அரசியல் கட்சிப் பணிகளில் கல்லூரி முதல்வர்கள்.

வினா 732—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி முதல்வர்கள் அரசியல் கட்சிப் பணியாற்ற அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) கல்லூரி முதல்வர்கள் அரசியல் கட்சி பணியை கல்லூரிகளில் செய்வதால் மாணவர்களின் எண்ணங்கள் அரசியல் நோக்கி திணிக்கப்படுவதை அரசு தடுக்க முன்வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) அரசுக்கு இதுபற்றி இதுவரை ஏதும் தகவல் இல்லை.

முகவை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

வினா 733—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்ளுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டத்தினுடைய வேலை வாய்ப்பு அலுவலகம் மதுரையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை முகவை மாவட்டத்திலேயே ஒரு மையப் பகுதியில் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரையில் இயங்கும் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மையமான இடத்திற்கு மாற்றுவதற்குரிய செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

சேலம் மாவட்ட பேரூராட்சிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வர தனித் திட்டம்.

வினா 734—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி, நங்கவள்ளி, ஜலகண்ட புரம், வனவாசி அகிய பேரூராட்சிகளுக்கு மேட்டூர் அணையி லிருந்து குடி தண்ணீர் கொண்டு வருகிற தனித் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வி லுள்ளது.

அரசு பொது மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கென விதி முறைகள்.

வினா 735—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரசு பொது மருத்துவ மனைகளில் செவிலியர் நோயளிகளுக்கு ஊசி போடுவதற்கு விதிமுறை இடம் கொடுக் கிறதா ?

(ஆ) எந்த அடிப்படையில் செவிலியர்கள் அந்த பணியை செய்து வருகிறார்கள்?

விடை—

(அ) மற்றும் (ஆ) நோயாளிகளுக்கு செவிலியர்கள் ஊசி போடுவதற்கான சில விதிமுறைகள் அரசு ஆணை எண் 600, சுகாதாரம், நாள் 2—4—1979 மூலம் வழங்கப்பட்டுள்ளது.



பரங்கிமலை ஒன்றியத்தில் கழிவு நீரால் ஏற்படும் கொசுத் தொல்லை.

வினா 736—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சென்னை நகரிலிருந்து வரும் கழிவு நீரால் பரங்கி மலை ஒன்றியத்தில் கந்தன்சாவடி, பெருங்குடி ஒக்கியம், துரைப் பாக்கம், மேட்டுக் குப்பம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் கொசுத் தொல்லையால் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், கொசுவை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரிலுள்ள கழிவு நீர்ப் பண்ணைகளை ஒட்டிய பகுதிகளுக்கு கொசுத் தடுப்பு மருந்துகளைத் தெளிப் பதற்காக இவ்வரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையினரால் ஆண்டொன்றுக்கு ரூபாய் 3.62 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியினைச் சென்னை மாநகராட்சி கொசுத் தடுப்பு பயிற்சி பெற்ற பணியாளர் தொகுதியைக் கொண்டு நிறைவேற்ற சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர் சென்னை மாநகராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து ஆவன செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறார்.

பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு அகஸ்தீஸ்வரர் ஆலையம்.

வினா 737—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் பொழிச்சலூர் ஊராட்சியில் பல்லவர் காலத்து அருள்மிகு அகஸ்தீஸ்வரர் ஆலயம் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதை ஏற்று பராமரிக்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) பொழிச்சலூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் ஆலயம் ஏற்கனவே அறநிலைய இலாக்காவின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை.

வினா 738—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எழுதப்படிக்க தெரிந்தவர்கள் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பில் அகில இந்திய அளவில் பின்னோக்கி சென்றுள்ளதா?

(ஆ) அதன் அடிப்படை காரணமென்ன?

(இ) அதைப் போக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

சென்னை உயர்நீதி மன்றத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக இலவசமாக வழக்காடுவதற்கு வழக்கறிஞர்கள் நியமனம்.

வினா 739— திரு. என். பழனிவேல்: திரு. எம். ஆறுமுகம் } மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாக வழக்காடுவதற்கு அரசு வழக்கறிஞர்களை நியமித்துள்ளதா?

விடை—

தாழ்த்தப்பட்டவர்களுக்கென் தனியான ஏற்பாடுகள் இல்லை.



740—

திருச்செந்தூரில் முதல் வகுப்புமாஜிஸ்டிரேட் கோர்ட் ஏற்படுத்தும் திட்டம்.

வினா 740—திரு. எஸ். கேசவ ஆதித்தன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், திருச்செந்தூரில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

தொலைதூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்களை அமர்த்தும் திட்டம்.

வினா 741—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரத்தில் தொலை தூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க இரண்டு டிரைவர்களை அமர்த்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

Plans for expansion of Ambathur Industrial Estate Complex

Q: 742 THIRU N. S. V. CHITHAN: will the Hon. the Minister for Rural Industries to be pleased to state:

(a) Whether there are plans for the expansion of the Ambathur Industrial Estate Complex?

A

(b) If so, the details thereof

(a) No.

(b) Does not arise.

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மணலூரிலிருந்து அகரம் ஜோதிபுரம் சாலை அமைக்கும் பணி

**வினா 743**—திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மதுரை-இராமநாதபுரம் சாலையில் மணலூரில் இருந்து அகரம் ஜோதிபுரம் சாலை அமைக்கும் பணி அரைகுறையாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையை வருகிற நிதி ஆண்டிலேயே அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) சட்டப்பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை அமைக்கும் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறாததால் அப்பணி மேற்கொள்ளப்படவில்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பத்திரிகைகலை சிறைகளுக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு

**வினா 744**—திரு. ஆர். உமாநாத் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பத்திரிகைகளை அரசின் பொறுப்பிலேயே சிறைகளுக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை—

இல்லை.

சங்கரன்கோவில் நகரில் தொழில்பேட்டை நிறுவும் திட்டம்

**வினா 745**—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் நகரில் தொழிற்பேட்டை ஒன்று நிறுவும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) சங்கரன்கோவில் நகரில் தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வாசுதேவநல்லூர் பகுதியில் மினி சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

**வினா 746**—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் பகுதியில் மினி சர்க்கரை ஆலை ஒன்று நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு

வினா 747—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

## கடலூர் கிராமத்தில் வாழும் ஆதி திராவிடர்களின் குடியிருப்புகள் கடல் அரிப்பினால் பாதிப்பு

வினா 748— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, கடலூர் கிராமத்தில் வாழும் ஆதி திராவிடர் மக்களின் குடியிருப்புகள் கடல் அரிப்பின் காரணமாக பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவர்களுக்கு மாற்று இடத்தில் வீட்டு மனைகள் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## புதுக்கடை இரணியல் பகுதிகளில் பரவியுள்ள யானைக்கால் நோய்.

வினா 749— திரு. குமரி அனந்தன், திரு. டி. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் புதுக்கடை, இரணியல் பகுதிகளில் யானைக்கால் நோய் பரவியிருக்கும் தகவல் அரசுக்கு வந்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

விடை—

(அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டம், புதுக்கடை பகுதியில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,800 செலவில் யானைக்கால் நோய்க்கு தடுப்புத் திட்டம் ஒன்றை அவ்வூராட்சி செயல்படுத்த அரசு 1977 ஆம் ஆண்டு அனுமதி வழங்கி உள்ளது. 1973 ஆம் ஆண்டிலிருந்து இரணியல் பகுதியில் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ரூபாய் 10,250 மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அச்சிறுபாக்கம் தொகுதியில் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பதவிகள்

வினா 750— திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் ஆசிரியர் பதவிகள் காலியாகவே இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களை உடனடியாக பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—(அ) மற்றும் (ஆ) அச்சிறுபாக்கம் தொகுதியில் உள்ள எல்லா ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலும் மாணவர் வருகைக் கேற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுள்ளனர். தற்சமயம் யாதொரு பதவியும் காலி இல்லை.

## திருவொற்றியூர்-மணலி நெடுஞ்சாலையில் ரயில்வே மேம் பாலங்கள் கட்டும் திட்டம்.

வினா 751— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர்-மணலி நெடுஞ்சாலையில் (1) எர்ணாவூர் (2) மாட்டுமந்தை இரு இடங்களில் ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

விடை—

இல்லை..

நெடுஞ்சாலைத் துறையில் கோட்டக் கணக்கர்களாக நியமனம் செய்யப்படுவதற்கான வயது வரம்பு.

வினா 752— திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத்துறையில் 45 வயதுக்குள் இருந்தால் தான் பதவி உயர்வு கொடுத்து கோட்டக் கணக்கர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்த முறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

காஞ்சிபுரம் ஒரிகை பல்லவன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கான மருத்துவ அலுவலர் நியமிக்கும் கோரிக்கை.

வினா 753— திரு. பி. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்களுக்கென காஞ்சிபுரம், ஓரிகை ஆகிய இரண்டு இடங்களுக்கும் சேர்த்து மருத்துவ அலுவலர் நியமிக்க கோரிக்கை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.







தமிழகத்தில் மெழுகு உற்பத்தி தொழிற்சாலை ஏற்படுத்தல்

வினா 754—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ரூபாய் 12 கோடி செலவில் மெழுகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை மத்திய அரசு ஆரம்பிக்க உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மணலியில் உள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 20,000 டன்கள் உற்பத்தித்திறன் கொண்ட மூன்று ரக பாரபின் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மணலியில் நிறுவ உள்ளது. தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்லிக்குப்பம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மீதான சர்சார்ஜ் நடவடிக்கைகள்

வினா 755—திரு. வி. வி. சுவாமிநாதன், திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லிக்குப்பம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இவர், மேல் குமாரமங்கலம் ஊராட்சியின் தலைவராக இருந்த போது, அந்த ஊராட்சிக்கு ஏற்பட்ட இழப்பிற்காக அவர் மீது சிதம்பரம் கோட்ட வருவாய் அதிகாரியால் ரூபாய் 65,235.09-க்கு சர்சார்ஜ் சான்று வழங்கப்பட்டது. அதன் மேல் இவர் அரசுக்கு முறையீடுகள் செய்தார் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தீர பரிசீலித்து தணிக்கைக் குறிப்பில்

ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள அளவுக்குத் தொகையைக் குறைத்து இறுதியாக அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூபாய் 22,430.64 என நிர்ணயித்து அதனை வசூலிக்கும்படி 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண் 1302 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

### பிற மாநிலங்களில் தமிழக தகவல் நிலையங்கள் திறக்கும் செயற்குறிப்பு.

வினா 756—திரு. என். பழனிவேல், திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தகவல் நிலையங்களை பிற மாநிலங்களில் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

### மாலை நேரக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில்வோருக்கு தமிழ் ஊக்கத் தொகை வழங்கல்

வினா 757—செல்வி பி. விசயலெட்சுமி மாண்புமிகு கல்வி அமைச்சர் ழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பகல் நேர கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் தமிழ் ஊக்கத்தொகை மாலை நேரக் கல்லூரியில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு பயில்வோருக்கு வழங்கி ஊக்குவிக்க அரசு முன் வருமா?

விடை—

மாலை நேரக் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் கருத்து ஏதும் அரசிடம் இல்லை.



### சேலம் அரசுக் கலைக்கல்லூரிக்கு தந்தை பெரியார் பெயர் வைத்தல்

வினா—758 செல்வி பி. விசயலட்சுமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கும் சேலம் அரசு கலைக்கல்லூரிக்கு நூற்றாண்டு விழா நாயகன் தந்தை பெரியாரின் பெயரினை வைக்க அரசு முன் வருமா?

விடை—

சேலம் 7-ல் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கு தந்தை பெரிதாரின் பெயரினை வைக்க பொதுமக்களிடமிருந்தோ மற்றவர்களிடகிருந்தோ கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

### கொல்லிமலையில் பழ விற்பனைக்காக கூட்டுறவு விற்பனை சங்கம் தொடங்குதல்

வினா 759—செல்வி. பி. விசயலட்சுமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் பழ விற்பனைக்காக கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்றினை தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

760—

### தமிழக அரசின் இருமொழி, மும்மொழிக் கொள்கைகள்

வினா 760—திரு. இரா. முத்தையா, திரு. வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் "இரு மொழிக் கொள்கை" யினை மறு பரிசிலனை செய்யுமாறும், மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தியும் அண்மையில் மத்திய அரசு தாக்கீது ஏதும் அனுப்பியுள்ளதா?

விடை—

இல்லை.

### விரகனூர் பொன்னாளம்மன் கோயில் ஏரியை மதிப்பிட்டு அளவு கோல்படி மறு ஆய்வு செய்யும் பணி

வினா 761—திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி விரகனூர் பொன்னாளம்மன் கோயில் ஏரியை புதிய மதிப்பீட்டு அளவு கோல்படி (yerd stick) மறு ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்க அரசு உத்தரவிட்டுள்ளதா? —

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு முடிவு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டம் நிறைவேற்றப்படும் என தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) தெரிவித்துள்ளார்.

### மின்தட்டுப்பாடு காலங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம்

வினா 762—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின் தட்டுப்பாட்டு காலங்களில் விவசாயிகளுக்கு வழங்கும் மின்சாரம் முழுமையும் இரவு நேரங்களில் மட்டும் அளிக்கும் முறையைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மின்தட்டுப்பாடு தற்போது இல்லை.



### கோவை மத்திய சிறையில் பேட்டிக்காண வருவோர்க்கு தங்கும் வசதிகள்

வினா 763—திரு கே. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மத்திய சிறையில் கைதிகளை பேட்டி காண வருவோருக்கு தங்கும் வசதிகள் அமைக்கப்படுமா?

விடை—

இது சிறைத்துறை தலைவரின் ஆய்வில் உள்ளது.

வினா 764—திரு. கே. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைகளில் உள்ள கைதிகளைப் பார்க்கச் செல்கிற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட சிறை வாசலில் காத்திருக்க வேண்டியுள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) கோவை மத்திய சிறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால் உட்காருவதற்கு வசதியில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இவைகளை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வேண்டி சிறை வாசலில் காத்திருக்க வேண்டிய நிலை இதுநாள் வரை எழுந்ததில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### திருத்தணி நகர கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற கையாடல் பற்றி நடவடிக்கை

வினா 765—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகர கூட்டுறவு வங்கியின் தலைவர் பல லட்சங்கள் கையாடல் செய்திருப்பதாக கூறுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

1982 மார்ச் 29

விடை—

(அ) திருத்தணி கூட்டுறவு நகர வங்கியில் சுமார் ரூ 52,000 அளவிற்கு பணம் கையாடல் நடந்ததாக தெரிய வருகிறது.

(ஆ) சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கையும் (Criminal proceedings) கையாடல் செய்யப்பட்ட பணம் வசூல் செய்ய உரிமை இயல் (Civil action) நடவடிக்கையும் தொடரப்பட்டுள்ளது.

வினா 766—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்தில் டவுன் கூட்டுறவு வங்கி செயலற்று இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருத்தணி கூட்டுறவு நகர வங்கியின் செயல் முறையில் காணப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக வங்கியின் நிர்வாக சபை கலைக்கப்பட்டு 1974ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ஆம் நாள் முதல் முதுநிலை ஆய்வாளர்/தனி அலுவலர் எவ்வளவு முயற்சி எடுத்த போதிலும் முன்னாள் நிர்வாக சபையினரின் கவனக் குறைவாலும் நிர்வாக திறமையின்மையாலும் வங்கியின் சொத்திற்கு பினாமி கடன் வழங்கியதால் ஏற்பட்ட நஷ்டத்தினாலும் பொது மக்களின் நம்பிக்கையை இழந்த வங்கியை புத்துயிர் ஊட்ட இயலவில்லை. எனவே வங்கியின் செயல்முறையை முடிவு கட்ட உத்திரவிடப்பட்டது.

### அரசு மருத்துவ மனைகளில் நூலகங்கள் அமைத்தல்

வினா 767—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனைகளில் நூலகங்களை அமைத்து உள் நோயாளிகளாகத் தங்கி சிகிச்சை பெறுபவர்களுக்கு நூல்களை கொடுத்து பயன்பெறுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா



1982 மார்ச் 29]

விடை—

சில அரசு மருத்துவமனைகளில் நூலகங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

### ஆரம்ப உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சைக்கிள் ஓட்டும் பயிற்சி அளித்தல்

வினா 768—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்ப பள்ளி உயர்நிலைப்பள்ளியில் பயிலும் எல்லா மாணவ-மாணவிகளுக்கும் சைக்கிள் ஓட்டும் பயிற்சியை அளிப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

விடை—

அவ்வாறு பள்ளிகள் மூலம் பயிற்சி அளிப்பது தேவை எனக் கருதப்படவில்லை.

### மதுரை தொழில் நுட்ப பள்ளியில் சமையல் கலை பிரிவு துவக்கும் திட்டம்.

வினா 769—திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை தொழில்நுட்பப் பள்ளியில் சமையல் கலை (Catering Techology) பிரிவைத் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### கைதிகளுக்காக நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்.

வினா 770—திரு. ஆர். உமாநாத் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரலில் கைதிகளுக்காக விளையாட்டுப் போட்டி நடத்தியதோடு அடுத்து நடத்தாமல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

[1982 மார்ச் 29

(ஆ) ஆம் எனில் அதைத் தொடர்ந்து நடத்த அரசு முன் வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

கவாடி மலையூர் மலைவாழ் மக்களுக்கு மேல் நிலை தொட்டி மூலம் குடிதண்ணீர் வசதி.

வினா 771—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியில் கவாடி மலையூர் உச்சியில் வாழும் மலைவாழ் மக்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

நத்தம் தொகுதியில் கவாடிமலையூர் என்ற கிராமம் இல்லை. நத்தம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் லிங்கவாடி மலையூர் என்ற கிராமமும், கரந்த மலையிலுள்ள மலையூர் என்ற கிராமமும் உள்ளன. லிங்கவாடி மலையூர் என்ற கிராமத்தில் 360 மக்களும் கரந்த மலையில் உள்ள மலையூர் கிராமத்தில் 276 மக்களும் வசிக்கின்றனர் இவ்விரண்டு ஊர்களிலும் குடி தண்ணீர் கிணறுகள் உள்ளன. குறைவான ஜனத்தொகை உள்ள தால் இவ்விரண்டு ஊர்களிலும் மேல்நிலை குடிதண்ணீர் தொட்டி கட்டத் தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைமை இடங்களில் பயணிகள் விடுதி கட்டும் செயற் குறிப்பு.

வினா 772—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியத் தலைமை இடங்களிலும் பயணிகள் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



1982 மார்ச் 29]

விடை—

பயணிகள் விடுதி கட்டும் செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

புதுக்கோட்டை காவேரி மில்லில்தேங்கிக் கிடக்கும் நூல்.

வினா 773—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை காவேரி மில்லில் நூல் தேக்கம் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) புதுக்கோட்டை காவேரி மில்லில் நூல் தேக்கம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கரூர் வட்டம், அண்ணா நகரில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கல்.

வினா 774—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், புஞ்சை புகழூர் கிராமம், வேலாயுதம் பாளையம் அண்ணா நகரில் குடியிருப்பவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளதா?

விடை—

(அ) ஆம்.

கிருதுமால் பரளை வெளிப்போத்தியில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

வினா 775—திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் கமுதி ரோட்டில் கிருதுமால் பரளை வெளிப்போத்தியில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செல்லும் வழித் தடங்களில் உள்ள எல்லாப் பேருந்து நிலையங்களிலும் தகவல் நிலையம் அமைத்தல்.

**வினா 776**—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செல்லும் வழித்தடங்களில் உள்ள எல்லா பேருந்து நிலையங்களிலும் இப்போக்குவரத்துக் கழகத்தின் தகவல் நிலையம் (Information Centre) உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அத்தகைய வசதிகளை உருவாக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) உத்தேசமில்லை.

மாவட்டந்தோறும் சுற்றுலா வளர்ச்சி அலுவலர்கள் நியமனம் செய்யும் திட்டம்.

**வினா 777**—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா வளர்ச்சி அலுவலர்களை (Tourist Officer) மாவட்டம் தோறும் நியமனம் செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை?



நில உச்சவரம்புச் சட்டம் மூலம் உபரியாகக் கிடைக்கும் நிலங்களை மாதிரி கூட்டுப் பண்ணை முறையில் செயல்படுத்தும் திட்டம்—

**வினா 778**—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உபரியாகக் கிட்டும் நிலங்களை மாதிரி கூட்டுப் பண்ணை முறையில் செயல்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

சாட்சிகளுக்கு சம்மன்களை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பும் செயற்குறிப்பு.

**வினா 779**—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றவியல் நீதி மன்றங்களில் வழக்குகள் பைசல் ஆவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க சாட்சிகளுக்கு சம்மன்களை தபால் மூலம் ரிஜிஸ்தரில் அனுப்ப வகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

காஞ்சி பச்சையப்பன் ஆடவர்கள் கல்லூரியில் பட்டப்படிப்புகள் தொடங்குதல்.

**வினா 780**—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சி பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் பி. காம்., எம்.ஏ., எம்.காம்., போன்ற பட்டப் படிப்புகள் தொடங்கப் படுமா?

விடை—

காஞ்சி பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 1981–82 ஆம் ஆண்டு பி.காம்., போன்ற பட்ட வகுப்புகள் தொடங்கப் படமாட்டாது.

[1982 மார்ச் 29

## வைப்பாற்றில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

**வினா 781—திரு. ஆர். கே. பெருமாள் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம், வைப்பாற்றில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு!

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## ஆத்தூர் தாலுக்காவில் பொறியியல் தொழில் கல்விப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

**வினா 782—திரு. பி. பழனிமுத்து :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தாலுக்காவில் பொறியியல் தொழில் கல்வி பள்ளி (பாலிடெக்னிக்) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன!

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## இராமநாதபுரம்-காரைக்குடி வரை உள்ள சாலையை அகலப்படுத்தும் திட்டம்.

**வினா 783—திரு. டி. இராமசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலிருந்து காரைக்குடி வரையில் உள்ள சாலையை அகலப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.



1982 மார்ச் 29]

## கீழ்பவானி கால்வாய் பாசனப் பகுதியில் உள்ள நிலங்களை பாசனத்திற்கு சேர்த்துக் கொள்ளல்.

**வினா 784—திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி கால்வாய் பாசனப் பகுதியில் இதுவரை பாசனம் இல்லாத நிலங்களை பாசனத்திற்கு சேர்த்துக்கொள்ள அரசு அனுமதித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலங்கள் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படும்.

(இ) வரும் ஆண்டில் இருந்து அவைகள் பாசனம் பெறுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## வெள்ளாற்றில் கூட்டு குடிநீர்த் திட்டம் அமல்படுத்தும் செயற்குறிப்பு

**வினா 785.—திரு மு. அப்பாத்துரை :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளாற்றில் கூட்டு குடிநீர் திட்டம் அமுல் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா.

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளாற்றில் கூட்டு குடிநீர் திட்டம் அமல்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசு பரிசீலனையில் இல்லை.

[1982 மார்ச் 2

கோபிசெட்டிபாளையத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 786— திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தீப்பெட்டித் தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

உலக வங்கி மூலம் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வாங்க கடனுதவி.

வினா 787— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பம்புசெட்டுகள் வாங்க கடன் கொடுப்பதற்கு உலக வங்கி ஏதேனும் உதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை.—

(அ) மற்றும் (ஆ): உலக வங்கியிடமிருந்து நேரிடையாக நிதி உதவி பெற்று செயல்பாட்டிலிருக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

முத்தூர் கொடுமுடி நெடுஞ்சாலையில் உள்ள நொய்யலாற்றின் சிறிய பாலத்தை பெரிய பாலமாக மாற்றும் திட்டம்

வினா 788—திரு. சென்னிமலை என்கிற பி. எஸ். கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) முத்தூர் கொடுமுடி நெடுஞ்சாலையில் உள்ள நொய்யலாற்றின் சிறிய பாலத்தைப் பெரிய பாலமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



1982 மார்ச் 29]

இந்தியா முழுமைக்கு ஒரே மின்சார வாரியம் அமைத்தல்.

வினா 789—திரு என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இந்தியா முழுமைக்கும் ஒரே மின்சார வாரியம் அமைப்பது குறித்து மாநில அரசின் கருத்தை மைய அரசு நாடியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து நமது மாநில அரசின் நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆயக்குடியில் சலவைத்துறை அமைத்தல்

வினா 790—திரு என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் ஆயக்குடியில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்கள் தங்களுக்கு சலவைத்துறை கட்டித் தரக் கோரி அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) அரசுக்கு கோரிக்கை இதுவரையிலும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

தமிழ்நாட்டில் புதிய தொழுநோய் மறுவாழ்வு அமைக்கும் செயற்குறிப்பு

வினா 791—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதில் அளிப்பாரா—

[1982 மார்ச் 2

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் அமைக்க உத்தேசம்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

மேலூர் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஆக்கிரமிப்பு

வினா 792— திரு எம். ஏ. இராஜகுமார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி பிர்க்கா' செவல்பட்டி கிராமம், மேலூரில் சுடுகாட்டிற்கு செல்லும் பாதை தனிப்பட்டவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

துறைமுக தொழிலாளர்கள் உயிர் இழப்பின் நஷ்டஈடு அளித்தல்

வினா 793 —திரு ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சரக்குகள் ஏற்றுமதி செய்பவர்கள் மற்றும் துறைமுகங்களில் வேலை செய்பவர்கள் உயிர் இழப்பின் நஷ்ட ஈடு தர அரசிடம் உத்தேசமுள்ளதா?

(ஆ) அப்படி நிதி அளிக்கப்பட்டிருந்தால் எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



[1982 மார்ச் 29]

ஓய்வு பெற்ற நகராட்சி மன்ற அலுவலர்களுக்குக் குடும்ப நல ஓய்வூதியத் திட்டம்

வினா 794— திரு த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14 ஆம் நாளுக்கு முன்பு ஓய்வு பெற்ற நகராட்சி மன்ற அலுவலர்களுக்கும் குடும்ப நல பென்சன் திட்டம் வழங்கவேண்டும் எனக் கோரி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

விடை—

ஆம்.

மஞ்சம்பட்டியில் அணை கட்டுதல்.

வினா 795— திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் உடுமலைப்பேட்டை மலைப்பகுதியில் மஞ்சம்பட்டி என்னுமிடத்தில் அணை கட்ட ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

கந்தசாமிபுரம் கிராம சமுதாய நல கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தல்.

வினா 796—திரு எஸ். கேசவ ஆதித்தன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகநேரி பஞ்சாயத்து கந்தசாமிபுரம் கிராமத்திலுள்ள சமுதாய நல கிணறுகளுக்கு மின் இணைப்பு நீண்ட காலமாக கொடுக்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பெருந்துகள் செல்லும் வழித் தடங்களில் உள்ள எல்லாப் பெருந்து நிலையங்களிலும் தகவல் நிலையம் அமைத்தல்.

வினா 776—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செல்லும் வழித்தடங்களில் உள்ள எல்லா பேருந்து நிலையங்களிலும் இப்போக்குவரத்துக் கழகத்தின் தகவல் நிலையம் (Information Centre) உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், அத்தகைய வசதிகளை உருவாக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) உத்தேசமில்லை.

மாவட்டந்தோறும் சுற்றுலா வளர்ச்சி அலுவலர்கள் நியமனம் செய்யும் திட்டம்.

வினா 777—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா வளர்ச்சி அலுவலர்களை (Tourist Officer) மாவட்டம் தோறும் நியமனம் செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை?



தாம்பரத்திற்கு மினி பேருந்து விடும் திட்டம்.

வினா 799— திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம் தொகுதி கவுல்பஜாரிலிருந்து பொழிச்சலூர் பம்மல் நாகல்கேணி, பாண்ட்ஸ் கம்பெனி வழியாக தாம்பரம் செல்ல மினி பஸ் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இத்தடத்தில் சிறு உந்து விடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

கூட்டுறவுத் துறையில் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை பணி நிரந்தரம் செய்தல்.

வினா 800—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவுத் துறையில் 2 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை பணியாற்றி வரும் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

விடை—

பணியாளர் தேர்வாணைக் குழுவின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை ஆய்வாளர்களைத் தவிர தற்காலிகமாகப் பணி புரிபவர்களை நிரந்தரம் செய்ய விதிகளில் வழி வகையில்லை. இருப்பினும், அவர்களது பணிகளை முறைப்படுத்தத் தனித் தேர்வு நடத்துவது பற்றி அரசு தேர்வாணைக் குழுவுடன் கலந்தாலோசித்து வருகிறது.

## இணைப்பு I.

(திரு. எல். இளையபெருமாள் அவர்களால் கேட்கப் பெற்ற வினா எண். 672க்கான விடையைக் காண்க).

விவரப் பட்டியல்.

1972-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்கட்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின் விபரம்.

| மாவட்டத்தின் பெயர். | நபர்கள். | ஏக்கர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தென்னார்காடு .. .. | 91 | 193.78 |
| சேலம் .. .. | 1,166 | 2,310.47 |
| வடாற்காடு .. .. | 1,010 | 930.34 |
| மொத்தம் .. | 2,267 | 3,434.59 |

## இணைப்பு II.

அவைமுன் வைக்கப்படும் விவர அறிக்கை.

(திரு. என். பழனிவேல். —விவர எண். 678க்கான விடையைக் யைக் காண்க.)

மதுரை மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட முடிகாணிகைக் கொட்டகைகளி[ல்] பக்தர்களால் காணிக்கையாகச் செலுத்தப்படும் முடியை சேகரித்துக் கொள்ளும் முந்தைய குத்தகைக் காலம் 30-11-1980[ல்] முடிவடைந்தது. எனவே 1–12–1980 முதல் 30–11–1981 வரை ஓராண்டுக் காலத்திற்கு இந்த உரிமையை பொது ஏலத்தில் குத்தகைக்கு விட ஆலய நிர்வாகிகள் நடவடிக்கை எடுத்தனர். தற்போதைய ஆண்டுக்கு ஏலங்கள் மற்றும் டெண்டரில் கேட்கப்பட்ட உயர்ந்த கேள்வி சென்ற ஆண்டு குத்தகையை விட குறைவாக இருந்ததால் பல தேதிகளில் முடி குத்தகை மறு ஏலம் விடப்பட்டது. 1–12–1980 முதல் 28–2–1982 வரை உண்டான காலங்களுக்கு ஏலம் 15–10–1980, 3–11–1980, 10–12–1980 5–2–1981 மற்றும் 18–2–1981 ஆகிய தேதிகளில் நடைபெற்றதில் கீழ்க்காணும் உயர்ந்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன :—



| குத்தகை காலம். | ஏலத் தேதி. | ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த கேள்வி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1–12–1980 முதல் 30–11–1981 முடிய | 15–10–1980 | 2,31,000 |
| மேற்படி | 3–11–1980 | 2,32,150 |
| மேற்படி | 15–11–1980 (டெண்டர் மூலமாக.) | 2,34,000 |
| 1–1–1981 முதல் 31–12–1981 முடிய | 10–12–1980 | ஏலத்தில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டது. |
| 1–3–1981 முதல் 28–2–1982 முடிய | 5–2–1981 | 2,50,000 |
| மேற்படி | 18–2–1981 | ஏலத்தில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலம் நடத்தப் படவில்லை. |

15–11–1980 தேதியில் டெண்டர்கள் வரவேற்கப்பட்டன. இரண்டு டெண்டர்கள் மட்டுமே வரப் பெற்றன. இவைகளில் உயர்ந்த டெண்டர் தொகை ரூபாய் 2,34,000 ஆகும்.

சென்ற ஆண்டு அதாவது 1–12–1979 முதல் 30–11–1980 முடிய மேற்படி உரிமை ரூபாய் 3,10,000க்கு குத்தகைக்கு விடப்பட்டது. தற்போதைய ஆண்டுக்கு மேற்படி ஏலங்கள் மற்றும் டெண்டரில் கேட்கப்பட்ட உயர்ந்த கேள்வி சென்ற ஆண்டு குத்தகைத் தொகையை விட குறைவாக இருந்ததால் ஏலங்கள் ஒத்தி வைக்க நேர்ந்தன. ஆகவே ஏலம் விடுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 30.

பங்குனி 17, துன்மதி—திருவள்ளுவர்-ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

" வகையறிந்து வல்லவை வாய்சோரார், சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் ''

சொற்களின் அமைப்பையும் அழகையும் அறிந்த தூய்மை உடையவர் அவையில் உள்ளோரின் இயல்புகளை அறிந்து வல்லவர் கூடியுள்ள அவையில் வாய் சோர்ந்து பிழையானவற்றைச் சொல்லமாட்டார்.

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சாயர்புரத்தில் வாசனைத் திரவியங்கள் தயார் செய்யும் திட்டம்.

*வினா எண் 607—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் வாசனை திரவியங்கள் தயார் செய்யும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாயர்புரத்தில் வாசனை எண்ணெய் தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஒன்றை திருவாளர்கள் செண்பகம் பார்ம்ஸ் லிமிடெட் என்ற பெயரில் தனியார் துறையில் நிறுவியுள்ளார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி** : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய்மதிப்பீட்டில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது ? அந்தத் தொழிற்சாலைக்கு வெளிநாட்டு உதவி ஏதாவது கிடைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 30

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சாயர்புரத்தில்
அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொழிற்சாலையில் தற்போது
25 லட்சம் பெறுமானம் உள்ள வாசனைத் திரவியங்கள் செய்யும்
உற்பத்தித் திறனை உடையதாக இருக்கிறது. 20 தொழிலாளர்
களுக்கு 100-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு அந்தத் தொழிற்
சாலை வேலைவாய்ப்பு நல்குகிறது. அந்தத் தொழிற்சாலை
Yeden of Reggio calabaria Italy என்ற நிறுவனத்தோடு தொழில்
கூட்டுறவுடன் சாயர்புரத்தில் தொடங்கப்பட்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே,
திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்தில் வாசனைத் திரவி
யங்கள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் கிடைக்கிறதா?
அந்தத் தொழிற்சாலையில் வேறு என்ன என்ன பொருள்கள்
தயார் செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்தத் தொழிற்
சாலைக்கு தேவைப்படும் மூலப் பொருட்கள் அந்தப் பகுதியிலே
அவர்களே, மல்லிகை ஏறத்தாழ 40 ஏக்கர், முல்லை 6 ஏக்கர்,
செண்பகம் போன்ற செடிகளை அந்த நிறுவனமே அவர்
களுக்குச் சொந்தமாகவே பயிரிடுகிறார்கள்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் சொல்லும்போது மல்லிகை, முல்லை என்று கூறினார்கள்
அந்த மல்லிகை முல்லை தமிழ்நாட்டில் பரவலாக அதிகமாக
விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே
விவசாயிகள் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். ஆகவே ஆங்
காங்கே பயிர் செய்யக் கூடிய பகுதிகளிலே வாசனைத் திரவியங்கள்
தயாரிக்கின்ற—அந்தத் திரவியங்களுக்கு அதிக கிராக்கி இருப்ப
தால்—தொழிற்சாலைகளை உருவாக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழகத்தைப்
பொறுத்தவரையில் ஒட்டு மொத்தமாக 7 தொழிற்சாலைகள்
இருக்கின்றன. ஒரு தொழிற்சாலை சின்கோ மூலமாக ஊட்டியிலே
நடைபெறுகிறது. மற்ற 6 தொழிற்சாலைகளும் தனியார்களால்
நடத்தப்படுகின்றன. தனியார்கள் நடத்த முன்வந்தால் அரசு
எல்லா உதவிகளையும் செய்யும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, சாயர்
புரத்தில் ஆரம்பித்திருக்கக் கூடிய வாசனைத் திரவியங்கள்
செய்யும் தொழிற்சாலைக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதாக
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு பொருளா
தாரத் துறையில் ஏதாவது உதவி செய்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்த விவரம்
என்னிடத்திலே இல்லை.



1982 மார்ச் 30]

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்
சாலைகளுக்கான நிர்வாகத்தினர்கள் நியமனம்.

* வினா எண் 608—திரு. கே. கல்லன் : மாண்புமிகு
ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத்
தொழிற்சாலைகளுக்கு நிர்வாகஸ்தர்கள் நியமனத்தில் முறை
கேடுகள் நடைபெற்றன என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை
என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, மஞ்சூர் தேயிலைத்
தொழிற்சாலை, மேற்குநாடு தொழிற்சாலையில் தலைவர் உள்பட
நான்கு பேர்கள் நியமனம் செய்த நாளிலேயே ஓவர் டியூவாக
இருந்த நிலைமை இருப்பதாக டாக்குமெண்டரி எவிடன்ஸ் இருக்
கிறது. அதை அமைச்சர் அவர்கள் ஏற்கிறார்களா மறுக்கிறார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, குறை இருப்பவர்கள்மீது
தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு
தேயிலைத் தொழிற்சாலைகள் சிறு விவசாயிகள் காப்பாற்றப்பட
வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆனால் இந்த
ஆண்டில் பல சிறு விவசாயிகள் கூட்டுறவிலிருந்து விலகிச் சென்று
தனியார் துறையிடத்திலே சென்றிருக்கிறார்கள். இதற்கு
காரணம் நியமனத்தில் ஏற்பட்ட குறைகள் தான் என்று
சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன விளக்கம்
அளிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்
களே, அது உண்மைக்கு மாறான தகவல் என்று அரசு கருதுகிறது.
தேயிலை தொழிலில் அங்கே மட்டும் தேக்கம் இல்லை. இது
பொதுவாக அகில இந்திய ரீதியிலே தேயிலைத் தொழிலில்
தேக்கம், கணக்கம், மந்தம் எல்லா இடங்களிலும் இருக்கிறது,

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தத் தேயிலை
தொழிற்சாலைகளுக்கு நிர்வாகஸ்தர்கள் நியமனத்தில் முறை
கேடுகள் ஏற்பட்டிருக்கிறதா என்பது கேள்வி. இந்த நிறுவனம் விவ
சாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனம்.
அதிலே மகாசபை, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக்டர்ஸ்
போர்டு என்ற முறையிலே அது வேலை செய்கிறதா ? அப்படி
யானால் நியமனம் என்ற பிரச்சினை எங்கேயிருந்து வருகிறது.
ஆகவே அப்படிப்பட்ட முறைகேடுகள் இல்லையென்று அமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பின்னாலேயே நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறதாகவும் சொன்னார்கள். இந்த விவரங்
களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்
களே, சில நிறுவனங்களில், சில உறுப்பினர்கள் குறைகள் செய்கிற
போது, அந்த குறிப்பிட்ட உறுப்பினர்கள்மீது தொடர்ந்து, தொய்
வில்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது, எடுக்கப்பட்டு
வருகிறது. இனியும் எடுக்கப்படும். அடுத்து நியமனம் என்பது
அந்த நிறுவனத்தை 'வையபிளாக' ஆக்குவதற்கும், அந்த
நிறுவனத்தினுடைய சட்டத்திலே துணை விதிகள் இன்றைக்கு
நியமனத்தை உருவாக்கலாம் என்ற விதி இருப்பதனால் அதை
பயன்படுத்திக் கொண்டு தக்கவர்களை நியமித்து இன்றைக்கு
அந்த நிறுவனத்தை பக்குவமாக ஆக்குவதற்கும் அரசு முயன்று
வருகிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, தற்போ
துள்ள நியமன முறையால் அங்கே கூட்டுறவு தொழிற்சாலை
களுக்கு போதுமான பச்சை தேயிலை வரவில்லை என்பதை அரசு
அறியுமா ? பச்சை தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு
வருவதற்கு, தேயிலை தொழிலில் அனுபவம் வாய்ந்த பெரியவர்
களை நியமனதாரர்களாக போடுவதற்கு அரசு முன் வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்
களே, அனுபவமிக்கவர்கள் அங்கேயிருக்கிற சிறு தேயிலை விவ
சாயிகள் அவர்கள் மத்தியிலே இருந்து தான் இன்றைக்கு அரசு
நியமனம் செய்து வருகிறது.





## Appointment of Foreign Travel Agents to promote foreign Tourists

*Q. No. 681. THIRU N.S.V. CHITTHAN: Will the Hon. the Minister for Ioformation and Religious Endowments be pleased to State:

(a) whether the Tamil Nadu Tourist Development Corporation Ltd., has commissioned foreign travel agents to promote foreign tourist from Singapore into Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 1981
பிப்ரவரி, மார்ச் மாதங்களில் திருவாளர்கள் கனேஷ் ஏஜென்சீஸ்
மற்றும் திருவாளர்கள் ஜி. சி. நந்தா அன்ட் சன்ஸ் (பிரைவேட்),
லிமிடெட் ஆகியோரை மலேசியா மற்றும் சிங்கப்பூரில் தமிழ்நாடு
சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது விற்பனை முகவர்களாக
(General Sales Agents.) நியமித்துள்ளது. இந்த நிய
மனங்களுக்கு இந்திய அரசின் சுற்றுலாத் துறையும், ரிசர்வ் பாங்
கும் அனுமதி அளித்துள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சிங்கப்
பூர், மலேசியா போன்ற நாடுகளில் விற்பனை முகவர்களை
நியமித்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரி
வித்தார்கள். அவர்களுக்கு எந்த விகிதத்தில் கணக்கிடப்பட்டு
ஊதியம் வழங்கப்படுகிறது ? அல்லது கமிஷனாக வழங்கப்படு
கிறதா ? மேற்கொண்டு இப்படிப்பட்ட முகவர்களை நியமிக்க
அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
விற்கப்படும் டிக்கெட்டுகளின் கட்டணத்தில் $12\frac{1}{2}$ சதவீதம் அவர்
களுக்கு கமிஷன் தரப்படுகிறது. இதைப்போல வேறு வெளி
நாடுகளிலும் நியமிப்பதற்கு சுற்றுலாத் துறை பரிசிலித்துக் கொண்
டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, வெளி நாடு
களிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு
விளக்கமாக எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே தமிழகத்திலே
உள்ள கலாச்சாரத்தை, கலைகளை மிக நல்லமுறையிலே தெரிந்த
வர்சு ... அதே நேரத்தில் தமிழ் நாட்டு கைவினை பொரு

களை எல்லாம் விற்பனை செய்யக்கூடிய வகையிலேயும் — நாம் வெளிநாட்டுக்கு சென்றால் அங்கேயுள்ள பொருள்களை எப்படி விற்பனை செய்வது என்பதைச் சொல்லக்கூடிய வகையிலே நம்மையெல்லாம் அவர்கள் வரவேற்கிறார்கள் — அது போன்ற தமிழ் நாட்டு கலைப் பொருள்களை வருகிறவர்கள் வாங்கக்கூடிய வகையிலே எடுத்துச் சொல்ல அனுபவமிக்கவர்களை நியமிக்க அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே இருப்பவர்கள். அவர்கள் இங்கேயிருந்து வெளிநாடு செல்கிறபொழுது அனுபவம் பெற்றிருக்கிறார்கள். வெளிநாடுகளிலேயிருந்து இங்கே வருபவர்களுக்கு எந்த முறையிலே இவைகளைப்பற்றியெல்லாம் விளக்கம் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு வாய்ப்பில்லை. இப்பொழுது வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கெல்லாம், நம்முடைய கலைப் பொருள்களை, இங்கே தயாரிக்கப்படுகிற பொருள்களை, இங்கே இருக்கிற கலைகளை எல்லாம் சொல்லி, அவர்களுக்காக அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலிருந்து இங்கே வருகின்றவர்களுக்கு டிக்கட் விற்பனைக்கு மட்டும் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் இங்கே வருவதற்கு, அவர்கள் ஆசையைத் தூண்டுவதற்கு, வீடியோ டேப் மூலம், நம்முடைய கலைகள், மற்றைய இதர சிறந்த அம்சங்களைப் போட்டுக் காண்பிக்கவும் இந்த ஏஜன்சிகள் பயன்படுத்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சிகளை சுற்றுலாத் துறையிலேயே இப்பொழுது மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 682—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?



(ஆ) ஆம் எனில் எப்பொழுது திறக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் தற்பொழுது உள்ள மதுரை (தெற்கு), மதுரை (வடக்கு) என்ற இரு மாவட்ட வனத்துறை அலுவலகங்களைப் பிரித்து, மதுரை, திண்டுக்கல், கொடைக்கானல் என்ற மூன்று மாவட்ட வனத்துறை அலுவலகங்களை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. வருகிற ஆண்டிலிருந்து செயல்படும்.

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடைக்கானல் வட்டாரத்திலே காட்டிலாகாவுக்கு அதிக வருமானம் வரக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். இதை உத்தேசித்தாவது அங்கு இன்னும் அதிக அலுவலகங்களை, மாவட்ட அலுவலகங்களை ஏற்படுத்தி, இன்னும் அதிக வருமானத்தைப் பெற அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது கொடைக்கானலிலேயே தனியாக ஒரு மாவட்ட தனி அலுவலர் அதிகாரி—அலுவலகத்தை அரசு அமைக்க இருக்கிறது. இப்பொழுது கொடைக்கானலையே தலைமையிடமாகக் கொண்டுதான் அந்த டிஸ்டிரிக்ட் ஃபாரஸ்ட் ஆஃபீசர், அல்லது டிவிஷனல் ஃபாரஸ்ட் ஆஃபீசர் என்று அழைக்கப்படுகின்ற அந்த அதிகாரியின் செயலகம் அங்கே அமைக்க இருக்கிறோம். அது ஒரு முழுமையான அதிகாரம் பெற்ற வனத்துறை அலுவலகமாகச் செயல்பட இருக்கிறது.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே மாவட்ட வன அலுவலருடைய அலுவலகத்தை அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. அப்படி அமைக்கப்படும்போது, இப்பொழுது தேனியிலே ரேஞ்சாக இருக்கக் கூடியதைப் பிரித்து தேனி ரேஞ்ச், போடி ரேஞ்ச் என்ற இரண்டு பகுதியாகப் பிரிக்க அரசு ஏதும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் என்பது மிகப் பெரிய வருவாய் வருகிற பகுதியாகவும், மரங்கள், காடுகள், நிறைந்த பகுதியாகவும் இருக்கிற காரணத்தாலே, கொடைக்கானலை மாத்திரம் கவனித்து பார்ப்பதற்குத்தான் அந்த அலுவலகம் இப்பொழுது ஏற்பட இருக்கிறது. அதைப் போலவே, தேனி பகுதியிலேயே மிகப் பெரிய அளவிலே சுமார் 600 சதுர கிலோமீட்டர் அளவுக்குக் காடுகளும் மலைப் பகுதிகளும் இருக்கிற காரணத்தினால், தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்ட வனத்துறை அலுவலகம் அமைக்க வேண்டுமென்கிற செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[1982 மார்ச் 30

1981 டிசம்பர் முடிய திரையரங்குகள் கட்டுவதற்காக
வழங்கப்பட்ட கடன்தொகை.

*வினா எண் 683—திரு. கி. கோபாலன் : மாண்புமிகு செய்தி
அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம் 1981 டிசம்பர் முடிய
திரையரங்குகள் கட்டுவதற்கு எவ்வளவு ரூபாய் கடனாக வழங்கி
யுள்ளது ?

(ஆ) 1982 ஆம் ஆண்டு மேற்படி கழகம் மூலம் திரை
யரங்குகள் கட்டுவதற்கு கடன் வழங்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழ்நாடு
திரையரங்குக் கழகம் கிராமப் பகுதிகளில் திரையரங்குகள் கட்டு
வதற்கு 81 நபர்களுக்கு டிசம்பர் 81 முடிய ரூ. 87.25 இலட்சம்
கடன் வழங்கியுள்ளது.

(ஆ) தனி நபர்களுக்கு தமிழ்நாடு திரையரங்குக் கழகம்
அளிக்கும் நிதியுதவி திட்டத்தை தொடர்வது குறித்து செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதால் 1981–82-ல் கடன்
உதவி அளிப்பது செயற்படுத்தப்படவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமு : பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு திரைப்படக் கார்ப்பரேஷனிட
மிருந்து கடன் வாங்கும்போது சில சொத்துக்களைக் காட்டு
கிறார்கள். ஆனால், விக்கிரமசிங்கபுரத்திலே அப்படிப்பட்ட ஒரு
திரை அரங்குக்கு மோசடியாக சொத்து காட்டப்பட்டிருக்கிறது.
இப்பொழுது, கடைசியாக அந்தச் சொத்துபற்றிய துப்பும் இல்லை
இன்னும் சொல்லப் போனால், லைசன்ஸ் வாங்கிக் கொண்டு,
கடன் வாங்கிக் கொண்டிருப்பவர் ஒருவர், தானும் நடத்தாமல்,
பிறரையும் நடத்தவிடாமல் இருக்கிறார். அதாவது கிராமத்தில்
கதை சொல்வார்கள், வைக்கோல்படப்பில் நாய் படுத்துக் கொள்
ளும்.. தின்ன வருகின்ற பசுவையும் தின்ன விடாது ; தானும்
தின்ன முடியாது. அந்த முறையில் லைசென்ஸை வைத்துக்
கொண்டு, கடனையும் வைத்துக்கொண்டு தானும் கடனை
அடைக்க மாட்டார்கள், கடனை மற்றவர்களையும் அடைக்க
விட மாட்டார்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள். எனவே
இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவ
ரவர்களே, திரையரங்குக் கழகத்தின் மூலம், நான் ஏற்கெனவே
தெரிவித்ததைப்போல 81 நபர்களுக்கு 87¼ இலட்சம் ரூபாய் கடன்
வழங்கியிருக்கிறார்கள். 74 அரங்குகள் கட்டி முடிக்கப்பட்டிருக்
கின்றன. 65.21 இலட்சம் கடன் 31–12–81 நிலவரப்படி
பாக்கியாக இருக்கிறது. இப்படிக் கடனை வாங்கி அரங்குகள்
கட்டி, தொழிலையும் செய்து கொண்டிருப்பவர்கள் வாங்கிய
கடனை அரசாங்கத்திற்குக் கொடுப்பதில்லை என்ற முடிவோடு
செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் கடன்
வழங்குவதை இந்தக் கழகம் நிறுத்தி வைத்திருக்கிறது. மாண்பு
மிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல பல தவறுகள் நடந்
திருக்கின்றன. அவர்கள் தங்கள் ஜாமீன் பத்திரம், சொத்துக்
களைக் காட்டித்தான் கடன் வாங்க வேண்டுமென்ற நியதி இருக்
கிறது. ஆனால் அப்படித் தவறாக எழுதிக் காட்டிவிட்டு, யார்
சொத்தையோ காட்டிவிட்டுக் கடனை வாங்கி விட்டுப்போயிருக்கி
றார்கள். கடனைத் தீர்க்க முடியாத நிலையில், பங்குதாரர்கள்
கடனைத் தீர்த்து அந்த அரங்குகளைக் கட்டி முடித்து நடத்த
முன்வந்தால் அதை முறைப்படி அனுமதிக்கலாமா என்பதுபற்றி
சட்டத்துறை பரிசீலனை செய்து பல்வேறு நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று திரையரங்குக் கழகத்திற்கு அரசு அறிவு
றுத்தியிருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் திரையரங்குக்
கழகத்தின் மூலம் கடன் பெறுவது பல்வேறு காரணங்களால்
நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நகராட்சிகளும், பேரூ
ராட்சிகளும் தாங்களே தியேட்டர்களைக் கட்டுவதற்கு முன் வந்
தால் இந்தத் திரையரங்குக் கழகம் நிதியுதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவ
ரவர்களே, வரையறுக்கப்பட்ட இந்த முலதனத்தை வைத்து மிகப்
பெரிய அளவிற்கு நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவை
களுக்குக் கடன் அளிப்பது என்பது பெரிய அளவில் இயலாது.
1,20,000 ரூபாய்தான் அதிகப்படியாகக் கடன் வழங்குவது என்ற
ஒரு வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு
முதல்வரவர்களிடத்தில் இதைப்பற்றிய ஒரு கோப்பு சென்ற
பொழுது, இப்படிப்பட்ட கடன் வசதிகளை ஊராட்சி மன்றங்கள்
அல்லது நகராட்சிகளுக்குத் தருவது பற்றி பரிசீலிக்க வேண்டும்.
தனியாருக்குக் கொடுப்பதை நிறுத்தி வைக்கலாம் என்று சொன்
னதையொட்டித்தான் இப்பொழுது கடன் வழங்குவது நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து அரசின் பரிசீலனையில்
இருக்கிறது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் மூலம் கொடுக்கப்
பட்டுள்ள கடன் தொகையைத் திரும்பப்பெறுவதில் பலசிக்கல்கள்
இருக்கின்றன. பலயிடங்களில் வழக்குமன்றங்களில் வழக்கு
தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப் பணத்
தைத் திரும்பப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டு எத்தனை வழக்குகள்
தொடரப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 30

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவ ரவர்களே, அநேகமாக எல்லாப் பாக்கிகளுமே வழக்கு போட வேண்டிய சூழ்நிலையில்தான் இருக்கிறோம். இடையிலே இந்தப் பாக்கியை வசூல் செய்வதற்காக ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் விதி யின்கீழ் நடவடிக்கை எடுக்க முயற்சித்தோம். ஆனால் கடன் வாங்கியவர்கள்—கடனை வாங்கிவிட்டுத் திருப்பிக் கொடுக்காமல் அனுபவிக்கின்றவர்கள் அதையும் சாமர்த்தியமாக வழக்கறிஞர் களை வைத்து ஸ்டே வாங்கி விட்டார்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதற்குப் பெரிய நிபுணத்துவம் பெற்ற அறிஞர்கள் உதவி செய்வதற்குக் காத்துக் கொண்டிருக் கின்றசூழ்நிலையில், வழக்குகள் என்று போகும்பொழுது கொடுத்த கடனுக்கும் மேல நீதி மன்றத்திற்கும் செலவு செய்ய வேண்டிய சில நெருக்கடி இந்தத் திரையரங்குக் கழகத்திற்கு இருக்கிறது. வழக்குகளைப் பரீட்சார்த்தமாகப் போட்டுச் சிலவற்றில் வெற்றி பெற்றிருக்கிறது. வழக்கு மன்றத்திலே வெற்றி பெற்று விட் டால் மட்டும் பணம் வசூலாகி விடாது. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர ணம் அவர்கள் சொன்னதைப்போல கடன் வாங்கிய பலர் அந்தச் சொத்துக்களை வேறு பலருக்கு எழுதி வைத்து விட்டுச் சென்றி ருக்கிறார்கள். நம்முடைய சொத்து என்று போகின்றபொழுது நான்கைந்து பேர்கள் கடன் கொடுத்தவர்களாக வருகிறார்கள். அந்தக் கடன்களையும் தீர்க்கும் பொறுப்பு திரையரங்குக் கழகத் திற்கு வருகிறது. நல்லெண்ணத்தோடு முயற்சியெடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட உதவிகளைச் செய்யப் போனால் இவ்வ ளவு தொல்லைகளையும் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றிப் பரிசீலிப்பதற்காகத் தற்காலிகமாக இந்தக் கடன் வழங்கப்படுவதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு திரையரங்குக் கழகம் கொடுக்கும் கடனைத் தவறாகப் பயன்படுத்துவதாக அமைச்ச ரவர்கள் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த வகையிலே தியேட்டர் கட்டுவதற்குக் கடனாகக் கேட்டால் அவர் களுக்கு சால்வன்சி இல்லாமல் கடன் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சால்வன்சி வாங்கிக் கொண்டு கொடுத்த கடன்களே இப்படி இருக்கின்றன. சால்வன்சி வாங்காமல் இருந்தால் அது என்னவாகும் என்று தெரியும். அநேகமாக இந்தக் கடன்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரிலே வாங்கப்பட வில்லையே தவிர, அனேகமாக சட்டமன்ற உறுப்பினர்களின் தூண்டுதலினால் வாங்கப்பட்ட கடன்கள்தாம்.



[1982 மார்ச் 30]

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நம்முடைய திரைப்படக் கழகத்திற்கு இவ்வளவு நஷ்டம் என்று சொன்னார்கள். எவ்வளவு பேர்களுக்குக் கடன் கொடுக்கப் பட்டது. எவ்வளவு பேர்கள் நியாயமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் முன்னாலேயே சொன்னேன். 81 பேர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 87,25 இலட்சம் வழங்கப் பட்டது. 74 அரங்குகள் கட்டி முடித்து நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது. இப்போது 31–12–1981 நிலவரப்படி, 65.25 லட்சம் பாக்கியாக இருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களை இழிவு செய்யும் வகையில் திரைப்படங்கள் வந்திருப்பதாக இங்கே புகார் சொல்லப்பட்டது. அதற்குப் பதிலாக சட்டமன்ற உறுப்பினர்கள் படம் எடுத்தால் அதற்குத் திரைப்படக் கழகம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இது திரைப்பட அரங்குகள் கட்ட நிதி உதவி செய்கின்ற அமைப்புதான்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்ட கடன் நிறுத்தி வைக்கப்பட்டிருப் பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி கொடுக்கப் பட்ட கடனிலே தாழ்த்தப்பட்டவர்கள் யாருக்காவது கொடுக்கப் பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

சேலம் மாவட்டத்தில் விதைப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம்.

* வினா எண். 684—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விவசாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் சேலம்மாவட்டத்தில் எந்த இடத்தில் விதைப்பண்ணை நிலையம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது?

(ஆ) அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சேலம் மாவட்டத் தில் புதிதாக அரசு விதைப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் ஏதுப் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கிடமில்லை.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சீதோஷ்ண நிலை வளத்திற்கு ஏற்ப அங்கே பயிரிடக்கூடிய பயிர்களின் விதைகளை, சேலம் மாவட்டத்தில் டேனிஷ் பேட்டையில் வேளாண்மைத் துறையால் கையகப்படுத்தப்பட்ட 100 ஏக்கர் நிலத்தில் இனியாவது ஒரு விதைப் பண்ணை வைக்கும் செயற்குறிப்பினை அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே. டேனிஷ் பேட்டையில் ஏற்கெனவே விதைப்பண்ணை இருக்கின்றது அது போக மேட்டூர் அணை, முள்ளவேடு ஆகிய 2 பகுதிகளிலும் விதைப்பண்ணைகள் இருக்கின்றன. ஆக 3 இடங்களில் சேலம் மாவட்டத்திலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 685, 686, 687, 688 ஆகியவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### சென்னையிலுள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பெறும் மாணவர்கள் எண்ணிக்கை.

*வினா எண் 689—**திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள்?

(ஆ) சேர்க்கும் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) (21).

(ஆ) இம் மாநிலத்தில் ஹோமியோபதி மருத்துவமனையின் முன்னேற்றத்தைப் பொருத்து இது குறித்து ஆலோசிக்கப் படும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முயற்சி எடுக்கும்போது, தென் மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் படிக்கின்ற வகையில் அப்படி நிறுவப்படுகின்ற கல்லூரியை மதுரைப் பகுதியிலே நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, When particulars about bu[illegible]ngs were called for,



Pending selection of suitable buildings at Madurai, the GHMC has been permitted to function in the present buildings in t e KMC campus at Madras for the duration of the current academic year 1981-82 only. The Government decided to locate the Government Homoeopathic Medical College and Hospital Permanently near the Government District Headquarters Hospital, Ramanathapuram. The D.M.S. has been requested to send proposals for the acquisition of site and plans and estimates for the construction of buildings.

என்ற குறிப்பு இங்கே அனுப்பப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையிலே முகவை மாவட்டத்திலே ஒரு ஹோமியோபதி கல்லூரியை அங்கே அமைப்பதுபற்றி அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றது, பரிசீலனையில் இருக்கின்றது.

**திரு. எஸ். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கின்ற உபகாரச் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. இதை உயர்த்திக் கொடுப்பதற்கு வருங்காலத்திலாவது அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஸ்டைபண்டு மாதத்திற்கு ரூ. 95 ஆக இருந்தது. 17—1—1979 முதல் ஜி.ஓ.எம்.எஸ். எண். 65 என்ற உத்தரவின்படி அது 175 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பில்டிங்ஸ் பற்றிச் சொன்னார்கள். சென்னையில ஹோமியோபதி கல்லூரி பாழடைந்து இருப்பதாக கடந்த ஆண்டு இங்கே விவாதித்து இருக்கிறோம். தங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அந்த பில்டிங்ஸ் இப்போது சீர் செய்யப்பட்டதா? முறையான இடத்தில் அந்த மாணவர்களுக்கு ஹோமியோபதி கல்வி படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, அந்த பில்டிங் மிகவும் பழைய பில்டிங்காக இருக்கிறது. அதிலே கொஞ்சம் ஆபத்து இருக்கிற காரணத்தால், வேறு பில்டிங் கட்ட வேண்டுமென்று நில ஆர்ஜிதம் செய்ய உத்திரவு போட்டிருக்கிறோம். இருந்தாலும், இடையிலே அந்தக் கல்லூரி நின்றுவிட வேண்டாமென்பதற்காக, அங்கே சில தூண்கள் மாதிரி, சில ப்ராப்ஸ் கட்ட பொதுப்பணித் துறையிலே கொடுக்கப்பட்டு, இப்போது நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனாலும், பில்டிங் திருப்திகரமாக இல்லை.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, குறைந்த செலவிலே சிறந்த வைத்தியம் என்று சொல்வார்கள். ஹோமியோபதியிலே, தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 21 மருத்துவர்கள்தான் தேர்வு பெறுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில கிராமப் பகுதியிலே சென்று உதவி செய்யக்கூடிய முறையிலே, ஆண்டு ஒன்றுக்கு 200 ஹோமியோபதி

வைத்தியர்களை பயிற்சி செய்கின்ற வகையில், சென்னை, மதுரை
போன்ற இடங்களிலே, சிறந்த வகையில் கல்லூரி அமைக்க அரசு
ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர்
அவர்களே, கட்டிடங்கள் எல்லாம் சீராக ஏற்படுத்தப்பட்ட
பிறகு, அந்த எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று திட்ட
மிட்டு இருக்கிறோம் ரிஜிஸ்டர்ட் ஹோமியோபதி டாக்டர்கள்
என்று 1,5295 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே
இந்த வைத்தியத்தில ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் வேலையில்லாமலுள்ள டாக்டர்கள் **எண்ணிக்கை**

* வினா எண். 690—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு
மக்கள நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்[illegible]
விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற[illegible]க
டர்கள் 1980 டிசம்பர் முடிய வேலையில்லாமல இருப்பவர்கள்
எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு
அரசு என்ன ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே :** (அ) 31-12-1980
முடிய தமிழகத்தில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு முடித்து
மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் அலுவலகத்தில்
பணி வேண்டி பதிவு செய்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை
2,875 ஆகும். மேலும் 31—12—1980 முடிய வேலை வாய்ப்பு
நிலையங்களில 1,156 எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் பணி வேண்டி
பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அரசு நிர்வாகத்தின் கீழ் எல்லா துறைகளிலும் வேலை
யில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்குச் சாத்தியக்கூறு
களில்லை. மருத்துவத்துறையைப் பொறுத்தமட்டில் மருத்துவ
வசதிக்கேற்றவாறும் நிதி நிலைக்கேற்பவும் பணியிடங்கள்
அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர அவர்களே,
ஒரு பக்கத்திலே கிராமப்புறத்திலே டாக்டர்கள் இல்லை என்ற
நிலைமை இருக்கிறது. 2 பேர்களுக்கு 1 டாக்டர் என்று வேலை
செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வரமாட்
டேன் என்ற நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இங்கே பார்த்
தால் கிட்டத்தட்ட 2,875 பேர்களும், மற்றும் 1,156 பேர்களும்
தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொண்டிருப்பதாகச்
சொல்லப்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் கணக்கில்
எடுத்துக்கொண்டு, கிராமப்புறங்களிலே அவர்களை அனுப்பி
வேலை செய்ய ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மருத்துவர்களைப் பொறுத்தவரையில
அத்தனை பேரும், பதிவு செய்திருந்தாலும், வேலை வாய்ப்பு
அலுவலகங்களிலே பதிவு செய்திருந்தாலும்கூட ஒரு குறிப்
பிட்ட வேலை என்று வருகிற நேரத்தில் அத்தனை பேரும்
வருவதில்லை. அண்மையிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கூட
தேர்வு நடத்தியது, இப்போது ஹெல்த் டிபார்ட்மென்டிலே,
மெடிகல் சர்வீசிலே கிடையாது, ஆனால் எத்தனை இடங்களுக்கு
வேலை வாய்ப்பு இருந்ததோ அத்தனை இடங்களுக்கும் அவர்கள்
வருவதில்லை. இன்னும் காலியாக இருக்கிறது. ஆகவே மனு
செய்தவர்கள. They prefer a particular type of work அதுதான்
ன. வேலைவாய்ப்பு இல்லாத நிலைமை அவ்வளவு
அந்தத் துறையிலே என்பதை தெரிவித்துக்
றேன்.

(முற்பகல் 9-30)

**வெ. அரங்கராசன் :** தலைவரவர்களே, மலைப்பிர
தேசங்களுக்குச் சென்று வைத்தியம் செய்ய டாக்டர்கள் கிரமப
படுகிறார்கள். வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள்
தான் வைத்தியம் செய்யப்போகிறார்கள். பச்சைமலைப்
பகுதியில்கூட அப்படி இருக்கிறது. அவர்களுக்கு கூடுதல்
அலவன்ஸ் கொடுத்தால் ஒழுங்காக வைத்தியம் செய்யப்
போவார்கள். அரசு அதைப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது மூலக் கேள்விக்கு
சம்பந்தமில்லை.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, பிரைமரி
ஹெல்த் சென்டர்களில் அப்பாயின்ட் செய்வதற்கு டாக்டர்கள்
அவ்வளவாக வரவில்லை என்று ஏற்கனவே சொன்னார்கள்.
கடந்த ஆண்டு எத்தனை டாக்டர்கள் இன்டர்வியூவுக்கு வந்
தார்கள்? தேவை எத்தனை பேர்கள்? அதோடு ஏற்கெனவே
எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு, ஹவுஸ் சர்ஜன் முடிந்தவுடனே
சீனி[illegible]ட்டி அடிப்படையில் அவர்களை அப்பாயின்ட் செய்ய
அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே,
சென்ற ஆண்டு 1,400 பேர்களை எடுத்திருக்கிறோம். இப்போது
பி[illegible]ரி ஹெல்த் சென்டர்களில் (ஆரம்பச்சுகாதார நிலையங்கள)
1,229 டாக்டர்கள் பணியாற்றுக்கொண்டிருக்கிறார்கள். சீனி
யாரிட்டி அடிப்படையில் தற்காலிகமாகத்தான் நியமிக்க முடி
யும். ஆனால் தற்காலிகமாக நியமிக்க வேண்டாம் என்று அரசு
முடிவெடுத்திருப்பதால் தேர்வாணைக்குழு மூலம்தான் நாம்
அவர்களை நியமிககிறோம். தேர்வாணைக குழுவில் என்ன
சீனியாரிட்டியைச் சொல்கிறார்களோ அதை நாம் ஏற்றுக்
கொளகிறோம். இப்போது அந்தவகையிலேதான இருககிறது.
டி.எம்.எஸ். சைடில் 2,595 பேர்களும் டி.எம்.இ. சைடில் 1,226
பேர்களும் டி.பி.எச். சைடில் 1229 பேர்களும் இருக்கிறார்கள்,

[1982 மார்ச் 30

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று, பதிவு செய்துவிட்டு, வேலை இல்லாமல் இருப் பவர்கள 1156 டாக்டர்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கெனவே பணியில் இருப்பவர்கள் 4 ஆண்டுக்காலத் திற்கு லாங் லீவ் போட்டுவிட்டு அரபு நாடுகளுக்கு சென்றிருக் கிறார்கள். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான இடங்கள காலியாக இருக்கின்றன. அவர்கள் எல்லாம் இராஜினாமா செய்துவிட்டதாகக் கருதி, அந்த இடங்களில் வேலையில்லாமல் இருக்கிற டாக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அரபு நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். அங்கே நீங்கள் சொல்கிறமாதிரி ஆயிரக்கணக்கில் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் தகவல் சரியல்ல. அப்படி யாராவது லாங் லீவ் போட்டுவிட்டு சென்றால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு விடுவார்கள். ஏதோ 3, 4 பேர்கள் போயிருக்கலாம். உடனடியாக அவர்களை பணி நீக்கம் செய்து விடுகிறார்கள. முன்னால இருந்ததைவிட இப்போது ரொம்ப ஸ்டிரிக்டாக இருக்கிறோம். யார் லாங் லீவ் போட்டுவிட்டுச் சென்றாலும் தயவு தாட்சணியமின்றி நடவடிக்கை எடுக்கப்படு கிறது.

திரு. கோவைத் தம்பி : தலைவரவர்களே, தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு செய்யப்பட்ட டாக்டர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணியாற்ற ஒப்புக் கொள்ளாமல அந்த இடம் காலி யாக இருந்தால் மறுபடியும் தேர்வாணைக் குழுவிடம் கேட்டு பதிவு செய்துள்ள டாக்டர்களை அரசே நியமிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, தேர்வாணைக் குழு ஒரு பட்டியலை அனுப்புகிறது. அந்தப் பட்டியலில் இருக்கிறவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசாங் கத்திற்கு இருக்கிறது. அவர்களை ஒரு இடத்திற்குப் போட்ட வுடனே அவர்கள போகவிலலை என்றால் கொஞ்சம் கடுமை யான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நாம் போட்ட இடத்திற்கு அவர்கள் போகவில்லை என்றால் தயவு தாட்சணியமின்றி அவர்களை அந்த லிஸ்டிலிருந்து எடுத்து விட்டு மீண்டும் தேர்வாணைக் குழுவிடம் ஆள் அனுப்பச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்தவகையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அரசின் இந்த நடவடிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 29]

## சேலம் அரசுக் கலைக்கல்லூரிக்கு தந்தை பெரியார் பெயர் வைத்தல்

வினா —758 செல்வி பி. விசயலட்சுமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கும் சேலம் அரசு கலைக்கல்லூரிக்கு நூற்றாண்டு விழா நாயகன் தந்தை பெரியாரின் பெயரினை வைக்க அரசு முன் வருமா?

விடை—

சேலம் 7-ல் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கு தந்தை பெரிதாரின் பெயரினை வைக்க பொதுமக்களிடமிருந்தோ மற்றவர்களிடகிருந்தோ கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

## கொல்லிமலையில் பழ விற்பனைக்காக கூட்டுறவு விற்பனை சங்கம் தொடங்குதல்

வினா 759—செல்வி. பி. விசயலட்சுமி : மாண்புமிகு கூட் டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கொல்லிமலையில் பழ விற்பனைக்காக கூட்டுறவு விற் பனைச் சங்கம் ஒன்றினை தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

760—

## தமிழக அரசின் இருமொழி, மும்மொழிக் கொள்கைகள்

வினா 760—திரு. இரா. முத்தையா, திரு. வி. பி. பால சுப்பிரமணியன், திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் " இரு மொழிக் கொள்கை " யினை மறு பரிசிலனை செய்யுமாறும், மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தியும் அண்மையில் மத்திய அரசு தாக்கீது ஏதும் அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு சட்டம்
11/60 என்று இருக்கிறது. This Act of the Madras Legislatur
received the assent of the Governor of Madras. அந்தச் சட்டத்தில்
சில ஷரத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்தின் கீழ் நாம்
முழுமையாக நம்முடைய விருப்பதற்கு ஏற்பஇயங்க முடியாது பணி
யாக முடியாது ஆகவே சட்டத்தைத் திருத்தினால் நன்றாயிருக்கும்
கண்தானம் செய்கிறேன் என்று ஒருவர் கையெழுத்துப் போட்டு
எழுதிக்கொடுத்து இருந்தாலும், அவர் இறந்தபிறகு அவருடைய
உறவினர் ஒருவர் அதைத் தடுத்தால் கூட நாம் இறந்தவன்
கண்ணை எடுத்துக்கொள்ளமுடியாது. ஆகவே, இந்த 60வது
ஆண்டு சட்டத்தை தகுந்த முறையில் திருத்தம் செய்யவேண்டி
யிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை
இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்கிறேன்.

மற்றபடி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.
கண் தானம் என்று சொன்னால் கண் விழியையே எடுத்து
விடுவது என்பது அல்ல. கண்ணில் உள்ள 'கார்னியா' தான்
எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே இதை 'ஐ டொனே
ஷன்' என்பதைவிட 'கார்னியோ டோனேஷன்' என்று தான்
சொல்வது சரியாக இருக்கும். இதை மிக எளிதாக, சுலப
மாகச் செய்யலாம். அந்தச் சட்டத்தை திருத்தியும் செய்ய
லாம். மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தாலும் செய்யலாம்.
இலங்கையில் கண் தானம் செய்தால் புண்ணியம் வரும் என்று
நினைத்துச் செய்கிறார்கள். இங்கே கண் தானம் செய்தால்
ஏதாவது ஆகிவிடுமோ என்று பயப்படுகிறார்கள். சிறிய
நாடான இலங்கையில் இதை வெற்றிகரமாகச் செய்து வருகிற
போது, பெரிய நாடாக இருக்கும்—பெரிய மாநிலமாக இருக்கும்
—தமிழ் நாட்டில் இதை மிக நல்ல முறையில் செய்யலாம் என்று
நான் கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,
கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் தானம் அளிப்பதற்காக
இந்தக் கேள்வியின் மூலம் எனது கண்ணை நான் தானமாகத்
தரத் தயாராக இருக்கிறேன். அந்தப் பத்திரத்தில் கை
யெழுத்துப் போட்டுத் தர தயாராக இருக்கிறேன். இந்த
இலாகா பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற, மாண்புமிகு
அமைச்சர் அவர்களும் கண்தானம் செய்ய முன்வருவார்களா
என்று அறியவிரும்புகிறேன். அதைப்போலவே, இங்கேயுள்ள
மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கண் தானம் அளிக்கவேண்டு
மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்
களா?



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண் தானம் செய்வதாக ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள் அந்தச் செய்தி பத்திரிகைகளில் ஏற்கனவே வந்து இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி போன்றவர்கள் இந்த மாதிரியான இயக்கத்திற்கு முன் உதாரணமாக, இருந்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில், நான் ஏற்கனவே கண் தானம் செய்வ தற்கு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து இருக்கிறேன். பின்னால் எந்தப்பிரச்னையும் வரக்கூடாது என்பதற்காக என்னுடைய வீட்டிலே இருப்பவர்களிடத்திலும் அதிலே, கையெழுத்து வாங்கிக் கொடுத்து இருக்கிறேன். ஆகவே எனது இரண்டு கண்கள் இரண்டு கண்ணொளி இழந்தவர்க ளுக்குப் பயன்படும். இந்த வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கண் தானம் செய்ய முன்வர ஆரம்பித்தால், அதற்காக இயக்கம் நடத்த ஆரம்பித்தால், இலங்கையை விட மிக முன்னேற்றத்தில் நாம் இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண் தானம் செய் வது என்பது மிகச் சிறந்த பணி. ஆகவே கண்தானம் செய் கிறவர்களுக்கு அரசு விசேஷமாக ஏதாவது விருதுகள் வழங்கு வதாக இருந்தால், எல்லோரும் கண்தானம் செய்யத் தயாராக இருப்பார்கள். அப்படி ஏதாவது விருது வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தானத்திற்கு நன் கொடை கேட்கக் கூடாது. அதற்குப் பெயர் தானம் இல்லை.

செம்பட்டு பகுதியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை
களிலிருந்து வெளியாகும் கழிவு நீர்.

*வினா எண். 692—திரு. எம். அண்ணதாசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்க ளுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவரம்பூர் தொகுதியைச் சார்ந்த செம்பட்டு பகுதியில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையி லிருந்து வெளியாகும் கழிவுநீரினால் சுகாதாரக் கேடுகள் வருவது குறித்து அரசுக்கு பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளனவா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (அ) மற்றும் (ஆ)
திருவரம்பூர் தொகுதியைச் சார்ந்த செம்பட்டு பகுதியி
லுள்ள தோல்பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து

[1982 மார்ச் 30

வெளியாகும் கழிவு நீரால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் ஏதும் குறிப்பாக இதுவரை வரவில்லை.

திரு. எஸ். வைதுராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து கழிவு நீர் வருவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். மக்களிடம் இருந்து புகார் வரவில்லை என்று சொன்னார்கள். இந்த விடை அந்தக் கேள்விக்கு நேரடியான பதிலாக இருந்தாலும் கூட, இன்றைக்குத் தமிழ் நாட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற கழிவு நீர் விவசாயத்தையும், குடிநீரையும், சுகாதாரத் தையும் பாதிக்கின்ற காரணத்தால், மக்கள் நல்வாழ்வுத் துறை மட்டுமல்ல, தொழில் துறையும் சேர்ந்து இதற்கு ஒரு விமோ சனம் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுதியைப் பொறுத்த வரையில், சௌத் இந்தியா டானரி, தமிழ்நாடு டானரி 1 மற்றும் 2, என்கிற வகையில் 14 டானரிகள் இருப்பதாக ஒரு பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. அதிலே தமிழ்நாடு டானரி 1 மற்றும் 2, மற்றும் சையது ஜமால் டானரி ஆகியவை 6 மாதகாலமாகப் பணியாற்றவில்லை என்று தெரிகிறது. இருந் தாலும் கூட, நாம் இதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆங்காங்கு அவர்கள் பிட்ஸ் வெட்டி, அந்த பிட்ஸ்களுக்குள் தான் அந்தக் கழிவு நீரை விட வேண்டும் என்று உத்திரவிட்டு இருக்கிறோம். அது மட்டுமல்ல, அதற்காக இரண்டு மூன்று முறை கூடிப்பேசி, 31—8—1981 அன்று சில முடிவுகளை டிஸ்டிரிக்ட் கலெக்டர் நடத்திய கூட்டத்தில் எடுத்து இருப்பதாக அறிகிறோம். இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில், இந்தப் பதிலைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இது அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், பொது வாகத்தான் கேள்வி கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும் புதியதாக வந்திருக்கக்கூடிய சட்டத்தின்படி நிச்சயமாக தீவிர மாக இதிலே யார் தவறு செய்தாலும் நிர்தாட்சண்யமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 30]

(முற்பகல் 9.40)

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டைமான் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செம்பட்டு என்ற இடத்திலே எத்தனையோ ஆண்டுக்காலமாக இந்த துர்நாற்றம் இருந்து வருகிறது. இந்தப் பக்கம் இருந்து போகிறவர்களும், அந்தப்பக்கம் இருந்து வருகிறவர்களும், இருதரப்பாருமே அந்த துர்நாற்றத்தை அனுபவித்து வருகிறார்கள். ஆகவே அதையெல்லாம் தடுப்பதற்கு, இப்படி வெளியிலே போகக் கூடிய கழிவு நீரை, அப்படி போகாமல் தடுத்து, லீச் பிட்டு என்று சொல்லப்படும் குழியை வெட்டி அந்தத் தண்ணீரை அதனுள்ளேயே விடுவதற்கு, இந்த பேக்டரிகள் முன் வந்தால், இத்தகைய துர்நாற்றம் நிச்சயமாக அகற்றப்படும் என்பதையும் அரசு அவர்களுக்கு அறிவுறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். 31—8—1981 அன்று திருச்சி மாவட்ட கலெக்டருடைய தலைமையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

Before disposing of tannery offluents, the tannor should see that they are treated propely and made innocuous, so that they will not affect the health of people, cattle and crop, Tannery offluent with salt and chemical should not be ollowed to mix with irrigat- water, ion canals.

என்றெல்லாம் போட்டு, அந்த முடிவுகள் எடுத்துக் கொள்ளப் பட்டு திட்டவட்டமாக அதை செயல்படுத்தி வருகிறார்கள். அப்படி செயல்படுத்தாதவர்களின் மீது, இப்போது போட் டிருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளில் கழிவு நீரை அகற்றுவதற்கான நடவடிக்கை குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இனி மேல் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்சாலைகள் இத் தகைய முறையில் கழிவு நீரை வெளியேற்றுவதற்கான ஏற்பாடு களை செய்தபிறகுதான், அந்த உரிமங்கள் வழங்கப்படும் என்று சொல்ல அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று, இனிமேல் ஆரம்பிக்கப்பட விருக்கிற தொழிற்சாலையைப் பொருத்த வரையில், இதற்கென சரியான வகையில் ஏற்பாடு செய்து அனுப்பப்பெறவில்லை என்றால், அல்லது இதற்கென ஏற்பாடு செய்யப்பெறவில்லை என்றால், நிச்சயமாக அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் பேருந்துகளுக்கான கூடுகள் கட்ட அங்கீகாரம் பெற்றுள்ள தனியார் நிறுவனங்கள்

*வினா எண் 693—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பஸ் பாடி கட்ட அங்கீகாரம் பெற் றுள்ள நிறுவனங்கள் எத்தனை?

(ஆ) அங்கீகாரமில்லாமல் பஸ் பாடி கட்டுபவர்கள் பற்றி அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பஸ் பாடி கட்டுவதற் கான தனியார் நிறுவனங்களுக்கு பிரத்தியேகமான அங்கீகாரம் ஏதும் அளிக்கத் தேவையில்லை. ஆனால் பஸ் பாடி கட்டும் 31 நிறுவனங்கள் சிறு தொழில் நிறுவனங்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டு தொழில் நடத்தி வருகின்றன.

(ஆ) 1939 ஆம் ஆண்டின் மோட்டார் வண்டிகள் சட்டம் தொழிற்சாலைகளுக்கான சட்டம் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான நடைமுறைகள் எவற்றிலும் அரசு அங்கீகாரம் பெற்றுதான் பஸ் பாடி கட்டும் நிறுவனங்கள் நடைபெற வேண்டும் என்று எவ்வித விதிகளும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அங்கீகாரம் பெற்ற பஸ் பாடி கட்டும் தொழிற் சாலைக்கும், அங்கீகாரம் இல்லாமல் கட்டும் தொழிற்சாலைக் கும் கட்டுகிற செலவில் வித்தியாசம் இருப்பதால், அங்கீகாரம் இல்லாத தொழிற்சாலையில்தான் அதிகமான அளவில் பஸ் பாடிகளைக் கட்டக் கொடுக்கிறார்கள் என்று சொல்லு கிறார்களே. ஆகவே, இனிமேல் அங்கீகாரம் பெற்றவர்கள் தான் இருக்கவேண்டும் என்ற அளவில் அரசு சட்டத்தை திருத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்பாடி கட்டும் தொழிலை செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுதான் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை. சில தொழில்களை ஆரம்பிக்க எந்த கட்டுப்பாடும் தமிழகத்திலே இல்லை. ஆகவே, அங்கீகாரம் பெற்றிருக்கக் கூடிய வர்கள் பெறாதவர்கள் என்ற வேறுபாடு இல்லை. அதிலே சிலர் சிறு தொழில் அமைப்பின் கீழ் பதிவு செய்து கொண்டு கட்டு கிறார்கள். அதற்குரிய சலுகைகளைப் பெறுகிறார்கள். எனவே அவர்களைக் கட்டாயமாக அங்கீகாரம் பெறவேண்டும் என்று வற்புறுத்த அரசுக்கு எந்த பாத்தியத்தையும் இல்லை.





திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்களுடைய பஸ்கள் எங்கே கட்டப்படுகின்றன? நம்முடைய நிறுவனங்களிலேயா அல்லது தனியார் நிறுவனங்களிலேயா கட்டப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்து கழகங்களுக்குத் தேவையான பெரும்பாலான பஸ்பாடிகளை நாமே கட்டிக் கொள்கிறோம். அதிகமான அளவில் பேருந்துகளுக்கு கூண்டுகள் கட்டுகிற சூழ்நிலை வருகிறதுபோல, குறிப்பாக விரைவுப் பேருந்துகளின் கூண்டு கட்டுவதற்கு, தனியார்களிடம் கொடுத்து வெளியே கட்டப்படுகின்றன. 1—4—1982 லேயிருந்து எல்லாவற்றையும் நாமே கட்டலாம் என்று முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து கழகங்களில் பேருந்துகளின் கூண்டுகளைக் கட்டுவதில் சாதாரண பேருந்துகளுக்கு என்ன செலவாகிறது. சூப்பர் டீலக்ஸ் எனப்படும் பஸ்களுக்கு என்ன செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கூண்டு கட்டுவதைப்பொறுத்தவரையிலே செமி டீலக்ஸுக்கு 80,000 ரூபாய், சூப்பர் டீலக்ஸுக்கு 1,92,000 ரூபாய், ஏர்கன்டிஷண்ட் பஸ்ஸுக்கு 2,20,000 ரூபாய் என்ற வகையிலே செலவாகின்றது.

## ஆட்டோ ரிக்ஷாக்களில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்கள்.

*வினா எண் 694—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தவறாக மீட்டர் காட்டும் ஆட்டோ ரிக்ஷாக்களை தடை செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) இல்லையெனில் அதனைக்கட்டுப்படுத்த அரசு என்ன முயற்சி எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) மற்றும் (ஆ) டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷாக் களில்பொறுத்தப்படும்மீட்டர்களில் உள்ள குறைபாடுகளை நீக்கு வதற்காக, மீட்டர் திருத்துபவர்களுக்கு (மெக்கானிக்) அதிகாரச் சீட்டுகள் வழங்கப்படும். அதிகாரச் சீட்டு பெறாதவர்

மீட்டர் சரி பார்க்கும் பணியில் ஈடுபட முடியாது. அதிகாரச் சீட்டு பெற்றவர்களுக்கு தனிப்பட்ட மீட்டர் முத்திரை வழங்கப்படும். அவர் சரி செய்த மீட்டரின் மீது முத்திரையிடுவார். பின்னர் அந்தப் பகுதிவட்டாரப் போக்குவரத்து அலுவலர் மீட்டரை ஆய்வு செய்து அவரும் மீட்டர் மீது முத்திரையிடுவார். இதில் அதிகாரச் சீட்டுபெற்ற மெக்கானிக் ஏதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக தெரியவந்தால் அவரின் அதிகாரச் சீட்டு ரத்து செய்யப்படும். மேற்கூறிய அரசின் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை முதலாவதாக சென்னை நகரில் மட்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும் மீட்டர் குறைபாடுகளைக் கண்டறிந்து தவறு செய்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி போக்குவரத்து ஆணையர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தற்போது ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மினிமம் கட்டணம் ரூ. 1.70 என்று குறிப்பிடப்பட்டு மீட்டர் திருத்தப்பட்டுள்ளது என்று ஆட்டோ ரிக்ஷாக்களில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் 2 ரூபாய் மினிமம் கட்டணம்என்று சொல்லி ஆட்டோரிக்ஷாக்களின் உரிமையாளர்கள் சங்கம் என்ற பெயரால் மேலும் 20 சதவீதம் கூடுதலாகக் கேட்கிறார்கள். அரசாங்கம் அப்படி ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா? தற்போது மினிமம் கட்டணம் எவ்வளவு? சென்னை மாநகரில் எவ்வளவு ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன. மேலும் நாள்தோறும் விபத்துக்கள் ஏற்படுவதன் காரணத்தால் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கப்படுவதைத் தடை செய்ய அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதிதாக ஆட்டோக்களுக்கு பெர்மிட் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறோம். 6 மாதத்திற்கு ஒரு முறை 100 பெர்மிட் என்ற வகையிலே ரிலீஸ் செய்து கொண்டிருக்கிறோம். அதையும் கூட நிறுத்துகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றது.

அடுத்து இரண்டு மூன்று ரூபாய் பெட்ரோல் விலை ஏறியது. அப்படி ஏறியதற்குப்பிறகு இதுதான் கடைசி முறை இனிமேல் பஸ் கட்டணத்தை மாற்ற வேண்டாம் என்ற வகையிலே நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் பெட்ரோல் விலை ஏறியதன் காரணத்தால் அவர்களின் கட்டண விகிதங்களை மேலும் அதிகரித்து நிர்ணயிக்கவேண்டிய நிலைமை வந்துவிட்டது. அந்த அடிப்படையிலேதான் இன்றைய தினம் இருக்கக்கூடிய மினிமம் கட்டணம் 2 ரூபாய் என்று கருதுகிறேன்.





என்னிடத்திலே அந்தக் குறிப்பு இல்லை. சரியாக 27 ரூபாய் என்றுதான் இருக்கும் என்று நம்புகிறேன். அதுபற்றிப் பார்த்ததற்குப் பிறகு நான் மீண்டும் தெளிவாகத் தர விரும்புகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களான திரு. சுந்தரமூர்த்தி, திரு இராமலிங்கம் போன்றவர்கள் எல்லாம் ஆட்டோ விபத்துக்காளாகி நல்லவேளையாக சிறிய காயங்களோடு தப்பித்துவிட்டார்கள். ஆகவே ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் காரணத்தால் தான் போக்குவரத்திலே இப்படிப்பட்ட விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. போக்குவரத்துக்கு இடையூறுகளும் ஏற்படுகின்றன. ஆகவே இந்த ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மேற்கொண்டு உரிமம் வழங்காமல் இருக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மேற்கொண்டு வழங்காமல் இருப்பதற்கு ஆணை இல்லை. மேற்கொண்டு வழங்கவேண்டும் என்றால்தான் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆகவே அதற்கான ஆணையைப் பிறப்பிக்காமல் அரசாங்கம் இருந்துவிட்டாலே இனிமேல் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீட்டர் பொறுத்தப்பட்டு, மீட்டர் போட்டுத்தான் ஆட்டோ ரிக்ஷாவை ஓட்டவேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பு செய்கின்றபோது மீட்டரிலேயே தில்லுமுல்லு செய்து அதிகப்படியான கட்டணம் வருகின்ற வகையிலே ஏற்பாடு செய்து அதன்படி வசூலிக்கிறார்கள். இது ஒருபக்கம் இருந்தாலும் மீட்டரே போடாமல் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு முன்னாலே பல ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன. அங்கே இருந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போவதற்கு என்னிடத்திலேயே 4, 5 ரூபாய் கேட்கிறார்கள். மீட்டரைப் போடச் சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறார்கள். சர்க்கார் வளாகங்களுக்குள்ளே நிற்கின்ற ஆட்டோக்களே இப்படி இருந்தால் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே மீட்டரைப் போட்டு ஓட்டுகின்றார்களா என்பதை செக் செய்ய போலீஸ் இலாக்காவின் ஒரு பிரிவினருக்கு அதிகாரத்தைக் கொடுத்து, தவறு செய்கின்ற ஆட்டோ ரிக்ஷாக்களின் உரிமம் ரத்து செய்யப்படுமா? புதிய உரிமங்கள் கொடுப்பதில் தப்பில்லை, கட்டாயம் மீட்டர் போட்டுத்தான் கட்டணம் அதன்படி வாங்க வேண்டும் என்ற நிலையை அரசு ஏற்படுத்துமா?

[1982 மார்ச் 30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மேலவையிலே கூட இப்படிப்பட்ட கேள்வி
வந்தது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது
போன்ற தவறுகள் நடப்பதாகத் தகவல் வந்திருக்கின்றது
என்று சொல்லியதற்காகவே நம்முடைய எல்லா கட்சிகளையும்
எந்த கட்சிகளும் பாக்கியில்லை—சேர்ந்த உறுப்பினர்களும் ஊர்வ
லமாக இங்கே வந்தார்கள். அது ஞாபகம் இருக்கும் என்று
கருதுகிறேன்.

(முற்பகல் 9-50)

ஆனால் அரசாங்கம் அதற்காக விட்டு விடுவதில்லை. இப்
போது நாம் தனியாக 12 மோட்டார் வாகன ஆய்வாளர்களை
நியமித்து இதைக் கண்காணிக்கப் போட்டிருக்கிறோம். அந்த
அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்களின் உதவியை எந்தளவு
கேட்கிறேன் என்றால், தவறு நடக்கிற ஆட்டோக்கள் எவை
எவை என்று எழுதி வைத்து கொடுத்தால் நடவடிக்கை எடுக்க
சுலபமாக இருக்கும். இப்போதே மிகவும் கடுமைப்படுத்தியிருக்
கிறோம். மேலும் கடுமைப்படுத்த அரசுக்கு எந்தவிதமான
தயக்கமும் இல்லை.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்போம் என்று மேலவை
யில் சொன்னவுடனேயே அனைத்துக் கட்சியினரும் ஊர்வலமாக
வந்து தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
நிச்சயமாக அனைத்துக் கட்சிகளும் அதில் வந்திருக்காது.
காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் நிச்சயமாக வந்திருக்காது
என்று சொல்ல முடியும். அடுத்த செய்தியாக, இதில் கடுமை
யான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது என் வேண்டு
கோள். மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட
வேண்டும். காரணம், ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்
படுவதால், ஆட்டோக்களின் மீட்டர்களில் தில்லுமுல்லு
செய்வதால், எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுக்
கும் என்ற நம்பிக்கையில் தவறு செய்பவர்களை மீண்டும்
கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஒரு வேளை மாண்புமிகு
கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாமல் வந்து விட்டார்
களோ என்னவோ தெரியவில்லை. அதில் அவர்களாக நாங்கள்
இந்தக் கட்சிக்குச் சொந்தம், அந்தக் கட்சிக்குச் சொந்தம்
என்று பேசியதைக் கேட்டேன். அந்த மனுக்களை வாங்கிக்
கொண்டு அவர்களை அனுப்பிவிட்டேன். இப்போது மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசுக்கு அனுசரணையாக
சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். மற்றக் கட்சி
களுக்கும் வேண்டுகோளாக விடுத்திருக்கிறார்கள். அப்படி
ஒத்துழைப்பு இருந்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத்
தயாராய் இருக்கிறோம்.



1982 மார்ச் 30]

**1981 ஏப்ரலில் ஆந்திர அரசல் கைப்பற்றப்பெற்ற சுற்றுலா ஊர்திகள்.**

*வினா எண் 695—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1981 ஏப்ரலில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பஸ் ஒன்றை பர்மிட் போலியானது எனக்கூறி ஆந்திர அரசு கைப்பற்றியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) உரிமையாளர்கள் மீது தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் திங்களில் ஆந்திர அரசு பின்வரும் சுற்றுலா ஊர்திகளை கைப்பற்றியது:

1. MDF 5739.
2. TNC 8429.

(இ) மேலே கூறப்பட்ட ஊர்திகளுக்கு சுற்றுலா அனுமதி ஏதும் தமிழ்நாட்டில் வழங்கப்படாததினால் இந்த ஊர்திகளின் உரிமையாளர்கள் மீது தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நம்முடைய மாநிலத்தில் இருக்கிற சுற்றுலா வண்டிகளை அரசின் உரிமம் இல்லாமல் சென்றதாக ஆந்திர மாநிலத்தில் பிடித்திருக்கிறார்கள். நம் மாநில அதிகாரிகள், இந்த சுற்றுலா வண்டிகள் உரிமம் பெற்றிருக்கிறதா, அல்லது கட்ட வேண்டிய கட்டணத்தை ஒழுங்காகக் கட்டியிருக்கிறதா என்று ஏன் காலாகாலத்தில் பார்க்கவில்லையா ? அப்படி கண்காணித்துப் பார்த்திருந்தால் இந்தக் குறைபாடுகளை கண்டுபிடித்திருக்க முடியும் அல்லவா ? அப்படி கண்டு பிடிக்காததற்குக் காரணம் என்ன? இந்த வண்டிகள் மட்டும் தான் அனுமதி பெறவில்லையா ? எல்லா வண்டிகளும் காலாகாலத்தில் உரிமம் பெறுகிறதா என்பதை அரசு கண்காணிக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆந்திர மாநிலத்தில் சில ஊர்திகளை, நம் மாநில ஊர்திகளைப் பிடிக்கிறார்கள். நம் மாநிலத்தில் ஆந்திர மாநில ஊர்திகள் பலவற்றை பிடித்திருக்கிறார்கள். இதிலே, நம் மாநிலத்தில் ஓட்டுகிறபோது அவர்கள் அனுமதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை, காரணம் தமிழ்

நாட்டில் ஓட்டுவதற்குள்ள அனுமதி அவர்களுக்கு எப்போதும் இருக்கிறது. ஆனால் பக்கத்து மாநிலங்களுக்குச் செல்கிறபோது தனியாக அவர்கள் அனுமதி வாங்கி போக வேண்டும். அப்படி வாங்காமல் போனால்—நம் எல்லை வரை ஓட்டுவதற்கு அந்த அனுமதி வேண்டியதில்லை. காரணம், நம் மாநில எல்லைக்குள் ஓட்ட அவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்கள்—அதை அந்த மாநிலத்தில் உள்ளவர்கள்தான் பார்க்க வேண்டும். நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இப்படி அனுமதி வாங்காமல் வெளி மாநிலங்களில் பிடிக்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு ? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆந்திர மாநிலத்தில் பிடிக்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை மட்டும்தான் இருக்கிறது. மொத்தம் ஐந்து பிடித்திருக்கிறார்கள். அவர்கள் மீது அங்கிருக்கிற நீதி மன்றத்தில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எடுத்து, ரூ. 20,000, ரூ. 7,000, ரூ. 10,000 , ரூ. 6,000 என்று கணக்கின் அடிப்படையில் அவர்களுக்கு கூடுதல் வரி பைனாக வசூல் செய்து விட்டுவிடுகிறார்கள்.

காஞ்சீபுரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு ஏற்பட்ட விபத்து.

*வினா எண். 696—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்ற 6–9–1981 தேதியன்று காஞ்சீபுரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் இறந்து போனவர்கள் எவ்வளவு ? காயமுற்றவர்கள் எவ்வளவு ?

(ஆ) இந்த விபத்துக்கான காரணமென்ன ?

(இ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்து விபத்துக்கள் அதிகமாகி வருவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இறந்து போனவர்கள் இரண்டு. காயமுற்றவர்கள் நாற்பத்தொன்பது.

(ஆ) கழகப் பேருந்தின் ஓட்டுனரின் கவனக் குறைவால் இவ்விபத்து ஏற்பட்டது.



(இ) விபத்துக்களைக் குறைப்பதற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது.

(2) விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பு அறிவுரை வகுப்புகள் (SAFETY CLINIC INSTRUCTIONAL CLASSES) நடத்தப்படுகின்றன.

(3) விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்கள் ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கு மறு பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர்.

(4) போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

(5) அதி வேகத்தைக் கட்டுப்படுத்த " டைகொன் " என்றவேகக் கட்டுப்பாடு கருவிகளை பேருந்துகளில் பொருத்தப்பட்டு வருகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கழகங்களிலே நடத்தப்படுகின்ற பஸ்கள், உண்மையிலேயே பாதுகாப்பு அதிகமாக இருக்குமென்று நம்பிக்கை நாட்டு மக்களுக்கு உள்ளது ஆனால், அரசாங்கப் பேருந்துகள் ஒன்றோடொன்று மோதி, அதிலே அன்றைக்கு 2 பேர்கள் இறந்திருக்கிறார்கள் ; 40 பேர்கள் காயமுற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு, இந்த இரண்டு பஸ்கள் ஒன்றோடொன்றுமோதிக் கொள்வதற்கு, அவர்களுடைய கவனக் குறைவு மட்டும்தான் காரணமா அல்லது அவர்களுக்கு ஓட்டுவதற்கு இருக்கும்படியான வசதிகள் போதிய அளவுக்கு கொடுக்காமல், நேரம் சரியாகக் கொடுக்காமல், இதிலே கறாராக இல்லாமல் இருப்பதால் ஏற்படுகிறதா ? ஆகவே, இப்படிப்பட்ட நிலை எதனால் ஏற்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஓட்டுனர்களுக்கு வசதி ஏற்படுத்துவது என்று அவர் குறிப்பிடுவது, பேருந்துகள் நல்ல நிலைமையிலே உள்ளதா என்பதைப் பற்றிக் கேட்கிறார் என்று நம்புகிறேன். பேருந்துகள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லுகிறார்கள். அதே போன்று, நேரத்தைப் பொறுத்தவரை, சரியான நேரத்திலே, குறிப்பிட்ட நேரத்திலே கொடுக்கப்படுவதைப் பற்றிக் கேட்கிறார் என்று கருதுகிறேன். அதற்கென தேவையான நேரம் எவ்வளவோ, அதைப் போக்குவரத்துக் கழகத்திலுள்ள அலுவலர்கள் அதையெல்லாம் பார்த்துத்தான், தேவையான நேரத்தைக் கொடுக்கிறார்கள். ஒரு நபருக்கு கவனக் குறைவு

ஏற்பட்டாலும், இன்னொரு வண்டிக்கு விபத்து ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த விபத்து நடந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது,

திரு. ரு. ரமணி : தலைவர் அவர்களே, பேருந்துகளை ஓட்டுகின்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களிடத்திலே இதைப் பற்றிக் கேட்கும்போது, பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்தில் வருவதில்லை என்றும், அந்த வண்டிகளின் பாரமரிப்பு முறையாக செய்யப்படுவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். டிப்போக்களில் வண்டிகள் சரியான நேரத்தில் எடுக்கப்படுவதில்லை என்றும், அதே போல் வண்டிகளின் பராமரிப்பு, பிரேக் போன்ற கன்டிஷன்கள் எல்லாம் போதிய அளவு இல்லாமல் வண்டிகள் வருகின்றன என்றும் அவர்கள் புகார்கள் சொல்லுகிறார்கள், அது உண்மையாக இருக்குமானால் கறாராக டிப்போக்களில் புறப்படுவதற்கும், பேருந்துகள் கன்டிஷனாக ஒவ்வொரு பேருந்தையும் பரிசோதித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏறத்தாழ 7,000, 8,000 பேருந்துகள் அரசாங்கத்திலே ஓடுகின்ற நேரத்திலே, ஒன்றிரண்டு இப்படி இருக்கலாம் ; இல்லையென்று சொல்லத் தயாராக இல்லை. அப்படி ஒன்றிரண்டு இருக்கக்கூடும். ஆனால், பெரும்பாலான பேருந்துகள் மிக நன்றாகப் பராமரிக்கப்படுகின்றன. அங்கே பணியாற்றுபவர்களும் தொழிலாளர்கள்தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தவிர, பல நேரங்களில் வெளியே சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது, ஆங்காங்கே இதையெல்லாம் பார்த்து வருகிறோம். அப்படி பேருந்துகள் நன்றாகப் பராமரிக்கப்படுகின்ற காரணத்தால்தான், இங்கே விபத்துக்கள் குறைவாக இருக்கின்றன. வேறு மாநிலங்களைப் பார்த்தால், இங்குள்ள நிலைமை புரியும். அதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, இங்குள்ள பேருந்துகள் சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவர் அவர்களே, எத்தனைஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் பஸ்களை ஓட்டுகிறார்கள் ? இப்போதுவருகின்ற அந்த பஸ் இப்படிப்பட்ட பஸ்களை ஓட்டினால்தான், விபத்துக்களை தடுக்கலாம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதோடு, இப்படி விபத்தினால் இறக்கின்றவர்கள், காயமுற்றவர்களுக்கு உடனடியாகஅவர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகை கொடுக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்? இப்படிப்பட்டகளின் பாடி அதிக நீளமாக இருக்கிறது. அனுபவம் உள்ளவர்கள்



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதிலே ஓட்டுனர் உரிமம் ஹெவி லைசன்ஸ் பெற்றிருப்பவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம் ; தவிர இவர்களுக்குக்குறைந்த பட்சம் 2 ஆண்டுகள்பணியாற்றியிருக்க வேண்டுமென்று கணக்குப் போட்டு எடுக்கிறோம். அப்படி எடுக்கப்பட்டு, பின்பு அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறோம். அப்படிப் பயிற்சி கொடுக்கபடுகிற போது, சில பேர்களுக்கு ஹெவி லைசன்ஸ் பெற்று இரண்டாண்டுகள் ஆகியிருக்கும், ஆனால், ஓட்டியிருக்க மாட்டார்கள். அதற்காகத்தான் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு, அந்தப் பயிற்சியிலே தேர்ச்சி பெற்றவர்களை மட்டும் தான் இத்தகைய பேருந்துகளை ஓட்டுவதற்கு அனுமதிக்கிறோம். உடனடியாக நஷ்ட ஈடு கொடுப்பதைப் பற்றிக் கேட்டார்கள். அவர்களுக்கு அதற்குத் தகுதியிருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொடுக்க சில சட்ட திட்டங்களை நாம் வைத்திருக்கிறோம். அதைப் பார்த்து, தகுதியுள்ளவர்கள் என்று தெரிந்தவுடன், கொடுத்து விடுகிறோம்.

(முற்பகல்-10 00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. அ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளை ஓட்டுகின்றவர்கள் வழியில் நடக்கின்றவர்களைப் பயமுறுத்துகின்ற வகையிலே ஓட்டுகிறார்கள். அதற்கு முக்கிய காரணம் ரோடு ரூல்ஸ், சாலைவிதிகளை சரியாக கடைப் பிடிக்காததால் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவைகள் சரியாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றனவா என்பதை பிளையிங் ஸ்குவாட் வைத்து கண்காணிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பிளையிங் ஸ்குவாட் சரியாக சாலைவிதிகளை அவர்கள் கடைப் பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று அனுப்பினால் அநேகம் பேர்கள் உள்ளே வருவார்கள், ஓட்டுநர்கள் ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் தவறாக கடைப் பிடிக்காத நிலைமை இருக்கலாம். ஆனால் பொதுவாக பாதை விதிகளைக் கடைப் பிடிக்காத நிலைமை இருந்து வருகிறது, சரியாகப் பின்பற்றுகின்ற நிலைமை குறைந்து வருகிறது. நாம் போகிறபோதே பார்க்கிறோம். அப்படிப் பட்ட நிலைமையை மாற்றியமைப்பதற்காக பொது மக்களுக்கு அதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பை நாம் ஏற்படுத்த வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கே நன்றாக இருக்கிறது என்று. செத்தவரின்

மனைவி—செத்தவர் செத்தவர் தான்—மற்ற மாநிலத்திலே இரண்டு பேர்கள் செத்து இருக்கிறார்கள் என்று சொல்லி நம்முடைய மாநிலத்திலே ஒருவர்தான் செத்திருக்கிறார் என்று இருக்க முடியாது. லோங் டிஸ்டன்ஸ் பஸ்கள் எல்லாம் போய்வந்து அரை மணி நேரத்திற்குள்ளாக மெயின்டெயின் பண்ணப்பட்டு உடனே —ஒன் அவரிலே— மறுபடியும் ஓடிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. லேட்டாக வந்தால்—வித்-இன் பிப்டின் மினிட்ஸ் ஷெட்டுக்கு வருகிறது, உடனே கொஞ்ச நேரத்திலே மெயின்டெயின் பண்ணப்பட்டு அனுப்பப்படுகிறது. இதனால் ஆக்சிடன்ட்ஸ் ஏற்படுகிறது. இப்படி கேப்ஸ் இல்லாத காரணத்தினாலே பல விபத்துக்கள் நடக்கின்றன. ஆகவே இதை சீரியஸாக எடுத்துக்கொண்டு இவைகளை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களை ஒப்பிடுவது ஒரு உதாரணத்திற்காகத் தானே தவிர இங்கே குறைவாக இருக்கிறது, ஆகவே பரவாயில்லை என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிற நிலை இல்லை. அதுவும் கூட நடக்கக் கூடாது என்ற முறையிலே உங்களைவிட அரசாங்கம் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். விரைவுப் பேருந்துகளை பொறுத்தவரையில் சரியான நேரம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். 10 சதவீதம் ஸ்பேர் பஸ் வைத்திருக்கின்ற நிலையைக் கூட நாம் மாற்றி இப்போது 15 பஸ்கள் வைத்திருக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பேருந்தும் வாரத்திலே ஒரு நாள் கட்டாயம் நிறுத்தப்படுகிறது. ஆகவே பராமரிக்கப்படுகின்ற ஏற்பாடுகளை நாம் செய்து இருக்கிறோம்.

### சேலம் மாவட்டத்தில் சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 697—செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இத்தகைய திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சேலம் மாவட்டத்தில் தனியார் யாராவது சந்தன ஊதுபத்தி செய்கிறார்களா ? அவர்களுக்கு சந்தன ஊதுபத்தி செய்வதற்கு அரசு உதவி செய்ய முன் வருமா ?



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தற்சமயம் ஒன்பது தனியார் நிறுவனங்கள் ஊதுபத்தி தொழிலுக்காக பதிவு செய்து ஊதுபத்தி தயாரித்து வருகின்றன. ஆனால் மேற்படி நிறுவனங்கள் சந்தன ஊதுபத்தி உற்பத்தி செய்வதில்லை. இம்மாவட்டத்தில் இரண்டு நிறுவனங்கள் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெய் உற்பத்தி செய்து வருகின்றன. மேற்கூறிய நிறுவனங்கள் சந்தனக் கட்டையிலிருந்து சந்தன எண்ணெய் எடுத்த பிறகு மீதமுள்ள சந்தனக் கழிவு சக்கைகளை பெங்களூரில் உள்ள ஊதுபத்தி தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சந்தன ஊதுபத்தி செய்ய விற்பனை செய்து வருவதாகத் தெரிகிறது. தற்சமயம் இயங்கி வரும் ஊதுபத்தி தொழில் நிறுவனங்கள் சந்தன ஊதுபத்தி தயார் செய்ய முன் வந்தால் அந்நிறுவனங்களுக்கு சந்தன ஊதுபத்தி உற்பத்தி செய்யத் தேவையான தொழில் நுட்ப அறிவுரைகளும் உதவிகளும் சேலம் மாவட்டத் தொழில் மையம் மூலம் அளிக்கப்படும்.

செல்வி ப. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, இந்த சந்தன ஊதுபத்தி தயாரிக்கும் தொழிற்சாலை வேறு எந்த மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது ? அதேபோல் சந்தன ஊதுபத்தி தயாரிக்க தனியார்கள் முன் வந்தால் கதர் வாரியம் அதற்கு உதவிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தற்சமயம் தர்மபுரி மாவட்டத்திலே ஆஞ்செட்டி என்ற ஊரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் ஊதுபத்தி குச்சிகள் தயாரிக்கும் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல் மேலும் புதியதாக ஊதுபத்தி தொழில் தொடங்க முன்வரும் தொழில் முறை முனைவர்களுக்கு சந்தன ஊதுபத்தி தொழில் தொடங்க தொழில் நுட்ப அறிவுரைகளும் உதவிகளும் செய்யப்படும்.

### Raising the existing Protection Walls for Sea erosion in Nagapattinam

Q. No.—698 THIRU R. UMANATH: Will the Hon. the minister for Khadi and Public works be please to state:

(a) Whether the Government has any proposal to raise the existing protection walls for sea erosion in Nagapattinam town, and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) நாகப்பட்டினம் நகரில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கடல் அரிப்பு தடுப்புச் சுவர்களை மேலும் உயர்த்த திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், நாகூர் பகுதிகளில் கணிசமான பகுதி கடலோரத்திலே கிட்டத்தட்ட கடலிலே ஒரு லெவல் வரைக்கும் போய்க் கொண்டிருக்கிறது. வருஷாவருஷம் கடலரிப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. வீடுகளும் பாதிக்கப்படுகின்றன. புயல் அடிக்கிற போது நாச நஷ்டங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கின்ற அந்த சுவரின் உயரத்தைத் தாண்டித்தான் இப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் சுவற்றின் உயரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் இப்போதாவது பரிசீலனைக்கு எடுத்து. பின்னால் வரக்கூடிய நஷ்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், நாகூர் வரை கடலரிப்பு இல்லையென்றும், வெள்ளக்காலத்தில் கடல் அலைகள் அதிகமுள்ள நேரத்தில் கடல் நீர் பெருக்கெடுத்து வெள்ளமாக வருவதாக கருத்து தெரிவித்ததை ஒட்டி தஞ்சாவூர் ஆட்சியாளர் மேலே கூறப்பட்டுள்ள இடத்திலே கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததாகவும், கடல் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது அவசியம்தானா என்பதை ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் பார்வையிட்டு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த அறிக்கையிலே நாகப்பட்டினம் துறைமுகத்திலேயிருந்து ஆயர்பட்டு தெரு, நம்பியார் நகர், சம்பந்தம்பேட்டை மற்றும் நாகூர் நடுப்பம் போன்ற கிராமங்கள் கடற்கரையை ஒட்டி இருப்பதாகவும் கடல் அரிப்பு பற்றிய பிரச்னை இதுவரையில் எதுவும் எழவில்லை என்றும், தற்போதுள்ள நாகூர்—நாகப்பட்டினம் ரெயில் பாதை முக்கிய சாலைகளோடு மேற்கூறிய 4 கிராமங்கள் இணைப்புச் சாலைகளுடன் இணைக்கப்



பட்டுள்ளன என்றும், ஆகவே மேற்கூறிய நாகூர், நாகப்பட்டினம் பகுதியையோ, அந்தக் கிராமங்களையோ, கடலரிப்பிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துள்ளார்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் கொடுத்து இருக்கிற அறிக்கையைப் பார்த்தால் அங்கே இருக்கக்கூடிய நிலைமைக்கு முற்றிலும் மாறான ஒரு நிலைமை இருக்கிறது. நான் அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். அந்தப் பகுதிகளில் பிரதானமாக மீனவர்கள் தான் குடி இருக்கிறார்கள். நானே கண்ணாலே கடலரிப்பைப் பார்த்தேன். அப்படி இருக்கிறபோது தவறான ரிப்போர்ட் வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது மீனவர்கள் தான் மிகவும் பாதிக்கக்கூடிய நிலைமையில் இருப்பதால், ரிப்போர்ட் முரணாக வந்திருக்கிறபோது அந்த இலாகாவின் அமைச்சர் அவர்கள் நேராக வந்து பார்வையிட்டு பிறகு முடிவு செய்வதற்கு முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற தடுப்பு சுவரை மேலும் உயர்த்த முடியுமா என்பதுதான் கேள்வி. கொடுத்திருக்கிற அறிக்கை முரண்படவில்லை. அதற்கு இப்போது அவசியம் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அரிப்பே இல்லையென்று அவர்கள் முரணாகச் சொல்லவில்லை. இருக்கிற தடுப்புச் சுவரை மேலும் அதிகமாக உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அதற்கான அவசியம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய கன்டென்ஷன். நான் அந்த தொகுதி உறுப்பினர், நானே கடலரிப்பை கண்ணாலே பார்த்தேன். ஆகவே தான் அமைச்சர் அவர்கள் விசிட் பண்ணுவதற்கு முன் வருவாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை நான் உணர்கிறேன். ஆகவே அதிகாரிகள் அங்கே செல்கிற போது நான் உடன் சென்று பார்வையிடுகிறேன், பிறகு பிறகு முடிவெடுக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 683 குறித்து ஒரு விளக்கத்தினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தத் திரையரங்க கடனுதவி பற்றி எழுப்பப்பட்ட துணை வினாவிலே எத்தனை பேர்கள் கடன்களை அடைத்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். 81 பேர்களுக்கு கடன் வழங்கியதில் 28 பேர்கள் முழுவதையும் கட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினை.

*உறுப்பினர்களுக்கான சில சலுகைகளை அறிவிக்கும்போது அமைச்சர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் குறித்து.*

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் ஒரு சந்தேகத்தை தெரிந்து கொள்வதற்கு உங்கள் மூலமாக இந்த அவையிலே சொல்கிறேன். நேற்றையதினம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு சில சலுகைகளை அளித்து பதில் அளிக்கிறபோது பேருந்திலே பயணம் செய்யக்கூடியவர்கள் தங்களுடைய மனைவியை அழைத்து செல்லலாம். அதிலே தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காக ஒன்றை சொன்னார்கள். அதற்கு அடுத்து சொல்கிற போது மனைவியை அழைத்துச் செல்லாத நேரத்தில் வேறு ஒருவரை அழைத்துச் செல்லலாம், ஆனால் கூடுமானவரையில் அவர்கள் ஆண்களாகவே இருக்கவேண்டும் என்று சிரித்துக் கொண்டே சொன்னார்கள். பத்திரிகையிலே செய்தி வருகிறபோது அதுவேறு விதமாக உறுப்பினர்களை தவறாக, கேவலமாக சொல்கிறதைப் போல தொனிக்கிறது. இருக்கிற உறுப்பினர்கள் தவறு செய்யக் கூடியவர்கள் என்ற அர்த்தம் தெரிகிறது. ஆகவே அதை மாற்றியமைத்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் செல்கிறபோது அவர்களுடைய மனைவியை அழைத்துச்செல்லாதபோது தாய், தங்கையை அழைத்து செல்வார்கள். அப்படி எல்லோரும் செல்வதற்கு வசதியாக குறிப்பிலே இருக்கிற அப்படிப்பட்ட வாசகத்தை நீக்கிவிட்டு வேறு வாசகத்தை அமைக்க நீங்கள் ஒரு அறிவிப்பு செய்யலாமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 30]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. இனிமேல், இந்தக் குறிப்பை மாற்றி, நான் மட்டும்தான் படிக்க வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் ஒரு வேடிக்கை குறிப்பாகத்தான் சொன்னேனே தவிர, எந்தத் தனிப்பட்ட உறுப்பினரையும் குறை சொல்ல வேண்டுமென்றோ அல்லது குற்றம் சாட்ட வேண்டுமென்றோ அல்ல. அப்படிப்பட்ட எண்ணம் எக்காரணம் கொண்டும் வெளியிலே இருப்பவர்களுக்கு வரக் கூடாது என்ற நோக்கத்திலே சொன்னேனே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொன்னேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். அது வேடிக்கையாகச் சொல்லப்பட்ட ஒன்றுதான்.

(3) தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியைச் சொல்லாததற்கே வானொலி மீது உரிமைப் பிரச்சினை அனுமதிக்கப்பட்டு, அதற்கு வானொலி வருத்தம் தெரிவித்து இருக்கிறது. ஆனால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சனை பற்றி அறையில் வந்து சொல்லுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

திரு. ஏ. ஒ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சண்முகம் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடுகின்ற இந்த நேரத்திலே தமிழகத்திலே மேலெழுந்த பல முக்கிய சம்பவங்கள் பற்றி நாங்கள் பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால், வழக்கமாகவே பெரும்பாலும் அவைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று வருகின்றன. இன்றைக்கு நீங்கள் சொன்னதிலிருந்து நான் புரிந்துகொள்வது, இன்றைக்குப் பதட்ட நிலையே இல்லை...........

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நல்லவேளையாக இன்றைக்குப் பதட்ட நிலை இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஒன்றாவது எடுத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் அனுப்பிய சிலவற்றின் பொது முக்கியத்துவம் காலத்தின் காரணமாக இழந்து விடுகிற காரணத்தால், சிலவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டியதாக இருக்கிறது. சிலவற்றிற்கு அரசிடமிருந்து பதில் கேட்டு வராமல் இருப்பதன் காரணமாக இங்கே எடுக்கப்படாமலிருக்கிறது. தினசரி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டு நானிருந்தேன். இன்றைக்கு நான் எடுத்துக் கொள்ள முடியவில்லை. காரணம், என்னிடத்திலே பதில் எதுவும் இல்லை. (குறுக்கீடு) பதிலை வாங்கித் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதற்கான முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன். நாளையிலிருந்து ஏதாவது ஒரு பிரச்னையைப் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன்.

**திரு. ஏ. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு செமஸ்டர் தேர்வுக்குப் பணம் கட்டுவதற்குக் கடைசி நாள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 5-வது செமஸ்டர் தேர்வு.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல்கலைக் கழகம் தனிப்பட்ட 'பாடி'. அது இங்கே இந்த நேரத்திலே வராது. 'செமஸ்டர்' எல்லாம் இங்கே வராது, இங்கே கேட்க முடியாது, பல்கலைக் கழகத்தைக் கேட்க வேண்டும்.

**திரு. என். வி. என். சோமு :** பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக முடிவினால் 40,000 மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மிகமிக அவசரமான பிரச்னை. எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். அதை அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எடுத்துக் கொள்கிறேனா, இல்லையா என்று பாருங்கள்; பிறகு கேளுங்கள்.



## 4. கவன ஈர்ப்பு.

### அ. கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்து உள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கோதையாறு மின்நிலையம் 2-ல் 40 மெகாவாட் மின் திறன் கொண்ட மின் இயக்கி 5-3-1982 வரை அதனுடைய முழுத் திறனான 40 மெகா வாட்டை உற்பத்தி செய்து வந்தது. 5–3–1982 அன்று மாலை மின் இயக்கியின் முக்கிய பகுதியான மெயின் எக்ஸைட்டரில் திடீரென பழுது ஏற்பட்டதன் காரணமாக அந்த இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டது. இயந்திரத்தின் பழுதடைந்த பகுதியைச் செப்பனிடும் பணி நடைபெற்று இப்பணி முடிவுற்று நேற்று இரவிலே இருந்து இயந்திரம் செயல்படத் துவங்கியுள்ளது.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறிலே இரண்டாம் பவர்ஹவுசில் அந்த 40 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய நிலையத்தில், முக்கியமான இயந்திரக் கோளாறு என்று சொல்கிற எக்ஸைட்டர் சுமார் 1 மாத காலம் வேலை செய்யவில்லை.

ஏற்கனவே அந்த எக்ஸைட்டருக்கு ஒரு ஸ்பேர் வாங்க வேண்டுமென்று அங்கே உள்ள ஊழியர்கள் ஓராண்டுக்கு முன்பே அதிகாரிகளிடத்திலே கூறியுள்ளார்கள். அந்த எக்ஸைட்டர் வெளிநாட்டிலேயிருந்து வரவழைக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. தற்காலிகமாக அது பழுது பார்க்கப்பட்டாலும் அது மூன்று மாதங்களுக்கு மேல் ஓட்டுவதற்கு லாயக்கானதாக இல்லை என்று அங்கேயுள்ள முக்கியமான ஊழியர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். மின்சாரம் ஏற்கனவே நமக்குப் பற்றாக்குறையாக உள்ள இந்த நேரத்தில் உடனடியாகப் பழுது பார்ப்பதோடு கூட இன்னும் ஸ்பேராக அந்தப் பொருளை வைத்திருந்தால் இந்தப் பகுதியை ஓட்டிச் செல்ல முடியும் என்று சொல்கிறார்கள். அதை அரசு நடைமுறைப்படுத்துமா? அதற்குச் சுற்றிலும் உள்ள கார்பன் பிரஷ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தேய்ந்து போய் விடுகிறது. அதையும் முறையாகப் பழுது பார்த்து மின்சாரம் இடர்ப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

[1982 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஏதாவது பேச வேண்டுமென்றால் அதற்கு இரண்டு மூன்று லவுஞ்சுகள் இருக்கின்றன. அங்கே போய் பேசலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எக்ஸைட்டரை பொறுத்தவரையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதற்கு ஸ்பேர் வாங்கி வைக்க வேண்டுமென்ற யோசனை ஏற்றுக் கொள்ளத்தக்கது. ஏற்கனவே ஊழியர்கள் இதுகுறித்துக் கடிதம் கொடுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதத்தின் நகலை எனக்குக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்காதவர்கள்மீது நான் நடவடிக்கையெடுப்பேன் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கார்பன் பிரஷ்ப் பொறுத்தவரையிலும் கவனிக்கப்படும்.

* திரு. பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மெஷினுடைய முக்கியமான பாகங்கள் செக்கோஸ்லோவேகியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த மெஷினைப் பற்றி அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்கு ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே கொண்டுவரப்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் வாங்கி வைப்பதன் மூலம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க முடியும் என்று அரசாங்கத்திற்கு மேலதிகாரிகளுக்கு அங்குள்ளவர்கள் எழுதி கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் காலாகாலத்தில் இதை செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாகப் பக்கத்தில் உள்ள கயத்தாறுக்குச் சப்ளை செய்யப்படுகிறது. மின்சாரம் கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகத் தடைபடுகிறது. ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற நேரத்தில் இப்பொழுது மேலும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மின்தடையை நீக்குவதற்கு அதிகமாக ஆயத்தங்கள் ஒருபுறத்தில் இருந்தாலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இயந்திரங்களுக்கு முக்கியமான ஸ்பேர் பார்ட்ஸை முன்னதாகவே வாங்கி வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் உணர்வினை அரசு நன்றாகப் புரிந்துகொள்கிறது. அதற்கேற்ற முறையில் வழிவகைகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.



1982 மார்ச் 30]

ஆ) பச்சை மிளகாய்ப் பயிர் நோயால் தாக்கப்பட்டுள்ளது

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியில் பச்சை மிளகாய்ப் பயிர் உச்சிப்பிளவை நோயால் தாக்கப்பட்டுள்ளது குறித்து" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் மிளகாய் சுமார் 2,500 ஏக்கர் பரப்பில் உள்ளது. தற்போது மிளகாய் பூத்துக் காய்க்கும் பருவத்தில் உள்ளது. ஒரு சில பகுதிகளில் பச்சைக் காய்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. பிளவை நோய் பரவலாக சிறிய பரப்பளவிலேயே காணப்பட்டன. இது அலுவலர்களால் அறியப்பட்டு நோய் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை சுமார் 2500 ஏக்கருக்குப் போதுமான நோய் தடுக்கும் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி வழி தொடர்பு அலுவலகம் தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நோயினால் சேதமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிளகாய் போன்ற நீண்ட காலப்பயிர்களுக்குக் கடுமையான நோய்கள் வரும்போது ஒட்டுமொத்தமாக அந்த ஆண்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. வேடசந்தூர் பின் தங்கிய பகுதியாக இருப்பதால் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை அங்கே விஸ்தரிக்க வேண்டுமென்று மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் கூட்டுறவுத் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தக் கருத்துக் களின் அடிப்படையில் இந்தத் துறை கூட்டுறவுத் துறையோடு கலந்தாலோசிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற ஒருசில குறிப்பிட்ட பகுதிகளில் பயிர் மகசூல் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை வருகிறபொழுது பாராளுமன்றத்தில் இதற்காக சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அப்பொழுது மைய அரசால் அமைக்கப்பட்ட குழு அனுப்பப்பட்டு குறுகிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் மத்திய அரசு பரிசீலிக்கும் என்று 9—3—1982 அன்று பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுபிரமணியன்] [1982 மார்ச் 30

(முற்பகல் 10—20)

ஆகவே இந்த அரசும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கின்றபோது நம்முடைய மாநில அதிகாரிகள், ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் எவ்வளவு, அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரங்களை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அந்த அடிப்படையிலே தான் செய்யப்படுகிறது. ஆனால் அதை இந்தத் துறை நேரடியாகக் கவனிக்காத காரணத்தினால், கூட்டுறவுத் துறையோடு இதுபற்றிக் கலந்து முடிவு செய்யும்.

### 6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

**திரு. எஸ். என். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 11-வது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

### 6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.



1982 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன் வடிவு 1982.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இன்றைக்கு தமிழகத்தை எதிர்நோக்கி இருக்கின்ற மிக முக்கிய பிரச்சினைகளிலே ஒன்று கடுமையான மின்சாரத் தட்டுப்பாடு. தமிழகத்திலே இன்று நிலவி வருகிற மின்சாரத் தட்டுப்பாடு பற்றி பல்வேறு சமயங்களிலே இந்த மன்றத்திலே கவலைக் குறைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனாலும் கூட, என்ன காரணத்தாலோ திடீர் திடீரென்று மின்சாரம் அணைக்கப்படுகின்ற நிலை தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. நான், மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலே நான் பேசுகின்ற நேரத்திலே இந்த வரிசையிலே இருந்த விளக்குகள் கொஞ்ச நேரம் எரியாமல் இருந்தது. அதைக் கூட நம்மாலே பொறுத்துக்கொள்ள முடியாமல், இந்த மன்றத்திலே கொஞ்சநேரம் விளக்குகள் எரியாமல் இருந்ததற்காக குரல் எழுப்பப்பட்டது. நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், கொஞ்ச நேரம் இந்த மன்றத்திலே சில விளக்குகள் எரியாததற்கே நம்மாலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று சொன்னால், தமிழகத்திலே பல்வேறு நாட்களாகவே விவசாயத்தை, தொழிலை, இல்லங்களை, தொழில் நிறுவனங்களைப் பாதிக்கின்ற அளவுக்கு மிகக் கடுமையான மின்சாரப் பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அரசு தவிர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும்—நமக்கும் தெரியும். ஆனாலும் கூட என்ன

---

*1982 மார்ச் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

காரணத்தாலோ அங்கே கடைகோடியிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் செந்நீரும், கண்ணீரும் கொட்டி, வியர்வையைக் கொட்டி, அங்கே விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற அவனுக்கு யார் குரல் எழுப்புவது மின்சாரம் வரவில்லை என்று சொன்னால்? பல்லாயிரக்கணக்கான ரூபாயை, பல லட்சக் கணக்கான ரூபாயை கடனாகப் பெற்று தன்னுடைய உழைப்பையும், திறமையையும் மூலதனமாகக் கொண்டு சிறுதொழில் நடத்துகின்ற சிறு தொழில் அதிபர்களுக்கு மின்சாரம் முறையாக வரவில்லை என்று யார் குரல் கொடுக்க முடியும்?

சரியாக மின்சாரம் வராத காரணத்தினாலே, உற்பத்தியாகின்ற பொருள்கள் தரம் கெட்டுப் போகின்ற காரணத்தினாலே, தமிழகத்திலே பலகோடிக் கணக்கான முடிக்கப்பட்ட பொருள்கள் இன்றைய தினம் பாழாகிக் கிடப்பதை இந்த அமைச்சரவைக்கு உங்கள் மூலமாக நான் கொண்டு வருகிறேன். நான் கூட எதிர் பார்க்கிறேன், சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத் தில் மின்சாரத் தட்டுப்பாட்டை அறிவித்தால் ஒரு வேளை எதிர் வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் கண்டனம் செய்வார்கள் என்ற காரணத்திற்காகக்கூட இதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்திப்போடுகிறாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இதிலே கௌரவப் பிரச்சனைக்கு இடம் கிடையாது. முறையான சப்ளை, அஸ்ஸூர்டு சப்ளை ஒருநாளைக்கு 5மணி நேரமோ, 8 மணி நேரமோ அல்லது 10 மணி நேரமோ என்று கொடுப் பதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டு மென்று நான் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். இதற்கு பதில் அளிக்கவேண்டிய நேரத்தில் முறையான பதில் வரவேண்டு மென்று நான் மட்டுமல்ல, இந்த மன்றம் மட்டுமல்ல, தமிழக மக்கள் அனைவருமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய அரசு மது விலக்கைத் தளர்த்துகிறேன் என்ற பெயரால், மதுவை தாராளமாக இன்றைய தினம் தமிழகத் திலே ஓடுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. மதுபான விற்பனைக் கடைகள் இன்றைக்கு தமிழகத்திலே திறக்கப்பட் டிருக்கிறது. ஆனாலும்கூட, மதுபான விற்பனை செய்கின்ற நேரத்திலே ஹோல்சேல் லைசென்ஸ் வாங்குகின்ற நேரத்திலே, அதைப் பெறுகின்றவர்கள், அதற்கான கட்டணத்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி, அதற்குப் பின்னாலே பெற வேண்டுமென்பதாக ஒரு நியதி இருப்பதாக நான் அறிகிறேன். எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, சென்னையிலே இருக் கின்ற ஆயிரம் விளக்குப் பகுதியிலே உள்ள ஸ்டேட் பேங்க் வங்கியிலே அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத் தியதாக கணக்குக் காட்டி போலி முத்திரைகள் தயார் செய்து போலி சலான்கள் தயார் செய்து, அதன்மூலமாக மதுபானங்





களைப் பெற்றிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தச் செய்தி அரசுக்கும் எட்டி, சென்னை மாவட்ட கலெக்டர் அவர்கள்கூட விசாரணை செய்ய இருப்பதாக நான் அறிகிறேன். நான் இந்த அரசைக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஆனாலும் கூட, அரசுக்குச் சேர வேண்டிய பணம், இதுமாதிரியாக வீணடிக் கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுவைத் தளர்த்தியதற்குப் பின்னாலே தமிழகத்திலே இதுபோன்று ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகள் எத்தனை என்ற விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, நம்முடைய வரிப் பணம் பாழாகாமல் இருப்பதற்கும், ஊழல்களை களைவதற்கும் நான் ஒரு யோசனையை இந்த நேரத்தில் உங்கள் மூலமாக சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த அரசு தானாகவே வலிய ஒரு விசாரணைக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளவேண்டும். மதுவை தளர்த்தியதற்குப் பின்னாலே, தமிழகத்திலே இருக்கின்ற குற்றங்களைப் பற்றியெல்லாம் விசாரிப்பதற்கு, முடியுமானால் சி.பி.ஐ. விசாரணை ஒன்றை அந்த அரசாங்கம் கேட்டுப் பெறவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, சிமென்ட் வழங்குவதிலே பல்வேறு ஊழல் கள் நடைபெற்று இருக்கின்றன. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்படி, பல்க் குவான்டிடி என்று சொல்லக்கூடிய அதிக பட்ச சிமென்ட், முறைகள் கூட, விலாசம் இல்லாதவர்களுக்கு, சொத்து இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக செய்தி கிடைத் திருக்கிறது. எனவே, இவைகள் எல்லாம் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகிவிடக்கூடாது. இன்றையதினம், கட்டிடம் கட்டுபவர்கள், நடுத்தர நிலையிலே இருப்பவர்கள் தொல்லைப்படுகின்ற நேரத் திலே, இதுமாதிரியான குறைகள் களையவேண்டுமென்று நான் மெத்த பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக. அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த தற்கு பின்னாலே, நிர்வாகத்திலே ஏதோ கோளாறு இருக்கிறதோ என்றுகூட நான் சந்தேகப்படுகிறேன். அடுத்தடுத்து நடை பெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்கின்றபோது, அது ஆளும் கட்சியினர் தலையீடா அல்லது அதிகாரிகள் உயர்மட்டத்திலே இருக்கின்றவர்களுக்கும், இந்த அரசுக்கும் நல்ல உறவு இல்லையா, இணக்கம் இல்லையா என்று சந்தேகம் கூட ஏற்படுகிறது. உயர்பதவியில் இருக்கின்ற பல்வேறு அதிகாரிகள் அடுத்தடுத்து ராஜினாமா செய்திருக்கிறார்கள். இதற்கு ஒன்றிரண்டையா வது நான் சொல்ல விரும்புகிறேன். போர்ட் ஆப் ரெவின்யூவிலே முதல் மெம்பராக இருந்த, கே. சிவசுப்ரமணியம் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதுபோலவே, விவசாயத்துறையில் இருக் கின்ற, நம்முடைய இந்தியப் பேரரசின் டிபென்ஸ் மினிஸ்டராக இருக்கக்கூடிய ஆர். வெங்கட்டராமன் அவர்களுடைய மருமகன் என்று சொல்கிறார்கள், கே. வெங்கட்டராமன் அவர்கள் ராஜிநாமா செய்து இருக்கிறார்கள். முன்னாள் நிதித்துறை செயலாளர் சஞ்சீவி குகன் அவர்கள் தன்னுடைய பதவிக்

காலம் முடிவதற்கு முன்னாலே ராஜிநாமா செய்திருக்கிறார்கள். முன்னாள் தொழில்துறைச் செயலாளர் ஐ. மகாதேவன் அவர்கள், அதேபோல் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். முன்னாள் சுகாதாரத்துறைச் செயலாளர் சங்கரன் அவர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சூப்பர் டைம் ஸ்கேல் ஆபிசர்கள் என்று சொல்லக்கூடியவர்கள், இவர்களைப் போன்றவர்கள் எல்லாம் இன்றைக்கு ராஜிநாமா செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

(முற்பகல் 10-30)

அதைப் போல, நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் படித்த ஒரு செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையிலே டிபுடி கமிஷனர் (ட்ராஃபிக்) பொறுப்பில் திரு. பாலச்சந்திரன் என்ற இளம் ஐ. பி. எஸ். அதிகாரி இருந்தார். அவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வழித்தோன்றல் என்று கூட சொல்கிறார்கள். அவர்களும் இராஜிநாமா செய்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த இராஜிநாமா பட்டியல் தொடரக் கூடாது. நல்ல நிர்வாகம் இருக்க வேண்டும் என்பதிலே ஆளும் கட்சிக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைப் போல எங்களுக்கும் இருக்கிறது. தமிழ்நாட்டின் நிர்வாகம் செம்மையாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் நான் இதை எல்லாம் சொல்கிறேன். ஆகவே, நான் இப்படிச் சொல்லும்போது ஆளும் கட்சியினருக்கு கோபம் வரக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு சிறு விவசாயிகள் கடன் சுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடன் சுமையை ரத்து செய்வோம் என்று பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். எந்த அளவுக்கு அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கே தெரியும். இதற்கு முன்னால் இருந்த அரசிலும் வாக்குறுதி கொடுத்தார்கள். காங்கிரஸ் ஆட்சியில் சிறு விவசாயிகள் கடன் சுமையிலிருந்து பாதுகாக்கப்பட விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தது. அதைப் போல ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து சிறு விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகர்ப்புற மக்கள், ஏழை, நடுத்தரமக்கள் எல்லாம் கடன் சுமையினால் அல்லல் படுகிறார்கள். 1,000, 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள்கூட ஈட்டிக்காரன் என்று சொல்லப்படுகின்ற பட்டாணிக்காரர்களிடம் மாட்டிக் கொண்டு, விடுபட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருவாய்த் துறையில் இன்கம்டாக்ஸ் பிரிவில் டிபுடி கமிஷனராக இருந்த திரு. பாலகிருஷ்ண மேனோன் என்பவர் தீவிரமாக ரெய்டு நடத்தி, இது பற்றி நிதித் துறைச் செயலாளருக்கும் உள்துறைச் செயலாளருக்கும் விரிவான ஒரு அறிக்கை கொடுத்திருப்பதாகவும், அந்த அறிக்கை தூசிபடிந்திருப்பதாகவும் நான் அறிகிறேன். கிடப்பில் கிடக்கின்ற அந்த அறிக்கையை தூசித் தட்டி எடுத்து, அதிலே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, ஏழை மக்கள், நடுத்தர மக்கள் ஆகியோருடைய கஷ்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்றேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக இருப்பது குடிசைமாற்று வாரியம். இந்தக் குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பிக்கின்ற காலத்தில் 7 ஆண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டில் குடிசைகளே இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்குச் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? இந்த குடிசைமாற்று வாரியம் எப்படிச் செயல்படுகிறது என்பதற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக்குழு இந்த குடிசைமாற்று வாரியத்தைப்பற்றி கொடுத்திருக்கிற அறிக்கையிலே ''பியான்ட் சாட்டிஸ்ஃபாக்டரி'' என்று கொடுத்திருப்பதாக நான் அறிகிறேன். இது எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வாடகை வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருப்பதாகத் தெரிகிறது. கூட்டுறவுத் துறையில் இந்த மாதிரி நிலுவை இருக்கிறது என்றால் சர்சார்ஜ் என்று சொல்லி, நிர்வாகிகள்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைப் போன்று இந்த வாடகை நிலுவையை வசூல் செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? குடிசை மாற்று வாரியம் செம்மையாகச் செயல்பட்டால்தான் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கும். குடிசைமாற்று வாரியத்தின் நடவடிக்கை இந்த மாதிரியே இருந்தால் இன்னும் 60 ஆண்டுகள் ஆனாலும் குடிசைகளை ஒழிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று. இன்றைய தினம் இரண்டாவது செயலாளராக இருக்கிற திரு. சொக்கலிங்கம் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது ஒரு முறையை வகுத்தார்கள். கூட்டுறவுத் துறையில் மாவட்ட அளவில் காய்கறி விற்பனை முறையை ஏற்படுத்தி, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் எல்லாம் நியாயமான விலையில் காய்கறிகளை வாங்கிச் சாப்பிட ஒரு நல்ல வழிமுறையை வகுத்துக் கொடுத்தார்கள். அதே மாதிரி இன்றைக்கு இந்த அரசு ''டாப்கோ'' அதைப் போன்று மற்ற பல நிறுவனங்களை வைத்திருப்பதைப் போல் கூட்டுறவுத் துறையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, சாதாரண, ஏழை எளிய, நடுத்தர மக்களுக்குக் காய்கறிகள் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் ஒட்டல் தொழிலாளர்களுடை
நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஒட்டல்களி
2 மாதம், 3 மாதத்திற்கு ஒருமுறை பொருட்கள் விலை
உயர்த்திவிடுகிறார்கள்; அறைகளின் வாடகையை உயர்த்
விடுகிறார்கள். இது வழக்கமாகிவிட்டது. ஆனால் ஏறத்தா
2½ இலட்சம் ஒட்டல் தொழிலாளர்களின் நிலை என்ன? குறை
பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அ
பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்ட
இன்றைக்கும் அதே குறைந்தபட்ச ஊதியம்தான் வழங்கப்ப
கிறது. (மணியடிக்கப்பெற்றது.)

கர்நாடகத்தில் ஒட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்
ஊதியம் வழங்குகின்ற அடிப்படையிலே ஒரு வழிமுறை
வகுத்திருப்பதாக அறிகிறேன். நம்முடைய தொழிலாளர் ந
அமைச்சர் அவர்களும் அதைப் பின்பற்றி அல்லது அதற்
மேலாக தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவுக்
ஒட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்
யித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (ம
அடிக்கப்பெற்றது.)

ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன்
எனவே, இந்த அரசாங்கம் இந்த ஒட்டல் தொழிலாளர்களுக்
ஒரு நியாயமான ஊதியத்தை வழங்க வேண்டும். நான் கூ
கேள்விப்படுகிறேன். நாளைய தினம் அவர்கள் ஊர்வலம் எடுப்ப
தாக அறிகிறேன். நான் அதை ஆதரிக்கவில்லை. அதற்கு
அவசியம் இல்லாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தின் சட்டமன்றத்தில் 1947 முதல்
1952 வரையில் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு பென்ஷன்
கொடுப்பதாக அரசு அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன்
பாராட்டுகிறேன். அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறை
வாக இருக்கிறது. ஓராண்டு காலம்; அதாவது ஒரு டர்ம் சட்
மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பென்ஷன்
ரூ. 250 கொடுக்கிறோம். ஆகவே, அந்த முறையைப் பின்
பற்றி, இந்த 1947 முதல் 1952 வரையில் சட்டமன்ற உறுப்பினர்
களாக இருந்தவர்களுக்கும் 1980 ஆம் ஆண்டில் இருந்து ஓய்வு
ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி
வழங்குவதற்கு அரசு முன் வந்தால் அதனால் அதிகமான தொகை
அரசுக்குச் செலவு ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன். (குறுக்கீடு.) ஆளும் கட்சி உறுப்பினர் கூட நான்
பேசுவதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். அவர்கள் இத்
தகைய ஆலோசனைகளை ஏற்கனவே அவர்கள் எனக்கு அளித்து
வந்தது போல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வதற்கு
புதிய ஏற்பாட்டை அரசு கொண்டு வந்து இருக்கிறது. பதிவுத்
துறையில் அதை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்து இருக்





கிறது. தமிழகத்தில் தற்போது முத்திரைத் தாள்கள் விற்பனை செய்பவர்கள் 5,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பணத்தை முதலில் போட்டு இந்த பணியைச் செய்து வருகிறார்கள். 24 மணி நேரமும் அவர்கள் இதைச் செய்கிறார்கள். அவர்களில் யாராவது தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். அது யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். ஏற்கனவே இருப்பவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

* திரு. பி. துரைராஜ்: சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசானது கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக பல நல்ல திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருவதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். தன்னிறைவுத் திட்டங்கள் போன்று பல நல்ல திட்டங்களை எல்லாம் கிராமப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும், கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும் செயல்படுத்தி வருவதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக, நெல்லை மாவட்டத்திலே கடந்த ஆண்டில், சங்கரன்கோயில் தொகுதியில் பருவ மழை பொய்த்த காரணத்தால் வறட்சி நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த வறட்சிப் பகுதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு, அந்தப் பகுதிகளின் வறட்சி நிலையைப் போக்க நிதி கோரி ஒரு அறிக்கையை அரசுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அது அரசுக்கு வந்து ஏறத்தாழ ஒரு மாதம் ஆகிறது. அந்தப் பகுதியில் குடிநீர் பிரச்னை மிகவும் கடுமையாக இருப்பதால் உடனடியாக நிதி அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள வறட்சி நிலையைப் போக்குவதற்கான வகையில், நிதி ஒதுக்கீட்டை விரைவில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் நகரமன்றப் பகுதியில் கடந்த இரண்டு மாதகாலமாக கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இந்தப் பகுதிக்கு குடிநீர் வசதியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்து வரும் தண்ணீர் மூலம் கிடைத்து வருகிறது. அந்தப் பகுதியில் நிரந்தரமான வகையில் பற்றாக்குறை இல்லாமல் செய்ய வேண்டுமானால், தாமிரபரணி ஆற்றில் இருந்து, தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தைத் தீட்டி, திருநெல்வேலி நகரத்தில் இருந்து சங்கரன்கோவில் நகருக்கு குடிநீர் திட்டம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று அந்தத் தொகுதிமக்களின் சார்பாகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த சங்கரன் கோவில் பகுதியானது மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். அங்கே எந்தவிதமான ஆற்றுப் பாசனமும் இல்லாத பகுதியாகும். அங்கேயுள்ள என் தொகுதி மக்கள் கடந்த 20 ஆண்டுக்காலமாக ஒரு விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கேரள மாநிலத்திலே வீணாகக் கடலிலே கலக்கின்ற தண்ணீரை, இங்கே இந்தப் பகுதிக்கு திருப்புவது பற்றி காயாற்றுத் திட்டத்தைக் குறித்து, அந்த ஆறு அந்தப் பகுதிக்கு திருப்பப்படுமேயானால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள் என்று பேசப்படுகிறது. நம்முடைய அரசாங்கமும் இது குறித்து கேரள அரசோடு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எனவே, விரைவிலே அந்த முயற்சிகளை எடுத்து, நம்முடைய அரசு, கேரள அரசோடு பேச்சு வார்த்தைகளை நடத்தி திட்டத்தை துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப்பகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

மேலும், சங்கரன்கோவில் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் ஏராளமாக வசிக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை வேண்டும் என்று ஏற்கெனவே கடந்த 10 ஆண்டுக்காலமாக அவர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, அந்த கூட்டுறவு நூற்பாலை அந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைக் கருதி அ சின் சார்பிலே ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், சங்கரன்கோவில் பகுதியிலே பல்லாண்டுக் காலமா எந்தவித தீ அணைப்பு நிலையமும் கிடையாது. அந்த ஏ எளிய மக்களின் குடிசைகள் தீ பிடித்தால் ஏறத்தாழ 30 மை களுக்கு அப்பாலுள்ள இடத்திலிருந்துதான் தீ அணைப்பு வண் களும் கருவிகளும் வரவேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அப்ப அவைகள் வந்து சேருவதற்குள், இங்கே ஏராளமான அளவி பெருத்த சேதம் ஏற்படுகிறது. ஆகவே, சங்கரன்கோவில் நக லேயே ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டு என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சங்கரன்கோவில் பகுதி கைத்த நெசவாளர்கள் அதிகம் நிறைந்த பகுதியாகவும் இருக்கிற ஆகவே சங்கரன்கோவில் நகரத்திலேயே ஒரு தொழிற்பேட்டை



நிறுவித் தரவேண்டும் என்று 10 ஆண்டுக்காலமாக அந்த நெசவாளப் பெருங்குடி மக்கள் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய நலனைக் கருதி, அந்தப் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்தை நினைத்து அந்த இடத்தில் ஒரு தொழிற்பேட்டையை நிறுவித் தரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அந்த சங்கரன்கோவில் பகுதியிலே 2, 3 புதிய குளங்களை கட்டித்தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள். ஆகவே அந்தப் புதிய குளங்களையும் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக சிமெண்ட் வினியோகத்தை எடுத்துக் கொண்டால், நம்முடைய அரசாங்கம் எடுத்திருக்கும் புதிய கொள்கைகள், ஏற்பாடுகள் நல்லவகையான திட்டங்கள் என்ற அளவில் மகிழ்ச்சியடைகிறேன். ஆர்.டி.ஓ. மூலமாகவும், கலெக்டர் மூலமாகவும் டி.டி.ஓ. மூலமாகவும் இந்த சிமெண்ட் வினியோகம் நடத்தப்படவிருப்பது குறித்து மகிழ்ச்சியே. இந்த வினியோகத்தை, கிராமங்களிலே உள்ள வளர்ச்சித் திட்டத்தில் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு, அரிசன மக்களுக்கு அவர்கள் கட்டும் வீடுகளுக்கு உடனுக்குடன் சிமெண்ட் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனெனில், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களும் அரிசன மக்களும் கட்டிக் கொள்கிற வீடுகளுக்கு சிமெண்ட் வினியோகத்தில் மிகுந்த காலதாமதம் ஆகிறது என்று கேள்விப்படுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட காரியங்களுக்கு முன் உரிமை கொடுத்து சிமெண்ட் வினியோகம் செய்ய அமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சங்கரன்கோவில் தொகுதி மிகுதியாக கிணற்றுப் பாசனத்தையேதான் நம்பிக் கொண்டிருக்கிற தொகுதியாகும். இங்கே உள்ள விவசாயிகளுக்கு எப்போது மின்சாரம் பாதிக்கப்படும் என்று எதுவுமே சொல்லத் தெரியாமல் இருக்கிறது. அந்த நிலைமையை சரிசெய்து குறிப்பிட்ட 5 மணி, 6 மணி நேரம் என்று குறிப்பிட்ட நேரத்தில் மின்சார இணைப்புக் கொடுத்தால், அந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது போன்றதாகும். ஆகவே, அதனைச் செய்வதற்கு அரசு தக்க ஏற்பாட்டினை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களைப் பற்றி நாம் அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறோம். நேற்றுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வழக்குகளில் எல்லாம் கோர்ட் தீர்ப்பு வழங்கிய பிறகு, நல்ல முறையில் தேர்தல்

[திரு. பி. துரைராஜ்] [1932 மார்ச் 30

நடத்தப்படும் என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
ஒதுக்கப்பட்ட அந்த 18 சதவீதம் என்ற ஒதுக்கீட்டை புறக்
கணிக்காமல் முறையாக செயல்படுத்தி அந்தத் தேர்தல்களை
நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விடை
பெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதா மீது மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை கூற
விரும்புகிறேன்.

இந்த ஆண்டு வரவு செலவு திட்டங்களை அமுல் படுத்துகிற
போது, அரசு சில முக்கியமான விஷயங்களை கவனத்தில் கொள்ள
வேண்டும் என்பதை முதலிலே ஆழமாகச் சொல்ல விரும்புகிறேன்.
எடுத்த எடுப்பிலே என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில
வார்த்தைகளை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 10
நாட்களாக திண்டுக்கல் நகரம் பதட்டமான சூழ்நிலையில் இருக்
றது. கிட்டத்தட்ட 2 இலட்சம் மக்கள் வாழக்கூடிய, வளர்ச்சி
யடைந்து வரக்கூடிய ஒரு நகரம், கடுமையான மின் தட்டுப்பாட்டி
லும், தண்ணீர் தட்டுப்பாட்டிலும் சிக்கி, வர்த்தகர்கள், தொழி
லாளர்கள், பொது மக்கள் போன்ற அனைவரும் ஒன்று சேர்ந்து
கடந்த சில நாட்களாக பந்த் அனுஷ்டித்து, அங்கே தகராறு
செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கோரிக்கைகளை அரசு பரிவோடு கவனிக்க வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடிப்படையான
காரணம் 1955 ஆம் ஆண்டிலே போடப்பட்ட குடிநீர் திட்டம்
இன்று 25 ஆண்டுகள், 27 ஆண்டுகள் கடந்ததற்குப் பிறகு
அதனை அமல் நடத்துகின்றபோது பாதி நகருக்குக் கூட தண்ணீர்
வசதி செய்ய முடியவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தினைப்
போட்டபோதே போதுமான அளவுக்கு ஏற்பாடு செய்யாத
தால் போதுமான தண்ணீர் இப்போது கிடைக்கவில்லை. கிடைக்
கக்கூடிய தண்ணீரும் மின் தட்டுப்பாடு காரணமாக ஜனங்களுக்
குப் போய்ச் சேரவில்லை. வருகின்ற தண்ணீர் கூட மேட்டுப்
பாங்கான பகுதிகளில் மேல்நிலைத் தொட்டி இல்லாததன் கார
ணத்தால் அங்கே போய்ச் சேரவில்லை. அவ்வளவு சிரமமான
நிலைமையில் இரவு நேரங்களில் கூட பெண்கள் குடங்களைத்
தூக்கி வைத்துக்கொண்டு நகரிலே அலைய வேண்டிய நிலைமை
இருக்கின்றது.

தொழில் நடத்துகின்றவர்களுக்கோ மூன்று நான்கு மணி
நேரம் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைக்காத காரணத்தால்
சிரமப்படுகிறார்கள். இந்த மாநிலத்தில் எல்லா இடங்களி
லும் பொதுவாக இருக்கின்ற மின்சாரத் தட்டுப்பாட்டை விட
அதிகமான அளவுக்கு அங்கே இருப்பதற்கான காரணம் என்ன
என்பதைக் கண்டறிந்து அந்த நிலைமையை நீக்குவதற்கு
உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1982 மார்ச் 30] [திரு. என். வரதராஜன்]

அடுத்து திண்டுக்கல் குடிநீர் நீரேற்று நிலையத்திற்கு ஒரு
ஜெனரேட்டர் பொருத்த வேண்டும். அப்போதுதான் இன்
றைக்கு இருக்கக்கூடிய தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க இயலும்
அதற்காக நகரசபைக்கு ஏதாவது பணத்தைக் கடனாக
வாவது கொடுத்து ஜெனரேட்டர் பொறுத்துவதற்குரிய ஏற்பாடு
செய்ய வேண்டும். திண்டுக்கல், சௌரியார்பாளையம், பாரதி
புரம், கோவிந்தாபுரம், மரியநாதபுரம் போன்ற பகுதிகளில் மேல்
நிலைத் தொட்டிகளைக் கட்டி அந்த நகரிலே சீராக தண்ணீர்
விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத்
திட்டத்தை இன்றைக்கு சிறப்பாக அமல் நடத்தினால் கூட
போதுமான தண்ணீர் கிடைக்காது. வைகையிலிருந்து 20 கிலோ
மீட்டர் தூரத்திற்கு தண்ணீர் கொண்டு வந்து செம்பட்டியிலே
இணைத்தால் திண்டுக்கல்லிலே தண்ணீர் பிரச்சினையைத்
தீர்க்க முடியும். இன்றைக்கு இது மோசமான பிரச்சினையாக
இருந்துகொண்டிருக்கின்றது. உடனடியாக இதற்குக் கவனம்
செலுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.
அடுத்து தமிழ்நாட்டிலே இன்று பரவலாக விவசாயிகள் மத்தியிலே
ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதுபற்றி
பல்வேறு தந்திகள் தினசரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்து
கொண்டே இருக்கின்றது.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளின்
நிலைமை என்ன? அவர்கள் உற்பத்தி செய்கின்ற
பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. இது
பற்றி ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் கூட பலவிதமான கவன
ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். மேலும்
இன்றைக்கு இயற்கையின் பாதிப்புக்களால், பூச்சி போன்ற
தொல்லைகளால் பயிர்கள் சேதம் அடைந்துக்கொண்டிருக்
கின்றன. பல்வேறு பகுதிகளில் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது.
மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்றது. கரும்பு உற்பத்தி செய்த
விவசாயிகள் அதிலிருந்து வெல்லத்தைத் தயாரிக்க முடியாத
சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அந்தக் கரும்புகளையே
எரித்துவிடலாமா என்று எண்ணும்படியான காலம் இது. இந்தச்
சூழ்நிலையில் இன்று கடனுக்காக ஜப்தி நடவடிக்கைகளை தமிழ்
நாடு அரசு எடுத்துக் கொண்டு போவது மிக அநியாயம். கூட்
டுறவுக் கடனில் உள்ள பயிர்க்கடன் என்று சொன்னால் 5 ஏக்க
ருக்கு கீழே நிலம் வைத்து உள்ள விவசாயிகளுக்கு கடன் முழு
வதையும் ரத்து செய்துவிட்டு, 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்
திருக்கின்ற விவசாயிகளுக்கு வட்டியையும் அபராத வட்டியையும்
ரத்து செய்தால் அது சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்குத்தான்
நிவாரணம் அளிக்கும். மேலும் அந்த 100 கோடி ரூபாய் நிவா
ரணம் என்பதை அரசின் கையிலே இருந்து கூட கொடுக்க வேண்
டியதில்லை. ஏற்கெனவே கூட்டுறவுத் துறைக்கு மாநில அரசு
80 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அகவே, பட்ஜெட்டை
பார்க்க வேண்டியத் தேவையில்லை. இந்த 100 கோடி ரூபாய்
அளவுக்கு நிவாரணம் அளித்தால் கிராமப்புற விவசாயிகளிடத்
திலே இருந்து பாக்கிக் கடன்களை சுலபத் தவணைகளில் வசூல்
செய்வதற்குக் கூட இடம் உண்டு. அப்படி அதற்கு ஏற்பாடு

செய்யாமல் இப்படி போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு மிரட்டினால் எதிர்ப்புகள் கிளம்புகின்ற காட்சிதான் தமிழ் நாட்டிலே ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் உயர்மட்டக் குழு விவசாய சங்கத்தின் தலைவர்களைச் சந்தித்த இதுபற்றிச் சொன்னார்கள். 'நாங்கள் ஒத்துழைக்கத் தயா ராக இருக்கிறோம், ஆனால் மத்திய அரசுதான் ஒத்துழைக்கத் தயாராக இல்லை' என்று சொன்னார்கள். 'நீங்களே ஒரு தூதுக்குழுவாக டெல்லிக்குச் சென்று பிரதமர், மற்றவர் களைப் பார்த்து விட்டுத் திரும்புங்கள், அதற்கு வேண்டிய ஏற் பாட்டை நான் செய்கிறேன், போக்குவரத்துச் செலவுக்குக் கூட பணம் தருகிறேன்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி 10 நாட்கள் கூட ஆகவில்லை, ஜப்தி நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறீர்களே என்பதற்காகத்தான் அதுபற்றிப் பேசி முடிவு எடுக்காமல் இருப்பதற்காகத்தான் உயர்மட்டக் குழுவின் பிரதிநிதிகள் எல்லாம் ஒன்றுகூடி ஜப்தி செய்ய வந்தால் தடுப்பது என்று முடிவு எடுக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அப்படித் தடுக்க வேண்டும் என்றுதான் நினைக்கின்றது. ஆகவே இது முக்கியமான பிரச்சினை. கடனாளியாகி கஷ்டப் பட்டுக்கொண்டு பதறிக்கொண்டிருப்பவர்களை மீண்டும் மீண் டும் பதற வைக்கக்கூடாது. சட்டமன்ற மேலவையில் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? 'நிச்சயமாக இந்தக் கடன் களை ரத்து செய்யலாம், ஒத்தி வைக்கலாம், பல தவணைகளைக் கொடுக்கலாம்' என்று கூறுகிறீர்கள்.

[முற்பகல் 10-50]

மைய அரசு மறுக்கிறது என்று சொல்லிக்கொண்டு அதற்கு மாற்றுவழி கண்டுபிடிக்காமல் விவசாயிகளைப் பாசக்கயிறு போட்டு இழுத்தால் விவசாயிகள் மத்தியில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது. ஆகவே சர்க்காரை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கடுமையான நிலையை தமிழ்நாடு அரசு சிருஷ்டிக்க வேண்டாம்.

இன்று 100 கோடி ரூபாய் குழந்தைகள் உணவிற்காக என்று உதவி செய்கிறோம் என்று நம் நிதி அமைச்சர் அவர்கள் முதலில் நிதிநிலை அறிக்கையை அளிக்கும்போது சொன்னார்கள். பின்னால் வருகிறபோது அது கொஞ்சம் தேய்ந்திருக் கிறது. மேலவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பெண்களை வைத்து இந்தத் திட்டத்தை நடத் தப் போகிறோம் என்று. அதே மேலவையில் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை மிட்-டே மீல்ஸ் போல் ஆசிரியர் களை வைத்து குழந்தைகளுக்குக் கொடுக்கப்போகிறோம் என்று. விவாதத்திற்குப் பின்னர் நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிற



போது நூறு கோடி அல்ல, அதில் கொஞ்சம் குறையலாம் என் றார்கள். இப்படி ஒரு திட்டமில்லாத திட்டத்தை வைத்து இப் படி ஏன் பணத்தை செலவழிக்க வேண்டும்., உபயோகம் இல்லா மல் ஏன் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்று கேட்கிறேன். விவசாயிகளுக்கு சிறு சிறு நிவாரணங்கள் வழங்கலாம். தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. நான்காண்டு களாக நில வரி வசூல் செய்யாமல் இன்று தண்டோரா போடு கிறார்கள், இன்ன தேதிக்குள் கட்டாவிட்டால் ஜப்தி செய்யப் படும் என்று. அதை தவணை முறையில் வசூலிக்கலாமே 1 ப்ளஸ் 1 என்று வசூலிக்கலாமே. பல்வேறு காரணங்களால் நில வரி நின்று விட்டது. அதை வசூலிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இன்று நீங்கள் ஜப்தி செய்வது என்றால், கடனுக்கு ஜப்தி, நிலவரிக்கு ஜப்தி. அப்படியானால் கிராம புரங்கள் எல்லாம் போலீஸ் மயமாக இருக்கும் என்பதை நினை வில் வைத்துக்கொள்ள வேண்டும். இது நியாயத்திற்கு புறம் பானது. மத்திய அரசின் தண்டாலைத் தூக்கி வைப்பதற்கு நீங்கள் முயற்சிக்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் ஊர் குத்த கைக்காரன் என்று கொள்ள வேண்டும். அவர்கள் சொல் கிறார்கள்., நாங்கள் செய்கிறோம் என்று சொல்லி தப்பிக்க முடியாது. விவசாயிகள் அதை ஏற்க மாட்டார்கள். நீங்களும் ஏற்கக் கூடாது என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஆகவே நில வரி வசூலை இன்று தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மைய அரசு கூட்டுற வுக் கடன்களை ஜப்தி நடவடிக்கைகள் மூலமாக வசூல் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்திய பிறகும் அதை மாநில அரசு அதன் எண்ணப்படி நிறுத்தி விடலாம் என்ற ஒரு எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்படுத்தக்கூடாது. இதைப்பற்றி ஏற்கனவே இந்த அவையில் விளக்கமாக மாண்புமிகு முதல்வர் அவர்களும் நானும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தமிழகத் தைப் பொறுத்தவரையிலும் ஒட்டுமொத்தமாக இன்று பாரதத்தில் ஆறு மாநிலங்கள் தான் இந்த நிலையில் இருக் கின்றன. உலக வங்கி மிகத் தெளிவாகச் சொல்லி விட்டது. ஏ.ஆர்.டி.சி. நிறுவனமும் உலக வங்கியும் ரிசர்வ் வங்கிமூலம் தெளிவாக மைய அரசுக்குச் சொல்லிவிட்டார்கள். விவசாயிகள் கடன்களை ஜப்தி செய்தேனும் நடவடிக்கைகள் எடுத்து 1982ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதிக்குள் வசூல் செய்யவில்லை யென்றால் தமிழகம் ப்ளாக் லிஸ்ட் செய்யப்பட்டு விடும் என்று எச்சரித்திருக்கிறது. இது மைய அரசுக்குச் சொந்தமான பணம் கூட அல்ல. பெரும்பாலான பணம் கிட்டத்தட்ட லாங் டேர்ம் லோனைப் பொறுத்தவரையில் அது உலக வங்கியினுடைய பணம். ஷார்ட் டேர்ம் லோன்ஸ் பொறுத்து, ஒரு பெரும்பகுதிப் பணம் மைய அரசுக்குச் சொந்தமான பணம். ஆனால், உலக வங்கி கண்டிப்பாகச் சொல்லிவிட்டது. சென்ற ஆண்டே தமிழ்நாடு ப்ளாக் லிஸ்டாகியிருக்கும். ப்ளாக் லிஸ்ட் செய்யப்படுவ

லிருந்து சென்ற ஆண்டு தமிழ்நாட்டைக் காப்பாற்ற பல முயற்சி
களை மேற்கொண்டு ஆறு மாத தவணை தரப்பட்டது. ஆறு
மாதம் ஜப்தியைத் தள்ளிவைக்க அரசு நடவடிக்கைகளை மேற்
கொண்டது. தற்போது மிகத் தெளிவாகச் சொல்லிவிட்ட
காரணத்தால் மாநில அரசினுடைய சொந்தப் வருவாயில் இருந்
தாவது கடன்களை நாம் உலக வங்கிக்கு, ரிசர்வ் வங்கிக்கு,
திருப்பிக் கட்டுவது என்றாலும் மைய அரசு அதை ஏற்றுக்கொள்
ளத் தயாராயில்லை. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 17ஆம்
நாள் அன்று டெல்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் மிகத் தெளி
வாகச் சொல்லிவிட்டார்கள். தமிழகத்தினுடைய எதிர்கால
விவசாயத் துறை இருண்ட காலத்தை சந்திக்க வேண்டியிருக்கு
மென்றால் விவசாயக் கடன்களை ஜப்தி செய்ய நடவடிக்கைகள்
எடுத்து வசூல் செய்யாமல் இருக்கலாம் என ஒட்டுமொத்தமாக
விவசாயிகள் நன்மை கருதி சொல்லியிருக்கிறார்கள். இதை நாம்
அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் விவசாயிகள் கடன்
களை நாம் வசூல் செய்து உலக வங்கிக் கடனைத் கட்டத் தவறி
னால் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதிக்குப் பிறகு
தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு எந்தக் கடனும் தரமுடியாது என்ற
அபாயகரமான சூழ்நிலை உருவாகி விவசாயிகளுக்கு நாம் ஒரு
துரோகம் செய்தவர்களாக ஆகிவிடுவோம் என்று அச்ச நிலை
இருப்பதால் இதில் மாநில அரசு இப்போது நடவடிக்கைகள்
எடுப்பது தவிர வேறுவழி இல்லை என்ற நிலை இருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஏற்கனவே சொன்னதை திருப்பிச் சொல்லி பிரயோஜனமில்லை.
மைய அரசினுடைய இன்றைய இந்தக் கொள்கையை நீங்கள்
ஏற்றுக்கொண்டால், நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்
கிறேன். நீங்கள் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் என்ன சொன்
னீர்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாடுக்கு
ஒதுக்கப்பட்ட பணம் 200 கோடி ரூபாயை மைய அரசு அபேஸ்
செய்கிறது.

நீங்கள் மூலப் பொருள்களின் விலை ஏறிவிடும் என்று
அந்த மாநாட்டிலிலே வாதாடியிருக்கிறீர்கள்; அதை நான்
வரவேற்கிறேன். மத்திய சர்க்கார் சொன்னதை எல்லாம்
நாம் ஏற்க முடியாது. அவர்கள் கொள்கை தமிழகத்தை
பாதிக்குமானால், விவசாயிகளை பாதிக்குமானால், அதற்கான
மாற்றுக்கொள்கையை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.
ஆகவே, இப்படிப்பட்ட விவசாயப் பிரச்சனையில் சிந்தித்து,
விவாதித்து. இந்தப் பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு காண
வேண்டும். இதை மாநில அரசு கண்டுபிடிக்கவேண்டும்
நான் சொல்வதெல்லாம், இன்றைக்கு தமிழகத்தின் நிலைமை





மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, உயர் மட்டக் குழு
வைக் கூட்டி, அவர்களோடு உட்கார்ந்து பேசுங்கள்; அவர்க
ளோடு விவாதித்து, எவ்வாறு நிவாரணம் அவர்களுக்கு அளிக்
கலாம் என்பதை அறிந்து, நடவடிக்கை எடுங்கள்.

சிறிய விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்யலாம்.
நடுத்தர விவசாயிகளுக்கு வட்டியை ரத்து செய்யலாம். அப்படி
செய்தால், நாம் பாக்கியைக் வசூலிப்பதற்கு ஒரு உறுதியான
அடித்தளம் நமக்கு கிடைக்கும். அதனால் வசூல் உறுதியாக
இருக்கும். இல்லாவிட்டால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும் என்
பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்
களே, வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்றோ அல்லது வேறுநிவா
ரணம் அவர்களுக்கு கிடைக்கும் என்றோ உறுதியாக கண்டிப்
பாக அரசு சொல்லமுடியாது. வட்டி தள்ளுபடியோ அல்லது
மற்ற எந்த சலுகையோ அளிப்பதாக உள்ள அறிவிப்பை
கண்டிப்பாக தமிழக அரசு செய்யக்கூடாது என்று மைய அரசு
சொல்லியிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : துணைத்தலைவர் அவர்களே,
நான் சொல்லவிரும்புவதெல்லாம், அரசு இன்றைக்கு சீரிய
திட்டங்களை, தீட்டியிருந்தாலும், வலுவான திட்டங்களிலே
ஈடுபடவேண்டும். சிறுவர்களுக்கு அளிக்கும் உதவி விளம்பரத்
திற்காக இருக்குமே தவிர, உண்மையிலேயே அது உதவி செய்
யாது. அதற்கு மாறாக இன்றைக்கு தமிழகத்திலே, விவசாயிகள்
உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு சரியான விலை கிடைக்க
வில்லை. இப்போது நுகர்பொருள் வாணிபக் கழகத்
தின் சார்பாக அந்தப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட விலைக்கு
வாங்கலாம். அதன்மூலம் விவசாயிகளின் கைகளைத் தூக்க
லாம்.

அதேபோல் வாலிபர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று
1980 தேர்தலிலே சொல்லப்பட்டது தெரியும். அது என்ன
ஆயிற்று? இன்று அந்த வாலிபர்கள், வறுமையால்
வேலையில்லாமல் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு
நிவாரணம் அளிக்க மேற்கு வங்க சர்க்கார் பின்பற்றும்
கொள்கையை பின்பற்றலாம், அவர்கள் 40 கோடி ரூபாய்
இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.
மாதம் ஒன்றுக்கு ரூ. 50 அந்த வாலிபர்களுக்கு கொடுக்கிறார்கள்.
5 ஆண்டுகள் பதிவு செய்திருந்தால் போதும். அவர்கள்
எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தாலும் படிப்பு இல்லாவிட்டாலும்
பட்டதாரிகளாக இருந்தாலும், பதிவு செய்தவர்களுக்கு மாதம்
ரூ. 50 கொடுப்பதற்கு, அந்த அடிப்படையிலே 40 கோடி
ரூபாய் அங்கே ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல்
நீங்களும் செய்ய வேண்டும்.

[திரு. என். வரதராஜன்] [1981 மார்ச் 30

புதுவரிகளைப் பொறுத்தவரையில் மத்தியபட்ஜெட்டிலும் மாநில பட்ஜெட்டிலும் போடப்பட்டுள்ளது. இந்த வரிகளை தள்ளுபடி செய்வதற்கு புனர் பரிசீலனை செய்யவேண்டும். மேலும் வரிகள் போடுவதால் பொருளாதார நிலமை வளர்ந்து விடாது. அதே நேரத்தில், பொது விநியோக முறையில் அரிசி கோதுமை மைதா, மண்ணெண்ணை, சிமிண்ட், இப்படிப்பட்ட ஒரு 10 பொருள்களை கொள்முதல் செய்து மலிவான விலையிலே விநியோகம் செய்ய வேண்டும். இதிலே பருப்பு வகையறாக் களையும் எடுத்துக் கொள்ளலாம். இப்படிச் செய்தால் தமிழ்நாட்டிலே உள்ள கிராம, நகர்ப்புறங்களிலே உள்ள மக்கள் நன்மை அடைவார்கள்.

வயோதிகர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது, வட்டாரத்திற்கு 200,300 பேர்களுக்கு தான், அதுவும் 60. 65வயதானவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. இதிலே, இது எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை. இதனை எல் லோருக்கும் விஸ்தரித்தால், நகர்புற கிராமப்புற ஏழை மக்களுக்கும், பாடுபடுகின்ற சாதாரண மக்களுக்கும் அது பயன் படும். அதற்கு மாறாக இந்த 100கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது என்றுசொல்லப்படுகிறதுஇதற்காககொடுக்கப்படுகின்ற இந்த மிட்டேமீல்ஸை மேலும் சற்று பலப்படுத்துங்கள்; அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

அடுத்து நான் சொல்லவேண்டியது, இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுடைய கூலிப் பிரச்சனை, தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஒரு கோடி பேர் இருக்கிறார்கள். அவர்களைத் தமிழன் என்று சொன்னாலும், திராவிடன் என்று சொன்னாலும் அல்லது அரசியல் சட்டத்திலே சொல்கிறார்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று அப்படிச் சொன்னாலும் சரி, அப்பேர்பட்டவர்கள் ஒரு கோடி பேர்கள் இருக்கிறார்கள். அதிலே சிலர் நாள் ஒன்றுக்கு ரூ.2, ரூ.3 கூட கூலி கிடைக்காத வர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக்கூலியை உயர்த்தி கொடுக்க ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும். இதுமாதிரி செய்வதற்கு ஒரு நிர்வாக அமைப்பு இருக்க வேண்டும். அதைத் தமிழ்நாட்டிலே உருவாக்கினால், விவசாயத் தொழிலாளர்கள் நன்மை அடைவார்கள். அதிலும் முக்கியமானது நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் போலீஸ் மானியக் கோரிக்கைக்கு பதில் அளிக்கும்போது, சொன்னது கவலை தருவதாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் வெறும் விவசாய தொழிலாளர்கள், தொழிலாளர்கள் நாட்டிலுள்ள நடுத்தர மக்கள், பாடுபடுகின்ற மக்கள் தரத்தாலும் கருத்தாலும் பாடு படுகின்ற மக்கள் உணர்வுகளிலிருந்து எழுகின்ற எழுச்சியைப் பார்க்கிறோமா அல்லது வெறும் தண்டாயுதத்தை வைத்துக் கொண்டு, சட்டம் ஒழுங்கை பார்க்கப்போகிறோமா, என்பது தான் என் கேள்வி?



1982 மார்ச் 30] [திரு. என். வரதராஜன்]

ஆகவேதான் இந்த சட்ட அமைதி பிரச்சனையை ஒரு போலீஸ் துப்பாக்கி பிரயோகத்திற்கு கொண்டு ோபகக்கூடிய பிரச்சனை யாக கொண்டு போகக்கூடாது. அரசாங்கத்தினுடைய கொள்கை அந்த விளைவை ஏற்படுத்தும்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது அரசினுடைய கொள்கையிலே இதுபோன்று ஊழி வகுக்கிற நிலை இருக்கக்கூடாது (குறுக்கீடு).

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயப்பதற்கு 12 3—82-லே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந் துரை அரசுக்கு வந்த பிறகு அது அமுல்படுத்துகிறபோது அதற்காக நல்ல தொழிற்சங்கத்தை அமைத்து அந்தத் தொழி லாளர்களுடைய பிரச்சனையை சம்மந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளிடம் முறையீடுவீர்களானால் அது இந்த அரசுக்கு உத வியாக இருக்கும்.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சங்கம் வைக்கவேண்டும் என்று சொல் கிறார்கள். அவர்கள் சொல்வதை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே சங்கம் வைத்து போராடுகிற தொழிலாளர்கள் கூலி உயர்விற்கே போராடுகிறபோது போலீஸ் வைத்து நொறுக்கு கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத்தலைவர் அவர்களே, போராட வேண்டிய முறையிலே போராடினால் அவர் களை பாராட்டுவார்கள். எப்படி போராடுவது என்று தெரி யாமல் வன்முறையிலே ஈடுபட்டு மண்டையை உடைப்பது பாக்டரியை உடைப்பது என்று ஈடுபடுகிற முறையை நிச்சயமாக தண்டனைக்குள்ளாகத்தான் வேண்டும். அந்த முறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தொழிலாளர்கள் மிகவும் ஏழ்மையிலே இருக்கிறார்கள். நேரமில்லாததால் நான் அதிலே போகவிரும்பவில்லை. அவர்கள் ஒன்று திரண்டு தங்களுடைய பிரதேசத்திலே கூலி உயர்வு வேண்டுமென்று போராடுகிற போது, இயக்கங்கள் உதவி செய்கிற போது, அந்த இயக்கத்திற்கு ஆதரவாக போலீஸ் உதவியாக இருக்கவேண்டும் என்று நம்முடைய கொள்கை வளர வேண்டும். அவர்கள் அலுவலகங்களையோ, தொழிற் சாலைகளையோ நாசப்படுத்தியது அல்ல பிரச்சனை. அதிலே உள்ளே நான் போகவில்லை.

மாண்புமிகு. திரு. எஸ். இராகவனந்தம்: துணைத்தலைவர்
அவர்களே, இந்த மாதம் மார்ச் மாதம் எல். ஐ. சி. யிலே
கேரளா ஹைகோர்ட்டிலே கூட போலீஸ இன்டர்பிரன்ஸ் பற்றிய
தீர்ப்பு வந்திருக்கிறது. படித்து பாருங்கள் இப்
ப்ராப்பர்லிடன் எந்தப் போராட்டமும் முறையாக, ஒழுங்காக
நடத்தப்படுமானால் அந்தப் போராட்டத்தில் போலீஸ் தலை
யிடாது. ஆனால், போலீஸை அனுப்புவதா வேண்டாமா
என்பது கோர்ட் சொல்வது இல்லை. அது அரசாங்கத்தினுடைய
பொறுப்பு நல்ல போராட்டமாக நடத்துங்கள் சிறப்பாக நடத்
துங்கள். வன்முறையிலே கொஞ்சம் ஈடுபடுகிறீர்கள், அதை மட்
டும் தவிர்த்து விட்டால் நாடு சிறப்பாக இருக்கும்.

திரு. என். வரதராஜன் : துணைத்தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்களும் நானும் நேரிலே பேசிக்கொள்ளும்போது,
வாதத்திற்கு எடுத்துக் கொண்டு நான் கேட்க விரும்புவதெல்
லாம், விவசாய சங்க பிரதிநிதிகளை நேரடியாக அழைத்து
இன்னென்ன போராட்டங்களில் விவசாயிகள் வன்முறையை
கையாண்டார்கள் என்று விவாதிப்பதற்கு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா? இந்த ஒரு வருட காலத்திலே நடந்த நிகழ்ச்சி
களைப் பற்றி நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே வன்முறை
என்பதற்கே இடமில்லை. விவசாயிகளோ, தொழிலாளர்களோ
அரசு ஊழியர்களோ தங்களுடைய கோரிக்கைகளை வைத்து
அரசாங்கத்திலே போராடுவார்கள் கோரிக்கைகளை கேட்பார்கள்.
தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளில் வேலை
பார்க்கிற செவிளியார், தங்களுடைய கோரிக்கை
களுக்காக இயக்கம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். நான்
கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அப்படி இயக்கம் நடத்
வதற்காகவே பழி வாங்குகிற எண்ணத்தை அரசு கையாளுகிறது
என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன்.
கடந்த 1½ ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டிலே இருக்கிற
கருவூலத் துறையில் வேலை செய்கிற 25 ஊழியர்கள் பழிவாங்கப்
பட்டிருக்கிறார்கள். அவர்கள் மன்னிப்பு எழுதிக் கொடுத்தால்
தான் வேலையென்று கொள்கையை அரசு கடைபிடிக்கலாமா?
தமிழ் நாட்டில் இருக்கிற உயர்நீதி மன்றமே அவர்களுக்கு வேலை
கொடு என்று சொல்லிய பிறகு கூட மறுக்கிறோம். அரசு இந்த
போக்கை கைவிட வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

திரு. பெ. திருமாறன் : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற
மானியக்கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி
கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய ஆலங்குடி தொகுதியில் இந்த அரசு வந்த
பிறகு செய்திருக்கிற காரியங்களை பாராட்டி வரவேற்கிறேன்.
ரெகுநாதபுரம் பகுதியிலே காட்டாற்றிலே இந்த ஆண்டு
40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம் கட்ட இந்த அரசு
முன் வந்ததை மிகவும் பாராட்டுகிறேன். ஆலங்குடியில்
இருக்கிற ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதற்கான 75 கோரிக்கை



நீண்ட நாளாக பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து
இருக்கிறது. 20 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக அது
இயங்கி வந்தது. இந்த அரசு அதை 30 படுக்கைகள் கொண்ட
ஒரு மருத்துவமனையாக மாற்ற ஒரு கட்டிடத்தை கட்ட முன்
வந்ததற்குப் பாராட்டுகிறேன்.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலிருந்து, திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலிருந்து ஒரு கோரிக்கை இருந்தது.
குலமங்களம் பகுதியில் உம்பிலியாற்றில் அணை கட்ட வேண்டு
மென்று கேட்டிருந்தார்கள். இந்த ஆண்டில் 11 இலட்சம் செல
வில் அணை கட்டுவதற்கு புரட்சித்தலைவர் அவர்கள் முன் வந்
திருப்பதை பாராட்டுகிறேன்.

இது தவிர, தன்னிறைவுத் திட்டம் என்ற முறையில் திருவரங்
குளம், கரம்பக்குடி போன்ற பகுதிகளுக்கு ஏறத்தாழ ரூபாய் 1
கோடி செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதுவுமல்
லாமல், மற்ற திட்டங்களைப் பார்த்தால், நான் சட்டமன்ற
உறுப்பினராக வந்த பிறகு ஏறக்குறைய ரூபாய் 4 கோடியை
என் தொகுதியிலே இந்த அரசு செலவழித்துள்ளது. அதற்காகப்
பாராட்டுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் செய்ய வேண்டியவைப் பற்றி சில
கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். எங்கள் புதுக்கோட்டை
மாவட்டத்தில் வறட்சிக் கடுமையாக உள்ளது. இப்பொழுதே
பொன்னமராவதி, திருவரங்குளம், அறந்தாங்கி, கரம்பக்குடி,
ஆவுடையார் கோவில் போன்ற பகுதிகளில் கடுமையான வறட்சி
ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து, ஆரம்பத்திலேயே, அட்வான்
ஸாக, ஆலங்குடியில் வறட்சிப் பணியை இந்த அரசு துவங்க
வேண்டும். வறட்சிப் பகுதியாக அறிவித்து உடனே வறட்சிப்
பணியைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே கவணாறு என்ற பெரிய
கண்மாய் உள்ளது. 10 கிராமங்களுக்குப் பாசனம் அளிக்கக்
கூடிய கண்மாய். அந்தப் பகுதியில் மழைக் காலத்தில்கூட
தண்ணீர் இல்லை. அதை நம்முடைய வருவாய்த்துறை அமைச்
சர் அவர்கள் நேரடியாகப் பார்த்தார்கள். அந்த அளவு கடும்
வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியினுடைய தன்மைக்
கும் வறட்சியினுடைய நிலைமைக்கும் ஏற்ப நல்ல திட்டங்களைச்
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருவரங்குளம், பம்பன் என்ற
காலனிகளில் சிலோன் அகதிகள் 2,000 பேர்கள் புதிதாக குடி
அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 3 ஏக்கர் நிலம்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 ஏக்கர் நிலத்தில் கிணறு
தோண்டினால் அங்கு தண்ணீரே இல்லை. அந்தப் பொது
மக்கள் அன்றாடம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த

2,000 குடும்பங்களுக்கு நீலகிரி போன்ற மலைத்தோட்டங்களில்
வேலை வாய்ப்பு அளிக்கவும் மற்ற தொழிற்சாலைகளில் முன்
னுரிமை அளிக்கவும் வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை வறட்சி மாவட்டம் என்று திருச்சி, தஞ்சாவூர்
போன்ற பகுதிகளிலிருக்கிற வசதி படைத்தவர்கள், புதுக்
கோட்டை மாவட்டத்திலே தொழில் செய்கிறார்கள். ஆனால்,
அவர்கள் புதுக்கோட்டை உள்ளே செல்லாமல், தஞ்சாவூர் பார்
டரிலும், திருச்சி பார்டரிலும் செய்கிறார்கள். அதோடு, புதுக்
கோட்டை மக்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை.
ஆகவே, புதுக்கோட்டையின் 10 மைல் சுற்றுக்குள் அந்த
முதலாளிகள் அந்தத் தொழில்களைத் துவங்க ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலுள்ள மரமடை,
கவட்டூர், வளநாடு போன்ற பகுதிகளில் ஆஸ்பத்திரி அமைக்க
வேண்டுமென்று பல ஆண்டுகளாகப் பணத்தைக் கட்டிக் காத்து
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஆஸ்பத்திரி
அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய
சொந்த ஊராகிய பத்தமங்கலத்தில் கால்நடை மருத்துவ மனை
வேண்டுமென்று 3 ஆண்டுகளாக முயற்சி செய்துகொண்டிருக்
கிறோம். இந்த ஆண்டாவது, அமைச்சர் அவர்கள் அந்தக் கால்
நடை ஆஸ்பத்திரியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய மாவட்டத்தில் மன்னர் கல்லூரியில்
ஷிப்டு முறையில் பாடத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
காரணம் கேட்டால், அடிஷனல் கட்டிடம் வேண்டும், இருப்பது
போதவில்லையென்று மன்னர் கல்லூரியினர் சொல்கிறார்கள்.
அந்தக் கல்லூரி 100 வது ஆண்டு விழாவைச் சென்ற ஆண்டு
சிறப்போடு நடத்தியது. அந்தக் கல்லூரிக்குத் துணைக் கட்டிடம்
கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கந்தர்வக்கோட்டையில் சுண்ணாம்புக்கல் அதி
மாகக் கிடைக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே சிமெண்ட்
தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. ஆகவே, புதுக்கோட்டை
யில் ஒரு மினி சிமெண்ட் ஆலை அமைத்தால், அதற்கு வேண்டிய
மூலப் பொருள் ஆலங்குடியில் கிடைக்கும் என்று நான் தெரி
வித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கந்தர்வக்கோட்டைப் பகுதியில் முந்திரி பயிர்
செய்கிறார்கள். முந்திரிக் கொட்டையை, ஆந்திர மாநிலத்திலே
யிருப்பவர்கள் வாங்கிப்போய், அதிக விலைக்கு விற்றுக்கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, முந்திரித் தொழிற்சாலையை அந்தக்
கந்தர்வக்கோட்டை பகுதியில் அமைத்துத்தர வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியில் பல காட்டாறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறு சிறு அணையாகக் கட்டினால் வசதியாக இருக்கும். அங்கு மழைக் காலங்களில் இரண்டு நாள், 3 நாள்தான் தண்ணீர் போகும். அந்தப் பகுதியிலே, ரூபாய் 5 இலட்சம், ரூபாய் 2 இலட்சம், ரூபாய் 1 இலட்சம் செலவில் சிறு சிறு அணைகள் கட்டினால் காட்டாறுகளில் தண்ணீர் தேங்கி பாசனத்திற்கு உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11–10)

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த உபமானியக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்கள் சொன்னார்கள், விவசாயப் பிரச்னையாக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்களின் பிரச்னையாக இருந்தாலும் நீங்கள் வன்முறையைக் கைவிட்டுவிட்டால் நிச்சயமாக நாங்கள் நல்லதொரு நடவடிக்கை எடுப்போம் என்று. நிச்சயமாக யாருமே வன்முறையை விரும்ப மாட்டார்கள். ஆகவே, நல்லதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு அதில் சில யோசனைகள் சொல்லப்பட்டு, விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால், இன்று வரைக்கும் அது அமுல் நடத்தப்படவில்லை என்பதை நினைத்து வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட நிலைமையிலே சில நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கும் நேரத்தில் அது வன்முறையாக அரசாங்கத்திற்குத் தோற்றமளிக்கிறது. அப்படித்தான் இந்தக் கடன் பிரச்னை இருக்கிறது. இன்றைக்கு மட்டுமல்ல. பல தடவைகளில் மதிப்பிற்குரிய கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், கறுப்புப் புள்ளி வருகிறது என்று.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

கறுப்புப் புள்ளி வருவதை யாரும் விரும்பவில்லை. ஆனால், இன்றைக்கு விவசாயிகளின் நிலைமையைப் பொறுத்தவரையில் அவர்கள் கடனைத் திருப்பி கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, நான் இதில் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கொள்கைதான் என்ன என்று திட்டவட்டமாக இந்தச் சபையில் அறிவிக்கப்பட வேண்டும். கறுப்புப் புள்ளி வரும், மத்திய அரசு வற்புறுத்துகிறது, ஆகவே, நாங்கள் இந்த நடவடிக்கையை எடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இதில் உங்கள் கொள்கைதான் என்ன ? நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? அந்த அளவிற்கு உங்களுடைய கொள்கையிலே நின்றால் நாங்களும் ஒத்துழைக்கச் செய்து நிச்சயமாக விவசாயிகளுக்குப் பல நன்மைகளைக் கொண்டு வர முடியும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதை விட்டு
விட்டுக் கறுப்புப் புள்ளி வருகிறது, ஆகவே நடவடிக்கை எடுக்
கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்வது தன்
னுடைய கடமையைத் தட்டிக் கழிக்கின்ற நிலைமைக்குத்தான்
கொண்டு போகிறது. நிச்சயமாகத் தமிழக மக்களுக்கு நீங்கள்
உதவி செய்வீர்கள், 1972 முதல் 1979 வரையில் மிகப் பெரிய
இயற்கைச் சீற்றங்களின் காரணமாக விவசாயிகளுக்கு அழிவு ஏற்
பட்டு சீர்கெட்டுப் போய், கிட்டத்தட்ட 60 சதவித மக்கள்
வறுமைக் கோட்டிற்குக் கீழே போய்க்கொண்டிருந்த மக்களை
மேலே எழுப்புவதற்குக் கை தூக்கி விட நீங்கள் எடுக்கும் நட
வடிக்கைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற முறையில்தான்
உங்களுக்கு ஓட்டுப்போட்டு மெஜாரிட்டி மக்கள் அனுப்பியிருக்
கிறார்கள். அப்படி உங்களுக்கு ஓட்டுப்போட்ட மக்களைக்
கொடுமைப்படுத்தும் வகையில், கறும்புள்ளி வருகிறது என்று
காட்டிச் சொல்வது சரியான வாதமாகாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, வாக்களித்த மக்களைக் கொடுமைப்படுத்து
கிறோம் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர்
திரு. சிவசாமி அவர்கள் சொல்கிறார்கள். அதுமிகத் தவறு.
பாரதத்திலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவில்
தமிழகத்தில்தான் முதன் முறையாக விவசாயிகளினுடைய குறை
களைக் கண்டு தீர்ப்பதற்காக ஒரு உச்ச மட்டக் குழுவைப்
போட்டோம். அந்த உச்ச மட்டக் குழு பரிந்துரை செய்த
பிறகு, விவசாயிகளின் தார்மீகப் பிரச்னைகள் என்ன இருக்
கின்றன: அவர்களுடைய பிரச்னைகளைக் களைவதற்கு என்ன வழி
இருக்கிறது என்பதையெல்லாம் ஆய்ந்து எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவிற்கு தமிழகத்தில்தான் 200 கோடி ரூபாய்க்கு
இதுவரையில் சலுகைகளைச் செய்திருக்கிறோம். இதுவே
விவசாயிகளின் நலன்களில் இந்த அரசு, புரட்சித் தலைவரவர்
களுடைய அரசு எந்த அளவிற்கு அக்கறையாக இருக்கிறது
என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

தற்போது எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பொறுத்த
வரைக்கும், விவசாயக் கடனை வசூல் செய்யாமல் நாம் இருந்து
விட்டால், தமிழகம் பிளாக் லிஸ்ட் செய்யப்பட்டு, உலக வங்கி
யினுடைய கடனுதவி ஜூன் திங்கள் 31 ஆம் நாளுக்குப் பிறகு
கிட்டாத நிலை ஏற்பட்டு விவசாயப் பொருளாதாரமே ஸ்தம்
பித்துப் போகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்ற சூழ்நிலை
உருவாகியிருக்கிறது. மைய அரசைப் பொறுத்த வரைக்கும்
விவசாயிகளுக்கு சலுகை தர உதவி தாருங்கள் என்று கேட்
கிறோம். மைய அரசு, இது பாரதம் தழுவிய பிரச்சினை என்
பதால் தமிழகத்திற்கு என்று தனித்து எதுவும் செய்ய முடியாது
என்று சொல்லியிருக்கிறார்கள். மைய அரசை நாம் வற்புறுத்தி
வருகிறோம்.



ஆனால் வசூல் செய்யாமல் விட்டு, விட்டு, பிளாக் லிஸ்ட்
செய்யப்பட்டு, விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகி விடக்கூடாது
என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: மாற்றுத் தலைவரவர்களே; மைய
அரசு ஏற்கெனவே அதனுடைய தவறான கொள்கையின் காரண
மாக இந்தியாவிலே கிட்டத்தட்ட ஏழெட்டு மாநிலங்களில் ஆளும்
தன்மையை இழந்து விட்டிருக்கிறது. தமிழகத்திற்கு மட்டும்
இப்படிச் செய்வதன் காரணமாக மேலும் பலபேர் இப்படிப்பட்ட
கோரிக்கையை வைப்பார்களே என்று அவர்கள் தடுத்து நிற்
கிறார்கள். அப்படிப்பட்ட கொள்கையை நீங்கள் வரவேற்
கிறீர்களா, ஆதரிக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.
ஆகவே, உங்களுடைய கொள்கையின் அடிப்படையிலே நீங்கள்
நடக்க வேண்டுமேயொழிய மைய அரசைக் காட்ட வேண்டா
மென்றும், எப்படியாவது நீங்கள் விவசாயிகளுக்கு உதவி செய்ய
வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து ஏக்கர்கள், பத்து ஏக்கர்கள் உள்ள விவசாயிகளுக்குச்
சலுகை செய்து, அவர்களுக்கு வட்டி முழுவதையும் தள்ளுபடி
செய்வதோடு மட்டும் அல்லாமல் அவர்களுடைய கடனை நீண்ட
காலத் தவணைகளாக ஆக்கி, சன்னம் சன்னமாக வசூல் செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

அதுமட்டுமல்ல. தன்னிறைவுத் திட்டம் தயாரிக்கக்கூடிய
நேரத்திலே அது நல்ல திட்டமாக இருந்தாலும் கூட, பற்றாக்
குறை திட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலே ஏராள
மான பாலங்கள், ரோடுகள் விடப்பட்டிருக்கின்றன. இப்படிப்
பட்ட திட்டங்களைப் போடும்போது, ஒரு பகுதி முழுவதுமே
எல்லாவிதமான வசதிகளைப் பெறுகின்ற நிலையிலேதான் போட
வேண்டும். அப்போதுதான் அது தன்னிறைவுத் திட்டம் என்று
பொருளாகும். அப்படி இல்லாமல் ஒரு குறிப்பிட்ட தொகையை
ஒதுக்கி இருப்பதன் காரணமாக ரோடுகள், பாலங்கள் கட்ட முடி
யாமல் விடுபட்டுப் போகும் நிலை இருக்கின்றது. இதைக் கணக்
கிலே எடுத்துக் கொண்டு ஒரு பகுதிக்கு என்ன வசதிகள்
தேவையோ அந்த அளவுக்குத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்
என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கிறார்கள். இப்படியேதான் சென்ற ஆண்டும், அதற்கு முன்னால் இருந்த ஆண்டிலும் சொன்னார்கள். ஆனால் இன்று வரையில் அந்தப் பகுதியில் குடிநீர் வரவேயில்லை. எனவே இந்த ஆண்டிலேயாவது, அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி. மக்களுக்கும், கிராமப் பகுதி மக்களுக்கும் இந்த ஆண்டே குடிநீர் கொடுக்கிற்றாம் என்று சொல்லுகின்ற நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் என்று எங்கு பார்த்தாலும் பேசப்படுகிறது. ஆனால் யாருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் நிலை இல்லாமல் இருக்கின்றது. அரிசன மக்கள் இலட்சக்கணக்கான பேர்கள் வீடின்றி கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர்கள் பிரச்சினையைப் பற்றி எல்லோரும் பேசனார்கள். கடற்கரையில் ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் பரந்து இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை சரியாசி அரசாங்கம் கணக்கிலே எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அதன் காரணமாக இன்று அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே போய்க் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களை கைதூக்கிவிட வேண்டும். குறைந்த பட்சம் அவர்களுக்கு வீடுகளாவது கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இளையான்குடி போன்ற மிகவும் முக்கியமான இடங்களில் அது ஒரு பெரிய டவுன். 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வசிக்கின்றார்கள். அந்த ஊருக்கு குடிநீர் வேண்டும் என்று நானும் தொடர்ந்து 4 ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறேன் அமைச்சர்கள் எல்லாம் கையெழுத்துப் போட்டு விட்டார்கள் என்றும், உடனடியாக அது வந்துவிடும் என்றும் சொல்லுகிறார்கள். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் இந்த ஊருக்கு உடனடியாக குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் அதிகமாக கண்மாய்கள் இருக்கின்றன. அதுவும் கிழக்கு இராமநாதபுரத்திலே அதிகமாக கண்மாய்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளுக்குகால்வாய்கள் இல்லாத நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. அதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, அந்தக் கண்மாய்களுக்குக் கால்வாய்களை வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வைகைப் பிரதேசத்திற்கு மேல் பாசனப் பகுதி மீண்டும் மீண்டும் விரிந்து கொண்டே போகின்றது. அதிலே கிழக்குப் பகுதி பாதிக்கப்படாத அளவுக்கு மேல் பகுதியை விஸ்தரித்து செம்மைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்



கிறேன். மேற் பகுதியை விஸ்தரிப்பதன் காரணமாக கீழ்ப் பகுதி
சன்னம் சன்னமாக நீர்ப் பாசனத்திலே குறைந்துக் கொண்டு
வருகிறது. புயல், வெள்ளத்தினால், பாதிக்கப்பட்ட இந்த பகுதி
சீர் செய்யப்படாமல் இருந்து வருவதன் காரணமாக, தண்ணீர்
கடலிலே விழும் நிலை இருக்கின்றது. அந்த நீர்ப்பாசனத்தை
அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலிலே பல திட்டங்
களைக் கொண்டு வருகிறோம். மாவட்டம் முழுவதும் அலசி
ஆராய்ந்து என்னென்ன பிரச்சினைகளை கொண்டு வர வேண்டும்
என்று கருதுகிறோமோ அவைகளைக் கொண்டு வருகிறோம்.
தீர்மானங்கள் கூட போட்டு அனுப்புகிறோம். ஆனால் அவை
களின் கதி என்ன ஆகிறது என்று தெரியவில்லை. தொடர்ந்து
போட்டு அனுப்புகிறோம். ஆனால் செயலற்ற முறை இருக்
கின்றது. மாவட்ட வளர்ச்சி கவுன்சில் தலைவராக கலெக்டரைப்
போட்டு இருக்கிறார்கள். அங்கே எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள்
போன்றவர்கள் ஒவ்வொரு கவுன்சிலிலும் கிட்டத்தட்ட 20 பேர்
கள் இருக்கிறார்கள். அவர்களை ரொட்டேஷன் முறையிலே
தலைமை தாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மிகவும் கடுமையாக வேலை செய்கின்ற தொழிலாளர்கள்
படுகின்ற கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. அவர்கள் வேலை
செய்கின்ற நேரத்தில் இறந்துவிட்டால், மரம் ஏறும் தொழி
லாளர்களுக்கு கொடுப்பதைப் போல இவர்களுக்கும் 10 ஆயிரம்
ரூபாய் இவர்கள் இறந்துவிட்டால் கொடுக்க வேண்டும் என்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

தொடர்ச்சியாக மின்சாரத்தைப் பற்றி
அதுமட்டுமல்ல. பேசினார்கள். இன்றைக்கு
எல்லா உறுப்பினர்களும்
இருக்கக்கூடிய நிலையிலே எந்தக் கிராமத்திற்கும் மின்சாரம்
வராத நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல.
ஒன்றிரண்டு விவசாயிகள், விவசாயத்திற்கு என்று போட்டிருக்
கக்கூடிய மோட்டார்கள் தீப்பிடித்து விடுகிறது. மோட்டார்கள்
ரிவைண்டிங் செய்ய முடியாத நிலைமையில் இருந்துக் கொண்
டிருக்கின்றன. அதற்கு 200 ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டிய
ஒரு அவல நிலைமை இருக்கிறது. அதை மீண்டும் ரிப்பேர்
செய்து கொண்டு வந்து போட்டால், அதற்கும் உயிர் நீண்ட
நாள் இருக்குமா என்று தெரியாது. அது எந்த நேரத்திலே
போகும் என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலைமை
யிலே நம்முடைய மின்சாரத்துறை இருந்துக் கொண்டிருக்கிறது.
ஆகவே, அந்த மோட்டார்களையெல்லாம் தொடர்ச்சியாக மின்
சாரம் பெறுவதற்கு நீங்கள் பொடன்சியல் சப்ளை செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியாளர்களுக்கு இன்றைக்கு எங்கு பார்த்தாலும் வீடு இல்லாமல் அவர்களுக்கும் பிரச்சினை இருந்துக் கொண்டிருக்கிறது. கைத்தறியாளர்கள் பிரச்சினைகளிலே அவர்களுக்கு வீடுகள் அதிகமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு நூற்றுக் கணக்கான பேர்கள் எந்தவிதமான சம்பளமும் இல்லாத நிலையிலே, அந்த முதலாளிகள் எவ்வளவு கூலி கொடுக்கிறார்களோ, அதை வாங்கிக் கொண்டு போகக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் வரதராஜன் அவர்கள் பேசுகின்றபோது நிலைமை இப்படி நீடிக்குமானால், அது துப்பாக்கிப் பிரயோகம் வரை போகக் கூடிய சூழ்நிலை வரும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காவல் துறையிலே பேசுகின்றபோது, காவலர்களுக்கு கொடுக்கப் பட்ட சலுகைகளைப் பார்க்கும்போது, அந்த அளவிற்கு துப்பாக்கிச்சூடு நடைபெறுமோ என்று ஐயப்பாடு வருகின்ற நிலைமைக்குப் போனாலும் போகும் என்று கருத்துப்படி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் என்று சந்தேகம் ஏற்படுகின்ற காரணத்தால் அந்தக் குறிப்பினைப் பார்த்து, அவைக் குறிப்பிலே இருந்து நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்துப்பட நான் சொல்லவில்லை. நான் சொன்னதினுடைய கருத்து என்னவென்றால், நாம் கெடுபிடி வசூல் ஆரம்பிப்பதினால் இன்றைக்கு நிலைமை மோசமாக கிராமப் புறத்திலே இருக்கிறது. கடைசியில் இது துப்பாக்கிப் பிரயோகத்தில் போய் முடியப் போகிற ஆபத்து இருக்கிறது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு அந்த அளவிற்குத் தேவையில்லை. எடுத்ததும் துப்பாக்கிச் சூடு என்ற அந்தக் கற்பனையிலே ஏன் சொல்வானேன். (குறுக்கீடு). தயவு செய்து அந்த மாதிரி அர்த்தத்தில் சொல்லவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லிவிட்டார்கள். நான் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்த பின்னர் அவைகளை நீக்கலாமா என்பது பற்றிச் சொல்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** இதற்கு அமைச்சர் அவர்கள் சார்பிலோ அல்லது ஆளும் கட்சி உறுப்பினர் சார்பிலோ பதில் அளித்து விட்டால், அந்த இரண்டுமே அவைக் குறிப்பில் இருக்கலாம். அதில் தவறு இல்லை,





**திரு. இல. பலராமன் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் கூறும்போது, இந்தக் கடன் வசூல் பிளாக் லிஸ்டிலே மத்திய அரசு வைத்து விடுவதனால்தான், நாங்கள் தீவிரப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். அது அரசுத் தரப்பினுடைய கருத்தாக இருக்கிறது. விவசாயிகள் கட்ட முடியாத ஒரு நிலை ஏற்படுவதற்கு இன்றைக்கு வட்டிக்கு வட்டி என்ற நிலைமை விவசாயிகள் மத்தியிலே இருப்பதை அரசு கவனிக்குமா? குஜராத் மாநிலத்திலே இன்றைக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து, அசலிலே 2, 3 தவணைகளில் கட்டலாம் என்று இருக்கிறது. அதுபற்றி தமிழக அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டிக்கு வட்டி, தவணையைக் கடந்து விடுகின்ற நிலையில் இருப்பதையெல்லாம், தமிழக அரசுக்கு மட்டும் தனியாக விதிக்கப்பட்டதல்ல. மைய அரசு, ரிசர்வ் வங்கி, அதிலமை நடைமுறைப்படுத்துகின்ற அணுகுமுறையின் அடிப்படையில், விதிகளின் அடிப்படையில் இவைகள் முழுவதுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் மாற்றம் செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை (குறுக்கீடு). குஜராத் மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் நாம்கூட இதுகாறும் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் சலுகை இந்த மாநில அரசு அளித்திருக்கிறது. குஜராத் மாநிலத்திலே 78 கோடி ரூபாய் சலுகை அளித்தார்கள். குஜராத் மாநிலத்திற்கும் தமிழக அரசுக்கும், மத்திய அரசினுடைய தாக்கீது வந்திருக்கிறது. அதுபோல் சலுகைகளை அளிக்கக்கூடாது என்று மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் கூறியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு தெரிவிக்கும் வரையில் பத்திரிகைகள் வாயிலாகவோ அல்லது வேறு வழிகளிலோ யாரும் வெளியிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். உமாநாத் :** இந்தமாதிரி 'ஸ்ட்ரிஞ்சன்ட் ஆக்ஷன்' எடுத்தால் நாங்கள் ரெசிஸ்ட் பண்ணுவோம். இந்த மாதிரி நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முழுமையாகப் பார்த்துதான் தெரிவிக்கவேண்டும். அதிலே என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. சரியாக இருந்தால் அப்படியே இருக்கலாம்.

**திரு. ஆர். மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, நடக்காத ஒன்றை நடைபெறாத ஒன்றை நடக்கும் என்று முன்கூட்டியே எச்சரிக்கை விடுவது நலம் பயக்கக்கூடியது ஆகாது என்றமுறையில்தான் நீக்கவேண்டுமென்று கேட்கிறோமே தவிர வேறில்லை.

[1982 மார்ச் 3

டாக்டர் மு. கருணாநிதி : கடந்த கால சூழ்நிலைகளை
எண்ணிப்பார்த்து, அப்படி நடந்துவிடக்கூடாது என்ற ஆவலோடு
சொல்லப்படுகிற வார்த்தைகள்தான் அவை.

திரு. ஆர் மணிமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
பேராசிரியர் அவர்கள் ஒரு முறை பேசும் போது சொன்னார்கள்.
மனதிலே தோன்றியதை எல்லாம் பேசக்கூடாது; கற்பனையில்
உதிப்பதை எல்லாம் வெளியே கொட்டிவிடக்கூடாது என்று
சொன்னார்கள். அதற்காக சொல்கிறோமே தவிர, மனதிலே
தோன்றியதை எல்லாம், கற்பனையில் தோன்றியதை எல்லாம்,
இது நடக்கும் என்று முன்கூட்டியே சொல்வது உண்மையிலேயே
அமைதிக்கு ஊறு விளைவிக்காதா என்றுதான் கேட்கிறோமே
தவிர வேறல்ல.

திரு. ரா உமாநாத் : பின்சாரக் சட்டணத்தை பொறுத்த
வரையில் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களைப் பற்றி
எதுவும் சொல்லவில்லை; நீங்கள் உட்காருங்கள். அவைப்
குறிப்பில் என்ன இருக்கிறது என்று பார்த்து, என்னுடைய
தீர்ப்பை பின்னால் தெரிவிக்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிற இந்த நிதி
ஒதுக்கீடு மசோதா மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுடைய
கடன் சுமையை குறைக்க வேண்டும்; கடன்சுமை ரத்து செய்ய
வேண்டும் என்பதிலே இந்த அரசு தாய் உள்ளத்தோடு
இருக்கிறது. இன்றைக்கு கடன் வசூலை ஆரம்பித்திருந்தாலும்
கூட ஏழை எளிய விவசாயிகளுக்கு ஏதாவது . செய்துதான்
ஆகவேண்டும்; அவர்களுடைய கடன்சுமையைக் குறைக்க
வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கரை கொண்டிருக்
கிறது. நாம் அதற்காக நடவடிக்கை எடுத்தாலும் இன்றைக்கு
மைய அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏழை எளிய
விவசாயிகளுக்கு கடன்சுமையைக் குறைக்க ஏதாவது சலுகை
செய்யவேண்டுமென்று இந்த அரசு விரும்பினாலும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் எந்தவிதமான
சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டாலும் அது தவறு என்று
மத்திய சர்க்கார் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அப்படி இருந்தாலும் இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்
திலே மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு கணிசமான



1982 மார்ச் 30] (வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்)

சலுகைகளை அளித்திருக்கிறது. அந்த அளவுக்கு இந்த அரசு
விவசாயிகள் பிரச்சனையில் தாய் உள்ளத்தோடு செயல்பட்டு
வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குச்
சான்றாகத்தான் அரசின் தக்காவிக் கடன் மற்றும் கூட்டுறவு
கடன் என்ற வகையிலே ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்கு
ஏழை எளிய விவசாயிகளுடைய கடன்களை மாண்புமிகு புரட்சித்
தலைவர் அரசு ரத்து செய்திருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் பல்வேறு மாநிலங்களிலே கடன்
நிவாரணம் அளிப்பதாக அறிவித்தார்கள். அதை அவர்களால்
நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1981 நவம்பர், டிசம்பர்
மாத ரிசர்வ் பாங்க் புல்லட்டின் என்ன சொல்கிறது என்று
சொன்னால், பல்வேறு மாநிலங்களில் சலுகைகள் அளிப்பதாகச்
சொன்னார்கள். வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் அவர்
கள் அளித்த வாக்குறுதிகளை சரிவர நிறைவேற்றவில்லை.
கடன் நிவரணம் 40 சதவீதம் கூட ஏழை எளிய விவசாயிகளுக்கு
அளிக்கப்படவில்லை. என்று ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்
திருக்கிறார்கள். அதே நேரத்தில் இங்கே ஆட்சிப் பொறுப்பில்
இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தக்காவிக்
கடன், கூட்டுறவுக் கடன் இரண்டையும் சேர்த்து ஏறத்தாழ
200 கோடி ரூபாய்க்கான கடனை ரத்து செய்திருக்கிறார்கள்.
இதைப் பார்க்கும்போது ஏழை எளிய விவசாயிகள் கடன்
சுமையைக் குறைப்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு கண்ணும்
கருத்துமாக இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும்.

இதற்குமேலும் நாம் சலுகைகள் அளிக்க வேண்டுமென்று.
விரும்பினாலும் மத்திய சர்க்கார் மாநில அரசை பிளாக் லிஸ்டில்
சேர்த்துவிடுவோம் என்று ஒரு அபாய அறிவிப்பை தந்து
எந்தவிதமான சலுகையும் அளிக்கக்கூடாது; கடன் நிவாரணம்
என்ற முறையிலே சலுகையை அளித்து மத்திய அரசை
ஒரு இக்கட்டான நிலையில் மாட்டிவிடக் கூடாது
என்று ரார்வ் பீரேந்திரசிங் அவர்கள் குறிப்பிட்டிருக்
கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமையிலும் மாநில
அரசு ஏதாவது செய்தாக வேண்டும் என்று விரும்புகிறது.
இருந்தாலும் இந்த நிலையிலே அண்ணா தி.மு.க. அரசாக இருந்
தாலும், வேறு அரசாக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
அரசாக இருந்தாலும்ஏதாவது ஒரு நிலையைஎடுத்தாக வேண்டும்.
நிவாரணம் அளிக்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு மாற்றுக்
கருத்து இல்லை. நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொன்
னாலும் கூட,ஏற்கனவே கடன்செலுத்திய ஏழை எளிய விவசாயி
களுக்கு மறுபடியும் விவசாயம் செய்ய பயிர்க் கடன்
கொடுக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது.
இந்தச் சூழ்நிலையில் இரண்டில் ஒன்றைத்தான், எந்த அரசாக
இருந்தாலும் செய்யவேண்டும். ஒன்று, விவசாயிகள் பெற்று
இருக்கும் கூட்டுறவுக்கடனை வசூல் செய்து, ரிசர்வ் வங்கியும்

(வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்) [1982 மார்ச் 30

மத்திய அரசும் என்னென்ன விதிகளை வகுத்து இருக்கிறதோ அந்த அடிப்படையில் அதை நிறைவேற்றி, மறுபடியும் கடனைப் பெற்று, எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு தொடர்ந்து கடன் கொடுத்து உதவ முடியுமோ அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால் கடன் கொடுத்ததை வசூல் செய்யக் கூடாது என்றால், வசூல் செய்வதை நிறுத்த வேண்டும் என்று சொன்னால் ஏ.ஆர்.டி. சி. மற்றும் ரிசர்வ் வங்கி சொல் கிற நிபந்தனைகளை அனுசரிக்கவில்லை என்று சொன்னால், அவர்களிடமிருந்து மீண்டும் கடன் தொகையைப் பெற்று விவ சாயிகளுக்கு தொடர்ந்து உதவிசெய்ய முடியாத நிலைமை ஏற்படும். ஏனென்றால், ஏற்கனவே கொடுத்த கடன் தொகையை வசூலித்து, அந்த விவசாயிகள் மறுநிதி உதவிக் கழகத்திற்கு கட்டினால்தான், மீண்டும் அவர்கள் கோவாண்மைக்கான முறையில் கடன் அளிக்கிறார்கள். இந்த வசூல் செய்யவில்லை என்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, உண்மையிலேயே என்ன நிலைமையேற்படும் என்பதை அனைத்து கட்சிக்கும், அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டு எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

தனியார் கடன்களை அரசு ரத்து செய்து இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தனியாரிடமிருந்து விவசாயிகள் கடன் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் ஒரே நிறுவனம், ஒரே அமைப்பு கூட்டுறவு அமைப்புதான், கூட்டுறவுச் சங்கம்தான். இந்தக் கூட்டுறவுச் சங்கம் கடன் கொடுக்கும் தகுதியை இழந்து விட்டது என்று சொன்னால், ஏழை எளிய விவசாயிகளுக்கு கடன்கொடுப்போர் யாரும் இல்லை என்பது நிதர்சனமாக ஒரு உண்மை. எனவே தான் கூட்டுறவு சங்கங்கள் கொடுத்த கடனை வசூலித்து, ரிசர்வ் வங்கியும் ஏ.ஆர்.டி. சி-யும் சொல்கிற நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடன் வசூலைச் செய்ய வேண்டி இருக்கிறது. அந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் இருந்தால், கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்கும் தகுதியை இழந்து விடும். அப்படிப் பட்ட ஒரு நிலை ஏற்படுமானால், உண்மையிலேயே தமிழ் நாட்டில் ஜமீன்தார் முறை மீண்டும் ஏற்படும் ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தச் சபையின் மூலம் நான் ஒரு உண்மை நிலையை எடுத்துச் சொல்லியாகவேண்டும். ரிசர்வ் வங்கியும் ஏ. ஆர். டி. சி-யும் சொல்கிற விதிமுறைகளை நிறைவேற்றாமல் போனால் தமிழகத்தில் இருக்கும் கூட்டுறவுச்சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் சூழ்நிலையை இழந்து விடும். இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குமட்டுமல்ல. புரட்சித் தலைவர் அரசுக்கு மட்டுமல்ல, எந்தக் கட்சி ஆட்சியாக இருந் தாலும் அவர்களுக்கு இந்த நிலைதான் இருக்கிறது. உதாரணத்



1982 மார்ச் 30] (வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்)

சொல்ல விரும்புகிறேன். தோழமைக் திற்கு ஒன்றைச் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தும் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தும் மேற்கு வங்காள அரசை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கே ரிசர்வ் வங்கியும் ஏ. ஆர். டி. சியும் விதித்த நிபந் தனைகளை அவர்கள் கடைபிடிக்காத காரணத்தால், அந்த ஒதுக்கப்பட்ட நிதியை அவர்களால் முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. 1979 ஆம் ஆண்டில் 14 கோடி ரூபாய் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் அவர்களால் 9 கோடி ரூபாய் அளவிற்குதான் அந்த விதிமுறைக்கு உட் பட்டு உபயோகிக்க முடிந்தது. ஏறக்குறைய 5 கோடி ரூபாய் அளவிற்கு அவர்களால் பயன்படுத்த முடியவில்லை. 1980 ஆம் ஆண்டில 17 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன்கள் கொடுப்பதற்காக ஏ. ஆர். டி. சி நிதி ஒதுக்கீடு செய்து இருந்தும் ரிசர்வ் வங்கிகள் கொடுத்த விதிகளின்படி அவர்கள் 7கோடிரூபாய் அளவிற்குதான் கடன் கொடுக்க முடிந்து இருக்கிறது. 1981 ஆம் ஆண்டில் 21 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டு இருந்தபோதிலும், ஏறக்குறைய 6 கோடி ரூபாய்தான் அவர் களால் விவசாயிகளுக்கு கடன்கொடுப்பதற்காகபயன்படுத்தப்பட் பட்டு இருக்கிறது. இந்த விவரங்கள் எல்லாம் 4,5 தேதிகளில் வெளிவந்துள்ள ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையில் போட்டு இருக்கிறார்கள்.

ஆகவே, இரண்டில் ஒரு நிலையை நாம் எடுத்தாகவேண்டும். ரிசர்வ் வங்கி சொல்கிற விதிகளின் ஒன்று கடனை வசூலித்து, மீண்டும் விவசாயிகளுக்குக் அடிப்படையில் திருப்பிக் கட்டி, தகுதியினை பெறவேண்டும். கடன் கொடுக்கும் அளவில் நிறுத்திவிட்டால் அதனால் இல்லாவிட்டால் கடன் வசூலிப்பதை தமிழகத்தில் உருவாகும். பழைய ஒருபயங்கரமான சூழ்நிலை கிராமங்களில் வரும். ஏனென்றால், தனி ஜமீன்தார் முறை இருக்கிறது. எனவே புதி யார் கடனை இந்த அரசு ரத்துசெய்து இருக்கிறது. எனவே புதி தாக கடன் கேட்டால், அவர்கள் விவசாயிகளிடத்தில் சொல் கிறார்கள். கடன் தருகிறேன் ஒரு ஏக்கரோ, இரண்டு ஏக் கரோ நிலத்தை எனக்கு சொத்துக் கிரயம் எழுதிக்கொடுத்து விடு என்று கேட்கிறார்கள். எனவே, இந்த சூழ்நிலையில் கூட்டுறவு நிறுவனம் மட்டும்தான் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் ஒரே நிறுவனமாக இன்றைக்கு இருக்கிறது. அவர் களுடைய கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடு கொடுக்கும் இணையற்ற நிறுவனமாக இருக்கிறது. எனவே இந்த நிலையில் நான் இங்கே இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

இங்கேயுள்ள அனைத்து கட்சிகளுக்கும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆகவே, அவர்கள் எல்லாம் பாராளுமன்றத்தில், குரல் எழுப்பி, இதற்குத் இது குறித்து தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும். தமிழகத்தில் இருக்

கும் புரட்சித் தலைவர் அரசு, எப்படியாவது ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணினாலும் மத்திய அரசு விதித்து இருக்கும் நிபந்தனைகள் ஒரு தடைக் கல்லாக இருப்பதால் இது பாராளுமன்றத்தில் பல்வேறு கால கட்டங்களில் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. மாநில அரசுகள் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், தமிழகத்தை பிளாக் லிஸ்ட்டில் சேர்க்காதீர்கள் என்று பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் அவர்களுக்கு உதவி செய்த தாக அமையும். அதைப்போலவே, இந்தப் பிரச்சனையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசிடம் வைத்துள்ள கோரிக்கையையும் கனிவுடன் கவனிக்கவேண்டும் என்றும் அவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கோரிக்கையை அவர்கள் கனிவோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ தொழிலதிபர்களிடமிருந்து பணம் கோடிக் கணக்கில் வசூலாகாத சூழ்நிலை மத்திய அரசிடம் இருக்கிறது. அப்படி கோடிக் கணக்கில்தொழிலதிபர்களிடமிருந்து வசூலாக வேண்டிய தொகை 5 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக்காலம் நிலுவையில் இருக்கும்போது, இப்படி மாநில அரசு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முன் வரும்போது, அந்த கோரிக்கையை ஏற்று, அந்த மாநில அரசுகள் மீண்டும் கடனை பெற்று செலுத்திய விவசாயிகளுக்கு கொடுக்கிற வகையில், மைய அரசு ஏதாவது ஒரு நிதியிலிருந்து நிதி ஒதுக்கி மாநில அரசுக்கு உதவ வேண்டும் என்று, அனைத்து தரப்பிலும், பாராளுமன்றத்திலே குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக் களைக் கூறவிரும்புகிறேன்.

1977 ஆம் ஆண்டு பெய்த பெரும்புயல் மழையின் காரணமாக நான் சார்ந்திருக்கிற வேடசந்தூர் தொகுதியில் இருக்கும் குடகனாறு அணை உடைபட்டது. அந்த அணையை முன்பு இருந்ததை விட மிக நல்ல முறையில் மீண்டும் கட்டுவதற்கான திட்டத்தை, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தீட்டி, அது விரைவில் கட்டப்படும் என்று குறிப்பிலும் சொல்லப்பட்டிருக் கிறது. அப்படி அந்த அணை கட்டப்படும்போது நான் ஒன்றை முக்கியமாக குறிப்பிடவிரும்புகிறேன். வேடசந்தூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி, வரட்சியான தொகுதி, விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய தொகுதி, ஆகவே கட்டப் படுகிற அணையிலிருந்து வருகிற தண்ணீர் முழுவதும் வேடசந்தூர் தொகுதியிலேயே பாயுமாறு வழி வகை செய்யும் முறையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல் நான் சார்ந்திருக்கிற வேடசந்தூர் தொகுதியில் ஐயனூர் ஆலம்பட்டி செல்கிற சாலை பல ஆண்டுக்காலமாக வனத் துறையின் கீழே இருக்கிறது, அது இப்போது மிகவும் பழுதடைந்த நிலையில் நடக்கவே கூட லாயக்கில்லாத நிலையில் இருக்கிறது. அது பாதைதானா இல்லையா என்ற அளவுக்கே கேள்வி எழும் வகையில் இருக்கிறது. அதனை நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உணர்ந்து, அதனை வனத்துறையிடம் இருந்து, நெடுஞ்சாலைத்துறைக்கு கேட்டிருக்கிறது. அப்படி வந்தவுடன், உடனடியாக அந்த சாலையை விரிவு படுத்தி பலப் படுத்தும் வேலையை செய்தால், அந்தப்பகுதியில் உள்ள 24 கிராம மக்கள், மற்ற சாதாரண மக்களோடு தொடர்பு கொள்ள வசதியாக இருக்கும் என்ற வகையில் அதனை விரைவில் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வேடசந்தூர் தொகுதியில் மின்சாரம் சப்ளை செய்யும் நிலைமையில் மிக பாதகமான சூழ்நிலை இருக்கிறது. ஏதோ ஓரளவிற்கு கொடுத்துக் கொண்டிருந்தாலும் கூட, அது போதாத சூழ்நிலையே இருக்கிறது. காரணம், கோயிலூரில் இயங்குகின்ற துணை மின் நிலையம் தான் வடமதுரை, வேடசந்தூர் ஆகிய ஊர்களுக்கு தேவையான மின்சாரத்தை சப்ளை செய்கிறது. அப்படி கொடுக்கும்போது ஒரே நேரத்தில் 4 இடங்களில் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பதற்காக, பிரித்துக் கொடுக்கப்பட்டிகிறது. ஆகவே அதில் மிக கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டமிட்டு, வடமதுரையிலே ஒரு துணை மின் நிலையம் கட்டுவதற்கான திட்டம் தீட்டி அங்கே கட்டப்பட்டு, முடிக்கும் தருவாயிலும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இது வேனிற்காலம், ஆகவே விரைவாக அந்த திட்டத்தை முடித்துக் கொடுத்து, இந்த வேனிற் காலத்திற்குள்ளாகவே அதனை நிறை வேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதன்மூலம் அந்தப்பகுதி மக்களுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வேடசந்தூர் வட்டத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதற்கென என்ன தொகையை செலுத்தவேண்டுமோ அந்தத் தொகையைச் செலுத்துவதற்கு எங்கள் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே விரைவில் அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை கட்டித்தரவேண்டும் என்று என் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பாம்புக் கடியினால் பாதிக்கப்படுகிறவர்கள் கன்னியாகுமரிக்கு அடுத்த படியாக என்னுடைய வேடசந்தூர் தொகுயிலே குரியம்பாளை யத்திலே உள்ள மக்கள் தான். அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தால் கூட, அங்கே சிகிச்சை பெறுவதற்கு வசதி

யான அளவில் படுக்கை வசதிகள் போதுமானதாக இல்லை. ஆகவே அங்கே போதுமான அளவில் படுக்கை வசதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அடி குழாய்களுக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிக் கேட்கும்போது எல்லாம், அந்தந்த ஊராட்சிகளில் பம்புகளைப் போட்டுவிடுகிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் நான் ஒரு வேண்டுகோளை தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அடி குழாய்களுக்கு போடப்படுகிற பிளஞ்சிங் ராட் என்ற சொல்லப்படுகிற அந்த ராடுகள் போதுமானதாக இல்லை என்ற குறை பரவலாக இருக்கிறது. ஒன்றிரண்டை சேர்த்து கூடுதலாக போட்டுவிட்டால் கூட, தனித்தனியாக ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு குழாய் போடவேண்டிய செலவு— 20,000 ரூபாய் அளவில் கூட மிச்சமாகும். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால் அதனை உடனடியாக கவனிக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 20 லட்சம் ரூபாய் செலவில் உலக வங்கியின் உதவியோடு பாசனம் மற்றும் தண்ணீர் தட்டுப்பாடு பிரச்னையை தீர்க்க விரிவான வகையில் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அதனை விரைவில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவின் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா பேரியக்கத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த சில நாட்களாக என்னுடைய மாவட்டத்தில் நடைபெற்று வந்த இனக் கலவரங்கள், இன்றைக்கு ஒருவாறாக குறைந்து ஓரளவிற்கு அமைதி ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்தக் கலவரங்கள் நடைபெற்றபோது சில சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதற்கு அரசாங்கம் தகுந்த பதிலைக் தரவேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதில் தவறு எதுவும் இல்லை என்றே நான் கருதுகிறேன். ஏறத்தாழ இந்த கலவரங்களின் போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 9 பேர்கள் மாண்டிருக்கிறார்கள். 6 பேர்கள் காணாமல் போயி பிக்கிறார்கள், அப்படி காணாமல் போனவர்களைப் பற்றி அவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற தங்களுடைய கவலையை தந்தி மூலம் அனுப்பியிருக்கிறார்கள்,





ஆகவே இறந்து போனவர்களுடைய குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலவரங்களினால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டு அதனால் பலதரப்பட்ட மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே ஏற்பட்ட நட்டம் குறித்து மதிப்பீடு செய்யவும் அதற்குத் தகுந்த நிவாரணம் அளிக்கவும் அரசு உயர்மட்டக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று ஏராளமான மக்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்கள். ஆகவே அழிந்துபோன வீடுகளைக் கட்டுவதற்கும், பழுது பட்ட வீடுகளைப் பழுது பார்க்கவும் தேவையான நிதியுதவி அளிக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் செய்கின்ற தளவாடங்களை இழந்துவிட்டதன் காரணத்தால் தொழில் இன்றி பலர் தவிக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீண்டும் தொழில்களைத் தொடங்க அரசு போதுமான நிதியுதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

அடுத்து இந்தக் கலவரப் பகுதிகளில் சில பகுதிகளில் காவல் நிலையம் அமைக்கவேண்டும் ஈத்தருமொழியில் ஒரு நிரந்தமான காவல் நிலையம் அமைக்கவேண்டும். கருங்கல்லில் ஒரு காவல் நிலையம் அமைக்கவேண்டும்.

அடுத்து இங்கே ஒருசில தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது குற்றங்களின் புள்ளி விவரங்களைப் பற்றிக் குறிப்பிட்டு டோக்கியோவையும் லண்டன் மாநகரத்தையும் ஒப்பிட்டுப் பேசினார்கள். ஆனால் மற்ற காரியங்களைப் பொறுத்தவரையில் அதாவது அடிப்படை வசதிகளை அளிக்கின்ற விஷயத்தில் நாம் எப்படி இருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாக்கடை வசதி, வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்குதல், தனி நபர் வருமானத்தை அதிகரித்தல் போன்ற காரியங்களில் நாம் மற்ற நாடுகளை ஒப்பிடுவதை விட இந்தியாவிலேயே உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும். ஆகவே அப்படி ஒப்பிட்டுப் பார்க்காதது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்திலே நகர்ப்புறத்திலே வாழ்கின்ற மக்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை உயர்வாக இருக்கின்றது. அதே போன்ற கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கையும் மற்ற மாநிலங்களை விட உயர்வாக இருக்கின்றது. ஆனால் இவற்றை நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குத் தயங்குகிறோம். ஆகவே ஒப்பிட்டுப் பார்த்து அதற்காக நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1982 மார்ச் 30

அடுத்து உத்தரப்பிரதேசம், ஹரியானா போன்ற மாநிலங்
களில் 8.5 சதவீதம் என்ற வகையிலே சர்க்கரைச் சத்து கொண்ட
கரும்புக்கு டன் ஒன்றுக்கு 225 ரூபாய் வழங்கப்படுகின்றது.
ஆனால் நம்முடைய மாநிலத்திலே என்ன நிலைமை என்பதைச்
சிந்திக்கவேண்டும். 165 ரூபாய் முதல் 175 ரூபாய் வரைதான்
விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஆகவே இதை எல்லாம்
மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து இங்குள்ள விவசாயி
களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய
மாநிலத்திலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கின்ற
வகையிலே நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கொடுக்க மத்திய
அரசு ஒப்புக்கொள்ளவில்லை என்று சொல்கிறபோது மத்திய
அரசோடு போராடவேண்டும் என்று கூட நான் சொல்லவில்லை,
அவர்களிடத்திலே எதிர்த்துக் கேட்பதற்குக்கூட
உங்களுக்குத் துணிவு இல்லாமல் போய்விட்டதே அது ஏன்
என்றுதான்கேட்க விரும்புகிறேன். இங்கே ஒன்று சொல்கிறீர்கள்
ஆனால் அங்கே நாடாளுமன்றத்தில் உங்களுடைய உறுப்பினர்கள்
அதுபற்றி குரல் கொடுக்கக் கூட தயாராக இல்லையே, ஆகவே
இதுபோன்ற டபுள் ஸ்டாண்டர்ட் கொள்கை வேண்டாம்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத்திலே
ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் எத்தனைத் திட்
டங்கள் ஒழுங்காகச்செயல்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். புள்ளிவிவரங்களைக் கொடுத்துவிட்டால் மட்டும்
போதாது. இத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து
கொடுத்திருக்கிறோம், இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றி
இருக்கிறோம் என்றெல்லாம் புள்ளிவிவரங்களைச் சுலபமாகச்
சொல்லிவிடலாம். ஆனால் அவற்றிலே எத்தனைத் திட்டங்கள்
ஒழுங்காகச் செயல்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். ஆகவே சர்க்காருடைய பணம் செலவழிக்கப்பட்ட
தற்கு பிறகு அதனுடைய யுட்டிலிட்டி என்ன ஆகின்றது என்
பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பணத்தைச் செலவழித்து
விட்டு அந்தப் பணம் மக்களுக்குப் போய்ச் சேராமல் இருந்தால்
அப்படிப்பட்ட காரியங்களின் பலன் மக்களுக்குக் கிடைக்காமல்
போனால் அதற்கு என்ன அர்த்தம். என்னுடைய தொகுதியிலே
கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனில் உசரத்துவிளை, ஐரேனிபுரம்,
முளங்குழி, விரிகோடு, எள்ளுவிளை, போன்ற ஊராட்சிகளிலும்
மற்றும் முஞ்சிறை பஞ்சாயத்து யூனியனில் மாங்காடு, வாவறை
போன்ற ஊராட்சிகளிலும் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட
குடிநீர் திட்டங்கள் இன்றைக்கு பழுதடைந்து போய் கிடக்கின்றன.



1982 மார்ச் 30] [திரு. பொ. விஜயராகவன்]

தண்ணீர் வராததோடு மட்டுமல்ல. அங்கே குழாய்களைக்
கூட காணவில்லை. பம்ப் செட்களைக் கூட காணவில்லை.
இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தால் போட்ட பணம் மக்க
ளுக்குப் பயன்படுகிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல காலமாக சொல்லிவரப்படுகிற குடிநீர்த் திட்டம்—கருங்
கல், கப்பியறை, பாலப்பள்ளம், ரீத்தாபுரம், கிள்ளியூர், கீழ்
குளம், நல்லூர், பேரூராட்சிகள், குளச்சல் நகரம் உட்பட்ட
ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். ரூபாய் மூன்று
கோடி, எட்டு இலட்சம் வரை வரும் அளவிற்கு ஒரு திட்டத்தை
தீட்டியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகள் வறட்சிப் பகுதிகள். இவ்
வளவு பெரிய அளவிற்கு திட்டம் போட்டிருப்பதை குறித்து
அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன். ஆனால், இன்று குடிநீர்
வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒழுங்காக பணம்
போய்ச் சேரவில்லை, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம்
கிடைக்கவில்லை என்பதால் இதுபோன்ற திட்டங்கள் கிடப்பில்
போடப்பட்டு வருகின்றன. ஆகவே, இதையெல்லாம் கருத்தில்
கொண்டு உடனடியாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உரிய
பணத்தை அளிப்பதோடு இது போன்ற பெரிய திட்டங்களைப்
போடுகிறபோது அவை பேப்பரில் இருக்காமல் அமலுக்கு வர
வேண்டும் என்ற அளவில் விரைவில் எடுத்துக் கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்பு
கிறேன். நமது மாநிலத்தில் புதிதாக ஒரு கமிஷன் போட்டிருக்
கிறார்கள். இராமமூர்த்தி கமிஷன். இந்த இராமமூர்த்தி கமி
ஷனை புதிதாகப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லும்போது,
அதன் அடிப்படையில் ஒரு சில தவறுகள் இருப்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தன்மீது ப்ரைமா பேஸி கேஸ்
இருக்கிறது என்றளவில் நினைத்துக்கொண்டு தானே ஒரு கமி
ஷனை எப்படி நியமிக்க முடியும்? நான் ஒன்றை நினைவூட்ட
கடமைப்பட்டிருக்கிறேன்.

கப்பல் பேர ஊழல் வந்த நேரத்தில், அந்த ஊழலைப்பற்றிச்
சொல்கிற நேரத்தில் என் மீது குற்றம் இல்லை, இந்த அரசின்
மீது குற்றம் இல்லை என்று அன்றைக்கு பிரதமருக்கு கடிதம்
எழுதினார்கள். அன்று உச்சநீதிமன்றத்திலிருந்து நீதிபதியை நிய
மியுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது சொல்லப்
பட்டுள்ளதற்கு அப்படி பிரதமருக்கு கடிதம் எழுதவில்லை, உச்ச
நீதிமன்ற ஒரு நீதிபதியைப் போடுங்கள் என்றுகூடச்சொல்ல
வில்லை. இங்கே நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய தலைமை
நீதிபதிக்காவது எழுதி நீங்கள் ஒரு கமிஷன் போடுங்கள் என்று
சொல்லவில்லை. ஆனால், இந்த அரசு தாமாகவே, தன் இஷ்ட
மாகவே ஒரு கமிஷனைப் போட்டிருக்கிறது. அது எப்படி அடிப்
படையில் பொருந்தும்? என் மீதே எனக்கு குற்றம் ஏற்பட்

டிருக்கிறது என்று சொல்லிவிட்டு நான் எப்படி என்னை விசா
ரிப்பதற்கு ஒரு நீதிபதியை நியமிக்க முடியும். அதுவும் போய்
விடட்டும். இன்று முதல் அமைச்சர் அவர்கள் மீதும் முதல்
அமைச்சர் அவர்கள் குடும்பத்தின் மீதும் ஏராளமான குற்றச்
சாட்டுகள் முன்னாள் ஐ.ஜி.யாக இருந்த ஒருவர் உறுதிமொழி
பத்திரத்தை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அப்படி அவர் குற்றஞ்
சாட்டப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில் Caesar's wife must be above
suspicion என்று சொல்வார்கள். நான் இந்த அரசாங்கத்தைக்
கேட்டுக் கொள்வது இப்படி குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை
வருகிற ஒரு சூழ்நிலையில் நான் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர்
அவர்களை மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.
இந்த விசாரணை ஒழுங்காக நடைபெறவேண்டுமானால் தயவு
செய்து உங்களுடைய பொறுப்பிலிருந்து கீழே இறங்கி வந்து
இந்த பொறுப்பை விட்டு-நான் இந்த மந்திரி சபை இராஜிநாமா
செய்யவேண்டுமென்று சொல்லவில்லை, நான் இந்த அமைச்ச
ரவை இராஜிநாமா செய்துவிட்டு போக வேண்டும் என்று சொல்ல
வில்லை—(குறுக்கீடுகள்) நான் ஒரு கருத்தை மட்டும் கூறிக்
கொண்டு முடித்துக் கொள்கிறேன். நீங்கள் இந்த பதவியை
விட்டு விலகி வேறு ஒருவரை, உங்கள் கட்சியில் இருப்பவரைக்
கூட முதல் அமைச்சர் பதவியில் வைத்துக்கொள்ளட்டும், வைத்
துக்கொண்டு நீங்கள் குற்றமற்றவர் என்பதை நிரூபித்துக்கொண்டு
மறுபடியும் வருவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று
கூறி நீதியும் நியாயமும் காப்பாற்றப்பட வேண்டுமானால், நீதியும்
நியாயமும் பற்றி அதிகமாகக் கவலைப்படுகிற முதல் அமைச்சர்
அவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி.

[முற்பகல் 11–50]

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவையினுடைய துணைத்
தலைவர் அவர்களே, நிதி நிலை ஒதுக்கீடு மானியத்தில் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்து
வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற குறள் மொழிக்கு ஒப்ப, ஒரு அரசு நடைபெற வேண்டு
மென்றாலும் கூட, இயற்றல், ஈட்டல் இவைகளில் காட்டப்படு
கின்ற அக்கறை, காத்தலும், காத்த வகுத்தலிலும் இந்த அரசின்
சார்பில் காட்டப்படவில்லை என்ற ஒரு குறைபாட்டை நான்
இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த அவையில் நிதி ஒதுக்கக் கணக்கு, அப்ரோப்ரியேஷன்
அக்கவுண்ட்ஸ் என்ற தலைப்பில் 1978–79 ஆம் ஆண்டிற்கான
கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குகளில் 58 மானி
யக் கோரிக்கைகளில் அந்த ஆண்டு இந்த மன்றத்திலே பெரு





வாரியான அல்லது ஏகோபித்த வாக்குகளைப் பெற்று, அரசின்
பல்வேறு செலவினங்களுக்காக என்று ஒதுக்கப்பட்ட தொகையில்,
7 மானியங்களைத் தவிர மற்ற 51 மானியங்களில் ஒதுக்கப்பட்ட
பணம் செலவழிக்கப்படவில்லை. செலவழிக்கப்படாமலேயே
வீணாகி இருக்கிறது. செலவழிக்கின்ற அளவிற்கு திட்டங்களை
நிறைவேற்றுவதிலே வேகமில்லை என்பதற்கான உதாரணங்களை
Government of Tamil Nadu என்று அச்சிட்டு, தமிழ்நாடு
அரசின் சார்பிலே வைக்கப்பட்டுள்ள இந்த Appropriation
Accounts என்கின்ற நிதி ஒதுக்கக் கணக்கில் குறிப்பிடப்
பட்டிருக்கிறது. நான் இந்த 51 இனங்களையும், இங்கே எடுத்
துச்சொல்ல விரும்பாவிட்டாலும், ஒன்றிரண்டு மிக முக்கியமான
இனங்களில் எவ்வளவு பெருந் தொகை செலவழிக்கப்படாமற்
போயிருக்கிறது. எங்களிடத்தில் இந்த மன்ற உறுப்பினர்களின்
வாக்குகளைப் பெற்று, நிறைவேற்றப்பட்ட மானியங்களுக்கு
ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு செலவழிக்கப்படாமல் போயி
ருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவது என்னுடைய பெருங்
கடமையாகும்.

போலீசைப் பொறுத்த வரையில், 35 கோடி ரூபாய் அளவிற்கு
ஒதுக்கப்பட்ட தொகையில், 33 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு,
ரூபாய் 1.49 கோடி செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது. கல்வி
என்ற தலைப்பில், 187 கோடி ரூபாய் என்று இங்கே வாக்குகளைப்
பெற்று, நிறைவேற்றப்பட்ட அந்த மானியத் தொகையில் 185
கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, ரூபாய் 1.69 கோடி செல
வழிக்கப்படாமலேயே இருக்கிறது. மருத்துவம் என்ற தலைப்பில்
50 கோடி ரூபாய் இந்த அவையின் ஒப்புதல் பெற்று, ஒதுக்கப்
பட்ட தொகையில் 48 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, சுமார்
1.60 கோடி செலவழிக்கப்படாமலேயே இருக்கிறது. பொது
சுகாதாரம் என்ற தலைப்பில் ரூபாய் 42 இலட்சம் செலவு
செய்யப்படவில்லை. வேளாண்மை என்ற தலைப்பில் ஒதுக்கப்
பட்ட தொகையில், ரூபாய் 92 இலட்சம் செலவு செய்யப்பட
வில்லை. கால்நடை பராமரிப்பு என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்ட
தொகையில், ஏறத்தாழ ரூபாய் 28 இலட்சம் செலவு செய்யப்
படவில்லை. காதி என்ற தலைப்பிலே, ஒதுக்கப்பட்ட தொகை
யில் ரூபாய் 31 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. சமூக
நலம் என்ற தலைப்பில் வாக்களிக்கப்பட்ட தொகையில் ரூபாய்
28 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்
கள், மலைவாழ் மக்கள் நலன் என்ற தலைப்பில், ரூபாய் 11
இலட்சம் செலவு செய்யப்படவில்லை. பிற்பட்டோர் நலன் என்ற
தலைப்பில் ரூபாய் 69 இலட்சம் செலவு செய்யப்படவில்லை.
வீட்டு வசதி என்ற தலைப்பில் ரூபாய் 1.16 கோடி செலவு
செய்யப்படவில்லை. மொத்தத்தில், இந்த இனங்களை எடுத்துப்
பார்த்தால் ரூபாய் 1,317 கோடி "டோடல் கிராண்டு" இந்த
அவையில் பல்வேறு மானியங்களின் சார்பில், இந்த அரசின்
சார்பில் ஒப்புதல் பெற்றுக்கொண்டு, ரூபாய் 1,179 கோடி செலவு
செய்து, ரூபாய் 143 கோடி மிச்சப்பட்டது என்று சொல்ல முடி
யாது. திட்டங்கள் விரைவாக நடைபெறாத காரணத்தால்,

செலவழிக்கப்படாமல் போய்விட்டது. இது 1978–79-ஆம் ஆண்டுக் கணக்கு, இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ள கணக்கிலே இருந்து நான் தருகிற புள்ளி விவரங்கள்.

அதைப்போலவே 1979–80 ஆண்டு இந்த நிதி ஒதுக்கக் கணக்கின்படி, " அப்ரோப்பிரியேஷன் அக்கவுண்ட்ஸ், " கவர்ன்மென்ட் ஆப் தமிழ்நாடு, வெளியிடப்பட்டுள்ள வணக்கக் குறிப்பிலே கூட இதுபோன்ற பரிதாபகரமான சூழ்நிலை இன்னும் சில முக்கியமான மானியங்களிலே மிக அதிகமாக செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை.)

குறிப்பாக, போலீஸ் மானியத்தில் 40 கோடியே 29 இலட்சம் ரூபாய் இங்கே வாக்குகள் பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகையில் 36 கோடியே 84 இலட்சம் செலவழிக்கப்பட்டு, $3\frac{1}{2}$ கோடி ரூபாய் போலீஸ் மானியத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட தொகையில் செலவு செய்யப்படவில்லை. " எஜுகேஷன் டிபார்ட்மென்ட் " மானியத்திலே 12 கோடியே 89 இலட்சம்— சுமார் 13 கோடி ரூபாய்— செலவழிக்கப்படவில்லை. கல்வித் துறையில் 12 கோடியே 89 இலட்சம் ரூபாய் அதாவது ஏறத்தாழ 13 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. மெடிக்கல் என்பதை எடுத்துக்கொண்டால் சுமார் 4 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. பப்ளிக் ஹெல்த் — சுமார் 9 கோடி ரூபாய் செலவிடப்படவில்லை. அக்ரிகல்சர்— சுமார் $6\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. பிஷரீஸ்— 32 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. அனிமல், ஹஸ்பண்டரி— $1\frac{1}{4}$ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. கோவாப்பரேஷன் – 75 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இண்டஸ்ட்ரீஸ்— ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. ஹேண்ட் லூம்ஸ் அண்ட் டெக்ஸ்டைல்ஸ்— 61 இலட்சம் செலவழிக்கப்படவில்லை. கம்யூனிட்டி டெவலப்மென்ட். சமுதாய திட்டம்— 9 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. சோஷியல் வெல்பேர் எனப்படுகிற சமூக நலம்— 86 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இதிலே பரிதாபத்துக்குரிய நிலைமை என்னவென்றால் வெல்பேர் ஆப் ஷெட்யூல்ட் காஸ்ட் அண்ட் டிரைப்ஸ் எக்ஸ்ட்ரா— அதிலே 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இந்த அவையினுடைய வாக்குகளைப் பெற்று, ஒப்புதல் பெறப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகையில் — எப்படி மற்றவைகளுக்கு எல்லாம் மானியமாக ஒதுக்கினீர்களோ— அதைப்போல் வெல்பேர் ஆப் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்ட் டிரைப்ஸ்— அதாவது அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை,



வெல்பேர் ஆப் தி பேக்வர்ட் கிளாஸ் எக்ஸ்ட்ரா— அதிலே ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. ரோட்ஸ் அண்ட் பிரிட்ஜஸ்— 94 இலட்சம் செலவழிக்கப்படவில்லை. இதிலேயும் மொத்தத்திலே பார்த்தால் டோட்டல் கிராண்ட் 1,482 கோடியிலே 1,335 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. 158 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். இந்த அரசு திட்டங்களை அந்தந்தத் துறைகளின் மூலமாக நிறைவேற்றுவதிலே எவ்வளவு தயக்கத்தோடு செயல்படுகிறது, எந்த அளவுக்கு ஆமை வேகத்திலே செயல்படுகிறது, டிரைவ் இல்லை என்பதற்கு எவ்வளவு செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது என்பதே போதுமான சான்றாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒரு குறைபாட்டை நேற்றைய தினம் இங்கே உரையாற்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். நேற்று இந்த அவையிலே விவாதிக்கப்பட்ட மானியங்கள்—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் அதற்காக ஒதுக்கப்படுகிற மானியம் 20 கோடியே 55 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் ; மாநிலச் சட்டமன்றம்—1 கோடியே 24 இலட்சம் ரூபாய் ; தேர்தல்கள்— ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்—30 கோடி ரூபாய் ; பல்வகை செலவு—90 கோடி ரூபாய் ; பல்வகை மூலதனச் செலவு—16 கோடி ரூபாய் ; மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்—365 கோடி என்ற முறையிலே மொத்தம் 525 கோடியே 39 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய்க்கு நேற்றைய தினம் கிட்டத்தட்ட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வைத்த நிதிநிலை அறிக்கையிலே கேட்கப்படுகிற 1,500 கோடி ரூபாயில் மூன்றில் ஒரு பங்கு—525 கோடி ரூபாய்க்கான மானியங்களைப் பற்றி இங்கே பேச நமக்கெல்லாம் கிடைத்த நேரம் ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம்தான்.

காரணம் அலுவல் ஆய்வுக் குழுவிலே 'நாம் எடுக்கிற முடிவுகளின்படி மானியங்கள் உரிய நேரத்திலே நிறைவேற்ற முடியாமல் பதிலுரைகள் நீண்டு விடுகிற காரணத்தினாலும்—அது தவிர்க்க முடியாத காரணங்களாக இருந்தாலும் இருக்கலாம் அல்லது வேறு எந்த காரணங்களாக இருந்தாலும் இருக்கலாம்—அவைகளால் நேற்று மாத்திரம் 500 கோடி ரூபாய்க்குள்ள பெரிய மானியப் பட்டியலைக் குறித்து இந்த அவையிலே விளக்கமாக யாரும் பேச முடியாமல் அவரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே தாங்கள் பணியாற்றுவதற்குத் தேவையானவைகளை மாத்திரம் பேசக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

நீண்ட பதிலுரையாக இங்கே அளிக்கிற காரணத்தாலே எடுத்துச் சொல்லப்பட்ட எல்லாம் முக்கியமான பிரச்சினைகளுக்கும் பதிலாவது சொல்லப்பட்டு விட்டதா என்றால், இல்லை;

இதை சொன்னால் இன்னமும் இரண்டு மணி நேரம் எங்களுக்கு
தேவை என்று ஆட்சித் தரப்பிலே சொன்னாலும் சொல்லப்
படும். நேற்றைய தினம் பதிலளித்த மாண்புமிகு முதல்வர்
அவர்கள் காவல்துறை மானியத்தில்பதில் அளித்தவர்கள் நான்
எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுக்கள் சிலவற்றைப் பற்றி கோடிட்
டுக்கூட காட்டாமல் அவர்கள் தங்களுடைய 4½ மணி நேர
உரையை முடித்தது எனக்கு உள்ளபடியே வருத்தத்தைத் தரக்
கூடியதாகும்.

(நண்பகல் 12–00)

ஆம்னி பஸ் ஊழலைப் பற்றி இந்த அவையிலே எடுத்துச்
சொன்னேன். இன்று மாத்திரம் அல்ல. கடந்த ஆண்டு காவல்
துறை மானியத்திலே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
அருமை நண்பர் சுந்தரராஜன் அவர்கள் எடுத்துச் சொல்லி,
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று கேட்டார். அதிலே
சம்பந்தப்பட்டவர்கள் போலீஸ் அதிகாரிகள், போக்குவரத்துத்
துறையைச் சார்ந்தவர்கள், ஆளும் கட்சி தரப்பிலே கூட சிலபேர்
சம்மந்தம் என்கிற அளவிற்கு நிலைமைகள் எல்லாம் முற்றி,
261 பேர்கள் ஈடுபட்டு ஒரு பெரிய கோடிக்கணக்கான ரூபாய்
ஊழல் நடைபெற்று, அரசுக்கு வர வேண்டிய கோடிக்கணக்கான
ரூபாய் இழந்து விடுகிற ஒரு பெரிய ஊழலில், 106 காவல் துறை
அதிகாரிகள் வேலை நீக்கம செய்யப்பட்டிருப்பதாக 1980 ஆம்
ஆண்டு அக்டோபர் திங்கள் 26 ஆம் நாளிலே அறிவிக்கப்பட்டதே,
அது என்னவாயிற்று என்று சென்ற ஆண்டு நண்பர் சுந்தரராஜன்
அவர்கள் கேட்டபோது முதலமைச்சர் சொன்னார். அந்த ஊழி
யர்களின் மீது விசாரணை நடக்கிறது. நடவடிக்கை கைவிடப்
படவில்லை. தகுந்த முறையிலே நடவடிக்கை எடுப்பதற்கான
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு இருந்தவர்கள் அனு
சரித்த ரெட் டேப் முறை, சட்ட முறை ஆகியவற்றால் தான்
தாமதமே தவிர, தவறு செய்ததாக கூறப்படுபவர்கள் மீது
தக்கநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று முதலமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்
கப்படவில்லை. நான் காவல்துறை மானியத்திலே பேசுகிறபோது
கூட கேட்டேன். சுந்தரராஜன் அவர்களுக்கு அளித்த பதிலில்
இப்படி சொல்லியிருக்கிறீர்களே, என்ன நடவடிக்கை என்று
கேட்டேன். அதுபற்றி எந்த பதிலையும் முதலமைச்சர் தராதது
வருந்தத்தக்கது. நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில்
பேசியபோது நான் ஒரு பிரச்சினையை எழுப்பினேன்.

போக்குவரத்துக் கழகத்திற்கு, குறிப்பாக பல்லவன் போக்கு
வரத்து கழகத்திற்கு, உலக வங்கியினுடைய உதவியோடு வாங்கு
கிற பஸ் சேசிஸ் குறைந்த அளவிற்கு டெண்டர் கொடுத்திருக்கிற
டாடா என்ஜினியரிங் நிறுவனத்திற்கு நீங்கள் அந்த டெண்டர்
படி அவர்களிடத்திலே சேசிஸை வாங்காமல் ஏன் அசோக்



லேலண்ட் நிறுவனத்தினடத்திலே வாங்கினீர்கள் என்று கேட்
டேன். கேட்டது மாத்திரமல்ல. விவரங்களையும் சொன்னேன்.
அசோக் லேலண்ட் நிறுவனம் அந்த சேசிஸ்க்கு 7 கோடியே
44 இலட்சத்து 14 ஆயிரத்து 480 ரூபாய் என்று டெண்டர்
போட்டது. ஆனால் டாடா நிறுவனம் 6 கோடிய 60 இலட்
சத்து 4 ஆயிரத்து 62 என்று டெண்டர் போட்டது. குறைந்த
டெண்டர், ஏற்கெனவே வாங்கி அனுபவப்பட்டிருக்கிற கம்பெனி,
ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழு அசோக் லேலண்டை விட
டாடா தான் சிறந்தது என்று நற்சான்றிதழ் தந்திருக்கிற அந்த
கம்பெனிக்கு தராமல், 7 கோடியே 44 இலட்சம் கொடுத்து
ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேலே அதிகம் கொடுத்து வாங்க
வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டபோது மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே சொன்னார்கள்.
இந்த அரசாங்கம் உதிரி பாகங்கள், பராமரிப்பு செலவுகள்
இவைகளையும் கணக்கிட்டு அந்த கணக்குகளையும் சேர்த்துக்
கொண்டு பார்த்தபோது அசோக் லேலண்ட், டாடாவை விட
ஒரு கோடி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான்
நிதியமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது தல்
லாம், டெண்டர் போட்டது உதிரி பாகங்களுக்கும் சேர்த்தா
அல்லது பராமரிப்பு செலவுகளுக்கும் சேர்த்தா டெண்டர் போடப்
பட்டது? டெண்டர் போடப்பட்டது சேசிஸ் ஒன்லி. சேசிஸ்
வாங்குவதற்கு மட்டும் தான் டெண்டர் போடப்பட்டது. அந்த
டெண்டரிலே டாட்டா ஒரு தொகை குறிப்பிட்டார்கள். அசோக்
லேலண்ட் ஒரு தொகையை குறிப்பிட்டார்கள். அப்படி குறிப்
பிட்ட தொகையிலே டாட்டாவினுடையது ஒரு கோடி அளவிற்கு
குறைவாக இருந்தது. ஆனால் நீங்கள் ஆறு கோடியை விட்டு
விட்டு, 7 கோடி ரூபாய்க்கு அசோக் லேலண்ட் இடத்திலே
சேசிஸ், அடிச்சட்டங்களைப் பொறுத்தவரையில் வாங்கியது
தவறு என்பதை இன்னமும் இந்த அரசுக்கு சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலே பெரும்புகழ் பெற்று வருகிற சிமெண்ட் ஊழல்·
நம்முடைய தமிழ் மாநிலத்திலும் பரவலாக நடைபெற்றுள்ள
வரலாற்றை இந்த அவையிலே எடுத்து வைப்பது என்னுடைய
கடமையாகும். எந்த அளவிற்கு சிமெண்ட் வழங்குவதிலே முறை
கேடுகள் நடைபெற்றிருக்கின்றன, சிமெண்ட்டுக்கு கன்ட்ரோல்
உள்ள கால கட்டத்தில்—இப்பொழுது அது தளர்த்தப்பட்டிருந்
தாலுங்கூட, அந்தக் காலகட்டத்திலே நடைபெற்றிருக்கிற சில
சம்பவங்களை நான் நிதியமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு
வருவது முறையாகும்.

சென்னையில் பட்டாபிராம் என்ற இடத்திலே உள்ள
வின்ப்ரட் ஜான் என்ற ஒருவர் தனக்கு ஒரு வீடு கட்ட வேண்டு
மென்பதற்காக, 5–2–1981 அன்று சிமென்ட் கேட்டு விண்ணப்பம்
போடுகிறார். ஏப்ரல் 1981-லே முதல் கோட்டா பெற்று வேலை

யைத் தொடங்குகிறார். இரண்டாவது கோட்டாவுக்கு மே மாதம் விண்ணப்பம் போடுகிறார். ஸ்ரீ பெரும்புதூர் தாசில்தார் 2–7–1981-லே கையெழுத்திட்டு, 15–7–1981-க்குள் சிமென்ட் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டு, போட்ட ஆர்டர் அவருக்கு உடனடியாகப் போய்ச் சேர வில்லை. 15–7–1981-க் குள்ளே சிமென்ட்டை வாங்கிக் கொள் என்று தாசில்தார் கையொப்பம் இட்டு ஆர்டர் போடுகிறார். ஆனால், தாலுகா அலுவலகத்திலே இருக்கிறவர்கள் அதை எப்பொழுது டெஸ்பாச் செய்கிறார்கள்? 30–7–1981-ல் டெஸ்பாச் செய்கிறார்கள். 15–7–1981-க்குள்ளே வாங்கிக் கொள்ள வேண்டிய சிமென்டுக்கு 30–7–1981 ஆம் தேதி அங்குள்ள குமாஸ்தாக்களால் டெஸ்பாச் செய்யப்படுகிறது. அவர் அந்த பர்மிட்டை எடுத்துக் கொண்டு தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்கு, நாசரேத் பேட்டையில் பதிவு செய்வதற்காகச் சென்று கேட்கும்போது, 15 ஆம் தேதியே முடிவடைந்துவிட்ட காரணத்தால், மறு உத்தரவு இருந்தால்தான் பதிவு செய்ய இயலும் என்று அங்கிருந்த அசிஸ்டெண்ட் குவாலிட்டி இன்ஸ்பெக்டர் தெரிவித்து விடுகிறார். மறுபடியும் 10–8–1981 அன்று தாசில்தாரிடம் சென்று கோர அவர் 25–8–1981 வரை அனுமதி அளிக்க, அன்றைய தினமே நாசரேத் பேட்டைக்கு வந்து அவர் பதிவு செய்து கொள்கிறார். பதிவு செய்த 7 மாதங்களுக்குப் பிறகு, 8–3–1982 அன்று நாசரேத்பேட்டையிலிருந்து ஒரு கடிதம், அதாவது, 10–3–1982 காலை 10 மணிக்குள் பர்மிட், பணத்தோடு வர வேண்டுமென்றும், கோவூர் கிடங்கில் சிமென்ட் மூட்டை ரூ. 32.50 விலையில் வழங்கப்படும் என்றும் அதிலே தெரிவிக்கப் பட்டிருக்கிறது. உடனே இவரும், இவரைப் போலவே, கஷ்டப் படுகின்ற 20 பேர்களும் சேர்ந்து நாசரேத்பேட்டைக்குப் போய் அசிஸ்டென்ட் குவாலிட்டி இன்ஸ்பெக்டரைச் சந்திக்கிறார்கள். அவர் சொல்கிறார், 8–3–1982-ல் எங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அந்தத் தந்தியின் படி சிமென்ட் விற்பனை[illegible]று உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கவும் என்று இ[illegible]து என்று சொல்லி, அவர்களுக்குத் தர மறுத்து விடுகிறார். [illegible] வரவில்லையென்றால் பதிவு ரத்தாகிவிடும்; வந்ததற்கு அடையாளமாக, நாங்கள் வந்தது பற்றி எங்களுடைய பர்மிட்டில் எழுதிக் கொடுத்துவிடுங்கள் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர் எழுதிக் கொடுக்க முடியாது என்று மறுத்திருக்கிறார். பிறகு இவர்கள் ஒரு ஆர்ப்பாட்டம் செய்த பிறகு, இவர்களுடைய கார்டுகளை, கடிதங்களை வாங்கி, அதிலே, ஏதோ எழுதி தன்னுடைய மேஜை டிராயரிலே வைத்து பூட்டுகின்ற நேரத்தில், அப்படி பூட்டக் கூடாது என்று சொல்லி, வற்புறுத்தி, அந்தக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு திரும்புகிறார்கள் திரும்பியவர்கள், காஞ்சிபுரம் வந்து அங்குள்ள சிவில் சப்ளைஸ் பிராந்திய மானேஜரைச் சந்திக்கச் சென்றார்கள். அவர்கள் இல்லாததால், சம்பந்தப்பட்ட சூப்பரின்டெண்டன்டைச் சந்தித்து விவரங்களைக் கேட்கிறார்கள். அதற்கு அவர் சொல்கிறார் 8 ஆம் தேதி சிமென்ட் விநியோகிக்காதே என்று தந்தி கொடுத்தது



உண்மைதான். ஆனால், அந்தத் தந்தியைத் தொடர்ந்து 9 ஆம் தேதி இன்னொரு தந்தி கொடுத்திருக்கிறோம். அதில் சிமென்ட் விற்பனையை ரூ. 6.22 காசு அதிகப்படுத்தி விற்கலாம் என்று கூறி அவருக்கு மறு உத்தரவு தந்தி அனுப்பியிருக்கிறோம். அப் படியிருக்கும் போது, எப்படி 8 ஆம் தேதி தந்தியைக் காட்டி திருப்பி அனுப்பினார். எனவே மீண்டும் சென்று விசாரியுங்கள் என்று சொன்ன பொழுது, இவர்கள் மீண்டும் அங்கே சென்று, ஏன் எங்களைப் பொய் சொல்லி ஏமாற்றினீர்கள் என்று கேட் டுள்ளார்கள். அப்படிக் கேட்டவர்களைப் பயமுறுத்தி கிடங்கிலே வேலை செய்த ஆட்களைக் கொண்டு அவர்களை அடிக்கின்ற அளவுக்குத் துன்புறுத்திய காரணத்தால், அவர்கள் உயிருக்கே பயந்து போய் திரும்பி வந்து நடந்த விவரங்கள் அத்தனையையும் மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்தார், பிராந்திய மானேஜர், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எல்லோருக்கும் எழுதியும் கூட இதுவரையில் நடவடிக்கையும் இல்லை. அவர்களுக்கு சிமென்டும் கிடைக்கவில்லை. இது ஒரு சாதாரண குடிமகன் தனக்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்பதற்காக சிமென்ட் வாங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியினுடைய விளைவு, எங்கே போய் முடிந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாகும்.

அதுமாத்திரமல்ல, இங்கே மற்றொரு அவையிலேகூட மாண்பு மிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் சில ஆதாரங்களைக் காட்டி, அந்த ஆதாரங்களுடைய அசல்களை எல்லாம் அமைச்சர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். சென்னையிலே நந்தனம், கோபாலபுரம் ஆகிய இந்த இடங் களிலே உள்ள இந்தக் கிளைகளில் நடைபெறுகின்ற அக்கிரமங்கள். எப்படி நடைபெறுகிறது என்றால், எந்த அளவுக்கு அவர்கள் இந்த அக்கிரமங்களை மிகச் சிறப்பாக அவர்கள் நடத்தி இருக் கிறார்கள் என்றால், யாரோ ஒருவரிடமிருந்து ஒரு பெயர்.

(பிற்பகல் 12.10).

அந்தப் பெயர் எந்தப் பெயராகவும் இருக்கலாம். அவர் களிடமிருந்து எனக்கு இவ்வளவு மூட்டை சிமெண்ட் வேண்டு மென்று ஒரு மனுவை எழுதி வாங்கிக் கொள்வது. அப்படி எழுதி வாங்கிக்கொண்ட பிறகு அந்தப் பெயருக்கு உரியவருக்கு ஆர்டரை அனுப்புவது, உங்களுக்கு பர்மிட் கொடுத்து விட்டோம், நீங்கள் இந்தத் தேதியிலே வந்து வாங்கிக்கொள்ளுங்கள்,

'Please take delivery of Cement Stocks within 7 days' என்று அதிலே கையெழுத்திட்டு அந்த அதிகாரி அனுப்புவது. அந்தக் கடிதம் செல்லும். எங்கே செல்லும்? யாருடைய பெயரால் இவர்கள் போலியாகத் தயாரித்து மனுக் கொடுக்கச் சொன்னார்களோ அவர்களுடைய பெயருக்கு அந்தக் கடிதம் செல்லும். தபால்காரர் தேடி அலைவார். சென்னை முழு

வதும் அலைவார், அலைந்துவிட்டு குறிப்பிட்ட விலாசத்தாரர் குறிப்பிட்ட தெருவிலும் இல்லை; இன்னும் சொல்லப்போனால் குறிப்பிட்ட வீடே அந்தத் தெருவில் இல்லை என்று திரும்ப அந்த ஆபீசுக்கே அதை அனுப்பி வைப்பார். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு இவர்கள் அந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இவர்களே தாங்கள்தான் அந்த ஆள் என்று போலிக் கையெழுத்திட்டு, ஒதுக்கப்பட்ட சிமெண்டை வாங்கியிருக் கின்றார்கள்.

இதைத் திருவரங்கம் என்கின்ற ஒருவர் நந்தனம், கோபால புரம் ஆகிய அந்தப் பிராஞ்சுகளிலே வேலைப்பார்க்கின்ற திருவரங் கம் என்கின்ற ஒருவர் இந்த ஊழலுக்கு மூலகாரணமாக இருந் திருக்கிறார். அந்தத் திருவரங்கத்திற்கு ஆளுங்கட்சியிலே உள்ளவர்களிலே சில பேர் வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். இதைப்பற்றி இன்னொரு அவையிலே பதில் சொல்கின்ற நேரத்தி திலேகூட அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, 'இது கோபாலபுரத்தில் நடந்த தவறு' 'கோபாலபுரத்தில் நடந்த தவறு' என்று அழுத்தி அழுத்திச் சொன்னார்கள். கோபால புரத்தில் நடந்த தவறுதான். கோபாலபுரத்திலே கருணாநிதி மாத்திரம் 'குடியிருக்கவில்லை' என்பதும், இந்தச் சங்கத்திற்கு, இந்த சிமென்ட் விநியோகிக்கின்ற இடத்திற்குப் பக்கத்திலே யார் யார் குடியிருக்கிறார்கள் என்பதும் அமைச்சருக்குத் தெரியாத விவகாரங்கள் அல்ல.

எனவே இதை விசாரித்த நேரத்திலே இந்தத் திருவரங்கம், மற்றவர்கள் மூலமாக நடைபெற்றிருக்கும் ஊழல் இப்படிக் கார்டு எழுதி, எழுதப்பட்ட கார்டு தபால்காரர்களால் திரும்ப அனுப்பப் பட்டு, அந்தக் கார்டுகளிலே உள்ள பெயர்களுக்கு இவர்களே சிமெண்ட் பர்மிட்டைத் தயாரித்து, அவர்களே அந்தச் சிமெண்டை கள்ள மார்க்கெட்டிலே விற்றுப் பணம் சம்பாதித்திருக்கிறார்கள். அப்படிக் கொள்ளையடிக்கப்பட்ட சிமெண்ட் மூட்டைகள் மாத்திரம் 45,000 மூட்டைகள் என்றும், ஏறத்தாழ 25 இலட்சம் அல்லது 30 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை இதிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. ஒரு உத்தரவு இந்த சிமெண்ட் விநியோகம் பற்றி அதிகாரிகளால் போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவில் பர்மிட் உள்ளவர்களுக்கு சிமெண்ட் தரும் பொழுது வெளிநாட்டு சிமெண்டும், உள்நாட்டு சிமெண்டும் அவர்கள் கேட்பார்களேயானால் அப்படிக் கேட்கும்பொழுது கண்டிப்பாக எந்தவிதமான டிஸ்க்ரிமினேஷனும் இல்லாமல் பர்மிட்டை வைத்துக்கொண்டு கேட்பவர்களுக்கு 50 சதவிகிதம் வெளிநாட்டு சிமெண்டும் 50 சதவீதம் உள்நாட்டு சிமெண்டும் தர வேண்டும் என்று திட்டவட்டமாக அதிகாரிகள் அறிவித் திருக்கிறார்கள்.



ஆனால் அதற்கு மாறாக சோகன்லால் மிலாசந்த், அவருடைய சிமெண்ட் பர்மிட் எண் 9972/150 என்பவருக்கு வெளிநாட்டு சிமெண்ட் 130 மூட்டைகளும், உள்நாட்டு சிமெண்ட் 20 மூட்டை களும் தரப்பட்டிருக்கிறது. உத்தரவு என்ன? 50 சத விகிதம், 50 சதவிகிதம்தான் தர வேண்டும். உள்நாட்டு சிமெண்ட் 50 சதவிகிதம், வெளிநாட்டு சிமெண்ட் 50 சதவிகிதம் என்று தர வேண்டும். ஆனால் சோகன்லால் மிலாசந்த் அல்லவா? எனவே அவருக்கு 130 மூட்டை வெளிநாட்டு சிமெண்டும் 20 மூட்டை உள்நாட்டு சிமெண்டும் தரப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, திருமதி எஸ். வள்ளி, பர்மிட் 996 6/150 அவர்களுக்கு வெளிநாட்டு சிமெண்ட் 130 மூட்டையும், உள் நாட்டு சிமெண்ட் 20 மூட்டையும் தரப்பட்டிருக்கிறது.

கே. மணியன் பர்மிட் 9958/300, அவருக்கு வெளிநாட்டு சிமெண்ட் மாத்திரமே 300 மூட்டை தரப்பட்டிருக்கிறது.

அஜீஸ் 9960/100, வெளிநாட்டு சிமெண்ட் 100 மூட்டை தரப்பட்டிருக்கிறது. உள்நாட்டு சிமெண்ட் தரப்படவே இல்லை.

இன்னும் பலபேருக்கு இப்படிப்பட்ட முறைகேடாக, உத்தரவுக்கு மாறாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு பெரிய தவறு செய்த அந்த அதிகாரியை எந்த அளவிற்கு நட வடிக்கைக்கு உள்ளாக்கினார்கள் என்றால், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஒரு கண்டனம், ஒரு சென்ஷியூர், நீ செய்தது தவறு என்ற அந்த அளவிற்கு ஒரு அதிகாரி மீது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரியின் ஆணை பகிரங்கமாக மீறப்பட்டு 50 சத விகிதம் வெளிநாட்டு சிமெண்டும், 50 சதவிகிதம் உள்நாட்டு சிமெண்டும் தருவதற்கு மாறாக இவ்வளவு பெரும் தவறு இழைத் திருக்கிற அதிகாரிக்குத் தண்டனை வெறும் கண்டனம்தான், வெறும் சென்ஷியூர்தான். ஒரு கண்டனம் தான். காரணம் பெரிய தண்டனை கொடுத்தால் பின்னால் இருப்பவர்கள் மாட்டிக் கொள்வார்கள். பின்னால் இருப்பவர்கள் மாட்டிக் கொண்டால், அரசாங்கத்திற்குப் புதிதாக அபகீர்த்தி வரும். ஏனென்றால் பழைய அபகீர்த்திகள் இருக்கின்ற காரணத்தி னால், புதிதாக அபகீர்த்தி வரும் என்று சொல்லுகிறேன். எனவே தான் ஒரு 'லீனியண்ட்' வியு எடுத்தார்களே தவிர, ஒரு சீரியஸ் வியு எடுத்து இந்த நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை.

அதுமாத்திரம் அல்ல. நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் ஒரு தாசில்தார். பத்திரிகை யிலே செய்தி வெளிவந்தது. அவர் கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் இவைகளில் சிமெண்ட் விநியோகிப்பதற் குப் பதிலாக ஒரு கல்யாண மண்டபத்தை ஏற்பாடு செய்து

கொண்டு அங்கே அந்த கல்யாண மண்டபத்திலே இருந்து அவர்
சிமெண்ட் விநியோகம் செய்து பெரும் கொள்ளை அடித்தார்.
அப்படி பெரும் கொள்ளை அடித்த அந்த அதிகாரிக்கு என்ன
தண்டனை தெரியுமா? அவர் கைது செய்யப்பட்டாரா?
அவர் என்ன சஸ்பெண்ட், கைதுசெய்யப்பட, அவர் என்ன சண்முக
நாதனா கைது செய்யப்பட, அவர் கைது செய்யப்படவில்லை
அதற்கு மாறாக இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கபட்டதே
அல்லாமல் வேறு எந்த நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்பட
வில்லை. இலாகாவிலே இலாகா பூர்வமாக சாதாரண நட
வடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு கல்யாண மண்டபத்தை
சிமெண்ட் விநியோகம் செய்யும் இடமாக மாற்றிக் கொண்ட
ஒரு அதிகாரியின் மீது.

அது மாத்திரமல்ல, இந்தத் தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு
சாதாரண குடிமகன், அவர் பெயர் வரதன், அவருக்கு திரிவேணி
இண்டஸ்ட்ரீஸ் என்கின்ற ஒரு சிறுதொழில். அந்தச் சிறுதொழி
லுக்கு தொழிற்சாலை கட்ட சிமெண்ட் கேட்டு—அதுவும் ஒன்றும்
அதிகமாகக் கேட்கவில்லை, 15 டன் தான் கேட்டு விண்ணப்பம்
போடுகிறார். அவருக்கு 12–6–1981 அன்று செங்கற்பட்டு
மாவட்ட ஆட்சித் தலைவர் 7½ டன் சிமெண்ட் ஒதுக்குகிறார்.
அதற்குப் பிறகு அவர் தொழிற்சாலையைப் பாதி கட்டிவிட்டு
மீதி 7½ டன் சிமெண்டுக்காக ஜனவரியிலிருந்து அலைகிறார்.
அவருக்கு 7½ டன் சிமெண்ட் கொடுக்க இந்த அரசு முன்வரவில்லை.
அதே நேரத்தில் பெரிய முதலாளிகள், வட மாநிலத்தைச்
சேர்ந்தவர்கள், பார்சன் போன்ற கட்டிட நிறுவனத்திற்கு
சென்னையில் மாத்திரம் சுமார் 700 வீடுகளும் 250 கடைகளும்
கட்டுவதற்கு சிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. வரதனுக்கு
பாவம் 15 டன் சிமெண்ட் கொடுக்கவில்லை. ஒரு சாதாரண
தொழிற்சாலையைக் கட்ட ஆனால், பார்சனைப் போன்ற
வட மாநிலத்தைச் சேர்ந்த அந்த நிறுவனத்திற்கு 700 வீடுகள்,
250 கடைகள் கட்ட சிமெண்ட் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்
கட்டிடங்களைக் கட்டி முடிக்க, சிமெண்ட் அவருக்கு அளிக்கப்
பட்டிருக்கிறது. நாட்டிலே ஒரு சாதாரண குடிமகன் ஜான்
வின்ப்ரெட் அலையாய் அலைகிறார். நாசரேத்துக்கும், கோவூ
ருக்கும், காஞ்சிபுரத்திற்கும். ஆனால் கிடைக்கவில்லை. அதே
போல, வரதன் ஒரு சிறு தொழிற்சாலையைக் கட்டுவதற்கு 15
டன்னுக்கு அலைகிறான். 7½ டன் கிடைத்தது, 7½ டன் கிடைத்த
பாடில்லை. ஆனால், பார்சன் போன்றவர்களுக்குக் கிடைக்கிறது.

பார்சன் மாத்திரமல்ல, இன்னமும் உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டுமானால், நிறைய இருக்கிறது. கிவ்ராஜ் என்பவருக்கு
407/82 என்ற பர்மிட்டின்படி 2,000 மூட்டை சிமெண்ட் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. 22–2–1982 அன்று பில் 515766 எண்ணின்படி



தரப்பட்டிருக்கிறது. அதே போலத்தான் கோபிசந்த் அன்ட்
அதர்ஸ்—அவர்களுக்கு 103/82 என்ற பர்மிட்டின்படி 20–2–1982
அன்று பில் 515702 எண்ணின்படி 2,000 மூட்டை சிமென்ட்
அவருக்கும் தரப்பட்டிருக்கிறது. அதே நிறுவனத்திற்கு மீண்டும்
பர்மிட் நெம்பர் 225/82-ன்படி 2,000 மூட்டை சிமென்ட்
கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இப்படி ஆயிரக்
கணக்கான மூட்டைகள், இலட்சக்கணக்கான மூட்டைகள்
பெரும் பணக்காரர்களுக்கு, மாட மாளிகை, கூட கோபுரங்கள்
கட்டுவதற்குத் தருகின்ற இந்த அரசு ஏழை, எளியவர்கள், வீடு
கட்ட, ஒரு சிறு தொழிற்சாலை கட்டுவதற்குக் கோருகின்ற
15 டன், 20 டன் அல்லது, 100 மூட்டை, 200 மூட்டை சிமென்ட்
தர முடியாத அளவிற்கு ஏன் இவ்வளவு முறைகேடுகள் நடை
பெற்றிருக்கின்றன. யாரோ ஒரு எஸ்.பி.யைப் போட்டு விசா
ரிக்கச் சொல்லியிருக்கிறோம், என்று கூட அரசின் சார்பிலே
பதில் அளிக்கப்படலாம். ஆனால், நான் இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன், மாநிலம் தழுவிய அளவில், இந்த
சிமென்ட் ஊழல் பல இடங்களில் நடைபெற்றிருக்கிற
காரணத்தால், மாநிலம் தழுவிய அளவிலே இதற்கு ஒரு பெரிய
விசாரணை தேவை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட
விரும்புகிறேன். ஏனென்றால், காத்த வகுத்தலும்—
காத்தலை ஒழுங்காகக்காத்தலும் வகுத்தலின் அவசியம்—

என்பதை திருக்குறளின் அடிப்படையிலே நான் சொல்ல
விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–20)

இந்த அவையிலே நான் மற்ற மானியங்களிலே பேசுகிற
நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டேன். அரசினுடைய முறை
கேடுகள், அதே நேரத்தில், தமிழ்நாட்டிலே உள்ளவர்கள்,
தமிழ்நாட்டில் தொழில் செய்ய முடியாத அளவுக்கு மற்ற
மாநிலத்தவரின் ஆதிக்கம் இவைகளைப் பற்றி நான் இந்த அவையிலே
குறிப்பிட்டேன். அதனை, வருவாய்த் துறை, மதுவிலக்குத் துறை
மானியங்கள் விவாதிக்கப்பட்டபோது நான் குறிப்பிட்டேன்.
அப்போது சொன்னேன். சாராயக் கலவைத் தொழிற்
சாலை, அதாவது பிளன்டிங் அன்ட் பாட்டிலிங். இவைகள்
தஞ்சை மாவட்டத்திலே மட்டும் அல்ல, இன்னும் பல
மாவட்டங்களிலே பினாமிகளின் பெயரால் யார் யாரோ
ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்
டத்திலே மாத்திரம் 2 சதவிகிதம் மூலதனமாக போட்டுள்ள
ராமானுஜம் என்கிற பங்குதாரரை, 2 சதவிகிதம் மூலதனம்
போட்ட அவர்களை பினாமியாகப் பயன்படுத்தி மற்ற
பங்குதாரர்கள் அனைவரும் கேரளத்தைச் சேர்ந்த பெரிய
முதலாளிகள், அல்லது சீமான்கள், அல்லது கோமான்கள்,
அல்லது பெரிய ஆலை அதிபர்கள். அவர்கள் ராமானுஜத்தை

பினாமியாக வைத்துக்கொண்டு தஞ்சை மாவட்டத்திலே பிளண்டிங், பாட்டிலிங் தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்திலே, வைகை பாட்டிலிங் கம்பெனி. அதிலே 15 பேர்கள் பங்குதாரர்கள். அதிலே 5 சதவீதம் மூலதனத்தை போட்ட வருக்குத்தான் லைசென்ஸ், பினாமி அவர். அதாவது 15 ஆயிரம ரூபாய் மட்டுமே மூலதனம், 15 ஆயிரம் மூலதனம் போட்ட பினாமி ஒருவருக்கு வைகை பாட்லிங் கம்பெனியில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சராசரி மாத லாபம் மாத்திரம் அந்தக் கம்பெனிக்கு 5 லட்ச ரூபாய் என்று விசாரணையிலேயிருந்து தெரிய வந்திருக்கிறது. ஆனால், 15 ஆயிரம் ரூபாய் மூலதனம் போட்டதற்குப் பின்னாலே, அவரை பினாமியாக ஆக்கி, பெரிய முதலைகள் எல்லாம் அந்த 5 லட்ச ரூபாயை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அசோசியேட்டட் பாட் லர்ஸ். சென்னையைச் சேர்ந்த புருசோத்தமன் என்பவர் நிர்வாகத்திலே இருந்தாலும் கூட அவரது பங்குத் தொகை, 13 பர்சன்ட் தான். மற்றவர்களுடைய பங்குத்தொகை 87 பர்சன்ட். அந்த 87 பர்சன்ட் பங்குத்தொகை போட்டவர்கள் யார் யார் என்றால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. அத்தனை பேரும் கேரளத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. சேலத்திலே ஏற்காடு பிளன டிங் அன்ட் பாட்டிலிங் யூனிட். அங்கே அந்த யூனிட் கேரளத் தைச் சேர்ந்த குழுவால் நடத்தப்படுகிறது. கே.டி. குருவில்லா என்பவர் 30 சதவீதம் அதிலே பங்குதாரர். 34 லட்சம் ரூபாய மொத்த முதலீடு. அதில் வருமான வரி இலாகா சோதனை யிட்டபோது அவர்களுக்குக் கிடைத்த கணக்கிலே அவர்கள் சொல் கிறார்கள். அந்த ஆலையினுடைய யூனிட்டினுடைய முதலீடு 34 லட்ச ரூபாய், இது கேரளத்தைச் சேர்ந்தவர்களால நடத்தப்படுகிறது. 34 லட்ச ரூபாய் முதலீடும் கணக்கிலே காட்டப்பட்டிருக்கிறது. 15 லட்ச ரூபாய் நன்கொடை, என்றும் அதிலே கணக்கு காட்டப்படுகிறது. எந்த நன்கொடையோ, யாருக்குத் தரப்பட்டதோ, என்ன வகையோ, எனக்குத் தெரி யாது. வருமான வரி இலாகா அப்படிப்பட்ட ஒரு குறிப்பைத் தந்திருக்கிறது.

மதுரையில் மேகநாத் ஏஜென்சிஸ். அதன் லைசென்ஸ்தாரர் 5 சதவீதம மாத்திரமே மூலதனமாக வழங்கியுள்ளார். மீதி 95,—95 சதவீதத்திற்கும் பங்குதாரர்கள் யார் என்றால் கேரளத்தைச் சேர்ந்த எம். எஸ். விஸ்வாம்பரம் குடும்பத்தினர். அவர்கள தான் பங்குதாரர்கள். 5 சதவீதம் மேகநாத ஏஜென்சியில் லைசென்ஸ பெற்றவர்களுக்கு 5 சதவீதம மூலதனம் இருக்கிறது. மீதமுள்ள 95 சதவீதமும் கேரளத்தைச் சேர்ந்த விஸ்வாம்பரம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் பங்குதாரர்கள்.



அதுபோலவே. செங்கற்பட்டு மாவட்டத்திலே, த்ரீ ஸ்டார் பாட்டிலிங் கம்பெனி. அந்த 3 ஸ்டார் பாட்டிலிங் கம்பெனியில் தொழிலில் முன் அனுபவம் இல்லாதவர்கள் பெயரிலே லைசென்ஸ். தமிழகத்திலே இந்த செங்கல்பட்டு யூனிட்டும், நான் முதலிலே சொன்னேனே, அந்த மதுரை யூனிட்டும், இரண்டுக்கும் சேர்ந்து கேரளத்தைச் சேர்ந்த விஸ்வாம்பரம் குடும்பத்தினர்தான் முதலாளிகள். அவர்கள் தான் பினாமியாக வைத்து, அதையும் நடத்திக் கொண்டிருக் கிறார்கள்.

திருச்சியில் யூனிவர்சல் பிளண்டிங் யூனிட், வருமான வரி இலாகாவினர் எழுதிய குறிப்பில் இருப்பதாக அறிகிறேன்.

Like other units, this is also controlled by a group of Keralites.

லைசென்ஸ்தாரருக்கு முன் அனுபவம் கிடையாது என்றும் குறிப்பு எழுதப்படுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தனியா இன்டஸ்ட்ரீஸ் அதுவும்

This unit is actually run by some Keralites.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அப்ரோ பிரியேசன் பில் முடிந்து 1 மணி நேர விவாதம் வேறு வைத்து இருக்கிறேன். இப்போது நீங்கள் குறிப்பிடுவது எல்லாம் ஏற்கனவே பேசி இருக்கிறீர்கள். நீங்கள் பேசுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி: 1 மணி நேர விவாதம் வேண்டு மானால் நாளைக்கு வைத்துக்கொள்ளுங்கள். நானும் பேசி இருக்கிறேன். உங்களுக்கும் தெரியும். இருந்தாலும் கூட மக்களுக்குத் தெரியவேண்டும். (குறுக்கீடு) அவர்கள் மக்க ளுக்கெல்லாம் தெரியும் என்கிறார்கள். அப்படித் தெரிந் திருந்தால் நல்லதுதான். இன்னும் தெரிய வைக்க வேண்டும் நீங்களும் நானும் சேர்ந்து. ஏன் என்றால் ஒரு தமிழனுக்குக்கூட இங்கே வேலை இல்லை. இவைகள் எல்லாம் கேரளத்தைச் சேர்ந்தவர்களுடைய ஆதிக்கத்திலே, சாராய தொழிற்சாலை ஓடிக்கொண்டிருக்கிறது, அதனால்தான் சொல்கிறேன்.

Dhania Industries—This unit is actually run by Keralites.

சதானந்தம் என்பவருடைய பெயரால் பினாமியாக ஒரு இலட்சம் ரூபாய் முதலீடு என்று சொல்கிறார்கள். அந்த ஒரு இலட்சம் ரூபாய் முதலீடும் கூட பொய்த் தகவல். அது கூட போடவில்லை என்று தெரிகிறது என்ற அளவுக்கு இந்த சதானந்தமும் கேரளாவிலே உள்ள எலைட் குரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீசுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளவர் என்ற அளவுக்கு இந்த சாராயக் கலவைத் தொழிற் சாலை உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 30

நான் இன்னும் இரண்டு முக்கிய பிரச்சனைகளைப்பற்றி
மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன். கப்பல் வாங்கிய
பிரச்சனை குறித்து எனது நண்பர் விஜயராகவன் அவர்கள்
கூட ஒன்றைச் சொன்னார்கள். பல்கேரியா பால்டிகா கப்ப
லைப்பற்றி இங்கே சில குறிப்புகளை எடுத்து வைத்த நேரத்தில்
சுப்ரீம் கோர்ட்டினுடைய நீதிபதியை வைத்து விசாரிப்பதாக
முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்து, பிறகு அன்றைக்கு
இருந்த மத்திய அரசிலே உள்ளவர்கள் அதற்கு வாய்ப்பு இல்லை
என்று கடிதம் எழுதி, அதுபற்றி மீண்டும் முயற்சி எடுக்காமலே
விடப்பட்டு, இப்போது புதிதாக மூன்று கப்பல்களை 100
கோடி ரூபாய்க்கு வாங்குவது என்கின்ற ஒரு முனைப்பான முயற்சி
எடுக்கப்பட்டு, அது குறித்து இந்த அவையிலே நம்முடைய பேரா
சிரியர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்
களும், மற்றவர்களும் எழுப்பிய சில வினாக்களுக்கு, சில
சந்தேகங்களுக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் நம்முடைய
போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—
முதலமைச்சர் அவர்கள் விரும்பியபடி குளோபில் டெண்டர் விட்ட
தாகவும் மேற்கு ஜெர்மனி, பல்கேரியா, யூக்கஸ்லோவேக்கியா,
இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கப்பல்கள் பற்றிய விவரங்கள்
பரிசீலனை செய்யப்பட்டதாகவும் அதில் மேற்கு ஜெர்மனி
கப்பல்கள்தான் சிறந்தவை என்று நிபுணர் குழு தீர்மானித்த
தாகவும் சொன்னார்கள். மேற்கு ஜெர்மன் கப்பல் விலை
33.33 கோடி ரூபாய். மத்திய அரசுதான் தமிழக அரசு
கப்பல் வாங்குவதற்குத் தடையாக இருப்பது போலவும்
தமிழக அரசு ஜப்பான் நாட்டிலிருந்தும் கொரியாவிலிருந்தும்
விவரங்களைக் கேட்கும்படி மத்திய அரசு கூறியிருப்பதாகவும்
சில பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன. ஆனால் அமைச்சர்
சட்டப்பேரவையில் விளக்கம் அளித்தபோது கப்பல் வாங்கு
வது குறித்து மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே
கருத்து வேறுபாடு கிடையாது என்று விளக்கம் அளித்தார்கள்.

மாநிலங்கள் அவையில் 19-3-82 அன்று இந்த பொருள்
பற்றி முரசொலி மாறன், வை. கோபால்சாமி, மற்றும் சில
உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போது
இந்தத் துறையினுடைய அமைச்சர் வீரேந்திர பட்டீல்
அவர்கள் கூறிய பதிலை இந்த அவை சற்று கவனிப்பது நலம்
என்று கருதுகிறேன். கோபால்சாமி கேட்கிறார். தமிழக
அரசில் பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் ஜெர்மனியிலிருந்து
3 கப்பல்கள் வாங்குவது பற்றிய ஒப்பந்தத்திற்கு மத்திய
கப்பல் வளர்ச்சி நிதிக் குழு ஒப்புதல் தரவில்லையா என்று
கேட்கிறார்.

அதற்கு வீரேந்திர பட்டீல் தருகின்ற பதில், இல்லை.
பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் வேண்டுகோளின்படி கப்பல்
விலை பற்றிக் கூடுதல் விவரம் கிடைக்கும் வரை அந்தத் திட்டம்
தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.



1982 மார்ச் 30 [டாக்டர் மு. கருணாநிதி]

கோபால்சாமி—4-3-82 அன்று தமிழக சட்டமன்றத்தில்
அமைச்சரவர்கள் ஜெர்மன் கப்பல் விலை பற்றி குறிப்பிட்டுப்
பேசியிருக்கிறார். ஆனால் தமிழக அரசே அதை ஒத்திவைக்க
கேட்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். எனவே எப்போது
தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதினார்கள்?

வீரேந்திர பட்டீல்—பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்
கழகம் 3 கப்பல்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து 33.33
கோடி ரூபாய் வீதம் வாங்குவதற்கு விரும்பியது. எஸ்.டி.எஃப்.சி.
எதையும் சொல்லவில்லை. மறுக்கவில்லை. ஆனால் கப்பல்கள்
விலைபற்றி அவர்களுக்குச் சில சந்தேகங்கள் எழுந்தன.
ஏனென்றால் டைரக்டர் ஜெனரல் அவர்களுக்கும்,
எஸ்.டி.எஃப்,சி-க்கும் மார்க்கெட்டில் உள்ள கப்பல் விலை
என்ன என்பது தெரியும். சவுத் இந்தியா ஷிப்பிங் கார்ப்பரேஷன்
தெற்கு கொரியாவிலிருந்து 4 கப்பல்களை வாங்கியிருக்கிறார்
கள். அதன் அளவு 38,300 டி.டபிள்யூ.டி. அவர்கள் 22 கோடி
ரூபாய் வீதம் அதை வாங்கி இருக்கிறார்கள். பூம்புகார் கப்பல்
கார்ப்பரேஷன் 38,000 டி.டபிள்யூ.டி. அளவுள்ள கப்பலை
33.3 கோடி ரூபாய்க்கு வாங்க விரும்புகிறார்கள். அதாவது
10 கோடி ரூபாய் அதிகமாக ஜெர்மன் கப்பல் கம்பெனிக்குத்
தர விரும்புகிறார்கள். எனவே, இயற்கையாகவே எஸ்.டி.
எஃப்.சி. மேற்கு ஜெர்மன் குறிப்பிட்டுள்ள விலை அதிகம்
என்று கருதியது. சில தகவல்களைப் பெற விரும்பியது.
அந்தத் தகவலைக் கேட்கும்போது நீங்கள் ஏன் மற்ற கப்பல்
நிறுவனங்களை, ஜப்பான், கொரியா போன்ற நிறுவனங்களை
தொடர்பு கொண்டு கேட்கக்கூடாது? அப்போது ஜெர்மன்
கப்பல் விலை அதிகம் என்பது சுலபமாக புரியுமே என்று கூறியது.

பிறகு, 27-2-82 அன்று பூம்புகார் கார்ப்பரேஷன் வேறு
ஒரு கடிதம் அதாவது ஜப்பான், கொரியா கட்டல் தளங்களைத்
தொடர்பு கொண்டு அவர்களுடைய விலை பற்றிய விவரங்களைக்
கேட்பதாக தெரிவித்து எழுதி விட்டார்கள். அது பற்றிய
விவரங்களோடு பின்னால் வருவதாகத் தெரிவித்து சென்றவர்கள்
இன்னும் வரவில்லை. வந்த பிறகு அது பற்றி கவனிக்கப்படும்.
இது அமைச்சர் பதில்.

கோபால்சாமி மீண்டும் கேட்கிறார். "தமிழக அரசு தூத்துக்
குடிக்கு கரி கொண்டு வருவதற்கு அவசியமாக கப்பல் வாங்க
வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. அதிலே எனக்கு வேறுபாடு
இல்லை. ஆனால் தமிழக அரசு ஏன் மறுபடியும் குளோபில்
டெண்டர் கேட்காமல் ஜப்பான், கொரியாவிலிருந்து மட்டும் விலை
விவரங்களைக் கேட்க வேண்டும்?"

(பிற்பகல் 2-30)

அதற்கு திரு. வீரேந்திர பாட்டில் அவர்கள் சொல்கிறார்: ''மாநில அரசு விவகாரத்தில் ஷிப்பிங் டெவலப்மென்ட் கமிட்டி ஓரளவிற்குத்தான் கருத்துக்களைச் சொல்ல இயலும். மேற்கு ஜெர்மனிக்குத் தரமுடிவு செய்வதற்கு முன்பு, இங்கிலாந்தில், இருந்தும் அவர்கள் டெண்டர் கோரி இருந்தார்கள். இங்கிலாந்தில் அவர்கள் அளித்துள்ள கப்பல் விலை 24 கோடி ரூபாய் அளவிற்கும், யூகோஸ்லாவியா 23.40 கோடி ரூபாய் அளவிற்கும், பல்கேரியா 22 கோடி ரூபாய் அளவிற்கும் விலை தெரிவித்தன. தமிழக அரசு இதையெல்லாம் மறுத்து விட்டு, மேற்கு ஜெர்மனியைத் தேர்ந்தெடுத்தார்கள். அதனால் தான் மற்றவர்களையும் கேட்கும்படி ஆலோசனை கோரப்பட்டது. அவர்கள் இந்த 3 மனுக்களையும் மறுத்து விட்டு, மேற்கு ஜெர்மனி, அதிக விலை தெரிவித்து இருந்தும், மேற்கு ஜெர்மனி தெரிவித்த விலையை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு இத்து யோசனை கூறிய பிறகு, புதிய திட்டங்களோடு வருவதாக் கூறிப் போய் இருக்கிறார்கள்''.

பிறகு, திரு. முரசொலி மாறன் கேட்கிறார் : ''அமைச்சர் அவர்கள் மேற்கு ஜெர்மனி கப்பல் மற்றதைவிட அதிக விலை என்று கூறினார்கள். தமிழக அரசு ஒரு குழு அமைத்துத்தானே இந்த முடிவை எடுத்து இருக்கிறார்கள். கரி கொண்டு வருவதற்காக ஒரு டனுக்கு ஜெர்மன் கப்பலுக்கு 12. ரூபாய், இங்கிலாந்து கப்பலுக்கு 135 ரூபாய், யூகோஸ்லாவியா 143 ரூபாய் என்றும், பல்கேரியா 145 ரூபாய் என்றும் அந்தக் குழு முடிவு செய்ததின் பேரில் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்று தமிழக அமைச்சர் கூறியிருக்கிறாரே, எனவே இதில் உண்மையான விவரம் என்ன ?''.

அதற்கு திரு. வீரேந்திர பாட்டில் கூறுகிறார் : ''உறுப்பினர் கருத்துப்படி பூம்புகார் கார்ப்பரேஷன் ஒரு குழு போட்டு இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் எப்படிப்பட்ட நிபுணர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய அரசில் நம்முடைய நிபுணர்கள் இருக்கிறார்கள்.'' என்று பதில் சொல்கிறார்.

உடனே, திரு. பில்லுமோடி கேட்கிறார் : ''அவர்கள் எப்படிப்பட்ட நிபுணர்கள் ?.''

அதற்கு திரு. வீரேந்திர பாட்டில் பதில் சொல்கிறார்; ''பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் நிபுணர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த கப்பல் பற்றி நம்பிக்கையும், தைரியமும் இருக்குமானால் அவர்கள் நம்முடைய டைரக்டர் ஜெனரல் இடம் வந்து அதிகாரிகளிடத்தில் விவாதித்து, ஒப்புக் கொள்ளச் செய்து இருக்கலாம். நான் இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஏனென்றால் அந்தத் திட்டம் அமைச்சரவைக்கு இன்னும் வரவில்லை. இன்னும் எஸ்.டி.எப்.சி. யிடத்தில் தான் இருக்கிறது. அவர்கள் மேல் விவரங்களுக்காக காத்து இருக்கிறார்கள்''.





இப்படிப்பட்ட முறையில் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதிலே மேற்கு ஜெர்மன் கப்பலை வாங்குவது தான் எங்களுடைய நோக்கம். அது தான் தரத்தில் உயர்ந்தது என்று அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் அதை வாங்குவதுதான் சரியானது என்பதை விவாதிக்க எஸ்.டி.எப்.சி. யிடம் சென்று அந்த நிபுணர்களோ, அரசின் சார்பிலோ யாரும் இதுவரையில் கலந்து உரையாடவில்லை. இதற்கிடையில் இது அதிக விலை அல்லவா என்று எஸ்.டி.எப்.சி. கேட்டபின், அதைவிட ஜப்பான், கொரியா கப்பலை வாங்கலாம் என்று யோசனை ஏற்பட்டு, அதற்காக இங்கே இருந்து சிலபேர், சில அதிகாரிகள் எல்லாம் இங்கேயிருந்து கொரியாவிற்குப் பறந்து போய் இருக்கும் செய்திகள் எல்லாம் நமக்கு வந்து கொண்டு இருக்கின்றன. இவை எல்லாம் இந்த அரசுக்கு நல்ல பெயர் உண்டாக்கக் கூடியவைகள்தானா என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். கப்பல்களை இங்கே சில விளக்கங்களைச் சொல்லி நான் பதில் தருகின்ற வாங்குவதைப் பற்றி ஒரு கேள்விக்கு நான் பதில் தருகின்ற நேரத்திலும், என்னுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது கூறுகின்ற நேரத்திலும் அதைப் பற்றி கொஞ்சம் விளக்கமாகவே பதில், உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு, நான் சொல்லியிருக்கிறேன். இப்போது கூட கொஞ்சம் அதை விளக்கமாகச் சொல்வது கடமை என்று கருதுகிறேன்.

நாம் கப்பல் வாங்க வேண்டும் என்று முடிவு எடுத்தபோது குளோபல் டெண்டர் விடுவதுதான் வாங்க வேண்டும் என்று முடிவு எடுத்தோம் இந்த முடிவை எடுத்த நாம், ஏற்கனவே சொல்லியதைப் போல, 26 நாடுகளில் உள்ள 113 கப்பல் தளங்களுக்குக் கடிதம் எழுதினோம். அது போன்று குளோபல் டெண்டர் கேட்டு, பிறகு பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து இருக்கிறோம். நீங்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று கடிதம் எழுதினோம். கலந்து கொண்டவர்கள் நிறைய பேர் இல்லை. கலந்து கொண்டவர்கள் 4 கப்பல் தளத்தைச் சேர்ந்தவர்கள் தான். அவர்கள் விலைப் பட்டியலைக் கொடுத்து இருந்தார்கள். இதிலே ஜெர்மன் கப்பல், கொரியா கப்பல் இவைகளையெல்லாம் மதிப்பிட்டுப் பார்க்கிறபோது, மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல, ரூ. 123 ஒரு டனுக்குச் செலவாகும் என்று ஜெர்மனி கப்பலுக்குக் கணக்குக் கொடுத்து இருந்தார்கள் நம்முடைய நிபுணர்கள் குழு. இதிலே பல்கேரியா கப்பல் 22 கோடி ரூபாய் விலை என்றும், அதிலே கொண்டுவர 145 ரூபாய் ஒரு டன்னுக்கு ஆகும் என்றும் கொடுத்து இருந்தார்கள், எங்களுக்குக் கணக்கு. அதை நாம் அப்படியே எஸ்.டி.எப்.சிக்கு அனுப்பினோம். எஸ்.டி.எப்.சி.யில் பார்த்து விட்டு, இந்த நான்கு கப்பலை நாம் ஒப்பிட்டதைப் பற்றி அவர்கள்

[திரு. சு. முத்துசாமி] [1982 மார்ச் 30

எந்தக் குறையும் சொல்லவில்லை. இந்த 4 கப்பலை ஒப்பிட்டுக்
காட்டி, இது விலை குறைவு, இதற்கு விலை அதிகமாக இருக்
கிறது, இதிலே கொண்டு வருவதற்கு என்ன செலவாகும் என்று
கணக்குக் காட்டி இருப்பதைப் பற்றி அவர்கள் குறை சொல்ல
வில்லை. அவர்கள் சொல்லிய கருத்து எல்லாம் இங்கே வந்து
இருக்கும் கப்பலுக்கு நீங்கள் என்ன தேவையைக் கருதி, எந்தப்
பணிக்காக அதை வாங்குவதற்குக் கருதியிருந்தோமோ, அந்தத்
தேவைக்கு வெளியிலே விலை குறைவாக கப்பல் கிடைக்கும்
என்று நாங்கள் கருதுகிறோம், எனவே இங்கே வந்து இருப்பவை
களை விட, நீங்கள் உங்களுடைய தேவைக்கு ஏற்ப இருக்கும்
கப்பல்கள் விலை குறைவாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை
எங்களுக்கு இருக்கிற அனுபவத்தால் இருக்கிறது என்பதால்,
நீங்கள், கொரியாவிலிருந்து ஜப்பானிலிருந்து கேட்க வேண்டும்.
அதிலும் குறிப்பாக ஜப்பானில் இரண்டு பெரிய கப்பல் தளங்கள்
இருக்கின்றன. கொரியாவில் பெரிய கப்பல் தளம் இருக்கிறது.
அங்கேயெல்லாம் கேட்க வேண்டும் என்று கடிதம் கொடுத்து
இருக்கிறார்கள். அதைக் கூட வைத்து மீண்டும் எழுதியிருக்
கிறோம். மேலும் அமைச்சரவைக்கு அந்தக்கோப்பு போகாத
காரணத்தால் அங்கே முழு விவரங்கள் இல்லாமல் இருந்து
இருக்கும். அதனால் தான் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்
கிறார்கள், இன்னும் அமைச்சரவைக்கு வரவில்லை, எனவே
என்னால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை என்று சொல்லி
இருக்கிறார்கள்.

இங்கே கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதலிலே
நாம் குளோபில் டெண்டர் கால்-பார் செய்து அதிலே 4 பேர்கள்
கலந்து கொண்டு வந்தபோது, எஸ்.டி.எப்.சி. என்ன கருத்தை
சொல்லியதோ, அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து
மன்றத்திலே கேட்டார்கள். எப்படி குறைந்த விலையிலே கப்பல்
கிடைக்கும்போது நீங்கள் அதிக விலையிலே வாங்குகிறீர்கள்
என்று. நான் அப்போதே விளக்கம் சொன்னேன். குறைந்த
விலையிலே இருக்கிற கப்பல் வெளியிலே இருக்கிறது. குளோபில்
டெண்டருக்குள்ளே அவர்கள் வரவில்லை என்று விளக்கம்
சொன்ன பிறகு, அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அப்போது குளோபில் டெண்டரிலே நீங்கள் கால்-பார் செய்
திருந்தால் கூட என்ன விலையிலே வெளியிலே இருக்கிறது என்று
ஏன கேட்கக் கூடாது என்று கூட கேட்டார்கள். இன்றைய
தினம் வந்திருக்கிற நிலைமை நீங்கள் குளோபில் டெண்டர்
தான் கால்-பார் செய்ய வேண்டும், வெளியிலே தனியார்களிடம்
கேட்கக் கூடாது என்று சொல்கிறார்கள். எஸ்.டி.எப்.சி.
சொல்லி, அந்த அடிப்படையிலே நாம் கேட்டு, அந்த விளக்கத்தை
அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். எனவே தவறு நடக்கிற
நேரத்தில் நீங்கள் கூட அதை சுட்டிக் காட்டுவதற்கும் அல்லது
தலையிட்டு நிறுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கிறபோது, சந்தேகப்
படுவதற்கான வாய்ப்பு இதிலே எதுவும் இல்லை என்றுதான்
கருதுகிறேன்.



1982 மார்ச் 30]

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லு
போது ஒரு டன்னுக்கு 123 ரூபாய் தான் அடக்கமாக வருகிறது
என்று சொல்கிறார்கள், அது எனக்கு சரியாகத் தெரியவில்லை.
டன் ஒன்றுக்கு 160 அல்லது 170-க்கு ஆகும் என்று தான் நான்
தீர்மானமாக, எனக்கு நன்றாகத் தெரியும் என்ற வகையில்
கருதுகிறேன். இந்த 123 ரூபாயை எப்படி அவர்கள் கணக்
கிட்டார்கள் என்ற ஆதாரத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல
முடியுமா ? அதைப் பற்றித் தெரிந்துக்கொள்ள முடியுமா என்று
கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
நான் ஏற்கெனவே ஒரு வினாவிற்கு பதில் சொல்லும் போது
விளக்கமாக இந்த கருத்துகளைச் சொன்னேன். தற்போது
அந்தக் குறிப்புக்கள் என்னிடத்திலே இல்லை என்றாலும், என்
னுடைய ஞாபகத்திலிருந்து எதையாவது சொல்லி அது நாளைய
தினம் தவறாகப் போகுமேயானால் தவறான கருத்தைச்
சொல்லிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு கூட வரும். ஆனால்,
எனக்குத் தெரிந்த வரையில் நிபுணர் குழுகொடுத்திருக்கிறார்கள்.
அது அந்தக் கப்பலினுடைய தன்மையையும், அமைப்பையும்
பொருத்திருக்கிறது. உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதிலே
நீங்கள் அனுபவம் பெற்றவர்கள். கப்பலினுடைய அமைப்பைப்
பொறுத்து அதிலே சொல் விளவு எவ்வளவு, எவ்வளவு அளவிற்கு
எவ்வளவு ஏற்றலாம் என்பதைப் பொருத்துத் தான் கணக்கிட்டுச்
சொல்கிறார்களே தவிர, வேறு அல்ல. நிலக்கரி ஒரு டனுக்கு
எவ்வளவு ஆகும் என்று கணக்கிடுகிறோம். அந்த வகையிலே
ஜெர்மன கப்பல குறைந்த வாடகை என்று நிபுணர் குழுவினர்
கணக்கிட்டு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் ஹால்டியா போர்ட்டிலேயிருந்து
கொண்டு வர முடியும் என்று அவர்கள் அனைத்து கூறுகிறார்கள்
ஹால்டியா போர்ட்டினுடைய ஆழம் 27 அடிக்கு மேல் கிடையவே
கிடையாது. அவர் 28 அடி கப்பல் வாங்கினால் அந்த 10 அடி,
11 அடி வித்தியாசம் எங்கே லோட் பண்ணப் போகிறார்கள்
வேறு ஏதாவது போர்ட்டிலே லோட் பண்ணப்போகிறார்கள்.
என்று கேட்க விரும்புகிறேன். அப்படி லோட் பண்ணினால்
தான் 160 ரூபாய்க்கு கட்டுப்பட முடியும் இல்லையென்றால்
200 ரூபாய்க்கு மேலே போகும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அந்த ஆழத்தை எல்லாம் கணக்கெடுத்தான அந்தக் குழுநம்மி
டத்திலே கொடுத்திருக்கின்றது நானாகச் சொல்லவில்லை
அந்தக் குழுதான் அந்த ஆழங்களை எல்லாம் கணக்கிட்டு
கொடுத்திருக்கிறார்கள்

டாக்டர் மு. கருணாநிதி : மேற்கு ஜெர்மனி கப்பல் உள்ள
படியே தரம் வாய்ந்ததாக இருக்கிறது என்ற நம்பிக்கையும்
தைரியமும் அந்த நிபுணர்களுக்கு இருந்திருக்குமேயானால்,

[ திரு. சு. முத்துசாமி]



எந்தக் குறையும் சொல்லவில்லை. இந்த 4 கப்பலை ஒப்பிட்டுக்
காட்டி, இது விலை குறைவு, இதற்கு விலை அதிகமாக இருக்
கிறது, இதிலே கொண்டு வருவதற்கு என்ன செலவாகும் என்று
கணக்குக் காட்டி இருப்பதைப் பற்றி அவர்கள் குறை சொல்ல
வில்லை. அவர்கள் சொல்லிய கருத்து எல்லாம் இங்கே வந்து
இருக்கும் கப்பலுக்கு நீங்கள் என்ன தேவையைக் கருதி, எந்தப்
பணிக்காக அதை வாங்குவதற்குக் கருதியிருந்தோமோ, அந்தத்
தேவைக்கு வெளியிலே விலை குறைவாக கப்பல் கிடைக்கும்
என்று நாங்கள் கருதுகிறோம், எனவே இங்கே வந்து இருப்பவை
களை விட, நீங்கள் உங்களுடைய தேவைக்கு ஏற்ப இருக்கும்
கப்பல்கள் விலை குறைவாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை
எங்களுக்கு இருக்கிற அனுபவத்தால் இருக்கிறது என்பதால்,
நீங்கள், கொரியாவிலிருந்து ஜப்பானிலிருந்து கேட்க வேண்டும்.
அதிலும் குறிப்பாக ஜப்பானில் இரண்டு பெரிய கப்பல் தளங்கள்
இருக்கின்றன. கொரியாவில் பெரிய கப்பல் தளம் இருக்கிறது.
அங்கேயெல்லாம் கேட்க வேண்டும் என்று கடிதம் கொடுத்து
இருக்கிறார்கள். அதைக் கூட வைத்து மீண்டும் எழுதியிருக்
கிறோம். மேலும் அமைச்சரவைக்கு அந்தக்கோப்பு போகாத
காரணத்தால் அங்கே முழு விவரங்கள் இல்லாமல் இருந்து
இருக்கும். அதனால் தான் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்
கிறார்கள், இன்னும் அமைச்சரவைக்கு வரவில்லை, எனவே
என்னால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை என்று சொல்லி
இருக்கிறார்கள்.

இங்கே கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதலிலே
நாம் குளோபில் டெண்டர் கால்-பார் செய்து அதிலே 4 பேர்கள்
கலந்து கொண்டு வந்தபோது, எஸ்.டி.எப்.சி. என்ன கருத்தை
சொல்லியதோ, அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து
மன்றத்திலே கேட்டார்கள். எப்படி குறைந்த விலையிலே கப்பல்
கிடைக்கும்போது நீங்கள் அதிக விலையிலே வாங்குகிறீர்கள்
என்று. நான் அப்போதே விளக்கம் சொன்னேன். குறைந்த
விலையிலே இருக்கிற கப்பல் வெளியிலே இருக்கிறது. குளோபில்
டெண்டருக்குள்ளே அவர்கள் வரவில்லை என்று விளக்கம்
சொன்ன பிறகு, அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அப்போது குளோபில் டெண்டரிலே நீங்கள் கால்-பார் செய்
திருந்தால் கூட என்ன விலையிலே வெளியிலே இருக்கிறது என்ற
ஏன் கேட்கக் கூடாது என்று கூட கேட்டார்கள். இன்றைய
தினம் வந்திருக்கிற நிலைமை நீங்கள் குளோபில் டெண்டர்
தான் கால்-பார் செய்ய வேண்டும், வெளியிலே தனியார்களிடம்
கேட்கக் கூடாது என்று சொல்கிறார்கள். எஸ்.டி.எப்.சி.
சொல்லி, அந்த அடிப்படையிலே நாம் கேட்டு, அந்த விளக்கத்தை
அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். எனவே தவறு நடக்கிற
நேரத்தில் நீங்கள் கூட அதை சுட்டிக் காட்டுவதற்கும் அல்லது
தலையிட்டு நிறுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கிறபோது, சந்தேகப்
படுவதற்கான வாய்ப்பு இதிலே எதுவும் இல்லை என்றுதான்
கருதுகிறேன்.





திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லு
போது ஒரு டன்னுக்கு 123 ரூபாய் தான் அடக்கமாக வருகிறது
என்று சொல்கிறார்கள், அது எனக்கு சரியாகத் தெரியவில்லை.
டன் ஒன்றுக்கு 160 அல்லது 170-க்கு ஆகும் என்று தான் நான்
தீர்மானமாக, எனக்கு நன்றாகத் தெரியும் என்ற வகையில்
கருதுகிறேன். இந்த 123 ரூபாயை எப்படி அவர்கள் கணக்
கிட்டார்கள் என்ற ஆதாரத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல
முடியுமா ? அதைப் பற்றித் தெரிந்துக்கொள்ள முடியுமா என்று
கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
நான் ஏற்கெனவே ஒரு வினாவிற்கு பதில் சொல்லும் போது
விளக்கமாக இந்த கருத்துகளைச் சொன்னேன். தற்போது
அந்தக் குறிப்புக்கள் என்னிடத்திலே இல்லை என்றாலும், என்
னுடைய ஞாபகத்திலிருந்து எதையாவது சொல்லி அது நாளைய
தினம் தவறாகப் போகுமேயானால் தவறான கருத்தைச்
சொல்லிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு கூட வரும். ஆனால்,
எனக்குத் தெரிந்த வரையில் நிபுணர் குழுகொடுத்திருக்கிறார்கள்.
அது அந்த கப்பலினுடைய தன்மையையும், அமைப்பையும்
பொருத்திருக்கிறது. உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதிலே
நீங்கள் அனுபவம் பெற்றவர்கள். கப்பலினுடைய அமைப்பைப்
பொறுத்து அதிலே சொல் விளவு எவ்வளவு, எவ்வளவு அளவிற்கு
எவ்வளவு ஏற்றலாம் என்பதைப் பொருத்துத் தான் கணக்கிட்டுச்
சொல்கிறார்களே தவிர, வேறு அல்ல. நிலக்கரி ஒரு டனுக்கு
எவ்வளவு ஆகும் என்று கணக்கிடுகிறோம். அந்த வகையிலே
ஜெர்மன் கப்பல் குறைந்த வாடகை என்று நிபுணர் குழுவினர்
கணக்கிட்டு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் ஹால்டியா போர்ட்டிலேயிருந்து
கொண்டு வர முடியும் என்று அவர்கள் அனைத்து கூறுகிறார்கள்
ஹால்டியா போர்ட்டினுடைய ஆழம் 27 அடிக்கு மேல் கிடையவே
கிடையாது. அவர் 38 அடி கப்பல் வாங்கினால் அந்த 10 அடி,
11 அடி வித்தியாசம் எங்கே லோட் பண்ணப் போகிறார்கள்
வேறு ஏதாவது போர்ட்டிலே லோட் பண்ணப்போகிறார்கள்.
என்று கேட்க விரும்புகிறேன். / டாப்டி லோட் பண்ணினால்
தான் 160 ரூபாய்க்கு கட்டுபடி முடியும் இல்லையென்றால்
200 ரூபாய்க்கு மேலே போகும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அந்த ஆழத்தை எல்லாம் கணக்கெடுத்தான் அந்தக் குழு நம்மி
டத்திலே கொடுத்திருக்கின்றது நானாகச் சொல்லவில்லை
அந்தக் குழுதான் அந்த ஆழங்களை எல்லாம் கணக்கிட்டு
கொடுத்திருக்கிறார்கள்

டாக்டர் மு. கருணாநிதி : மேற்கு ஜெர்மனி கப்பல் உள்ள
படியே தரம் வாய்ந்ததாக இருக்கிறது என்ற நம்பிக்கையும்
தைரியமும் அந்த நிபுணர்களுக்கு இருந்திருக்குமேயானால்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 30

அவர்கள் ஏன் இங்கே வந்து எஸ். டி. எட். சி. யிடம் கலந்து பேசி, எங்களை ஏன் கன்வின்ஸ் செய்திருக்கக்கூடாது. என்று வீரேந்திர பாட்டீல் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். விலை அதிகம் அல்லவா என்று கேட்ட உடனேயே, அவர்கள் கன்வின்ஸ் செய்வதற்குப் பதிலாக, ஜெர்மன் கப்பலை விட்டு நாங்கள் ஜப்பான் கொரியா கப்பலை வாங்கப் போறோம் என்று ஏன் சொல்லவேண்டும்? நான் கேள்விப்படுகிற வகையிலே ஜெர்மன் கப்பலுக்கு கொடுக்கிற கமிஷன் அரை அல்லது 1 சதவீதம் கமிஷன் என்றும், இப்போது கொரியா கப்பலுக்கு கொடுக்கக்கூடிய கமிஷன் 5 சதவீதம் என்றும், இதற்கு பேரம் பேச இந்த அரசுக்கு மிக நெருங்கிய நண்பர் ஒருவர் இப்போது கொரியா நாட்டிலே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் தகவல் கேள்விப்படுகிறேன். அவையெல்லாம் இந்த அரசுக்கு நல்லதுஅல்ல, இவைகளை எல்லாம் அறவே தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான், நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துனுடைய எம். டி. அவர்கள் அங்கே சென்று அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னேன். இது போல தவறுகள் நடந்து விட்டதாக நினைக்கக்கூடாது என்பதற்காகத்தான் தனித்தனியாக பேசாமல் குளோபில் டெண்டர் விட்டோம் அந்த குளோபில் டெண்டரிலே கலந்துக் கொண்டவர்களை மட்டும நாம் ஒப்பிட்டு. எந்தெந்த விலைக்கு கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்த கப்பலை பயன்படுத்தினால் எந்தெந்த விலையிலே கொண்டு வந்து சேர்க்க முடியும் என்ற கணக்கை கொடுத்தோம். அதிலே அவர்கள் எந்தவித குற்றச்சாட்டையும் நம்மீது சுமத்தவில்லை. அதிலே குற்றம் சொல்லியிருந்தால் அல்லவா அதில் நாங்கள் செய்தது சரிதான என்று அவர்களை சமாதானம் செய்ய முடியும் அவர்கள் சொல்லியது எல்லாம், இதிலே கலந்து கொண்ட 4 கப்பல்களைத் தவிர, வெளியிலே உள்ள கப்பல் தளங்களிலே—இந்த டெண்டரிலே கலந்து கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இன்னும் குறைந்த விலையிலே கொடுப்பதற்கு தயாராக இருப்பார்கள் இன்றைய தினம் சூழ்நிலை அப்படியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள், ஆக கேட்காமலேயே சமாதானம் செய்ய வாய்ப்பில்லை. இந்த 4 கப்பல்களுக்குள்ளே விலை அதிகம் அல்லது குறைவு என்று கருத்து வேறுபாடு வந்திருக்குமேயானால், நாங்கள் எங்களுடைய நிலைமைகளை விளக்கியிருப்போம்—அவர்களை சமாதானப்படுத்தியிருக்க முடியும் ஆனால் அவர்கள் இதில வராத ஒரு கப்பலை பற்றி சொல்கின்றபோது நாங்கள் எப்படி சமாதானப்படுத்த முடியும்? எனவே, அவர்களே சொல்லி



[1982 மார்ச் 30] [திரு. சு. முத்துசாமி

விட்டார்கள் அந்தந்த இடத்திலே சேருங்கள் என்று, அந்த விலைப் பட்டியலைக் கேட்டு, அவர்களிடத்திலே போய் மீண்டும் விவாதித்துயிருக்கிறோம்,

(பிற்பகல் 12-40).

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் சொல் வது எல்லாம் ஜெர்மன் கப்பலைப் பொறுத்தவரையிலே முதலிலே பேசி முடிக்கப்பட்டு அங்கே உள்ள குழுவிற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அதிக விலை என்று சொன்னதற்குப் பிறகு தான் மறுபடியும் நிறுத்தி வையுங்கள் என்று தமிழக அரசின் சார்பாக அவர்களுக்குக் கடிதமோ அல்லது செய்தியோ அனுப்பப்படுகின்றது. வீரேந்திர பாட்டீல் பார்லிமெண்டிலே கேட்டது எல்லாம் ஜெர்மன் கப்பலே சிறந்தது என்று தமிழக அரசு அவைகளையே மெய்ப்பிக்கின்ற அளவிற்கு காட்டுவது உண்மையானால அதையே எங்களை ஏன் கன்வின்ஸ் பண்ணுவதற்கு எங்களிடத்திலே வந்து சொல்லவில்லை என்றுதான் அவர் கேட்டிருக்கிறார். நான் செய்திருக்கக்கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். ஜெர்மன் கப்பல் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அந்த ஜெர்மன் கம்பெனிக் விலை பேசப்படுகின்ற நேரத்திலே அந்த ஜெர்மன் கம்பெனிக்காரர் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டார் என்ற செய்திகள் எல்லாம் உண்மையல்ல என்று யாரும் மறுக்க முடியாது. எனவே தான் நான் மிக ஆழத்திற்கு இந்தக் கருத்தை எடுத்துக் கொண்டுசெல்ல விரும்பாமல் உடனடியாக மறுபடியும் ஒரு குளோபல் டெண்டர் போடாமல் கொரியா, அல்லது ஜப்பான் கப்பல்களுக்கு உடனடியாகத் தாவுவது நல்லதல்ல. அதன் காரணமாக அரசுக்கு ........(குறுக்கீடு)...... மேலும் ஒரு கெட்ட பெயர் வரும்........ வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். கெட்ட பெயரைச் சம்பாதித்துக்கொள்ள

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, நான் மீண்டும் மீண்டும் விளக்கமாகச் சொல்கிறேன். குளோபல் டெண்டரிலே யார் யார் கலந்துகொண்டார்களோ அவர்களுடைய விலைப்பட்டியலை வைத்து அதாவது இந்தக் கப்பலிலே நாம் அங்கே இருந்து நிலக்கரியைக் கொண்டுவருகின்றபோது என்ன வாடகை, என்ன செலவாகும் என்பதை எல்லாம் நாம் கணக்குப் பார்த்து அந்த அடிப்படையிலே நாம் எஸ். டீ. எப். சி. யினிடத்திலே கொண்டுபோய் கொடுக்கின்றபோது அவர்கள் அதன் மீது குற்றம் சொல்லவில்லை. இந்த நான்கு கப்பல்களை மட்டும் பார்த்தால் ஜெர்மன் கப்பல்களைப் பற்றி நாம் போட்டிருக்கின்ற கணக்கை அவர்கள் குறை சொல்லவில்லை. ஆனால் அவர்கள் சொல்லியது எல்லாம் இங்கே கலந்துகொண்டது நான்கு கப்பல் தளங்கள்தான். இங்கே கலந்து கொள்ளாத கப்பல் தளங்கள் இருக்கின்றன, அங்கே குறைவான விலையிலே கிடைக்கும் இருக்கும்போது ஏன் விலை நீங்கள் கொடுத்து ஆகவே அப்படி இருக்கும்போது ஏன் மீண்டும் அதிகமான விலைக்கு வாங்க வேண்டும். எனவே, மீண்டும்

[திரு. சு. முத்துசாமி] [1982 மார்ச் 30

நீங்கள் அந்த இடத்திலே கேட்டுப் பாருங்கள், அந்த
விலைப்பட்டியலை வாங்கி அதற்குப் பின்னாலே விவாதிப்போம்.
என்று சொல்லி அவர்கள் கடிதமே கொடுத்திருக்கிறார்கள்
அதனுடைய அடிப்படையிலேதான் நாம் கேட்டிருக்கிறோம்.
நான் ஏற்கெனவே சொன்னேன் இந்த நான்கு கப்பல்களுக்கு
இடையிலே நாம் செய்ததில் தவறு வந்திருக்குமேயானால் அவர்
கள் நம்மைச் சுட்டிக்காட்ட முடியும். இதில் அவர்கள் தறுவ
சொல்லி இருந்தால் அவர்களை நாம் சமாதானப்படுத்துவதற்கு
முயற்சி எடுத்துக் கொள்ள முடியும். இதிலே அவர்கள் குற்றமே
சொல்லவில்லை. இதிலே கலந்து கொள்ளாதவர்கள் குறைந்த
விலையிலே கொடுப்பதற்கு இருப்பதாக எங்களுக்குத் தெரிய
வருகின்றது, எங்களுடைய அனுபவம் அப்படிச் சொல்கிறது,
எனவே அவர்களிடத்திலே நீங்கள் கேளுங்கள் என்று சொல்லி
ஜப்பானிலே உள்ள இரண்டு பெரிய கப்பல் தளத்திலேயும்,
கொரியாவிலே உள்ள ஒரு பெரிய கப்பல் தளத்திலேயும்
கேளுங்கள் என்று கடிதத்தையும் கொடுத்திருக்கிறார்கள்.
அதற்குப் பின்னாலே நாம் இதைக் கேட்டிருக்கிறோம், அப்படி
கேட்டு அதையும் நாமாக முடிவு எடுப்பதில்லை, எஸ்.டி.எஃப்.சி.
யிலே இதைக் கொண்டுபோய் வைக்க இருக்கிறோம். இந்த
குறிப்புக்களை எல்லாம் கொண்டுபோய் வைக்க இருக்கிறோம்.
மீண்டும் அவர்கள் பரிசீலனை செய்து சொல்வார்கள். மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய அந்த அடிப்படை
யிலே பார்த்தால்கூட இன்றையத்தினம் அவர்கள் சொல்லிய
தாகச் சொல்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லவில்லை,
ஜெர்மன் கப்பல் விலை அதிகம், அதை ஏன் வாங்கவில்லை என்று
அவர்கள் குற்றம் நம் மீது சாட்டியதாகச் சொல்கிறார்கள்.
அப்படி ஒரு நம்பிக்கை எஸ். டி. எஃப். சி. யின் மீது அவர்
களுக்கு இருக்குமேயானால் மீண்டும் நாம் இதைக் கொண்டுபோய்
வைத்து தவறு இருந்தால் சுட்டிக் காட்டுவதற்கு அவர்களுக்கு
வாய்ப்பு இருக்கின்றது.

THIRU K S. G. HAJA SHAREEF:- Mr. Speaker Sir, T.S.C. is not concerned about the econocmy of -he transport. it is none of their busIness to say that the transport cost will behigh They are pricc only concerned with the of each steamer. The price if each steamer is about Rs. ten croses more than that prevailing for the steamer of the ame description. Let the Minister understan that they are not corcerned with the economy of the transport. strngly apprehend tha the government is being misled o taking up this venture because there are so many steamer companies being closed day in and day out on account of the fall in the cargo and increase in the runnng cost..



1982 மார்ச் 30] (திரு. சு. முத்துசாமி)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிற வாடகை ஒரு டன்னுக்கு 180 ரூபாய். கப்பலின் விலையை மட்டும் இதிலே நாம் பார்த்து விட முடியாது. பொதுப் பணிகளுக்கோ அல்லது எந்த துறைக்கோ அல்லது எந்த வியாபாரத்திற்கோ என்று இருக்கின்ற கப்பலுக்கு மட்டும்தான் நாம் விலையை பார்க்க முடியுமே தவிர ஒரு குறிப்பிட்ட இடத்திலே இருந்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு வந்தாக வேண்டும். ஒரு குறிப்பிட்ட தன்மையிலே அதைப் பயன்படுத்தியாகவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது ஒரு ஐந்தாண்டு பத்தாண்டு காலத்திற்குக் கணக்குப் போட்டு அதைக் கொண்டுவந்து சேர்ப்பதிலே எவ்வளவு லாபகரமாக இருக்கும் என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமே தவிர கப்பலின் விலையை மட்டும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, க்ளோபல் டெண்டர் மூலமாக முதலிலே ஆரம்பித்து அதிலே நான்கு கப்பல் களைப் பொறுக்கி எடுத்து ஜெர்மன் கப்பல் உயர்ந்தது என்று கூறிவிட்டு மறுபடியும் மத்தியிலே உள்ள குழு எடுத்துரைத்த பிறகு மறுபடியும் க்ளோபல் டெண்டருக்குப் போகாமல் நெகோஷி யேஷன் என்ற முறையிலே கொரியா அல்லது ஜப்பான் கப்பல் களோடு நெகோஷியேஷன் செய்வது நல்லதல்ல என்ற அந்தக் கருத்தைத்தான் எடுத்துச் சொல்கிறேன். அதை நாங்க மறுக்கிறோம் என்ற கருத்தைத்தான் எடுத்துச் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் க்ளோபல் டெண்டர் முதலிலே கேட்டோம்.

நான் ஏற்கெனவே சொன்னேன். 26 நாடுகளிலுள்ள 13 கப்பல்தளங்களுக்கு நாங்களாக கடிதம் எழுதியிருக்கிறோம் அவைகள் எல்லாம் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காக குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் அவர்களுக்கு நேரடியாக கடிதம் எழுதியிருக்கிறோம்.

அதில் அக்கறை காட்டியிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள் வார்கள் என்று கருதுகிறேன். கடிதம் எழுதியும்கூட நமக்கு திருப்பிக் கடிதம் எழுதியவர்கள் 40 பேர்கள்தான். கலந்து கொள்ள முடியும் அல்லது முடியாது என்று சொன்னவர்கள் 40 பேர்கள்தான். அதில் நான்கு பேர்கள் மட்டும்தான் நமக்கு விலைப் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்தவர்களில் நான்கு பேர்கள் என்பது தவறு. கொடுத்தவர்களே நான்கு பேர்கள்தான். அந்த நான்கு பேர்களைப் பற்றியும் குறிப்பு எடுத்து எஸ்.டி.எப்.சி.-க்கு அனுப்பிவிட்டோம். மீண்டும் க்ளோபல் டெண்டர்—நாங்கள் வேண்டாமென்று அதை கால்பார் செய்வதற்கு கருத்துவேறுபாடு இல்லை. எஸ்.டி.எப்.சி. சொல்லி இருக்கிற கருத்து, எங்களுக்குக் கொடுத்திருக்கிற கடிதமே நீங்கள் இதுபோன்று ஜப்பானில் உள்ள இரண்டு கப்பல் தளங் களையும் கொரியாவில் உள்ள ஒரு கப்பல் தளத்தையும் ஏன் கேட்கக் கூடாது, கேளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் க்ளேபால் டெண்டர் வைக்கிறபோது அவர்கள் கலந்து கொள்வார்களா என்ற ஐயத்தில் இப்படி கேளுங்கள் என்று சொல்லியிருக்கலாம். நாங்களாக முடிவு செய்துவிடவில்லை. மீண்டும் அவர்களிடம் (எஸ்.டி.எப்.சி.) எடுத்துவைக்கிறோம். தவறு இருந்தால் சுட்டிக் காட்ட முடியும். மைய அரசின் அனுமதி இல்லாமல் நாங்கள் வாங்கமுடியாது.

டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசின் அனுமதியில்லாமல் வாங்கமுடியாது என்ற கருத்து முழுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஆனால் நான் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, மீண்டும் க்ளோபல் டெண்டரை நீங்கள் விரும்பு கிறீர்களா அல்லது நெகோஷியேஷன் முறையில் கொரியா மற்றும் ஜப்பானோடு நெகோஷியேஷன் மெதேடில் கப்பல் வாங்க விரும்பு கிறீர்களா என்பதுதான்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நெகோஷியேஷன் என்பதே மாறிப்போய்விட்டது. இப்போது நெகோஷியேஷன் இல்லை. கால்பார் செய்யப்பட்டது வேர்ல்டுவைட் டெண்டர். அந்த அறிக்கையை எஸ்.டி.எப்.சி.யிடம் எடுத்து வைத்துவிட்டோம். இப்போது அவர்கள் நம்மிடம் சொல்லியிருப்பது இந்த மூன்று கப்பல் தளங்களிடம் கேளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கேட்டு வரக்கூடிய விலைப்பட்டியலை அவர்கள் முன் வைத்து விடுகிறோம். அவர்கள் முடிவு எடுக்கட்டும்.



டாக்டர் மு. கருணாநிதி : மறுபடியும் அவர்கள் ஒரு விலைப் பட்டியல் தரவேண்டும் என்று குறிப்பிட்டு ஜப்பான், கொரியா நிறுவனங்களிடம் கேட்பது— அதை எஸ்.டி.எப்.ஸி. சொன்னாலும் முறையாக எனக்குத் தெரியவில்லை. நான் கூறுவதெல்லாம், இந்த க்ளோபல் டெண்டர் போடப்பட்டு அந்த க்ளோபல் டெண்ட ரில் ஒரு முடிவு எடுக்கப்படாத சூழ்நிலையில் ஒரு மாறுதல் வேண்டும், வேறு கப்பல்கள்தான் வாங்கவேண்டும் என்ற முடிவிற்கு அரசு வந்துவிடுமானால் மறுபடியும் ஒரு க்ளோபல் டெண்டர் போட்டு அதிலே வருகிறவர்களை வைத்துக் கொண்டு மறுபடியும் இந்த பேரத்தை முடிப்பது நல்லது என்பதைத் தவிர வேறு அல்ல என்பதை மீண்டும் என் முடிவாக கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மைய அரசு அதை ஏற்றுக் கொண்டு நீங்கள் மீண்டும் க்ளோபல் டெண்டர் கால்பார் செய்யுங் கள் என்று சொன்னால் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் இந்த மூன்று இடங்களில் கேட்டு கொடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைக் கேட்டு அவர்கள் அனுமதியைக் கேட்க இருக்கிறோம். அந்த வேலை முடிந்துவிட்டது.

டாக்டர் மு. கருணாநிதி : க்ளோபல் டெண்டர்தான் வேண்டு மென்று அரசாங்கத்தின் சார்பாக நீங்கள் கடிதம் எழுதவேண்டு மென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இத்துடன் இதை விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்று வெளியாகியிருக்கிறது. அதனுடைய பூர்வீகத்தை மாத்திரம் சொல்லிவிட்டு அந்தத் தீர்ப்பை நான் ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். சேலத் தில் கொண்டப்பநாய்க்கன்பட்டி கிராமத்தில் முனுசாமி செட்டி என்கிற ஒருவர் 6—2—1956 முதல் 5—2—1976 வரை இருபது ஆண்டுகளுக்கு மைனிங், சுரங்கக் குத்தகை எடுத்திருந்தார்கள். அது 5—2—1976யோடு அந்தக் குத்தகை முடிந்துவிடுகிற காரணத் தால் ரென்யூவல், குத்தகை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று அவர்கள் அரசுக்கு மனு செய்தார்கள். ஆனால் அந்த மனுவின்படி அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை. புதுப் பிக்கப்படாத காரணத்தால் காத்திருந்த முனுசாமி செட்டி 4—11—1976-ல் இட்டத்தட்ட ஒரு ஆண்டுக்குப் பிறகு மத்திய அரசினிடம் அதுகுறித்து முறையிட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டு காலம் இந்த மைனிங் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதை ரென்யூ செய்துதர வேண்டுமென்று கேட்கிறார்கள். மாநில அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை, எனவே மைய அரசு தலையிடவேண்டுமென்று மைய அரசுக்கு முறையீடு செய்கிறார். மத்திய அரசு மாநில அரசுக்கு ஒரு டைரக்ஷன் ஒரு தாக்கீது அனுப்புகிறது. 100 நாட்களுக்குள் இந்தப்

பிரச்னையை நீங்கள் தீர்த்து வைத்து ஆணை இடுங்கள் என்று மத்திய அரசு தாக்கீது அனுப்புகிறது. மாநில அரசு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் மறுத்துவிடுகிறது. முனுசாமி செட்டி மீண்டும் மத்திய அரசை நாடுகிறார். 12—8—1980-ல் மத்திய அரசு மாநில அரசின் ஆணையை ரத்து செய்துவிட்டு முனுசாமி செட்டிக்கு அந்தக் குத்தகையை தரவேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுக்கு தாக்கீது அனுப்புகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த வழக்கைப் பொறுத்தவரைக்கும் சிங்கில் ஜட்ஜ் தீர்ப்பை எதிர்த்து பெஞ்சுக்கு அப்பீல் செய்திருக்கிற · காரணத்தினால் Tnis would become a subject matter of sub-judice.

(பிற்பகல் 12-50)

இந்த வழக்கில் மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. சிங்கில் ஜட்ஜு கொடுத்த தீர்ப்பின்மேல், மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால், இந்த அவையிலே அதைப்பற்றிப் பேசக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அட்மிட்' ஆகிவிட்டதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல் முறையீடு மூன்று தினங்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டு விட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர் களுக்கு நான் சில விவரங்களைச் சொன்னால், அதுவே நீங்கள் பேசுவதற்கு முன்னால், கொள்கை ரீதியாக முடிவெடுத்துக் கொண்டு பேசுவதற்கு அது உதவியாக இருக்கும். அரசினுடைய நிலையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நான் சொன்னபிறகு நீங்கள் சொல்லலாம். 12—2—1982 அன்று மத்திய அரசு மாநில அரசின் ஆணையை ரத்து செய்து, முனுசாமிசெட்டிக்கு கொடுக்கவேண்டும் என்று தாக்கீது அனுப்புகிறது. அதை மாநில அரசு கிடப்பிலே போடுகிறது. முனுசாமி செட்டி சுப்ரீம் கோர்டுக்குப் போகிறார். சுப்ரீம் கோர்ட் அவரைப் பார்த்து, நீங்கள் இங்கு வரத்தேவை இல்லை, ஹை கோர்ட்டுக்குப்போங்கள் என்று ஹைகோர்ட் டுக்குத் திருப்பி அனுப்புகிறார்கள். ஹைகோர்ட்டு 26—11—1981 இல் ஒரு தீர்ப்பு வழங்குகிறது. முனுசாமி செட்டிக்கு குத்தகை காலத்தை நீட்டித்து, இரண்டு மாத காலத்திற்குள் மாநில அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று 26-11-1981இல் ஹைகோர்ட்டு



தீர்ப்பளிக்கிறது. இரண்டு மாத காலத்திற்குள் குத்தகையை நீட்டித்து உத்தரவிடுங்கள் என்று மாநில அரசுக்குஹைகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இரண்டு மாத காலமாகியும், மாநில அரசு ஆணையைப் பிறப்பிக்கவில்லை. அப்படி பிறப்பிக்காத காரணத்தினால், முனுசாமி செட்டி 'கன்டெம்ட் ஆப் கோர்ட்' மனுவை தாக்கல்செய்கிறார், ஹைக்கோர்ட்டில். அரசு அந்த மனுவை அவர் தாக்கல் செய்த பிறகு, வாதாடும்போது, நாங்கள் ஏற்கனவே உத்தரவுபோட்டுவிட்டோம் என்று அரசின் சார்பாக வாதாடப்படுகிறது. ஆனால் என்ன உத்தரவு போடப் பட்டது? எப்போது போடப்பட்டது? ஹைகோர்ட் சொன்ன அந்த இரண்டு மாதங்களுக்குள் போடவில்லை. 25—2—82 அதாவது கோர்ட் சொன்னதற்கு மாறாக, இரண்டு மாதங்களுக்கு மாறாக, மூன்றாவது மாதத்தில், அதுவும் ஒரு வருஷத்திற்கு மாத்திரம் நீடிப்பு கொடுத்து போடப்படுகிறது. உடனடியாக அந்த முனுசாமி செட்டி, கன்டெம்ட் ஆப் கோர்ட்' பெட்டிஷனைப்போட்டவுடன், அதைப்பற்றி விசாரித்து நீதிபதி அவர்கள் என்ன தீர்ப்பை வழங்கியிருக்கிறார்? நீதிபதி இராமானுஜம் தன்னுடைய தீர்ப்பில் விளக்கமாகச் சொல்லுகிறார் —
The Petitioner Who is a citizen of this country has been driven from Pillar to Post by the tenacious attitude taken by the Respondent.

ரெஸ்பான்டென்ட் என்றால் யார்? இந்த அரசு; ஸ்டேட் கவர்ன்மென்ட் தான். தொழில் துறைச் செயலாளர் அல்ல. இந்த அரசின் சார்பில் அங்கே கோர்ட்டுக்குச் செல்கிறார். ரெஸ்-பான்டென்ட் என்று நீதிபதி சொன்ன இந்தத் தீர்ப்பு, ஸ்டேட் கவர்ன்மென்ட்தான் என்பதைக் குறிப்பிடுகிறது. என்ன சொல்லுகிறார் —The Petitioner who is a citizen of this country has been driven from Pillar to Post by the tenacious attitude taken by the Respondent.

மூலைக்கு மூலை அலைக்கழிக்கப்பட்டார். எப்படிப்பட்ட முரட்டுத்தனமான பிடிவாதத்தினால்-இந்த அரசாங்கத்தினுடைய முரட்டுத்தனமான பிடிவாதத்தால் அந்த பெட்டிஷனர் முனுசாமி செட்டி—மூலைக்கு மூலை அலைக்கழிக்கப்பட்டிருக் கிறார். Has not only disobeyed the statute.
சட்டத்தை இந்த அரசு மீறியது மாத்திரமல்ல.

But also disobeyed the directions of the Central Government revisional authority prescribed by the same Statute.

சட்டத்தை மீறியது மாத்திரமல்ல, மத்திய சர்க்காருடைய ரிவிஷனல் அதாரிட்டி பிரஸ்கிரைப் பண்ணிய தாக்கீதுகளையும் அந்த சட்ட விதிமுறைகளைக்கூட இந்த அரசு புறக்கணித்து விட்டது. In addition, the Respondent, the State Government has disobeyed the orders of the Court.

கோர்ட்டினுடைய உத்திரவையும் இந்த அரசு மீறியிருக்கிறது. இன்னும் சொல்கிறார் நீதிபதி, The attitude of the Respondent seemed to be that whatever happened, the Petitioner should not be granted the lease sought by him.
இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அரசாங்கத்தினுடைய போக்கு எப்படி இருந்தது என்றால், என்ன நடந்தாலும், சர்க்கார் அவருக்கு அந்த உரிமையைத் தருவதில்லை என்ற அளவிலேயே இந்த அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. The attitude of the Respondent is thus dictatorial rather than democratie இந்த அரசாங்கத்தினுடைய தன்மை ஜனநாயகத்திற்கு மாறான சர்வாதிகாரத்தனம் கொண்டதாக அமைந்திருக்கிறது. The conduct of the Respondent has thrown to the winds, the rule of law.
சட்டத்தினுடைய ஆட்சி இந்த அரசாங்கத்தால் காற்றிலே பறக்க விடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நீதிபதி சொல்கிறார். அந்தப் போக்கு எப்படிப்பட்டது என்றால் நீதிபதி சொல்கிறார், It could only be characterised as destruction of one of the basic principles in the administration of justice. அது மாத்திரமல்ல,

Therefore, the Court is inclined to take a very serious view of the action of the Respondent
நீதிபதி ஒரு முறை தீர்ப்பு அளித்த பிறகும் அரசு நடந்துகொண்டது பற்றி நீதிபதியே கண்டித்துக் கூறுகிற நேரத்திலே

The conduct of the Respondent is clearly wilful and not merelt casual, accidental or unintentional but contempt by a Governmeny is indeed heinous in that it sets, a very bad example to the common people who looked upon the Courts with awe and reverence.
அதாவது ஒரு அரசாங்கமே ஒரு கோர்டினுடைய உத்திரவு எந்த அளவுக்கு புறக்கணித்து அலட்சியப்படுத்தியது.
contempt of court
வருகிற அளவுக்கு நடந்துகொள்வார்களானால் நாட்டிலே இருக்கின்ற சாதாரண மனிதன் நீதிமன்றத்தைப் பார்த்து அச்சுறவும் அதே நேரத்திலே புனிதமான இடம் என்ற தன்மையிலிருந்து எந்த அளவுக்கு விலகிப் போய்விடுவேன் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

The conduct of the Respondent has clearly undermined the dignity and the authority of the Court and the order passed by the Respondent granting renewal of the lease for a period of one year lowers down the Court in the estimation of the general public. The order shows the scant respect for the Court of Justice.
20 ஆண்டுக்கால குத்தகை ஒப்பந்தத்திற்குப் பதிலாக 2 மாத காலத்திற்குய் உத்திரவு போடாமல் கோர்ட்டை மீறி 3 மாத காலம் கழித்து உத்திரவு போட்டு அதுவும் ஒரு வருடத்திற்கு என்று போட்டிருப்பது எதைக் காட்டுகிறது என்றால்
The order shows scant respect for the Court of Justice.



இந்தக் கோர்ட்டிற்கு கடுகினும் குறைந்த அற்பத்தனமான மரியாதையை வைத்திருப்பதைத் தான் காட்டுகிறது என்று குறிப்பிடுகிறார்.

If such conduct is overlooked it will resukt in the entire public losing confidence in the Court and its utility.

அரசின் இந்த அலட்சியப் போக்கைப் பார்த்தால் நாட்டிலே பொதுவான மக்கள் அத்தனை பேரும் நீதிமன்றத்திலே உள்ள நம்பிக்கையை இழந்துவிடுவார்கள்.

When the contempt is of such a grave character it but proper that in the interests of justice the contemner shoud be punished in spite of a formal apology without proper compliance.

எனவே இந்த அரசாங்கத்தை மன்னிப்புக் கோரக்கூட விட்டுவிடக் கூடாது, தண்டித்தே தீரவேண்டும் என்று சொல்லி விட்டு

In this view of the matter the Respondent is held guilty of contempt of disobedience of the order of Court dated 26th November 1981 and a consequential fine of Rs. 2000 is imposed on the Respondent. The contempt petition is allowed accordingly with a cost of Rs. 200.

இரண்டாயிரம் ரூபாய் அபராதம் இந்த அரசாங்கத்தின்மீது போடப்பட்டிருக்கிறது. ஒரு செயலாளர் மீதல்ல, செயலாளரை நீதிமன்றத்திலே நிறுத்தி ரெஸ்பாண்டன்ட், ஸ்டேட் கவர்ன்மென்ட், அரசாங்கத்தின்மீது 2 ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டவேண்டிய நிலைக்கு அரசு ஆளாக்கப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் அபராதம் விதிக்கிற நேரத்திலே இந்த அரசைப்பற்றி நீதிபதி கூறியிருக்கின்ற வாசகங்கள் எவ்வளவு வேதனையானவை எந்த அளவுக்கு இந்த அரசு கண்டிக்கத்தக்க அரசு என்பதையெல்லாம் நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. எனவே தான் நான் சொல்கிறேன். ஏன் இவ்வளவு தடங்கல்கள் ? இந்தத் தடங்கல்களுக்கு எல்லாம் இரண்டு அமைச்சர்கள் காரணம். நான் சொல்கிறேன். ஒரு அமைச்சர் என்ன கேட்டார், என்ன தரவில்லை. என்ன தராத காரணத்தினால் கோர்ட்டினுடைய ஆர்டர்களையெல்லாம்கூட மீறி ஒரு அமைச்சர், லோக்கல் அமைச்சர் பாடுபட்டார் என்பதும் அதற்கு உதவியாக தொழிலமைச்சர் இருந்தார் என்பதும் என்னுடைய குற்றச்சாட்டு. எனவே நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அடிப்படையாக வைத்து இரண்டு அமைச்சர்களும் ராஜிநாமா செய்வதுதான் முறை என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-00).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போது சுரங்கக் குத்தகை என்று சொன்னார்கள். என்ன சுரங்கக் குத்தகைக்கான பொருள், என்ன கனிமம் என்பதை அவர்கள் பேசுகிற போது சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பின்னாலே இரண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு மேக்னசைட் கார்ப்பரேஷன் என்றும், அதே போல தமிழ்நாடு மினரல் கார்ப்பரேஷன் என்றும் இரண்டு நிறுவனங்கள் தனியாக தோற்றுவிக்கப் பட்டன. இந்த இரண்டு கார்ப்பரேஷன்களும் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம், பிளாக் கிரானைட் என்று சொல்லப் படுகிற அந்த கறுப்புக்கல் பல கோடிக்கணக்கிலே தனியார்களால் வெட்டியெடுக்கப்பட்டு வந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இப்படி தனியார்கள் கோடிக் கணக்கிலே கொள்ளை லாபம் பெற்றுக் கொண்டிருந்ததை தடுத்து டேமின் என்ற நிறுவனத்தின் மூலமாக அரசு அந்தப் பகுதிகளை சொந்தமாக்கி அரசு நிறுவனமே அந்த பிளாக் கிரானைட்டை வெட்டி எடுத்து அதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சுமார் ஒரு கோடிக்கு மேலே அன்னியச் செலாவணியும், பல லட்ச ரூபாய் லாபம் பெறத்தக்க விதத்தில் அந்த நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, அப்போதும் தனியார்களுக்கு கறுப்புக்கல் தரப் படவில்லை என்று சுட்டிக் காட்டி வழக்கு மன்றத்திற்கு சென்றார்கள். அப்போதும் சென்னை உயர்நீதி மன்றம் தனியார்களுக்கு கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. அரசாங்கம் பொது மக்களுடைய நன்மையைக் கருதி கறுப்புக்கல், நேஷனல் வெல்த் என்கிற அளவிலே அந்த வருமானம் அரசுக்கு வரவேண்டுமென்ற அந்த அடிப்படையிலே, அது மீண்டும் உச்ச நீதி மன்றத்திலே, சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்யப்பட்டு, அரசு எடுத்த நடவடிக்கை சரியானது தான் என்று அரசுக்கு சாதமாகக் முடிவு செய்தது. இது ஒன்று.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கத்திலே நான் தலையிட வேண்டுமென்பது என்னுடைய நோக்கம் அல்ல. எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினையை ஒட்டி அமைச்சர் அவர்கள் விளக்கம் தரலாமே தவிர, எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்னை வேறு, அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற பிரச்னை வேறு. அவர்கள் சொல்லிக் கொண்டு போகிற போது நீதிமன்றத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலே மாறுபட்ட கருத்துக்கள் வருகிற போது, நீதிமன்றம் வெர்சஸ் சட்டமன்றம் என்ற கருத்து ஏற்பட இடமாகும். அவர்கள் பேசியதை தாங்கள் கவனித்தால் தெரியும். அதற்கு மாறாக தங்களுடைய நடவடிக்கையை பொறுத்து, அரசாங்க நடவடிக்கையை பொறுத்து கருத்து தெரிவிப்பாரானால் அது பொருத்தமாக இருக்கும்.



மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நிதானமுடையவர்கள் என்ன காரணத்திற்காக அது மறுக்கப்பட்டது என்ற பேச் சற்று பொறுமையாக இருந்தால் புரியும். இப்படி டேமின் நிறுவனம், மேக்னசைட் நிறுவனம் உருவாக்கப்பட்டன. உருவாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கரிலே பரவி கிடக்கிற அந்த மேக்னசைட்டை அந்த மேக்னசைட் நிறுவனம் வெட்டியெடுத்து அது வியாபாரத்தையும் செய்கிறது. அதனுடைய லாபமே இந்த இரண்டு நிறுவனங்களிலும் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே டர்ன்-ஓவரும், ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாய்க்கு மேலே லாபமும் ஈட்டி அரசுக்கு இந்த வருமானம் இந்த கார்ப்பரேஷன் மூலமாக வந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, அப்போது இங்கே சொன்னார்களே இந்த முனிசாமி செட்டி, இன்னும் அதே போல பல பேருக்கு அரசாங்கத்தினுடைய, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை ஏதோ அவர் களுக்கு சொந்தமான நிலங்களைப் போல 20 வருடம், 25 வருடம் 30 வருடம் என்று கணக்கில்லாமல் கொடுத்திருந்தார்கள். (குறுக் கீடுகள்) நான் முடித்து விடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முனிசாமி செட்டிக்கு கொடுத்தது 1956-லே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அல்ல. இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாக்னசைட்டை அரசுடைமை ஆக்கியிருக்கிறோம் என்று. மேக்னசைட் எப்போது அரசுடைமை ஆக்கப்பட்டு சட்டம் வந்தது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சேலம் மாக்னசைட் கார்ப்பரேஷன் (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முழுமையான பதிலைச் சொல்ல நீங்கள் எனக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அமைச்சர்கள் மேலே குற்றம் சொல்லி, இராஜினாமா செய்யுங்கள், அந்த சொந்த மாவட்டத்து அமைச்சர் ஏதோ கேட்டார், ஏதோ தொழில் அமைச்சர் உதவியாக இருந்தார், நீங்கள் எல்லாம் இராஜினாமா செய்ய வேண்டுமென்று அவர்கள் பேசுகிற பொழுது கூட நாங்கள் பொறுமையாகத்தான் இருந்திருக்கிறோம். உங்கள் மீது, ஏதா வது, நடந்ததைச் சொன்னால் கூட பொறுத்துக் கொள்ள முடிய வில்லை, குறுக்கிடுகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து நடந்தவைகளைக் கேளுங்கள்............

டாக்டர் மு. கருணாநிதி : முனுசாமி செட்டிக்குக் கொடுத் தது 1956-லே........

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே கொடுத்ததை நான் (குறுக்கீடு) முனுசாமி செட்டி சம்பந்தப் பட்டதைத்தான் நானும் சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : முனுசாமி செட்டி விவகாரம், கோர்ட் தீர்ப்பு ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'கன்ஃபைன்' டு முனுசாமி செட்டி.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக உங்கங்களுக்குச் சங்கடத்தை நான் உண் டாக்க மாட்டேன். முனுசாமி செட்டியைப் பற்றிச் சொன்னார் கள். இந்த முனுசாமி செட்டி மாதிரி பல பேர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, மாக்னசைட் எல்லாம் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று நீங்கள் கொடுத் திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி யார், யாருக்குக் கொடுத்தது என்றால், வீரமணி ........

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் எழுப்பிய பிரச்சினை முனுசாமி செட்டிக்கு இந்த அரசு ஆதரவாக இருக்க வேண்டும், ஏன் ஆதரவாக இல்லையென்ற அடிப்படை யில் நான் பேசவில்லை. தனிப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் நான் பேச வில்லை. நான் கேட்பதெல்லாம், நான் கேட்டுக் கொள்வதெல் லாம், கோர்ட் இரண்டு முறை தீர்ப்பளித்ததற்குப் பிறகும், அதை மீறியிருக்கிறது இந்த அரசு. அதைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தயவு செய்து நான் பேசி முடிக்கிற வரையில் பொறுமையாக இருந்தால் அதிலேயே பதில் வரும். நான் பேசுவதை முழுவதும் கேட்டால் பதில் வரும். எப்படி கொடுக்கப்பட்டது, யாருக்குக் கொடுக்கப் பட்டது என்று கேட்டார்கள். பிளாக்லைட் போன்றவைகள் எல்லாம் வீரமணி என்ற நபர் யார் என்பது திராவிட முன் னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்களுக்குத் தெரிந்திருக்கும்....

திரு. க. அன்பழகன் : இது முறை தப்பான பதில். 'கன் டம்ட் ஆஃப் கோர்ட்' பற்றி மட்டும் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமி திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் கொடுத்த திலே தவறு இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) I have got the freedom to tell the fact (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், நான் பதில்சொல்கிறேன்.



திரு. க. அன்பழகன் : நான் கேட்க மாட்டேன். இங்கே தாங்கள் தயவு செய்து புரிந்து கொண்டு பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் குற்றச் சாட்டு சொல்லும்போது நாங்கள் பொறுத்துக் கொண் டிருந்தோம். நாங்கள் பதில் சொல்லும்போது நீங்கள் அமைதி யாக இருக்க வேண்டும்.

திரு. க. அன்பழகன் : பிரச்னை, கன்டம்ட் ஆஃப் கோர்ட் என்று ஒரு விவகாரம் பேசப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே யாருக்குக் கொடுத்தார்கள் என்பதும், இந்த ஆட்சியிலே யார், யாருக்குக் கொடுத்தார்கள் என்ற பிரச்னையை ஒட்டியும் வருகிற பிரச்னை அல்ல. சட்டம் ஒழுங்காகப் பின் பற்றப்படவில்லையென்பதும், நீதிமன்றத்தில் தாங்கள் செய்தது நியாயம் என்று நிலைநாட்டப்படவில்லையென்பதும், நீதிமன்றத் தீர்ப்பைப் பின்பற்றவில்லையென்பதும் இங்கே எடுத்துச் சொல் லப்பட்டது. அதற்குரிய பதிலைச் சொன்னால் என்ன பதிலாக இருந்தாலும் நாங்கள் கேட்டுக் கொள்ளத் தயார். வேறுவித மான பதிலைச் சொல்லிக் கொண்டிருப்போம், கேட்டுக் கொண் டிருக்க வேண்டுமென்றால், அது சற்று கடினமான காரியம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநியாயமாகக் குற்றச்சாட்டு களை நீங்கள் சொல்கிற பொழுது கேட்டுக் கொண்டிருப்பதும் எங்களுக்குக் கடினமாகத்தானிருக்கும். குற்றச்சாட்டுகளை நீங்கள் சொல்கிற பொழுது நாங்கள் அமைதியாகத்தானிருந் தோம். (கூச்சல்-குழப்பம்).

(பிற்பகல் 1.10)

திரு. க. அன்பழகன்— தலைவரவர்களே, நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட அந்தக் கருத்தை அப்படியே இங்கே படித்துச் சொல்லப்பட்டதே தவிர, அது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை இந்த அரசாங்கம் மதித்து நடக்கவில்லை என்பதற் காகச் சொல்லப்பட்ட கருத்தே தவிர வேறுவிதமான குற்றச் சாட்டு அதிலே சொல்லப்படவில்லை. ஒரு அரசாங்கம் இப்படிப்பட்ட தவறு செய்வதற்கு எது காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்பட்டது. அதற்காக ஏற்கனவே இருந்த ஆட்சிக் காலத்தில் யார் யாருக்கு அனுமதி கொடுத்தார்கள் என்ற வகையில் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அதை ஈடாக்கு வதாகக் கருதிக் கொண்டு பேசப்படுமேயானால் இந்தக் குற்றச்சாட்டுக்கு அது பதிலாகாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சட்ட மன்றத்தில் என்னென்ன பேசினார்கள் என்பதை நான் அறையிலேயிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அவ்வளவையும் பொறுமை யோடுதான் மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள், நானும் அங்கே அப்படித்தான் இருந்தேன். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் பேசுகின்ற பதிலில் ஒரு நியாயம் இருக்கிறது,

என்பதை இங்கே எதிர்க்கட்சியிலே இருக்கின்ற துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறும்பொழுது என்னென்ன கேட்டார்களோ, என்னென்ன இரகசியம் இருந்ததோ, என்ன எதிர்பார்த்தார்களோ என்ற வார்த்தைகள் அதிலே இருந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. அந்தப் பேச்சிலே அவர்கள் சொன்னதற்கு அப்படிப்பட்ட நிலைமைகளில் நாங்கள் இல்லை, அதற்காக இந்த நிலைமைகளுக்கு நாங்கள் போகவில்லை என்று சொல்வதற்கு அமைச்சருக்கு நிச்சயமாக இந்த மாமன்றம் உரிமை தரும் என்று நான் நம்புகிறேன். ஆகவே, பொறுமையோடு கேளுங்கள். அது தவறு என்று பேரவைத் தலைவர் நீக்கச் சொன்னால் குறிப்பேட்டிலிருந்து நீக்குவது பற்றிக்கூட எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (குறுக்கீடு) பேராசிரியர் அவர்கள் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்கிறேன்.

திரு க. அன்பழகன் மாண்புமிகு தலைவரவர்களே, 1976-வது ஆண்டிலேயிருந்து இந்த 81—வது ஆண்டு முடிந்து 1982 வது ஆண்டிலே தீர்ப்பு கிடைக்கிறவரையில் இடையிலே இரண்டு முறை நீதிமன்றம் போய் இந்தத் தீர்ப்பு கிடைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட கொள்கைப்படி இன்னின்ன கொள்கையின்படி அதை நாங்கள் நீதிமன்றத்திலே விளக்கினோம், அந்தக் கொள்கையின்படி நாங்கள் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை சரி என்று வாதாடுவதாக இருந்தால் நான் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளத் தயார். 76-வது ஆண்டிலேயிருந்து ஏற்பட்ட இந்தப் பிரச்சினைக்கு ஏற்கெனவேயிருந்த அரசினுடைய கொள்கையின்படி அப்பொழுது நடந்திருக்கும் காரியங்களை இன்றைக்குக் குற்றமாக— இந்தக் கொள்கையின்படி அதைக் குற்றமாகக் காட்டுவதும், அந்தக் குற்றத்தின் பேரில் இந்தக் குற்றம் நியாயம் என்பதும் பொருத்தமாக வராது. 76-லிருந்து 82 வரையில் நீடித்த தாமதத்திற்கு, திரும்பத் திரும்ப தாமதம் ஏற்படுவதற்கு எப்படிப்பட்ட கொள்கை காரணத்தை அரசு சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ள நான் தயார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் என்று குத்தகைக்குக் கொடுத்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி ஒரு ஆண்டு, 3 ஆண்டுகள் என்று உத்தரவிட்டவன் நான் என்ற காரணத்தால் அந்தப் பொறுப்பிலே பேசுகிறேன். அப்பொழுதுதான் பல அநியாயங்கள் நடந்தன என்பதைத் தெரிந்து கொண்ட காரணத்தினால் தான் அதை மாற்றியமைத்தோம். அப்படி மாற்றியமைத்ததன் விளைவுதான் இந்த வழக்கு என்பதை நான் சொல்கிறேன். அதைத் தொடர்ந்து இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதிமன்றத்திற்கு அவர்கள் போக வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது ? இப்படிப்பட்ட தீர்ப்பு ஏன் வந்தது ? இதற்கு முன்னாலே அரசாங்கம் என்ன முடிவெடுத்தது? எதனால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதற்காகப் பின்னால் இருக்கின்ற அந்த ஹிஸ்டரியைச் சொன்னால் தான் புரியும் என்கின்ற காரணத்தால்தான் சொல்கிறேன். அவர்கள் என்ன குற்றம் சுமத்தினாலும் பதில் சொல்லத் தயாராகத்தான் இருக்கிறோம்.

கறுப்புக் கல்லைப் பொறுத்தவரையில் பல இலட்சம் ரூபாய் களைத் தனியார்கள் இலாபம் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்கின்ற காரணத்தால் எப்படி டாமின் நிறுவனம் உருவாக்கப் பட்டு, தனியாருக்கு லீஸ் கொடுப்பதில்லை என்று தடுத்து எப்படி அந்த நிறுவனம் அதை மேற்கொண்டிருக்கிறதோ அதைப் போலவே, மாக்னசைட்டைப் பொறுத்தவரைக்கும் பல தொழிலதிபர்கள் தனியாக 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று இப்படி நீண்ட காலத்துற்கு எடுத்துக் கொண்டு, இப்பொழுது சொன்னார்களே யாரோ அமைச்சரைச் சந்தித்தார், என்னைச் சந்தித்தார் என்று, அதற்குப் பின்னாலே சொல்கிறேன்— இப்படித்தான் என்னுடைய யூகப் பிரகாரம் முன்னாலே சந்தித்திருக்க வேண்டும். இப்படிச் சந்தித்து 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று நீண்ட காலத் தவணைக்குப் பெற்றுக் கொண்டிருந்தார்கள் குறுக்கீடு)....

** ** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அமைச்சர் சொன்னதையும் சேர்த்து அனைத்தையும் குறிப்பேட்டிலே இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்படி கருப்புக் கல்லில் தனியார்கள் கொள்ளை லாபம் பெற்றுக் கொண்டு இருந்தார்கள் என்பதைத் தடுப்பதற்காக நிறுத்தப்பட்டதோ அப்படி மாக்னசைட் கார்ப்பரேஷன் தனியாக உருவாக்கப்பட்டது. இப்படி 15 ஆண்டுகள் 20 ஆண்டுகள் என்று குத்தகை முடிய முடிய, அந்த முடிகிற பகுதிகளை தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு அரசின் நிறுவனமாக இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட அந்த நிறுவனம் எடுத்துக் கொண்டு, அங்கே மாக்னசைட் மைன் பண்ணுகிறது; விற்பனைக்கு வைக்கிறது. ஜிப்சம் மாக்னசைட்டை விற்பதற்காகக் கூட தொழிற்சாலையைப் போட்டு அதை விற்பனை செய்வதற்கான முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையிலே தனியார்களுக்கு வழங்கப்பட்ட அந்த ''லீஸ்'' அவருடைய காலம் முடிய முடிய அரசாங்கம் எடுக்க முயற்சித்தது.

இந்த சம்பந்தப்பட்ட முனுசாமி செட்டி— அவருடைய 'லீஸ்' 1975-லே முடிகிறது. முடிந்ததற்குப் பின்னாலே அவர் அரசுக்கு— 20 ஆண்டுக்காலம் அனுபவித்துப் பல இலட்சம் ரூபாய்கள் லாபம் பெற்றவர் அல்லவா— தொடர்ந்து இன்னும் இருபது ஆண்டு காலம் தாருங்கள் என்று விண்ணப்பிக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்னாலே அவர் அரசுக்குக் கட்டவேண்டிய பாக்கிகள் எல்லாம் கட்டாமல் இருந்திருக்கிறார்கள். மாக்னசைட் இந்திய நாடு முழுவதற்கும் சொந்தமான ஒரு ''நேஷனல் வெல்த்'' ஆகும். அதுவும் சேலத்திலே கிடைக்கும் உயர்தரமான இந்த மாக்னசைட்தான், வட நாட்டிலே இருக்கின்ற இரும்பு தொழில் உட்பட அனைத்துக்கும், இங்கே இருந்து அனுப்பப்பட்டிருக்கின்றது வெப்பம் தாங்கிக் கற்களாக தயாரிக்கப்பட்டு, எனவே, அவர் அப்படி கேட்டதற்குப் பின்னாலே முறையாக மைன் செய்யவில்லை, அரசுக்கு முறையாக கட்டவேண்டிய பணத்தை எல்லாம் கட்டவில்லை என்றும், இரண்டாவது அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷன் உண்டாக்கி இருக்கிறது இதை எடுத்துச் செய்வதற்காக, என்ற அந்த அடிப்படையிலேதான் அவருடைய மனு நிராகரிக்கப்படுகிறது. அது புதுப்பிக்கப்படவில்லை. எனவே பாதிக்கப்படுகின்ற அவர் கோர்ட்டுக்குப் போகிறார். கோர்ட்டிலே தீர்ப்பு கொடுக்கிறார்கள். தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னாலே 2 மாதங்கள் என்று சொன்னார்கள். இப்படி ஒரு காலவரை சொல்லி கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். அதற்கு முன்னாலே அவர் மைய அரசுக்கு எழுதுகிறார். நிராகரிக்கப்படுகின்ற அத்தனை பேர்களும் மைய அரசுக்குத்தான் அடுத்து மனு செய்கிறார்கள். மைய அரசு எங்களுடைய கருத்துக்களைக் கேட்டு, திருப்பி அனுப்புகிறார்கள். நாங்கள் அரசுக்குத் தேவை என்றால் அரசுக்குத் தேவை என்று எழுதுகிறோம்.



அது மட்டுமல்ல, இதைப்போல மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடிய அதுவும் லட்சக் கணக்கில் கோடிக்கணக்கிலே வருமானம் வரக்கூடிய இதுபோன்ற மாக்னசைட்டாக இருந்தாலும், பிளாக் ஸ்டோனாக இருந்தாலும் மாநில அரசு கார்ப்பரேஷனுக்குத்தான் முதன் உரிமைகொடுக்கப்பட வேண்டும் என்று மைய அமைச்சரிடத்திலே வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம், சொல்லிக் கொண்டிருக்கிறோம். மைய அரசிடத்திலே வாதாடிக் கொண்டிருக்கிறோம், இனிமேல் அப்படித்தான் வாதாடுவதாக இருக்கிறோம். எனவே இப்படி தனியாருக்கு கொடுப்பதில்லை என்ற அந்த முடிவை ஒட்டி இருந்து கொண்டிருந்தது. கோர்ட்டிலே சொல்லி இருக்கிறார்கள் 3 ஆண்டுக்காலம் தேங்கி இருக்கின்றது என்று. இங்கே சொன்னார்கள், ''பில்லர் டு போஸ்ட்'' என்று. அது சாதாரண ஃபிரேஸ்தான். எல்லோரும் பேசுகிறபோது, எழுதுகின்றபோது பயன்படுத்துகிற பிரேஸ்தான். எனவே இந்த 3 ஆண்டுக் காலம் இந்த மனு நிராகரிக்கப்பட்டது அல்லது அரசாங்கத்தாலே புதுப்பிக்கப்படவில்லை. ஓராண்டுதான் கொடுத்திருக்கிறீர்கள்; 20 ஆண்டுகள் கொடுத்திருக்க வேண்டும் என்று நீதிபதி சொல்லுகிறார். நீதிபதியின் தீர்ப்பை விமர்சிக்கக் கூடாது என்றாலும் கூட, அதிலே உடன்பாடு எங்களுக்கு இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள், 20 ஆண்டுகள் கொடுத்திருக்க வேண்டும் ஓராண்டுதான் கொடுத்தது தவறு என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லுகிறோம், ஓராண்டு கொடுத்தது கூட, நீதிமன்றம் கட்டாயப்படுத்தியதால்தான் கொடுத்தோமே தவிர— நீதிமன்றத்தை அவமதித்தோம்— கன்டெம்ட் ஆப் கோர்ட்— என்ற அந்த நிலை வரக் கூடாது என்ற காரணத்தாலே, அதை மதித்து ஓராண்டு கொடுக்கப்பட்டது. ஆனால் இதைத் தொடர்ந்து எடுக்கப்படுகிற அரசு நடவடிக்கைகள் இப்படி தனியாருக்குக் கொடுக்காமல் அரசாங்கம் எடுத்து, அரசு நிறுவனமே எடுத்து நடத்தவேண்டும் என்றும், மக்களுக்கு நன்மை செய்வதற்கு இந்தப் பணம் தனியார்களுக்கு லட்சக்கணக்கில் போய்ச் சேராமல் அரசாங்க கார்ப்பரேஷனுக்கு வரவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்குப் பின்னாலே சிங்கிள் ஜட்ஜ்மென்ட் கொடுத்து இருக்கிறார்கள். பெஞ்சிற்கு நாங்கள் அப்பீல் பண்ணி இருக்கிறோம். ஆகவே, அந்த நிலை இருக்கிறது. எனவே, எந்த மாவட்ட அமைச்சரையோ பார்த்ததாக எனக்குத் தெரியாது. அந்த முனுசாமி செட்டியார் கருப்பா, சிவப்பா என்பது எனக்குத் தெரியாது. எனக்குச் சந்தேகம், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எங்களைப் பார்த்து, எங்களிடத்திலே ஏதோ கொடுக்காத காரணத்தினாலே என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அவர் எதிர்க்கட்சித் தலைவர் இடத்திலே ஏதோ கொடுத்து பேசச் சொல்லியிருக்கிறார்கள்

என்று கூட நான் சொல்லலாம். இப்படி சொல்லிக்கொண்டே
போனால் அதிலே அர்த்தம் இல்லை. இருந்தாலும் கூட நீதி
மன்றத்திலே தீர்ப்புக்கு இதுதான் காரணம். அரசாங்கத்தினு
டைய முடிவுக்கு இதுதான் காரணம். இதிலே எந்தவிதமாக
அரசாங்கத்தினுடைய தலையீடோ அல்லது, அரசாங்கத்தி
னுடைய குறுக்கீடோ இல்லை. அல்லது கோர்ட்டை அவமானப்
படுத்தவோ அல்லது தனி நபருக்குத் தன்னுடைய இஷ்டப்படி
அவர்களுக்குக் கொடுத்ததோ அல்ல என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித்
தலைவருக்கு முனுசாமி செட்டியார் எதையோ கொடுத்துப்
பேசச் சொன்னார் என்று சொல்கிறார். முனுசாமி செட்டியார்
யார் என்று கூட எனக்குத் தெரியாது. கருப்பா, சிவப்பா
என்றுகூட எனக்குத் தெரியாது. அவர் சொல்லுகிறார். அவர்
எனக்கு ஏதோ கொடுத்துப் பேசச் சொன்னார் என்று, அதை
அவர் நிரூபிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்
தலைவர் அவர்களே, இது யாரும், யாரையும் பேசலாம் என்ற
முறை வந்துவிடக் கூடாது என்று நான் வேதனையோடு இங்கே
சொல்கிறேன். நிரூபிப்பதா இல்லையா என்பது வேறு பிரச்சனை.
இப்படி நானும் சொல்லலாம் என்று அவர் சொன்னாரே,
இங்கே எழுதி இருப்பவர்கள் இன்னொரு முறை அனுப்பு
வது நல்லது. அதனால்தான் இதிலிருந்து போடவேண்டுமா,
வேண்டாமா, நிரூபிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல,
இப்படிப்பட்டவைகளை தயவுசெய்து நாம் உருவாக்காமல் தடுக்க
முடியாதா என்பதைப் பற்றி அனுபவப்பட்டவர்களும், அனுபவப்
படவேண்டியவர்களும், சிந்திப்பது நல்லது என்று நான் கருது
கிறேன். கூடுமான வரையில் அனுபவப்பட்டவர்கள், அனுபவப்
பட வேண்டியவர்களுக்கு வழிமுறைகளை, தங்களுடைய பேச்சி
லும் செயலிலும் எடுத்துக்காட்ட வேண்டுமே தவிர அவர்களை
வேறு நிலைக்கு தள்ளிவிடக் கூடாது என்று நான் பணிவோடு
கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சனைகளை,
சவால் விடுபவைகளை, மேடையிலோ அல்லது வெளியிலோ
வைத்துக்கொண்டு, இங்கே நாட்டிற்கு எது நல்லது என்பதைப்
பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக எல்லோரும்
ஒத்துழைக்க வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்
கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,
தேசிய மயக் கொள்கையை திராவிட முன்னேற்றக்
கழகம் முழுக்க முழுக்க ஆதரிக்கிறது. ஆதரிக்கிற காரணத்
தால், தலைவரும், போக்குவரத்துத் துறை அமைச்சராக
என்னுடைய அமைச்சரவையிலே இருந்த அந்தக்



காலத்தில், இங்கே இருக்கின்ற பலரும் என்னுடைய அமைச்சர
வையிலே இருந்த அந்தக் காலத்தில், பஸ்களை தேசியமயமாக்க
வேண்டுமென்று மாநில ரீதியாக ஒரு கொள்கை வகுக்கப்பட்டது.
இந்த தேசிய மயக் கொள்கையை எதிர்த்தவர்கள் வழக்கு
மன்றத்திற்குச் சென்று, உச்ச நீதிமன்றத்திலே கூட, 7, 8
ஆண்டுக்காலமாக அது துரிதப்படுத்தப் படாமலேயே கிடப்பிலே
போடப்பட்டிருக்கிறது. அது வேறு விவகாரம். ஆகவே,
தேசியமயக் கொள்கையிலே எங்களுக்கு, உடன்பாடு இல்லை
யென்று யாரும் சொல்லமுடியாது. அதேபோல் இந்த சுரங்
கங்கள், அல்லது இந்த கற்கள் வெட்டுவது இவைகளையெல்லாம்
தேசியமயமாக்கவேண்டுமென்பதிலே, திராவிட முன்னேற்றக்
கழகத்தைப் பொறுத்தவரையில், முழுக்க முழுக்க ஆதரிக்க
நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில்
உள்ள ஒரு பிரச்சனை இது. இதுவரையிலே உள்ள பிரச்சை
யில் ஒருவருக்கு மத்திய சர்க்கார் 2 முறைகள்
டைரக்ஷன் கொடுக்கிறது. 2 முறை தாக்கீது கொடுக்கிறது.
மாநில அரசுக்கு, அவருக்கே கொடுங்கள் என்று. அதுவும்
மறுக்கப்படுகிறது மாநில அரசால். சரி, கொள்கையை
காரணம் காட்டி அவர்களைச் சமாதானப்படுத்தினார்களா
என்றால், சமாதானப்படுத்தவில்லை. கோர்ட்டும் தாக்கீது கொடுக்
கிறது. கோர்ட்டினுடைய உத்திரவும் மீறப்படுகிறது. அப்படி
மீறப்பட்ட காரணத்தால் நீதிபதி கடுமையான வார்த்தைகளைப்
பயன்படுத்தி ஒரு தீர்ப்பை வழங்கி அரசுக்கு 2 ஆயிரம் ரூபாய்
ஃபைன் போடுகிறார்கள். பிரதிவாதியாக இருப்பவர்கள்
அரசாங்கம். அதாவது அரசுக்கு 2 ஆயிரம் ரூபாய் ஃபைன்
போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றித்தான் இங்கே விவாதமே
தவிர, வேறுஅல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர்
அவர்களே, இப்படிப் பேசுவது மிகமிக் நியாயமாகத் தெரிகிறது.
வரவேற்கிறேன். நீதிபதிகள் தீர்ப்பு அளிப்பது, அவர்களுடைய
உரிமை. நீதிபதிகளுடைய தீர்ப்பைப் பற்றி விமர்சனம் செய்
வது சரியல்ல என்றாலும்கூட ஒரு நீதிபதி 2 தரப்பிலுள்ள வழக்
கறிஞர்களுடைய விவாதத்தில் இல்லாத ஒரு பிரச்சனையைப்
பற்றி ஒரு நீதிபதி தீர்ப்பளித்திருக்கின்றார் என்பதைப் பற்றி
நாம் எவ்வளவு வேதனைப்பட வேண்டியிருக்கும் என்பதை
எண்ணிப்பார்க்கவேண்டும். அவர்களை நம்பித்தான் மக்கள்
வாழ்கின்றார்கள். எல்லோருமே நீதிமன்றத்திற்கு அப்படித்தான்
போகிறார்கள். 1975-வது ஆண்டுக் காலத்திலேயே குத்தகை
முடிந்து, பிறகு திரும்பவும் வேண்டுமென்று கேட்டு, முடியாது
என்று சொன்ன பிறகு மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று
சொன்னால் ஏன் கொடுத்திருக்கக்கூடாது என்று கேட்கும் எதிர்க்
கட்சித் தலைவரைப்பார்த்து நான் பணிவோடு கேட்கவில்லை;
நான் உரிமையோடு கேட்கிறேன் பேரவைத் தலைவரவர்களே,
உங்கள் வாயிலாக. நான் அறையிலே இருந்தபோது கேட்டேன்;
நன்றாக என் காதில் விழுந்தது. கப்பல் பிரச்சனைப்பற்றி வரும்

போது அவர்கள் சொன்னதை நான் கேட்டேன். நீங்கள் ஏன் குளோபல் டெண்டர் போடக்கூடாது என்று கேட்டார்கள். அப்படியானால் அவர்கள் கொடு என்றால் நாம் கொடுக்க வேண்டுமா? அப்போது மட்டும் மைய அரசு சொன்னால் அதை நாம் கேட்க வேண்டுமா?

டாக்டர் மு. கருணாநிதி: நான் கப்பலுக்கு என்ன சொன்னேனோ, குளோபல் டெண்டர் ஏன் விடக்கூடாது என்று சொன்னேனோ அதைப்போலதான். மத்திய அரசு உங்களுக்கு தாக்கீது அனுப்பியவுடன் நீங்கள் சமாதானம் சொல்லி இருக்க வேண்டும். ஒரு கொள்கையை வகுத்திருக்கிறோம். எனவே அந்தக் கொள்கைக்கு இடைஞ்சலாக நீங்கள் உத்தரவு இடக்கூடாது, அப்படி உத்தரவு போடாதீர்கள், தேசியமயக் கொள்கையிலே நாங்கள் நாட்டம் செலுத்துகிறோம் என்ற அளவுக்கு நீங்கள் சொல்லியிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறேன். ஆனால் நீதிமன்றத்தினுடைய உத்தரவை இரண்டுமுறை நீங்கள் ஏன் புறக்கணித்தீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்.டி.சி. மீட்டிங்கிலே நான் பலமுறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். இதுபற்றி மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட அரசுக்கு மட்டுமல்ல; அரசுக்கு மட்டும் என்று சொன்னால் கூட பரவாயில்லை; ஆனால் அரசுக்குச் சொந்தம் என்ற பெயரால் மக்களுக்குச் சொந்தமான கனிப்பொருளை தனிப்பட்டவர்கள் எடுத்து கோடிக் கணக்கான ரூபாய் சம்பாதிக்க, அதற்கு உதவியாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக நாங்கள் உரிமையாக்கிக் கொண்டிருக்கிறோம். அதை மைய அரசு மதித்து, அதற்கேற்ப நடக்க வேண்டுமென்று நான் அந்த கவுன்சிலில் பேசியிருக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. நீதிமன்றத்திலிருந்து வந்த பிறகு கூட நாங்கள் அதுபற்றி எழுதுவதற்கு முற்பட்டோம் என்பதையும் இங்கே அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இன்னொன்றையும் சொல்கிறேன். மைய அரசுக்கு இன்னொரு யோசனையைச் சொல்லி, கப்பல்—அதைப்பற்றிச் சொல்கிறேன். அவர்களுடைய நிபுணர்கள் இருவரையும் சேர்த்து நீங்கள் அனுப்பலாம் என்ற அந்த உத்தரவையும் நான் வைத்திருக்கிறேன். அவர்களையும் சேர்ந்து போகச் சொல்ல வேண்டுமென்று அவர்கள் கேட்டதற்காக அதையும் நான் செய்திருக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மற்றவைகளை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது சொன்னார்கள்.



ஹைகோர்ட்டிலே சொல்லியிருப்பதைப்போல திருப்பி 20 வருஷம் கொடுத்தால் கூட, அதற்குப் பின்னால் அரசு எடுத்தாலும் மீண்டும் கோர்ட்டுக்குப் போவார்கள். 20 வருஷம் எங்களுக்குத்தான் லீசுக்குக் கொடுத்திருந்தார்கள். அதை தடுத்து அரசாங்கம் இடையிலே எடுக்கிறார்கள் என்று கோர்ட்டுக்குப் போவார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கத்தினுடைய எந்த நல்லத் திட்டத்தையும் எதிர்த்து எல்லோரும் கோர்ட்டுக்குத்தான் போவார்கள். இல்லை என்று சொல்லவில்லை ; மறுக்கவில்லை. பஸ் தேசியமயக் கொள்கையை எடுத்தபோது கூட கோர்ட்டுக்குத்தான் போனார்கள் ; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கோர்ட் போட்ட அந்த ஆர்டரை, அந்த உத்தரவை, இரண்டு மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று சொன்ன அந்த உத்தரவை நீங்கள் அலட்சியப்படுத்தி 3 மாதம் கழித்து கொடுக்கிறீர்கள். அதைப்பற்றி கோர்ட் கொடுத்த தீர்ப்பைப்பற்றித்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அந்தக் காலதாமதம் ஏன் ஏற்பட்டது என்பதற்காகத்தான் எங்களுடைய கொள்கையைச் சொன்னேன். தனிப்பட்டவர்கள் இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அரசு நிறுவனமாக எடுத்துக்கொள்வதற்காகத்தான் நிறுத்தி வைத்திருந்தோம். பின்னால் இதைப்போன்று, 'கண்டம்ப்ட் ஆப் தி கோர்ட்' என்று வரக்கூடாது என்ற காரணத்தால் கொடுத்திருக்கிறோம் ஓராண்டுக்கு. ஓராண்டுக்குக் கொடுத்ததைக்கூட நீங்கள் 20 ஆண்டுக்கு கொடுத்திருக்க வேண்டுமென்று நீதிபதி சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு வாதம் வைக்கப்பட்டு, நாங்கள் சொல்லியும் கேட்காமல் காலம் கடந்து ஓராண்டுக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லி, 2,000ரூபாய் செயலாளர் (செக்ரட்டரி) கட்ட வேண்டுமென்று அபராதம் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, செயலாளருக்கு அந்த அபராதம் என்றாலும் அது அரசுக்குத்தான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் இந்த அரசு மேலிடத்திற்கு, நீதிமன்றத்திற்கு செல்கிறது என்பதை மட்டும் இங்கே சொல்லி அங்கிருந்து என்ன தீர்ப்பு வருகிறது என்று எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அதன் பிறகு இந்த அரசு என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். 1975-லே லீஸ் முடிந்துவிட்டது. தி.மு.க. அரசு கலைக்கப்படுவதற்கு முன்னால் 31-1-1976-லேயே திரு. முனுசாமி செட்டிக்கு லீஸ் முடிந்து

விட்டது; மீண்டும் கொடுக்கப் படாமல் இருந்தது.
31–1–1976-லே தி.மு.க. அரசு இருந்தது. ஆனால் லீஸ்.
1975-லே முடிந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின்முன் அனுமதி
யுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** இதிலே அரசின்
சார்பாக எந்தவிதமான குறைபாடும் இல்லை என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். இதை எதிர்த்து அந்த சிங்கிள் ஜட்ஜின்
தீர்ப்பை எதிர்த்து, பெஞ்சுக்கு அப்பீல் செய்யப்பட்டு இருக்கிறது
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிமெண்ட் பற்றியும் மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர்
அவர்கள் பேசியிருக்கிறார்கள். சிமெண்ட் வினியோகத்தில்
சட்டமன்ற மேலவையில், மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு
வீராசாமி அவர்கள் பேசியதைத்தான் இங்கே காலையிலே
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசியிருக்கி
றார்கள். அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதிலே
அமைச்சர் மட்டத்திலோ அல்லது உயர் மட்ட அதிகாரிகள்
மட்டத்திலோ எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. அவர்கள்
சுட்டிக்காட்டிய குறைகள் தாசில்தார் அளவிலே இருக்கலாம்.
சில பேருக்கு 2,000 மூட்டை கிடைத்து இருக்கிறது. சிலருக்கு
15 மூட்டை கூட கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்
கள். இந்த அதிகாரத்தைப் பொறுத்த வரையில், 100 டன்
அதாவது 2,000 மூட்டைகள் வரை தாசில்தார் கொடுப்பதற்கு
அதிகாரம் இருக்கிறது. அதற்கு மேலே கொடுப்பதற்கு
மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது.
இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. ஓப்பன் மார்க்கெட்
டில் வாங்கிக் கொள்ளலாம். லெவி முறை இருந்தபோது
இந்தப் பிரச்னை இருந்தது. (குறுக்கீடு). தொழில் துறை
இயக்குனரைப் பொறுத்த வரையில், தொழிற்சாலைகளுக்கு
கொடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு உண்டு. வீடுகள் கட்டுவது
போன்றவற்றிற்கு, வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித்
தலைவர் ஆகியோருக்குத்தான் அதிகாரம் உண்டு. ஆனால்
தொழிற்சாலைகளுக்குத்தான் தொழில் துறை இயக்குனர்
கொடுக்க வேண்டும். எனவே இங்கே குற்றச்சாட்டுகள் வந்து
இருப்பது வீடுகள் கட்டுவதற்கு பினாமி பர்மிட்டுகள் வழங்கப்
பட்டுள்ளன, போலி பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன என்ப
தாகும். தாசில்தார் அளவிலே அல்லது அங்கேயிருக்கிற அசிஸ்
டெண்ட் அளவிலே அல்லது கோபாலபுரம் குடோனில் நடந்தது
என்று சொன்னார்களே அதை அங்கே இருக்கின்ற அசிஸ்
டெண்ட் அளவிலே, கூட்டுறவுச் சங்க அளவிலே நடைபெற்று
இருக்கலாம். அவற்றைப்பற்றி எல்லாம் புட்செல் எஸ். பி.



விசாரணை செய்து வருகிறார். தவறு செய்தவர்கள் தகுந்த
முறையில் தண்டிக்கப்படுவார்கள். நிச்சயமாக உரிய
நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று
மேலவையில் சொன்னதை இங்கேயும் நான் தெரிவித்துக் கொள்
கிறேன். இதிலே அரசாங்கத்தின் தலையீடோ அல்லது அரசாங்
கத்தின் டிஸ்கிரிஷனரி கோட்டா—மற்ற மாநிலங்களில் சொல்
லப்பட்டு, பத்திரிகைகளில் வந்ததைப் போல்—என்று வைத்துக்
கொண்டு ஹவுசிங் காம்ப்ளக்ஸ் அல்லது வேறு பெரிய தொழிற்
சாலைகளுக்கு பிரத்யேகமாகக் கொடுப்பது என்று அரசு மட்டத்
தில் முதலமைச்சராலேயோ அல்லது அமைச்சர்களாலேயோ
ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை இங்கே நான் இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆங்காங்கு
கிளை கிளையாக விசார்ணை நடத்துவதற்குப் பதிலாக
மாநிலம் தழுவிய ஒரு முழு விசாரணையை நடத்துவதற்கு ஆணை
யிட்டால், மேல் மட்டத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்று
தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே இருக்கிற எல்லாத்
தாசில்தார்களும் தவறு செய்து இருக்கிறார்கள், தமிழகத்தில்
இருக்கிற எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தவறு செய்து
இருக்கிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமாட்டார்கள் என்று
எண்ணுகிறேன். எங்கேயாவது சில தாசில்தார் அலுவலகத்தில்
தவறு நடந்து இருக்கலாம், எங்கேயாவது கூட்டுறவு சொசைடி
களில் தவறு நடந்து இருக்கலாம். அப்படி தவறு நடந்து
இருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் வந்த இடங்களில் எல்லாம்
நாங்கள் புட் செல் எஸ். பி. மூலம் விசாரணை நடத்தி வரு
கிறோம். மேலும் உங்களுக்கு எங்கேயாவது இப்படி நடை
பெற்று இருக்கிறது என்று தகவல் இருந்தால், அதை எங்கள்
இடத்தில் கொடுத்தால், நாங்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக
இருக்கும். கூட்டுறவு சங்கத்திலோ அல்லது மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகத்திலோ தவறு நடைபெற்று இருக்கிறது என்று
சொன்னால் அந்த இடங்கள் இன்ஸ்பெக்ட் செய்யப்படவும்,
அங்கே விசாரணை செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எனக்கு
ஏற்பட்டு இருக்கும் நம்பிக்கையின்மையை நான் அமைச்சருக்குச்
சொல்ல விரும்புகிறேன். ஒரு அதிகாரி அரசாங்கத்தின் சார்பு
உடைய உத்திரவின்படி 50சதவீதம் வெளிநாட்டுச் சிமெண்ட்டும்,
50 சதவீதம் உள்நாட்டுச் சிமென்டும் தரவேண்டும். இதிலே
டிஸ்கிரிஷனரி எதுவும் கூடாது என்று அரசு உத்தரவு போட்டு
இருதும் கூட அந்த உத்தரவையும் மீறி டிஸ்கிரிஷனரியாக
300 மூட்டை வெளிநாட்டு சிமென்ட், 20 மூட்டை உள்நாட்டு

சிமெண்ட் என்று கொடுத்து இருக்கிறார். இப்படி பலவற்றைப்
பற்றி நான் பட்டியல் போட்டு படித்துச் சொன்னேன். அந்த
அதிகாரி மீது எடுத்த நடவடிக்கை என்னவென்றால், வெறும்
சென்ஷர் கண்டனம் தான். மேல் இடத்தில் யாரோ இருப்ப
தால் தான், அந்த அதிகாரியைத் துன்புறுத்தினால் அவர் வெளியே
எதையாவது சொல்லிவிடுவாரோ என்று இப்படி செய்யப்பட்டு
இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். மேல் மட்டத்
லோ அல்லது எனக்கோ, யாருக்கோ இதிலே எந்தவிதமான
சம்பந்தமும் இல்லை. எங்களுக்கு மடியில் கனம் இல்லை.
அதனால் எந்தவிதமான பயமும் இல்லை. எனவே மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்த அதிகாரி
பற்றிய குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. நான் அப்போது
அவையில் இல்லை. வந்த பிறகு இப்போது படித்துப் பார்த்
தேன். முழுமையாக அதைப் படித்துப் பார்த்த பிறகு அதன்
மீது நடவடிக்கை எடுக்கிறேன். அவர் பேரிலே தவறு இருந்தால்
உடனடியாக அவரிடத்தில் கிளாரிபிகேஷன் கேட்டு, அல்லது
அவர் மீது தவறு இருக்கிறது என்று தெரிந்தால் சஸ்பெண்ட்
செய்து, அவர் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நம்முடைய ஆயத்
தீர்வை மதுவிலக்கு பற்றி பேசுகிற போது, எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். நான் பதில் சொல்கிற
போது, அவர்களுடைய குற்றச்சாட்டு ஒவ்வொன்றிற்கும்
பதிலைச் சொல்லி, அதற்குப் பிறகு உங்களுக்கு கொடுத்த தகவல்
கள் போதுமா என்று அவர்களைப் பார்த்து, அதற்குப் பிறகு
அவர்கள் பதில் கேட்டு, விளக்கமாக பதில் சொல்லப்பட்டது
அன்றைக்கு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக
ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், அன்றைக்கே வருமானவரி
இலாகா குறித்து செய்தியைச் சொல்லி, தஞ்சையைப் பற்றிய
சில குறிப்புகளை அவர்களே படித்துக் காண்பித்தார்கள். நானும்
சொன்னேன்—தப்பான குறிப்புகளை நீங்கள் இங்கே எடுத்து
வைத்திருக்கிறீர்கள். யாரோ தப்பான குறிப்பை உங்களிடத்
திலே கொடுத்திருக்கிறார்கள். அது தவறான குறிப்பாகும். சரி
யான குறிப்பு என்ன என்பதையும் நான் இங்கே படித்துக் காண்
பித்தேன்—அது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அந்த வருமான வரி இலாகாவைப்பற்றி இன்றைக்குச் சொல்
கிற போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச்
சொன்னதையே சொல்லாமல், வெகு ஜாக்கிரதையாக சொல்லி
இருக்கிறார்கள். அப்படி ஜாக்கிரதையாக சொல்கிற போது
வருமான வரி இலாகாவிலே இப்படிப்பட்டவைகள் எல்லாம்
இருப்பதாகச் சிலவற்றைச் சொல்லி, யூகிக்கப்படுகிறது என்றாரே



தவிர, நிச்சயமாக சொல்லவில்லை. வருமானவரி இலாகாவிலே
என்ன எழுதப்படுகிறது என்பதைப் பற்றிய யூகங்களைத் தான்
இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் இது குறித்து உங்
களுக்கு அன்றைக்கே தெரிவித்தேன். பிளண்டிங் யூனிட்டுக்கு
யார் மனு கொடுத்தாலும், உரிமம் கொடுப்பதற்கு இந்த அரசு
சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. அந்த விதிமுறைகளின்
அடிப்படையில்தான் கொடுக்கிறோம். விதிமுறையிலே ஒரு
பகுதியில் The applicant himself is bona fide or binami to nybody
என்பதைக் குறித்து அறிய வேண்டும் என்று இருக்கிறது. அது
குறித்து ஆராய்கிறார் கமிஷனர் அவர்கள். ஒவ்வொரு அப்ளி
கேஷனையும் பார்த்து, அந்த அப்ளிகன்ட் பினாமியா இல்லையா
என்று தீர்மானித்து, யாருக்காவது அவர் பினாமியா என்பதைப்
பற்றி நன்றாக ஆராய்ந்து பார்க்கிறார்கள். நேரிடையாக
விசாரிக்கிறார்கள். அவர்களிடத்திலே எழுதி வாங்கிக் கொள்
கிறார்கள். மாவட்டங்களிலேயெல்லாம் இவைகளை எல்லாம்
செய்து முடித்து அதற்குப் பின்னாலே தான் அந்த அப்ளி
கேஷன்களை எல்லாம் உரிய முன்னுரை போட்டு, சிபாரிசு
செய்து வருகிறது. அதை கமிஷனர் அவர்கள் ஆராய்ந்து பிறகு
கொடுக்கிறார்கள். அவர்களிடத்திலே எழுதி வாங்கிக் கொண்டு
தான் கொடுக்கிறார்களே தவிர, அந்த வருமானவரி இலாகாவிலே
அவர்கள் எழுதி வைத்திருப்பதாக சொல்லப்படுவதாக கூறு
வதற்கெல்லாம் நாங்கள் பொறுப்பு இல்லை என்பதையும்
சொல்லிக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான்
வருமான வரி இலாகாவினுடைய சோதனையினுடைய அடிப்
படையிலே கேட்கவில்லை. கேரளத்தைச் சேர்ந்த பெரும்
முதலாளிகள் பலர் தமிழகத்திலே சாராயத்தொழிற்சாலைகளை
யும், பிளண்டிங் பாட்டிலிங் தொழிற்சாலைகளையும் சிலரை
பினாமியாக வைத்துக் கொண்டு நடத்தி வருகிறார்கள்.
உதாரணமாக தஞ்சையிலே ராமானுஜம் 2 பெர்சன்ட் மூலதனம்,
அதே போல மதுரையிலே 5 பெர்சன்ட் மூலதனம் இன்னும்
13 சதவீதம் என்றெல்லாம் சொல்கிற அளவுக்கு (குறுக்கீடு)
பினாமிகள் தயாரிக்கப்பட்டு, பினாமிகள் பெயரால் வேறு
மாநிலத்தைச் சேர்ந்த பெரும் முதலாளிகள் கொள்ளை அடித்துக்
கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத்
தலைவர் அவர்களே, முதலிலே சொன்னதுதான், அதை ஏன்
அவர்கள் திரும்பவும் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான்
குறுக்கிட்டேனே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
பேசும்போது குறுக்கிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு
எப்போதும் இல்லை. அவர்கள் சொல்வது எல்லாம், வருமானவரி
இலாகாவிலே இவைகள் எல்லாம் சொல்லப்படுகிறது என்று
சொல்கிறார்களே தவிர—நிச்சயமாக இல்லை. வருமானவரி
இலாகாவிலேயிருந்து சொல்லப்படுகிறது என்றால், எதிர்க்
கட்சித் தலைவருக்கு எப்படிக் கிடைத்தது என்பது பற்றி எல்லாம்

கேட்கவில்லை. நேரிடையாக கொடுத்தார்களா அல்லது சொல்லப்படுகிறதா? அப்படி சொல்லப்படுகிறது என்று சொன்னால், எழுதப்படுவதாக கேள்விப்படுவதாகச் சொல்கிறார்களே தவிர, உண்மையாகவே எழுதியிருப்பதாக அவர்கள் சொல்லவில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி**: நான் வருமான வரி இலாகாவை நம்பவில்லை. மாண்புமிகு எஸ். டி. எஸ். அவர்களை முழுக்க முழுக்க நம்புகிறேன். அவர்கள் சொல்லட்டும். தஞ்சையிலே உள்ள ராமானுஜம் பினாமி அல்லவா? அவருடைய ஷேர் எவ்வளவு? அதே போல மதுரையிலே உள்ளவருக்கு 5 பெர்சன்ட் ஷேர் இருக்கிறதா இல்லையா? அல்லது 15 ஆயிரம் தான் மூலதனம் போட்டிருக்கிறார்களா? எஸ். டி. எஸ்.-ஸை நான் நம்பிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாக சொல்லி இருக்கிறேன். முதலிலே அந்த அப்ளிகேஷன்களை எல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நன்றாக விசாரித்து அதற்குப் பிறகு, அந்த அப்பிளிகன்ட் போனபைடு தான் யாருக்கும் பினாமி இல்லை என்று முடிவு செய்து பிறகு சிபாரிசு செய்து அனுப்புகிறார்கள். அவர்கள் சிபாரிசு செய்து அனுப்புவதை அப்படியே இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை அப்படியே எஸ்.டி.எஸ். அவர்களும் நம்புகிறார்கள். நம்பித்தான் இங்கே உங்களுக்கும் கொடுத்திருக்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி**: பேரவைத்தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எஸ்.டி.எஸ்.-ஸை நம்பிச் சொல்கிறேன். நான் சொல்லியவை எல்லாம் பினாமிகள். அவர்கள் பினாமிகளா அல்லவா என்பதை விசாரித்து, பினாமிகள் என்று அவர் தெரிந்து கொள்வாரேயானால் அந்தக் கம்பெனிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா?

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்**: பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.டி.எஸ்.-ஐ நம்புகிறேன் என்று சொன்னார்கள். நான் அப்ளிகென்டை விசாரித்தேன். அவர் தான் அப்ளிகென்ட், அவர் யாருக்கும் பினாமி இல்லை. ஆகவே அதுபற்றித் தெரிந்து நம்பித்தான் அதனை இந்த அரசு ஏற்றுக் கொண்டு நானேதான் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் கொடுப்பது குற்றச்சாட்டு என்றால் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.





**திரு. ரா. உமாநாத்**: தலைவரவர்களே, ப்ரொசீஜரில் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த ஹவுஸிலே ஏதாவது ஒரு டாக்குமென்டைப் படித்தால் இங்குள்ள மெம்பர்ஸ்ஸுக்கும், ஹவுஸுக்கும் ஒரு உரிமை உண்டு.

If requested to be laid on the table.
கேட்டால்அது இந்த அவையிலே வைக்கப்படவேண்டும். வருமான வரி ரிப்போர்ட் பற்றி மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கோட் பண்ணி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உண்மையான கொட்டேஷன் நான் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அவை எங்களுக்குத் தெரிந்தாக வேண்டும். எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மட்டும் தெரிந்தால் போதாது. கோட் பண்ணப்பட்ட அந்த வருமானவரி சம்மந்தப்பட்ட தஸ்தாவேஜு இந்த அவையிலே வைக்கவேண்டும் என்று நான் கூறுகிறேன்.
Let us see what is stated there. We are entiled to know it

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வருமான வரியைப் பற்றி யார் சொல்லி இருந்தாலும் அதில் இந்த அரசாங்கத்திற்கு பொறுப்பு இல்லை.

**திரு. ரா. உமாநாத்**: தலைவரவர்களே, அதை இங்கே கோட் பண்ணிச் சொன்னார்களே.

**மாண்புமிகு திரு. எஸ். டி: சோமசுந்தரம்**: தலைவரவர்களே, வருமான வரியினை பற்றிய எந்த குறிப்புகளும் என்னிடத் திலே இல்லை. அதைத் தேடவேண்டிய நிலைமை எனக்கும் இல்லை. இந்த அரசாங்கத்திற்கும் இல்லை. ஆனால் வருமானவரி இலாக்கா இவைகளை எழுதி இருப்பதாகச் சொன் னார்கள். அப்படித் தெரிகிறது என்று சொன்னார்கள். இப் படித் தெரிவதாக இருப்பதற்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை என்றுதான் நான் தெரிவித்தேன். என்னிடத்தில் உள்ள தஸ்தாவேஜுகளை அன்றைக்கு நான் ரிக்கார்ட் பூர்வமாகப் படித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்றைய விவாதத்தில் திரு. வரதராஜன் அவர்கள் பேசுகின்ற போது ''ஆகவேதான் இந்த சட்ட அமைதி பிரச்சினையை ஒரு போலீஸ் துப்பாக்கி பிரயோகத்திற்குக் கொண்டு போகக் கூடிய பிரச்சினையாக கொண்டுபோகக் கூடாது. அரசாங்கத்தினுடைய கொள்கை அந்த விளைவை ஏற்படுத்தும்'' என்றெல்லாம் பேசி இருக்கிறார்கள். அந்தக் குறிப்புக்கள் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த அவை யிலே எதுவுமே பேசக்கூடாது என்ற சூழ்நிலை வரக்கூடாது. துப்பாக்கிப் பிரயோகம் அளவிற்குப் போகக்கூடாது என்று சொல்வது ஒரு எச்சரிக்கைதானே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு கொண்டு போகக்கூடிய பிரச்சினையாக கொண்டுபோகக் கூடாது, அரசாங்கத்தினுடைய கொள்கை அந்த விளைவை ஏற்படுத்தும் என்று சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்—குழப்பம்).

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இப்படிப் பேசியது நடை முறைவிதிகளுக்கு முரணானதா? அப்படியானால் சொல்லுங்கள். அரசாங்கத்தின் கொள்கையை விமர்சனம் செய்கிறோம். அரசாங்கத்தின் தரப்பிலே அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லட்டும், ஏற்றுக்கொள்கிறோம். Th t should be the political view

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் சைடிலே இருந்து 'எங்கள் கொள்கையை நடைமுறைப் படுத்தினால் இப்படி ஏற்படாது என்று சொல்லவேண்டியது தானே. Why should we be shut out from saying ou: conclusion.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து மற்றொரு முறை படித்தால் நல்லது. துப்பாக்கிப் பிரயோகத்திற்கா? அல்லது துப்பாக்கிச் சூடு என்ற நிலைமைக்கா? இந்த அரசினுடைய கொள்கை கொண்டு போகக்கூடாது—அப்படி என்றால் யார் யாரை சுடப்போகிறார்கள் என்ற விளக்கமே இல்லை, யாரைத் தூண்டு கிறார்கள் பொதுமக்களையா, அல்லது அரசையா? அல்லது அரசு செய்யும் என்று எதிர்பார்க்கிறார்களா ? அல்லது பொதுமக்கள் அந்த அளவுக்குப் போய் விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்களா ?

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொது மக்கள் சுடுவது என்றால் துப்பாக்கிச் சூடு என்ற வார்த்தை யைத்தான் பயன்படுத்தி இருப்பார்கள். ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் துப்பாக்கிப்பிரயோகம் செய்கிற அளவுக்கு விளைவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. துப்பாக்கிச் சூடு என்று வரவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துப்பாக்கிப் பிரயோகம் தான். பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து படியுங்கள். அதிலே யார் யார் என்று குறிப்பிடவே யில்லை...............(குறுக்கீடு).





திரு. ரா. உமாநாத் : அப்ஜக்ஷன் ரெயிஸ் செய்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். இந்தமாதிரி அரசாங்கம் கொள்கையை அமல் படுத்தினால் அம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகம்—துப்பாக்கிப் பிரயோகம் என்று சொல்வது விளக்குவதற்காகத்தான் சொன் னார்கள். ஜப்திபற்றிய பிரச்னை வந்தபோது போலீஸை வைத்து ஜப்தி செய்தால் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும் என்று விளக்கம்தான் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும், அந்த விதத்தில் சர்க்கார் போகக்கூடாது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் மிகவும் தெளிவாக அரசியல் தெரிந்தவர்கள். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அளவிற்கு என்றால் நாட்டில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி இங்கே விளக்கம் சொல்வதாகப் பொருள். அந்தச் சூழ்நிலை உருவாகும் என்பது பொருள். அதை இப்படிச் சொல்வது சரிதானா என்பதை சிந்தியுங்கள். அப் படித்தான் இருக்கவேண்டுமென்றால் எல்லோரும் அதுமாதிரிப் பேசலாம். அது நன்றாக இருக்காது. தயவு செய்து சிந் தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என்றால் எப்போது ? போலீஸாரைத் தாக்கும்போதும் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம். அரசின் கொள்கையாகவே இருக் கட்டும். போலீஸ் மீது குண்டு எறியும்போதும் துப்பாக்கியால் சுடலாம். போலீஸை சுடும்போதும் அவர்கள் திருப்பிச் சுடலாம். எப்படியும் துப்பாக்கிப் பிரயோகம் என்றால் பயன்படுத்தப்படும் என்பதுதான் பொருள். ஆகவே தயவு செய்து அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

திரு. ரா. உமாநாத் : சிந்தனையைப் பொறுத்தவரையில் நாங்கள் எப்போதும் பின்வாங்கமாட்டோம். அதுவல்ல விஷயம். ஜப்தி என்றால், Japthi its lf is an act of fo ce, an act of compul- sion. ஜப்தி என்றால் வாலண்டரியாக வசூல் செய்வதல்ல. போலீஸ் சென்று ஜப்தி என்கிறபோது போலீஸ் வன்முறையோடு, அந்த பாக்கிங்கோடு கடன் வசூல் செய்வது. அது போர்ஸ். அந்த முறையில் போனால் போர்ஸ் என்று சொல்லும்போது நிச்சயமாக அது துப்பாக்கிப்பிரயோகத்தில் கொண்டு போய் விடும் என்பது பழைய அனுபவம். அப்படி வரக்கூடாது என்பதற்காகத்தான் எச்சரிக்கின்றோம் என்று சொன்னோம். அதில் என்ன தப்பு ? இதில் அன்-பார்லிமென்டரியாக என்ன இருக்கிறது ? மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு எங்கள் கருத்துக்களோடு ஒருமைப்பாடு இல்லாமலிருக்கலாம். அதை சர்க்கார் சார்பில் பதில் கூறும்போது கூறட்டும். ஆனால் அதற்காக இதை நீக்குவது என்பது சரியல்ல. என்னுடைய வாதம், இதை ஏன் நீக்கவேண்டும் என்பதுதான். அதை நீக்கக்கூடாது.

மாண்புமிகு திரு: எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த மன்றத்தில் இருக்கிற ஒவ்வொருவரும் சிந்திக்கத் தெரிந்தவர்கள், சிந்தனைக்குச் சொந்தக்காரர்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவர்களைத்தான் மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சிந்திக்கத் தெரியாதவர்களை மக்கள் அனுப்பவில்லை. ஆகவே எல்லோருக்கும் சிந்திக்க முடியும். ஆனால் சிந்திப்பது வெவ்வேறு வகையில் இருக்கிறது. சிலருக்கு துப்பாக்கி பற்றி சிந்திக்கத் தெரியும். சிலருக்கு துப்பாக்கி, துப்பாக்கி என்று சிந்திக்கத் தெரியும். சிலருக்கு அமைதியாக இருக்கவேண்டும் என்பது பற்றி சிந்திக்கத் தெரியும். இது எந்த வகையில் சிந்திப்பது என்பதல்ல. ஜப்தி செய்யப் போனால் துப்பாக்கியால் சுடவேண்டும் என்ற நிலைமை ஏற்படும் என்று சொன்னால், விவசாயிகள் வன்முறையில் இறங்குவார்கள், இறங்கும் அந்தச் சூழ்நிலையை உண்டாக்கும். அதை உண்டாக்கவேண்டும் என்பது மறைமுகமாக அதில் தொக்கி நிற்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதில் ஒன்றை ஏற்றுக்கொள்கிறேன். சிந்தனை என்றால் பலருக்கும் பலவிதமாக சிந்தனை இருக்கும். அது கரக்ட். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தித்து அது சரி என்று முடிவிற்கு வருகிறார்கள். அதை நாங்கள் எங்கள் கட்சியில் சிந்தித்து அந்தக் கருத்து சரியல்ல என்று மாற்றுக் கருத்து எங்களுக்கு வரலாம். ஆகவே சிந்தனை பலவிதம். துப்பாக்கிப்பிரயோகம் என்கிறபோது விவசாயிகள் வன்முறையில் இறங்குவார்கள் என்று நாங்கள் இம்ப்ளை செய்கிறோம் என்பது தப்பு. எங்கள் அனுபவத்தில் பல துப்பாக்கிப்பிரயோகங்கள், அமைதியாக இருக்கிற கூட்டத்தைக் கலைப்பதற்கு போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது என்பது எங்கள் கருத்து. அமைதியாக இருந்தும், அமைதியாக மறுக்கிறபோதும் கூட்டம் கலையவில்லை என்று போலீஸ் துப்பாக்கிச்சூடு நடத்தலாம் என்பது எங்கள் கருத்து. கருத்து வேற்றுமை இருக்கலாம். எங்கள் கருத்து இது, சர்க்கார் கருத்து வேறாக இருக்கலாம். எங்கள் வாதம். இதை நீக்கக்கூடாது, அதற்கு பதில் சொல்லலாம். டிபேட்ஸ்தான் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் உயிர். டிபேட்ஸ் என்பது, 'க்ளாஸ் ஆப் ஐடியாஸ், கன்ப்ரன்டேஷன் ஆப் ஐடியாஸ்.' கருத்து மோதல்கள்தான். இதை நீக்குவது என்பது அந்த கருத்து மோதல்களில் இருக்கக்கூடிய உயிரையே எடுப்பதாகும். ஆகவே தயவு செய்து அதை நீக்காதீர்கள்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் விளக்கம் தர முன்வந்து, சொல்லியிருக்கிறார்கள். ''நாங்கள் தூண்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை'' என்று சொன்னால், அந்த வார்த்தைகள் இருப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை.





திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் : அவர்களே, நான் ஏற்கனவே இதைப்பற்றி விளக்கியாகி விட்டது. ''தூண்டுவதாக இது இல்லை'' என்று சொல்லியாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''வன்முறையிலே தூண்டுவதாக இல்லை'' என்று சொல்லியிருப்பதால், இந்தச் சொற்கள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுன்வடிவைப் பற்றி இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் பலபேரும் விவாதித்து, தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு இன்று நிறைவேற்றப்பட்டால்தான், அடுத்த ஆண்டு முழுவதும் இந்த அரசை நடத்திச் செல்ல முடியுமென்ற காரணத்தினால்தான், இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு நிறைவேறுகின்ற வரையில் உங்கள் மதிய உணவை ஒத்தி வையுங்கள் என்று கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியத்தில் நான் இருக்கிறேன். இதை ஒத்திவைத்து, நாளைக்கு நிறைவேற்ற முடியாத காரணத்தினால்தான், சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும் அந்த வகையிலே மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பதன் காரணமாக, நீண்ட ஒரு விளக்கம் கூறவேண்டிய தேவையில்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் அத்தனைக்கும் விடை அளிக்கின்ற நிலையிலே நான் இருக்க மாட்டேன். அந்தந்த துறையைச் சார்ந்த அமைச்சர்கள், அந்தந்த அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய சிலபல பிரச்சினைகளுக்கு அந்தந்த துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இங்கே தெளிவாக விளக்கம் தந்திருப்பதன் காரணமாக, இரண்டொரு அம்சங்களைப் பற்றி எடுத்துச் சொல்வதன் அடிப்படையில், இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் நான் மீண்டும் விளக்கம் கூற விரும்பவில்லை.

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''

என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நானும், நிதி நிலை அறிக்கையிலே இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆக, இயற்றலும் ஈட்டலும், அதைக் காத்தலும் வகுத்தலும் என்ற முறையில், அறிவுத்திறன், ஆற்றல் திறனுக்கேற்ப தொடர்ந்து இருக்கின்ற அதிகாரிகளைக் கொண்டு, தொடர்ந்து இருக்கின்ற அலுவலர்களைக்

கொண்டு, இந்த காத்தலும், வகுத்தலும் நிறைவேற்றப்படு கிறதே தவிர, எந்த ஒரு அதிகாரியையும் புதிதாக வைத்து, இந்த முறைகளை செய்ய இயலவில்லை என்பதை நாம் நன்கு உணர்வோம் என்றாலும்கூட, இந்த அவையிலே காத்தலும், வகுத்தலும், ஆகிய முறைகளிலே இருக்கின்ற கருத்துக்களை, மற்றவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருப்பதன் மூலம், அவற்றை யெல்லாம் நீக்குவதற்கு இந்த அரசு ஈடுபடும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிலபல பிரச்சினைகளைக் குறிப்பிடும்போது, மின்சாரக் தட்டுப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கட்டங்களிலே, அதுபற்றிய முழு விளக்கங்களை இங்கே தந்திருக்கிறார்கள். தூத்துக்குடியில் அனல் மின்சார நிலயத்தில் பழுது ஏற்பட்ட தன் காரணமாக, சிலபல நாட்கள் தடைபட்ட நிலை ஏற் பட்டதன் காரணமாக, அதற்குப் பிறகு பெருந் தொழிற்சாலை களுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்தை ஓரளவு கட்டுப் படுத்தி, அதற்கு மின்சார வெட்டு நிர்ணயித்து, அதை விவசாயிகள் பயன்படுத்தக்க அளவில், ஓரளவுக்கு மாற்றித் தந்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். அந்த நிலையில்தான் இப்போது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எதிர் காலத்தில் மழை பெய்யாமல், பொய்த்துபோனால், மின்சா ரத்தின் அளவு ஓரளவு குறைந்து, இன்னும் அதிகமான நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், அப்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை களை எடுப்பார்கள். ஆக, கட்டுப்பாடு செய்கின்றபோது வெட்டு ஏற்படுகின்றபோது, கிடைக்கின்ற வசதி வாய்ப்பை வைத்து, அதை நிறைவேற்றக்கூடிய தன்மையிலே இருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சித்தன் அவர்கள் பேசும்போது உயர்மட்ட அதிகாரிகள் சில பேர்கள் ராஜிநாமா செய்து இருக்கிறார்கள். அது இந்த ஆட்சியிலே ஏன் ஏற்பட்டது என்று கேட்டார் கள். அதிகாரிகள் ராஜிநாமா செய்வது எல்லா ஆட்சிக் களிலும்—எனக்கு சிறிது அவகாசம் கிடைக்குமானால் எப்போது எப்போது எல்லாம் ஏற்பட்டது—எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி முழு விளக்கங்கள் தரமுடியும். சில நிர்வாக சௌகரியங்களையொட்டி சில பல முடிவுகளை அரசு எடுக்கிற போது அந்த முடிவுக்குக் கட்டுப்படாமல் தங்களுடைய முடிவுக்கு அரசு வரவேண்டும் என்று வற்புறுத்துகின்ற அதிகாரிகள் சிலர் தாங்களாகவே ராஜிநாமா செய்யக்ககூடிய நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, தாங்களாகவே வேறு பெரிய வேலைக்கு, ஐக்கிய நாடுகள் சபைக்கோ அல்லது வேறு பெரிய வேலைக்கோ கனியார் துறையிலே பெரிய வேலைக்கோ முயற்சி செய்கிற பாது ராஜிநாமா செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சால்லவேண்டுமென்றால் திரு. ஐ. மகாதேவன் அவர்கள்



அந்த வகையிலே சென்றிருக்கிறார்கள். இங்கே மற்றவர்கள் பல்வேறு குறிப்புகளைச் சொல்லியிருக்கிறார்கள். நான் பல உதாரணங்களைச் சொல்லமுடியும் என்றாலும்கூட நிர்வாகத் தன்மையை ஒட்டி மத்திய அரசு எடுத்த முடிவிலே மாறுபட்ட நீதிபதிகளே 3 பேர்கள் ராஜிநாமா செய்துவிட்டார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். அதைப்போலவே அந்த முடி வுக்குப் பிறகு நம்முடைய மாநிலத்திலே மாநிலத் தலைமை நீதிபதியே ராஜிநாமா செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஒவ்வொருவரும் சொல்கிறபடி அரசு முடிவு எடுக்கவேண்டு மென்ற நிலை வருமானால் நிர்வாகத்தை நடத்த முடியாது. நிர்வாக சம்பந்தப்பட்ட அரசினுடைய கொள்கையை ஒட்டி தலைமை செயலாளரே ராஜிநாமா செய்த நிலைமைஎல்லாம் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் அறிவார்கள். ஆகவே இதிலே எந்தவிதமான அநியாயமான தன்மையும் அடங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளில் செலவழிக்கப் படாத நிலைபற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 1978–79 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்திலே கிட்டத்தட்ட 143 கோடி ரூபாய் செலவழிக்கப்பட வில்லை என்றும் 1979–80 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் 188 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை யென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இது ஆண்டுக் காண்டு வருகின்ற—அக்கவுண்டண்ட் ஜெனரல் என்று சொல்லப் படுகிற மாநிலத் தணிக்கை அதிகாரி கணக்கு எடுக்கிற போது—சட்ட மன்றத்திலே இந்தத் துறைக்கு இந்த இனத் திற்கு இவ்வளவு ஒதுக்கினோம் என்று ஒதுக்கீடு செய்ததற்குப் பிறகு அந்தக் குறிப்பிட்ட ஆண்டுக்குள்ளேயே அந்தத் தொகைகள் செலவழிக்கப்படாமல் மீதப்படுகின்ற நிலைமைகள் அவ்வப் போது ஏற்படுகின்ற தன்மைகள்தான், இப்போது மட்டும் ஏற்பட்ட ஒன்று அல்ல. அரசாங்கத்தினுடைய துறைகளுக்கு கூடுதல் செலவினங்கள் ஏற்படுமானால் அவை களுக்கு துணை மதிப்பீடுகள் என்று கொண்டு வந்து இந்த அவைக்குத் தெரிவித்து அவையின் அனுமதிபெற்று கூடுதல் செலவி னங்களுக்கு அனுமதி பெறுகிறோம். ஆனால் அனுமதிக் கப்படுகிற இனங்களிலே செலவு குறைவாக ஏற்படுமானால் அப்படிப்பட்ட நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகிற நிலைமை ஆண்டுதோறும் இருக்கத்தான் செய்கிறது, புதிதாக 2, 3 ஆண்டுகளிலே ஏற்பட்டதல்ல. 1962-முதல் 1967 வரையிலே பொதுக்கணக்குக் குழுத் தலைவராக நானே இருந்த காலத் திலே தெரியும். ஒவ்வொரு ஆண்டும் இப்படி ஒதுக்கப்பட்டி ருக்கின்ற தொகைகள் செலவழிக்கப்படாமல் இருந்த நிலைமைகள் எல்லாம் பொதுக் கணக்குக் குழுவிலே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அப்போது அந்தந்தத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் வந்து ஏன் அப்படி செலவழிக்கப்படவில்லை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 30

என்பதற்கான விளக்கங்களை அளிப்பார்கள். அவர்களுடைய அந்த
விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இருந்தால் அந்தக்
குழு ஏற்றுக்கொள்கிறது. ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இல்
லாமல் இருந்தால், அதாவது அபிப்ராய பேதங்கள் அதுபற்றி
இருந்தால் அந்தக் குழு அவற்றைச் சுட்டிக்காட்டும், அவ்வாறு
சுட்டிக்காட்டுகின்ற அறிக்கைகள் இந்த அவையிலே வைக்கப்
படும். அந்த முறையிலேதான் இன்றைக்குக் காலையிலே
கூட பொதுக் கணக்குக் குழுத் தலைவராக இருக்கின்ற திரு.
சித்தன் அவர்கள் காலையிலே அந்தக் குழுவின் அறிக்கையை
இங்கே வைத்தார்கள். ஏன் செலவழிக்கப்படவில்லை என்ப
தற்கான காரணக்காரியங்களை குழுவிற்கு சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் விளக்கியாக வேண்டும். அப்படி அவர்கள் தெரி
விக்கின்ற விளக்கங்கள் ஏற்கத்தக்கதா இல்லையா என்பதை குழு
முடிவு செய்யும். ஏற்கத்தக்கதாக இருந்தால் குழு ஏற்றுக்
கொள்கிறது. ஏற்கத்தக்கது இல்லையென்றால் அதற்கான
காரணங்களையும் சொல்லி இப்படி நடக்கக்கூடாது என்றும்
அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்றும் தெரிவிக்கிறது. ஆகவே இப்போது மட்டும் நடைபெறு
கின்ற ஒன்று அல்ல இது. உதாரணத்திற்காக நான் சொல்
கிறேன். 1978–79 ஆம் ஆண்டிலேயும், 1979–80 ஆம் ஆண்டி
லேயும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது
செலவழிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள்.
1974–75 ஆம் ஆண்டு இந்த மாதிரி தணிக்கையை நாம் பார்ப்
போமானால் அந்த ஆண்டிலே ஒதுக்கப்பட்ட நிதி முழுமையும்
செலவழிக்கப்படாத நிலை இருந்தது. இப்போதாவது 1300
கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கப்படுகிறது. அப்போது 400
கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. 157 கோடி
ரூபாய் செலவழிக்கப்படாமல் இருந்திருக்கிறது. எல்லா அர
சாங்கங்களிலும் நடைபெறுகின்ற நிலைதான், இந்த அரசாங்
கத்தினுடைய கவனக் குறைவின் காரணமாக ஏற்படவில்லை
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நானூற்றுச் சில்லரை கோடி
ரூபாய் மொத்தமாக ஒதுக்கிய நிலை இருந்த போதே 157
கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இப்போது 1,400
கோடி ரூபாய் மொத்த தொகை ஒதுக்குகிறபோது 140
கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்பது வியப்புக்குரிய
தல்ல. ஆனால் கூடுமான வரையில் ஒதுக்கப்பட்ட தொகை
களை செலவழிக்கின்ற முயற்சியில் அரசு
ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே
அதிகாரிகள், அலுவலர்கள் கவனம் செலுத்தி கூடுமான
வரையில் லேப்ஸ் ஆகாமல், செலவழிக்கப்படாத ஒரு சூழ்நிலை
ஏற்படாமல் அந்தந்த ஆண்டுக்குள்ளேயே நிறைவேற்றப்படுகிற
அளவிற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்
கொள்கிறேன். அதற்கு வலியூட்டவும் விருப்புகிறேன்.



1982 மார்ச் 30]

(பிற்பகல் 2-00)

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிதிய
மைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1979–80
நிதி ஒதுக்க கணக்கின்படி 412 லட்சம் ரூபாய், 4 கோடியே 12
லட்சம் ரூபாய் அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்டத் தொகை
செலவழிக்கப்படவில்லை. அதுவே செலவழிக்கப்படாத நிலையில்
சப்ளிமெண்ட்டரி கிராண்ட் 112 லட்சம் ரூபாய் கோரி வாங்
கப்பட்டிருக்கிறது. அதுவும் போதாமல் மேலே ரூ. 9 லட்சம்
கோரி பெற்று, 412 லட்சத்திலே 2 கோடியே 12 லட்சம் ரூபாய்
சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதையும் நிதியமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, இருக்கலாம். ஏன் அந்த நிலை ஏற்பட்டது என்ப
தற்கு கணக்கு குழுவிலேதான் அதற்கான விவரங்களை தரு
வார்கள். அதிலே முறைகேடுகள் தவறுகள் ஏற்படுமானால்
கண்டிப்பார்கள். இல்லாவிட்டால் குழு ஏற்றுக் கொள்ளும்
அல்லது அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது
எப்போதும் இருக்கிற ஒன்றே தவிர ஏ[illegible]சயமாக ஏற்பட்ட
ஒன்றல்ல என்பதையும் ஒதுக்கப்பட்ட கேட்டு வாங்கப்பட்ட
பணம் முழுவதையும் அந்த அந்த துறைக்கு செலவழிக்கப்பட
வேண்டும் என்று கொள்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.
அதற்கான முறைகளில் அதிகாரிகள், அலுவலர்கள் நடவடிக்கை
எடுக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆம்னி பஸ்
ஊழல் குறித்து இங்கே குறிப்பிட்டுக் கூறினார்கள். ஆம்னி பஸ்
ஊழல் குறித்து லஞ்ச தடுப்புத்துறை இயக்குநர் விசாரணைமுடித்து
சில காவல்துறை அதிகாரிகள், மற்றும் போக்குவரத்து துறை
அதிகாரிகள்மீது வழக்கு தொடரும்படி அரசாங்கத்திற்கு பரிந்
துரை செய்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய பரிசீல
னையில் இருக்கிறது. விரைவிலே அதுபற்றி நடவடிக்கையை
இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை குறிப்பிட்டு கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

பேருந்துகளுக்கு அடிச்சட்டங்கள் வாங்குகிற அத்தகைய
நிலைமைகளையும் அசோக் லேலண்ட் பற்றியும், டாட்டா பற்றி
யும் நான் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்திற்கு பதில்
அளிக்கிறபோதே மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அதை
மீண்டும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்
கள். டெண்டர் கோரிய வகையிலே இங்கே கொடுக்கப்பட்டி
ருக்கிற தன்மைகளின் அடிப்படையிலே நிறுவனங்களுடைய மதிப்
பீடுகள், மற்றவைகள், அடிச்சட்டத்திற்கு மட்டுமே டெண்டர்
கோரவில்லை என்றும், நிறுவனங்கள், மதிப்பீடுகள், பராமரிப்புச்
செலவுகள், உறுப்புப் பொருள்கள் செலவினத்தையும் கணக்கில்
கொண்டு ஆய்வு செய்யப்படும் என்று முதலிலே டெண்டரிலே

குறிப்பிட்டிருக்கிறது. என்றும், அந்த அடிப்படையிலேதான் அந்த அடிச் சட்டத்திற்கு மட்டுமே அவர்கள் டெண்டர் தராமல் இவைகளுக்கும் சேர்த்து தந்திருக்கிறார்கள். சேர்ந்து தந்ததை சேர்த்து தான் இரண்டு நிறுவனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எந்த வகையிலே அசோக் லேலண்ட் உடைய அளவு குறைந்திருக்கிறது என்பதை அன்றைக்கே சுட்டிக் காட்டினேன். இதை அந்த குழுவினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் உலக வங்கியினுடைய குழுவினரும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்றைக்கே சுட்டிக்காட்டினேன். இதிலே தவறு எதுவும் ஏற்படவில்லை என்பதையும் நான் குறிப்பிட்டு கூறிக் கொள்கிறேன். அதைப்போல வேறு பல பிரச்சனைகளை எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக கருத்துக்களை எல்லாம் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதுபற்றியும் மேலும் பல நிலைமைகள் உருவாகக் கூடாது என்பதற்கான காரணங்களை எடுத்துச் சொன்னார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கோரிக்கைகளை எடுத்து தெரிவித்து இருக்கிறபோது அந்தந்த மானியக் கோரிக்கைகள் வருகிறபோதே ஓரளவிற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் இங்கே எழுப்பப்பட்ட ஐயத் தன்மைகள், மற்றவைகளுக்கு வாய்ப்பு ஏற்படுகிறபோது உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர்களும், மற்றவர்களும் எடுத்துக் கொள்வார்கள் என்கிற கருத்தைச் சுட்டிக் காட்டி, அதுபற்றியெல்லாம் முழுவிவரம் தெரிவிப்பேனேயானால் நேரம் அதிகமாகும் என்ற காரணத்தால் இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தமிழ் நாட்டிலே கேரளா முதலாளிகளுக்கு பல பினாமிகள்ன் பெயரால் பாட்லிங்' பிளொன்டிங், சாராய மொத்த வியாபாரம், ஐ.எம்.எப்.எல். உரிமங்கள் அளித்துள்ளதை கண்டித்தும், கொள்கை மாற்றம் குறித்து நீதிமன்றத்திலேயே வாதிக்காமல் அரசாங்கம் கன்டெம்ட் ஆப் கோர்ட் 'க்கு ஆளாகி நீதிமன்றத்தால் 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிற நிலைமைக்கு அரசின் தரப்பிலே பொறுப்பேற்று பதவிகளை ராஜினாமா செய்ய முன் வராததிலே ஏற்பட்டுள்ள ஊழலை கண்டித்தும், சிமென்ட் விநியோகத்திலே வெளி நடப்புச் செய்கிறோம். நாங்கள் இந்த நேரத்திலே வெளி நடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்றது, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவை தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 31-3-1982 காலை 9·00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

168. 1982ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1982).

169. 1982ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த, சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982)

170. தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982).

171. தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு நகராட்சிமன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1982).

172. 1982ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1982.

173. 1976–77ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் ஏற்பட்ட மிகைச் செலவுகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (தமிழ் ஆங்கிலம்.)

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 31.

பங்குனி 18, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு—2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

'' பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். ''

குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர்.

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**1971 ஆம் ஆண்டு அரசு ஆணைப்படி வழங்கப்பட்ட பட்டாக்கள்.**

*வினா எண் 665—**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டு 1300/71 எண் அரசு ஆணைப்படி கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எவ்வளவு ? எத்தனை ஏக்கர் ?

(ஆ) மேற்படி பட்டாக்கள் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே :

(அ) 31–12–1980 ஆம் ஆண்டு வரை மொத்தம் 11,065.90 ஏக்கர் நிலங்கள் 4,674 பட்டாதாரர்களுக்கு அரசு வழங்கியிருக்கிறது.

(ஆ) ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களைத் தொடர்ந்து அனுபவிப்பவர்கள் யார் என்பதைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கிராமங்களில் வாழ்கின்ற அரிசனங்கள் போன்றவர்கள் பல ஆண்டுக்காலமாக, 50 ஆண்டுகள், 100 ஆண்டுகளாக இருக் கின்ற இடங்கள் சில நேரங்களில் பள்ளவாரி, குட்டைப் புறம் போக்கு என்று — அப்படி இல்லை என்றாலும் — ரெவின்யூ ரிக்கார்டில் அப்படி வருவதால் ரெவின்யூ போர்டு வரை, அரசு வரை வந்து பட்டாக்கள் ஆக்கப்பட மிக மிகக் காலதாமதம் ஆகிறது. அவைகளை யெல்லாம், குறிப்பிட்ட கால அளவிற்கு குடியிருந்து, குடியிருக்கத் தகுதியான நிலமாக இருந்தால் வரை முறைகளைத் தளர்த்தி பட்டா வழங்குவதை எளிதாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் வழங்கப்படுவது சம்பந்தமானது இது. ஆனால் உறுப்பினர வர்கள் கேட்பது புறம்போக்கு நிலங்கள், மற்றவைகளைப் பற்றி இருக்கின்ற நிலமைகளைப் பற்றி. அதைப்பற்றி முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். ஆக்கிரப்புச் செய்யப்பட்ட இடம் அரசுக் குத் தேவையில்லை என்றால், பொது ஸ்தாபனத்திற்குத் தேவை இல்லை என்றால் விரைவில் முடிவெடுக்க அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. இன்னும் விரைவிலே செய்யும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அரசு சார்பிலே நிறையப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல பத்து வருடங்கள், பதினைந்து வருடங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, விவசாயம் செய்து கொண்டு வரும் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ், ஷெட்யூல்ட் காஸ்ட் இதுபோன்ற இனத்தவர்கள் இருக் கிறார்கள். 15 வருடங்களாக ஆக்கிரமிப்புச்செய்தும் இவர்களுக்கு இன்னும் பட்டா வழங்காத நிலையில் இருக்கின்றார்கள். இதை அரசு பரிசீலித்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற் பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, ஆக்கிரமிப்புச் செய்தும் அவர்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கவில்லை என்று உறுப்பினரவர்கள் சொல்வதைப் பார்த் தால் ஏதோ ஆக்கிரமிப்புச் செய்தது என்பது சட்ட ரீதியாக ஆக்கிரமிப்பு செய்ததுபோன்று அவர்கள் எண்ணுகிறார்களா என் பது தெரியவில்லை. ஆக்கிரமிப்பு என்பதே சட்டத்தை மீறு கின்ற ஒன்றாகும். ஆனால் சட்டத்தை மீறிச் செய்தாலும் அரசுக்குத் தேவையில்லை என்றால் பரிவோடு கவனித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு பட்டாக்கள் கொடுக்கப்பட்டும் அந்தப் பட்டா கொடுக்கப்பட்ட இடத்தை அனுபவிக்க முடியாத அளவில் விவசாயம் செய்து





கொண்டிருக்கிறார்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள். எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில் பட்டா கொடுக்கப்பட்ட இடத்தைத் திரும்பவும் அனுபவிக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. நான் இதைத் தெரிவிப்பதற்குக் காரணம், பட்டாக்களை அவர்களை அழைத்து வைத்து கூட்டங்களில்—பொது நிகழ்ச்சிகளில் பட்டா கொடுப் பது வீண் வேலையாக உள்ளது. பட்டாக்களைக் கொடுத்து அன்றோ அல்லது மறுநாளோ அதை அவர்களிடத்தில் ஒப் படை செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. பட்டா கொடுப்பதற்கு முன்னாலே கிராமக் கணக்கில் அது எழுதப்பட்டாக வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. எங்கே யாவது அது மீறப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கத்தின் எண் ணத்தை நிறைவேற்றாத அரசு அதிகாரிகள் மீது இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. எஃ். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு பயிரிடுபவர்களுடைய, நிலத்தை—ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு ஜமீன்தாரர்களுடைய ஏஜென்டுகள், அதை தங்களுடைய பத்திர அதிகார பூர்வத்தை வைத்துக் கொண்டு விலைக்கு விற்றுவிட்டார்கள். ஜமீன் ஒழிப் புக்குப் பிறகு உடையார்பாளையம், சிதம்பரம், மாயவரம் தாலுகா, கடலங்குடி போன்ற இடங்களில் ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு பயிர் செய்து கொண்டிருந்தாலும், ஜமீன்தாரர்களுடைய ஏஜன்டுகளாக இருந்தவர்கள் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டதால் அவர்கள் அந்த இடங்களை அனுபவிக்க முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? இப்படிப்பட்ட நிலைமையில் உண்மை யாகப் பயிரிடும் குடிமகனுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன்தாரர்களுடைய ஏஜன்டுகள் செய்த தவறு அரசுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சும்மா இருந் திருக்காது. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட் டிருந்தால், பயிர் செய்பவர்கள் மனுக்களைக் கொடுத்தால் உட னடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளி ஆபரணங்களுக்கு ஒரு முனை வரி விதிக்கும் திட்டம்.

*வினா எண். 666—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வெள்ளி ஆபரணங்களுக்கு பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று வேண்டுகோள் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

**திரு தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளி நகைகளைப் பொறுத்தவரையில் அது சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் நகை. அதுவும் அந்தத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் சாதாரணமானவர்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப் பதாகச் சொன்னார்கள். அப்படி பரிசீலனையில் இருப்பது எப் போது ஒருமுனை வரியாகக் கொண்டு வருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர் களே, ஒருமுனை வரியா அல்லது பலமுனை வரியா—சிங்கிள் பாயின்ட் டாக்சா அல்லது மல்டிபாயின்ட் டாக்சா—என்ற கேள்விக்கே இடம் இல்லை. முதலிலே இதிலே இருக்கின்ற சங்கடங்களை உணர்ந்து பழைய நகைகளை வாங்கி, உருக்கி, அதை விற்பனை செய்வதிலே இருந்த 4 சதவிகிதம் வரியை 2 சதவிகிதம் வரியாக ஆக்கி இருக்கிறது. அதாவது பழைய நகையை வாங்கி உருக்கி, நகையாகப் பண்ணி, பாளம் பாளமாகப் பண்ணி விற்கிறபோது 4 சதவிகிதம் வரியை 2 சதவிகிதம் ஆக முன்னாலே ஆக்கி இருக்கிறது. அதற்குப் பிறகு இரண்டாம்தரம் விற்கிறபோது அது 4 சதவிகிதம் ஆக இருக்கிறது. அதையும் 2 சதவிகிதம் ஆக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை இருக்கின்றது. அதை மட்டும்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 சதவிகிதம் ஆக இருப்பதை 2 சதவிகிதமாக ஆக்குவதற்கு பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீப்பெட்டி போன்ற குடிசைத்தொழிலில் ஈடுபடுவதைப்போலவே இத்தொழிலும் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். அதேமாதிரி விதிவிலக்கு இதற்கும் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?



**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சாதாரணமாக பலர் நகைகளைச் செய்து விற்கிறபோது அதிகமாக லாபம் வராது என்று கருதிதான் மாண்புமிகு உறுப் பினர் சொல்லுகிறபடி வெள்ளியைப் போடுகிறார்கள். அதை போடுபவர்கள் இன்றைக்கு ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். அதைக் கருதிதான் அந்த பழைய நகைகளை வாங்கி மறுமுறை நகையாகப் போடுபவர்கள் ஏழைகள் என்ற காரணத்தினால் தான் 4 சதவிகிதம் என்று இருப்பதை 2 சதவிகிதமாக ஆக்கி இருக்கிறது. அதை மறுபடியும் நகையாக செய்கிறபோது அதில் புதிய வெள்ளியும் வந்துவிடுகிறது. புது பவுனும் வந்துவிடுகிறது. அதற்கும் 4 சதவிகிதம் வரி இருக்கின்றது. அதை 2 சதவிகிதம் என்று ஆக்குகிறபோது பழைய நகைக்கும், புதிய நகைக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடுகிறது. அதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று முதலிலே சொன்னேன்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த வெள்ளி நகை, வெள்ளிப் பாத்திரம் மூலமாக ஆண்டுக்கு சராசரியாக எவ்வளவு வரி வசூல் ஆகிறது. வெள்ளி நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் தற்போது எத்தனை கிலோ, எத்தனை டன் புழக்கத்தில் இருக்கின்றது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, வெள்ளி நகைகள் இந்த நாட்டிலே எவ்வளவு புழக்கத்திலே இருக்கின்றது என்பதை மத்தியப் பேரரசிடம்தான் கேட்டுப் பார்க்கவேண்டும். அதேபோல தங்க நகைகளும்தான். இன் றைக்கு 4 சதவிகிதமாக இருந்ததை 2 சதவிகிதமாக ஆக்குகிற போது 50 லட்சம் ரூபாய் இந்த அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருக் கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளை கல்வித்துறை ஏற்று நடத்தும் திட்டம்.

*வினா எண் 588—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளி களை கல்வி துறையின் மூலம் எடுத்து நடத்துவது என்பது அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (ஆ) இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்குத் திட்டங்களில் ஒன்று, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூ

பொருளாதார மேம்பாடுற்று, சமய வாழ்வில் முழு அங்கம் வகிக்கு மளவிற்கு அவர்கள் உயர்த்தப்படவேண்டும் என்பதாகும். இந்த அடிப்படையில், தற்சமயம் ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை இயக்குனரால் நிர்வகிக்கப்பட்டுவரும் பள்ளிகள் அனைத்தையும் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலே எனக்கு கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் அந்த பள்ளிக் கூடங்கள் இருக்கின்ற இடங்கள் மிகமோசமான நிலையில் உள் ளது. வருங்காலத்திலே பள்ளிக்கூடங்கள் கட்டவேண்டுமானால், மேட்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டும், அல்லது 50 சதவீதம் கட்டுநிதி கொடுக்கவேண்டும் என்ற நிலை அமுலில் இருக்கிறது. அப்படிச் சொல்கின்ற போது, ஆதிதிராவிட மக்கள், மலைவாழ் மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியோர் வாழ் கின்ற இடத்திலே இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் அந்த இடத்திலே மேட்சிங் கிராண்ட் அவர்கள் கட்டவில்லை என்பதால், அந்த கிராமம் பெயருக்கு ரெவின்யூ வில்லேஜ் ஆக இருந்தாலும், வசதி யுள்ள மக்கள் இந்தப் பகுதியிலேயிருந்து தங்கள் பகுதிக்கு கொண்டுபோக வேண்டுமென்றால், அரசாங்கம் என்ன நிலை உருவாக்கும். அதுமட்டுமல்ல, அந்தப் பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்களாக, உதவித் தலைமை ஆசிரியர்களாக இருக் கின்றவர்கள் 10, 15 வருடம் சர்வீஸ் ஆனவர்கள் இருக்கிறார்கள். 30 வருடம் சர்வீஸ் ஆனவர்கள் கூட இருக்கிறார்கள். ஆகவே, சர்வீஸ் மூலமாகத்தான் அவர்களுக்குத் தலைமை ஆசிரி யர் பதவி கொடுக்கவேண்டுமென்று உத்திரவு இருக்கின்றது. 30 வருடம், 20 வருடம் என்று வருகின்றபோது, நிச்சயமாக கல்வித்துறையினர், 30 வருஷத்தில் இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலை வருகின்றபோது, அங்கே 20 வருட மாகத் தலைமை ஆசிரியராக இருந்தவர், இங்கே அசிஸ்டென்ட் ஆக மாற்றப்படுகின்ற நிலைமை வருகின்றபோது, சம்பள விகிதங்களில் சில சங்கடங்கள் எல்லாம் வரும். ஆகவே, இவை களைப்பற்றியெல்லாம் அரசு என்ன கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுடைய நலனுக்காகத்தான் நாம் இந்த மாற்றத்தைச் செய்கிறோமே தவிர, கல்வித்துறை யில் இன்னும் ஒரு 10 பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலைமை இல்லை. அப்படிப்பட்ட நிலையிலும் கல்வித்துறை இல்லை. ஆகவே, ஆதிதிராவிடர் களுக்கு இப்போது கிடைத்து வருகின்ற நன்மைகள், சலுகைகள்





நாம் எடுக்கிற காரணத்தால் பாதிக்கப்படுமேயானால், அவை களை எடுப்பது சரியாகாது. ஆகவே, எடுக்கிறபோது, அவர்களுக்கு கிடைத்து வருகின்ற நன்மைகள் சலுகைகள், கிடைக்குமானால் தான் அவைகளை எடுப்பது சரியாக இருக்கும். ஆகவே, அதை பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். அதேபோல், ஆசிரியர் களைப் பற்றி நாம் வருகின்றபோது, 30 வருடங்கள் ஆனவர் களுக்கு சில நன்மைகள் கிடைக்கலாம், அதேபோல் 5, 6 வருடம் ஆனவர்களுக்கும் சில நன்மைகள் கிடைக்கலாம். காரணம் ஒரு மிகப் பெரிய நிர்வாகத்திலே, அவர்கள் வந்து சேர்கிற போது, சில பேர்களுக்கு சில பாதிப்பு ஏற்படலாம். ஆனால், அதேநேரத்திலே பல பேர்களுக்கு பல நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் டைரக்டர்களாக வரக்கூடிய ஒரு சூழ் நிலை எல்லாம் இருக்கிறது. அவர்கள் நிர்வாகத்திலே இரண் டறக் கலந்து விடுகிறார்கள். ஆகவே, இந்த இரண்டையும் பார்த்துதான் அவர்களுடைய கருத்தைக் கேட்ட பிறகுதான் நாம் இந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சில பாதிப்புக்கள் என்று சொல்கிறார்கள். அதைக் கேட்டு நான் அஞ்சுகிறேன். ஒன்று கட்டடங்களை மாற்றுவது, மற்றொன்று, உத்தியோகத்தில் இருக்கின்றவர், இப்போது இருக் கின்ற நிலை, மாறாத நிலையிலே நாம் செய்வதற்கு அரசு எண்ணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்கிறபோது ஆரம்பத்திலேயே ஒன்றைக் குறிப்பிட்டேன். ஆதி திராவிடர்களுக்குக் கிடைக்கிற நன்மைகள், சலுகைகள், அல்லது அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் நாம் செய்கிறோம். இரண்டா வது வேலை செய்கின்ற ஆசிரியர்கள் பற்றிச் சொன்னார்கள். ஆசிரியர்கள் என்று வருகின்றபோது, அந்த நிலையிலே நான் முழுக்க சொல்ல முடியவில்லை என்றாலும், உறுப்பினர் சொல்கிற முறையில் இருந்தும், நம்முடைய அனுபவத்தில் இருந்தும், ஒரு சிலருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், ஆனால் பெரும்பாலானவர் களுக்கு அது நன்மையாகத்தான் இருக்கமுடியும். ஆகவே பாதிப்பு ஏற்படும் என்று சொல்வது, ஏதோ நாங்களே, பாதிப்பை ஏற்படுத்துகிறோம் என்பதல்ல. கூடுமானவரையில் கவனித்து, அரசு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்.

திரு. கு. பாலன் : தலைவரவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் நடத்தப்படுகின்ற பள்ளிகளை கல்வித் துறை ஏற்று நடத்துவது பற்றி அரசு பரிசிலனை செய்துவருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையிலே அந்தப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற எண்ணம்

ஏற்பட்டது? தற்போது ஆதிதிராவிடர் நலத் துறையில் இருக்கும் பள்ளிகளின் தரம் குறைவாக இருக்கிறதா அல்லது நிர்வாகம் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் அக் கறைகொண்ட பலரும் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் அந்தப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்தலாமா என்று பரிசிலனை செய்கிறோம். ஆதிதிராவிடர்கள் ஆதி திராவிடர் வக்கீல் இடத் திலே போகவேண்டும் ; ஆதிதிராவிடர்கள் ஆதிதிராவிடர் டாக்டரிடம் போகவேண்டும் என்ற கருத்தில் என்ன தவறு இருக்கிறதோ அதைப்போன்றுதான் இதிலும் இருக்கும். நமக்கு முக்கியம் அந்த மாணவர்களே தவிர நிர்வாகமோ மற்றவை களோ அல்ல. ஏதோ ஒரு காரணத்தால் ஆதிதிராவிடர் நல துறையால் சில இடங்களில் ஆதிதிராவிடர் மாணவர் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் பள்ளிகள் ஆதிதிரா விடர் நலத் துறையில் இருந்தால் நல்லதா? கல்வித் துறையில் இருந்தால் நல்லதா என்பதை நாம் பார்க்க வேண்டும். இன்றைய நிலையில் கல்வித் துறையில் அந்த பள்ளிகளை ஏற்று நடத்தி னால் சிறப்பாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அதன் காரணமாக ஆசிரியர்கள் குறைபாடு இருந்தால் ஒன்றிரண்டு ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்றி, அங் கிருக்கிற ஆசிரியர்களை ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு நியமித் தால் அந்தக் குறைபாடுகளை போக்கிக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். நாம் எதைச் செய்தாலும் அது அந்த ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும். அதை மனதில் வைத்துதான் காரியங்களைச் செய்கிறோம். அதில் அக்கறையுள்ள யாராவது தன்னுடைய கருத்துக்களைச் சொன் னால் அதையும் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, ஆதிதிராவிடர். பள்ளிகளை அரசு கல்வித் துறை மேற்கொள்வதை நான் வர வேற்கிறேன். இப்போது இந்தப் பள்ளிகளில் பெரும்பாலானவை மலைப்பகுதிகளில் உறைவிடப் பள்ளிகளாக இருக்கின்றன. ஆனால் 8 வகுப்புகள் கொண்ட ஒரு நடுநிலைப் பள்ளி இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. இன்று இருக்கிற பாடத் திட்டங்களின்படி 8 வகுப்புகளை இரண்டு ஆசிரியர்கள் நடத்தினால் அதில் எவ்வளவு தரக்குறைவு இருக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆகவே அரசு அந்தப் பள்ளிகளை மேற்கொள் ளும்போது 5 வகுப்புகளுக்கு 5 ஆசிரியர்கள் என்ற அடிப்படை யில் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்து கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு உயர்நிலைப்பள்ளிகளாக அந்தப் பள்ளிகளை மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும். இப்போதே உறைவிடப் பள்ளிகளாக இருப்பதால் மாணவர்கள் தங்கிப் படிக்கலாம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பொதுவானது. நீங்கள் ஏதோ உங்கள் தொகுதியில் உள்ள ஒரு பள்ளியை மனதில் வைத்துக் கேட்கிறீர்கள். அது கூடாது. கேள்வியை பொதுவானதாக, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மா. சின்னராசு : என்னுடைய தொகுதியில் சுமார் 7 பள்ளிகள் அப்படி இருக்கின்றன. இதைப் போன்ற பள்ளிக்கு குறைந்தது 5 ஆசிரியர்களையாவது நியமிக்க வேண்டும். அது மட்டுமல்ல. அந்தப் பள்ளிகளை நல்ல இடத்தில், மையமான இடத்தில் இருக்கும்படி மாற்றி அமைக்கவும் அரசு இந்தத் திட்டத்தின் கீழ் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது நாம் கல்வித்துறையின் கீழ் எடுக்கலாமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். எடுப்பதாக இருந்தாலும் எடுக்காவிட்டாலும்—இதைப் போன்ற கருத்துக்களை, அந்தப் பள்ளிகளை கல்வித்துறை எடுக்கவில்லை என்றால், பரிசீலனைச் செய்து அந்தத் துறையே பரிகாரம் காணலாம்.

## தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை பணியில் அமர்த்தும் திட்டம்

* வினா எண். 589—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் அமர்த்த வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தும் செயல்படுத்தாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது, அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்ட சில ஆசிரியர்கள் பற்றிய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவர்களைத் தவிர ஏனைய ஆசிரியர்கள் விஷயத்தில் குறிப்பிட்டுள்ள அரசு ஆணை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மைனாரிட்டி பேரால் அல்லது தனியாரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் அரசு ஜீ. ஓ. போட்டாலும், உத்தரவு போட்டாலும் அந்த உத்தரவுகளை மானேஜ்மென்ட் வயலேட் பண்ணுவது எனக்குத் தெரியும். ஜீ. ஓ.க்களில் அரசாங்கம் என்ன சொல்லியும்

அவர்கள் அதைச் செய்வதில்லை. அந்த ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதாக இருந்தால் அது அவர்களை இன்னும் விக்டிமைஸ் செய்வதாக இருக்கும்; மானேஜ்மென்டுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். ஆகையால் இது பற்றி பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண, மத்திய சர்க்கார் இன்கம்டாக்ஸ் டிபால்டர்களைப் பற்றிய விவரங்களை பத்திரிகைகளில் பப்ளிஷ் செய்து, பொது மக்கள் அறியச் செய்வதைப் போல இம்மாதிரி ஜீ. ஓ.க்களை வயலேட் செய்கின்ற மானேஜ்மென்ட் மீதும் பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண அந்த மானேஜ்மென்ட் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட அரசாங்கம் முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: தலைவரவர்களே, நாம் இப்போது இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, நாம் இடுகிற ஆணைகளை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றால் வேறு என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம். ஆனால், பள்ளிக்கூடம் அல்லது அந்த நிர்வாகம் தவறு செய்தால், அரசு ஆணையை மீறி நடந்தால் அந்த வட்டாரத்தில் இருக்கிற பொது மக்களுக்குத் தெரியும் வகையில் ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா**: தலைவரவர்களே, இவ்வாறு அரசு உத்தரவு பிறப்பித்தும், ஆணை பிறப்பித்தும் அதை நிறைவேற்ற மறுக்கக் கூடிய தனியார் பள்ளிகளுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்துவதன் மூலம் அந்த உத்தரவை அவர்கள் நிறைவேற்றும் வாய்ப்பு நிச்சயமாக ஏற்படும்; ஆகையால் அந்த வகையில் உத்தரவை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: தலைவர் அவர்களே, அதைத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். இதிலே வரும் சிரமம் என்னவென்று சொன்னால் மற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது நின்றுவிடும். நாம் தருகிற கிரான்ட் பெரும்பாலும் ஆசிரியர்களுக்கு சம்பளம் தருவதற்குத்தான். ஆகவே, நாம் கிரான்ட் நிறுத்தினால் அது மற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் தராமல் நிறுத்துவதைப் போல் ஆகிவிடுகிறது. இதுதான் இதிலே இருக்கும் சங்கடம்.

**உடற்கல்வி பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள்.**

*வினா எண் 590—செல்வி பி. விசயலட்சுமி: **மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—**



இடைநிலை (Secondary Grade) ஆசிரியராக பணியாற்றுபவர்கள் உடற் கல்வி பயிற்சி பெற்றிருந்தால் அத்தகையவர்கள் உடற் கல்வி ஆசிரியராக நியமிக்கப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்**: மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி உடற்கல்வி ஆசிரியர்கள் நிலை I மற்றும் நிலை II-ல் உள்ள வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த சம்பள விகிதமும் இடைநிலை ஆசிரியர்களின் சம்பள விகிதமும் தற்போது ஒரே மாதிரியானதால் இடைநிலை ஆசிரியர் எவரும் உடற் பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற, சாதாரணமாக விரும்பமாட்டார்கள்.

இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ., பட்டமும், பி.பி.எட். பட்டமும் பெற்றிருந்தால் அவர்கள் உடற்கல்வி இயக்குநராக உயர்நிலைப்பள்ளிகளில் நியமனம் பெற விதிகள் இடமளிக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால், செகன்டரி கிரேடு டீச்சர்ஸ்ஸை காலியிருக்கும் இடங்களில் நியமனம் செய்யாமல் இருப்பதாகத் தெரிகிறது. கர்நாடக மாநிலத்தில் கொடுத்த சர்டிபிகேட்டில் பிரச்னை என்றால், தமிழ் நாட்டில் பெற்ற சர்ட்டிபிகேட் ஹோல்டர்ஸ்ஸை காலியிடங்களில் நியமனம் செய்யாமல் இருப்பது சரியா ? ஆகவே, தமிழ் நாட்டில் பெற்ற சர்ட்டிபிகேட் ஹோல்டர்களை காலியிடங்களில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். அதைப் பற்றித் தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கே. ஆர். சுந்தரம்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தில் வேறுபாடு இருப்பதாகச் சொல்லி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் கொடுக்கலாம்.

## தமிழ் பல்கலைக்கழகம் மூலம் தமிழ் நூல்களைத் தயாரித்து வெளியிடும் திட்டம்

*வினா எண் 591 திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் நூல்களைத் தயாரித்து வெளியிடும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களை வெளியிடுவதற்காக புத்தக வெளியீட்டுத்துறை ஒன்றை ஏற்படுத்தி இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து தனியாக அச்சகம் அமைத்து இப்பணியினை ஆற்ற தொடக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே' மருத்துவம், பொறியியல் படிப்பிற்கான பாடத் திட்டங்களைத் தமிழ்மொழி மூலமே நடத்த முடியும் என்றும், அதற்கான பாட நூல்களை ஓராண்டு காலத்திற்குள் தமிழில் எங்களால் தர முடியும் என்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் சொல்லியிருக்கிறது எனவே, இது போன்று தமிழ் பல்கலைக் கழகம் ஆர்வத்தோடு முன்வருகிற காரணத்தால், தமிழ் மொழியிலேயே அந்தப் பாடங்களைப் பயிற்றுவிக்கும் அந்த முயற்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கையை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பொறியியல் ஆங்கில மருத்துவம் ஆகிய துறைகளில் பாட நூல்களையும், ஏனைய அடிப்படை நூல்களையும் உருவாக்கி வெளியிடும் முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதை வெளியிட்ட பிறகு, அதைப் பயன்படுத்தி தமிழில் இத்தகைய படிப்புகளை, உயர்கல்விப் படிப்புகளை நடத்தித் தரும் முயற்சியை அரசு மேற்கொள்ளும். அது எப்படி என்பதைப் பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் இருக்கும் ஓலைச் சுவடிகளை குறிப்பாக மராட்டிய ஓலைச் சுவடிகளை புத்தகமாக வெளியிட தமிழ் பல்கலைக் கழகத்தின் பணி பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுவும் ஒரு திட்டமாக இருக்கிறது. ஓலைச்சுவடிகள் கைப்பிரதிகள் ஆகியவற்றில் இது வரையில் அச்சிடப்படாதவைகளை, அச்சிடுவதற்குத் தொகுத்துத் தர தக்கவர்களை விரைவில் நியமிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகத்தில் தயாரிக்கும் பலதரமான நூல்களையும், தமிழில் உள்ள தொன்மை வாய்ந்த தமிழ் அறிஞர்களின் நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தமிழ் மொழியில் பெருமையையும், தமிழ் அறிஞர்களின் திறமையையும் உலகெங்கும் பரப்புவதற்கான முயற்சிகளையும் தமிழ் பல்கலைக் கழகம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தமிழ் பல்கலைக் கழகம் யோசித்து தக்க முடிவு எடுக்கும். ஆனால் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஆங்கிலத்திலும், தமிழிலும் (வாரம்) திங்கள் இதழ் ஒன்றும் மாத இதழ் ஒன்றும் வெளிவரயிருக்கிறது. அதன் மூலமாக இத்தகைய நூல்களைப் பற்றி பலரும் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய தமிழ் வளர்ச்சி பணி வரையறுக்கப்பட்டு விட்டதா ? அதில் தமிழ் நூல்களை வளர்க்கும் பணிகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறதா அல்லது தொல் பொருள் ஆராய்ச்சி என்று சொல்வார்களே, அது போல, தமிழ் வளர்ச்சி பற்றிய பழைய நூல்களையும் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் ஆராய்வதற்கு முன் உரிமை வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சட்டம் ஒரு மசோதாவாக இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றத்தில்தான் எல்லா வரை முறைகளையும் செய்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினென்கீழ்க்கணக்கு போன்ற நூல்களை வெளியிடுகையில் தனியார்கள் 150 ரூபாய் பெறுகின்ற புத்தகங்களை 100 ரூபாய்க்கு கொடுப்பதோடு, மொத்தமாக வாங்குவதினால், ஒரு புத்தக ஸ்டேண்டையும் இலவசமாகக் கொடுக்கிற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை தமிழ் பல்கலைக் கழகமும் ஏற்பாடு செய்து, இது போன்ற தமிழ் நூல்கள் எல்லோருக்கும் விநியோகிக்கப்படுவதற்கான திட்டத்தைச் செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில், தனியார்கள் செய்து வருகிற வேலைகளின் மூலமாக நடைபெறுகிற சில காரியங்களில், தேவையானால்தான் நாம் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டுமே தவிர, அவர்களே நல்ல முறையில் செய்துக் கொண்டிருப்பார்களேயானால், நாம் வீணாக இதிலே இறங்கத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 667 தள்ளிவைக்கப்பெறுகிறது.

### பவானி ஆற்றிலிருந்து மேட்டுப்பாளையம் முதலிய ஊர்களுக்கு குடிநீர் வழி செய்யும் திட்டம்

வினா எண். 668—திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து பி. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) பி. மேட்டுப்பாளையம், கவுந்தம்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அந்த பேரூராட்சிகளின் நிதி நிலைமை காரணமாககைவிடப்பட்டது.

### தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

வினா எண். 669—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மத்திய அரசின் துணையோடு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நகரங்கள் எவை, எவை ?

(ஈ) செலவிட இருக்கும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) :— ஒரு விரிவான அறிக்கை * அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*752-755ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**திரு பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு லட்சம் மக்கள் தொகை குறைவாக உள்ள நகரங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 24 நகரங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அந்தத் தகுதியினையுடைய நகரங்கள் வேறு ஏதாவது இருக்கிறதா? இந்தத் திட்டம் மேலும் தமிழ்நாட்டிலே பலபகுதிகளிலே செயல்படுத்த அரசு முடிவு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு 40 சதவீதம் கடன், மாநில அரசு 40 சதவீதம் இணை தொகை, எஞ்சிய 20சதவீதம் தொகை உள்ளாட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அளிக்க வேண்டும். இந்த நிதி நிலையை மனதிலே கொண்டு, ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இந்த ஒரு லட்சத்திற்குக் குறைவான ஜனத்தொகை உள்ள ஊர்கள் இன்னும் எத்தனை இருக்கின்றன என்ற கணக்கு என்னிடத்திலே இல்லை. இப்போது எடுத்திருக்கிற 24-ல் காரைக்குடி தவிர 23-ல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த திட்டம் திருவண்ணாமலை, ராணிப்பேட்டை போன்ற நகரங்களிலே செயல்படுத்தப்படுவதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இதன்படி ஒரு கோடி ரூபாய் செலவழிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நகரங்களில் இந்த திட்டத்திற்காக என்ன வேலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை ஆண்டுகளில் அவை செய்து முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகள் அமைத்தல், போக்குவரத்து வசதிகள் கட்டுதல், பஸ் ஸ்டேண்ட் வித் ஆல் பெசிலிட்டீஸ், மண்டி மற்றும் அங்காடி கட்டுதல், போன்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே பண ஒதுக்கீட்டைப் பொருத்த மட்டிலே பல சந்தேகங்கள் கிளம்புகிற சூழ்நிலை இருப்பதால், விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மானாமதுரைக்கு, 1980-81-ல் எஸ்டிமேட் 87.80 இலட்சம் என்றும், அதற்காக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் கொடுக்க்க்கூடிய கடனுதவி 5 இலட்சம் என்றும் குறிக்கப்பெற்றிருக்கிறது. அதேபோல திருவண்ணாமலைக்கு 1980-81ல் எஸ்டிமேட் 81.19 இலட்சம் என்றும் கொடுக்கப்

பட்ட கடனுதவி 51 இலட்சம் என்றும் இருக்கிறதே. எந்த சூழ்நிலையின் அடிப்படையிலே கடனுதவி செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே , எஸ்டிமேட் போட்டு அனுப்பி பிறகு, கிடைக்கக்கூடிய மொத்தத் தொகையில் மத்திய அரசு 40 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம், அந்த நகராட்சியினுடைய பங்கு 20 சதவீதம் . அந்த நகராட்சியினுடைய தாங்கும் சக்தியைப் பொருத்து, அந்தந்த ஊர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு எந்த அடிப்படையில் நகரங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வளர்ச்சி பெறாத பின்தங்கிய நகரப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து தேர்ந்தெடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முதலிலே ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை என்று எடுத்து அதற்கு அடுத்தாற்போல 20 சதவீதம் கொடுக்கக்கூடிய சக்தியுள்ள ஊர்கள் என்று எடுத்து இந்தக் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இப்போது 23 செயல்படுகின்றன. மேலும் பரிசீலனை செய்து தேவையான நகரங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது வீட்டுமனை கொடுப்பது என்று சொன்னார்கள். வீட்டுமனை பெறுபவர்கள் என்ன முறைப்படி இருக்கவேண்டும். என்ன அடிப்படையிலே கொடுக்கப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற தகவல் ப்ரவிஷன் ஆஃப் ஹவுஸ் சைட்ஸ் என்றுதான் இருக்கின்றது. ஆகவே எந்த அடிப்படையில் தரப்படுகின்றது என்ற விவரம் இல்லை.

## சென்னை நகரில் ஓடும் சாக்கடை நீரை ஒழுங்குபடுத்தி சாலைகளைப் பராமரிக்கும் திட்டம்.

வினா எண் 670 —திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை நகரில் பல இடங்களில் சாக்கடை நீர் தெருவில் ஓடுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) சென்னை-1, வால்டாக்ஸ்ரோடு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு பல ஆண்டுகளாக சரியாக பராமரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். இதனைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்று வாரியம் வாயிலாக சென்னையில் கழிவு நீரகற்றல் நவீன முறைகளைக் கையாண்டு தக்க விதத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆம். சென்னை வால்டாக்ஸ் சாலை மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை பராமரிப்பு முறையே நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மற்றும் சென்னை மாநகராட்சியினரால் தக்க முறையில் பராமரிக்கப்படுகிறது. அவ்வப்பொழுது தொலைபேசித் துறையும், மின்சார வாரியமும் பாதையில் அவ்வப்பொழுது சிறு சிறு குழிகள் தோண்டுவதால் சாலையில் சிறிது சேதம் ஏற்படுகிறது. இருப்பினும் இச்சேதம் அவ்வப்பொழுது பழுதுபார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, சென்னைப் பெரு நகரத்தின் ட்ரெய்னேஜ் சிஸ்டமானது 6 இலட்சம் ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது ஜனத்தொகை சுமார் 40,45 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. ஆகவே இந்த சிஸ்டத்தை மாற்றி அமைக்க முடியுமா? அடுத்து என்.எஸ்.சி. போஸ் ரோடு, வால்டாக்ஸ் ரோடு போன்ற பல தெருக்களில் அந்த கழிவுநீர் வெளியே வழிந்து வந்து சுகாதாரத்தையே பாதிக்கின்றது. அதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய மக்கள் தொகை 43 இலட்சமாகும். மக்கள் தொகைப் பெருக்கமும், நெருக்கமும் வாய்ந்த ஜார்ஜ் டவுன், கொத்தவால்சாவடி பகுதிகளில் மிகவும் பழுதடைந்துள்ள கழிவு நீர் குழாய்களை மாற்றியமைக்க சுமார் ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் இப்பகுதியிலுள்ள 15 தெருக்களில் பழைய குழாய்கள் மாற்றப்பட்டு புதிய பெரிய அளவுள்ள குழாய்கள் போடப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வீடு இருக்கின்றது மேலும் கழிவுநீர் குழாய்களில் குப்பை, கூளங்கள் சென்று அடைத்துக்கொள்வதைத் தடுக்க வீதிகளில் கழிவு நீர் குழாய்

இணைப்புக்களில் உள்ள திறந்த கீழ்வளைக் கால்களை மாற்றி அதாவது சைஃபனை மாற்றி காற்றுப் புகாத மூடி வேய்ந்த தொட்டிகளைக் கட்டி அதற்கேற்ப வீட்டு கழிவு நீர் இணைப் புகளை தெருக்களில் உள்ள கழிவுநீர் குழாய்களில் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சிங்கப்பூர் போன்ற மேலை நாடு களில் உள்ளதுபோன்ற சுகாதாரத்தை என்றைக்குமே நல்ல முறையிலே பராமரிக்கின்ற வகையிலே ஒருசில பகுதிகளிலாவது தீவிர திட்டத்தை அமல்படுத்தி செய்வதற்குரிய வழிவகை இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் சிங்கப்பூர் போய்வர வேண்டும் என்ற கோப்பிலே முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். எப்போது போகப்போகிறேன், எப்போது வரப்போகிறேன் என்பது தெரி வில்லை. போய் வந்த பிறகு எப்படி இருக்கின்றது என் பதைப் பார்த்து அதைப்போன்ற திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : சென்னை நகர் முழுவதிலும் சாக்கடை நீர் வழிந்து ஓடுகிறது. பைப்புகள் ஸ்ட்ரைக் செய் கின்றன. காரணம் இப்பைப்கள் ஐம்பது, அறுபது ஆண்டு களுக்கு முன்பு போடப்பட்டவை. ஆகவேதான் இந்த நிலை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் சொன்னது போல் அப்போது நகரில் மக்கள் தொகை கம்மி. அப்படி கம்மியாக இருந்தபோது அந்தப் பைப்கள் போடப்பட்டன. அந்தப் பைப்களுக்கு ரொம்பவும் சர்வீஸாகிவிட்டது. என் தொகுதியில், ராயபுரம் பிரிட்ஜுக்கு மேல் காரில் போகும் போது பார்க்கலாம். ஜனங்கள் போய் வரமுடியாதபடி அவ்வளவு நெரிசல். அங்கு முஸ்லீம்கள் அதிகமாக வாழ் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நகரத்தைப் பற்றி விவரித்து கொண்டு போக வேண்டாம். இது கேள்விநேரம். கேள் வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆகவே, ராயபுரம், வண்ணாரப் பேட்டை போன்ற பகுதிகளில் சாக்கடை நீரை ஒழுங்குபடுத்தி சாலைகளை நன்கு பராமரிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நானும் அந்தப் பகுதியில் ஐந்தாறு ஆண்டுகள் குடியிருந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை மனதில் கொண்டு ஆவன செய்வதற்கு முயற்சி செய்யலாம்.

ஹர்பான்சிங் கமிட்டி அறிக்கை.

*வினா எண் 671—திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) ஹர்பான்சிங் கமிட்டி ரிப்போர்ட் அரசுக்கு கிடைத்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பரிந்துரையை அமல்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் யார் யார்? அவர்கள் இருமுறை கூடியதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழு சொல்லிய ஆலோசனைகள் என்ன?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: The following decisions were taken in the Cabinet meeting:—

(i) The provisions of the relevant Acts relating to employment of children may be strictly enforced.

(ii) Immediate action should be taken to shift the operations from factories to the village where the children reside, by setting up worksheds in villages by employers or by co-operative societies.

(iii) A comprehensive scheme should be worked out to give the children in the area sufficient incentives to attend school and to give them education side by side with their work, wherever possible;

(iv) The minimum wages should be revised with a view to increas the earning capacity of the workers; and

* 756—799 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[1982 மார்ச் 31

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** ஆங்கிலத்தில் சொன்னால் நாங்கள் எப்படிப் புரிந்து கொள்வது? எங்கும் தமிழ் எதிலும் தமிழ்.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவர அறிக்கை அவை முன் வைக்கப்பெற்றுள்ளது. அதில் எல்லாம் இருக்கின்றன.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** விவர அறிக்கைக்கு அப்பாற்பட்டு சிலதைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தச் சட்ட மன்றத்தில் ஆங்கிலம், தமிழ் இரண்டையும் உபயோகிக்க லாம். இப்போது என்னிடம் இருப்பது ஆங்கிலத்தில் இருக்கிறது. அதைப் படிக்கிறேன். இதைப் படிக்காமல் கூட இருந்திருக்கலாம். ஆனால் உங்களுக்கு தகவல் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் படிக்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கும் சரி, திரு. உமாநாத் அவர்களுக்கும் சரி ஆங்கிலம் தெரியும். முதலில் இதை படித்துவிடுகிறேன்.

(v) A Boardunder the Chairmanship of the Collector of Ramanatha-puram with tepresentatives of employers and Labour Unions as members should be constituted, to ensure welfare measures to the children employed in the factories and to co-odrinate the activities of various agencies involved in mitigating the problem of child labour.

இது காபினெட் டிஸிஷன். அதையொட்டி 1980-ல் இராமநாத புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், தொழில் அமைப்புகள் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் குழு கூட்டம் 22—7—1981 அன்று கூடியது. அடுத்து 19—1—1982 இல் கூடியது.

இந்திய அரசு தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் பற்றிய உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப தமிழ் நாடு அரசாங்கம் சிறுவர்கள் வேலைப் பற்றிய விவரங்களை கண்டறிய தமிழ் நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலை வராகக் கொண்டு ஏப்ரல் 1981-ல் ஒரு மாநில ஆலோசனை வாரியம் நிறுவியது. அந்த வாரியத்தின் பணிகளாவன :—

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சம்பந்தமாக தற் போதுள்ள சட்ட விதிகளை ஆராய்ந்து பரிசீலித்தல்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சம்பந்தமாக அவர்கள் வேலைமுறை, நல்வாழ்வு பற்றி இயற்றப்பட வேண்டிய சட்டங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்குதல்



1982 மார்ச் 31]

பணிபுரியும் சிறுவர்களின் நல்வாழ்வுத் திட்டம் முன்னேற் றம் குறித்து மறுபரிசீலனை செய்தல்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதலை தவிர்க்க முற்போக் கான நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்தல். இந்த வாரியம் 24—6—1981 அன்று கூடி, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சம்மந்த மாக, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு சட்டங்களைப் பரிசீலித்து, அவர்களுக்கு முறையான கல்வி கற்றுக் கொடுப்பதற்கும், மற்றும் இன்சூரன்ஸ் சலுகைகள் போன்றவைகள் கொடுப்ப தற்கும் பரிந்துரை வழங்கியுள்ளது.

[முற்பகல் 9—40]

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லை. யார் யார் அந்தக் குழுவிலே இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. அதைச் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். பெயர்கள் இல்லை. அந்தத் தகவல் என்னிடம் இல்லை......

இப்போது அந்தப் பட்டியல் வந்திருக்கிறது. அந்தப் பட்டியலைப் படிக்கிறேன்.

Members of the Tamil Nadu Legislature and Parliament:

1. Thiru M.S.K. Sathiendran, M.P.
2. Thiru N. Soundrarajan, M.P.
3. Thiru P. Anbalagan, M.P.,
4. Thiru M. Soundararajan, M.L.A.
5. Thiru V. Balakrishnan, M.L.A.
6. Thiru S. Alagarsami, M.L.A.
7. Thiru R. Thamaraikani, M.L.A.

Employers' Representatives:

1. Thiru A.M.S. Ganesan, President. The Tamil Nadu Fire Works and Amarces Manufacturer's Association, Sivakasi.

2. Thiru N. Hasan Mohamed, M.A., B.L.

3. Thiru K.S. Subramanian,
4. Thiru S.S. Sankaralingam,
5. Thiru D. Antony.

Employees' Represen atives—

1. Thiru K. Kaliappan, President, National General Workers Congress (INTUC), Sivakasi.
2. Thiru A.S. Kalimutu, General Secretary, Printing Match and General Workers Union, (CITU), Sivakasi.
3. Thiru S. Sadaksharam, Secretary, Sathur Division General Workers, Union (AITUC), Sivakasi.
4. Thiru K. S. Govindarajan, Vice President, (INTUC), Madurai.
5. Thiru Madurai N.S. Velu, A.I.A.D.M.K., Peravai Seyarkuzhu Member, Madurai.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, முக்கிய மான பரிந்துரையாக சிவகாசியிலே இருந்து 5 கிலோ மீட்டர் களுக்கு அப்பால் அந்தச் தொழிற்சாலை உருவாக்க வேண்டு மென்பது. அப்படி அமுல் படுத்தப்பட வேண்டுமென்று இன்னும் சொல்லப்படுகிறது. ஆனால், பல்வேறு சந்தர்ப்பங் களில், சமீபத்தில் கூட திருவேங்கடம் போன்ற பகுதிகளில் விபத்துக்கள் ஏற்பட்டு, அதிலே சிறுவர்கள், குழந்தைகள் உள்பட பலர் இறந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பரிதாப கரமான நிலைமையைத் தடுப்பதற்கு அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கைகளை யெல்லாம் சொல்லிவிட்டேன். இதை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதுதான் நடவடிக்கை.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உத்தரவு போட்டபிறகு, சட்டங்களை மீறியதற்காக பல இடங்களில் நடவடிக்கை எடுக்கப்படுவதைப் பார்த்தேன். எந்த பிராசிகியூஷனிலாவது இதுவரைக்கும் எந்த முதலாளியா வது சிறைப்படுத்தப்பட்டிருக்கிறாரா? இன்பிரிசன்மென்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி கொடுக்காமல், அவர் களுக்கு வெறும் பைனோடு விட்டுவிடுகிறோம் என்று சொன் னால், இந்த உத்தரவினால் பிரயோசனமில்லை. ஆக்சிடென்ட் ஏற்பட்டு, குழந்தைகள் அடிக்கடி செத்துக் கொண்டிருக்கிறார் கள். ஆகவே, இந்த மாதிரி பிராசிகியூஷனிலே இம்பிரிசன் மென்டைப் பொறுத்தவரையில், சட்ட இலாக்கா மூலம் ஹைகோர்ட்டை அப்ரோச் செய்து, ஏதாவது கைட்-லைன்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் தண்டனை கொடுத் ததாகத் தெரியவில்லை என்னுடைய பல ஆண்டு கால அனு பவத்தில். இனிமேல் இந்த வழக்கைப் போடும்போது, சிறைக்கு அனுப்பவேண்டும், சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பச்சையாறு பாசனத் திட்டம்.

வினா எண் 672— திரு. எம். சின்னசாமி—, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பச்சையாறு பாசனத் திட்டம் கைவிடப்பட்டது என்று தமிழக அரசு மத்திய திட்டக் குழுவிற்குத் தெரிவித்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

(இ) அத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) 1975 ஆம் ஆண்டில் இத்திட்டம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இத்திட்டத்திற்கான அடிக்கல் அதே ஆண்டில் நாட்டப்பட்டது. ஆனால், விரிவான ஆய்வுக்குப் பிறகு இத்திட்டத்திற்குத் தேவைப்படும் இடம் களக்காட்டில் அடர்த்தியான வனப்பகுதியில் உள்ளதாலும் இயற்கை காடு களை அழிப்பது அவசியமாகும் என்பதாலும், மற்றும் சிக்கன மற்றது என்பதாலும் இத்திட்டத்தைக் கைவிட அரசு முடி வெடுத்தது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதால் அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதே, அந்த அடிக்கல்லும் அகற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1975 ஆம் ஆண்டிலே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கல் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. இருந்தால் வேண்டுமானால் யோசிக்கலாம்.

[1982 மார்ச் 31

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள், அது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமாஷாகத்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் திட்டம்.

* வினா எண். 673—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தாலுக்கா, பட்டுக்கோட்டை தாலுக்கா ஆகியவற்றில் பாசன வசதியை மேம்பாடு செய்ய கல்லணை விரிவாக்கக் கால்வாயை மேம்பாடு செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கல்லணை விரி வாக்கக் கால்வாய் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆகவே அதனை சீரமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. கல்லணை விரிவாக்கப் பகுதியிலே—மன்னார்குடி, பட்டுக் கோட்டை போன்ற பகுதிகளிலே எவ்வளவு மழை பெய்தாலும் கூட பாசனத்திற்கு நீர் இல்லாமல் பல விவசாயிகள் அவதிப்படு கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல் கிறார்கள் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்கு தாங்கள் பதிலைச் சொல்கிறீர்களா ? அமைச்சர் என்ன சொல்கிறார் என்று திரும்பச் சொல்லி விளக்கம் வியாக்கியானம் செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பரிசீலிக்கக் பரிந்துரைக்க, குழு அமைப்பதற்கு ஆலோசனை ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போது இருக்கக் கூடிய கல்லணை விரிவாக்கத் திட்டம் நல்ல முறையிலே இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே அதை விரிவாக்கவோ சீர் செய்யவோ நிலைமை எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் ஒருவேளை நீர்ப் பற்றாக்குறை இருக்கலாம்.



1982 மார்ச் 31]

பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்துகின்ற திட்டம் (மாடர்னைசேஷன் ஸ்கீம்) என்ற முறையிலே அந்தப் பணிகளுக் காக நாம் நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி நவீனப்படுத்தப் படுமானால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைபாடுகள் தவிர்க்கப்பட்டு எல்லாப் பகுதிகளுக்கும் பாசன வசதி கிடைக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மேம்பாடு என்றால் பாசனம் பெறுவதை விசேஷமாக நவீனப்படுத்துவது, அவ்வாறு செய்வ தற்கு செயற் குறிப்பு என்ன இருக்கிறது ? அதனுடைய விவரங்கள் என்ன ? அந்தப் பகுதியை—இப்போது அல்ல, தண்ணீர் எல்லாம் வந்து முடிந்து விட்டது—தண்ணீர் சிரமம் இருக்கிறபோது அமைச்சர் அவர்கள் வந்து பார்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நிச்சயமாக நான் வருகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, கல்லணை. விரிவுபடுத்துகின்ற இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றி நீர் கிடைக்காத நிலைமையில் உள்ள பகுதிகளில்—புதுக் கோட்டை இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீரை எடுத்துச் செல்கிறார்கள்— தஞ்சை மாவட்டத்திலே நீர் இல்லாத பகுதிகள் இருக்கிறபோது தண்ணீர் கிடைப்பதற்கு இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் இந்தக் கேள்விக்கு தொடர்பாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ தஞ்சாவூர் பகுதியில் சிரமமாக இருக்கிறது. அதை கவனிக்காமல் விட்டுவிட்டு இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு செய்வதுபோல் —காவிரி நீரை மட்டும் இந்த அரசு நம்பி மற்றத் திட்டங்களை எடுக்கவில்லை என்ற—தவறான கருத்து ஏற்படும். கிழக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கு மழை காலங்களிலே தண்ணீர் விரையமாக கடலிலே கலக்கக் கூடிய நிலையைத் தடுத்து அந்த நீரைப் பயன்படுத்து கின்ற திட்டம் தனித் திட்டம். கல்லணையை மேம்படுத்துகின்ற திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகிறபோது அதை அகலப் படுத்துகிற நிலைமை ஏற்படுகிறபோது கூடுதல் தண்ணீர் கிடைப் பதன் மூலம் பற்றாக்குறை பகுதிகளுக்குப்பயன்படுத்த முடியும்.

Institute of Hydraulics and Hydrology at Poondi.

Q. No. 1674: THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether it is a fact that a grant of Rs. 15 lakhs by the Central Board of Irrigation and Power for giving a fillip to research activities at the Institute of Hydraulics and Hydroloy in Poondi, near Madras has been surrendered to the Agency,

(b) if so, the details thereof, and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மத்திய நீர்ப் பாசன மின் கழகத்தால், பூண்டி நீரியல் ஆய்வுக் கழகத்துக்கு விரிவான ஆய்வுகட்காக அளிக்கப்பட்ட ரூ. 15.00 இலட்சம் திரும்ப ஒப்படைக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இதற்கு இடமில்லை.

பரம்பிக்குளம் ஆளியார் அணையிலிருந்து பாசனம் பெறும் நிலப்பரப்பு.

வினா எண். 675: திரு. கே. ரமணி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பரம்பிக்குளம்—ஆளியார் அணையிலிருந்து நீர்ப் பாசனம் பெறுகிற மொத்த நிலப் பரப்பு எவ்வளவு ?

(ஆ) தற்போதுள்ள பாசன நிலப் பரப்பை மேலும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) பரம்பிக் குளம்—ஆளியாறு மூலத் திட்டத்தின்படி 1,01,500 ஹெக்டேர் (2,50,700) ஏக்கர் பயன் அடையும்.

(ஆ) மற்றும் (இ) : மேலும் 46,500 ஹெக்டர் (1,15,000 ஏக்கர் பரப்புள்ள நிலங்களை இந்த ஆயக் கட்டில் சேர்க்க அரசு 1978ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வாண்டு மேலும் இவ்வாயக்கட்டுகளின் மத்தியிலும், விளிம்பிலும் விடுபட்டுப்போன சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்களை இந்த ஆயக் கட்டில் சேர்க்க அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. இது தவிர நிலங்களை மேலும் சேர்க்க கோரிக்கைகள் வந்துள்ளன. இவற்றின்மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் அறிக்கை கோரப்பட்டுள்ளது கல்லணை



(முற்பகல் 9-50)

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரம்பி குளம், ஆளியாறு பாசனத் திட்டம் ஆரம்பத்தில் அமலுக்கு கொண்டு வரப்பட்டபோது எவ்வளவு ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டமாக அமைக்கப்பட்டிருந்தது ? அதிலேயிருந்து விஸ்தரிப்பு என்று இரண்டு, மூன்று தடவைகள் விஸ்தரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிகமாக விவசாயிகளுக்கு நீர் கிடைப்பது நல்லதுதான். ஆனால் இவ்வளவு விஸ்தரிப்பு வருவதால் ஆரம்பத்தில் போட்ட திட்டத்தை போல சரியான முறையிலே நிறைவேற்றப்படுகிறதா ? நிறைவேற்ற முடியுமா ? இந்த அளவு தண்ணீர் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தயாரித்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட அறிக்கையில் மொத்தமாக 2 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிற்கு பாசன வசதி அளிக்க வசதி செய்யப் பட்டது. அதன்படி பொதுவாக 2,50,700 ஏக்கர் பாசன வசதி ஒரு கட்டத்திலே கொடுத்துக் கொண்டிருந்தது. அதற்கு பிறகு கூடுதலாக ஒரு லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களை சேர்க்க அரசு ஆணையிட்டிருக்கிறது. இப்படி ஆணை இடுகிறபோது இதற்கு முன்பு சுழற்சி முறையிலே $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒரு முறை நீர்வழங்குவது என்ற மண்டல அடிப்படையிலே என்கிற நிலைமை மாறி 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்கிற நிலைமையை மேற்கொள்கிறபோது கூடுதலாக இந்த இடத்தையும் நாம் எடுக்க வாய்ப்பிருக்கிறது என்ற முறையிலே தான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த பாசனத் திட்டத்திற்கு முதலிலே நிர்ணயித்திருந்த 2 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கருக்கு மேலே ஒரு லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் மறுபடியும் அதிகப்படுத்தி, அதற்கு பிறகு இன்னும் 25 ஆயிரம் ஏக்கருக்கு வேண்டிய திட்டங்கள் அரசு கையிலே வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இது மிக முக்கியமான விஷயம். ஆக வருஷத்திற்கு ஒரு முறை விட்டுவிட்டு நீர் கொடுக்கும்படியாக நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் அதன் விளைவாக பல்லடத்திலேயிருந்து திருப்பூர் நகரம் வரைக்கும் இருக்கும் பகுதிகள், அதற்கு வடக்கே இருக்கும் பகுதிகள் அங்கே எல்லாம் வாய்க்கால்கள் அமைத்தும் கூட வருஷக் கணக்காக தண்ணீர் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அளவிற்கு மிஞ்சி இப்படி திட்டம் போட்டதால் அல்லவா இந்த நிலை, இது சரிதானா ? இதை முறையாக மறுபரிசீலனை செய்து எல்லா விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்கிற சுழற்சி முறையை நாம் மேற்கொள்கிறபோது இப்போது புதியதாக

சேர்க்கப்பட்டிருக்கிற இடத்தின் அளவின் காரணமாக
பிரச்னைகள் வர வாய்ப்பில்லை. ஆனால் இரண்டு ஆண்டு
களுக்கு ஒருமுறைதான் கொடுக்கப்படுகிறது. மற்ற காலங்களில்
நீர் கொடுக்கவில்லை என்கிறபோது சிரமங்கள் ஏற்படலாம்.
மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பல்லடம், கோவையிலே,
ஒரு பகுதி அவிநாசி தாலுக்கா இவைகளை எல்லாம் நாம் வேறு
முறையிலே ஏதாவது நீர் பாசனம் கிடைப்பதற்கு—ஏற்கனவே
கேள்வி பதிலிலே சொல்லி இருக்கிறேன்—லோயர் பவானி,
எல்.பி.பி.யினுடைய மேற்கு பகுதியிலே இருந்து ஓரளவிற்கு நீர்
வளத்தை சேமித்து பாசனத்தை கொடுக்க முன் வருகிறபோது
இந்த பிரச்னைகள் கூடுமானவரையில் தவிர்க்கப்படும்.

திரு. எம். பி. இரத்தினம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புதிதாக ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை
ஏக்கர் நிலங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன? இதனால்,
பொள்ளாச்சிப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இதுநாள்வரை
கிடைத்து வந்த பாசன வசதி குறைவதால் இந்த நீர்ப்
பாசனத்தைத் தொடர்ந்து பல சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை
ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, புதிதாக 1,15,000 ஏக்கர் சேர்க்கப்பட்டுள்ளபொழுது
கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சியில் 20,450 ஏக்கர்,
சேர்க்கப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டையில் 29,700 ஏக்கரும்,
பல்லடத்தில் 26,700 ஏக்கரும், தாராபுரத்தில் 38,150 ஏக்கரும்
சேர்க்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே இப்பொழுது
பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கேட்பது புதிதாக மேலும் இடங்களை
அதிகரித்துக் கொண்டே போகாமல் ஓரளவு நீர்வளம் இருக்கு
மானால் அதைச் சிறப்பு சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் மூலம்,
அதாவது, கண்மாய்களை அதிகப்படுத்துவது, அதன் மூலம் நீர்
வளப்படுத்துவது, அதன் மூலம் பாசன வசதிகளுக்கு ஏற்பாடு
செய்தால் அந்தப் பிரச்னைகள் வராது என்ற கருத்திலேதான்
அவர்கள் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை ஒரு கருத்
தாக, இப்பொழுது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## Exploration of Magneisite Deposi s for Salem District

Q; No. 676 THIRU S. RAJARAMAN: Will the Hon. Minister for industries be pleased to stat : the details of the steps taken to expand the magnesite deposits explora ion at Salem district

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அவையின்முன்
விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

---

* 760-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்
பெற்றுள்ளது.





திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்புக்காடு என்ற பகுதியில் கிடைக்
கக்கூடிய இந்த மாக்னசைட் குறித்து அரசு விரிவான முறையில்
மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு
கிறேன். மேலும், தற்போது வெட்டி எடுக்கக்கூடிய மாக்னசைட்
கற்கள் தனியாருக்கு அப்படியே விற்கப்படுகின்றன. ஆகவே,
அந்த மாக்னசைட் கற்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை
அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்தியப் புவியியல் பிரிவு, தமிழ
நாடு மாநிலத்தினுடைய புவியியல் பிரிவு, இவையெல்லாம் அந்
தப் பகுதியிலே விரிவான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்
கள். அந்த ஆய்வுகளின் அடிப்படையிலேதான் அந்தப் பகுதி
களிலே 44 மில்லியன் டன்களும் அதைப் போல் இரண்டாவது
தரத்திலே, 11 மில்லியன் டன்களும் இப்படி அந்தப் பகுதி
யிலே இருக்கின்றது என்றும் அதைப் போல சேலம் மாவட்
டத்தைப் பொறுத்தவரை அந்தப் பகுதியிலே இன்னும் பரவ
லான இடங்களில் ஆத்தூர், ராசிபுரம், நாமக்கல் போன்ற பகுதி
களிலும், ஓமலூர் வட்டத்திலேயும் இப்படி பல்வேறு இடங்
களிலேயும் இருக்கிற மாக்னசைட் அகழந்து எடுக்கப்படுகிறது.
தமிழ்நாடு மாக்னசைட் கார்ப்பரேஷன் அகழ்ந்து எடுக்கின்ற
பொழுது, முதலிலே, துவக்கத்திலே 7,000 டன் மாதம் ஒன்றுக்கு
அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மாதந்தோறும்
12,000 டன் எடுக்கப்படுகிறது. அது அப்படியே ''ரா மாக்ன
சைட்''டாக விற்கப்படுகிறது. அதை அப்படியே ''டெட் பர்ன்
மாக்னசைட்''டாக, வெப்பம் தாங்கிக் கற்களாக மாற்றுகிற
தொழிற்சாலை சுமார் ரூ. 4 கோடி மதிப்பீட்டிலே அமைக்கும்
திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சேலத்தில் மட்டும் சுமார் 8½ கோடி டன்கள் மாக்ன
சைட் படிவங்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. அந்த மாக்ன
சைட் படிவங்கள் உருக்கு உற்பத்திக்கு பயன்படுவதாகச் சொல்
லப்படுகிறது. எனவே, அங்கே கிடைக்கின்ற மாக்னசைட்டைப்
பயன்படுத்தி, சேலம் உருக்காலைத் திட்டத்தை முழுமையாக
நிறைவேற்ற மத்திய சர்க்காரைத் தமிழ் நாடு அரசு வற்புறுத்
துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்தை
முழுமையாக்க வேண்டும், ஃபுல் ஃப்ளெஜ்ட் ஸ்டீல் பிளான்ட்
டாக அதைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லி பல்வேறு
நேரங்களிலே மாநில அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வற்
புறுத்திக் கொண்டு தானிருக்கிறது. இப்பொழுது கிடைக்கிற

மாக்னசைட் டெட் பர்ன் மாக்னசைட்டாக மாற்றப்பட்டு, வடநாட்டிலே இருக்கிற இரும்பு உருக்காலைக்கு அனுப்பப்படுகிறது. மைய அரசு அனுமதித்து, நம்முடைய பகுதியிலே, சேலத்திலே, இரும்புத் தொழிற்சாலை வருகிறபொழுது, அப்பொழுது இது இங்கே பயன்படும்.

இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம்.

* வினா எண் 677—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசிடமிருந்து குத்தகைக்கு எடுத்த சிமெண்ட் ரிசர்ச் இன்ஸ்டியூட் ஆப் இந்தியா (சி.ஆர்.ஐ.) தினந்தோறும் எத்தனை டன் சிமெண்ட் உற்பத்தி செய்கிறது ?

(ஆ) சி.ஆர்.ஐ. நிறுவனத்திற்கு குத்தகை முடிவது எப்போது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) 20 டன்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் கல்லக்குடிக்கு அருகில் முதுவத்தூரில் உள்ள முன்னோடி சிமிண்டு ஆலையை மைய அரசு சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (சி.ஆர்.ஐ.) குத்தகைக்கு விடவில்லை. மேற்படி ஆலை சரியாக இயங்காததால் இது மைய அரசு சிமிண்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒரு ஆராய்ச்சி நிறுவனமாக தென்னகத்தில் இயங்குவதற்காக 6–6–1974 ஆம் நாள் தமிழக அரசால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-00.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆராய்ச்சி செய்வதற்காகத் தமிழக அரசு இதை சி.ஆர்.ஐ.–யிடம் விட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்தவிதமான ஆராய்ச்சியும் செய்யாமல், நாள்தோறும் 24 மணி நேரமும் மூன்று ஷிப்டுகள் வேலை செய்து 20 டன் சிமிண்டை உற்பத்தி செய்து விஸ்வகர்மா என்ற பெயரிலே விற்பனை செய்து வருவது அரசுக்குத் தெரியுமா ? அது மட்டுமல்லாமல், தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் லேபர் ஆபீசர்கள் தொழிலாளர்களுடைய சட்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்று சொல்லியும்கூட இது ஆராய்ச்சிக் கூடம் தான், ஆகவே இங்கே தொழில்கள் நடக்கவில்லை என்று சொல்லி வருவதும் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல தமிழ்நாடு அரசு இதை மைய அரசு சிமின்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு—சி.ஆர்.ஐ-க்கு நன்கொடையாகக் கொடுத்தது. ஆராய்ச்சிகளெல்லாம் முடிவு பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு தமிழக அரசை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். சாதாரணமாக மினி பிளான்ட் என்றால்கூடக் குறைந்தது 400 டன் அல்லது 200 டன் கெப்பாசிட்டி இருந்தால் தான் ஒரு சிமின்ட் ஆலை இலாபகரமாக இயங்க முடியும். அதுவும் கன்ட்ரோலே இல்லாமல் வெளியே விற்கலாம் என்ற விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால்தான் அவ்வாறு முடியும்,. ஆனால் 20 டன் கெப்பாசிட்டிதான் என்றால் அதை யார் நடத்தினாலும் நஷ்டம்தான் வரும். ஆகவே, அவர்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று நாம் சொல்கிறோம். எங்களுக்கு வேண்டாம், நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிக் கடிதத் தொடர்பு நடந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றிப் பரிசீலனையிலே இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். நவநித கிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சிமின்ட் ஆலை எந்த நோக்கத்திற்காகப் பயன்பட வேண்டுமோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அங்கே ஆராய்ச்சி செய்யப்படவில்லை, சிமின்ட் உற்பத்தி செய்து வெளியிடத்திலே வேறு பெயரில் விற்பனை ஆகிறது. இதனால் அரசுக்கும் வர வேண்டிய வருமானம் போகிறது ; தொழிலாளர்களுடைய நலனும் பாதிக்கப்படுகிறது. ஏனென்றால், தொழிலாளர் நலனுக்காகப் பேக்டரி சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றால், இது தொழிற்சாலை அல்ல, ஆராய்ச்சிக் கூடம்தான் என்று காரணம் காட்டுவதால் தொழிலாளர் நலனும் பாதிக்கப்படுகிறது. எனவே இதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி இந்த நிறுவனத்தை அந்தத் தொழிலாளர்களிடம் விட்டுவிடுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஆராய்ச்சிக் கூடம்தான். மைய அரசுக்குத் சொந்தமான சி.ஆர்.ஐ. தான் அங்கே ரிசர்ச் செய்தது. தொழிலாளர்கள் நடத்தலாம் என்ற யோசனையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். ஆனால் அதுபற்றித் தொழிலாளர்களிடமிருந்து எங்களுக்கு எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை. நான் ஏற்கனவே சொன்னேன், அந்த மினி பிளான்ட் —இன்னும் சொல்ல வேண்டுமானால் மினி மினி பிளான்ட் என்று கூடச் சொல்லலாம்—அப்படி 20 டன் கெப்பாசிட்டியை வைத்துக் கொண்டு என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும்.

[1982 மார்ச் 31]

திரு. ஆர். உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, சட்டி சுட்டது கைவிட்டது என்பதைப்போல, மாண்புமிகு அமைச்சர வர்கள் சொன்னதிலிருந்து நீங்களே வையுங்கள் என்று அவர்கள் சொல்வது மாதிரி சொன்னார்கள். சிறு தொழில்களை அதிகப் படுத்துவது ஊக்குவிப்பது என்பது மாநில அரசின் கொள்கையாக இருக்கும்பொழுது இலாப நஷ்டத்தைப் பார்த்துச் செய்வது அல்ல, வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் அந்தக் கொள் கைக்கு உட்பட்டு, அவர்களாக ஆஃபர் செய்யும்பொழுது, சிமின்ட் ப்ரடொக்ஷன் நன்றாக ஆகும்பொழுது நாம் ஏன் ஏற்றுக்கொள் ளக் கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், இது 20 டன் கெப்பாசிட்டி தான் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்பைக். கருத்திலே கொண்டாவது, நஷ்டம் வந்தாலும் நடத்தலாமே என்று கூறினார்கள். இப்படி வேலைவாய்ப்பைக் கருத்திலே கொண்டு நஷ்டம் வந்து கார்ப்பரேஷன் நடத்தினால், பாருங்கள். கார்ப்பரேஷன், உங்கள் அரசாங்கத்தினாலே திறமைக் குறைவால் செராமிக் இன்டஸ்ட்ரி நஷ்டத்திலே ஓடுகிறது என்று சொல் வார்கள். அதிலே பத்தாயிரம் பேர் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால் அப்பொழுது, அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை, நஷ்டத்திலே நடத்தப்படுகிறது என்பது போன்ற குற்றச் சாட்டுகள் சொல்லப்படுகின்றன. சாதாரணமாக மினி சிமின்ட் பிளான்ட் என்றால் 200 டன் கெப்பாசிட்டியாவது இருந்தால் தான் ஓரளவுக்கு வெற்றிகரமாக, இலாபகரமாக நடத்த முடி யும். 20 டன் கெப்பாசிட்டியை வைத்துக்கொண்டு இலாப கரமாக நடத்துவது என்பது இப்பொழுது பரிசீலனை செய்யப்பட வேண்டியது, ஆய்வு செய்யப்பட வேண்டியது. எனவே, அது அரசினுடைய தீவிரமான பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தும் திட்டம்

*வினா எண். 678 : திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழக்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை நவீனப் படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும் ?

(இ) திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 1978–79) 1979–80 ஆம் ஆண்டுகளில் ஈட்டிய லாபம் எவ்வளவு ?



1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) அந்தந்த ஆண்டுகளில் ஈட்டிய லாபம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| ஆண்டு. | (லாபம் அந்த ஆண்டிற்கானது) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1978 .. .. | 20·16 |
| 1979 .. .. | 28·20 |
| 1980 .. .. | 36·41 |

திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையில் உள்ள கருவிகள் எல்லாம் மிகவும் பழையவையாக இருக்கின்ற காரணத்தினால் அதைப் புதிதாக மாற்றி நவீனப்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்ககசு : பேரவைத் தலை வர் அவர்களே, சுமார் 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கே உள்ள இயந்திரங்களை ரிப்பேர் பார்க்கவும், மாற்றி அமைத்து சில புதிய கட்டிடங்களைக் கட்டவும் போன்ற பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இதுவரையில் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவு செய் யப்பட்டிருக்கின்றது. இன்னமும் தேவைக்கேற்ப விரிவாக்கமும் மாறுதல்களும் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை விரிவாக்கம் செய் யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி விரிவாக்கம் செய்யப்படும்போது அந்த மாவட்டத்திலே உள்ள அந்த தாலுகாவிலே உள்ள பின்தங்கிய பகுதிகளில் அந்த விரி வாக்கப் பணி அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் லாபங்களைப் பற்றித்தான் சொன்னேன். ஆனால் மொத்தத்தில் லாபமா, நஷ்டமா என்றால் மொத்தத்திலே 5 லட்சம் ரூபாய் நஷ்டம். சென்ற 3, 4 ஆண்டு களாக லாபம் இருந்தாலும் கூட, மொத்தம் 5 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருக்கின்றது. இந்த ஆண்டு அந்த நட்டம் ஈடு செய்யப்பட்டு, லாபத்தில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி முழுமையாக லாபத்திலே வந்ததற்குப் பிறகு அந்தக் கதிர்களை, ஸ்பின்டில்களை அதிகரிப்பதா அல்லது இன்னொரு பின்தங்கிய பகுதியிலே ஒரு துணை தொழிற்சாலையை துவங்கு வதா என்பது பற்றி முடிவு செய்யவேண்டும். அப்போது அது பற்றி அரசு யோசனை செய்யும்.

[1982 மார்ச் 3

தீண்டாமை ஒழிப்புப் பற்றி செய்திப்படம் தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 679—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பு சினிமாப்படம் தமிழக அரசு செய்தி நிறுவனத்தின் மூலம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி ஆம். தீண்டாமைக் கொடுமைகள் குறித்து செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலமாக செய்திப்படம் தயாரிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் படம் தயாரிக்கப்படும், கதைகள் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா, நடிகர், நடிகைகள் தேர்வு செய்யப்பட்டு விட்டனரா, என்பதோடு, அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தத் தீண்டாமை படத்தில் வரும்போது விளக்க உரை ஆற்ற இடம் பெறுவார்களா ? என்னைப்போன்றவர்கள் இனாமாக நடித்துக் கொடுப்பதற்கு இந்தப் படத்தில் அனுமதிப் பார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் படத்தினைத் தயாரிப்பதற்கு 1.16 இலட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு ஆகக் கூடிய செலவில் பாதியை மைய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு நடிப்புத் திறமை இருக்குமானால் அவருடைய நடிப்புத் திறனை அந்தப் படத்தை இயக்குகின்ற இயக்குநரிடம் நிரூபிப்பதற்கேற்ப அவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இனாமாக நடிக்க வருகிறேன் என்று சொன்னார்கள். அவர் இவ்வளவு நாளும் இந்தத் தீண் டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அமைச்சருக்குத் தான் போட வேண்டும். உறுப்பினர்களுக்கு அல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தொட் டால் தீட்டு என்பதுதான் தீண்டாமையின் விஷ வித்தாகும், தாழ்த்தப்பட்ட மக்கள் தானியங்களை உற்பத்தி செய்யும்போது அதை மற்றவர்கள் தொடாவிட்டால் என்னவாகும் என்பதையும். மருத்துவமனையில் உயிருக்குப் போராடும் நோயாளிக்கு இரத் தம் கொடுக்கும்போது தீண்டாமை பின்பற்றப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனி குரூப் இரத்தம் இல்லை..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனையில் இருக்கி றது என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டா கள்.



1982 மார்ச் 31]

நன்செய் நிலங்களில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண். 680—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

புஞ்செய் நிலத்தில் இருந்து ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதோடு நஞ்செய் நிலத்திலும் மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : வீட்டுமனைப்பட்டாக் கள் வழங்குவதற்காகவோ அல்லது பிற காரியங்களுக்காகவோ உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நன்செய் நிலங்கள் அல்லது தோப்பு நிலங்கள் கையகப்படுத்தக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கை. ஆயினும், வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்கு நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துவது தவிர்க்க இயலாதது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால் அரசின் முன் அனுமதி பெற்று நன்செய் நிலங்களை கையகப்படுத்த முன் மொழிவுகள் அனுப்பும்போது அவைகள் ஆய்வு செய்யப்பட்டு ஆணைகள் இடப் படுகின்றன.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள்.

*வினா எண் 667—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இதுவரையில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையம், 152 மத்தியச் சட்டங்களையும் 46 மாநிலச் சட்டங்களையும், ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. இவற்றில், 16 மத்தியச் சட்டங் களும் 4 மாநிலச் சட்டங்களும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10–10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சட்டங்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்படுகிறபோது, அந்த மொழிபெயர்ப் புக் குழு அந்தச் சட்டங்களை அப்படியே வெளியிட்டுவிடுவதாக

சொல்கிறார்கள். அதை மாற்றி அந்த மொழி பெயர்ப்புக்குழு அந்தச் சட்டங்களை மொழி பெயர்த்த பிறகு சம்பந்தப்பட்ட துறைக்கோ அல்லது சட்டத்துறைக்கோ அதை அனுப்பி பரிசீலித்த பிறகு அந்தப் புத்தகத்தை வெளியிட அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி பெயர்ப்பு சரியான முறையில் இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படுகிறது. குழு அந்தப் பணியை மேற்கொள்கிறது. ஆனால், அந்தக் குழுவில் கூட சில நேரங்களில் சரியான நல்ல தமிழ்ச் சொல்லே இல்லையென்ற ஒரு காரணத்திற்காக சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. பல சட்டங்களில் அந்த மாதிரி மாற்றங்களைச் செய்ய தற்போது அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, மைய அரசினுடைய சட்டங்கள் மொழிபெயர்க்கப்படுவதாகச் சொன்னார்கள். மாநிலத்திலே அமுல்படுத்துகின்ற மைய அரசினுடைய சட்டங்களை மைய அரசே மொழி பெயர்த்து வேறு மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதுவரை அம்மாதிரி மொழி பெயர்த்த 89 சட்டங்களில், வங்காளத்திலே அதிகமாக 16, குஜராத்திலே 47 கன்னடத்திலே 9, மலையாளத்திலே 5, ஒரிசாவிலே 4, பஞ்சாபிலே 7 என்றும், ஆனால் தமிழ் மொழியிலே ஒன்றே ஒன்றையும் மைய அரசு மொழி பெயர்த்து இருக்கிறது. ஆகவே, மைய அரசு மற்றயை மொழிகளிலே மொழி பெயர்த்து இருப்பதுபோல, மைய அரசினுடைய சட்டங்களைக் கூடுதலாக மொழி பெயர்க்கவேண்டுமென்றும், அல்லது மைய அரசினுடைய சட்டங்களை மொழி பெயர்க்கத் தனி ஒரு துறையை இங்கே அமைத்துக்கொண்டு, அதற்கான செலவுகளை மைய அரசு தரவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாநிலத்தில் நாம் நடைமுறைப் படுத்துகின்ற சட்டங்களில் அதிகமான சட்டங்கள் மைய அரசினுடைய சட்டங்கள் தான். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் அல்ல. மைய அரசைப் பொறுத்தவரைக்கும், அந்தச் சட்டங்களை மையச் சட்டங்களை மாநில அரசு இப்போது ஆணையத்தின் மூலமாக மொழி பெயர்க்கின்ற போது, அந்த மொழி பெயர்ப்புச் செலவையும் ஏற்றுக்கொள்கிறது. நாம் அமைத்த குழுவும், தமிழகத்தில் அமைக்கப்பட்டு இருக்கின்ற குழுவும், வடச் சொல் அதிகமாகக் கலந்து, தனித்தமிழ்ச் சொல் அல்லது மக்கள் எளிதாகப் புரிந்துக்கொள்ளக்கூடிய தூயத் தமிழ்ச் சொல்லை, முடிந்தும் பயன்படுத்தாமல், விட்டுவிட்டார்கள் என்ற



ஒரு குறை இருக்கின்றபோது அந்தச் சட்டங்களை மைய அரசு மொழிபெயர்க்க வேண்டுமென்று விடுவது நல்லதல்ல. காரணம் அந்த தமிழ்ச் சொல், தூய்மையான தமிழ்ச் சொல் இருக்க வேண்டுமென்று காரணத்திற்காக நாமே மொழி பெயர்ப்பதுதான் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்காக நிலம்.

### கையகப்படுத்தியதால் பாதிக்கப்பெற்றவர்கள் நிலைமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஆர். தியாகராசன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி, ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், டி. மணி, என். பழனிவேல், கு. பா. பழனியப்பன், பி. எம். தங்கவேல்ராஜ், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, என். எஸ். வி. சித்தன் ஆகியோர் "நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கு நிலம், வீடு, கொடுத்து பாதிக்கப்பட்ட கிராமவாசிகளின் கோரிக்கையை வலியுறுத்திக் கிளர்ச்சி செய்வதால் 25-3-1982-லிருந்து 29-3-1982 வரை 350 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; அதனால் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. ஆர். தியாகராசன் அவர்கள்.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக நிலத்தையும் வீட்டையும் அதிகமாகக் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்கள், சுமார் 10,000 விவசாயக் குடும்பங்கள் இன்றைக்கு நடுத் தெருவில் நின்றுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இன்றைக்கு போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு ஒரு தடவை இதைப் போல இந்த மன்றத்திலே இதுபற்றி விவாதிக்கப்பட்டது. இருந்தும் அவர்களுடைய குறைகள் இன்று வரையில் மத்திய அரசாலோ அல்லது மாநில அரசாலோ அல்லது அந்த நிர்வாகத்தினாலோ தீர்த்து வைக்கப்படவில்லை; அவர்களுக்கு தகுந்த உரிமைகள் வழங்கவில்லை.

அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், நெய்வேலி, இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக நாங்கள் நிலம் கொடுத்து 3 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சுரங்கப்பணி இரண்டாண்டுகள் நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது. தலைவர்களுடைய பேச்சு வார்த்தைகளினால், அவர்கள் சொன்னதைக் கேட்டு நாங்கள் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்து, போராட்டம் நடத்தாமல் சுரங்கப்பணி நன்றாக நடைபெற்று வருகிறது. 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று பேசப்பட்டது. அந்த நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், தமிழக அரசு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் பேச்சுவார்த்தை நடத்தி, இன்னின்ன வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு, நிலம் கொடுப்பது, வீட்டுமனை வழங்குதல் மற்ற உதவிகள் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அது சம்பந்தமாக இன்று வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அந்த உரிமைகள் கொடுக்கப்படவில்லை.

எங்களுடைய நிலங்களைக் கொடுத்துவிட்டு நாங்கள் பிழைப்புக்கு வழியின்றி இருக்கிறோம். வீடுகளை இழந்திருக்கிறோம், வீட்டு மனைகளை இழந்திருக்கிறோம். எங்களுக்கு அவர்கள் சொன்ன சலுகைகளை அளிக்கவில்லை. நிலங்களுக்காக அவர்கள் கொடுத்த ஒரு சிறு தொகையை வைத்துக் கொண்டு ஏதோ உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இரண்டாவது சுரங்கத்தில் மண் வெட்டி அலுத்துவிட்டோம். பலமுறை இதுபற்றி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் தெரியப்படுத்தியும் எந்த பலனும் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த அரசை எதிர்த்து அஹிம்சா முறையில் போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்லி கடந்த 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 25 ஆம் நாள் முதல் போராட்டம் நடத்தி வருகிறார்கள். நாங்கள் அறிவிப்புக் கொடுக்கும்போது 350 பேர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும் தொடர்ந்து நேற்று, அதற்கு முன் தினங்களில் 500-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சில கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு உடனடியாகத் தலையிட்டு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு மாற்று குடியிருப்பு மனை கொடுக்க வேண்டும். ஏற்கெனவே 1976-ல் ஏக்கருக்கு 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்ட அந்த விலையைத்தான் கொடுக்கிறார்கள்; அதை மாற்றி தற்போதைய நிலவரப்படி விலை நிர்ணயம் செய்து, அதிகத் தொகை கொடுக்க வேண்டும். நத்தம் புறம்போக்கு போன்ற இடங்களில் இருந்தவர்களை



வெளியேற்றிவிட்டு அந்த நிலங்களை எடுத்திருக்கிறார்கள். அது அரசாங்க நிலம், அதனால் அதற்கு காம்பன்சேஷன் கிடையாது என்று சொல்வது சரியல்ல; அதற்கும் தொகை தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அதைப்போல வருவாய்த் துறையினால் கொத்தடிமைகளுக்கு என்று கொடுத்த இடம் எல்லாம் இருக்கிறது. அதற்கும் தொகை கொடுக்கவில்லை. மாற்று இடம் கொடுக்கவில்லை. அரசாங்க நிலம்; ஒன்றும் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல தமிழக அரசால் கொடுக்கப்பட்ட பட்டா நிலங்களை விட்டும் வெளியேற்றியிருக்கிறார்கள். நிலமற்ற விவசாயிகளுக்கு அரசு தீர்வை செலுத்தி, வழங்கிய நிலம் ஆகையால் அந்த பட்டா நிலங்களுக்கும் பணம் கிடையாது என்று சொல்கிறார்கள். அதுவும் சரியல்ல; அதற்கும் பணம் கொடுக்க வேண்டும். வழக்கு மன்றத்திற்குச் செல்ல அல்லது அப்பீல் செய்ய 'அவார்டு காப்பி' சரியாகக் கிடைக்கவில்லை.

அதைப்போல வீட்டுக்கு சிலருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை; நிலத்திற்கு சிலருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை, அங்கே இவை எல்லாம் இப்படிப்பட்ட நிலையிலே இருக்கின்றன.

[முற்பகல் 0-20]

இரண்டாவது இப்போது சொல்கிறேன். ஸ்டேட் கார்ப்பரேஷன் 300 ஏக்கா நிலத்தை நெய்வேலி நிறுவனத்திடமிருந்து எடுத்து பயிர் வைத்தார்கள். அது நஷ்டமாகிவிட்டது. அதனால் அந்த 300 ஏக்கர் நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அந்த இடத்தைக் கொடுத்தால்கூட, அந்த இடத்தில் அவர்கள் குடியேறி வாழ்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த அரசுக்கு சபாநாயகர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 15–1–1977 அன்று தமிழக அரசும், 29–1–1979 இல் மத்திய அரசும் சட்டம் போட்டு இருக்கிறது. இந்த மாதிரி ஒரு நிறுவனத்திற்காக நிலம் எடுத்தால், அது அரசாங்கமாக இருந்தாலும் சரி, தனியாராக இருந்தாலும் சரி, அந்த நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு, அந்த நிலத்தைக் கொடுத்த குடும்பத்தில் உள்ள ஒருவருக்காவது முன்னுரிமை கொடுத்து, அந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பு தரவேண்டும் என்று சட்டப்படி உத்தரவிட்டு இருக்கிறார்கள். இப்படி சட்டம் இயற்றப்பட்டு இருந்தபோதிலும், அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி—அதை நிறைவேற்றவில்லை என்பதை நான் இங்கே அரசுக்கு சபாநாயகர் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெய்வேலி நிறுவனத்தில் வேலை உரிமை கேட்டு போராடும் 10,000 விவசாயக் குடும்பங்களின் கோரிக்கையை நல்ல வகையில் தீர்க்கும் வகையில், தமிழக அரசும், நெய்வேலி நிறுவனமும் அந்த பாதிக்கப்பட்ட விவசாயி

களை அழைத்துப் பேசி, எழுத்து மூலமாக ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னால் நாங்கள் பல தடவை அமைச்சர்களிடத்திலே வாய் மூல மாகப் பேசியிருக்கிறோம். அவர்களும் வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் வாய் மொழியால் கொடுத்த வாக் குறுதியை நிறைவேற்றுவார்கள் என்று நாங்களும் பேசாமல் இருந் தோம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. ஆகவே, எழுத்து மூல மாக இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். எழுத்து மூலமாக இல்லாததால் நெய்வேலி நிறுவனமும் அதை நிறைவேற்றவில்லை. தாசில்தார் அவர்களும் பணம் கொடுத்து விட்டோம், சரியாகப் போய்விட்டது என்று சொல்லி உதாசீனம் செய்கிறார்கள். அவர்களை வெளியேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாடு அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கேயுள்ள மக்கள் இந்த நாட்டைச் சேர்ந்த மக்கள், உங்களைச் சேர்ந்த வர்களும் அங்கே இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அந்த 10,000 பேர் இன்றைக்கு நடுத் தெருவில் நின்று கொண்டு இருக் கிறார்கள் என்பதை உணர்ந்து, இதற்கு உடனடியாக ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாளிலிருந்து அங்கே சுமார் 500 பேர் அரெஸ்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி விரிவாகப் பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல் களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டுவதற்கான இடங்கள் தேவை என்ற அடிப்படையில் அங்கே இடங்கள் எடுப்பதற்கான முறையில் மத்திய, மாநில அரசுகள் அந்த இடத்தில் குடி இருப்பவர் களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் குடியிருப்புக்காகவும் வேறு இடங்களுக்குப் போகவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவேதான் இழந்த நிலத்திற்கு நஷ்டஈடு மாத் திரம் அல்லாமல், குடியிருப்பு ஏற்படும் அவர்களுக்கு செய்து தரவும், வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் வாக்குறுதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதை மத்திய அரசும், மாநில அரசும் இரண்டுபேரும் சேர்ந்தே கொடுத்து இருக்கிறார்கள். தவறாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. ஒரு பழமொழி உண்டு. ''காரியங்கள் கழியும் வரையில் கழுதைக் காலைக்கூடப் பிடிக்கலாம்'' என்று சொல்வார்கள். அதைப்போலவே அங்கே இடம் வேண்டும் என்பதற்காக அங்கேயுள்ள ஏழை விவசாயி களோடு பேசி, அந்த இடத்தை எடுத்துக்கொண்டு விட்ட பிறகு இன்றைக்கு அவர்களை 'அம்போ' என்று தெருவில் விடும் நிலையை மத்திய மாநில அரசுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. இது இங்கே மாத்திரம் அல்ல, பல இடங்களில் அரசாங்கம்



[முற்பகல் 10-40]

(ஆ) செங்கழுநீர் மலைக் குவாரிகளினால் குடியிருப்புகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

*திரு. பம்மல் நல்லதம்பி: துணைத் தலைவர் அவர்களே, ''பம்மல் செங்கழுநீர் மலையில் கல் உடைக்கும் குவாரிகளினால் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கழுநீர் மலையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மேற்கொண்டு குவாரி வேலைகளைத் தடை செய்வதின் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும், மக்களின் பாதுகாப் பையும், பொது நலனையும் கருத்தில் கொண்டும், முக்கியமாக காமராசர் நகர், சங்கர் நகர், எல்.ஐ.சி. நகர் குடியிருப்பு பகுதிகள் நகரம் மற்றும் கிராமப்புற அமைப்பு இயக்குநரால் ஒப்புதல் அளிக் கப்பட்டு வீட்டுமனைகள் வாங்கிய நூற்றுக்கணக்கானவர்களின் நிலைமையை மனதில் கொண்டும் மாநில புவியியல் வல்லுநர் பரிந்துரையை ஏற்று முதல் அமைச்சர் அவர்களின் ஆணை 1979-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாள் அன்று பெற்று, செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் மறு ஆய்வு செய்யும்வரை குவாரியைத் தடை செய்ய ஆணையிடப்பட்டது.

2. 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ஆம் தேதியிட்ட ஒரு முறையீட்டில் தலைமை நிர்வாகி, காமராஜபுரம் ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சங்கம் மேற்படி குவாரிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் தேதியிட்ட கடிதத்தில் சென்னை துறைமுகக் கழகம் தனது பணிகளுக்காக மேற்படி குவாரிகளைக் குத்தகைக்கு கொடுக்கும்படி இவ்வரசை கேட்டுக் கொண்டது. திரு. யேசுமரியன் மேற்படி குவாரிகளை மூட வேண்டாம் என்றும் குத்தகைக்கு விட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை 1642-இல் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது:—

மலையின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வீடுகள் கட்டப்படுவதைத் தடைசெய்து மாவட்ட ஆட்சியர் வெளியிட் டுள்ள 3.11.78 தேதியிட்ட தடை ஆணையை நீக்கவும், அதை ஒட்டி நகரம் மற்றும் கிராமப்புற அமைப்பு இயக்குநர் அப்பகுதி யில் சங்கர் நகர் லே அவுட்டுக்கு அளித்திருந்த அனுமதியை ரத்து செய்து வெளியிட்டுள்ள ஆணையை நீக்குவதற்கும் வேண்டிய நடவடிக்கையினை அம்மலையின் மறு நில அளவு முடிக்கப்பட்ட பின்னர் எடுத்துக் கொள்ள ஆணையிடப்பட்டது.

3. மேற்படி மலையின் தென்பகுதியிலும் மேற்கு பகுதி
யிலும் உள்ள 23 ஏக்கராவில் மட்டும் குவாரி செய்ய மேற்படி
சங்கத்திற்கு இசைவு கொடுக்கப்பட்டது.

4. குவாரி வேலை நடக்கும் இடத்தை மையமாகக்
கொண்டுவரையும் 400 மீட்டர் வட்டத்தில் அடங்கும் இடம்
பூராவும் அபாயகரமான இடமாகக் கருதப்படவேண்டும் என்று
சுரங்கப் பாதுகாப்புத் தலைமை இயக்குநர் தமது பரிந்துரையில்
சுட்டிக்காட்டியுள்ளார். மறுநில ஆய்வு செய்த பிறகு மாவட்ட
ஆட்சித் தலைவர் மேற்படி தலைமை இயக்குநரின் கருத்தை
ஏற்று 5-3-81 அன்று சர்வே நெ. 144—1ல் உள்ள கல்குவாரியை
மூடிவிட பரிந்துரைத்தார். ஆனால் தொழில் வணிக இயக்குநர்
50 மீட்டருக்கு அப்பால் குவாரி வேலைகள் செய்வதால்,
சுரங்கப் பாதுகாப்பு விதிகளை அனுசரித்து விடுகட்ட அனுமதிக்
லாம் என்று பரிந்துரைத்தார்.

5. இதற்கிடையில் காமராசபுரம் ஒப்பந்த தொழிலாளர்
கூட்டுறவு சங்கம் குவாரியை மூடிவிடுவதால் தொழிலாளர்கள்
வேலை இழக்க நேரிடும் என்று அரசுக்கு முறையீடு செய்தனர்.
அதன்பேரில். செங்கை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் மாநில
புவியியல் வல்லுநரையும் பம்மல் கிராமம் புலஎண் 144—1ஐ
மீண்டும் இருவரும் ஒன்றாகப் பார்வையிட்டு அரசிற்கு இணை
ஆய்வறிக்கை அளிக்குமாறு கேட்டுக் கொண்டதின்பேரில்,
10-11-81 அன்று அரசிற்கு இணை ஆய்வறிக்கை அனுப்பினர்.
இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இங்கு இருக்கும் குடியிருப்புகளுக்கு குவாரிகளினால் பாதிப்பு
ஏற்படுவது குறித்தும் கருத்தில் கொண்டு விரைவில் இதற்கு
தகுந்த முடிவெடுக்கப்படும்.

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 23 ஏக்கர்களில் மேற்குப்
பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் கல் உடைக்க அனுமதி வழங்
கப்பட்டிருக்கிறது. ஆனால், கல் உடைக்கும் நிறுவனத்தார் கிழக்
குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் கல்
உடைக்கின்ற காரணத்தினால், சங்கர் நகர், எல்.ஐ.சி. நகர்
போன்ற குடியிருப்புகளில் இருப்பவர்கள், அதிலும் குறிப்பாக
கம்ப்பிரஷர் போன்ற மிஷின்களை வைத்து ஆழ்துளை போட்டு,
கல்லுடைப்பதால், அந்தக் கற்கள் குடியிருப்பு பகுதிகளில்
வெடித்து, பல்வேறு ஆபத்துக்களை உருவாக்குகிறது. ஆகவே,
கிழக்குப் பகுதியிலேயும், வடக்குப் பகுதியிலேயும் அவர்கள் அரசு
உத்தரவு இருந்தும்கூட, இங்கே கல்லுடைப்பதால், தொடர்ந்து





உடைத்துக் கொண்டு வருவதால், அந்தப் பகுதியிலே உள்ள 1,400
மனைகள் 1973-லே நகர அமைப்பு இயக்குநரால் அனுமதி அளிக்
கப்பட்டு, கல் உடைக்கும் நிறுவனத்தார் வேண்டுகோளுக்கிணங்க,
1978-லே அனுமதி மறுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக,
இந்த 1,400 குடியிருப்பு மனைகளில், கடந்த $3\frac{1}{2}$ ஆண்டு கால
மாக வீடு கட்ட முடியாமல், அதை விற்க முடியாத நிலைமையிலே
இருப்பதால், இங்கே கிழக்குப் பகுதியிலேயும் வடக்குப் பகுதி
யிலேயும் கல்லுடைப்பதை நிறுத்தி, அதே சமயத்தில் ஆழ்துளை
குழாய்களை வைத்து கற்கள் உடைக்காமல் இதைத் தடுத்து
நிறுத்தி, அவர்களுக்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சுட்டிக் காட்டிய இந்தப் பிரச்னைகளை, மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு
வரப்பட்டு, அது 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம்
நாளிலே தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பின்
னால், 23 ஏக்கர்களில் மட்டும் குடியிருப்புப் பகுதிகளுக்கு பாதிப்பு
இல்லாதபடி சுரங்கம் வெட்ட அனுமதிக்கப்பட்டது. அதற்குக்
காரணம், அது தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்
படுகின்ற அமைப்பு. இரண்டாவது, சென்னை துறைமுக நிறு
வனத்தைச் சார்ந்தவர்கள் அந்த கற்களைப் பெற்றுக் கொள்ளு
கிறார்கள். அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்தது. எனவே
இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு முடிவு மேற்கொள்ளப்
பட்டது. இப்போது அனுமதிக்கப்படாத இடங்களிலே, அங்கே
கற்களை வெட்டுகிறார்கள் என்று சொன்னால், அதை அதிகாரி
கள் சென்று நிச்சயமாகப் பார்த்து நடவடிக்கை எடுப்பார்கள்
என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர்,
அதுபோலவே மாநில புவி இயல் வல்லுநரும், அந்தப் பகுதியிலே
வாழ்கின்ற குடிசைப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு ஏற்
பட்டிருக்கின்ற இன்னல்களைக் குறித்து என்ன நட
வடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு எழுதி அனுப்ப
யிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்கள் நலனைக்
கருத்தில் கொண்டு, அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக (ஏழாவது சட்டமன்றப் பேரவை) மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையில், வனத்துறை குறித்த மேற்படி குழுவின் பதின்மூன்றாவது அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்கு குழு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தின் ஏழாவது பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேர வைக்கு அளிக்கிறேன் :—

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான மேற்படி குழுவின் பன்னிரெண்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை— (பாகம்-I.)

(2) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த முதலாவது அறிக்கை யில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நட வடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதின்மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான மேற்படி குழுவின் பதினான்காவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (பாகம்-II.)

(4) 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைக் கள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் பதினைந் தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (பாகம்—I.)

(5) 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்கு மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் பதி னாறாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை (பாகம்–II).





கடைசியாகக் குறிப்பிடப்பட்ட 16 ஆவது அறிக்கையைப் பொறுத்தவரையில் போதிய அவகாசம் இன்மையால் அறிக்கை யின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படியெடுத்த அறிக்கை உறுப் பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இரண்டு பிரதிகள் சட்டப்பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக் காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அவை அனுப்பி வைக்கப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படியெடுத்த அறிக்கை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இரண்டு பிரதிகள் சட்டப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு அவை தனியாக அனுப்பி வைக்கப்படும்.

அடுத்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதி மொழிக் குழு.

Thiru C. Sattanatha Karayalar: Mr. Deputy Speaker, Sir, I submi the Second Report of the Assurance committee for 1981-82.

(5) அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். ''

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரிச் சட்டத்தினை திருத்த வேண்டுமென்ற கோரிக்கையை மன்றத்திலே வைத்து இருக்கிறார்கள்.

இங்கு வைத்திருக்கக் கூடிய சட்டத்தின் பிரகாரம் சில பிரிவுகள் செய்வார் கமிட்டியினுடைய சிபாரிசின் அடிப்படையில் இந்த இலாகாவிலே இருக்கக் கூடிய சில சிரமங்களை நீககுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். அதே சமயத்தில் இந்தத் துறை எவ்வாறு தவறாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் நான் கூறுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரியினுடைய காரண காரிய விளக்கங்கள் தருகிற நேரத்தில்,

The Government have been waiving by administrative crders, tax or the diffierence in tax in cases whe e the dealers had not collected the tax.

என்று சொல்லி வியாபாரிகள் வசூலிக்காத வரிகளை அரசாங்கம் அவர்களே கட்டவேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்துவது கூடாது என்கிற துறையிலே 17 ஆவது செக்ஷனை திருத்துவதற்கு இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10–50)

The Government have decided to amend Section 17 of the Act to empower the Gcvernment to waive the tax or penalty or fee payable under the Act by means of a Notification.

*1981 ஆகஸ்டு 22 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





அரசாங்கம் விரும்புகிற சமயத்திலே வரியை தள்ளுபடி செய்யவோ, குறைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முடிவு எடுத்து அந்த முடிவு எடுக்கக் கூடிய அதிகாரத்தை இந்த 17 ஆவது ஷரத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு தரவேண்டுமென்று இங்கே பரிந்துரை செய்யப்பட்ட அடிப்படையிலே சட்டத் திருத்தத்தை இங்கே கோருகிறார்கள். இதிலே கலந்துக் கொள்கிற சமயத்திலே இந்தத் துறை செயல்படுத்துவதிலே இருக்கக் கூடிய தவறுகளை— தவறுகள் எல்லாவற்றையும் இந்த சந்தர்ப்பத்திலே என்னால் கூற முடியவில்லை என்றாலும், எவ்வாறு இந்தத் துறை தவறாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு ஓரே ஒரு உதாரணத்தை மட்டும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தான் பொதுக் கணக்கு குழுவினுடைய அறிக்கையை மாண்புமிகு குழுத் தலைவர் அவர்கள் மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறார்கள். அந்த 12 ஆவது அறிக்கையை நாம் பார்ப்போமானால் தமிழ் நாட்டிலே உள்ள 'ஸ்டீல் ரோலிங் மில்ஸ்' 'ரீ-ரோலிங் மில்ஸ்' என்று சொல்லக் கூடிய நிறுவனங்கள் எப்படி வரியை கட்டாமல் ஏய்த்திருக்கிறார்கள், அதன் பேரிலே எப்படியெல்லாம் அரசாங்கம் செயல்பட்டிருக்கிறது என்பதை பற்றி இன்றைய தினம் இந்த மன்றத்திலே வைத்திருக் கக்கூடிய 12 ஆவது பொதுக் கணக்கு குழுவினுடைய அறிக்கை யிலே சொல்லியிருக்கிறார்கள். 24 ஆவது பக்கத்திலிருந்து ஏறக் குறைய 32 ஆவது பக்கம் வரை மிக விளக்கமாக இங்கே சொல்லி யிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய 'ஸ்டீல் ரோலிங் மில்ஸ்' எல்லாம் அவர்கள் இரும்பை வாங்கி அதை கம்பியாக மாற்றி அல்லது ஆங்கிள்களாக மாற்றி விற்பனை செய்திருக்கிறார்கள். அப்படி விற்பனை செய்யப்பட்ட காலத் திலே ஏறக்குறைய ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாய் வரியினை 1970–71 ஆம் ஆண்டு முதல், 1974–75 ஆம் ஆண்டு வரை பியாரிலால் மல்கோத்ரா நிறுவனத்திடமிருந்து வர வேண்டிய வரி உட்பட, 45 ஆலைகளிடமிருந்து வரவேண்டிய வரி பாக்கி ரூபாய் ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாயை நிர்வாக உத்தரவு ஒன்று பிறப்பித்ததன் மூலம் தமிழக அரசு தள்ளுபடி செய்தது என்று இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட இந்த அறிக்கையிலே கூறுகிறார்கள். இப்படி அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியினை என்ன காரணத்திற்காக தள்ளுபடி செய்தார்கள், இதிலே மறைந் துள்ள மர்மங்கள் என்ன ? இதிலே என்ன காரணத்தால் அர சாங்கம் இவைகளை தள்ளுபடி செய்தார்கள் ? நம்முடைய வரு வாய்த்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக் கூடிய நேரத் தில் சொல்லலாம், நாங்கள் தள்ளவில்லை. இது 1977 ஆம் ஆண்டு ஜனவரியிலே தள்ளியிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இதைத் தள்ளவில்லை என்று சொல்ல முன் வருவார்கள். ஆனால் அதே சமயத்தில் நாங்கள் சொன்னது 1974–75 வரையில்

இருக்கக் கூடிய ஆண்டுக்கு மட்டும் தான் இந்த 122 இலட்சம்
ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்களா?
விட்டார்களா என்றால் இல்லை. அதோடு விட்டு
கூட 1975–76 ஆம் ஆண்டு முதற்கொண்டு அதற்குப் பின்னாலுங்
காலம் வரையில் ஏறக்குறைய அண்மைக்
வரி வசூல் செய்ய வேண்டிய ஒரு நிலைமையிருக்கும்போது, ரூ. 8 கோடி அளவிற்கு
கள் ஏதோ மனு கொடுத்தார்கள், மற்ற மாநிலங்களிலே இப்படி அவர்
வரி போடப்படவில்லை, இங்கே மட்டும் வரி போட்டால், இப்படி
களுடைய தொழில் நசித்துவிடும் என்று சொன்னார்கள். உடனே எங்
கருணை கூர்ந்து இந்த அரசாங்கம் சற்றேறக்குறைய ரூ. 8 கோடியை
அந்த உற்பத்தியாளர்களுக்கு, தொழில் முதலாளிகளுக்கு ஏன்
தள்ளவேண்டும்? இதற்காகத்தான், நீங்கள் விரும்புகின்றபோ
தெல்லாம் யாருக்கு வேண்டுமானாலும்
பொழுது ரூ. 6 கோடி, ரூ. 8 கோடியை நீங்கள் தள்ளுவீர்கள். இப்
கள். அதைப் போல் நீங்கள் இஷ்டப்படுகிற சமயத்தில், தள்ளி இருக்கிறீர்
தொழில் அதிபர்கள் உங்களைச் சந்திக்கிறார்களோ, எந்தத்
சந்தித்து எவற்றை உங்களிடத்திலே முறையிடுகிறாகளோ, அப்படிச்
அவற்றையெல்லாம் நீங்கள் வைத்துக் கொண்டு, இஷ்டப்படி
தமிழ்நாடு அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியினைத் தள்ளு
வதற்கு உங்களுக்கு அதிகாரம் ஏன் இருக்க வேண்டுமென்றுதான்
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பொதுக் கணக்குக்
குழுத் தலைவர் அவர்கள் வைத்துள்ள அந்தக் குழுவின் அறிக்கை
யிலே அதன் தலைவர் அவர்கள் நன்றாகத் சொல்லியிருக்கிறார்
கள். இதிலே விசித்திரம் என்னவென்றால், தமிழ்நாடு அரசாங்கம்
இந்த வரியை வசூல் பண்ண வேண்டுமென்று உயர்நீதி மன்றத்
திலே முறையிட்டார்கள். அந்த உயர்நீதிமன்றம் நமக்குச் சாதக
மாக இல்லையென்று அதன்பேரிலே, உச்ச நீதிமன்றத்திற்கு,
சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். யார் எடுத்துச்
சென்றது? தமிழ்நாடு அரசாங்கம், டெல்லியிலே இருக்கக்கூடிய
சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குப்
போவது எதற்கு? இந்த வரி வசூலிக்கப்பட வேண்டும். தள்ளப்
படக்கூடாது, அப்படி தள்ளுவது முறையற்றது என்று கருதிய
இந்த அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்கின்றது.
ஒருவேளை சுப்ரீம் கோர்ட்டிலே, அங்கே இருக்ககூடிய மாண்புமிகு
ஜட்ஜ்கள் எல்லாம் இது சரியல்ல, இது இரண்டாவது முறையாக
வசூலிப்பதாக ஆகும். ஆகவே, இதை வசூலிக்க வேண்டிய
அவசியம் இல்லை என்று சொல்லி, அதனை முடிவு செய்திருப்பார்
களானால், அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நாங்கள் அமுல்
படுத்துகிறோம் என்று இந்த அரசாங்கம் முடிவு எடுத்திருக்கு
மானால் அது வரவேற்கவேண்டிய விஷயம், அது எங்களால்
குற்றம் சொல்ல முடியாத ஒரு விஷயம். ஆனால், நடைபெற்றது
என்னவென்றால், சுப்ரீம் கோர்ட்டிலும் அரசாங்கத்திற்கு
வெற்றி கிடைத்திருக்கிறது. வசூலிக்கப்பட வேண்டிய வரிதான்
அதை வசூல் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது,
வசூல் செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட் சொன்னதற்குப் பிறகு



கூட, தமிழ்நாடு அரசாங்கம் எதற்காக, 1977-ல் ரூ. 1 கோடியே
22 இலட்சத்தினை தள்ளுபடி செய்ய வேண்டும்? அதற்குப் பிறகு
நாளது வரையில் ரூ. 8 கோடியினைத் தள்ளுபடி செய்திருக்கிறார்
கள். யாரோ, எந்த அசோசியேஷனிலேயிருந்தோ வந்து பார்த்
தார்களாம். யாரைப் பார்த்தார்களோ எப்படி பார்த்தார்களோ
என்று எனக்குத் தெரியாது. அவர்கள் முறையீடு செய்தார்களாம்.
அதிலே என்ன மர்மங்கள் இருக்கின்றன. என்பதை இந்த
அரசாங்கம்தான் சொல்ல வேண்டுமே தவிர, எங்களுக்குத்
தெரியாது. காரணம் ரூ. 8 கோடி தமிழ்நாடு அரசாங்கத்
திற்கு வர வேண்டிய வரிப் பணம், இன்றையதினம் ரத்து
செய்யப்பட்டிருக்கிறது என்பது என்னவோ, உண்மை. அது
ரூ. 8 கோடியா, ரூ. 7 கோடியா, ரூ. 6 கோடியா என்பதை நம்
முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற
சமயத்திலே சொல்ல வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே இந்த
உருக்காலைகளுக்கு வரி வசூல் செய்ய வேண்டுமென்று தீர்ப்பளிக்
கப்பட்டிருக்கிறது. வழக்கை அந்த ஸ்டீல் ரோலிங் மில்காரர்கள்
எடுத்துக் கொண்டு போகவில்லை. ஏறக்குறைய பல இலட்சக்
கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவழித்து, வாதாடி,
நாம் வெற்றி கண்ட பிறகு, அந்த வரியினை வசூலிக்க வேண்டியது
தானே முறை. ஏன் அதை வசூலிக்காமல், இன்றையதினம் ரூ. 7
கோடி, ரூ. 8 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்திருக்கிறீர்கள்?
அதிலே இருக்கக்கூடிய நிலைமை என்ன என்பதை எங்களால்
புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையினால்தான் சொல்கிறேன்
அராங்கத்திற்கு அத்தகைய ஒரு அதிகாரத்தை சட்டத்தின் மூலம்
கொடுப்பது துஷ்பிரயோகம் செய்வதற்கு அவர்களுக்கு உறு
துணையாக இருக்கும். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள்
என்று சொல்லி, பாகுபடுத்தி, அவர்கள் இஷ்டம்போல், தமிழ்
நாட்டு மக்களுக்கு, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரிப்
பணத்தை வசூலிக்காமல் விடுவதற்கு ஏதுவாக இருக்கும்.
அந்தக் காரணத்தினால் அந்த ஷரத்து அரசாங்கத்திற்குக் கையிலே
கொடுக்கப்பட்ட பயங்கர ஆயுதமாகும். அதை வைத்துக்கொண்டு
ஊழல் செய்வதற்கு வழி வகை காணும். ஆகவே அந்த ஷரத்து
அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாது என்று திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பிலே அதை எதிர்த்து அமைகின்றேன், வணக்கம்.

(முற்பகல் 11-00)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத்
தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவின்மீது நான் கொடுத்
திருக்கின்ற திருத்தங்களை முன்மொழிந்து இந்திய தேசியக்
காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இந்த
மன்றத்திலே முன்னால் வைக்க விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிக்க அமைச்சரவர்களாலே பல் வேறு திருத்தங்களும், சேர்க்கைகளும் இந்தச் சட்டமுன்வடி விலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இன்றைக்கு நம்முடைய ஆய்விற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப் பினர் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப் போல

'' இச்சட்டத்தின் கீழ் வணிகர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செலுத்த,ந்தக்க வரி அல்லது அபராதம் அல்லது கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை, அரசு அறிக்கை வெளியிட்டு அதில் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைக் கேற்பவும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தள்ளுபடி செய்யலாம்.''

என்ற ஒரு பெரிய ஆயுதத்தை இந்த உட்பிரிவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்த அரசு பெற்றுக் கொள்கிறது. இங்கே வணிகர் சொல்லியிருப்பது வணிகரை மட்டும் அது சார்ந்திருக்குமா அல்லது தொழிலதிபர்களுக்கும் அது பொருந்துமா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. ஆனாலும்கூட மாண்புமிகு அமைச்சரவர் களாலே மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவிலே காரணநோக்க விளக்கத்திலே இரண்டாம் பகுதியிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'' முன்னர் அளித்த விளக்கங்கள் தெளிவுரைகளின் அடிப் படையில் வணிகர்கள் சில இனங்களில் வரி வசூலிக்கவில்லை அல்லது குறைந்த வீதத்தில் வரி வசூலித்துள்ளனர் ; இந்த விளக்கங்கள், தெளிவுரைகள் பின்னர் நீதிமன்ற முடிவுகளின்படி தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தால் அந்த இனங்களில் வரியை அல்லது வரி வீதத்தில் காணப்படும் வேறுபாட்டுத் தொகையை வசூலிப்பதை நிர்வாக ஆ ணைகள் மூலம் அரசு தள்ளுபடி செய்து வந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியை அல்லது அபராதத்தை அல்லது கட்டணத்தை அறிவிக்கை வெளியிட்டு அதன் மூலம் தள்ளுபடி செய்ய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்காக இச்சட்டத்தின் 17ஆம் பிரிவை திருத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதன் காரண நோக்க விளக்கத்திலேயிருந்து நான் புரிந்து கொள்வது என்னவென்றால், வரியை வசூலிக்க முடியாமல் அல்லது வசூலித்துச் செலுத்த முடியாமல் என்பதற்காக இந்தப் பகுதி சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனாலும்கூட இதைப்பற்றி என்னால் அளிக்கப்பட்டிருக்கின்ற பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கையைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த அறிக்கையிலே 28 ஆவது பக்கத்திலே, 1970–71 ஆம் ஆண்டு முதல் 1974–75 ஆம் ஆண்டு வரை 45 ஆலைகளிடமிருந்து வ



வேண்டிய வரி பாக்கி ரூபாய் 122.01 இலட்சத்தை அரசாங்கம் தள்ளுபடி செய்திருக்கிறது. என்று குறிப்பிட்டு விட்டு, இவ்வாறு தள்ளுபடி செய்தது சட்டத்திற்கு அப்பாற் பட்டதென்று தணிக்கை யில் தெரிவிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டி விட்டு 29 ஆம் பக்கத்திலே சம்பந்தப்பட்டவர்கள் நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து, அவ்வாறு செய்து கொண்ட மேல்முறையீட்டின் தீர்ப்பு அரசுக்கு ஆதரவாக இருக்கும் நேர்வுகளில் தள்ளுபடி செய்தல் அல்லது விலக்களித்தல் என்கிற அதிகாரத்தை அரசு செயல்படுத் தக்கூடாதென்று குழு கருதுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. இப்படி இதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் நேரத்தில் 30 ஆம் பக்கத்தில் வரியைத் தள்ளுபடி செய்வதற்காக அதிகாரம் அரசுக்கு சட்டப்படி இல்லாத நிலையில் ரூ. 122.01 இலட்சத்தை தள்ளுபடி செய்து அரசு ஆணை பிறப்பித்திருக்கக்கூடாதென்று குழு கருதுகின்றது என்பதையும் தெரிவித்து விட்டு, அடுத்த பாராவிலே விதிக்கப்பட்ட வரி அல்லது விதிக்கத்தக்க யாதொரு வரியையும் தள்ளுபடி செய்யும் அதிகாரத்தை சட்டம், நிர்வாகத் திற்கு அளிக்கவில்லை என்பதை மிகத்தெளிவாக சுட்டிக்காட்டி விட்டு, பிறகு வரி விதிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும்போது வரியைத் தள்ளுபடி செய்யும் அதிகாரமும் அதில் உள்ளடங்கியுள்ள தென துறை கருதியதாக குழுவிடம் துறை தெரிவித்தது. வரியை விதிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு சட்டமன்றத்தால் அளிக்கப் பட்டுள்ளதால் சட்டப்படி விதிக்கத்தக்க வரியை தள்ளுபடி செய்வதற்கான அதிகாரமும் சட்டமன்றத்தால்தான் குறிப்பாக அளிக்கப்பட வேண்டுமென்று குழு கருதுகிற என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவ்வாறு குறிப்பிட்டு விட்டு, வரியைத் தள்ளுபடி செய்ய நிர்வாகத்திற்கு அதிகாரம் அளிக்கும் குறிப்பிட்ட விதித் துறை இச்சட்டத்தில் இல்லாத நிலையில், நிர்வாக உத்தரவுகள் மூலம் அரசு வரித் தள்ளுபடிக்கு ஒப்புதல் அளித்துள்ளமை சட்டத்தை மீறிய செயலாகவும் சட்டத்திற்கு புறம்பானதாகவும் உள்ளது என்றும் தெரிவித்திருக்கிறது.

இறுதியாக வரியைத் தள்ளுபடி செய்யும் போது வருவாய் இழப்பு ஏற்படுவதால் தள்ளுபடி செய்யும் அதிகாரம் அறிவிப்பு கொடுப்பதன் மூலமாகவே, செயல்படுத்த வேண்டும் என்றும் அத்தகைய அறிவிப்பு கூர்ந்தாய்வு செய்தவதன் பொருட்டு சட்டமன்றத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு கரு துகிறது. மேற்கண்ட கருத்துரைகளையும் இந்திய அட்டார்னி ஜெனரல் தெரிவித்துள்ள கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு அரசு மேற்கொண்டும் தேவையான நடவடிக்கையினை எடுக்கவேண்டும். இதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்றை குழுவிற்கு விரைவில் அனுப்பி வைக்க வேண்டும் என்று இதிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

மேலும் இதிலே 32–ம் பக்கத்திலே கடைசி பாராவில் தமிழ்நாடு ரீ ரோலர்ஸ் கவுன்சிலில் முறையீடுகளின் பேரில் சிறு அளவிலான ஸ்டீல் ரீ ரோலிங் தொழிற்சாலையிடமிருந்து

அவை தயாரிக்கின்ற பொருள்களின் விற்பனை மீது வசூலிக்க வேண்டிய விற்பனை வரியை, அது பற்றி அரசு தனது இறுதி முடிவை இன்னும் எடுக்கும் வரை வசூலிக்க வேண்டாமென்று வணிக வரி ஆணையருக்கு அரசு 1981 பிப்ரவரி மாதத்தில் கட்டளை பிறப்பித்துள்ளது. முரண்பாடு இல்லாதிருக்கும் பொருட்டு ஏனைய ரீ ரோலிங் தொழிற்சாலைகளுக்கும் இதே நலன் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு செயல்படுத்தப் படவில்லை என்று தெரிகிறது. நடைமுறையில் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு அடிப்படையில் 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் கூட ரீ ரோலிங் தொழிற்சாலைகளிடம் வரி வசூலிக்கப்படக்கூடாது என்று அவர்கள் கோரியுள்ளதை குழு உணர்கிறது. இத்தகையதொரு கோரிக்கையில் அடிப்படையில் தடையாணை எவ்வாறு வழங்கப் பட்டதென்பதை குழுவால் புரிந்து கொள்ளமுடிய வில்லை. மேற்கொண்டும் ஆய்வெதுவும் செய்யாமலேயே தடையாணையைத் துறை ஒப்புக் கொண்டதென்று தோன்று கிறது. தலைமை வழக்கறிஞரிடம் கலந்து இதுபற்றி முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தடை ஆணையை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. இதுகுறித்து மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்றை குழுவுக்கு மூன்று மாதங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாகவே இன்றைய தினம் பொதுக்கணக்கு குழு இந்த மன்றத்தின் மூலம் இங்கே சொல்லி இருக்கிறது. எனவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதிலே விரிவாகச் சொல்லி இருக்கின்ற கார ணத்தாலே, இதுமாதிரியான பெரிய அதிகாரத்தை, ஒரு ஆயு தத்தை கையில் வைத்துக் கொண்டு பல கோடிக்கணக்கான ரூபாய்களை தமிழக மக்களுக்கு இந்த அரசின் மூலமாக இழப்பு செய்வதற்கான காரணத்தாலே மக்கள் மெத்த அக்கரை கொண்டு இருக்கிறார்கள். எனவே நான் கேட்டுக்கொள்வ தெல்லாம் இதுமாதிரி வழங்குகின்ற முறை இதுவே கடைசியாக இருக்கவேண்டும் என்பதோடு, பொதுக்கணக்குக் குழு சொல் கின்ற பரிந்துரைகளுக்கு அரசு என்ன பதில் சொல்ல இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கின்றேன். அதே நேரத்தில் இப்படி ஏதாவது தள்ளுபடி செய்ய வேண்டுமானால் நான், துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசுக்கு ஒரு யோசனையைச் சொல்வேன், இந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினைப் போட்டு அந்தக் குழுவிற்கு இந்தத் தள்ளுபடி செய்யவேண்டிய பிரச்சனையை அனுப்பி அவர்கள் விரிவாக ஆராய்ந்ததற்குப் பின்னாலே தள்ளுபடி செய்கின்ற முயற்சியை மேற்கொள்ளலாம் அல்லது அதே நேரத்தில் ஏன் தள்ளுபடி செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தது என்ற காரணத்தை அறிக்கை மூலமாக மன்றத்து உறுப்பினர்களுக்குக் கொடுத்து அதன் மூலமாக மன்றத்தின் உறுப்பினர்களுடைய நம்பிக்கையைப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இந்தச் சட்ட முன்வடிவிலே 2–வது பக்கத்திலே தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 1 ஆம் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தத்திலே பதிவு செய்து கொள்வதற்கென விண்ணப்பம் வரையறுக்கப்பட்டமுறையில் கால அளவில் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். அத்துடன், வியாபாரத்தின் முதன்மை இடத்திற்காக ரூபாய் 10 கட்டணம், வியாபரரத் தின் முதன்மை இடம் இல்லாத ஏனைய ஒவ்வொரு வியாபார இடத்திற்கும் மேலும் ரூபாய் ஐந்து கட்டணமும் செலுத்த வேண்டும் என்று போட்டிருக்கிறது. பல இனங்களிலே வரிவிலக்குக் கொடுக்கிற அதே நேரத்திலே நான் ஏற்கனவே வணிகவரி மானியத்திலே பேசும் போது சொன் னேன், 1959 ஆம் ஆண்டிலே இருந்து இன்று வரையில் ஏறாத, உயராத ஒரு கட்டணம் தமிழகத்திலே இருக்கிறது என்று சொன்னால், அது இந்த வியாபாரத்திற்கு பதிவு செய் வதற்கான கட்டணம் என்றுதான் நான் சொன்னேன். 10 ரூபாய் என்பது இன்று இருக்கின்ற விலைவாசியில் மிக மிகக் குறைவு அதை அரசாங்கம் தாராளமாக 100 ரூபாய் வரை உயர்த்தலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே முதன்மை இடம் இல்லாத ஏனைய ஒவ்வொரு வியாபார இடத்திற்கும் 5 ரூபாய் என்று போட்டிருக்கின்றது. அதுவும் மிகக் குறைவாக இருக்கின்றது. இதை 50 ரூபாயாக உயர்த்தலாம். அப்படி உயர்த்துவதன் மூலமாக அரசுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வருவாய் வரும் என்ற கருத் தினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்த பாராவில் 1–ஏ(1) புதுப்பிரிவை சேர்த்து இருக்கிறார் கள். வருவாய்துறையைப் பொறுத்த அளவில் இது போல முன் பணமாக வாங்குவது வழக்கமாக இருந்து கொண்டிருக் கின்றது. காரணம் அவர்கள் தாங்கள் ஈட்டுகின்ற பொருள்களுக்கு வரி செலுத்துகின்ற காரணத்தினாலே பணையத் தொகை அல்லது அட்வான்ஸ் டாக்ஸ் என்று சொல்லி டெப்பாசிட் என்று சொல்லி அவர்கள் வாங்குகிறார்கள். ஆனால் பிணைத் தொகையைப் பொறுத்த அளவிலே பொது மக்களிடம் அவர்கள் வரியை வசூலித்து அதை செலுத்துகின்ற நிலமை இருக்கின்ற காரணத்தாலே அவர்களிடம் வசூலை வாங்கி சேல்ஸ்டாக்ஸ் என்ற வணிக வரியாக இருக்கின்ற காரணத்தாலே பிணைத் தொகை என்று சொல்வது தேவைதானா என்கிற வினாவை நான் எழுப்புகிறேன்.

[முற்பகல் 11.10]

இப்போது ஒரு பிணையத்தொகையை வணிகர்கள் மீது வைப்பது ஏற்கனவே அவர்கள் மீது இருக்கின்ற சுமையை அதிகமாக்க ஆக்காதா என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே பிணையத் தொகை என்பது அவர்களுக்கு இருக்கின்ற

சிரமத்தோடு மேலும் சிரமத்தைக் கொடுக்கும், தொல்லையைக் கொடுக்கின்ற அதே நேரத்திலே, இந்த மசோதாவின் உட்பிரிவிலே, இரண்டாவது பக்கத்திலே, கடைசியிலே வரி விதிக்கத்தக்க விற்று முதலுக்கு செலுத்தத் தக்க வரியில் பாதிக்கு மேற்படக்கூடாது என்று சொல்கிறார்கள். இது மிக மிக அதிகம். ஒரு ஆண்டிலே செலுத்தவேண்டிய வரியை ஏறத்தாழ 50 சதவீதத்தை முன்னமேயே கணக்கிட்டு எந்த அடிப்படையிலே கணக்கிடுகிறார்கள் என்று தெரியவில்லை, சென்ற ஆண்டு செலுத்திய வரி என்று சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை, 50 சதவீதம் என்று சொல்கிறபோது, இது மிக அதிகமான இருக்கிறது இதை அரசாங்கம் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 3-ம் பக்கத்திலே, 2வது பிரிவிலே, ''விண்ணப்பம் முறையாக இருக்கிறதென்றும், 1-ஏ உட்பிரிவின்கீழ் நிபந்தனை ஏதேனும் விதிக்கப்பட்டிருந்தால் அவை நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றும், வரையறுக்கப்பட்ட அதிகாரி மன நிறைவடைந்தால்,'' இதில் என்ன மனநிறைவு அடைவதற்கு இடம். அங்கே மனுக்கள் சரியாக, முறையாக நிரப்பப்பட்டு இருந்தால் அவருக்கு வேண்டிய உரிமத்தை வழங்கவேண்டுமே தவிர, அவர் எப்போது மன நிறைவு அடைவது, அவர் எப்போது உரிமத்தைப் பெறுவது, எப்போது தொழிலைத் தொடங்குவது, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள மூலமாகச் சொலவதெல்லாம், அந்த மன நிறைவு அடைவது என்ற வார்த்தையெல்லாம் தேவையில்லை. அவர் எப்போது மன நிறைவு அடைவது, அவர் அடைவாரா, மாட்டாரா அப்படி அவர் மன நிறைவு அடைவது என்று சொல்லி ஒரு வாசகம் இருக்குமானால், அதன் மூலமாக வேறு பல முறைகேடுகளுக்கு, பிசகான காரியங்களுக்கு நான் லஞ்சம் எனறு சொல்லமாட்டேன், காலம் தாழ்த்துவதற்கான பல்வேறு காரியங்களுக்குத் துணை போகின்ற காரணத்தினாலே, அந்த மன நிறைவு என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டுமெனறு நான் இந்த நேரத்துல் கேட்டுக்கொள்கிறேன.

அடுத்தபடியாக, 3-வது பக்கத்திலே, 2-பி உட்பிரிவிலே, ''இப்பிரிவின கீழ் பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி, இச்சட்டத்துன் கீழ் செலுத்தத்தக்க வரியை முறையாக வசூலிக்க, வணிகர் கூடுதல் பிணையத் தொகை செலுத்த வேண்டுமென்பது அவசியமென்று அவருக்குத் தோன்றினால்'' அந்த வார்த்தை என்ன சொல்கிறது என்றால், நான் மன நிறைவு அடைந்தால் என்று சொன்னேபன அதைப்பபாலவே அவசியம் என்று தோன்றுகின்ற என்ற அந்த வாசகம் பல்வேறு முறைகேடுகளுக்கு இடமளிக்கின்ற காரணத்தினாலே அதையும் அரசாங்கம் நீக்கவேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன.



அதைப்போலவே, 4-வது பக்கந்திலே, 2 (1-ஏ) உட்பிரிவு அல்லது 2-பி உட்பிரிவின் கீழ் ஒரு வணிகர் கொடுத்துள்ள பிணையத் தொகை, பிணையப் பத்திர வடிவில் இருந்தால், பிணையதாரர் நொடித்துப் போனாலோ அல்லது இறந்து விட்டாலோ என்ற ஒருவாசகம் சேர்க்சப்பட்டிருக்கிறது. ஒரு வணிகர் வணிகத்தை தொடர்ந்து நடத்தவில்லை என்று சொன்னால் இத்தனை நாட்களுக்குள் திருப்பிக் கொடுப்பதற்கான வாசகம் இது இல்லை என்றும், இதிலும் திருத்தங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 4-வது பக்கத்திலே, 2- ஜீ பிரிவிலே, பிணையமாகச் செலுத்தியுள்ள தொகையை அல்லது அதன் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிடலாம்'' என்று போட்டிருக்கிறது. எத்தனை நாட்களுக்குள்ளாக இது திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டு கோடிட்டுக் காட்ட வேண்டுமென்றுநான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் 5-வது பக்கத்தில்ல, உட்பிரிவு 5-ல், அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி, போதுமான காரணங்கள் இருப்பின் தாம் வழங்கியுள்ள பதிவுச் சான்றிதழை நீக்கவோ, மாற்றிஅமைக்கவோ திருத்தவோ அதிகாரமுடையவராவார், என்று போடப்பட்டிருக்கிறது. இதற்கான மேல்முறையீடு ஒருவணிகர்திருப்தி அடையா விட்டால் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று அவர் கருதுவாரேயானால் மேல்முறையீடு அங்கே செய்ய வேண்டுமென்பதற்கான விவரம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகுஅமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சொல்வார்கள் என்றுநான் எதிர்பார்க்கிறேன். எனவே, காலம் அதிகமாக இல்லாத காரணத்தால், பல்வேறு முக்கியமான பிரச்சனைகள் இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் இதிலே கவனமாக தேவையானால் அவர்களுக்குத் ஒரு ஆய்வு செய்து இதனை நிர்ணயம் செய்யலாம் என்று பொதுக்குழு போட்டு கூட இதனை நிர்ணயம் செய்யலாம் என்று கொடுத்திருக்கின்ற திருத்தங்களை வலி சொல்லி, நான் இங்கே கொடுத்திருக்கின்ற திருத்தங்களை வலியுறுத்தி என் உரையை நிறைவாக்குகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு விற்பனை வரியை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக இலாகாவில் உள்ள வேலைகளை சீரமைப்பதற்காக வேண்டி கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். இந்த நேரத்திலே நான் ஒன்றை தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே மது விலக்கு ஏற்படுத்தப்பட்ட நேரத்திலே போடப்பட்ட ஒரு வரிவிற்பனை வரி, ஆனால இன்று தமிழகத்திலே மது விலக்கு அமுலிலே இல்லை. அதாவது சிறு அளவிலேதான் லைசென்ஸ் ஏற்பட்டு இருக்கின்றதே என்பது தெளிவு அந்த மதுவிலக்கு இல்லாத ஒரு நிலைமை இது தவிர, ஏறத்தாழ இன்று மதுவிலக்கு இல்லாத ஒரு நிலைமை இது வழியாக அதிகமாக வருவாய் கிடைத்துக் கொண்டிருக்ககூடிய இடத்திலே விற்பனை வரி அந்த அளவிற்கு இந்த நாட்டிலே

இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் இது அதற்கான நேரம் என்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று மனித சமுதாயத்திலே குறிப்பாக ஏழை எளிய மக்கள் உபயோகப்படுத்துகிற பல பொருட்கள்மேலவிற்பனைவரி முழுவில் இருக்கிற இந்த நேரத்திலே பிளாஸ்டிக் குட்ஸ், அப்பளம், ஊறுகாய் போன்ற பொருட்களுக்குக் கூட விற்பனை வரி இருக்கக் கூடிய இந்த நேரத்தில் ஏழை எளிய மக்களைப் பொறுத்த வரை யில், சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்காத அளவுக்கு மாற்றுவதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த சட்டம் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நேரத் தில் 30,000 ரூபாய் ஒரு வருஷத்தில் டர்ன் ஓவர் இருக்கக்கூடிய வியாபாரிகள் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்பது கட்டாயமாக இருக்கிற ஒரு சட்டம் இருக்கக்கூடிய நேரத்தில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய நடுத்தர வியாபாரிகளை 'ஹரஸ்மென்ட் செய்யா மல், அவர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் இந்தச் சட்டத் தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன்.

அது மட்டுமல்ல, இன்று இந்தச் சட்டத்திலே செக்யூரிட்டி வைக்கப்பட வேண்டுமென்றும் அது ஒரு புது நிபந்தனை என்ற முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு வியா பாரிக்கு எந்த அளவுக்கு டர்ன் ஓவர் இருக்கிறதோ அதில் பாதியை அட்வான்சாக டிபாசிட் செய்யக்கூடிய சரத்து இருக்கிறது. இது நடுத்தர வியாபாரிகளைப் பொறுத்தவரையில் சரியாக இருக்குமா என்று ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வியாபாரத்தைப் பொறுத்த வரையிலே, மிகப்பெரிய தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு எப்படி எல்லாம் அரசாங்கம் விற்பனை வரியிலே சலுகை கொடுத்திருக்கிறது என்பதுபற்றிய விவரங்கள் இந்த அவையிலே பேசப்பட்டது. அதே நேரத்தில் நடுத்தர வியாபாரிகளை பொறுத்தவரையில் இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் இன்றைக்கு நடுத்தர வியாபாரிகளுக்கு மிகப்பெரிய சிரமத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கிறார்கள். சிறு வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பல முறைகளில் இம்சிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அரசு தெரிந்து, சிறிய மற்றும் நடுத்தர வியாபாரி



களுக்கு இந்த இலாகாவிலே இருந்து எந்தவிதமான சிரமமும் ஏற்படாமல் நல்ல முறையில் வியாபாரம் நடைபெறுவதற்கான ஒரு சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கக் கூடிய நேரத்தில 'சூவோ மோட்டோவாக இருந்தாலும் சரி, 'என்ஹான்ஸ்மென்டாக' இருந்தாலும் சரி, நடுத்தர வியாபாரிகள் பாதிக்கக்கூடிய முறையில், அவர்கள் தங்களுடைய வியாபாரத்தை மூடிவிடக்கூடிய முறையில் அமுல்படுத்தும் வழிமுறை இருக்கக் கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று செக்ஷன் 2 (டி)-ல் ஒரு வியாபாரி இறந்து விட்டால் அவருடைய வாரிசைப் பொறுத்தவரையில் அவர்கள் 30 நாட்களுக்குள் மனு கொடுக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. 30 நாட்கள் என்பது மிகக் குறைவாக இருக் கிறது, அது போதாது. 90 நாட்கள் என்று அந்த சரத்திலே சொல்லப்பட்டிருக்கிற விதியை 30 நாட்கள் என்பதற்குப் பதிலாக மொத்தத்திலே 90 நாட்கள் என்று வைத்துக்கொள்ளலா என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல் செக்ஷன் 2 (5)-யைப் பொறுத்தவரை அந்த வியாபாரிகள் சர்டிபிகேட் கேன்சல் பண்ணுவதற்கு முன்னால் அந்த வியாபாரிகளுக்கு, அவர்கள் தன் நிலையை எடுத்துச் செல் வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். செக்ஷன் 2 (5)ல் அது இல்லை; சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் செக்ஷன் 17-ல் உள்ள அமென்ட்மென்ட் சம்பந்த மாக ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். சில சட்டங்கள் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அங்கீகாரம் பெறுவதற்கு முன்னால் இடையிலே இருக்கக்கூடிய காலத்தில் அல்லது வியாபாரிகள் அது சம்பந்தமாக தகவல் பெறுவதற்கு முன்னால் அவர்கள் வசூலிக்கக்கூடிய வரிகளுக்கும் அவர்கள் கட்டவேண்டிய வரிகளுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. அது அந்த வியாபாரிகளுக்கு, குறிப்பாக நடுத்தர வியாபாரிகளுக்கு சிறு வியாபாரிகளுக்கு பல சிரமங்களைக் கொடுக்கிறது. இதிலே அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்றால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. மேலும் செக்ஷன் 17-ல் ஏற்கெனவே இருக்கக் கூடிய வரிச் சலுகைகள் மிகப் பெரிய வியாபாரிகளுக்கு பெரிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே த ர சிறு வியா பாரிகளுக்கு கொடுக்கப்படவில்லை.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 மார்ச் 31

(முற்பகல் 11.20)

ஆகவே, இந்தச் சட்டத்தை அமல் நடத்துகின்ற நேரத்தில்,
இந்நாட்டிலே உள்ள சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கும்
பொருள்களுக்கு விலக்கு அளிக்கக்கூடிய வகையிலும், நடுத்தர
வியாபாரிகளை பெருத்த அளவில் இந்தச் சட்டத்திலுள்ள ஷரத்து
களால் எந்தவிதமான முறையிலும் பாதிக்கப்படாத வகையிலும்
ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு குறிப்பாக நடவடிக்கை
எடுக்க வேண்டும். அந்த முறையில் அவர்கள் பார்க்க வேண்டும்
என்று சொல்லிக்கொண்டு, பொதுவாக இந்தச் சட்டத்தை
நான் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. இரா. கருப்பையா : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, தமிழ் நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தைத்
திருத்துவதற்காக இங்கே முன்மொழியப்பட்டு இருக்கிற இந்த
திருத்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக சில கருத்துக்களைக்
கூறுவதற்கு விரும்புகிறேன்.

பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவதற்கான
காரணநோக்க விளக்கக்குறிப்பில், தமிழ்நாடு விற்பனை வரிக்குழு
(அதாவது கெய்வார் குழு) அறிவித்து இருக்கின்ற பரிந்துரைகள்
சிலவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தக்கூடிய முறையிலே இந்தத்
திருத்தம் கொண்டுவரப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்
கிறது. தமிழ் நாட்டில் விற்பனை வரி சம்பந்தமாக பல்வேறு
ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தக் கெய்வார் குழு பல
பரிந்துரைகளைச் செய்து இருக்கிறது. இதிலே மிகவும் முக்கிய
மான பரிந்துரை, இன்றையதினம் இருக்கும் விற்பனை வரியை—
பல முனை விற்பனை வரியை—ஒரு முனை விற்பனை வரியாக—
ஒரே நேரத்தில் அல்ல—படிப்படியாக மாற்றியமைப்பதற்கான
நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்பதாகும்
ஆனால், அரசு அதற்கு நேர் எதிர்மாறாக, ஏற்கெனவே ஒருமுனை
வரியாக இருக்கும் பல பொருள்கள் மீது பலமுனை வரிவிதிக்கப்பட
நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும், அது வருந்தத்
தக்க விஷயம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
ஆகவே, இது சம்பந்தமாக ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே
தெளிவாக கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கருத்து சொல்லப்பட்டு
இருக்கிறது. அனைத்துப் பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை
வரியை கொண்டு வருவதன் மூலம் இன்றையதினம் வரிவசூல்
சுலபமாகச் செய்ய முடியும், லகுவாகச் செய்ய முடியும். இந்த
வரி விதிப்பிலே உள்ள சிக்கல்கள் நீக்குவதற்கும் வழிவகை
செய்யும். அதோடு, இன்றையதினம் பலமுனை வரிகளின் மூல
மாக மக்களுக்கு ஏற்படும் சுமையைக் குறைப்பதற்கும் இது உதவி
செய்யும் என்ற அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்
வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,



1982 மார்ச் 31] [திரு. இரா. கருப்பையா]

இந்தக் கெய்வார் குழு அறிக்கையில், வரிவசூல் சம்பந்தமாக அதன நடைமுறை சம்பந்தமாக பல ஆலோசானகள் கூறப்பட்டுள்ளன. அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இன்றையதினம் பொதுவாக, நம்முடைய மாநில அரசுக்கு ஒரு மிகப்பெரிய வருவாய் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இந்த விற்பனை வரி, ஆண்டு தோறும் உயர்ந்து கொண்டே போகிறது என்பதையும் நாம் அனைவரும் உணர்ந்து இருக்கிறோம். அறிந்து இருக்கிறோம் என்கிற ஒரு நிலைமையையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, இந்த அறிக்கையின் அடிப்படையில் மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாம் என்ன தான் மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், வரிகள் விதிக்க வேண்டும் என்று எண்ணினாலும், அவை முடிவில் மக்கள் தலையில் தான் போய் விழுகின்றது. இந்த வரியை வசூலிக்கின்ற நேரத்தில், வர்த்தகர்களில்—பெரிய வர்த்தகர்கள், சிறிய வர்த்தகர்கள் என்று நாம் பிரித்துப் பார்க்கலாம். நடைமுறைப்படுத்தலாம். ஆனால், வர்த்தகர்கள் மத்தியில் ஏதோ வரி வசூல் சம்பந்தமாக கெடுபிடியான நிலைகள் இருக்கின்றன என்ற உணர்வில் மாற்றம் காண்பதற்கான வழிமுறைகளை அரசு கண்டறிய வேண்டும். அரசுக்கு சேர வேண்டிய வரியை, அரசுக்கு செலுத்தவேண்டியவர்களாக இருப்பவர்களிடத்தில் இருந்து வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்பதை கம்யூனிஸ்ட் கட்சி எந்த நேரத்திலும் வற்புறுத்தவில்லை.

அம்மாதிரி கூறுவதற்குத் தயாராக இல்லை. அரசுக்கு முறையாக செலுத்த வேண்டிய வரிகளை முறையாக கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழி வகைகளை நாம் எடுக்க வேண்டும். அதே நேரத்தில், 'ஹெராஸ்மெண்ட்' என்று சொல்வார்களே அது போல் தவறுகள், சிக்கல்கள், போன்றவைகள் இல்லாமல் இலகுவாக வசூலிக்கக்கூடிய முறைகளை உருவாக்க வர்த்தக பிரதிநிதிகளையும், அரசு பிரதிநிதிகளையும், பொது மக்களின் பிரிதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, கலந்து பேசி, அதன் மூலமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக புதிய பல அதிகாரங்கள் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கியிருக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்த அதிகாரங்கள் அதிகாரிகளால் பயன்படுத்தப்படக்கூடிய நேரத்திலே, அதை முறையாகப் பயன்படுத்தவேண்டும் என்பதும், அதன் மூலம் பல புதிய பிரச்னைகள் உருவாக்கப்படக்கூடும் என்கிற கருத்திலேதான், இந்தச் சட்டமன்றத்திலே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அதை குறிப்பிட்டார்கள், ஸ்டீல் ரோலிங் போன்றவற்றில் வரிவிதிப்பு சம்பந்தமாக எடுக்கப்

பட்டிருக்கிற முறைகள், கொடுக்கப்பட்டிருக்கிற அறிவிப்புகள்
சம்பந்தமாக பிரச்னைகள் இன்றையதினம் வந்திருக்கிறது என்
பதை குறிப்பிடவிரும்புகிறேன். ஆகவே இது சம்பந்தமாக
அரசு கோரியிருக்கக்கூடிய அதிகாரம், அதிகாரிகளின் கையிலே
பயன்படுத்தப்படுகிற நேரத்திலேதான், இந்த அதிகாரங்கள் முறை
யாக பயன்படுத்தப்படுமா என்ற சந்தேகத்தை மீண்டும் ஏற்படுத்து
கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து பிணையத் தொகை வசூலிப்பது குறித்து. புதிதாக
தொழில் துவங்குவோருக்கு இது சம்பந்தமாக ஒரு பிரச்னை
இருக்கிறது. அவசியம் அனைவரும் பதிவு செய்துக் கொள்ளப்
பெறவேண்டும். அதிலே எந்தவிதமான சந்தேகமோ, ஆட்
சேபணையோ கிடையாது. ஆனால் அப்படி பதிவு செய்கிற
நேரத்திலே, பிணையத் தொகையை கட்டவேண்டும் என்று
நிர்ப்பந்திக்கிற அந்த இடத்திலே தான் பிரச்னை வருகிறது.
ஏற்கனவே தொடர்ந்து வர்த்தம் செய்து வரும் வியாபாரிகள்
சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுடைய கணக்குகளை ஆராய்ந்து
அந்த வரிகளின் அடிப்படையிலே 50 சதவீதத்திற்கு, அவர்களி
டத்திலே பிணையத் தொகை வாங்குவது சம்பந்தமாக பிரச்னை
இருப்பதற்கு இல்லை. ஆனால் புதியதாக பதிவு செய்யக்கூடிய
வர்த்தகர்களிடத்திலே, பிணையத் தொகையை நிர்ணயிக்கக்
கூடிய அதிகாரத்தை அந்த அதிகாரிகள் தான் பெற்றி
ருக்கிறார்கள். அவர்களாகவே 5000 ரூபாய் என்றால், 5000
தான். 500 ரூபாய் என்றாலும் 500 ரூபாய்தான். அல்லது
10,000 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னாலும், பத்
தாயிரத்தை அவர்கள் பிணையத் தொகையாக கட்டியே ஆக
வேண்டும். இந்த முறை சரியல்ல.

ஆகவே, புதியதாக வியாபாரிகள் பதிவு செய்யக்கூடிய நேரத்
திலே உடனடியாக அந்தத்தொகையை வசூலிக்காமல், ஒரு ஆண்டு
கழித்து, அவர்களுடைய கணக்கை ஆய்வு செய்து, அந்த ஆய்வின்
அடிப்படையிலே, அவர்களிடமிருந்து பிணையத் தொகையாக
வசூலிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்று நிர்ணயம்
செய்ய வேண்டும், பிறகு வசூலிக்க வேண்டும். ஆகவே அந்த
முறையிலே இந்த சட்டத்திலே அதற்கான மாற்றங்களைச்
செய்ய நீங்கள் முன் வரவேண்டும் என்று கோர விரும்புகிறேன்.

அடுத்து நம் வர்த்தகர்கள் கட்ட வேண்டிய பாக்கிக்காக
செலுத்த வேண்டிய தொகையை – அபராதத் தொகை என்கிற
பெயரிலே வரக்கூடாது என்ற வகையில் கொண்டு வந்திருக்கி
றார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். அபராதம்
என்ற வாசகத்தை இந்த சட்டத்திலே இடம்பெறச் செய்யக்
கூடாது என்ற அந்த எண்ணம் வரவேற்கக்கூடிய அம்சம்தான்.
ஆனால் அபராதம் என்பதற்கு பதிலாக, வட்டி என்ற பெயராலே
வசூலிக்கப்படுகிறது என்றும், அதிலே 2 சதவீதமாக இருந்ததை



—$\frac{1}{2}$ சதவீதமாக ஆக்கியிருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் வரவேற்க வேண்டிய அம்சம்தான் என்றாலும், (குறுக்கீடு)......... அதை இரண்டு சதவீதமாகவே ஆக்கி அமெண்ட் மெண்ட் கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த $\frac{1}{2}$ சதவீதத்தில் என்ன பெரிய அளவு அரசாங்கத்திற்கு வருமானம் வந்துவிடப்போகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் ஏற்கனவே உள்ளபடியே இருந்திருக்கலாம். அதிலே மாற்றம் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

ஆகவே அபராதம் என்ற வார்த்தையை நீக்கியிருக்கிறார்கள். அப்படி நீக்கி, அதற்கு பதிலாக வட்டி என்று மாற்றியதினால் மட்டும் நல்லெண்ணத்தை உருவாக்குவதாக அமையாது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதேபோலவே அரசிடத்திலேயிருந்து வரவேண்டிய வரி பாக்கி—அதாவது திரும்பி வர வேண்டிய வரி பாக்கியை 90 நாட்களுக்கு அதிகமாக போய் விட்டால், அதற்கும் வட்டி கொடுக்கிற முறையை நிர்ணயித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11–30.)

அது ஒரு சதவிதம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் வாங்கக் கூடிய நேரத்திலே 2 சதவீதம் என்று சொல்கிறோம். ஆனால் அதைக் கொடுக்கக்கூடிய நேரத்திலே ஒரு சதவீதம் என்று சொல்கிறோம். இதிலே என்ன நியாயம் இருக்க முடியும். அவர்களுக்கு முதன்முதலாக இந்த மாதிரியான தொகை கொடுப்பது என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதிலே பாரபட்சம் இல்லாமல் நாம் எந்த அளவுக்குப் பெறுகிறேமோ அதே வட்டி விகிதத்தை அவர்களுக்கும் கிடைக்கின்ற முறையிலே நடவடிக்கைகள் எடுத்தால் இந்த அரசின்பால் மேலும் ஒரு நல்லெண்ணத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இன்றைய தினம் இந்த வரி வசூல் முறைகளிலே இருக்கக்கூடிய குறைபாடுகள், ஊழல்கள் போன்றவற்றிற்கு மாற்றம் காண்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் தீவிரமான சிந்தனை ஓட்டத்தின் அடிப்படையிலே காரியங்களைச் செய்து மாற்றத்தைக் காண வேண்டும், அதற்கு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்தச் சட்டம் அரசுக்கு அதிகாரத்தை

ளிக்கின்றது என்ற வகையிலே எனக்கு முன்னாலே பேசிய
மாண்புமிகு உறுப்பினர்களான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும்,
திரு. சித்தன் அவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். 1970
ஆம் ஆண்டிலே இருந்து 1975 ஆம் ஆண்டு வரை வரியை வசூ
லிக்காமல் விட்டுவிட்டுச் சென்றவர்கள், அந்த வரியினை வசூ
லிக்க அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் 1977 ஆம் ஆண்டிலே
அந்த வரி பாக்கியாக இருந்தது. அப்படி வரியே வசூலிக்கா
மல் இருந்தவர்கள் இன்று அந்த வரியை ஏன் தள்ளுபடி செய்கி
றார்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் அந்த வரியை
வசூலிக்காத காரணத்தால்தான் வியாபாரிகளிடத்திலே 5 ஆண்டு
களுக்குப் பின்னால் அந்த வரியினை வசூலிக்க முடியாது என்ற
காரணத்தாலேதான் 1977 ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியிலே
அது தள்ளுபடி செய்யப்பட்டது. அப்படித் தள்ளுபடி செய்த
நேரத்திலே ஆடிட்டர் அவர்கள் இங்கே சொன்ன அந்த பொதுக்
கணக்கு குழுவிற்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். அக்கவுன்
டன்ட் ஜெனரல் அவர்கள், நிர்வாக உத்தரவின் மூலம் தள்ளு
படி செய்ய அரசுக்கு அதிகாரம் கிடையாது என்றும் சட்ட
மன்றத்தின் ஒப்புதல் மூலம்தான் செய்ய முடியும் என்றும் குறிப்
பிட்டுக் காட்டியதன் காரணத்தாலேதான் சட்டமன்றத்தினுடைய
ஒப்புதலைப் பெறுவதற்காக அதாவது நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சி
யில் ஏற்பட்ட தவறுகளைத் திருத்துவதற்காக இந்த அரசு சட்ட
திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை நான் குறிப்
பிட்டுக்காட்ட விரும்புகிறேன் ஆனால் அந்த வரியினை
அன்றைக்கே அவர்கள் வசூலித்திருப்பார்களேயானால் இந்தச்
சட்டம் இங்கே வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்
பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே
அன்றைக்கு வரியை வசூலிக்காமல் இருந்துவிட்டு அந்த வியா
பாரிகளை தொல்லைக்கு ஆளாக்க வேண்டும், அதன் மூலம்
அவர்களுக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்ற எண்ணத்
திலேதான் கேட்கிறார்களே தவிர இப்படிப்பட்ட நிலைமை
இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பொதுக்
கணக்குக் குழு பற்றிச் சொன்னார்கள். நிர்வாக உத்தரவின்
மூலம் மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை, சட்டமன்றத்தின் ஒப்பு
தல் பெற வேண்டும் என்றுதான் பொதுக்கணக்குக் குழு அறிக்கை
யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி** : மாண்புமிகு பேரவை மாற்
றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்கின்றபோது 1977 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு கோடியே
22 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்தது பற்றி சொன்னார்கள்.
பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கையில் 31-வது பக்கத்திலே
பாரா 4-லே வருவாய்த் துறை வசூலிப்பதற்கு ஆதரவாக நீதி
மன்றத்தின் தீர்ப்பு இருந்தபோதிலும் கூட அந்தத் தீர்ப்பின்
படி 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னால் வரி ஏதும் விதிக்கப்பட
வில்லை என்று 9-7-1981 அன்று துறை மேற்கொண்ட ஆய்வுக்
குறிப்பில் இருந்து தெரிய வருகின்றது. ஏற்கனவே ஸ்டே



இருந்த காரணத்தால் வசூல் பண்ணவில்லை. ஆனால் ஸ்டே
விஃப்ட் பண்ணப்பட்டதற்குப் பிறகும் 1976-லே இருந்து
நாளது தேதி வரையிலே 8 கோடி ரூபாயை வசூல் பண்ணாமல்
ரைட் ஆஃப் செய்திருக்கிறீர்களே, அது முறையா என்றுதான்
நாங்கள் கேட்டோம், வேறு ஒன்றும் இல்லை.

**திரு. எம். எஸ். மாணிக்கம்** : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, 1976-லே உச்சநீதிமன்றம் அந்த வரியை வசூலிக்க
லாம் என்று தீர்ப்பளித்திருந்தாலும் அந்த வரியை வசூலிக்கக்
கூடாது என்று வியாபாரிகள் உயர்நீதிமன்றத்திலிருந்து தடை
ஆணை பெற்றிருந்தார்கள். ஆகவே, அதை வசூலிக்காமல்
இருந்த நிலைமை தொடர்ந்து இருந்து வந்தது. இப்படிப்பட்ட
நிலை இருப்பதால், சட்டத் திருத்தம் மூலம், சட்டமன்றத்தின்
ஒப்புதல் பெற்று, வரியை இந்த மாதிரி வசூலிக்க முடியாமல்
இருக்கிற நிலை ஏற்படுகிறபோது அந்த வரியைத் தள்ளுபடி
செய்ய அரசு அதிகாரம் பெறுகிறது. ஆகவே, இதில் எந்த
விதமான முறைகேடும் இல்லை. சட்டத்திருத்தம் கொண்டு வந்து
அதன் மூலம் அதிகாரிகள் வரியை வசூலிக்கும்போது ஏற்படுகிற
இடையூறுகள் வராமல் வரியை ஒழுங்காக வசூலிக்க தக்க நட
வடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்ற முறையில் இது
இருப்பதை வரவேற்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னல்தான் வியாபாரி
களுக்குத் தொல்லை இல்லாமல் வரி வசூலிக்கப்படுகிறது. இந்த
அரசு வணிகர் நலக் குழுவை உருவாக்கி அவர்கள் கூறுகிற
கருத்துக்களையும் ஏற்று அவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படா
மல் சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்து இச்சட்டத்தை
நடைமுறைப்படுத்துகிறது. உண்மையில் வியபாரம் செய்
கிறவர்களுக்குத்தான் உரிமம் வழங்க வேண்டும் என்ற முறையில்
இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. ஆக, வியாபாரிகளுக்கும்
தொல்லையில்லாமல் அரசுக்கும் வருமானம் வரக்கூடிய முறை
யில் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பதால் இதை வரவேற்று
அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு
பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு
பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்
களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகப்
பார்க்கிறபோது எல்லா உறுப்பினர்களுமே இதை வரவேற்
றிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவில் புதிதாக எதுவும்
கொண்டுவரப்படவில்லை. ஏற்கனவே இருப்பதில் பலவற்றை
இலகுவாக ஆக்கியிருப்பது உங்களுக்குத் தெரியும். குறிப்பாகச்
சொல்லவேண்டுமானால் இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு
கெய்வார் தலைமையில் ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின்
சிபார்சின் பேரில் இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வந்தது
உங்களுக்கும் தெரியும். அவர்களால் சிபார்சு செய்யப்பட்ட

114 சிபார்சுகளில் 99யை இந்த அரசு இதற்கு முன்னால் தேவைப் பட்டதற்கு சட்ட முன் வடிவு மூலமாகவும் தேவைப்படாத தற்கு எக்ஸிக்யூட்டிவ் ஆர்டர்ஸ் மூலமாகவும் நிறைவேற்றி இருக்கிறது. இன்று வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவினால் மூன்று சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

பொதுவாகச் சொல்கிறபோது, உறுப்பினர்கள் பலரும் பேசியதற்கு தனித்தனியாகச் சொல்லாவிட்டாலும், பொது வாகச் சொல்கிறபோது வணிகர்களுக்குள்ள சங்கடங்களைப் போக்குவதற்குத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். திரு. கருப்பையா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரசு திருப்பிக் கொடுக்க வேண்டிய பணம் காலதாமதமானால் அதற்கு 2% வட்டி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் வட்டி போட்டுக் கொடுக்க வேண்டும் என்று இதுவரையில் இதற்கு முன்னால் இல்லை. இது முதற்கட்டமாக வந்திருக்கிறது என்பதால் இதை நீங்கள் வர வேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பெனல்டி என்று சொன்னால் அது தேவை இல்லை. வட்டி என்று மாற்றியிருக்கிறோம்.

அதேபோல் இன்று வியாபாரம் செய்கிறவர்கள் முதலில் அவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்து கொண்டவர்கள் அதற்குப் பிறகு டெப்பாஸிட் கட்ட வேண்டும் என்று வரும்போது, இப்போது எவ்வளவு டெப்பாஸிட் கட்ட வேண்டும் என்பது வணிகத்துறை அதிகாரிகள்தான் நிர்ணயிக்க வேண்டும். இந்தச்சட்டபடி வணிகத்துறை அதிகாகரிள் நிர்ணயிக்காமல் வியாபாரம் செய்பவர்களே நிர்ணயிக்க வேண்டும். ஆக, நாம் எதைச் செய்தாலும் மற்றவர்களுக்கு நன்மை விளை விக்கும் வகையில் செய்கிறோம். அப்படி ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

இதிலே புதிதாக யாருக்கும் சங்கடம் விளைவிக்கும் வகை யிலே ஒன்றுமில்லை என்பது உங்களுக்கு நன்கு தெரியும். அதே போல், கருப்பையா அவர்கள் ஒரு முறை வரியைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஒரு முனை வரியைப் பற்றியும், பல முனை வரியைப் பற்றியும் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஒரு முனை வரி யாருக்கு நன்மை, பல முனை வரி யாருக்கு, நன்மை, தீமை என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா ன் தெரிந்திருப்பார்களேயானால், நிச்சயமாக இதைச் சொல்லி யிருக்க மாட்டார்கள். இதைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.





அவர் சார்ந்த இயக்கத்தைப்பற்றித் தெரியும். அவர்கள் ஏழை பால் ஆதிக அக்கறை காட்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அதைப்பற்றிய விவரங்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அந்த விவரங்கள் சேகரித்துக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தால், அதை அவர்கள் இப்படி சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

பொருள்கள் உற்பத்தி இடம் (மானுபாக்சரிங் பாயின்ட்), பங்கீட்டு இடம் (டிஸ்டிரிபியூஷன் பாயின்ட்) பொறுத்த மட்டுமே ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. இதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். பொருள்கள் உற்பத்தி இடம் அல்லது பங்கீடு இடம் ஆகியவைகளைப் பொறுத்தமட்டில் ஒருமுனை வரி போடப்படுகிறது. பலமுனை வரி, பொருள்களை விற்பனை செய்யக்கூடிய வணிகர்களுக்கு விதிக்கப்படுகிறது. அதிலே ரூ. 50,000 வரையிலே விற்பனை வரியிலே இருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஒருமுனை வரியாக இருந்தால், இந்த விதி விலக்கு இல்லை. ரூ. 50,000-லிருந்து ரூ. 1,00,000 வரையில் வணிகத்துறை வணிகர்களுக்கு இணக்கமுறையில், கம்பவுண்டிங் சிஸ்டத்தில் வரி செலுத்த முடியும். அவர்கள் விவரமாக கணக்கு வைக்க தேவையில்லை. இந்தச் சலுகைகள் ஒருமுனை வரியின் கீழ் உள்ள வணிகர்களுக்குக் கிடையாது. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நன்கு தெரியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

எல்லாப் பொருள்களையும் ஒருமுனை வரியின்கீழ் கொண்டு வந்தால், சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். கெய்வார் கமிட்டி எல்லாப் பொருள்களையும் உடனடியாக ஒருமுனை வரியின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று சொல்லவில்லை. படிப் படியாக, தேவைக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டுமென்று சொல்லி யிருக்கிறது. அரசும் அவ்வப்போது, மேலும் பல பொருள்களை ஒருமுனை வரியின்கீழ் கொண்டுவர முடியுமா என்பதை ஆராய்ந்து வருகிறது. அப்படி அரசும் எடுத்த முயற்சியின் காரணமாக தற்போது மாநிலத்திலே வருவாயில் 90 சதவிகிதப் பொருள்கள் ஒருமுனை வரியின்கீழ் வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலிருந்து உங்களுக்கு ஒன்று நன்றாகத் தெரியும்.

ஒருமுனை வரி, பலமுனை வரியில் இருக்கின்ற சங்கடங்களைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். கருப்பையா, மற்றும் சிலருடைய கேள்விக்கு நான் முதலிலேயே பதில் விட்டேன்.

அதேபோல், ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லுகிறபோது, ரிஜிஸ்திரேஷனை கான்சல் செய்யும்போது, விளக்கம் கூற வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வாய்ப்பு தற்போது செக்ஷன் 21(6)இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, வாய்ப்பு இப்போது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சித்தன் அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். செக்யூரிட்டி வாங்குவதுபற்றி உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். செக்யூரிட்டி வாங்குவது அதிகாரிகள் அல்லது எவ்வளவு கட்டவேண்டுமென்று அவர்களே தீர்மானித்துக் கொள்ளலாம் என்று முதலிலே தெரிவித்தேன். செக்யூரிட்டி பற்றி இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நன்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக இதைக் கொண்டுவந்திருப்பது எல்லோருக்கும் நன்மை விளைவிக்கிற முறையிலேதான். பொதுவாக எங்கேயும் சங்கடங்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அபராதம் ஏன் இருக்கிறது என்று கேட்டார்கள். அபராதம் இல்லையென்று சொல்லிவிட்டால் கொடுக்கிறபணத்தை அவர்கள் ஓர்க்கிங் கேபிடலாக வைத்துவிடுவார்கள். 2 சதவீதம் என்று வைத்திருக்கிறோம். பாங்கிலே 18 சதவீதம் வைத்தார்கள். அவர்கள் இதையும் ஓர்க்கிங் கேபிடலாக வைத்துக்கொண்டால் அரசுக்கு வருகிற வருமானம் குறைந்துவிடும் என்பதால் காலத்திலே வரவில்லை என்ற காரணத்தினாலே இவைகள் எல்லாம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எக்சிகியூடிவ் ஆர்டர் என்று சொன்னார்கள். அது இன்றைக்கு ஏற்பட்டது அல்ல. குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலேயும் போடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அவர்கள் புதிதாகப் போட்டு இருக்கமாட்டார்கள். அதற்கு முன்னாலே இருந்திருக்கும். நடைமுறையிலே இது வாழையடி வாழையாக வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே எந்த அரசு இருந்தது. உங்களுக்குத் தெரியும். அவர்கள் போட்டு இருப்பார்கள். அந்தக் காலத்திலேயே 1970-லிருந்து 1974 வரை போடப்பட்டது. 1 கோடியோ ஒன்றரைக் கோடியோ என்று சொன்னார்கள். எப்போது இருந்தது என்பது 'எல்லாம் உங்களுக்குத் தெரியும். ரொம்ப காலத்திற்கு முன்னாலேயிருந்தே இது வந்திருக்கிறது.



தமிழ்நாட்டிலே பல ஸ்டீல் ரோலிங் மில்ஸ் இருக்கின்றன. மற்ற மாநிலங்களிலேயும் இருக்கின்றன. தமிழ்நாட்டிலே இருக்கின்ற அந்த மில்கள் அந்தப் பொருட்களை முதலிலே வாங்குகிறபோது ஒருதரம் வரிப் போடப்படுகிறது. அந்தப் பொருட்களை, கழிவுப் பொருட்களை வேறுவிதமாக பொருட்களை வாங்குகிறார்கள். வாங்கி ரீரோல் செய்து திருப்பி விற்கிறார்கள். அப்போது ஒருதரம் 4 சதவீதம் வரிப் போடப்படுகிறது. இப்படி இருமுறைகள் போடுகிறார்கள். நாம் பூராவும் வரியை எடுக்கவில்லை. போடப்படுகிற வரியில் முதலிலே வாங்கப்படுகிறபோது போடப்பட்டிருக்கிறதா என்பதை நன்றாகப் பார்த்துக்கொண்டு அப்போது அதைப் கட்டியிருக்கிறார்களா என்பதைப் பார்த்துத்தான் முடிவு செய்கிறார்கள். வாங்குகிறபோது போட்டிருந்தால் விற்கிறபோது போடவில்லை. வாங்குகிறபோது போடாவிட்டால் விற்கிறபோது வரி உண்டு. இப்படித்தான் போடப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிலே மகாராட்டியாவிலே 4 சதவீதம்; மேற்கு வங்காளத்திலே 3 சதவீதம்; பஞ்சாபிலே 4 சதவீதம், கர்நாடக மாநிலத்திலே தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். இப்படி மற்ற மாநிலங்களிலே வரி குறைவாக இருக்கிறபோது அண்டை மாநிலங்களிலே வரி குறைவாக இருக்கிறபோது இங்கே 8 சதவீதம். முதலிலே வாங்குகிறபோது 4 சதவீதம் விற்கிறபோது 4 சதவீதம் ஆகமொத்தம்8 சதவீதம் என்று வருவதால் அவர்கள் அதை குறைக்க வேண்டுமென்று கேட்டதன்பேரில் வாங்குகிறபோது அல்லது விற்கிறபோது வரி போடக்கூடிய முறையிலே இரண்டுக்கும் இல்லாமல் நாம் இப்போது ஆக்கியிருக்கிறோம். இது அவர்களே செய்யவில்லை. இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டிலே உள்ள ஆலைகள் சரியாக இல்லை, பல் வேறு பிரிவுகள் மூடப்பட்டிருக்கின்றன, அதனால் அதிக தொழி லாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். மாநிலத்தில் செய்யப்படும் பணிகளுக்கு உருக்கு உற்பத்தி தேவை என்பதால் அந்த ஆலைகள் நல்ல முறையிலே வேலை செய்ய வேண்டுமென்று எண்ணப்பட்டது. மற்ற மாநிலங்களிலே செய்யப்படுகின்ற உருட்டுப் பொருட்களோடு இந்த மாநிலத்திலே செய்யப்படு கின்ற உருட்டுப் பொருட்கள் போட்டியிலே சந்தையிலே விற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது.

அண்டை மாநிலத்தில் இதற்கு குறைந்து இருக்கிறது. இவை களை எல்லாம் எண்ணித்தான் இன்றைக்கு அவர்கள் போடுகிற வரியை, வேறு மாநிலத்திலே அங்கே இருக்கிற ரோலிங் மில்லிலே செய்து இங்கே வந்து விற்றால் அதற்கு நிச்சயமாக வரி உண்டு. ஆனால் இங்கே இருக்கிற ரோலிங் மில்லிலே கூட அவர்கள் ஒரு முறை வரியை செலுத்தி விட்டால் இரண்டாவது முறை வரி

இல்லை என்று முறையை ரத்து செய்திருக்கிறோம். இந்த எக்சிகியூட்டிவ் ஆர்டரைப் பற்றிச் சொன்னார்கள். எக்சிகியூட்டிவ் ஆர்டர் இதற்கு முன்னாலே இருந்தது. இந்த அரசு வந்த பிறகு தான் எக்சிகியூட்டிவ் ஆர்டர் போட்டாலும், அவைக்கு தெரிவிக்க வேண்டுமென்று சட்டம் வந்திருக்கிறது. இது புரொக்ரசிவ் அமென்ட்மெண்ட். இதற்கு முன்னாலே இல்லாததை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல்-1 .50)

அடுத்து ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ். எல்லா சட்டங்களிலும் உயர் நீதி மன்றங்களிலும் என்ன தெரிவிக்கிறார்கள் என்றால் லைசென்ஸ் வாங்குகிற போது அந்த 'லைசென்ஸ் பீ' வாங்குவதற்கு ஆகிற செலவை தான் வாங்க வேண்டுமே தவிர நீங்கள் அதையே ஒரு வருமானமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்று தக்க விதிமுறைகள் இருக்கின்றன. லைசென்ஸ் வாங்கினால், 'லைசென்ஸ் பீ' வாங்குவதற்கான செலவு இருக்கிறதே, எக்சிகியூட்டிவ் எக்ஸ்பென்சஸ், நடைமுறை செலவுகள் அதற்கு தான் வாங்க வேண்டுமே தவிர நீங்கள் அதையே வருமானமாகக் ஆக்கக் கூடாது என்ற முறையிலே சட்டம் இருக்கிறது. இன்றைக்கு ஒரு லட்சம் பேர்கள் தான் இதிலே பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் அந்த ஒரு லட்சத்திலே இதைக் கூட்டினால் எவ்வளவு வரும் என்பதை கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள். இதிலே பெரும்படியான வருவாய் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்ட முன் வடிவை நீங்கள் எல்லோரும் வரவேற்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 62/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''



**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

(1) பிரிவு 4-ல் உட்பிரிவு (i)-ல் 'ரூபாய் பத்து' என்பதற்குப் பதிலாக, ரூபாய் 50 என்றும் : 'ரூபாய் ஐந்து, என்பதற்கு பதிலாக ரூபாய் 25 என்று மாற்றியமைக்க வேண்டும்.

(2) பிரிவு 4-ல் உட்பிரிவு (i)-ல் (1-A) நீக்கப்பட வேண்டும்.

(3) பிரிவு 4-ல் உட்பிரிவு (ii) (2)-ல் வரும் 'மன நிறைவடைந்தால்' என்னும் வார்த்தையை நீக்கிவிடவும்.

திருத்தம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்.

In clause 5, in sub-clause(iii)'

(i) omit item (c);

(ii) re-letter item" (d) "as item" (c)".

In clause 5, in sub-clause (iii) for item (c), as relettered' sustitute the following items namely :—

"(c) for the first and second provisos, the following provisos shall be substituted, namely ;-

"Provided that if the tax assessed or has become payable under this Act or any instalment thereof is less than one hundred rupees, no interest shall be levied for a period of one month after the expiry of the time specified in the notice of assessment or the order aforesaid;

Provided further that where a dealer or person has preferred an appeal or revision against any order of assessment under this Act, the interest payable under this sub-section, in respect of the amount in dispute in the appeal or revision, shall be postponed till the disposal of the appeal or revision, as the case may be, and shall be calculated on the amount that becomes due in accordance with the final order passed on the appeal or revision as if such amount had been the subject matter of the appeal or revision."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 6 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 1 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

IN CLAUSE 1, in sub-clause (1), for the figures "1981" substitute the figures "1982".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.



முகப்புரை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

''முகப்புரை சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In the Preamble, for the expression "Thirty-second" substitute the expression "Thirty-third."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : துணைத்தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 62/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்டமுன் வடிவு 1981.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 651 1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கொண்டு வந்துள்ள 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன். சாதாரணமாக, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதிலே எங்களுக்கொன்றும் கருத்து வேறுபாடில்லை. இன்றையதினம் நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் எடுத்துக் கொண்டாலும் அல்லது இந்திய துணைக் கண்டத்தை கூட, ஏற்கெனவே இருக்கிற நில பாகங்கள் தானிருக்கின்றன. மக்கள்தொகையை நாம் கட்டுப்படுத்தினாலுங்கூட, மக்கள் தொகை வளர்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால், அதிலே விவசாயிகள் பயிரிடுகின்ற பயிர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாக இன்றையதினம் விளங்குகிறது. அதிலும், குறிப்பாக நெல் பயிரானாலும் சரி, பருத்தியானாலும் சரி, மணிலாவானாலும் சரி, ஏற்கனவே இருந்த கிச்சடி அல்லது கார் போன்ற பயிர்கள் அல்லது பருத்தியிலே கூட, பழைய வகைகளைப் பயிரிட்டால், மகசூல் குறைவாக இருந்தாலும், பூச்சிகள் அதிகமாகத் தாக்குகின்ற நிலை இல்லை. ஆனால் உணவு அதிகமாகத் தேவை. உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் அதிகமாகத் தேவை என்று வருகிறபொழுது, இன்றையதினம் விவசாய இலாகாவாலே சொல்லப்படுகிற பல்வேறு வகையான புதியரக விதைகள் நான் முதலிலே சொல்லியதுபோல், பருத்தியானாலும் நெல்லானாலும் அல்லது மணிலாவானாலும் அப்படிப்பட்ட விதைகளைப் பயிரிடும் போது, பூச்சிகள் அதிகமாக தாக்குகின்ற நிலைமை இன்றையதினம் நாட்டிலே இருக்கிறது. இங்கே, அமைச்சர் அவர்கள், அவைகளை எடுத்துக் கொள்ளலாம்,

*1981 ஆகஸ்டு 22-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



அல்லது குறிப்பிட்ட பயிர் இருக்கிற நிலங்களைத் தனிமைப்படுத்தவோ, அல்லது அவைகளை அழித்தால்தான் மற்றைய பாகங்களுக்குப் பூச்சிகள் பரவாது என்று அரசாங்கம் நினைக்குமானால், அவைகளை அழித்து விட்டால், அவற்றிற்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுப்பதற்கான, சட்டத் திருத்தம் கொண்டு வந்தாலும்கூட ஏற்கனவே மானியத் கோரிக்கையிலே பல கருத்துக்களை நான் சொல்லி இருக்கிறேன். அவற்றை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். பூச்சிகள் வந்ததற்குப் பிறகு, அந்தப் பூச்சிகள் பரவாமல் தடுப்பதற்கோ அல்லது தடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், அதைத் தனிமைப்படுததிஅழிப்பதையோ அதற்காக நஷ்டஈடு தருவதையோ நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அரசாங்கம் சட்டத்தின் மூலமாக, அதிகாரம் எடுத்துக் கொண்டாலும் கூட, இவைகள் எல்லாம் வருவதற்கு முன்னதாக, அவைகளைக் காக்க, தடுப்பதற்கு, அரசாங்கம் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

(நண்பகல் 12-00.)

இன்றைக்குச் சாதாரணமாக குறுகிய காலப் பயிர்களைப் போட்டால் ஏறக்குறைய அதற்கேகூட இரண்டு முறையாவது நாம் பூச்சி மருந்து அடிக்க வில்லை என்றால் நிச்சயமாக அந்தப் பயிரைக் காப்பாற்ற முடியாது. சாதாரணமாக அவைகளுக்கு இரண்டு முறை பூச்சி மருந்து அடிக்க வேண்டும் என்றால் தற்பொழுது பூச்சி மருந்தின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக இரண்டு மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்கு மூன்று மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. அதை விவசாயிகள் இன்று தாங்கமுடியாத சூழ்நிலையில், ஆதிதிராவிடர் களுக்கு விவசாயிகளாக இருந்தாலும் கூட மானிய விலையில், சிறு விவசாயிகளுக்குக்கூட சில நேரங்களில் மானிய விலையில் பூச்சி மருந்தை நாம் தந்தாலும்கூட, அது தேவையான எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில்லை. எனவே, குறிப்பாகப் பூச்சி மருந்துகளின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநில அரசாங்கமானாலும் சரி அந்த விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது வழிவகை காண வேண்டும். அவ்வாறு விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் எல்லாக் காலங்களிலும் மானிய விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதிலே அரசாங்கத்தினுடைய நிதி நிலைமையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்தப் பூச்சி மருந்தைப் பொறுத்தவரையில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்ற கணக்கை எடுக்கக் கூடாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

காரணம், உரம் இட்டுவிடலாம்; ஆனால் இந்தப் பூச்சி மருந்து பிரச்னை பெரும் தொல்லையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில் எல்லாக் காலகட்டத்திலும் இப்படிப்பட்ட பயிர்

களிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் அல்லது சிறு விவசாயிகளாக இருந்தால் அரசாங்கமே பூச்சி மருந்து தெளிக்கின்ற காரியங்களைச் செய்யலாம் அல்லது மானிய விலையில் பூச்சி மருந்து கொடுக்கும் ஒரு நிலைமையை நாம் உருவாக்கித் தர வேண்டும். வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் காலத்திலே பூச்சி மருந்தைத் தெளிக்கவில்லை என்றால், பக்கத்திலே உள்ளவர்கள் காலத்திலே பூச்சி மருந்து தெளிப்பதாலே அந்த பயிர்களுக்கும் பரவுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

அன்றைக்குக்கூட நான் சொன்னேன். ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து இந்த ஸ்பிரேயர் பிரிந்துவிடுகின்ற நிலைமையிருக்கிறது. ஸ்பிரேயர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது அதற்கான அலுவலகங்களில் இல்லாத சூழ்நிலையில் அரசாங்கம் போட்ட உத்தரவால் ஒரு தேக்கமான நிலைமை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்றைக்கு மானியக் கோரிக்கையில் இதைப்பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் சொல்லவில்லை என்றாலும்கூட, கீழ் மட்டத்திலே, கிராமங்களிலே உள்ள இந்தச் சூழ்நிலையை மனத்திற்கொண்டு விவசாயிகளுக்கு பவர் ஸ்பிரேயர்கள் வாடகை இல்லாமலோ அல்லது குறைந்த விலையிலோ கிடைக்க அரசாங்கம் வழிவகை கண்டு மாற்று ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

இப்பொழுது ஸ்ப்ரேயர் கிடைப்பதில் பல தொல்லைகள் இருக்கின்றன. அப்படிக் கிடைத்தால்கூட பூச்சி மருந்துகளின் விலை அதிகமாக இருக்கிறது. ஒரு முறை மருந்து தெளிக்கின்றார்கள். அந்த மருந்தின் வீரியம் 15 நாட்களுக்குத்தான் இருக்கும் என்று சம்பந்தப்பட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும்பொழுது இன்னொரு பதினைந்து நாட்கள் கழித்துத் தெளிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு வேண்டிய பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் அடிக்காமல் விட்டு விடுகிறார்கள். அதனால் மேலும் பூச்சிகள் ஏற்பட்டு பக்கத்து வயல்களுக்கும் பரவுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பவர் ஸ்ப்ரேயர்கள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அத்துடன் தேவையான பூச்சி மருந்துகளும் மானிய விலையிலோ அல்லது சிறுவிவசாயிகளுக்கு இலவசமாகவோ கொடுக்கின்ற தன்மையை அரசாங்கம் பின்பற்ற வேண்டும். நிச்சயமாக வயல்களில் ஏற்கனவே நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற அந்த நிலைமை வருவதற்கு முன் அப்படிப்பட்ட பணிகளை இந்த வேளாண்மைத் துறை செய்கின்ற வகையில் நம்முடைய அமைச்சரவர்கள் அதற்கான சட்டம் தேவையில்லை என்று கருதி, இருக்கின்ற நிர்வாகத்தில் சீர்திருத்தத்தைச் செய்து இந்த நிலைமையை உருவாக்கினால் நிச்சயமாக நாம் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும். அதேநேரத்தில் உணவு உற்பத்தியையும் அதிகமாகச் செய்யக்கூடிய நல்லதொரு நிலைமை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இப்படிச் செய்தாலும்கூட வயல்களில் பூச்சி ஏற்பட்டு விடுகிறது. அதிகாரிகள் பார்க்கிறார்கள். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் மணிலாப் பயிர் அல்லது நெல் அல்லது பருத்தி போன்றவைகளை இதிலே சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. அப்படி நீங்கள் எடுக்கும்பொழுது அந்த விவசாயிகளுக்கு முன்னதாகவே அறிவுறுத்த வேண்டும். பூச்சி வந்து, பிறகு பக்கத்திலுள்ள அதிகாரிகளிடத்திலே சொல்லி அதற்குப் பிறகு அதை அழிக்கும் நிலைமைக்கு ஆளாகாமல், வேளாண்மைத் துறை அதிகாரிகள் காலத்திலே சென்று அந்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தலாம்.

இன்றைக்கு அந்த நிலைமை முடியவில்லை என்று சொன்னால் நீங்கள் அழிப்பதிலே கூட தவறு இல்லை என்று சொல்வேன். அப்படி அழிக்கின்றபோது விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கும் பிரச்சினை வருகின்றபோது அவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்களோ அந்த அளவுக்கு நியாயமான நஷ்டஈட்டை கொடுப்பதற்கு அதிகாரிகள் நல்லமுறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இந்த சட்டத்திலேயும் வழி வகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஏனென்றால், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காத சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு கட்டத்தில் அவர்களுக்கு நியாயமான நட்டஈடு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த மேல்முறையீடு என்று சொல்லி இருக்கிறீர்கள். அப்படி மேல்முறையீடு செய்யும்போது கட்டணம் என்கின்ற வரியைக்கூட நான் பார்த்தேன். விவசாயிகள் மேல் முறையீட்டுக்குச் செல்லும்போது கட்டணம் வசூலிக்கும் தன்மைகள் இருக்கக் கூடாது. அதிகாரியிடத்திலே ஒரு மனு கொடுப்பதன் மூலம் முறையீடு செய்கின்ற நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து அமைச்சர் அவர்கள் தனது பதிலில் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் நியாயமான நட்டஈட்டைக் கொடுக்க வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பூச்சிமருந்துகளை மலிவான விலையில், மானிய விலையில் இலவசமாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பவர் ஸ்பிரேயர் குறைந்த வாடகையில் கிடைப்பதற்கும், சிறு விவசாயிகளுக்கு வாடகை இல்லாமல் கிடைப்பதற்கும் தேவையான நேரத்தில் அவர்களுக்கு அருகாமையிலேயே கிடைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களிலே பட்டம் படித்த வேளாண்மை அதிகாரிகள் 3 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பலபேர்களை அரசாங்கம் கிராமங்களிலே நியமனம் செய்திருந்தாலும்கூட, அவர்கள் கிராமங்களிலே குடியிருப்பது இல்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியில் நார்த்தாம்பூண்டி என்று கிராமத்தில் பட்டம் படித்த அதிகாரி இருக்க வேண்டும் என்று அரசாங்கம் நியமித்தது. ஆனால் அவர்கள் அங்கிருந்து 20 மைல் தள்ளியிருக்கின்ற திருவண்ணாமலையிலே தங்கி இருக்கிறார். அவர் எப்போது போகிறார் எப்போது வருகிறார் என்று அந்த விவசாயிகளுக்கு தெரியாது. நிலங்களை அவர்கள் சென்று பார்க்கும் தன்மை இல்லை. இவைகளை சரியான முறையிலே கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் இல்லாத இடங்களில் அதிகாரிகளைப் போடவும், இருக்கின்ற அதிகாரிகள் கட்டாயம் இருக்க வேண்டும். கட்டாயமாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அந்த பூச்சிகள் ஏற்படுகின்றபோது அதை அழிக்கும் பொறுப்பை அவர்களுக்கு அறிவிக்கின்ற அந்தத் தன்மையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு இல. பலராமன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் பூச்சிகளும், நோய்களும் பற்றிய சட்டத்தை மேலும் திருத்துவது சம்பந்தமாக இங்கே ஒரு சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்ட முன் வடிவு கொண்டு வருவது நல்ல நோக்கத்திற்காக இருப்பதால் அதை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். இதைக் கொண்டு வருவதற்கு முன்னாலே அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் சில காரியங்களை யோசிக்க வேண்டும்.

இந்த நேரத்தில் பூச்சிகள், நோய்கள் அல்லது விஷ தீங்கு உண்டாக்கும் களைகள் என்ற ரீதியில் பார்க்கும்போது அவைகளை அழிப்பதற்கு மூலாதாரமாக இருக்கக்கூடிய மருந்துகளை நாம் கட்டுப்படுத்தி இருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னார்கள், பூச்சி மருந்துகளைக் கட்டுப் படுத்துவது மத்திய அரசு என்று கூறினார்கள். நாங்கள் அதற்குப் பொறுப்பில்லை என்று பதில் அளித்தார்கள். ஆனால் மத்திய அரசின் வேளாண்மைத் துணை அமைச்சராக இருக்கின்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் பூச்சி மருந்து விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு யோசிக்கிறோம் என்று கூறினார்கள். அது மாநில அரசாக இருந்தாலும் சரி, மத்திய அரசாக இருந்தாலும் சரி, பூச்சி மருந்து விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டத்தை மேற்கொண்டுதான் இதை அமல்படுத்தவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட



விரும்புகிறேன். கடந்த 2, 3 ஆண்டுகளாக பூச்சிமருந்து விலைகள் ஏறிக்கொண்டே போகின்றது. அந்த விலையேற்றம் சாதாரண விவசாயிகள், சிறு விவசாயிகள் தாங்கக்கூடிய விலையாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கருத முடியும்.

இதற்கான நடவடிக்கையும், இதற்கான விளக்கமும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தருவார்கள் என்று கருதுகிறேன். இங்கே பூச்சிகளும் நோய்களும் என்று கூறும் போது, நோய்கள் என்னும்போது, நோய்கள் வரும்போது யாரால் வரும் என்பதை அந்த விவசாயிகள் அறியமுடியாது. இப்போதுகூட ஒரு நல்ல தரமான மலை வாழைப்பழம் என்று சொல்லக்கூடிய பழம் இன்றைக்கு கொடைக்கானல் பகுதியிலே, சிறுமலைப் பகுதியிலே இருப்பவைகள் எல்லாம், இன்றைக்கு அழிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை வட ஆர்க்காடு மாவட்டத்திலேகூட அந்த வாழைகளுக்கெல்லாம் வந்திருக்கிறது. இதைத் தடுக்க துறை ஏதாகிலும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா, அதற்கான ஆராய்ச்சி செய்திருக்கிறதா என்றால், இல்லை என்று தான் கூறமுடியும். மலைவாழைப்பழங்கள் இன்றைக்கு அழிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இரண்டொரு ஆண்டு களில் அது அழிந்துவிடும் அபாயம் இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே இன்றைக்கு, வட ஆர்க்காடு மாவட்டத்திலே. அந்த வாழைப்பழங்களுக்கு நோய்கள் அதிகமாக இருக்கின்றன. ஏதோ அந்த விவசாயிகளே ஆராய்ச்சி செய்து அந்த நோயைப் போக்குவார்கள் என்ற நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து உன்னால்தான் அது ஏற்பட்டது, உனக்கு அபராதம் விதிக்கிறேன் என்ற நிலைக்கு ஆளாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் மிக அபத்தமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை யோசிக்கவேண்டும். ஏதோ தீமை உண்டாக்கும் சலுகைகளை, அந்தப் பாங்கியான் போன்ற செடிகளை அந்தப் பயங்கரமான சூழ்நிலையில் எங்கள் மாவட்டத்திலே மட்டும் அல்லாது மாநிலத்திலேகூட அதிகமாக உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்தப் பாந்தியான் அதிகமாக உருவாகக்கூடிய விதையை அரசு தரப்பில் இருக்கக்கூடிய புறம் போக்குகளிலே சாலைகளிலே, அங்கேதான் உருவாகிறது. ஏதோ தனிப்பட்ட விவசாயிகள் இடத்தில் இவைகள் உருவாகவில்லை என்பதை அரசு உணரவேண்டும்.

(பிற்பகல் 12–10)

இது ஏதோ தனிப்பட்ட விவசாயிகள் இடத்திலே உள்ள நிலத்திலேதான் உற்பத்தியாகி, நாடு பூராவும் பரப்பிவிட்டார்கள் என்ற கருத்தை உருவாக்குவதைக் காட்டிலும், நாம் அதைத் தடுக்க என்ன செய்கிறோம் அரசு தரப்பில் என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்து. இது மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய அந்தப் பாந்தியான் போன்ற செடிகளை அழிக்கவேண்டும். அதை அழிப்பதற்கு நடவடிக்கைகள் அரசு எடுக்கவேண்டும். அதை அழிப்பதற்கு அரசுத் தரப்பில் ஏதாவது செயற்குறிப்பு

இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூற முடியும்.
அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குக்
காரணம் ஏதோ மலைப்பாங்கான இடங்கள் எஸ்டேட்டுகள்
போன்ற இடங்களிலேதான் அதை அமுல்படுத்தவேண்டும் என்ற
நோக்கத்தோடு இருந்தாலும், இதில் பயிரும் சேர்க்கப்பட்டிருக்கக்
கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். பயிர் என்றால்,
சமவெளியில் விளையக்கூடிய அதிகமான பயிர், மலைப் பிர
தேசங்களில் கூட, உருளை, கோஸ் போன்ற காய்கறிகள் பயிரிட
லாம். ஆனால் பயிர்கள் என்றபோது, சமவெளிகளில், எனக்கு
முன்னால் பேசிய திருவேங்கடம் கூறியதுபோல், நெற்பயிர்களும்
குறிப்பிடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். அதிலும்
இன்றைக்கு நெற்பயிர் போன்றவைகளைப் பயிரிடக்கூடியவர்கள்,
கம்பெனி போன்ற நிறுவனங்களில் அல்ல, ஒரு தனிப்பட்ட விவசாயி
சிறு விவசாயி என்பதை உணரவேண்டும். அந்த விவசாயி
அனைத்தும் தெரிந்தவர்களாக இல்லை என்பதையும் உணர
வேண்டும். நோய்கள் என்கிறபோது, அந்த நோய்கள் விவசாயி
யால் உண்டாகக்கூடியது அல்ல. பூச்சிகளால் வருவதாக இருந்
தாலும், நோய்கள் வருவதற்கு காரணமாக உள்ள, விதையினால்
கூட நோய்கள் வருகிறது என்பதை அரசு உணரும், அமைச்சர்
அவர்களுக்கும் தெரியும். ஆனால் இன்றைக்கு விதைகளைத்
தருவது அரசுத் தரப்பிலிருந்துதான். எனவே நல்ல விளைச்சல்
தரக்கூடிய விதைகளையெல்லாம் அரசுத் தரப்பிலிருந்து வழங்கப்
பட்டிருக்கிறது. இந்த அரசுத் தரப்பிலிருந்து வழங்கக்கூடிய
விதைகளின் மூலமாகக்கூட நோய் வருகின்ற நிலை இருக்கிறது.
அது பரவலாக இருக்கிறது. அந்த நெல்லை வாங்கி பயிரிடும்
போது, அதற்கு என்ன நோய் வரும், ந்த நோய்களைத் தடுப்
பதற்கு விவசாயிதான் பொறுப்பு என்ற அந்த நிலையில் இருக்க
வேண்டாம். அதிலே அரசுத் தரப்பிலேயிருந்து அதிக தீவிரமாக
கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு
அனுபவத்திலிருந்து நிலவரி வசூலிப்பது என்று ஒரு
திருத்தத்தைக்கூட இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். பழைய
கால அனுபவங்களைப் பார்க்கிறபோது, அரசே மருந்துகளைத்
தயாரிப்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாக்க வேண்டும். இந்த
மருந்தை எப்படித் தயாரிப்பது? எந்தக் காலத்தில தயாரிப்பது?
நோய்க்காக இருந்தாலும் சரி, அல்லது பூச்சிக்காக இருந்தாலும்
சரி, அது அரசுத் தரப்பிலிருந்து செய்தால்தான் காரியம் நிவர்த்தி
ஆகும். ஆனால் அதிகமான தொகையை வசூலிப்பது என்பது
அதிகமாக கட்டணங்களை நிர்ணயிப்பது என்பது
பல நிலைகளில் நாம் அதைக் கண்காணிக்கவேண்டும். அப்படி
இருந்தால்தான் சாதாரண விவசாயிகள் சமவெளிகளில் பயிரிடக்
கூடிய நெற்பயிர் போன்றவைகளை பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்
நிலை உருவாகும் என்பதை உணர்ந்து நீங்கள் பூச்சி மருந்தி
கொடுத்து, கட்டுப்படுத்தி, அடுத்து அதற்கான செலவுகளை
நிர்ணயிப்பது போன்றவைகளில் நீங்கள் கண்காணிப்பாக இருக்க
வேண்டும்.



அதிலே வேறு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்
கள். 'ஒருவரைக் கொண்டு மேற்கொள்ளலாம்' என்று இருக்கி
றது. பூச்சி மருந்து அடிப்பதற்கு வேறு ஒருவரைக்கொண்டு
செய்யலாம் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.
அந்த ஒருவர் என்றால் காண்ட்ராக்ட் என்ற முறையை அரசு
உருவாக்க வேண்டாம். அது பழைய நிலைமைக்குத்தான்
போகும். நோய்த் தடுப்புச் சூழ்நிலைகளை அரசே உருவாக்க
வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

நிலவுடைமையாளர்கள் என்று சொல்லும்போது, இன்றைக்கு
வார சாகுபடி செய்பவர்கள், குத்தகை சாகுபடி செய்பவர்கள்
என்றெல்லாம் இருக்கிறார்கள். கம்பெனி, மற்றவை என்றால்
பதிவு செய்த ஸ்தாபனங்களாக இருக்கலாம். ஆனால் கிராமங்
களில் சமவெளியில் 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்
கள் எல்லாம் இருக்கிறார்கள். இப்படி சிறு விவசாயிகள்
இருக்கலாம், வார சாகுபடி செய்பவர்கள் இருக்கலாம் அல்லது
குத்தகை சாகுபடி செய்பவர்கள் இருக்கலாம். அவர்களிடம்
எப்படி வசூல் செய்ய வேண்டும் என்பது பற்றி அரசு
முன்யோசனையோடு இருக்க வேண்டும். நிலத்தில் பூச்சி
மருந்து அடித்தால் அதற்கான கட்டணத்தை யாரிடம் வசூல்
செய்வது ? நிலவுடைமையாளரிடத்திலா அல்லது வார
சாகுபடி செய்பவரிடத்திலா அல்லது குத்தகை சாகுபடி
செய்பவரிடத்திலா என்பதை முடிவு செய்து, அதற்கு நீங்கள்
தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் முறையீடு என்று வரும்போது 30 நாட்களுக்குள்
அனுபோகதாரர் என்று இருக்கிறது. அதற்கு விளக்கம் தேவை.
அனுபோகதாரர் என்றால் வேறு ஒரு இடத்தில் அதற்கு
விளக்கம் தந்திருந்தாலும் இதிலே சிக்கல் இருக்கிறது.
இதிலே சட்டப் பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே,
அமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

முப்பது நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்று
கூறி இருக்கிறீர்கள். 30 நாட்களுக்குள் என்றால் அது பெரிய
பளுவாக இருக்கிறது. இப்படிச் செய்தால் இன்றைக்கு
விவசாயக் கூட்டுறவுக் கடனை வசூல் செய்வதிலே ஏற்படுகின்ற
தொல்லைகளைப்போல இதிலும் விவசாயிகள் தொல்லை
ளுக்கு ஆளாக்கப்படுவார்கள். துன்புறுத்தப்படுவார்கள்.
வருவாய்த் துறையின் ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி வசூல்
செய்தால் மேலும் குழப்பம் ஏற்படும்.

இந்தச் சட்டம் மிகவும் ஜாக்கிரதையாக கையாளப்பட வேண்டியதாக இருப்பதால் இதிலே மிக ஜாக்கிரதையாக இருந்து, சிறு நில உடைமையாளர்களுக்குப் பாதுகாப்பாக நீங்கள் இருக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாமரம் போன்றவைகளுக்கு இன்றைக்கு நோய் வருகிறது. அது நோய்தானோ என்று விவசாயிகள் அறிய முடியாத நிலையில் இருக்கிறார்கள். மாமரத்திலே நோய் இருக்கிறதா இல்லையா என்பதை நிபுணர்களால்தான் அறிய முடியும். அல்லது அந்தத் துறையின் அதிகாரிகளால்தான் அறிய முடியும். ஆகவே இந்த சட்டத்தை மிக ஜாக்கிரதையாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். பழனிவேல் :** மாற்றுத்தலைவரவர்களே, பயிர்களுக்கு வரக்கூடிய பூச்சிகளைத் தடுத்து நிறுத்தி, பயிர்களை பாதுகாக்கக்கூடிய முறையிலே கொண்டு வரக்கூடிய இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

அதேசமயத்தில் இன்றைக்கு பயிர்களுக்கு பூச்சி மருந்து அடிப்பது என்ற பிரச்சினைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். சென்ற காலத்தில் தமிழ்நாட்டில் ஒரு பெரிய பரபரப்பை தோற்றுவித்த பிரச்சினை என்பது. ஆகவே, இந்த மருந்து அடிப்பது என்ற நோக்கம் நல்ல நோக்கம் என்று இருந்தாலும் இந்தத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த அந்தந்த பகுதிகளிலே இருக்கக்கூடிய விவசாயிகளைக்கொண்ட குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அடிக்கக்கூடிய மருந்து நல்ல மருந்து தானா தேவையான அளவுக்கு அடிக்கப்பட்டதா, அதனால் பூச்சிகள் செத்திருக்கின்றனவா, பயிர்களை பாதுகாக்க முடிந்திருக்கிறதா என்பதைப்பற்றி ஒரு கருத்து வழங்குவதற்கு அந்தந்தப் பகுதிகளிலே விவசாயிகளைக் கொண்ட குழுக்களைப் போடுவதற்கு அரசு ஆலோசிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இந்த மருந்து அடித்ததற்கான கட்டணத்தை அவர்கள் நிலவரியோடு சேர்த்து வசூல் செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேநேரத்தில் அப்படி வசூல் செய்யக்கூடிய கட்டணத்திலிருந்து 3 ஏக்கர், 4 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற சிறு விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும். அவர்களிடம் வசூல் செய்ய வேண்டிய தேவை இல்லை, பெரிய விவசாயிகளிடத்திலே அதை வசூல் செய்யலாம்.





அதைப்போன்று மேல்முறையீடு செய்வதற்கு கட்டணம், வசூல் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது அதற்குக் கட்டணம் தேவையில்லை. ஒரு தகவலை பேக்ல் எழுதிக் கொடுத்தால் போதும் என்று வைக்க வேண்டும்.

(பிற்பகல் 12—20.)

அதோடு, இன்னொரு பிரச்னை என்னவென்றால், இன்றைக்கு இந்த நோய் குறிப்பாக நெல் வயல்களி — பல்லாயிரக்கணக்கான ஏக்கர் ஒரே இடங்களில் இருந்தால், அடித்து விடலாம். ஆனால் உருளைக்கிழங்கு, வெற்றிலை, வாழை போன்று பல பயிர்கள் இன்றைக்கு ஆங்காங்கு சிறுசிறு பகுதிகளில் பயிற் செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த உதவி செய்வதாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிறபோது, அது அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும் நிலையில் இருக்க வேண்டும்.

குறிப்பாக, இன்றைக்கு உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ள கொடைக்கானல் பகுதியில் ஒரு ஏக்கருக்கு பூச்சிமருந்து அடிக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு ஏக்கருக்கு 350 ரூபாய் மருந்து வாங்குவதற்காகச் செலவிட வேண்டியிருக்கிறது. வாழை வெற்றிலை போன்ற பயிர்களுக்கு மருந்து வாங்குவதற்கு அதிக செலவாகிறது. ஆகவே, இத்தகைய பயிர் செய்கின்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் கடைகளில் விற்கப்படும் பூச்சிமருந்துகள் எல்லாம் படுபயங்கரமான விலையில் விற்கப்படுகின்றன. தரமற்ற மருந்துகள் விற்கப்படுகின்றன. அந்த மருந்துகளை வாங்கி அடித்தால் பூச்சிகள் சாவதை விட, அந்தப் பூச்சிகள் அதிகமாக வளர்ச்சி அடைந்து, அதிகமாகிவிடும் நிலை இருக்கிறது, அந்த மாதிரியான மருந்துகளை உடனடியாகக் கண்டுபிடித்து, தடுத்து நிறுத்துவதற்கும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பூச்சி பாதிப்பால் கடந்த காலத்தில் பல விவசாயிகள் மிகவும் நஷ்டம் அடைந்துள்ளார்கள். குறிப்பாக, நிலக்கடலை சாகுபடி செய்த விவசாயிகள், கம்பளிப் பூச்சின் காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் பல்லாயிரக்கணக் கான ரூபாய் நஷ்டம் அடைந்து இருக்கிறார்கள். இந்தப் பயிரைச் செய்வதற்கு அவர்கள் அரசாங்கத்திடமிருந்து பயிர்க் கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்தப் பயிர் இப்படி பாழாகி விட்டதால் அவர்கள் அந்தப் பயிர்க்கடனைத் திருப்பிக்கட்ட

திற்காக விவசாயிகள் பூச்சி மருந்துகளை வாங்குகிறார்களோ,
அதற்கு நேர் எதிரான சூழ்நிலை வ[illegible]க்கூடிய ஒரு அபாயமும்
இருக்கிறது. அதாவது அந்த பூச்சி மருந்துகளை அடிக்கிற
நேரத்தில், பயிர்களுக்கு வேறு விதமான நோய்கள் வரக்கூடிய
நிலையும் இருக்கிறது. ஆகவே அந்த பூச்சி மருந்துகளை கொடுக்
கிற நேரத்தில், அவர்களுக்கு அரசே, இன்னின்ன நோய்களுக்கு
இன்னின்ன மருந்துகள் என்று சொல்லிக் கொடுப்பதோடு, ஒரு
இடத்திலே பயிர்கள் இந்த நோயினால் தாக்கப்பட்டிருக்கிறது
என்று புகார் வந்தால் அதிகாரிகள் உடனடியாக அந்தப் பகுதிக்கு
நேரிலே சென்று அந்த நோயை அல்லது பூச்சிகளை, புழுக்களை,
அல்லது புகையான் போன்றவற்றை அழிப்பதற்கான நட
வடிக்கைகளில் இறங்கவேண்டும். அத்தோடு இது ஒரு முக்கிய
மான, அவசியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தால், ஒரு
ஏக்கர், 2 ஏக்கர் நிலங்களில் இந்த நோய், அல்லது பூச்சிகள்
வருகிறபோது, அந்த விவசாயிகளுக்கு கூடுமானவரையில் இலவச
மாகவே மருந்து அடித்துக் கொடுக்க வேண்டும், 100 ஏக்கருக்கு
மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய பெரிய நிலச்சுவான்தார்
களிடத்திலே கணிசமான அளவு தொகையையும் வசூலிக்க
வேண்டும் என்று கேட்டு இந்த சட்ட முன் வடிவினை வரவேற்று
அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, ஒரு விளக்கம் கேட்க மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் [illegible]னுமதி அளித்திருக்கிறார்கள். ஆகவே அதைக்கேட்க
தங்களுடைய அனுமதியும் வேண்டும். உங்கள் மூலமாக ஒன்று
கேட்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் இந்த சீமைக்
காட்டாமணி என்ற செடியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்
நல்லப்பன் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். அந்த சீமை
காட்டாமணி செடி, நம்[illegible]டைய மாண்புமிகு சமூக நலத்துறை
அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே இரும்புத்தலை என்ற
பகுதியிலும், வெள்ளியூர் என்ற கிராமத்திலும் இந்தப் பயிர்
களுக்கு நோய்களை உண்டாக்குவதோடு ம[illegible]டுமல்லாமல்,
விவசாயத்தையே திசை திருப்பிவிடுமோ என்று அஞ்சக்கூடிய
வகையில் இருக்கிறது. அரசாங்கம் இதில் தலையிட்டு, உடனடி
யாக ராணுவ நடவடிக்கை போன்று நடவடிக்கைகள் எடுக்க
வில்லை என்றால், தஞ்சை மாவட்டம், முழுவதுமே விவசாயம்
பாதிக்கப்படும் என்ற நிலையை கூறி, இதற்கு அரசு உடனடி
யாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்ற விளக்கத்தையும்
கேட்கவிரும்புகிறேன்.

(பிற்பகல் 12.30)

மாண்புமிகு திரு. [illegible]. காளிமுத்து : தலைவர் அவர்களே,
இந்தச் சட்டமுன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்
களுடைய கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். இந்தச்
சட்டமுன்வடிவு எதனால் கொண்டுவரப்படுகின்றது என்பதை



முடியாமல் இருக்கிறார்கள். இதைப்போலவே, வெற்றிலை
கொடிகால்களுக்கும் வாடல் நோய் வந்தகாரணத்தால் அவர்களும்
கடனைக் கட்டமுடியாமல், அவர்கள் வாங்கிய கடனும்
நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இந்தப் பூச்சி கொல்லி மருந்து
அடிக்கும் திட்டத்தில், அவர்கள் சென்ற காலத்தில் இந்த
மாதிரியான பயிர்கள் செய்வதற்காக வாங்கிய கடன் நிலுவையில்
இருந்தால், அரசு அதை ரத்து செய்து விட்டால் மிகவும்
உதவிகரமாக இருக்கும் என்பதையும் நான் இப்போது கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றைக்கு, எலி, சாரைப்பாம்பு போன்ற ஜீவராசிகள்
எல்லாம் நெல் மற்றும் உணவு தானியங்களை மிகப்பெரிய அளவில்
தாக்கியிருக்கிறது. விவசாயிகள் ஒரு ஏக்கர் சாகுபடி செய்து
இருந்தால் ½ ஏக்கர்தான் மகசூல் கிடைக்கிறது, ½ ஏக்கர்
பயிர் செய்து இருந்தால் ¼ ஏக்கர்தான் மகசூல் கிடைக்கிறது.
இத்தகைய நிலங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இந்தக் கொள்கை
அரசின் பரவலான கொள்கையாக, எல்லா விவசாயிகளுக்கும்
உதவி செய்யும் அடிப்படையில் கொண்டு வரும் [illegible]ட்டமாக
நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாவட்டம், ஒரு
குறிப்பிட்ட தாலுக்கா என்கிற அடிப்படையிலோ அல்லது ஒரு
குறிப்பிட்ட செல்வாக்கு உள்ளவர்கள் உள்ள ஏரியாவில் இதைச்
செயல்படுத்துவதுஎன்றோ, அல்லது மிகப்பெரிய விவசாயிகள்
அல்லது அரசியல் கட்சிகள் சார்ந்தவர்கள் இருக்கும் இடங்களில்
தான் இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்று இல்லாமல்,
எல்லா இடங்களிலும், உள்ள, எல்லா விவசாயிகளுக்கும் இந்தத்
திட்டத்தின் பயன்போய்ச் சேர வேண்டும் என்ற முறையில்,
நாடுபூராவிலும் உள்ள விவசாயிகளுக்கு கிடைக்கும் முறையிலே,
இதைக் கறாராக அமல்படுத்த வேண்டும், இது குறித்து மாவட்ட
அதிகாரிகளுக்கும் அரசாங்கம் தெரிவித்து, உடனடியாக
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொண்டு, அரசாங்கம் கொண்டு வந்து இருக்கும் இந்தச்
சட்டத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய
விவசாயிகளுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய நோய்களைத் தடுப்பது
பற்றிய மசோதாவை முதலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
இன்றையதினம், நெல், ராகி போன்ற உணவுப் பொருள்களானா
லும்சரி, மஞ்சள், வாழை, பருத்தி போன்ற பணப்பயிர்களாக
இருந்தாலும் சரி, கடலை, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துக்

களாக இருந்தாலும் சரி, கத்தரி, தக்காளி, அவரைபோன்ற காய்கறிகளானாலும் சரி, அவற்றிற்கெல்லாம் அன்றாடம் புதுப்புது நோய்கள் வருவதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக நெல் போன்ற பயிர்கள் வளரக் கூடிய நேரத்திலே புகையான் பூச்சிகளும், கடலைச் செடிக்கு வரக்கூடிய கம்பளிப் புழுக்களும் எத்தனை ஏக்கர் பயிரென்றாலும் அத்தனையையும் அழித்துவிடக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. அப்படி பயிர்களில் பூச்சிகள் விழுகின்றபோது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சென்று விவசாயிகள் நேரிடையாக முறையீடு செய்தால், உடனே அந்தப் புழுக்களை, பூச்சிகளை, புகையான் பூச்சிகளை தடுப்பதற்கான முறையில்—அதற்கான நடவடிக்கைகளில் அந்த அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, அப்படி பூமியின் சொந்தக்காரர்கள், அனுபவதாரர்கள், மருந்துகள் அடிக்கிற கால வட்டத்தில், குத்தகைதாரர்களாக இருந்தால், அவர்களிடம், பூச்சி மருந்துக்கான தொகையில் குறைந்த அளவு சதவீதமே வசூலிக்க வேண்டும். கணிசமான அளவுக்கு அவர்களுக்கு தள்ளுபடி செய்துக் கொடுக்க வேண்டும், என்கிற நிலையையும், அதே சமயத்தில் சிறு விவசாயிகள் என்றால், அதாவது 2 ஏக்கர்கள், ஒரு ஏக்கர், $1\frac{1}{2}$ ஏக்கர் வைத்திருக்கக்கூடியவர்களாக இருந்தால் கணிசமான அளவுக்கு, அந்த மருந்தின் விலையிலே தள்ளுபடி செய்யப்பட்டு அவர்களை பாதுகாக்கவேண்டிய ஒரு சூழ்நிலையையும்; அடுத்தபடியாக அதிகமான அளவில் பூமியாக இருந்தாலும் ஒரு கிராமமே அப்படி பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்தால், அதாவது கிராமம் முழுவதுமே கடலை போன்ற பயிர்களை பயிரிட்டிருந்தால், அரசே அந்த பூச்சிகளை அழிக்க முன் வந்து, ஹெலிகாப்டர் மூலமாக அந்த கிராமம் மூழுவதும் மருந்து தெளித்து விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற நிலையையும் வற்புறுத்தி அதனை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, புதியதாக வரக்கூடிய களைகள் என்று சொல்லக்கூடியவைகளில் பார்த்தியான் என்று சொல்லக் கூடிய செடியும், பல்வேறு நிலைகளிலும் உருவாகி, பயிர்களுக்கு பெரும் அழிவைக் கொடுக்கக்கூடிய சீமைகாட்டாமணி என்று சொல்லக் கூடிய செடியும், கோவையிலும், தஞ்சையிலும் பெருமளவில் பரவி, பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதோடு, பயிர்களுக்கு நோயையும் உண்டாக்குகின்றன. அதை ஆரம்பத்திலேயே அழிப்பதற்கான வழிகளை அரசு முன்எச்சரிக்கையோடு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் இன்றைய தினம் வேறொரு ஆபத்தும் இருக்கிறது. இம்மாதிரி நோய்கள் வருகின்றன, பூச்சிகள் வருகின்றன அவைகளை ஒழிக்க வேண்டும் என்று எந்த காரண



உறுப்பினர்கள் தெளிவாகப் படித்து அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். பூச்சிகளைத் தடுப்பதற்கும், நோய்களைத் தடுப்பதற்குமாக 1919-ம் ஆண்டிலே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்றுள்ள பல பிரச்சினைகளை ஒப்பிட்டு நோக்குகின்றபோது இந்தச் சட்டத்திலே சில திருத்தங்களைப் புகுத்தவேண்டும் என்று கருதித்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகின்றது. ஒரு பகுதியிலே பூச்சிகள் தாக்கினால், நோய்கள் தாக்கினால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றபோது ஊராட்சி ஒன்றியத்திலே தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று பழைய சட்டம் கூறுகிறது. அதைப்போலவே அரசிதழிலே அறிக்கை வெளியிடவேண்டும் என்றும் பழையச் சட்டம் கூறுகின்றது. அதைப்போலவே பாதிக்கப்பட்ட மரங்களை மட்டும் அழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கு மட்டும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று பழைய சட்டம் கூறுகின்றது. ஆகவே இதிலே மாற்றங்களைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் ஒரு பகுதியிலே பயிர்கள் பாதிக்கப்படுமேயானால் ஒன்றியத்திலே தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றவரைக்கும் காத்திருக்காமல் அதற்குள்ளே சேதம் அதிகமாகிவிடக்கூடாது என்ற காரணத்தால் ஒரு வேகமான நடவடிக்கையில் இந்தத் துறை இறங்கி பூச்சி மருந்து அடித்தல் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இந்தச் சட்ட முன்வடிவு வழிவகை செய்கின்றது.

அரசிதழில் அறிக்கை வெளியிடும் வரையில் பொறுத்திருக்காமல் ஒரு அறிக்கையை வெளியிட்டு உடனடியாக, நேரடியாக, விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்தச் சட்டமுன்வடிவு வழிவகை செய்கின்றது. அதைப்போலவே மரங்கள் பாதிக்கப்பட்டு அந்த மரங்களை அழித்தால் மட்டும்தான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்ற நிலைமையை மாற்றி அது வாழையாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும், மணிலாவாக இருந்தாலும், மற்றைய பயிர்களாக இருந்தாலும் அவை பாதிக்கப்பட்டு அதனால் அவற்றை அழிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்ற நேரத்திலே அந்த விவசாயப் பெருமக்களுக்கு நாம் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பதற்கும் இந்தப் புதிய சட்டத்திலே வழிவகை செய்து கொண்டுவந்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

எந்த அளவுக்கு பூச்சிகளாலே பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், எத்தனை வகையான நோய்த்தாக்குதல் இருக்கின்றன என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பார்த்தீனியம் போன்ற களைகளை மாற்றுவதற்குக் கூட இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் குறிப்

பிட்டதுபோல பாசனக் கால்வாய்களை அடைத்துக் கொண்டு தண்ணீர் வருவதற்குத் தடை செய்கின்ற வகையிலே உருவாகின்ற களைகளைக் களைவதற்கும் இந்தச் சட்டம் வகை செய்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே பாசனத்தைத் தடுத்தாலும் அல்லது பயிர்களுக்கு சேதம் விளைவித்தாலும் அல்லது விவசாயப் பெருமக்களுக்கு, அதாவது மனிதர்களுக்கே இந்த நோய்களினால் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை ஏற் பட்டாலும் அவற்றை எல்லாம் நீக்குவதற்கு இந்தப் புதிய சட்ட முன்வடிவு வழிவகை செய்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எப்போதுமே ஒரு சட்டத்தைப் பற்றிப் பேசப்படு கின்ற நேரத்திலே, அல்லது அதை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அதனுடைய பயன்களைப்பற்றியோ, அல்லது அதனால் ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களை நாம் முன்கூட்டியே உணரமுடியாது. பழைய சட்டத்திலே எந்தெந்த அளவுக்குச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நாம் இப்போது புரிந்து கொண்டுதான் புதிய சட்ட முன்வடிவுகொண்டு வருகிறோம். அதைப்போலவே இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாகி நடை முறைக்கு வருகின்றபோது இதிலே சிக்கல்கள் இருந்தால், கட்டணத்தை விவசாயிகள் செலுத்துவதிலே சிக்கல்கள் இருந்தால், நிலவரியோடு சேர்த்து வருவாய்த்துறை வசூ லிப்பதில் சிக்கல்கள் இருந்தால் அதைப்பற்றி ஆராய அரசு கடமைப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதற்காக இப்போதே நாம் அவற்றை எல்லாம் நீக்கு வது என்பது நிச்சயமாக இயலாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் பேசுகின்றபோது அனுபோகதாரர் என்பது யாரைக் குறிக்கும் என்பதிலே சட்டச் சிக்கல்கள் எழக்கூடும் என்று தெரிவித் தார்கள். நிலச் சொந்தக்காரர்களை அல்லது நிலத்திலே பயிரிடுகின்றவர்களைத்தான் அது குறிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் கட்டணம் செலுத்துவதிலே ஏதாவது சட்டப் பிரச்சினை இருந்தால் அவர்கள் மேல்முறையீடு செய்து கொள்வதற்கு இந்தச் சட்ட முன்வடிவு வழிவகை செய்கின்றது.

அடுத்து, பல்வேறு பூச்சி மருந்துகள் அடித்தும் கூடப் பயன் இல்லை, அவற்றைச் சாப்பிட்டு பூச்சிகள் வாழ்கின்றன என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு நோய்க்கும் எந்தெந்த வகையான மருந்தைப் பயன் படுத்துவது என்று வேளாண்மைத்துறை ஆராய்ச்சிகளின் மூலமாக கருத்துக்களை வெளியிடுகிறோம்.



ஆனால் நாம் பூச்சிகளை அழிப்பதற்கு எப்படி புதிய புதிய யுக்திகளைக் கண்டு பிடிக்கிறோமோ அந்த யுக்திகளிலிருந்து தப்பித்துக் கொள்ள பூச்சிகளும் புது புது யுக்திகளைக் கண்டு பிடித்து வளரக் கூடிய நிலையைக் காண்கிறோம். ஆகவே இது ஒரு தொடர்பான நடவடிக்கையாக தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தப் புதிய சட்ட முன்வடிவு மூலமாக வாழைக்கு வருகிற வாழைக்கொத்து நோயை அகற்ற இன்றுவரை வழி காண வில்லை. ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்றாலும் வாழைகள் அழியக்கூடிய அளவிற்கு நோய் ஏற்பட்டு பக்கத்திலுள்ள வாழைப் பயிர்கள் பாதிக்கப்படாத வகையில் அதற்கான முயற்சியில் இறங்கும்போது பாதிக்கப்படுகிற விவ சாயிகளுக்கு இழப்பீடு கொடுக்க இந்த சட்ட முன்வடிவு வழி செய்கிறது.

அதுபோலவே, பார்த்தினீயம் களைகளை அகற்றவும், மணி லாவில் சிவப்பு கம்பளிப் பூச்சி விழுவதைத் தடுக்கவும், ஒட்டு மொத்தமாக இந்தத் துறை நேரடியாக நடவடிக்கை எடுக்க, விரைவாக நடவடிக்கைகள் எடுக்க இந்தச் சட்ட முன் வடிவு கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பூச்சி மருந்துகளுக்கு விலை அதிகமாக இருக்கிறது என்றும், அதை வாங்குவதில் சிக்கல் இருப்பதாகவும் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு இரசாயனப் பொருள் களை பல்வேறு தொழிற்சாலைகள் தயாரிப்பதால், மத்திய அரசு நேரடியாக அதை கட்டுப் படுத்தாவிட்டாலும் கூட, அவர்கள் கட்டுப்பாட்டில் தான் அது இயங்குகிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதை எப்படி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது, விலையைக் குறைக்க என்ன வழி செய்வது, மானியம் கொடுக்க நிதி நிலையை ஆராய்வது என்பதெல்லாம் தனியாக ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியவை. இந்த சட்ட முன்வடிவு பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, நோய்களைத் தடுக்க விரைவாக நடவடிக்கைகள் எடுக்க உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு, இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் இதை காண்ட் ராக்ட் முறைக்கு விடப் போகிறார்களா ? அரசாங்கமே செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்தேன். காண்ட்ராக்டுக்கு விட்டால் அரசுக்கு கெட்டப்பெயர் வரும் என்பதால் அதை விளக்கிச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது துறை மூலமா தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 65 1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விட பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

Hon. Thiru K. KALIMUTHU:— Sir, I move the following amendment to clause 1:—

"In clause 1, in sub-clause (1), for the figures '1981, substitute the figures '1982'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

Hon. Thiru K. KALIMUTHU:—Sir, I move the following amendment to the Enacting formula;

'In the enacting formula, for the words Thirty—second year, substitute the words 'Thirty—third year.'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1981), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(பிற்பகல் 12-40)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்தலும், (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981)". ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டு
கின்ற சட்டம் ஏற்கனவே 1976 ஆம் ஆண்டு என்று கருதுகி
றேன், அவசர நிலை பிரகடனம் அமுலில் இருந்த போது
கொண்டு வரப்பட்டது. அதிலே குறைபாடுகள் இருக்கின்றன
என்று சொல்லி, இந்த அகில இந்திய அண்ணா தி.மு.க. அர
சாங்கம் புதிதாக 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு
கட்டுதலும், முறைப்படுத்தலும் என்று சில திருத்தங்களைக்
கொண்டு வந்து, ஒரு சட்டத்தை இங்கே நிறைவேற்றியது.
ஆனால், நகரங்களிலே இருக்கக் கூடிய வேகண்ட் லாண்டு
அதாவது காலி இடங்களுக்கு உச்சவரம்பு கட்டுவதற்காக கொண்டு
வரப்பட்ட இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டு
வரப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கிறதா
என்பதை நான் முதலிலே தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நகரங்களிலே இன்றைக்கு ஏழை எளிய மக்கள், நடுத்தர
மக்கள், தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். இன்றைக்கு அவர்
களுக்கு வீட்டு வசதி இருக்கின்றதா என்று கேட்டால், இல்லை.
காரணம், கறுப்புப் பணக்காரர்கள், வசதி படைத்தோர்
நிலங்களை குறைந்த விலைக்கு வாங்கி, அந்த நிலங்களை
பல பிளாட்டுகளாகப் போட்டு, மனைகளாகப் போட்டு, அவை
களை விற்பனை செய்து, கொள்ளை அடிக்கக் கூடிய நிலைதான்
இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த கொடுமை
யிலிருந்து விடுதலை வழங்குவதற்கு, இந்த வர்த்தக சூதாடிகள்
லாபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, நகரங்களிலே இருக்கக்கூடிய
வேகண்ட் லாண்டுகளுக்கு, காலி இடங்களுக்கெல்லாம் இந்த
அரசு ஒரு உச்சவரம்பு கொண்டு வர வேண்டும் என்ற ஒரு
சட்டத்தை நல்ல நோக்கத்தோடு கொண்டு வருவதாகச் சொல்லி
இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், அந்த நோக்கம்
நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை நான் முதலிலே கேட்டுத்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

தனி நபர்களிடத்தில் நிலங்கள் குவியக்கூடாது என்று அர
சாங்கம் அதற்கு ஒரு சீலிங் வைத்து, அவைகளை எடுத்துக்
கொண்டு, அவைகளை மற்றவர்களுக்கு 'ஈகுவல் டிஸ்டிரிபியூ
ஷன் ஆப் லாண்ட்' என்று சொல்லுகின்ற வகையிலே, பிரித்துக்
கொடுத்து, அதற்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுப்
பதென்று சொல்லப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

* 1981 ஆகஸ்டு 24-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு
அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



என்பதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.
காரணம், நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.—நீங்கள்
கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின் மூலம் சென்னை போன்ற
நகரங்களில் காலி இடங்களை, இந்தச் சட்டத்தின் மூலம் எந்
தெந்த நிலங்களை, எவ்வளவு நிலங்களை கையகப்படுத்தி இருக்கி
றீர்கள் என்பதை இந்தச் சபையிலே வைக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல்,
அப்படி சர்க்கார் கையகப்படுத்திய நிலங்களை, எத்தனைப் பேர்
களுக்கு கொடுத்திருக்கிறது. ஈகுவல் டிஸ்ட்ரிபியூஷன் என்ற
முறையில் என்ற விவரங்களை இங்கே வைக்க வேண்டும் என்று
நான் கேட்க விரும்புகிறேன்.

மாறாக, நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டம்,
நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருகிறது என்று சொன்
னாலும், அது பலனளிக்கக்கூடிய திட்டமாக, சட்டமாக இல்லை.
வயலாக இருந்தால், விளைச்சல் கொடுக்க வேண்டும் ; பசு என்
றால் அது பால் தரவேண்டும் ; விளக்கு என்றால் அது ஒளி
தர வேண்டும். ஆனால், ஒளியில்லாத விளக்காக, பால் தராத
பசுவாக, விளைச்சல் இல்லாத வயலாக இந்தச் சட்டம் இருக்கி
றது என்பதை நான் வலியுறுத்தித் தெரிவிக்கக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நீங்கள் சீலிங் வைத்திருக்கிறீர்கள்.
ஒரு நபருக்கு 500 சதுர மீட்டர், அதாவது $2\frac{1}{4}$ கிரவுண்டு
வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒருகுடும்பம்
என்று சொன்னால், நான்கு பேர்கள் அடங்கியுள்ளதாக இருக்கும்.
ஏறத்தாழ, $9\frac{1}{2}$ கிரவுண்ட் வைத்துக் கொள்ளலாம் என்ற சட்
டத்தைக் கொண்டுவந்து, நிறைவேற்றி இருக்கிறீர்கள். அப்
படி சீலிங் லிமிட்டை வைத்தாலும், அதற்கு மேலும் வைத்துக்
கொள்ளலாம் என்று பல பேர்களுக்கு சலுகைகள் வழங்கியிருக்கி
றீர்கள்.

தொழிற்சாலைகள் என்ற பெயரால், ஆட்டுத் தொட்டி
வைத்திருப்பவர்கள், கசாப்புக் கடை வைத்திருப்பவர்கள், காப்
பிக் கொட்டை வியாபாரம் செய்கிறோம் என்று சொல்பவர்கள்.
பால் பவுடர் தயாரிப்பவர்கள், ஐஸ் கிரீம் தொழிற்சாலை வைத்
திருக்கிறோம் என்று சொல்பவர்கள், அலுமினியம் பாக்டரி
வைத்திருப்பதாகச் சொல்லி, அதை நடத்தாமல் ஏமாற்றிக்
கொண்டிருப்பவர்கள் எல்லாம், சென்னை போன்ற நகரங்களிலே
ஏறத்தாழ 10 கிரவுண்டு நிலங்களை காலியாக, தொழிற்சாலை
என்று ஒரு காரணத்தைக் காட்டி இன்றைக்கு அவர்கள் சீலிங்
கிற்கு மேலே அவர்கள் கையகப்படுத்திக் கொண்டு வைத்திருக்கக்
கூடிய நிலைமை இருக்கிறது.

உங்களுடைய சட்டம் அதற்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறது. விவசாய நிலங்கள் ஆக இருக்குமானால் அவைகளுக்கு இந்த ஆக்ட் பொருந்தாது என்று சொல்லி விதி விலக்கு அளித்திருக்கிறீர்கள். சென்னை போன்ற நகரங்களிலே குரோட்டன்ஸ் செடி வைத்திருந்தால் கூட அது விவசாயமாகக் கருதப்பட்டு அவர்களும், 9, 10 கிரவுண்டுகள் வைத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே நீங்கள் விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆகவே வசதிக்காரர்கள் கறுப்புப் பணக்காரர்கள் காலி மனை களை கையகப்படுத்தி இந்த விதிவிலக்குகளின் பெயரால் தனி நபர்கள் வைத்துக் கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் அடங்கிய ஓட்டை உடைசல் சட்டமாகத்தான் இது இருக்கிறது.

இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற திருத்தம், புதிய பிரிவைக் கொண்டுவருவதாக இருக்கிறது. அது என்னவென் றால் இன்றைக்கு வீட்டுவசதி கூட்டுறவு சங்கமாக இருந்தாலும் நில அடமான பாங்க் ஆக இருந்தாலும் இவைகளைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டத்தினுடைய விதிகளுக்குப் பொருந்தாது. காரணம் வீட்டு வசதி கூட்டுறவு சங்கமாக இருந்தாலும் நில அடமான வங்கியாக இருந்தாலும் அவைகள் காலி இடங்களை— வேக்கன்ட் லேன்ட்ஸ்—வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே விதிவிலக்கு வைத்திருக்கிறீர்கள். இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தில் வீட்டுவசதி கூட்டுறவு சங்கமாக இருந்தாலும்; நில அடமான வங்கியாக இருந்தாலும் அதை ஒரு நபருக்கு விற்கிறபோது அல்லது கொடுக்கிறபோது அந்த சீலிங் லிமிட்டிற்கு அதிகமாக இருந்தால் கொடுக்க முடி யாது, அப்படிச் செய்தால், சேல் என்று சொல்லப்படுகிற விற் பனையாக இருந்தாலும், மார்ட்கேஜ் என்கின்ற ஒத்தியாக இருந் தாலும், தானம் என்று சொல்லக்கூடிய கிப்ட்டாக இருந்தாலும் அவையெல்லாம் செல்லாது என்று சொல்லியிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, அதிகார மன்றங்கள், நிறுவனங்கள் என்று இரு பதாவது செக்ஷனிலே சொல்லப்பட்டிருக்கிறது, அந்த அமைப்பு களிலே எக்சஸ் வேக்கன்ட் லேன்ட்ஸ் இருந்தால் அவைகளை யாருக்கும் விற்கக்கூடாது, அவைகளை யாருக்கும் தானம் வழங் கக் கூடாது, அவைகளை யாருக்கும் ஒத்திவைக்கக் கூடாது என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற சட்டத்திலே இதுபோன்ற திருத்தங்களைக் கொண்டுவந்திருந்தாலும் சென்னை போன்ற நகரங்களிலே பலருக்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கின்ற கார ணத்தினால் ஆயிரக்கணக்கான கிரவுண்டுகள் தனி நபர்களிடத் திலே இருக்கின்றன. அவைகளை இன்றைக்கு அவர்கள் பிளாட் போட்டு விற்று கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய வர்த்தக சூதாடி கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். நிலங்களுக்கு உச்ச வரம்பு கொண்டுவருகிறோம் என்று நீங்கள் சொன்னால் மட்டும் போதாது. ஒழுங்காக அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். சென்னை



போன்ற நகரங்களிலே பலருக்குக் பல வீடுகள் சொந்தமாக இருக்கின்றன. பலருக்கு பல ஸ்டுடியோக்கள் சொந்தமாக இருக்கின்றன. பலருக்கு பல மார்க்கட்டுகள் சொந்தமாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் நகர்ப்புறச் சொத்துக்கள் நகர்ப்புறச் சொத்துக்களை பினாமியாக வைத்திருக்கிறார்கள். தவறான வழியில் சம்பாதித்த பணத்தை மூலதனமாக அவை களிலே போட்டு இருக்கிறார்கள். இவைகளை எடுப்பதற்கு இந்த சர்க்கார் என்ன சட்டம் கொண்டுவரப் போகிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே பேசும்போதுகூட 100 ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள், கருப்புப் பணம் நாட்டில் நிறையப் புழங்குகிறது, அது ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் சென்னை போன்ற நகரங்களில் கருப்புப் பணக்காரர்கள் பல வீடுகளை பல இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தங்களுடைய லஞ்ச லாவண்யப் பணங்களை சொத்துக்களாக மாற்றியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எடுப்பதற்கு இந்த சர்க்கார் சட்டம் கொண்டு வர வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் இருக்கக்கூடிய நிலங்களை கையகப்படுத்துகின்ற சட்டத்திலே சோஷலிஸ மணம் கமழுகின்ற வகையிலே வேக்கன்ட் லேண்ட்ஸ்—காலியிடங்களை—முறையாகக் கையகப்படுத்தி முறையாக எல்லோருக்கும் வழங்கி வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50.)

*திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, இன்று 1981 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர்ப்புற நிலம் மூன்றாவது திருத்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே சமயத்தில் இந்த அரசுக்குச் சொந்தமான, நகராட்சிக்குச் சொந்தமான நிலங்கள், கோவில், மடம், அறக்கட்டளைகள் என்ற பெயரால் நிலத்தை நகர்ப் பகுதிகளில் வைத்துக்கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த காரணத்திற்கு அந்த நிலங்கள் ஒதுக்கப்பட்டதோ, அந்த காரணங்களுக்காக அவர்கள் நடைமுறையிலே அதை பயன்படுத்தி இருப்பார்களானால் நிச்சயமாக நாம் அதிலே குறுக்கிடுவதற்கு சட்டத்திலே வழியில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆனால் காரண காரியமாக எழுதி வைத்து, அதற்கும் பயன்படுத்தாமல் வேறு வகையிலே பினாமி டிரான்சாக்ஷன்களாக பயன்படுகிற நிலங்கள் நகர்ப்புறங்களில் பல இடங்களில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களிடம் தனிமையிலே சொல்லியிருப்பதும் தெரியும், நேரிலும் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற காலத்திலே அதை நினைவுபடுத்த விரும்புகிற காரணத்தால் சொல்கிறேன். அதைப்போலவே தனிப்பட்டவர்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 31

களுக்கு நாம் கொடுக்கிற இடங்களில் கோயம்புத்தூர், சென்னை,
சேலம், திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் என்ன
வகையிலே நாம் கொடுக்கிறோம். எப்படி கொடுக்கிறோம்
என்பதை எல்லாம் நாம் நினைவில் கொண்டு தனிப்பட்டவர்
களுக்கு கொடுத்தாலும் சரி, இன்ஸ்டிடியூஷன்களாக, அறக்
கட்டளைகளாக எவ்வளவு ஒதுக்கப்பட வேண்டுமோ அதற்கு
மேலாக இருக்கிற நிலங்கள் நாம் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.
அதுமட்டுமல்ல எந்த நல்ல காரியங்களுக்கு செய்வதாக சொன்னார்
களோ அந்த காரியங்களுக்கு செய்யவில்லை என்றால் அந்த நிலங்
கள் அரசாங்கத்திற்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டும். அப்படி
இல்லையென்றால் நாம் விட்டுவிடுவோமானால் பலர் வீடு
கட்டுகிற நேரத்திலே போட்டா போட்டி வருகிறபோது
அதிகமான விலைகளிலே விற்கிறார்கள். வீடற்ற மக்கள்,
வாங்குவதற்கு வசதியின்றி கஷ்டப்படுகிறார்கள். கெட்ட முறை
யிலே பணம் சேமித்து வைத்தவர்கள், அரசாங்கத்தை மோசம்
செய்கிற முறையிலே பணத்தை சேர்த்தவர்கள் தாங்கள்
இஷ்டப்படி செய்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு இதிலே உண்டா
கும். இதை கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஆறாவது பக்கத்திலே காரண நோக்க விளக்கத்
திலே வீட்டு வசதி, கூட்டுறவுச் சங்கம் என்று சொல்லியிருக்
கிறோம். அரசாங்கத்தின் மூலமாக வீட்டு வசதி, கூட்டு
றவுச் சங்கம் வைத்திருக்கிறோம். ஆசிரியர்கள், தொழிலா
ளர்கள் வீடற்றவர்கள் தங்களுக்கு வீட்டு மனை வாங்க
வேண்டும் என்பதற்காக கூட்டுறவு சங்கம் உருவாக்கி
அரசாங்க கடனுதவி பெறுவதோடு மட்டுமல்லாமல் தாங்கள்
சொந்த முயற்சியிலே வாங்க வேண்டுமென்று பல சங்கங்கள்
நகர்ப்புற பகுதியிலே வைத்திருக்கிறார்கள். ஆனால்
ரெவின்யூ அதிகாரிகள் ஸ்பெஷல் டிப்புடி கலெக்டர் (லேன்ட்
அக்யூசிஷன்) என்று சொல்லப்படுபவர்கள் காலம் கடத்தி
ஓராண்டு, இரண்டு ஆண்டு அல்ல. சென்னை நகரை சுற்றி
கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட சங்கங்கள் பின்தங்கிய
மக்கள், ஆதிதிராவிட மக்கள் சங்கங்களை உருவாக்கி
இருக்கிறார்கள். சென்ட்ரல் பாங்கிலே, கூட்டுறவு பாங்
கிலே 27 ஆயிரம், 17 ஆயிரம், 20 ஆயிரம் என்று கடத்தி
17 ஆண்டுகளாக போட்டு வைத்திருக்கிறார்கள். கூட்டுறவு
துறை அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டாலும், தொழிலாள
நலத்துறை அமைச்சர் இருப்பதினால் வீடு கட்டுகிற தொழிலாள
மக்களுக்கு, டெப்புடி ரெஜிஸ்ட்ரார் என்று சொல்லக்
கூடியவர்கள் மூலம் உத்தரவு கிடைக்கலாம்—குறிப்பாக
வட சென்னை, வியாசர்பாடி பகுதிகளில் வைத்திருக்கிற
சங்கங்கள் 17 ஆயிரம், 27 ஆயிரம், 10 ஆயிரம் என்று
வங்கிகளிலே பணம் கட்டியிருந்தும் அவர்களுக்கு டெப்புடி
ரெஜிஸ்ட்டிரார் மூலம் உத்தரவு கிடைக்காமல் [illegible]கால
தாமதம் செய்து அவர்களுக்கு அனுபவிக்கிற அளவிற்கு [illegible]



1982 மார்ச் 3 ] [திரு. எல். இளையபெருமாள்]

நிலங்களை வாங்க முடியவில்லை. ரெவின்யூ அதிகாரிகள்
தான் இதற்கு காரணம். சில இடங்களில் ஆசிரிய மக்கள்
கூட அவர்கள் ஸ்தாபனங்களை ஆரம்பித்து பணங்கள்
கட்டியும் அவர்கள் வாங்கமுடியாத நிலையிலே இருக்கிறார்கள்.

கோவில் நிலங்களில் கூட இதுமாதிரியான இடங்கள்
பெரம்பூர் பகுதியிலே காசி விஸ்வநாதர் கோவில் தேவஸ்தானத்
திற்கு சேர்ந்த இடம் இருக்கிறது. கோவிலார் விட்டு
கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அறநிலையத்
துறை ஆணையாளர் விட்டு கொடுக்கிறோம் என்று சொல்
கிறார்கள். ஆனால் டெப்புடி ரெஜிஸ்ட்டிரார் ஆப் கோவாப்
பரேட்டிவ் சொசைட்டிஸ் என்கிற அதிகாரி கடந்த 7 ஆண்டு
களாக தவறாக காலம் கடத்துவதும், ரெவின்யூ துறையிலே
இருக்கிற ஸ்பெஷல் டிப்புடி கலெக்டர் என்கிற அதிகாரியும்
காலம் கடத்துகிறார்கள். நாட்டிலே விலைவாசி ஏறிக்
கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு வாங்க முடியாமல்
உயர்த்தப்பட்டு வருகிறது. இந்த அவல நிலை இருப்பதை
அமைச்சர் அவர்கள் நிச்சயமாக கவனத்தில் கொள்ள
வேண்டும், விரைவிலே இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதி சங்கம் என்று
தனியார் துறையிலே வைத்துக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு
வேண்டியபாதுகாப்பு கொடுப்பதோடு, இந்த நிலைமையை உயர்த்
துவதற்கு அவர்கள் வழி செய்ய வேண்டும்.

தனிப்பட்டவர்களுக்கு குடியிருப்பதற்கு 2 கிரவுண்ட், 3
கிரவுண்ட் போதும். அத்றகு மேலே வைத்திருந்தால் தனி
யார்கள் விற்காமல் அரசாங்கமே ஏற்றுக்கொள்வதற்கு
வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
முதல் பக்கத்தில் ''சி'' பிரிவு என்று இருக்கிற இடத்திலே
காலி நிலங்களுக்கு உண்டான விதிவிலக்கு நீடிக்கும் என்று
இருக்கிறது. அந்த காலி இடங்கள் எந்த வகைக்காக கொடுக்கப்
பட்டதோ அந்த வகையிலே அவர்கள் உபயோகப்படுத்துகிற
நிலை இருந்தாலும், அல்லது உபயோகப்படுத்துவோம் என்று
அரசாங்கத்திற்கு தெளிவு வருகிற வகையிலே அவர்கள் உத்தர
வாதம் கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு
விட்டுக் கொடுப்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

ஆனால், காலம் கடத்தி, பினாமியாக வைத்துக் கொண்டு,
ஆதாரம் இல்லாமல், ரிஜிஸ்ட்டிரேஷன் கூடச் செய்
யாமல்—ரிஜிஸ்ட்டிரேஷன் செய்தால் அசசாங்கத்திற்குத்
தெரிந்துவிடும் என்ற நிலமையையிலே வாய்மொழி உறுதியாக—
தங்களுக்கு இரகசியமாக, பினாமியாக வீடு கட்டுவதற்குப் பல
இட[illegible]ளிலே, நகரப்பகுதியிலே, ஏற்பாடுகள் இருக்கின்றன.
அ[illegible]ள்யும் வருங்காலத்திலே அரசு கவனித்து, இந்த

நிலங்களை, அரசாங்கமே எடுத்து, வீடற்ற மக்களுக்குக் கொடுப்பதற்கு நல்லதொரு வாய்ப்பை உண்டாக்குவதோடு, அது விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கும் வழிவகையை உருவாக்கும் என்று சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தொழிலாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், அரசாங்கத்திலே வேலை செய்பவர்கள், இவர்கள் தங்களுக்காக வீடு கட்ட அமைக்கின்ற சங்கங்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற நில உச்ச வரம்பு திருத்த சட்டத்தின் பேரிலே மார்க்கிசிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம், 1978 ஆம் ஆண்டு முதலே அமுலாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டதற்குப் பின்னாலே அதிலே அதிகப்படியான பலன்கள் பெறதாதிருக்கிற நிலையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதாக நாங்கள் அறிகிறோம் நான் அறிந்த வரையிலே, 1978-லிருந்து இன்றைய வரையிலே அரசு எதிர்பார்த்த நிலங்கள், அதிகப்படியான நிலங்கள் கிடைக்கவில்லை. நகர்ப்புறத்திலே இருக்கிற சாதாரண உழைப்பாளிகள், ஏழைகள், ஆசிரியர்கள், தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்றவர்கள் போன்றவர்களுக்கு இதிலே இடம் கிடைக்காத நிலைமையிருக்கிறது. காரணம், ஏறத்தாழ பல்வேறு விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தோட்டங்கள் பெயரால் அல்லது தொழிற்சாலைகள் அமைப்பது என்ற பெயரால், அளிக்கப்பட்டிருக்கிற விதி விலகுக்கள் மட்டுமல்ல, கல்வி நிறுவனங்கள், அறக்கட்டளைகள், கோயில்கள், மடங்கள் என்ற பெயராலே, இன்றைக்கு நிறைய விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாகத் தான் நாம் கோரிய நிலங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. நான் சொல்வதெல்லாம் அத்தகைய அறக்கட்டளைகள், ஸ்தாபனங்களுக்கு எந்த அளவுக்கு நிலம் இன்றைக்குத் தேவைப்படுகிறதோ, அவைகளைக் கொடுத்துவிட்டு, எஞ்சியவைகளை அரசே எடுத்துக் கொண்டு சாதாரண மக்களுக்கு வழங்கவேண்டும். இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிற திருத்தம், அப்படி ஏதாவது கொடுக்கப்பட்டிருந்தால், அதை அரசே மேற்கொள்ளும் என்று சொல்கிறார்கள். அப்படி மேற்கொள்வதும்கூட, இந்தச் சட்டம் என்றைக்கு அமுல் வந்ததோ, அதாவது 1978ஆம் ஆண்டிலிருந்தே அமுலுக்கு வரும் வகையில், முன்தேதியிட்டு மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சர்க்கார் கோரிய பலன் கிடைக்கும். அதே போல், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கூட்டுறவு நிலவள வங்கிகள், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் இவைகளிடம் இருக்கிற நிலங்களை யாருக்காவது ஒப்படைக்கிற நேரத்தில், வாங்குகிற அந்த நபர் ஏற்கனவே உச்ச வரம்பிற்கு மேல் வைத்திருந்தால், கொடுக்கக்



கூடாது என்று சொல்லப்படுகிறது. என்னுடைய கோரிக்கையெல்லாம், அதை ஏன் இப்படி விட்டு வைக்க வேண்டும்? கூட்டுறவு சங்கங்களானாலும் அல்லது பல்வேறு ஸ்தாபனங்களானாலும் அவர்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவை போக எஞ்சியவைகளை, அரசாங்கமே எடுத்துக் கொண்டால்தான் சாதாரண மக்கள் பயன் பெறுவார்கள். அந்த வகையிலே விதி விலக்குகளை ரத்து செய்யவும் அதை அரசு கையகப்படுத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம்கூட, மாநிலம் முழுவதற்கும் இல்லை. பல்வேறு ஜில்லாக்களிலே இதைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தச் சட்டம் அமுலாகாத இடத்திலே உள்ள வசதி படைத்தவர்கள், பணம்படைத்தவர்கள் இன்றைக்கு நிலத்தை வாங்கி வீட்டு மனைகளைப்போட்டு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை மாநிலம் முழுவதற்கும், மாவட்டத் தலை நகரங்களுக்கும் நீடிக்கும் முறையில் ஆவன செய்ய முடியுமா என்பதை அரசு ஆராய வேண்டுமென்று நான் மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசு சொல்லியிருக்கிற இந்தக் கையகப் படுத்துவது என்பதை, இதச் சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து 1978–க்குப் பிறகு விற்பனை செய்யப்பட்ட அத்தனை இடங்களையும் அரசே கையகப்படுத்த வேண்டுமென்ற முறையிலே இந்தத் திருத்தம் இருக்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை நாளைக்குத் தொடரலாமா? அடுத்து, $\frac{1}{2}$ மணி நேர விவாதம் இருக்கிறது, அதை எடுத்துக்கொள்ளலாமா?

மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம்: இதிலே பேச வேண்டியவர்கள் அதிகம் இல்லையென்றால், என்னைப் பதில் சொல்லச் சொன்னால், சுருக்கமாக 5 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: எங்களுக்கு $\frac{1}{2}$ மணி நேரம் கிடைப்பதே கஷ்டம். ஆகவே, $\frac{1}{2}$ மணி விவாதத்தை இன்றே எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால் 1-30 என்பதை, 1-40 வரை பேரவையை நடத்தலாம். இந்தத் சட்ட முன்வடிவை முடித்துவிட்டு, $\frac{1}{2}$ மணி நேரவிவாதத்தை எடுத்துக் கொள்ளலாம்.

[1982 மார்ச் 31]

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) என்ற சட்ட முன்வடிவினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். சட்டத்தின்நோக்கம், சீராக்கப்படவேண்டும், கட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட இந்த சட்டத்திலேயிருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கலைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுதிருக்கக்கூடிய நடைமுறைச் சட்டத்தில் நிலம் உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும் என்று இருந்தாலும்கூட மிச்ச நிலங்களை எடுத்து நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய நிலங் களை எடுத்து ஏழை எளிய மக்களுக்கோ அல்லது சாதாரண மக்களுக்கோ தொழிலாளர்களுக்கோ அதை அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக அல்லது வேறு வகையிலே பயன்படுத்திக் கொள்ளக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இதுவரையில் அப்படிக் கொடுத்ததாக இல்லை.

(பிற்பகல் 1—00)

நம் நாட்டில் கூட இருக்கின்ற நிலங்கள் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கக்கூடாது என்ற ஒரு சட்டம் இருந்தாலும்கூட நடைமுறையிலே அந்தச் சட்டம் அமல் நடத்தப்படுகிறதா, அந்தச் சட்டத்தின்படிதான் உச்சவரம்பு என்று வைத்திருக்கிறார்களா என்று பார்ப்போமேயானால் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களுக்கு மேல் அதிகப்படியான நிலங்களை பினாமி என்ற பெயரால் வைத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பார்க்க முடியும்.

தர்மபுரி மாவட்டத்திலே ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களை வைத்திருக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவே, சட்டம் நல்ல நோக்கத்தோடு இருந்தாலும் கூட அதை நடைமுறைப்படுத்தும் காலத்தில் விதிவிலக்கு என்ற பெயரால் கொடுக்கும் அந்தக் காரணங்களால்தான் பினாமி என்ற பெயரால் கொள்ளையடிக்கக் கூடியவர்கள், மேலும் கொள்ளையை அதிகரிக்கும் வகையில் சொத்துக்களைச் சேர்க்கும் நடைமுறைதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, எங்களை பொறுத்தவரையில் நகர்புறத்தில் இருக்கக்கூடிய மிச்ச நிலங்களை அரசே மேற்கொண்டு அந்த நிலங்களை ஏழை எளியவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் விநியோகப்படுத்தி வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் முறையில் இந்தச் சட்டத் திருத்தம் மாற்றம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு, இச் சட்டத்தை வரவேற்று அமர் கிறேன். வணக்கம்.



[1982 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ஆகையினாலே இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி நான் அதிகமாகப் பதில் சொல்லத் தேவையில்லை என்று தான் கருதுகிறேன். இன்றைக்கிருக்கின்ற சட்டப்படி இத்தனை குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, அதை இன்றைக்குச் சரிப் படுத்தியிருக்கிறோம் என்றுதான் இங்கே சொல்கிறது.

கல்வி, கலாச்சாரங்கள், இன்னும் கூட்டுறவு நிறுவனங்கள், வீட்டு வசதி கூட்டுறவுச்சங்கங்கள். தொழில் நுட்ப அறிவு நிலை யங்கள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், வெளிநாட்டு அரசு நிறுவனங்கள், ஐ. நா. சபை போன்றவைகளுக்கெல்லாம் இருக் கின்ற நிலங்களை இன்றைக்கு அவர்கள் எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றித்தான் இன்றைக்கு அதை விற்பதிலே, விற்க வேண்டுமென்றால் அதை அரசிடம் சொல்ல வேண்டும் அரசுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பதுதான் இன்றைக்கிருக்கிற சட்டம்.

தர்ம நிறுவனங்களுக்கெல்லாம் இதற்கு முன்னால் இருக்கின்ற உபரி நிலங்களை அவர்கள் தேவைப்பட்டால் அரசுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு 120 நாட்களுக்குள் அந்த அரசு எடுத்துக்கொள்ளாவிட்டால் அதை யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று முதலில் இருந்தது. முதலிலே சட்டம் கொண்டு வந்து அரசுக்குத்தான் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகின்ற பொழுது சொன்னார்கள். எந்தெந்தக் காரணங்களுக்காக அந்த தர்ம நிலம் இருக்கிறதோ அதற்குப் பயன்படுத்த வேண்டும்; அப்படிப் பயன்படுத்தாவிட்டால், அதைப் பயன்படுத்தவில்லை என்றால் அதை அரசுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்பதுதான் இன்றைக்கிருக்கின்ற முக்கியமான முறை என்பதும் உங்களுக்குத் தெரியும். அதைத்தான் இன்றைக்கு நாங்கள் கொண்டு வந் திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோதுகூட பொது வாக இன்றைக்குப் பேசிக் கொண்டு வந்தார்களேயொழிய இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் வரவேற்றிருக் கிறார்கள் என்றுதான் நான் யூகிக்கிறேன். அவர்கள் சொன்னார் கள், இன்றைக்கு இருக்கின்ற சென்னையில் பலபேர் பினாமியாக நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ; விற்கிறார்கள் ; அதை யெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும், அதற்கெல்லாம் சட்டம் கொண்டுவர வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற காலி நிலம் என்று—யாராக இருந்தாலும் காலி நிலம் வைத்திருக்கக் கூடாது. வைத்திருப்பது அவர் களுக்கு, சென்னையைப் பொறுத்தவரைக்கும் எவ்வளவு கொடுக்

கப்படுகிறது என்றால் ஒரு குடும்பம் என்றால் 200 சதுர மீட்டர் கொடுக்கிறோம். தனிப்பட்டவர்கள் என்றால் 550 சதுர மீட்டர் கொடுக்கிறோம். அதைப்போல மதுரை, கோயம் புத்தூர், திருச்சி, சேலத்திற்கு 1,500 என்று தனிப்பட்டவர்களுக்கு இருக்கிறது.

அதேபோல தொழிற்சாலைகள். பெரிய பெரிய தொழிற் சாலைகளாக இருந்தாலும் அவர்களுக்கும் இவ்வளவுதான் கொடுக் கிறோம். இதைவிட அதிகமாக இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் இப்படி தொழிற்சாலையிலே இருக்கின்ற நிலத்தை எல்லாம்—ஓன் ஃபைன் மார்னிங்—எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கும் சங்கடங்கள் இருக்கின்றன. தொழிற்சாலைகளிலே அவர்கள் முதலீடு போட்டு இருந்தால் நாங்கள் தொழிற்சாலையை விருத்தி செய்கிறோம் அதற்கு விதி விலக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு மேல் வைத் துக் கொள்ளவேண்டும் என்றால் எதற்காக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவேண்டும். நாங்கள் தொழிற்சாலையை விருத்தி செய்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டும். விருத்தி செய்கிறேன் என்று சொல்லுகிறீர்களே என்ன தொழில் செய்யப் போகிறீர்கள் என்பதற்காக பிளான் அனுப்பவேண்டும். அதற் குப் பிறகு அவர்கள் முதலீட்டு நிலை—ஃபைனான்சியல் சோர்ஸ்— என்ன என்று சொல்ல வேண்டும். இவைகளை எல்லாம் சொன் னதற்குப் பிறகு இந்த அரசு அதற்கு அனுமதி வழங்குகிறது. அனுமதி வழங்குவதற்குக் ஒரு குழு இருக்கின்றது. அந்தக் குழு சிபாரிசு செய்தால் அரசு அனுமதிக்கிறது. அனுமதிப்பது மட்டு மல்ல, 2 வருடங்களுக்குள் அவர்கள் சொல்லிய கோரிக்கைகள் முடிவாகவேண்டும். இரண்டு வருடங்களுக்குப் பிறகு நான் அதை ஆராய்வதல்ல. 6 மாதங்களுக்கு ஒருதரம் ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். இவைகளை எல்லாம் பார்த்து இந்த அரசு தொழிற் சாலைகளைக் கண்காணிக்கிறது. தொழிற்சாலை என்றால், விரைவாகக் கூடச்செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதல்லாமல், இதுவரையிலும் எவ்வளவு நிலங்கள் எடுக்கப் பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர் கள் கேட்டார்கள். இதுவரையிலும் 132·62 ஹெக்டேர்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு விதிவிலக்கு அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். விதி விலக்கைப் பற்றிச் சொல் லப் போனால், கூட்டுறவுக்குக் கொடுத்திருக்கிறோம். அது மாத்திரமல்ல, மார்ட்கேஜ் செய்கிறார்கள். அப்படி செய்கிற போது, அதற்குள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படி எடுத் துக் கொள்கிறபோது, இந்தச் சட்டத்திலே இருப்பதே, அதை, யெல்லாம் விற்பது என்றால், யாரிடத்திலேயும் விற்க முடியாது என்பதே. அதற்குப் பிறகு அதை வாங்குகிறவர்கள், இந்த நகர உச்ச வரம்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.



அதைக் கட்டுப்படுத்தினாலே நகர உச்ச வரம்புச் சட்டத்தை மீறிய நிலம் அவர்களுக்குச் செல்லக் கூடாது என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம். அதைப் பொறுத்த வரையிலும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். யார் வேண்டுமானாலும் இப்படிப்பட்ட நிலங்களை வைத்து கொள்ளலாம், எப்படி வேண்டுமானாலும் விற்கலாம் என்ற நிலைமை இதிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது புரொகிரசிவ்வாகத் தானிருக்கிறது. ஒரு முற்போக்கு கருத்துடைய சட்ட முன்வடி வாக இருக்கிறதென்பதை நீங்கள் எல்லாம் ஏற்றுக் கொள் வீர்கள்.

ஒன்றைச் சொன்னார்கள், அதையும் இந்த அரசு ஆராய் வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. இச் சட்டம் 1978-லே வந்தது. இன்றைக்கு இதைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே தவறுகள் செய்தால் என்ன செய்வது என்ற நியாயமான கேள்வியை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் ஒன்றைச் சொல் வேன், இப்படிப்பட்ட நியாயமான கேள்வியைக் கேட்பதெல்லாம், அரசுக்கு, நம்முடைய சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய கடமை என்பதை நான் உணர்கிறேன். அதை ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்து கொண்டு வரவேண்டுமென்று சொன்னார் கள். அதை நான் சட்டத் துறை மூலமாக ஆராய்கிறேன். அதை செய்ய முடியும், நிறைவேற்ற முடியும் என்றால், நிச்சய மாகச் செய்வதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. நீங்கள் கேட்ட கேள்விக்கு மற்ற அமைச்சர்களையும், அமைச்சரவையை யும் கூட ஆலோசிக்காமலே சொல்கிறேன் என்றால், இப்படிப் பட்டவைகளை எங்கள் அமைச்சரவை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது ஆகையினால்தான், அமைச்சரவை யைக் கூட கேட்டு ஆராயாமல் இங்கே சொல்வதற்குக் காரணம், இது முற்போக்குத் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நீங்கள் எல்லாம் ஆதரித் துப் பேசியிருக்கிறீர்கள். அதை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) (மூன்றாவது) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ''.

மாண்புமிகு திரு. எஸ். .டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். :

I Clause 1' in sub-clause [1], for the words and figures "Third Amendment Act,1981" substitute the words and figures Amendmen Act, 1982.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு1 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். ''

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In the enacting formula, for the words "Thir y-Second Year Substi tute the words "Thiry thirty Year.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) (மூன்றாவது) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(8)அரைமணி நேர விவாதம்

நீலகிரி அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை.

(பிற்பகல் 1 10)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் இப்போது அரை மணி நேர விவாதம், நீலகிரிமலையில் அரசு தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இலங்கை அகதிகளின் நிலை குறித்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி.

திரு. கு. ரமணி: மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, சென்ற 6ஆம் தேதி அன்றைக்கு இந்தச் சட்டப் பேரவையில் நீலகிரிமலையிலே சென்றுள்ள, அங்கே அனுப்பப் பட்டுள்ள அகதிகளுடைய வேலை, வாழ்க்கை நிலைபற்றி நான் கிளப்பி உள்ள கேள்விக்குப் போதிய விவரங்கள் கிடைக்காததன் விளைவாகவும், அங்கே போனவர்கள் அத்தனை பேருக்கும் வேலை கிடைத்ததா இல்லையா என்கின்ற விவரங்கள் முழுவதும் தரப்படாமல் போனதாலும், விவரங்களும், விளக்கங்களும் கிடைக்க வேண்டுமென்றும், அந்த அகதிகளுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த விவாதத்தை நான் முன் வைக்கிறேன். மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நீலகிரிமலையிலே அகதிகள் இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும், வந்திருக்கின்ற அகதிகள், 40 ஆயிரம் குடும்பங்கள் அந்த மலைக்குச் சென்று இருப்பதாகச்சொல்லப்படுகிறது. ஆனால் அரசாங்கம் அங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ள குடும்பங்கள் அத்தனையும் என்ன நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரங்கள் பூர்ணமான விவரங்களைத் தருவதோடு அங்கே அரசாங்கம் நேரடியாக அனுமதித்து செல்லாமல் வேறு விதத்தில் சென்றிருந்தாலும், அவர்கள் அகதிகள்தான். அவர்கள் இலங்கை

யிலிருந்து தாயகத்திற்கு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறு எங்கேயும் செல்ல முடியாது இன்றைக்கு நீலகிரி மலையிலே போய் பார்த்தால், பல குடும்பங்கள் அவர்கள் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறார்கள், வேலையில்லாமல். ஒரு குடும்பத்திற்கு குறைந்த பட்சம் 2 பேருக்காவது வேலை தேயிலைத் தோட்டங்களில் கொடுப்பதாக அரசு உறுதி அளித்துள்ளது. அரசினுடைய திட்டம் அப்படி உள்ளது எனத் தெரிகிறது. அப்படியும் எல்லா குடும்பங்களிலும் வேலை கிடைத்திருக்கும் என்று சொல்ல முடியாது. அந்த நிலைமையில் இன்றைக்கு பல ஆயிரக் கணக்கான அகதிகள் அவர்கள் இருக்க இடம் இல்லாமலும், வேலை கிடைக்காமலும், வாழ முடியாமல், தெருவிலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் வாழ்வதற்காகவும், நாம் ஏதாவது வழி செய்தாக வேண்டும். வேலை இல்லாதவர்களுக்கு ஏதாவது நிவாரணமாவது கொடுத்து அவர்களை எங்கே அனுப்பி வேலை கொடுக்க முடியுமானாலும் அங்கே அனுப்பி அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் அல்லது நீலகிரி மலையிலே வேறு ஏதாவது தொழிலில் அவர்களை ஈடுபடுத்த முடியுமானால் அதற்கும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றவர்களுக்குக் கூட தனியார் தோட்டங்களில் என்ன கூலி கொடுக்கிறார்களோ, அந்தக் கூலி இந்தத் தொழிலாளர்களுக்கு கிடைப்பது இல்லை. தனியார் தோட்டங்களில் 11 ரூபாய் அல்லது 12 ரூபாய் வரைக்கும் இன்றைக்கும் கூலியும், பஞ்சப்படியும் கிடைக்கிறது. ஆனால் இந்த அகதிகளுக்கு தேயிலைத் தோட்டங்களில் உள்ளவர்களுக்கு 10 ரூபாய் சொச்சம்தான் கிடைக்கிறது. அவர்களுக்கு அதிலும் 1 ரூபாய் கம்மியாக இருக்கிறது என்று தெரிய வருகிறது. அப்படியானால் அது சரியல்ல, வாழ்வுக்குத் துடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை வேண்டும். இன்றைக்கு அவர்கள் எல்லாம் இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்திருக்கக் கூடியவர்களாக இருக்கலாம். அவர்களைப் பாதுகாப்பதற்கும் அந்த குடும்பத்தை வைத்துப் பராமரிப்பதற்கும் அவர்களுக்கு தனியார் துறையிலே கொடுக்கப்பட்டு வரும்படியான அந்த குறைந்த பட்ச கூலியை அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் இன்னொரு சங்கடத்தையும் அந்த அகதிகள் அனுபவிக்கிறார்கள் தாயகம் திரும்பி வந்ததற்குப் பிறகு அவர்கள் தமிழர்களாக இருந்து வேறு மாநிலங்களில் அவர்கள் வேலைக்குப் போனால் அங்கு அவர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் இல்லாமல் போய் விடுகிறது. உதாரணமாக சில நாட்களுக்கு முன்னே, நமது விவசாயிகள் உயர்மட்டக் குழுவினுடைய தலைவர் திரு. மூனு ஆதி அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் ஒரு 100 குடும்பங்கள், குழந்தைகளோடு பெண்களோடு இந்த மரத்தடியிலே அவர்கள் வந்திருந்தார்கள். துரதிருஷ்டவசமாக அன்று மழைகூட பெய்தது. அதில்கூட அவர்கள் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு கர்நாடக மாநிலத்திலே சில நாட்களுக்கு வேலை கொடுத்திருந்தது. அவர்கள் அங்கே இருந்தார்கள். அங்கே நீங்கள் தமிழர்கள், நீங்கள் தமிழ்நாட்டுக்குச் செல்லுங்கள் என்று அவர்களை அனுப்பி



விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு அந்த அகதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. வேறு விதத்திலே அரசு அவர்களுக்கு நிலத்தைக் கொடுத்தும், குடியேற்றங்களை அமைத்துக் கொடுத்தும், வியாபாரத்திற்கு உதவி செய்தும், இப்படி பல இடங்களில் வேலை கொடுக்கிறார்கள் என்பது உண்மை. அது வரவேற்கத்தக்கது. ஆனால் ஒரே மாவட்டத்திலே அவ்வளவு அதிகமான குடும்பங்களையும் கொண்டு போய் குடியமர்த்தினால் அத்தனை பேர்களும் அங்கே போய்ச் சேர்ந்தால் அதனால் அந்த மாவட்டத்தில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது. அதனால் போலீஸ் பிரச்சினை வருகிறது ; கேஸ் வருகிறது ; அந்த அகதிகள் மாட்டிக் கொண்டு திண்டாடுகிறார்கள். கடைசியில் வாழ முடியாமல் தவித்துக் கொண்டு, இடம் பெயர்ந்து வந்த பின்னால் வேறு வழியில்லாமல் சிக்கலில் மாட்டிக் கொண்டு அவதிப்படுகிறார்கள். அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அவர்களுக்கு நல்ல முறையிலே தேயிலைத் தோட்டம், அல்லது வேறு தொழில் தெரிந்தவர்களாக இருந்தால் அந்தத் தொழில்—அங்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும் ; அவர்களை அநாதைகளாக விட்டு விடக் கூடாது.

அதே நேரத்தில் அரசு நிர்ணயித்து அனுப்பி வைத்தவர்களுக்கு மட்டும் பாதுகாப்பு அல்லது வேலை கொடுத்து விட்டோம் என்று சொல்லி, மற்றவர்களை விட்டுவிடக் கூடாது ; அந்த நிலை இருக்கக் கூடாது. அவர்கள் எல்லாம் அகதிகளாக வந்த பிறகு இங்கே அவர்களுக்கு புகலிடம் கொடுத்தாக வேண்டும். தேயிலைத் தோட்டம்தான் என்றில்லை ; வேறு தொழில் தெரிந்தவர்களுக்கு வேறு வேலை கொடுக்கலாம். நீலகிரி மாவட்டத்தில் அவர்களுக்காக தேயிலைப் பயிரிடும் பரப்பை இன்னும் அதிகப்படுத்தலாம். வேறுபல மாவட்டங்களிலே அவர்களுக்கு உரிய முறையிலே தொழில்களைக் கொடுத்து, அங்கே அவர்களை குடியமர்த்தலாம். அந்த வகையிலே அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டங்களில் இன்றைக்கு எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? நீங்கள் நிர்ணயித்து அனுப்பிய குடும்பங்களில்; குடும்பத்திற்கு இரண்டு பேர் என்ற அளவில் வேலையில் இருக்கிறார்களா? அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கவில்லை. நாடு முழுவதும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிற கூலி இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அரசு உதவியோடு, தொழில் தகராறுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட கூலி இன்றைக்கு அவர்களுக்கு கிடைக்கவில்லை. அந்த கூலிகள் அவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் படிக்க நல்ல பள்ளிக்கூட வசதி இருக்க வேண்டும். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும். அவர்கள் எல்லாம் இன்றைக்கு நீலகிரிமலையில் தெருவிலே

நிற்கிறார்கள் ; அனாதைகளாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிலையில்தான் இருக்க வேண்டுமா ? அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்காக என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது. மேலும் என்னென்னச் செய்யப் போகிறோம் என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அங்கநாதன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இலங்கைத் தமிழர்கள் பற்றிய இந்த விவாதத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை தமிழ்நாட்டுக்கு வந்த 73,000 குடும்பங்களில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 50,000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதில் அரசுத் தேயிலைத் தோட்டங்களில் 2,181 குடும்பங்களுக்கு வேலை கொடுக்கப் பட்டுள்ளது. மீதி சுமார் 40,000 குடும்பங்கள், 50,000 குடும்பங்கள் அகதிகளாக, பராரிகளாக, பஞ்சைகளாக ஒவ்வொரு பெரிய நகரத்திலும் கிராமத்திலும் சுற்றித் திரிந்து, வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த 2,181 குடும்பங்களுக்கும் அரசுத் தோட்டங்களில் வேலை கொடுக்கப்பட்டதா என்றால் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்கவில்லை ; குடும்பத்திற்கு இரண்டு பேர்கள் வீதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி, குடும்பத்திற்கு மூன்று பேர்கள் என்ற வீதத்திலாவது வேலை கொடுக்க ஏற்''ாடு செய்ய வேண்டும்.

கூலியைப் பொறுத்தவரையில் அங்குள்ள தனியார் தோட்டங்களில் கொடுக்கும் கூலியை விட அவர்களுக்கு குறைவாகக் கொடுக்கப்படுகிறது. சுமார் இரண்டு ரூபாய் குறைவாக இருக்கிறது. தனியார் தோட்டங்களில் கொடுக்கின்ற கூலி அளவுக்கு அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்றைய தினம் அங்கே கொத்தடிமை இருக்கிறதென்றால் அந்த இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி அரசுத் தோட்டங்களில் பணியாற்றுபவர்களாகத்தான் அதிகமாக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு போனஸ் இல்லை.

அங்கே கான்ட்ராக்ட் முறை அதிகமாக இருக்கிறது. அந்த முறையை அறவே மாற்ற வேண்டும். சிறு சிறு வேலைகளுக்குக் கூட கான்ட்ராக்ட் விடும் முறையை அகற்றி, இந்தத் தொழிலையே நம்பி, இலங்கையிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

அவர்களுக்கு மருத்துவ வசதி மிக, மிக குறைவாக இருக்கிறது. அதேநேரத்தில் தனியார் கம்பெனிகளில் மருத்துவ வசதி சிறப்பாக இருக்கிறது. அரசுத் தோட்டங்களில் வேலை செய்





கிறவர்கள் 20 மைல், 30 மைல் கடந்துபோய்தான் மருத்துவ வசதி பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

அவர்களுக்கு சிறப்பான முறையில் வீட்டு வசதி செய்துதர வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு பள்ளிக்கூடங்கள் இல்லை. கல்வி வசதி அளிக்க நல்லமுறையில் பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அவர்களுடைய வேலைப் பளுவை குறைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு ஆள், முக்கால் ஆள் என்ற வீதத்தில் வைத்திருக்கிறார்கள். ஏக்கருக்கு ஒன்றரை ஆள் என்ற வீதத்தில் வைக்க வேண்டும். அப்படி வைத்தால் அவர்கள் வேலைப் பளு குறைவதோடு, இலங்கையிலிருந்து வந்து, வேலை இல்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கையும் குறையும் ; பலருக்கு புதிதாக வேலை வாய்ப்பு உருவாகும். இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் ஒரு பெரிய பூகம்பமாக வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியிருக்கிறது. இலங்கை அகதிகள் பெருமளவில் அங்கே குடியமர்த்தப்பட்டிருப்பதால் அங்கே ஏற்கனவே இருந்த மக்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அதே நேரத்தில் இலங்கைத் தமிழர்களை அனாதைகளாக விட்டுவிட்டால் அது நமக்கு அவமானம், இந்த நாட்டுக்குப் பெருத்த அவமானம் ஆகும். ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் தொகையை கணக்கிட்டு, எவ்வளவு பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கண்டறிந்து, அரசு தேயிலைத் தோட்டங்களில் வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களின் கணக்கை எடுத்து, அவர்களுக்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, நீலகிரி மாவட்டத்தில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, நல்ல ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

கூடலூர் தாலுக்காவில் மூப்பட்டி, சூடி, தேவல்லா, சேரன் பாடி, குன்னூர் ஆகிய இடங்களில் இருப்பவர்களுக்கு வீட்டு மனை அவசியம் கொடுக்கவேண்டும். அவர்கள் பல மாவட்டங்களில் குடியமர்த்தப்பட்டு இருந்தபோதிலும், சீதோஷ்ண நிலைமை கருதி நீலகிரி மாவட்டத்திற்கு வந்து விட்டார்கள். அங்கேயுள்ள மலைத் தோட்டங்களில் 5—6 ஆண்டுகளாக, இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் வீட்டு மனை கொடுக்கப்படவில்லை.

வியாபாரம் செய்வதற்கு முதல் தவணையாக 3,000 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. அந்த 3,000 ரூபாயை வைத்துக் கொண்டு அவர்களால் வியாபாரம் செய்ய முடியுமா ? ஒரு கடை அடித்தால் 3,000 ரூபாய் சரியாகப்போய்விடுகிறது. ஆகவே,

மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் எழுதி, அந்த அகதிகளுக்கு புதிய வாழ்வு அளிப்பதற்கு போதிய அளவிற்கு நிதி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடு காணி பகுதியில் 3,000 பேர் இருக்கிறார்கள். ஆனால் 200 பேருக்குத்தான் தேவல்லா அரசுப்பண்ணையில் தற்காலிமாக வேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு நிரந்தரமாக அங்கே வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூரில் தேயிலைத் தோட்டம் இருக்கிறது. 9–11–1981 அன்று 3,500 கிலோ பதப்படுத்தப்பட்ட தேயிலை அந்தத் தோட்டத்தில் இருந்து வெளியேபோகிறது. அது மத்திய சுங்க அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறது. 2,500 கிலோவிற்கு முதலில் டியுடி கொடுக்கப்பட்டும், அந்த பிடிக்கப்பட்ட தேயிலை சுங்க அதிகாரிகளிடத்திலேயே இருக்கிறது. எப்படி இது வெளியே போனது? எதற்காக வெளியேபோனது? அதற்கு மேல் அதிகாரிகள் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இங்கே சொல்லப் பட்டது, அதற்கு மிகமிக சிறிய வேலை செய்பவர்கள்தான் காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டது. இதனுடைய விவரம் என்ன ? யார் இதைச் செய்தார்கள். எப்படி இந்தத் தேயிலை வெளியே போனது என்பதைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கல்லன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேரு-பண்டார நாயகா ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் இருந்து தமிழர்கள் இங்கே வந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் — குறிப்பாக தமிழ் நாட்டில்உள்ள பல்வேறு மாவட்டங்களிலும் — அவர்கள் மறுவாழ்வு பெறும் வகையில் உதவிகள் செய்யப்பட்டுள்ளன. முந்திய அரசு எடுத்த ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கையில் இருந்து அகதிகளாக அவர்கள் இங்கே வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நீலகிரியைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக அமைந்து இருக்கிறது. ஏறக்குறைய 2,500–3,000 குடும்பங்கள் நீலகிரியில் மறுவாழ்வு அளிப்பதற்கான வாய்ப்புகளைச் செய்ய மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இன்றைய நிலையில் ஏறக்குறைய 40,000 அல்லது 50,000 குடும்பங்களுக்கு மேல் அங்கே நீலகிரியில் வந்து ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நீலகிரியைப் பொறுத்தவரையில் நாம் அனைவரும் நன்கு அறிவோம். அது ஒரு மலைவாசஸ்தலம். ஏறக்குறைய இந்த 10 ஆண்டுகாலத்தில் அங்கேயிருக்கும் ஜனத்தொகை இரட்டிப்பு



இப்போது இந்த அதிகப்படியான இலங்கை
ஆகியிருக்கிறது.
அகதிகளால் அங்கே பல பிரச்னைகள் உண்டாக்கப்பட்டுள்ளன.
இலங்கையில் இருந்து வந்த அகதிகளுக்கு அங்கே மறுவாழ்வு
அளிப்பதற்காக பல வசதிகளை மத்திய அரசும், மாநில அரசும்
செய்து வந்தபோதிலும், நீலகிரிப் பகுதிக்கு மற்ற மாநிலங்களில்
இருந்து வரும் அகதிகளை கண்டிப்பாக தடுத்தாகவேண்டும்.
அதனால் அங்கே பல சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. முக்கியமாக
சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. காடுகள் அழிக்கப்பட்டுள்
ளன. இப்படிப்பட்ட நிலையை மேலும் நீடிக்க விட்டால்,
நீலகிரி இன்னும் 10 ஆண்டுகளில் இல்லாமல் போய்விடும். இதை
யெல்லாம் அரசு மனதில் கொண்டு, அங்கே வாழவந்து இருக்கக்
கூடிய அகதிகளுக்கு வாழ்வளிக்கவும், மற்றவர்கள் அங்கேவந்து
குடிபுகுந்து பல பிரச்னைகளை உருவாக்காமல் இருக்கவும்,
உள்ள ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்
பளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி மாண்பு
மிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் உட்கார்ந்துக்கொண்டே
ஹலோ ஹலோ என்று போனில் பேசுவது போல பேசக்கூடாது.
(குறுக்கீடு) இது அரை மணி நேர விவாதம் தான்............

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே,
நீங்கள் இப்படி அனுமதி மறுப்பது சரியல்ல. எனக்கு ஒரு 3
நிமிடங்கள்தான் வேண்டும். தயவுசெய்து தரவேண்டும்.
கொடுக்க முடியுமா முடியாதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி எல்
லாம் பேசக்கூடாது. எனக்கு மற்ற அனைவரும் சேர்ந்து
தான் ஒத்துழைத்து பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இப்போது
உங்களுக்கு அனுமதி கொடுத்தால் இது அந்த அரைமணி நேர
குறியீட்டை தாண்டிவிடும். அதுமட்டுமல்ல தேவையற்ற இது
போன்ற முன்மாதிரிகளை நாம் உருவாக்கக் கூடாது. ஆகவே சமூக
நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும். பிறகு நீங்கள்
வேறு ஏதாவதில் பேசும்போது சேர்த்து சொல்லி விடுங்கள்.
(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியை ஒட்டி எழுகிற
பிரச்னைகளின் அடிப்படையில் இதுபோன்ற அரை மணி நேர
விவாதத்தை ஏற்படுத்துகின்ற நடைமுறை இருக்கிறது. அந்த
விவாதத்தை ½ மணி நேரத்திற்குள்ளாக முடித்தாக வேண்டும்.
உறுப்பினர்களே ½ மணி நேரம் பேசிவிட்டால், அமைச்சர் ரோச
முடியாது. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி

அவர்களை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார். ஆகையினால் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களை பேச தாங்கள் வழிவிட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. மு. அம்பிகாபதி : கேள்வியை ஒட்டி எழுகின்ற பிரச்னை என்றால், கேள்வியை கேட்டவர் திரு. ரமணி. அவர்கள் மட்டும் தானே பேசியிருக்க வேண்டும். காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். தி.மு.க. உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எனக்கு மட்டும் ஏன் அனுமதி அளிக்க மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீலகிரி மாவட்டத்தை பற்றிய பிரச்னை. அந்தந்த உறுப்பினர்கள் முன்னதாகவே நோட்டீஸ் கொடுத்ததின் அடிப்படையில் பேச அனுமதியளித்தேன். ஆகவே இது போன்ற நிலைமைகள் மீண்டும் எழாமல் இருப்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் தயவுசெய்து அமர்ந்து, உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை பேச வழி வகுத்துக் கொடுக்க வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையில் அரசு தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் இலங்கை அகதிகள் பற்றி, அவர்களுடைய நிலையைப் பற்றியும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு பற்றியும், அவர்களுக்கு வீட்டு வசதியைப் பற்றியும், கூலியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் அரங்கநாதன், ரமணி, கல்லன் போன்றவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு தேயிலைக் கழகத்திலே நீலகிரி மலையில் மொத்தம் அரசின் சார்பாக 8 தேயிலைத் தோட்டங்கள் பயிரிடப்படுகின்றன. (1) சேரான்பாடி, (2) சேரன்கோடு, (3) நெல்லியாளம், (4) குன்னூர், (5) கோத்தகிரி, (6) கூடலூர், (7) தேவலாறு, (8) காடம்பாறை போன்ற 8 இடங்களில் அரசின் சார்பாக தேயிலைத் தோட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1969-ல் 1,503 ஹெக்டேர் நிலப்பரப்பில், முதற்கட்டமாக தேயிலைப் பயிரிடப்பட்டது. இரண்டாவது கட்டமாக 600 ஹெக்டேர் நிலப்பரப்பில் 1978-ல் பயிர் செய்யப்பட்டது. 3-வது கட்டமாக 1981-ல் ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. சாதாரணமாக தேயிலை பயிர் செய்து, 5 ஆண்டுகள் கழித்துதான் மகசூல் கிடைக்கும். ஆகவே இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டமாக பயிரிட்ட மொத்த நிலப்பரப்புகளில் இருந்து இன்னும் நமக்கு பலன் கிடைக்கவில்லை,



இந்த 8 தோட்டங்களில் 2,264 குடும்பங்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு நபர்கள் வீதம் 4,528 அகதிகள் வேலை செய்கின்றனர்.

அதாவது வேலை அதிகமாக இருக்கும் இடங்களில் சிறு குழந்தைகளுக்குக் கூட இந்த வேலைவாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 3 நபர்களுக்கு அதாவது குடும்பத்திற்கு 3 நபர்கள் வீதம் வேலைவாய்ப்பு கொடுக்கப்படவேண்டும் என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : இது மத்திய அரசினிடத்திலே இருந்து கொடுக்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேதான் மாநில அரசு இன்றைக்கு செயல்படுத்தி வருகின்றது. மத்திய அரசிலே இருந்து குடும்பத்திற்கு 3 பேர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தால் கண்டிப்பாக மாநில அரசு அதைக் கடைப்பிடித்து குடும்பத்திற்கு மேலும் ஒருவருக்கு வேலை கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்பத்திற்கு எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். சேரன்பாடியிலே 400 குடும்பத்தினருக்கும், சேரன்கோடில் 431 குடும்பத்தினருக்கும், நெல்லியானத்திலே 402 குடும்பத்தினருக்கும் கூடலூரிலே 220 குடும்பத்தினருக்கும், தேவாலாவிலே 220 குடும்பத்தினருக்கும், காடந்துறையிலே 75 குடும்பத்தினருக்கும், கூனூரிலே 245 குடும்பத்தினருக்கும், கோத்தகிரியிலே 271 குடும்பத்தினருக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம் 2264 குடும்பத்தினர் நீலகிரி மாலையிலே அரசு சார்பான தோட்டங்களிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தோட்டங்களில் பணிபுரிபவர்களின் கூலியினைப் பற்றிக்கூட தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு 9 ரூபாய்தான் நாங்கள் கொடுத்துக்கொண்டிருந்தோம். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையிலே ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்படி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் இன்றைக்கு 10 ரூபாய் 31 பைசா கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 11 ரூபாயாகக் கூட கூலியை உயர்த்தலாம் என்று கூடத் தெரிவித்தார்கள். ஒரு குடும்பத்திற்கு இரண்டு நபர்கள் வீதம் வேலை கொடுக்கின்ற போது 20 ரூபாய் 62 பைசா கூலியாக ஒவ்வொரு குடும்பத்தினரும் பெறுகிறார்கள். அது போதுமானதாகத்தான் இருக்கக்

கூடும் என்ற நியதியின் அடிப்படையிலேதான் செய்கிறோம்.
கூலியைப் பற்றிக்கூட மத்திய அரசு நல்ல முறையிலே அவர்
களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் அதைப்பற்றிக்கூட
நாங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரத் தயாராக இருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அவர்களுக்கு சரியான முறையிலே வீடுகள் கொடுக்
கப்படவில்லை என்று கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த
2,264 குடும்பத்தினருக்கும் வாடகை இல்லாமல் வீடு கட்டித்
தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டின் விஸ்தீரணமும் 330
சதுர அடியாகும். அதுமட்டுமல்ல, அங்கே பணிபுரிபவர்களின்
வேலை நேரம் காலை 8 மணி முதல் 12 மணி வரை, மாலை 1
மணி முதல் 5 மணி வரை, ஆக 8 மணி நேரம் செய்கின்றார்கள்.

அடுத்து, மருத்துவவசதி போதவில்லை என்று குறிப்பிட்டிருக்
கிறார்கள், இந்தக் குடும்பத்தினருக்கு மருத்துவவசதி கொடுப்
பதற்காக தேயிலைக் கழகத்தால் சேரன்பாடி, சேரன்கோடு
மற்றும் நெல்லியாளம் ஆகிய இடங்களில் 3 மருத்துவமனை
கள் நடத்தப்படுகின்றன. அவசர கேஸ்களை எடுத்துச் செல்
வதற்காக ஒரு ஆம்புலன்ஸ் வண்டியும் இருக்கின்றது. மேலும்
இவர்களுடைய குழந்தைகளின் கல்வி வசதிக்காக மூன்று ஆரம்பப்
பள்ளிகள் தேயிலைக் கழகத்தால் நடத்தப்படுகின்றன என்று
இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் 40 ஆயிரம்
நபர்கள் நீலகிரியில் வசித்து வருகிறார்கள், அவர்களுக்கெல்
லாம் சரியான முறையிலே வேலை கொடுக்கவில்லை என்று குறிப்
பிட்டார்கள். சுமார் 14,945 இலங்கை அகதிகள் மற்ற
மாவட்டங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டார்
கள். இலங்கையிலுள்ள உதவி ஹை கமிஷனர், அவர்களிடம்
நீங்கள் என்ன வேலை செய்ய விரும்புகிறீர்கள், விவசாயம்
செய்ய விரும்புகிறீர்களா, வியாபாரம் செய்ய விரும்புகிறீர்
களா அல்லது வேறு ஏதாவது வேலைவாய்ப்பு வேண்டும் என்று
விரும்புகிறீர்களா என்று அவர்களுடைய விருப்பங்களைக் கேட்டு
அதன்படி குடும்பக்கார்ட்டிலே குறிப்பிட்டுத்தான் இங்கே இந்தியா
விற்கு அனுப்புகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையிலே அவர்கள் வந்தவுடன் அவர்களை எந்தெந்த இடங்
களில் வேலையில் அமர்த்த முடியுமோ அல்லது வியாபாரத்
திற்காகக் கடன் கொடுக்க முடியுமோ அல்லது விவசாயம் நடத்து
வதற்கு ஏற்பாடு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு, குடும்பக்
கார்டிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அதை அடிப்
படையாக வைத்துத்தான் எங்கே வேலைவாய்ப்பு கிடைக்
கின்றதோ அங்கெல்லாம் அவர்களை அனுப்புகிறோம்.



அப்படி அனுப்பிவைக்கிறபோது, அவர்கள் கொஞ்ச காலத்
திற்கு அங்கே வேலை பார்த்து விட்டு, அந்த சீதோஷ்ண நிலை
ஒத்துக்கொள்ளவில்லை, ஆகவே, நீலகிரி மாவட்டத்தில்
தேயிலைத் தோட்டத்தில் எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று
அங்கே சென்றுவிடுகிறார்கள். அப்படி அங்கே வந்தபிறகு அவர்
களுககுக் கிடைக்கும் சலுகையை அவர்கள் பெறுவதற்கு தகுதி
யற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஏனென்றால், எல்லோருக்
கும் குடும்பக் கார்ட்டில் என்ன எழுதிக்கொடுத்து இருக்கிறார்
களோ அந்த அடிப்படையில் தான் அவர்களுக்கு வேலை
கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதை விட்டு விட்டு, வேறு இடத்
திற்குப் போனால்—அவர்களாகவே போனால்—எங்களுக்கு
அந்த இடத்தில் தான் சீதோஷ்ண நிலைமை ஒத்துவரும், உடலுக்கு
ஒத்து வரும் என்று போனால், அவர்களுக்கு அங்கே—நீலகிரியில்
மீண்டும் சலுகை அளிக்க வேண்டும் என்று சொன்னால், மத்
திய அரசாங்கத்திற்கு எழுதித்தான் கேட்கவேண்டும். அவர்கள்
எந்த அடிப்படையில் வேலைவாய்ப்பு தரவேண்டும் என்று குடும்பக்
கார்ட்டில் எழுதிக்கேட்டு இருக்கிறார்களோ அதைத்தான்
அங்கேயுள்ள ஹைக்கமிஷனர் அவர்களும் குறிப்பிட்டு
அனுப்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேறு வேலை கொடுக்க
வேண்டும் அல்லது நீலகிரி மாவட்டத்தில் தோட்ட வேலை
கொடுக்கவேண்டும் என்று சொன்னால், அதைக் குறித்து மத்திய
அரசுக்கு எழுதிக்கேட்டு பிறகு தான் கொடுக்கவேண்டும். அவர்
கள் உத்தரவு பிறப்பித்தால் தான் கொடுக்க முடியும். ஏனென்
றால், ஒவ்வொரு மாநிலத்திலும், அவர்கள் என்னென்ன வேலை
செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,
வியாபாரம் செய்யவேண்டும் என்று கேட்டவர்கள் இப்போது
வேலைவாய்ப்பு வேண்டும் என்றோ, வேலைவாய்ப்பு கேட்டவர்கள்
இப்போது வியாபாரம் வேண்டும் என்றோ கேட்டால், அதற்கு
மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக்கேட்டு அவர்களிடமிருந்து
வரும் உத்தரவின் அடிப்படையில் தான் கொடுக்க முடியும்
என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு
விடைபெறுகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல விவரங்களைக்
கொடுத்து இருக்கிறார்கள், நன்றி. அவர்கள் உடல் நிலைக்கும்,
கால நிலைக்கும் அனுசரித்து பல இடங்களில் வேலை செய்வதற்கு
ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி, நீலகிரிக்கு வேலைக்கு
வந்து இருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்களும் ஒப்புக்
கொண்டதற்கு நன்றி. அப்படி வந்த காரணத்தால் தான் நம்
முடைய அரசு அங்கே அனுப்பி வைத்தவர்களைவிட அதிகமான
பேர் அங்கே இன்றைக்கு இருக்கிறார்கள். அப்படி அங்கே வந்து
சேர்ந்தவர்கள் இன்றைக்கு தெருவில் நின்று கொண்டு இருக்
கிறார்கள். மத்திய அரசுக்கு எழுதிக்கேட்டு தான் அவர்களுக்கு
உதவிகளைச் செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். அப்படிச் செய்வதற்கு நாங்களும் வற்புறுத்துகிறோம்,

[திரு. கு. ரமணி] [1982 மார்ச் 31

அரசும் அதைக் குறித்து மத்திய அரசுக்கு எழுதினால் தான் முடியும். ஆனால் மத்திய அரசிடமிருந்து அனுமதி வருகின்ற வகையில், அவர்கள் அங்கே இருக்கின்ற வகையில், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, அவர்கள் உயிரோடு இருப்பதற்கு ஏதாவது ஒரு வகையில் வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி ஸ்ரீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறுகிறபோதே அதைக் குறிப்பிட்டு இருக்கிறேன். எங்களுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும். ஆகவே, அதைப் பற்றி நாங்கள் எழுதிக் கேட்டு, அங்கேயிருந்து என்ன ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அதை நாங்கள் முடிவு எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1-4-1982) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

157. நெருக்கடி நிலைக்கு முன்னர் 1—1—1972 முதல் 31—1—1976 வரையிலான காலத்தில் நடந்த அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட தனி நபர் கமிஷன் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. என்.எஸ். இராமசாமி அவர்களின் அறிக்கை—ஒன்பதாம் பகுதி—இறுதி அறிக்கை (தமிழ்) 1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60 1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

158. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப்பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12—5—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 28 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது



1982 மார்ச் 31]

159. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

174. வனத்துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

175. இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் 1976—77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான பொதுக்கணக்குக் குழுவின் பனிரெண்டாவது அறிக்கை (பாகம்-I) (தமிழ், ஆங்கிலம்).

176. 1972—73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக்கணக்குக்குழு (1977—78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி பொதுக் கணக்குக்குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

177. இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் 1976—77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை (பாகம் II (தமிழ், ஆங்கிலம்).

178. 1976—77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (பாகம் I) (தமிழ், ஆங்கிலம்).

179. 197 —77 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக்கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை (பாகம் I) (ஆங்கிலம்).

180. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1976—77, 1977—78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (ஆங்கிலம்).

181. இந்திய தணிக்கைத்துறை தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் தமிழ் நாடு வீட்டுவசதிவாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

182. 1981–82 ஆம் ஆண்டிற்கான அரசினர் உறுதி மொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(..642..-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 669-க்கான விடையைக் காண்க.)

மத்திய அரசின் திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி ஒரு இலட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு கடன் உதவி அளிக்கிறது. அதற்கு அதன்படி ஒவ்வொரு நகரத்திற்கும் திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 1 கோடி என வரையறை செய்யப் பட்டுள்ளது. இதில் மத்திய அரசு 40 சதவீதம் கடன் அளிக் கிறது. மாநில அரசு 40 சதவீதம் இணைத்தொகை அளிக்கிறது. எஞ்சிய 20 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களால் அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இப்போது மத்திய அரசின் உதவி யோடு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 24 நகரங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 23 நகரங்களுக்கு மத்திய அரசு கடனுதவி கிடைத்துள்ளது. இந்த 23 நகரங்களில் மொத்தம் ரூ. 564.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2. இக்கடன் தொகைக்கு வட்டி மத்திய அரசு 1980–81 வரை 5½ சதவீதம் விதித்து வந்தது. 1981-ல் இருந்து 6¼ சதவீதம் ஆகும். கடன் தொகை 5 ஆண்டு கழித்து வட்டி (Moratorium) 20 ஆண்டுகளில் திருப்பித்தர வேண்டும். கடன் உதவி கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அளிக்கப்படும் :—

1. வீட்டு மனை அமைத்தல்.
2. போக்குவரத்து வசதிகள் கட்டுதல்.
3. மண்டி மற்றும் அங்காடி கட்டுதல்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களின் பெயர்கள், ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டு, திட்ட மொத்த மதிப்பீட்டு தொகை, மத்திய மாநில அரசுகளின் மொத்த கடனுதவி தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கபடுள்ளன :—



| வரிசை எண்ணும் மாவட்டம் மற்றும் நகரின் பெயரும். | ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட/ அளிக்கப்பட வேண்டிய மொத்த மதிப்பீட்டுத் தொகை. | மத்திய, மாநில அரசு களால் அளிக் கப்பட்ட மொத்த கடனுதவி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| நீலகிரி மாவட்டம் : | | | |
| 1. உதகமண்டலம் .. .. .. | 1979–80 .. | 51.75 | 20.00 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் : | | | |
| 2. கரூர் .. .. .. | 1979–80 .. | 41.08 | 34·00 |
| தர்மபுரி மாவட்டம் : | | | |
| 3. தர்மபுரி .. .. .. | 1979–80 .. | 81.43 | 21.00 |
| புதுக்கோட்டை மாவட்டம் : | | | |
| 4. புதுக்கோட்டை .. .. .. | 1979–80 .. | 23.10 | 10.00 |
| சேலம் மாவட்டம் : | | | |
| 5. திருச்செங்கோடு .. .. .. | 1980–81 .. | 80.54 | 28.00 |
| 6. ஆத்தூர் .. .. .. | 1980–81 .. | 74.11 | 44.00 |
| 7. நாமக்கல் .. .. .. | 1981–82 .. | 86.50 | 22.00 |

| வரிசை எண்ணும், மாவட்டம் மற்றும் நகரின் பெயரும். | ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட/ அளிக்கப்பட வேண்டிய மொத்த மதிப்பீட்டுத் தொகை. | மத்திய, மாநில அரசுகளால் அளிக்கப்பட்ட மொத்த கடனுதவி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மதுரை மாவட்டம் : | | | |
| 8. பழனி .. .. .. | 1980–81 .. | 101.70 | 20.00 |
| 9. தேனி-அல்லிநகரம் .. .. .. | 1981–82 .. | 87.65 | 20.00 |
| பெரியார் மாவட்டம் : | | | |
| 10. கோபிசெட்டிபாளையம் .. .. .. | 1980–81 .. | 98.60 | 18.00 |
| 11. தாராபுரம் .. .. .. | 1980–81 .. | 57.66 | 21.00 |
| தஞ்சாவூர் மாவட்டம் : | | | |
| 12. மன்னார்குடி .. .. .. | 1980–81 .. | 27.19 | 17.00 |
| 13. நாகப்பட்டினம் .. .. .. | 1981–82 .. | 44.70 | 14.00 |
| கோயம்புத்தூர் மாவட்டம் : | | | |
| 14. மேட்டுப்பாளையம் .. .. .. | 1980–81 .. | 68.50 | 15.00 |
| 15. உடுமலைப்பேட்டை .. .. .. | 1980–81 .. | 70.69 | 22.75 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 16. பொள்ளாச்சி .. .. .. | 1981–82 .. | 98.00 | 40.0 |
| செங்கல்பட்டு மாவட்டம் : | | | |
| 17. செங்கல்பட்டு .. .. .. | 1980–81 .. | 52.56 | 10.00 |
| நீலகிரி மாவட்டம் : | | | |
| 18. கூனூர் .. .. .. | 1980–81 .. | 118.80 | 46.00 |
| ராமநாதபுரம் மாவட்டம் : | | | |
| 19. மானாமதுரை .. .. .. | 1980–81 .. | 87.27 | 5.00 |
| 20. காரைக்குடி .. .. .. | 1980 –81 .. | 93.50 | மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| வட ஆற்காடு மாவட்டம் : | | | |
| 21. திருவண்ணாமலை .. .. .. | 1980–81 .. | 81.19 | 51.00 |
| 22. ராணிப்பேட்டை .. .. .. | 1981–82 .. | 76.16 | 20.00 |
| திருநெல்வேலி மாவட்டம் : | | | |
| 23. கோவில்பட்டி .. .. .. | 1981–82 .. | 86.29 | 38.00 |
| தர்மபுரி மாவட்டம் : | | | |
| 24. ஓசூர் .. .. .. | 1981–82 .. | 82.50 | 28.00 |

## இணைப்பு II.

(647 1ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 671-க்கான விடையைக் காண்க.)

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை சட்டத்தை அமுல்படுத்தும் அரசு அதிகாரிகளுக்கு தொழிற்சாலை சட்டத்தை கண்டிப்பாக அமுல் நடத்தவும், தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வு மற்றும் அடிக்கடி ஆய்வு செய்து வருகைப் பதிவேட்டில் (Muster Roll) சிறுவர் உட்பட எல்லா தொழிலாளர்களுடைய பெயரும், விடுபடாமல் பதியப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும் தொழிலாளர் சட்டங்களின் மூலம் கிடைக்கும் பயன்கள் கிட்டாமல் போகக் கூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு தொழிற்சாலை சட்டப்படி உள்ள நலன்கள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்கின்றனவாவென்றும், அவர்கள் குறிப்பிட்ட வேலை நேரத்திற்கு மேல் வேலை செய்யாமல் இருக்கிறார்களா என்றும் சரிபார்க்கிறார்கள். சிறுவர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் பொதுநல வசதிகள் பற்றிய தொழிற்சாலை சட்ட விதிகளை மீறும் நிர்வாகத்தினர் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் நடக்கும் போது சட்டவிதிகள் மீறுதல்களையும், அதனால் ஏற்படும் பாதகங்களையும் நடுவர்களுக்கு விளக்கிக் கூறி, நீதிமன்றம் கூடுமானவரை அதிகபட்சத் தண்டனை வழங்க எடுத்துரைக்குமாறு தொழிற்சாலை ஆய்வாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

சென்னை தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அவர்கள் தீப்பெட்டி வர்த்தக குழுவின் உறுப்பினர்களின் கூட்டமொன்றினைக் கூட்டி, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான, சுத்தமான வேலை செய்யும் சூழ்நிலையினை தொழிற்சாலைகளில் ஏற்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். தொழிற்சாலை சட்டத்தையும் அதன் விதிமுறைகளையும் கடுமையாக அமுல் நடத்த, சிவகாசியில் அதிகப்படியாக ஒரு தொழிற்சாலை ஆய்வர் மற்றும் ஒரு உதவி தொழிற்சாலை ஆய்வர் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறுவர்களை பரிசோதித்து சான்றிதழ் வழங்க ஒரு தனி மருத்துவ அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட அளவில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில், அரசு அலுவலர்கள், நிர்வாக பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு,



சிவகாசி பகுதியில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்து தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறுவர்கள் நலன் காக்கவும், அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளில் தீர்வு காணவும், பல துறைகளில் பணிகளை இணைத்து நடவடிக்கை எடுக்கவும் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தக் குழு இருமுறை கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

நகரப் பகுதியில் மட்டும் அதிக அளவில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகள் அமைப்பதை தவிர்க்கவும், கிராமப் பகுதியில் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், சிறுவர்கள் கிராமப் பகுதியிலிருந்து நீண்ட தூரம் நகரப் பகுதிக்கு வந்து பணியாற்றி செல்வதை தவிர்க்கவும், சிவகாசி நகர எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு உள்ளாக எந்த புதிய தீப்பெட்டி தொழிற்சாலைகளை தொடங்கவும் அனுமதி வழங்காமலிருக்க அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

அதிகமான அளவில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு அதிக அளவில் தொழிலாளர்கள் தொழிலாளர் நல சட்டங்களின் மூலம் பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, சிறுவர்கள் வேலை ஆகியவை சம்பந்தப்பட்ட தொழிற்சாலை சட்டம் மற்றும் விதிகளை கண்டிப்பான முறையில் அமுல் நடத்த நடவடிக்கை எடுத்ததின் காரணமாக தொழிற்சாலை நிர்வாகிகளின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள், பாதுகாப்பு மற்றும் சிறுவர்கள் வேலை பற்றிய தொழிற்சாலை சட்ட விதிகளை மீறியதற்காக தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

1977 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையில் உள்ள தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது தொடரப் பட்ட வழக்குகளின் விவரம்.

| | 1977. | 1978. | 1979. | 1980. | 1981. | 1982. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| **தொழிற்சாலைகளின் எண்ணிக்கை :** | | | | | | |
| தீப்பெட்டித் தொழிற்சாலைகள் | .. | 139 | 157 | 174 | 179 | 186 |
| வெடிமருந்துத் தொழிற்சாலைகள் | .. | 55 | 64 | 77 | 81 | 89 |
| **வழக்குகளின் எண்ணிக்கை :** | | | | | | |
| **தீப்பெட்டித் தொழிற்சாலைகள் :** | | | | | | |
| பாதுகாப்பு .. .. | 8 | 18 | 49 | 43 | 25 | .. |
| சிறுவர் வேலை .. .. | 30 | 37 | 217 | 154 | 96 | .. |
| இதரவகை .. .. | 111 | 208 | 279 | 258 | 247 | .. |
| மொத்தம் .. .. | 149 | 263 | 545 | 455 | 36 | .. |
| **வெடிமருந்துத் தொழிற்சாலைகள் :** | | | | | | |
| பாதுகாப்பு .. .. | 1 | 3 | 27 | 91 | 97 | .. |
| சிறுவர் வேலை .. .. | 1 | 6 | 64 | 33 | 31 | .. |
| இதரவகை .. .. | 68 | 62 | 74 | 272 | 257 | .. |
| மொத்தம் .. .. | 70 | 71 | 165 | 396 | 385 | .. |

இணைப்பு III.

(28—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 676-க்கான விடையைக் காண்க.)

சேலம் மாவட்டத்திலுள்ள மாக்னசைட் கனிமம் ஆய்வினை விரிவாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை :

இந்திய புவியியல் பிரிவு 1864 ஆம் ஆண்டிலிருந்து, சேலம் மாவட்டத்திலுள்ள சுண்ணாம்புக்கரடு என்ற இடத்தில் ஆராய்ச்சி நடத்தியது. அவர்களின் இறுதி கணக்கீடுபடி, இப்படிவம் 44 மில்லியன் டன்கள் மாக்னசைட் கனிமத்தைக் கொண்டதாக உள்ளது. அதில் 11 மில்லியன் டன்கள் வெப்பந்தாங்கி வகையைச் சார்ந்ததாகும். இப் பகுதியில் 1971—72 ஆம் ஆண்டுகளில் மாநில புவியியல் பிரிவு ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தில் துறப்பண ஆய்வினை நடத்தி மாக்னசைட் கனிமம் எவ்வளவு ஆழத்திற்கு செல்கிறது என்று கண்டுபிடித்துள்ளது. மேலும் இந்திய அரசுக்குச் சொந்தமான பர்ன் நிறுவனத்தாரின் வேண்டுகோளின்படி மாநில புவியியல் பிரிவு மேற்கு மலை பகுதியிலுள்ள குத்தகைக்கு விடப்பட்ட இடங்களில் 1975—76 ஆம் ஆண்டில் விவரமான ஆய்வு நடத்தினார்கள். அதன் மூலம் 31,000 டன்கள் வெப்பந்தாங்கி வகையைச் சார்ந்த மாக்னசைட் கனிமமும், 1,05,000 டன்கள் சிலிகா தன்மையுடைய சுத்தமில்லாத மாக்னசைட் கனிமமும், இதுவரை தோண்டி எடுக்கப்படாத குத்தகை இடங்களில் மட்டும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் மற்றுமோர் குத்தகைப் பகுதியில், சமீப காலத்தில் மாநில புவியியல் பிரிவு துறப்பண ஆய்வை மேற்கொண்டுள்ளது. மேலும் இந்திய புவியியல் பிரிவு ''சுண்ணாம்புக்கரடு'' பகுதியில் மறு மதிப்பீடு கணக்கிட விரிவான ஆய்வினை மேற்கொண்டு உள்ளது.

வியாழக்கிழமை, 1982 ஏப்ரல் 1

பங்குனி 19, துன்மதி —திருவள்ளுவர் 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லுவார் ''

கற்றவரின் முன், தாம் கற்றவற்றை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரிலும் மிகக் கற்றவராக மதித்துப் போற்றப்படுபவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடிசைவாசிகளிடமிருந்து வசூலிக்கப்படும் மின் கட்டணம்.

*வினா எண் 699— திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைகளுக்கு மின் கட்டணம் வசூல் செய்வதை கிராமப்புறங்களுக்கு முகாமிட்டு வசூல் செய்யும் காசாளர்கள் வாங்காமல் குடிசை வாசிகளே நேரில் சென்று செலுத்தச் சொல்லுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிசை வாசிகள் சிரமங்கள் போக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) சாதாரண மின் பயனீட்டாளர்களைப் போல் அல்லாமல் குடிசைவாசிகள் பிரிவு அலுவலகத்தில் இதற்கென அமர்த்தப்பட்டுள்ள வணிக உதவியாளர்களிடம் நேரடியாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம். ''அட்டைப்பட்டியல் முறை'

முழுமையாக அமுலாக்கப்பட்ட பின் குடிசைவாசிகளிடம் அந்தந்த இடத்திலே பணியாற்றும் லைன்மேன்கள் மூலம் மின் கட்டணம் வசூலிக்கலாமா என்பதுபற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில், கிராம மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 2.50 என்ற அளவுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், அந்த பில் கட்டணத்தை கிராமங்களிலே குடிசைகளிலே வசிக்கக்கூடியவர்கள், வெளியே சென்று கட்டுவதற்கு அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, லைன்மேன்கள் ஸ்டாப் மூலமாகவே நேரடியாக, அந்த இடங்களுக்குச் சென்று மின் கட்டணத்தை வசூலிக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. அரசு பரிசீலிக்கும்.

## மின் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தனிப்பிரிவுகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 700—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் திட்டத்தில் உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் இரு தனிப்பிரிவுகள் அமைப்பது பற்றி தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மின் நிர்வாகத்திறனை சீர்படுத்தும் நோக்கத்தில் மின் உற்பத்தி செய்வதை தற்போது உள்ளதுபோல தமிழ்நாடு மின் வாரியத்திடமும், மின் விநியோகம் மற்றும் மின்சக்தி செலுத்துதல் ஆகிய பணிகளை மண்டலங்கள் வாரியாக கம்பெனிகளை அமைத்து, அக் கம்பெனிகளின் பொறுப்பில் விட்டு விடலாம் என்றதொரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பொருள்மீது அட்வகேட் ஜெனரலின் சட்ட ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பட்ட பின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவை சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே மின்வாரியம் அரசின் நேரடிப் பார்வையில் இருந்து, நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மீண்டும் அதை கம்பெனிகளிடம் ஒப்படைப்பது என்பது, நம்முடைய தேசிய கொள்கைக்கு பின்நோக்கிப் போவது ஆகாதா? அதனால், தேசீய கொள்கையை சிதைப்பதாகாதா? பழைய முறையிலேயே, அரசாங்கத்தின் நேரடிப் பார்வையிலே மின் வாரியம் இருப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் பெரிய நிறுவனமாகி விட்டது. சுமார் 1 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இப்போதே சுமார் 40 இலட்சம் பயனீட்டாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை கவனிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஆகவே, மின் உற்பத்தியை, ஜெனரேஷன் அன்டு டிரான்மிஷன் என்பதை ஒரு நிறுவனமாக வைத்துக்கொண்டு, மின் விநியோகத்தை ஆங்காங்கே, அரசு கம்பெனிகளாக, —தனியார் கம்பெனிகளாக அல்ல—அரசு கம்பெனிகளாக ஆக்கலாமா என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பொதுத்துறை நிறுவனம் என்ற அடிப்படையில் தமிழக மின்வாரியம்தான் ஆயிரம் கோடி மூலதனம் கொண்ட பெரிய நிறுவனமாக இருக்கிறது. ஒரு லட்சம் பணியாளர்கள் பணியாற்றக்கூடிய பெரிய நிறுவனமாக இருக்கிறது. 40 லட்சம் கன்ஸ்யூமர்கள் உடைய குறைகளையும் கோரிக்கைகளையும் கவனிக்க வேண்டியிருப்பதால் பெரிய நிறுவனமாக இருப்பதால், போக்குவரத்துத் துறையிலே கழகங்கள் ஏற்படுத்தியிருப்பதைப் போல நிர்வாக சௌகரியத்திற்காக அந்த அடிப்படையில் பிரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எந்த அடிப்படையில் பிரிப்பது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. விநியோகத்தைப் பொறுத்தவரையில் தனித்தனி அமைப்புகளாக வைத்துக்கொள்வது நிர்வாகத் திறனுக்கு உகந்ததாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. அதிலே ஒரு ஆலோசனை 7 பிரிவுகளாக பிரிக்கலாம் என்ற கருத்துருவை மின்சார வாரியம் தெரிவித்துள்ளது. கன்னியாகுமரி-திருநெல்வேலி என்று ஒன்றும் மதுரை-இராமநாதபுரம் என்று ஒன்றும், தஞ்சை,

திருச்சி, புதுக்கோட்டை என்று ஒன்றும், கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார் என்று ஒன்றும், சேலம் தர்மபுரி என்று ஒன்றும், தென் ஆற்காடு, வட ஆற்காடு என்று ஒன்றும், சென்னை, செங்கற்பட்டு என்று ஒன்றும் ஆகப் பிரிக்கலாம் என்று மின்வாரியம் கருத்துரு தெரிவித்து உள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி விநியோகம் ரொம்ப விரிவாகவும் பெரிதாகவும் ஆகிவிட்டதன் காரணமாக விநியோகத்திற்கு மட்டும் சில கம்பெனிகளை அரசாங்கமே ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரி ஸ்தாபனத்திலே அப்படி ஏற்பட்டு இருப்பது என்பது ஒரு வளர்ச்சியைக் காட்டுகிறது. மின்சார வாரியத்தினுடைய இலாகாவின் பிரிவாகவே அதைப் பிரித்து சில அதிகாரிகளை வைத்து சில ஊழியர்களை வைத்து வழங்குவதற்குப் பதிலாக கம்பெனிகளாகப் பிரிப்பதற்குக் காரணம் என்ன? வேலை செய்யக்கூடிய ஊழியர்களும் பிரிக்கப்படுவார்கள் என்கிறபோது அரசாங்கத்தினுடைய போர்டில் அவர்களுக்கு நேரடியாக கிடைக்கிற சலுகைகள் குறைக்கப்படுவதற்கு செய்கிற ஏற்பாடாக இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே அது குறித்து அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தொழிலாளர்களுக்கு சலுகைகள் எந்தவிதத்திலும் குறைக்கப்பட மாட்டாது. இன்னும் சொல்லப் போனால் அவைகள் கூடுதலாகக்கூட வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த யோசனையின் அடிப்படையில் இது பரிசீலிக்கப்படவில்லை. நிர்வாகம் அன்வில்டியாக ஆகிவிட்டது. சாதாரண முடிவு எடுக்க வேண்டுமென்றால் கூட சென்னையிலே வந்து அவர்கள் காத்துக்கிடக்கவேண்டியிருக்கிறது. பிஸினஸ் பிளக்ஸி பிளிட்டி என்று சொல்வார்களே, அதைப்போன்று பயனீட்டாளர்களின் குறைகளைப் போக்குவதற்கு அது பயன்படும். தனியார் துறையில் அதை விடப்போவது இல்லை. அரசுத் துறையிலே தான் இருக்கும். பணியாளர்களைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டங்களுக்குள்ளே தான் இருக்கும். முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. 2, 3 மாவட்டங்கள் சேர்ந்து வருகிறது. இப்போதே மாவட்டத்திற்குள்ளே தான் மாற்றலாக இருந்தாலும் மற்றவைகளாக இருந்தாலும் இருக்கின்றன. ஆகவே பணியாளர்களைப் பொறுத்தமட்டில் எந்த மாற்றமும் இருக்காது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த விநியோகத்திற்கு தனி நிறுவனம் ஏற்படுத்துவதைப் பற்றி தொழில் சங்கங்களிடத்திலே பேசப்பட்டதா? அவர்கள்





அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்களா ? ஏற்கெனவே பில் போடுகிற முறையால் அவர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு கோர்ட்டிற்கு அது எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே அதைப் பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்னும் அதை பற்றி முடிவு எடுக்கவில்லை. அது சட்டப்படி சாத்தியமா என்பது பற்றி அட்வொகேட் ஜெனரலின் ஒபினியனைக் கேட்டு இருக்கிறோம். அது வந்த பிறகு மற்றபடி என்ன என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய வேண்டும்.

திரு. சே. செம்மலை : தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங்களின் உற்பத்தித் திறனை பெருக்குவதற்காகவும் செயல் திறனை அதிகப்படுத்துவதற்காகவும் அனல் மின் நிலையங்களைத் தனியாகவும் புனல் மின் நிலையங்களைத் தனியாகவும் இரண்டாகப் பிரித்து செயல்படுகின்ற முறையிலே உற்பத்தி நிலையங்களைப் பிரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்குப் பதிலாக நாம் விநியோகத்தை மட்டும் தனியாக எடுத்து புனல் மின்சாரமாக இருந்தாலும், அனல் மின்சாரமாக இருந்தாலும் உற்பத்தியைத் தனியாகக் கவனிப்பதற்கும் உற்பத்தி செய்த மின்சாரத்தை மாநிலத்திலே பல்வேறு இடங்களுக்கு லைன்களில் எடுத்துச் செல்வதற்கு தனியாகவும் தொழில் நுட்ப ரீதியாக டெக்னிக்கல் ஸ்பெஷலைசேஷன் என்ற அடிப்படையிலே கவனத்தை நாம் நல்ல முறையிலே செலுத்த முடியும். பல வளர்ந்த நாடுகளிலே அப்படித்தான் இருக்கின்றன. இங்கிலாந்திலே சென்ட்ரல் எலக்ட்ரிசிடி ஜெனரேஷன் போர்டு என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் விநியோகத்தைச் செய்வது இல்லை. ஏரியா போர்டு என்று வைத்து பல்வேறு பகுதிகளுக்கு—ஒவ்வொரு பகுதியிலேயும் விநியோகம் செய்வதற்கு—விநியோகம் செய்ய ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். சி. இ. ஜி. பி. என்று தனியாகவும் இருப்பதால் அதன்மூலம் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த முடியும்; விநியோகத்திற்கு தனியாக இருப்பதால் விநியோகமும் மேம்பாடு அடைய முடியும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை என்ற மூன்று மாவட்டங்களையும் சேர்த்து பிரிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சாவூர் ஒரு பெரிய ஜில்லாவாகவும் அதைப் போலவே திருச்சி ஒரு பெரிய ஜில்லாவாகவும் இருக்கிறது. நிர்வாகத்தைச் சுலபமாக்குகின்ற முறையிலே இதையும் இரண்டாகப்

பிரிக்க ஏதாவது உத்தேசம் உண்டா ? ஏற்கெனவே சுலபமாக்குவதற்காக பிரிக்கப்படுகிற நிலைமை இருப்பதாலே இதையும் இரண்டாகப் பிரிக்க முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும் அந்த விவரங்களுக்குள்ளே அரசு செல்லவில்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்சார வாரியம் இன்னும் திறமையாகச் செயல்படுவதற்கு ஒரு ஆலோசனையை வைத்துள்ளார்கள். நான் கேட்க விரும்புவது, மதுரை, முகவை, தஞ்சை, வட ஆற்காடு போன்ற பெரிய மாவட்டங்களிலே ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மட்டும் இருப்பதால் நிர்வாகம் செய்வதிலே சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளையாவது கவனித்து உடனடியாக நிர்வாகத் திறமைக்காக இரண்டு பகுதியாகப் பிரிக்க முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

(முற்பகல் 9–10)

**தமிழ்நாட்டில் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவும் திட்டம்.**

* வினா எண் 701—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சார பற்றாக்குறையினால் உச்ச நேர மின் சப்ளை நெருக்கடி ஏற்படுவதை தடுக்க எரிவாயு மின் உற்பத்தி இயந்திரங்கள் சிலவற்றை நிறுவ மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம், எனில் அது குறித்த விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன்கொண்ட ஆறு (6) கியாஸ் சுழலி மின் உற்பத்தி நிலையங்கள் ரூ. 112·6 கோடி செலவில் நிறுவ மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.





திரு. கு. ரமணி : இந்த 112 கோடி ரூபாய் திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். இந்த மின் நிலையங்கள் எந்தெந்தப் பகுதிகளில் துவக்கப்படும் ? எந்தெந்த இடங்களை இதற்காக அரசு தேர்ந்தெடுத்துள்ளது ? கோவை மிகப் பெரியதொரு தொழில் மையமாக இருப்பதால, அடிக்கடி அங்கே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதால் அந்த மின்சாரத் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்காக அங்கும் ஒரு காஸ் டர்பைன் ஏற்படுத்த ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது நாம் போட்டிருக்கிற திட்டத்தின்படி எண்ணூரில் இரண்டு 50 மெகாவாட்ஸ் திறன், பேசின் ப்ரிட்ஜில் ஒரு 50 மெகாவாட்ஸ், தூத்துக்குடியில் ஒரு 50 மெகாவாட்ஸ், மேட்டூரில் ஒரு 50 மெகாவாட்ஸ், மதுரையில் ஒரு50 மெகாவாட்ஸ் என்று திட்டம் போட்டு அனுப்பி இருக்கிறோம். ஆனால் இவை எல்லாயிடங்களிலும் வைக்க வேண்டும் என்று கூட அல்ல. சௌகரியமான ஒரு இடத்தில் வைத்து விட்டால் நமக்கு சில வினாடிகளில் மின்சாரம் உடனடியாகக் கிடைத்துவிடும். தமிழ்நாடு முழுவதற்கும் உறுதியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட முடியும். ஆகவே எந்த இடத்தில் வைக்கிறோம் என்பது இதில் பெரிதல்ல. நல்ல இடமாகக் கிடைத்துவிட்டால் 300 மெகாவாட்ஸ் கூட ஒரேயிடத்தில் வைக்கலாம். சென்னை தான் லோட் சென்டர் . ஆகவே இங்கே கூட வைக்கலாம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எங்கே வைப்பது என்பது பிரச்சினை அல்ல.

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் எப்போதும் மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை, அனுமதி கிடைக்கவில்லை என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். இதற்கு தமிழ்நாட்டிலுள்ள மக்கள் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இதற்கு முடிவு காண வேண்டும் என்பது ஒன்று. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கோவை ஒரு பெரிய தொழில் நகரம். அங்கே நூற்றுக்கணக்கான சிறு தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் அங்கே அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதால் அவற்றில் தொடர்ந்து உற்பத்தி நடக்க முடியாமல் பல யூனிட்கள் நிறுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் மின்சாரத் தேவையை அவசியம் பூர்த்தி செய்தாக வேண்டும். ஆகவே அவற்றிற்கு தடை இன்றி தொடர்ந்து மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை நான் அறிகிறேன். அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு வேண்டிய காஸ், பெட்ரோலியம் பொருள் அமைச்சகம்

அனுமதி தரவேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த காஸ் டர்பைனை உருவாக்குவதற்கு மைய அரசின் அனுமதி கிடைக்கும். அது வந்தால்தான் இந்தப் பிரச்சினை தீரும்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்கள் ஆறு இடங்களில் நிறுவ மத்திய அரசிடம் அனுமதி கோரி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த அனுமதியைத் துரிதமாகப் பெற என்ன தீவிர முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது ? இப்போது ஒவ்வொரு இடங்களிலும் இரவு நேரங்களில் திடீரென்று ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் மின்சாரம் திடீரென்று நின்று விடுகிறது. அதனால் பலவித இக்கட்டான நிலைமைகள் ஏற்படுகின்றன. பம்ப்செட்களுக்கு மின்சாரம் மூன்று மணி நேரம் தொடர்ந்து கிடைக்காததால் பல மோட்டார்கள் தீய்ந்து போகின்றன. ஆகவே சீராக மின்சாரம் குறிப்பிட்ட நேரங்களில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மைய அரசுக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறோம். அடுத்து நம் முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் செல்கிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்தில் இவற்றை பேசி இந்த அனுமதியைப் பெற விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது ஏற்பட்டிருக்கிற மின் நெருக்கடியை ஓரளவு சமாளித்து வருகிறோம். இந்த ஏப்ரல் மாதத்தில் தூத்துக்குடியில் மூன்றாவது யூனிட், 210 மெகாவாட்ஸ் யூனிட் உற்பத்தி செய்யத் துவங்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதெல்லாம் வந்தால் ஓரளவு பிரச்சினையைச் சமாளிக்க முடியும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் இப்படி எரி வாயு திட்டம், அதேபோல் அனல் மின் திட்டம், புனல் மின் திட்டம் ஆகியவைகளுக்கு, மைய அரசின் அனுமதி வேண்டுமென்று அனுப்பப்பட்டு எத்தனை திட்டங்கள் அனுமதிக்காகக் காத்துக்கிருக்கின்றன ? அந்தத் திட்டங்கள் எவ்வளவு நாட்களாகத் தேங்கி இருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை விவாதம் நடத்திய பொழுது ஒரு அறிக்கை தரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அதை மீண்டும் படித்தால் விவரம் கிடைக்கும்.



### Starting of a Co-operative Milk Producers Union at Sarukkai Village.

* Q. No. 647—THIRU. S. RAJARAMAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any representation has been received from milkmen of Sarukkai Village in Papanasam Taluk in Tanjore Distric by the Office of the Milk Deputy Commissioner contonment Tiruchirappalli during July 1980 for starting a Co-operative Producers Union : and

(b) the action taken in this regard ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சருக்கை கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 15—9—1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

### காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் நவீன முறையில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம்,

* வினா எண் 702—திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நவீனமுறையில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திறனைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் பட்டு வளர்ப்பினை பெருக்குவதற்கு என்று தனியாக திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தமிழ் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நவீன பட்டு வளர்ப்புத் திட்டங்கள் இப்பகுதியிலும் அமுல் படுத்தப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டு வளர்ச்சி பயிற்சி கிடைக்க காஞ்சிபுரத்தில் ஒரு முன்னோடி மற்றும் சேவை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூசசி வளர்ப்புத் திறனை அதிகப்படுத்த, அதற்குப் புதிய முறைகளை அறிந்து செயல்படுத்த, தேர்ச்சி பெற்ற விவசாயிகள் ஜப்பான் நாட்டுக்குப் பயிற்சி பெற்று வர அனுப்பப்படுவார்களா? மேலும் ஜப்பான் நாட்டிலேயிருந்து, பட்டுப்பூச்சி வளர்ப்பிலே தேர்ச்சிப்பெற்ற விஞ்ஞானிகள் வரவழைக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மோண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கேள, இங்கேயே விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், பட்டு வளர்ப்பு துறையின் சார்பாக, சில அதிகாரிகளை ஜப்பான் நாட்டிற்கு பிவோல்ட்டின் என்ற பட்டு வளர்ப்பு முறையினைத் தெரிந்து கொள்ள அனுப்பி அவர்கள் பயிற்சி பெற்று வந்து, இன்றைக்கு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பிலும், பட்டு வளர்ப்பிலும் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையிலே, ஊசிப் பூச்சிகளால் பாதிப்பு ஏற்படுகிறது, அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டம் எற்கனவே காஞ்சிபுரத்திலும் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆரம்பிக்கப் பட்டு, அது இடைக் காலத்தில் தடைப்பட்டது. அப்படி இடைக் காலத்தில் தடைப்பட்ட பிறகு, தொடர்ந்து நடைபெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்தைக் காஞ்சிபுரத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு முனையுமா ? அதற்கு ஏதேனும் மானியமும், கடன்களும், உதவிகளும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் தொடர்ந்து வேகமாக நடத்தப்படும். இந்த ஆண்டு கூட ஏறத்தாழ ரூ. 3 கோடி தமிழ்நாட்டிற்கு என்று பட்டு வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்டு, மிக வேகமாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு அந்தத் தொழிற்கூடங்களில் பணி புரியக் கூடிய அந்தத் தொழிலாளர் பெண்கள் குறிப்பாக, 10 மணி நேரம் வேலை செய்தால் கூட அவர்களுக்கு ரூ. 3, ரூ. 3½ தான் கொடுக்கப்படுகிறது. இதை மாற்றி, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சக் கூலியை அவர்களுக்குக் கொடுக்க அமைச்சர் ஆணையிடுவாரா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் மூலமாகத் தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### திருச்சி மாவட்டத்தில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 703—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*திருச்சி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் பால் பண்ணையொன்று அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. எம். சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டுறவு பால் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றையெல்லாம் பயன் படுத்தி ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா என்று தெரிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் நாள் தோறும் 10 டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை இப்பொழுது நடந்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக சேலத்திலும் கிருஷ்ணகிரியிலும் இரண்டு பால் பவுடர் தொழிற்சாலைகள் தொடங்க இருக்கிறோம். அதற்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் மற்ற மாவட்டங்களில் தொடங்குவது பற்றி அரசு ஆய்வு செய்யும்.

[1982 ஏப்ரல் 1

## கரும்பு உற்பத்திச் செய்யும் விவசாயிகளிடமிருந்து பெறப் பெற்ற மனு.

* வினா எண் 704—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு உற்பத்திச் செய்யும் விவசாயிகளிடம் இருந்து கரும்பிற்கு கட்டுப்படியான விலை கேட்டு மனு ஏதாவது வந்துள்ளதா ?

(ஆ) சென்ற ஆண்டு கரும்பு டன்னுக்கு நிர்ணயித்த விலை என்ன ? இந்த ஆண்டு நிர்ணயித்திருக்கிற விலை என்ன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ)

| ஆண்டு. (1) | 8·5 சதவீத சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை. (2) | 8·5 சதவீத சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு மாநில அரசு நிர்ணயித்த விலை. (3) |
|---|---|---|
| | (டன் ஒன்றுக்கு.) | |
| 1980–81 .. .. | ரூ. 130 | ரூ. 175 |
| 1981–82 .. .. | ரூ. 130 | ரூ. 165 |

இது தவிர கரும்பு ஆலைகள், கூடுதலாக ரூ. 10 டன் ஒன்றுக்கு விவசாயிகளுக்கு அரசு பணத்திலிருந்து அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இச்செலவு, வணிக வரித்துறை வசூல் செய்யும், கரும்பு கொள்முதல் வரியிலிருந்து ஈடு செய்யப்படும்.



1982 ஏப்ரல் 1]

[முற்பகல் 9·20]

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற விஞ்ஞானத்தால் விவசாயிகளுக்கு ஒரு விடிவு ஏற்படவில்லை என்பதும் ஏறிவருகின்ற கூலி உயர்வுகள் விவசாயிகளுடைய முதுகெலும்பை முறிக்கக் கூடிய தன்மையிலே இருக்கின்றது என்பதையும் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தளவுக்கு கரும்பு விவசாயிகள், மூட்டுவழிச் செலவு, மற்ற செலவுகள், மின்சார கட்டணம் உட்பட கரும்பை இலவசமாக வெட்டிச் செல்லக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்திருப்பார்கள். அந்த அடிப்படையில் மத்திய அரசாங்கத்தோடு போராடி, உத்தர பிரதேசத்தில் இருப்பதைப் போல சிறு சிறு சர்க்கரை உற்பத்தி ஆலைகளை மாவட்டம் முழுவதும் அல்லது மாநிலம் முழுவதும் ஏற்படுத்தி தொடங்குவதற்கு ஊக்கம் தரக் கூடிய விதத்தில் விவசாயிகளுக்கு கடன் அளிக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே. ஆலைகளைத் துவக்குவதற்குக் கடன் அளிக்கிற அளவுக்கு தமிழ் நாடு அரசுக்கு நிதிநிலைமை இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சென்ற ஆண்டு மத்திய அரசு 135 நிர்ணயித்தது என்றும், 175 கொடுத்தது என்றும், இந்த ஆண்டு 165 மேலும் 10 சேர்த்து அதே 175 கொடுத்தது என்றும் சொன்னார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது. அதோடு வேறு மாநிலங்களில் உத்திரபிரதேசம், மகாராஷ்டிரம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் மத்திய சர்க்கார் இந்த விலையைச் சொல்லி இருந்தாலும் கூட, 225, 200-க்குக் குறையாமல் கொடுக்கிறார்களே, அதே மாதிரி நமது அரசும் மற்ற வரிகளைக் குறைத்துக் கொண்டு இந்த மாதிரி அதிகமான நியாயமான விலைகளைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகயை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் அறிந்துதான் நாம் 165 ரூபாய்க்குமேலே கொடுக்க இதலாத சூழ்நிலை இருப்பதை புரிந்து கொண்டு நாம் அறிவித்தோம். அதற்குப் பிறகும் விவசாயப் பெருமக்களுடைய நிலைமையை கணக்கில் எடுத்துக் கொண்டு ரூ. 10 கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

[1982 ஏப்ரல் 1

**திரு. ஏ. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளுக்கு இப்படி விலை நிர்ணயித்திருந்தாலும், ஓரே மாவட்டத்தில் உள்ள, கூட்டுறவு ஆலைகளிலும், தனியார் சர்க்கரை ஆலைகளிலும்வித்தியாசமான விலைகொடுக்கப்படுகிறது. அதாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் குறைவாக கொடுக்கப்படுகிறது. இதை மாற்றி ஓரே விலையாக—யூனிபார்ம் விலையாக—கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அரசு நிர்ணயித்திருக்கின்ற 175 ரூ. என்பது விவசாயப் பெருமக்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அது கூட்டுறவு சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள், கரும்புக்குக் கொடுக்கும் விலை காணாது என்று சொல்லுகின்ற நேரத்திலே, ரோடு அபிவிருத்தி என்ற திட்டத்தின்கீழ், செஸ் வசூலிக்கிறார்கள். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதுபோல கரும்பு விவசாயிகளுக்கு வசதிகள் செய்ய வேண்டியது அவிசியம்தானா. ஆகவே, ஏன் இந்த செஸ் வசூலிப்பதை நிறுத்தக் கூடாது, அப்படி நிறுத்தி அந்தத் தொகையையாவது இவர்களுக்குக் கொடுக்கலாமே, அதை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த 175 ரூபாய் என்பது ஒட்டு மொத்தமாக நிர்ணயித்து இருக்கிறோம். அது விவசாயப் பெருமக்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். ஆனால் சாலை வசதிகள் என்பது ஆலையக்காரர்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் பயனளிக்கக் கூடிய ஒன்றாகும். இரண்டு சாராரும் அதிலே ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு நிர்ணயித்து இருக்கின்ற விலை இன்றைய தினம் விவசாய விளைபொருள்கள் விற்கின்ற விலையிலே கட்டுப்படியாகாத நிலை இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு அதிகமாக விலை கொடுக்க முடியவில்லை என்றாலும், கரும்பைக் கொண்டுவரும் போக்குவரத்துச் செலவையாவது முழுமையாக அரசு ஏற்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இயலாது.



1982 ஏப்ரல் 1]

**திரு. எஸ. ஆண்டித்தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசு 130 ரூபாய் என்று இருந்ததை 175 ஆக சென்ற ஆண்டு கொடுத்துவிட்டு, இந்த ஆண்டு அதற்கு மேலும் உற்பத்தி செலவு ஆகின்ற நேரத்திலே மத்திய அரசு 130 ரூபாய் என்று இருந்தாலும் மாநில அரசு 165 என்று கொடுத்து 10 ரூபாய் வரியிலிருந்து கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு கொடுத்த 175-ஐ அதோடு இந்த 10 ரூபாய் வரியைச் சேர்த்தாவது 185 ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதோடு, ஆலைகளுக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகள் பணம் பெறுவதற்கு 1 மாதம் முதல், 2 மாதம் வரை, அதாவது 11 மாதம் கஷ்டப்பட்டு, உற்பத்தி பண்ணி கரும்பை ஆலைகளுக்கு அனுப்பிய பிறகு 2 மாதம் ஆகிறது பணம் கொடுப்பதற்கு. எனவே, இதை தவிர்த்து உடனடியாக பணம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே விரைவாக அதைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால்; இதற்கு மேல் அதிகமாகக் கொடுக்க வழியில்லை.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகம் 10 ரூபாய் கொடுப்பதற்கு அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆனால் நேரடியாக முதலாளிகளைக் கொடுக்கச் சொல்லி, அவர்கள் எர்ன் பண்ண அவர்கள் அந்தப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் 10 ரூபாய் கொடுத்து, சேல்ஸ் டாக்ஸ்லே டிடக்ட் பண்ணி, அப்படி ரீ-இம்பர்ஸ்மென்ட் வாங்கலாம் என்று அரசாங்கம் சொல்லி இருப்பதாலே இந்தத் தொந்திரவு நமக்கு வேண்டாம் என்று சொல்லித்தான் அந்த 10 ரூபாய் இன்னும் இந்த ஆலை முதலாளிகள் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கேள்வி, இப்படி ரீ-இம்பர்ஸ்மென்ட் என்று சர்க்கார் கொடுப்பதற்கு பதிலாக முதலாளிகளே அந்த 10 ரூபாய் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அப்படித்தான் ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், முதலாளிகளைப் பொறுத்தவரையில், இல்லை, நாங்கள் அதை முதலில் குறைத்துக்கொண்டேதான் கொடுப்போம், கொள் முதல்வரியிலிருந்து. அதற்கு பிறகு எஞ்சி இருக்கிற அந்தத் தொகையைத் தான் அரசுக்குப் கொடுப்போம் என்று வகையிலே சில ஆலைகள் தெரிவித்திருக்கின்றன. எப்படியிருந்தாலும், 175 ரூபாய் என்று விவசாயிகளுக்கு நிச்சயமாகக் கொடுக்கும், அதற்கு அரசு நிச்சயமாக வேண்டிய வழிவகைகளைச் செய்யும்.

[1982 ஏப்ரல் 1

## கொடைக்கானல் நகரியத்தால் வசூலிக்கப்படும் புதிய வரி.

*வினா எண் 705— திரு. கா. கோபாலகிருஷ்ணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் நகரியத்தால் புதிதாக ஒரு வரி விதிக்கப்பட்டு நகருக்குள் நுழைபவர்களிடம் வசூலிக்கப்படுகிறதா ?

(ஆ) அதன் காரணம் என்ன ?

(இ) இந்த புதுவரி விதிப்பு இல்லாமல் நகரியத்தின் மொத்த வருமானம் என்ன ? செலவு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) சுற்றுலாப் பயணிகளிடம் வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) நகரியப் பகுதியில் உள்ள சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களை அழகுபடுத்த நகரியத்தின் நிதி நிலைமை பற்றாக்குறையாக இருப்பதால் மேற்படி கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(இ) 1980-81 ஆம் ஆண்டின் நிதி நிலைப்படி வருமானம் ரூ. 15,85,983, செலவு ரூ. 16,35,315.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகுத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மலை வாசஸ்தலம் என்று கருதப்படுகின்ற இந்தக் கொடைக்கானலிலே இப்போது வாகனங்களுக்கு வசூலிப்பது போல் வேறு எங்காவது இதுமாதிரி வாசஸ்தலத்தில் வசூலிக்கிறார்களா ? இப்படி வாகனங்களுக்கு வசூலிப்பதிலே அரசாங்கத்திற்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இங்கே கொடைக்கானலைத் தவிர, வேறு நகரியங்களிலே, மலை வாசஸ்தலத்திலே வசூலிக்கப்படுவது இல்லை. ஆனால் மலைப்பாங்கான நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் ஊராட்சிகளில் இதுபோன்று சுங்கவரி போல் டாக்ஸ் வசூலிப்பதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது கொடைக்கானலில் வசூலிக்கப்படுகின்ற காரணத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 1,20,000 ரூபாய் கிடைக்கிறது.





**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய வாசஸ்தலங்களிலே வசூலிக்காத நிலையிலே, கொடைக்கானலில் மட்டும் வசூலிப்பது பாரபட்சம் கொடுக்கும் என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் இதை ரத்து செய்துவிட்டு நிதிப் பற்றாக்குறையாக இருக்குமானால் வேறு இனங்களில் வரியை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் நல்ல யோசனைகளைச் சொல்லவேண்டும். ஏன் என்று சொன்னால், வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிகளை நாம் ஆராய்ந்து வருகிறோம். இருக்கக்கூடிய வருமானத்திலே, ஒவ்வொரு நகராட்சியாக இருந்தாலும், நகரியங்களாக இருந்தாலும், சொத்துவரி தான், அங்கே வசூலிக்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏற்கனவே தலைக்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, வருமானத்தை பெருக்கவேண்டுமென்று சொன்னால், அதுபோன்ற நிலைகளில் தான் ஏழை எளிய மக்கள் பாதிக்காத வகையில் இப்படி வாகனங்களுக்கு நாம் வரி விதித்துத்தான் செய்யமுடியுமே தவிர, வேறு வழியில்லை, எனக்குத் தெரிந்தவரையில். மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனைகளை அரசுக்குத் தெரிவித்தால் அதையும் ஆராய்வோம்.

(முற்பகல் 9—30)

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :** தலைவரவர்களே, கொடைக்கானலிலே இருக்கக்கூடிய லாரிகள், டாக்சிகள் அடிக்கடி கீழே 5 மைலோ அல்லது 10 மைலோ போய் திரும்பி வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அவைகளுக்கு இந்தக் கட்டணம் வசூல் செய்வதை அரசாங்கம் தவிர்க்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, உள்ளூர் டாக்சியாக இருந்தாலும், வெளியூர் டாக்சியாக இருந்தாலும் ஜீப்பாக இருந்தாலும் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய்தான் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது அதிகம் இல்லை என்று தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் தொண்டமான் அவர்கள் கொடைக்கானலிலே இருக்ககூடியவர்கள். அவர்களும் அந்த நகரிய பொறுப்பிலே இருந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரியத்திற்கு என்ன வருமானம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும்கூட நிதிநிலையை அதிகரிக்க நல்ல ஆலோசனைகளைச் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

[1982 ஏப்ரல் 1

## தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் சங்கத்திடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனு.

*வினா எண். 706— திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் சங்கத்திடம் இருந்து 22–2–1981 தேதியிட்ட கோரிக்கை மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன !

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ) ஒன்பது கோரிக்கைகள் அடங்கிய 27–2–1981 தேதியிட்ட மனு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் தலைமை சங்கத்திடமிருந்து வரப்பெற்று அவைகளில் 3 கோரிக்கைகள் மீது இறுதியான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, அவர்களுடைய முக்கியமான கோரிக்கை, டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் செக்ஷன், பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸ் ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் இருக்கிற மேல்நிலை அலுவலர்களும் ஆசிரியர்களும் சர்க்கார் ஊழியர்களாக மாற்றப்பட்டு இருப்பதாகவும் இந்த அடித்தட்டில் இருக்கிற ஊழியர்கள் இன்னும் மாற்றப்படவில்லை என்றும் அதனால் 'டபிள் டைப் ஆஃப் சர்வீஸ்' வருகிறது என்றும் அவர்களுக்கு பிரமோஷன் அவன்யூஸ் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்யுமா? மூன்று கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். அவை என்னென்ன கோரிக்கைகள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக மாற்ற வேண்டுமென்றால் அது ஒரு கொள்கைப் பற்றிய முடிவாகும். ஆகவே, அதை அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இப்போது இருக்கிற துறை முடிவு செய்ய முடியாது. ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மற்றுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று கோரிக்கைகளில் ஒன்று—அடிப்படை பணியிலே இருக்கிற முழுநேர ஊழி



1982 ஏப்ரல் 1]

யர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்களுக்குப் பேசிக்பே 200 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்பது. அடுத்த கோரிக்கை ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் மகப்பேறு ஆயாக்களுக்குப் பயணப்படிவழங்குவது பற்றி. இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் தகுதியுள்ள ஊழியர்களின் நிர்ணயம் செய்த பயணப்படி அடுத்த ரூபாய் 5-க்கு முழுமையாக்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அடுத்த் கோரிக்கை ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் மகப்பேறு ஆயாக்களுக்கு சலவைப்படி (வாஷிங் அலவன்ஸ்) கொடுப்பது. 20–2–1981 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 265-ல் சலவைப்படி அடிப்படை ஊழியர்களுக்கு மாதம் 5 ரூபாய் ஆகவும், ஜீப் ஓட்டுநர்களுக்கு ரூபாய் 10 ஆகவும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மகப்பேறு ஆயாக்களுக்கு சலவைப்படி வழங்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, மகப்பேறு மனையில் இரண்டு ஆயாக்கள் செயல்படுவதிலே ஒரு ஆயாவுக்குத்தான் அந்த அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது ஆயாவும் அவர்கள் கூட போக வேண்டும். அந்த அம்மாவுக்கு என்ன டார்கெட் இருக்கிறதோ அதே டார்கெட் இந்த அம்மாவுக்கும் இருக்கிறது. ஆனால் எஃப்.டி.ஏ. கொடுக்கப்படவில்லை. அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ? பரிசீலனையில் இருக்கிறது என்றால் எவ்வளவு சீக்கிரமாக பரிசீலனையை முடித்து, அவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே எஃப்.டி.ஏ பற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை.. ஆனாலும் கூட அதுவும் பரிசீலிக்கப்படும். ஒரு ஆயாவுக்கு இப்படி பணம் கொடுக்கப்பட்டு, இன்னொரு ஆயாவுக்கு கொடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

**திரு இரா. கருப்பையா :** தலைவரவர்களே, இந்த ஊராட்சி, ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் இரவு பகல் 24 மணி நேரமுட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருந்து பணிபுரிய வேண்டிய ஊழியர்கள். அவர்களுடைய பணிநிலையை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு மற்ற விஸ்தரிப்பு அதிகாரிகள், ஒப்பிடுத்து ஆணையாளர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதைப், ஏற்பட இவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்று நெய்வேலி விரும்புகிறேன். புகையா த

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒன்பது அம்ச கோரிக்கையில் அதுவும் ஒன்று. ஆகவே, அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களைப் போலவே ஊராட்சி மன்றங்களிலும், பேரூராட்சிகளிலும் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் பலயிடங்களில் 100 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி குறைந்தபட்சம் 200 ரூபாயாவது கிடைக்கச் செய்கின்ற நிலைமையும் இந்தத் திட்டத்தோடு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களெல்லாம் பார்ட் டைம் ஒர்க்கர்களாக இருப்பவர்கள். பகுதி நேர ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால்தான் அப்படிப்பட்ட நிலையை உருவாக்க முடியும். ஆகவே, அதைப்பற்றி அரசினுடைய பரிசீலனையிலே தற்போது இல்லை.

### தார் போடுவதற்குப் பதிலாக வேறு பொருள் போட நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்ட ஆராய்ச்சி

*வினா எண். 707— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெடுஞ்சாலைத்துறை ஆய்வு நிலையம் தார் போடுவதற்கு பதில் வேறு பொருள் போட ஆராய்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பழுப்பு நிலக்கரி தாரிலிருந்து சாலை பிணைப் பொருள் தயாரிப்பதற்கான சோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிணை பொருள் தயாரிக்கும் முன்னோடி இயந்திரம் நிறுவப்பட்டு வெள்ளோட்டம் விட உள்ளது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுதுள்ள தார் பற்றாக்குறையின் காரணமாகத் தமிழகத்திலே உள்ள பல்வேறு சாலைகளிலேயெல்லாம் பழுது பார்க்காமல் இருக்கின்ற சூழ்நிலை இந்த இலாகாவில் இருக்கிறது. இப்பொழுது புதிதாகத் தாருக்குப் பதிலாகக் கண்டுபிடிக்கப்படும் மாற்றுப்பொருள் எவ்வளவு காலத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டு நடைமுறைக்கு வரும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? இது நடைமுறைக்கு வந்தால் தாரை விட இதற்குச் செலவு குறைவாக ஏற்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இதுபோன்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை வந்தது. குறிப்பாக ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. Necessity is the Mother of invention என்று சொல்வார்கள். அதைப்போல தேவை ஏற்படுகின்ற நேரத்தில்தான் இதுபோன்ற நிலையை நாம் அனுஷ்டித்து உடனடியாக மறு ஆய்வு செய்து அதன் மூலம் புதிய பிணைப் பொருள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 2,40,000 ரூபாய் செலவில் ஒரு டன் உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பிணைப்பொருள் நிலையம் சீக்கிரத்திலே நிறுவப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நான் அறிய விரும்புவது தாருக்கும் இந்தப் பிணை பொருளுக்கும் பொருளாதாரத்திலே சிக்கனம் ஏற்படுகிறதா? இதனால் அரசுக்கு இலாபமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதற்குப் பதில் அளிக்க வேண்டும். இரண்டாவதாக, இப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் இந்தக் கேள்வி வந்திருக்கின்ற சமயத்தில் டெல்லிக்குச் சென்றிருந்தார்கள், தார்கேட்பதற்காக. அதிகமான தாரைப் பெற்று வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தப் பிணைப்பொருள் பாக்கியிருக்கக் கூடிய தாரைக் காட்டிலும் எக்கனாமிக்கலாக —பொருளாதார ரீதியிலே குறைந்த செலவினை உடையதாக இருக்கிறது. அதனால்தான் நாம இதை உடனடியாகக் கண்டுபிடித்திருக்கிறோம். கண்டுபிடித்து இனிமேல், இப்படி இருக்கின்ற இந்த ஆண்டிலே ஆலை ஏற்பட இருக்கிறது. 2,40,000 ரூபாய் செலவிடுகின்றோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து வீட்டு உபயோகத்திற்காக புகையாத

லீக்கோ என்று சொல்லக்கூடிய கரி தயாரிக்கும்பொழுது இந்தப் பிணைப்பொருள் நமக்குக் கிடைக்கிறது. இது பழுப்பு நிலக்கரி தார் என்று சொல்லி இது நமக்குக் கிடைக்கிறது. ஆனாலும் இதை நேரடியாகப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை. ஆகவே இந்தத் தாரை நேரடியாக—அதாவது பழுப்பு நிலக்கரி தாரை நேரடியாகக் காய்ச்சி வடிக்கும் முறை என்கின்ற முறையில் இதைத் தயார் செய்து கிடைக்கின்ற பிணைப் பொருளைப் பயன்படுத்தலாம் என்ற நிலையை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருக்கிறது. குறிப்பாக சமீபத்தில் நான் டெல்லிக்குச் சென்றது தார் கேட்பதற்காக இல்லை. தார் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. வந்து கொண்டிருக்கின்ற தாரை நிறுத்தாமல் பார்த்துக் கொள்ளத்தான் நான் சென்றேன். போன ஆண்டு தார் குறைவாகக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சுலபமாக நமக்குக் கிடைக்கிறது. அப்படிச் சுலபமாகக் கிடைக்கும் நிலையை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்பதற்காக 'கர்ட்டசி கால்' என்ற முறையிலே திரு. சிவசங்கர் அவர்களைச் சந்தித்து வந்திருக்கிறேன். கண்டிப்பாக இந்த ஆண்டு தார் பற்றாக்குறை ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பழுப்பு நிலக்கரி தாரின் பிணைப்பொருளைப் பயன்படுத்துவது பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். மலேயா போன்ற நாடுகளிலே இரப்பரைத் தாரில் கலந்து ரோடு போடுகிறார்கள். நமக்கு அந்த அளவிற்கு முடியாது என்றாலும் பால்கள்ளி, திருகுகள்ளி என்று சொல்வதிலிருந்து கிடைக்கும் பொருளைக் கொண்டு பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன். எனவே, வெட்டவெளியில், கட்டாந்தரையில் விளையும் இந்தத் திருகுகள்ளி, பால்கள்ளி ஆகியவைகளை இந்த அரசு பயன்படுத்திக் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, பால்கள்ளி அல்லது திருகுகள்ளி போன்ற ஆராய்ச்சிகள் இப்பொழுது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது—புதிய ஆராய்ச்சியைச் சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிருந்தாலும் அதையும் பரிசீலிக்கலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, தார் பற்றாக்குறை இருப்பதால் மற்ற சில மாநிலங்களில் செய்வதைப்போல நம் மாலநிலத்தில் இரப்பர் அதிகமாகக் கிடைப்பதன் காரணமாக, தாருக்குப் பதிலாக ரோடு போடுவதற்கு இரப்பரைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





(முற்பகல் 9–40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தார் போட முடியாத சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, ரப்பர் போடவேண்டும் என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வேண்டுமானால் போடலாமே தவிர, பாக்கியிருக்கும் மாவட்டங்களில் போடுவதற்கு ரப்பர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாரை விட ரப்பர் 10 மடங்கு விலையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட போடுவதற்கு முடியாது.

### சென்னை நகரைச் சுற்றி புற வழிச் சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 708—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுற்றி Bye-pass சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45, 4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்கு புற வழிச்சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980–81 வீதங்களைத் தழுவி ரூ. 995 இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு, அது தற்பொழுது மத்திய அரசின் நிதிக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 1980–85 ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 240 இலட்சம் நில உரிமைக்காகவும் மண்வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைச் சுற்றி பை-பாஸ் சாலை அமைக்கும் திட்டம் மிகவும் அவசியமானது. அதேநேரத்தில் சென்னை நகரில் பூமிக்கடியில்—பாதாள ரயில் விடும் திட்டம் பற்றி மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரிடம் பேசப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி 'பை-பாஸ்' ரோடு பற்றியதாகும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, அண்மையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று மத்திய அமைச்சர் வீரேந்திர பாட்டீல் அவர்களைச் சந்தித்ததாக செய்தி வந்து இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் கிழக்குக் கடற்கரைச் சாலை பற்றி அவர்களிடத்தில் அமைச்சர் பேசினாரா என்பதையும், மத்திய அரசு அதை உடனடியாக எடுத்துக் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சட்டமன்றத்திலேயே அறிவித்து இருக்கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் முக்கியமான சாலை அந்தச் சாலையை மைய அரசு உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், மற்றும் உற்ற தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்கும் திட்டத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும்—புதிய நெடுஞ்சாலைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை—ஆகவே, முக்கியமான சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தவேண்டும் என்பதற்காகவும் கோரிக்கை வைத்தோம். அவர்கள் ஈஸ்ட் கோஸ் ரோடு—கிழக்குக் கடற்கரை ரோட்டிற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவதாக மாண்புமிகு வீரேந்திர பாட்டீல் அவர்கள் என்னிடத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். அதேபோல், கோயம்புத்தூர் புறவழிச் சாலைக்கும் இந்த ஆண்டு 50 லட்சம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டதற்கு, அவர்களும் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதேபோல் பாக்கியிருக்கும் நெடுஞ்சாலைகளையும் பற்றி அடுத்த ஆண்டில் பரிசீலிப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது சென்னை நகரைச் சுற்றி 'பை-பாஸ்' ரோடு அமைப்பதற்காக 9 கோடி ரூபாய் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இன்னும் பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கின்றது. எனவே அத்தகைய கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதற்காக இந்தப் பணத்தைச் செலவழித்து, எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை போட்டபிறகு, இப்படிப்பட்ட 'பை-பாஸ்' ரோடு அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா?



1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றிய பிரச்னை. இது மத்திய அரசின் திட்டத்தின் கீழ் செய்யப்படுகிறது. இணைப்புச் சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில், இந்த நிதியில் இருந்து கிராமங்களுக்குப் போட முடியாது. அதற்காக நாம் தன்னிறைவுத் திட்டம் வைத்து இருக்கிறோம். அதேபோல் ரூரல் ரோட் ஒர்க்ஸ் என்று தனியாக வைத்து இருக்கிறோம். அந்தப் பணிகள் மூலமாக இந்த இணைப்புச்சாலைகள் போடுவதைச் செய்யலாம்.

தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியாளர்கள்.

* வினா எண். 709—திருமதி டி. யசோதா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்கு சிவில் இன்ஜினியர்களை (Civil Engineer) நியமிக்காமல் மெக்கானிக்கல் இன்ஜினியர்களை (Mechanical Engineers) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) இதனால் வேலைகள் காலதாமதம் ஏற்படுகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தன்னிறைவுத் திட்டத்தில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர்களில் சுமார் 23.9 சதவிகிதமும் உதவிப்பொறியாளர்/இளநிலைப்பொறியாளர் தொகுதியில் சுமார் 3 சதவீதமும் மட்டுமே மெக்கானிக்கல் பொறியியல் தகுதி வாய்ந்தவர்கள். மற்றவர்கள் சிவில்பொறியாளர்கள்.

(ஆ) இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்கானிக்கல் என்ஜினியர்களாக இருப்பவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்க வருகின்ற நேரத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிடம் கட்டுவது, சாலை அமைப்பது, குளம் வெட்டுவது போன்ற ஆரம்ப கட்ட வேலைகளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பதால், அந்தப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று அறிகிறேன். அதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் காலதாமதம் என்றுமே இல்லை. அது மட்டும் அல்லாது சிவில் என்ஜினீயர்களும், மெக்கானிக்கல் என்ஜினீயர்களும் நாம் போட்டிருக்கக் கூடிய எண்ணிக்கை தொகையினை ஏற்கனவே சொன்னேன். ஏறக்குறைய 163 உதவிக் கோட்ட பொறியாளர்களில் 39 பேர் தான் மெக்கானிக்கல் என்ஜினீயர்கள். அதே போல இளநிலை பொறியாளர்களில் 324 பேர்களில் 10 பேர்தான் மெக்கானிக்கல் என்ஜினீயர்கள். ஆகவே இவர்கள் மூலம் கண்டிப்பாக தன்னிறைவுத் திட்டம் தடைபடாது. ஏற்கெனவே நாம் காலக் குறியீடு செய்து 31—3—1982-க்குள் வேலைகள் எல்லாம் முடிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஏறத்தாழ 95 சதவீதம் வேலைகள் முடிந்துவிட்டன. இன்னும் இருக்கும் சில இடங்களில் அவற்றை ஒரு மாத காலத்திற்குள் முடித்து தருவதாக தெரிவித்திருக்கிறார்கள். கண்டிப்பாக காலதாமதம் ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்கானிக்கல் என்ஜினீயரிங்கை படித்து வருகிறவர்கள், சிவில் என்ஜினீயரிங் துறையிலே ஏதாவது ஒரு பாடத்தை படித்துவிட்டு, பிறகு இதில் பொறுப்பேற்றிருக்கிறார்களா? ஏனெனில் தற்போது படித்து வருகின்றவர்களுக்கு சிவில் எஞ்சினியரிங்கில் உள்ள அந்த சப்ஜெக்ட், இதிலே இல்லை—என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் அப்படி இல்லை. ஏனென்று சொன்னால் சிவில் என்ஜினீயரிங்காக இருந்தாலும், மெக்கானிக்கல் என்ஜினீயரிங்காக இருந்தாலும், பொதுவாக அடிப்படையில் அதிகமாக மாற்றங்கள் இல்லை. ஆகவே சிவில் என்ஜினீயர்களாக இருக்கிறவர்களுக்கு மெக்கானிக்கலும் ஓரளவிற்குத் தெரியும். இப்போது கூட அக்ரிகல்சுரல் என்ஜினீயரிங் சர்வீசில் இருக்கிறார்களே, பி. எஸ். சி. (அக்ரி.) என்று அவர்களுக்கு கூட ரோடு போடத் தெரியும். அதற்குரிய பாடங்களை அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே நான் விவசாயத்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் பி. எஸ். சி. (அக்ரி.) படித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இது பற்றிய கொள்கை விளக்கங்கள் பாடமாக கொடுக்கப்பட்டிருப்பதை நான் அறிவேன். அதிலே அதிகமாக வித்தியாசம் இல்லை. இந்த ரோடு போடுவதைப் பொருத்த வரையில் இரண்டு பிரிவுகளுக்கும் பாடங்களில் அதிகமாக வித்தியாசம் இல்லை. ஆகவே, இந்த நிலையில் எந்தவிதமான கால தாமதமும் ஏற்படாது.



**திரு. ரா. கு. பெருமாள் :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழாக சிவில் என்ஜினீயருக்குப் பதிலாக, மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்தவர்களைப் போட்டிருப்பது பற்றி கேள்வி. சிவில் என்ஜினீயரிங்கிலேயே, டிப்ளோமோ பொறியியல் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே. அவர்களைத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிவதற்கு அரசு பயன்படுத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, ஏற்கனவே பட்டப்படிப்பு படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் இடையில் அவர்களுக்குள்ளாகவே சர்ச்சை இருந்துக் கொண்டிருக்கிறது. யார் முக்கியமானவர்கள் யாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதிலேயிருந்து, கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்பணித் துறையும் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தக் கொள்கையில் முடிவு எடுத்தபின் இதில் அறிவிக்கலாம்.

**இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.**

* **வினா எண். 710—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் 1981, 1982 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**—(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே "இல்லை" என்று சொன்னார்கள். இன்று ஏப்ரல் முதல் தேதி என்ற காரணத்தால் இல்லை என்று சொல்கிறார்களோ என்று எண்ணுகிறேன் ........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் பதில் சொன்னால், அது எந்தத் தேதியில் சொன்னாலும் ஒரே பதில் தான். ஏப்ரல் முதல் தேதிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு இ. கணேசன் : தலைவர் அவர்களே, தனி மருத்துவ மனை இல்லை என்றாலும்கூட, இடைப்பாடி நகரிலே ஏற்கெனவே உள்ள பொது மருத்துவமனையிலே ஒரு தனிப் பல்பிரிவு ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. முதலிலே பெரிய மருத்துவ மனைகளில் எல்லாம் இந்த டென்டல் கிளினிக் பிரிவை ஆரம்பித்த பிறகு, இந்த மருத்துவமனையைப் பற்றி சிந்திக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலில் எல்லாம் இந்தப் பிரிவு இருக்கிறது. அதே மாதிரியாக தாலுக்கா மருத்துவமனைகளில் இல்லை. இப்போது மொத்தம் 93 இடங்களில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. மீதம் இருக்கும் மருத்துவமனைகளிலும் இந்தப் பிரிவை ஏற்படுத்தி விட்டு பிறகு இதற்கு வரலாம். தற்போது இதைப்பற்றி சிந்திப்பதற்கு இல்லை.

## கோவில்பட்டி நகரசபையில் கூடுதல் துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்கும் திட்டம்

*வினா எண். 711—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி நகரசபையில் மக்கள் தொகை உயர்ந்துள்ளதை முன்னிட்டு கூடுதல் துப்புறவுத் தொழிலாளர்களை நியமிக்க அரசுக்கு அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.



திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்பட்டி நகராட்சியிலே சமீப காலத்திலே மக்கள் ஜனத் தொகை இரண்டு மடங்காகி இருப்பதால், அதிகமான அளவில் குடியிருப்புகளும் பெருகி வருகின்றன. கடந்த பல ஆண்டு காலமாக இருந்து வந்த அதே துப்புரவுத் தொழிலாளர்கள்தான் தற்போதும் இருப்பதால், அந்தத் துப்புரவுப்பணிகளை அவர்களால் சரிவர செய்ய முடியவில்லை என்பதை அரசு கவனத்தில் கொண்டு, இந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் நியமனப் பணிகளில் காலதாமதம் செய்யாமல், அந்த விண்ணப்பத்தின்மீது, ஆய்வு செய்வதில் நேரத்தை அதிகமாக நீட்டிக்காமல், உடனடியாக அங்கே தேவையான துப்புரவுத் தொழிலாளர்களை ஏற்படுத்த வேண்டிய உத்தரவுகளை அரசு போட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரசபையில் ஒரு தீர்மானம் போடப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே கூடுதலாக 10 ஸ்வீப்பர்ஸ், 5 ஸ்கேவஞ்சர்ஸ், 10 டிரெய்ன் க்ளீனர்ஸ் இப்படி பல பணியாளர்களைப் பொறுத்த வரையில் மொத்தம் 39 பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் மற்றும் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அன்ட் பிரிவின்டிவ் மெடிசின் ஆகிய இருவரும் சேர்ந்து அதைப் பற்றி பரிசீலனை செய்து 39 இடங்களுக்குப் பதிலாக 34 இடங்கள் கொடுக்கலாம் என்று சொல்லி ஸ்வீப்பர்ஸ் எண்ணிக்கையையும், டிரெய்ன்,க்ளீனர்ஸ் எண்ணிக்கையையும் குறைக்காமல் மற்ற இடங்களைக் குறைத்து அதாவது 34 இடங்கள் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரை இப்போது அரசின் ஆய்வில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சீக்கிரமாக அந்த வேலை வாய்ப்புக்களைக் கொடுத்து அந்த இடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதிலே காலதாமதம் ஏன் ஆக வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போதுதான் அதாவது 24—8—1981 அன்றுதான் அனுப்பினார்கள். அதற்குப் பிறகு இரண்டு டிப்பார்ட்மெண்ட் சேர்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே ஆய்வில் உள்ளது என்று சொல்லி இருக்கிறேன். இந்தப் பதிலே கொஞ்சம் மன நிறைவு தரக் கூடிய பதிலாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே பணி செய்த துப்புரவாளர்கள் நிதி நிலைமை இல்லாததன் காரணத்தால் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே 34 பேர்கள் கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கின்றபோது ஏற்கனவே பணி செய்து நீக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த இடத்திலே பணிபுரிந்த யாரையும் நீக்கியதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீக்கி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் அதுபற்றிப் பரிசீலனை செய்து அப்படி யாராவது நீக்கப்பட்டு இருக்கிறார்களா என்று பார்த்து அதுபற்றி எந்த ரூல்ஸ்படி எப்படிக் கொண்டு வரலாம் என்பதைப் பார்க்கிறேன்.

## உடல் நலப் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடங்கள்

*வினா எண். 712—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உடல்நலப் பணியாளர்களுக்கு (Health worker) பயிற்சி கொடுக்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அவைகளில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேர்கள் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது பதவியில் உள்ள உடல் நலப் பணியாளர்களை பலநோக்குத் திட்ட பணியாளர்களாக அமர்த்துவதற்காக விசேஷ பயிற்சி 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—1980 முடிய மொத்தம் 3,633 உடல் நலப் பணியாளர்கள் (ஆண், பெண்) பயிற்சி பெற்று இருக்கிறார்கள். மேலும் 9 தலைமை மாவட்ட மருத்துவமனைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 780 பேர்கள் (பெண்கள்) பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடல் பயிற்சி கொடுப்பது 40 இடங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்



3,633 பேர் பயிற்சி பெற்றிருப்பதாகவும், 9 தலைமையிடங்களில்பயிற்சி கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் சொன்னார். இது எங்கெங்கு உள்ளது? இந்தப் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, 40 இடங்களில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. அது நீண்ட பட்டியல். இருந்தாலும் 9 மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை மட்டும் சொல்கிறேன். திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், வேலூர், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், காஞ்சிபுரம், நாகர்கோயில் ஆகிய 9 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அடுத்து அவர்களின் வேலைக்கு உத்தரவாதம் பற்றிக் கேட்டார்கள். இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு இவர்கள் இல்லை. ஆகவே அத்தனை பேருக்கும் வேலை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை.

*வினா எண். 713.—டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் எவ்வளவு ?

(ஆ) அவைகளை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழு நோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 320 ஆகும்.

(ஆ) இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளாக தமிழகத்திலே தொழுநோய் அதிகம் பரவியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. பரிசோதித்துப் பார்த்ததிலும், சிகிச்சை அளித்ததிலும் அதிலே நல்ல முன்னேற்றத்தை அரசு கண்டுள்ளது. பல மருந்துகளை

ஒரே தடவையாகக் கொடுக்கும் முறையில், அந்தப் புதிய முறையைக் கடைப்பிடிக்கும் முறை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாக இந்தத் தொழுநோயைப் பொறுத்தவரையில், 'பிரிவலென்ஸ் ஆப் லெப்ரசி' என்ற அடிப்படையில் 1975-76-ஆம் ஆண்டில் 1,000-க்கு 20 பேர்கள் என்றிருந்தது. இப்போது அது 14.3 ஆக, சென்ற 5, 6 ஆண்டுகளில் மிக நல்ல வகையில் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே முன்னேற்றம் கண்டிருக்கிறோம், அதோடு, இதற்காகப் பல மருந்துகளைக் கொடுக்கும் முறை இருக்கிறதா என்று கேட்டார்கள். இப்போது நாம் தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலே மட்டும், 'மல்டி டிரக்ஸ்' அதாவது 3, 4 மருந்துகளைச் சேர்த்து Rifamycin Lamprene D.D.S. once a month 3 a week Daily என்ற அடிப்படையில் ஒரு நபருக்கு ஆண்டுக்கு ரூ. 427 செலவிலே நாம் செய்து கொண்டு வருகின்றோம். இந்த முறையிலே நல்ல வகையிலே இன்னும் தீவிர முன்னேற்றம் காண முடியும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி நிலை அறிக்கையில், சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களுக்குத் தொழுநோய் பரவாமல் தடுக்கின்ற அடிப்படையிலே, அவர்களைப் பரிசோதனை செய்யும் திட்டத்தின் அடிப்படையிலே, தொழுநோய் இருந்தால் கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும் வகையிலே, அனைத்து வட்ட தாலுகா மருத்துவமனைகளிலே, தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா எனறு அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தும் திட்டம் இல்லை. நான் ஏற்கனவே, தமிழ்நாட்டில் 320 தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல, இப்போது மாணவர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டமாக, அங்கே எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள், 10-ஆம் வகுப்பு உள்பட என்பதைக் கணக்கிட்டு, சராசரி ஒரு பெரிய மாவட்டத்தில் 5, 6 இலட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். அதிலே, ஏறத்தாழ 80 சதவிகிதமாவது நாம் உடனடியாக இந்த ஆண்டுக்குள் பரிசோதனை செய்து பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே தீவிரமான



1982 ஏப்ரல் 1] (முற்பகல் 9–40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தார் போட முடியாத சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, ரப்பர் போடவேண்டும் என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வேண்டுமானால் போடலாமே தவிர, பாக்கியிருக்கும் மாவட்டங்களில் போடுவதற்கு ரப்பர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாரை விட ரப்பர் 10 மடங்கு விலையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட போடுவதற்கு முடியாது.

## சென்னை நகரைச் சுற்றி புற வழிச் சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 708—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுற்றி Bye-pass சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45, 4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்கு புற வழிச்சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980–81 வீதங்களைத் தழுவி ரூ. 995 இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு, அது தற்பொழுது மத்திய அரசின் நிதிக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 1980–85 ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 240 இலட்சம் நில உரிமைக்காகவும் மண்வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைச் சுற்றி பை-பாஸ் சாலை அமைக்கும் திட்டம் மிகவும் அவசியமானது. அதேநேரத்தில் சென்னை நகரில் பூமிக்கடியில்—பாதாள ரயில் விடும் திட்டம் பற்றி மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரிடம் பேசப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக 1975ஆம் ஆண்டில் தமிழகத்திலே எத்தனை தொழுநோயாளிகள் என்று பார்த்தால் டோட்டல் பிரிவெலன்ஸ், சில மாவட்டங்களிலே 23, 24, என்றும், சில மாவட்டங்களிலே 27,28 என்றும், சில மாவட்டங்களிலே 16, 18 என்றும் ஆயிரத்திற்கு இருக்கிறது. தமிழகம் பூராவும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 1975 ஆம் ஆண்டு 20.3 ஆக இருந்தது. இப்போது 14.3 ஆக— ஹோல் ஸ்டேட், ஸ்டேட் வைடாகப் பார்த்தால்- குறைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் தர்மபுரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 20 ஆக இருந்தது இப்போது 10 ஆக இருக்கிறது. டோட்டலாக கணக்குப்போட்டு பார்க்கிற நேரத்திலே எத்தனை நோயாளிகள் என்று எல்லாம் மானியக் கோரிக்கை விவாதம் வந்தபோது நான் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறேன்.

## தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கை.

*வினா எண் 714.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை ?

(ஆ) தனியார் வசம் உள்ள வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1,198 வழித்தடங்கள்.

(ஆ) 3,771 வழித்தடங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசு தேசியமாக்கிய பிறகு எத்தனை வழித்தடங்களில் எத்தனை மைல்கள் அரசு பேருந்துகளை விட்டிருக்கிறது ? தேசியமயமாக்குவதிலே இந்த அரசின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எத்தனை மைல்கள் என்ற கணக்கு இல்லை. அரசாங்கத்தினுடைய அடுத்த நிலை என்ன என்று கேட்டார்கள். தேசியமயமாக்கவேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை. படிப்படியாக அதைச் செய்துகொண்டிருக்கிறோம். இதிலே முதல் நிலை, இரண்டாவது நிலை என்று இல்லை. படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம்.



## சென்னையில் Point to Point பேருந்துகள் விடும் திட்டம்

*வினா எண். 715.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் Point to Point பஸ்களை விட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ): இம் மாதிரியான பேருந்துகளை சென்ட்ரல்—புரசைவாக்கம் மற்றும் சென்ட்ரல்—திருவல்லிக்கேணி ஆகிய தடங்களில் 5—1—1982 முதல் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) இயக்கி வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இப்போது ஒரு சில வழித்தடங்களில் பாயின்ட டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுவதாகச் சொல்கிறார்கள். பீக்ஹவர்ஸிலே அதிகப் பயணிகள் நெரிசல் இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு இடங்களில் இந்த பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா ? தற்போது இந்த பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுவதால் டாக்ஸி, ஆட்டோ கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கின்ற பயணிகள் பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸைப் பயன்படுத்துவார்கள். ஆகவே பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா? இங்கே தலைமைச் செயலகத்திலே ஆயிரக்கணக்கான அலுவலர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் திருவல்லிக்கேணிக்கும், மயிலாப்பூருக்கும், கோடம்பாக்கத்திற்கும், தி. நகருக்கும், சைதாப்பேட்டைக்கும் போய்வரக் கூடிய முறையிலே பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1974 ஆம் ஆண்டே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அது சரியாகச் செல்வாக்குப் பெறவில்லை என்ற காரணத்தினால் அந்த ஆண்டு திரும்பப் பெறப்பட்டுவிட்டது. அதற்குப் பின்னாலே ஒரு முறை கொண்டுவரப்பட்டு மீண்டும் திரும்பப் பெற்றுவிட்டார்கள். அதற்குப் பிறகு இப்போது ஒரு சில வழித்தடங்களில் விடப்படுகின்றன. அவை எவ்வாறு ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது பற்றி ஆராயப்படுகிறது. இரண்டு, மூன்று தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு வழித் தடத்தில் வெற்றிபெற்றதாகச் சொல்லப்படுகிறது, மற்றவற்றைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முழுமையாக அமுலாக்கப்பட்ட பின் குடிசைவாசிகளிடம் அந்தந்த இடத்திலே பணியாற்றும் லைன்மேன்கள் மூலம் மின் கட்டணம் வசூலிக்கலாமா என்பதுபற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில், கிராம மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 2.50 என்ற அளவுக்கு மின்சாரம் வினியோகிக்கப்படுகிறது. ஆனால், அந்த பில் கட்டணத்தை கிராமங்களிலே குடிசைகளிலே வசிக்கக்கூடியவர்கள், வெளியே சென்று கட்டுவதற்கு அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, லைன்மேன்கள் ஸ்டாப் மூலமாகவே நேரடியாக, அந்த இடங்களுக்குச் சென்று மின் கட்டணத்தை வசூலிக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. அரசு பரிசீலிக்கும்.

## மின் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் தனிப்பிரிவுகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 700—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் திட்டத்தில் உற்பத்திக்கும், வினியோகத்திற்கும் இரு தனிப்பிரிவுகள் அமைப்பது பற்றி தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மின் நிர்வாகத்திறனை சீர்படுத்தும் நோக்கத்தில் மின் உற்பத்தி செய்வதை தற்போது உள்ளதுபோல தமிழ்நாடு மின் வாரியத்திடமும், மின் வினியோகம் மற்றும் மின்சக்தி செலுத்துதல் ஆகிய பணிகளை மண்டலங்கள் வாரியாக கம்பெனிகளை அமைத்து, அக் கம்பெனிகளின் பொறுப்பில் விட்டு விடலாம் என்றதொரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பொருள்மீது அட்வகேட் ஜெனரலின் சட்ட ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பட்ட பின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.





திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பஸ் விட ஆய்வுகள் செய்யப்படுகின்றன என்று கூறினார்கள். அந்த ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டனவா? அந்தப் பணி எப்பொழுது முடிக்கப்படும்? அந்தப் பகுதியில் அந்தப் போக்கு வரத்து பஸ் வசதி எப்பொழுது செய்து தரப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஆய்விலே இருப்பதாகச் சொன்னேன். விரைவாக முடித்து விடுவார்கள் என நம்புகிறேன். அந்த ஆய்வுப் பணி முடிந்த பின்பு தேவை என்றால் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராம்பட்டு, நாரையூர், ஆலாநந்தல், அந்தம் பள்ளி போன்ற பகுதிகள் எல்லாம் தென் ஆற்காடு மாவட்டத்தை ஒட்டி இருப்பதால் திருவண்ணாமலைக்கும் மதுராம் பட்டுக்கும் கிட்டத்தட்ட 25 மைல் தூரம் இருப்பதால், தனியார் போக்குவரத்து வசதியும் கிடையாது, அரசாங்க பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது என்ற நிலையில், தனியார் பஸ்களையோ, அரசாங்க பஸ்களையோ உடனடியாக விடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேருந்து வசதி கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். எனவே, அந்த அடிப்படையிலே அங்கே பேருந்துகள் இல்லாமல் இருக்குமானால் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் துரிதமாக எடுக்கும்.

## காது கேளாதவர் அனைவருக்கும் காது கேட்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம்.

*வினா எண். 717— திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காதுகேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழ் நாட்டில் காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்குவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதற்கான விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் கேட்கப் பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எத்தனை பேர்களுக்கு, காது கேட்காதவர்களுக்குக் கருவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? அதனால், அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975—81 வரை 2,825 காது கேட்கும் கருவிகள் பள்ளி செல்லும் காது கேளாத சிறுவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. இந்தக் காது கேட்கும் கருவி ரூ. 350 என்று குறிப்பில் இருக்கிறது.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக காது கேளாதவர்களைக் கணக்கெடுப்பதாகச் சொன்னார்கள். காது கேட்காதவர்களிடம் கணக்கு எடுக்கும்போது இவர்கள் பேசுவதைச் சரியாகப் புரிந்துகொள்ளாத நிலை இருப்பதால், ஊமைகளைக் கோர்ட்டிலே விசாரிக்கும்போது, ஊமைகள் பேசுவதைப் புரிந்துகொள்ளும் நிபுணர்களை அமர்த்துவதைப்போல், காது கேட்காதவர்களைக் கணக்கெடுக்க அந்த முறைகள் புகுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுதான் அரசாங்கத்தின் வாயிலாக மருத்துவர்களைப் போட்டு அவர்கள் மூலமாகப் பரிந்துரை செய்யப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காது கேட்காதவர்களுக்குக் கருவி வழங்குகின்ற தற்போதுள்ள முறை, காதிலே ஒரு கருவியைப் பொருத்திக் கொண்டால், நன்றாகக் கேட்கும் என்ற முறைதான் இப்பொழுது பின்பற்றப்பட்டு வருகிறது. அப்படிப் பார்க்கும் போது, யாரையாவது பார்த்தால், காது கேட்காதவர் கருவி பொருத்தி இருப்பார் என்று தெளிவாகத் தெரிகிறது. அப்படி அல்லாமல், மூக்குக் கண்ணாடியிலே இருக்கக்கூடிய பிரேமில்



அதைப் பொருத்தி, நெற்றியிலேயிருந்து, காது எலும்போடு தொடர்புபடுத்தினால் காது நன்றாகக் கேட்கும் என்ற முறை கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ? இனி வருகின்ற காலங்களிலே அதைக் கொஞ்சம் குறைந்த விலையிலே கொடுப்பதற்கு அரசு ஆராய்ச்சி செய்து கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காது கேளாதவர்களுக்குக் கருவி வழங்கக் கூடிய திட்டத்தை வறுமை நிலையிலே உள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கக் கூடிய திட்டத்தை அரசு அமுல் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.10]

## (2) தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் விடுதி பந்தோபஸ்து ஏற்பாடு

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே இப்பொழுது அதிகமாகக் களவு போய்க் கொண்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. இஸ்மாயில் அவர்களின் அறையை உடைத்துப் பொருட்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நேற்றிரவு எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. முத்து ராமலிங்கம் அவர்களுடைய மோதிரம் , வாச் ஆகியவை களவு போயிருக்கிறது. இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் நேற்று மாலை திரு. முத்துராமலிங்கத்தைப் பார்த்தேன், நான் அவருடன் இருந்தேன், அப்பொழுது அவர் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) பிறகுதான் போயிற்றா ? என்னென்ன போயிருக்கிறது என்று எழுதிக் கொடுக்கட்டும், நான் கவனிக்கச் சொல்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று காலை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு டெலிவிஷன் வழங்குவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு விலை குறைந்த டெலிவிஷனை வழங்குவதாகச் சொன்னதாகத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்றைக்கு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பிறந்துவிட்டது தெரிகிறது.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்

### நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் ரா. உமாநாத், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் மு. அம்பிகாபதி ஆகியோர் ''கடந்த இரண்டு மாத காலமாக நாகை ஸ்டீல் ரோலிங்மில் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவதி குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ரா. உமாநாத் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்** : மாண்புமிகு தலைவரவர்களே, நாகப்பட்டினத்திலே ஒரு முக்கியமான ஸ்டீல் ரோலிங் மில் இருப்பது தங்களுக்குத் தெரியும். பொதுவாக நாகை தாலுக்கா தொழிற்சாலைகள் இல்லாத ஒரு பிரதேசம், புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டிய இடத்திலே நீண்டகாலமாகச்





செயல்பட்டு வரும் ஒரேயொரு தொழிற்சாலை இந்த ஸ்டீல் ரோலிங் மில் என்ற நிலை தங்களுக்குத் தெரியும். அந்தத் தொழிற்சாலையிலே முன்பெல்லாம் பல டிஸ்ப்யூட்ஸ், ஸ்ட்ரைக்ஸ் எல்லாம் வரும். ஆனால் அப்படி டிஸ்ப்யூட்ஸோ, ஸ்ட்ரைக்கோ வந்தால் அப்பொழுதைக்கப்பொழுது லேபர் மெஷினரி மூலம் தீர்த்துக்கொள்வது என்ற முறை அப்பொழுது சாத்தியமாக இருந்தது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விஷயம் அந்த முறையிலே தீர்க்கப்பட முடியாத ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது. ஆகவே விவாதிப்பதற்கு இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் சிறு தொழில்களுக்கு அரசாங்கம் சில கன்செஷன்ஸ் கொடுக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைக்கு அந்த கன்செஷன்ஸ் இன்றைய தினம் உள்ள நிலைமையில் கிடைக்காது. ஏனென்றால் சிறு தொழிலினுடைய டெஃபனிஷனுக்கு உட்பட்டு ஸ்டீல் ரோலிங் மில் வராது. ஆகவே, அந்த முதலாளி சட்டவிரோதமாக எப்படியாவது அந்த கன்செஷன்ஸைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த ஸ்டீல் ரோலிங் மில்லை ஸ்ப்ளிட் பண்ணி, ஃப்ராக்ஷன் பண்ணி இந்த முறையிலே மாண்புமிகு அமைச்சருடைய இலாக்காவிலே கன்செஷனுக்குள்ளே நுழையலாமா, புறக்கடை வழியாக வரலாமா என்று அவர் முயற்சித்திருக்கிறார். அங்கே ஒரே காம்பவுண்டை இரண்டு மூன்றாகப் பிரித்துச் சட்ட விரோதமாக அந்த கன்செஷனை வாங்குவதற்கு முயற்சிக்கிறார். ஆரம்பத்திலே அது சிறு தொழிலாக இருந்தால் அந்த கன்செஷனுக்கு உரியவராவதற்குப் பிரச்சினை இல்லை. ஆனால், அதைப் பெறுவதற்காக என்றே, இருப்பதை ஸ்ப்ளிட் செய்வது அன்ஃபேர் அன்ட் இல்லீகல் ஆல்சோ. அதனுடைய விளைவாக பதினேழு பேர் ரெட்ரென்ச் செய்யப்பட்டு ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த இடம் தொழிலாளர்கள் வறுமையில் இருக்கும் இடங்கூட. மீனவர்கள் உள்ள பகுதி. இதை மாற்றுவதற்கு அனுமதித்தால் மற்றவர்களுக்கும் அபாயம் வரும்; அபாயமான நிலைமை இருக்கிறது.

அந்த பேக்டரியிலே பல சங்கங்கள் இருந்தாலும் கூட எல்லாச் சங்கங்களும் இம்மாதிரி பிரிக்கக்கூடாது என்பதிலே அவர்கள் ஒருமுகமாக இருக்கிறார்கள். இரண்டு மாதமாக அந்த பேக்டரி செயல்படவில்லை. அதனால் நகரத்தின் பொருளாதாரம் சீரியஸாகப் பாதிக்கப்படுகிறது. இதிலுள்ள விசேஷம் என்னவென்றால், அரசியலிலே அபிப்பிராய வித்தியாசங்கள் இருக்கும் சகல கட்சிகளும், ஏ.டி.எம்.கே., டி.எம்.கே., சி.பி.ஐ., சி.பி.ஐ.எம்., கா.கா.தே.கா., காமராஜ் காங்கிரஸ், முஸ்லீம் லீக் இப்படி எல்லாக் கட்சிகளும்—ஒரு கட்சி விடாமல்—இம்மாதிரி முதலாளி முயற்சிப்பது தவறு; பிரிக்கக்கூடாது; பழையமாதிரி ஸ்டேட்டஸ்கோ ரெஸ்டோர் செய்ய வேண்டும்

[திரு. ரா. உமாநாத்] [1982 ஏப்ரல் 1

என்றும், ஆட்குறைப்பு செய்யக் கூடாது என்றும் எல்லாக் கட்சிகளும் அந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறார்கள்; எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு முக்கியமான பிரச்சினையாக இருப்பதாலும், தொழிலாளர்களைப் பாதிக்கும் நிலைமை இருக்கிறது என்பதாலும், அந்த நகரத்தின் பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படும் நிலைமை இருக்கிறது என்பதாலும், எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கும் விஷயமாக இருப்பதாலும், இது அவசரமாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை உருக்கு உருட்டாலை பிரச்சினை சம்பந்தமாக தாங்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்ததற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகையில் இன்று ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நாகை உருக்கு உருட்டாலை-ஸ்டீல் ரோலிங் மில் பற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இந்த நகரத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, அந்த உருக்கு உருட்டாலை நிர்வாகம் ஆட்குறைப்பு செய்வதற்கு முயற்சிக்கிறது; சில இயந்திரங்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அந்த நிர்வாகம் முயற்சிக்கின்றது. அங்கே உள்ள தொழிலாளர்கள் கடந்த 2 மாதகாலமாகப் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த தொழிலாளர்களின் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற பதட்ட நிலையைப் போக்குவதற்கும், அந்த தொழிலாளர்களுக்கு ஆதாரமாகத்தான் அந்த நகரத்திலே சகல கட்சிகளும், எல்லாக் கட்சிகளும், அனைத்து மக்களும் ஒன்றுபட்டு, அந்த நாகை உருட்டாலை நிர்வாகத்தின் போக்கை எதிர்த்து மிகப் பெரிய போராட்டமே வெடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. நாகையிலே பதட்டமான நிலையும், தொழிலாளர்களின் மத்தியிலே கொந்தளிப்பான போக்கும் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, அந்த உருக்கு உருட்டாலை தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பான நிலையைப் போக்குவதற்கும், தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்கின்ற நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பதைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 ஏப்ரல் 1]

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—12—1981 அன்று நிர்வாகம் ஓயர் பிளாண்ட்-இல் வேலை செய்யும் 64 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யப்போவதாக அறிவித்தது. ஆணிகள், கம்பிகள் முதலியவை விற்பனை ஆகாமல் தேங்கி விட்டதாலும் அவற்றின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. இதன் பிறகு நிர்வாகம் ஆட்குறைப்பு செய்யப் போகும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 17 என்று அறிவித்தது. பின்னர், கம்பிகள், ஆணிகள் தயாராகும் தொழிற்கூடப் பிரிவை தொழிற்சாலைக்கு வேண்டிய வேறு இடத்திற்கு மாற்ற தொழிலாளர்கள் ஒப்புக் கொண்டால், இந்த 17 தொழிலாளர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக நிர்வாகம் தெரிவித்தது. மேலும் இத்தொழிலாளர்கள் பணி தொடர்ச்சியுடன் இந்நிர்வாகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாகக் கருதப்படுவர் என்றும் தெரிவித்தது. ஆனால், தொழிற் சங்கங்கள் இயக்கங்களை மாற்றுவதற்கான நிர்வாகத்தின் யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை.

தொழிலாளர்களின் ஆட்குறைப்பினை எதிர்த்து 1–2–1982 முதல் ஆலையில் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. இப்பிரச்சினையில் தஞ்சை தொழிலாளர் துணை அலுவலர், திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர், மற்றும் சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு நடைபெற்ற முதல் கட்ட பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை.

இதற்கிடையில் நிர்வாகத்தைச் சேர்ந்த 8 அங்குலம் மில்லை ஓட்டுவது சம்பந்தமாக ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் 10–2–1982 அன்று ரத்து செய்யப்பட்டு அதில் வேலை செய்த தொழிலாளர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற மறுப்பதாகவும் அதனால் அங்கு அமைதியின்மை ஏற்படலாம் என்று கூறி நிர்வாகம் இந்த 8 அங்குலம் ஆலையை 24–2–1982 முதல் கதவடைப்புச் செய்துள்ளது. சுமார் 26 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேற்கூறிய பிரச்சினை மீது திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார். அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே பலன் அளிக்கவில்லை என்றால் சென்னை மட்டத்திலே கூப்பிட்டுப் பேசுவதாக இருக்கிறோம். சமரசப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதால் அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி.

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1982.

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு, 1982.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் எதுவுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1982).

2. 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1982).

3. 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1982).

(ஆ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்குச் சில அறிவிப்புகள்.



1982 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1982–83 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. என். ஏ. பூங்காவனம்
2. திரு. எம். செல்லமுத்து.
3. திரு. எஸ். சிவராமன்.
4. திரு. ஆர். சுந்தரமூர்த்தி.
5. திரு. இ. முத்துராமலிங்கம்.
6. திரு. மு. சிவபெருமாள்.
7. திரு. ஆர். டி. கோபாலன்
8. திரு. த. வீராசாமி
9. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
10. திரு. இரா. தாமரைக்கனி
11. திரு. கோவைத்தம்பி
12. திரு. எம். ஆர். கோவேந்தன்
13. திரு. எஸ். பட்டாபிராமன்
14. திரு. எஸ். ஆண்டித்தேவர்
15. திரு. அ. செல்வராசன்
16. திரு. அ. ரகுமான்கான்

1982–83 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக்கணக்குக்குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 211-வது விதியின் கீழ் டாக்டர் கே. பி. ராமலிங்கம் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (இ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1982–83ஆம் ஆண்டுக்கான பொதுக்கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.—

1. திரு. இரா. கருப்பையா
2. திரு. என். சங்கரய்யா
3. திரு. உ. சுப்பிரமணியம்
4. திருமதி த. இராசாம்பாள்
5. திரு. ஏ.சி. சண்முகம்
6. திரு. செ. செம்மலை
7. திரு. ம. கண்ணன்
8. திரு. வி. பாலகிருஷ்ணன்
9. திரு. ஆ. வெள்ளைச்சாமி
10. திரு. எஸ். ஜகந்ரட்சகன்
11. திரு. வேடசத்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்
12. திரு. க. பாலசுப்பிரமணியன்
13. திரு.ப. தனபால்
14. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
15. திரு. செ. இராமலிங்கம்
16. திரு. பி. முகமது இஸ்மாயில்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1982–83ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர்களாகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.



பேரவையின் 223-வது விதியின் கீழ் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1982–83 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்குஅறிவிக்கிறேன்:

1. திரு. மு. அப்பாதுரை
2. திரு. ரா. கிருஷ்ணன்
3. திரு. ஆர். தியாகராஜன்
4. திரு. என். குலசேகரபாண்டியன்
5. திரு. பெ. திருமாறன்
6. திரு. கே.ஆர். கணபதி
7. திரு. ஆர். சக்ரபாணி
8. திரு. பி. துரைராஜ்
9. திரு. கே. ரங்கசாமி
10. திரு. கே. குப்புசாமி
11. திரு. வி. அரங்கராசன்
12. திரு. என். குப்புசாமி
13. திரு. இ. கணேசன்
14. திரு. பி. தீர்த்தராமன்
15. திரு. டி. ஆறுமுகம்
16. திரு. வி. எம். தேவராஜ்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1982–83 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினராவார்.

[பேரவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 1.

இப்பேரவையின் விதி 236-ன் கீழ் திரு. கே. குப்புசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

உ. உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

1982–83 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. சோ. அழகர்சாமி
2. திரு. கே. உச்சி
3. திரு. டி. இராமசாமி
4. திரு. நன்னிலம் அ. கலையரசன்
5. திரு. எஸ். அரங்கநாதன்
6. திரு. ஆர். சண்முகம்
7. திரு. எம்.எஸ். மாணிக்கம்
8. திரு. எஸ். சிவப்பிரகாசம்
9. திரு. ஆர். தவசி
10. திரு. பாபு ஜனார்த்தனன்
11. திரு. கு. பா. பழனியப்பன்
12. திரு. கே. கல்லன்
13. திருமதி டி. யசோதா
14. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்

முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1982–83 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.



1982 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

பேரவையின் 245 (4)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

ஊ. அவைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் 1982–83 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையின் அவைக் குழுவிற்கு (ஹவுஸ் கமிட்டி) சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1. திரு. ஏ.டி. கருப்பையா
2. திரு. மு. சுந்தரம்
3. திரு. மு.ப. முனுசாமி
4. திரு. சித. சிதம்பரம்
5. திரு. ஏ. சந்திரசேகரன்
6. திரு. தா. சாமிக்கண்ணு
7. திரு. மா. சுப்பிரமணியன்
8. திரு. க. இரா. சின்னராசு
9. திரு. இரா. திருமான்
10. திரு. சோ. கலிதீர்த்தான்
11. திரு. கே. எம்.எஸ். சுப்பிரமணியன்
12. திரு. ஏ. தங்கராசு
13. திரு. கே. பி. நாச்சிமுத்து

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1982–83-ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 288 (1)-வது விதிக்கிணங்க.

1. திரு. ரா. கு. பெருமாள்
2. திரு. எம். அண்ணாதாசன்

3. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்

4. திரு. ஏ. சாகுல் ஹமீது.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப்பெற்றதற்கான விளக்கம்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, இங்கே 4, 5 நாட்களுக்கு முன்னால் நடந்த விவாதத்தில் எதிர்தரப்பிலிருந்து எதிர்க்கட்சியில் இருந்து ஒரு முக்கியமான விஷயத்தைக் கிளப்பி இருந்தார்கள். அதைப் பத்திரிகையில் நான் பார்த்தேன். திரு. ஆர். என். மாணிக்கம், முன்னாள் ஐ.ஜி. அவர்கள் சி.எம்., (C.M.S.) பிரதர் பற்றி எல்லாம் குறிப்பிட்டதாக ஒரு செய்தி எழுப்பப்பட்டு அது பத்திரிகையிலே வந்ததை நான் பார்த்தேன். அது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத் தரப்பில் இருந்து அதைப்பற்றி தெளிவு ஒன்றும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி இரண்டில் ஒரு முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டியிருக்கிறது. அதற்கு விளக்கம் இல்லை என்றால், இங்கே அதுபற்றி ரெய்ஸ் ப ண்ணியிருக்கும்போது, அரசாங்கம் அதை உண்மை என்று கன்குளுட் பண்ண வேண்டும். இல்லை என்றால் அரசாங்கத்தின் தரப்பிலே ஏதாவது அதற்கு விளக்கமோ, மறுப்போ கொடுத்தால் நாங்கள் இரண்டையும் வைத்து சிந்தித்து, எங்களுடைய சொந்த முடிவுக்கு வர முடியும். அதைப்போல மக்களும் ஒரு சொந்த முடிவுக்கு வர வாய்ப்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிலை அதிலே என்ன என்பதுபற்றி ஒரு அறிக்கை வெளியிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிடுவதைப்போன்று இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொள்ளும்போது செய்தித்தாளிலே வந்த அந்தக் குறிப்பைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை தருவார்களானால் தெளிவு ஏற்படும்



என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதுபற்றி தெளிவான அறிக்கை ஒன்றை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பி ஒரு அறிக்கையை உருவாக்கி னார்கள். ஆனால் அந்த அறிக்கையை இங்கே வைக்க அவர்கள் இல்லை என்றாலும் அவர்கள் சார்பாக நான் அதை வெளியிட விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சார், How can this come as a point of order? There is on precedent for this.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அன்றைக்கு பேரவையில் கேட்கப்பெற்றதற்கான விளக்கதம்தான் இது.

***திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, எதிர்க்கட்சியில் இருக்கும் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அவர்களுக்குத் தோன்றிய ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனை குறித்து அரசாங்கம் ஒரு கருத்தை பதிலாகச் சொல்லக்கூடும். ஆனால் பதிலாகச் சொன்னாலும் அந்தப் பிரச்சனை குறித்து அரசாங்கம் சொல்கிற பதில் முடிவானதாக அமைவதற்கு இல்லை. எனவே அதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இங்கே ஒரு அறிக்கை வடிவத்தில் அந்தக் கருத்துக்கள் சொல்லப்படுமானால், அது கேள்விக்கு உரியது. அதற்கு விதிமுறைகளின்படி அறிக்கை வைக்கப்பட வேண்டும். அப்படி அறிக்கை வைக்கப் பட்டால், அதைப் பற்றி விவாதிக்க வாய்ப்பு இருக்கவேண்டும். ஏனென்றால் இந்தப் பிரச்னையில் ஒரு பக்க முடிவாக ஒரு கருத்து அவையின் முடிவாக ஆகிவிடக்கூடாது ஆகிவிட முடியாது, ஆகிவிட அனுமதிக்க முடியாது. எனவே, இப்படிப்பட்ட ஒரு விதியின் கீழ் முழு விளக்கம் கொடுத்து, ஒரு அறிக்கையாக வைக்கப்படுமானால், அப்படி வைக்கப்பட்ட அறிக்கை மீது விவாதிக்க வாய்ப்பு இருக்கவேண்டும். இல்லையென்றால் இன்றைக்கு அதை வைக்காமல், இன்னொரு நாள் வைக்கப்படும் என்று அறிவிப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பிரச்னையைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றி விளக்கம் தரவேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கு இருக்கிறது. அப்படி விளக்கம் தரவேண்டும் என்ற முறையில்தான் இப்போது நான் இந்த அவையில் விளக்கம் தர முற்படுகிறேன். அதை அறிக்கையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் விளக்கம் என்ற வகையிலாவது தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1982 ஏப்ரல் 1

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கள் அங்கே இராமமூர்த்தி கமிஷன் முன்னால் வைக்கப்பட்ட 'சப்-ஜெக்ட் மேட்டர், டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' பற்றி குற்றச்சாட்டு எழுப்பினார்கள். அதற்கு பதிலாக இங்கே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எல்லாவிதமான விளக்கங்களையும் கொடுத்து விட்டதால், அந்த இராமமூர்த்தி கமிஷனையே வைண்டப் செய்து விடலாம். அதற்காக பொதுமக்களின் பணம் விரயம் செய்வதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு). திரு. உமாநாத் கேட்டதற்கு முழுவதுமான அனுமதித் தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கும்தான் அனுமதித்து இருக்கிறேன். திரு. ராமமூர்த்தி கமிஷனை வைண்ட்ப் செய்கிற அதிகாரம் என்னிடத்தில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும், மாண்புமிகு முதலமைச்சரின் குடும்பத்தினர் மீதும் முன்னால் ஐ.ஜி. ஆர். என். மாணிக்கம் அவர்கள் கொடுத்து இருக்கும் பிரச்னை பற்றி, போலீஸ் இலாகா மானியத்தின் மீது பேசும்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சுந்தரராஜ் அவர்கள் விளக்கம் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு பதில் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் அன்றைக்கு அதற்கு பதில் சொல்லவில்லை. அன்று அதைத் தெரிவிக்காமல் இன்றைக்கு அறிக்கை வைக்கப்படும் என்று சொன்னால், அதைப் பற்றி கருத்து கூட சொல்ல இடம் இல்லாமல் இருப்பதால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னது போல், அதைப்பற்றி கேட்ட வுடனேயே, இதோ அறிக்கை அளிக்கிறேன் என்று சொல்வது வியப்பாக இருக்கிறது. இது ஏதோ சொல்லிவைத்துக் கேட் பதுபோலவும், அரசாங்கம் அறிக்கை அளிக்கிறேன் என்று சொல்வதும், அரசாங்கம் சாதாரணமாக இதைக் கொ டுப்பதாகத் தெரியவில்லை. மேலும், முதலமைச்சரைப் பற்றி சொல்லியிருப்பதால், இது பெரும்பாலும் தன்னிலை விளக்க என்ற முறையிலே அவரே, இந்தச் சபைக்கு வந்து சொல் வதாக இருந்தால், இன்னும் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 ஏப்ரல்]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அந்தப் பிரச்னை எழுப்பப்பட்ட காரணத்தால், விளக்கம் சொல்ல வேண்டிய நிலை, விளக்கம் சொல்லவேண்டிய அவசியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. திரு. ஆர்.என். மாணிக்கம் அவர்கள் கொடுத்த அறிக்கை பத்திரிகைகளில் வந்து இருப்பதால், இந்த அறிக்கையை பத்திரிகையிலே கூட கொடுத்து விடலாம். இந்த அவையில் அந்தப் பிரச்னை குறித்து எழுப்பப்பட்டு விட்டதால், வெளியே முதலில் இதைப் பற்றி அளிக்காமல், இங்கே முதலில் விளக்கம் தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இங்கே கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி விட்டால், வெளியே பத்திரிகையில் கொடுத்து விடலாம். அதிலே ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்தின் மீது 3 நாட்கள் பேசியிருக்கிறார்கள். இப்போது வைக்க இருக்கிற அறிக்கையையும் அதனுடைய 'கண்டினியூயேஷன்' போல மாண்புமிகு உறுப்பினர்கள் நினைத்துக் கொள்ளலாம். முதலைமச்சர் சார்பாக, அவை முன்னவருக்கு இங்கே பதில் அளிக்கவோ, அறிக்கை வைக்கவோ கடமையும், பொறுப்பும் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவாக தங்களிடத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அன்றையதினம் அந்தப் பிரச்னையைப் பற்றி பேசிய நேரத்தில், அன்றைக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளதாக ஒரு உணர்வு இல்லாமல் இன்றைய தினம் திரு. உமா நாத் அவர்கள் ஒரு விளக்கம் கேட்பதாகக் கேட்டு, அதற்கு அறிக்கை வைக்கிற நிலைமை ஏற்படுமானால், அப்படி ஒரு நிலைமை வரும் என்று ஏற்கனவே தெரிந்து வைத்துக் கொண்டு இங்கே இது நடத்தப்படுகிறதோ என்று எங்களைப் போன்ற எதிர்க்கட்சியினருக்கு வியப்பாக இருக்கிறது. நாவலர் அவர்கள் சொல்லக்கூடிய பேச்சுக்கு மாறுபட்டுப் பேசவேண்டும் என்பது அல்ல என்னுடைய நோக்கம். ஆனால் நாவலர் அவர் கள் அந்த அறிக்கையை முறையாக வைத்திருப்பார்களானால் சரி. அப்படியில்லாமல் ஒரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை எழுப்பிய உடனே இதோ விளக்க அறிக்கை என்று கொடுக்கும் நிலைமை எனக்குச் சற்று வியப்பாக இருக்கிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் எந்த ஒரு விதிமுறையின் கீழும் திரு. உமா நாத் அவர்கள் எழுப்பிய பிரச்னை விதிமுறைகளின் கீழ் வராது. வருவதற்கு சட்ட விதிகளின் படி ஒன்றும் இல்லை. அவர்கள் அப்படியே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினாலும் அதை அனுமதிப்பதற்கு இல்லை. திரு. உமாநாத் அவர்கள் இங்கே அந்தக் கேள்வியை எழுப்பியதிலே எனக்கு ஒன்றும் வேறுபாடு இல்லை.

[திரு. க. அன்பழகன்] [1982 ஏப்ரல் 1

ஆனால் அதற்கு விடையாக இப்படி ஒரு அறிக்கை வைக்கப் பெறுமானால் அது பற்றி விவாதிக்க இப்போது வாய்ப்பில்லை. அப்படி விவாதிக்க வாய்ப்பில்லாத ஒரு நிலையில் இது பற்றி ஒரு முடிவான கருத்து போல அரசின் சார்பிலே அறிக்கை வைக்கப்பெறுவது எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக இல்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையை அன்றைய தினம் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் விஜயராகவன் அவர்களும் எழுப்பினார்கள். (குறுக்கீடு) மன்னிக்கவும், நான் பேசியதற்குப் பிறகு பேராசிரியர் சொல்ல வேண்டியதை சொல்ல அவருக்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி அவர்கள் விளக்கம் கேட்டதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்களுக்கு பதில் கூறுவதற்கு கடமை இருக்கிறது. ஆனால் அன்று அவருடைய உடல்நலம் சரியில்லாத காரணத்தால் விவாதம் தொடர்ந்து நடக்கவில்லை. பிறகு திங்கள் கிழமை தொடர்ந்து நடைபெற்றது.

Und r Rules 105 (1) of the Assembly Rules, a s atment may be made by a Minister on a matt r of public impor ance with the consent of the Spe k r. That being so, the Hon Minister for Finance (the L ader of the House) is making this s atement on behalf of the Hon. Chief Minist r. Due to collective respon ibility, he can m ke that s atement. There is no prob em in it.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துணை மானியத்தின் மீது பேசியபோது இந்தப் பிரச்னையை நான் கிளப்பினேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உடல்நலம் சரியில்லை என்று சொல்லி மீண்டும் தான் திங்கள் கிழமை பதில் சொல்வதாக சொல்லியிருந்தார்கள். திங்கள் கிழமை அதற்கான பதிலை தருவார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால் தரவில்லை. அதைப்பற்றி அவர் ஒன்றுமே தெரிவிக்காத காரணத்தால் நானும் அதைப் பற்றி அன்றைக்கு கிளப்பவில்லை. நான் தெரிந்து கொள்ள விரும்புவது இன்றைக்கு திடீர் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அந்தப் பிரச்னையை கிளப்பிய உடனே, இதோ அரசாங்கத்தின் பதில் என்று ரெடியாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் தர முன் வருவது வியப்பையே தருகிறது. காரணம் அன்றைக்கு அவர்கள் அந்தப் பதிலை சொல்லியிருக்க முடியும். ஆனால் அதை விட்டு விட்டு, வியாழக் கிழமை அதற்கு திடீர் என்று பதில் தருகிறோம் என்று சொல்வது வியப்பை மட்டும் அல்ல, இந்த அவையைச் சரியான முறையிலே நடத்திச் செல்கிறார்களா என்பதே ஐயமாக இருக்கிறது அதுவும் வெளியிலே பத்திரிகைக்கு கொடுத்துவிடுகிறோம் என்று சொல்வது எங்களை மிரட்டுவது போல் தெரிகிறது.



1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கம் கேட்டார்கள். அப்படிப்பட்ட சில விளக்கங்களுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லலாம். சொல்லாமலும் இருக்கலாம். கேள்வி எழுகிற நேரததில் உடனடியாக அதற்கான விவரங்களை, விளக்கங்களை சேகரித்து தர முடியாத நிலை இருக்கலாம். எல்லா விளக்கங்களையும் கேட்ட உடனேயே எடுத்துக் கொடுக்கிற நிலைமை இல்லை. ஒரு பிரச்னை எப்போது வந்து விட்டதோ, அதற்கு மறுப்பு விளக்கங்களோ அல்லது வேறு விளக்கங்களோ தருகிற ஒரு சூழ்நிலை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. அதை வெளியிலேயும் எடுத்துச் சொல்லலாம், நேரிடையாகவும் இந்த அவையிலே எடுத்துச் சொல்லலாம். ஆகவே அன்றைக்கு தேவையான ஆதாரங்கள் விவரங்கள் இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு இந்த அவையிலே தெரிவிப்பதன் மூலமாக நாட்டுக்கு தெரியப்படுத்தலாம் என்ற எண்ணத்திலேதான் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டதே தவிர வேறு அல்ல. அந்த வகையிலே கொண்டு வரக் கூடாது என்று சொன்னால் அதற்குரிய முறையிலே பிறகு கொண்டு வரலாம். வெளியிலேயும் விளக்கம் தரலாம், மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி வந்திருப்பதன் காரணமாக, இந்த அவை மூலமாக அதற்கான விளக்கங்களை எடுத்து வைத்தால் வெளியிலே நாட்டுக்கு தெரியும் என்ற வகையிலே தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று இதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தப் பிரச்னையை கிளப்பியது சம்பந்தமாக ஏதோ வியப்பாக இருப்பதாகவும், ஆச்சரியம் தருவதாகவும் கூறினார்கள் அதற்கு நான் தன்னிலை விளக்கம் தரவேண்டிய நிலை இருக்கிறது. இந்த விவாதம் சம்பந்தமாக நான் பத்திரிகையில்தான் பார்த்தேன். அந்த விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் சொல்கிறபோது நான் இந்த அவையிலே இல்லை. சி.ஐ.டி.யூ. எக்சிகியூட்டிவ் கமிட்டிக்கு சென்றிருந்தேன் என்பது உங்களுக்கே தெரியும். நான் வந்த பிறகு அந்த பதிலின் முழு அளவையும் பார்க்க வேண்டும் என்று தங்களிடம் கேட்டேன். அது உங்களுக்கே தெரியும்.

(முற்பகல் 10-40)

நேற்றுஃபுல் டெக்ஸ்டை பார்ப்பதற்குத் தாங்கள் கொடுத்தீர்கள். உட்கார்ந்து நான் பூராவும் படித்து பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது இந்த விஷயத்திற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. நேற்று பார்த்த பிறகு இன்றைக்கு வந்தவுடன் க்ளாரிபிகேஷன் கேட்டேன்.

That is my position. So for as Government are concerned, they have to explain.

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி அமைச்சர் அவர்கள் 106-வது விதியின் கீழ் அறிக்கை தரலாம். அதுபற்றி அமைச்சர் அவர்கள் மிக முக்கியமான பிரச்சினை மீது நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும் என இந்த அவையிலே அறிக்கை வைப்பது முறையானதுதான். எல்லாச் சட்ட மன்றத்திலேயும் இந்த முறை இருக்கின்றது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 106-வது விதி யின் கீழ் ஒரு அறிக்கை வைக்கப்படும் என்றால் அவைக்கு முன்ன தாகத் தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டும். .. .. .. ..

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொல்வதுபோல் அவைக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லப் பட்டது. மன்னிக்க வேண்டும். காலையில் சொல்லப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடுகள்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர் மானம், 106-வது விதியின் கீழ் அறிக்கை வைத்தல் ஆகியவை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பெறுவதில்லை.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்கிற அடிப்படையிலே எழுப்பப்பட்டிருக் கின்ற ஒரு பிரச்சினையில் உடனே 106-வது விதியின்கீழ் ஒரு அறிக்கை படிக்கலாம் என்று தாங்கள் கூறுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர் களும் இந்தப் பேரவை உறுப்பினர்தாம். அவர் இந்தப் பிரச்சினை யை எழுப்ப என் அனுமதியைக் கேட்டார். நாவலர் அவர்களும் 106-வது விதியின் கீழ் அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். இது இரண்டும் ஒன்று சேர்ந்தது என்றால் அதைத் தவறாகப் பொருத்திப் பார்க்கக்கூடாது.

இது நடைமுறைக்குப் புறம்பானதல்ல. மேலும் ஜனநாயக மரபுகளில் இதுபோல் அமைச்சர்கள் இந்த அவைக்கு விளக்கம் தர முன்வருவது நல்ல மரபாகும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 106-வது விதியை நான் படிக்கிறேன். ''பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவர் இசை வுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம். அவ்வறிக்கை மீது அப் போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது. உள்விதி ஒன் றின் கீழ், அறிக்கையளிக்க விரும்பும் ஓர் அமைச்சர் எந்நாளில்



அந்த அறிக்கையை அளிக்க விரும்புகிறார் என்பதையும், பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றை யும் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்பவேண்டும்''. எந்த நாளில் என்பது கன்வ்னியன்ட் டே. அதாவது, என்றைக்கு அந்த அறிக்கையை வைக்கலாம் என்பது ஒருவேளை இன்றைக்கு அதை வைப்பதாக இருந்தாலும் இந்த அறிக்கையின் மீது எந்த விவாதமும் இருத்தல் கூடாது என்றிருப்பதன் காரணமாக இது பொது முக்கியத்துவம் வாய்ந்த, அரசாங்கத்தினுடைய அன்றாட நடைமுறைப் பிரச்சினையை ஒட்டிய ஒரு முக்கிய மான பிரச்சினையாகவும் இல்லாமல் முதலமைச்சரைப்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் வரக்கூடிய பிரச்சினையாக உள்ளது. இதிலே விவாதம் இருக்கக்கூடாது என்று சொல்லி ஒரு அறிக்கை வைப்பது முறையாகாது. 106-வது விதி இந்த அறிக்கைக்கு இடம் தருவதற்காக உருவாக்கப்பட்டதல்ல.

அரசாங்கத்தினுடைய நடைமுறைக் கொள்கைகள், செயல் கள் அதையொட்டிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னை யை குறித்து அவைக்கு அறிக்கை வைக்கப்பெறலாம்; ஆனால் டிஸ்ப்யூட்டெட் மாட்டர்—இரு பக்கத்திலும் விவாதிப்பதற் குரியது என்பதன் மீது விளக்கம் தர 106-வது விதியைப் பயன்படுத்துவது சரியல்ல; அதன் கீழ் வைக்கப்பெறுகிற அறிக்கையின் மீது உடனடியாக விவாதம் கூடாது என்பது விதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அறிக்கையின் மீது உடன் விவாதம் இருக்கக் கூடாது. எனினும் அப்பொருள் குறித்து பேரவையில் விவாதிக்க வேறு எவ்வளவோ வழிமுறைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மூன்று விஷயங்கள். ஒன்று, பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தப் பிரச்னை குறித்தும் எதிர் வரிசையில் உள்ள கட்சித் தலைவர்கள் எழுப்பலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை யாகக் கருதி மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் இதை எழுப்புவதற்கு உரிமை உண்டு. அந்த அடிப்படையில் அவர்கள் எழுப்பியதில் தவறு இல்லை.

இரண்டாவதாக, அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் இந்த விளக்க அறிக்கையை வெளியே அறி வித்தால் உரிமை மீறல் பிரச்னை வரும். ஆகையால் அதையும் நம் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே பேரவை

யில் அதைத் தெரிவிக்க வேண்டுமென்றால் 106-வது விதிப்படி தெரிவிக்கலாம். அதன்படி வைக்கப்பெறுகிற அறிக்கையின்மீது விவாதத்திற்கு இடமில்லை.

மூன்றாவதாக, அரசாங்கத்தினுடைய பதிலைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் எதிர் கட்சிகளுக்கு இருக்கவேண்டுமே தவிர பதிலைக் கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்.) (கூச்சல்)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கச் சார்பில் விளக்கம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இப்பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். * * * முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபைக்கு வரவேண்டும். அவரே இந்த அறிக்கையை அளிப்பதுதான் முறை. (குறுக்கீடுகள்.) (கூச்சல்.)

(முற்பகல் 10—50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது. யாரையும் பேச அனுமதிக்க மாட்டேன்.

திரு. சித்தன் அவர்கள், முதல்வர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லுகிறார். தமிழக முதல்வராக இங்கே 9 ஆண்டு காலம் பெருந்தலைவர் இருந்திருக்கிறார்; ஓமந்தூரார், குமாரசாமி ராஜா போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் சார்பிலே இங்கே அவை முன்னவர்கள் பேசியிருக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியாததல்ல. முதல்வர் தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்வது நியாயமல்ல. அவர் சார்பாக அமைச்சரவையிலுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம்; அறிக்கை வைக்கலாம்; கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. இது நீண்ட நெடுங்காலமாக இந்த மன்றத்தின் மரபாக வந்திருக்கிறது. ஆகவே, அவர் சார்பாக அவை முன்னவர் வைக்கலாம்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னையாக இருக்கின்றகாரணத்தினால், இந்த

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அவையினுடைய மேஜையில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய எந்தவித மான தஸ்தாவேஜு பற்றியும், விவாதிப்பதற்கு இந்த அவைக்கு உரிமையிருக்கிறது. இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாவிட்டாலும், இந்த அறிக்கையின் மீது இந்த அவை யிலே விவாதம் செய்வதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அரசாங்கமே ஆட்சேபனை பண்ணக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவாதத்திற்கு நாங்கள் என்றும் தயார்.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விவாதத்திற்குத் தயார் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது, எனக்கு மகிழ்ச்சி தான். மாறுபாடு கிடையாது. பாயின்ட் ஆப் ஆர்டர்எழுப் பப்பட்ட இந்த அறிக்கையின்மீது, அமைச்சர் பதிலளிக்க உரிமை உண்டு. ஆனால், இந்த பாய்ன்ட் ஆப் ஆர்டர் அடிப்படையிலே அறிக்கை வைத்துப் பேச....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன் னேன். 106-வது விதியைப் பொறுத்த வரையில் உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அதையும், இதையும் சம்பந்தப்படுத்தி, ஒரு அறிக்கை வைக்கப்படுகிறது. அப்படி அறிக்கை வைக்க அமைச்சருக்கு உரிமை உண்டு. பேராசிரியர் அவர்கள் அமைச்ச ராக இருந்திருக்கிறார். இது அவருக்கு நன்கு தெரியும். பாயின்ட் அதுவல்ல...............(கூச்சல், குழப்பம்.)

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 106-வது விதியின் கீழ் அறிக்கை வைப்பதாக ஏற்கனவே சொன்ன காரணத்தினால், இப்போது சொல்லுகிறார் என்று சொல்லுகிறார்கள். அது எதனால் பொருந்தி வரவில்லை யென்றால் தற்போது எழுப்பப்பட்ட பாயின்ட் ஆப் ஆர்டர் காரணமாக இது பொருந்தி வரவில்லை. இரண்டாவது, அப்படி ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டதற்கு அமைச்சருக்கு பதில் சொல்லுகின்ற உரிமை உண்டு. அப்படி பதில் சொல்லுகிற உரிமை இருக்கிறதே தவிர, அறிக்கை படிக்கிற உரிமை இல்லை. அப்படி அறிக்கை வைப்பதாக இருந்தால், அறிக்கை வைப்பதிலே எனக்குத் தடையில்லை. அந்த அறிக்கை வைப்பதாக இந்த அவைக்கு அறிவித்துவிட்டு, அந்த அறிக்கையை மேஜை மீது வைக்கப்பட்டால், அதைப்பற்றி விவாதிப்பதற்குக் கேட்க உரிமை உண்டு. அதற்குப் பதிலாக, 106-வது விதியின் கீழ் அறிக்கையைப் படித்துவிட்டால், நாங்கள் விவாதிப்பதற்குக் கேட்க உரிமை இல்லை விவாதம் வேண்டுமென்று திரு சங்கரய்யா

திரு. க. அன்பழகன் [1982 ஏப்ரல் 1

அவர்கள் சொன்னார்கள். அந்த விவாதத்திற்கு உரிய நேரத்தை, அமைச்சர் ஒப்புக்கொண்டால் போதாது. ஏனென்றால், தயார் என்று சொல்வது வேறு....................

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : * * *.... (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடங்களில் சென்று அமர வேண்டும். (குழப்பம்).

அனைத்து உறுப்பினர்களும் அவர்களுடைய இடங்களுக்குச் சென்று அமர வேண்டும். வாதப் பிரதிவாதங்கள் பெரிதல்ல. இப்போது 106-வது விதியின் கீழ் அமைச்சர் அறிக்கை வெளியிடலாமா கூடாதா என்பதுதான் பிரச்சினை. 106-வது விதியின் கீழ் வைக்கப்பெறுகிற அறிக்கையின் மீது விவாதம் கூடாது அதுதான் விதி. திரு சங்கரய்யா அவர்கள் சொன்னதுபோல வேறு நேரத்திலே விவாதிக்கலாம். இன்றைக்கு அமைச்சர் 106-வது விதியின் கீழ் அறிக்கை கொடுக்கலாம்.

திரு. என். சங்கரய்யா : தாங்கள் இப்போது சொன்னீர்கள், இந்த அறிக்கை இங்கே வைக்கப்பட்டதற்குப் பிறகு எப்போது வேண்டுமானாலும் விவாதிக்கலாம் என்று..........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவாதம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும். அதன் பிறகு தான் தலைவர் முடிவு செய்யவேண்டும். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது விவாதிக்க முடியாது என்று சொன்னேன். அதன்மீது விவாதம் வேண்டுமென்று உறுப்பினர்கள் எழுதிக்கொடுத்தால், அந்த வசதியை ஏற்படுத்தித் தர நான் தயாராக இருக்கிறேன். (கூச்சல், குழப்பம்).

[முற்பகல் 11-00]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 106-வது விதியின்படி பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னை பற்றி விளக்க அறிக்கை வைப்பதற்கு அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த 106-வது விதியின்படிதான் இங்கே எழுப்பப்பட்ட ஒரு பிரச்னை

*** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 ஏப்ரல் 1] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

பற்றியும் பொது முக்கியத்துவமாக, செய்தித் தாள்களிலே
வந்த ஒரு பிரச்னை பற்றியும் அறிக்கை வடிவிலே வைக்கப்படும்
என்று சொன்னேன். ஆகவே, 106-வது விதியின்படி அறிக்கை
வைக்கின்றபொழுதே அந்த விவாதம் எடுத்துக் கொள்ளக்கூடாது
என்று தான் மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத்
தலைவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல விதியிலே
இருக்கிறது. அந்த அறிக்கையை நான் படித்து முடித்ததற்குப்
பிறகு அதன் மேல் விவாதம் வேண்டுமென்று கேட்க உறுப்பினர்
களுக்கு உரிமை இருக்கிறது. அந்த விவாதத்திற்கான நாளை
குறிப்பிடுகின்ற உரிமை மாண்புமிகு தலைவருக்கு உண்டு. அலுவல்
ஆய்வுக் குழுவைக் கலந்து கொண்டு அவர் சொல்லலாம்.
(குறுக்கீடு) நான் இப்பொழுதுதானே படிக்கப் போகிறேன்.
(குறுக்கீடு) நான் படித்தாலும் அவர் படித்ததாகத்தான்
அர்த்தம். விவாதத்திற்கான நாள் கேட்க உறுப்பினர்களுக்கு
உரிமை உண்டு. அதற்குப் பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர்
அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டியோ அல்லது தலைவர்களைக்
கலந்து கொண்டோ, விவாதத்திற்கான நாளை ஒதுக்க அவ
ருக்கு உரிமை உண்டு. அந்த அடிப்படையிலே இந்தப்
பிரச்னையை அணுக வேண்டும். அதுதான் முறை. ஆகவே
அறிக்கை வருவதற்கு முன்னாலே விவாதம் வேண்டுமென்று
கேட்பது முறை அல்ல. அறிக்கை வந்ததற்குப் பிறகு விவாதம்
வேண்டுமென்று கேட்க உரிமை உண்டு. கேட்டதற்குப் பிறகு,
விவாதத்திற்கான நாளைத் தீர்மானிக்கப் பேரவைத் தலைவ
ருக்கு உரிமை உண்டு. அவர்கள் தீர்மானிக்கிற நாளிலே இதைப்
பற்றி நாம் விவாதிக்கலாம். (குறுக்கீடு) இந்தத் தொடரிலேயே
வைக்கலாம். இந்த அவையிலே, இந்த விளக்க அறிக்கை
வைத்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை
பேருக்கும் இந்த விளக்க அறிக்கை சுற்று முறையில் அனுப்பி
வைக்கப்படும். விவாதத்திற்காக அனுப்பி வைக்கப்
படும். தாங்கள் குறிப்பிடுகிற நாளிலே விவாதத்திற்கு எடுத்துக்
கொள்ளலாம் என்று நான் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு)
இந்தத் தொடருக்குள்ளாகவே ஒரு நாளைக் குறிப்பிடலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இந்தத் தொடர் கூட்டத்திற்குள்ளாகவே ஒரு நாளைக் குறிப்பிடலாம் என்று சொல்கிறார்கள். இந்தத் தொடர் கூட்டத்திற்குள்ளாகவே ஒரு நாளைக் குறிப்பிடுவதாக இருந்தால் அறிக்கை வைப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத்தலைவர்: நான் யாரையும் அனுமதிக்கவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : என்ன சொல்கிறார் என்று கேளுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் 233 உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் சொல்லட்டும்.

திரு. இல. பலராமன் : நீங்கள் கொடுத்திருப்பது தப்பான ரூலிங் என்று சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காமராஜரை மென்ஷன் செய்திருக்கிறீர்கள். 'இந்த அவையிலே ஓமந்தூரார், காமராஜர் போன்ற தலைவர்கள் எல்லாம் இருந்தார்கள். நீங்கள் காங்கிரஸ்காரர்கள். நீங்கள் ஒரு வழிமுறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் பதில் சொல்லவில்லை. என்று சொன்னீர்கள். ஆனால் மாண்புமிகு பெருந்தலைவர் அவர்கள்—' நல்லசிவன் என்று கருதுகிறேன். அவர் குற்றச்சாட்டு சொன்னபொழுது—இருந்து அவரே பதில் சொன்னார் என்பதை இந்த அவைக்கு நினைவுபடுத்துகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் தொடர் கூட்டம் என்றதை நீங்கள் டெக்னிக்கலாக எடுத்துக் கொள்ளாமல் இந்த 6-ஆம் தேதிக்குள்ளாக என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : நாளைக்கே அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன்., நீங்களே வந்து பேசலாம்.

THIRU N.V.N. SOMU : I am on a point of order, Sir.

MR. SPEAKER : I am not permitting any point of order now The Hon'ble Member will please resume his seat.

திடீரென்று 234 உறுப்பினர்களும் எழுந்து கொண்டால் என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்.

திரு. என். வி. என். சோமு : * * * * *

என்று சொன்னாரே, அமைச்சர்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம், எடுத்தாயிற்று, அவைத் குறிப்பிலே இல்லை.

5. அறிக்கை அளித்தல்.

(அ) விதி 106-ன் கீழ் முதல் அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக இந்த விளக்க அறிக்கையை இந்த அவைமுன் வைக்கிறேன்.

ஓய்வுபெற்ற ஐ. ஜி. திரு. ஆர். என். மாணிக்கம் என்பவர் ஜஸ்டிஸ் இராமமூர்த்தி கமிஷனில் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத்தைக் குறித்து சமீபத்தில் சில நாளேடுகளில் வெளிவந்த



செய்திகள் பற்றி சில உறுப்பினர்கள் இந்த அவையில் குறிப்பிட்டார்கள். அது பற்றி நான் இந்த அவைக்கு விளக்கம் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப் பத்திரத்தில் அவர், என்னையும் சட்ட அமைச்சரையும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரையும் ஈடுபடுத்தி, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கின்றார். செய்தித்தாள்களில் வந்துள்ள அறிக்கைகளின்படி, திரு. எம். ஜி. சக்கரபாணியும் அவரது இரண்டு மகன்களான திருவாளர்கள் சுகுமாரனும், பாலனும், சாராயக் கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய மொத்த விற்பன்ன விநியோக உரிமம் ஆகியவைகளைப் பெற்றுதருவதாக வாக்களித்து ரூபாய் 10,75,000 பெற்றுக் கொண்டதாகவும், இந்தத் தொகைகள் சட்ட அமைச்சர் திரு. பொன்னையனிடமும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதியிடமும் கொடுக்கப்பட்டதாகவும், அந்த அமைச்சர்கள் அதைப் பெற்றுக் கொண்டதாகவும், அத்தொகை முதலமைச்ருக்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்க ஆணையிடுவார் என்றும், அமைச்சர்கள் திரு. பாலனிடம் கூறியதாக திரு. ஆர். என். மாணிக்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். திரு. சுந்தரமூர்த்தி என்கிற ஒருவரும், திரு. ரவீந்திரநாத் என்கிற ஒருவரும் என்னைச் சந்தித்து, இந்த விஷயத்தை முடிக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டதாகவும், என்னிடம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ஆம் நாளிட்ட கடிதம் ஒன்றை கொடுத்ததாகவும், நான் இந்த விஷயத்தை முடிக்க ஒப்புக் கொண்டதாகவும் கூடச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தானும் தனது மகன்களும் பெற்றுக் கொண்ட பணம், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திரு. எம். ஜி. சக்ரபாணி, திரு. ஆர். என். மாணிக்கத்திடம் கூறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இந்த உறுதிமொழிப் பத்திரத்திற்குப் பொருத்தமான பதில் முறையாக சம்பந்தப்பட்ட மன்றத்திற்குத் தரப்படும் என்றாலும், இம் மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உண்மை நிலையை அவைக்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

என் மீதும், சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் மீதும் ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதி மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் முழுக்க முழுக்க, உண்மைக்குப் புறம்பானவை என்றும், சிறிதும் ஆதாரமற்றவை என்றும், முற்றிலும் தவறானவை என்றும் இந்த அவையின் முன்பு வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

சாராயக் கலவை ஆலைகள், சாராய மொத்த விற்பனை, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது மொத்த விற்பனை முதலியவற்றிற்கான உரிமங்கள் தகுதியின் அடிப்படையிலும், விதிகளுக்கு உட்பட்டும், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை ஆணையரால் கொடுக்கப்படுகின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

எனக்கும், என் தமையனார் குடும்பத்திற்கும் இடையே எத்தகைய தொடர்பு இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். கடந்த 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளிட்ட '' அண்ணா '' செய்தித் தாளிலும், 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29-ஆம் நாளிட்ட '' தினத்தந்தி '' செய்தித் தாளிலும் வெளியிடப்பட்ட எனது அறிக்கையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது பின்வருமாறு.

தமிழக மக்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் முக்கிய அறிவிப்பு

என்னுடைய பெயரைப் பயன்படுத்தி என் தமையனாரின் (எம். ஜி. சக்கரபாணியின்) பிள்ளைகள் சிலரும், வேறு சிலரும் என் ஆசிபெற்றதாகக் கூறி, பல நிறுவனங்களில் உள்ள பதவிகளுக்குப் போட்டியிடுவதாகவும், இன்னும் சில செய்திகளும் வருகின்றன. அப்படி யாரையும் தனிப்பட்ட முறையில் நான் ஆதரிக்கவுமில்லை, ஆசி கூறவும் இல்லை என்பதையும், அவர்களோடு எந்தவிதத் தொடர்பாவது வைத்துக்கொண்டு எந்தச் செயலில் ஈடுபட்டாலும், அதன் முழுப்பொறுப்பையும் அவர்களே ஏற்க வேண்டிவரும் என்பதையும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
(ஒப்பம்) எம்.ஜி. இராமச்சந்திரன்.

இந்த என்னுடைய அறிக்கைக்குப் பின்னர் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் தேதியில் என்னுடைய தமையனார் குடும்பத்தின் சார்பில் எனது தமையனாரின் மகன் /எனக்கு எதிராக வெளியிட்ட அறிக்கைப் பற்றியும் நாடறியும். அவரது அறிக்கை பலநாளேடுகளில்குறிப்பாக, தினகரன், எதிரொலி, மாலை முரசு போன்ற நாளேடுகளில் முக்கியத்துவம் கொடுத்து விளம் பரப்படுத்தப்பட்டதையும் இந்த நாடு அறியும். அந்த அறிக்கையையும் இந்த மன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

மாலை முரசு 29—3—1981, சென்னை.

'' எனது தந்தை எம். ஜி. சக்கரபாணியின் தம்பியும், இன்றைய தமிழக முதல்வருமான எம். ஜி. இராமச்சந்திரன், எங்கள் குடும்பத்தைப் பற்றி அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளார்.



அதில் என் உடன்பிறப்புகளில் (சகோதரர்கள்) சிலருக்கு பதவி ஆசை இருப்பது போலவும் அதற்கு அவரது ஆசி உண்டு என்று நாங்கள் நினைப்பது போலவும் குறிப்பிட்டுள்ளார்.

அவரைத் தவிர எங்கள் குடும்பத்தில் யாரும் எந்தக் கட்சி பதவியிலும், ஆட்சி பதவியிலும் இருந்ததும் இல்லை—அந்த மாதிரி ஆசையும் எங்களில் யாருக்கும் இல்லை.

முதல்வர் தெரிவித்திருப்பது போல் எனது தமையனார் எம்.சி. சந்திரன், சென்னை தியாகராய கல்லூரி டிரஸ்ட் பதவிக்கு சில அ.தி.மு.க. நண்பர்களின் கட்டாயத்தின் பேரில் நிற்க நேர்ந்தது.

இந்த இக்கட்டான நிலை ஏற்படும் என்று தெரிந்து இருந்தால் பதவிக்கு நிற்பதற்கு நாங்கள் '' கிளி ஜோதிடம் '' பார்த்திருப் போம். நேற்றைய முதல்வரது அறிக்கையைப் பார்த்த பிறகுதான் ஆசி பற்றிய செய்தி எனது தமையனாருக்கு தெரிய வந்தது.

(முற்பகல் 11–10)

ஆகவே எங்களது குடும்பத்தை தர்ம சங்கடத்தில் உண்டாக்கிய அந்தபதவிக்கு என் தமையனார் போட்டியிடவில்லை என்பதை இந்த அறிக்கையின் மூலம் மறுப்பு அறிக்கையாக, இன்றைய தமிழக முதல்வருக்கும், தமிழக மக்கட்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

எனது தமையனார் மகன்களைப் பற்றி நான் 28–3–1981 இல் வெளியிட்ட அறிக்கையும், எனக்கெதிராக எனது தமையனார் குடும்பத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையும், பல பத்திரிக்கைகளில் முக்கியத்துவம் கொடுத்து பரவலாக விளம்பரமாகியிருந்தபோதிலும், இத்தகைய அறிக்கைகள் வெளிவந்த சில தினங்களுக்குப் பின்னால் ஏப்ரல், மே மாதங்களில் முன்னாள் ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கத்திற்குத் தொடர்பான சிலர் என் தமையனாரின் குடும்பத்தாரை அணுகி, அவர்கள் மூலம் என் உதவியைப் பெற முயன்றார்கள் என்பது நம்பத் தகாததாகவும், வேடிக்கையானதாகவும் ஒரு கற்பனைக் கூற்று போன்றும் உள்ளது.

ஒருவேளை அவ்வாறு எவரேனும், எனது தமையனாரின் குடும்பத்தாரின் மூலமாக என்னுடைய உதவியைப் பெற முயற்சி செய்திருந்தார்கள் என்றால், நான் ஏற்கெனவே என்னுடைய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது போல், அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்களே ஏற்க வேண்டியவர்கள் ஆவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்ற பிறகு என் குடும்பத் தினராக இருந்தாலும் சரி, என் தமையனார் குடும்பத்தினராக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, நான் எத்தகைய பொறுப்போடு செயலாற்றி வருகிறேன் என் பதை என்னுடைய இந்த அறிக்கையிலிருந்தே தெரிந்து கொள்ள லாம். திரு. ஆர். என். மாணிக்கம் கூறியவை பற்றிய செய்தி வெளியானவுடன் அதைப் பற்றி சட்ட அமைச்சரிடமும் ஆதி திராவிட நலத்துறை அமைச்சரிடமும் விசாரித்தேன். அந்த புகாரில் கூறப்பட்டுள்ளவை முற்றிலும் உண்மைக்குப் புறம் பானவை என்றும் இந்த அமைச்சர்களை எனது தமையனார் திரு. எம். ஜி. சக்கரபாணி அவர்களின் மகன் திரு. பாலன் அவர்களோ அல்லது வேறு எவரோ சாராயக் கலவை சாராயம் மற்றும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது வகைகள் மொத்த விற்பனை ஆகியவற்றிற்காக உரிமங்கள் கோரி தங்களை எப்போதுமே யாருமே அணுகியதில்லை என்றும் எந்தவித பண மும் அதற்காக யாரிடமும் கேட்டதில்லை என்றும் யாரும் இது சம்பந்தமாக எந்தவித பணத்தையும் தங்களிடம் தந்ததில்லை என்றும் முதல்வரிடம் பணத்தைக் கொடுத்து உரிமங்கள் கிடைக்க ஆவன செய்வதாக எவரிடமும் எதுவும் கூறியதில்லை என்றும் அவர்களுக்கும் இந்த புகார்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை யென்றும் தீர விசாரித்தபின் அந்த அமைச்சர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

அந்த அமைச்சர்களும் இவை குறிந்து தங்களது விளக்கத்தை அவைக்கு அளிப்பார்கள்.

இந்த நிலையில் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையனும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதியும் எனக்குக் கொடுப்பதற்காகப் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்று இப்போது சொல்வதும் எனக்கு இந்தப் பணம் கொடுக்கப்பட்டது என்று கூறுவதும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும், அவதூறானதும், வேண்டுமென்றே என்னுடைய பெயருக்கும் எனது சக அமைச்சர்கள் பெயருக்கும் ஊறு விளை விக்க முயற்சிப்பதும் ஆகும்.

சாராயக் கலவை ஆலை உரிமம் மற்றும் சாராயம் மற்றும் மது வகைகள் மொத்த உரிமம் ஆகியவற்றிற்கான உரிமங்கள் வழங்குவதில் எந்தக் கட்டத்திலுமே எப்போதுமே நான் தலை யிட்டதில்லை என்பதையும் எனது தமையனார் திரு. எம். ஜி. சக்கரபாணி அவர்களோ அல்லது அவரது மகன்களோ அல்லது அவர்கள் சார்பில் எந்த அமைச்சரோ எவருக்கேனும் மேற் குறிப் பிட்ட எவ்வித உரிமமும் கொடுக்குமாறு என்னை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ என்றும் என்னை அணுகியதில்லை



என்பதையும் மேற்கண்ட விஷயத்தில் உரிமம் வழங்க எனக்கு அமைச்சர்களின் மூலம் பணம் கொடுத்ததாகக் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும் அவதூறானதும் ஆகும் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

கடந்த 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அன்று திரு. சுந்தரமூர்த்தி, திரு. ரவீந்திரநாத் என்பவர்கள் என்னைச் சந்தித்து கடிதம் ஒன்றினைக் கொடுத்ததாகவும் பிரச்சினையை முடித்து வைக்குமாறு என்னிடம் கேட்டதாகவும் நான் அதற்கு ஒத்துக் கொண்டதாகவும் திரு. ஆர். என் மாணிக் கத்தின் உறுதி மொழிப் பத்திரத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது சிறிதும் ஆதாரம் அற்றதும் உண்மைக்குப் புறம் பானதும் ஆகும்.

இந்த உண்மைக்குப் புறம்பான அவதூறான குற்றச்சாட்டுக் களைச் சுமத்தும் நபர்கள் மீது சம்பந்தப்பட்ட மன்றத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம் மாமன் றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) விதி 106 இன் கீழ் கூட்டுறவு-சட்ட அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 106 (1) இன் கீழ் இவ்வறிக்கையை அவைக்கு அளிக்கின்றேன்:

ஓய்வு பெற்ற ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கம் என்பவர் ஜஸ்டிஸ் திரு. இராமமூர்த்தி கமிஷனில் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத்தைக் குறித்து சமீபத்தில் சில நாளேடுகளில் வெளிவந்த செய்திகள் பற்றி, சில உறுப்பினர்கள் இந்த அவையில் குறிப்பிட்டார்கள். அதுபற்றி இந்த அவைக்கு விளக்கம் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப் பத்திரத்தில் அவர், முதல்வர் அவர்களையும், என்னையும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரையும் ஈடுபடுத்தி, ஆதாரமற்ற சில குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கின்றார். செய்தித்தாள் களில் வந்துள்ள அறிக்கைகளின்படி, திரு. எம்.ஜி. சக்கரபாணியும் அவரது இரண்டு மகன்களான திருவாளர்கள் சுகுமாரனும், பால னும், சாராயக் கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய

மொத்த விற்பனை விநியோக உரிமம் ஆகியவைகளைப் பெற்றுத் தருவதாக வாக்களித்து ரூபாய் 10,75,000 பெற்றுக் கொண்டதாகவும், இந்தத் தொகைகள் என்னிடத்திலும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதியிடத்திலும் கொடுக்கப்பட்டதாகவும், நாங்கள் அதைப் பெற்றுக் கொண்டதாகவும், அத்தொகை முதலமைச்சருக்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்க ஆணையிடுவார் என்றும், நாங்கள் திரு. பாலனிடம் கூறியதாகவும், திரு. ஆர். என். மாணிக்கம் குற்றஞ் சாட்டியுள்ளார். தானும் தனது மகன்களும் பெற்றுக் கொண்ட பணம், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திரு. எம். ஜி. சக்கரபாணி, திரு. ஆர். என். மாணிக்கத்திடம் கூறியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றது.

இந்த உறுதிமொழிப் பத்திரத்திற்குப் பொருத்தமான பதில் முறையாக சம்பந்தப்பட்ட மன்றத்திற்குத் தரப்படும் என்றாலும், இம் மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, உண்மை நிலையை அவைக்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், என் மீதும், ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதி மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது என்றும், சிறிதும் ஆதாரமற்றவை என்றும், முற்றிலும் தவறானவை என்றும், இந்த அவையின் முன்பு வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளிட்ட '' அண்ணா '' செய்தித்தாள் போன்றவைகளில் வெளியிடப்பட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்கையில், புரட்சித் தலைவர் அவர்களின் தமையனார் குடும்பத்தாரோடு யாரும், எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக்கப்பட்டுள்ளதை நாடு அறியும், நாங்களும் அறிவோம். புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்கைக்குப் பின்னர் அவரது தமையனார் குடும்பத்தினர் புரட்சித் தலைவருக்கு எதிராக வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றியும் அனைவரும் அறிவோம். இத்தகைய அறிக்கைகள் வெளிவந்த தேதிகளுக்குப் பின்னால் ஏப்ரல், மே மாதங்களில் முன்னாள் ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கத்திற்குத் தொடர்பான சிலர் திரு. எம். ஜி. சக்கரபாணி அவர்களின் குடும்பத்தாரை அணுகி அவர்கள் மூலம் என்னை அணுகி, புரட்சித் தலைவரின் உதவியைப் பெற முயன்றார்கள் என்று கூறுவது மிகவும் விசித்திரமாகவும், ஒரு கற்பனை கூற்று போன்றும் உள்ளது.





இந்த நிலையில், நானும், ஆதித் திராவிடர் நலத்துறை
அமைச்சர் திரு. விஜயசாரதியும், புரட்சித் தலைவர் அவர்களுக்கு
கொடுப்பதற்காகப் பணத்தைப் பெற்றுக் கொண்டோம் என்று
இப்போது சொல்வதும், இந்தப் பணம் புரட்சித் தலைவருக்கு
கொடுக்கப்பட்டது என்று கூறுவதும் முற்றிலும் உண்மைக்குப்
புறம்பானதும், அவதூறானதும், வேண்டுமென்றே எங்களுடைய
பெயருக்கு ஊறு விளைவிக்க முயற்சிப்பதும் ஆகும்.

[முற்பகல் 11-20]

இந்த நிலையில் திரு. எம். ஜி. சக்கரபாணி அவர்களோ
அல்லது அவரது மகன்களோ அல்லது வேறு எவரோ, என்னிட
மும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதி
யிடமும் பணம் கொடுத்தார்கள் என்றும், நாங்கள் இருவரும்
அந்தத் தொகைகளைப் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தி
னோம் என்றும், அத்தொகை முதலமைச்சர் புரட்சித் தலைவர்
அவர்கட்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரி
மத்தை வழங்குவதற்கு ஆணையிடுவார் என்றும், நாங்கள் கூறிய
தாகவும், திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப்
பத்திரத்தில் கூறப்பட்டுள்ள கூற்று, முற்றிலும் உண்மைக்குப்
புறம்பானதும், முழுக்க முழுக்க தவறானதும் ஆகும். எவருமே,
எப்போதுமே, சாராயக்கலவை ஆலை, சாராய மொத்த விற்
பனை, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது வகைகள்
மொத்த விற்பனை உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக என்னை
சந்தித்ததுமில்லை; மேற்படி உரிமங்கள் வழங்குவதில் எனக்கு
எந்த வகையிலும் தொடர்பும் இல்லை. திரு. சக்ரபாணியுடனும்
அவரது குடும்பத்தாருடனும், புரட்சித் தலைவர் தொடர்பை
நீக்கிக் கொண்டது பற்றி, 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28
ஆம் நாள் அன்று முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்
வெளியிட்ட அறிக்கையை நானறிவேன். திரு. சக்கரபாணியின்
மகன் வெளியிட்ட பதில் அறிக்கையையும் நானறிவேன். அப்படி
யிருந்தும், உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக திரு. எம். ஜி.
சக்ரபாணி அவர்களின் மகன் திரு. பாலனையோ அல்லது
வேறெவரையுமோ நான் அனுமதித்திருப்பேன் என்பதும், முத
லமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறி அவரிடமிருந்து
பணத்தைப் பெற்றுக்கொண்டேன் என்பதும், உண்மைக்கு முற்றி
லும் புறம்பானதும் நம்பத்தகாத கற்பனையும் ஆகும். திரு.
பாலனோ அல்லது வேறெவருமோ, எந்த நோக்கத்திற்காகவும்,
இன்னும் குறிப்பாக சொன்னால் சாராயக் கலவை ஆலைக்கான
உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள்
மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில
இடங்களிலும் சாராய மொத்த விற்பனை விநியோக உரிமம்
ஆகியவைகள் வழங்கும் நோக்கத்திற்காக, எப்போதுமே என்
னைச் சந்தித்ததே இல்லை. சாராய, மது மொத்த விற்பனை
சம்பந்தப்பட்ட உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக திரு. பால

னிடமிருந்தோ அல்லது வேறெவரிடமிருந்தோ, பணத்தைப்
பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவதில் என்னை ஈடுபடுத்து
கிற திரு. ஆர். என். மாணிக்கத்தின் உறுதிமொழிப் பத்திர
மானது, அவதூறானதும், முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்
பானதும் ஆகும்.

இந்த உண்மைக்குப் புறம்பான, அவதூறான குற்றச் சாட்டு
களைச் சுமத்தும் நபர்கள் மீது சம்பந்தப்பட்ட மன்றத்தில் தக்க
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்மாமன்றத்
திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) விதி 106 ன் கீழ் ஆதிந் திராவிட நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

*மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஐ.ஜி. திரு. ஆர். என்.
மாணிக்கம் என்பவர் ஜஸ்டிஸ் திரு. இராமமூர்த்தி கமிஷனில்
தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தைக் குறித்து சமீபத்தில்
சில நாளேடுகளில் வெளிவந்த செய்திகள் பற்றி, சில உறுப்
பினர்கள் இந்த அவையில் குறிப்பிட்டார்கள். அதுபற்றி இந்த
அவைக்கு விளக்கம் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்
டார்கள்.

திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப்
பத்திரத்தில் அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களையும்,
மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்
களையும், என்னையும் ஈடுபடுத்தி, ஆதாரமற்ற சில குற்றச்
சாட்டுகளைக் கூறியிருக்கிறார். செய்தித் தாள்களில் வந்துள்ள
அறிக்கைகளின்படி, திரு. எம். ஜி. சக்ரபாணியும் அவரதுஇரண்டு
மகன்களான திருவாளர்கள் சுகுமாரனும், பாலனும், சாராயக்
கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்
நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை
மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய மொத்த விற்பனை
விநியோக உரிமம் ஆகியவைகளைப் பெற்றுத் தருவதாக வாக்
களித்து ரூ. 10,75,000 பெற்றுக்கொண்டதாகவும், இந்தத்
தொகைகள் என்னிடத்திலும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும்
சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களிடமும்
கொடுக்கப்பட்டதாகவும், நாங்கள் அதைப் பெற்றுக் கொண்ட
தாகவும், அத்தொகை முதலமைச்சருக்குக் கொடுக்கப்படும்
என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்க ஆணையிடுவார்
என்றும், நாங்கள் திரு. பாலனிடம் கூறியதாகவும், திரு. ஆர். என்.
மாணிக்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். தானும் தனது மகன்களும்
பெற்றுக்கொண்ட பணம், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்
டிருக்கிறது என்று திரு. எம். ஜி. சக்ரபாணி, திரு. ஆர். என்.
மாணிக்கத்திடம் கூறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.



இந்த உறுதிமொழிப் பத்திரத்திற்குப் பொருத்தமான பதில்
முறையாக சம்பந்தப்பட்ட மன்றத்திற்குத் தரப்படும் என்றா
லும், இம்மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டுக்கொண்டதற்
கிணங்க, உண்மை நிலையை அவைக்கு விளக்கக் கடமைப்
பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், என்மீதும், மாண்புமிகு
கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி.
பொன்னையன் அவர்கள் மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்
அனைத்தும் முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானவை என்
றும், சிறிதும் ஆதாரமற்றவை என்றும், முற்றிலும் தவறானவை
என்றும், இந்த அவையின் முன்பு வலியுறுத்திக் கூறிக்கொள்
கிறேன்.

கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளிட்ட
"அண்ணா" செய்தித்தாள் போன்றவைகளில் வெளியிடப்
பட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்
கையில், புரட்சித் தலைவர் அவர்களின் தமையனார் குடும்பத்
தாரோடு யாரும் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக்
கூடாது என்று தெளிவாக்கப்பட்டுள்ளதை நாடு அறியும். நாங்
களும் அறிவோம். புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்கைக்
குப் பின்னர் அவரது தமையனார் குடும்பத்தினர் புரட்சித்
தலைவருக்கு எதிராக வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றியும்
அனைவரும் அறிவோம். இத்தகைய அறிக்கைகள் வெளிவந்த
தேதிக்குப் பின்னால் ஏப்ரல், மே மாதங்களில் முன்னாள் ஐ.ஜி.
திரு. ஆர். என். மாணிக்கத்திற்குத் தொடர்பான சிலர் திரு.
எம். ஜி. சக்ரபாணி அவர்களின் குடும்பத்தாரை அணுகி, அவர்
கள் மூலம் என்னை அணுகி, புரட்சித் தலைவரின் உதவியைப்
பெற முயன்றார்கள் என்று கூறுவது மிகவும் விசித்திரமாக
உள்ளது.

இந்த நிலையில், நானும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும்
சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களும்,
புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுப்பதற்காகப் பணத்
தைப் பெற்றுக்கொண்டோம் என்று இப்போது சொல்வதும்,
இந்தப் பணம் புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுக்கப்
பட்டது என்று கூறுவதும் முற்றிலும் உண்மைக்கு மாறானதும்
அவதூறானதும், வேண்டுமென்றே எங்களுடைய பெயருக்கு
ஊறு விளைவிக்க முயற்சிப்பதும் ஆகும்.

இந்த நிலையில் திரு. எம். ஜி. சக்ரபாணி அவர்களோ
அல்லது அவரது மகன்களோ அல்லது வேறு எவரோ என்னிடம்
மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்ச

[திரு. எம். விஜயசாரதி] [1982 ஏப்ரல் 1

திரு. சி. பொன்னையன் அவர்களிடமும் பணம் கொடுத்தார்கள் என்றும், நாங்கள் இருவரும் அத்தொகைகளைப் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துவோம் என்றும், அத்தொகை முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கட்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்குவதற்கு ஆணையிடுவார் என்றும், நாங்கள் கூறியதாகவும் திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள கூற்று, முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும், முழுக்க முழுக்க தவறானதும் ஆகும். எவருமே, எப்போதுமே, சாராயக் கலவை ஆலை சாராய மொத்த விற்பனை, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக என்னைச் சந்தித்ததுமில்லை; மேற்படி உரிமங்கள் வழங்குவதில் எனக்கு எந்த வகையிலும் தொடர்பும் இல்லை. திரு. சக்ரபாணியுடனும், அவரது குடும்பத்தாருடனும், புரட்சித் தலைவர் அவர்கள் தொடர்பை நீக்கிக் கொண்டது பற்றி, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளன்று முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நானறிவேன். திரு. சக்கரபாணியின் மகன் வெளியிட்ட பதில் அறிக்கையையும் நானறிவேன். அப்படியிருந்தும், உரிமங்கள் வழங்குவது சமபந்தமாக திரு. எம். ஜி. சக்ரபாணி அவர்களின் மகன் திரு. பாலனையோ அல்லது வெறேவரையுமோ நான் அனுமதித்திருப்பேன் என்பதும், முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறி அவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டேன் என்பதும் நம்பத் தகாத கற்பனைக் கூற்றாகும். திரு. பாலனோ அல்லது வேறெவருமோ, எந்த நோக்கத்திற்காகவும், இன்னும் குறிப்பாகச் சொன்னால், சாராயக் கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய மொத்த விற்பனை விநியோக உரிமம் ஆகியவைகள் வழங்கும் நோக்கத்திற்காக, எப்போதுமே என்னைச் சந்தித்ததே இல்லை. மேலும், இதுபற்றி திரு. பாலனிடமோ, திரு. சுந்தரமூர்த்தி, திரு. ரவீந்திரநாத் ஆகியோரிடமோ, ஆலைக்கான இயந்திரங்களை வாங்க ஏற்பாடு செய்யலாமென்று நான் கூறியிருந்ததாகச் சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும், அவதூறானதும் ஆகும். சாராய, மது மொத்த விற்பனை சம்பந்தப்பட்ட உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக திரு. பாலனிடமோ அல்லது வேறெவரிடமிருந்தோ, பணத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவதில் என்னை ஈடுபடுத்துகின்ற திரு. ஆர். என். மாணிக்கத்தின் உறுதிமொழிப் பத்திரமானதும், அவதூறானதும், முழுக்க, முழுக்க உண்மைக்குப் புறம்பானதும் ஆகும். இந்த உண்மைக்குப் புறம்பான, அவதூறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் நபர்கள் மீது சம்பந்தப்பட்ட மன்றத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) இராமசாமி கமிஷன் அறிக்கை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட பால் கமிஷன் அறிக்கை மீது விவாதம் நடத்தப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே நேற்றையதினம் இந்த அவைமுன் வைக்கப்பட்ட டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் மறைவுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட திரு இர மசாமி கமிஷனின் அறிக்கைமீதும் விவாதிக்க வேண்டும். ஏனென்றால், முன்பு இருந்த ஆட்சியில் ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதைப் பற்றி விவாதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எழுதிக் கொடுக்க வேண்டும்.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, எங்களை எழுதிக்கொடுக்கச் சொல்கிறீர்கள், ஆனால் அவர்கள் கேட்டவுடனேயே விவாதத்திற்கு உறுதி மொழி கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே நான் யாருக்கும் எந்த உறுதிமொழியும் தரவில்லை. (குறுக்கீடு)

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சார்பாக 106 ஆவது விதியின் கீழ் வைத்த அறிக்கை மீது விவாதம் அவை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், காவல் துறை பற்றிய மானியக் கோரிக்கை இல்லை என்று பேசியபோது, எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சாட்டிய பல்வேறு மீது முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புகைப் படங்களைக் காட்டி, குற்றச்சாட்டுகளுக்கு அதிகாரிகள் செய்தது தவறு இல்லை, அந்த காவல் துறை நோக்கம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பவரைப் பற்றியே குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறபோது, அதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை, ஆகவே அவர் சார்பாக முன்னவர் அவர்கள் அறிக்கை இன்றைக்கு வெளியிட்டு இருந்தாலும் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சரியான வகையில் இங்கே நேரடியாக வந்து பதில் அளித்து He must himsel get exone ated. He must be above suspicion என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்).

*திரு.. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மீதும், அதேபோல் சட்ட அமைச்சர் அவர்கள் மீதும், ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு, அரசின் தரப்பில் இருந்து அதற்கு பதில் அளித்து இருக்கிறார். ஆனால் நேற்றையதினம் இங்கே என். எஸ். இராமசாமி அவர்களின் ஒன்-மேன்-கமிஷன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே இந்த அவையில் எதிர்தரப்பில் உள்ளவர்கள் யார் யார் எப்படிப்பட்ட ஊழலைச் செய்து இருக்கிறர்கள் என்று புள்ளிவிவரம் மிகத் தெளிவாகத் தந்து இருக்கிறார்கள். ஆகவே, குற்றம் சாட்டப் பட்டவர்கள் இங்கே அவையில் இருப்பதால், அந்தத் தரப்பில் இருந்து என்ன பதிலைத் தருகிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரப்பட்டுள்ள எந்த ஒரு அறிக்கை மீதும் விவாதம் நடத்தும் உரிமை இந்த அவைக்கு உண்டு. ஆனால் அதை அனுமதிப்பதும், அனுமதிக்காமல் இருப்பதும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கும் உரிமை. இங்கே அந்தப் பிரச்னை வந்ததன் காரணமாக விவாதிக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு தாங்கள் அதைப்பற்றி நாளை முடிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே எந்த அறிக்கைமீதும் விவாதம் வைக்க வேண்டும் என்று கேட்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் முறைப் படி இதிலே எழுதிக்கொடுத்துகேட்பார்களேயனால், அதைப்பற்றி முடிவு செய்யும் உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. இப்போதே அதை முடிவு செய்ய முடியாது. அதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-30]

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கிற எத்தனையோ அறிக்கைகளைப்போல் நேற்றையதினம் (குறுக்கீடு) கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட கூச்சல்கள் எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது, பேராசிரியர் தொடர்ந்து பேசட்டும்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அறிக்கைகள் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைய தினமும் ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்



கிறது. அந்த அறிக்கையை படித்து பார்க்கிற அளவுக்கு எனக்கு அறிவும் இருக்கிறது. அனுபவமும் இருக்கிறது. இந்த அவையிலே உள்ளவர்கள் மீது அதிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக் கிறது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி அவையிலே உள்ளவர்கள் மீது இதிலே குற்றச்சாட்டுகள் சொல்லப்படவில்லை. அவையிலே உள்ளவர்கள் ஆட்சி நடத்தியபோது ஏற்பட்ட குறைகள் என்றும், அதை முழு அளவுக்கு விசாரிக்க முடியவில்லை என்றும் அதற்கு யாரை விசாரிக்க வேண்டுமோ அவர் நாட்டிலே இல்லை என்றும், அவர் வந்ததற்குப் பின்னாலே அதை விசாரிக்க வாய்ப்பு இல்லை என்றும் கருதி, இந்த அளவோடு அந்த கமிஷனில் உள்ளன. அந்த அறிக்கையில் குறைபாடுகள்இருப்பதாக சொல்லப் பட்டு இருக்கிறது என்பதை மட்டுமே கூறப்பட்டிருக்கிறதே ஒழிய, ஆளும் கட்சி கொரடா அவர்கள் குறிப்பிடுவது போல் யார் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருப்பது போன்று இல்லை. விவாதிக்க வேண்டும் என்றார்கள். விவாதிக்க எப்போதுமே எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது. அந்த விவாதத்தை இந்த அவையிலே நடத்த விரும்பினால் என்றைக்கும் தயாராக இருக் கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆனால் இந்த கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலே வழக்குப் போட்டு குற்றவாளிகளை தண்டிக்கிற எல்லா உரிமை களும், நடவடிக்கை எடுக்க வேண்டிய எல்லா உரிமைகளும் அரசாங்கத்திறகு உண்டு. அந்த முறையில் முறைப்படி நட வடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள் கிறேன். குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படும் எவர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. (குறுக்கீடு) இந்த அறிக்கை மட்டும் அல்ல, எந்த அறிக்கையின் மீதும் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட வழி யிருந்தால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள லாம். அறிக்கையின் மீது விவாதிக்க வேண்டும் என்றாலும், நாங்கள் எப்போதும் விவாதிக்க தயாராக இருக்கிறோம். ஆனால் அறிக்கையிலே உள்ள கருத்துக்களை பத்திரிகையிலே வருகின்ற தலைப்புகளின் அடிப்படையில் படித்துவிட்டு அப்படியே எண் ணிக் கொள்வது அவ்வளவு நல்லது அல்ல, முறையானதும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதங்கள் இத் தோடு முடிவுற்றது. 54–வது விதியின் கீழ் கவன ஈர்ப்பு.

## 6. கவன ஈர்ப்புகள்.

### (அ) மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ''மாயூரம் வட்டத்தில் லெவி நெல் வசூல் செய்ய மறுப்பதும், வாங்கிய நெல்லுக்குப் பணம் பட்டுவாடா செய்யாததும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மாயவரம் தாலுக்காவில் லெவி நெல் வாங்கப்பட வில்லை என்று கூறுவது சரியல்ல. 16—12—1981 முதல் 12—3—1982 முடிய மாயவரம் தாலுக்காவில் 15 இடங்களிலுள்ள லெவி வசூலிக்கும் நிலயங்களில் 11,812 டன்கள் சன்னரக நெல்லும் 9,314 டன்கள் சாதாரண ரக நெல்லும் வாங்கப்பட்டுள்ளன. லெவி நெல் கொடுத்தவுடன் தாமதமேதுமின்றி 90 விழுக்காடு பணம் கொடுக்கப்படுகிறது. மீதமுள்ள 10 சத விகிதம் தரப் பரிசோதனைக்குப் பிறகு கொடுக்கப்படுகிறது. மாயவரம் தாலுக்காவில் அதிகாரிகள் நேரில் சென்று விசாரித்தபோதும் லெவி நெல் வாங்கவில்லை என்றோ, வாங்கிய நெல்லுக்கு பணம் தரப்படவில்லை என்றோ யாரும் புகார் கூறவில்லை.

கொள்முதல் செய்யப்படும் நெல்லின் தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது, அத்தரத்திற்கு குறைவாக உள்ள, அதாவது கருக்காள் பதர் அதிகமுள்ள நெல்தான் வழங்கப்படவில்லை. மத்திய அரசு நிர்ணயித்துள்ள தரத்திற்கு குறைவாக உள்ள நெல்லை வாங்குவது இயலாததாகும் அவ்வாறுள்ள தரக்குறைவான நெல்லை வாங்கி அரிசியாக்கி நியாயவிலைக் கடைகளில் விற்றால் பொது மக்களிடமிருந்து புகார் வரும். எனவே மத்திய அரசு நிர்ணயித்துள்ள தரமுள்ள நெல் வாங்கப்படுகிறது. அவற்றிற்கான பணமும் தரப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே மன்றத்திற்குள்ளே யாரும் தங்களுக்குள்ளே பேசிக் கொள்ளக் கூடாது. வெளியே லவுஞ்சிலே போய் பேசிக் கொள்ளுங்கள். அவையில் அமைதி காக்க வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யாரும் என்று சொல்லும்போது அது எல்லா உறுப்பினர்களையும் குறிக்கும். ஆகவே குறிப்பிட்ட பகுதி உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).







மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து பொறுத்துக் கொள்ள வேண்டும். வெளியிலே போய் பேசுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே வெளியே போய் பேசிக் கொள்ளுங்கள்.

திரு. இரெ. இராமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரம் வட்டத்தில் லெவி நெல்வாங்குவது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே நான் கேட்டதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற மங்கநல்லூர், நீடூர், வைத்தீஸ்வரன் கோயில், தேரழுந்தூர், திருவழுந்தூர் ஆகிய பகுதிகளில் மார்ச் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து நெல் வாங்கப்படவில்லை. மார்ச் மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு உள்ள கொள்முதல் பட்டியலைத் பார்த்தால் தேதி வாரியாகத் தெரியும். நான் அவையிலேகூட நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்திலே ரோடுகளிலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளின் புகைப்படத்தைக் காட்டி இருக்கிறேன். அதை இப்போதும் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறேன். 10,000 மூட்டைகள் ரோடுகளிலே பல நாட்களாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்திற்கு பல முறையீடுகள் கொடுக்கப்பட்டன. தந்தி மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உள்பட அரசாங்கத்திற்கு வியாபாரிகள் கொடுத்திருக்கிறார்கள். பணமும் பல நாட்களாக பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கின்றது. நான் ஏற்கெனவே அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். ஐ. ஆர். 20 நெல்லை வாங்க மறுக்கிறார்கள். எவ்வளவு தரமான நெல்லைக் கொண்டு சென்றாலும் கூட வாங்குவதற்கு மறுக்கிறார்கள். பணத்தை உடனடியாகக் கொடுக்கவும் மறுக்கிறார்கள். கூட்டுறவு கடனுக்கு கட்டாயமாக ஜப்தி செய்யப்படுகின்றது. ஜப்தி செய்யப்படுகின்ற நேரத்திலே வியாபாரிகள் நெல்லை வாங்க மறுக்கிறார்கள். ஆகவே உடனடியாக தாமதம் இல்லாமல் விவசாயிகளின் நெல்லை வாங்குவதற்கும் அவர்களுக்கு நியாயமான விலை கொடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கொள்முதல் செய்வதற்கும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலேயே விளக்கம் சொன்னேன். 12–3–1982 வரையில் மொத்தம் கிட்டத்தட்ட 20 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. கொள்முதல் செய்யப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. 90 சதவீதம் பணம் கொடுக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த 10 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்றால் தரம் குறைவுஎன்று சொல்லப்படுகின்ற ஒன்றுக்குத்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான புகார் சொன்னவுடனே நான் அந்தத் துறையின்

செயலாளர் மூலமாக உடனடியாக ஒருவர் நெல் கொடுக்கத் தயாராக இருக்கிறார் என்றால் லெவி கொள்முதல் மூலமாக அதை எல்லாம் வாங்கி வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். வாங்கி வைப்பதிலே எந்த விதமான சங்கடமும் இல்லை. அதிகமான அளவுக்கு நெல் கொள்முதல் வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். ஆனால் தரம் பற்றி நாம் நிர்ணயித்திருக்கின்ற தன்மையிலேதான் வாங்கமுடியும். தரம் குறைந்தால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே பணமும் பட்டுவாடா செய்திருக்கிறார்கள். கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தால் தனிப்பட்ட முறையிலே யாராவது புகார் தந்திருந்தால் உடனடியாக என்னிடத்திலே அதனைத் தந்தால் அது பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே கொள்முதல் செய்யப்படாமல் இல்லை. செய்யப்பட்டு வருகிறது. இன்னும் இருக்கின்றது என்றால் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி நெல் வசூல் செய்வது என்பது தஞ்சை மாவட்டத்தில் இருந்து மற்ற இடங்களுக்குச் செல்கிறபோது மற்ற 50 சதவீதம் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. மேலும், வியாபாரிகள் என்று சொல்லி விவசாயிகளின் இல்லங்களில் புகுந்து சோதனை செய்கிறார்கள். நெல்லைப் பறிமுதல் செய்கிறார்கள். உதாரணமாக என்னுடைய தொகுதியிலே கூட கருப்பூர் என்ற இடத்திலே சுந்தரேசன் என்பவர் வீட்டிலே சோதனை செய்து அதிலே இருந்து 15 மூட்டை நெல்லை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 1–3–82 மார்ச் அன்று டி.ஆர்.ஓ. அலுவலகத்திலே விசாரணை வைத்து அதிலே கூட 15 மூட்டை நெல்லை பறிமுதல் செய்து விட்டதாக உத்தரவு போட்டிருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களில் விவசாயிகளின் வீடுகளில் அதிகாரிகள் புகுந்து சோதனையிட்டு கணக்குத் தரவேண்டும், எவ்வளவு நெல் இருக்கின்றது என்றெல்லாம் கேட்டு பறிமுதல் செய்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்கின்றபோது மட்டும் லெவி கொடுக்கவேண்டும் என்று அரசு ஆணையிடுமா ? அதோடு இந்த லெவி அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு நன்மை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த 50 சதவீதத்தை 25 சதவீதமாகக் குறைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் பலதடவை சொல்லி இருக்கிறேன் 50 சதவீதத்தை எக்காரணம் கொண்டும் குறைப்பதற்கு இல்லை. வேறு பல மாநிலங்களிலே 60, 65, 70 சதவீதம் கூட இந்த லெவி இருக்கின்றது.



(முற்பகல் 11·40)

ஆனால் விவசாயிகள் இடத்தில் கொள்முதல் செய்யும்படி நாம் உத்தரவிடவில்லை. தஞ்சை மாவட்டத்தில் மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்து விற்றால் அவர்களிடமிருந்து லெவி கேட்கிறார்கள். அதிகாரிகள் விவசாயிகளிடம் கேட்கும்போது, விவசாயிகள் தமக்கு இருக்கிற நிலம் எவ்வளவு? நெல் எவ்வளவு வருகிறது என்ற கணக்கைக் கொடுத்து விடுவார்களானால் அவர்களிடம் கூடுதல் இருக்க முடியாது. பலயிடங்களில் வியாபாரிகள் விவசாயிகள் வீட்டிலே வைத்து விட்டு இந்தக் கணக்கை விவசாயிகள் கணக்கில் ஏமாற்று கிற நிலை இல்லை என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஒரு சிலர் நேர்மையாக, நாணயமாக இருக்கக்கூடுமே தவிர, எல்லோரும் அப்படி இருக் கிறார்கள் என்பதல்ல. தனிப்பட்ட முறையில் ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால் அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம், அங்குள்ள வழங்குத்துறை அதிகாரிகளிடம் தெரிவித்தால் அப்படிப்பட்ட குற்றங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளலாம். ஒரு விவசாயிடம் தொடர்ந்து ஆண்டு முழுவதும் குறிப்பிட்ட அளவு நெல் அவர் வீட்டில் இருந்து கொண் டிருந்தால் எப்படி இருக்கக்கூடும் என்பதை யோசிக்க வேண்டும். தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இப்படிப்பட்ட நிலை மைகள் இருக்கின்றன. ஆனால், நாணயத்திற்குப் புறம்பாக நடக்கக்கூடாது என்பதால் அரசு நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. தனிப்பட்ட முறையில் ஏதாவது கேடு இழைக்கப் பட்டால், தொல்லை கொடுக்கும் அளவுக்கு இருக்குமானால் அவற்றைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அ. ஸ்டான்லி மருத்துவமனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, ரா. கிருஷ்ணன் இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானங் கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் திரு. உமாநாத் அவர்கள் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் இல்லாதது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான எக்ஸ்ரே பிலிம்கள் இந்துஸ்தான் போடோ பிலிம் நிறுவனத்திலிருந்துவாங்க வேண்டும். அவ்வப்போது தேவைப்பட்டியல் கொடுத்து எக்ஸ்ரே பிலிம்கள் வாங்கப்படுகின்றன. அரசு ஸ்டான்லி மருத்துவ மனையைப் பொறுத்தமட்டில் அவசியமானவர்களுக்கு எக்ஸ்ரே பிலிம் எடுப்பதில் எந்தவிதமான கடுமையான இடையூறும் இதுவரை ஏற்படவில்லை. மருத்துவப் பரிசோதனை தேவைப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான இனங்களிலும் அவசர சிகிச்சை அளிக்க வேண்டிய இனங்களிலும் எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படுகின்றன. அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் எக்ஸ்ரேக்கள் எடுப்பதில்லை என்று எந்தவிதமான புகாரும் இதுவரை வரவில்லை. கீழ்க்கண்ட எக்ஸ்ரே பிலிம்கள் கைவசம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது:—

| ஒளி ஊடுருவத்தக்க எக்ஸ்ரே படச்சுருள். | | பாக்கெட்டுகள் படச்சுருளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 15″×12″ | .. | 87×50 |
| 14″×11″ | | 71×50 |
| 12″×10″ | | 13×50 |
| 10″× 8″ | | 2×50 |
| 6½″×8½″ | | 6×50 |
| 6½″×4½″ | | 18×50 |



ஒளி ஊடுருவாத வகையில் அமைந்த படச்சுருள்.

| | |
|---|---|
| | 18×50 |
| 15''×12'' | 38×50 |
| 12''×10'' | 17×50 |
| 10''×8'' | 48×50 |
| 6½''×8½'' | |

இரசாயனங்கள்—

| | | |
|---|---|---|
| ஃபிக்ஸர் | .. | 9 பாக்கெட்டுகள். |
| டெவலெப்பர் | .. | 36 பாக்கெட்டுகள். |

இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியிடமிருந்து எக்ஸ்ரே,
பிலிம்கள் பெறப்படுவதில் தடைகள் இருந்தால் எக்ஸ்ரே பிலிம்
கள் ஒப்பந்தப் புள்ளி முறையில் வேறு நிறுவனங்களிடமிருந்து
வாங்கிக் கொள்ள மருத்துவ மனை தலைவர்கள் மருத்துவ கல்வி
இயக்குநரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, எக்ஸ்ரே
பில்ம்களுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை.

திரு. ரா. உமாநாத்: விவர அறிக்கையில் அரசாங்க
ஸ்டான்லி மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் அவசிய
மானவர்களுக்கு எக்ஸ்ரே பிலிம் எடுப்பதில் எந்தவிதமான கடுமை
யான இடையூறும் இதுவரை ஏற்படவில்லை, என்று அழுத்தமாகச்
சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்
களில் அப்படிப்பட்ட கடுமையான எக்ஸ்ரே பிலிம் குறைவு
இருந்தது. முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு.
வி. கே. கோதண்டராமன் அவர்கள் மகன் அப்போது ஆஸ்பத்
திரியில் இருந்தார்கள். அவர்களிடம் இருந்து பெற்ற பர்ஸ்ட்
ஹான்ட் இன்பர்மேஷன், அவர்களே கண்ணால் பார்த்திருக்கிறார்
கள். பல நோயாளிகளுக்கு எக்ஸ்ரே பிலிம் இல்லாமல் இருந்தது.
அட்ஹாக் டயகனோசிஸ் செய்து, எக்ஸ்ரே செய்ய வேண்டிய
இடத்தில் பிலிம் இல்லாததால் பல நோயாளிகள் கஷ்டப்பட்டதை
அவர்களே பார்த்திருக்கிறார்கள். இதை விட வேறு எவிடன்ஸ்
தேவை இல்லை. ஆகவே, இதில் ஒன்றை கவனத்தில் கொள்ள
வேண்டும். பிலிம் ஷார்ட்டேஜ் இல்லையென்று கூறினார்கள்.
ஒன்று பிலிம் ஷார்ட்டேஜ் இருந்து உண்மை நிலை பற்றி உங்
களுக்கு சரியான இன்பர்மேஷன் கொடுக்காமல் "சப்ரஸ்"
செய்திருக்கலாம். இல்லை, ஷார்ட்டேஜ் இல்லாமல் கையில்
ஸ்டாக் இருந்து நோயாளிகளுக்கு யூஸ் செய்யாமல் இருந்திருக்
கலாம். இந்த இரண்டு வகையில் பார்த்தாலும் இது ஒரு ஸீரியஸ்

மேட்டர். ஆகவே, எந்த அடிப்படையில் பார்த்தாலும் நோயாளிகள் கஷ்டப்படாமல் இருக்க, குறிப்பிட்ட இந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் நிலை பொறுத்து ஒரு ஹை லெவல் என்கொயரி நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஹை லெவல் என்கொயரி வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி ஒரு ஹை லெவல் என்கொயரி தேவை இல்லை என்று கருதுகிறேன். இந்த இடத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எக்ஸ்ரேயைப் பொறுத்த வரையில் முன்பு இருந்ததை விட எக்ஸ்ரே செலவு இப்போது குறைவாகும். முன்பு 100 நோயாளிகளுக்கு எவ்வளவு எக்ஸ்ரே செலவாகுமோ அது இப்போது கொஞ்சம் குறைவாக செலவாகும். காரணம் எக்ஸ்ரேயி லாம வேறு கருவிகள் மூலம் வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கு இப்போது வசதிகள் இருக்கின்றன. இப்போது என்டோஸ்கோப் என்று பெப்டிக் அல்ஸரைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படுகிறது. முன்பு பெப்டிக் அல்ஸரைக் கண்டு பிடிப்பதற்கு ஆறு, ஏழு தடவைகள் எக்ஸ்ரே எடுக்க வேண்டிய நிலை இருந்தது. இப்போது இந்த என்டோஸ்கோப் மூலம் அல்சர் எங்கே இருக்கிறது என்று லொக்கேட் செய்யலாம். ஆகவே, முன்பு இருந்ததை விட இப்போது எக்ஸ்ரே செலவு குறைவாக ஆகிறது.

ஸ்டான்லி மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு காரியத்தில் முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் உணர்வார்கள். என்றாலும், நான் ஊட்டிக்கு சில மாதங்களுக்கு முன்பு சென்ற நேரத்தில், ஒரு தகவல் முன்கூட்டியே எனக்கு வந்தது. ஊட்டியிலே, இந்துஸ்தான்போட்டோ பிலிம்ஸ்லே அவர்கள் தயாரிக்கக்கூடிய எக்ஸ்-ரேவினுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்றும், ஆகனால், "பாலோ அப் இபெக்ட்" இருக்குமென்றும் சொல்லப்பட்டது. நான் உடனே, டீ.எம்.எஸ்., டீ.எம்.ஈ., ஆகியோர்களைக் கூப்பிட்டு எக்ஸ்ரேவின் ஷார்டேஜ் நிலைமை எப்படி இருக்கிறது, நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டேன். இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் எக்ஸ்ரேவின் எண்ணிக்கை வெகு வேகமாக குறைந்திருக்கிறது. அங்கே அந்த எக்ஸ்ரே ஷார்டேஜ் இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நான் அப்போதே சொன்னேன். ஷார்ட்டேஜ் இருந்தாலும், நீங்கள் அதன் விளைவாக நோளிகளுக்கு எக்ஸ்ரேவைப் பயன்படுத்தும் பயனைக் குறைக்க வேண்டாம். எவ்வளவு செலவானாலும், அதிகம் செலவானாலும் தனியார் துறையிலே வாங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உத்தரவு போடுகிறேன் என்று சொல்லி, உத்தரவு போட்டிருக்கிறேன். இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன். யாரையும் ஏமாற்று



வதற்காக அல்ல. அந்த குறிப்பிட்ட பிரச்னையைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதற்குச் சவுகரியமாக இருக்கும். சில நேரங்களில் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும், அதிகாரிகள் நம்மை திசை திருப்புவதற்கு, அங்கும் இங்கும் நடக்கக்கூடிய ஒன்றிரண்டு நிலைமைகள் இருக்கலாம். இல்லை என்று அறவே சொல்ல முடியாது. மாண்புமிகு பழைய உறுப்பினர் கோதண்டராமன், குடியாத்தம் தொகுதியிலே எம்.எல்.ஏ.வாக இருந்தவர். அவர்கள் இந்தப் பிரச்னையைப் பற்றி தகவல் கொடுத்தால், நிச்சயமாக நானே அதை பர்சனலாக விசாரித்து, நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே, கடைசிப் பக்கத்திலே, இந்துஸ்தான் போட்டோபிலிம்ஸ் கம்பெனியிடமிருந்து எக்ஸ்ரே பிலிம்கள் பெறப்படுவதில் தடைகள் இருந்தால், எக்ஸ்ரே பில்ம்கள் ஒப்பந்தப் புள்ளி முறையில் வேறு நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள மருத்துவ மனைத் தலைவர்கள், மருத்துவக் கல்வி இயக்குநரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறியிருக்கிறார்கள். இந்த இந்துஸ்தான் பேட்டோ பிலிம்ஸ் என்பது ஒரு பப்ளிக் செக்டார் அன்டர்டேக்கிங். இங்கிருந்து பிலிம்ஸ் வாங்குவது சரியாக இருக்கும். அங்கே போதுமான அளவுக்கு அவகாசத்தோடு அவர்களிடம் ஆர்டர் கொடுத்தால், பிலிம் கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. காலாகாலத்தில் ஆர்டர் கொடுக்கப்படாமல், இந்த ஆஸ்பத்திரி பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள், தனியார் நிறுவனங்களிடம் எக்ஸ்ரே வாங்குவதில் ஒருவித அக்கறை காட்டுகிறார்கள். அதிலே அவர்களுக்கு சில விருப்பங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திடம் ஆர்டர் கொடுத்து, அதை வாங்குவதற்கான நடவடிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதைச் செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தில் ஷார்டேஜ் இருக்கிறது. அது உண்மை. X-ray films have to be purchased from Hindu tan Photo Films Limited. I is under tood that the bove Company i exp riencing some shortage of r w-mate ials which has affected the p oduction of X-ray films,

என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே காலாகாலத்தில் போதிய அவகாசத்துடன் ஆர்டர் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், இன்னொரு பக்கத்தில் ஷார்டேஜ் இல்லை என்றும், நீங்கள் தனியார் இடத்தில் வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் சொல்லுகிற நேரத்தில், சங்கடம் ஏற்படுகிறது. அதிகாரிகளுக்கு நம்முடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. யாரையும் ஏமாற்ற வேண்டுமென்றோ, தனியாரிடமிருந்துதான் வாங்க வேண்டுமென்றோ அவர்களுக்கு எண்ணமில்லை. இருந்தாலும், நாம் உடனடியாக ஆர்டர்களை பிளேஸ் பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். தாமதம் ஏற்பட்டு, அதன் விளைவாக எக்ஸ்ரே கிடைக்காவிட்டால், அதுசம்பந்தமான அதிகாரிகளை ஐடென்டிபை செய்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் தாமதமாக ஆர்டர் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் காலதாமதம் நடக்கிறது. தனியார் துறையிலே வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டும், இதுவரையிலும் தனியார்துறையிலே வாங்கவில்லை. இன்று காலையிலேகூட, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது துணைக் கேள்விகள் கேட்பார்கள் என்பதற்காக, எத்தனை இடங்களில் தனியார் துறையிலே வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் கொடுக்கவேண்டுமென்று ஸ்டான்லி, சென்னை கீழ்ப்பாக்கம், மருத்துவமனைகளுக்கு தொலைபேசிமூலம் அதிகாரிகளைக் கேட்டேன். வாங்கவில்லை என்று தெரிவித்ததோடு அல்லாமல், வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை என்றும் சொன்னார்கள். ஆனால், தனியாரிடம் அவசர நிலைமையைப் பொறுத்து வாங்குவதற்காக அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எக்ஸ்ரே பிலிம்ஸ் தேவைப்பட்டால், வாங்கிக் கொள்வார்கள்.

(முற்பகல் 11-50]

**திரு. டி. மணி** : துணைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளுக்கு எக்ஸ்ரே பிலிம்ஸ் வாங்குவது சம்பந்தமாக ஏற்கெனவே நாங்கள் கொடுத்த கவன ஈர்ப்பின்போது பற்றாக்குறை இருந்த காரணத்தினால் அது கொடுக்கப்பட்டது. இனியாகிலும் நம்முடைய தேவையை முன்னிட்டு தேவையான பிலிம்களை மருத்துவ மனைகளிலே வாங்கி ஸ்டாக் செய்வதற்கு முன்னெச்சரிக்கையாக முன் ஏற்பாடுகள் செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : முன்னெச்சரிக்கையாக இருப்பதன் விளைவாக நாம் தனியாக வாங்கிக் கொள்ளலாம் தேவைப்பட்டால் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது எக்ஸ்ரே பிலிம்ஸ் இரண்டு வகையாக இருக்கிறது.



இப்போது இருப்பது இரண்டு பக்கத்திலேயும் சர்பேஸாக
இருக்கும். ஆனால் புதிதாக ஒன்றுஒரு பக்கத்திலே காகிதமாகவும்
இன்னொரு பக்கத்திலே பிலிம் ஆகவும் இருக்கும். ரா மெட்டிரி
யல்ஸ் பற்றாக் குறையாக இருக்கின்ற காரணத்தினால் அப்
படிப்பட்ட வகையைக்கூட கொண்டுவந்து காட்டியிருக்கிறார்கள்.
அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற மருத்துவமனை அதிகாரி
களுடைய முன்னெச்சரிக்கையின்மையின் காரணமாக இந்த நிலை
ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்** : துணைத் தலைவர் அவர்களே,
எக்ஸ்ரே பிலிம்களைப் பொறுத்தமட்டில் மாவட்ட மருத்துவ
மனைகளும்சரி, மற்ற மருத்துவ மனைகளும்சரி தட்டுப்பாடு
இருப்பது என்பது உண்மைதான், நான் நேரடியாகவே அதை
உணர்ந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தட்டுப்பாடு
இல்லை என்றும் போதுமான அளவுக்குக் கிடைக்கிறது என்றும்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வாங்கப்படுகிற பிலிம்கள்
எல்லாமே முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பது சந்
தேகத்திற்குரியதாக இருக்கிறது. 1982–83 ஆம் ஆண்டிலே
மொத்தம் எத்தனை பிலிம்கள் வாங்கப்பட்டன, வாங்கப்பட்ட
வைகளில் எத்தனை பயன்படுத்தப்பட்டன என்பதையும்
1980–81 ஆம் ஆண்டிலே எத்தனை வாங்கப்பட்டன அவைகளில்
எத்தனை பயன்படுத்தப்பட்டன என்பதையும் அறிவிக்க
இயலுமா ? அதன் மூலமாக வாங்கப்படுகின்ற பிலிம்கள்
பூராவும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறிய இயலுமே,
ஆகவே அதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : ஷார்ட்டேஜுக்கு
இன்னொரு விஷயத்தைச் சொல்வது பொருத்தமாக இருக்கும்
என்று நினைக்கிறேன்.

Action taken during the shortage of X--Ray Films OPX Super
X-ray films are supplied by them. The shortage has been discussed in
the Hindustan Photo Films Consultative Committee meeting at
Calcutta on 18-12-81 and the Company has accepted that the factors
like shortage of raw material and transportion bottlenecks,etc. are the
causes. Because of the shortage of supply of X-Ray films and chemicals
by the Hindustan Photo Films, a small percentage of restriction is
effected.

என்பதை இங்கே சொல்லிவிட்டு அந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். மூலக்கேள்வி ஸ்டான்லி மருத்துவ மனையைப் பொறுத்து இருப்பதால் அதைப்பற்றிய புள்ளிவிவரத்தை நான் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 1979–80 ஆம் ஆண்டிலே 92,700 பிலிம்கள் செலவழிக்கப்பட்டு இருக்கின்றன. 1980–81 ஆம் ஆண்டு 99,750 பிலிம்கள் செலவழிக்கப்பட்டு இருக்கின்றன. 1981–82 ஆம் ஆண்டு, டிசம்பர் வரையில் 68,700 என்று கொடுக்கப்படுகிறது, புரப்போர்ஷனேட்டாகப் பார்த்தால் அந்தக் கணக்கு வருகிறது. ஆகவே எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லை. அதனுடைய எபக்ட் இப்போது இல்லை. இருந்தாலும்கூட எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை எல்லா மருத்துவ மனைகளுக்கும் வலியுறுத்தியிருக்கிறோம். இண்டன்ட் போடுவதைக் கூட முன்கூட்டியே — மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல—போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பணம் கொடுப்பதிலே தாமதம் ஏற்பட்டால்கூட அவர்கள் இதைக் கொடுப்பதிலே தாமதம் செய்வார்கள். ஆகவே பிலிம்கள் வாங்கிய உடனே பணம் கொடுத்து விட வேண்டும், அவர்களுடன் எந்தவிதமான தகராறும் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். எல்லா விதமான எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளிலே எக்ஸ்ரே பிலிம்கள் பங்கிட்டுத் தரப்படுகின்றன. சில மருத்துவ மனைகளில் அவை போதுமான அளவில் இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் சில மருத்துவ மனைகளிலே தேங்கிவிடுகிறது. அந்த அந்த மருத்துவ மனைகளிலே உள்ள தேவையை உணர்ந்து எக்ஸ்ரே பிலிம்கள் வழங்கப்படுமா ? பல ஆண்டுகளுக்கு முன்பே தேவைப்பட்ட அளவுக்கு வழங்கப்படுகிறது. ஆங்காங்கே வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற யோசனை நல்லயோசனை. தாலுகா மருத்துவ மனைகளிலே எந்த அளவுக்குத் தேவைப்படுகின்றன என்று பார்த்தால் அங்கே கொஞ்சம் உபரியாக இருக்கும், தேங்கி இருக்கும். ஆறு மாத காலத்திற்கு முன்னாலே நான் செல்கிற நேரத்திலே சில இடங்களிலே இருக்கிறது, சில இடங்களிலே இல்லை என்ற பிரச்சினை வந்தபோது மாவட்ட மருத்துவ அதிகாரிகள் தாலுகா மருத்துவ மனைகளுக்கு எத்தனை எக்ஸ்ரே பிலிம்கள் என்று பார்த்து எந்த இடத்திலே தட்டுப்பாடு இருக்கிறதோ அந்த இடத்திற்கு உபரியாக இருக்கிற இடத்திலிருந்து அனுப்புங்கள். இல்லாவிட்டால், நீங்கள்





மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலிருந்து அனுப்ப ஏற்பாடு
செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு
உறுப்பினர்கள் சொல்லியிருக்கக்கூடிய யோசனையின் அடிப்
படையிலே ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்
டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே, ஸ்டான்லியிலே
ஏற்கனவே இருப்பு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்
கிறது. ஆனால், உண்மையிலே பல தாலுகா மருத்துவ மனை
களிலே போதிய ஸ்டாக் இல்லை. வேண்டுமானால் உதாரணத்
திற்குச் சொல்கிறேன், சென்ற மார்ச் மாதம் 26 ஆம் தேதி
அன்று என்று நினைக்கிறேன், அம்பாசமுத்திரம் தாலுகா
மருத்துவமனையிலே எக்ஸ்-ரே பிலிம் இல்லாததன் காரணமாக,
நானே ஒருவரைக் கூப்பிட்டுக் கொண்டு எக்ஸ்-ரே எடுக்கச்
சென்றபோது, பிலிம் இல்லையென்றே சொல்லப்பட்டது.
இதே போன்று மாவட்ட மருத்துவ மனைகளிலே உள்ளது.
எனக்கு ஏற்படுகின்ற சந்தேகம் எல்லாம் வைத்துக்கொண்டே
இல்லையென்று அதிகாரிகள் சொல்கிறார்களா ? அந்தச் சந்
தேகம் ஏற்பட்டிருப்பதன் விளைவாக எந்த, எந்த மருத்துவ
மனைகளிலே எக்ஸ்-ரே பிலிம் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது
என்று குறிப்பிடப்பட ஏற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன். இன்றைக்கு எக்ஸ்-ரே பிலிமுக்கு தட்டுப்பாடு, அதாவது
பற்றாக்குறை ஏற்படுகிறது. என்று சொல்கிறார்கள். ஆகவே,
இந்தப் பற்றாக் குறையைப் போக்குவதற்கு நமது அரசாங்கமே
ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்வருமா என்று
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு கேள்விகளை
இணைத்துக் கேட்கிறார்கள். ஸ்டான்லி மருத்துவ மனையிலே
இருக்கக்கூடிய எக்ஸ்-ரே பிலிம் நிலைமையைப் பொறுத்தவரை
யிலே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்
கள். ஆனால், நான் சென்னையிலே இருக்கிற கே.எம்.சி.,
எம்.எம்.சி. ஆகிய எல்லா மருத்துவ மனைகளிலும் இருக்கிற
நிலைமைகளைக் கொண்டு வந்து பதில் அளித்திருக்கிறேன்.
இப்பொழுது திடீரென்று அம்பாசமுத்திரம் மருத்துவ மனை
என்று சொல்கிறார்கள். ஆகவே, குறிப்பிட்டு, எழுதிக் கொடுத்
தால், அதைப் பார்த்து, நிலைமையைக் கண்டறிவதிலே நிச்சய
மாக எந்தக் கஷ்டமும் இருக்காது. இப்பொழுது இந்தக் கேள்
விக்குப் பதில் கொடுக்க முடியாது. அம்பாசமுத்திரத்திலே இருந்
திருக்கிறதா , இல்லையா என்பதைச் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அம்பாசமுத்திரம் என் தாலுக்கா.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அது பேரவைத் துணைத்தலைவர் தாலுகா. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், குறிப்புகள் கொடுத்தால், அதை உடனடியாக விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும்.

அடுத்து இன்னொரு கேள்வியை இணைத்திருக்கிறார்கள். ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு பெரிய கொள்கை சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதே இந்துஸ்தான் போட்டோ பிலிம்சுக்கு ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே ஸ்டிரைக் எல்லாம் நடந்து, பிறகு ஓரளவுக்கு சமாளிக்கப்பெற்றது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்தத்தொழிற்சாலையில் எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டுமென்று இலக்கு வைத்திருக்கிறார்களோ, அந்த அளவிற்கு அந்தத் தொழிற்சாலையிலே ஒழுங்காக உற்பத்திச் செய்தால் அதுவே நமக்குப் போதுமானது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பாதுகாப்புக்காக ரிவால்வர் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏன் பை-எலக்ஷன் வேண்டுமா ?

(நண்பகல் 12-00)

திரு. இரெ. இராமாணிக்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபையிலே பல முக்கியமான பிரச்னைகளை விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பிலே அதிகமாக யாரையும் காணோம் ஐந்தாறு பேர்கள்தான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்களும் சேர்ந்துதான் அவை; எல்லோரும் சேர்ந்துதான் அவை. வாக்கெடுக்கும்போதுதான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பெதல்லாம்



## 7 அரசினர் சட்ட முன்வடிவு

### தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982 ஆம் ஆண்டு (திருத்த சட்ட முன்வடிவு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982ஆம் ஆண்டு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. இரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே இன்ட்ரொட்யூஸ் செய்யக் கூடாது என்றும், இதை வாபஸ் வாங்க வேண்டுமென்றும் கூறி நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இதுவரையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற பல அடக்குமுறைச் சட்டங்களோடு இதையும் சேர்த்தால் நம்முடைய அரசு சிறையை நம்பியே இந்த ஆட்சியை நடத்தப் போகிறதா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேசியச் சின்னம் அல்லது தேசியக் கொடியை மாசுபடுத்துவதைத் தடுப்பதற்கு என்றால் நான் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இது அந்தமாதிரி இல்லை. ஜனநாயக விரோதச் சட்டங்கள் வரும்பொழுது சாதாரணமாக சட்டத்தின் பெயராலும், அமைதியின் பெயராலும் தான் இப்படித்தான் வரும். இப்படிப்பட்ட ஒரு அடக்குமுறைச் சட்டம், தேசிய கௌரவத்தின் பெயரால் வந்திருக்கிறது. ஆனால் நோக்கம் வேறு என்பது என்னுடைய கருத்து. அன்கான்ஸ்ட்டிடியூஷன் என்ற ஆஸ்பெக்டில் நான் இண்ட்ரொடக்ஷனையே எதிர்க்கிறேன்.

பேச்சு சுதந்திரம் என்பது நம்முடைய ஃபண்டமென்டல் ரைட். அது கியாரண்டீட் அண்டர் தீ கான்ஸ்ட்டிடியூஷன். இதிலே போட்டிருப்பது, பேச்சு மூலமாக இழுக்கு ஏற்படுத்தும் வார்த்தையே உபயோகப்படுத்தினால் என்று இருக்கிறது. அப்படி என்றால் சாதாரண மக்கள் பேசுவது நமக்குத் தெரியும். பணக்காரர்களுக்குத்தான் சுதந்திரம், நமக்கு எங்கே சுதந்திரம் என்றெல்லாம் பேசுவார்கள். அப்படிச் சாதாரணமாகப் பேசுகின்ற மக்களுக்கு மூன்று வருடங்கள் தண்டனை இதிலே கிடைக்கும்.

அதேமாதிரி, எழுத்து மூலமாக இழுக்கு ஏற்படுத்தினால் என்று இன்னொரு இடத்தில் இருக்கிறது. இது ஏன் அன்கான்ஸ்ட்டிடியூஷனல் என்பதற்காகச் சொல்லுகிறேன். நம்

மாநிலத்தில் ஏற்கனவே பத்திரிகைச் சுதந்திரம் தாக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதையும் இன்ட்ரொட்யூஸ் செய்து விட்டார்கள் என்றால் பத்திரிகைச் சுதந்திரத்தின்மீது இன்னும் ஒரு பவர்புல் அட்டாக் இஸ் பியிங் மவுண்டட். குறிப்பிட்ட தினத்தன்று, உதாரணமாக சுதந்திர தினத்தன்று என்று வைத்துக்கொள்வோம். அன்றைக்குப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவார்கள். அதிகார கைமாற்றம் செய்தது முறை என்று தெரியவில்லை என்று எழுதுவார்கள் ; 33 வருடங்களினுடைய ரெவ்யூவைப் பற்றி எழுதுவார்கள் ; பார்டிஷன் தப்பு என்று எழுதுவார்கள். இப்படிப் பத்திரிகை சுதந்திரத்தைத் தடை செய்தால், நிச்சயமாக இந்தச் சட்டத்தில் மூன்று வருடங்கள் தண்டனை. கான்ஸ்டிட்டியூஷனல் ரைட் ஆஃப் ஃப்ரீடம் வில் பி அஃபெக்டெட்.

தனியார் சுதந்திரமும் பாதிக்கப்படுகிறது. எப்படியென்றால் என்ன கலரிலே என்ன போட்டால் இந்தச் சர்க்காருக்கு என்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாட்டு கௌரவத்திற்காக.

திரு. ரா. உமாநாத் : நாட்டு கௌரவத்திற்காக என்றால் கொடியைப் பற்றிச் சொல்லுங்கள், சின்னத்தைப் பற்றிச் சொல்லுங்கள். நாட்டின் கௌரவத்தைப் பற்றி உங்களுக்கு ஒரு கான்செப்ட் இருக்கும் ; எங்களுக்கு ஒரு கான்செப்ட். இருக்கும். நான் கறுப்புச் சட்டை போடுகிறேன் என்றால் போட்டால் எனக்கு மூன்று வருடம் தண்டனை. சாதாரணமாகப் பார்த்தால் திராவிடர் கழகத்திற்கு யூனிஃபார்மே கறுப்புச் சட்டைதான். இந்தச் சட்டத்தின் படி பார்த்தால் அவர்கள் பூராவுக்கும் மூன்று வருடம் தண்டனை ஜெயிலில் தள்ளி விடுவார்கள். ரியலி இட் இஸ் அன்ரியலிஸ்டிக்.

எனவே, எனக்குத் தோன்றுவது என்னவென்றால், புறக்கடை வழியாக ஒரு மினி எமர்ஜென்சி ஆட்சி முறை என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. எனவே இந்தச் சட்டம் வேண்டாம். இதை இப்பொழுதே வித்ட்ரா செய்து கொள்ளுங்கள் ; அதுதான் நல்லது என்றுகூறி இந்தச் சட்டத்தை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.





*டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தச் சட்ட
முன்வடிவு அறிமுகம் செய்யப்படுவதை திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பில் நான் எதிர்க்கிறேன். இதே மன்றத்தில்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஏன், எதிர்க்கட்சித்
தலைவராக வீற்றிருந்த நம்முடைய அன்பிற்குரிய நாவலர் அவர்
களா இந்த சட்டமுன்வடிவை இங்கே முன் மொழிந்தார்கள்
என்பதை எண்ணுகின்ற நேரத்தில் எனக்கு மிக வேதனையாக
இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆணைப்படி, இந்தி
ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காகக் குடியரசு நாளில் ஒவ்வொரு வீட்
டிலும் கறுப்புக் கொடிகளைக் கட்ட வேண்டுமென்று ஆணையிடப்
பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வாறு முடிவெடுத்து,
அண்ணா அவர்களுடைய இல்லத்திலும் கறுப்புக்கொடி பறக்க
விடப்பட்டது ; என்னுடைய இல்லத்திலும், நாவலர் அவர்க
ளுடைய இல்லத்திலும், பேராசிரியர் அவர்களுடைய இல்லத்தி
லும், மறைந்த என். வி. என். அவர்களுடைய இல்லத்திலும்,
சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ். ஆர். அவர்களுடைய இல்லத்
தில் கறுப்புக்கொடி ஏற்றிய நிகழ்ச்சியில் எவ்வளவு பெரிய கலவரம்
நடைபெற்றது என்பதெல்லாம் கூட நாட்டுக்குத் தெரியும். (குறுக்
கீடு) இராகவானந்தம் அவர்கள் சொல்கிறார்கள்,—சாட்சிக்கு
வருகிறார்—அவருடைய வீட்டில், முரசொலி அலுவலகத்தில்,
நம்முடைய நண்பர் கே. ஏ. கே. அவர்களுடைய தென்னகம்
அலுவலகத்திலெல்லாம் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது.

இன்றைய முதலமைச்சர் அருமை நண்பர் எம். ஜி. ஆர்.
அவர்களுடைய இல்லத்திலே வேண்டுமானால், அலுவலகத்திலே
வேண்டுமானால், கறுப்புக்கொடி பறக்கவிடப்படாமல் இருந்திருக்
கலாம். அப்படி கருப்புக் கொடி பறக்கவிடவும், குடியரசு
நாளில் தங்களுடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்ளவும்,
அத்தகைய அடிப்படை உரிமை ஜனநாயக உரிமை என்பதை,
இன்றைக்கு இந்தச் சட்டத்தை முன்மொழிந்த அறிமுகப்படுத்தி
இருக்கின்ற நாவலர் அவர்களே இந்த மன்றத்திலும் சரி, மக்கள்
மன்றத்திலும் சரி, சாங்கோபாங்கமாக பேசியிருக்கிறார்கள்.
நாங்கள் எல்லாம் பேசியதைவிட, அவருடைய பேச்சிலே இருந்து
குறிப்புகளை எடுத்து நாங்கள் பேசுகின்ற அளவுக்கு நாவலர்
அவர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றுள்ள நிலைமை அவரை
இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்துகின்ற
அவசியம் ஏற்பட்டுவிட்டதே என்று எண்ணுகிற நேரத்தில் அவ
ரால் வேதனையை வெளிப்படுத்த முடியா விட்டாலும், அவர்
சார்பாக நான் என்னுடைய வேதனையை வெளியிட வேண்டிய
னாக இருக்கிறேன்.

(டாக்டர் மு. கருணாநிதி) [1982 ஏப்ரல் 1

இந்தக் குடியரசு நாளையும், விடுதலை நாளையும் திராவிட
முன்னேற்றக் கழகம் நிச்சயமாக மதிக்கிறது. பேரறிஞர்
அண்ணா அவர்கள் அதை மதித்த காரணத்தால்தான், பெரியார்
அவர்கள் முதல் விடுதலை நாள் விழாவை துக்க தினமாக அறிவித்த
நேரத்திலும்கூட, அண்ணா அவர்கள் இது துக்க நாள் அல்ல, இது
இன்ப நாள் என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால்,
அதே அண்ணாதான் பிறகு குடியரசு தினத்திலே தங்களுடைய
அதிருப்தியைக் காட்டிக் கொள்ளுகின்ற வகையிலே, அன்றைக்கு
கறுப்புச் சின்னங்கள் அணிவதும், அவரவர்களுடைய வீடுகளிலே
கருப்புக் கொடிகளை ஏற்றுவது என்கின்ற ஒரு முடிவினை
அண்ணா அவர்கள் எடுத்தார்கள். இப்போது அண்ணா தி.மு.க.
அரசு அதற்கு எதிராக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது
வேடிக்கை. வேண்டுமானால்—வேண்டுமானால் அல்ல—உண்
மையிலேயே கூட, உத்தமர் காந்தி அடிகள் பிறந்த நாள்; அந்த
நாளில் நாம் அவருக்கு மரியாதைக் காட்டுகின்ற வகையில்,
அந்தப் பிறந்த நாளில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிச்சயமாக
நடைபெறாது. ஏனென்றால் நாட்டிலே குடியரசை அமல்படுத்தி,
பிரகடனப்படுத்தி அதை நடைமுறைப்படுத்துகின்ற அரசினுடைய
நடவடிக்கைகளை எதிர்த்து அல்ல, இந்திய சுதந்திரத்திற்குப்
பாடுபட்டு, பாடுபட்டவர்கள் அதிருப்திக்கு ஆளாகி, அந்த சுதந்
திரத்தை அனுபவித்துக் கொண்டு ஆளுகின்ற அரசுக்கு எதிராக
நாட்டு மக்கள் தங்கள் கண்டனத்தை, எதிர்ப்பை, அதிருப்தியைத்
தெரிவிக்க அந்த நாட்களைப் பயன்படுத்திக்கொள்றார்களே தவிர
விடுதலை வாங்கி தந்த பெரியவர் உத்தமர் காந்தி அடிகளுக்கு
எதிராக அக்டோபர் 2-ஆம் நாள், யாரும் இப்படிப்பட்ட முறை
யை நிச்சயமாகக் கடை பிடிக்க மாட்டார்கள். நீங்கள் ஆகஸ்ட்
15, ஜனவரி 26-ஆகிய தினங்களைக் காப்பாற்றுவதற்காக, அக்
டோபர் 2-ஐ இதிலே இணைத்து கொண்டு இருப்பது முறையல்ல.
எனவே, அக்டோபர் 2 என்று மாத்திரம் போடுங்கள். நாங்கள்
ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம்.

ஆனால், ஆகஸ்ட் 15, ஜனவரி 26 ஆகிய நாட்களில் கருப்புச்
சின்னங்கள் அணிவது கூடாது, கருப்புக் கொடிகள் ஏற்றுவது
கூடாது என்றெல்லாம் கூறுவதும், அதற்குப் பெரும் தண்டனை
கள் வழங்கப்படும் என்று சொல்வதும், ஒரு பெரிய அறைகூவல்.
ஆனால், இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு மக்களைத் தள்ளுகின்ற
அளவுக்கு இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருவதை
நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய
முதலமைச்சராக இருந்த பி.சி. ராய் அவர்களே கூட, சுதந்திர
தினத்தை துக்க தினமாகக் கொண்டாடினார் என்பது இந்திய
நாட்டின் வரலாறு. அப்படி இருக்கும்போது அண்ணா பிறந்த
இந்த பூமியில், அண்ணாவினுடைய பெயரை வைத்துக்கொண்டு
நடத்தப்படுகின்ற ஒரு கட்சியினுடைய ஆட்சியிலே இப்படிப்பட்ட



1982 ஏப்ரல் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

சட்டம் கொண்டு வருவதை, அதிலும் அண்ணாவினுடைய தம்பி
களிலேயே முக்கியமான தம்பி, ''தம்பி வா, தலைமை ஏற்க வா,
உன் ஆணை கேட்டு நடக்கிறேன் வா'' என்று அழைக்கப்பட்ட
அந்தத் தம்பியே இப்படி ஒரு தீர்மானத்தை, ஒரு சட்டத்தை
இங்கே கொண்டுவருவது வேடிக்கை, வேதனை, வெட்கக்கேடு,
என்று கூறி, இதை நான் மறுக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவை துணைத் தலைவர்
அவர்களே, ஜனவரி, 26, ஆகஸ்டு 15 ஆகியவை தேசிய முக்கியத்
துவம் வாய்ந்த நாட்கள் என்பதை நாடு அறியும் ............

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: இந்த சட்டமுன்
வடிவை நீங்கள் ''அப்போஸ்'' பண்ணினால்தான் இப்போது
பேச முடியும். பில் இன்ட்ரடூஸ் பண்ணும்போது அப்ஜக்ட்
பண்ணினால்தான் பேசலாம். மற்றபடி பில்லை கன்சிடரேஷ
னுக்கு எடுக்கும்போதுதான் விவாதத்திற்கு வைக்க முடியும்.
இதிலே விதிமுறைகள் இருக்கின்றன.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவை துணைத்
தலைவர் அவர்களே, தேசிய கௌரவத்தை பாதுகாப்பது என்ப
தன் பேரால் இம்மாதிரியான புதிய அடக்குமுறைச் சட்டத்தைக்
கொண்டு வருவதை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது;
ஆட்சேபிக்கிறது. சட்டத்தின் மூலமாக மட்டும் நம்முடைய
தேசத்தின் கௌரவத்தை பாதுகாக்க முடியும் என்று நினைத்து
இந்தச் சட்டத்தை இயற்றினால் நிச்சயமாக இது உதவி செய்யப்
போவதில்லை. நாட்டின் விடுதலையையும், சுதந்திரத்தையும்
சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தித்தான் நாம் பெற்றிருக்கி
றோம். ஆகவே இந்த மாதிரியான சட்டம் இருக்கின்றது
என்பதை எதிர்த்து அம்மாதிரியான நிலைமை உருவாகும்.
ஆகவே இதன் மூலமாக என்ன என்ன பயன்களை விரும்பு
கிறீர்களோ அந்தப் பயன்களை இந்தச் சட்டம் உருவாக்கிக்
கொடுக்கப்போவதில்லை. அதற்கு ஏற்கனவே சட்டங்கள்
இருக்கின்றன. பட்டினி கிடப்பதற்கு சுதந்திரம். ஆனால்
சுதந்திரம் பெற்றும் பட்டினி கிடக்கிறேன் என்று கூறுவதற்கான
சுதந்திரத்தை மறுக்கக் கூடிய ஒரு சட்டம். ஆகவே அதைப்
பற்றி எண்ணுவதை மறுப்பதற்கான ஒரு சட்டம். ஆகவே
அடிப்படையான உரிமைகளை பறிக்கக் கூடிய இந்தச் சட்டத்தை
இந்த மன்றத்திலே அறிமுகம் செய்வதை கம்யூனிஸ்ட் கட்சி
சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன்; ஆட்சேபிக்கிறேன்,

[1982 ஏப்ரல் 1

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்கள் பெயராலே அரசு கொண்டு வருகின்ற சட்ட முன்வடிவிலே எதிர்க்கின்ற சில செய்திகளையும் அது எவ்வாறு இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—10)

இங்கே நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பகுதியை, அக்டோபர் மாதம் 2-ம் தேதியை இது கௌரவ நாளாக கருதி, அன்று மட்டும் எதுவும் வேண்டாம் என்று சொன்னது மிகவும் பாரட்டுக்குரியதாக அமைந்திருந்தது. அதைப் போலவே ஏற்கனவே இங்கே ஆண்டு கொண்டிருக்கின்றவர்கள், பிரதான எதிர் கட்சியாக இருக்கின்றவர்கள் என்ன செய்தார்கள் ஒரு காலத்திலே என்பதனை அவர் எடுத்துக் சொன்னார். துக்க தினம் என்று கொண்டாடப்பட்டதும், பிறகு தங்கள் எதிர்ப்பைக் காட்ட குடியரசு தினத்தைக் கொண்டாடியதும் சுட்டிக் காட்டப்பட்டது. எங்களுடைய கவலை எல்லாம் அப்படி சுட்டிக்காட்டப்பட்ட நேரத்திலே கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மாற்றத்தை உருவாக்கினார் என்பதையும் இதிலே இணைத்துப் பார்க்கவேண்டும் என்பதுதான். ஒரு காலத்திலே சொன்னோம் என்பதற்காகவும் அதை அவர்கள் பிடிவாதமாக வைத்துக் கொண்டிருக்கவில்லை. பிரிவினை வாதம் பேசிக் கொண்டிருந்தவர்கள் இறுதி நாட்களில் அந்தப் பிரிவினை வாதம் என்பது கூடாது என்று சொன்னதைப்போல இப்போது அவர் தலைமையிலே இயங்கிக் கொண்டிருந்த 2 பேருமே ஏற்கனவே இருந்த சிந்தனைக்கு மாறுபட்ட சிந்தனையிலே இப்போது வந்தால் அதிலே தவறு இல்லை. எனவே ஒரு காலத்திலே அவர்கள் சொன்னதை மாற்றி இப்போது தேசிய கௌரவம் இந்த 3 தினங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி இருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். இரண்டாவது அந்த தினங்களிலே நமது கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று இல்லாமல் ......................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பில்லினுடைய கரத்தே அந்த 3 நாட்கள்தான். இதை நீங்கள் எதிர்க்கிறீர்களா என்பதைச் சொல்ல வேண்டும். எதிர்த்தால் தான் இப்போது பேச முடியும் இல்லை என்றால் பில் விவாதத்திற்கு வரும்போது பேசலாம். இதிலே ஃபார் அன்டு கென்ஸ்ட் பேச முடியாது. (குறுக்கீடு) இங்கே திரு. உமாநாத் அவர்கள் பேசியதைப்போல இந்த 3 நாட்களிலும் ஈடுபடலாம் என்பது உங்களுடைய கருத்து என்றால் நீங்கள் பேசலாம்.,



1982 ஏப்ரல் 1]

**திரு. குமரி அனந்தன் :** அந்த அடிப்படையில் கலைஞர் அவர்கள் எப்படி ஒரு தினத்தை மட்டும் பிரித்துப் பார்த்தார் களோ, அதைப் போல என்னாலே பிரித்துப் பார்க்க இயல வில்லை. 3 நாட்களும் தேசிய கௌரவமுடைய நாட்கள்தான் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதற்கு இது தேவைப்படு கிறது என்றாலும் எழுதுகிற நேரத்திலே சில நேரங்களில், ''நள்ளிரவில் விடுதலை பெற்றோம், விடியவில்லை'' என்பதைப் போன்று எழுதுவதற்கும் இதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்கின்ற வகையிலே அந்தப் பகுதியை நான் எதிர்க்கி றேன்.

***திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, தேசத் தந்தை காந்தி அடிகள் பிறந்த அக்டோபர் 2, நமதுநாடு சுதந்திரம் பெற்ற நாள் ஆகஸ்டு 15 நமது குடியரசு நாளான ஜனவரி 26, ஆகிய இந்த 3 நாட்களுமே, துக்க தினமாக கொண்டாடுபவர்களுக்கு மூன்று ஆண்டு தண் டனை, அதிகபட்ச தண்டனை அளிக்கலாம் என்று இருப்பதை நான் எதிர்க்கிறேன். இதை *............*...........

ஆக்க வேண்டுமென்று சொல்லி, நான் என்னுடைய எதிர்ப்பை இந்த மசோதாவுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் மசோ தாவிலே இருக்கின்ற ஷரத்துக்களை ஆதரிக்கிறீர்களா இல்லையா என்றுதான் பேச வேண்டும். இங்கே ஒவ்வொருவருடைய கருத் தையும் சொல்ல வேண்டியதில்லை.

* * * * *

என்று நெடுமாறன் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ※. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இதை தங்கள் கவனத்திற் குக் கொண்டுவர வேண்டாம் என்றுதான் நான் விரும்பினேன். இருந்தாலும் சொல்லவேண்டிய அவசியத்தை ஆளாக்கியிருக் கிறார்கள். இந்தமாதிரி சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்து கின்றபோது, எதிர்க்கின்றவர்கள் யாரேனும் ஒருவர், கூற வேண்டும். அப்படித்தான் நம்முடைய விதி இருக்கிறது. A Member என்றுதான் இருக்கிறது. அதையும் சுருக்க மாகச் சொல்ல வேண்டும். நாம் ஒவ்வொரு எதிர்க்கட்சித்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவர்களும் பேசட்டும் என்று அனுமதிக்கிறோம். ஆனால் எதிர்க்கின்றவர்கள் சுருக்கமாகப் பேசி எதிர்த்துவிட்டால், பிரச்சனைகள் இருக்காது. ஆதரிக்கின்றவர்கள் இதிலே பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இதில் தண்டனை குறைவாக கூறப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே நான் இந்த மசோதாவுக்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசாங்கத்திலே இருந்து 3 வருஷம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் அந்த பில்லை, அந்தத் தண்டனையை எதிர்த்து அல்லவா பேச வேண்டும். நான் பில்லினுடைய ஷரத்தை எதிர்க்கிறேன் என்ற மாதிரி நீங்கள் பேசவேண்டும். நீங்கள் இதிலே ஒரு முடிவு எடுத்துப் பேசுங்கள்.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிற வகையிலேதான் சொல்லுகிறேனே தவிர, வேறு அல்ல. நீங்கள் என்னைப் பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விவாதத்திலே வராது. நானும் முதலிலே பார்த்தேன். ரூல் 124-ன் படி ஒரே உறுப்பினர்தான் பேச வேண்டும். உமாநாத் அவர்களோடு நிறுத்தியிருக்க வேண்டியது. ஆனால் கொஞ்சம் பேர் கேட்டதினால், நான் சரி என்று அனுமதிகொடுத்தேன். (கூச்சல்).

டாக்டர் மு. கருணாநிதி : A என்ற 'ஒரு'-வுக்கு பல அர்த்தங்கள் உண்டு. One Member அல்லது Only one Member என்று இல்லை. A Member என்றால் ஒரு மெம்பர் என்று இருக்கிறதே தவிர....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் ஏதாவது சொல்லும்போது, சாதாரணமாக ஆங்கிலத்தில் அதனுடைய அர்த்தம் ஒன்றுதான். நமக்கு 1-ம் கிளாசிலேயிருந்து அர்த்தம் சொல்லித்தருகிறார்கள். வேறு ஒன்றும் இல்லை. நெடுமாறன் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். (கூச்சல்).





டாக்டர் மு. கருணாநிதி : துணைச் சபாநாயகர் அவர்கள் என்னைத் தவறான வழியிலே ஆக்கிவிடக்கூடாது. நான் A Member என்றால் ஒரு மெம்பர் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். One Member என்றால் ஒரே மெம்பர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் ரூல்ஸ் கமிட்டியிலே வைத்து அதைப் பார்த்துக்கொள்ளலாம்.

(பிற்பகல் 12–20).

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த 3 நாட்களையும் ஒவ்வொரு இந்தியனும் கொண்டாட வேண்டியது அவரவர்களுடைய உரிமையாகும். இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இதை எதிர்க்கின்றவர்களுடைய செயல் தண்டனைக்குரியது. மத்திய அரசின் தவறானக் கொள்கையை எதிர்ப்பது என்பது வேறு. ஆனால் அதற்காக..(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கெனவே திரு. நெடுமாறன் அவர்களுக்குத் தெரிவித்து விட்டேன். அவர்கள் இந்தச் சட்டத்திற்கு ஆதரவாகப் பேசியிருந்தால் அது அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது விதி 124 இல் இருக்கிறது. '' எதிர்க்கும் உறுப்பினரையும் '' என்று இருக்கிறது. உறுப்பினர்கள் என்று இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி : ஒரு அவையில் உறுப்பினர்கள் எப்போதும் 4 பேர், 5 பேர் சேர்ந்து பேச முடியாது; பேசக் கூடாது. ஆகையால் ஒருவர்தான் பேசுவார்.

திரு. ப. நெடுமாறன் : என்னுடைய பேச்சு முழுவதையும் கேட்டுவிட்டு நான் எதிர்க்கிறேனா, ஆதரிக்கிறேனா என்பதை நீங்கள் முடிவு செய்யலாம். இந்த அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், அதற்குப் பின்னால் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற கலைஞர் அவர்கள் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சுதந்திரக் கொடியை இந்தக் கோட்டையிலே ஏற்றி வைத்து கொண்டாடியிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால் இன்றைய முதலமைச்சர் அவர்களும் கொண்டாடியிருக்கிறார்கள்; நாம் கொண்டாடி வருகிறோம். ஆக எல்லோருக்கும் இதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது.

எனவே, இந்த மூன்று தினங்களையும் எதிர்த்து, ஒரு துக்க தினமாகக் கொண்டாட வேண்டுமென்று சொல்வது உண்மையிலேயே தண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் இந்த விதிகளில், சொல்லியிருக்கின்ற தண்டனை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்காக என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. **துரைமுருகன்** : சார், **பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.** தெளிவாக ரூல்சில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள்தான் பேச வேண்டும் என்று இருக்கிறது. மசோதாவை எதிர்க்கவில்லை; தண்டனை போதாது, ஆகையால் எதிர்க்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு தவறான வாதம். பின்னாலே இதைப் போன்று ஒரு சந்தர்ப்பத்திலே நாங்கள் இப்படி பேசுவதற்கு இதை ஒரு முன் மாதிரியாகத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா? இதை ஒரு மரபாக வைத்து, எங்களுக்கும் அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் **துணைத் தலைவர்** : மசோதாவை எதிர்ப்பவர் தான் பேச முடியும். மசோதாவில் இருக்கிற சரத்தை எதிர்த்துப் பேச முடியுமே தவிர தண்டனையை எதிர்த்துப் பேச முடியாது. சரத்து வந்த பின்னால்தான் 'பீனல் ப்ரொவிஷன்' வருகிறது. ஆகவே இது ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டாம். நான் அவைக் குறிப்பைப் பார்த்து, ஆதரித்துப் பேசியிருந்தால் அது அவைக் குறிப்பில் இடம் பெறாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. . சாகுல் **ஹமீது** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக எதிர்க்கிற அதே நேரத்தில் நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் சுதந்திரம் வாங்கித் தந்த அந்த தினத்தை, அந்த நாளைக் கொண்டாட வேண்டாமென்ற அந்தக் கருத்தை நான் ஆதரித்து, பாக்கி நாட்களிலே மனிதனுடைய உரிமையை பிரதிபலிக்கின்ற வகையிலே எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற வகையில் இந்த சட்ட முன்வடிவை எங்கள் இயக்கத்தின் சார்பாக எதிர்க்கிறேன்.

திரு. சி. கோபால் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இந்த மசோதாவிற்கு எதிர்ப்பைத் தெரிவித்து, அதே நேரத்தில் அவை முன்னவர் அவர்களைப் பற்றி சில கருத்துகளைச் சொன்னார்கள்...........



மாண்புமிகு பேரவைத் **துணைத் தலைவர்** : அதைப்பற்றி அடுத்துப் பேசுகின்ற அவை முன்னவர் அவர்கள் விளக்குவார்கள்; நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு** டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தும் கட்டமாகும் இது. ஆக, அறிமுகப் படுத்துகின்ற கட்டத்திலே அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன் என்று சொல்வதுதான் பொதுவாகக் கொண்டிருக்கிற ஒரு மரபு. அதற்குப் பிறகு விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிற போதுதான் அதுபற்றிய சாதகம் பாதகங்களைப்பற்றிப் பேசி, எந்த அளவுக்கு என் ஆதரிக்கிறோம் அல்லது எந்த அளவுக்கு எதிர்க்கிறோம் றெல்லாம் எடுத்துச் சொல்லலாம். அதற்குப் பிறகு 'கிளாஸ் [illegible] பை கிளாஸ்', விதி, விதியாக எடுத்துக் கொள்கிற போதும் விவாதிக்கலாம். அதற்குப் பிறகு, விதிகள் எல்லாம் நிறைவேற் றப்பட்ட பிறகு, ஒட்டு மொத்தமாக நிறைவேற்றும்போது கூட கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆக இப்போது தேசிய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதை தடுப்பதற்காக என்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட் டிருக்கிறது.

இந்தச் சட்ட முன்வடிவை தனிப்பட்ட நெடுஞ்செழியன் கொண்டு வருகிறேன் என்று யாரும் எண்ணக் கூடாது. இது அரசின் சார்பாகத்தான் கொண்டு வரப்படுகிறது. ஆகவே, விதி முறைகள் மாறுகிறபோது,

"பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்
ஐயுரை ஆற்றினான் கர்ணன் என்ப"

என்பதற்கொப்ப, காலம் செல்லச் செல்ல, ஒரு காலத்திலே அனுமதிக்கப்படுபவை எல்லாம் அதனுடைய போக்கு, அதனு டைய நோக்கு என்ற அடிப்படையிலே சட்டங்களைத் திருத்த வேண்டிய அவசியம் எல்லாம் ஏற்படுகிறது. அந்த வகையிலே தான் ஒரு காலத்திலே இந்த நாடு பிரிய வேண்டும் என்ற கருத்து கள் கூட மிக தாராளமாக நானும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒரு காலத்தில் எடுத்து வைத்தோம். அப்போது அதற்கான காரணங்கள் எடுத்துச் சொன்னோம். இப்போது இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்கான காரணங் களை எடுத்து வைக்கிறோம். ஆகவே, ஒரு காலத்தில் சொல்லப் படுகிற கருத்து எல்லாக் காலத்திலும் அதே மாதிரியாகதான் இருக்க வேண்டும் என்றோ, தொடர்ந்து அந்தக் கருத்துதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்றோ சொல்வதற்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால், தந்தை பெரியார் [illegible]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

[1982 ஏப்ரல் 1

காங்கிரஸ் கட்சியிலே இருந்தபோது, எடுத்து வைத்த வாதங்கள் வேறு, காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய பிறகு எடுத்து வைத்த வாதங்கள் வேறு. இராஜாஜி அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது எடுத்து வைத்த கருத்துக்கள் வேறு. பிறகு இந்தி வேண்டாம் என்பதற்காக அவர்கள் எடுத்து வைத்த கருத்துகள் வேறு. இப்படி காலத்தின் போக்கில், அதன் அடிப்படையில் சில பல நேரங்களில் கருத்துக்கள் மாறுபடலாம்.

அந்த வகையில்தான் இன்றைக்கு தேசீய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். 1965 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கை விட்டு சொல்கின்ற வரையில், நாங்கள் எல்லாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால், அந்த நாட்களுக்கு என்றைக்கு இழுக்கு தேடும் நோக்கம் இல்லை. ஆகவே, இந்தச் சட்டத்தின் நோக்கம் எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை தண்டிப்பது அல்ல, இழுக்கு ஏற்படுத்துபவர்களை தண்டிப்பது என்பது தான். அந்த வகையில் தான் இந்த விதிமுறைகள் இதிலே சேர்க்கப்பட்டு இருக்கின்ற தேசீய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பது என்பது தான் இதனுடைய நோக்கம்.

டாக்டர் மு. கருணாநிதி : தயவு செய்து எனக்கு விளக்கம் அளிக்க வேண்டுகிறேன். இழுக்கு என்றால் என்ன, எதிர்ப்பு என்றால் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்ப்பு என்பது பல்வேறு கருத்துக்களுக்கு வருகின்ற எதிர்ப்பு. எதிர்ப்பது என்பது இழுக்கு ஆகாது. எதிர்ப்பது என்பது வேறு, இழுக்கு என்பது வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் கருத்துக்கு, என் பேச்சுக்கு, எனக்கு எதிர்ப்பு சொல்வது எதிர்ப்பு. என் கருத்துக்களை இழிவு படுத்துவது, என் பேச்சை இழிவு படுத்துவது, என்னை இழிவு படுத்துவது என்பது இழுக்கு. ஆகவே, அந்தச் செய்கை எந்தத் தன்மையில் அடிப்படையில், எந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைகிறதோ அதைத்தான் எடுத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் அந்த தேசீய கௌரவத்திற்கு இழுக்குத் தேடுகின்ற வகையில் நிலைமைகள் அமையுமானால் அதைத் தடுப்பதற்காகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த நிலையிலும் கொண்டு வரவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : ஆகஸ்ட் 15 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புச் சின்னம் அணிகிறார்கள் என்று சொன்னால், அதை நீங்கள் எதிர்ப்பு என்று கருதுவீர்களா, அல்லது இழுக்கு என்று கருதப்படுமா என்று அறிய வேண்டுகிறேன்.



1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உங்களுடைய நோக்கம் எதிர்ப்பதாக இருந்தால், இந்தச் சட்டம் உங்களை மன்னிக்கும். உங்கள் நோக்கம் இழுக்கு ஏற்படுத்துவதாக இருந்தால் இந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, அந்தச் செய்கை எந்த நோக்கத்தின் அடிப்படையில் வருகிறதோ, மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்லியது மாதிரி, முக்கிய நோக்கம் தேசீய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கத்துடன், தேசீய முக்கியத்துவம் வாய்ந்த நாட்களான ஜனவரி 26, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகியவைகளை துக்க நாளாகக் கொண்டாடுவதோ, பேசுவதோ, எழுதுவதோ என்று வருகின்ற கட்டத்தில், அவர்கள் இவற்றையெல்லாம் எந்த நோக்கத்திற்காக நடத்துகின்றார்கள் என்பதைப் பார்த்து அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவற்றைப் பற்றியெல்லாம் துணை விதிகள் ஏற்படுத்துகின்றபோது சிந்தித்துப் பார்த்து, இதிலே எந்த அளவிலே செய்யலாம் என்பதைப் பற்றி நாம் விதிகளை உருவாக்கலாம். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவு இப்போது அறிமுகப்படுத்துகின்ற முதல் கட்டத்தில்தான் இருக்கிறது. எனவே, விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறபோது பொது நோக்கத்தின் அடிப்படையில் என்னென்ன வகைகளைக் கையாளலாம் என்பதைக் குறித்து கருத்துக்களை விரிவாகவும், விளக்கமாகவும் தெரிவிக்கலாம் என்பதைக் கூறி, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை).

[பிற்பகல் 12—30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தேசீய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982 ஆம் ஆண்டு (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

| | | |
|---|---|---|
| ஆதரித்தோர் | .. | 98 |
| எதிர்த்தோர் | .. | 35 |
| நடுநிலை வகித்தோர் | .. | 1 |

தீர்மானத்திற்கு ஆதரவாக 63 வாக்குகள் அதிகமாகக் கிடைத்துள்ளதால் தீர்மானம் நிறைவேறியது. சட்ட முன் வடிவு அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பெற்றது.

ஆதரித்தோர்.

1. திரு. ஆர். மணிமாறன்
2. மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்
3. திரு. சி. வி. வேலப்பன்
4. திரு. வி. வி. சுவாமிநாதன்
5. திரு. கே. எம். அப்துல்ரசாக்
6. திரு. இரா. அருணாசலம்
7. திரு. சேலம் மு. ஆறுமுகம்
8. திரு. எம். வி. இரத்தினம்
9. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
10. திரு. எஸ். டி. உகம்சந்த்
11. திரு. கே. ஆர். கணபதி
12. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
14. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
15. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
16. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
17. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்
18. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி
19. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
20. திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்
21. திரு. இ. கணேசன்
22. திரு. பி. கந்தசாமி
23. திரு. வி. கருப்பசாமி பாண்டியன்
24. திரு. சோ. கவிதீர்த்தான்
25. திரு. பெ. கலியமூர்த்தி
26. திரு. கா. கொ. கிருஷ்ணசாமி
27. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
28. திரு. என். குப்புசாமி



29. திரு. கே. குப்புசாமி
30. திரு. ப. குருசாமி
31. திரு. எம். அண்ணாதாசன்
32. திரு. சி. கேசவ ஆதித்தன்
33. திரு. சி. கோபால்
34. திரு. ஆர். டி. கோபாலன்
35. திரு. கோவைத்தம்பி
36. திரு. ஆர். சக்கரபாணி
37. திரு. இரா. சண்முகம்
38. திரு. ஏ. சி. சண்முகம்
39. டாக்டர் கே. சமரசம்
40. திரு. தா. சாமிக்கண்ணு
41. திரு. சீ. சிவப்பிரகாசம்
42. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
43. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
44. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
45. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
46. செல்வி ப. விசயலட்சுமி
47. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
48. திரு. ஏ. எம். சேதுராமன்
49. திரு. கே. சௌந்திரராஜன்
50. திரு. ஏ. தங்கராசு
51. திரு. ப. தனபால்
52. திரு. இரா. தாமரைக்கனி
53. திரு. பெ. திருமாறன்
54. திரு. இரா. திருமான்
55. திரு. கே. உச்சி
56. திரு. கே. பி. நாச்சிமுத்து
57. திரு. செ. பட்டாபிராமன்
58. திரு. சு. பழனிசாமி
59. திரு. ச. பாலகிருஷ்ணன்
60. திரு. க. பாலசுப்பிரமணியன்

61. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
62. திரு. என். பெருமாள்
63. திரு. ரா. கு. பெருமாள்
64. திரு. எம். எஸ். மாணிக்கம்
65. திரு. இரா. முத்தையா
66. திரு. குமரி அனந்தன்
67. திரு. ப. நெடுமாறன்
68. திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்
69. திரு. எஸ். என். இராமசாமி
70. திரு. பி. மொக்கையன்
71. திரு. ஜி. மூர்த்தி
72. திரு. இ. முத்துராமலிங்கம்
73. திரு. எம். கே. ராஜமாணிக்கம்
74. திரு. மி. வின்சென்ட்
75. திரு. ஆர். தியாகராசன்
76. திரு. கே. நாராயணசாமி
77. திரு. இரா. சா. முனிரத்தினம்
78. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
79. திரு. ஆ. வெள்ளைச்சாமி
80. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்
81. திரு. எம். ஜான்வின்சென்ட்
82. திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்
83. திரு. நா. சுந்தரராஜ்
84. திரு. என். எஸ். வி. சித்தன்
85. திரு. கே. எம். தங்கமணி
86. திரு. எல். இளையபெருமாள்
87. திரு. உ. சுப்பிரமணியன்
88. திரு. ஆர். விஜயரெகுநாததொண்டமான்
89. திரு. சி. பழனிமுத்து
90. திரு. இல. பலராமன்
91. திரு. எம். சுந்தரம்
92. திரு. ஆர். சுந்தரமூர்த்தி



93. திருமதி. தா. இராசாம்பாள்
94. திருமதி. டி. யசோதா
95. திரு. வே. இராஜசேகரன்
96. திரு. பா. தீர்த்தராமன்
97. திரு. இரா. அருணகிரி
98. திரு. எஸ். இராசாராமன்

எதிர்த்தோர்

1. திரு. இரா. கருப்பையா
2. திரு. ஏ. சாகுல் ஹமீது
3. திரு. என். பழனிவேல்
4. திரு. டி. மணி
5. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
6. திரு. ஏ. டி. கருப்பையா
7. திரு. மு. அப்பாதுரை
8. டாக்டர் மு. கருணாநிதி
9. திரு. க. அன்பழகன்
10. திரு. என். சங்கரய்யா
11. திரு. ரா. உமாநாத்
12. திரு. கு. ரமணி
13. திரு. என். வரதராஜன்
14. திரு. சு. பாலன்
15. திரு. ரா. கிருஷ்ணன்
16. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
17. திரு. து. இராசரத்தினம்
18. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
19. திரு. இரெ. இராசமாணிக்கம்
20. திரு. த. ஆறுமுகம்
21. திரு. என். முத்துவேல்
22. திரு. பம்மல் நல்லதம்பி
23. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி

24. திரு. ஜே. எஸ். இராசு
25. திரு. கெ. சொக்கலிங்கம்
26. திரு. பெ. சு. திருவேங்கடம்
27. திரு. துரைமுருகன்
28. திரு. அ. செல்வராசன்
29. திரு. அ. இரகுமான்கான்
30. திரு. ஏ. டி. குலசேகர்
31. திரு. எஸ். ரெத்தினராஜ்
32. திரு. து. புருஷோத்தமன்
33. திரு. ப. பொன்னுரங்கம்
34. திரு. ஏ. இராமலிங்கம்
35. திரு. என். வி. என். சோமு

நடுநிலை வகுத்தோர்

1. டாக்டர் கே. சௌரிராஜன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ''தேசிய கௌரவத்திற்கு
இழுக்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கான 1982-ஆம் ஆண்டு
(திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

[பிற்பகல் 12-40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம்
செய்யப்பெற்றிருக்கின்றது.

(8) தனித் தீர்மானம்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநிலங்களுக்குக் கூடுதல்
அதிகாரம் வழங்குவது பற்றிய தீர்மானத்தின் மீது மேலும்,
விவாதம். திரு. என். வரதராஜன் அவர்கள் தன்னுடைய உரை
யைத் தொடருவார்கள்,



திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்று மாண்புமிகு
திரு. உமாநாத் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை வழி
மொழிந்து நான் சில விவரங்களைக் கூற விரும்புகிறேன். கூடுதல்
அதிகாரம் வேண்டும் என்று நீண்ட காலமாகவே நம் நாட்டி
னுடைய எல்லா மாநிலங்களுடைய மக்களும் மிக அழுத்தமாக
குரல் எழுப்பி வருகிறார்கள். அரசியல் சட்டத்தில் இருக்கக்
கூடிய சில மோசமான பகுதிகள் மாநில அரசுகளுக்கு விரோத
மான அந்தப் பகுதிகளை நீக்க வேண்டும் என்று போராடி வரு
கிறார்கள். ஆனால் நம்முடைய சமீப கால அனுபவமே தமிழ்
நாட்டினுடைய சமீப கால அனுபவமே......

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்று காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்
மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்களின்
பேச்சு தமிழக அரசினுடைய முதலமைச்சரைத் தவறாக அடை
யாளம் காட்டுகின்ற விதத்திலே அமைந்திருக்கின்றது என்று நான்
பல முறை பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே பாயின்ட்
ஆப் ஆர்டர் வராது.

திரு. கோவைத் தம்பி : துணைத் தலைவர் அவர்களே, நான்
பலமுறை முயற்சி செய்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எல்லாம்
பேசி முடித்தாகி விட்டது. இப்போது வேண்டாம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்குத் தனியார் அலுவலுக்காக
இருப்பதே ஒரு அரை மணி நேரம்தான். அதையாவது ஒழுங்
காகப் பாதுகாத்துக் கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்
கிறேன்.

இன்று இந்தியாவிலிருக்கின்ற முக்கியமான குரலாக, கோரிக்
கையாக இருப்பது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்
என்பதுதான். நம்முடைய மாநிலத்தினுடைய அனுபவமே இருக்
கும்படியான அதிகாரங்கள் பறி போய்க் கொண்டிருக்கின்றன
என்பதை நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த
சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு பினாமி

ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றி அனுப்பினால் இதுவரையிலும் அதற்கு அங்கீகாரம் கிடைக்காதது மட்டுமல்ல, அதற்கு பட்டை நாமம் சாத்துகின்ற நிலைமைதான் மத்திய அரசிடமிருந்து நமக்கு வருகின்றது.

(பிற்பகல் 12–50)

ஒரு மாநிலத்தில் இருக்கும் அரசாட்சி நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக தன் அதிகாரங்களைக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்டதொரு சட்டமன்றம் ஏகமனதாக ஒரு சட்டத்தை நிறைவேற்றி அந்தச் சட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள சாதாரண குடிமகனுக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னால் அந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று அடம் பிடிக்கிறார்கள். இதிலிருந்தே மாநிலத்தின் அதிகாரங்கள் சீர்குலைக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

அதேபோல் இன்று தமிழ்நாட்டில் விவசாயிகள் விளைவிக்கக்கூடிய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் தத்தளிக்கிறார்கள். கரும்புக்கு சரியான விலை கிடைக்கவில்லை. நெல்லுக்கு சரியான விலை கிடைக்கவில்லை, பருத்திக்கு சரியான விலை கிடைக்கவில்லை. அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு இன்ன விலைதான் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். மாநில அரசு இன்னும் கூடுதலான விலை கொடுக்கிறோம் என்று முன் வந்தாலும் கூட அதைத் தடுப்போம் என்கிறார்கள். இந்த அவையில் நாம் பேசுகிறோம். நெல்லின் விலை கட்டுபடியாக இல்லை. எனவே க்விண்டால் ஒன்றுக்கு ரூ, 150 கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறது. ஆனால் அவர்கள் விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் கூட்டுகிற வகையில், மூலப் பொருள்களின் விலையை ஏற்றியிருக்கிறார்கள். உரத்தின் விலை ஏறியிருக்கிறது. டீஸலின் விலை ஏறியிருக்கிறது. பெட்ரோல் விலை ஏறியிருக்கிறது. சிமெண்ட் விலை ஏறியிருக்கிறது. இரும்பு விலை ஏறியிருக்கிறது. இவ்வாறு எல்லாப் பொருள்களின் விலைகளையும் உயர்த்திவிட்டு விவசாய உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ரூ, 115 தான் கொடுக்கலாம் அதற்கு மேலே கொடுக்காதே என்று மாநில அரசை நிர்ப்பந்திக்கிறது மத்திய அரசு. மாநில அரசு முன்வந்து ரூ. 150 சிபார்சு செய்கிறேன் என்று சொன்னாலும் அதை ஏற்க மறுக்கிறது. இதுபோன்று நம் அனுபவத்தில் பார்க்கிறோம்.





கடன் பிரச்சினையைப் பொறுத்து அது இன்று தமிழ்நாட்டில் கொழுந்து விட்டு எரியக் கூடிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இன்றையதினம் விவசாயிகள் கடனைக் கட்டுவதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். இந்த முப்பது ஆண்டுக் காலத்தில் நாங்கள் வாங்கிய கடன்களை எல்லாம் ஒழுங்காகத்தான் கட்டி வந்தோம். கடந்த நான்கைந்து ஆண்டுகளாக சிறுகச் சிறுக கடன் தொல்லை அதிகமாகியிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை அதிகமாகியிருப்பதோடு அவர்களின் விளைபொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அவர்களால் கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே கடனில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். கோரிக்கை வைக்கிறார்கள். மாநில அரசும் அதை ஏற்றுக் கொள்கிறது. மாநில அரசு அந்தக் கோரிக்கைகள் நியாயமானவை என்று கருதுகிறது. எங்களால் முடிந்த அளவிற்கு மாநில அரசுக்கு உட்பட்ட பணத்தைக் கொடுத்து ஒரு நீக்குப் போக்காக விவசாயிகளுக்கு உதவி செய்கிறோம் என்று ஆலோசனை கூறினால், அதுகுறித்து கடிதங்கள் எழுதினால், உங்களை கறுப்புப் பட்டியலில் சேர்த்து விடுவோம் என்கிறார்கள். எனவே மாநில அரசு பதட்டமடைந்து விவசாயிகளை ஜப்தி செய்யும் நிர்ப்பந்த சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இல்லாததுதான் இதற்குக் காரணம்.

அதேபோல் தமிழ்நாட்டில் இன்று தமிழ் மொழியில் ஆட்சி செய்ய நாம் முயற்சிக்கிறோம். மாநில அரசு ஏதாவது ரூபத்தில் தட்டுத் தடுமாறி ஏதாவது ஒரு பகுதியில் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வர, பாட மொழியாகக் கொண்டு வர, நீதி மொழியாகக் கொண்டு வர தன்னாலான முயற்சிகளைச் செய்யும்போது அதற்கு முட்டுக்கட்டையாக மத்திய அரசு நிற்கிறது.

ஏற்கெனவே கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அதல்லாமல் தமிழ்நாட்டின் தலைமை நீதிபதியாக உயர் நீதிமன்றத்தில் யார் வரவேண்டும், யார் இருக்க வேண்டும் என்று இந்த மாநில மந்திரி சபையை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையைக் கலந்துக் கொள்ளாமல், அவர்கள் ஆலோசனையைப் பெறாமல் திணிக்கிறார்கள். சிவில் நீதிமன்றங்களில் நடவடிக்கைகள் தமிழ் மொழியில் நடத்த வேண்டும் என்று, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் உத்தரவிடுகிறோம். ஆனால் நீதி வழங்கும் உயர்நீதி மன்றத்தில் தமிழே புரியாத ஒரு நபரை நாங்கள் நியமிப்போம், அதை நீங்கள் ஏற்க வேண்டும் என்று நம்மைக் கட்டாயப்படுத்துகிறார்கள். இதை அனுபவத்தில் பார்க்கிறோம்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடந்த தேசிய அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். இந்த மன்றத்திலே நம் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள். டெல்லியில் கூட்டிய மின் சாரத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை வற் புறுத்தினோம் என்று சொன்னார்கள். என்ன சொன்னார்? நீங்கள், மத்திய அரசு இஷ்டப்பட்டால் மூலப் பொருள்களின் விலைகளை ஏற்றுகிறீர்கள். டீசல் விலையை ஏற்றிவிட்டார்கள்; பெட்ரோல் விலையை ஏற்றிவிட்டார்கள்; நிலக்கரி விலையை ஏற்றிவிட்டார்கள்; இரும்புக்கம்பிகளின் விலையை ஏற்றிவிட்டார் கள். ஆகவே, மின்சார உற்பத்தி செலவு கூடுகிறது. ஒரு மாநில அரசு 100 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை ஏற்று, மின்சாரத்தை விநியோகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே மாநில அரசைக் கலந்துகொள்ளாமல், மூலப்பொருள்களின் விலையை ஏற்றாதீர்கள் என்று வாதாடினோம் என்று இந்த அவையிலே அமைச்சரவர்கள சொன்னார்கள். ஆனால், மத்திய சர்க்கார் நீங்கள சொல்வதை நாங்கள் கேட்கமாட்டோம், மின் கட்டணத்தை உயர்த்திக்கொள், நீ செய்ய வேண்டிய காரியத்திற்காக மின் கட்டணத்தை நீ உயர்த்திக்கொள், நீ உதைபடு, நான் வாங்க வேண்டிய பணத்தை வாங்கிக் கொள் கிறேன் என்று சொல்லுகிற அந்த பாங்குதான் நம் அனுபவத் திலே பார்க்கிறோம். அரசியல் சட்டத்திலே சொல்லப்படுவது ஒருபக்கம் இருக்கட்டும்; நாட்டின் சட்ட நிபுணர்கள் சொல் வது ஒருபக்கம் இருக்கட்டும். நம்முடைய கடந்த சில ஆண்டு அனுபவங்களைப் பார்க்கிறபோது, இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் இல்லாததால், அவர்களுக்கு நாம் அடங்கி, ஒடுங்கிப் போகின்ற நிலைமைதான் இருக்கிறது என்பதைத் தான் நாம் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு டீசல், பெட்ரோல விலை உயர்ந்திருக்கிறது. பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ. 6-50-க்கு விற்கப்படுகிறது. அதிலே உள்நாட்டு சுங்க வரி ரூ. 3.50. அதனுடைய உற்பத்திச் செலவு கூடியிருந்தாலும், வெளி நாட்டு மார்க்கெட்டிலே ஏற்பட்ட விலை உயர்வால் ஒரு லிட்டர் ரூ. 6.50-க்கு விற்கப்படுகிறது என்று மத்திய சர்க்காரால் சொல்ல இயலாது. மத்திய சர்க்காருடைய இந்தக் கொள்கை, மாநில சர்க்காரின் கழுத்தை நெறுக்குகிறது. நீங்கள் மின்சாரத் துறையை நடத்தினால் என்ன? போக்குவரத்துத் துறையை நடத்தினால் என்ன? நான் பெட்ரோல் விலையை உயர்த்து வேன், நீ கட்டணத்தை உயர்த்து: உதையும் வாங்கிக் கொள் என்று மத்திய சர்க்கார் இந்தக் கொள்கையைக் கடைப்



பிடிப்பதால், டீசல், பெட்ரோல், இன்னும் பலப்பல மூலப் பொருள்களின் விலைகள் உயர்ந்து, கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படுகின்றது என்பதைப் பார்க்க முடிகின்றது. ஆகவேதான், டீசல், பெட்ரோல் போன்ற மூலப் பொருள்களின் விலையை உயர்த்துகின்றபோது, மாநில அதிகாரத்திற்கு உட்பட்டு, உயர்த்துகின்ற நிலை இருக்க வேண்டும். மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்துகொண்டு செய்யவேண்டும் என்பதை நாம் நினைவுபடுத்த வேண்டும்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, மதுரை மாவட்டத்திலே வேடசந்தூர் பகுதி என்பது மிகவும் வறட்சியான ஒரு பகுதி; வறுமையான பகுதி. மானம் பார்த்த பிரதேசம். அத்தகைய நிலைமையிலே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நிலங்களில், மூன்றில் ஒரு பங்கு வறட்சிப் பிரதேசத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது தமிழகத்திலே இருக்கக்கூடிய ஒரு துரதிருஷ்டமான நிலைமை என்று நாம் கருதவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலைமையிலே, அந்தப் பிரதேசத்திலே உள்ள மக்களுக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, மாநில அரசு 32 கோடி ரூபாய் செலவில் ஒரு சிமெண்ட் ஆலையைத் துவக்க வேண்டுமென்று, ஆரம்ப திட்டத்தை அறிவிக்கும்போதே, மத்திய சர்க்கார் தண்டாயுதத்தை தூக்கி அடிக்கிறது. அதற்கான அனு மதியைக் கொடுக்க மாட்டேன், அதற்கான நிலக்கரியை கொடுக்க மாட்டேன், தொழிற்சாலையை ஆரம்பிக்க விட மாட்டேன் என்று அவர்கள் இன்றைக்கு அதற்கு தடை விதிக்கிறார்கள். அதேபோல், விற்பனை வரியிலும் அவர்கள் கை வைக்காமல் இல்லை. வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள சொன்னார்கள். நான்கூட அந்தக் கூட்டத்தில் இதைப் பற்றி எடுத்துச் சொன்னேன் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னேன் என்றார்கள். இதற்கு நான் பின்னால் வருகிறேன். இன்றைக்கு உண்மை நிலை என்ன? இவ்வொரு மாநில அரசும், விற்பனை வரியில்லாமல், வண்டி ஓட்ட முடியாது. இதிலேயும் மாநில அரசை மத்திய அரசு நெருக்குகிறார்கள். மாநில அரசு விற்பனை வரியை அதிகமாக போட்டு, தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றாலும், அதிலே முக்கியமான அய்ந்து ஐட்டம்களை நாங்கள் எடுத்துக் கொள்வோம். உள்நாட்டு சுங்கவரியை விதித்து, அதை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் போடும் பிச்சையைத்தான எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லு கிறார்கள். பத்திரிகைக் காகிதம், மருந்து தொழில், சிமெண்ட் இப்படி முக்கியமான தொழில்களுக்கு விற்பனை வரி நீ போடக் கூடாது, நான் போட்டு எடுத்துக் கொள்வேன் என்று புலு

நூற்றுக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயை நான் எடுத்துக் கொள்வேன் என்று மத்திய அரசு சொல்கிறது. அதனால் மாநில அரசு தத்தித் தத்தித் தான் போகவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல், இந்த வருஷ பட்ஜெட்டிலே நாம் பார்த்தால், மத்திய சர்க்காருக்கு ரூ. 17,614 கோடி இத்தகைய வரிகளிலே இருந்து வருமானம் வருகிறது. மாநிலங்களுக்கு அவர்கள் அதிலே இருந்து எவ்வளவு பிரித்துக் கொடுக்கிறார்கள் என்று பார்த்தால், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு ரூ. 4,711 கோடி தான் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00 மணி)

இதை சதவீதத்தில் கணக்கிட்டால் 26 சதவீதத்தோடு நிற்கிறது. நாம் அகல ரயில் பாதை திண்டுக்கல்லுக்கும் கரூருக்கும் வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், சேது சமுத்திரத் திட்டம் அமல்நடத்தப்பட வேண்டும், தமிழ் நாட்டில் கடல் நீர் போக்குவரத்துக்கு அது பெரும் அளவுக்கு உதவியாக இருக்கும் என்று நாம் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே நெய்வேலி 2-வது அனல் மின் திட்டத்திலே உற்பத்தியாகக்கூடிய 630 மெகாவாட் மின்சாரத்திலே அது முழுமையும் எங்களுக்கு வேண்டுமென்று நாம் கேட்கிறோம், ஆனால் அதிலே 160 மெகாவாட் நாங்கள் எடுத்துக் கொள்வோம் என்று மத்திய அரசு சொல்கிறது. நீங்கள் எவ்வளவு வறட்சியாக இருந்தாலும், எவ்வளவு உங்களுக்கு நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் சரி, மின்சாரப் பற்றாக்குறை எவ்வளவு உங்களுக்கு இருந்தாலும் சரி அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை, நீங்கள் செய்கிற மின்சார உற்பத்தியிலே மூன்றில் ஒரு பங்கு, அல்லது நான்கில் ஒரு பங்கு தான் உனக்கு கொடுப்பேன். நான் மீதியை எடுத்துக்கொள்வேன், நான் அதை எங்கே கொடுக்கிறேன், ஏன் கொடுக்கிறேன் என்று நீ கேட்காதே என்று மத்திய அரசு அடம்பிடிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. நமக்கு கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களையெல்லாம் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். நாம் இங்கேயிருந்து ஓடோடி பிச்சைக் காசு கேட்பதைப்போல ஏதாவது கொடுக்க வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

திருமண காலங்களிலே பார்க்கிறோம், மாப்பிள்ளையின் கையைப் பிடித்துக்கொண்டு ஒருவர் வருவார். மாப்பிள்ளைத் தோழன் என்று அவரைச் சொல்வார்கள். அது ஏன் வந்தது



என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஆராயவேண்டும். தமிழ்நாட்டில் நிதி ஆதாரங்களுக்கு நீங்கள் அல்ல பொறுப்பு. மத்திய, சர்க்காரிடம் கையேந்த வேண்டியிருக்கிறது. ஏலம் தேயிலை, காப்பி, ரப்பர் போன்ற பொருள்களை நாம் உற்பத்தி செய்கிறோம், தமிழ்நாட்டிலே சகல தொழில்களையும் செய்யக்கூடிய சக்தி நமக்கு இருக்கிறது. அதிலேயும் வருகின்ற வரிகளையெல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள், நாங்கள் தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சிக்காக கேட்டால் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிற நிலை இருக்கிறது அகல ரயில் பாதை வேண்டுமென்று கேட்கிறோம், ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருந்து நாம் இதை எல்லாம் இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து நிற்கிறார்களா எந்த அளவுக்கு எதிர்க்கிறார்கள் ஆளுங்கட்சி என்பதிலே எங்களுக்கு கருத்து வித்தியாசம் இருக்கிறது. உண்மை இருக்கிறது. அதிலே அவர்கள் உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கிய பணமே உங்கள் விலையேற்றத்தின் காரணமாக 290 கோடி அடிபட்டுப் போகிறது, என்றால் எப்படிதிட்டங்களை அமல் நடத்த முடியும் என்று அங்கே வாதிட்டு இருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். அந்த முறையிலே அடுத்த மாதமே நாம் குரல் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். 5 கோடி மக்களை நாம் திரட்டவேண்டிய நிலை இருக்கிறது. பல்வேறு மக்களோடு நாம் முற்போக்கு சக்தியோடு இணைந்து, செயலாற்ற வேண்டிய காலம், இடதுசாரி சக்தியோடு இணைந்து குரல் கொடுக்க வேண்டிய காலம் இது. இந்த மாநிலம் மட்டும் தன்னந் தனியாக அண்ணா நினைவு நாளில் சூளுரைத்துக்கொண்டிருக்கின்ற பெரும் காரியத்தை நாம் பெரும் ஜனநாயகப் படையோடு சேர்ந்து இன்று செய்யவேண்டும். இல்லாவிட்டால் பழி முழுவதும் உங்கள் தலையில் விழும், பாவம் முழுவதும் உங்கள் தலையில் விழும். கொள்ளையடிக்கக்கூடிய கூட்டம் வளருகிற நிலைமை இருக்கிறது என்பதை அண்ணா தி.மு.க. உணரவேண்டிய காலம் மட்டுமல்ல, நாடும் உணரவேண்டிய காலம் வந்துகொண்டு இருக்கிறது. தமிழகத்திலே உள்ள ஜனநாயகக் கட்சிகள், இந்தியாவிலே உள்ள ஜனநாயகக் கட்சிகள் ஆளுங்கட்சியாக இல்லாவிட்டாலும் இங்கே அவர்கள் எதிர்கட்சியாக இருந்தாலும் இந்திரா காங்கிரஸ் கட்சி உணரக்கூடிய காலம். தேசிய அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே ஒருவர் குரலை எழுப்பியிருக்கிறார். குஜராத் மாநில முதலமைச்சர் பேசியிருக்கிறார். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அதைப் படித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். நாட்டிலே எத்தனையோ தொழில் நுணுக்க வல்லுநர்கள் இருக்கிறார்கள், ஏராளமான

பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஆனால் மத்திய அரசு பல்வேறு எலக்ட்ரானிக் சம்பந்தமான பொருட்களை இறக்குமதி செய்ததாலே நம்முடைய டெக்னிக்கல் நிபுணர்களுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. இதன் மூலமாக தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடு செய்கிறோம். இந்தியா தொழில் முன்னேற்றத்திற்கு மத்திய சர்க்காருடைய இந்தக் கொள்கை குறுக்கீடாக இருந்தது என்று குஜராத் மாநில முதலமைச்சர் திரு சோலங்கி அவர்கள். பேசியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான். இப்படி ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இப்போது சகல மாநிலங்களும் வளர முடியாத நிலைமைக்கு, தொழில் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கிற நிலைமை ஏற்படுகிறது. வருமானத்திலே மத்திய அரசு மாநிலத்திலே வாங்கக்கூடிய வரியிலே 75 சதவிகிதம் எங்களுக்குக் கொடுங்கள், மீதியை எடுத்துக்கொள்ளுங்கள். பாதுகாப்பு உங்களிடம் இருக்கட்டும், வெளிநாட்டு விவகாரங்கள் உங்களிடம் இருக்கட்டும், பாக்கி உள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுங்கள் என்றால் மறுக்கிறார்கள். ஒரே துறைக்கு இங்கே ஒரு மந்திரி, அங்கே ஒரு மந்திரி என்று டபுள் மந்திரி எதற்கு? இப்படி இருந்தால் எப்படி நிர்வாகம் சரியாக இருக்கமுடியும்? மத்திய அரசு அதிகாரங்களையெல்லாம் வைத்துக்கொண்டு பணத்தையும் அள்ளிக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு தொழில் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கிறார்கள். விவசாய முன்னேற்றத்திற்கு குறுக்கே நிற்கிறார்கள். கல்வி வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கிறார்கள் யதார்த்தமான உண்மை இது. நம்முடைய இரண்டு, மூன்று அனுபவத்திலே இத்தகைய பேருண்மைகளை நாம் பார்த்திருக்கிறோம்.

அடுத்து என்ன? 6-வது ஐந்தாண்டுத் திட்டம் என்று ஏதோ சொல்லப்படுகிறது. இது என்ன ஏதோ மந்திரமோ, அல்லது ஏதோ சில நிபுணர்கள் பார்த்து சொல்லக் கூடிய காரியமோ அல்ல. கோடான கோடி தமிழ் மக்களை கலந்தாலோசித்த திட்டமா 6—வது ஐந்தாண்டுத் திட்டம் என்று நான் கேட்கிறேன். நம்முடைய தேசிய அபிவிருத்தி மன்றம்—முதலமைச்சர்கள் மாநாடு—என்பதை இஷ்டப்பட்டால் கூட்டுவார்கள். அது எதற்காகக் கூட்டப்படுகிறது? அது ஒரு ரப்பர் ஸ்டாம்ப். ஏதாவது திட்டங்கள் போட்டுவிட்டு, முதலமைச்சர்களைக் கூப்பிட்டு, இதற்கு முத்திரைக் குத்திவிட்டுப் போங்கள் என்பதுதான் தேசிய அபிவிருத்திமன்றம் என்பதனுடைய இலட்சணம். ஆகவே, இந்த மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையைக் கலந்து திட்டங்கள் தீட்ட வேண்டுமென்பது இன்று அமுலில் இல்லை. எங்களுக்குப் பணமும் கொடுக்க மாட்டீர்கள். எங்களுடைய வரிகளையும் நீங்கள் எடுத்துக்கொண்டு போவீர்கள். எங்களுடைய திட்டத்திற்கும் பணம் கொடுக்க மாட்டீர்கள். எங்களைக் கலந்து கொள்ளவும் மாட்டீர்கள்.............





திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: மிஸ்டர் ஆக்டிங் ஸ்பீக்கர் சார், கனம் அங்கத்தினர் மிகவும் தவறான இன்ஃபர்மேஷன் கொடுக்கின்றார். பணமும் கொடுக்க மாட்டேன்கிறார்கள் என்று சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை குற்றம் சாட்டுகிறார். பணம் அவர்கள் கொடுக்கவில்லையா? பூராவையும் எடுத்துக் கொள்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். எதற்குப் பூராவும் எடுத்துக் கொள்கிறார்கள்? அவர்களிடம் டிஃபென்ஸ் இருக்கிறது. போஸ்ட்டல் அன்ட் டெலகிராஃப் இருக்கிறது. ரெயில்வே இருக்கிறது, இவ்வளவும் அவர்களிடம் இருக்கிறது. அதற்கெல்லாம் பணம் வேண்டும். ஆகவே, ஒரு கமிஷன் ஏற்படுத்தி, அந்தக் கமிஷன் யார், யாருக்கு, என்ன, என்ன விகிதத்தில், எவ்வளவு, எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்கின்றதோ, அந்த விகிதம்தான் கொடுக்கிறார்களே தவிர, நீங்கள் அதிக அதிகாரம் வேண்டுமென்று கேளுங்கள், நீங்கள், ஒன்றும் கொடுக்கவில்லையென்று சொல்வது தவறான குற்றச்சாட்டு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன், கேட்கின்ற தேவையான பணத்தை, மைய அரசு தருவதில்லை, என்று சொல்கிறார்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : That was not the point he was telling the House. He was telling that the Central Government is not giving anything at all. That was his emphasis.

ரூ. 3 கோடி முதலீடு செய்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லேயென்று சென்ட்ரல் கவர்ன்மென்ட் சொல்கின்றது. அவசியம், இந்த கவர்ன்மென்ட் அவர்களுக்கு ஆதரவு கொடுத்தால், நிறைய இன்டஸ்ட்ரீஸ் வரும். அதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. எங்களுக்கு ஜாஸ்தி அதிகாரம் வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஒன்றும் கொடுப்பதில்லை, ஒன்றும் கொடுப்பதில்லை என்று குற்றம் சாட்டினால், அது தவறான இன்ஃபர்மேஷன் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் நான் பேசியதைத் தவறாகப் புரிந்து கொண்டார் என்று கருதுகின்றேன். இப்பொழுது நம்முடைய தேவைக்கு. நம்முடைய மாநிலத்தில் உருவாகி வருகிற தொழில் வளர்ச்சிக்கு, விவசாய முன்னேற்றத்திற்கு,

(திரு. கே. ஏஸ். ஜி. ஹாஜா ஷெரீப்) [1982 ஏப்ரல் 1

நாம் எவ்வளவு கொடுக்கிறோமோ, அதிலேயிருந்து தொகை கொடுத்தால், போதுமானது. நாம் இன்றையதினம் எதற்காக விவாதிக்கிறோம்? இந்த நாட்டினுடைய அரசியல் சட்டமானது ஒரு சமஷ்டி அதிகாரத்தை அங்கீகரிக்கிறதா, இல்லையா? ஓரிருப்பு இராஜ்யமாக வைத்திருக்க விரும்புகிறோமா? அப்படியானால், அதற்கு இந்த மாநிலத்திலே தேவையான கதவைத் தட்டுகிறோமா?

இன்றைக்கு ஜனாதிபதி அவர்கள் இருக்கிறார்கள். ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் என்ன பேசினார்கள்? மாநில அரசுகள் நகரசபைகளாக மாற்றப்படுகிற காலம் நம்முடைய நாட்டில் ஏற்பட்டு வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். நாம் அவர் சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை. நகரசபைகளுக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்களாக அவை மாற்றப்பட்டு இருக்கின்றன. அவ்வளவுதான். அப்படிப்பட்ட நிலையில்தான் மாநில அரசுகள் இன்றைக்கு இருக்கின்றன. இன்றைக்கு நான் சொன்னதே, நம் மாநிலத்தில் அனுபவத்தில் பார்க்கிறோம். இங்கே சட்ட சபையில் பேசினால், நாங்கள் என்ன செய்வோம். மத்தியிலே இருக்கிறார்கள் என்கிறார்கள். கீழே போனால் மக்கள் அல்லலுறுகிறார்கள், எங்களுக்கு இந்தத் தேவை இருக்கிறது, அந்தத் தேவை இருக்கிறது என்று கூறுகிறார்கள். இடையிலே மாநில அரசு இருந்து கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளிக்கிற நிலையில் இன்றையதினம் அரசு இருக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்துக் கொண்டால் அதிலே மாற்றம் உண்டாக்க வேண்டிய நிர்பந்தம், நம் நாட்டினுடைய பொருளாதார அம்சத்திலும், அரசியல் அம்சத்திலும் வளர்ந்து வருகிறது என்ற உண்மையை நாம் பார்க்க முடியும். அதுவும் கூடுதல் அதிகாரம் என்பது இன்றைக்குத் தண்டாயுதத்தைத் தூக்கி அடிக்கக்கூடிய அதிகாரத்தைக் கேட்கவில்லை. இந்தக் கூடுதல் அதிகாரம் எதற்கு வேண்டும். இன்றைக்கு ஒரு தொழிற்சாலை துவங்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சி எடுக்க வேண்டும். இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கரூர்—தூத்துக்குடி அகல ரெயில் பாதைத் திட்டத்திற்கு வெறும் ரூ. 40 இலட்சம் மட்டுமே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். எத்தனை ஆண்டு விவாதம்? எத்தனை ஆண்டு காலமாகத் தமிழக மக்கள் எதிர் பார்த்தது? தூத்துக்குடியிலே துறைமுகம் உருவாகி, வளர்ந்து வருகிற காலத்திலே, இன்றைக்கு கரூர்—திண்டுக்கல் அகல ரெயில் பாதை என்பது தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மாநில சர்க்காரைக் கலந்தார்களா? இங்கே



1982 ஏப்ரல் 1] (திரு. என். வரதராஜன்)

சொன்னார்கள். நிச்சயமாக, மத்திய அரசை எதிர்பார்க்கிறோம் என்றுதான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலே நடைபெற்ற, 1/2 மணி நேர விவாதத்தின்போது சொன்னார்கள். என்னைக் கலந்தார்கள், இவ்வாறு திட்டம் போட்டார்கள், இந்த ஆண்டு இவ்வளவு பணம் ஒதுக்குகிறேன் என்று சொன்னார்கள் என்று சொல்லவில்லேயே. நான் சேர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

[பிற்பகல் 1—10]

மத்திய அரசாங்கம் பூரண அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் பங்கு போட்டுக் கொடுப்பது என்ன? இந்த மாநிலத்தில் அதிகாரத்திற்கு உட்பட்டு விவாதம் நடத்தியதை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்திரா காங்கிரஸ் தலைவரவர்களே சொல்லட்டும். தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகத் துடித்துக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் நமக்குப் போதவில்லை. நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் நமக்கு வேண்டுமென்று கேட்பது இன்றைக்கு அநியாயமா? மத்திய அரசு இதை நான் எடுத்துக் கொண்டு போவேன் என்று சொல்வதுதான் நியாயமா? எனவே, யார் கண்ணை மூடிக்கொண்டாலும், அரசியல் கருத்துக்காக யார் ஒதுங்கியிருந்தாலும் கூடுதல் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டுமென்பது நம்முடைய கதவைத் தட்டிக் கொண்டிருக்கிற உண்மை என்பதை மறந்து விடக்கூடாது.

அரசியல் ரீதியாகவே மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்பதை இந்த மாநிலத்தின் அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. 1976 ஆம் ஆண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரிசபை கலைக்கப்படுகிறது; 1980 ஆம் ஆண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரிசபை கலைக்கப்படுகிறது. நமக்குக் கூடுதல் அதிகாரம் கொடுத்தால் அதை அமல் நடத்த முடியுமா முடியாதா என்று டெல்லியிலிருப்பவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்களா என்று கேட்க நான் விரும்புகிறேன்.

நம்முடைய வீரம் மிகுந்த தேச விடுதலைச் சரித்திரம் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இந்த நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக எழுச்சி பெற்ற காலத்திலே உங்களுக்கு ஆட்சி நடத்தத் தெரியுமா என்று ஆய்வு செய்வதற்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அப்பொழுது சைமன் கமிஷன் அனுப்பியது.

அடேயப்பா ! நம்முடைய நாட்டிலுள்ள கோடான கோடி மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி நடத்திக் கொள்ள முடியுமா என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அன்றைக்குப் பரிசோதித்தார்கள். இன்றைக்கு அந்த வழிதான் காங்கிரஸ் கட்சியினுடைய வழியா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்தத் தமிழ்நாட்டிலே அதிகாரத்தை எப்படி வேண்டு மானாலும் பயன்படுத்துவோம். காலையிலேகூட சட்ட மன்றத்தில் ஒரு பிரச்சினை எழுந்தது. வாதங்களும், எதிர் வாதங்களும் செய்து கொண்டோம். அப்படிச் செய்யக் கூடிய சக்தி நமக்கு உண்டு. அதைத் தீர்க்கும் சக்தி இந்த நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகவே, கையில் அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அரசியல் சட்டத்தில் இருக்கும் சில மோசமான பகுதி களை ஏற்கனவே வைத்துக் கொண்டு, 356-லிருந்து 360 வரை யில் இருக்கும் ஷரத்துக்கள் இருக்கின்றனவே, தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களுடைய அரசுகளைத் திடீரென்று கலைப்போம் அந்த மந்திரி சபைகளைக் கவிழ்த்துவேன் ; சட்டசபைகளைக் கவிழ்த்துவேன் என்ற அதிகாரமே இன்றைக்கு மத்திய அரசாங் கத்திடம் குவிந்திருக்கக் கூடாது.

இன்றைக்குக் கவர்னர்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகிறார் கள் என்பதற்குச் சிறந்த அனுபவம் இருக்கிறது. இந்த மூன்று நான்கு மாத கால அனுபவம் இருக்கிறது. கேரளாவில் ஏற்பட்ட அனுபவம் என்ன ? அங்கே ஒரு தேர்ந்தேடுக்கப்பட்ட சபை இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த சட்டசபையில் மெஜா ரிட்டி உறுப்பினர்களைக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் அரசாங் கம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசியல் சட்டம் சொல்கிறது. ஆனால் நடந்தது என்ன? அன்றைக்குச் சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினுடன் சேர்ந்திருக்கும்படியான கூட்டணிக்கு மெஜாரிட்டி அங்கே இல்லை. அன்றைக்கு ஜனதா கட்சி யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்யவில்லை. அதற்கு மாறாக ஒரு மைனாரிட்டியாக இருக்கும் படியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் கூட்டணி மந்திரிசபை அமைப்பதற்குக் கேரள கவர்னர் முயற்சிக்கிறார். மந்திரிசபை அமைக்கப்பட்டது. உடனே ஜனதா கட்சி முடிவெடுக்கிறது. தாங்கள் இதை ஆதரிக்கவில்லை என்று, எதிர்க் கட்சியிலே மெஜா ரிட்டி என்ற நிலை வரும்பொழுது, அரசாட்சியை வைத்துக் கொண்டு ஜனதாக் கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாமா, சுயேட்சை உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாமா, காங்கிரஸ் அல்லாத மற்ற அரசுகளை ஒழிக்க முடியுமா என்று மத்தியிலே இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அந்த சட்டசபை தீர்மானிக்கட்டும். கடைசியில் இன்றைக்கு மெஜா ரிட்டி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டவுடனே சட்டசபையைக்



கலைக்கிறார்கள். எதிர்க் கட்சியை அழைத்திருக்க வேண்டாமா? நீ மந்திரி சபை அமைக்கிறாயா? என்று கேட்டிருகக வேண்டாமா? நான் கேட்க மாட்டேன், ஏன் என்றால் என்னுடைய கையிலே அதிகாரம் இருக்கிறது, என்னுடைய கவர்னர் அந்த மாநிலத்தில் இருக்கிறார், அவர் மூலம் சட்டத்திற்கு என்ன வியாக்கியானம் வேண்டுமானாலும் செய்வோம் என்பது போன்ற நிலைமைகள் இருக்கும் காட்சியை நாம் பார்த்து இருக்கிறோம்.

அசாமில் ஏற்பட்ட நிலைமை என்ன? அசாமில் எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து பட்டியல் அளித்து, எம். எல். ஏக்களை அழைத்துக் கொண்டு நேரடியாகக் கவர்னர்களிடத்தில் செல்லு கிறார்கள். இதோ என் பட்டியல், அசாம் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க் கட்சி வரிசையில் இருப்பவர்கள், அமைச்சரவை அமைக்கத் தகுந்த பட்டியல் இதோ என்று கொடுக்கிறார்கள். அதில் மெஜாரிட்டி இருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக அந்தக் கவர்னர் என்ன செய்கிறார்? மைனா ரிட்டி காங்கிரஸ் மந்திரி சபையை அமைக்க விடுகிறார். உடனே சட்டசபை கூடுகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. அதைச் சந்திக்க சக்தியற்று என்ன செய்கிறார்கள்? சட்டசபை யைக் கலைத்து விடுகிறேன் போ என்று முடிவெடுக்கிறார்கள். இது என்ன அரசியல் சட்டம்? இப்படிப்பட்ட அரசியல் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தால் காங்கிரஸ் அல்லாத எந்த மாநில அரசும், அந்த மாநிலத்து மக்கள் ஓட்டளித்துத் தேர்ந் தெடுத்த எந்த அரசும் நிலைக்க முடியாது. பயந்து கொண்டே இருக்க வேண்டும், டெல்லியிலே என்ன சொல்வார்களோ, டெல்லி யிலே என்ன சொல்வார்களோ, டெல்லியிலே என்ன சொல்வா களோ என்று. இது எப்படி ஒரு ஜனநாயகத்தைப் பாதுகாப்ப தாக இருக்கும். சரி அது இருக்கட்டும்.

நாம் தண்டோரா அடித்து மக்களை ஓட்டுச்சாவடிக்கு அழைத்து அவர்கள் எல்லாம் ஓட்டுப் போட்டு அவர்களுக்கு நம்முடைய அரசியல் சட்டம் சொல்லியிருப்பதாகப் பரப்புகிறோமே செய்திகளை. இந்த தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய 4 கோடியே 80 லட்சம் மக்கள் மெஜாரிட்டியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். வேறு சில மாநிலங்களிலே வேறு சில கட்சிகளை ஆட்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை நான் ஏற்கமாட்டேன், அந்த மக்கள் ஓட்டளிப்பை நான் ஏற்க மாட்டேன். அதற்குப் பதிலாக, அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய சில மோசமான பகுதிகளை உபயோகப்படுத்தி, என்னுடைய சார்பாக இருக்கக் கூடிய கவர்னரை உபயோகப்படுத்தி அந்த அரசுக்குக் கேடு விளைவிப்பேன் கவிழ்ப்பேன், தூக்கி எறிவேன் என்ற நடைமுறை இருக்கின்ற சட்டசபைகளை அரசியல் சட்டத்திற்கு இன்றைய தினம் மறு சிந்தனை தேவை. இந்திய இப்படிப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசைக் கலைக்கக்

கூடிய அதிகாரம் இந்த அரசியல் சட்டத்திற்கு இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், அது சமஷ்டி அரசு இன்றைய தினம், தமிழகத்திலே, இந்தியாவிலே நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்காது என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது என்பதை நாம் இங்கே பார்க்க வேண்டும்.

அடுத்து இப்போது நாம் அதிகாரத்தை கேட்டுக் கொண்டு இருக்கிறோம். நமக்குக் கூடுதலான அதிகாரம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் நம்மிடத்தில் இருக்கும்படியான அதிகாரத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறது. வனத்துறையா, இன்றைய தினம் நம்முடைய வனத் துறைக்கு ஒரு அமைச்சர் இருக்கிறார். அவரைக் கேட்காமலேயே அவருடைய இலாகாவினுடைய சட்டங்கள் மத்தியிலே நிறைவேற்றப்படும். மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திலே குறுக்கீடு வரும். அது சினிமாத் துறையா, அந்தத் துறையிலே நான் குறுக்கிடுவேன் என்று அங்கிருந்து அதிகாரம் வரும். அதேபோல்தான் இருக்கும்படியான அதிகாரங்களைக் குறைப்பதற்குள்ள, மின்சாரத் துறையா, அதுகூட மின்சாரத்துறை அமைச்சருக்கு எதற்கு, தமிழ் நாட்டிலே, நானே மத்தியிலிருந்து முழு அதிகாரம் செலுத்துகிறேன், என்னுடைய கையிலே கொடுத்து விடு. அது கூடுதல் அதிகாரத்தை, கோடிக் கணக்கான மக்களுடைய அனுபவத்தின் வாயிலாக எழுந்து வந்த ஒரு ஜனநாயக கோரிக்கை முன் வந்திருக்கிற காலத்திலே மத்திய சர்க்கார் திருப்பித் தாக்க ஆரம்பிக்கிறது. என்னுடைய கையில் இருக்கும் ஒரு அதிகாரத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டுமா, நாம் சட்டத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டியது. அது ஊறுகாய் பானைக்குள் 1 வருடம், 2 வருடம் என்று அது ஊற வேண்டியது. தமிழ் நாட்டிலே வேறு சில சட்டமன்றங்களிலே நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இன்றைய தினம் அங்கே தேங்கி இருக்கக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைக்கு மாநில அதிகாரம் என்பது குறைந்து, குறைந்து நாளைய தினம், ஒரு பஞ்சாயத்து அல்லது நகராட்சி என்ற நிலைக்கு அது மாற்றப்பட்டு, அதற்கு ஒரு கமிஷ்னர் என்ற நிலையில்தான் நம்முடைய மந்திரிசபை இருக்கும் என்ற நிலைமைக்குத் தாழ்த்தப்படுகிற ஒரு காட்சியை, மாநிலங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற ஒரு காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்த அதிகாரப் பட்டியலில் இருக்கும்படியானவற்றை என்னிடத்தில் இருந்து தொடக் கூடாது, பொதுப் பட்டியலில் இருக்கக் கூடியவைகள் பல இன்று மாற்றப்பட வேண்டும். உங்கள் கையிலே 4, 5 அதிகாரங்கள் இருந்தால் போதும். அப்படிப்பட்ட நிலையை இந்தியாவில் உருவாக்கா விட்டால் அது ஒரு எதேச்சாதிகாரத்தை நோக்கிச் செல்லக்கூடிய பாதையாக இருக்கும்.



சொன்னார்கள். நிச்சயமாக, மத்திய அரசை எதிர்பார்க்கிறோம் என்றுதான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலே நடைபெற்ற, 1/2 மணி நேர விவாதத்தின்போது சொன்னார்கள். என்னைக் கலந்தார்கள், இவ்வாறு திட்டம் போட்டார்கள், இந்த ஆண்டு இவ்வளவு பணம் ஒதுக்குகிறேன் என்று சொன்னார்கள் என்று சொல்லவில்லையே. நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

[பிற்பகல் 1–10]

மத்திய அரசாங்கம் பூரண அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் பங்கு போட்டுக் கொடுப்பது என்ன ? இந்த மாநிலத்தில் அதிகாரத்திற்கு உட்பட்டு விவாதம் நடத்தியதை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்திரா காங்கிரஸ் தலைவரவர்களே சொல்லட்டும். தமிழ் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகத் துடித்துக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் நமக்குப் போதவில்லை. நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் நமக்கு வேண்டுமென்று கேட்பது இன்றைக்கு அநியாயமா ? மத்திய அரசு இதை நான் எடுத்துக் கொண்டு போவேன் என்று சொல்வதுதான் நியாயமா ? எனவே, யார் கண்ணை மூடிக்கொண்டாலும், அரசியல் கருத்துக்காக யார் ஒதுங்கியிருந்தாலும் கூடுதல் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டுமென்பது நம்முடைய கதவைத் தட்டிக் கொண்டிருக்கிற உண்மை என்பதை மறந்து விடக்கூடாது.

அரசியல் ரீதியாகவே மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்பதை இந்த மாநிலத்தின் அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. 1976 ஆம் ஆண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரிசபை கலைக்கப்படுகிறது ; 1980 ஆம் ஆண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரிசபை கலைக்கப்படுகிறது. நமக்குக் கூடுதல் அதிகாரம் கொடுத்தால் அதை அமல் நடத்த முடியுமா முடியாதா என்று டெல்லியிலிருப்பவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்களா என்று கேட்க நான் விரும்புகிறேன்.

நம்முடைய வீரம் மிகுந்த தேச விடுதலைச் சரித்திரம் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இந்த நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக எழுச்சி பெற்ற காலத்திலே உங்களுக்கு ஆட்சி நடத்தத் தெரியுமா என்று ஆய்வு செய்வதற்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அப்பொழுது சைமன் கமிஷன் அனுப்பியது.

[திரு. என். வரதராஜன்] [1982 ஏப்ரல் 1

(பிற்பகல் 1-20)

அடுத்து நம்முடைய தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில் எந்த அளவுக்கு மத்திய சர்க்கார் தலையிடுகிறது என்பதற்குச் சில விவரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் பிரதானமான ஒரு தொழில் தோல் பதனிடும் தொழில். கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கக் கூடிய தோல் பதனிடும் தொழில் தமிழ் நாட்டில் இருக்கிறது. இந்தத் தொழிலுக்கு கடந்த 34 ஆண்டுகளாக மத்திய சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது ? இங்கே தோல் ஆராய்ச்சி என்று சொல்கிறோம் ; தோல் தொழில் வளர்ச்சி என்று சொல்கிறோம் ; பெருமளவுக்கு அந்நியச் செலவாணி ஈட்டுகின்ற ஒரு தொழில் என்று சொல்கிறோம். இந்தத் தொழில் வளர்ச்சி பெற தோல் கார்ப்பரேஷன் என்று வைத்திருக்கிறோம். அந்தத் தோல் கார்ப்பரேஷனால் தமிழ்நாட்டுக்கு செய்யப்பட்ட உதவி என்ன ?

சமீபத்தில் ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசியபோது இதுபற்றிக் குறிப்பிட்டு, இந்தத் தொழில் வளர்ச்சியில் முடிந்த அளவுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள மொத்த தோல் உற்பத்தியில் இன்றைக்குக் கிட்டத்தட்ட 75 சதவீதம் நம்முடைய தமிழ் நாட்டில் உற்பத்தியாகிறது ; பெருமளவுக்கு அந்நியச் செலவாணி கிடைக்கிறது. இப்படிப்பட்ட ஒரு தொழிலுக்கு மத்திய சர்க்கார் உதவி செய்யவில்லை. நம்முடைய மாநில சர்க்கார் அவர்களுக்குக்கடிதம் எழுதி, பலமுறைகளிலே நிர்ப்பந்தப் படுத்தி, பல்வேறு கூட்டங்களிலே பேசி, அதற்குப் பின்னால்தான் ஏதோ உதவி செய்கிறோம் என்று சொன்னால் தொழில் எப்படி வளர்ச்சி பெறும் ? அதன் காரணமாகத்தான் இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில் இங்கே ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு 12-வது இடத்திற்குப் போய் விட்டது, 13-வது இடத்திற்குப் போய் விட்டது என்று சொல்வதில் என்ன பயன் ? இப்படியே போனால் 50-வது இடத்திற்குக் கூட போகும். அப்படிப் போவதற்கு காரணம் நாம் அல்ல. மத்திய சர்க்காரின் தொழில் கொள்கை அது. ஆகவே, இன்றைக்கு நாம் அந்த நிலையைத் தவிர்க்க வேண்டியிருக்கிறது.

THIRU K. S. G. HAJA SHERIFF : Mr. Acting Speaker Sir The Hon'ble Member is giving absolutely a wrong, incorrect and baseless information to this House. Hitherto, the Tanned hides and skins are being exported. But now a number of factories at least about 50 factories have been started here and



they are all working very well. They convert the tanned hides and skins into finished leather goods. The country is more benefitted by this in earning foreign exchange. So let the hon. Member give correct information to this House.

The Hon'ble Minister wants to know, what is the contribution of the Central Government to these factories. Each one of the factories has been started with crores of rupees. Has not the Central Government and the financial institutions given loan for these ? Has not the nationalised banks given loan for these ? Then why should the Member want to talk something which is not correct against the Central Government ?

HON'BLE THIRU S. RAMACHANDRAN : Whose money it is ? Whether it is the money of the Central Government or the nationalised banks for that matter, it is all people's money.

THIRU K. S. G. HAJA SHERIFF : Sir, the Hon'ble Minister wants to know whose money it is. Of course, it is people's money. But who has got the power to give (interruption) No. It can be argued in a lot of ways. Let us be fair and let us give correct information to our Members.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவலரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் மத்திய அரசு மாநில அரசினுடைய நிதி அதிகாரத்தை படிப்படியாகப் பிடுங்கி, தன்னிடம் அதிகமாக வைத்துக் கொண்டு, அதிகமான நிதி சேர்ந் திருந்தாலும் மாநிலங்களுக்கு நிதி வசதி செய்து தரவில்லை என்று சொல்கிறார்கள். தோல் தொழிலைப் பொறுத்தவரையில்

Arranging Institutional finance is totally different from starting an industry with finance, from the Central Government.

THIRU K. S. G. HAJA SHERIFF : I am sorry, there seems to be a lot of misunderstanding even among Ministerial circle. Finance has to come from the financial institutions, which are controlled by the Central Government or from the nationalised banks. They are giving us the money. Then why should we say that Finance is being deprived for it? If Banks and the financial institutions do not give finance, do we mean to say that any one industry can be started here ?

HON'BLE THIRU C. PONNAIYAN : Mr. Deputy Speaker, Sir, Financial Institutions are autonomous bodies. They have got nothing to do with the Central Government as such.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவரவர்களே, நான் இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழக மக்களுக்கு அது நன்றாகத் தெரியும். நீண்டகாலமாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய சர்க்கார் எதையும் செய்யவில்லை என்று கூறி, அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதற்காக எழுச்சி நாள் எல்லாம் கொண்டாடினார்கள். பல்வேறு வழிகளில் முயற்சி செய்து பார்த்தாலும் கூட தமிழ்நாட்டில் சேலம் உருக்காலைத் திட்டம் தாமதப்பட்டதால் அதுபற்றிய கோரிக்கையை வலியுறுத் தியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரு நாள் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து சேலம் உருக்காலைத் திட்டத்தோடு சேதுசமுத்திர திட்டத்தையும் இணைத்து நிறைவேற்ற வேண்டுமென்று கோரி, கண்டனம் அனுசரித்தோம். இன்றைக்கு சேலத்தில் ஏற்படுத்தியிருக்கிற அந்தத் தொழிற்சாலையைப்பற்றி நம்முடைய இந்திரா காங் கிரஸ் நண்பர்கள் சொல்கிறார்கள்.



அந்தத் திட்டம் என்ன என்பதை தமிழக மக்கள் அறிந்து இருக்கிறார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக ஏதோ உருக்காலைத் திட்டம் 600 கோடி 700 கோடி என்கிற அளவில் சேலத்தில் கிடைக்கும் என்று சொல்லி, அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லி, இன்றைக்கு எந்த நிலையில் அது இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஏதோ ஒரு தொழிற்சாலை. அங்கே வந்து இருக்கிறது என்று மகிழ்ச்சி அடையலாமே தவிர, அந்தத் திட்டம் இந்த வகையில் இருக்கும் என்று மாநில அரசைக் கேட்டுக்கொண்டு அதை அவர்கள் நிறை வேற்றவில்லை. இதைத் தமிழ் நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

அதைப்போலவே, பி. அண்ட் சி. மில் இன்றைக்கு மூடிக்கிடக்கிறது. அதைத் திறப்பதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுக்கவேண்டும் என்று இங்கே வந்து இந்தக் கோட்டையின் கதவுகளை பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தட்டுகிறார் கள். ஆனால் அந்தப் பிரச்னையில் முடிவு எடுப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. மத்திய சர்க்கார் தான் இந்தந்த நிலைமையில் அந்த சிக் மில் திறக்கப்படவேண்டும் என்று சொல் கிறது. இங்கேயுள்ள மாநில அரசு தனக்குள்ள நிதி நிலைமை களை வைத்துக்கொண்டு, இங்கேயுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு அந்த சிக் மில்லை, அந்த நோயுற்ற மில்லை திறப் பதற்கு, அவர்களுக்கு உதவி செய்வதற்கு முடியவில்லை. மைய அரசு குறுக்கிடுவதால் அதில் தாமதம் ஏற்படுகிறது. இத்தகைய நிலைமைகளும் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு இங்கே ஐ.ஏ.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.பி.எஸ்., என்று மாநில அரசு அதிகாரிகள் இருக் கிறார்கள். இவர்களை செலக்ட் செய்கிற உரிமை, இவர்களைப் போடுகின்ற அதிகாரம் மைய அரசுக்கு இருக்கிறது. இந்த அதி காரிகள் மாநில அரசில் வேலை செய்தாலும் அவர்கள் மைய அரசால் நியமிக்கப்படுவதால், அவர்கள் நடத்துகின்ற பரீட்சை யில் தேர்வு செய்து அனுப்புவதால் அவர்கள் அந்த இடத்தில் இருந்து வரும் ஆணைகளைக் கேட்கவேண்டியிருக்கிறது. இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். அதிகாரிகள் மாநில மட்டத்தில் இருக்கக்கூடாதா? இங்கேயுள்ள நிர்வாகிகளை நாமே உருவாக்கவேண்டும். அவர்களையெல்லாம் நாமே தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டும். இப்படி அவர்கள் மாநில அரசின் கையில் இல்லாவிட்டால் அவர்களை வைத்துக்கொண்டு இங்கேயொரு, மாநில அரசுக்கு இடையூறு விளைவிக்க முடியும் என்று சொல் வதற்கு ஆயிரம் ஆயிரம் உதாரணங்களை நாம் காட்டமுடி யும். அவர்கள் இரட்டை அதிகாரத்தில் இருப்பதால், அங்

கேயா, இங்கேயா என்ற நிலைமை வருகிறது. ஒரு மாநில அரசின் கொள்கையை அமல்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டுவதிலே இந்த மாதிரியான அதிகாரக் குவியல்கள் ஒரு பக்கம் இருக்கிறபோது, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நம்முடைய சர்வீசிலேயே இருக்கலாம். மாநில சர்வீசிலேயே அவர்களை நியமிக்கலாம். அப்படி நியமிக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்கு இருக்கவேண்டும். அவர்கள் கண்காணிக்கப்படுவார்கள், உயர்த்தப்படுவார்கள் என்ற தன்மையில் இருக்கவேண்டும். மத்திய அரசு தேவை என்று நினைத்தால் மாநில அரசிடமிருந்து அவர்களைக் கேட்டுப் பெறலாம். ஆனால் அதை விட்டு விட்டு, என்னுடைய முழு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு நான் அதிலேயும் தலையிடுவேன் என்ற நிலைமை இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இன்று கெஞ்சிக் கொண்டு இருக்கிறோம். நீர் போக்குவரத்து அல்லது நீர்வழிப்போக்குவரத்து எங்கள் கையில் இருக்கவேண்டும். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் என்ன உறவு இருக்கவேண்டும்; எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி மறு சிந்தனை வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. நம்முடைய நாட்டில் உள்ள மத்திய அரசு என்னென்ன அதிகாரங்களை வைத்துக்கொள்ளலாம், எவ்வாறு அதை நிறைவேற்றலாம்? இதை ஒவ்வொரு மாநில அரசும் இன்றைக்கு கேட்கின்றது. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசின் கவுன்சில் ஒன்று அமைக்கப்பட்டு, அது ஆழ்ந்து இந்தப் பிரச்னைகளைப் பற்றி பரிசீலித்து அதனுடைய முடிவுகளை அவ்வப்போது மேற்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. அதற்குமாறாக, அதிகாரங்கள் இதிலே எதுவாக இருந்தாலும் சரி, அந்த அதிகாரங்கள் அனைத்தையும் எங்கள் கையில் வைத்துக்கொண்டு, நீ கேட்கும்போது பிச்சை கொடுக்கக்கூடியவனாக நான் இருப்பேன் என்று சொல்கிறது. தமிழ் நாட்டில் சொல்வார்கள் ' பிடி இந்தா என்று நீளும் கரமும், பிச்சை தா என்று கேட்கும் கரமும் இருக்கக்கூடாது என்று. அதைப்போலவே, இன்று கேட்கும் காங்கிரஸ் ஆட்சியில் ஜனங்களின் பிரச்னைகள். பொருளாதார ரீதியில் இன்றையதினம் என்னவாகிக்கொண்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

மாநில அரசைக் கலந்து கொள்ளாமல் வரி விதிப்பு செய்யப்படுகிறது. ஏற்றுமதி, இறக்குமதி வியாபார ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன, உலக நாடுகளில் இருந்து கடன் வாங்கப்படுகிறது. உலக நிறுவனங்களிடமிருந்து கடன் பெறப்படுகிறது. இதனுடைய முழு பளுவும் யார் சுமந்து கொண்டு இருக்கிறார்கள்! இது எங்கே போய் நிற்கிறது? மாநில அரசுதான் எல்லாவித



மான சேவைகளையும் மக்களுக்குச் செய்யவேண்டும். குடிநீர், பள்ளிக்கூடம், உள்நாட்டுப் போக்குவரத்து, தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் வாழ்வு உயரத் திட்டங்கள் நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள் என்று எல்லா மக்களும் மாநில அரசைத்தான் உற்றுநோக்குகிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சுலபமாகச் சொல்லி தப்பித்துக் கொள்ளப்பார்க்கிறார்கள். இன்றைக்கு ம்க்களிடையே ஏற்படுகின்ற பிரச்னைகள், மக்களிடமிருந்து வரும் எதிர்ப்புகள் ஆகியவற்றிற்கு, ஆகா, இப்படி அப்படி என்று சொல்லி விட்டால் முடிந்து விடும் என்று நினைக்கிறார்கள். ஆனால், இதற்கான காரணங்கள் டெல்லியிலிருந்து வருகிறது என்று மக்கள் புரிந்து கொள்கிறார்கள். தெரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசு எந்தமாதிரியான பலகீனமான நிலையில் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த சட்டசபையை விமர்சனம் செய்யவும் கண்டிக்கவும், தண்டிக்கவும், சரியானவழியில் போகச் சொல்லவும் தமிழக மக்கள்தான் முழு அதிகாரம் படைத்தவர்கள் ஆனால் அந்ததண்டனை கொடுக்கும் அதிகாரத்தை எங்கள் கையில் தான் வைத்து இருக்கவேண்டும் என்று சொல்வது, நாங்கள் அதில் தலையிடுவோம், இவ்வாறு செய்யவேண்டும் என்று சொல்வது என்ன போக்கு என்பதை நான் கேட்கவிரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). இரண்டு நாட்கள் இப்படிநான் தனி நபர் தீர்மானத்தின் மீது பேச ஆரம்பித்த இரண்டு நிமிடத்திலேயே மணியடிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே கொஞ்சம் நேரம் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1—30].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வரதராஜன் அவர்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு) மணி 1-30 ஆகிவிட்டது. நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது.

* * * *

என்று குறிப்பிட்டார்கள், அது அவைக்குறிப்பில் இருக்கத் தேவையில்லை. அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது, மீண்டும் நாளை 2—4—1982 அன்று காலை 9 மணிக்குப் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

160. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஆடம்பர உணவகங்கள், தங்கும் விடுதிகள் குறித்த வரிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின்—3–2–1982 ஆம் தேதியிடப்பெற்ற 139 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஆடம்பர உணவகங்கள் தங்கும் விடுதிகள் குறித்த வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள், எதுவுமில்லை.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,
IN MADRAS CITY.

1 Account Test Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company. Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Id Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry,
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS